அமுத சுரபி.

1991

51-1

அமுதசுரபி

தீபாவளி மலர் '91

விலை ரூ. 35



Supplement to Amudhasurabi Nov '91 Issue
அமுதசுரபி 44 ஆவது தீபாவளி மலர்.
நவம்பர் 1991 இதழின்
சிறப்பு இணைப்பாக வெளிவருகிறது.
விலை ரூ. 35.

அமுதசுரபி தீபாவளி மலர்

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே! — பாரதியார்.

பொருளடக்கம்

கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் கற்பனையே.

மற்றும் வண்ணப் படங்கள் :



மலரை அழகுபடுத்திய ஓவியர்கள் : அமரர் 'சில்பி', கோபுலு, ஸுபா, வினு, மாயா, ஜி.கே.மூர்த்தி, உமாபதி, மாருதி, ஜெயராஜ், மணியன் செல்வன், அரஸ், செல்லம், ஸி.ஏ. ராமச்சந்திரன், லோகநாதன், விசு, சுதர்ஸன், சிவகுமார், உதய், குமார், ஏ.ஆர். வீரராகவன், சின்னஞ்சிறு கோபு, கலைமதி, பி.எம்.ரோஸ், ஸ்கார்ப்பியோ, ஸ்வாமி, கவி

ஆசிரியர் : விக்கிரமன் பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா மலர் ஆப்செட் அமைப்பு : சிவகுமார்

கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்ரமணியன், எம்.ஏ.பி.எல். ஐ.ஆர்.டி.எஸ்.

சென்னையில் உள்ள ஆர்.ஜே. பிராஸஸ் ஆப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் : ஆர். ஜனார்த்தனன்.
ஸ்ரீராம் டிரஸ்ட் சார்பில் வெளியிட்டவர் ஏ.வி.எஸ். ராஜா. நிர்வாக அலுவலகம், 145. லிங்கச் செட்டி தெரு, த.பை.எண். 5043. சென்னை – 600 001. தொலைபேசி எண் : 528 545.



போட்டோ : எம். நடராஜன்

அமுதசுரபியும், விவேக் ராசியும்



அன்று :

அமுதசுரபி கிடைக்கப் பெற்றவர்களுக்கு பொருள் எடுக்க, எடுக்கக் குறையாமல் வாரி வழங்கிவந்த ஒரு தெய் வீகப் பேழை! அதனால் பயன் அடைந்தோர் ஏராளம்! ஏராளம்!!

இன்று :

அமுதசுரபிக்கு ஈடாக சுவாமி விவேகானந்தரின் அற நெறியின் அடிப்படையில் இயங்கும் - 'விவேக்' நிறுவனம், வளமான இல்லற வாழ்க் கைக்குத் தேவையான தரமான பொருள்களை நியாயமான விலையில் விற்பனை செய்தும், சுலப தவணைமுறைத் திட் டத்தில் பொருள்கள் கொடுத் தும், 'புத்தாண்டு சூப்பர் சேல்' என்ற புதிய திட்டத்தை முதன் முதலில் துவக்கி தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தி வந்தும், விழாக் காலங்களில் மகத்தான சலுகை விலையில் விற்பனை செய்தும், அனைத்து வாடிக்கையாளர்களின் மனதில் நிலையான நம்பிக்கையை வளர்த்து சீரான வளர்ச்சி யோடு, 25 ஆண்டு காலமாக மக்களுக்கு சிறந்த சேவையை தொடர்ந்து ஆற்றிக் கொண் டிருக்கிறது.

ஒருமுறை பொருள் வாங்கினால், மேலும், மேலும் வாங்க வசதி கூடுகிறது என்ற ராசியான எண்ணம் வாடிக்கையாளர்களின் பெருமளவு வளர்ச்சிக்கு முக்கிய காரணம்.


சென்னை மாநகரில் மூன்று முக்கிய பகுதிகளில் மாபெரும் ஷோரூம்களை சிறப்பாக நடத்தி வரும் விவேக் நிறுவனம், லட்சோபலட்சம் மக்கள் மேலும் பயனடைய வேண்டும் என்ற நல் லெண்ணத்தில் எடுத்துக்கொண்ட பணியை செவ்வனே செய்து வருகிறது.

மிகுந்த தெய்வ பக்தியும், பணிவும், நாணயமும், தொழில் திறமையும், சரியான அணுகு முறையும் ஒருங்கே அமையப்பெற்ற பங்குதாரர்களின் அயராத உழைப்பும், ஊழியர்களின் ஒருமித்த ஒத்துழைப்பும் சேர்ந்து, ஓர் உன்னத லட்சியத்தை நோக்கி, ஏறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது விவேக் & கோ.


'விவேக் & கோ' என்ற 'அமுதசுரபி' மூலமாக பயன் அடைந்தோர், பயன் அடைய இருப் போர் ஏராளம்! ஏராளம்!!

விவேக் & கோ., சென்னை

மயிலாப்பூர் ● புரசைவாக்கம் ● தி. நகர்



ஓவியர் : அமரர் சில்பி ● அருள்மிகு திரு கற்ப ரக்ஷாம்பிகை (திருகருகாவூர்) ● அமுதசுரபி தீபாவளி மலர் '91



மகப்பேறு வழங்கும் மகாசக்தி

வித்வான் வே.லட்சுமணன்

"ஜகத்ஜனனி! அம்மா! என் அன்னையே!" ஆயிரமாயிரம் திருநாமங்கள் உனக்கு உண்டு என்றாலும் அவை அனைத்துக்கும் சிகரமாய் விளங்குகின்ற 'கர்ப்ப ரட்சகாம்பிகை' என்னும் பெயர் எங்கள் உள்ளத்தில் அன்பு நாதமாக, ஆனந்த கீதமாக, அருள் பாலிக்கும் வரப்பிரசாதமாக அல்லவா திகழ்கிறது! அகில உலகத்தையும் ஈன்றெடுத்து, காத்து வளர்த்து, வாழ்வாங்கு வாழவைக்கின்ற மாபெரும் சக்தியான உனக்கு, "கருக்காத்த நாயகி" என்ற இந்தத் திருநாமம் அமைந்ததில் எப்பேர்ப்பட்ட விசேடமான தத்துவம் உள்ளடங்கியிருக்கிறது என்பதை உணர்ந்து பார்க்கிறேன்.

பரந்து விரிந்த இந்த உலகத்தில் பலவிதமான செல்வங்களைப் பெற வேண்டி, மக்கள் உள்ளம் தாகத்தால் தெய்வத் திருப்பாதத்தைச் சரணடைகின்ற காட்சியை நான் கண்டிருக்கிறேன். ஆனால் செல்வங்கள் அனைத்திற்கும் மேலான செல்வமான குழந்தைச் செல்வத்தை அளித்து, வாழ்க்கையில் நிறைந்த மகிழ்ச்சியையும், நீடித்த உற்சாகத்தையும், நிமிர்ந்து நடைபோடுகின்ற ஆற்றலையும் வழங்குகின்ற அதி அற்புதமான பெரும்பேற்றை வழங்குபவள் அல்லவோ நீ!

அண்ட சராசரங்கள் அனைத்திலும் ஆனந்த சொரூபிணியாக நீ திகழ்ந்தாலும், கண்காணும் மூர்த்தி வடிவத்தில் திருக்கருகாவூர் என்னும் திருத்தலத்தில் கர்ப்ப ரட்சகாம்பிகையாகத் திகழ்கின்ற திருக்கோலம் தனிச்சிறப்புடைய அருட்கோலமல்லவா?

சோழ வளநாட்டிலே, தஞ்சை மாவட்டத்திலே காவிரியின் கிளை நதியாம் வெட்டாற்றின் கரையினிலே அருள் ஒளியை வீசிக் கொண்டு, 'குழந்தை வரம்' அருளும் தாயே! உன்னை உளமார வழிபட்டு, வாயார வாழ்த்தி, தருமப்பணிகள் அனைத்தையும் தவறாமல் செய்து நின் திருவடியில் குழந்தை வரம் வேண்டுவோர் எவராயினும் அவருக்கு, அந்த மகத்தான செல்வத்தை வழங்குவதுடன், அந்தச் செல்வத்தைச் சீரோடும் சிறப்போடும் வாழும் வகையில் காக்கின்ற கருணையின் நாயகி அல்லவா நீ?

அந்த நாளில் நித்திருவர் எனும் முனிவரும் வேதிகை என்கிற அவரின் மனைவியும் மகப்பேறு வேண்டி உன்னை வழிபட்டபோது, உன் அருளால் வேதிகை கருவுற்றாள் அல்லவா? பிரசவ நேரம் வந்தபோது மயங்கிக் கிடந்த வேதிகையின் முன்னிலையில் ஊர்த்துவபாதர் என்ற முனிவர் வந்து பிக்ஷை கேட்க, மயக்கமுற்ற நிலையில் வேதிகை முனிவர்தம் குரலை அறிய முடியாமற்போக, அதைப் புரிந்து கொள்ளாத முனிவர், சாபமிட, அதன் காரண

மாய்க் கருக்கலைவு கண்ட வேதிகையின் துடிப்பைப் பார்த்து, மனம் இரங்கி, அந்த நேரத்தில் கர்ப்ப ரட்சகியாக முன்வந்து, கலைந்த கருவை மீண்டும் உரு வாகச் செய்து, குழந்தை வளரும் வரை கருவைக் காத்து, அந்தக் குழந்தைச் செல்வத்தை அந்த மாதரசிக்கு வழங்கிய பரதேவதை அல்லவா நீ?

இந்த நிகழ்ச்சி நடந்த இடத்தி லேயே நீ நிரந்தரமாகக் கோயில் கொள்ள வேண்டுமென்று அந்த வேதிகை நங்கைநல்லாள் வேண்டிக் கொண்டதன்பேரில், அந்த நாள் முதல் அங்கேயே அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கர்ப்ப ரட்சகாம்பிகையே! வேதி கையின் மகனுக்கு நைதுருவன் எனப் பெயர் சூட்டி, காமதேனுவை அனுப்பி அந்தச் சிசுவுக்குப் பால் புகட்டிய வரலாறு, நினைக்க நினைக்க எங்கள் உள்ளங்களில் பால் வார்க்கிறது அம்மா! அந்தப் 'பால் குளம்' இன்றும் உன் ஆலயத்தின் முன் புறத்தில் வீர குண்டம் என்ற பெயரில் விளங்கு வதைக் காண்கிறோமே!

புராணத்தில் புதையல் போல் மறைந்திருக்கும் இந்த உண்மைக்கு நிகழ்கால வரலாற்றில் நிதர்சன மாக எத்தனை எத்தனை குடும் பங்களில் நின் அருளால் குழந் தைச் செல்வங்கள் உதயமாகிப் பாலாறு பெருகிக் கொண்டிருக் கிறதென்பதை கண்ணாரக் காணு கின்றேன் அம்மா!

திருமணமாகிப் பல்லாண்டுகள் ஆகியும் 'குழந்தைச் செல்வம் இல்லையே' என்று நெஞ்சுருகி, உன் சந்நிதியில் நெய்யால் மெழுகிக் கோலமிட்டு உளம் கசிந்துருகி உன்னைச் சிக்கெனப் பிடித்து வழிபட்டால் அந்தப் புனிதவதிக்கு நீ குழந்தைப் பரிசு வழங்கத் தவறுவதே இல்லையே!


"பெறுமவற்றுள் யாமறிந்த தில்லை
அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்ற ஈரடிக் குறளில் மகப் பேறு பற்றிய மகத்துவம் வள்ளுவப் பெருந்தகையாரால் பொன்னெழுத் துகளில் பொறிக்கப்பட்டுள்ளது அல்லவா? அத்தகைய மகப் பேற்றினை அளிப்பதுடன், அந்தச் செல்வத்தைக் காத்து, தாயையும், சேயையும் அவர்களின் குடும்பத் தையும் இடையறாமல் இரட்சிக் கின்ற கருணை வடிவமாக, இன்றும் என்றும் எப்போதும் நிறையருள் புரிகின்ற பராசக்தி யான உனது பாதத்தை வணங்கு கிறேன். உன் திருவருளால் நாடும் வீடும் நல்லோரும் எல்லாரும் நலம் அனைத்தும் பெறவேண்டு மென வேண்டுகிறேன்.


முல்லை வனநாதர் எனும் பெயரில் நினது ஆலயத்தில் சுயம்பு லிங்கமாகப் புற்று மண்ணினால் உருவாகி, புனுகுச் சட்டம் சார்த்தப் பட்டு, லிங்கத் திருமேனியுடன் ஒளி வீசுகின்ற இறைவனையும் வணங்குகிறேன்.


சக்தியும் சிவமுமாக, இரண் டற்ற ஒன்றாக எழிற்கோலத்துடன் ஏற்றமிகுந்த வாழ்வை அனை வர்க்கும் வழங்கி, ஆதரிப்பாய் அம்மா!

நின் திருக்கோயில் ராஜ கோபுரத் திருப்பணியும் திருக் குளத் திருப்பணியும் இப்பொழுது நடைபெற்று வருவதை அறிகி றேன். நின் அருள்பெற்று, நினது பொன்னொளியின் பிரகாசம் பூவுலகெங்கும் பரவுதற்கு, இந்தத் திருப்பணிகள் சீராகவும் சிறப் பாகவும் நடந்து நிறைவேற, பக்தர்களின் தொண்டுகள் பெரு கட்டும் என்றும் வேண்டுகிறேன். ஃ



முருகனுக்கு முன்னவர்





விக்கிநேச்வரருக்குப் பதினாறு பெயர் முக்கிய மாகச் சொல்லியிருக்கிறது.

ஸுமுகர், ஏகதந்தர், கபிலர், கஜகர்ணகர், லம்போதரர், விகடர், விக்கிநராஜர், விநாயகர், தூம கேது, கணாத்யக்ஷர், பாலசந்திரர், கஜானனர், வக்ர துண்டர், சூர்ப்பகர்ணர், ஹேரம்பர், ஸ்கந்தபூர்வஜர் என்று பதினாறு பேர். "ஷோடச நாமா" என்று விசேஷ மாகச் சொல்வது. 'ஷோடசம்' என்றால் பதினாறு.

சுலபமாக ஞாபகம் வைத்துக்கொண்டு ஸ்தோத் திரம் பண்ணுவதற்கு வாகாக இந்தப் பதினாறு பேர் களை இரண்டு சுலோகங்களாகப் பண்ணிக் கொடுத் திருக்கிறது :

ஸுமுகச் - சைகதந்தச்ச கபிலோ கஜகர்ணக : I

லம்போதரச்ச விகடோ விக்நராஜோ விநாயக : II

தூமகேதுர் - கணாத்யக்ஷ : பாலசந்த்ரோ கஜாநந : I

வக்ரதுண்ட : சூர்ப்பகர்ணோ ஹேரம்ப : ஸ்கந்தபூர்வஜ : II

'ஸ்கந்தபூர்வஜர்' என்பது ஷோடச நாமாவில் கடைசி. சுப்ரம்மண்ய ஸ்வாமிக்குத் தமையனார் என்று அர்த்தம். 'முருகனுக்கு மூத்தவர்'. அதைவிட, 'முரு கனுக்கு முன்னவர்' என்றால் அழகாக இருக்கிறது.

'பூர்வஜர்' என்றால் முன்னால் பிறந்தவர். 'அக்ரஜர்' என்றும் சொல்வதுண்டு.

'உடன்பிறப்பு' என்று தமிழில் சொல்வதுபோல் ஸம்ஸ்கிருதத்தில் 'ஸஹோதரர்'. 'ஸஹ' என்றால் 'உடன்'. ஸஹோதரர் என்றோ உடன்பிறப்பு என்றோ சொன்னால் அண்ணாவா, தம்பியா என்று கண்டு பிடிக்க முடியாது. அண்ணா என்று குறிப்பிட்டுக் காட்டும் வார்த்தை 'பூர்வஜர்'. இதே மாதிரி, தம்பிக்கு

'அநுஜர்'. ராமாநுஜர் என்றால் ராமருக்குத் தம்பியான லக்ஷ்மணர்.

விக்கிநேச்வரருடைய ஷோடச நாமாக்களில் அவர் சிவனுடைய புத்திரர் என்றோ அம்பாளுடைய புத்திரர் என்றோ காட்டப் பெயர் எதுவுமில்லை. அதாவது இன்னாருக்குப் பிள்ளை என்று பெயரில்லை. இன்னா ருக்குப் பதி என்றும் (பெயர்) இல்லை. அவருக்குப் பிரம்மசாரியாகப் பல உருவபேதங்கள் இருக்கிற மாதிரிப் பத்தினி ஸமேதராகவும் இருக்கின்றன. வல்லபை என்பவளோடுகூட வல்லப கணபதியாக இருக்கிறார். ஸித்தி, புத்தி என்பவர்களுக்கு அவர் பதி என்றும் கேள்விப்பட்டிருக்கலாம். இதுகளைக் காட்டவும் (ஷோடச நாமங்களில்) பெயரில்லை. ஸித்தி - புத்திகளிடம் அவருக்குப் பிறந்த புத்திரர்களும் உண்டு. அவர்களுக்குத் தகப்பனார் என்று தெரிவிப்ப தாகவும் பெயரைக் காணோம். ஆனால் பெயர்வரிசை யைப் பூர்த்தி பண்ணுமிடத்தில், மங்களமான ஸ்தானத் தில், 'ஸ்கந்தனுக்குத் தமையன்' என்று மட்டும் உறவு முறையைச் சொல்லும் ஒரு பெயர் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறது!

ஏன் அப்படி?

பொதுவாக, சின்ன வயசுக்காரர் ஒருத்தரை அவரைவிட வயசில் பெரியவரைச் சொல்லி, 'அவருக்கு இவர் இன்ன உறவு - பிள்ளை, மருமான், மாப்பிள்ளை, தம்பி என்று ஏதோ ஒன்றை - சொல்வதுதான் முறை. இங்கேயோ வித்தியாஸமாகத் தம்பி பேரைச் சொல்லி, அவருக்கு அண்ணா என்று இருக்கிறது!

ஏன் இப்படி?

ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் சரித்திரத்தோடு விக்நேச்வரருக்கு அவ்வளவு நெருங்கிய சம்பந்தம் இருப்பதால்தான்! தம்பியுடைய ஜனனம், விவாகம், சந்நியாசம் என்ற மூன்று ரொம்ப முக்கியமான வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் அண்ணன்காரருக்கு முக்கியமான 'பார்ட்' இருக்கிறது; அதனால்தான்!

ஜனனத்தை எடுத்துக்கொண்டால், 'குமார ஸம்பவம்' என்பதாக முருகன் ஜனனம் எடுத்ததற்கு அலாதிப் பெருமை இருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் ராமலக்ஷ்மணர்களுக்கு விச்வாமித்திரர் அந்தக் கதை யைச் சொல்லி முடிக்கும்போது "குமார ஸம்பவம்" என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறார். ஆதிகவி யின் அந்த வாக்கை எடுத்துக்கொண்டுதான் மஹா கவி காளிதாஸரும் "குமார ஸம்பவம்" என்றே தலைப் புக் கொடுத்து மஹாகாவியம் எழுதினார்.


அந்த 'ஸம்பவ'த்தில், அதாவது ஜனனத்தில், என்ன அப்படி விசேஷம்?

மற்றவர்கள் பிறந்து, வளர்ந்து, கல்வி கேள்வி களில் தேர்ச்சி பெற்ற அப்புறம் பதவிக்கு வரு வார்கள். ஆனால் மஹா பெரிய பதவி - தேவர் களுடைய சேனைகளுக்கெல்லாம் அதிபதியாக இருக்கும் பதவி - இந்தக் குமாரர் சம்பவிக்க வேண்டு மென்று இவருக்காகவே காத்துக்கொண்டிருந்தது! ஜன்மிக்கிற போதே தேவர்களின் சேனாதிபதியாகப் பிறந்தவர் இந்தக் குமாரர், குமார ஸ்வாமி! அசுரர் களிடம் அடி உதை பட்டுச் சொல்லி முடியாத கஷ்டத் திலிருந்த தேவர்கள் இவர் சம்பவித்தால்தான் தங்களுக்கு விடிவு, விமோசனம் என்று காத்துக் கொண்டு, எதிர்பார்த்துக்கொண்டு இருந்த நிலையில் ஏற்பட்டது அவருடைய 'ஸம்பவம்', அதாவது தோற்றம்.

சிவனுக்கு ஸமமான ஒருத்தர்தான் தங்களை வதைக்க முடியுமென்று சூரபத்மாசுரன், தாரகாசுரன் ஆகியவர்கள் அந்த சிவனிடமே வரம் வாங்கி வைத்துக்கொண்டு விட்டார்கள். சிவனுக்கு ஸமானம் வேறே யார்? அவரேதான் அவருக்கு ஸமம். வரம் கொடுத்த அவரே வரம் வாங்கிக்கொண்டவர்களை வதம் பண்ணுவது நியாயமாகாது. அதனால்தான் இப்படி ஸாமர்த்தியமாக வரம் கேட்டு வாங்கிக் கொண்டு, அப்புறம் சத்ரு பயம் என்பதேயில்லாமல் அந்த அசுரர்கள் தேவர்களை ஹிம்ஸித்து வந்தார்கள்.

ஆலோசித்துப் பார்த்தபிறகு இதற்குத் தேவர்கள் வழிகண்டு பிடித்தார்கள். "ஆத்மா வை புத்ர நாமாஸி" என்ற ச்ருதி வாக்கியப்படி ஒருத்தனுக்குச்சமதையாக





இருப்பது அவனுடைய புத்திரன். இவன் வீர்யத்திலேயே அவன் உண்டாவதால் இரண்டு பேரும் ஒன்று என்று சாஸ்திரம். ஆகையால் தங்களையெல்லாம் அசுரர்களிடமிருந்து ரக்ஷிப்பதற்காகத் தங்களுடைய நாயகனாக, சேனாநாயகனாகப் பரமேச்வரன் ஒரு புத்திரனை உண்டு பண்ணித் தந்துவிட்டால் வழி பிறந்துவிடும், விமோசனம் கிடைத்து விடும் என்று தேவர்கள் முடிவு செய்தார்கள். அதற்காகத் தபஸிருந்தார்கள். ஸ்வாமியும் தக்ஷிணாமூர்த்தியாகத் தபஸிருந்த சமயம் அது. அவருக்குப் பணிவிடை செய்ய வந்த அம்பாள் பார்வதியும் தபஸிருந்தாள். இப்படி ஒரே தபோமயமான புண்ய background-இல் குமார ஸம்பவம் ஏற்பட்டது. அதுதான் அதன் பெருமை.

குழந்தையாகப் பிறந்தோமே என்பதற்காக ஆறு நாள் - ஆறே நாள்தான் - குமாரஸ்வாமி பால லீலைகள் பண்ணினார். அவருக்கு எல்லாம் ஆறு. முகம் ஆறு. அவர் மந்திரத்தில் அக்ஷரம் ஆறு. அவர் பிறந்தது ஆறாம் திதியான ஷஷ்டி. அவருக்குப் பால் கொடுத்தது கிருத்திகா தேவிகள் என்ற ஆறு பேர். வேடிக்கையாகச் சொல்வதுண்டு, அவர் உத்பவித்த கங்கையும் 'ஆறு' என்று! குமாரர் என்றே குழந்தைப் பேர் வைத்துக் கொண்டிருந்தாலும் அவர் குழந்தை விளையாட்டும் ஆறே நாள்தான் செய்தார். அப்புறம், உடனேயே தேவ சேனாதிபத்யம் தாங்கி, சூராதி அசுரர்களை ஸம்ஹாரம் பண்ணித் தேவர்களையும், ஸர்வ லோகத்தையுமே ரக்ஷித்துவிட்டார்.

மனு, கினு போட்டு 'அப்பாயின்ட்மென்ட்' என்றில்லாமல், சகல தேவ சமூகத்திற்கும் ரக்ஷகனாக, 'கம்மாண்டர்-இன்-சீஃப்' ஆகப் பெரிய்ய்ய அப்பாயின்ட்மென்டோடேயே அவர் பிறந்ததுதான் குமார ஸம்பவத்தின் விசேஷம்.

"சரி, ஸ்வாமிகளே! இதிலே விக்கிநேச்வரருக்கு என்ன 'பார்ட்'?" என்றால்...

சிவனுக்குச் சமமானவர் சிவஸூதனே என்றால், விக்கிநேச்வரர் சிவஸூதன்தானே? அப்படியிருக்க, குமாரஸ்வாமி உண்டாகணுமென்று தேவர்கள் தபஸ் பண்ணினார்களென்றால் அப்போது விக்கிநேச்வரர் தோன்றியிருக்கவில்லையா?

சுப்ரம்மண்யருக்கு அப்புறம்தான் அவர் தோன்றினாரா என்றால் இல்லை. இதை 'அண்டர்லைன்' பண்ணிக் காட்டத்தான் 'ஸ்கந்த பூர்வஜர்' என்று அவருக்குப் பேர் சொல்லியிருக்கிறது.

"சரி, அவர் அப்போதே இருந்தாரென்றால், அவரிருக்கும்போது இன்னொரு சிவஸூதருக்காகத் தேவர்கள் தபஸ் செய்வானேன்? ஸூதராயிருந்தும் அவர் அப்பாவுக்குச் சமானமாயில்லாதவர் என்று அர்த்தமா?"

அப்படியுமில்லை. அவர் அப்பாவுக்கு ஸமதையானவர்தான். திரிபுர சம்ஹாரத்தின்போது அப்பாவும் தம்மைப் பூஜை பண்ணின பிற்பாடுதான் காரிய ஸித்தி பெற முடியும் என்று காட்டியிருக்கிறாரே! ★

பின்னே ஏன் இன்னொரு சிவஸூதர் சம்பவிக்க வேண்டுமென்று தேவர்கள் நினைத்தார்கள்?

★ விநாயகர் சிவ சமானர் என்பதைத் தெளிவு செய்வதாகப் பரஞ்சோதி முனிவரின் 'திருவிளையாடற் புராண'த்தில் 'வலை வீசின படல'த்தில் பின்வரும் நிகழ்ச்சி கூறப்படுகிறது.

ஒரு சமயம் சிவபெருமான் தத்துவோபதேசம் புரியும்போது அம்பிகை அதில் கவனம் செலுத்தாதிருக்கிறாள். அவர் சினமுற்று அவளைக் கரையர் குலத்தில் பிறக்குமாறு சபிக்கிறார். அன்னையை அவர் சபித்ததில் சினமுற்ற விநாயகரும் முருகனும் அவருடைய கரத்திலுள்ள ஞான நூல்களைப் பறித்து எறிகின்றனர். அவர்களை உள்ளே புகவிட்ட நந்திகேச்வரரைச் சுறாமீனாகுமாறு சபிக்கும் ஈசன், முருகனையும் வணிகர்குலத்தில் ஊமைப் பிள்ளையாகப் பிறக்கும்படிச் சாபமிடுகிறார். ஆயினும் விநாயகரொருவரை மட்டும் அவர் ஏதும் சபிக்கவில்லை. காரணம், விநாயகரைச் சபித்தால் சாபம் திரும்பி ஈசனையே பாதிக்கும் என்பதுதான் என அப்புராணம் கூறுகிறது.

இவ்விஷயத்தை ஸ்ரீ ஸ்வாமிகளிடம் தெரிவிக்க, அவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் கேட்டுக்கொண்டு, விநாயகரைச் சபிப்பது குறித்த மூலவாசகத்தை அறிய ஆர்வம் தெரிவித்தார்கள். அடுத்த சந்திப்பில் அதனை நிவேதிக்க, அவர்கள் பேருவகை பூத்தார்கள். வாசகமாவது :

வெருவருஞ் செலவின் வேழ முகத்தனை விதித்த சாபம்
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியால் சாபம் கூறான்.

(அஞ்சுதலில்லாத போக்கையுடைய யானை முகனுக்கு இடும் சாபம் பெருத்த வலிவோடு தன்னையே, அதாவது சிவ பெருமானையே சாரும் என்னும் முறைமையால் அவருக்குச் சாபமிடவில்லை.)

"விநாயக புராணம் மாதிரியான ஒரு புஸ்தகத்தில் இப்படிச் சொல்வாமல், பரமசிவனுடைய மகிமையைச் சொல்வதற்கே ஏற்பட்ட திருவிளையாடல் புராணத்தில் சொல்லியிருப்பது ரொம்பவும் விசேஷம்" என்று அப்போது ஸ்வாமிகள் பகர்ந்தார்கள்.

சூரபத்மா கேட்டிருந்த வரத்தின் ஒரு நிபந்தனை தான் காரணம். தாங்கள் வரம் கேட்கிற காலத்தில் இருக்கிற எவருமே தங்களை வதம் பண்ணமுடியாத படித்தான் அஸுரர்கள் சாமர்த்தியமாக நிபந்தனை போடுவார்கள். அப்படித்தான் இவனும் பண்ணி னான். தன்னைக் கொல்லக்கூடிய சிவஸத்ருசன் (சிவனுக்கொப்பானவன்) ஸ்திரீ சம்பந்தமில்லாமலே பிறந்தவனாயிருக்கணும் என்று அவன் 'கண்டிஷன்' போட்டிருந்தான். ஸர்வசக்தரான பிள்ளையார் தன்னை வதம் பண்ணமுடியாதபடி debar பண்ணி (தடை செய்து) விட வேண்டுமென்றே இப்படி சாமர்த்தியமாகக் கேட்டிருந்தான்!

பிள்ளையார் பல விதங்களில் பல ஆவிர்பாவங்கள் செய்திருக்கிறார். அதில் ஒன்றின்படி, புருஷ சம்பந்தந்தான் அடியோடு இல்லாமல் அம்பாளுடைய சரீர மஞ்சள் பொடியிலிருந்தே, அவளாலேயே வழித்தெடுக்கப்பட்டு ஸ்ருஷ்டியாகியிருக்கிறார். வேறே அவதாரக் கதைகளும் இருக்கின்றன. ஸ்வாமி, அம்பாள் இரண்டுபேரும் கைலாஸத்திலுள்ள சித்திரசாலையில் அலங்காரமாக எழுதியிருந்த ப்ரணவாக்ஷரத்தை ஒரே சமயத்தில் பார்த்தார்கள்; அப்போது அவர்களுடைய வீக்ஷணங்கள் (பார்வைகள்) அந்த அக்ஷரத்தில் ஒன்று சேர்ந்தன; உடனே அதி லிருந்து விக்கிநேச்வர ஸ்வரூபம் அவதாரம் பண் ணிற்று என்ற ஒரு கதை. ஒரு சமயம் அம்பாள் பெண் யானை ரூபம் எடுத்துக் கொண்டிருந்தாள்; அப்போது ஸ்வாமியும் ஆண் யானையாக ரூபம் தரித்துக் கொண்டார்; அந்த யானைகளுக்குப் பிறந்த குட்டியே கணபதி என்று இன்னொரு கதை. ஞானஸம்பந்தர் திருவாரூர் கிட்டேயுள்ள வலிவலம் என்ற க்ஷேத்திரத் தில் பாடிய தேவாரத்தில் இதை refer செய்திருக் கிறார்:

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன்.

'பிடி' என்றால் பெண்யானை. 'களிறு' என்றால் ஆண் யானை. சிவசக்திகள் இப்படி யானைத் தம்பதியாக வந்ததை அப்பர் ஸ்வாமிகள் பிரத்தியக்ஷ தரிசனமாகவே பார்த்துப் பாடி வைத்திருக்கிறார்:


காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறி யாதன கண்டேன்.


பண்டாசுரன் மேல் லலிதாம்பாள் படையெடுத்துப் போனபோது, அவன் விக்கின யந்திரம் போட்டு அவளுடைய படை முன்னேற முடியாதபடி ஸ்தம்பிக்க வைத்தான்; அப்போது அவள் காமேச்வரன் என்ற பெயரில் அவளைப் போலவே தநுர்-பாண-பாச-அங்குசங்களோடு ரூபம் எடுத்துக் கொண்டிருந்த பரமசிவனைப் பார்த்தாள்; உடனே கணபதி ஆவிர் பவித்தார் என்று இன்னொரு கதை.

இப்படியுள்ள அநேகக் கதைகளில் எல்லாவற் றிலுமே அம்பாள் ஸம்பந்தத்தோடு விக்கிநேச்வரர் தோன்றியதாகத்தான் இருக்கிறது. ஆகையால் சூரபத்மா போட்ட 'கண்டிஷன்'படி அவரைக்கொண்டு அவனை வதைப்பது முடியாத காரியமாகிவிட்டது.

சிவனுக்கோ, சூராதி அசுரர்களுக்கோ விக்கிநேச் வரர் சக்தியில் குறைந்தவரில்லையானாலும், அவ ருடைய அவதாரத்திலிருந்த அம்பாள் சம்பந்தத் தாலேயே அவரால் அசுர ஸம்ஹாரம் நடப்பதற்கில் லாமலாயிற்று. அதனால்தான் தேவர்கள் இன்னொரு சிவசுதனுக்காகப் பிரார்த்திக்க, ஸ்வாமியும் அம்பாள் சம்பந்தமில்லாமல் தன்னுடைய நேத்திரங்களிலிருந்து வெளியே விட்ட அக்கினிப் பொறிகளிலிருந்தே குமாரஸ்வாமியை உண்டுபண்ணினார்.

இதையே இன்னொரு விதத்தில் சொன்னால், விக்கிநேச்வரர் இடம் ஒழித்துக் கொடுத்ததால்தான் குமாரஸ்வாமி என்று ஒருத்தர் சம்பவிக்கவே முடிந்தது! விக்கிநேச்வரருக்கே சர்வசக்தி இருந்தும், தகப்பனார் அசுரர்களுக்குக் கொடுத்த வரத்தின் நிபந்தனையைக் காப்பாற்ற வேண்டுமென்றே அவர் அசுர சம்ஹாரத்திற்குப் புறப்படாமலிருந்தார். அவர் அப்படிப் புறப்படாததால்தான் சுரசேனைக்கு நாயக ராக குமாரஸ்வாமி சம்பவிக்க முடிந்தது. தாம் ஸர்வசக்தராயிருந்தும், "மூத்தது மோழை, இளையது





அமுதசுரபி தீபாவளி மலர் '91

போட்டோ : யோகா

காளை' என்று பழமொழி ஏற்படும்படியாகத் தாம் ஒதுங்கியிருந்து கொண்டு, குழந்தைத் தம்பியே மஹா அசுரர்களை ஜயித்து பெரிய கீர்த்தி பெறும்படி - "வெற்றிவேல், வீரவேல்!" என்று 'அப்ளாஸ்' வாங்கும் படிப் பெருமை சேர்த்துக் கொடுத்தார்.

தம்மைத் தாமே பல ரூபங்களில் பிறப்பித்துக் கொள்ளும் சக்தி அவருக்கு உண்டு. அவர் நினைத் திருந்தால் தகப்பனாருக்குள்ளே ஆவேசித்து அவரிட மிருந்து மட்டும் - அம்பாள் சம்பந்தமில்லாமல் - வேறே ஒரு ரூபத்தில் அவதாரம் எடுத்திருக்கலாம்; தானே தேவ சேநாதிபதியாகி, அசுரர்களை வதம்செய்து மஹாகீர்த்தி பெற்றிருக்கலாம். அவர் அப்படிச் செய்யாமலிருந்ததாலேயே லோகத்துக்கு ஸுப்ரம் மண்யம் என்ற திவ்விய மூர்த்தி கிடைத்தது.

பிள்ளையாருக்குக் குமார ஸம்பவத்தில் நேராகப் பங்கு இல்லாவிட்டாலும், இவர் அசுர ஸம்ஹாரம் செய்யவில்லை என்பதால்தான் அது ஏற்படவே செய்தது என்பதால் 'நெகடிவ்' - சம்பந்தம் இருக் கிறது. வலுவான 'நெகடிவ்' - சம்பந்தம்!

அடுத்தாற்போல, தம்பி ஸ்வாமியுடைய விவாஹம். வள்ளி கல்யாணம் என்று உத்ஸவமாகப் பண்ணும் விவாஹம். கதை, உபந்நியாஸம், ட்ராமா, ஸினிமா, டான்ஸ், - ட்ராமா என்றெல்லாம் அமர்க்களமாகப் பண்ணுவதற்கு இடம் கொடுக்கிற விவாஹம்.

அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கும் - விக்கி நேச்வரர் மதயானையாக வள்ளியைத் துரத்திக் கொண்டு வந்ததால்தான் அவள் சுப்ரம்மண்யரிடம் சேர்ந்தாள் என்ற கதை. இந்த இடத்திலே மூத்தது மோழையில்லை, காளைக்கு மேலே, மத்த கஜமே என்று அண்ணாஸ்வாமி காட்டினார். வள்ளி சேர மாட்டேன் என்கிறாளே என்று தம்பிதான் அப்போது செயலில்லாமல் நின்றார். அப்புறம் தமையனாரைப் பிரார்த்தித்துக் கொண்டால்தான் இடையூறு நீங்கும் என்று அந்த மஹா சக்திமானான தேவசேனாநாயகர் புரிந்துகொண்டார்; விக்நேச்வரரை ஸ்மரித்து வேண்டிக்கொண்டார். அவரும் உடனே தம்பிக்குச் சஹாயம் செய்வதற்காக மதயானையாக வந்து வள்ளியைத் துரத்தியடித்து, தம்பியை அவள் சேரும் படிப் பண்ணினார். "கைத்தலம் நிறைகனி" என்ற பிள்ளையார் வணக்கத் திருப்புகழில் இதைச் சொல்லித்தான் முடித்திருக்கிறது. ★ அதிலே "சிறுமுருகன்" என்று சொல்லியிருக்கிறது. இதற்கு முந்தி சின்னஞ்சிறு முருகனாயிருந்தபோதுதான் அவர் சூர ஸம்ஹாரமே பண்ணி, "ஸேநாநீநாம் அஹம் ஸ்கந்த :" (படைத் தலைவர்களில் நான் கந்தன்') என்று கீதையில் கிருஷ்ணர் கூடச் சொல்லும்படியான கீர்த்தியடைந்தது. அப்படிப்பட்டவர் இப்போது நல்ல கட்டிளங்காளைப் பருவத்திலே ஒரு சாதாரண வேடப் பெண்ணை அடைய முடியாமல் செயலற்றுப் போயிருந் தார். அந்த அசக்த நிலையை வைத்துத் தான் - வய சைப் பொறுத்தில்லை - "சிறு" முருகன் என்று அருண கிரிநாதர் போட்டிருக்கிறார். இப்போது அவருக்குக் காரியஸித்தி ஏற்படச் செய்த "பெரும்" ஆள் - பெரு மாள் - விக்கிநேச்வரர்தான். அதனால்தான் திருப் புகழ்களின் முடிவில் சுப்ரம்மண்யருக்கே உரியதாக வருகிற 'பெருமாளே' என்ற வார்த்தையை இந்தத் திருப்புகழில் மட்டும் விக்கிநேச்வரருக்குச் சூட்டி முடித்திருக்கிறார். தம்பியையே இஷ்ட தெய்வமாகக் கொண்ட அருணகிரிநாதர் அவரைச் "சிறு"வராக்கி, அண்ணாவைப் "பெருமாள்" என்று பெருமைப்படுத்து வது விசேஷம்!

ஆக, ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் விவாஹத்தில் நேராகவே விக்கிநேச்வரருக்குப் 'பார்ட்' இருக்கிறது. Key role என்றே சொல்லும்படியாக இருக்கிறது.

ஸ்கந்த சரித்திரத்திலே இது விவாஹம். அந்தச் சரித்திரத்திலே சந்நியாசமும் உண்டு. ஆனால் விசித்திரமாக, சுப்ரம்மண்ய ஸ்வாமி விவாஹத்திற்கு முந்தி சந்நியாசம் வாங்கிக் கொண்டவர்! கிருஹஸ் தாச்ரமத்திற்கு முந்தி ஸந்நியாஸாச்ரமம்! முதலில் சந்நியாசம், அப்புறம் மஹா சக்திமானாக யுத்தம் செய்து சத்ரு ஸம்ஹாரம், அதற்கும் அப்புறம் அண்ணாவின் அநுக்கிரஹ சக்தியைக் கொண்டு கல்யாணம் என்று ஸ்கந்த சரித்திரம் வேடிக்கையாக, புதுமையாகப் போகிறது.

அவர் ஸந்நியாஸியான நிலைதான் தண்டாயுத பாணி. "பழம் நீ - பழநி"க் கதை தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். வாஸ்தவத்தில் அது தண்டாயுத மில்லை, தண்டம்தான்; நாங்கள் வைத்துக் கொண் டிருக்கிற, ஆயுதமில்லாத, மூங்கில் கழிதான். தண்டா யுதம் என்று ஆயுதமாக இருக்கப்பட்டது சேனா நாய கனின் ஆயுதம். லலிதாம்பாளுடைய சேநா நாயகிக்கு தண்டினி என்றே பெயர். அப்படிப்பட்ட ஆயுத தண்டத்தை வீசிச் சண்டை போடுவதற்கு முந்தியே மனஸை அடக்கி வைப்பதற்கு அறிகுறியான சாந்தி தண்டத்தைக் கையில் பிடித்துக்கொண்டு பழநி மலை யுச்சியில் நின்றவர் தண்டபாணி. நமக்கு வேண்டு மானால் மனஸை அடக்குவது மஹாயுத்தமாயிருப்ப தால் இந்த தண்டமும் ஆயுதமாயிருக்கலாம். அவருக்கு அது ஓர் அலங்காரந்தான்! நமக்கு reminder - ஆக (ஞாபகமூட்டியாக) அவர் வைத்துக் கொண்டிருப்பது தான்!

எந்த ஸ்வாமிக்குமில்லாத பரம ஞானமான துறவறக் கோலம்! இப்படி அதி பால்யத்தில் மொட்டை அடித்துக்கொண்டு, ஒரு சின்னக் கோவணத்தைக் கட்டிக்கொண்டு, தண்டமும் கையு மாக வேறே ஸ்வாமி உண்டா? அழகுக்கு ஈடில் லாதவர், சக்தியில் ஈடில்லாதவர், ஸ்தானத்தில் ஈடில் லாமல் தேவநாயகனாக அவதரித்தவர், ஆறு நாள் பால்ய லீலைக்குள்ளேயே இப்படி ஆண்டி ஆகி, "ஞான பண்டித ஸ்வாமீ" என்று பாடி மனசு உருகும் படியான சாந்தி ஸ்வரூபமாக நிற்கிறாரென்றால் அதற்கு யார் காரணம்? விக்கிநேச்வரர்தான்!

இவர் அப்பா - அம்மாவைப் பிரதக்ஷிணம் செய்து பழத்தை அடித்துக்கொண்டு போனதால்தான் அவர் தோற்றுப்போய் ஆண்டியாகிவிட்டார்.

லோகத்துக்கெல்லாம் பரம சாந்திக்கும் ஞானத் துக்கும் மூர்த்தியாக அவரை இப்படி ஆக்கின 'க்ரெடிட்' பிள்ளையாருக்குத்தான்!

★ அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே!

அப்புறம் தாயார் - தகப்பனார் போய் சமாதானம் பண்ணினார்கள். இதெல்லாம் ஒரு நாடகந்தானே? கோவணாண்டியும் தடபுடலாக யூனிஃபார்ம் போட்டுக்கொண்டு கம்மான்டர்-இன்-சீஃப் ஆகக் கிளம்பினார். ஆனாலும் தாம் ஆண்டியாயிருந்த அவஸரம் (கோலம்) லோகத்தில் என்றைக்கும் இந்திரிய நிக்ரஹத்தையும், ஞானத்தையும், சாந்தத்தையும் 'வைப்ரேட்' செய்து கொண்டிருக்கட்டுமென்று கிருபை கூர்ந்து, அந்த அவஸரம் என்றைக்கும் பிம்ப ரூபத்தில் ஜீவகளையோடு இருக்கும்படியாகச் 'சார்ஜ்' பண்ணிவிட்டுக் கிளம்பினார்.

தேவ சேனாநாயகன் என்ற உச்சமான 'அப்பாயின்ட்மென்டு'டனேயே சுப்ரமண்யர் பிறந்தது; அவர் வல்லீ கல்யாண மூர்த்தி என்ற கோலத்தில் தம்பதியாக, நமக்கு ஒரு கருணைத் தாயாரைச் சேர்த்துக் கொண்ட ப்ரபுத் தகப்பனாராக ஆனது; ஞான வைராக்கிய ஸ்வாமியாகப் பழநியில் நித்ய ஸாந்நித்யம் கொண்டது ஆகிய மூன்று முக்கியமான சம்பவங்களிலும் விக்கிநேச்வரரின் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது.

அதனால்தான் அந்தத் தம்பிக்கு இவர் தமையனென்று தெரிவிக்கவே ஸ்பெஷலாக ஒரு நாமா இருக்கணுமென்று "ஸ்கந்த பூர்வஜன்" என்று ஷோடச நாமாவளியில் கொடுத்திருக்கிறது.

பூர்வஜர் என்றால் முன்னவர், முதலில் தோன்றியவர் - ஆதி. இந்தப் பெயரோ பதினாறில் கடைசியாக, அந்தமாக, வருகிறது. ஆதியையும் அந்தத்தையும் சேர்த்து சம்பூர்ணத்வத்தைக் காட்டுவதாகத் தோன்றுகிறது.

ரஸமாக ஒன்று தோன்றுகிறது :

இந்த ஷோடச நாமாக்களைச் சொல்கிறவருக்கு, "வித்யாரம்பே" (கல்வி கற்கத் தொடங்கும்போது), "விவாஹே" (கல்யாணத்தின்போது), "ப்ரவேசே" (ஓரிடத்திற்குச் செல்லும்போது), "நிர்கமே" (ஓரிடத்திலிருந்து புறப்படும்போது), "ஸங்க்ராமே" (சண்டை சச்சரவுகளில்), "ஸர்வ கார்யேஷு" (எல்லாக் காரியங்களிலுமே) விக்கினம் உண்டாகாது என்று பலன் சொல்லியிருக்கிறது. இந்த ஒவ்வொன்றுக்குமே ஸ்கந்த சரித்திரத்தில் சான்று 'proof' இருப்பதாகத் தெரிகிறது.

"வித்யாரம்பே". பரமேச்வரனுடைய ஞான நேத்ர ஜ்யோதிஸிலிருந்து உண்டான சுப்ரம்மண்யருக்கு அக்ஷராப்யாஸம் என்ற அர்த்தத்தில் வித்யாரம்பம் அவசியமேயில்லை. அவரே "ஓம் இத்யேகாக்ஷரம்" என்ற பிரணவத்திற்கு அர்த்தமாக இருந்துகொண்டு, அதைப் பிதாவுக்கே உபதேசம் பண்ணினவர். ஆனபடியால் அவர் விஷயத்தில் வித்யாரம்பம் என்பது பிரம்ம வித்யையை அநுபவமாக அநுஷ்டிக்கும் சந்நியாஸாச்ரமத்தை ஸ்வீகரிப்பதுதான். அப்படி அவர் சந்நியாசி ஆனதற்கு விக்கிநேச்வரர் பழப் போட்டியில் ஜயித்ததுதான் காரணம். ★

"விவாஹே". வள்ளி கல்யாண சமாசாரம். அதில் அண்ணாக்காரரின் முக்கியமான பங்கை முன்னாலேயே பார்த்துவிட்டோம்.

தம்பியின் இல்லறம், துறவறம் இரண்டிற்குமே அவர்தான் key கொடுத்திருக்கிறார். தம்பி குழந்தையாயிருந்தபோது அவரை ஸந்நியாஸியாக்கி, அப்புறம் யௌவனத்தில் கிருஹஸ்தராக்கியிருக்கிறார்! தம்முடைய பரம பக்தையான அவ்வையாரையே அவள் நல்ல யௌவனத்தில் கல்யாணம் செய்துகொள்ள வேண்டிய சமயத்தில் கிழவியாக்கி ஒரு சந்நியாசினி மாதிரிச் செய்திருக்கிறார்! பெரும்பாலும் பாலப் பிரம்மசாரியாகவே நாம் பூஜிக்கும் ஸ்வாமியின் லீலை இப்படி வேடிக்கையாக இருக்கிறது!

"ப்ரவேசே". இந்த லோகத்தில் இப்படி ஸுப்ரஹ்மண்யம் என்று ஒரு திவ்விய மங்கள மூர்த்தி பிரவேசிப்பதற்கு - தோன்றுவதற்கு - காரணம் சூரபத்மாவின் நிபந்தனைப்படி விக்கிநேச்வரர் அவனுடைய ஸம்ஹாரத்திற்கு 'டிஸ்க்வாலிஃபை' ஆகியிருந்ததுதான் என்று பார்த்தோம்.

"நிர்கமே". பிரவேசம் என்றால் ஒன்றில் புகுவது; நிர்கமம் என்றால் ஒன்றை விட்டுப் போய்விடுவது. வள்ளி கல்யாணம் பிள்ளையார் நடத்திக் கொடுத்து முடிந்தவுடன் சுப்ரம்மண்ய ஸ்வாமி தாம் பிரவேசித்திருந்த இந்த உலகத்தை விட்டுவிட்டு ஸ்கந்தலோகம் என்கிற தம்முடைய நித்தியவாஸ ஸ்தானத்திற்குப் புறப்பட்டுப் போய்விட்டார். இரண்டு பத்தினிகளோடும் புறப்பட்டுப் போய்விட்டார்.

வள்ளி கதை வருவதற்கு முந்தியே தேவஸேனா கல்யாணமாகியிருந்தது.

அவர் லோகத்தில் அவதாரம் பண்ணினதற்கு இரண்டு காரணம். சூர சம்ஹாரம் ஒன்று. இன்னொன்று, அவருடைய மாமா மஹாவிஷ்ணுவின் இரண்டு பெண்களில் ஒருத்தி தேவராஜன் பெண்ணாகவும், மற்றவள் வேடராஜன் பெண்ணாகவும் வளர்ந்து வந்தவர்களை அவர் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்பது.

★ விக்கிநேச்வரருக்கு 'குமாரகுரு' என்று ஒரு நாமமிருப்பதை ஸ்ரீஸ்வாமிகளுக்கு நினைவூட்டி, இதிலிருந்து அவர் ஏதோவொரு சமயத்தில் முருகனுக்கு வித்யாரம்பம் செய்தவராகவே தெரிகிறதென விண்ணப்பிக்கப்பட்டது. உடனே அவர்கள், "குமாரகுரு என்று தூர்வாயுக்ம அர்ச்சனையில்தானே வருகிறது?" என வினவினார்கள். ஆம், இரட்டை அருகம்புற்களால் 21 முறை அர்ச்சனை செய்வதற்கு ஏற்பட்ட 21 நாமாவளியில்தான் இந்நாமம் வருகிறது.

தொடர்ந்து ஸ்ரீஸ்வாமிகள், "பரமசிவனுக்கு ப்ரணவார்த்தம் தெரியாதா என்ன? ஆனாலும் லோகத்துக்கு அடக்க குணத்தையும் குரு பக்தியையும் தெரிவிக்கணுமென்றே பிள்ளையிடம் உபதேசம் வாங்கிக் கொண்டார். அதே மாதிரி, அப்பாவுக்கும் உபதேசித்தவர், தகப்பன் ஸ்வாமி என்றெல்லாம் கியாதி பெற்றுவிட்ட தாமும் சிஷ்யனாகி இன்னொருத்தரிடம் பாடம் கேட்டு லோகத்துக்கு விநயத்தில் பாடம் புகட்டணுமென்று சுப்ரம்மண்யரும் நினைத்திருப்பார் போலிருக்கிறது. 'அப்பா ஏற்கெனவே தமக்குச் சிஷ்யராகிவிட்டதால் உபதேசிக்கமாட்டார். அவரிலே பாதியாகவே உள்ள அம்மாவும் மாட்டாள்' என்பதால் தமையனாரிடம் அவர் பாடம் கேட்டுக்கொண்டு அவரைக் குமாரகுரு ஆக்கினார் போலிருக்கிறது. அவருடைய சந்நியாச ஸ்வீகாரத்திற்குப் பிள்ளையாரே காரணம் என்பதை வித்யாரம்பம் என்று நான் சுற்றி வளைத்து சம்பந்தப்படுத்தியதைவிட, இது 'டைரக்டா'க சுப்ரம்மண்யரின் வித்யாரம்பத்தில் அவரை குருவாகக் கொண்டுவந்து உட்கார்த்திவிடுகிறது" என்று மிக்க மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

முதலில் திருச்செந்தூர் தாண்டி ஸமுத்திரத்தில் போய் அசுர சம்ஹாரம் முடித்தார். அப்புறம் திருப்பரங்குன்றத்தில் தேவஸேனையைக் கல்யாணம் பண்ணிக்கொண்டார். அங்கே அவளோடு இருந்து கொண்டிருக்கும்போது நாரதர் வந்து சித்தூரில் வள்ளி அவரே நினைவாக ப்ரேமையில் உருகிக் கொண்டிருப்பதைச் சொன்னார். ஆகையால் திருப்பரங்குன்றக் கோயிலில் அவர் வள்ளி - தேவஸேனா சமேதராக இல்லாமல், ஒரு பக்கம் தேவஸேனையும், மறுபக்கம் வள்ளிக்குப் பதில் அவளுக்காக தூது சொல்லவந்த நாரதருமாகத்தான் இருக்கிறார். ஸத்குருவானவர் ஒரு ஜீவாத்மாவிடம் பரமாத்மாவின் க்ருபையைத் திருப்பிவிடுவதற்கு ரூபகமாக நாரதர் வள்ளியிடம் சுப்ரம்மண்யரைத் திருப்பிவிட்டார். அதனால் சிவனுக்கும் குருவான ஸ்வாமி, நாரத குருவுக்குத் தன்னுடைய சந்நிதியிலேயே ஒரு பக்கம் இடம் கொடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

நாரதர் சொன்னதன்மேல் அவர் புறப்பட்டுப்போய் வேடன், விருத்தன், வேங்கை மரம் எல்லாமாக வேஷம்போட்டு, அப்புறம் அண்ணாவின் அருளால் வள்ளியைக் கல்யாணம் செய்து கொண்டார். அதற்கப்புறம் புக்தி- முக்தி என்கிற இம்மை - மறுமைத் தத்துவங்கள் இரண்டோடும் சேர்ந்துள்ள தம்முடைய சாந்நித்தியம் பூலோகத்தில் இருக்க வேண்டுமென்று இரண்டு பத்தினிகளோடும் 'ஹனிமூன்' மாதிரிக் கொஞ்ச நாள் திருத்தணியில் இருந்தார். பிற்பாடு ஸ்கந்தலோகம் போய்விட்டார். அதுதான் "நிர்கமம்". அதற்குப் படி போட்டுக் கொடுத்தது வள்ளி கல்யாணம். அதோடு அவருடைய அவதாரத்தின் இரண்டாவது 'பர்ப'ஸும் நிறைவேறி விட்டது.

வள்ளி கல்யாணத்திற்குப் படி போட்டுக் கொடுத்தவர் யானையாக வந்து அவளைத் துரத்திய பிள்ளையாரேயாகையால், சுப்ரம்மண்யர் நம் லோகத்திலிருந்து ஸ்கந்த லோகத்திற்கு 'நிர்கமம்' பண்ணவும் அவர்தான் உதவியிருக்கிறார்.

"ஸங்க்ராமே". ஸங்க்ராமம் என்றால் சண்டை, யுத்தம். "சங்க்ராம சிகாவல" என்று "கந்தரநுபூதி"யில் கூட வருகிறது. யுத்தத்தில் மஹாபராக்கிரமம் காட்டிய சுரசேநாதிபதி சுப்ரம்மண்யர். அப்படி யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால் அவர் நிச்சயம் விக்கிநேச்வர பூஜை செய்துதானிருப்பார். ஏன் இப்படிச் சொல்கிறேனென்றால் விக்கிநேச்வர பூஜை செய்யாமல் திரிபுர சம்ஹாரத்திற்குப் புறப்பட்ட தகப்பனார், பண்டாசுர ஸம்ஹாரத்திற்குப் புறப்பட்ட தாயார் ஆகியவர்களுக்கும் விக்கினங்கள் ஏற்பட்டு, அவர்கள் அந்தப் பூஜை செய்தபிறகுதான் விக்கினம் நிவர்த்தியாயிற்று என்பதால் தம்பிக்காரர் முதலிலேயே ஜாக்கிரதையாக, விழிப்பாயிருந்து அண்ணாவைப் பூஜை பண்ணித்தானே இருப்பார்? அது மாத்திரமில்லை. சூர ஸம்ஹாரத்திற்கு இவர் புறப்படுவதற்கு முன்னாடி அவரோடு பழத்துக்குப் போட்டி போட்டுப் பந்தயம் வந்ததில் தோற்றே போயிருக்கிறார். அந்த விரக்தியில் ஆண்டியானார். அந்த ஆண்டி வாழ்க்கையிலாவது ஜயித்தாரா, அதாவது அது தக்கி நின்றதா என்றால், இல்லை. மாதா பிதாக்கள் வந்து கேட்டுக்கொண்டு, அசுர சம்ஹாரத்துக்காகவே அவர் அவதரித்திருப்பதை ஞாபகப்படுத்தியவுடன், சந்நியாசத்திற்கு முழுக்குப் போட்டுவிட்டுச் சண்டைக்குப் புறப்பட வேண்டியதாயிற்று. அதனால் அண்ணாவின் அநுக்கிரஹம் இருந்தால்தான் காரியம் ஸித்தியாகுமென்று இப்போது அவருக்கு நன்றாகப் புரிந்திருக்கும். ஆனபடியால் அவரைப் பூஜை செய்துவிட்டுத்தான் புறப்பட்டிருப்பார்.

"ஸர்வ கார்யேஷு". 'அண்ணாவுக்குப் போட்டியாகப் பழத்துக்குப் பந்தயம் புறப்பட்டது பலிக்கவில்லை. அவரைப் பிரார்த்திக்காமல் ஆண்டியானதும் நிற்கவில்லை' என்பதால் யுத்தத்துக்குப் போகும்போது இவர் அவரைப் பூஜை பண்ணினாலும், பிற்பாடு வள்ளியை அடைவதற்காகப் போனபோது அவரை மறந்துவிட்டார். ஆசை வேகம் எத்தனை பொல்லாதது என்று லோகத்துக்குக் காட்டுவதற்காகவே இப்படி ஏற்பட்டது. விக்கினமும் நிறைய வந்தது. அப்புறம் அண்ணாவைப் பிரார்த்தித்தே காரியஸித்தி பெற்றார். அதனால் அதற்கப்புறம் "ஸர்வ கார்யேஷு" என்றபடி எந்தக் காரியமானாலும் அதை ஆரம்பிப்பதற்கு முன்னாடி விக்கிநேச்வர பூஜை செய்துதானிருப்பார். அதைப் பற்றி சந்தேகமேயில்லை.

ஆகையாலேயே பிள்ளையாருடைய ஷோடச நாமாக்களை முடிக்கிறபோது, அதற்குரியதான பல ச்ருதியில் சொல்லப்படும் அத்தனை விதங்களிலும் அவருடைய அநுக்கிரஹத்தைப் பெற்ற ஸ்கந்தரைக் குறிப்பிட்டு, அவருடைய பூர்வஜர் என்று பூர்த்தி பண்ணியிருக்கிறது.

'ஸ்கந்தர்' என்றால் 'துள்ளிக்கொண்டு வெளிப்பட்டவர்' என்று அர்த்தம். பரமேச்வரனுடைய சக்தி நேத்திர ஜ்யோதிஸாக ஒரே துடிப்போடு, லோகாநுக்கிரஹம் பண்ணவேண்டும் என்ற துடிப்போடு, துள்ளி வெளிப்பட்டே ஸ்கந்தமூர்த்தி உத்பவமானார். அந்த விசேஷத்தால்தான் அவருக்கு சுப்ரம்மண்யர், கார்த்திகேயர், குமாரர், சரவணபவர் என்றிப்படி அநேக நாமாக்கள் இருந்தபோதிலும் அவரைப் பற்றிய புராணத்திற்கு ஸ்கந்த புராணம், ஸ்காந்தம் என்றே பெயரிருக்கிறது. அவருடைய லோகத்திற்கு ஸ்கந்த லோகம் என்றே பெயர். அவர் சம்பந்தமான விரதத்திற்கு ஸ்கந்த ஷஷ்டி என்றே பெயர் சொல்கிறோம். அம்பாளோடும் முருகனோடும் இருக்கிற பரமேச்வர மூர்த்திக்கும் ஸோமாஸ்கந்தர் என்றுதான் பெயரிருக்கிறது. முருகன் என்ற அவருக்குச் சிறப்பாகத் தமிழ்ப்பெயர் கொடுத்திருக்கும் நம் பாஷையிலும் 'கந்தரநுபூதி', 'கந்தரலங்காரம்', 'கந்தர் கலிவெண்பா' என்றெல்லாமே ஸ்தோத்திரங்கள் இருக்கின்றன. சென்னைப் பட்டணத்தின் சிறப்பாகக் கந்தகோட்டம் இருக்கிறது.

ச்ருதியிலே (வேதத்திலே) ஒன்று வந்துவிட்டதென்றால் அதற்குத் தனிப்பெருமை, தனி கௌரவம் உண்டு. அப்படி இந்த ஸ்கந்த நாமத்திற்கு இருக்கிறது. புராணமான ஸ்காந்தத்தில் வள்ளி என்ற ஜீவாத்மாவுக்கு நாரதர் குரு ஸ்தானமென்று வருகிறதென்றால், ச்ருதியைச் சேர்ந்த சாந்தோக்ய உபநிஷத்தில் அந்த நாரதருக்கு சுப்ரம்மண்யரின் பூர்வாவதாரமான ஸனத்குமாரர் ஞானோபதேசம் பண்ணியதாக வருகிறது. ஸனத் என்று பிரம்மாவுக்குப் பெயர். ஸ்ருஷ்டி ஆரம்பத்திலேயே பிரம்மாவுக்கு மானஸ புத்திரராகப் பிறந்தவர் ஸனத்குமாரர். ஸனக,

ஒரு பிரார்த்தனை

ஏ.வி. சுவாமிநாதன் ஐ.ஏ.எஸ்.(ஓய்வு)

அடுத்தவர்க்கு அபயம் நீ;
அல்லாரைத் தான்தேடி
தடுத்து ஆட் கொள்ளஉன்றன்
தவப்பாதம் நடந்துசெல்லும்.
எடுத்தமனிதப் பிறப்பிதற்கு
என்னபயன் என்றுணர்த்திக்
கொடுத்தவனே; அருளரசின்
கொற்றவனே! குருநாதா!

புல்லாகிப் புழுவாகிப்
புள்ளாகி விலங்காகி
எல்லாமாய்ப் பின்பிறவி
எடுத்திருக்கும் எமக்கோநீ
இல்லாதோர் உய்வில்லை;
இருட்கலிக்கு இரையாவோம்; – அதனால்
பல்லாண்டு பல்லாண்டு
பவித்திரனே வாழ்ந்திடுவாய்

(மன்பதையைத் தேடித் தடுத்தாட்கொள்ள தவப் பாதங்கள் மீண்டும் நடந்துவரவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் சமர்ப்பணம்)

ஸனந்தன, ஸனாதன, ஸனத் குமாரர் என்ற நால்வரில் முக்கியமானவர். பிறக்கும்போதே ஞானியாக இருந்த இந்த நால்வரே நிவிருத்தி மார்க்கம் என்ற சந்நியாசத்திற்கு ஆதர்ச புருஷர்கள். காமமே தெரியாத நித்திய பாலர்களாக இருப்பவர்கள். பிரம்ம குமாரரான அந்த ஸனத்குமாரரேதான் சிவகுமாரரான சுப்ரம்மண்யராக வந்தார் என்று சாந்தோக்யுத்தில் சொல்லியிருக்கிறது. சிவகுமார அவதாரத்தில் அவர் வீராதிவீர சேநாதிபதியாகவும், இரட்டைப் பத்தினிகளைக் கொண்டவராகவும் இருந்தபோதிலும் பழைய ஸனத்குமார 'வாஸனை' யால்தான் நடுவிலே கொஞ்ச காலம் பழநியில் கோவணாண்டி சந்நியாசியாக நின்றார் போலிருக்கிறது! இவர் கோவணாண்டி என்றால் ஸனத்குமாரருக்கு அந்தக் கோவணம்கூடக் கிடையாது! ஏனென்றால் இந்த சிவகுமாரர் 'என்றும் இளையவர்' என்றால் அந்த ஸனத்குமாரரோ இன்னும் இளசாக, என்றும் குழந்தையாகவே இருந்தவர். அது இருக்கட்டும். என்ன சொல்ல வந்தேனென்றால், ச்ருதி சிரசான சாந்தோக்யத்தில், ஸனத்குமாரர்தான் ஸுப்ரஹ்மண்யர் என்று முடிக்கிற இடத்தில் ஒரு தரத்துக்கு இரண்டு தரமாக "ஸ்கந்த ஸ்கந்த" என்று இந்த நாமாவையே சொல்லியிருக்கிறது.

ஸ்கந்தன் என்பது லோகம் முழுக்கப் பரவிப் பிரக்கியாதியான பெயர். "ஸ்கூல்" என்பதை "இஸ்கூல்" என்கிற மாதிரி ஸ்கந்த நாமாவைத்தான் தேசாந்தரங்களில் 'இஸ்கந்தர்' என்று ஆக்கிக் கொண்டார்கள். 'அல்' என்பது ஸெமிடிக் பாஷைகளில் ஒரு குறிப்பிட்ட வஸ்துவைத் தெரிவிக்கும் definite article; இங்கிலீஷ் " the" மாதிரி. மரியாதையைக் காட்டும் வாசகமாகவும் ஒரு வார்த்தைக்கு முன்னே 'அல்' சேர்ப்பார்கள். இப்படி உருவான 'அல் இஸ்கந்தர்' தான் கிரீஸ் வரை போய் 'அலெக்ஸாண்டர்' என்று ஆனது.

ஸிக்கந்தர் என்பதும் ஸ்கந்தர் என்பதன் இன்னொரு திரிபுதான். ஆகையால் ஸெகந்திராபாத் என்கிற ஸிக்கந்தராபாத்தில் சமீபத்தில் ஸ்கந்த கிரி ஆலயம் விசேஷமாகத் தோன்றியிருப்பதும் பொருத்தந்தான்!

ஸ்வீடன், நார்வே, டென்மார்க் எல்லாம் சேர்ந்து ஸ்காண்டியா என்று இருக்கிறதல்லவா? ஸ்காண்டி என்ற பிரதேசத்தை வைத்துத் தான் அந்தப் பெயர் ஏற்பட்டது. ஹிந்து-இண்டியா மாதிரி ஸ்கந்த – ஸ்காண்டியா!

★

பிள்ளையார் என்றவுடன் சிவ–சக்திகளின் பிள்ளை என்பது நினைவு வந்துவிடும். ஸ்கந்த பூர்வஜர் என்ற ஷோடச நாமாவை முடிக்கிறபோது மற்ற பிள்ளையின் நினைவும் வந்து, ஸோமாஸ்கந்த மூர்த்தமான மூன்று பேர் நினைவுமே வந்து, சிவகுடும்பம் முழுவதும் நிறைவு பெற்று விடுகிறது. அதனால்தான் அது கடைசிப் பெயராக மங்களம் பாடி சுபமாக முடிக்கிற இடத்தில் இருக்கிறது.

நாமெல்லாருமே பார்வதீ – பரமேச்வராளின் குழந்தைகள்தாம். நம் எல்லாருக்கும் பூர்வஜர், தலைச்சன் பிள்ளையான விக்கிநேச்வரர். அவருடைய அநுஜர்களில் சிரேஷ்டராயிருக்கப்பட்ட ஸ்கந்த மூர்த்தியின் பெயரைச் சொன்னதில் நாமெல்லாரும் அடக்கம். நமக்கெல்லாம் ஓர் அண்ணா விக்கிநேச்வரர் என்ற பந்துத்துவத்தோடு தினமும் காலமே எழுந்தவுடன், காரியங்களை ஆரம்பிப்பதற்கு முன்னால் அவருடைய ஷோடச நாமாக்களைச் சொல்லி, "ஸர்வ கார்யேஷு விக்னஸ்தஸ்ய ந ஜாயதே" என்றபடி எல்லாப் பணிகளையும் நிர்விக்கினமாக நிறைவேற்றி எல்லாரும் சிரேயஸை அடைவோம்.

ஸுமுகச் – சைகதந்தச்ச கபிலோ கஜகர்ணக : I
லம்போதரச்ச விகடோ விக்நராஜோ விநாயக : II
தூமகேதுர் – கணாத்யக்ஷ : பாலசந்த்ரோ கஜாநந : I
வக்ரதுண்ட : சூர்ப்பகர்ணோ ஹேரம்ப : ஸ்கந்த பூர்வஜ : II

எல்லாரும் இந்தப் பதினாறு பேர்களைச் சொல்லி பதினாறு பேறுகளையும் அடைய வேண்டியது.

(கட்டுரையமைப்பு : "ராகபதி")

தார்மீக அரசியல்

சத்யமூர்த்தி

இலக்கியத்திற்காக எண்பது ஆண்டுகளுக்கு முன்பே ரவீந்திர நாத் தாகூர் நோபல் பரிசு பெற்ற இந்திய நாட்டில்தான் இன்றும் அறுபது சதவிகிதம் பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் இருக் கிறார்கள். அதேபோல் தனிநபர் சுத்தம் மிகுந்த நாட்டில்தான் சமுதாய சுகாதாரம் அடிமட்ட நிலையில் உள்ளது. சக்தியை வழி படும் நாட்டில்தான் பெண் சிசுவை, கருவைக் கொல் கிறார்கள். அதேபோல் தார்மீகத் தலைவர்கள் நிறைந்த இந்த புண்ணிய பூமியில்தான் அரசியல் தர்மமும் அடிபட்டுக் கிடக்கிறது. எப்படி? கடந்த ஆறு வருட அரசியலை அலசிப் பார்ப்போம். அவல் கிடைக்கலாம்.

1986இல் ஷா பானு வழக்கு, இந்திய அரசியலில் ஓர் இடிபோல் இறங்கியது. முதிய ஓர் ஏழை முஸ்லிம் பெண், விவாகரத்து செய்யப்பட்டவள். ஜீவனாம்சம் கோரி வழக்குத் தொடர்ந்தாள்.




உச்சநீதி மன்றம் அவளுக்கு சாதகமாக தீர்ப்பளித்தது. இது முற்போக்கு சிந்தனையா, மனி தாபிமானமுள்ள தீர்ப்பா என்று இந்திய சமுதாயம் நிர்ணயிக்க வில்லை. முஸ்லிம்களின் கண் டனக் குரல் கேட்டவுடனே அன்றைய இளைய பிரதமர் 'பல்டி' அடித்தார். தீர்ப்பை நியாயப் படுத்திப் பேசிய முஸ்லிம் மந்திரி ஆரிஃப் கான் அரசியல் அனாதை ஆனார்.

பல்டி அடித்த பிரதமருக்கு மீசையில் மண் ஒட்டாதிருக்க, காங்கிரஸ் கட்சி முஸ்லிம்களின் கட்சி ஆகிவிட்டதோ என்ற சந் தேகம் இந்துக்களுக்கு எழாதிருக்க அதுவரை பூட்டப்பட்டிருந்த இராம ஜன்ம பூமி - பாபர் மசூதி கோயில்கள் திறக்கப்பட்டன. பூதங்கள் வெளியே வந்தன. அர சியல் தர்மம் இரண்டு முறை கொலையுண்டது.

அடுத்து வந்த பிரதமருக்கோ தனது கட்சியிலேயே பூரண மெஜா ரிட்டி இல்லை. தேர்தலுக்குப்பின் கூடிய முதல் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் தேவிலால்தான் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர் 'எனக்கு வயதாகி விட்டது' என்று சொல்லி விலகவே திரு வி.பி. சிங் விழைந்த முடிவு கிடைத்தது. ஆனால் சந்திர சேகரோ 'இது ஏமாற்று வேலை' என்று சாடினார். ஆகவே தேசிய முன்னணி கட்சிக்குள்ளேயே தர்மம் புதைக்கப்பட்டதாக ஒரு கருத்து இழையோடியது.

இப்படி வெற்றி பெற்ற வி.பி. சிங் எப்படி தேர்தலில் வெற்றி பெற்றார்? வடநாட்டில் ஒவ்வொரு தேர்தல் கூட்டத்திலும் நாடக பாணியில் தனது பாக்கெட்டி





லிருந்து ஒரு கால்குலேட்டரை எடுப்பார். இதோ போபர்ஸ் விவகார பாங்க் கணக்கு நம்பர்கள் என்பார். கூட்டம் மெய் சிலிர்க்கும்... பட்டுக்கோட்டை பிர பாகர் நாவல் ஒன்றைப் படித்தது போல. 'பதினைந்து நாள்களில் பணம் சுருட்டியவர்கள் எல்லாரும் கைதாவார்கள்' என்பார். கூட்டம் ஆர்ப்பரிக்கும். ஆனால் நடந்தது என்ன? போபர்ஸ் சிதம்பர ரகசிய மாய்ப் போனது.

இப்படி அரியணை ஏறிய பிரதமர் ஒரே சமயத்தில் இடது சாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கும் ஜால்ரா போட்டார், மேஹம் தொகுதியில் சௌதாலா அர சியல் புழுதியைக் கிளப்பும்வரை. புழுதி கிளம்பியவுடன் சௌதாலா வின் தலையை எல்லாரும் வேண்டி னார்கள், தேவிலாலைத் தவிர. மேஹம் தேர்தல் ஒத்திவைக்கப் பட்டது. சௌதாலாவின் அர சியல், தேர்தல் நடைமுறைகளை அறிய ஒரு குழு அமைக்கப்பட்டது. அதன் முடிவு வெளிவரும் முன் னரே சௌதாலா இன்னொரு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். நாளடைவில் மறுபடியும் முதன் மந்திரியானார். அவர் முதன் மந்திரியாக்கப்பட்டது தனக்குத் தெரியாது என்று புளுகி னார் வி.பி. சிங். விலை போக வில்லை. பிறகு 'அது மாநில விவ காரம்' என்று நழுவினார். அதை யாரும் ஏற்கவில்லை.

அடுத்து வந்த அந்த ஏழு நாள்கள்... இந்திய அரசியலின் சூறாவளி வாரம்... இராக், குவைத்தைக் கபளீகரம் செய்தது. பெனாசிர் பூட்டோ பதவியிறக் கப்பட்டார். தேவிலால் டெல்லியில் ஜாட் விவசாயிகளின் பேரணியை நடத்தப்போவதாக மிரட்டினார். கதி கலங்கிய வி.பி. சிங் 'மண்டல்' எனும் அஸ்திரத்தை விட்டெறிந் தார். மண்டல் அஸ்திரத்தை இந்திரா காந்தியோ, ராஜீவ் காந்தியோ பிரயோகிக்கத் தயங் கினர். ஆனால் மெஜாரிட்டியே இல்லாத பிரதமர், தனக்கு ஒத் துழைப்பு தந்த கட்சிகளைக்கலந்து



ஆலோசிக்காமலேயே ஒரு பெரிய அரசியல் முடிவை எடுத்தது நாட்டை மட்டும் பிளவுபடுத்த வில்லை. ஜனநாயக அரசியலை - கூட்டு அரசு முறையை - குழி தோண்டிப் புதைக்க விரைந்தது.

தற்கால இந்திய அரசியலின் திருதராஷ்டிரன் தேவிலாலுக்கு தன்பிள்ளை மீது அவ்வளவு பாசம். பாசம் தன் கண்ணை மறைக்க மகாபாரதப் போர் விளைந்தது. அதே போல் மண்டல் பரிந்துரைகளுக்கு எதிர்ப்புகளும், அத்வானியின் இராம ரதமும், தேவிலாலின் பாசவலையினால் ஓடத் தொடங்கின. குஜராத், மத் தியப் பிரதேசம், பீகார், உத்திரப் பிரதேசம், டெல்லி, ஹிமாசலப் பிரதேசம் முதலிய மாநிலங்களில் அரசியல் கொழுந்து விட் டெரிந்தது.

தேவிலால் சௌதாலாவை கைவிட்டுவிட முன்வரவில்லை. அதனால் துணைப் பிரதம மந்திரி பதவியிலிருந்து தூக்கி எறியப் பட்டார். உடனே வி.பி. சிங் அரசு பலமிழந்தது. ஆனால் வி.பி. சிங் பதவியைத் துறக்க முன்வர வில்லை. காங்கிரஸ் கட்சியி லிருந்தும் மற்ற கட்சிகளிலிருந்தும் பல எம்.பி.க்கள் மண்டல் கமிஷன் பரிந்துரைகளுக்காக தங்கள் கட்சியை விட்டுவிட்டு தன்னிடம் வந்துவிடுவார்கள் என்று நப்பாசை கொண்டார். அதாவது கட்சி அடிப்படையில் அமைந் துள்ள இந்திய ஜனநாயகத்தைத் தகர்த்துவிட சிங் முயன்றார். இது தார்மீகமே அல்ல. கடைசி நிமிடம் வரை பதவியில் ஒட்டிக் கொண் டிருந்த அவருக்கு, பதவி பறிபோனபோது கண்ணீர்விட யாருமே இல்லை.

அவருக்கு அடுத்து வந்தவர் சந்திரசேகர். அரசு அமைக்க 270 எம்.பி.,க்கள் தேவை என்றால், அவர் பின்னே இருந்தவர்கள் ஐம்பது பேர்தான். காங்கிரஸ் கட்சி அரசாங்கத்திற்கு வெளியே இருந்து கொண்டே நாட்டை ஆண்டது. இந்தமாதிரி அரசாட்சி அரசியல் அமைப்பில் எதிர்பார்க் கப்படாத ஒன்று. அதனால் நமது அரசியலமைப்புச் சட்டம் இந்த மாதிரி அரசு எவ்வாறு நடக்க வேண்டும் தவறு நடந்தால் நிவாரணங்கள் என்னென்ன என்று எதுவும் தரவில்லை.

சந்திரசேகர் ஆட்சி முதல் சில நாள்கள் நன்றாக நடந்தது. ஆனால் வெகுசீக்கிரமே பிரத மரும், மந்திரிகளும் தங்களுடைய அரசியல் ஜாதகத்தை நன்றாகத் தெரிந்து கொண்டார்கள். மற்ற அரசுகள் ஐந்து வருட காலத்தில் சேர்த்த பணத்தை இவர்கள் ஐந்து மாதத்திலேயே சேர்க்க வேண்டும் என்று முயன்றார்கள். டெலிபோன் இணைப்பு, காஸ் இணைப்பு, லைசென்ஸுகள் என்று அள்ளித்



தந்தார்கள். அது மட்டுமல்ல பஞ் சாபில் AK47 துப்பாக்கிகள்கூட விநியோகம் செய்தார்களாம். தற் காப்புக்காக என்று சொல்லப்பட்ட துப்பாக்கிகள் தீவிரவாதிகளுக்கே விநியோகம் செய்யப்பட்டன, ஏதோ சுண்டல் பொட்டலம் கொடுப்பதுபோல. இதுதான் இந்திய ஜனநாயகம், இதுதான் நமது நாட்டில் நடந்த தார்மீக அரசியல்!

அது மட்டுமல்ல. சந்திரசேகர் அரசு வீழ்வதற்குக் காரணமாக இருந்தது ஹரியானாவின் இரண்டு கான்ஸ்டபிள்கள் ராஜீவ் காந்தியை வேவு பார்த்தது. அதாவது



அடுத்த பிரதமராக எதிர்பார்க்கப் பட்டவரே வேவு பார்க்கப்பட்டார். இதுவும் சௌதாலாவின் கைங் கர்யம். தார்மீக அரசியல் தடு மாறிய சமயம்.

ராஜீவ் காந்தி, அத்வானி, சிங் - மூவருமே தாங்கள்தான் அடுத்த பிரதமர் என்று எண்ணினார்கள். சந்திரசேகரோ தனக்கு 30,40 எம்.பி.க்கள் சேர்ந்தால் தன் னுடைய இன்றியமையாமை அதிக மாகும் என்று எண்ணினார். அதனால் எந்தக்கட்சி கூட்டுசேரக் கூப்பிட்டாலும் தயார் என்றார். அப்படியும் அவருக்கு அதிக மவுசு வரவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தார். பஞ்சாபில் தீவிரவாதிகளுடன் கலந்து ஆலோ சித்தார். பஞ்சாபில் தேர்தல் நடத் தினால் அவருக்கு 5,6 இடங்கள் கிடைக்கலாம் என்று எதிர்பார்க் கப்பட்டது. தேர்தல் நடந்து முடிந்தால் பஞ்சாப் சட்டசபையில் காலிஸ்தான் தீர்மானம் நிறை வேற்றப்படும் என்றும் தெரிந்தது. காங்கிரஸும், இடது சாரிகளும் தேர்தலை எதிர்த்தன. அப்படியும்



சந்திரசேகர் மந்திரிசபை தேர்தல் தீர்மானத்தை நிறைவேற்றியது. ஜனாதிபதிக்கு தர்மசங்கடம். அரசியலமைப்பு சட்டத்தின்படி மந்திரிசபையின் தீர்மானத்தை ஜனாதிபதி மறுக்க முடியாது. மறுபரிசீலனை செய்யச் சொல்லலாம். திரு. வேங்கட்ராமன் அதையே செய்தார். மந்திரிசபை மறுபடியும் தீர்மானத்தை நிறைவேற்றியது. ஜனாதிபதியின் வாய்க்குப் பூட்டு போடப்பட்டது. ஜனாதிபதி ராஜினாமா - செய்திருக்கலாம். ஆனால் எத்தனை முறைதான் ராஜினாமா செய்ய முடியும்? அதுவும் இந்திய அரசியல் மேகமூட்டத்தோடு, இடி மின்னலோடு இருந்தபோது ஜனாதிபதி ராஜினாமா செய்திருந்தால் இன்னும் சலசலப்பு ஏற்பட்டு இருக்குமே தவிர தெளிவுகள் பிறந்திருக்காது. மொத்தத்தில், மெஜாரிட்டி இல்லாத மக்கள் மதிக்காத மந்திரி சபை ஒன்று நாட்டைத் தன் இஷ்டத்திற்கு ஆட்டி வைத்துக் கொண்டிருந்தது.

தேர்தல்கள் நடந்து முடிந்தன. ஆனால் ராஜீவின் படுகொலையால் தேர்தல் கால வரம்புகள் தள்ளிப் போடப்பட்டன. அதனால், பஞ்சாப் தேர்தலை நிறுத்துவதற்கான புதிய அரசாங்கம் ஏற்படுவதில் தாமதமாயிற்று. ஆனாலும் திரு. சேஷன், பஞ்சாப் தேர்தலைத் தள்ளிப் போட்டார். அங்கு ஒவ்வொரு நாளும் ஒரு வேட்பாளர் கொல்லப் படுவதைக் காரணம் காட்டினார். ஆனால் தேர்தலைத் தள்ளிவைக்க மந்திரிசபையின் ஒப்புதலை அவர் பெறவில்லை. இந்தச் செய் முறைக்கு ஜனாதிபதியின் அங்கீகாரமும் ஓரளவு இருந்ததாக ஊகிக்கப்படுகிறது. அதாவது மக்களின் பிரதிநிதிகளைவிட ஓர் அதிகாரி, குடியாட்சித் தலைவர் அதிக அதிகாரத்தைப் பிரயோகித்துவிட்டனர். அப்படியும் அரசியல் அறிஞர்கள், நாட்டு நடப்புகளை, நடந்த விவரங்களை வைத்துக்கொண்டு குடியரசுத் தலைவர் தார்மீகமாக நடந்ததாக முடிவு செய்துள்ளனர்.

இவர்களைத் தவிர தேவிலால் அரங்கேற்றிய நாடகங்கள் பல. கருணாநிதி மகள் கனிமொழி கல்யாணத்திற்குப் பறந்து வந்த துணைப் பிரதமர் அந்த அரசு கலைக்கப்பட்டபோது மௌனமானார். ராஷ்டிரபதி பவனில் உள்ள ஒரு பங்களாவை இவர் உயிர்வாழும் வரை இவருக்கே தர

கார்ட்டூன்கள்:-


வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கவைத்தார். இவருடைய உதவியாளர் தீபக் என்பவரை முதலில் அரசாங்கம் அம்பாஸிடராக நியமித்தது. அவர் அந்த வெளிநாடு போவதற்குள் அரசாங்கம் கவிழ்ந்தது. பின்னர் வந்த சந்திரசேகர் அரசாங்கம் இவரை அம்பாஸிடராக நியமித்தால் நியமனப் பத்திரத்தில் ஜனாதிபதி கையெழுத்திடமாட்டார் என்றறிந்து கான்சல் ஜெனரலாக நியமித்தது. கான்சல் ஜெனரல் பதவி ஒரு படி கீழே. ஆனால் அதற்கும் ஜனாதிபதி உதவி தேவை என்பதை அரசாங்கம் அறியவில்லை. அவருடைய நியமனம் கோப்புக் கட்டோடு போய்விட்டது.



இதேபோல் வி.சி. சுக்லாவை கட்சிமாறல் சட்டத்தின் கீழ் உறுப்பினர் பதவியிழப்பு செய்தும் அவர் மந்திரியாகத்தொடர்ந்தார். பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத ஒருவர் மந்திரியாகலாம், நமது நிதிமந்திரி மன்மோகன்சிங் ஆனது போல. ஆனால் தகுதி இழந்த ஒருவர் மந்திரியாக இருந்தது தார்மீக அரசியல் ஆகுமா?

இப்படிப் பல அரசியல் விவரங்களை அலசி திரு. இந்தர் மல்ஹோத்ரா ஒரு புத்தகம் எழுதி உள்ளார். தமிழனே தலைநிமிர்ந்து நில்லடா என்றான் பாரதி. இந்தியனே தலைகுனிந்து நில்லடா என்கிறார்கள் இன்றைய அரசியல்வாதிகள்.

நரகாசுரனின் தர்மமில்லாத ஆட்சிக்கு முடிவு கட்டினார் கிருஷ்ணன். அதை தீபாவளியாகக் கொண்டாடுகிறோம். தீபாவளி கொண்டாடினாலும் இந்தியாவில் மக்களாட்சி என்று பெயர் இருந்தாலும் தார்மீக அரசியல் இன்னும் இந்தியாவில் மலரவில்லை. ஆனால் நாம் அரசியல் அனுபவம் பெற்று வருகிறோம். எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையில் தீபம் ஏற்றுவோம். தீபாவளிகொண்டாடுவோம்! ○○



— பி.எம்.ரோஸ்



விளக்கை அணைத்து வெண்ணெய் உண்ட சின்னக் கண்ணன்

கோகுலத்தில் வைகறைப் போது இடையர்களே வாழும் பகுதி அல்லவா? பெரிய ஆரவாரம் இல்லாமல் மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது இரவுப் பொழுது.

நன்றாகப் பொழுது புலர்ந்து விட்டால், தயிர், வெண்ணெய் விற்கப் போகவேண்டுமே? அது மட்டுமல்ல. அந்த யசோதை வீட்டுப் பையன் விழித்துக் கொண்டு விட்டால், தயிர் கடைய எங்கே விடுகிறான்?

அவனையே பார்த்துக் கொண் டிருந்தால், வீட்டு வேலைகளை யார் கவனிப்பது? வீட்டுக் காரி யங்கள் நடைபெறவில்லையென் றால், மாமியார்க்காரி பொருமித் தள்ளி விடுகிறாள்.

சரி, சரி,... விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டாவது தயிர் கடைந்து, தனித் தனிச் சட்டிகளில் வெண்ணெய், மோர், தயிர் என்று வகைப்படுத்தி வைத்துக் கொண் டால்தான் பிழைத்தேன். இல்லா விட்டால் நன்றாக அவதிப்பட வேண்டியதுதான்...! மாமியாரின் ஏச்சும் பொறுக்க முடியவில்லை; சின்னக் கண்ணனின் கொட்டத்தை யும் சமாளிக்க முடியவில்லை...

– என்று எண்ணி, மிகவும் சாமர்த்தியமாகத் தன் வேலை களை முடித்துவிடலாம் என்ற இறுமாப்புடன், ஒரு விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு, தயிர் கடைய ஆரம்பித்தாள், ஓர் இடைப்பெண்.

யசோதை இல்லத்திலும் இதே கதைதான்! குழந்தை கண் விழிப் பதற்குள் தயிர் கடைந்து முடித்து விட வேண்டும். இல்லாவிட்டால், தொட்டிலிலிருந்து இறங்கி வரும் போதே கையை நீட்டிக்கொண்டு வருவான். எவ்வளவு வெண்ணெய் தான் உண்பது? உடம்புக்கு ஆகவேண்டாமா?

சர்ர்...சர்ர்... என்று தயிர் கடையும் சத்தம் கேட்டவுடனே, கண்ணனுக்கு விழிப்பு வந்து விட்டது. தொட்டிலிலிருந்து மெல்ல இறங்கினான்; வாசற்கதவை மெல்லத் திறந்து வெளியே போனான்.

அடுத்த வீட்டிலும் சர்ர்... சர்ர்...!

அருகே ஒரு குத்துவிளக்கில் ஒற்றைச்சுடர்.

'பகவானே! அந்த விளக்கு மட்டும், அணைந்து போனால் யார் கண்ணிலும் படாமல் சென்று, திரண்டு வந்திருக்கும் வெண் ணெயைத் தின்றுவிட்டு வந்து விடுவேனே...'

அரவமில்லாமல் உள்ளே நுழைந்தான், சின்னக்கண்ணன்.

தயிர் கடைவதில் ஆழ்ந்திருந்த இடைப்பெண், இந்தக் குழந் தையைப் பார்க்கவில்லை.

ஆனால், பில்வமங்களர் என்றும் லீலாசுகர் என்றும் போற்றப்படும் மகா பக்தரான கவிஞர், தன் ஞானம் நிறைந்த கற்பனைக் கண்களால் இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டார்!

மேலட்டை: ஓவியர் கோபுலு
விளக்கம்:
டி.எஸ். கோதண்டராமன்

சின்னக் கண்ணன் என்ன செய்கிறான்?

ஓசையில்லாமல் அடியெடுத்து வைத்து கோபியரின் வீட்டிலே புகுந்த கண்ணக் குழந்தை, செந் தாமரை இதழ்கள் போன்ற வாயால், சுடரை ஊதுகிறான்; விளக்கு அணையவே, இருள் சூழ்கிறது. அந்த இருளிலும் வெண்ணெயை இலக்கு வைத்துக் கைப்பற்றி உண்டுவிடுகிறான் கண்ணன்!

ததிமதன நிநாதைஸ் த்யக்தநித்ர : ப்ரபாதே
நிப்ருதபதமகாரம் வல்லவீனாம் ப்ரவிஷ்ட :|
முககமலஸமீரை : ஆசு நிர்வாப்ய தீபான்
கபலித நவனீத: பாது கோபாலபால :|

– லீலாசுகர், கேரள மாநிலத்தில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவருடைய பாமாலை யாகிற 'ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம் ருதத்'தில், மூன்றாவது ஆசு வாஸத்தில் (பகுதியில்) எண்பத்தி யேழாவது கவிதையின் விளக் கத்தை மேலே கண்டோம். லீலா சுகர் கண்ட காட்சியை ஓவியர் 'கோபுலு' தீபாவளி மலரின் மேலட்டை வண்ண ஓவியமாக வரைந்தளித்துள்ளார்.

'வெண்ணெய் விழுங்கிய பால கோபாலன் காப்பாற்றட்டும்' என்று வேண்டிக் கொள்கிறார், லீலா சுகர்.

நம்முடைய பிரார்த்தனையும் அதுவேதானே? ஃ

புதுமைப் பிறவி

கோவூர் இசைதாசன்

● நானொரு புதுமைப் பிறவி – இந்த
நாட்டினில் எதனையும் விரும்பாத் துறவி.
ஊனொடு உயிரும் கலந்தவன் எனினும்
உண்பது ஏதுமிலை – மலைத்
தேனொடு பழமும் தினமும் வேண்டிடும்
தேவையெப் போதுமிலை. (நானொரு)
உலகினில் வாழ்ந்திடும் ஆசையில்லை செத்
தொழிவது திண்ணமிலை – பிறர்
நலமதை நான்தினம் பேணுவதால் சுகம்
நாடிடும் எண்ணமிலை (நானொரு)
● நானொரு புதுப் பிறவி – இந்த
நாட்டினில் எதையும் விரும்பாத் துறவி.

கத்தரித்து ஒட்டியது!

[ஜேப்படிக் கொள்ளைக்காரனிடம் கத்தரிக்கோல் இருக்குமோ, இருக்காதோ, என் கையில் எப்பொழுதும் ஒரு கத்தரிக்கோல் இருக்கும். படித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஏதாவது வசீகரமான விஷயம் என்று தோன்றினால் அதை உடனே கத்தரித்து, ஒரு நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி வைப்பேன். அப்படி ஒட்டி வைத்த விஷயங்கள் என்னிடம் ஏராளம் உள்ளன. அவற்றை அமுதசுரபி நேயர்களும் பகிர்ந்து கொள்ளட்டுமே என்று கொடுக்க ஆரம்பித்துள்ளேன். – நாடோடி]

ஒரு சமயம் ஒரு முதலாளி, ஒரு கம்யூனிஸ்ட், ஒரு பாசிஸ்ட், ஒரு தொழிலாளி நால்வரும் ஒரு படகில் சென்று கொண்டிருந்தனர். திடீரென்று படகுக்குப் பழுது ஏற்பட்டு, அது மூழ்கவே, நான்கு பேரும் கரை சேர்வதற்காக நீந்த வேண்டி வந்தது.

முதலாளி, தம் கையில் ஏகப்பட்ட பொருள்களை வைத்துக் கொண்டு நீந்தியபடியால், கனம் தாங்காமல் பாதி வழியில் மூழ்கிவிட்டார்.

கம்யூனிஸ்ட், கோஷம் போட்டுக்கொண்டே நீந்திய படியால், அளவுக்கு மீறி தண்ணீர் உள்ளே செல்ல, அவரும் மூழ்கினார்.



பாசிஸ்ட், அவர்கள் வழக்கமாகச் சல்யூட் செய்யும் முறையில், ஒரு கையைத் தூக்கிக் கொண்டே வெகு நேரம் நீந்தினார். ஒற்றைக கையினால் எத்தனை நேரம்தான் நீந்தமுடியும்? ஆகவே அவரும் மூழ்கினார்.

தொழிலாளி, வெகு சாமர்த்தியமாக நீந்தி, கரைக்கு வெகு சமீபம் வந்து சேர்ந்தார். இன்னும் இரண்டு நிமஷத்தில் கரையை அடைந்திருப்பார். ஆனால் அச்சமயத்தில் எங்கிருந்தோ, வேலை நிறுத்தத்தை அறிவிக்கும் சங்கு ஊதவே, நீந்துவதைச் சடாரென்று நிறுத்தினார், அவரும் மூழ்கினார்.

✹

போலீஸ்காரர் : விபத்து ஏற்பட்ட பொழுது உங்கள் காரை ஓட்டிக் கொண்டிருந்தது யார்?

காரில் இருந்த எல்லாரும் : நாங்கள் யாரும் இல்லை. நாங்களெல்லாரும் பின் சீட்டி(தான் இருந்தோம்.

✹

ஒரு பரபல அமெரிக்க(பாதிரியார் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார். அதனால் யாரும் அவரைப் பார்ப்பதற்கென்று அனுமதிக்கப்படவில்லை. என்றாலும் இங்கர்சால் என்னும் நாத்திகர் தம்மைப் பார்க்க விரும்புகிறார் என்று தெரிந்தவுடனே அவரை உடனே உள்ளே வரும்படி பாதிரியார் சொன்னார்.

இங்கர்சால், பாதிரியாருடன் பேசிக் கொண்டிருக்கையில், இது விஷயத்தைப் பற்றி விசாரித்தார்.

"எல்லாரையும் உள்ளே விட மறுத்து விட்டு, என்னை மட்டும் ஏன் அனுமதித்தீர்கள்?" என்று பாதிரியாரைப் பார்த்துக் கேட்டார்.

அந்தப் பாதிரியார் சொன்னார், "மேல் உலகில் மற்றவர்களை நான் சந்திக்க முடியும். ஆனால் உம்மைச் சந்திக்க முடியாதல்லவா! அதனால் தான் தங்களை இந்த உலகிலேயே பார்க்க விரும்பினேன்" என்று.

✢

ஓர் உல்லாசப் பேர்வழி ஹாலிவுட் ஹோட்டலில் அறை எடுக்கப் போனார். அப்பொழுது தூரத்தில் நின்று கொண்டு, இவரைப் பார்த்துக் கண் அடித்த ஓர் அழகிய பெண்ணைக் கண்டு மயங்கி அவளைச் சிநேகம் பிடித்துக் கொள்ள, இருவரும் கணவன், மனைவி என்கிற பெயரில் அறை எடுத்தார்கள்.

இரண்டு நாள்களுக்குப் பிறகு, இவர் அறையைக் காலிசெய்தபோது, ஹோட்டல்காரர் ஆயிரம் டாலருக்கு ஒரு பில்லை இவரிடம் நீட்டினார்.



"ஆயிரம் டாலரா! நான் இரண்டுநாள்தானே தங்கினேன்!" என்றார் குஷிப் பேர்வழி.

அதற்கு ஹோட்டல்காரர், "நீங்கள் இரண்டு நாள்தான் தங்கியிருந்தீர். ஆனால் தங்கள் மனைவி தங்களுக்குமுன் இரண்டு மாதம் தங்கியுள்ளாரே!" என்று சொன்னார்.

நாடோடி

மன்னராட்சி மலர்ந்திருந்த முற்காலத்தில் மக்கள் அனைவருக்கும் உணவு, உடை உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளை வழங்குவது அரசின் இன்றியமையாத கடமையாகத் திகழ்ந்தது. இதனை மணிமேகலைக் காவியத்தில் சீத்தலைச் சாத்தனார்,

"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்"

என்று பாடியிருக்கக் காண்கிறோம்.

மக்களை மக்களேயாளும் மக்களாட்சி மாண்புறத் தழைத்து விளங்கும் இக்காலத்தில் உணவு, உடை, உறையுள் ஆகிய இவற்றோடு கல்வி, சுகாதாரம் முதலான பிற அடிப்படைத் தேவைகளையும் மககள் யாவரும் பெற்று மகிழச் செய்வது, அரசின் தலை யாயக் கடமையாகிறது. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராக நாடு போற்றும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்கள்,

"எல்லார்க்கும் தேசம் எலலார்க்கும் உடைமை எல்லாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக
எல்லார்க்கும் நல்ல இதயம் வாய்ந்திடுக"

என்று எடுத்துரைத்திருக்கக் காண்கிறோம்.

"திருக்கோயில் இல்லாத ஊர் திருவில் ஊர்" என்று அப்பரடிகளும், "கோயில் இல்லாத ஊரில் குடி யிருக்க வேண்டாம்" என ஔவையாரும் திருக்கோயில் களின் பெருமையை எடுத்து மொழிந்திருப்பதை நாம் யாவரும் அறிவோம். அறிவை வளர்க்கும் ஆலயங் களான பள்ளிகள் இன்றைய சமுதாயத்தில் இடம் பெற்றுள்ள தலையாய இடத்தை எண்ணும்போது "பள்ளிக்கூடம் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்", "பள்ளிக்கூடம் இல்லாத ஊர் பாழ்" என்று புதுமொழிகளை நாமும் உருவாக்கலாம்.

மகாகவி பாரதியார் ஒவ்வொரு சிற்றூரிலும் மட்டும் அல்லாமல், வீதிக்கு வீதியும் பள்ளிகள் உருவாக்கப் பட வேண்டும் என்று விரும்பினார். "வீடுகள் தோறும் கலையின் விளக்கம், வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி" என்ற அவர்தம் கனவு இன்று நனவாகி யிருக்கக் காண்கிறோம். இன்று நாட்டில், சுமார் 40,000 அரசுப் பள்ளிகளும், சுமார் 400 அரசுக் கலைக்கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளும், 14 பல்கலைக் கழகங்களும் "கேடில் விழுச் செல்வ"மாம் கல்வியை சுமார் 2 கோடி மாணவ மாணவியருக்குக் கற்றுத்தந்து வரக் காண்கிறோம். இவையன்றி அரசின் உள்ளாட்சித்துறை மற்றும் அறநிலையத் துறையின் சார்பில் இயங்கும் கல்வி நிலையங்களும் உள்ளன. ஆண்டுதோறும் தமிழக அரசின் மொத்தத் திட்ட மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்குத் தொகையை நாம் கல்வி



வளர்ச்சிக்கெனவே செலவிட்டு வருவதையும் இங்கு நான் பெருமையுடன் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்றார் தெய்வமறை தந்த வான்புகழ் வள்ளுவர். அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரே மாந்தர். கல்லாதவர் ஐயறிவு கொண்ட விலங்குகளே ஆவர் என்பதும் வள்ளுவனார் உயர் கருத்து.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்".

சமுதாயத்தை நலிவுப்படுத்தும் வறுமைக்குக் காரணமாகும் பல அடிப்படைக் காரணங்களில் ஒன்று கல்லாமையாகும். கல்லாமை எனும் குதிரையின் மேல் ஏறியே இல்லாமைப் பிணி ஆட்சி செய்ய வரும். ஆகவே,

"இல்லாமை என்னும் பிணி
இல்லாமல் கல்வி நலம்
எல்லார்க்கும் என்று சொல்லி
கொட்டு முரசே"

என்று வறுமை நீங்க எல்லார்க்கும் கல்வி இன்றியமையாதது என்று பாவேந்தர் முரசு கொட்டுகிறார்.

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்குத்
தன்தேய மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றஇட மெல்லாஞ் சிறப்பு"

என்பது ஔவையார் வாக்கு.

நாடாளும் அரசர்களும் கல்வியாளரையே போற்றுகிறார்கள். ஒரு நாட்டில் மட்டுமல்ல, உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் அழியாக் கல்விச் செல்வம் கொண்ட அறிஞர்களுக்கே என்றும் நிலையான



கல்வி அமைச்சர் இராம வீரப்பன்

மதிப்பும், நல்ல வளமான வாழ்வும் காத்திருக்கிறது. பொருட் செல்வத்தைவிட மேம்பட்ட செல்வம் கல்விச் செல்வமே; அக்கல்விச் சிறப்பை உள்ளங்கை நெல்லிக்கனியாக எடுத்துக் காட்டும் கற்கண்டுப் பாடல் இக் கீழ்வரும் பாடலாகும்.

"வெள்ளத்தே போகாது வெந்தணலால் வேகாது
 வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவன்றிக்
 குறைவுறாது
கள்ளர்க்கோ மிகவரிது காவலோ மிகவெளிது
 கல்வி யெனும்
உள்ளத்தே பொருளிருக்க உலகமெல்லாம் பொருள் தேடி
 உழல்வ தென்னே"

"கல்வியழகே யழகு" என்று போற்றப்பட்ட கல்விச் செல்வம் ஒரு காலத்தில் எல்லார்க்குமான செல்வமாக இருக்கவில்லை. ஓதலும் ஓதுவித்தலும் உயர்குலத்தாருக்கே என்று வேற்றுமை பாராட்டிக் கல்வியைச் சிலருடைய தனிச் சொத்தாக்கிய காலமும் நம் தமிழக வரலாற்றில் இருந்தது உண்டு. "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு?" என்று பெண்கல்வியை இந்நூற்றாண்டின் ஆரம்ப காலம்வரை அவமதித்துப் பேசியவர்களும் வாழ்ந்தார்கள்.

"எல்லாரும் ஓர்குலம்
 எல்லாரும் ஓரினம்
எல்லாரும் ஓர்நிறை
 எல்லாரும் ஓர்விலை"

என்று பாவலர்கள் முரசு கொட்டியதும்,

"பட்டங்கள் ஆள்வதும்
 சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள்
 நடத்த வந்தோம்"

என்று பாவையர்கள் ஆர்த்தெழுந்ததும் இவ்விருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நம் நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பிறகே உண்மையில் நம்நாடு கல்வித் துறையில் மகத்தான வளர்ச்சியைக் கண்டது; கண்டு வருகிறது. வெள்ளையர்கள் நம்மை ஆண்ட காலத்தில் அவர்களுக்குத் தேவையான எழுத்தர்களை உருவாக்கும் சாதாரணக் கல்விமுறை மட்டுமே நமது பள்ளி மற்றும் கல்லூரிகளில் இருந்து வந்தது; மாணவர்களின் சிந்தனைச் சக்தியை வளர்க்காத, பாடங்களை நெட்டுருப் போட்டு அவற்றை அப்படியே திரும்ப ஒப்புவிக்கும் அக்கல்விமுறை நமது நாட்டில் வேலைவாய்ப்பின்மை எனும் கொடுமை வளர மட்டுமே காரணமாக இருந்து வந்தது. அதை வாழ்க்கைக்கும் பயன்படும் வாழ்க்கைக் கல்வி முறையாக மாற்றி அமைத்து அருஞ்சாதனை செய்தவர் நம் மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் அமரர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆவார். டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்களின் தலைமையில் 17 உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து வாழ்க்கைக் கல்விமுறைத் திட்டத்தை நமக்கு வகுத்துத் தந்தவர் நம் பொன்மனச் செம்மல் அமரர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களே ஆவார்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்குவதும், படித்த இளைஞர்கள் மத்தியில் அமைதியின்மையை உருவாக்கக் கூடியதுமான, பழைய கல்வித் திட்டம் அறவே இன்று மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. வேலை வாய்ப்புகளைப் புதிது புதிதாக உண்டாக்கக் கூடிய பயனுள்ள புதிய வாழ்க்கைக் கல்விமுறைத் திட்டம் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. ஆன்மநேயம், அறவுணர்வு, அறிவியல் விஞ்ஞான வளர்ச்சி, கலை உணர்ச்சி, குடிமைப் பயிற்சி, பல தொழிற் பயிற்சி, தேசிய சேவை, சமுதாயச் சீர்திருத்தம் போன்ற பலதிறப்பட்ட கல்வி நோக்கங்களின் அடிப்படையில் இன்று பயிலும் மாணவ – மாணவியர் யாவரும் தாமே தமக்குத் தேவையான வாழ்க்கைத் தொழிலைத் தேடிக்கொள்ளத் தக்கதான தலைசிறந்த கல்வித்திட்டம் இன்று செயல்படுத்தப்பட்டு வருவதை நான் மகிழ்வுடன் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று ஆடவர், பெண்டிர் அனைவரும் கற்கலாம். "இளமையில் கல்" என்ற முதுமொழிக்கிணங்க கல்லாமல் போன முதியவர்களும் இன்று வயது வந்தோர் முறைசாராக் கல்வித் திட்டத்தில் சேர்ந்து பயிலலாம். கண் பார்வையற்றோர், காது கேளாதார், மனவளர்ச்சி குன்றியவர்களும்கூட இந்நாளில் மனக்கலக்கம் கொள்ளத் தேவையில்லை. அவர்களும் கல்வி கற்று ஒளிமயமான எதிர்காலத்தைக் காணும் வகையில் எல்லாருக்குமான வாழ்க்கைக் கல்வித்திட்டம் சீராக வகுக்கப்பட்டு எல்லார்க்கும் கல்விச் செல்வம் இந்நாளில் சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

கல்வியில் சிறந்த நம் இன்தமிழ் நாட்டில் எல்லார்க்குமான ஏற்றமிகு கல்வி எம்மொழி வாயிலாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்ற ஒரு கேள்வி நீண்ட காலமாகவே கேட்கப்பட்டுக் கொண்டு வருகிறது. 1958 ஆம் ஆண்டே தமிழ்நாட்டின் ஆட்சி மொழி மற்றும் பயிற்றுமொழி தமிழே என்று சட்டவரையறை செய்யப்பட்டிருந்தும் ஏன் செயலளவில் இன்றும் இதனை நடைமுறைப்படுத்த முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற கேள்வியை எழுப்பி தமிழக அரசில் பள்ளிக்கூடம் முதல் பல்கலைக்கழகம் வரை தமிழே பயிற்று மொழி என்னும் கொள்கையினை உடனே செயற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து வற்புறுத்துவோரும் உளர். "இதிலெல்லாம் உணர்ச்சி வசப் படக்கூடாது; பயிற்று மொழியை மாற்றினால் கல்வியின் தரம் குறைந்து போகும்; தமிழ்மொழியில் போதிய பாடப்புத்தகம் உண்டாகவில்லை. காலப் போக்கில் தமிழ் பயிற்றுமொழியைக் கொண்டு வந்தால் போதும்" என்று தாய்மொழி வழிக் கல்வியைத் தள்ளிப்போட வேண்டும் என்று வற்புறுத்துவோரும் மறுபுறம் உள்ளனர்.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
 கோடாமை சான்றோர்க் கணி"

என்ற வள்ளுவனார் குறள்வழி, பயிற்றுமொழிச் சிக்கலுக்கு விரைந்து நல்லதொரு தீர்வு காண

வேண்டியது நாட்டின் நலன் விரும்பும் நல்லோர்களின் தலையாய கடமையாகும்.

தாய்மொழி வழியாகக் கற்றுத்தரப்படும் கல்வியே, தலைசிறந்த கல்வியாக அமைய முடியும் என்பதை உலகிலுள்ள உயர்அறிஞர் பெருமக்கள் எல்லாரும் ஒரே கருத்தாக எடுத்துக் கூறியிருக்கின்றனர். ஆங்கிலத்தில் பெரும் புலமை பெற்றிருந்த நம் அண்ணல் மகாத்மா காந்தி தமது வாழ்க்கை வரலாற்று நூலை, தம் தாய்மொழியான கூர்ஜர மொழியில்தான் முதன் முதலில் எழுதினார் என்பதும், கல்விக் கடல் பாலகங்காதர திலகர் ஆங்கிலத்தில் பெரும் புலமை பெற்று, அம்மொழியில் சிறந்த ஆய்வுகளைப் புரிந்தவர் எனினும் அவரும் தம் தாய்மொழியான மகாராட்டிர மொழியில் தான் கீதா ரகசியம் என்னும் தலைசிறந்த நூலை எழுதினார் என்பதும், நோபல் பரிசு பெற்ற கவிமன்னர் ரவீந்தரநாத் தாகூர் தம் தாய்மொழியான வங்கமொழியில்தான் "கீதாஞ்சலி" நூலை முதல் முதல் எழுதி வெளியிட்டார் என்பதும் நாமும் நம் மாணவர் சமுதாயமும் என்றும் நினைவில் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

உலகின் வல்லரசு நாடுகள் என்று போற்றப்படும் ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகள் தத்தமது தாய் மொழி வழிக் கல்வியின் வாயிலாகத்தான் அத்தகைய சிறப்பை அடைந்து விளங்குகின்றன என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இன்றைக்குத் தொழில் வளர்ச்சியில் மிக உன்னதமான நாடு எனப் போற்றப்படும் ஜப்பான் நாடும், தன் தாய்மொழியான ஜப்பான் மொழிவழிக் கல்வியால்தான் அத்தகைய உயர்ந்த சிறப்பை அடைந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இன்றைக்கு 14 மொழிகள் பேசப்படும் இந்தியத் திருநாட்டிலும்கூட, மேற்கு வங்காளத்தினர் வங்காள மொழியாலும், மகாராட்டிர மாநிலத்தினர் மராட்டி மொழியாலும், கேரள மக்கள் மலையாள மொழியாலும், உத்திரப்பிரதேசத்தினர் இந்தி மொழியாலும் தத்தமது கல்வியறிவை வளர்த்து மேம்பாடு கண்டு வரும் காலக்கட்டத்தில் இன்தமிழ் நாட்டில் வாழும் நாம் மட்டும்தான் இன்றும்கூட தமிழுக்கு உரிய சிறப்பிடத்தைக் கொடுக்காமல், அந்நிய மொழியான ஆங்கிலத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துத் தடுமாறிக் கொண்டிருக்கிறோம் என்பதை மெத்த வேதனையோடு நான் எடுத்துக் காட்ட விழைகிறேன்.

"வீதிகள்தோறும் இரண்டொரு பள்ளி" என, கனவு கண்டான் பாரதி. இன்று வீதிகள் தோறும் நர்சரி பள்ளிகள் வளர்ந்திருக்கின்றன. ஆனால் பாரதி விழைந்த கலையின் விளக்கம் உண்டாகாமல், மக்கள் கொண்ட ஆங்கில மோகத்தால் அறிவின் விளக்கம் அறவே இருண்டுபோய்க் கிடக்கிறது. இன்று பிஞ்சுக் குழந்தைகள் கொஞ்சுதமிழில் தம் தாய் தந்தையரை "அம்மா, அப்பா" என்று அழைப்பதில்லை. மாறாக "மம்மி", "டாடி" என்று அழைக்கிறார்கள். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற தமிழ்ப் பண்பாட்டை நர்சரி பள்ளிகளில் பயிலும் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் அடியோடு மறந்து வருகிறார்கள். ஒருகாலத்தில் வசதிபடைத்த செல்வர்தம் பிள்ளைகள் மட்டும் கான்வென்ட் பள்ளிகளில் சேர்ந்து தாய்த்தமிழை மறந்து வந்தார்கள். இன்று வீதிகள் தோறும் வளர்ந்துவிட்ட நர்சரி பள்ளிகளால் ஏழை, எளியவர்களின் குழந்தைகளும்கூட ஆங்கில மோகத்தால் தாய்த்தமிழைப் புறக்கணித்து வரும் அவலத்தை என்னவென்பது? ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்ட காலத்தில் இருந்த ஆங்கில மோகத்தைவிட அதிகமான மோகம் இன்றுதான் வளர்ந்திருக்கிறது.

"விலைபோட்டு வாங்கவா முடியும் கல்வி?
வேளைதோறும் கற்று வருவதால் படியும்"

என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசனார். இன்றைக்கு ஐயாயிரம், ஆறாயிரம் என விலை கொடுத்து, அறிவினை வளர்க்காத ஆங்கிலப் பள்ளிகளில் ஆயிரம் ஆயிரம் தமிழ்க் குழந்தைகள் தடுமாறித் தத்தளித்துக் கொண்டிருக்கும் அவலநிலையை அடியோடு மாற்ற நாம் இனிப் போராடியே ஆகவேண்டும்.

"வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ"

என்று அன்றே ஆங்கிலத்திற்கு எதிராகவும், அயல் மொழிகளுக்கு எதிராகவும் அறைகூவல் விடுத்தார் மகாகவி பாரதியார். அவருக்குப் பிரெஞ்சு மொழி தெரியும், கன்னடமும் களிதெலுங்கும் தெரியும், வட மொழியும் இந்திமொழியும் கூட அவர் கற்றிருந்தார். ஆங்கில மொழியிலும், தலைசிறந்த அறிவினை அவர் பெற்றிருந்தார். இத்தனை மொழிகளைக் கற்றிருந்த பாரதி, அன்றைக்கே ஆங்கில மொழிவழிக் கல்விக்கு எதிராக எச்சரிக்கைக் குரல் கொடுத்துச் சென்றார் என்பதை மெத்தப் பணிவோடு இளைய தலைமுறையினருக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். தம் சுயசரிதைக் கவிதையில் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழித்து அறிவைக் குழப்பும் ஆங்கிலக் கல்வியில் வீணே காலத்தைக் கழித்துத் தாம் அடைந்த அவலத்தை அவர் எடுத்துக்காட்டி தமிழ்ச் சமுதாயத்தை எச்சரிக்கிறார்.

............பாரத்தது
ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்
முன்னம் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கும் இந்நாளின் நிகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலார்

பேடிகல்விப் பயின்றுழல் பித்தர்கள்"

"செலவு தந்தைக் கோராயிரம் சென்றது
தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன
நலமோர் எட்டுணையும் கண்டிலேன் இதை
நாற்பதாயிரம் கோயிலில் சொல்லுவேன்"

என்று கூறும் மகாகவி பாரதியார் ஆங்கிலக் கல்வி எனும் பேரிருளில் இருந்து எவ்வாறோ தாம் தப்பிப் பிழைத்ததாக வியந்து கூறுகிறார்.

ஆகவே தாய்மொழி வழிக் கல்வியே இயற்கையானது; சிந்தனைத் திறனை வளர்த்து அறிவாற்றலை மிகுதிப்படுத்துவது என்பதை மாணவச் செல்வங்கள் நினைவில் கொண்டு தமிழ்மொழி வழிக் கல்வி கற்று நம் தாய்நாட்டை உயர்த்திடல் வேண்டும். தமிழ்ப் பேரறிஞர் திரு.வி.க. அவர்கள் வலியுறுத்திக் கூறும் ஒரு கருத்து – ஒப்பற்ற கருத்து விரிந்த பொருளை உள்ளடக்கி விளங்கும் ஓர் அருமையான கருத்து

தமிழ்மொழி வழிக் கல்விக்கு அரண்செய்யும் அரிய கருத்து இதோ :-

"தாய்மொழியில் கல்வி பெறுவது இயற்கை. தாய்மொழிப் புலமை நிரம்பப் பெற்ற பின்னை வேறுபல மொழிகளைப் பயிலலாம்; ஆராயலாம். முதன் முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறப்பது. அத்தாயை வஞ்சிப்பது பாவம் அன்றோ!"

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் கருத்தைக் காணும்போது அயல்மொழி வழிக் கல்வி என்பது ஈன்ற தாயை வஞ்சிக்கும் இழிசெயல் என்பதை நம் இளைய தலைமுறை உணர்ந்து கொள்ள வேண்டும்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்"

என்று தமிழ்மொழியின் சிறப்பைப் போற்றுகிறார் அமரகவி பாரதியார். அண்ணல் காந்தியடிகளாரும் "தமிழ் மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஓர் இனியமொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந்நாளிலும்கூட பல அறிஞர் இருந்தனர்; இருக்கின்றனர் என்பதை அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறிய முடிந்தது" என்று நம் தமிழ்மொழியின் சிறப்பை இனிதே எடுத்து விளக்குகிறார். வெளிநாடுகளிலே இருந்து கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காக தமிழகம் வந்த மதபோதகர்கள் பலர், வீரமாமுனிவர், கால்டுவெல், ஜி.யூ.போப் முதலானோர் நம் தமிழ் மொழியின்பால் ஆராக் காதலே கொண்டு விளங்கியமையை அவர் தம் வரலாறுகள் வாயிலாக அறிகிறோம். திருவாசகத் தேனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஜி.யூ. போப் அவர்கள் தம்முடைய கல்லறையிலும்கூட தம் தமிழ்க்காதலை வெளிப்படுத்தும் வகையில் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்" என்று பொறிக்கச் செய்திருக்கும் தமிழ்க் காதலைக் கண்டு மெய்சிலிர்த்துப் போகிறோம்.


இன்று கற்றபின் பெறப்போகும் வேலை வாய்ப்பிற்காகத்தான் "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி, மூத்த குடிப்பிறந்த 'தமிழைப் புறக்கணித்து இந்தி பயில்கிறோம் அல்லது ஆங்கிலப் பயிற்றுமொழியில் பயில்கிறோம் என்று கூறக்கூடிய பலரையும் நான் கேட்க விழையும் ஒரு கேள்வி இதுதான். "இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோர் வாழும் மாநிலங்களில் எல்லாரும் வேலை வாய்ப்பு பெற்றுவிட்டார்களா? அல்லது ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு" பயின்றவர்கள் எல்லாரும் பணிபெற்று நிறைவு பெற்றுவிட்டார்களா?" இக் கேள்விக்கான விடை என்ன? "அங்கும் எங்கும் வேலைவாய்ப்புப் பிரச்னை தொடர்ந்து இருந்து வருகிறது" என்பதுதான் அதன் விடை. சொல்லப் போனால் நம் தமிழகத்தை விடவும் பிறமாநிலங்களில்தான் வேலைவாய்ப்புப் பிரச்னை இன்னும் கடுமையாக இருந்து வருகிறது என்பதை இளைய தலைமுறையினருக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே வேலை வாய்ப்பை எண்ணி மூவாயிரம் ஆண்டு பழைமையும் நாகரிகமும் வாய்ந்த தமிழ்மொழியைப் புறக்கணிப்பது என்பது அறிவான செயல் ஆகாது. அது அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கும் அவலச் செயல் என்பதை மாணவச் செல்வங்களுக்கு நினைவுபடுத்தி,

"தொண்டு செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும்துறைதோறும்
துடித்தெழுந்தே"

என்று இளைய தலைமுறையினருக்கு என் அன்பு வேண்டுகோளை இத்தீபாவளி திருநாளில் தெரிவித்து அவர்களை வாழ்த்துகிறேன்.

இன்னும் ஒரு கருத்தையும் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டியது அவசியம் ஆகிறது. நம் தமிழ் நாட்டில் அரசுப்பள்ளிகளிலும், தமிழ்நாட்டுப் பாடத் திட்டத்தைப் பின்பற்றுகிற அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் தமிழ்மொழியை முதற்பாடமாகக் கொண்டு எல்லா மாணவர்களும் தேறியாக வேண்டும் என்ற விதி இருப்பதால் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களும் தமிழ்மொழிப் பாடத்தைப் பயின்று போதிய தமிழறிவு பெற்று வருகின்றனர். ஆனால் மத்திய பாடத் திட்டத்தைப் பின்பற்றுகிற தமிழ்நாட்டுத் தனியார் பள்ளிகளில் தமிழ்மொழி அறிவை அறவே புறக்கணித்து மாணவர்கள் பட்டம் பெற வாய்ப்பிருப்பதை எண்ணும்போதுதான் உண்மையில் என் மனம் சொல்லொணா வேதனை அடைகிறது. தமிழ்நாட்டில் தமிழ் மொழியை அறவே புறக்கணித்து விட்டு வடமொழி, அல்லது இந்திமொழி அல்லது தமிழ்மொழி அல்லாத வேறு ஒரு மாநில மொழியைப் பயில்வதன் மூலமும் மாணவர்கள் வெற்றி பெற்று விடலாம், அவர்கள் பட்டம் பெற்று தமிழகத்தில் வேலையும் பெற்றுவிடலாம் என்னும் நிலை இருக்குமானால் - அது தொடருமானால் — தமிழ்மொழியும் தமிழினமும் எவ்வாறு தழைத்தினிதோங்க முடியும் என்பதுதான் என் கேள்வி!

தமிழகத்தில் கல்வி பயிலும் எல்லாரும், தமிழகத்தில் பணி பெறும் எல்லாரும் தமிழ்மொழியில் போதிய அறிவ பெற்றிருத்தல் அவசியம். தமிழ்நாட்டுப் பாடத்திட்டத்தின்படி படிப்பதானாலும் அல்லது மத்திய பாடத்திட்டத்தின்படி படிப்பதானாலும், அவசியம் அவர்களும் தமிழ் மொழியைப் பயின்றிருத்தல் வேண்டும் என்பதை இனி நாம கட்டாயப்படுத்தியாக வேண்டும். தமிழை அறவே புறக்கணிப்பாரை இனி தமிழகமும் புறக்கணித்தே ஆக வேண்டும் என்பது என் தாழ்மையான வேண்டுகோள். கர்நாடகத்தில், ஆந்திரத்தில், கேரளத்தில், மகாராட்டிரத்தில், உத்திரப்பிரதேசத்தில், மேற்கு வங்காளத்தில் அந்தந்த மாநில மொழிகளை அறவே புறக்கணிப்பது என்பது இயலாத ஒன்று. அந் நிலையை இனி நாமும் நம் தமிழகத்தில் உருவாக்க நாம் அனைவரும் ஒன்றுகூடி இத்திருநாளில் உறுதி ஏற்போம்!



போட்டோ : உத்ரா

ஸ்ரீமான் உ.வே.எ. வில்லிவலம் கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமி

அஹோபில மடத்தின் அடுத்த ஜீயர்

புலவர் பாரத சி.வீ. சேஷாத்ரி

'திருமங்கை மன்னன்' என்று வைணவர்களால் போற்றப்படும் திருமங்கையாழ்வாரால் மங்களா சாஸனம் செய்யப்பெற்றது ஸ்ரீமத் அஹோபிலம் என்னும் திவ்ய தேசமாகும். இங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான் ஸ்ரீமாலோலன். அங்கு 'ஜ்வாலா, அஹோபில, மாலோல, க்ரோட, காரஞ்ச, பார்கவ, யோக, சத்ரவட, பாவன' என ஒன்பது நரஸிம்ம மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். ஆகவே இந்தத் தலம் 'நவநரஸிம்ம க்ஷேத்ரம்' என்று அழைக்கப்படும்.

அந்த மாலோலனின் திவ்ய கடாட்சத்தால் நியமிக்கப்பட்டு, அவராலேயே காஷாயம், திரிதண்டம் (முக்கோல்) முதலியன அருளப்பெற்ற 'ஸ்ரீமத் ஆதிவண் சடகோபயதீந்த்ர மஹாதேசிகன்' என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட ஆசார்ய பரம்பரையே அஹோபில மடத்துக் குரு பரம்பரையாகும்.

வடகலை ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்த இந்தச் சிறப்பு வாய்ந்த குரு பரம்பரை, வழி வழியாக, மேலும் மேலும் வளர்ந்து, இந்தியா முழுவதும் சீர்களைப் பெற்றுச் சிறப்புடன் விளங்கிவருகிறது.

தற்போது இதன் 44ஆவது பட்டம் ஸ்ரீமத் அழகிய சிங்கர் என்று போற்றப்படும் ஜீயர் ஸ்வாமிகள் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ளார். 97 திருநக்ஷத்திரங்களைக் (வயது) கடந்த பிறகும் இன்னமும் ஸ்ரீமாலோலனதருளால், தம் திருக்கரங்களாலேயே திருவாராதனம் செய்வதும், 'வித்வத்சதஸ்' என்று அழைக்கப்படும் வேதவித்வான்களின் சபையில் நீண்ட நேரம் எழுந்தருளியிருந்து, வினாவிடைகளாலும் விசேட விளக்கங்களாலும் நகைச் சுவையாலும் எல்லாரையும் கவர்வது, அனைவராலும் போற்றப்படுவதுடன் அனைவரையும் வியக்கச் செய்வது மாகும்.

பல்லாண்டுகளாக 'மொட்டைக் கோபுரம்' என்று வழங்கப்பட்ட திருவரங்கத் தென்கோபுரத்தை உலகில் உயர்ந்த, வானளாவிய கோபுரமாகக் கட்டிய பெருமை இவரையே சேரும். இது இந்திய வரலாற்றில் இடம் பெற்ற ஒரு சிறப்பம்சமாகும்.

தற்போது இவருக்கு அடுத்த படியாக '45ஆவது பட்டம் அழகிய சிங்கர்' என்ற சிறப்பினைப் பெற்று, அடுத்த பீடாதிபதியாகச் சன்னியாஸ ஆச்ரமத்தை ஏற்கும் பெரியவர் ஸ்ரீமான் உ.வே.எ. வில்லிவலம் கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமி என்பவர்.

வடஆர்க்காடு மாவட்டத்தில் வில்லிவலம் என்ற கிராமத்தினைத் தமது சொந்தமாகக் கொண்டவர். 1926ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதி அக்ஷய வருடம் கார்த்திகை மாதம் உத்திரட்டாதி நட்சத்திரத்தில், தர்க்கசாஸ்திர விற்பன்னர் ஸ்ரீமான் பழவேரி நரஸிம்மாச்சாரியர் ஸ்வாமி, ரங்கநாயகியம்மாள் என்கிற தம்பதிக்கு 6ஆவது புத்திரராக அவதரித்தார். இவர் அவதரித்த வம்சமே பண்டிதர்கள் நிரம்பிய வம்சமாகும்.

மதுராந்தகம், அஹோபில மடத்துக் கல்லூரியில் தலைவராக விளங்கியவரும், நியாய, வேதாந்த சாஸ்திரப் புலமையும், ஆத்ம குணமும் நிரம்பப் பெற்றுப் பிரபலமாய் விளங்கியவருமான 'வேதாந்த வாவதூத' ஸ்ரீமான் வில்லிவலம் நாராயணாசார்யர் ஸ்வாமியின் இளவல் இவர் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த தமையனாரிடமே இந்த ஸ்வாமியும் தர்க்க சாஸ்திரம் முழுவதும் ஐயந்திரிபறக் கற்றார்.

காவியம், நாடகம் முதலியவற்றைத் தந்தையாரிடம் கற்றார்.

1949இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நியாய சிரோன்மணி பட்டம் பெற்றுச் சென்னை மாநிலத்திலேயே முதலாவதாகத் தேர்ந்தார்.

திருவாய் மொழியைத் திருத்தமாகவும், ஐயந்திரிபறவும் கற்பதற்காகவென்று தமிழ் வித்வான் பட்டமும் பெற்றார்.

42ஆம் பட்டம் இஞ்சிமேட்டழகிய சிங்கர் என்று போற்றப்படும் ஜீயர் ஸ்வாமி ஸந்நிதியில் வேதாந்த காலக்ஷேபம் செய்து புலமை பெற்றதுடன், அவரிடமே பஞ்ச சம்ஸ்காரமும் பெற்றார்.

43ஆம் பட்டம் தேவனார் விளாகம் அழகிய சிங்கரிடம் கீதா பாஷ்யம், ரஹஸ்யத்ரயஸாரம், முதலியவற்றில் காலக்ஷேபம் செய்த பெருமையும் இவருக்குண்டு.

மேலும் அவரிடமே சரணாகதி செய்துகொண்ட பெருஞ் சிறப்பும் பெற்றவர்.

தற்போது எழுந்தருளியுள்ள 44 ஆவது பட்டம் ஸ்ரீமதழகிய சிங்கரால் இந்த மடத்தின் ஆஸ்தான வித்வானாகவும் நியமிக்கப் பட்டுள்ளார்.

சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற பல இடங்களில் பாகவதம், மகாபாரதம், ஸ்ரீமத் ராமாயணம், கீதாபாஷ்யம், விஷ்ணு புராணம் போன்றவற்றில் உபந்யாஸங்கள் செய்து பலர் பாராட்டையும் ஆதரவையும் மொழி, இன, ஜாதி வேறுபாடின்றிப் பெற்றுள்ளார்.

மூன்று பட்டங்களிலும் எழுந்தருளியிருந்த அஹோபில மடத்து ஜீயர்களுடனும் நெருங்கிய தொடர்பும், பக்தியும், அனுக்ரஹமும் பெற்ற இவர் மாலோல வித்வத் சதஸ் என்று வழங்கப்படும் அஹோபில மடத்துச் சதஸிலும், ஸ்ரீமத் ஆண்டவன் நடத்தும் பாதுகாவிகார வித்வத் சதஸிலும், நாவல் பாக்கம் வித்வத்சதஸிலும் முக்கியப் பங்கு பற்றியுள்ளார்.

26ஆம் பட்டம் ஜீயர் ஸ்வாமிகள் எழுதிய 'ஸ்ரீவைஷ்ணவ சதாசார நிர்ணயம்' என்ற நூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். வைணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஆசாரங்களை மிக அழகாக இந்நூலில் விளக்கியுள்ளார்.

இவை தவிரப் பல நூல்களைத் தாமே இயற்றியும், மொழி பெயர்த்தும் வைணவ சம்பிரதாயத்துக்கு ஈடு இணையற்ற தொண்டு புரிந்துள்ளார்.

இன்றும் சென்னையில் இளைஞர் பலரும், கிருஹஸ்தர் பலரும் இவரிடம் காலக்ஷேபம் செய்து கொண்டு, பல கடைகளையும், சமாஜங்களையும், சமிதிகளையும் அமைத்துக் கொண்டு, 'அடியோங்கள், வில்லிவலம் ஸ்வாமி

யின் சிஷ்யர்கள்' என்று சொல்லிக் கொள்ளும்போது அவர்கள் முகத்தில் ஓர் ஒளியைக் காண முடிகிறது.

வேதாந்த சாரக்ஞ, நியாய வேதாந்த விசாரத வித்வன்மணி, பாவசனப்ரவீண, சாரார்த்த ப்ர காசகராஜா, சாரார்த்த அம்ருத வர்ஷி, விசத வாக் சுதாநிதி, தேசிகதர்ஸன சூடாமணி போன்ற பட்டங்கள் பலவற்றைப் பெற்ற இவர் பேச்சுக்கிடையே அடிக்கடி 'முத்தண்ணா! முத்தண்ணா!! என்று தமது தமையனாரைக் குறிப்பிட்டு அவரால்தான் தாம் இந்த நிலைக்கு வந்தோம் என்பதைத் தெரிவிப்பதுடன், 42, 43, 44 ஆம் பட்டங்களில் எழுந்தருளிய அழகிய சிங்கர் ஸ்வாமிகளையும் பற்றிக் கண்களில் நன்றியுணர்வும், ஆனந்தக் கண்ணீருமாகக் கூறும்போது அவரது எளிமையும் நன்றியுணர்வும் பளிச்சிடுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த சன்யாஸ ஆச்ரமத்தைச் செவ்வனே நடத்திச் செல்லவும், அந்த மாலோலனின் திருவாராதனத்தை முன்னோர் வழியே சிறப்பாகச் செய்யத் தமக்கு அருள் பாலிக்கவும் பிரார்த்திப்பதாய்க் கூறுவது அவரது எளிமை, பக்தி, வாத்ஸல்யம் முதலியவற்றை வெளிப்படுத்துகிறது.

இல்லறத்தில் காணியம்பாக்கம் திருமதி கோமளவல்லி என்னும், ஆசார, சீலத்தில் அடிவழுக்காத குடும்பத்தைச் சேர்ந்த அம்மையாரை மணந்துகொண்டார். அந்த அம்மையார் தாம் ஒழுக்கத்தைப் பின்பற்றுவதுடன், பிறரையும் ஒழுக்க நெறியில் நிலைகொள்ளச் செய்யும் பெருமையுடையவர். ஸ்வாமிக்கும் அடிக்கடி தர்மத்தை அனுபவ வாயிலாக நினைவூட்டத் தக்க சாஸ்திர ஞானம் உடையவர். இவர்களின் இல்லறப் பயனாய் திருக்குமரர்கள் மூவர் பிறந்துள்ளனர். மூவ்ரும் தந்தை வழியிலிருந்து விலகாமல் நடக்கும் பெருமை பெற்றவர்கள்.

அளவிடமுடியாத இத்தகைய பெருமைகளையுடைய பெரியவர் 45 ஆம் பட்ட அழகிய சிங்கராக அஹோபில மடத்துக்கு எழுந்தருள்வதால் வைஷ்ணவமும், ஒழுக்கமும் நாட்டில் வளர்வதோடு, நாடு நன்னிலையடையவும் எல்லாம் வல்ல ஸ்ரீமாலோலனைப் பிரார்த்திப்போம். ❖

பாதியும் மீதியும்

சாரதிதாசன்



இரவொரு பாதி பகலொரு பாதி நாளாகும்
இன்பத்தில் பாதி துன்பத்தில் பாதி வாழ்வாகும்
வரவொரு பாதி செலவொரு பாதி பிழைப்பாகும்
இறப்பது பாதி இருப்பது மீதி இயல்பாகும்
நல்லது பாதி கெட்டது பாதி நடப்பாகும்
ஆண்மையில் பாதி பெண்மையில் பாதி பிறப்பாகும்
உண்மையும் பாதி பொய்மையும் பாதி உலகாகும்
கண்டதும் பாதி கற்பனை பாதி கலையாகும்
இயற்கையில் பாதி செயற்கையில் பாதி படைப்பாகும்
ஆற்றலும் பாதி அனுபவம் பாதி அறிவாகும்
அமைவது பாதி அமைப்பதில் பாதி அழகாகும்
பக்தியில் பாதி உத்தியில் பாதி படிப்பாகும்
தோற்றமும் பாதி துணிவதில் பாதி படையாகும்
ஏற்றமும் பாதி எழுச்சியும் பாதி நடையாகும்.

கால் முளைத்த கனவுகள்



மதிவண்ணன்

கண்கள் காணும் கவிதையே குழந்தைகள்! – இவர்கள்
கால்முளைத்து நடந்துவரும் கனவுகள்!
தேவ கீதம் பாடும்
பூமி வானம் ஆகும்
தோளில் மழலை துள்ளும் போதிலே! – அது
சுகந்த ராகம் சொல்லும் காதிலே!
மேகம் மீது திரிவதுவோ ஒருநிலா! – மண்ணில்
மேடைகட்டி ஆடுவதோ பலநிலா!
அன்பில் பூத்த முல்லை!
அழகு மழலைக் கிள்ளை!
ஆண்டவனும் குழந்தை உருவிலே! – தினம்
அமுதம் ஊறும் இவர்கள் வரவிலே!
ஆசை தாபம் வேஷம் எதுவும் இல்லையே! – இவர்கள்
அறிமுகத்தில் மறுமுகமே இல்லையே!
வாழ்வின் காலைநேரம்
ஆகும் மழலைக் காலம்
மலரும் வாழ்க்கை குழந்தை கையிலே! – அதற்கு
வாழ்த்துப் பூக்கள் என்றன் கையிலே!

'பால சரஸ்வதியா! அது யார்?' என்று கேட்கும் காலம் இது.

அந்த சகாப்தம் முடிவடைந்து விட்டது.

ஆகவே, அந்த அபிநய மாமேதையை நினைவுகூர முயலு கிறேன்.

தில் அரங்கேற்றம். பின்னர், குரங்கேற்றம்.

ஏதோ அதலபாதாளத்தில் இருந்த பரத நாட்டியக் கலையை அதனின்று மீட்டு உச்சாணிக் கிளையில் உட்கார வைக்கப் போகிறதாகப் பறைசாற்றிக் கொள்வார்கள்.

வார்கள். நான் கூறுவது உங்க ளுக்கு வியப்பாய் இருக்கலாம்.

ஓரிரு உதாரணங்கள் கூறு கிறேன். பிறகு புரியும்.

பதங்களில் ஒரு பழைய பதம் பார்த்த பதம் இருக்கிறது.

"எத்தனை சொன்னாலும் அறியாதவரோ" என்ற பதம்.

ஒரு மருமகள் எதற்கெடுத் தாலும் முணுக்கென்று மூக்குக்கு மேல் கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டுக்கு வந்துவிடுவாள்.

அந்தக் காலத்திலும் இந்த மாதிரி பெண்மணிகள் இருந்திருக் கிறார்கள்!

அபிநய சரஸ்வதி பால சரஸ்வதி

சுப்புடு

அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், தில்லானா என்ற ஒழுங்குமுறை போய்,

புஷ்பாஞ்சலி, கோட்டான் கவுத் துவம், பஞ்சரத்ன கிருதி, தேவர் நாமா இத்யாதிகள் மலிந்த நாள் இது.

இங்கேதான் பால சரஸ்வதி யின் மேதை புரியும். இப்போது படித்தவர்கள் - அதாவது ஆங் கிலம் படித்தவர்கள் - இந்தத் தொழிலை ஆக்கிரமித்துக் கொண் டார்கள்.

ஏகப்பட்ட சம்பந்தமில்லாத கற்பனைகள். சஞ்சாரி உருவம் பெற்று, தலைவிரித்தாடுகின்றன. "பால்" என்று அபிநயிக்க வேண்டு மென்றால் சந்தையில் பசு மாட் டைக் கன்றுகுட்டியுடன் வாங்கி, அதைக் கொட்டிலில் அடைத்து, மடியை அலம்பி, வாளியைக் கீழே வைத்து, மாட்டைக் கறந்து பாலை அருந்துவதுபோல் அபிநயிக்கும் காலம் இது. பரதநாட்டியத்தின் தனிச்சிறப்பு என்னவெனில், ஒரு கோடி காட்டி நேரே விஷயத்திற்கு வந்து விட வேண்டும்.

ஊரைச் சுற்றி ஊளையிடக் கூடாது. இன்றைய நடனமணிகளில் பலருக்கு இசைப் பிரக்ஞை அறவே கிடையாது.

அவர்கள் செய்யும் பாத வேலை களில் தாள விவகாரங்கள்? மூச்!

எல்லாம் நட்டுவனாரின் சூத் திரக் கோலில் அடங்கியிருக்கிறது.

"கோல்" எடுத்தால் "குரங்கு" ஆடும் என்பதுபோல் அவர் தட்டும் தட்டுக்கு ஆடுவார்கள். ஆறு மாதத்



அதற்கு வேண்டிய அலங் காரங்களோ, ஒப்பனைகளோ சொல்லி மாளாது.

ஆறரை மணி நிகழ்ச்சிக்கு மூன்று மணிக்கே ஒப்பனை ஆரம் பித்துவிடவேண்டும். அதற்கு ஒரு பூஜை வேறு!

பால சரஸ்வதி இதற்கெல்லாம் விதிவிலக்கு. கொஞ்சம்கூட ஜிகினா வேலைகள் கிடையாது. சாதாரண நூல் புடவை. ஒரு தொள தொளா ரவிக்கை. அபி நயிக்க ஆரம்பித்துவிட்டால், அர னும், பார்வதியும் கண்டு மகிழ்

ஒரே ஒரு வித்தியாசம். அப் போது பிறந்த வீடு. இப்போது விவாகரத்து.

அவளுக்குத் தாயார் புத்திமதி கூறுகிறாள்.

"அடி அசட்டுப் பெண்ணே இப்படிச் செய்யலாமா? பிறந்த வீடு என்ன சாசுவதமா? என்ன இருந்தாலும் அவன்தானே உனக்கு? அங்கே நற்பெயர் எடுக்க வேண்டாமா? எத்தனை பூஜ்யம் போட்டாலும் அதற்கு முன்னால் ஒன்று போடாவிட்டால் எல்லாம் பூஜ்யம்தானே! ராத்திரி எல்லாம்

ராமாயணம் கேட்டுவிட்டு சீதைக்கு ராமர் சித்தப்பா என்கிறாயே!"

இந்தப் பதத்தை இப்போது அதிகமாக யாரும் ஆடுவதில்லை.


யாராவது ஆடினால் போய்ப் பாருங்கள்.

"எத்தனை" என்பதற்கு கையால் ஓர் அபிநயம்.

"சொன்னால்" என்பதற்கு கையை வாயின்மேல் வைத்து, ஓர் அபிநயம்.

"அறியாதவருடன்" என்பதற்கு ஆள்காட்டி விரலால் நெற்றிப் பொட்டைச் சுற்றி ஓர் அபிநயம்.

"ஏன் பிணங்கிக் கொண்டாய்" என்பதற்கு இரண்டு ஆட்காட்டி



விரல்களையும் சேர்த்துக் கொண்டு... போதுமடா சாமி!

பால சரஸ்வதிக்கு வருகிறேன்.

எப்போதோ பார்த்த ஞாபகம். இன்னும் பசுமையாய் இருக்கிறது. அதற்குமுன் ஒரு சின்ன விளக்கம். இப்போதெல்லாம் நட்டுவனார்கள் ஒரு கவனத்தில் உட்பொருளை, அதாவது மையக்கருத்தை மாணவி களுக்கு விளக்குவது இல்லை. அது அவர்களுக்கே தெரியாது போலும்! வார்த்தைக்கு வார்த்தை அபிநயம்தான். அமையுமா அது?

மறுபடியும் பால சரஸ்வதி.

ஒரு பெண் தந்தை சொல் லுக்குக் கட்டுப்படமாட்டாள். தாயார்தான் வழி. சரி. ஒரு பெண்ணை, பிடிவாதக்காரியை, எந்த நிலையில் வசமாக, வகை யாகப் பிடிக்கலாம்?

அவளுக்குத் தலைவாரிப் பின்னும்போதுதான்.

அந்தச் சமயத்தில்தான் அவள் சிண்டு தாயின் கையில் வசமாக சிக்கிக் கொண்டிருக்கும். தப் பிக்க முடியாது.

பால சரஸ்வதிக்கு இந்தக் கற்பனை தோன்றி இருக்கிறது. அதனால் அதற்கு உகந்த சஞ்சாரி அமைந்துவிட்டது.

அங்கே வலப் பக்கத்தில் "எத்தனை சொன்னாலும்" என்ற பதம் சாவேரியில் அற்புதமாகப் பெருக்கெடுத்து ஓடிக் கொண் டிருக்கிறது - ஜயம்மாள் உபயம்.

தாயார் அழுத்தி வாரிக்கொண் டிருக்கிறாள். அளகபாரத்தின் அடிபாகம், அம்மாவின் பிடியில் இருக்கிறது. தாய் நான்கைந்து சங்கதிகள் முடிந்தவுடன் தன் மகளின் முகவாய்க்கட்டையைச் சற்றே தன் பக்கம் திருப்பி, "அசட் டுப் பெண்ணே! எத்தனை சொன் னாலும் உனக்குப் புரியமாட்டேன் என்கிறதே" என்று அபிநயிக் கிறாள்.

பால சரஸ்வதி இங்ஙனம் மேதாவிலாசத்துடன் அபிநயித்த போது என் கண்கள் பனித்து விட்டன.

என்ன தத்ரூபமான அபிநயம்! இப்போது நினைத்தாலும் புல்லரிக் கின்றது!

மற்றோர் உதாரணம்.

சிவன் பார்வதியுடன் கொலு வீற்றிருக்கிறான். வேழவேந்தன் உள்ளே நுழைந்து, பெற்றோரை வலம் வந்துவிட்டு, அழகாக பார்வதியின் மடியில் உட்கார்ந்து விடுகிறான். அதனையடுத்து வேல் முருகன் வருகிறான், ஜகத் ஜோதியாய்.

அரனுக்கு அளவில்லா ஆனந்தம்.

இரு கைகளையும் நீட்டி ஆவ லுடன் அழைக்கிறான் தன் மடியில் அமர. பாலகுமாரன் மேலும் கீழும் பார்த்துவிட்டு முகத்தைச் சுளிக் கிறான்.

பல வருடங்களாக நாட்டியம் பார்த்துவந்த எனக்கே ஏன் என்று புரியவில்லை.

வெட்கம் இல்லாமல் ஒப்புக் கொள்கிறேன். அந்தச் சிவனுக்கே புரியவில்லை என்றால் எனக்கு எப்படிப் புரியும்?

"ஏன் அவன் அப்படி முரண்டு பிடிக்கிறான்? ஏன் என்னிடம் வரத் தயக்கம்?" என்று அரன் தன்னையே ஆராய்கிறான்.



பிறகுதான் புரிகிறது.

அவருடைய கோலம் அதாவது அலங்கோலம். அவனுக்கே அரு வறுப்பு அளிக்கிறது. செஞ்சடை, அரவம் சூழ்ந்த கழுத்து. சாம்பல் மேனி, புலித்தோல் ? - ச்சீ, எந்தக் குழந்தை கிட்டே வரும்?

ஒரு புன்முறுவல்.

இந்த அலங்கோலங்களை எல்லாம் நீக்கிவிட்டு, "வாடா கண்ணே" என்று அழைக்கிறான். அவ்வளவுதான், பாலன் ஓடோடி வந்து மடி மீது அமருகிறான்.

இப்போது சொல்லுங்கள். இது வல்லவா அபிநயம்? இப்படி அல்லவா கற்பனை தோன்ற வேண்டும்? நாட்டியத்தின் சிறப்பு ஆடை அலங்காரங்களிலும், மேடை ஜோடனைகளிலும், சிவப்பு, பச்சை விளக்குகளிலும் இல்லவே இல்லை.

பாட்டுகளின் உட்கருத்தை நன்றாகப் புரிந்துகொண்டு விட் டால் அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

அதற்குத்தான் அபிநயம் என்று பெயர்.

இசைப் பிரக்ஞை என்று சொன்னேனே, அதற்கு வரு கிறேன்.

இப்போது உள்ள சில நடன மணிகள் பாடினால் சலவையாளர் வந்துவிடுவார்.

பால சரஸ்வதி குடும்பமே ஓர் இசைக் குடும்பம். இசைப் பன்னீரில் ஊறிய குடும்பம்.

"கிருஷ்ணா நீ பேகனே பாரோ" என்ற கவனத்தை அவர் பாட

வேண்டும், கேட்க வேண்டும், பரவசமாகி விடுவோம்.

அங்கு யமுனா கல்யாணி ராகம் பெருக்கெடுத்து ஓடும்.

கண்ணன் மண்ணைத் தின்று விட்டு வாயை அகலத் திறக்கும் போது யசோதைக்கு அண்ட சராசரங்களும் அங்கு தெரியும். அப்போது அற்புதம் மேலிட்டு அவள் அசந்து நிற்பாள்!

இதை அபிநயிக்கும்போது பால சரஸ்வதி அவையோரை ஸ்தம் பிக்கச் செய்துவிடுவார்.

அவர் பாதவேலை புரியும் போது அநாயாசமாகச் செயல் படுவார்.

அரை மண்டி அங்க மண்டி யிட்டு நிற்கும்.

கந்தப்ப நட்டுவனாரின் கைங் கரியம்.

பாடம் கேட்கும்போது துளி தவறினால், நட்டுவனாரின் தட்டுக் கழி பால சரஸ்வதியின் கணுக் காலைக் குறிபார்க்கும்.

இது சத்தியம்.



ஏனெனில் அவருடைய கணுக் கால் அடிபட்டு, பட்டு காய்ப்புக் காய்ந்திருக்கும்.

இப்போதெல்லாம் சிருங்காரம் கூடாது, ஆல மரத்தடியில் அறவே கூடாது என்று கிளம்பியிருக் கிறார்கள் - அபத்தம். அவர் களுக்குத் தெரியாது போலும், சிருங்காரம்தான் சிருஷ்டியின் அடிப்படை என்று. சிருங்காரம் என்பது இல்லை எனில் சிருஷ்டியே கிடையாது.

ஆனால் கீழ்த்தரமான சிருங் காரமாக இருக்கக் கூடாது.

நமது இஷ்ட தெய்வங்களின் சரித்திரங்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால் எல்லாருமே நன்றாக விளையாடி இருக் கிறார்கள்.

ராமனைத் தவிர பாக்கி எல்லா ருக்கும் ஆளுக்கொரு 'சின்ன வீடு' இருந்திருக்கிறது.

அதிலும் கண்ணனுக்கு ஒரு 'டவுன்ஷிப்'பே இருந்திருக்கிறது.

உடனே வெகுண்டு எழ வேண்டாம். சௌந்தர்ய லஹரி யைப் படியுங்கள், நான் சொல்லு வது புரியும்.

கடைசியாக பால சரஸ்வதிக் குத் தேசிய விருது கிடைத்தபோது பேட்டி கண்டார்கள்.

"உங்களுக்குப் பிறகு?" என்ற கேள்விக்கு "என்னோடு ஒழி யட்டும்" என்றாராம். எவ்வளவு தீர்க்கதரிசனமான வாக்கு!

மறக்க முடியாதவர்கள் / விக்கிரமன்

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மறக்க முடியாத சம்பவங்கள் பல இருக்கும். வாழ்க்கையில் சந்தித்த மறக்க முடியாத மனிதர்கள் பலர் இருப்பார்கள். மாமேதைகளிலிருந்து எளியவர்கள் வரையில் அவர்களைச் சந்தித்த பசுமையான நினைவுகள் பலவற்றை இப்போது அசைபோடும் போது மனதுக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கும். இதில் பெரியவர்கள் - சிறியவர்கள் என்ற வேற்றுமை கிடையாது.

அமைதியாக நான் பழைய சம்பவங்களை மனத்திரையில் கொண்டுவந்து, ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்பு நான் சந்தித்த மிக முக்கியமானவர்களைப் பற்றி மீண்டும் நினைவு படுத்திக் கொள்வேன். அதில் ஏற்படும் சுக அனுபவமே தனிதான். நான் சந்தித்த மறக்க முடியாதவர்களால் தான் ஒவ்வொரு வகையில் பலனடைந்திருக்கிறேன். நான் சந்திக்காத மாமன்னர்களை, வீரர்களை, அரசிகளை, அரசிளங் குமாரர்களை, பக்திச் செல்வர்களை கண் முன்பு கொண்டு நிறுத்தி அவர்கள் வாழ்ந்த காலத்தை - பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றவற்றைக் கற்பனை எழுத்தோவியம் தீட்டுகிறேன். அவை வரலாற்றுப் புதினங்களாகின்றன. அறுபது ஆண்டுகாலத்தில் சந்தித்த நிகழ்ச்சிகளும் ஏன் வரலாற்றுக் குறிப்புகளாகக் கூடாது?

வாழ்க்கையில் சந்தித்தவர்களைப் பற்றி அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு நினைத்துப் பார்த்து அந்தச் சந்திப்பு நிகழ்ச்சியை யாருடனாவது பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்று பல ஆண்டுகளாக நினைத்து வந்தேன்.

மனதில் தேக்கி வைத்திருக்கும் வெள்ளத்தை திறந்து பாய்ச்ச தீபாவளி நல்ல தருணம்.

'நாட்டிலெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை
நாட்டினாய் - கனல் - மூட்டினாய்'

என்று ஆங்கிலேயன் தேசபக்தனுக்குக் கூறுவதுபோல் மகாகவியின் பாடல் ஒன்றுண்டு.

மெய் சிலிர்க்க வைக்கும் பாரதியார் பாடல்கள் பலவற்றை



நான் தாரக மந்திரமாகக் கொண்டுள்ளேன். நான் சந்திக்காத ஆனால் நாள்தோறும் சந்திப்பவர் மகாகவி பாரதியார்.

மகாகவியின் பல பாடல்களை நான் முணுமுணுத்துக் கொண்டிருப்பேன். அவற்றுள் மேலே குறிப்பிட்ட பாடலும் ஒன்று. என் உள்ளத்தில் சுதந்திரக் கனலை மூட்டியவர் பாரதியார். வளர்த்தவர் யார் என்று இப்போது நினைத்தால் முதலில் நிற்பவர் என் தந்தை. பதினான்கு வயதிலேயே தந்தையை இழந்துவிட்டேன்.

தள்ளாமையும், நோயின் கோரப் பிடியும் அவரை வாட்டினாலும் தமிழ்ப்பற்றையும், தேசப்பற்றையும், பக்திக் கனலையும் உள்ளத்தே ஏற்றி வைத்தவரில் இளைஞராகவே திகழ்ந்தார். இளம் உள்ளத்தில் படியும் நல்லுரைகள் ஒருவர் வாழ்க்கையை எவ்வாறு வளப்படுத்துகின்றன என்பதற்கு நான் கேட்ட கதைகளே சான்று. பாரத ராமாயணக் கதைகளை அழகுறச் சொல்லுவார். கதையைக் கேட்கும்போது 'உம் உம்' என்று சொல்லி எதிரொலிக்க வேண்டும். சொல்லாவிடில் வசை மாரிதான்!

சைதாப்பேட்டை தேரடித் திடலில் நடைபெறும் காங்கிரஸ் கூட்டத்திற்கு அழைத்துச் செல்வார். ப.இராதாகிருஷ்ணன் என்ற தன்னலமற்ற தொழிலாளி, கூட்டம் தொடங்குவதற்கு முன்பு மேடைமீது ஏறி பாரதியார் பாடல்களைக் கணீரென்று முழங்குவார். (ஒலி பெருக்கிச் சாதனம் அதிகம் பரவாத காலம்).

பாபு ராஜேந்திர பிரசாத் ஒரு கூட்டத்திற்கு வருகை தந்தார். அந்தக் கூட்டம் தொடங்கு முன்பு இராதாகிருஷ்ணன் பாடிய பாடல்:

'வந்தே மாதரம் என்போம் - எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்'

இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அந்நாளில் வரும் தமிழ்ப் பத்திரிகைகள் பலவற்றை விலை கொடுத்து வாங்கி, பத்திரிகை படிப்பதில் ஆர்வமூட்டியவர் என் தந்தை. சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள் உட்பட எல்லாவித இதழ்களையும் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திய என் தந்தையை எப்படி மறக்க முடியும்? ஆனந்தவிகடன் அலுவலகத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். சைதாப்பேட்டை இரயில் நிலையத்தில் ரயிலேறி, கோட்டை ரயில்நிலையத்தில் இறங்கி படிக்கட்டுகள் ஏறி (ஆகா! 50 ஆண்டுகள் ஆகியும் அதே ரயில் நிலையம், அதே படிக்கட்டு, அதே பிராட்வே. டிராம்லைன் மட்டும்தான் இல்லை) போகம்ஸ் பிராட்வே என்றழைக்கப்படும் பிராட்வே கடைசியில் மண்ணடி அருகே(அப்பர் அச்சகம் இருக்கும் இடம்) உள்ள ஆனந்த விகடன் அலுவலகம் அடைந்தோம். அப்பா! அவ்வளவு தொலைவு அவர் கரம்பிடித்து நடந்து சென்றதை இன்றும் மறக்க முடியவில்லை. 'மாடியில் கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி இருக்கிறார்; அவரைப் பார்க்க முடியுமா பார்ப்போம்; அவர் எனக்கும் தூரத்து உறவு,என்று என் தந்தை சொல்வார்.

(என் தந்தைக்கு அப்பொழுது வயது 72. என் வயது 9 என்பதையும் குறிப்பிட வேண்டும்).

கல்கி அவர்களும், வாசன் அவர்களும் வெளியே புறப்பட்டார்கள். படிக்கட்டுகள் வழியே வேகமாக இறங்கிச் சென்று விட்டார்கள். என் தந்தையால்

கலைரசிகர் இராசாராம்

மாண்புமிகு க. இராசாராம் அவர்களிடம், அவருடைய கடுமையான பணிகள் முடிந்து அவர் மன நிறைவு அடைந்து பொழுதை எவ்வாறு கழிக்கிறார் என்பதைக் கேட்டறிய முன் அறிவிப்பின்றி அவர் இல்லத்திற்குத் திடீர் விஜயம் செய்தோம்.

காலை நான்கு - நாலரை மணிக்கே எழுந்துவிடும் திரு க. இராசாராம் காமராஜர் சிலையிலிருந்து கண்ணகி சிலைவரை நடந்து செல்கிறார். பிறகு சீரணி அரங்கு அருகே கடலை நோக்கி அமைதியாக அமர்ந்து மூன்று முதல் ஐந்து நிமிடங்கள் பிராணாயாமம் செய்கிறார்.

காலையில் உடல்நலத்திற்காகக் கடற்கரையில் நடக்கும் நண்பர்கள் சிலர் அங்கு வந்து சேர்ந்து விடுகின்றனர். சிறிதுநேரம் அவர்களுடன் அளவளாவுதல். பிறகு வீடு திரும்புதல்.

வீட்டையும்போது ஆறு மணிக்கு மேல் ஆகிவிடுகிறது. முதல்நாள் இரவே மர டம்ளர் ஒன்றில் துளசி தளம் ஊறப்போட்ட தண்ணீரைப் பருகுகிறார்.

எட்டரை மணி வரை காலைச் செய்தித்தாளை ஒன்றுவிடாமல் படிக்கிறார். அப்போது ஒருவரும் அவரைத் தொந்தரவு செய்ய அனுமதிப்பதில்லை.

குளித்துவிட்டு எளிய காலை உணவு. ஓர் இட்லி, கேழ்வரகு தோசை ஒன்று. பப்பாளித் துண்டமிருந்தால் ஒன்று சாப்பிட்டுவிட்டு ஒரு கோப்பை மோர் சாப்பிடுகிறார். அந்த மோரில் மூலிகைகள் சேர்ந்திருக்கின்றன. என்னென்ன மூலிகைகள் கலந்துள்ளன என்று வினவுகிறோம்.

“கறிவேப்பிலை, துளசி, முருங்கைஇலை, வில்வம் கலந்து இடிக்கப்பட்ட பொடி” என்று மெல்ல நடந்தவாறு சொல்கிறார். இது நீரிழிவு நோய்க்குக் கண்கண்ட மருந்து.

வெளியே பார்வையாளர்கள் கூடிவிடுகின்றனர். ஒவ்வொருவராக அழைத்துப் பரிவுடன் பேசி, கோட்டைக்குச் செல்ல ஆயத்தமாகிறார்.

பகலில் நல்ல புத்தகங்களைப் படிக்கிறார், தலைவர்கள் வரலாறு. அரசியல் நூல்கள் என்று.



அண்மையில் வெளிவந்துள்ள நூல்களை விடாமல் படிப்பது அவருடைய அன்றாடக் கட்டாயப் பணி. அமைச்சரின் இசை ஈடுபாடு அனைவரும் அறிந்த ஒன்று. ஒலி நாடவில் பதிவு செய்யப்பட்ட இசையைக் கேட்கத் தவறுவதில்லை. மதுரை சோமு, எம். எஸ்., மகாராஜபுரம், சீர்காழி பாடல்கள் என்றால் அதைக் கேட்ட பிறகே மற்ற பணி.

பரதநாட்டிய நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் கலந்து கொள்ளத் தவறமாட்டார்.

திரைப்படம் பார்ப்பதில் அமைச்சருக்குள்ள ஆர்வம் எல்லாரும் அறிந்ததே. ஏராளமான திரைப்படங்களின் தொடக்கவிழா அவர் திருக்கரங்களால் நடைபெற்றுள்ளன. திரைப்பட அரங்குகளில் வெளிவரும் புதிய படங்களுக்கு டிக்கட் வாங்கி, பொது மக்களோடு மக்களாகப் பார்ப்பது தான் அவருக்குப் பிடிக்கும். மக்கள் ஆர்வத்தை நேரில் அறிவது அவருக்கு விருப்பம்.

இரண்டு திருக்குறளையாவது வாய்விட்டுச் சொல்லிப் பணியைத் தொடங்குவது அவர் வழக்கம். இன்று அவர் கூறிய குறள் -

“இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று”.

நேரப்படி திட்டம் வகுத்து ஒழுங்காக எந்தச் செயலையும் செய்வதால் கிடைக்கும் நிம்மதி, மனநிறைவு வேறு எவற்றாலும் கிடைக்காது என்று கூறும் அவர் வாழ்வும் வாக்கும் ஒன்றே.

சந்திப்பு: பாரி

அவரை அணுகிப் பேச முடியவில்லை.

கள்வனின் காதலி தொடர்கதை என் மனத்தில் எழுத்துக் கனலை மூளச் செய்திருந்தது. அதைப் படைக்கும் பிரம்மாவைப் பார்க்கப் போகிறோம் என்ற பேரானந்தத்தில் மெய் மறந்தேன்.

தமிழ் நாட்டில் படிக்க வேண்டும் என்ற ஆவலை வளர்த்த ஆனந்தவிகடன் என்ற பத்திரிகையை வளர்த்த பேராசிரியர் ‘கல்கி’ அவர்களை - ‘தேரடி தனில் நின்று தரிசித்தாலும் போதும்’ என்று நந்தனார் ஏங்கியதுபோல் - மேதையைச் - சந்திக்க முடியுமா என்று அன்று ஏங்கிய எனக்கு பத்தாண்டுகள் கழித்து 1948 இல் அவர் இல்லத்தில் அவரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு கிடைத்தது.

என் இனிய நண்பர் ஓவியர் ஸுபா அவர்களுடன் நான் எழுதிய மாமல்லபுரம் என்ற நூலைக் கொடுத்து ஆசிபெறச் சென்றோம். அவ்வளவு எளிதில் பேராசிரியரைச் சந்திக்க முடியாது. இருப்பினும், என் உள்ளார்ந்த விருப்பத்தின் விளைவாக அன்று எனக்கு அந்த நல்வாய்ப்பு கிட்டியது.


பிறகு எழுத்தாளர் சங்கக் கூட்டங்கள் 1954 ஆம் ஆண்டு தீபாவளி மலரை எடுத்துக் கொண்டு அமுதசுரபியின் அன்றைய வெளியீட்டாளர் பி.எஸ். சாமிநாதன், எழுத்தாளர் நா. ராமசந்திரனுடன் அவர் இல்லத்தில் சந்தித்த நிகழ்ச்சியை விரிவாகச் சொல்வது தான் சரியானது. கல்கி மறைந்த டிசம்பர் மாதம் வெளியிடும் அமுதசுரபி இதழில் வெளியிடுவது பொருத்தமானது என நினைக்கிறேன். என் வாழ்நாளில் மறக்க முடியாத சந்திப்பில் பெரியார், ராஜாஜி, சத்தியமூர்த்தி போன்றவர்களைப் பற்றி தமிழன்பர்களிடம் பகிர்ந்து கொள்வதும் ஒரு வரலாற்றுக் குறிப்பு என்று தான் நினைக்கிறேன். இதில் ‘நான்’ வந்தாலும் நிகழ்ச்சியைக் கூறுவது பொதுவானது; அனைவரும் அறிய வேண்டியவையே. ००

மகிழ்ச்சியும் பொழுது போக்கும்

நீதி, சட்டம், அரசியல், எழுத்து, காவல், கல்வி, ராணுவம், இசை, சினிமா, பத்திரிகை எனப் பல்வேறு துறைகளிலும் பிரபலமானவர்கள் சிலரைச் சந்தித்து உங்கள் மகிழ்ச்சியும், பொழுது போக்குகளும் எவை யெவை எனக் கேட்டதற்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்கள் கூறிய வற்றை அமுதசுரபி வாசகர் களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீதியரசர் எஸ். மோகன்

கதை, கவிதை, சட்ட நுணுக்கங்கள், இலக்கிய ஆராய்ச்சி என்று பல துறைகளில் நூல்கள் எழுதியுள்ள நீதியரசர் திரு. ச. மோகன் அவர்கள் பதவி உயர்வு பெற்று சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக ஆனவுடன் வாழ்த்துத் தெரிவித்து உங்கள் பொழுது போக்கு எவை என்று வினவியதற்கு சிரித்துக் கொண்டே அவர் செப்பியது இது :



சிந்திப்பதில் அதிகம் ஈடுபடுகிற எனக்கு மன மகிழ்வைத் தருவது இசை. மகத்தான சக்திகள் பல கொண்ட இன்னிசை மனத்திற்கு ரம்யமான உணர்வை ஏற்படுத்துகிறது. மேலும் உடலுக்கு புத்துணர்ச்சியைத் தந்து ஆரோக்கியத்தை நீடிக்கச் செய்யும் பயிற்சியான 'டென்னிஸ்' விளையாடுவதையும் நான் காலை நேரப் பொழுதுபோக்காய்க் கொண்டிருக்கிறேன். நாளெல்லாம் சுறுசுறுப்புடன் இயங்க இவையிரண்டும் போதுமே!

மாண்புமிகு கே.ஏ. கிருஷ்ணசாமி

சட்ட அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களைச்



சந்திக்க ஏராளமானோர் காத்திருந்தார்கள். நாம் வந்த காரணத்தைத் தெரிவித்தவுடன் உற்சாகமாய்ப் பேச ஆரம்பித்தார் அமைச்சர்;


விவேகானந்தர்... அண்ணா ஆகியோர் எழுதிய நூல்களை அறிவுப் பசியுடனும்... விருப்பத்துடனும் படிக்கும்போது... அவை தரும் உண்மைகள் மனத்தை இளக்கி ஆறுதல் தருவதுடன் இன்பத்தையும் அளிக்கின்றன. காரில் போகிற வேளையில் பாரதியின் பாடல்களின் ஒலிநாடாவைக் கேட்பதிலும் நான் ஊக்கம் தரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தன்னம்பிக்கையூட்டும் விவேகானந்தரின் வார்த்தைகளில் மகிழ்ச்சியடைவது போலவே சேர்ந்தெண்ணும் மனைவியுடன் உரையாடுவதிலும், பேரனின் மழலையிலும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். வேலைப்பளுவின் பிரச்னைகள் மன உளைச்சல்கள் ஏற்படுத்துவதுபோல் இருந்தால் சோர்ந்து விடாமல் மகிழ்ச்சியைத் தரக்கூடிய, புதிய வலிமையைத் தரக்கூடிய புத்தகங்களில் மனதைச் செலுத்தி நான் புத்துணர்ச்சி பெறுகின்றேன்.

திரு ஜி. வெங்கடேஸ்வரன்

பெரும்பாலான பொதுமக்களை எளிதில் இன்பம் காண வைக்கின்ற தொழிலான திரைப்படத் துறையில் புதிய சரித்திரத்தைப் படைத்து வரும் திரு ஜீ.வி.யைச் சந்தித்தபோது ஆழ்ந்த சிந்தனையுடன் அவர் கூறிய விளக்கம் நம்மையும் சிந்திக்க வைக்கிறது:

நாகரிகத்தால் பாதிக்கப்படாத இயற்கையை ரசிப்பதிலே எனக்கு மகிழ்ச்சி அதிகம். உங்களுக்கே புரியும்... மரங்கள் வெட்டப்படாமல் பசுமைக்காடாய்... பழமையாய் இருக்கும் வெளியூர்களுக்குச் செல்லும்போது நாகரிகத்தின் கறைபடியாத ரம்யமான இயற்கையை நான் பெரிதும் ரசிப்பேன்.



ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் இருநூறு பக்கம் படிப்பதிலும் எனக்கு இதே சந்தோஷம் ஏற்படுகிறது. பொருளாதார நுணுக்கங்களையும்... வியாபார உத்திகளைப் புதியதாய்த் தோற்றுவிக்கக் கூடிய புத்தகங்களையும் விரும்பிப் படிப்பதில் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

'லைட் மியூசிக்'கூட மிகவும் பிடிக்கும். காரில் செல்லும் போதினில்கூட இசை என்னோடு இணைந்தே வரும்.

டாக்டர் ஜகதீஸ்வரன்

கிண்டி பொறியியற் கல்லூரியின் முதல்வர் திரு. ஜகதீஸ்வரனைச் சந்தித்துக் கேட்டபோது அவர் சிந்தித்துக் கூறியவற்றில் சில...

பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து, கிராமப்புறங்களிலிருந்தும் வெளிமாநிலங்களிலிருந்தும் பற்பல கனவுகளுடன் வரும் மாணவர்களை வரவேற்று அவர்களை மிகச்சிறந்த வல்லுநர்களாக உருவாக்கும் எங்கள் தொழிலே மகிழ்ச்சி தருவது



தானே! பல பிரச்னைகள் அவ்வப்போது முளைக்கும். புரட்சிகரமாக அதை முடித்து நிலைமையைச் சீராக்குவதில் கிடைக்கும் மகிழ்ச்சியே அலாதிதான்.

சில நேரங்களில் உளைச்சல்கள் ஏற்படும்போது வீட்டில் இருந்தால் உலாவிக்கொண்டே இன்முகம் காட்டும் மனைவியுடன் பேசித் தீர்ப்பதில் பிரச்னையின் கனம் எளிதாகிறது. வீட்டில் மகளுக்குச் சங்கீதம் என்றால் உயிர். ஆகையால் ஏதோ ஓர் இசை காதில் ஒலித்துக் கொண்டே இருக்கும். அந்த இசை நிச்சயம் மகிழ்ச்சியையே அளிக்கிறது.


ரொம்பவும் பெரிய பிரச்னையாக இருந்து மனம் அல்லலுற்றால் திருவான்மியூரில் பாம்பன் சுவாமிகளின் சந்நிதிக்குப் போய் விடுவேன். தினமும் சண்முக கவசம் 6 முறை படிப்பதால் ஏற்படும் நிறைவு அம்மண்ணில் கால் வைத்ததும் எனக்குக் கிடைக்கிறது.

பாலகுமாரன்

பிரபல எழுத்தாளர் திரு பாலகுமாரன் அவர்களிடம் தொலை பேசியில் கேட்டோம். தொலைபேசியிலேயே அவர் கூறினார்:

களைப்புற்ற வேளையிலே... மன உளைச்சல்கள் ஏற்படும் நேரத்திலே... என்ற கேள்வியே இல்லை. நான் செய்யும் தொழிலான எழுதுவது... சினிமாவிற்கான கதை விவாதிப்பது... லொகேஷன் பற்றி முடிவெடுப்பது போன்றவற்றைப் பெருவிருப்புடனும் முழு ஈடுபாட்டுடனும் செய்யும்போது களைப்பு எங்கிருந்து வரும்? செய்யும் தொழிலைத் தெய்வமாய் நினைத்துச் செயல்படும்போது மனம் எப்போதும் புத்துணர்ச்சியுடனேயே உள்ளது. மேலும் எனக்கு நண்பர்கள் எனது மனைவியரும் எனது மழலைகளுமே. நேரம் கிடைக்கும் போதெல்லாம் இவர்களுடன் கழிப்பதையே அவர்களும் நானும் விரும்புகிறோம். என் வீட்டில் அனைவருக்குமே தியானம் செய்யும் பழக்கம் இருப்பதால் வீட்டில் ஒரு நிம்மதி நிலவுவதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. மேலும் மனம் இவ்வாறு ஒருமுகப்படுத்தப் படுவதனால் சிந்தனைத் தெளிவு ஏற்படுகிறது.

பிடித்த வேலையைச் செய்வதில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஒரு நாளைக்கு 60 முதல் 70 பக்கம் எழுதுவது எனது வேலையாகவும்



பொழுதுபோக்காகவும் ஆகி விடுகிறபடியால் மகிழ்ச்சி குறைவதேயில்லை.

இராமசந்திர ஆதித்தன்

மாலை முரசு பத்திரிகையின் நிர்வாக ஆசிரியரான திரு. இராமசந்திர ஆதித்தனை சந்தித்தபோது அமுதசுரபிக்கென்று நேரத்தை பிரத்யேகமாக ஒதுக்கி மகிழ்வுடன் பதிலளித்தார்.



நான் எனக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய 'டென்னிஸ்' விளையாட்டுடன் நாளை ஆரம்பிக்கின்றேன். உள்ளத்துடன் உடலும் புத்துணர்வுடன் இருப்பதால் எவ்வித உளைச்சலுக்கும் இடம் ஏற்பட விடுவதில்லை.

சாஸ்திரிய சங்கீதம் பற்றி முழுமையாக அறியாவிட்டாலும் இனிமையையும், அமைதியையும் தருகின்ற இசை எனக்கு மகிழ்வு தரும். குறிப்பாய் எம்.எஸ்., கே.பி.எஸ்., சீர்காழி போன்றோரின் பக்தி இசை என்னைப் பரவசத்தில் ஆழ்த்தும். வியாபார விஷயமாய்ப் போக நேருகின்ற போதிலும், விடுமுறை நாள்களிலும் கண்ணைக் கவரும் பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பதும் எனக்கு இன்பம் தரக்கூடியவை.

இலக்கியத்திலும் பெரிதும் ஈடுபாடுடைய எனக்கு, மகிழ்ச்சி தரும் மற்றொரு விஷயம் புத்தகங்கள் படிப்பது.

ஸ்ரீபால்

கடமை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஆரவாரமின்றிச் செயல்படும் காவல் துறையின் தலைவர் திரு ஸ்ரீபால். இரத்தினச் சுருக்கமாக, தனக்கு மகிழ்வைத் தருவது புத்தகம்



படிப்பதுதான் என்றார். எவ்வகையான புத்தகங்கள் என்று மேலும் வினவியபோது அவர் கூறியது:

"நான் விரும்பிப் படிப்பது இலக்கியப் புத்தகங்கள்... காப்பியங்களான சிலப்பதிகாரம்... பெருங்கதை ஆகியவை... காரணம் இவற்றில் உள்ள பாத்திரப் படைப்புகள், அக் கதாபாத்திரங்களுக்கே உரிய பண்புகள் நெஞ்சை விட்டகலாத் தன்மை உடையவை. திருக்குறளை விரும்பிப் படிப்பதன் காரணம் வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு நடந்து வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்பதை விளக்குகிறது. 'விகார் ஆஃப் வேக்ஃபீல்டு', 'டேல்ஸ் ஃப்ரம் ஷேக்ஸ்பியர்' ஆகிய ஆங்கிலக் கதைகளை அன்றாடம் அசைபோடுவது அவற்றின் நடைக்கும் வளமான மொழியின் இனிமைக்காகவும்தான்."

திருமதி வாணி ஜெயராம்

பல்வேறு மொழிகளிலும் அக்ஷர சுத்தமாய் இசைபாடிவரும் திருமதி வாணி ஜெயராம் அவர்களைச் சந்தித்து நீங்கள் மகிழ்ச்சி அடைவது எதிலே எனக் கேட்ட போது, 'ஒன்றா... இரண்டா எடுத்துச் சொல்ல,' என்று வினவியவர் அருகிலிருந்து காகிதம் ஒன்றினை உருவி கவிதையாக கணநேரத்தில் வடித்துத் தந்தார். அவருக்கு ஆனந்தம் தருபவை, இதோ... இதோ...!

இசை பாடித் திரியும் இவளிடம் உன் உளம்தனைத் தொட்டவற்றை

அசைபோட்டுச் சொல் என்று நீ பணித்தாய்!

வசைபேசி அறியாத நான் கூறுகிறேன் கேள் தோழி!

கள்ளமில்லா உள்ளம் கொண்ட மழலையின் சிரிப்பு!

பள்ளம் மேடு காணாத பசும்புல் சமவெளி!

வெள்ளமென ஓடாமல் உள்ளம் குளிரக் கொட்டும் மழை!

வள்ளென்று விழாமல் இன் முகம் காட்டும் மாந்தர்!

எள்ளிநகையாடாமல் எண்ணத்தைப் பகிர்ந்து கொள்ளும் சான்றோர்!

கிள்ளிவிடாதே என இறைஞ்சிக் கொண்டே இன்முகம் காட்டும் மலர்கள்!



பள்ளியைப் பார்க்காமலேயே வானுயர வளர்ந்த மேதைகள்!

மலரில் இன்னும் பல மணக்கக் காத்திருப்பதால்

இத்துடன் இதை முடித்து மீண்டும் சந்திப்பேன்!

லெஃப்டினன்ட் கர்னல் டி. சுப்பையா

தன்னுயிரையும் துச்சமென மதித்து நாட்டின் பாதுகாப்பு ஒன்றையே கருதி பணிபுரியும் இராணுவ வீரர் திரு. சுப்பையாவை சந்தித்து, உங்களை மகிழ்ச்சிப்படுத்துவது எது? எனக் கேட்டபோது இருக்கும் நமது ஒருமைப்பாட்டு உணர்வு கிளர்ந்தெழும் வகையில் பதில் கூறினார்:

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று நடத்தி நம் தலைவர்கள் நமக்கு வாங்கித் தந்த சுதந்திரத்தைக் கத்தி கொண்டு குருதி சிந்தி இழந்து விடுவோம் என்ற நிலையில் நாம் இருக்கின்றோம்.



இந் நிலை மாறி இந்திய ஒருமைப்பாடு என்பது நிலைத்து நிற்க வேண்டுமானால் மக்களிடையே தேசபக்தி, தேச சேவை வளர வேண்டும். நான், என் குடும்பம், என் இனம் பின் இறுதியாக என், நாடு என்று சிந்தித்து செயல்படும் நிலை மாறி முதலில் "நான் ஓர் இந்தியன்" என்று நம் நாட்டை முன்னிருத்தி தன்னைப் பின்னுக்குத் தள்ளும் பக்குவம் மக்களிடையே வளரச் செய்ய வேண்டும். இத் தேசிய உணர்வை மக்களிடையே ஊட்டுவதுதான் பல ஆண்டுகளாக ராணுவத்தில் பணிபுரியும் எனக்கு மிக்க மகிழ்ச்சி தருவது ஆகும்.

தொகுப்பு: லீலா பத்மநாபன்

கமலா சாம்பசிவன்

(ஸ்டேட் பாங்க் கோட்ட மேலாளர்)


எனக்கு நாளின் பெரும் பகுதி அலுவலக வேலைகளுக்காகவே செலவாகிறது. நாள்தோறும் இரவு ஏழு மணிக்கு மேல்தான் வீடு திரும்ப முடிகிறது. காலையிலிருந்து என்னை அலுவலகத் தொலைபேசியில் பிடிக்க முயன்று இயலாமற் போகிற மேலாளர்கள் 'சாரி' என்ற பீடிகையோடு அலுவலகம் தொடர்பாக நான் வீட்டிற்கு வந்த பிறகும் தொலைபேசியில் பேசுவார்கள். இது அலுவலகத் தொடர்பானதால் நான் சிரமமாகக் கருதுவதில்லை.



மேலும் நான் அலுவலகம் செல்கிற பெண்மணியாதலால் பகலில் என்னைப் பார்க்க இயலாத உறவினர்களை மாலையிலோ இரவிலோ தான் வீட்டில் சந்திக்க முடிகிறது. இதனால் எனக்கு

எந்தச் சிரமமும் தொல்லையும் இருப்பதாக நான் கருதாவிட்டாலும் களைப்பு ஏற்படுவது தவிர்க்க இயலாதது. தொடர்ந்து அரை மணி நேரம் இறைவழிபாடு. பிறகு இரவு உணவை நானே தயாரிப்பேன். தினமும் நிதி தொடர்பான செய்திகளைத் தவறாமல் படிக்கிறேன். தொலைக்காட்சியில் தினமும் ஆங்கிலச் செய்தி, வெள்ளிக்கிழமைகளில் உலகச் செய்தி இவற்றைத் தவறவிட மாட்டேன். என்னுடைய கணவர் திரு சாம்பசிவம் ஆரணியில் லக்ஷ்மி சரஸ்வதி ஆலையின் ஜெனரல் மேனேஜர். தினமும் இரவில் தொலைபேசியில் பேசுவார். இரவில் 11 மணிக்குப் படுக்கச் சென்றால் காலை 6 மணிக்கெல்லாம் எழுந்து விடுகிறேன். மீண்டும் புத்துணர்ச்சியோடு அலுவலக வாழ்க்கை தொடர்ந்துவிடும்.

கவிஞர். சீனி. வீரப்பன்
(நிர்வாகி, சதர்ன் ஸ்கூட்டர்ஸ், ஆழ்வார்பேட்டை)



காலையில் அலுவலகத்திற்குச் சென்று இரவு வீடு திரும்பும்போது அசதி மட்டுமல்ல, அலுவலக நினைவுகளும் என்னை ஆக்கிரமித்துக் கொள்ளும். எதையாவது படிப்பது. ஏதாவது எழுதுவது. இறைவழிபாடு செய்வது இவைதான் எனக்குப் புத்துணர்ச்சியையும் பொழுது போக்கையும் அளிப்பதாக உணர்கிறேன். வீட்டிலேயே சிறு உடற்பயிற்சி செய்வது என் பொழுது போக்குகளில் ஒன்று. கவிதைகள் எழுதுவேன். குறிப்பாக இறைவழிபாட்டுப் பாடல்கள் கேட்பதென்றால் அலாதி இன்பம். இவைதான் என் பொழுதுபோக்கு.

தி. இராதாகிருஷ்ணன் ஐ.பி.எஸ்.,
(செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டக் காவல் துறைத் தலைவர், (கிழக்கு)

பொழுது புலருகிற நேரந் தொட்டு இரவு வரை எத்தனையோ விதமான பிரச்னைகள், அலுவல்கள். எல்லாரையும் போல இல்லாமல் காவல்துறை அதிகாரிகளுக்கு இவை இன்னும் அதிகமாக இருக்கும்போது பொழுது




போக்க நேரம் கிடைப்பது அரிதென்றாலும் அதிக நேரம் தூங்குவது, விருந்துகள், கேளிக்கைகள் என்றெல்லாம் செல்வது இவற்றைத் தவிர்த்தாலேயே மனதுக்கு இதமான, பயன்படத்தக்க பொழுது போக்குகளுக்கு நேரம் கிடைத்துவிடும். ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற எனக்குக் கல்லூரி நாள்களிலிருந்தே நிறையப் படிக்கிற பழக்கம் நிறைவைத் தந்து கொண்டிருக்கிறது. தமிழ் ஆங்கில இலக்கியங்களைப் படிப்பதைவிட வேறென்ன சுகம் இருக்கிறது? தமிழில் பாரதி, பாவேந்தர், ஆங்கிலத்தில் ஹாப்கின்ஸ், டபிள்யூ.பி. ஏட்ஸ் போன்ற அறிஞர்களின் படைப்புகளைத் திரும்பத் திரும்பப் படித்து மகிழ்வதே என் பிரதான பொழுது போக்கு. இரவு 12 மணிக்குப் படுக்கப் போகிற நான் காலை 5 மணிக்கே எழுந்து விடுகிறேன்.

கடவுளைத் தொழுவது விடிகிற நாளுக்கு வேண்டிய புத்துணர்ச்சியை எனக்குத் தருகிறது. இலக்கியக் கூட்டங்கள், பொது நிகழ்ச்சிகளுக்குச் செல்கிற அளவுக்கு தனியார் விருந்துகளுக்கு அதிகம் செல்வதில்லை. ஏராளமான நூல்கள் வைத்திருக்கிறேன். பட்டதாரியான என் மனைவிக்கும் எனக்கும் படிப்பதுதான் பிரதானமான, பயன் தரும் பொழுது போக்கு.

டாக்டர் மீர் முஸ்தபா உசேன்
(குழந்தை நோய் மருத்துவர், எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனை)

குழந்தைகளின் அழுகைச் சத்தம் தாய்மார்களின் ஓலம் என்று நாள் முழுதும் நோயாளிகளுடன் கழிக்கிற எனக்கு, தொழில், பொழுதுபோக்கு எல்லாமே மருத்துவம்தான். அதிகாலையில் மருத்துவமனைக்குப் போய்விடுகிற எனக்கு உடற்பயிற்சிக்கோ பிரார்த்தனைகளுக்கோ நேரமிருப்பதில்லை. இரவு 11 மணிக்கு வீடு திரும்பினால் வேளை கெட்ட வேளையில் உணவு. இப்போது நானே நோயாளியாகிக் கொண்டிருக்கிறேன். இதற்கிடையிலும் நேரம் கிடைக்கிறதென்றால் அபூர்வம். இதையும் மருத்துவத்துறையின் மேற்படிப்புக்காகச் செலவிடுகிறேன். பச்சிளங்குழந்தை நோய் (நியுநேட்டாலஜி) துறையில்



பிஎச்.டி. படிக்கிறேன். இடையிடையே கவிதைகள் எழுதுவதோடு பிரபலமான தமிழ்ப் பத்திரிகைகளுக்கு துணுக்குகள் எழுதுகிறேன். மருத்துவமனையில் சற்று ஓய்வு கிடைக்கும்போது சக டாக்டர்களுடன் பேசுவது (அதுவும் அதிகமாக மருத்துவம்தான்) மற்றுமொரு பொழுது போக்கு.

திரு. எச். கிருஷ்ணமூர்த்தி
(சேர்மன் - மெட்ராஸ் ரிஃபைனரீஸ் லிட்

பொதுத்துறை நிறுவனத்தில் பெரும் பொறுப்பு வகிக்கும் திரு

எச். கிருஷ்ணமூர்த்தி தன் அன்றாடக் கடுமையான பணிக்குப் பிறகு வீடு திரும்பியதும், உங்கள் பொழுதுபோக்கு என்ன என்று தொலைபேசியில் கேட்டபோது அவர் கூறினார்.



'அலுவலகப் பணிகளுக்குப் பிறகு மாலைநேரங்களில் கூட்டங்களில் கலந்துகொள்ளாத நாள்களில் வீடு திரும்பியதும் அமைதியாக அமர்ந்து அன்று வந்த பல அறிவியல் இதழ்களையும், நிர்வாக - ஆராய்ச்சி தொடர்பான இதழ்களையும் படிப்பேன். ஸம்ஸ்கிருத ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல்கள் படிப்பதாலும் பொழுது போவதே தெரியாது. புதிய புதிய தமிழ் இலக்கிய நூல்களைப் படிப்பதற்கும் நேரம் ஒதுக்குவேன். கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசைப் பாடல்களைக் கேட்பதில் மிக விருப்பம். நூல்கள், பத்திரிகைகள் படித்துக் கொண்டே அந்த மெல்லிய இசையைக் கேட்பதில் மனம் மிகவும் அமைதி அடையும்.

எம். பாலகிருஷ்ணன்

தாளாளர், ஸ்டேட் பாங்கு
அதிகாரிகள் சங்கப் பள்ளிகள்,
பொதுச் செயலாளர்,
ஸ்டேட் பாங்கு அதிகாரிகள் சங்கம்.



சென்னையில் மிகச்சிறந்த 10 பள்ளிகளில் ஒன்றாக ஸ்டேட் பாங்க் அதிகாரிகள் சங்கப் பள்ளி விளங்குகிறது. இந்தப் பள்ளியின் தாளாளராக இருக்கக்கூடிய தகுதி அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளருக்குத்தான் அளிக்கப் பட்டுள்ளது. பொதுச் செயலாளர் பணியே ஓய்வில்லாத பணி. இதில் 6000 மாணவர்கள் 400 ஆசிரியப் பெருமக்களோடு இயங்கும் ஒரு பெரிய பள்ளிக்கூடத்தின் நிர்வாகமும் சேர்ந்துவிட்டதால் சொந்தக்காரியங்கள், தூக்கம், உடல் நலம், பொழுது போக்கு எல்லாமே மறந்து போய்விட்டது. காலை 5 மணி முதல் இரவு படுக்கப் போகும் வரை நேரிலும், தொலைபேசியிலும், தபாலிலும் மனிதர்கள்! மனிதர்கள்! எல்லாரிடமும் இதமாகப் பழகுவதுதான் என் இனிய பொழுது போக்கு. இடையில் ஓய்வு கிடைக்கையில் தொழிற்சங்க வரலாறு – குறிப்பாக பல்வேறு வங்கி அதிகாரிகள் தொடர்பான வழக்குகளின் விவரம் போன்றவற்றைப் படிப்பேன். தொகுப்பு: ஏர்வாடி ஃ

நீயும் நானும் ஒருவர்!



நீயும் நானும் இணைந்தொன்றாய்
நிலவில் ஏறிச் சென்றிடுவோம்
— நீயும் நானும் ஒருவர்!

புனலில் குதித்து நீந்திடுவோம்
பூவின் தேனை மாந்திடுவோம்
கனவில் உலவித் திரிந்திடுவோம்
காதல் வெளியில் சுற்றிடுவோம்
— நீயம் நானும் ஒருவர்!

வானின் மீது பாய்ந்தேகி
வண்ண முகிலின் பரிஏறிக்
கானும் மலையும் கடந்திடுவோம்
கடல்கள் ஏழும் தாண்டிடுவோம்
— நீயும் நானும் ஒருவர்!

மதுவை உண்ண வேண்டாம்நாம்
மதியை இழக்க வேண்டாம்நாம்
இதயக் குவளையில் இனிதேந்தி
இன்பச் சாறு பருகிடுவோம்
— நீயும் நானும் ஒருவர்!

காதல் பயிலாப் பேதையரின்
கஞ்சா எதற்கோ அபினெதற்கோ
வீதல் இலாத போதைதரும்
விந்தை முயக்கில் நிலைபெறுவோம்
— நீயும் நானும் ஒருவர்!

ஊற்றில் சுரவாப் பூம்புனலாம்
உவகைப் புனலில் நீராடி
வேற்று நினைவுகள் எவையுமின்றி
வேட்கைக் கனவில் வெந்திடுவோம்!
— நீயும் நானும் ஒருவர்!

இதயம் என்னும் உள்அறையில்
இன்பம் என்னும் பேரொளியில்
உதயம் இரவு தெரியாத
உறக்கம் உவந்து துயின்றிடுவோம்!
— நீயும் நானும் ஒருவர்!

மீ.ப.சோமு

பெண்ணே மோகப் பெருவாழ்வே
பெரிய சுகத்தின் பேடகமே
கண்ணே மன்மதக் களிமயக்கே
கானில் மலரா ஊன்மலரே!
— நீயும் நானும் ஒருவர்!

வனப்புக் கடலில் வந்த முத்தே
வானில் வளர்ந்த கற்பகமே
உனக்கும் எனக்கும் உள்ளத்தே
ஒன்றிய உறவை இறைமையென்பேன்
— நீயும் நானும் ஒருவர்!

மொழிகள் என்பன நமக்கில்லை
மோனம் என்பதே நமது மொழி
விழிகள் பேசும் மொழிகளுக்கு
வேறு மொழிகள் நிகரில்லை
— நீயும் நானும் ஒருவர்!

மூடும் இமையே நம்பார்வை
முறுவல் தானே நம்பேச்சு
வீடும் வெளியும் விண்ணுலகம்
வேட்கை இதுவே பேரின்பம்!
— நீயும் நானும் ஒருவர்!





கண்ணீர் மல்கும் கருவிழியே
காதல் மலரும் கவிதையடி
நண்ணும் இந்த நாட்டத்தில்
நாத கீதம் கேட்குதடி!
— நீயும் நானும் ஒருவர்!

மண்ணின் மீதுநாம் மிதிப்பதில்லை
மதியின் மீதே இவர்கின்றோம்
விண்ணின் கீதம் பாடுகின்றோம்
வேந்த நினைவில் கூடுகின்றோம்
— நீயும் நானும் ஒருவர்!

உள்ளம் என்னும் வானவில்லில்
ஒளிரும் வண்ணம் பற்பலவாம்
கள்ளம் இலாத காதலிலே
கடவுளர் கோயில் கொண்டருள்வர்
— நீயும் நானும் ஒருவர்!

இல்லறம் என்பதோர் வழிபாடே
இல்லம் என்பதோர் ஆலயமே
வல்லவர் வகுத்த நெறிவாழ்ந்தால்
வாழ்க்கை என்பதே தவமாகும்!
— நீயும் நானும் ஒருவர்!





அமுதமும் அமுதசுரபியும்

தேவர்களும் அசுரர்களும் அமிருதம் கிடைப்பதற்காக ஸமுத்ரத்தைக் கடைந்தார்கள். அதிலிருந்து பலவிதப் பொருள்கள் கிடைத்தன. கடைசியாக அமிருதமும் கிடைத்தது. அந்த அமிருதத்தைத் தேவர்கள் அனைவரும் உட்கொண்டு தாங்கள் முதுமை நிலையை அடையாத நிலைமையை அடைந்து எப்பொழுதும் இளமைப்பருவத்துடன் இருந்துகொண்டு இன்பங்களையும் அனுபவித்துக் கொண்டு இருந்து வருவதாக புராண வரலாறு கூறுகிறது.


பல பத்திரிகைகள் இடையே போட்டிகள் இருந்தாலும் இங்கே 'அமுதசுரபி' என்ற பெயருடன் கூடின பத்திரிகை பல ஆண்டு காலமாக, அமுதசுரபி தொடங்கிய காலம் முதல் தனக்கென தனிப்பாணியை வகுத்துக்கொண்டு, என்றுமே எல்லாருக்கும் ஒரே நிலையான கருத்துகளை அளித்துக் கொண்டு அமுதத்தை, ஆனந்தத்தை அளித்து வருகிறது.

ஆண்டு தோறும் தீபாவளி வந்தாலும் தீபாவளி மலர் ஒவ்வோர் ஆண்டும் புதிய தீபாவளி மலர் போல் பலவிதமான நல்ல விஷயங்களை, அரிய பெரிய விஷயங்களை அளித்து வருகிறது. 'அமுதசுரபி' பத்திரிகை தீபாவளித் திருநாளில் தனக்கே உரித்தான தனிப்பாணியுடன் தன் நிகரற்று மேன்மேலும் விளங்க ஆசீர்வதிக்கிறோம்.

— நாராயண ஸ்மிருதி

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்





தாளவேந்தர்

ஞானசம்பந்தர்

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

மூன்று வயதுக் குழந்தையொன்று சீகாழிக் கோயில் குளக்கரையில் நின்று கொண்டு இருந்தது.

அதன் வாயில் பால் வழிந்து கொண்டு இருந்தது.

அந்தக் குழந்தையின் அருகில் கையில் ஒரு குச்சியுடன் அதன் தந்தை நின்று கொண்டிருந்தார். அந்தக் குழந்தை கோயில் சிகரத்தை ஒரு கையால் சுட்டிக்காட்டியது.

அப்போது 'தோடுடைய' – என்று தொடங்கும் ஒரு பாடலையும் பாடியது. எதிரே நின்று கொண்டிருந்த அந்தக் குழந்தையின் தந்தை வியப்பு, அச்சம், பெருமிதம், பக்தி கலந்த ஆனந்தப் பரவசத்தோடு உடல் புளகம்பூப்ப நின்று கொண்டிருந்தார். கை கூப்பிக் கொண்டிருந்தார். அவர் கண்களில் நெடு நாள் தவம் ஒன்று நிறைவேறிவிட்ட உணர்ச்சி கண்ணீராகத் ததும்பி வழிந்து கொண்டிருந்தது.

தந்தை பிராமணர். பெயர் சிவபாத இருதயர். குழந்தை பெயர் அன்றிலிருந்து திருஞானசம்பந்தர்.

நெடுநாள் தந்தை தவம் செய்துகொண்டிருந்தார். அவருக்குத் திருமணமாகிப் பல ஆண்டுகள் கடந்து விட்டிருந்தன. குழந்தை பிறக்கவில்லை.

அவர் குழந்தை ஒன்று தமக்குப் பிறக்க வேண்டும் என்று தவம் கிடந்தார். சொத்துக்கு வாரிசாகவோ, தமக்குக் கொள்ளி வைத்துக் காரியம் செய்ய வேண்டும் என்பதற்காகவோ அல்ல.

அந்தப் பிராமணருக்கு நாட்டைப் பற்றிய கவலை யிருந்தது. மொழியைப் பற்றிய கவலை இருந்தது. சமுதாயத்தைப் பற்றிய கவலை இருந்தது.

நாட்டில் அப்பொழுது என்னதான் நடந்து கொண்டிருந்தது?

ஒரு பெரும்பான்மையைச் சிறுபான்மை ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது. சமண சமயம், சைவ வைணவங்களாகிய வைதிக சமயங்களை அடக்கி ஆண்டுகொண்டிருந்தது.

சமண சமயம் அஹிம்ஸா தர்மத்தைப் போதித்தது தானே! கொல்லாமை, புலால் மறுத்தல், ஜீவ காருண்யம் ஆகியவற்றை உயிராகக் கொண்டிருந்த மதம்தானே! இந்த நாட்டில் மிகப் பெரும் சிந்தனை யாளர் ஒருவர் உருவாக்கியதுதானே என்று சிலர் கேட்கலாம்.

சமண சமயம் மக்கள் சமயமாக இல்லாமல் மடாலயச் சமயமாக இருந்தது. துறவிகள் மடங்களை அமைத்துக்கொண்டு மதமாற்றத்தில் ஈடுபட்டு வந்தார்கள். அரசாங்கத்தைத் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டு விட்டார்கள். எதிர்த்தவர்களை 'இல்லை' என்று ஆக்கிவிட்டார்கள். அரசர்கள், மந்திரிகளை ஆலோசனைக்கு அழைக்காமல் மடத் தலைவர்களை அழைத்தார்கள்.

"நமது சமயத்திலிருந்து தருமசேனர் ஓடிப் போய்விட்டார். நமது மானம் மரியாதை போய்விட்டது. மற்றவர்களுக்கு ஆபத்து வந்துவிடும்" இது மடத் தலைவர்களின் புலம்பல்.

"என்ன செய்யலாம்?" இது அரசனின் கேள்வி.

"அவனை சுண்ணாம்புக் காளவாயில் இட வேண்டும்" இது சமணத் துறவிகளின் யோசனை.

"அப்படியே செய்வோம்" இது அரசனின் முடிவு.

சமண சமயத்திலிருந்து மனம்மாறி சைவத்துக்குத் திரும்பிய அப்பர் வரலாற்றிலிருந்து நாம் அறிந்து கொள்வது இது.

சுண்ணாம்புக்காளவாயில் இடுவதென்ற யோசனை பலிக்கவில்லையானால் இருக்கவே இருக்கிறது யானைக் காலிலிட்டு இடறச் செய்தல், விஷம் கொடுத்தல், அல்லது கல்லோடு கட்டிக் கடலில் மூழ்கடித்தல்.

பெரும்பான்மைச் சமுதாயத்தைச் சிறுபான்மை நோக்கின கோணத்தில் இன்னொரு காட்சி.

பாண்டிய நாடு. அரசமாதேவி கேட்கிறாள்; "அரசே ஏன் முகவாட்டமாக இருக்கிறீர்கள்?"

அரசன் சொல்கிறான் : அரசி! நம்முடைய அடிகள்மார் திருஞானசம்பந்தர் என்று சொல்லப் படுகிற சைவர் ஒருவரின் பரிவாரத்தைப் பார்த்து விட்டார்களாம்". அவர்களெல்லாரும் மாற்றுச் சமயத் தவர் பெருமையைப் பார்த்துவிட்டால் தரையிலோ, சுவரிலோ முட்டிக் கொள்வார்கள். இதற்கு கண்டு முட்டு என்று பெயர்.

"அவர்கள் சொல்வதை நான் கேட்டுவிட்டதால் நான் கேட்டுமுட்டுகளை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது". அதாவது சைவ வைஷ்ணவர்களைப் பார்த்தாலும் அவர்களைப் பற்றிக்கேட்டாலும் சமணன் அரசனாக இருந்தாலும் முட்டிக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட தவறான புதுக் கொள்கையைப் பரப்பி நாட்டைக் கலங்கச் செய்து கொண்டிருந்தார்கள்; பண்பாடு சீரழிந்தது; மொழியும் ஆற்றல் அற்று வீழ்ந்து வந்தது.

இது எவ்வளவு பெரிய கொடுமை!

இந்தக் கொடுமையை ஒழிக்கத்தான் தன் குடும்பத்தில் ஒரு மகன் தோன்ற வேண்டும் என்று தவம் கிடந்தார் சிவபாத இருதயர்.

அவர் தவம் பலித்தது. ஞானசம்பந்தர் அவர் குடும்பத்தில் தோன்றினார்.

சமயம் என்பது வழிபாட்டு முறை. மதம் என்பது வழிபாட்டு முறைக்கு உரிய கொள்கை. எனவே வழிபாடு இல்லாமலோ, ஒரு குறிக்கோள் இல்லாமலோ மக்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாது.

அருள்செல்வர் நா. மகாலிங்கம்

ஆகவே சமயமோ, மதமோ மக்களின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கமுடியாது.

மதத் தலைவர்கள் செய்யும் தவறுகள்தாம் மக்கள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கின்றன. மதமோ சமயமோ மக்கள் முன்னேற்றத்துக்கு உதவி செய்பவை.

மதக் கொள்கைகளுக்குச் செயற்பாட்டு உருவம் கொடுக்கிறவர்கள் மதத்தலைவர்கள். அவர்களுடைய குற்றங்களே மதத்தின் குற்றங்களாக உருவெடுக்கின்றன.

சமண மதம் நாத்திக மதம். உலகைப் படைப்பதற்கு ஒரு முதல்வன் - கர்த்தா - தேவையில்லை என்கிறது சமண மதம். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு மாற்றாக ஊழ்வினைக் கொள்கையை மிக அதிகமாக வற்புறுத்துகிறது சமண மதம்.

தமிழ்நாட்டுக்குப் புதுமையாக ஒரு வழக்கம் சமணர்களாலும் பௌத்தர்களாலும் உருவாக்கப் பட்டது. அதுதான் மடம் சார்ந்த துறவு. தனியாகச் சந்நியாசிகள் அதற்கு முன் உலகம் முழுவதும் இருந்தார்கள்.

மடாதிபதிகள், அவருடைய சீடர்கள் என்று இப்படி ஒரு துறவிப் பட்டாளங்கள் இருந்ததில்லை. சமணர்களையும், பௌத்தர்களையும் பார்த்துத்தான் சைவ வைஷ்ணவ சந்நியாசிகள் மடம் சார்ந்த துறவு வழக்கத்தைக் கைக்கொண்டார்கள்.

இந்தச் சமண பௌத்த சந்நியாசிகளின் ஆதிக்கத்தினால் இல்லறத்தின் பெருமையே சீர்குலைந்து விட்டது. துறவிகளைத்தான் மேன்மையாகக் கொண்டாடினார்கள்.

போதாக் குறைக்குப் பெண்களால் மோட்சம் அடைய முடியாது என்று பேசினார்கள் சமணர்களும், பௌத்தர்களும். ஆண் பிறப்பு எடுத்துத்தான் மோட்சத்துக்குப் போக முடியும் என்றார்கள்.

மைத்ரேயி, லோபாமுத்திரை முதலிய வேத காலத்து மகளிர் ஆன்மிக விளக்கை ஏந்தி அஞ்ஞான இருளைப் போக்கினார்கள்.

காரைக்காலம்மையார் தமிழக மகளிரின் பக்தி இயக்கத்திற்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார்.

சைவ உலகம் அறுபத்து மூன்று நாயன்மாரில் இவர் ஒருவரை மட்டும் அமர்ந்த நிலையில் வைத்து வழிபாடு செய்கிறது. மற்றைய நாயன்மார்கள் நின்ற நிலையில் இருக்கிறார்கள். இத்தகைய பெருமைக்குரிய காரைக்காலம்மையாரை வழிகாட்டியாகக் கொள்ளும் தமிழகத்தில் பெண்களுக்கு மோட்சமில்லை என்றால் எப்படிப் பொருந்தும்?

அர்த்த நாரீசுவரக் கோலத்தில் ஆண்டவனை வழிபடும் மக்கள் பெண்பிறப்பு இழிபிறப்பு என்றால் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? இறைவனின் ஒரு பாகத்தை எப்படி இழப்பார்கள்?

தமிழகத்தில் அந்தக்காலத் துறவியர் காவி உடை உடுத்த வேண்டிய அவசியமில்லை. அவர்கள் மெய்ஞ்ஞானத்தால் துறவு பூண்டு இல்லறத்திலேயே இருந்து ஆன்மிகப் பணி ஆற்றி வந்தார்கள்.

சமண, பௌத்த காலத்தில் விரக்தி ஏற்பட்டவர்களுக்கெல்லாம் அந்த மடங்கள் இடங்கொடுத்தன. இதனால் போலித்துறவே மிஞ்சி நின்றது.

அவர்கள் துறவு கள்ளத்துறவு ஆயிற்று. கொலை செய்வதையே கொள்கையாகக் கொண்ட துறவறமும் தோன்றியது. இப்படிப்பட்ட துறவிகளை கபாலிகர் என்று வழங்கினார்கள்.

இந்த நிலைமை மாற வேண்டும் என்று சீகாழிச் சிவபாத இருதயர் தவம் கிடந்தார். "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில், போஒய்ப் பெறுவது எவன்? என்ற திருக்குறளுக்கும் -

பெண்ணின் பெருந்தக்க யாவுள? என்ற திருக்குறளுக்கும் - மீண்டும் உயிர் கொடுக்க வேண்டுமானால்-

சமண ஆதிக்கம் அகல வேண்டும். வயதில் முதிர்ந்துவிட்ட என்னால் இதைச் செய்ய முடியாது. எனக்கு ஒரு மகன்பிறந்து அவனால் இந்தச் சீர்திருத்தம் நிகழ வேண்டும்" என்று சிவபாத இருதயர் வேண்டினார்.

சமணர்கள் பிராகிருத மொழியைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் சமய மொழியும் அதுதான். பௌத்தர்கள் பாலி மொழியைப் பயன்படுத்தினார்கள். தங்கள் தங்கள் ஆகமங்களைப் பிராகிருத மொழியிலும் பாலி மொழியிலும் எழுதி வைத்துக் கொண்டார்கள்.

தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழியை மறந்தார்கள். தொடர்பு மொழியாக விளங்கிய சமஸ்கிருதத்தையும் மறந்தார்கள். எங்கும் பிராகிருத மொழி ஒலியே கேட்டுக்கொண்டிருந்தது.

தமிழகத்தில் தமிழ் மடிந்து போவதை எந்தத் தமிழனால் பொறுத்துக் கொண்டு இருக்க முடியும்? இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு காணவே சிவபாத இருதயர் இறைவனை வேண்டித் தவங்கிடந்தார்.

எந்தத் தமிழகத்தில் இசையும், கூத்தும் நமது பண்பாட்டின், நாகரிகத்தின் உயிர் நாடியாக விளங்கினவோ அவற்றைச் சமணர்கள் போகத்தின் படைக்கலங்கள் என்று புறக்கணித்தார்கள். சமணர்களின் "யசோதர காவியம்" என்ற நூல், ஓர் அரசி கற்புநிலை கெடுவதற்கு இசை காரணமாக இருந்தது என்று கூறுகிறது. இசையும், நாடகமும் போகத்தை விளைப்பவை என்று உரையாசிரியர் பலர் எழுதுகிறார்கள்.


சிந்தாமணி, பெருங்கதை முதலிய சமண காவியங்களிலும் இசையைப் பற்றிக் கூறப்பட்டிருந்தாலும் காதலைத் தூண்டும் கருவியாகவே அது சித்தரிக்கப் பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

இது நமது பண்பாட்டுக்கு ஒவ்வாதது. கடவுள் இசை விரும்பும் கூத்தனாராகத் திகழ்கிறார். நமது கடவுளர்கள் பாடுவார்கள். ஆடுவார்கள்.


கடவுள் பற்றிய பேச்சில்லாத சமயங்களில் பக்தி மார்க்கத்துக்கு வேலையில்லை. ஆனால் இசையை, நாடகத்தைக் கடவுட்கலையாக மடைமாற்றம் செய்வதற்கு நம்மால் முடியும்.

தொன்று தொட்டுக் கடவுள் வழிபாட்டில் இசை முதல் இடம் பெற்று இருந்தது. இழந்த முதலிடத்தை இக்கலை திரும்பப்பெற வேண்டும். இது சிவபாத இருதயரின் கனவு.

சிவபாத இருதயரின் தவத்துக்கு இறைவன் இரங்கினான். பகவதியார் மணிவயிற்றில் சிவஞானக் கன்று உதித்தது. ஆளுடைய பிள்ளையார் அவதாரம் செய்தார்.



உமாபதி.
அமுதசுரபி தீபாவளி மலர் '91



மூன்றாண்டு நிறைவடையவில்லை. தந்தை குளக்கரைக்குச் சென்றார். குழந்தையைக் கரையில் அமர்த்தி வைத்துவிட்டு நீராடினார். தலைமுழுகி மந்திரம் ஜெபித்தார். தந்தையைக் காணாமல் குழந்தை அழுதது.

"அம்மா! அப்பா!" என்று அழைத்து அழுதது. உலகத்துக்கு அம்மையும் அப்பனும் ஆகிய இறைவன், குழந்தை அழுவதைக் கண்டு பொறுக்காமல் ஓடி வந்தான். அம்மையும், அப்பனுமாக வந்தான்.

இறைவன்ஆணைப்படி அம்மை தனது திருமுலைப் பாலைப் பொற்கிண்ணத்தில் நிரப்பி அந்தக் குழந்தைக்கு ஊட்டினாள். குழந்தை பாலை மட்டுமா குடித்தது?

அதில் குழைக்கப்பட்டிருந்த சிவஞானத்தையும் சேர்த்து அருந்திற்று.

வந்த தெய்வத் தம்பதி மறைந்தார்கள். குழந்தை அப்போது இதழோரம் பால் வழியச் சிரித்தது.

தந்தை கரையேறினார். 'இக்கரை கடந்த அக்கரையில்' தன் குழந்தை இருப்பதை அவர் புரிந்து கொள்ளாமல் யார் கொடுத்த எச்சில் பாலையோ குடித்துவிட்டு இருக்கிறான் என்று நினைத்தார்.

கோல் ஒன்று அருகே கிடந்தது. அதனை எடுத்து ஓங்கினார். குழந்தை சிரித்துக்கொண்டு கோயில் சிகரத்தை ஒரு கையால் சுட்டிக் காட்டியது.

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசிஎன் உள்ளம்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாள் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவன்அன்றே!

தந்தை மட்டுமல்லாமல் அங்கிருந்தவர் எல்லாருமே இந்தப் பாடலைக் கேட்டும் அம்மையப்பன் காட்சியைப் பார்த்தும் வியப்படைந்தனர்.

இந்த நிகழ்ச்சியைத்தான் தொடக்கத்தில் கண்டோம்.

ஓர் அழுகையில் இந்த உலகம் மகிழ்ந்தது. திருஞானசம்பந்தர் இந்த உலகத்தில் தோன்றிய இயல் இசைப்புலவர்களில் மிக இளையவர்.

இறைவன் ஞானசம்பந்தருக்குப் பொற்றாளம் கொடுத்தான். தாளத்தை ஏந்திக்கொண்டு ஞான சம்பந்தர் தமிழ்நாட்டையே வலம் வந்தார்.

தன் இருப்பிடத்துக்குக் கடவுளை வரவழைக்கும் ஆற்றல் பெற்ற அவர் ஊரூராக அலைவானேன்?

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கொள்கைப்படி தாம் பெற்ற இன்பத்தை மக்களுக்கும் வழங்கவேண்டும் என்று முடிவு செய்தார். நாட்டைப் பிடித்திருக்கிற கலி மறையத் தொண்டு செய்ய வேண்டும் என்பதற்காக ஞானசம்பந்தர் ஊர் ஊராகச் சென்றார்.

பாண்டிய நாட்டில் சமணமதம் ஆட்சியைப் பிடித்திருந்தது. அரசனைச் சமணனாக மாற்றியிருந்தது.

பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார் நெற்றியில் நீறுபூசினால் கணவன் மனம் நோகுமே என்று திருநீற்றைச் சந்தனத்தில் குழைத்து மார்பில் அணிந்து கொண்டு இருந்தார். அந்த அளவுக்குக் கூடச் சுதந்திரம் இல்லாமல் இருந்தார் அரசியார் என்றால் மக்கள் நிலையை நாமே ஊகித்து அறியலாம்.

மங்கையர்க்கரசியார் மதுரைக்குத் திருஞான சம்பந்தரை அழைத்து வரச் செய்தார். செய்தியறிந்த சமணர்கள் சம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்கே தீ வைத்து விட்டார்கள்.

கடவுள் அருளால் அந்த நெருப்பு சுர நோயாக மாறிப் பாண்டியனையே பற்றியது. சமணர்களால் தீர்த்து வைக்க முடியாதபடி வளர்ந்து கடைசியில் ஞானசம்பந்தப் பெருமானால் தீர்ந்தது.

அரசன் சைவனானான். இசைபாடி அருள் பரப்பிய ஞானசம்பந்தர் செய்த அகிம்சைவழிப் புரட்சியில் தென்னாடு சிவநாடாக மாறியது. சுதந்திரம் பெற்றது. சமணர்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளியேறி விட்டார்கள்.

சம்பந்தர் செய்த அற்புதங்கள் அவருடைய வரலாற்றில் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன.

அவை அற்புதங்கள் மட்டுமல்ல. நமக்கு ஆழ்ந்த படிப்பினைகளும் ஆகும்.

ஒரு பெண்ணின் அழுகுரலைக் கேட்ட சம்பந்தர் வழிபாட்டை நிறுத்தி வைத்துவிட்டு அவள் துன்பம் துடைக்க முற்பட்டார். அவள் வருங்காலக் கணவனைப் பாம்பு தீண்டியிருந்தது. அவன் உயிரை மீட்டுத்தந்து திருமணம் முடித்து வைத்தார்.

கொல்லி மழவனது மகள் நோயைத் தீர்த்து வைத்தார். திருச்செங்குன்றத்தில் மக்கள் மத்தியில் பீதியைப் பரப்பி வந்த குளிர்சுர நோயைப் போக்கி அருளினார்.

திருவீழிமிழலையில் அப்பரடிகளோடு இணைந்து அந்தப் பிரதேசத்தில் நிலவிய பஞ்சத்தால் வருந்திய மக்களுக்குப் பசிப்பிணி தீர்த்து அருளினார்.

தீண்டாத சாதியார் என்று கருதப்பட்ட திருநீலகண்டப் பாணனாரை உடன் வைத்துக்கொண்டு உண வருந்தினார்.

திருநீலநக்க நாயனாரிடத்தில் அவருக்கும் அவர் மனைவியாருக்கும் தங்க இடம் வேண்டினார் சம்பந்தர்.

அவர் ஒருபடி மேலே போய்த் தாம் அக்கினி ஹோத்திரம் செய்யும் புனிதமான இடத்தையே அந்தத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த தம்பதிக்குக் கொடுத்தார். சீடன் குருவை மிஞ்சினால் குருவுக்குத் தானே பெருமை! இந்த அற்புதங்களும் அருட் செயல்களும் நமக்கு மனிதாபிமானத்தையும், ஆன்ம நேயத்தையும் போதிக்கின்றன.

நம்மாலும் இவை போன்ற அரும் செயல்களைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது. ஞானசம்பந்தரைப் பின்பற்றி நாமும் ஜீவகாருண்யப் பணியை, ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைப் பணியைத்தொடர்வோம்.

சம்பந்தர் பற்றி ஆராய்ந்து கிடைத்த சில வரலாற்றுச் செய்திகளை மட்டுமே சேக்கிழார் பெருமான் சொல்லியிருக்கிறார்,

சம்பந்தர் கலையுலகக் காவலர். பழைய தமிழ் இசைக்குப் புத்துயிர் கொடுத்தவர். காரைக்கால்

அம்மையார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் போட்ட இசை இலக்கியப் பாதையைச் செப்பனிட்டுத் தேரோட்டினார் சம்பந்தர்.

பதிகங்கள் உருவாயின. பத்துப்பத்துப் பாடல்கள் கொண்ட பதிகங்கள் பாடினார். அவர் பாடிய பதிகங்கள் எல்லாவற்றையும் முழுமையாக நம்மால் பெற முடியவில்லை. கிடைத்திருப்பவற்றை முதல் மூன்று திருமுறைகளாக வகுத்திருக்கிறார்கள்.

இவ்வளவு பாடல்களை இயற்றியவர்கள் உலகில் வேறெங்கும் காண்பதற்கில்லை.

'சிறையாரும் மடக்கிளியே' என்ற பாட்டை ஓதுவார்கள் திச்ர திருபுடைத் தாளத்தில் கொண்டுகூட்டி அமைத்துப் பாடுகிறார்கள்.

முறையாலே உணத்தருவன்

பால் முறையாலே உணத்தருவன்

தேனொடு பால் முறையாலே உணத்தருவன்

இங்கேவா தேனொடு பால்முறையாலே உணத்தருவன்

மடக்கிளியே இங்கேவா தேனொடு பால் முறையாலே உணத்தருவன்

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடு பால் முறையாலே உணத்தருவன்

- என்று தாளத்தில் கொண்டு கூட்டிச் செய்வது தாளவித்தை மட்டுமல்ல, நாட்டியத்தில் இந்த இடத்தில் எத்தனை 'சஞ்சாரி பாவங்களைக் காட்டிவிடுகிறார்கள்' நம்முடைய புகழ்பெற்ற நடன மணிகள்!

இங்கே கொண்டுகூட்டிச் செய்து பாடும்போது சொற்களின் 'இடம்' அறிந்து சொற்கூட்டுச் செய்ய வேண்டியிருக்கிறது. சம்பந்தர் தாளம் ஏந்திப் பாடியவர். பாடல்கள் பொதுவாக மூன்று, நான்கு, ஐந்து, ஏழு என்ற எழுத்து எண்ணிக்கைகளைக் கொண்டு மிகுதியாக அமைகின்றன.

தகிட

தகதிமி

தகதகிட

தகிடதகதிமி

ஒன்பது எண்ணிக்கையுடைய சங்கீரணம் தகதிமி தக தகிட என்ற பகுப்பை மகேந்திரவர்மன் கொண்டு வந்தார் என்றும் அதன் காரணமாக சங்கீரண ஜாதி என்ற பெயர் அவனுக்கு வந்தது என்றும் கல்வெட்டுகளால் அறியப்படுகிறது.

சம்பந்தர் மகேந்திரனுடைய மகன் நரசிம்மவர்மன் காலத்தில் வாழ்ந்தவர். நரசிம்மவர்மனிடம் பணியாற்றி ஓய்வுபெற்ற சிறுத்தொண்டருடைய இல்லத்துக்கு வந்து விருந்துண்டு அவரை ஒரு பதிகத்தில் குறிப்பிடவும் செய்திருக்கிறார்.

யாழ் முரி என்ற ஒன்றைச் சம்பந்தர் புதிதாகக் கொண்டு வந்தார். யாழ்முரி என்பது பண் அல்ல. அது முரி வகைகளில் ஒன்று.

"எடுத்த இயலும் இசையும் தம்முள்,

முரித்துப் பாடுதல் முரியெனப் படுமே"

என்று முரி என்ற தாள வகைக்கு இலக்கணம் கூறப்படுகிறது.

யாழ்முரி பண் அல்ல என்றால் வேறு என்ன?

இயலை முரித்தால் தாளமும் முரியும். இசையை முரித்தல் என்பது ஒரு ஸ்வரத்தைப் பற்றி நின்று இட வேறுபாடு செய்வதையும் உள்ளடக்கியது. பதினாலு ஸ்வரங்களுக்கு நரம்பு கட்டிய யாழில் வாத்தியத்துக்கு அடங்காத முறையில் ஸ்வர வேறுபாடு செய்வதே சிரமம்.

அதில் பாட்டின் கதியையும், தாள கதியையும் மாற்றிவிட்டால் மிக வல்லவரான எந்த யாழ்ப் பாணராலும் அதை யாழில் இசைக்கமுடியாது. யாழ்ப் பாணர் வேண்டுகோளுக்கு ஏற்பவே ஞானசம்பந்தர் இந்த யாழ்முரி இசை வித்தகத்தைச் செய்தார். ஆனால் யாழ்ப்பாணருக்கு வேறு எண்ணம் தோன்றியது.

இதுவரை சம்பந்தருடைய திருப்பாட்டை வாசித்துப் புண்ணியம் ஏறப்பெற்ற யாழ் இந்த 'மாதர் மடப் பிடியும்' என்ற பாடலை வாசிக்கப் பேறு பெறாததால் அது இருந்து என்ன பயன் என்று அதை உடைக்கப் போனார். சம்பந்தர் தடுத்து இசைக் குறிப்பைக் கொடுத்து வாசிக்கச் சொன்னார்.

இன்னொரு விதமான கருத்தும் கூறப்படுகிறது. பழைய யாழ்களில் நரம்பு ஒவ்வொன்றும் தனித்தனி சுரங்களை உண்டாக்கும். இரண்டு சுரங்களுக்கு இடையில் இணைப்பு இருக்காது.

ஹார்மோனிய வாசிப்புக்கும் இன்றைய வீணை வாசிப்புக்கும் இடையே உள்ள வேற்றுமையை கமகம் என்கிறோம்.

'மாதர் மடப்பிடி'யை இன்றைய கமகம் கொடுத்துப் பாடினார் சம்பந்தர்.

யாழ் கமகத்தை உண்டாக்காது. அதனால் அதனை வாசிக்க முடியாமல் யாழ்ப்பாணர் திணறினார் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இது ஏற்கத்தக்கதுதான்.

இந்தக் கொள்கையால் இன்றைய கமகத்துக்கும் தாளக் கட்டுக்கும் வேந்தராக விளங்கியவர் திருஞான சம்பந்தர் என்று சொல்வது மிகப் பொருத்தமாக இருக்கும்.

'ஏழ் இசையாய் இசைப் பயனாய்' இறைவனை அனுபவித்தவர்கள் : திருஞானசம்பந்தர் முதலிய சான்றோர்கள்.

ஏழு இசைகளில் ஐந்து இசைகளுக்கு மட்டும் இரண்டு இரண்டு இசை வேறுபாடுகள் உண்டு.


திருஞானசம்பந்தர் பதினான்கு இசை வேறுபாடுகளை அமைத்து அவர் காலத்தில் கமகம் எவ்வாறு, விரிந்து விளங்கியதென்பதைப் பாடிக் காட்டினார். தாள கதியிலும் செயல்படுத்திக் காண்பித்தார். அப்படி ஞானசம்பந்தர் செய்த அற்புதத்தை 'பாணியும், சீரும், தூக்கும்' என்று கலித்தொகை விரித்து விளக்கியிருக்கிறது.

ஞானசம்பந்தர், இறை அனுபவம் பெற்றவர் ஆனதால் இறைவனாலேயே பொன்தாளம் வழங்கப் பெற்ற வித்தகரானார்.

தமிழை வளர்த்தவர் ஞானசம்பந்தர்.

தமிழ் இசையை வளர்த்தவர் ஞானசம்பந்தர்.

இசை உலகில் தாள வேந்தராக விளங்கியவர் ஞானசம்பந்தர்.


உமாபதி.

"ப்ரதர் சரிப் பண்ணிய" ப்ரபு ஸத்ய ஸாயி

ரா. கணபதி

1986 தீபாவளித் திருநாளை இருள் நாளாக்கும் செய்தி வந்தது. அன்புச் சகோதரர் மோஹனராமன் பெங்களூர் செல்கையில் ஹோஸூர் அருகே அவருடைய பஸ்ஸின் மேல் லாரி மோதிப் பெருவிபத்து நேரிட்டுவிட்டதாம்; மண்டை பிளந்து மயங்கிக் கிடக்கும் நிலையில் அவர் தர்மபுரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறாராம்.

அன்றெல்லாம் அவர் நலனுக்காக நாதன் ஸாயியை வேண்டியபடி இருந்தேன். ஆயினும் அந்த நாதன் நற்சூசனை ஏதுமே காட்டவில்லை. இது வேதனையை அதிகப்படுத்தியது.

மறுதினம் விடியற்காலை விழித்தவன், அம்மா பாத்ரூமுக்குப் போயிருந்ததால் நாற்காலியில் சிந்தாகுலமாகச் சாய்ந்தமர்ந்திருந்தேன், கண் மூடியபடி.

மூடிய கண்ணின் முன் ஒரு புத்தகப் பக்கம் வந்து நின்றது! ஆரம்ப காலத்தில் சிறிய அளவினதாக வெளிவந்த ஸாயி நிறுவன சஞ்சிகையான 'ஸநாதன ஸாரதி'யின் ஒரு பக்கம் என்று உடனே புரிந்தது. அதில் "Un Brother sari panni pittain" ("உன் ப்ரதர் சரிப் பண்ணிப்பிட்டேன்") என்ற வாசகம் பளிச்செனத் தெரிந்தது.

தெரிந்த சீக்கிரத்தில் மறைந்தும் விட்டது.

மனதில் மறையாமல் உறைந்து உற்சாகமூட்டியது அச் சுப வாசகம். சகோதரர் மோகனை ஸ்வாமி சரி பண்ணிவிட்டதாக எழுத்து மூலம் உறுதிப்படுத்திவிட்டாரே! சந்தோஷம் தாங்கவில்லை.

பிறகு அந்த 'ஸநாதன ஸாரதி' விநோதமென்ன என்பதும் ஓரளவு நினைவு வந்து சிரிப்பு மூட்டியது. பல்லாண்டுகளுக்கு முன் ஸ்வாமி சென்னையில் ஓர் அடியாரின் வீட்டுக்கு வந்து பஜனையில் கலந்து கொண்டார். அதே வீட்டில் அப் பஜனையில் கலந்து கொள்ளக்கூட முடியாத நிலையில் அவ்வடியாரின் சகோதரர் நோயுற்றுப் பின்னறையில் கிடந்தார். பாதி பஜனையில் ஸ்வாமி தாமாகவே எவர் கண்ணிலும் படாமல் அப் பின்னறைக்கு நழுவினார். பிறகு பஜனைக்குத் திரும்பியபோதுதான் அடியாரிடம், "உன் ப்ரதர் சரிப் பண்ணிப்பிட்டேன்" என்றார்! அதை அடியார் கட்டுரையாக எழுதி அது சஞ்சிகையில் வெளியாகியிருந்தது.

'ஸ்வாமி லீலையே லீலை! அவருடைய ராங்கியே ராங்கி! நேராகத் தாம் தரிசனம் தராமல், தன் திருவாக்கின் ஒலியால் அபயம் சொல்லாமல் என்றோ எவருக்கோ அருள்புரிந்ததை அச்செழுத்தில் காட்டியே அச்சம் தீர்க்கிறாரே!' என்று சிரிப்பாக வந்தது.

இந்தப் பாழும் மனத்தின் சந்தேக குணத்தைப் பாருங்கள்!

அன்றே மோஹன் தர்மபுரியிலிருந்து சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டார். நான் சென்று பார்த்தேன். டாக்டர்கள் ஆபத்தாக எதுவும் கூறாவிடினும் முற்றிலும் ஆறுதலாகவும் சொல்லவில்லை. போதாக்குறைக்கு என் உறவினரான ஒரு 'ந்யூரோ' நிபுணர், "ஹெட் இஞ்ஜரியானதால் இப்போதைக்கு உயிருக்கு ஆபத்தில்லாவிட்டால்கூட பிறகு பயங்கர பாதிப்புகள் ஏற்படலாம்" என்று 'திவ்விய' வாக்கு கூறிச் சந்தோஷ மனத்தைச் சம்சயப் பிசாசுக்கு ஆளாக்கினார்.

எழுத்தில் சங்கேதம் தந்த அருளாளன் அப்போது சங்கீத மூலம் நற்சமிக்ஞை நல்கினார். நேராக எனக்கல்ல; அன்று, ஞாயிற்றுக்கிழமை, சென்னையின் ஸாயி கேந்திரமான 'சுந்தர'த்தில் பஜனைக்குச் சென்றிருந்த என் மாமிக்கு.

மாமி ஃபோன் செய்தார். "மோஹனராமன் பிரார்த்தனையாகவே பஜனைக்குப் போனேன். பிள்ளையார் பாட்டு ஆனவுடனேயே 'மோஹன ராமா!' என்று பாடினார்கள். ரொம்பவும் ஆறுதலாக இருந்தது".

எனக்கும் ஆறுதலாக இருந்தது. ஆனாலும் ஓரிரு நாளில்...


"ஆறு தலை இருந்தும் ஆறுதல் சொல்லாமல்" என்று பல வருஷங்களுக்கு முன் பாட்டுக் கேட்டிருக்கிறேன். தீபாவளிக்கு ஆறு நாள் கழித்து வந்த மஹா ஷஷ்டியன்று ஆறுதலையானின் தொடர்பு காட்டி ஸாயிநாதன் ஆறுதல் அறிகுறி காட்ட வேண்டுமென்று பிடிவாத ஆசை தோன்றிற்று.

அவரைப் போய் ராங்கி என்றேனே! அவர் எத்தனை மங்கள சூசகம் காட்டினாலும் மீள மீள அவநம்பிக்கை கொள்கிறோம். அப்படியும் வள்ளல் கருணைச் சங்கேதங்களை மேன்மேலும் காட்டுகிறார்.

அப்படித்தான் அந்த ஷஷ்டியன்றே வந்த அக்டோபர் மாத 'ஸநாதன ஸாரதி' இதழில், 'நாம் பிரிக்கும் பக்கத்தில், பார்வை படுமிடத்தில் முருக நாமம் வர வேண்டும்' என்ற எண்ணத்துடன் பிரித்தேன்.

சரியாக நான் பிரித்த 237 - ஆம் பக்கத்தில் இரண்டாம் பத்தியில் கண் பதிந்த இடத்தில் "Subrahmanya" என்று அச்சாயிருந்தது! அண்மையில் அமரரான வைதிகோத்தமர் கண்டிகோட சுப்பிரம்மண்ய சாஸ்திரியின் ஞாபகார்த்தமாக ஸ்வாமி 'ஸ்ரீ ஸத்ய ஸாயி ஸுப்ரம்மண்ய வேத சாஸ்திர பரிஷத்' என்ற அமைப்பினை விஜயதசமி தினத்தில் அறிவித்தார் எனக் கூறும் செய்தியில் காணப்பட்டது அந்த முருக நாமம்!

அதோடு விட்டாரில்லை கொடை ப்ரபு. எழுத்தில் காட்டி



யதைப் படத்தால் மேலும் உறுதி செய்தார். அவ்விதழில் ஐயனின் உய்யா லோத்ஸவப் படம் வெளியாகி இருந்தது. எத்தனையோ முறை நேரிலும், படத்திலும் பார்த்தது தான் ஐயன் ஆடும் அந்த ஊஞ்சல். ஆனால் இன்று தான் அதன் சாய்மான மத்தியில் முகப்பாக தோகை மயில் எழும்பி நிற்பது என் பார்வையில் படுமாறு அருளினார்!

பிறகு அன்று நான் ஜி.ஹெச்சுக்குப் போகும் வழியில் பார்த்த லாரிகளின் பெயர்கள்! 'கார்த்திகேயன்', 'செந்திலாண்டவன்', 'பழனியப்பன்', 'ஓம் முருகா', 'சரவணபவன்' என்றிப்படி! 'லாரி - லோட்'களாக அருட் சமிக்ஞைகள்.

ஜி.ஹெச் சென்றால் அங்கே முருகனின் பரம பக்தரான பாம்பன் சுவாமிகள் வைத்திய ரீதி சிகித்சையும், அதற்கு மேலாக முருகனிடமிருந்தே நோய் நிவாரணமும் பெற்றிருந்த வார்டுக்கு மோஹன் மாற்றப்பட்டிருந்தார்!

மருத்துவர்களும் வியப்புறும் வகையில் அவர் விரைவில் குணமடைந்து, அட்மிட்டான பத்து நாட்களுக்குள்ளேயே டிஸ்சார்ஜும் ஆனார். வைத்தியநாத ஸாயி 'சார்ஜ்' எடுத்துக்கொண்ட மகத்துவத்தால்தான்.

வீடு திரும்பிய மோஹனைக் காணச் செல்லும் வழியில், "ஸாயீ! ஒவ்வொரு தெய்வமும் நம்முடைய பிரார்த்தனையைப் பூர்த்தி செய்யும்போது அதற்கென்று சிதறுகாய் போடுவது, அங்க ப்ரதக்ஷிணம் செய்வது, காவடி எடுப்பது என்று ஏதேனும் நேர்த்திக் கடன் செலுத்தி நன்றி கூறுகிறோம். உன் அருள் நேர்த்தியிலோ நீ எந்த நன்றிப் பிரதியும் எதிர்பார்க்கவில்லை என்கிறாய். ஆனால் இந்த மனசுக்கு, அது பக்தியோ, 'ஈகோ'வோ, எதுவானாலும் சரி, எதாவது பிரதி செய்தால்தானே நிறைவாயிருக்கிறது? அப்படி ஒன்று மோஹனின் நோய் நிவாரணத்திற்காக நாங்கள் செய்யும்படித் தெரிவிக்க மாட்டாயா?" என்று வேண்டினேன்.

அவரது வீடு வந்தது. வீட்டு வாசலில் சாலையை அடைத்துக் கொண்டு ஒரு லாரி நின்றது.

அந்த லாரி தாங்கியிருந்த வாசகம் : "Sathyanarayana Pooja"!

"உனக்கெப்படி நன்றி தெரிவிக்க?" என்று கேட்டால் உடனே விடை, "சத்யநாராயண பூஜை" என்று!

லாரிக்கு 'சத்ய நாராயணன்' என்று மட்டும் பெயரிருந்திருந்தால் சகஜமே! ஆனால் 'பூஜை' என்று சேர்த்துக் கொண்டு வந்து தெளிவாகப் பதில் சொன்னதில் ஸ்வாமியுடைய குறும்பு நகை நெளிவும் புலப்பட்டது!

ஸத்ய ஸாயிக்குப் பூர்வத்தில் இடப்பட்ட பெயரும் ஸத்ய நாராயணா என்பதுதான்.

ஷீர்டி - பர்த்தி ஸாயிக்களின் ஆந்திர, மராட்டிய, கன்னட பக்தர்களில் பலர் ஸத்ய நாராயண பூஜை விசேஷமாகச் செய்வதையும் குறிப்பிட வேண்டும்.

மூன்று மாதங்கள் நல்லபடி ஓடின. மோஹன் ஆபீஸ் அலுவல்கள் வீட்டு அலுவல்கள், அவற்றைவிட அதிகமாக, கல்லுப் பிள்ளையாராக உட்கார்ந்துள்ள என்னுடைய, உத்ஸவ மூர்த்தியாக ஆற்றும் அலுவல்கள் யாவற்றையும் மீளவும் மேற்கொள்ளலானார். இப்படியே போனால் கதை எப்படி?

1987 பிப்ரவரி 17 ஆம் தேதி.

ஸ்வாமியின் இரண்டு படங்களை எதிரும் புதிருமாக வைத்தால் அவரே அவரை விநோதமாகப் பார்த்துக் கொண்டு ரஸிப்பது போலிருக்கும். இவற்றில் ஒரு படம் சில பல மாதங்களாகக் காணவில்லை. அவர் குறித்த ஃபைல்களையெல்லாம் அன்று குடைந்து பார்த்து அப்படத்தைத் தேடிக் கொண்டிருந்தேன்.

இடையே ஃபோன் வந்தது. மோஹன்தான் பேசினார். கடந்த சில தினங்களாகக் கால்வலி எடுக்கிறதாம். மாலை டாக்டரைப் பார்க்கப் போகிறாராம்.

சமாசாரம் என்னை சங்கடப் படுத்தியது. என்றோ ந்யூரோ நிபுணர் குறிப்பாகச் சொன்ன ஒன்று இன்று நினைவு வந்து பயமுறுத்தியது. மண்டையில் அடிபட்டவர் அப்போதைக்குக் குணம் ஆனாலும் பிற்பாடு கால்வலியில் ஆரம்பித்து, அது உடம்பில் ஒரு பாதியைப் 'பாரலைஸ்' ஆக்கும் விபரீதத்திற்குக் கொண்டுவிடலாம் என்று அந்த நிபுணர் 'அபயம்' சொல்லியிருந்தார்.

"ஸாயி ராமா!" என வேண்டிய படி, விட்ட இடத்தில் ஃபைல் குடைச்சலைத் தொடங்கினேன்.

கையில் வந்தது டைப் அடித்த ஒரு நீளக் காகிதம். பிரித்தேன்.

என்ன ஆச்சரியம்! கண்ணில் பட்டது இவ்வாசகம்: "Un Brotherukku kaal sari panni pittain" ("உன் ப்ரதருக்குக் கால் சரிப் பண்ணிப்பிட்டேன்")!

மோஹன் விபத்திற்கு ஆளான மறுதினம் அதிகாலை ஸ்வாமி அச்செழுத்தில் காட்டிய பத்திரிகைச் செய்தியேதான் இன்று என் வியாகுலத்திற்கு ஸ்பஷ்டமான விடையாகக் கால் நோவு நிவாரணத்தைச் சேர்த்துக்கொண்டு தட்டெழுத்துத் தாளாக வந்திருக்கிறது! இல்லை, இன்று இதைச் சேர்த்துக் கொள்ளவில்லை, அன்று 'இதை விட்டுவிட்டு வாசகம் காட்டியதில் தான் விகிர்தனின் விளையாட்டு வைபவம் பொலிகிறது.

விளக்கிச் சொல்கிறேன் : பல்லாண்டு முன்பு அந்த சென்னை பக்தர் தமது சகோதரரை ஸ்வாமி குணப்படுத்தி, அதை அவர் வாயாலேயே தெரிவித்த நிகழ்ச்சியைக் கட்டுரையாக எழுத, அது 1969 பிப்ரவரி 'ஸநாதன ஸாரதி' யில் வெளியாயிற்று. அப்போது நான் அந்த ஏட்டுக்குச் சந்தாதார் அல்லன். பிற்பாடு நான் சந்தா சேர்வதற்கு முந்தைய இதழ்களில் வெளியான சுவையான விஷயங்களையும் சேகரித்தேன். அப்போது ஓர் அன்பர் மேற்சொன்ன கட்டுரையை டைப் செய்து தந்தார். அதில் இப்போது நான் கண்ட, "உன் ப்ரதருக்குக் கால் சரிப் பண்ணிப் பிட்டேன்" என்ற வாசகம் தான் ஸ்வாமி வாஸ்தவத்தில் கூறி, ஒரிஜினல் கட்டுரையில் அச்செழுத்திலும் ஏறியிருந்தது. அக் கட்டுரை குறிப்பிட்ட நோயாளி காலெலும்பு முறிவுக்குத்தான் ஆளாகி, பிறகு ஸ்வாமியால் குணப்படுத்தப் பட்டார். ஆனால் மோஹன் மண்டையில் அடிபட்டுக் கிடந்த தீபாவளி சமயத்தில் ஸ்வாமி "கால் சரிப்பண்ணி"யதாகக் காட்டினால், எத்தனை அசம்பாவிதமாக இருந்திருக்கும்? அதனால்தான் அந்த மகா எடிடர், "Brotherukku kaal sari..." என்பதில் "ukku kaal" என்பதை அன்று 'டிலீட்' செய்து விட்டிருக்கிறார்!

அதிருக்கட்டும்; ஸ்வாமியின் விபத்து ரட்சக வல்லமையைக் காட்டும் ஆயிரமாயிரம் கட்டுரைகள் உள்ளன. அப்படியிருக்க, அன்றைய நிலைக்குச் சம்பந்தமில்லாத கால் முறிவைக் குறிக்கும் கட்டுரையைத் தேர்ந்தெடுத்து அதிலிருந்து சம்பந்தமற்ற வார்த்தையை நீக்கிவிட்டுக் காட்டுவானேன்?

இதன் மூலம்தான் அவர் தமது முக்கால உணர்வை நமக்கு உறுதி செய்கிறார். 'பிற்பாடு இதே நபருக்குக் காலில் வலி ஏற்படும். அப்போதும் தாம் அபய வாசகம் காட்ட வேண்டியிருக்கும். அதையும் இன்றைய பிரச்னையையும் இணைத்து ஒரே கட்டுரை வாசகத்தையே இப்போது சற்று மாற்றியும், பிறகு மூலவடிவிலும் கொடுத்து லீலாரஸம் கொடுக்கலாம்' என்றே இவ்விதம் செய்திருக்கிறார்!

ஸ்வாமி காப்புக் கூறிய பிறகு கேட்பானேன்? மோஹனுடைய கால்வலி சாமானியமான தாற்காலிகக் கோளாறே என்றும், அதற்கும் அவரது மண்டையடிக்கும் சம்பந்தமில்லை என்றும் மருத்துவ சோதனைகள் உறுதிப் படுத்தின.

பிற்பாடு ஒரு பேட்டியில் ஸ்வாமி நேர்மொழியாகவே விபத்தின் பின்விளைவுகளிலிருந்து சகோதரர் முற்றிலும் நிவாரணம் பெற்றுவிட்டதாக அபயவாக்கு அருளினார். வித்தின்றியே விளைவிக்கும் வித்தகன் முன்னிருக்கப் பின்னாவது, விளைவாவது? ஃ

காதற்கொடி


தமிழழகன்

சித்தாடை கட்டும் வல்லிக்கொடி - வரிச்
சின்ன இடையோ மெல்லிக்கொடி - அவள்
புத்தாடை கட்டியே போக என் நெஞ்சமும்
பித்தாகிப் போமெனச் சொல்லிக்கடி!

நெஞ்சில் மலரும் வஞ்சிக்கொடி - என்றன்
நினைவில் முதிராப் பிஞ்சுக்கொடி - அவள்
அஞ்சனக் கண்களோ ஆயிரம் பேசும்
அனைத்தையும் கேட்டுத் தெரிஞ்சுக்கடி!

புள்ளி ரவிக்கை மின்னற்கொடி - சடை,
பூநாகம் சுற்றும் பின்னற்கொடி! - அவள்
துள்ளி வரும்ஒரு தோற்றமும் கண்டால்
தொலையா விருந்துதான் கண்ணுக்கடி!

தண்டைக் கொலுசுச் செண்டுக்கொடி - மடல்
தாழம்பூச் சிற்றடி வண்டுக்கொடி - அவள்
உண்டெனில் தான் எனக் குள்ளதாம் வாழ்வெனில்,
உண்மையும் நீயேதான் கண்டுக்கடி!



தவத்திரு நாராயணகுரு

டாக்டர் ஆ. பத்மநாபன். இ.ஆ.ப. (ஓய்வு)

தற்போது கேரளத்தின் ஒரு பகுதியாக உள்ள வைக்கத்தில் 1925 ஆம் ஆண்டில் காந்தியடிகளார் தமது புகழ்மிக்க சத்தியாகிரகத்தைத் தொடங்கினார். திருவாங்கூரில் 'தீண்டப்படாதார்' 'அணுகக்கூடாதவர்' என ஒதுக்கப்பட்டிருந்த மக்களுக்கு வைக்கத்தி லிருந்த கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் நடக்கும் உரிமையைப் பெற்றளிப்பதற்காக இந்த அறப்போர் நடந்தது.

வைக்கம் சத்தியாக்கிரகம் உணர்ச்சிமிக்க பெரிய தோர் அறப் போராட்டமாக அமைந்தது. சிறியதொரு ஊரில் நடந்ததாயினும் 'தீண்டாமை' 'அணுகாமை' என நிலவிய சாபக்கேடான வழக்கம் உச்சநிலையில் இருந்ததை முதன்முதலாக மக்கள் யாவரும் அறி வதற்கு இது உதவியது. இந்த அறப்போரில் தொண்டர்களாக ஈடுபட்டிருந்த பெரியார் ஈ.வே. ராமசாமி, வினோபா பாவே உள்ளிட்ட பலர் உள்ளூர் நீதிபதி விதித்திருந்த தடையை மீறினார்கள். அன் றைய சமஸ்தான ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர் களும், காவல் துறையினரும் துரதிருஷ்டவசமாக வைதீகக் கூட்டத்தாரை ஆதரித்தனர். அறப் போராட்டத் தொண்டர்களைத் தடுத்து நிறுத்து வதற்காக வைக்கம் கோயிலைச் சுற்றித் தடைகளும், வேலிகளும் அமைக்கப்பட்டன. உயர் வகுப்பின ருக்கும், சமூகச் செல்வாக்குள்ள ஒரு பகுதியின ருக்கும் மட்டுமே இந்தக் கோயில் உரியது எனத் தோன்றும் வண்ணம் சூழ்நிலை நிலவியது. வைதீகர் களாகவும், உயர் வகுப்பினராகவும் இருந்தோரின் இந்தப் போக்கினைக் கண்டு ஆவேசமும் சீற்றமும் கொண்ட ஆன்மிகத் தலைவராக விளங்கியவர் நாரா யண குரு அவர்கள் ஆவார்.

நாராயண குரு சமுதாயத்தில் பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் நலன்களுக்காகப் பாடுபட்டவர். அவர், தடைகளை உடைத்தெறிந்தும், வேலிகளைத் தாண்டிச் சென்றும் கோயிலுக்குள் நுழையுமாறு தொண்டர்களுக்கு அறிவுரை கூறினார். பலாத் காரத்தைப் பயன்படுத்தும் இந்த முறை அறப்போர் ஆகாது என்று காந்தியடிகளார் எழுதிய போதிலும், நாராயண குருவின் கட்டளை ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளை மீட்டளிப்பதற்காக எழுப்பிய ஆன்மிக, அறநெறி வயப்பட்ட குரலாக ஒலித்தது.

ஆன்மிகத் தலைவரான நாராயண குரு, சமூகச் சீர்திருத்தவாதியாகவும், புலமை நலங்கனிந்த அறிஞ ராகவும், தத்துவக் கவிஞராகவும் விளங்கினார். தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும், வாழ்க்கை நிலை உயர்வுக்காகவும் தம் வாழ்நாள் முழுவதும் அவர் போராடினார். நாற்பதாண்டுக் காலம் அந்த மக்களோடு கலந்து நின்று பணி யாற்றினார். அவரைப் பின்பற்றிய லட்சக்கணக்கான மக்கள் அவரைத் தம் 'ரட்சகர்' எனவும், தம்மை வாழ் விக்க அவதரித்தவர் எனவும் கருதிப் போற்றினர். சாதி, இனப் பாகுபாடற்றதொரு சமரசச் சமுதாயம் காண்பதற்கு அவர் இடையறாது பாடுபட்டார். மனித நேயமும் உலகளாவிய சகோதர நேயமும் வளர வேண்டும் என விரும்பினார்.


1854 ஆம் ஆண்டில் திருவனந்தபுரத்திற்கு அரு கிலுள்ள செம்பழாண்டி என்னும் சிற்றூரில் மாடன் ஆசான் - குட்டியம்மா தம்பதிக்கு மூத்த மகனாக நாராயண குரு தோன்றினார். உழவர் குடும்பத் தினரான அவர்தம் பெற்றோர் பண்பும், ஆன்மிகப் பாரம்பரியமும் மிக்கவர்களாக வாழ்ந்தனர். தம் மகனை அவர்கள் 'நாணு' எனச் செல்லப் பெயரிட்டு அழைத்தனர். 'ஆசான்' என்னும் சொல், ஆசிரியர் என்னும் பொருளுடையது. அதற்கேற்பவே, மாடன் ஆசான் ஆசிரியராகவும், ஆயுர்வேதம், சோதிடம், சம்ஸ்கிருதம் ஆகியவற்றில் தேர்ந்தவராகவும் விளங்கினார். அவர் வாழ்ந்த ஊர் மக்களும், அக்கம் பக்கத்து ஊராரும் அவரிடம் பெருமதிப்பு கொண் டிருந்தனர். இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாச நூல்களை இசையுடன் பாடிப் பிரசங்கம் செய்வதும் அவர் வழக்கம். தாய் குட்டியம்மா எளிமையும், அறிவும், நற்குணங்களும் நிறைந்தவர். தம் பெற் றோரிடமிருந்து இக்குணங்களைப் பெற்றிருந்த நாணு ஆன்மிகச் செல்வராகவும் விளங்கினார்.

நாணுவின் ஐந்தாவது வயதில் அவரது குடும் பத்தில் நிகழ்ந்ததொரு மரணம் அவரை ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்த்தியது. இதன் விளைவாக , அருகி லிருந்த கோயிலுக்குச் சென்று மௌன விரதம் மேற் கொள்ளத் தொடங்கினார். இதனை அறிந்து அவருக்கு ஆறுதல் கூறச் சென்ற உறவினர்களிடம் உலகியல் துக்கத்தையும் துயரங்களையும் தாங்கிக் கொள்ள இயலாததால் தாம் இவ்வாறு வெளியேறிய தாகக் கூறினார். இளமையிலேயே அவர் மனம் விரிப் புற்றிருந்ததை இது வெளிப்படுத்தியது.

மெலிந்த உடலினராக இருந்த நாணு, சிறு வயதில் கிராமத்துப் பையன்களுடன் மாடு மேய்த்து வருவது வழக்கம். இரண்டாண்டுகள் ஆரம்பப் பள்ளியில் படித்த அவர், படிப்பில் தேர்ந்தவராக இருந்தார். பின்னர் தன் தாய்மாமனிடம் கல்வி கற்று, விரைவில் சம்ஸ்கிருதத்தில் தேர்ந்தார். அறிவு ஒளி பெற்றமைக் கான அறிகுறிகள் அவரிடம் வெளிப்படத் தொடங் கின. சமய, பக்தி நூல்களை முறையாகக் கற்றார். நாள்தோறும் தம் குடும்பக் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டு வந்தார். உடையிலும் உணவு வழக்கங்களிலும் எளிமையை விரும்பிய அவர், தம் செயல்களிலும் மனப்பாங்கிலும் பிறரிடமிருந்து வேறுபட்டவராக விளங்கினார். சாதுக்கள், துறவிகள், ஏழை எளியவர்களோடு கூடி இருப்பதை விரும்பினார். இராமன் பிள்ளை என்னும் புகழ் பெற்ற

ஆசான் அவருக்கு வடமொழி இலக்கியங்களைக் கற்றுத்தந்தார். நாணுவும் தாமே முயன்று படித்து வேதம், உபநிடதம் ஆகிய நூல்களில் தேர்ச்சி பெற்றார்.

இந்த நிலையில் அவரது பதினைந்தாவது வயதில் தாய் மரணமடைந்தார். இந்த மறைவு நாணுவைப் பெரிதும் பாதித்தது. எனினும் தாமே அறிவைத் தேடிப் பெற வேண்டும் என்னும் ஆவல் அவரிடம் பெருகியது. ஞான அனுபவத்தை வலியுறுத்திய வேதாந்த தத்துவம் அவரைப் பெரிதும் கவர்ந்தது. ஆன்மிக அனுபவத்தையும் தெளிவையும் தேடி, ஆண்டுகள் பலவற்றைக் கழித்தார். சிறிது சிறிதாகக் குடும்பப் பந்தத்திலிருந்து விடுபட்டு காடுகளிலும் கடற்கரை வெளியிலும் காலங்கழிக்கத் தொடங் கினார். நெடுநேரத் தியானங்களை மேற்கொண்டு தம் ஆன்மபலத்தை வளர்த்துக்கொண்டார். உலகப் பற்று களிலிருந்து விடுபட்டுத் தனக்குள்ளே மூழ்கியவராக அவர் வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டன.



தனக்குள் ஏற்பட்ட இந்த மாற்றங்களைப் பிறர்க்கு வெளிப்படுத்தாத அவர், தம் மாணவர்களுக்கு வட மொழி இலக்கியங்களைக் கற்பித்து வந்தார். எளிய பாடங்களுக்கும் புதிய பொருளும், புதுமையான விளக் கமும் அளித்தார். இதனால் அவரது சீடர்களும், மாணவர்களும் புதியதோர் அறிவு விளக்கம் பெற்றனர். எனவே, அவரை நாணு ஆசான் என அவர்கள் அழைக்கத் தொடங்கியது பொருத்தமாகவே அமைந்தது.

நாணு ஆசான் தம் கல்வியையும் அறிவையும் வளர்த்துக்கொள்ளத் தொடர்ந்து முனைந்து வந்தார். சிறிது சிறிதாக உற்றார், உறவு,பந்த, பாசப் பிணிப்பு விடுபட்டு வந்தது. வீட்டை விடுத்து வெளியிடங்களில் தங்கவும், உபதேசங்கள் புரியவும் தொடங்கினார். அவருக்குத் திருமணம் செய்து வைத்தால் அவருடைய இந்தப் போக்கு சரியாகிப் போகும் என அவரது சகோதரிகளும் உறவினர்களும் கருதினர். இந்த முயற்சியில் அவர்கள் ஏமாற்றமே கண்டனர். அவ ருக்கு மணம் முடித்த வாழ்க்கைத் துணைவி தாய் வீட்டிலேயே வாழ்ந்தாள். நாணுவும் சில காலம் அதே வீட்டில் வாழ்ந்த போதிலும் அவர் தனிமை வாழ்வையே விரும்பினார். இந்தத் தருணத்தில் அவர் தம் தந்தையார் மறைவுற்றார். இதன் விளைவாக அவர் கொண்டிருந்த உலக வாழ்க்கை வெறுப்பு மேலும் வளர்ந்து, ஒருநாள் வீட்டைத் துறந்தே வெளியேறினார்.

நாராயணர் தனிமையைத் தேடி அலைந்து இறுதியில் கன்னியாகுமரிக்கு அருகே காடு அடர்ந்த பகுதியில் தங்கினார். குகைகளில் இருந்து கடுந் தவத்தை மேற்கொண்டார். மெய்ஞானத்தைப் பெறு வதற்கு ஆழ்ந்த தியானத்திலும், யோகத்திலும் மூழ்கினார்.

இறுதியில் மெய்ஞானம் பெற்று முதிர்ச்சியுற்ற உணர்வு பெற்றவராய் தனிமையை விடுத்து வெளி வந்து ஊர் ஊராகச் சுற்றி மக்களிடையே கலந்து பழகினார். இவ்வாறாக, பல நெடுந்தொலைவான இடங்களுக்கெல்லாம் உணவும், உறைவிடமும் இன்றி, வழியிலேயே உறங்கி எழுந்து பயணம் செய்தார்.

இந்தப் பயணத்தின்போது ஒருநாள் சித்தர் ஒருவரைச் சந்தித்தார். ஏழை, எளிய மக்களுக்குத் தொண்டு செய்யுமாறு அவர் கூறிய அறிவுரை நாணுவின் வாழ்க்கைப் போக்கினை முற்றிலுமாக மாற்றியது. நெய்யாற்றங்கரைக்கு அருகிலுள்ள அருவிபுரத்தில் தங்கி ஏழைகளுக்குப் பணியாற்றத் தொடங்கினார். அவரது முகப்பொலிவும், அன்பும், கருணையும் மக்களிடையே செய்தியாகப் பரவி நாள்தோறும் அவரைக் காண வருவோர் கூட்டம் பெருகியது. ஏழை, செல்வர்கள் நோயுற்றோர், இயலாதவர் எனக் கற்றோரும் மற்றோருமாக எண்ணற்ற ஆண்களும், பெண்களும் அவரைத் தரிசித்து ஆசி பெற வந்தனர். அவர்களிலே சமூகக் கொடுமைகளுக்கு ஆளாகி வறுமையும் அறியாமையும் மிகுந்தவராய் துன்புற்றுக் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் பகுதியினராவர். இவர்களுக்குத் தொண்டு செய்தாலன்றித் தம் பணி நிறைவுறாது என நாராயண குரு உணர்ந்தார்.

கேரளத்தின் அக்காலத்திய நிலைமை வருந்தத் தக்கதாகவே இருந்தது. சமுதாயச் சூழ்நிலைகள் அமைதி இழந்து, வெடிக்கும் நிலையை எட்டி இருந்தன. தீண்டாதார் வெறுத்து ஒதுக்கப்பட்டனர். தீண்டாதார் எதிரில் வருவது மட்டுமல்ல அவர்தம் நிழல்படுவதுகூடத் தீட்டுப்படுத்திவிடும் எனக் கருதப் பட்டது. கடையருக்கும் கடையராக வாழ்ந்த இந்த மக்கள் மற்றைய உயர் வகுப்பினர் தங்கள் எதிரில் வரக்கண்டால் தொலைவில் இருந்தே தங்கள் வருகையை வாய்விட்டுக் கூவி அறிவிக்க வேண்டிய இழிநிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர். சுருக்கமாகச் சொல்வதானால் வாயற்ற விலங்குகளாய் உழைப்பதற்கென்றே பிறந்து, உயர் சாதியினரால் இழித்து ஒதுக்கப்பட்டு, ஆடுமாடுகளைப் போல விற்பதற்கும், வாங்குவதற்கும் உரிய நிலையில் இருந்தனர். கேரள சமுதாயத்தில் மனிதனுக்கு மனிதன் இழைக்கும் இத்தகைய கொடுமைகளைக் கண்டு சுவாமி விவேகானந்தர் கூறியவாறு அது 'பைத்தியக்காரர் புகலிடமாகவே' இருந்தது. அங்கு நாராயண குரு கண்ட இந்த இழிநிலை அவரது ஆத்மாவிற்கு எதிராக விடப்பட்ட சவாலென்றே கொண்டதில் வியப்பில்லை. எனவே, இந்த நிலையை மாற்றும் முயற்சியில் முழு மூச்சுடன் ஈடுபட முடிவெடுத்தார். இந்து சமூக அமைப்பின் அங்கமாக உள்ள சாத்யத்தையும், சமய தத்துவத்தின் வடிவமான கோயிலையும் சீர்திருத்தும் அமைதிப் புரட்சியைத் துவக்கினார். இந்தப் பணியை மேற்கொண்டு நாற்பதாண்டு கால இடைவிடாத உழைப்பினால் கேரளத்தில் சமுதாய அமைப்பின் கட்டுக்கோப்பினை மாற்றியமைத்தார்.

அருவிபுரத்தில் பெரும்பகுதியினராக வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 1888இல் அவர் கட்டிய சிவன் கோயில் அவரது பணியின் தொடக்கமாக அமைந்தது. இந்து சமயத்தின் உயர்கடவுளான சிவனுக்கு எழுப்பப்பட்ட அந்தக் கோயிலின் குடமுழுக்கினைப் பூசைகள் செய்வதற்கு உரிமை பெற்றவரல்லாத சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரைக் கொண்டு செய்து முடித்து அந்த வகையில் அதனை முதற் கோயிலாக ஆக்கினார். சாதி, சமய, இன வேறுபாடின்றி அனைவரும் ஒத்த உரிமையுடன் சென்று வழிபடும் திருக்கோயிலாக அது அமைந்தது. நாராயணகுரு அவர்கள் 'தர்ம சங்கம்' என்னும் பெயரில் மடத்தை நிறுவி பெருகி வந்த தமது சீடர்களுக்குப் பணியாற்றுவதற்கு அங்குத் துறவியர்க்குப் பயிற்சி அளித்தார். வாழும் தெய்வம் ஒன்றே எனவும், மக்களுக்குள்ளே சாதி, சமய, இன, நிற வேறுபாடுகளுக்கு இடமில்லை எனவும் அவர் தெளிவுபட எடுத்துரைத்தார். உண்மை, அன்புடைமை, தருமம் ஆகியவற்றிற்குச் சிறப்பிடமளித்தார். மூட நம்பிக்கைகளை வெறுத்தொதுக்கி, சடங்குகள் செய்வதை விடுத்து இறைவனுக்கு மலர்களை மட்டும் தூவி வழிபட்டார்.

அருவிபுரத்தில் ஆற்றிய அறப் பணிகளுக்குப் பின்னர், திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள கடற்கரை நகரமான அமைதி தவழும் வர்க்கலாவைத் தாம் வாழும் இடமாகத் தேர்ந்தெடுத்தார். விரைவில் இந்த இடம் முக்கியத்துவம் பெற்றது. இங்கே இவர் கலைமகளான சரஸ்வதிக்கு ஒரு கோயில் எழுப்பினார். நாளுக்குநாள் அன்பர்கள் கூட்டம் பெருகியது; அவர்கள் அனைவரும் இவரிடம் மட்டிலா மதிப்பு வைத்திருந்தனர். பின்னர் தம் இருப்பிடத்தை வர்க்கலாவிலிருந்து ஆல்வாய்க்கு மாற்றினார். அங்கு ஆற்றங்கரையில் அமைந்த சிறிய குடிலில் தங்கி தியானத்தில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தார். இங்குதான் அவரது உள் ஆன்மாவும் உணர்வும் வெளிப்பட்டு மலர்ந்தன. இவற்றின் வெளிப்பாடான இலக்கிய, தத்துவக் கருத்துகள் மலையாளம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் நூல்களாக வெளிவந்தன.



ஆல்வாயில் அவர் ஆசிரமத்தையும், சம்ஸ்கிருதப் பள்ளியையும் அமைத்தார். பிரம்மச்சாரிகளான சிறுவர் தங்கிப் பயிலும் விடுதியுடன் கூடிய பள்ளியொன்றையும் நிறுவி சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றோடு பிற பாடங்களைப் படிப்பதற்கு ஏற்பாடு செய்தார். இப்பள்ளியில் இந்து, கிறித்தவர், முஸ்லிம் மாணவர்கள் சேர்ந்து சமய, சாதி, இன வேறுபாடின்றி ஒன்றாக உண்டு, உறங்கிக் கல்வி கற்றனர்.

1914இல் அவரது 60ஆவது பிறந்த நாளின்போது அருட்செம்மலாக, ஆத்ம ஞானிகளின் பெருந்தலைவராகப் போற்றப்பட்டார். சம்ஸ்கிருதத்தில் இவரெழுதிய 'தரிசனமாலை' என்னும் நூல், தத்துவ மாயையை விளக்குகின்றது. 1919, 1923 ஆகிய ஆண்டுகளில் இலங்கைக்குச் சென்று சகோதரத்துவ மாநாட்டில் கலந்து கொண்டார். மீண்டும் 1924 இல் 'அனைத்துச் சமயங்களையும் பற்றி அறிந்து கொள்வதற்கும் அறிவிப்பதற்கென்றும்' நடந்த சர்வ சமய மாநாட்டில் கலந்து கொண்டார். அனைத்துச் சமயங்களையும் ஒப்பிட்டு அறிவதற்காகத் தனிமுதற்பெரு பிரம்ம வித்தியாமந்திரம் என்னும் அமைப்பு ஒன்றினை நிறுவ வேண்டும் என எடுத்துரைத்தார். கோயம்புத்தூர், நீலகிரி முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று மக்களுக்கு அறிவுரை புகன்றார். இடைவிடாத பயணம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்து நல்ல பழக்க வழக்கத்தை மேற்கொண்டு சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்ததோடு, உயிர்ப்பலி இடுவதையும் தடுத்தார். சாதிப் பிரிவினைகளை வன்மையாகக் கண்டித்து மாந்தர் யாவரும் சரிநிகர் சமானமே எனவும் மனித இனம் ஒன்றே எனவும் உணர்த்தினார். உயர்ந்த :நல்லொழுக்கக் கோட்பாடுகளை வலியுறுத்திச் சமுதாயத்தைச் சீர்திருத்த முயன்றார். பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைநிலை படிப்படியாக மேம்பாடு அடைவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகள் பெருமளவில் வெற்றி பெற்றன.

நாராயண குருவை மூப்பு பாதிக்கத் தொடங்கியது. எனினும் அவரின் ஆன்ம ஒளி குன்றாது ஒளிரத் தொடங்கியது. அவர்தம் உடல் நிலை தளர்ந்தபோதும் அவரது கொள்கைப் பிடிப்பு தளரவில்லை. எவர் எதைப் பேசினாலும் கூர்ந்து கவனிப்பார். பாரபட்சமற்ற நேர்மை, நியாயத்தில் ஆழமான பிடிப்பு கொண்டிருந்தார். 1928 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் நாளன்று அவர் மகாசமாதி அடைந்தார்.

காந்தியடிகளார், பிரெஞ்சுநாட்டுப் பேரறிஞர் ரொமைன் ரோலண்ட் ஆகியோரும் பிற தலைவர்களும் இந்தத் திருவருட் சீலருக்குப் புகழஞ்சலி செலுத்தினர்.

மகாகவி ரவீந்திரநாத தாகூர் தமது புகழாரத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார் :

"உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் நான மாசமாமு வந்திருக்கிறேன். உலகின் பெரிய மகான்களையும், மகரிஷிகளையும் கண்டு பேசும் பெரும் பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது. மலபாரைச் சார்ந்த சுவாமி நாராயண குருவைவிட இவர்களில் எவரும் ஆன்மிகப் பெருந்தலைவராக இருந்ததில்லை என்பதனை வெளிப்படையாக நான் ஒப்பக் கொள்வேன்.

நாராயண குருவின் தெய்விகக் களையும், அருளொளியும் நிறைந்த முகத்தையும் தொடுவானத்தின் தொலைதூரத்தில் உள்ளதொரு புள்ளியைக் குறியாக வைத்து நோக்கும் அந்த யோகியின் கண்களையும் என்னால் மறக்க முடியாது".

நாராயண குருவின் சிறந்த சீடரான ஸ்ரீ நடராஜ குரு தமது 'குருமொழி' என்னும் நூலில் நம் நாடு மற்றும் உலகின் ஆன்மிக, அறநெறி வாழ்விற்காக நாராயண குரு ஆற்றியுள்ள பணிகளை விரிவாக ஆய்ந்து எழுதியுள்ளார். நாராயண குரு தமது அருட்பத்தில் கூறியுள்ள,

'சிறையா உடலொடு செம்பொருள் கலந்த
சிவனருட் செம்மலாய்ச் சிறந்தவன் நானோ'

எனப் பொருள்படும் பாடலில், பிறந்தபோது எடுத்த உடம்போடு இறைவனின் ஞான ஒளியில் கலப்பது என்னும் விதேக முக்திப்பேற்றை அடைதலைக் குறிப்பிடும்போது நந்தனாரையும், பிற பேரருட் செல்வர்களையும் மனதில் கொண்டே பாடியுள்ளார் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். என்னுடைய 'நந்தனார்' நூலிலும் இதைப்பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன்.

நாராயண குரு நம் நாடு பெற்றளித்த சமூகச் சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்த அருட்செல்வர் எனப் போற்றி நினைவில் கொள்ளத்தக்கவராவார். பழமை, அறியாமை, தீண்டாமை அதனைச் சார்ந்த கொடுமை, சாதி இன வேற்றுமை ஆகியவற்றை எதிர்த்து நின்று புறங்கொடாத போரிட்டு அன்பு, ஆருயிர் அனைத்தையும் ஒருயிராகக் கருதும் ஒருமைப்பாடு ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டதும், சாதி, இன வேற்றுமைகள் அற்றதுமான சமுதாயத்தை அமைக்க முயன்ற அருட்செல்வர்களான நந்தனார், சோகாமேளர், ராமானுஜர், ராமானந்தர், கபீர், ரவிதாஸ், நானக், துக்காராம், புரந்தரதாஸர், சைதன்யர், பசவர், ராமலிங்க அடிகளார் முதலிய இறவாப்புகழ் பெற்ற மாபெரும் சீர்திருத்தவாதிகளின் கூட்டத்திலொருவராக விளங்குகின்றார்.

நம் நாடு, சாதி, இனம், சமய வெறிகளால் வந்த அறைகூவல்களைச் சமாளிக்க நேர்ந்துள்ள இத்தருணத்தில் இத்தகைய மகான்களின் போதனைகளைக் கருத்தில் கொண்டு பின்பற்றுதல் நமக்கு நலம் பயக்கும் எனலாம்.

ஒளியேற்று!

மரு. பரமகுரு

ஒளியின் ஆட்சி! இருளாட்சி!
உலகம் முழுவதும் இரண்டாட்சி!
ஒளியும் இருளும் எதிராட்சி
உற்றது இயற்கையின் தனிமாட்சி!

இருளின் ஆட்சியில் மயக்கம்வரும்;
எப்பொழு தும்அது மறைவுதரும்!
ஒளியின் ஆட்சியில் இயக்கம் வரும்!
உலகைக் காட்டிநல் அறிவுதரும்!

இருளை நீக்கிட ஒளியேற்று!
இதுவே வாழ்க்கையின் வழிபோற்று!
பொருளும் அருளும் பொருந்திவரும்
பூமித் தாயின் மனங்குளிரும்!

தமிழக முதல்வரைச் சந்திக்க வாய்ப்பு நேர்ந்து தங்களுக்குச் சில மணித்துளிகள் பேச நேரம் ஒதுக் கப்பட்டால் அவரிடம் தாங்கள் கேட்கும் முதல் கோரிக்கை என்னவாக இருக்கும் எனச் சில பிரமுகர்களிடம் கேட்டபோது அவர்கள் கூறிய பதில்கள்.

— தயாரிப்பு : ஆர். புவனா

முதல்வரைச் சந்தித்தால்....

திரு சுப. சபாபதி, (சேர்மன், மதுரை வங்கி லிமிடெட், பிரசிடெண்ட் ஆப் தி ஃபோரம் ஆப் தி பிரைவேட் செக்டார் பாங்க்)

நாட்டுடைமை ஆக்கப்படாமல் சுமார் 23 வங்கிகள் உள்ளன. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி கள் எவ்வாறு செயல் புரிகின் றனவோ அவ்வாறே நாங்களும் பலதரப்பட்ட சமுதாயப்பணிகளில் அவற்றிற்கு ஈடாகப் பங்கு கொண்டு எங்கள் பணியைச் செவ்வனே செய்து வருகிறோம். ஆனால் தமிழக அரசோ, அவர் களுக்குச் செய்யும் உதவிபோல் எங்களுக்குச் செய்வதில்லை. குறிப்பாகச் சொல்லப்போனால், அரசின் பணத்தை எங்கள் வங்கி களில் டெபாசிட் செய்வதில்லை.



இந்த வேறுபாடு மாறி நாட்டு டைமை ஆக்கப்படாத எங்களைப் போன்ற பெரிய வங்கிகளில் "அரசாங்கப் பணத்தை டெபாசிட் செய்யலாம். நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளுக்குக் கிடைக்கும் அத்தனை சலுகைகளும், உதவி களும், நாட்டுடைமையாக்கப்படாத, எங்களைப் போன்ற பெரிய வங்கிகளுக்கும் வழங்கப்படும்" என்று 'தமிழக அரசு' ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வேன்.

திரு. ஆர். வீரமணி (சேர்மன், ஜெம் கிரானைட்ஸ்).

தமிழ் நாட்டிலுள்ள பெரும் பாலான கல் உடைக்கும் குவாரிகள் தமிழக அரசுக்குச் சொந்த மானவை. இது போதாதென்று, தனியார் துறையிடமிருந்து குவாரி களையும் அரசு தானே எடுத்துக் கொண்டு, அத் தொழிலை நடத்தி வருகிறது. இதனால் எங்களுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது மட்டு மல்லாமல், இத்தொழிலை மேம் படுத்த நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள், குறிப்பாக இத் தொழிலைப் பற்றிய எனது மேல் நாட்டுப் படிப்பு அனைத்தும் பயனற்றுபோயுள்ளது.



நான் முதல்வரைச சந்தித்தால், அரசு எங்களிடம் இருந்து எடுத்துக் கொண்ட குவாரிகளைக் காலத் தாமதமின்றித் திரும்பத் தருமாறு கேட்பதுடன், தற்பொழுது அரசுக்குக் கிடைக்கும் லாபத்தை விட பல மடங்கு லாபம் பெற்றுத் தருவதுடன், மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின் மூலம் அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டித் தருவோம் என்றும் உறுதி கூறுவேன்.

திரு எஸ்.வி. சேகர் (திரைப்பட நடிகர்).

இதுவரை சுமார் 2,100 தடவை என்னுடைய நாடகங்கள் மேடை






யேறி இருக்கின்றன. இதற்குப் பாராட்டு விழா நடத்த முதல்வரை அழைப்பேன். மூன்றாவதாக கலைவாணர் அரங்கத்தில் ஒரு நாள் வாடகை ரூ. 2,000/- உள்ளது. இதனை ரூ. 1000/- ஆகக் குறைக்கு மாறு முதல்வரை வேண்டுவேன்.

திரு ஆர்.சி. பாபு, (சத்யா ஜுவல்லரி).

சென்னையில் குடிசைப் பகுதி களில் தீப்பிடித்துக் கொண்டால், தமிழக அரசு மாற்று இடமாக சில பகுதிகளை அவர்களுக்குத் தரு கிறது. ஆனால் போதிய கழிப் பறை வசதிகள் செய்துத் தரப் படுவதில்லை. அதனால் அவர்கள் ஏற்கெனவே சீர்கெட்டுள்ள நடை பாதைகளை கழிப்பறைகளாக உபயோகப்படுத்தி சுகாதாரக் கேட்டை உருவாக்குகின்றனர்.



நான் முதல்வரைச் சந்தித்தால், அவர்களுக்கு இருப்பிடம் ஒதுக் கும் அதே நேரத்தில், போதிய கழிப்பறை வசதிகளையும் செய்து தருமாறு வேண்டிக் கொள்வேன்.ஃ

பொருள்களை வாங்குவதில் பெண்களே புத்திசாலிகள்



நல்லி குப்புசாமி

பொருள்களை வாங்க வேண்டும் என்ற ஆர்வம் ஆண், பெண் இருபாலார்க்கும் இருக்கிறது. ஆனால் வாங்குகிற பொருள் பற்றி ஆராய்கிற, தரம் பற்றி யோசிக்கிற மனப்பான்மை ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம். இது நான் அனுபவத்தில் கண்ட உண்மை!

ஓர் ஆண் தனக்கு வேட்டி சட்டையோ, பேண்ட் சட்டையோ அல்லது சஃபாரி, சூட் துணிகளோ வேண்டும் என்றால் குறைந்த பட்சம் நான்கு அல்லது ஐந்து அயிட்டங்களைப் பார்த்து அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பார். ஆனால் பெண் அப்படி யல்ல. ஐம்பது அயிட்டங்களைப் பார்த்தாலும் திருப்தி ஏற்பட்டிருக்காது. ஐந்தாறு கடைகளுக்குப் போனாலும்கூட முடியாது. இன்னும் இரண்டொரு கடைகளைப் பார்க்கலாம் என்றுதான் சொல்வார்கள்.

இது ஏன்?

ஆண் - பெண் இருவருக்கிடையேயும் உள்ள தரம் அறியும் மனோபாவம்தான் காரணம்!

ஆண் தனக்கு ஒரு துணியைத் தேர்ந்தெடுக்கும்போது முதலில் அவன் கவனிப்பது அதன் விலையைத்தான். பிறகுதான் அது என்ன தயாரிப்பு என்று பார்ப்பார். கடைசியாக அவர் கண்ணில் படுவது அதன் நிறம். தனக்கு அது சூட் ஆகும் என்று தெரிந்தால் போதும். 'செலக்ஷன் ஓவர்'. பில் போடச் சொல்லிவிட்டுக் கவுண்டருக்குப் போய்விடுவார். ஆனால் பெண் அப்படியல்ல.

ஒரு பொருளை ஒரு பெண் வாங்கும்போது முதலில் கவனிப்பது விலையை அல்ல. தரத்தைத்தான். அது நல்ல தரமான தயாரிப்பா? நீண்ட நாள் உழைக்கக் கூடியதா? கெட்டிச்சாயந்தானா? டிசைன் புதுமாதிரியானதா இல்லை பழம் பாணியா? இவ்வளவையும் பார்த்தே ஒரு பெண்மணி ஒரு புடைவையை தேர்வு செய்கிறார்.

இப்போதுகூட அவர் தேர்வு செய்துவிட்டார் என்று சொல்ல முடியாது. தேர்வுக்கு எடுத்து வைத்துள்ளார். இன்னும் இது போலப் பலத் தேர்வுகளைச் செய்தபின்னர் அவைகளில் இருந்து ஒன்றோ, இரண்டோ தேர்ந்தெடுக்கப்படும். இதனால் அவர்கள் காலையில் கடைக்குள் நுழைந்தால் மாலைவரைக் கூட வீடு திரும்ப மனம் இன்றித் தேர்வு செய்து கொண்டே இருக்கிறார்கள்.

பெண்கள் தேர்வில் இன்னும் ஒரு விஷயம், எல்லாமே பிடித்திருந்தாலும், பிடித்த அந்தக் கலரில், பார்டரில், டிசைனில் ஒரு புடைவை அந்தப் பெண் மணிக்குத் தெரிந்தவர்கள் 'சர்க்கிளிலோ' தெருவிலோ, யாரேனும் கட்டியிருந்ததாக கொஞ்சம் தோன்றினாலும் போதும். அந்த செலக்ஷன் அவுட். தங்களுடையது, புதுமாதிரியாக, மற்றவர்கள் மனதைக் கவர்வதாக அமைய வேண்டும் என்பதில் பெண்களின் அக்கறை செலக்ஷனைப் பொறுத்த வரைத் தனித் தன்மை வாய்ந்தது. ஆண்கள் அப்படியில்லை. பெண்கள் கடைசியாகப் பார்ப்பது, அல்லது கவலைப்படாதது என்று கூடச் சொல்ல வேண்டியது விலை. இதற்கும் காரணம் தரமான பொருளுக்கு நியாயமான விலை என்னவாக இருக்கும் என்பதை அவர்கள் அறிந்து வைத்திருப்பது தான்.

எனவே துணி மணி வாங்கப் போவது என்றால் பெண்கள் கணவனை அழைத்துப் போகா விட்டாலும், சிநேகிதிகளை, அக்கம்பக்கத்து வீட்டுப் பெண்களை அழைத்துப் போகத் தவற மாட்டார்கள். ஆனால் ஆண்கள் தனக்கு உற்ற சிநேகிதர்களைக்கூட தனக்குத் துணி தேர்வுசெய்ய உடன் அழைத்துப் போக நினைப்பது அபூர்வம். எனவேதான் எந்த ஜவுளிக்கடைக்குள் போனாலும் ஆண்களைவிட பெண்கள் கூட்டமே அதிகம் காணப்படுகிறது.

காரணம் பெண்கள் பொருள்களைத் தேர்வு செய்வதில் புத்திசாலியாக இருப்பதே!

சாதனையும் செய்வேன்


க. பஞ்சாபகேசன்

சிந்தனைக்குச் சோறு போட்டேன் சில நாளில்
சாதனைகள் செய்யவும் திட்டமிட்டேன்
விந்தைகள் நிகழுமென்று காத்திருந்தேன்
வந்ததோ சோதனையின் ஓட்டமேதான்

சொந்தங்கள் சிரிப்பதற்குக் காரணமானேன்
செயலிழக்க விரும்பாமல் மேலும் மேலும்
எந்தனை அதில் ஈடு படுத்திக் கொண்டு
காலமது கனிந்து வரக் காத்திருந்தேன்

கனிந்து வந்தக் காலத்தில் எனை மறந்து
கொள்கையைப் பறக்க விட்டு லாபம் பார்க்க
வினையான வாழ்க்கையில் சிக்கல் கண்டு
மறுபடியும் தொடக்கத்தில் வந்து நின்றேன்

சினத்துடன் சொந்தங்கள் மீண்டும் சிரிக்க
செயல்பாட்டில் சிந்தனையைச் செயல் படுத்த
முனையும்போ தென்வயது முதிர்ந்து போக
மூவுலகும் எனை எள்ளி நகையாடிற்று!



போட்டோ: எம். நடராஜன்

கவிதை பிறந்தது! கடலலை சிரித்தது!

மோகித்ததாசன்

அந்திவானத்து அழகின் சிரிப்பில்
அலைகடல் இசைக்க வெண்மணற் பரப்பில்
குந்தி இருந்தேன். சிந்தனை நகைத்தது;
குழலும் யாழிசை சதங்கை ஒலித்தது.
கடல்அலை எழுப்ப கலைமகள் சிரித்தாள்;
தென்றலை உடையென தரித்தவள் நடந்தாள்.
"பாடுக! ஆடுக! பைந்தமிழ்ப் பாவாய்
படர்மணங் குறைய நறுமணப் பூவாய்!
வலம்புரிச் சங்கே! வள்ளுவன் குறளே!
வள்ளல்கள் வளர்த்த இலக்கியத் திறனே!
சிலம்பும் நாலடி சிறப்புடன் பூண்டு;
சிந்தையில் நாலணி நன்மொழி கொண்டு;
கம்பனின் கவியும்; வியாசரின் விருந்தும்
காவியம், ஓவியம், இலக்கியத் திருந்தும்
தெம்புடை கருத்துத் தெளிவுரை தந்திடு!
சிந்தனை தெளியச் சிலிர்த்தது உடலம்!
சிரிப்பொலி, பட்டாசு, சேர்ந்து ஒலிக்க;
கருப்பொரு ளாகிக் கவிதைபிறந்தது!
கடலலை வெண்ணுரை தவழச் சிரித்தது!


தாயின் இழப்பு

தம்பி சீனிவாசன்

கூட்டத்தில் கைவிட்டுக்
காணாமல் போவாயோ?
காதணியை எங்கோ
களவாட விடுவாயோ?
கால்கொலுசுத் திருகாணி
கழன்று விழுந்திடுமோ?
பட்டுத் துணி கிழியக்
கறையாக்கி வருவாயோ?
விளையாட்டில் படுகாயம்
வினையாகிப் போய்விடுமோ?
வீணான தின பயங்கள்
பொய்யாச்சு
சந்தோஷம்

* * *

ஐயையோ, என்ன இது உன் முகத்தில்!
அறியாது போனேனே,
எப்போது நீ தொலைத்தாய்?
யாரோ பறித்து விட்டார்
கொள்ளைச் சிரிப்போடு
கள்ளமிலாப் பிள்ளைமனம்
எங்கே தொலைத்துவிட்டாய்?



போட்டோ : டி. ஆர். ஸ்ரீநிவாசன்
திருக்குடந்தை ஒப்பிலா அப்பன்
அமுதசுரபி தீபாவளி மலர் '91

படிப்பு வாசனையற்ற ஒரு கிராமத்தில் பல ஆண்டுகளாக ஆண் வர்க்கத்துக்கு அடிமைப்பட்டுக் கிடந்த பெண்களின் அவல வாழ்க்கையை உதறி எறிந்துவிட்டு புது உலகம் காணப் புறப்பட்டு விட்ட தமயந்தியை ஊராரின் தண்டனை என்ன செய்யும்?

தமயந்தி அண்ணாந்து பார்த்தாள். பயங்கர அவசரத்துடன் கூட்டம் கூட்டமாய் ஆகாயத்தில் பச்சையும் வெள்ளையுமாய் கறுப்பும் சாம்பலுமாய் பறவைகள் பறந்து கொண்டிருந்தன. கரிய மேகக் கூட்டங்கள் உருண்டு திரண்டு நகரும் ஸாகவத்தைச் சற்று நேரம் பார்த்தபடி அவள் நின்றபோது பெரிய பெரிய பொட்டாக நீர்த்திவலைகள் மேலே விழுந்தன. சில்லென்று அடித்த காற்றில் உடம்பு சிலிர்த்தது.

"பெரிய மழை வரும்போல இருக்கு".


அவள் திடுக்கிட்டுக் குரல் வந்த திசையைப் பார்த்தாள். வேலிக்கப்பால் ஓர் ஆண் நின்றிருந்தான். முன்பின் பரிச்சயமில்லாதவன். நிச்சயம் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவன் இல்லை. தமிழ் பேசும் விதத்தில் தெரிந்தது. அவள் கலவரத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"இந்தக் கட்டடத்திலே நீ தனியா என்ன செய்யறே?" என்றான் அவன். அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

இவன் அசாத்திய துணிச்சல்காரன் தான்.

இவன் உள்ளூர்வாசி இல்லாதது மட்டுமில்லை, இந்த ஊரின் கட்டுப்பாடுகளைப் பற்றி ஏதும் அறியாதவன். அவன் தொடர்ந்து அவளைப் பார்த்துச் சிநேகிதமாகச் சிரித்தான். "இங்கே என்ன அல்லி ராஜ்யமா?" 'ஆண்கள் யாரும் பிரவேசிக்கக் கூடாதுன்னு எழுதியிருக்கு?' என்று கட்டடத்தின் மேல் இருந்த எழுத்துகளைச் காண்பித்தான். அவளுக்குக் கலவரம் அதிகரித்தது. எத்தப்பனோ எல்லப்பனோ எந்த நிமிஷமும் காட்டிலிருந்து திரும்பலாம். இவனைக் கண்டால் முதுகுத் தோலை உரித்துவிடுவார்கள். அவர்கள் வருவதற்குள் இவன் போய்விட வேண்டுமே என்றிருந்தது அவளுக்கு.

"இந்த வேலியைத் தாண்டி நான் உள்ளே வரலாமா?" என்றபோது அவனுடைய கண்கள் அவளுடைய ரவிக்கை போடாத தோளின்மேல் அமர்ந்திருந்தன.



சிறகுகள்

வாஸந்தி



அவள் அவசரமாகக் 'கூடாது' என்று தலையை மட்டும் ஆட்டிவிட்டு உடனடியாகக் கட்டடத்துக்குள் நுழைந்தாள்.

உள்ளே சென்று தரையில் அமர்ந்த போது நெஞ்சு படபடத்தது. வெளியே கவிந்துகொண்டு வந்த மேகத்தினால் அறைக்குள் இருள் படர்ந்திருந்தது. அறையின் மூலையில் விறகு அடுப்பில் சோற்றுப்பானையில் உலை கொதித்துக் கொண்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் சற்றுத் தள்ளி பொம்மக்கா குழந்தைக்குப் பால் புகட்டிக் கொண்டிருந்தாள்.

"யார்ரீ அது?" என்றாள்.

"யாருமில்லையே " என்று புளுகும் போது நெஞ்சு மறுபடி அடித்துக் கொண்டது.

"பேச்சுக்குரல் கேட்டது?" என்றாள் பொம்மக்கா விடாமல்.

"வெளியிலே இருக்கும், எனக்குத் தெரியாது".

"கொஞ்சம் சோறு பதம் பாரு" என்றாள் பெரியவள்.

தமயந்தி எழுந்தாள். "இன்னும் ஆகல்லே" என்று அடுப்பைத் தணித்து வைத்தாள். அருகில் துவையலுக்கு அரைக்க வைக்கப்பட்டிருந்த வெங்காயத்தை எடுத்துப் பச்சைமிளகாயைச் சேர்த்து கல்லில் அரைக்க ஆரம்பித்தாள். 'அல்லி ராஜ்யமா?' என்று அந்த ஆள் கேட்டது நினைவுக்கு வந்தது. அவன் பரிகாசமாகக் கேட்டது போலிருந்தது. பஞ்சாயத்துக் கூட்டங்களின்போது யாராவது ஆண் கூட்டத்துக்கு வரவில்லையென்றால் "வீட்டுக்குள்ளே அல்லி ராஜ்யம் நடக்குது" என்பார்கள். 'பெண்டாட்டி போன்னாத்தான் வருவான்' என்று சிரிப்பார்கள். பெண்டிர் ஒதுங்கியே இருக்கும்போது அவர்களை ஏன் இவர்கள் பேச்சில் இழுக்கிறார்கள் என்று அவளுக்குக் கோபம் வரும். நாட்டாண்மை பூராவும் ஆண்கள். அதுவும் எத்தப்பனும் எல்லப்பனும் இருந்துவிட்டால் அந்த இடத்தில் பெண்கள் பதுங்கித்தான் நிற்பார்கள். "எல்லாம் உங்க நன்மைக்குத்தான்" என்பார் எத்தப்பன் மாமா.

"கெடுபிடி இல்லேன்னா நம்ம ஜனத்திலே கட்டுப்பாடு இருக்குமா?" என்பார். சண்டை கிண்டையென்று இங்கு யாரும் போடுவதில்லைதான். பஞ்சாயத்துக்கு வரும் வழக்குகள்கூட சாமான்யமானவைதான்.

"நாம வாயைத் தொறந்தாதானே சண்டை வரும்?" என்றாள் பொம்மக்கா. முன்பு ஒரு முறை இதே மாதிரி அவளுடன் சேர்ந்து விலக்கானபோது அப்பொழுது தமயந்திக்குத் திருமணமாகவில்லை. சாதாரணமாகவே பொம்மக்கா அதிகம் பேசி அவள் பார்த்ததில்லை. அன்று அபூர்வமாக ஏதோ பேச்சின் இடையில் இதைச் சொன்னபோது ஒரு சோகம் இழையோடிற்று. அன்று இன்னும் மூன்று பேர் வயதான பெண்கள் அவர்களுடன் விலக்காகி அமர்ந்திருந்தார்கள். வீட்டு விலக்காகியிருக்கும் பெண்களுக்காக முன்பு ஊரின் எல்லையில் ஓர் ஓலை வேய்ந்த குடிசைதான் வேய்ந்திருந்தார்கள். அந்தப் பக்கம் எந்த ஆணும் போகக் கூடாது என்ற கிராமத்து நியதியை மீறி ஒரு வெளி ஆள் உள்ளே எப்படியோ ஒரு முறை நுழைந்துவிட்டான். அவனைக் கட்டி வைத்து உதைத்தபோது பொம்மக்கா அழுததாகச் சில பெண்கள் சொல்வார்கள். அதற்குப் பிறகுதான் இந்தச் செங்கல் கட்டடம் வந்தது. எதற்காக இப்படித் தனியாக உட்கார்த்தி வைக்கிறார்கள் என்று யாரும் கேட்டதில்லை. கேட்க வேண்டும் என்றும் தோன்றியதில்லை.

துவையலை அரைக்கும்போது 'அந்த ஆள் சொன்னது சரிதான், இங்கு அல்லி ராஜ்யம்தான்' என்று தமயந்தி நினைத்துக் கொண்டாள். ஊரில் எல்லா ஆண்களும் பயப்படுவது அம்மனுக்குத்தான். இந்த ஊரில் போலீஸ் கிடையாது. அம்மன்தான் போலீஸ்.

அவள் துவையலை வழித்து எடுத்து வைத்துப் பானையிலிருந்த நீரில் கல்லையும் கையையும் கழுவி மீண்டும் கதவுக்கு வெளியே வந்து நின்று கொண்டாள்.

"அடியே இருட்டிப்போச்சு. வெளியிலே ஏன் நிக்கிறே?" என்ற பொம்மக்காவுக்கு "உள்ளே புழுங்குதுக்கா" என்று பதில் சொன்னாள். "வர்ற மழையும் நின்னுடுச்சே?"

இன்னும் முழுசாக இருட்டவில்லை. மலை உச்சியிலிருந்து இருள் விரிய ஆரம்பித்திருந்தது. வேலிக்கு அப்பால் தெரிந்த மலையடிவாரத்தில் இன்னும் வெளிச்சம் தெரிந்தது. அந்த ஆள் எங்கேயாவது தென்படுகிறானா என்று கண்களைத் துழாவினாள். எங்கேயும் காணோம். அவளுக்குத் தெரியாத உலகத்தின் பிரதிநிதி அவன் என்னும் விஷயம் அவளது ஆர்வத்தைக் கிளப்பிற்று. அவனை சுவாரஸ்யப்படுத்திற்று.

"இந்த வேலியைத் தாண்டி நீ என்னிக்காவது போயிருக்கியா பொம்மக்கா?"

குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு பொம்மக்காவும் வந்து நின்றாள்.

"எங்க போறது?" என்று கேட்டாள். சுருக்கமாக' தொலைவை, மலையடிவாரத்தைத் துழாவும் பார்வை ஒன்று பார்த்தாள். அன்று ஒரு நாள் அடி வாங்கிய வழிப்போக்கனின் நினைவு அவளுக்கு வந்திருக்கும் என்று தமயந்தி நினைத்துக்கொண்டாள்.

"அங்கெல்லாம் பெண்கள் இஸ்கோலுக்குப் போறாங்களாம். வேலைக்குப் போறாங்களாம். ஆண்களுக்குச் சமதையா".

"போகட்டும்!" என்று பொம்மக்கா சிரித்தாள். "நம்ம ஆண்களே படிச்சு உத்தியோகம் பார்க்கப் போகல்லே. ராக்கப்பன் ஒருத்தன் படிச்சு என்ன கிழிச்சுப்புட்டான்? உத்தியோகமும் கிடைக்கல்லே. படிச்ச கர்வத்திலே காட்டு வேலைக்கும் இப்ப லாயக்கில்லே. தப்பா நினைக்காதேடி".

ராக்கப்பன் ஒரு மோசமான உதாரணம் என்று தமயந்தி நினைத்துக் கொண்டாள். அவளைவிட அவன் நான்கு வயது பெரியவன். சின்ன வயதில் சேர்ந்து விளையாடினதுதான். அப்பொழுதெல்லாம்வெகுளித்தனமாகப் பேசிச் சிரிப்பான். பிடிவாதம் பிடித்து நாலு கல் தொலைவில் இருக்கும் பள்ளிக்குச் சென்று படித்தவன். மெல்ல மெல்ல எல்லாரிடமிருந்தும் விலகிப் போனான். முன்பிருந்த கலகலப்பு இல்லை. வெள்ளைச் சிரிப்பு இல்லை. விசனமா, கர்வமா என்று புரியாத ஒரு பாவனையுடன் வளைய வந்தான். ஆனால் அவன்தான் அவளுக்கு முறை மாமன்.

"அதெல்லாம் வேற உலகம்டீ தமயந்தி" என்றாள் பொம்மக்கா. "நாம இங்கதான் கெடக்கணும்". பிறகு அடிக்

குரலில் சொல்லிக் கொண்டாள். "படுக்கறதும் புள்ளையைப் பெக்கறதும்கூட ஊருக்காகத்தான். நமக்காக இல்லே".

தமயந்தி திடுக்கிட்டாள். ஆனால் எதுவும் கேட்கவில்லை. சாதாரணமாக விலக்காகி அமர்ந்திருக்கும் காலத்தில் பெண்கள் தங்களுக்குள் ஏதேதோ அந்தரங்கங்கள் பேசிக் கொள்வார்கள். தமயந்திக்குச் சிலது புரியும்; சிலது புரியாது. ஆனால் காதைத் தீட்டிக் கொண்டு எல்லாவற்றையும் கேட்கப் பிடிக்கும். இப்போது வேறு எந்தப் பெண்ணும் இல்லாத காரணத்தால் இவள் தன்னிடம் சொல்கிறாள் என்று தோன்றிற்று. அல்லது கல்யாணமாகி விட்டவள் என்கிற எண்ணமிருக்கலாம். அடிவயிற்றில் காரணம் புரியாமல் சங்கடப் படுத்திற்று.

சடசடவென்று மழை பெய்ய ஆரம்பித்தது. இருவரும் அவசரமாக உள்ளே நுழைந்து வாசல் கதவைச் சாத்தினார்கள். அறையின் மூலையில் சிறிய சிம்னி விளக்கு எரிந்தது. அதன் வெளிச்சத்தில் அவர்களது நிழல்கள் கூரை வரை எழுந்தன. லேசாகத் தாலாட்டுப் பாட்டுப் பாடிக் குழந்தையைத் தூங்க வைக்கும் பொம்மக்காவைப் பார்க்கையில் தமயந்திக்குச் சொல்லத் தெரியாத பச்சாதாபம் ஏற்பட்டது. பொம்மக்காவின் குரல் மெல்லியதாக இனிமையாக இருந்தது. இவளுடைய புருஷன் நாகப்பன் முரடன். குடியும் நல்ல சாப்பாடும் தன்னுடைய பிறப்புரிமை என்று நினைப்பவன். அது இல்லாத நாள்களில் இவள் தலை முடியைப் பிடித்து இழுத்து நடுத் தெருவில் அடிப்பான், பெரியவர்கள் சமாதானப்படுத்தி உள்ளே அனுப்பி வைப்பார்கள். இவளுடைய பாட்டை அவன் என்றாவது கேட்டிருப்பானோ என்று தமயந்தி வியந்து கொண்டாள். சமையலறைச் சுவர்களில் பொம்மக்கா ஓவியம்கூட வரைவாள். முழுக்க முழுக்க பெண்களின் உருவங்கள். ஆகாயத்துக்குக் கையை உயரத் தூக்கிக் கொண்டு நிற்கும் உருவங்கள். இரண்டு கைகளாலும் எதையோ தாவிப் பிடிக்கிற மாதிரி.

"எதுக்குக்கா இவங்கள்ளாம் இப்படி நிக்கிறாங்க?" என்று அவள் வியந்திருக்கிறாள். பொம்மக்கா சும்மா சிரிப்பாள்.

"விளக்கமெல்லாம் என்னைக் கேக்காதே. எனக்கு அப்படித்தான் தோணுது..."

குழந்தை தூங்கிவிட்டது. அதை ஒரு கந்தல் துணியில் கிடத்திவிட்டு பொம்மக்கா எழுந்தாள். இருவரும் மௌனமாகச் சாப்பிட்டுப் படுத்தார்கள். படுத்த சிறிது நேரத்தில் பொம்மக்கா தூங்கிப்போனாள்.

தமயந்தி தூக்கம் வராமல் புரண்டாள். மாலையில் பார்த்த அந்த வாலிபனின் முகம் கண்ணில் நின்றது. அவனுடைய சரளமான பேச்சும் சிநேகிதச் சிரிப்பும் வசீகரமாக இருந்தன. அந்த வேலிக்கப்பால் இருக்கும் உலகம் அப்படித்தான் இருக்கும் என்று



தோன்றிற்று. பெண்கள்கூட அப்படித் தான் இருக்கவேண்டும் அந்த உலகத்தில். சிறகு முளைத்த பட்சிகள் மாதிரி. பெண்களைப் பற்றிப் பேச ராக்கப்பன் விரும்புவதில்லை. உண்மையில் எதைப் பற்றியுமே அவளுடன் பேச விரும்பாதவன்போல் நடந்துகொள்கிறான். அவளைத் திருமணம் செய்து கொள்ள அவன் விரும்பவில்லையோ என்னவோ, ஆனாலும் அவளுடைய மாமனாகிப் போன காரணத்தால் அவனுக்கு வேறு வழியும் இல்லை. எதையோ தொலைத்து விட்டவனைப்போல, அவன் வேறு நினைவுகளில் அமிழ்ந்தவனாய் அவளுடன் படுத்து உறங்குகிறான். அவனிடமிருந்து அவள் எதையும் எதிர்பார்க்கவில்லை. அந்தக்கிராமத்தில் எல்லாருடைய வாழ்க்கைச் சக்கரமும் அப்படித்தான் ஓடுகிறது. திருமணம் என்பது ஒரு சமூக ஏற்பாடு. வெளியிலிருந்து எந்த ஆளும் இங்கு வர முடியாது. இங்கிருப்பவர்களேதான் சுழன்று சுழன்று முறை சொல்லி அதுவும் ஒரு சமூகக்கடமை என்பது போல தங்களுக்குள்ளே மணமுடிக்க வேண்டும். ஐந்து வயசிலேயே ராக்கப்பன்தான் அவளுடைய கணவன் என்று அவளுக்குத் தெரியும்.

வெகு நேரம் கழித்து அவளுக்கு மெல்லத் தூக்கம் வந்தது. கனவில் வேலிக்கப்பால் இருக்கும் உலகம் தெரிந்தது. பொம்மக்காவின் ஓவியத்தில் இருக்கும் பெண் உருவங்களைப்போல அவள் கைகளை உயரத் தூக்கிச் சிறகுகளாய் விரித்து அந்த உலகத்துக்குத் தாவினாள். "நான் இஸ்கோலுக்குப் போறேன். உத்தியோகம் பார்க்கறேன்" என்று அரற்றிய போது ராக்கப்பன் சிரித்தான். 'அடச்சீ நீயா' என்றான். 'ஊர் ஜனம் உன்னை ரவிக்கைகூடப் போட விடாது'. நான்காம் நாள் காலையில் விடிவதற்கு முன்பே விழிப்பு வந்தது. அவள் பொம்மக்காவிடம் சொல்லிவிட்டுச் சிற்றருவிக்குச் சென்று தலை முழுகி வீட்டை அடைந்தாள். ராக்கப்பன் பட்டணத்துக்குப் போயிருப்பதாகப் பாட்டி சொன்னாள். அவன் இல்லாததால் எந்த வித்தியாசமுமில்லாமல் நாள் சென்றது. படுத்ததும் உறக்கம் வந்தது.

நான்கு நாள் கழித்து ராக்கப்பன் வந்தான் நல்ல செய்தியுடன். அவனுக்குப் பட்டணத்தில் வேலை கிடைத்து விட்டதாம். அதை அவன் நேரிடையாக அவளிடம் வந்து சொல்லவில்லை. வீட்டில் பொதுவாகப் பெரியவர்கள் பேசும்போது அவளுக்கு விவரம் தெரிந்தது. இனிமேல் ராக்கப்பன் பட்டணத்தில் தான் அறை எடுத்துக்கொண்டு வசிப்பான் என்றும் தெரிந்தது. பகபக வென்று அவளுள் ஆசைகள் துளிர்த்தன. ராக்கப்பனைத் தனியாகச் சந்திக்கும் தருணத்தில் அவள் அவனிடம் மெல்லிய குரலில் சொன்னாள்.

''பட்டணத்துக்கு நானும் வர்றேன் மாமா. என்னையும் கூட்டிட்டுப்போ". ராக்கப்பன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான். "அதெல்லாம் முடியாது புள்ளே. ஊர் சம்மதிக்காது. பெண்களை வெளியிலே அனுப்பற வழக்கம் இங்க இல்லேன்னு உனக்குத் தெரியாது?"

அவள் பேசாமல் நின்றாள். எத்தனையோ கேள்விகள் மனசைக் குடைந்தன. "நீ எடுத்துச்சொல்லேன் ஊருக்கு. உன் பெண்டாட்டிதானே நான்? புருஷனோடு சேர்ந்திருக்கணும்னு பெண்ஜாதி நினைக்கிறதில என்ன தப்பு?"

ராக்கப்பன் நிமிர்ந்து அவளுடைய பாசிமணி மாலைகளையும் ரவிக்கையணியா மார்பைப் போர்த்திய மெல்லிய சேலைத் தலைப்பையும் பார்த்து முணுமுணுத்தான். "வெளியுலகத்துப் பெண்களுக்கும் உனக்கும் சம்பந்தமேயில்ல. நீ என் பெண்ஜாதின்னு அவங்க இடையிலே எப்படி நிறுத்தறது?"

"அங்கே போனா நானும் ரவிக்கை போடுவேன்".

அவன் சிரித்தான்.

"ரவிக்கை போட்டா மாறிடுவியா? அதெல்லாம் வேண்டாம். முதலாவது ஊர் சம்மதிக்காது. ஊரை விரோதிச்சுக்கிட்டேன்னா எனக்கு நல்லதில்லே".

அவளுக்குத் துக்கம் அடிவயிற்றை சுழற்றிக் கொண்டு எழுந்தது. ஊரை எதிர்த்துக் கொண்டு போனவர்களிடம் பஞ்சாயத்து கருணை காட்டாது. அந்த உதாரணங்களை இவன் அவளுக்கு ஞாபகப்படுத்த வேண்டியதில்லை. வெளி ஆள் உள்ளே நுழையக்கூடாது என்பதுபோல இந்த இடத்தைச் சேர்ந்த பெண் வேலியைத் தாண்டக்கூடாது. ஆண் தாண்டலாம். இங்கு இருக்கும் பெண்கள் இவர்களுடைய உடைமை.

அவளுக்குத் தெளிவாக ஏதும் சொல்லத் தெரியவில்லை. பலவிதமான உணர்ச்சிகள் நாபியிலிருந்து பொங்கிப் பொங்கி மூச்சை முட்டின.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. என்னையும் கூட்டிக்கிட்டுப் போ. நீ சம்பாதிக்கிறே இல்லே? ஊர் தயவு எதுக்கு?"

அவனுக்கு அத்தனை கோபம் வரும் என்று அவள் நினைக்கவில்லை. பளாரென்று அவள் கன்னத்தில் அவன் அறைந்தபோது அவள் நிலைகுலைந்து போனாள். ஆனால் கண்ணில் நீர் வரவில்லை. கன்னத்தின் எரிச்சலைத் தடவியபடி அவனை தீர்க்கமாகப் பார்த்தாள்.

" நீ இல்லாம இங்க தனியா இருக்கிறது எனக்கு இஷ்டமில்லே" என்றாள்.

"தனி என்ன? எத்தனை பேர் இருக்காங்க அந்த வீட்டிலே? என்னுடைய அண்ணங்க, தம்பி, எல்லாரும் உனக்கு மாமா உறவு – வெளி ஆள்கள் இல்லே".

அவள் சடக்கென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவள் சொல்ல நினைத்ததை அவன் புரிந்து கொண்டானா என்று அவளுக்குத் தெரியவில்லை. மின்னல் கீற்றுபோல அவன் பார்வையில் சங்கடம் தெரிந்தது. அவளை நேராகப் பார்க்காமல் எங்கேயோ பார்த்தபடி சொன்னான்.

"இந்தக் கிராமத்து வழக்கப்படிதான் நீ இருந்துக்கணும். நான் லீவு நாளைக்கெல்லாம் இங்கே வருவேன். அதனாலே உனக்குச் சங்கடம் ஏதும் இருக்காது".

அந்தக் கணத்தில் அவனை அவள் வெறுத்தாள். 'சீ! நீயும் ஒரு புருஷனா? என்று உள்ளுக்குள் கெட்ட வார்த்தைகள் சொல்லிச் சபித்தாள். "சங்கடம் ஏதும் இருக்காது".

ஆக, அவளுடைய நிலை அவனுக்குப் புரியாமல் இல்லை. எத்தனை பெரிய கோழை . அவன்! இல்லை, இல்லை. அது கோழைத்தனம் இல்லை. திமிர். எல்லாப் பெண்களும் சொல்வது சரிதான். இவன் திமிர் பிடிச்சவன். என் விசனத்தைப் புரிஞ்சுக்காத, புரிஞ்சும் மதிக்காத திமிர். படிச்சவன் இப்படியிருந்தா அந்தப்படிப்புக்குத்தான் கேவலம்.

மனசில் திமிறிக்கொண்டு பாயும் உணர்ச்சி வேகத்தை அமுக்கமுடியாத படபடப்புடன் அவள் தோட்டத்தில் வேலை செய்யக் கிளம்பினாள். தெருவெல்லாம் வதவதவென்று குழந்தைகள். கோவணத்துக்குக்கூட வக்கில்லாத குழந்தைகள். குடும்பக் கட்டுப்பாடு வேன் ஒரு சமயம் இங்கு வந்தபோது வேலிக்கு அப்பாலேயே அடித்துத் துரத்தி விட்டார்கள். 'குழந்தை குட்டிங்க எங்களுக்கு நிறைய வேணும்' என்றார் எத்தப்பா, ஆவேசமாக அந்த வேனைப் பார்த்து. "எல்லாருக்கும் சோறு போடுவா எங்க ஆத்தா!" அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு தடியுடன் நின்ற ஆண்கும்பல் மெத்தனத்துடன் புன்னகைத்தது. தடியைக் கண்டவுடன் வேன் புழுதியைக் கிளப்பிக்கொண்டு நகர்ந்தது. அந்த நேரத்தில் அங்கு கூடியிருந்த பெண் கும்பலைப் பார்த்து எத்தப்பா தோரணையுடன் சொன்னார் –

"குழந்தை பெத்துப் போடறதைவிட உங்களுக்கெல்லாம் என்ன வேலை?" சிரித்துக் கொண்டு நின்ற ஆண்களோடு பெண்களும் சிரித்தார்கள்.

பொம்மக்கா மட்டும் சிரிக்காமல் நின்றிருந்தது தமயந்திக்கு இப்பொழுது நினைவுக்கு வந்தது. 'படுக்கறதும் புள்ளை பெக்கறதும் நமக்காக இல்லே' என்று அவள் சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தது.

ராக்கப்பன் பட்டணத்துக்குக் கிளம்பிப் போனான். 'வாரக் கடோசியிலே வருவேன்' என்று பொதுவாகச் சொன்னான். அதற்குப் பிறகு இரவு வேளைகளில் ஊரடங்கி மனிதன் முகத்தை அடையாளம் காண முடியாத இருளில், தனியாக அவள் கிடக்கும் பாயில் யாராவது ஒரு மாமன் படுத்தான். அவள் முரண்டு செய்ததை அறிந்த ஆயா சிடுசிடுத்தாள். "யாரும் செய்யாததையா செய்யிறே?" என்றாள். "உன் மாமன்கள்தானே?"

இதைத்தான் ராக்கப்பனும் சொன்னான். 'வெளியாட்கள் இல்லையே?' அதோடு வேறு ஏதோ சொன்னானே?

அவளுக்கு உடம்பெல்லாம் தகதகவென்று எரிந்தது. சிறகு முளைத்து எங்காவது இந்த வேலிக்கப்பால் பறந்து போய்விட முடியாதா என்றிருந்தது.

பொம்மக்காவின் ஓவியங்கள் ஏன் ஆகாயத்துக்குக் கையைத் தூக்கிக் கொண்டு நிற்கின்றன என்று இப்போது புரிந்தது.

வாரக் கடைசியில் ராக்கப்பன் வந்தபோது தமயந்தியைக் காணவில்லை என்றார்கள். எங்கே மாயமாய் மறைந்தாள் என்று யாருக்கும் தெரியவில்லை. உள்ளூர் குளத்திலோ குட்டையிலோ இல்லை. "வேலியைத் தாண்டி எங்கோ போய்விட்டாள் நிச்சயமாய்." என்றார்கள். 'வெளியாள் தொடர்பு ஏற்பட்டிருக்கும்' என்றார்கள். "வீட்டு விலக்காய் இருந்தபோது வெளியாள் ஒருத்தனோடு அவள் பேசியதை பொம்மக்கா பார்த்தாளாமே!"

பஞ்சாயத்து கூடிற்று. அம்மனுக்கு நேர்ந்துவிட்ட அபவாதத்துக்காக, கடா தண்டம் அளித்து பூஜை போட்டது. வேலியைத் தாண்டிப் போய்விட்ட பெண் திரும்பி வந்தாலும் சேர்த்துக் கொள்ள முடியாது என்றது.

ஆனால் தமயந்தி திரும்பி வரவேயில்லை.



வடிகால்

கர்நாடக மாநில தலைமை நீதிபதி

எஸ். மோகன்

உழைப்பே உயர்வாழ்வின் உயிர்மூச்சு. அந்த உழைப்பின் சிறப்பைப் பற்றியும், உண்மையே வெற்றி பெறும் என்பதையும் நமக்குத் தெளிவு படுத்துவது வடிகால்.

சிறையில் குறுகலான அறையில் ஒரு மூலையில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டான் சிங்காரம். அன்று காலையில் தான் பொன்னி வந்து அவனைப் பார்த்துவிட்டுப் போயிருந்தாள். அவளைச் சந்தித்த அனுபவம் அவனுடைய மனதை விட்டு நீங்கவில்லை. கடைசியில் அவனுடைய நகவிரலில் தன்னுடைய கண்ணீர்த் துளி சிந்தும்படி, முகம் குனிந்து விடைபெற்றுச் சென்ற நிகழ்ச்சி அவனை உறுத்திக் கொண்டுதான் இருந்தது.

"நீங்க குத்தவாளி இல்லீங்க! அது எனக்கு நிச்சயமாத் தெரியும். உலகமே ஒண்ணாச் சேர்ந்துக்கிட்டு உங்க மேலே பழியைப் போட்டாலும், இந்தப் பொன்னி ஒத்துக்க மாட்டா! நீங்க அப்படிச் செய்யக் கூடியவர் இல்லே!" - இதை அவள் அடிக்கடி சொல்லுவதுண்டு. அன்றும்கூட அதைப் போல் சொல்லிவிட்டுப் போனாள்.

"நான் வேணுமின்னு திருடலை! ஆனாலும் நான் செஞ்சது தப்புத் தான். நான் திருடியது என்னுடைய நாணயமான தொழிலுக்குக் களங்கம் ஏற்படுத்திடுச்சு. ஆனாலும் நான் அந்தப் பொருளை மறுபடியும் வாங்கிக் கொண்டாந்து வச்சிடலாம்னுதான் எடுத்தேன். அப்ப அது எனக்குத் தேவைப் பட்டிச்சி. அந்தப் பொருளைக் கொடுத்து வாங்குற பணம் ஓர் உயிரைக் காப்பாத்த முடியும்னு நான் நம்பினேன். அதனாலேதான் அப்படிச் செஞ்சேன். என்னோட நோக்கம் திருடறது அல்ல; ஓர் உயிரைக் காப்பத்தணும்கிறது தான்!"

பலமுறை இதை அவன் பொன்னியிடம் சொல்லி இருக்கிறான். கோர்ட்டில் அவனுக்காக வாதாடி நியாயம் பெற்றுத்தர வழக்கறிஞர் யாரும் இல்லை. அதனால் அவன் நீதிபதியின் முன்பாகவும் இதையேதான் சொன்னான். ஆனால் அவன் திருடன் என்றும், திருடியது துப்பாக்கியின் முக்கியமான பகுதி என்பதால் வன்முறையாளருக்கு உதவக்கூடியவன் என்றும், கம்

பெனியின் சார்பில் வழக்கறிஞர் வாதாடியதால் அவனுடைய குரல் எடுபடவில்லை.

நீதிபதியின் குரல் கணீர் என்று ஒலித்தவிதம் இப்போதும் செவியில் தெளிவாகக் கேட்பது போல இருந்தது. மரத்தில் ஆணி அறைந்தாற்போல, அது அழுத்தமாக அவனுடைய நெஞ்சில் இறங்கிற்று...

"முக்கியமான பொறுப்பில் இருந்த தொழிலாளி தனது கடமையிலிருந்து தவறிவிட்டான்; நாணயமாக வேலை செய்ய வேண்டியவன் திருடுவதற்கு முனைந்துவிட்டான்; அவன் திருடி விற்க முனைந்த பொருள் வன்முறையாளர்களுக்குப் பயன்படக்கூடியது. இவை அனைத்தும் உறுதியாகியுள்ளன. இவற்றால் விளையக்கூடிய சமூக சீர்குலைவை மனதிற்கொண்டு குற்றவாளி சிங்காரத்துக்கு மூன்று ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கிறேன்!"

பொன்னி அந்தத் தீர்ப்பைக் கேட்க நீதிமன்றத்துக்கு வரவில்லை. அவள்தான் எழுந்து நடமாடக்கூட முடியாத நிலையில் இருந்தாளே? சொல்லப் போனால் அவளை நலமாக்கி நடமாட வைப்பதற்காகத்தானே அவனே இந்தச் செயலில் ஈடுபட்டான்?

நடந்தவை எல்லாம் மீண்டும் மனத்திரையில் ஓடின.

சிங்காரம் செய்து கொண்டது காதல் திருமணம்தான். அவன் அதிகமாகப் படிக்கவில்லை. ஆனால் அவனுடைய தொழில் திறமையைக் கண்டு, அந்தத் துப்பாக்கி தயார் செய்யும் நிறுவனம் அவனுக்கு வேலை கொடுத்தது. தன்னுடைய செயல் திறமையால் அவன் படிப்படியாக உயர்ந்துவிட்டான். அந்தத் தொழிற்சாலையில் முக்கியமான பாகம் ஒன்றைத் தயார் செய்யும் பகுதியில் அவனைத் தலைமைத் தொழிலாளியாகவேபோட்டிருந்தார்கள்.

பொன்னியும் ஓர் எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்தான். ஆனால் அவள் படிப்பில் ஆர்வம் காட்டினாள். பள்ளிக்கூடப் பருவத்திலேயே மிக நன்றாகப் படித்து, உதவிச் சம்பளம் பெற்றுக் கல்லூரியில் சேர்ந்தாள். கல்லூரிப் படிப்பு முடிவடையும் நிலையில் தான் அவர்களுடைய காதல் கனிந்தது. இருவரும் திருமணம் செய்து கொள்ள எண்ணினார்கள்.

ஆனால் இருவருடைய பெற்றோரும் அதற்குச் சம்மதிக்கவில்லை. இருவருடைய சாதியும் வெவ்வேறாக இருந்தன. பொன்னிக்கு முறைப்பையன் வேறு திருமணம் செய்து கொள்ளக் காத்திருந்தான். பொன்னியின் படிப்புக்கு ஏற்ற அளவு சிங்காரம் படிக்கவில்லை என்பது வேறு அவர்களுடைய குறையாக இருந்தது.

கடைசியில் இருவரும் தடையை மீறிக் .கலப்புத்திருமணம் செய்து கொள்ளத் துணிந்துவிட்டார்கள். பதிவு அலுவலகத்தில் கையெழுத்துப் போட்டு மாலையை மாற்றிக் கொண்டார்கள். இருவருடைய வீட்டிலிருந்தும் பெற்றோர், உற்றார், உறவினர் யாருமே வரவில்லை. நண்பர்கள்தாம் உடன் இருந்தார்கள். அவர்களே உற்றாராகினர். சாட்சியாக இருந்து கையெழுத்தும் போட்டார்கள்.

அவர்களுடைய மணவாழ்க்கை நன்றாகவே ஆரம்பமாயிற்று. தொழிற்சாலை கட்டிய வீடுகளில் ஒன்றை அவனுக்காக ஒதுக்கினார்கள். அவனுடைய சம்பளம் இருவரும் குடும்பம் நடத்தப் போதுமானதாக இருந்தது. அதனால் அவன் அவள் வேலைக்குப் போக ஒப்புக் கொள்ளவில்லை.

"இருவருடைய குடும்பத்தாருக்கும் இன்னும் கோபம் தீரவில்லை. நீ வேலைக்குப் போனா எங்க யாச்சும் மாட்டிக்குவே. அவங்க இனிமே நம்ம திருமணத்தை முறிக்க முடியாது. ஆனா நிச்சயமா நமக்குத் தொந்தரவு கொடுக்க முடியும். அதனால் நீ வீட்டுலேயே இரு!" என்று சொன்னான் சிங்காரம்.

ஆனால் பொன்னி லேசில் ஒப்புக் கொள்ளவில்லை. "நான் இவ்வளவு தூரம் படிச்சது எதுக்காக? பட்டம் வாங்கினது எதுக்காக? வீட்டுல இருக்கவா? நான் அடுப்படியிலே உக்காந்து கிட்டிருக்கறது - நீங்க கஷ்டப்பட்டு வேலைக்குப் போறது - இது சரிதானா? நீங்க ராசா இல்லை!" என்று கேட்டாள் பொன்னி.

"நான் ராசான்னு வச்சுக்கிட்டா நீ இந்த வீட்டுக்கு ராணி! போதாதா?" என்று அவளை மடக்கிவிட்டான் சிங்காரம். ஒரு குழந்தை பிறக்கும் வரை அவள் வேலைக்குப் போக வேண்டாம் என்று சமரசமாக ஒரு முடிவை எடுத்தார்கள்.

ஆறு மாதங்கள் கழிந்தன...

இருவருக்கும் பெருமகிழ்ச்சி. அன்று டாக்டரிடம் போய்ப் பொன்னியைச் சோதனை செய்து பார்த்தபோது அவள் கருவுற்றிருந்தது தெரிய வந்தது. திரும்பி வரும் வழியிலேயே கோயிலுக்குப் போய்விட்டு, நிறைய இனிப்புகளும் வாங்கிக் கொண்டு வந்தான். அக்கம் பக்கத்து வீட்டுக் குழந்தைகளுக்குக் கொடுத்தான். காரணம் சொல்லாமல் வாங்கிக் கொள்வார்களா? நடந்ததைச் சொல்ல வேண்டியதாயிற்று!

"போங்க! எனக்கு வெக்கமா இருக்கு. உண்டாகி ரெண்டு மாசம் கூட முடியலே. அதுக்குள்ளாறக் கொண்டாடி ஊரைக் கூட்டிட்டீங்களே! நான் உருப்படியா குழந்தையைப் பெத்து வீட்டுக்குக் கொண்டு வரவேணாமா? என்ன அவசரம் இப்போ?" என்று படுக்கையறையில் சிணுங்கினாள் பொன்னி.

"அவசரந்தான் பொன்னி! உன்னால முடியுமானா இப்பவேகூடப் பெத்துக் கொடுத்துடு. பத்துமாசம் காத்திருக்க எனக்குப் பொறுமை இல்லே!" என்று கூறிச் சிரித்தான் சிங்காரம், அவளை அணைத்தபடி!

அவன் அவசரப்பட்டதைத் தெய்வம்கூடக் கண்டு கொண்டு விட்டதோ என்னவோ, எட்டாம் மாதமே குழந்தை பிறந்துவிட்டது. எக்கச்சக்கமான சிக்கல்களுடன் பிரசவத்தை அறுவை சிகிச்சையில்தான் முடிக்க வேண்டி இருந்தது. முன்னதாகவே பிறந்துவிட்ட குழந்தை என்பதால், அதையும் பத்திரமாகப் பாதுகாப்பு அறையில் வைத்துப் பாதுகாக்க வேண்டியதாயிற்று. செலவு கைமீறிப் போய்க்கொண்டிருந்தது. அவன் தனது குடும்ப வைப்பு நிதியிலிருந்து வாங்கிய கடனும் தீர்ந்துவிட்டது. கம்பெனியில் கூடுதலாகக் கொடுத்த கடனும் காலி. அன்று டாக்டர் சொன்ன செய்தி அவனுடைய தலையில் ஒரு

குண்டைத் தூக்கிப் போட்டதைப் போல இருந்தது.

"சிங்காரம்! உன் மனைவி உயிர் பிழைத்துவிட்டாள். ஆனால் ஒரு சிக்கல். அவளுடைய இரண்டு கால்களும் இன்னும் சரியாக வேலை செய்யவில்லை. அவ்வப்போது உணர்விழந்து போவது போலத் தோன்றுகிறது. அவசரமாக ஓர் ஆபரேஷன் செய்தாக வேண்டும். அதற்குக் குறைந்தது மூவாயிரம் ரூபாயாவது ஆகும். நீ தயாராக இருக்கிறாயா?" என்று கேட்டார்.

அவனால் முடியாது என்று எப்படிச் சொல்ல முடியும்? அவர் கொடுத்த அவகாசமும் இரண்டே நாள்கள்தாம். யாரிடமும் இனி கடன் கேட்க வழியில்லை. கம்பெனியில் இனிமேல் கடன் கொடுக்கமாட்டார்கள். எண்ணி எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்த போதுதான் அந்த யோசனை தோன்றியது.


அந்தக் கடைக்காரருக்குத் துப்பாக்கியின் அந்த முக்கியப் பகுதி தேவையாக இருந்தது. ஆனால அவரிடம் துப்பாக்கி லைசென்சுகூட இல்லை. எதற்காக அவர் அதை வாங்க விரும்புகிறார் என்று அவனுக்குப் புரியவில்லை. அவனை அணுகி ஓரிரு தடவை அவர் ரகசியமாகக் கேட்டதுண்டு. அவன் பதில் சொல்லவே மறுத்துவிட்டான்.

இப்போது சிங்காரத்துக்கு அவருடைய நினைவுதான் வந்தது. அந்தப் பாகம் உற்பத்தியாவது அவனுடைய மேற்பார்வையில்தான். அதை ரகசியமாக அவனால் கொண்டுவந்துவிட முடியும். அவர் அதற்கு ஈடாக மூவாயிரம் ரூபாய் கடனாகக் கொடுக்கத் தயாராக இருந்தார்.

இத்தனை ஆண்டுகள் நாணயமாக வேலை பார்த்துவிட்டு இப்போது திருடுவதா? அவன் அகப்பட்டுக் கொள்ளாமல் சமாளித்துவிடக்கூடும்! செக்யூரிட்டி, செக் செய்யும் உதவியாளர்கூட அவனுடைய உறவினர்தான். ஆனால் அகப்பட்டுக் கொள்ளவில்லை என்பதால் திருட்டு ஒரு குற்றமாக இல்லாமற் போய் விடுமா?

இப்படி உள்ளுக்குள் ஒரு கேள்வி!

மனைவியின் கால்கள் செயலிழந்து போய்விட்டால்? அவளைக் காப்பாற்ற வேண்டியது அவனுடைய கடமை அல்லவா? உடல் நிலை சரியானதும் அவள் வேலைக்குப் போக முடியும். அப்போது இந்தப் பாகத்துக்கான பணத்தைக் கம்பெனிக்குக் கட்டி ஈடு செய்துவிடலாம். ஏதாவது சமாதானம் செய்து கொள்ளலாம். ஆக இது திருட்டு அல்ல... பார்க்கப் போனால் ஒருவிதத்தில் கடனைப்போலத்தான் —



இப்படி மனம் இன்னொருபுறம் அமைதிக்கு அடிகோலியது.

இறுதியில் அவன் துணிந்து அந்தப் பாகத்தை 'டிபன்பாக்ஸில்' மறைத்து எடுத்துக் கொண்டு வந்துவிட்டான். காலையில் போகும்போது செக்யூரிட்டி செக் செய்யும் உதவியாளர் தன்னுடைய உறவினர்தானா என்பதையும் ஜாடையாகக் கவனித்துக் கொண்டு தான் போனான். இருப்பினும், இப்படி நேர்ந்துவிட்டதே? என்ன செய்வது?

அவனுடைய பொல்லாத காலம். அந்த உதவியாளர் பிற்பகலில் விடுப்பில் சென்றுவிட்டார். பதிலுக்கு வந்தவர் புதிதாக வேலையில் சேர்ந்தவர். சற்றுக் கெடுபிடியான ஆள்! அவர் அவனை முற்றுமாகச் சோதனை போட்டு, அவன் கொண்டுவந்ததைக் கண்டுபிடித்து, எழுத்து மூலம் அறிக்கையும் கொடுத்துவிட்டார்!

சிங்காரம் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டான். இரண்டே மணிநேரத்தில் கைது செய்யப்பட்டுக் காவலிலும் வைக்கப்பட்டான். போலீசார் அவன்மீது திருட்டு என்ற குற்றத்தை மட்டும் சுமத்தவில்லை. லைசென்ஸ் இன்றித் துப்பாக்கியை உபயோகிக்கக் கூடியவர்களுக்கு அவன் மறைமுகமாக உதவி செய்வதாகவும் குற்றம் சாட்டினார்கள்.

நீதிமன்றத்தில் அவனுடைய கட்சியை எடுத்து வாதாட வழக்கறிஞர் யாரும் இல்லை. அவன் சொன்னதை நீதிபதி ஏற்றுக்

கொள்ளவில்லை. குற்றம் உறுதியாகி தண்டனை கிடைத்துவிட்டது.

நல்லவேளையாகப் பொன்னிக்கு ஒரு சமூக நலப்பணி அமைப்பு உதவி செய்தது. அவள் உடல் தேறி வீடு திரும்பிவிட்டாள். குழந்தையைத்தான் காப்பாற்ற முடியவில்லை.

தண்டனைக்காலம் ஆரம்பமாகிவிட்டது. பொன்னிக்கு ஒரு தற்காலிகமான வேலை கிடைத்தது. அதில் இருந்துகொண்டே வங்கியில் சேரப் பரீட்சை எழுதித் தேறிவிட்டாள். இப்போது அவளுக்கு உறுதியான ஒருவேலை கிடைத்துவிட்டது. அதற்குரிய நல்ல சம்பளமும் கிடைத்தது.

ஆனால்? வாழ்க்கை பாலைவனமாக மாறியது. கணவன்கூட இருந்து வாழவில்லை. பிறந்த குழந்தையும் பிழைக்கவில்லை. பெற்றோரை எதிர்த்துத் திருமணம் செய்து கொண்டதால் அவர்களும் விலகிவிட்டார்கள். இப்போது அவள் தனி மரம்.

பொன்னி நாள்களை எண்ணிக் கொண்டிருந்தாள். ஒவ்பொரு மாதமும் அவளுக்கு ஒரு புது நம்பிக்கையைத் தந்துவிட்டு விடை பெற்றுச் சென்றது. ஒவ்வொரு முறையும் அவள் சிங்காரத்தைச் சிறைச்சாலையில் பார்க்கும் போது, இன்னும் சில மாதங்களில் அவன் திரும்பி வந்துவிடுவான் என்ற எண்ணம் அவளுக்கு மனவலிமையைத் தந்தது.

இன்னும்ஓராண்டுகாலம்கழிய வேண்டும் என்ற நிலையில், ஏழை எளியவர்களுக்காக வாதாடும் வழக்கறிஞர் உதவி அமைப்பு; சிங்காரத்தின் துணைக்கு வந்தது. பொன்னி செய்த ஏற்பாட்டில் அந்த வழக்கறிஞர் அவனிடம் ஒரு மனுவை வாங்கிக் கொடுத்து, அவனுக்காக வாதாடினார்.

குற்றத்தின் நோக்கம் திருட்டு அல்ல, மனிதாபிமான அடிப்படையில் சிங்காரம் மன்னிக்கப்பட வேண்டியவன். இரண்டு ஆண்டுகளாக அவன் அனுபவித்த சிறைவாசமே போதுமான தண்டனையாகக் கருதப்பட வேண்டும். இப்படி வாதிடப்பட்டது. வழக்கறிஞர் சொன்ன வாதத்தை ஏற்றுக்கொண்டு, நீதிபதி அவனுக்கு விடுதலையளித்துத் தீர்ப்பை வழங்கினார்.

சிங்காரம் வெளியே வந்தான். இப்போது அவன் புதுமனிதன். புது வாழ்க்கையைத் தொடங்க விரும்பினான்.

மீண்டும் அந்தத் தொழிற்சாலைக்கே சென்று வேலை வேண்டி மனுக் கொடுத்தான். நீதிபதி மன்னிப்பு வழங்கினாலும், நிறுவனத் தலைவர் மன்னிக்கத் தயாராக இல்லை. அவனிடம் திறமை இருந்ததை அவர் ஒப்புக் கொண்டார். ஆனால் அவனுடைய நாணயம் சந்தேகத்துக்கு உரியதாக இருந்த நிலையில், அவனைச் சேர்த்துக் கொண்டால் கட்டுப்பாடு குலைந்துபோகும் என்று அவர் கருதினார். அவனுக்கு வேலை கிடைக்கவில்லை.

அவன் வேலை தேடி அலையத் தொடங்கினான். வேலை கிடைப்பது எளிதாக இல்லை. அப்படிக் கொடுத்தாலும் அவனுடைய நன்னடத்தைக்கு உத்தரவாதம் கேட்டார்கள். ஜெயிலுக்குப் போய்விட்டு வந்தவனுக்கு யாரும் "ஜே" போடத் துணியவில்லை. அவன் அரசியல்வாதியா, என்ன?

அவனுடைய நண்பர்களாக இருந்தவர்கள் இப்போது அவனைக் கண்டு கூசி ஒதுங்கினார்கள். அவர்கள் அவனைச் சிங்காரம் என்ற நண்பனாகப் பார்க்கவில்லை. சிங்காரம் "சிறைப் பறவை!"

தனியாருடைய உதவியை நாடினான். சிறு சம்பளமானாலும் வேலை கிடைத்தாற் போதும் என்று முயன்று பார்த்தான். கடைசியில் கார்கள் பழுது பார்க்கும் கடை ஒன்றில் வேலை கிடைத்தது. அந்தக் கடையின் உரிமையாளர் வெளியூர்க்காரர். அவனைப் பற்றிய விவரங்களை அறியாதவர். அவனுடைய திறமையைக் கண்டு வேலை கொடுத்தார்.

ஒரே மாதம் தான் சம்பளம் வாங்கினான். சம்பளம் கொடுத்த போது கணக்கர் அவனிடம் "நாளையிலிருந்து நீ வேலைக்கு வரவேண்டாம்னு மொதலாளி சொல்லிட்டாங்க!" என்றார்.

"ஏன் ஸார்? என்ன நடந்திடுச்சி? நான் ஒழுங்காத்தானே வேலை செய்துக்கிட்டிருந்தேன்? என்னை ஏன் நிறுத்தணும் கறீங்க?" என்று பதறிப்போய்க் கேட்டான் சிங்காரம்.

"நான் சொல்லலைப்பா! மொதலாளிதான் சொல்லிட்டாரு. நீ ஜெயிலுக்குப் போயிட்டு வந்தவனாமே! அதை அவரிடம் சொல்லவே இல்லியாமே? அதனால் நிறுத்திடச் சொல்லிட்டாரு. உன்னை நம்ப அவர் தயாரா இல்லே! தவிர இது பெரிய மனுசங்க வீட்டுக் கார்கள் வந்து ரிப்பேர் செய்யற இடம் பாரு! அவர் வம்பை விலைக்கு வாங்கத் தயாராக இல்லே!" என்றார் அவர்.

வேலைக்குச் சேர வருபவர்கள் சிறைக்குப் போய்வந்ததைச் சொல்லிக் கொண்டா உள்ளே காலெடுத்து வைப்பார்கள்? திறமைக்காகத்தானே வேலை? கடந்த கால வாழ்வா முக்கியம்? அந்த பழைய வரலாறா முக்கியம்? அவ்வளவு பெரிய உத்தியோகத்தில் உள்ள நீதிபதியே அவனை மன்னித்து விடுதலை அளித்து விட்டாரே? இந்த முதலாளி ஏன் அப்படி அவனை மதிப்பிடவில்லை?

வேலை போய்விட்டது. சொன்னான் – கேட்பாரில்லை. கதறினான் – கவலைப்பட யாருமில்லை.

அவனுக்குப் புரிந்துவிட்டது. அவன் புதியவனாக வாழவிரும்பினான். ஆனால் உலகம் பழையவற்றையே நினைத்துக் கொண்டிருந்தது. அவன் மனம் திருந்தி வாழ ஆசைப்பட்டான். ஆனால் சமூகம் அவனைத் திருந்தி வாழ விடவில்லை. ஒவ்வொரு நிமிடமும் அவனைக் குற்றவாளியாகவே கருதிச் சுட்டு விரலால் அடையாளம் காட்டிக் கொண்டிருந்தது.

கடனாளியாக இருந்தவன் மீண்டுவிடலாம். நோயாளியாக இருந்தவன் குணமடைந்து விடலாம். ஆனால் குற்றவாளியாகக் கருதப்பட்டுச் சிறை சென்றவன் மீளுவது என்பது மிகவும் கடினம். எதிர்பாராத ஒரு திருப்பம்தான் அவனைக் காப்பாற்ற முடியும். அத்தகையதொரு திருப்பம் சிங்காரத்தின் வாழ்க்கையில் ஏற்படுமா? அவனுக்கு நம்பிக்கை இல்லை. மனம் கசந்தது.

இரவு நேரம். பொன்னி வற்புறுத்திக் கூப்பிட்டும் சாப்பிடப் போகப் பிடிக்காமல் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்தான் சிங்காரம். மற்ற விளக்குகளை அணைத்துவிட்டு, அவன் அருகில்

வந்து அவள் அமர்ந்தாள். ஆதர வாகக் கணவனின் தோளைத் தொட்டாள். அவனுடைய கண்ணீர் அவள் முழங்கையில் விழுந்து சுரீல் எனப் பொரிந்தது.

திடுக்கிட்டு நிமிர்ந்த பொன்னி "என்ன ஆச்சு? ஏன் கண்ணீர் விடறீங்க? எங்கிட்ட சொல்லுங்க!" என்றாள்.

"எனக்கு வாழப்பிடிக்கலே போ! நான் எங்கேயாச்சும் கண் காணாம ஓடிடலாம்னு பார்க்கி றேன்!" என்றான் சிங்காரம்.

"வாழப் பிடிக்கலேங்கிறீங்க. ஆனா கண்காணாம ஓடிடப் போறேன்னு சொல்றீங்க. ஓடிப் போயிட்டா வாழலாம்கிற நம்பிக் கையாவது இருக்குதா?" என்று உறுதியுடன் கேட்டாள் பொன்னி. அவளுடைய குரல் கலங்கவே இல்லை.

"இருக்குது! என்னைக் கொஞ் சம் கூடத் தெரியாதவங்க, என்னுடைய பழைய வரலாற்றைத் திருப்பிப் பார்க்காதவங்க மத்தி யிலே நான் பொழச்சிக்குவேன். ஏன்னா அவுங்களுக்கு நான் ஜெயில் கைதியா இருந்தது தெரி யாது. அதனாலே அவங்க என்னை ஒரு மனுசனாப் பார்ப்பாங்க. என் கையிலே உழைக்கிற திறமை இருக்கான்னு பார்ப்பாங்க. அதுலே இரும்புக் காப்பு மாட்டப் பட்டிருந்திச்சான்னு குறுக்குத் தனமா ஆராய்ச்சி செய்யமாட் டாங்க! என்னைத் தெரியாத வங்க, என்னுடைய மொழி தெரி யாதவங்க, இந்த மண்ணைச் சேராதவங்க இருக்கிற இடத் துக்கு ஓடிப்போக நான் ஆசைப் படறேன் பொன்னி! அப்பத்தான் எனக்கும் புதுவாழ்வு கெடைக்கும். அது முடியாதுன்னு போயிட்டா உயிர்வாழ ஆசைப்படலே!" என்று சொல்லிக் குமுறினான் அவன்.

"அப்ப நீங்க உங்களுக்காக வாழ ஆசைப்படலை! பிறருக் காகத்தான் வாழ நினைக்கறீங்க! அதுதானே உண்மை? நெனைச்சுப் பாருங்க" என்று உற்றுப் பார்த்தாள் பொன்னி.

"அப்படி இல்லே பொன்னி! நிச்சயமா அப்படி இல்லே!" என்று தடுமாறினான் அவன்.

"பின்னே பிறர் சொல்லுறதுக் காக ஏன் கவலைப்படறீங்க? பிறர் ஊன்றுகோல் கொடுத்தால்தான் நடக்க முடியும்னு ஏன் நினைக் கறீங்க? உங்களுடைய ரெண்டு கால்கள் இல்லையா? ஏன் அதிலே நீங்க நிக்கக்கூடாது? சொந்தக் காலைக் கீழே ஊன்றித் தெம்பா நிமிர்ந்து நிக்கக்கூடாது?"

"பொன்னி! நீ சொல்றது புரியலை".

"புரியும்படியா சொல்றேன். பிறர் வேலை கொடுத்துத்தான் நாம் பிழைக்கணும்னு நினைக் காதீங்க! பிறர் செய்யற தொழி லிலே தான் நாம் தொழிலாளியா நிழல்தேடிப் போகணும்னு நினைக் காதீங்க! உங்களுக்கு உடம்பிலே உரம் இருக்குது! நெஞ்சிலே உறுதி இருக்குது! உங்க கடமையைச் செய்யணும்கிற வேகம் இருக்குது. இதை நம்பிச் சொந்தக் காலிலே நிக்க முயற்சி செய்யுங்க..."

"முடியுமா பொன்னி? நீ சொல்றது நடக்கக் கூடியது தானா?"

"நிக்க முடியும்னா நடக்கவும் முடியும்! நான் மூணுவருசமா சம்பாதிச்சதிலே மீதம் இருக்குது. நான் வேலை செய்யற பாங்குலே நான் உத்தரவாதம் கொடுத்தா கடன் கொடுப்பாங்க. அதை வச்சி ஊருக்கு வெளியே ஒரு சிறு கறிகாய்த் தோட்டம் போடுங்க! எனக்கு உதவி செஞ்ச சமூக நலப் பணிச்சங்கம் கறிகாய்க் கடை நடத்துது! அவுங்களை எடுத் துக்கச் சொல்றேன். நீங்க நிச்ச யமா மேலே உயர்ந்து வரலாம். நான் வழிதான் காட்டுவேன். உங்களைத் தோளைப் பிடிச்சு நடக்கச் சொல்லி அணைப்புக் கொடுக்கலே. நீங்களேதான் நடக்கப் போறீங்க. நான் போடறது மொதல்தான். அதுவும் கடன் தான். அதை நீங்க திருப்பிட லாம். உங்க உழைப்புதான் உங்க சொத்து. திறமைதான் உங்க செல்வம்!" என்றாள் பொன்னி.


சிங்காரம் நிமிர்ந்து பார்த்தான். அவன் பார்வையில் புது ஒளி மிதந்தது. அவளுடைய கைகளைப் பற்றிக் கொண்டு எழுந்தான்.

"முடியும் பொன்னி! என்னால முடியும்! எனக்கு நம்பிக்கை வந்திடுச்சி. என்னுடைய ஏக்கம், தாபம் எல்லாத்துக்கும் வடிகால் கிடைச்சிடுச்சு!" என்றான் புதிய தெம்புடன்.

"வடிகால் மட்டும் இல்லே! வாய்க்காலும்கூட! அதில் ஓடப் போற தண்ணி தோட்டம் நிறையக் காய்கறியைக் கொணாந்து தள்ளப் போவுது!" என்றாள் அவள்

"என் மனசு நெறைஞ்சிருக்கு பொன்னி!" என்றான் சிங்காரம்.

"வயிறு நெறையலே. எழுந்து சாப்பிட வாங்க! எனக்கும் பசிக்குது!" என்றாள் பொன்னி. ❀





விசுவ விளிம்பில்
தீற்றிய திகம்பர
வெளிச்ச வெடிப்போ
வைகறை யிதுவும்?
குமரக் குறும்பாய்
கிரணம் உரசிப்
பூப்படைந்துள்ளன
பூவின் மொட்டுகள்!
இருளின் முயக்கில்
வெளிச்ச மயக்கம்
வீசிய வீரியப்
பெய்வோ வைகறை!
என்றும் இருக்கும்
இருட்டைக் கிழிக்க
எங்கோ ஓர் ஒளி
எழுவதோ வைகறை!
பகலும் இரவும்
பாய்ந்தே தழுவிய
பந்தப் பிணிப்பின்
பிரிவோ வைகறை!

நலம் அருளும் நாயகி சுவாமிகள்

குன்றக்குடி பெரியபெருமாள்

★ வண்ணச் சித்திரம் : ஜி.கே. மூர்த்தி

"காணத் திருமேனி கண்ணாயிரம் வேண்டும் பூணுங் கிரீடப் பொலிவுடனே!" எனப் பாடினார் கவிஞர் 'வெண்பாப்புலி' பத்மநாபய்யர். ஆம்! 'மதுரையின் ஜோதி' என்றும், 'சௌராஷ்டிர ஆழ்வார்' என்றும், 'நாயகி சுவாமிகள்' என்றும் போற்றப் பெற்ற சித்த சிகாமணியாம் வித்தக அருள்ஞானி நடன கோபாலரின் புண்ணியத் தோற்றத்தைக் காண இரு கண்கள் போதாதுதான்! கவிஞர் பாடியதுபோல ஆயிரம் கண்கள் அவசியத் தேவைதான்!

அடடா! அந்தப் புனிதரின் தோற்றப்பொலிவைக் கூறத் தொடங்கினால்... வார்த்தைகள் வறுமைப்படும்! வாக்கியங்கள் தோல்வி பெறும்! என்றாலும் முயற்சி செய்து பார்ப்போமே!

ஆழிவெண் சங்குடன் விளங்கும் அழகிய ஆண்டாள் கொண்டை; கருநீலக் கறுப்புப் பட்டுக் கிரீடம்; திருமண் திகழும் பொன் வண்ணப் பெரு நெற்றி; ஞான ஜோதியாய் ஒளிரும் இரு கருணை நயனங்கள்; செங்குவளை மலர்போல எழில் நாசி; புலர் காலைக் கீழ்வானச் செம்மை நிற இதழ்கள் கொண்ட முறுவல் பூக்கும் சிறிய திருவாய்; திருவாயைச் சுற்றி கடல் அலைகள் பிறப்பிக்கும் தூய நுரை போன்ற வெண்ணிறத்து மயிர்க் கற்றைகள்; வெண் முகிலாய் அவை மார்பளவு நீண்டிருக்கும் பேரழகு; திருவருள் அளிக்கவல்ல அபய முத்திரையுடன் திகழும் வலக்கரம்; அமர்ந்த திருக்கோலத்தில், ஒன்றின் மேல் ஒன்றாய்க் கிடக்கும் திருப்பாதங்களைத் தொட்டுக் குறிப்புணர்த்தும் இடக்கரம்; மலர் மாலைகள் சூடிய திருமார்பு; மங்கையர் ஆடை இடை தவழ, மணிச் சலங்கைகள் கட்டிய திருவடிகள்; இத்தகைய புனிதப் பொலிவும், புண்ணியத் தோற்றமும் கொண்ட 'மதுரையின் ஜோதி' நடன கோபால நாயகி சுவாமிகளைக் காணவும், கண்டு தரிசிக்கவும் ஆயிரம் கண்கள் வேண்டுமெனச் சொன்ன கவிஞரின் கருத்து – கருதி உணரத்தக்கது தானே?

அதனால்தான், நாயகி சுவாமிகளைக் கண்டு தரிசித்த சுவாமி விவேகானந்தர், "ஆன்மிக வடிவில் அருள் ஞானி ஒருவரைச் சந்திக்கும் பேறு பெற்றேன்!" என்றார்.

மகரிஷி ரமணர், "நாயகி பாவத்தில் ஒரு ஞானச் செல்வர்" எனச் சொன்னதோடு, "சுவாமிகளின் உருவ சௌந்தர்யமும், உச்சரிக்கும் ஹரிநாம சங்கீர்த்தனமும் மக்களுக்குப் பக்தி அனுபவத்தையும், பரமாத்மாவின் பேரருளையும் கூட்டுவிக்கும் சக்தி மிக்கவை" எனத் தொழுது போற்றினார்.

கவியோகி சுவாமி சுத்தானந்த பாரதி நாயகி சுவாமிகளைப் பற்றி ஒரு குறுங் காவியமே பாடியருளினார். "நாயகி சுவாமிகள் தோற்றம் – நம் அருள்நெறி வரிக்கு ஏற்றம்!" எனக் குறிப்பிட்டுப் பாடிய சுத்தானந்தரின் கீர்த்தனை இங்கே குறிப்பிடத்தக்கதல்லவா?

வடிவத்தில் நாயகி பாவம்! வார்த்தைகளில் பரம்பொருள் நாமம்! வணங்கும் அன்பர்களின் உள்ளங்களில் ஏற்றி வைக்கும் ஆன்மிகத் தீபம்! சுவாமிகளின் வாழ்வும் வரலாறும் அபூர்வம் – அனைவரையும் வியக்க வைக்கும் அதி அற்புதம்!

நூற்று நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன், மதுரையில் வாழ்ந்த சௌராஷ்டிரக் குலத்தைச் சார்ந்த ரங்காரியர் – லெட்சுமிபாய் தம்பதிக்கு ஐந்தாவதாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. 1843 மார்கழி மாதத்து மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்த குழந்தைக்கு 'ராமபத்திரன்' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர்.

ராமபத்திரனுக்கு ஐந்து வயதாயிற்று. பள்ளிக்கு அனுப்பி வைத்தனர் பெற்றோர். ராமபத்திரன் படிக்கப் பிறந்தவனா? இல்லையே! படித்துப் பிறந்தவன்; மனித குலத்தைப் படிப்பிக்கப் பிறந்தவன் ஆயிற்றே? எனவே பள்ளிப்படிப்பில் கவனமில்லாது இருந்துவந்தான். எனினும் ஆசிரியர் வினவும் கேள்விக்கு எவ்விதத் தயக்கமும் காட்டாது விடை பகரும் இயல்பினைப் பல நேரங்களில் ஆசிரியர் பார்த்துப் பார்த்து பரவசப்படுவதும் உண்டு; ராமபத்திரனின் அறிவுக் கூர்மையை உணர்ந்து உணர்ந்து ஆச்சரியப் படுவதும் உண்டு! சில வேளைகளில் பெற்றோரிடம் சென்று ராமபத்திரனின் அறிவாற்றலை ஆசிரியர் எடுத்துச் சொல்லியதும் உண்டு!

வயது ஏற ஏற ராமபத்திரனின் வாக்கும் போக்கும் பெற்றோரை மிகுந்த வருத்தத்திற்கு உள்ளாக்கின!

பள்ளிக்குப் போவதை நிறுத்திக் கொண்டான். பெற்றோர் கண்டித்தும் மறுத்துவிட்டான்.

தந்தை ரங்காரியரும், அன்னை லெட்சுமிபாயும் தமது ஐந்தாவது பாலகன் அடங்காப் பாலகனாகப் போய் விட்டானேயென வருந்தியதோடு, தமது குலத் தொழிலை யாவது கற்றுக் கொள்ளட்டுமென நெசவுத் தொழிலில் ராமபத்திரனை ஈடுபடுத்தினர். தறியில் அமர்ந்த ராமபத்திரனுக்கு இறை நெறியே நெஞ்சில் பெருகியது! தொழிலையும் கற்றுக் கொள்ள ஆர்வம் காட்டாத பிள்ளை, தமக்குத் துயரம் தர வந்த பிள்ளையெனக் கருதி, ராமபத்திரனை ஒரு நாள் மிகுந்த சினத்துடன் கண்டித்தனர் பெற்

றோர். பெற்றோர் சினத்தைத் தனக்குப் 'பெருவழி' காட்டும் 'கை காட்டி'யாக்கிக் கொண்டான் ராம பத்திரன். எழுந்தான் ராம பத்திரன்; பெற்றோரின் பாதங்களில் விழுந்தான். விழுந்து எழுந்தவன் வீட்டை விட்டு 'விடுவிடு' வென வெளியே போய்விட்டான்!

வீட்டை விட்டுச் சென்ற ராம பத்திரன் நேராகத் திருப்பரங் குன்றம் சென்று, மலைக் குகை ஒன்றைத் தனது இருப்பிடமாகக் கொண்டான். ஒன்பது ஆண்டுகள் குகையை விட்டுக் கீழே இறங்கி வரவே இல்லை! சோற்றுக் கத்தாழையை, சப்பாத்திப் பழத்தைப் பசித்தபோது உண்டான்! திருக் கள்ளிப் பாலை நீராகப் பருகினான்! தெய்வ நலம் வேண்டித் தவமிருந்த ராமபத்திரனுக்கு ஒரு நாளும் தேகநலம் குன்றவே இல்லை!

பரமக்குடியில் வாழ்ந்த நாக லிங்க அடிகளாரைத் தனது குருவாகக் கொண்ட ராமபத்திரன், அட்டமாசித்திகள் அனைத்தையும் பெற்று, தியானம், யோகாசனம் ஆகியவற்றால் தேர்ந்த நிலையடைந்து, 'சதானந்த சித்தர்' எனும் திருநாமம் பெற்றான். சதானந்த சித்தர் சிவஞானியாகப் பரமக் குடியிலிருந்து புறப்பட்டுச் சிவ கங்கையை அடைந்தார்.

சிவகங்கையை அப்போது ஆண்ட ராஜா கௌரி வல்லபத் தேவர் குறும்பு மனம் பெற்ற குறுநில மன்னனாக விளங்கினான். சதானந்த சித்தரைப் போலிச் சாமியாரெனக் கருதி, அவருக்கு ஓர் இருப்பிடம் அளித்து, இரவில் அங்கொரு நாடகக் கணிகையை அனுப்பி வைத்து, வெளியே பூட்டி விடுமாறு உத்தரவு பிறப்பித்தான்.

உள்ளே சென்ற கணிகை உள்ளம் கலங்கிப்பித்துப் பிடித்துச் செத்தவளாகக் கீழே விழுந்தாள். சித்தர் பெருமானோ பூட்டிக் கிடந்த இருப்பிடத்திற்கு எதிரேயுள்ள புல் வெளியில் உலாவிக் கொண்டிருந்தார். செய்தி அறிந்த மன்னன் அப்போதும் சித்தரின் அருமையறியாது, மற்றுமொரு கயமைச் செயலுக்கு மனத்துள் திட்டமிட்டான்.

பூமிக்கு அடியில் ஒரு பாதாள அறை அமைத்து, நாற்பத்து ஐந்து நாள்கள் யோக நிலையில் தவமியற்ற அழர்ந்தார் சிவகங்கையில் சித்தர்பெருமான். அமர்ந்த இடத்தின் மேலே, மன்னன் நிலையான உறுதிக் கட்டடம் ஒன்றை எழுப்புமாறு செய்வித்து, 'தொலைந்தார் சாமியார்' என மனமகிழ்ந்தான். ஆனால் நாற்பத்து ஐந்தாவது நாள் அதிகாலைப் பொழுதில் பிரம் மாண்டமான இடிச் சப்தத்தைக் கேட்ட சிவகங்கை மக்கள் நடுங்கி எழுந்தனர். மன்னனும் மனப் பயத்தோடு பாதாள அறையருகே வந்து பார்த்தான். சித்தரைக் காண வில்லை!

மதுரைக்கு வந்த சதானந்தர் தமது அன்னையைத் தொழுது வேண்டி, கட்டாயப்படுத்திக் காவியுடை பெற்றதோடு; பன்னிரண்டு ஆண்டுகள் 'மௌன விரதம்' மேற் கொண்டார். சித்தர் பெருமான் சதானந்தரை நாள்தோறும் மக்கள் தரிசித்துப் பிணிகள் நீங்கிப் பெருநலம் பெற்றனர். வழக்கமாகத் தினமும் சதானந்தரைத் தரிசிக்க வருகின்ற ஒரு பக்தர் தமது இல்லத்தில் இருந்ததாக ஓர் ஏட்டுச் சுவடியைச் சித்தர் பெருமானிடம் பணிவாக வழங்கினார். ஏட்டுச் சுவடியில் எழுதப் பெற்றிருந்த திவ்வியப் பிரபந்த திருப் பாசுரங்களை மௌன விரதமாக இருந்த காலம் முழுவதும் திரும்பத் திரும்பப் படித்துப் படித்து உருகினார் பெருமான். பாசுரங்களில் ஊறித் திளைத்த சதானந்தரின் உள்ளம் சிவகதியினின்றும் மெல்ல மெல்ல நகர்ந்து ஹரி பக்தியைப் பற்றிக் கொண்டது!

கண்ணனை, கார்மேக வண்ணனை ஒருநாள் கனவில் கண்ட சதானந்தர், கண்ணன் காட்டிய வழியில் ஆழ்வார் திருநகர் நோக்கிச் சீடர்களுடன் பயணித்தார். இடையே காட்டு வழியில் வழி மறித்த திருடர்களின் பார்வையைப் போக்கி, பின் பரிவுடன் மீண்டும் அவர்களுக்குக் கண்ணொளியை வழங்கி அருள் பாலித்தார்.

ஆழ்வார் திருநகரில் வடபத்ர அரையரிடம் திருமந்திரம், துவயம், சரம சுலோகம் முதலியவற்றைக் கற்றுக்கொண்டு, விசிஷ்டாத் வைதத்தின் தத்துவங்களைத் தெளிவுற உணர்ந்து 'நடன கோபாலர்' எனும் திருநாமம் பெற்று மதுரை திரும்புகிறபோது, ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வருகை புரிந்தார், திருமால் பக்தரான சதானந்தர்.

நடனகோபாலர் ஆண்டாள் நாச்சியாரின் அற்புத வைபவத்தை அகம் குளிரக் கேட்டும், உணர்ந்தும் ஒரு புதிய சங்கல் பத்தை மனத்துள் புதைத்துக் கொண்டு மதுரையை அடைந்தார்.

துறவறம் மேறகொண்ட சந் நியாசி முன்னின்று எவருக்கேனும் சமாதி அமைத்தால், அறுபது ஆண்டுகள் அவர் புகழ் மங்கிப் பின் ஒளியூட்டுமென அறிந் திருந்தும், தமது தந்தையார் ரங் காரியருக்கு மதுரையில் சமாதி அமைத்தார் நடன கோபாலர். அறுபது ஆண்டுகள் கழிந்தபின் தான், மதுரை அருள்மிகு பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் திருக் கோயிலில் நடன கோபா லருக்குத் தனிச் சந்நிதி ஏற்படுத்தி மூலவர், உற்சவர் விக்கிரகங்களை அமைத்து வழிபட்டார் 'நாயகி கைங்கர்ய பூஷணம்' ராணி வெ. சுந்தரராவ்! நடன கோபாலரின் அருட்கருணையும், பெரும் புகழும் நான்கு திசைகளிலும் பரவத் தொடங்கின.


திருவரங்கம் சென்றபோது ஞானச் செல்வர் நடனகோபாலர், ஆண்டாள் நாச்சியாரைப்போலத் தம்மை அலங்கரித்துக்கொண்டு, அரங்கன்மீது பாடி ஆடி வருவதைப் பார்த்து மகிழ்ந்த பெரிய ஜீயர் சுவாமிகள் "நாயகியே! நடன கோபால நாயகியே!" என வாயெலாம் தித்திக்க அழைத்துப் போற்றினார். அந்தக் கணம் முதல் அன்பர்கள் 'நாயகி சுவாமிகள்' என நடனகோபாலரை அழைத்து ஆனந்திக்கத் தொடங்கினர்.

நாயகி சுவாமிகள் முக்தி பெறும் நாளையும், நேரத்தையும் அன்பர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்திருந்தார்கள். 1914இல் வந்த மார்கழி மாதத்து ஏகாதசி கார்த்திகை நட்சத்திரத்தில், பகல் பன்னிரண்டு மணிக்கு, அமர்ந் திருந்த சுவாமிகள் "ஹரி அவ்டி யோபா" (ஹரி வந்துவிட்டான்) என சௌராஷ்டிர மொழியில் உரக்கச் சொல்லிய அடுத்த விநாடி, திருநாடு அலங்கரிக்க ஏகிவிட் டார்கள்! சுவாமிகளின் பிருந்தாவனம் (சமாதி) அழகர் கோயில் சாலையில், காதக் கிணறு கிரா

மத்தில், யானைமலை யோக நரசிங்கப் பெருமாள் சந்நிதிக்கு நேர்எதிரே உள்ளது.

பக்தி ரசம் சொட்டச் சொட்ட சுவாமிகள் சௌராஷ்டிர மொழியிலும் தமிழ் மொழியிலும் பாடியருளிய பன்னூறு பாடல்கள் - அரிய ஆன்மிகச் செல்வங்களாகப் போற்றப் பெறுகின்றன.


சுவாமிகளிடம் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த சி.எம்.வி. கிருஷ்ணமாச்சாரி பிருந்தாவனச் சமாதியைப் பேராலயமாக அமைத்து மகிழ்ந்ததோடு, சுவாமிகளின் அருட்பாசுரங்களை ஆர்வத்தோடு முயன்று, முழுவதுமாகத் தேடித் தொகுத்து அச்சிட்டு வெளியிட்டார். பிருந்தாவனப் பேராலயத்தை நடன கோபால நாயகி சபை திறம்பட நிருவகித்து வருகிறது. அருட்பெண்மணி ருக்மணி அம்மாள் சபையின் நிருவாக இயக்கத்திற்குத் தமது இல்லத்தையே அறக்கொடையாக அளித்துள்ளார். சுவாமிகளின் அருட் சிறப்பை உலகறியச் செய்த பலருள் அருட்செல்வி சிவானந்த விஜயலட்சுமி குறிப்பிடத்தக்கவர்.




'கீதா நடனகோபால நாயகி மந்திர்' எனப் பெரும் பெயர் பெற்றுள்ள பேராலயப் பெருமாளிகையை நிருவகிக்கும் பொறுப்பில் தலைவராக 'நாயகி கைங்கர்ய பூஷணம்' ராணி வெ. சுந்தர ராவ் வீற்றிருக்கிறார்.' சுவாமிகளின் கருணைத் திருமேனியைப் படமாக்கிக் கேட்பவர்க்கெல்லாம் இலவசமாக வழங்கி, அருள்வாக்கும் அளித்து வருகின்ற ராணி வெ. சுந்தர ராவ், தமது வாழ்வைச் சுவாமிகளின் அருள் பரப்பவென்றே அர்ப்பணித்துள்ளார்! மந்திர் செயலாளர்களான அருள்மணி டி.கே. ஆத்மாராம், அருள்நெறிச் செல்வர் டி.ஜி. கிருஷ்ணன் ஆகிய இருபெரும் செம்மல்கள் நாயகி சுவாமிகளின பேரருளை, மனித குலம் முழுவதும் பெற்றுப் பெரும் பயனடைய வேண்டுமெனும் நோக்கில் நாளும் பொழுதும் உழைத்து உயர் பணி ஆற்றி வருகின்றனர். சுவாமிகளின் அருள் வரலாற்றை மக்கள் அறியுமாறு சீரிய பணி ஆற்றிவரும் பேராசிரியர் தா.கு. சுப்பிரமணியம், புலவர் காசிராமன், டாக்டர் விட்டல்தாஸ், ஆசிரியர் கே.ஆர். சேதுராமன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

ஞான தீபம் ஏற்றி 'நாம சங்கீர்த்தனம்' பரவ சௌராஷ்டிரம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் உருவாக்கிய நாயகி சுவாமிகளின் பாடல்கள் - பரம சுகமளிக்கும் அருட் பாசுரங்களாக ஒளி வீசி வருகின்றன! ஃ







நன்றி: லிப்கோ வெளியிட்டுள்ள 'ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்' நூல்.



ஓவியர் : மணியம் செல்வன்





பகவான் யோகிராம் சூரத்குமார்

மனித உருவம் கொண்டு பூமிக்கு வந்த தெய்வமாய், ஞான குருவாய், ப்ரமம் அறிந்த முனிவராய், தபஸ்வியாய் ஒரு ராஜரிஷி போன்று பலருக்குக்காட்சி தரும் யோகிராம் சூரத்குமார், நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலையில் அமர்ந்து தன் வாழ்க்கையையே ஆன்மிகச் செய்தியாய் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

காசிக்கு அருகே உள்ள சிறிய கிராமத்தில் 1918 ஆம் வருடம் டிசம்பர் முதல் தேதியில் பிறந்த யோகிராம் சூரத்குமார் இளம் வயதிலேயே சாது சங்கமத்தால் ஆன்மிக தாகம் பெற்று, பாண்டிச்சேரி யோகியார் ஸ்ரீ அரவிந்தரால் வழிகாட்டப்பட்டு பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் அருள் பார்வையால் ஊக்குவிக்கப்பட்டு, கர்நாடக மாநிலம் மங்களூருக்கருகே உள்ள கஞ்சன்காடு சுவாமி ஸ்ரீ ராமதாஸரால் ராமநாமம் உபதேசிக்கப்பட்டு பாரத தேசமெங்கும் யாத்திரை செய்து திருவண்ணாமலையே தனது ஆன்மிகம் பரப்பும் இடமாய் தேர்ந்தெடுத்து அமர்ந்து கொண்டார்.

திருவண்ணாமலை சந்நிதித் தெருவின் அருகே உள்ள எளிய வீட்டில் காவி உடுத்தாத துறவியாய், காட்சிக்கு எளியவராய் அன்பின் திருவுருவமாய் யோகியார் அமர்ந்திருக்கிறார்கள். மக்கள் அவரை விசிறி சாமியார் எனச் செல்லமாக அழைக்கிறார்கள். ஒன்றாய் கட்டின இரட்டை பனைவிசிறி. தேங்காய் சிரட்டை, சிறிய கைக்கோல் இவைதான் அவரின் சொத்து. எதிரே உள்ளவர்கள் மனதில் நினைப்பது உடனே புரிந்து பதில் சொல்லும் ஞானம். பேச்சு வழக்கிலேயே சொல்லப்படும் ஆழ்ந்த உபதேச மொழிகள். மனசாலும், பார்வையாலும், ஸ்பரிசத்தாலும் பக்தர்களின் உள்ளுணர்வு தொட்டு உலுக்கி ஆன்மிக தாபத்தைத் தீர்க்கும் அருள் பொலிவு. கிண்கிணிச் சிரிப்பு. தன் சகல அசைவுகளிலும் கருணையை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கும் இந்த மகான் தன்னை ஒரு பிச்சைக்காரன் என்றே சொல்லிக் கொள்கிறார்.

கடவுள், குரு, கருணை மூன்றும் ஒன்றே. இது ப்ரபஞ்சம் முழுவதும் பரவி இருக்கும் சக்தி. புரிந்துகொள் என்று அடிக்கடி சொல்வது வழக்கம். தன்னை முன்னிருத்தாது தான் அற்று என் தந்தை உன்னை ஆசீர்வதிப்பார் என்று வாழ்த்துவது வழக்கம்.

பார்த்த முதல் விநாடியிலேயே சப்த நாடியும் ஒடுங்கி அமைதியைத் தரும் கம்பீரத்தோற்றம். என்னை நாடி என் அன்பின் பிடிக்குள் வந்தாயல்லவா... இனி தப்பிக்கவே முடியாது என்கிற பெரும் பொலிவு. இவர் நோய் தீர்க்கும் மாமருந்து. மனஉளைச்சலுக்கு வழிகாட்டி. பெரும் தவத்திலும் சிக்காத பேருண்மைகளை ஒரு விரல் தடவலில் காட்டும் ஒளிப்பிழம்பு.

யோகிராம் சூரத்குமார் மந்திராலயம் ஒன்று மிகப்பெரிய அளவில் கன்யாகுமரிக்கு வடக்குப் பக்கம் ஐந்துகல் தொலைவில் காணிமடம் என்கிற இடத்தில் உருவாகி வருகிறது. தியான மண்டபம், நூல் நிலையம், பக்தர்கள் தங்குமிடம் என்று இன்னும் உயர்வாக வளரவுள்ளது. அங்கே ஆறு அடி உயரத்தில் யோகிராம் சூரத்குமார் அவர்களுக்கு ஓர் உருவச்சிலையும் அமைக்க வேலை நடந்து கொண்டிருந்தது.

இந்தியாவில் உள்ள லட்சக்கணக்கான பக்தர்கள் மட்டுமல்லாது மேலைநாட்டு பக்தர்களும் இந்த மந்திராலயப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.


ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய்ராம் என்கிற நாமமே பகவான் யோகிராம் தாரக மந்திரம். அன்பு செய், அன்பு செய், சகல உயிர்களிடத்தும் அன்பு செய் என்பதே .வாழ்க்கை வேதம். கடவுளை நம்பு. போதும். வேறு எதுவுமே முக்கியமில்லை என்பதே தத்துவம்.

மறைந்த கவிஞர் பெரியசாமி தூரன் அவர்களாலும், அமரர் 'கலைமகள்' ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் அவர்களாலும் தீந்தமிழ்க் கவிதைகளால் பாராட்டப்பட்டு ஆராதிக்கப்பட்டவர் யோகிராம் சூரத்குமார். இசைஞானி இளையராஜா இவர் மீது மிகுந்த பக்தி கொண்ட சீடர். பாடகர் ஜேஸுதாஸ் பெரும் பக்தர். மிகுந்த பக்தி கொண்ட சீடர். எண்ணற்ற பக்தர்களால் எந்த நேரமும் சூழப்பட்டு அருள் தாகம் தீர்க்கும் வள்ளல் பகவான் யோகி அவர்கள்.

காதால் பிறர் சொல்லக் கேட்டும், கனவில் தானாகத்தரிசித்தும் யோகியாரிடம் வரும் பக்தர்கள் அநேகர். குறிப்பாய் பெண்கள் அவரை ஞானத்தந்தையாய் உணர்ந்து மந்திராலயப் பணியில் பெரும் பங்கு வகிக்கிறார்கள்.

எழுத்தாலோ பாட்டாலோ, பேச்சாலோ விளக்க முடியாத இந்தப் பெரும் யோகியை, ஞான சூரியனை நேரே சென்று தரிசிக்க உள்ளொளி பெருகுவது உணர முடியும். முதல் பார்வையிலேயே சொற்களுக்கு அப்பால் ஓர் இதம், சகலருக்கும் நிச்சயம் தோன்றும். அவருடைய மந்திராலயப் பணியில் பங்கு கொள்வது பழம் வினை யறுக்கும். பங்கு கொள்ள விரும்புகிறவர்கள் அ. பொன்காமராஜ் நிறுவனர், யோகிராம் சூரத்குமார் மந்திராலயம், காணிமடம் – 629401., கன்யாகுமரி மாவட்டம் என்கிற விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

தொகுத்தவர் :
பொன் காமராஜ்



நெஞ்சு கனக்குதடி

கவியரசு வைரமுத்து

வாக்கப்பட்டு வளவிபோட்டு
வடக்கமுன்ன போறவளே!
மாங்கொளத்துக் கரையோரம்
மாமன்காரன் நிக்கறேண்டி!

ஆருக்கோ தொணையாகி
அசலூரு போறவளே!
கண்ணுக்குத் தெரியாமக்
கண்ணீர்எட்டிப் பாக்குதடி.

கண்டாங்கிச் சேலகட்டிக்
கரைவழியே போறவளே
கால்கொலுசு சிணுங்குறது
காதுக்குத் தெரியுதடி


மூணு முடிச்சோடு
முறைப்படிநீ போனாலும்
முந்தானையில் நான்போட்ட
முடிச்சை யாரு அவுக்கிறது?

சோளக் காடெல்லாம்
சொல்லுதடி ஒம்பெயரை
கம்மாக் கரையெல்லாம்
கண்ணீரில் நெறையுதடி

ஒத்தப் பனமரத்து
ஓரமாப் போகையிலே
கொஞ்சம் திரும்பிப்பார்
கூப்பிடுமே என்நெனப்பு.

ஓடையிலே பாடியதும்
ஓடிவிளை யாடியதும்
சாடையிலே பேசியதும்
தாவிவந்து கொல்லுதடி.

அன்பாநாம் இருந்ததுக்கு
அடையாளம் ஏதுமில்ல
ஆண்பிள்ள பெத்தெடுத்தா
எம்பேர வையிபுள்ள.



சிவசங்கரி

'சித்த சமத்தா இருக்க மாட்டியோடீ?'

வரிசையாகப் பையன்களாகப் பெற்றுச் சந்தோஷப்படுகிறாள் என்று இவள் நினைக்க, பரவாயில்லை, நீயாவது பெண் ணாப் பெத்திருக்கே என்று சந்தோஷப்படு என்று அவள் திருப்பிச் சொல்ல...

இன்லாண்ட் லெட்டரின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டிருந்ததை ஞானம் திரும்பத் திரும்பப் படித்தாள்.

சம்பிரதாய ஆரம்ப - முடிவுக்கு இடையில் 'நான் அஸ்ஸாமிலிருந்து வந்து பத்து நாள் ஆகிறது. முடிந்தால் அண்ணா நகருக்கு ஒரு தரம் நீ வந்து என்னைப் பார்த்தால் நல்லது' என்ற வரிகளில் தொனித்தது வெறும் செய்தியா அல்லது அழைப்பா என்று புரியவில்லை.

எதுவானாலும், மன்னியைப் பார்த்து நாளாகிறது. அவளே கூப்பிடும்போது போகாவிட்டால் நன்றாக இருக்காது. பார்த்தாலும் கூட 'நன்றாக இருக்க' ஒன்றுமிராது என்றாலும், எத்தனை நாளைக்குத்தான் தள்ளிப் போடுவது?

போகலாம் என்று முடிவு செய்தாலும் சரசரவென்று கிளம்பிப் போய்விட முடிகிறதா என்ன! 'மன்னியைப் பார்த்துவிட்டு வந்தேன்' என்று சாதாரணமாகச் சொல்வதும், 'காலையில் எனக்கு நெஞ்சு வலித்தது, ஹார்ட் அட்டாக்காக இருக்குமோ' என்று பயப்படுவதும் புருஷன் சிவராமனுக்கு ஒன்றுதான். எதற்கும் 'அப்படியா?' என்பது போல ஒரு பார்வை, மிஞ்சிப் போனால் 'போறது போ!' என்றுதான் மாமூலாகக் கிடைக்கும் பதில்.

தானுண்டு, தன் வேலையுண்டு ரகம். லட்ச ரூபாய் லாட்டரியில் வந்தாலும் குதிப்பது கிடையாது; போனாலும் இடிந்து போகிறவர் இல்லை. சரியான அப்பிராணியா, இல்லை விவேகம் நிறைந்த ஸ்திதப்பிரக்ஞரா? தெரியாது. தெரிந்து கொள்ளவும் ஞானம் ஆசைப்பட்டதில்லை.

கையிலிருந்த கடிதத்தை மற்றுமொரு முறை படித்தாள்.

போய்வந்துவிட்டால், ஒரு காரியம் முடிந்தது. நாளைக்கு 'நான் லெட்டர் போட்டும், நீ வரவில்லை' என்கிற குற்றச்சாட்டுக்கு இடம் இருக்காது.

கல்யாணமாகி இத்தனை வருஷங்கள் கழிந்த பிறகும், மாப்பிள்ளைகள் வந்து, பேரன் பேத்தி பிறந்த பிறகும் மன்னியிடம் தனக்கு இருக்கும் பயத்தை நினைக்

கையில் உதட்டோரம் சிரிப் பொன்று சுழித்தது.

மீண்டும் ஞானம் கடிதத்திடம் கவனத்தைச் செலுத்தினாள்.

ஒன்பது மணிக்குக் கடையை மூடிச் சாவியை முதலாளி வீட்டில் கொடுத்துவிட்டு அவர் வரும்போது வீடு திறந்திருந்தால் போதும். அதற்குள் அண்ணா நகருக்கு நாலு தரம் போய்விட்டு வரலாம். ஆனால் தனியாக எப்படிப் போவது!

போகவேண்டும் என்கிற ஒரு தீர்மானத்தின் தோளை அணைத்த படி கவலையும் உடன் வந்து நின்றது.

கடைக்குட்டி சுபத்ரா மூன்று மாதங்களுக்கு முன் திருமணமாகிச் செல்லும் வரை எதற்கும் அவள் கூட நின்றதால், ஞானம் எந்த வகையிலும் கஷ்டத்தை உணர வழி இல்லாமல் தான் இருந்தது.

பெற்றது நாலும் பெண் என் றாலும் ஒவ்வொருத்தியும் வீட்டில் இருக்கும் வரை, குடும்பச் சுமை யைப் பகிர்ந்ததும் அல்லாமல் உப்பு, புளி வாங்குவதிலிருந்து தங்கள் கல்யாணத்துக்குச் சத்திரம் பார்ப்பதுவரை தாங்களே கவனித்துக் கொண்டு விட்டார்கள். சுபத்ரா போனபின்தான் ஞானத் துக்குத் திண்டாட்டமே ஆரம்ப மாயிற்று. ஒரு வழியாய் இப்போது தான் வாசலில் காய்கறி வாங்க வும், தெருமுனையில் இருக்கும் கடையில் மளிகை வாங்கவும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அழகில் அண்ணா நகருக்குத் தனியாய் எப்படிப் போவது? எந்த பஸ்ஸில் ஏறி, எங்கு இறங்கி, எப்படிப் போக!

மூத்தவள் நிர்மலாவின் புருஷ னுக்குக் கோயமுத்தூருக்கு மாற்ற லாகிப் போய் ஒரு வருஷமாகிறது. இங்கே சென்னையிலேயே இருந் திருந்தால் கூப்பிட்ட குரலுக்கு உடனே ஓடிவருவாள், நிச்சயம். இப்போது மட்டுமென்ன, சென் னைக்கு வரும் ஒவ்வொரு முறை யும் பெற்றவர்களின் மெடிகல் செக்கப் முதல் தங்கைகளின் கல்யாண விஷயங்கள் வரை அத்தனையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள். போதாத தற்குப் புடைவை, கிரைண்டர் என்று வாங்கிவந்து 'அவர் தாம்மா தடியா கொடுத்தார்' என்று சின்னச் சிரிப்போடு நீட்டுகிறாள்! எதுக்குடீ இதெல்லாம்? என்றால், இன்னும் பெரியதாகச் சிரிப்பாள். 'செஞ்சா என்னம்மா? ரெண்டு பேரும் ஒரே மாதிரி பாங்க் வேலைதானே? மாமியாருக்குச் செய்யலாம், அம்மாவுக்குன்னா, கூடாதா?' என்று அவள் ஒரே போடாகப் போடுவதை மாப் பிள்ளையே 'அதானே!' என்று அங்கீகரிக்கும்போது மறுத்துப் பேச ஞானத்துக்கு வாய் ஏது!

இரண்டாமவள் கல்யாணிக்கு சம்சாரம் பெரிசு. மச்சினர் ஓர்ப் படியோடு கல்யாணமாகாத கொழுந்தன்களும், நாத்தனார் களும் உண்டு. இருப்பினும் ஓயாத அடுப்பங்கரைக் காரியத்துக்கு இடையிலும் மாசம் ஒரிரு தர மாவது எட்டிப் பார்க்காமல் இருப்பதில்லை. அப்படி 'வந்த இடத்திலியாவது சித்தப் பேசாமப் படுத்துக் கிடக்கப் படாதோ?' என்று ஞானத்துக்குத்தான் மிகவும் அங்கலாய்ப்பாக இருக்கும். ஆனால் கேட்கிறவள் இல்லை கல்யாணி. அதிகம் பேசுகிறவளும் இல்லை. என்னமோ பாதியில் விட்டுப்போன கைக்காரியத்தைத் தொடர்கிற மாதிரி வரும்போதே புடைவையைத் தூக்கிச் செருகிக் கொண்டே தான் வருவாள். இரவு அவள் கிளம்பிப் போகும்போது பார்த்தால் வீடு பளிச்சென்று ஆகியிருக்கும்.

இந்த முறை கல்யாணி வந்து விட்டுப் போய் நாலு நாள்கூட ஆகவில்லை. அதற்குள் மறுபடி கூப்பிட முடியுமா? வேண்டாம்.

கௌசல்யாவைக் கேட்டால் என்ன? 'மன்னியப் பார்க்கணும், வர்றியா?' என்றால் அவள் மாமி யார் முசுடு, விடுமோ விடாதோ! 'உள்ளூர்லே பொறந்தாம் இருக் குன்னு விசுக்கு விசுக்குனு கிளம்பி யாயிடறது!' என்று எப்போது போனாலும் குத்திக்காட்டத் தவறுவதில்லை. 'அம்மா வருத்தப் படும்படியா வெச்சுக்காதே கௌசி' என்று அவள் புருஷனும் நாசூக்காகத் தடை போடுகிறவன் தான். நாசூக்காகத்தான் சொல் வானோ அல்லது வேறு ஏதாவது கடுமையாய்ச் சொல்வானோ, எதுவும் தெளிவாகச் சொன்ன தில்லை கௌசல்யா. ஞானத்திடம் எதையும் சொல்லிப் புலம்பாத தோடு, புக்ககத்து மனிதர்களை விட்டுக் கொடுக்காமல் பேசுவ திலும் அவள் கெட்டிக்காரி. "யார் வீட்டுல பிரச்னை இல்ல? சின்ன விஷயத்த எல்லாம் பெரிசாக்கி னோம்னா வாழ்க்கை நரகமாயி டாதா? அவாள்ளாம் அடிப்படைல நல்லவாதான். வார்த்தை ஜாலம் செஞ்சுப் பேசத் தெரியல... அவ்ளோதான்!" என்பாள், எல் லாம் தெரிந்த நூற்றுக்கிழவி மாதிரி!

ஆனால் அவர்களைச் சமா ளிக்கத் தெரிந்தவளுக்குக்கூட மன்னியை மட்டும் பிடிப்பதே யில்லை. துணைக்காவது வா என்று கேட்டுத்தான் பார்க்க வேண்டும். வேறு வழியில்லை.

கௌசல்யாவைக் . கூப்பிட லாமா, வேண்டாமா? "ரொம்பப் பெரிய மனுஷி 'வா'னு லெட்டர் போட்ட ஒடனே, அடிச்சு பொரண் டுண்டு ஓடறதுக்கு? வேற வேலை இல்லம்மா உனக்கு! என்று அதட்டுவாளோ! என்ன வேண்டு மானாலும் சொல்லட்டும், இந்தக் காதில் வாங்கி அந்தக் காதால் விட்டுவிட்டு, 'சுருக்கத் திரும்பிட லாம் வாடீ' என்று சொல்லி, அவளோடு போய் வந்துவிட்டால் ஒரு வேலை முடிந்தது என்று இருக்கும்.

செய்ய வேண்டியது என்ன என்று உறுதியான பிறகு ஞானம் வீட்டைப் பூட்டிக்கொண்டு இரண்டு வீடு தள்ளியிருந்த டாக்டர் கிளி னிக்குக்குப் போய், டேபிளின் மீதிருந்த டைப்ரைட்டரைத் தட்டிக் கொண்டிருந்த பெண்ணிடம், "ஒரு போன் செய்துக்கட்டுமாம்மா?" என் றாள் மெதுவாக.

வழக்கமாய் வருகிறவள் என்பத னால் அந்தப் பெண் தலையாட்ட, ஞானம் கையில் இருந்த சீட்டைப் பார்த்து நம்பரைச் சுழற்றினாள்.

"ஹலோ, யாரு? கௌசியா?"

"நான்தாம்மா.... என்ன இப்படி மத்தியான வேளைல போன் செய்றே? யாருக்கும் உடம்புக்கு ஒண்ணுமில்லியே?"

"அதெல்லாம் இல்லேடீ... மன்னிகிட்டேயிருந்து கடுதாசி வந் திருக்கு, அதான் சித்தப் போய்ப் பார்ப்பமேனுதான்..."

கௌசல்யாவின் குரல் உயர்ந்து கத்தலாய் வெளிப்பட்டது. "உடனே விழுந்தடிச்சிண்டு அண்ணா

நகருக்குப் போப்போறியாக்கும்! ஏம்மா உனக்கு எத்தனை தரம் சொன்னாலும் உரைக்கவே மாட்டேங்கறது?"

எதிர்பார்த்ததுதான். ஞானம் அதைப்பாராட்டாமல் கேட்டாள்.

"ப்ச்... அதெல்லாம் கிடக்கட்டுண்டீ! நீ எனக்குத் துணைக்கு வருவியா மாட்டியா? அதச் சொல்லு..."

"மாட்டேன். நானும் வரமாட்டேன், நீயும் போக வேண்டாம். இங்க மாமியாருக்கு உடம்பே நன்னால்லே, எதச் சாப்பிட்டாலும் வயத்துல தங்காம வந்துடறது.. விட்டுட்டு வராப்பல இல்லே... வேற ஏதானும் அவசியம்னாலும் எங்காத்துக்காரர்கிட்டச் சொல்லிப் பாத்துக்கச் சொல்லலாம். இப்ப நீ அண்ணா நகருக்குப் போகிற அளவுக்கு அவசரம் ஒண்ணுமில்லே. பேசாம இரு!"

சுபாவப்படி அவள் மூச்சு விடாமல் கத்த, ஞானத்துக்கு ஏமாற்றம். ரிஸீவரை வைத்து விட்டுக் காசைக் கொடுக்கும்போது சுபத்ராவுக்குப் போன் செய்து கேட்டால் என்ன என்று ஒரு கணம் தோன்றிய நினைப்பு உடனே மறைந்தது.

ஆபத்து என்றால் ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு ஓடியே வருவாள் என்றாலும், அவளும்தான் 'மன்னி' என்று கேட்டாலே கத்துவாள். அதோடு புதுசாய் கல்யாணமானவள், சாயந்திரம் புருஷனோடு என்ன புரோகிராம் வைத்திருக்கிறாளோ!

கிளினிக்கிலிருந்து வந்து பூட்டைத் திறந்து வீட்டுக்குள் நுழைந்தபோது, ஏதோ ஒரு கையா



லாகாத்தனம் மனசு முழுக்கப் பரவியிருந்தது.

ஒரு பிள்ளை - ஒரே ஒரு பிள்ளையாவது பெற்றிருந்தால் இப்படிக் கெஞ்சிக் கொண்டிருக்க வேண்டாமே! 'எடுடா வண்டியை' என்றால் நிமிஷ நாழிகையில் கொண்டு சேர்த்துவிட மாட்டானா!

'சித்த சமத்தா இருக்க மாட்டியோடீ?' என்ற மன்னியின் விமர்சனம் நிஜம்தானோ! இன்னும் கொஞ்சம் சமர்த்தாக இருந்திருக்கலாமோ! பெண்ணுக்குப் பதில் பிள்ளையாய் பெற்றிருக்கலாமோ?

சே... என்ன பேத்தலான நினைப்பு இது? என்னமோ வேண்டுமென்றே பெண்ணை விரும்பிப் பெற்ற மாதிரி! நம் கையில் என்ன இருக்கிறது! எது வேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் உரிமை யாருக்கும் இல்லாதபோது சமர்த்து என்ன, அசடு என்ன?

வேலை ஏதும் ஓடாமல் குருட்டு யோசனையில் ஆழ்ந்திருந்த ஞானம் மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் சத்தம் கேட்டு ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள்.

கணவனின் தோளைப் பிடித்தபடி உட்கார்ந்திருந்த சுபத்ரா இறங்கி உள்ளே வந்தாள்.

"என்னம்மா, தூங்கிண்டிருந்தியா?" என்ற அவள் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஞானம் மாப்பிள்ளையைப் பார்த்துச் சின்னக் குரலில் "வாங்கோ..." என்றாள்.

லேசான கூச்சத்துடன் அவன் தலையசைத்து சோபாவில் உட்கார்ந்துகொண்டான்.

"ஆபீஸ் லீவாடி இன்னிக்கு? இந்த நேரத்துல போய் வந்திருக்கியே?"

"லீவா? இன்னிக்கு சனிக்கிழமைம்மா... மறந்துட்டியா? அரை நாள்தானே ஆபீஸ்..."

"ஆமா, ஞாபகமே இல்லே... சரி, என்ன சாப்பிடறேள்? இட்லி மாவு இருக்கு, ஒரே ஈடு வார்க்கட்டுமா?"

"ஒண்ணும் வேண்டாம்மா... வரும்போது ஹோட்டல்ல சாப்பாடே ஆயிடுத்து. சரி, நீ கிளம்பறியா, மன்னியாத்துக்குப் போகலாம்..."

"மன்னியாத்துக்கா?" ஞானத்துக்கு ஒன்றும் புரியவில்லை.

சுபத்ரா சிரித்தாள்.

"கௌசிதாம்மா போன் செஞ்சி சொன்னா. நல்லவேளையா நான் அப்பத்தான் ஆபீஸ் முடிஞ்சு இவரோடு சினிமாக்குக் கிளம்பிண்டிருந்தேன். 'மன்னியப் பாக்காம அம்மாவால இருக்க முடியாது - என்னால போக முடியல, நீயானும் போயேன்'னு சொன்னா..."

"அப்போ, சினிமா?"

"அதுக்கென்ன, இன்னொரு நாள் போயிண்டா போச்சு! இல்லேன்னா நீ மறுபடியும் நாலு நாள் கழிச்சு கௌசியத்தான் தொந்தரவு செய்வே. பாவம் அவ, பெரிய சம்சாரத்துல மாட்டிண்டு இருக்கா. இன்னிக்கு விட்டா என்னாலயும் பிறகு வர முடியாது. இந்த மாதிரி இழுத்துக் கட்டிண்டு 'மன்னி... மன்னி'னு ஓடாதேனு சொன்னா நீ கேக்கவா போறே? சரி, கிளம்பு..."

அவளுடைய சலிப்பைப் பொருட்படுத்தாமல் ஞானம் பரபரவென்று புடைவையை மாற்றிக் கொண்டு தயாரானாள்.

"ஜாக்கிரதையாப் போயிட்டு வாங்கோ, நான் எட்டு மணி வாக்குல வந்து அழைச்சிண்டு போறேன்" என்ற கணவனுக்கு விடை கொடுத்துவிட்டு வந்த சுபத்ராவுடன் வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

அரைமணி காத்திருத்தலுக்குப் பிறகு வந்த பஸ்ஸில் மதிய வேளை என்பதாலோ என்னவோ உட்காரக்கூட இடம் கிடைத்தது.

"அடடா, மன்னிக்கு ஒண்ணுமே வாங்கிக்கலையே! ஒரு டஜன் மலைப்பழமாவது வாங்கிண்டு பஸ் ஏறிருக்கணும்டீ சுபத்ரா".

"ஆ... மா! நீ கொண்டு போறதத் திங்கறதுக்காகத்தான் அவ நாக்கத் தொங்கப் போட்டுண்டு காத்திண்டிருக்காளாக்கும்! உனக்கு இன்னும் இந்த அஞ்ஞானம் விடலியே!"

"எதுக்குடீ விடணும்? என்ன இருந்தாலும் எங்கண்ணா பொண்டாட்டி அவ..."

"அதான் உன் அண்ணாவே போயாச்சே, பிறகு இவளை என்ன பார்வை வேண்டிக் கிடக்கு?"

"அதுக்காக? அண்ணா போயிட்டா உறவே இல்லேன்னு ஆயிடுமா? அது என்னமோம்மா, உங்க ஒருத்தருக்காவது அவளைப் புடிக்கறதேயில்லே! சித்த லொட லொடனு பேசற சுபாவம்... பாவம்..மத்தபடி..."

"ஆஹா..., ரொம்ப ரொம்பப் பாவம்தான்! எங்களுக்குத்தான் புடிக்கலே, உனக்கு என்ன? நாலு நாவட்டம் போய் மன்னிகிட்ட சீராடிட்டு வரதுதானே? எப்பவோ ஒரு தரம் போயிட்டு வர்றப்பவே உனக்கு பி.பி. ஏறிப் போயிடறது. அவ பேச்சையும் குத்தலையும் கேட்டுண்டு அழாம நீ வந்த நாள் ஏதாவது உண்டா? போம்மா... பெரிசாப்போயி சப்பைக்கட்டாத... எனக்குத்தாங்கல..."

ஞானம் மேலும் பேச்சை வளர்த்தவில்லை.

பேச என்ன இருக்கிறது? சுபத்ரா சொல்லுவது என்னவோ அத்தனையும் உண்மைதானே? மன்னியைப் பார்த்துவிட்டு கண்ணில் நீரும் நெஞ்சில் பாரமுமாய் வராத நாளே கிடையாது.

இப்போது என்றில்லை. அந்த நாளில் அண்ணனின் கையைப் பிடித்த நிமிஷத்திலிருந்தே அவள் இப்படித்தான்.

வெறும் அக்கவுண்டண்டாய் நுழைந்த அண்ணன் படிப்படியாய் உயர்ந்து கம்பெனியின் மேனேஜிங் டைரக்டராய் ஆனபோது மன்னியின் வாயும் நீண்டுதான் போய் விட்டது.

போதாததற்கு அவள் பெற்றது மூன்றும் ஆண் பிள்ளைகள். நேர் எதிராய் சொல்லி வைத்த தினுசில் ஞானத்துக்கு எல்லாரும் பெண்களாய் வந்து வாய்த்தார்கள்.

முதல் இரண்டு பிரசவத்துக்கும் பிறந்தகத்துக்குப் போனபோது ஆரம்பித்த 'சித்த சமத்தா இருக்க மாட்டியோடீ?' என்ற குத்தல் பேச்சு கடைசி இரண்டு பிரசவங்களுக்கு ஞானம் புக்ககத்திலேயே இருந்த போதும் விடவில்லை.

கொண்டையும் அதைச் சுற்றிய வேணியும், கை, கழுத்து, காது கொள்ளாத வைரமும், தோளைப் போர்த்திய ஜரிகைப் புடைவையும், சற்றே உயர்த்திய முகத்தில்

அலட்சியப் பார்வையுமாய் மன்னி வரும்போதே ஞானத்துக்கு வயிற்றைக் கலக்கும்.

"மூத்ததுதானே இது? போன தரம் பார்த்ததுக்கு இப்போ என்னமா வளர்ந்திருக்கா? வயத் துல வெச்சு திணிக்கறயாக்கும்! பொண் வளர்த்தியோ பீர்க்கங் காய் வளர்த்தியோனு பெரியவா சொல்ற மாதிரி தபதபனு பெரி சாயி நிக்கும், பிறகு வயத்திலே நெருப்பக் கட்டிண்டு அலை யணும்!"

மேலும் கீழுமாய்ப் பார்வையை மேயவிட்டு, என்னமோ தப்பு நடந்து விட்ட தினுசில் மன்னி பேசும்போது குழந்தைகள் கூசிப் போய் நிற்பார்கள். போதாக் குறைக்குக் குழந்தைகள் தனித்து இருக்கையில் ஒத்து நாயனம் மாதிரி அவள் பிள்ளைகள் வேறு! 'கேர்ல்ஸ்கூட நாங்க விளையாட மாட்டோம்' என்றும், 'பாய்ஸ் ரூமுக்குள்ள கேர்ல்ஸ் வரக் கூடாது' என்றும் மாற்றி மாற்றி அதிகாரம் செய்தால் யாருக்குத்தான் பிடிக் கும்?

'இனிமே நாங்களும் அங்க வரமாட்டோம், உங்க மன்னியும் அவ அருமைப் பசங்களும் இங்க வரவேண்டாம்' என்று எத்தனை தான் பெண்கள் அழுதாலும் ஞானத்துக்குத்தான் ஏனோ மனசு கேட்பதில்லை. பகவான் புண்ணி யத்தில் பணத்துக்கு என்று போய் மன்னியிடம் நிற்கவேண்டிய அவசியம் வாய்க்கவில்லை. நாலு பேருமே டிப்பில் சுட்டி. உயர்ந்த படிப்புப் படித்து, சமர்த்தாய் நல்ல உத்தியோகங்களைத் தேடிக் கொண்டு விட்டார்கள். எப்போ துமே அதிகம் ஆசைப்படாத வாழ் வானதால், சக்திக்கேற்ப, ஒருத்தர் தயவின்றிக் கல்யாணம் காட்சி களைக்கூட ஒப்பேற்றியாகிவிட்டது.

ஆனால் இவர்கள் போய் நிற்கா விட்டாலும், மரியாதைக்காகவா வது எதற்கும் உதவி வேண்டுமா என்றுகூடக் கேட்டவளில்லை இந்த மன்னி. அண்ணனுக்கு எப்போ துமே நேரம் இருந்ததில்லை. பார்க்கும் சந்தர்ப்பங்களில், 'செள்க்கியமாம்மா? மாப்பிள்ளை எப்படி இருக்கார்? குழந்தைகள்? அவசர வேலையிருக்கு. நான் வரட்டுமா? நீ மன்னிகிட்ட பேசிண் டிரு...' என்று வார்த்தை மாறாமல் ஒப்பித்துவிட்டுப் போவார்.

இவள் வீட்டு விசேஷங்களுக்குக் கூட ஒன்று அல்லது இரண்டு வேளை வந்து தலையைக் காட்டி விட்டுப் போவார்கள். அவ்வளவு தான். அவள் பிள்ளைகளுக்கு அதற்குக்கூட நேரம் இருந்த தில்லை.

'ராகவ் லண்டனுக்குன்னா போயிருக்கான், அவன் எப்பிடி வர முடியும்? ரமேஷும் ரவியும் பரீட்சைக்குப் படிக்கறா... வெறும் டிகிரியா, போனாப் போறதுன்னு வர்றதுக்கு? இன்ஜினீயரிங்கும், சி.ஏ.வும் படிக்கறவாளால நினைச்சாப்பல கிளம்பிட முடியறதா?"

இதற்குப் பிறகு யாருமே வாயைத் திறக்க மாட்டார்கள். திறக்காமலிருக்க ஞானமும் பழகி விட்டாள். பெண்கள் எரிச்சலுடன் பேசும்போது மட்டும், 'சொல்லட் டுமே? மன்னிக்கு எல்லாமே நன்னா அமைஞ்சிருக்கு, பெருமை யாப் பேசிக்கறா. அதையெல்லாம் பிடிக்கலேன்னா நாம காதுல போட்டுக்காம இருக்கணும்' என்று சமாளிப்பாள்.

வாஸ்தவம்தான். எல்லாமே அவர்கள் கணக்குப்படி உசத்தி

யாக அமையத்தான் செய்தன. மூத்தவன் ராகவன் லண்டனுக்குப் படிக்கப் போனவன் அங்கேயே ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டான். அவளை இந்தியாவுக்கு அழைத்து வந்து பெற்றவர்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டுத் திரும்ப லண்டனுக்குப் போனவன் பிறகு வரவில்லை, தகப்பன் இறந்த நேரத்தைத் தவிர.

அடுத்தவன் ரமேஷுக்கு மன்னியே பார்த்து முடிவு செய்த இடம்தான். இலட்சாதிபதி வீட்டுப் பெண். பெங்களூரில் பெரிய ஃபாக்டரியும், தோட்டம் போட்ட வீடுமாய் எதற்கும் குறைவில்லை.

கடைசிப் பிள்ளை ரவி அஸ்ஸாமில் வேலையாகிப் போனபோது அங்கே காதலித்த அஸ்ஸாமியப் பெண்ணை இங்கே கூட்டி வந்து சம்பிரதாயம் மாறாமல் கைப் பிடித்தான்.

பஸ் குலுக்கலுடன் நின்றது. அடுத்து அமர்ந்திருந்த பெண்மணிக்கு இறங்க வழிவிட்ட சுபத்ரா நினைத்துக் கொண்டு சொன்னாள்.

"இவருக்குக்கூட இஷ்டமே இல்லேம்மா... மரியாதையா நடத்தாதவா வீட்டுக்கு நாம்ப எதுக்குப் போகணும்னார். நான்தான் சமாதானப்படுத்தி என்னைக் கொண்டு விடுங்கோன்னேன். கல்யாணமான கையோடு நாங்க நமஸ்காரம் செய்யப் போனப்போ உங்க மன்னி பேசினதக் கேட்டவா யாரும் அவ முஞ்சிலகூட முழிக்க மாட்டா, தெரியுமோ?"

சுபத்ரா சொன்னதற்கு ஞானம் பதிலேதும் சொல்லவில்லை.

அண்ணன் போய் ஒரு வருஷம் முடியவில்லை என்பதற்காக மன்னி வெளியே வராமல் இருந்த போதுதான் சுபத்ரா கல்யாணம் நடந்தது. கணவனும் மனைவியுமாய் மன்னிக்கு நமஸ்காரம் செய்யப் போனதும், 'ஒரு வழியா உங்கம்மா பாரம் குறைஞ்சுதாடீ! நீங்கள்ளாமாவது சமத்தா இருங்கோ, என்ன புரியறதா?" என்று ஆசீர்வாதம் செய்த மனுஷியின் பேரைச் சொன்னாலே பெண்கள் கோபப்படுவதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது?

பஸ் ஸ்டாண்டில் இறங்கித் தெருவுக்குள் திரும்பி நடக்கத் தொடங்கியதும் ஞானம் மறுபடி, "மறந்துட்டியா சுபத்ரா, பழம் வாங்கினாத் தேவலைடீ..." என, சுபத்ரா, "வேற வேலை இல்லேம்மா உனக்கு..." என்று சலித்துக்கொண்டாள்.

அம்மாவை அங்கேயே நிற்கச் சொல்லிவிட்டு மெயின் ரோடில் இருந்த பழக்கடைக்குச் சென்று பிளாஸ்டிக் பை நிறைய வாழையும், திராட்சையும் வாங்கி வந்தாள்.

மன்னி வீட்டின் பெரிய கேட்டுக்கு உள்ளே அந்தக்கால போர்ட்டிகோவில் கறுப்பு அம்பாஸிடர் கார் ஒன்று தூசி படிந்து நின்றிருந்தது.

அழைப்பு மணியை அழுத்தியதும் கதவைத் திறந்தவள் சமையல்காரப்பாட்டி.

"என்ன பாட்டி, சௌக்கியமா? மன்னி எங்கே?"

"யாரு? ஞானமா? வா... வா. உறவு விட்டுப்போகாம நீயாவது வந்து போயிண்டு இருக்கியே... உங்க மன்னி அந்த ரூம்ல படுத்திண்டிருக்கா..."

பாட்டியின் குரலோ, படுக்கையில் படுத்திருந்த மன்னியின், "வா ஞானம்..." என்ற அழைப்போ அத்தனை சுரத்தாக இல்லை.

"உடம்பு சரியில்லையா மன்னி? இன்னிக்குத்தான் கடுதாசி வந்தது. உடனே புறப்பட்டு வந்துட்டேன். அஸ்ஸாம்லேருந்து எப்போ வந்தேள்?"

மன்னியிடமிருந்து பதில் வரவில்லை.

சுபத்ராவைப் பார்த்தவள் மெல்ல, "குளிச்சிண்டிருக்கியா?" என்றாள்.

வெட்கத்தோடு அவள் தலையைக் கவிழ்த்துக் கொள்ள, "இல்லே மன்னி... மெய்யோ பொய்யோனு இருக்கு, இன்னும் டாக்டர் தீர்மானமாச் சொல்லலை..." என்றாள் ஞானம்.

மன்னி எழுந்து உட்கார்ந்தாள். சுபத்ராவை அருகில் அழைத்து இருத்திக் கொண்டாள். "இந்த நிலைமைல ஏன் இத்தனை தூரம் பஸ்ஸுல வந்தேள்? குழந்தையை ஏண்டி தொந்தரவு செய்தே ஞானம்?"

இந்த அணைப்பு, இந்தக் கரிசனம் எல்லாம் புதுசாகப்பட, சுபத்ரா வியப்புடன் அம்மாவை நிமிர்ந்து பார்த்தாள்.

"பரவாயில்லே மன்னி.. 'வா'னு நீங்க எழுதியிருந்தேளா எனக்கு இருப்பே கொள்ளல்லே கௌசியக் கூப்பிட்டேன், அவ இவளை அனுப்பிச்சுட்டா. அஸ்ஸாம்ல ரவி, அவன் பொண்டாட்டி குழந்தையெல்லாம் நல்லபடியா சௌக்யம்தானே? அவ பேசறது உங்களுக்குப் புரியறதா மன்னி?"

மன்னியிடமிருந்து சலிப்பான 'ப்ச்' என்ற சூள் கொட்டல்தான் பதிலாக வெளிப்பட்டது.

"வரும்போது பெங்களூருக்குப் போயிட்டு வருவேன்னு சொன்னேளே, ரமேஷாத்துக்குப் போயிருந்தேளா?"


"ப்ச்" என்றாள் மன்னி மறுபடியும். "எங்க போனா என்ன, எனக்கு ஒண்ணும் சரிப்பட்டு வரலே... எல்லாருக்கும் நான் வேண்டாத மனுஷியா ஆயிட்டேன்... என்றபோது குரல் தழுதழுத்தது.

சாப்பிட்டு முடித்த ஞானம் ஏதேதோ பேசின அரை மணி நேரத்தில் மன்னியிடமிருந்து அதிகமான பேச்சில்லை. வழக்கமான ஈட்டிக் குத்தல்களும் இல்லை.

"நான் கிளம்பறேன் மன்னி, இவாத்துக்காரர் வேற எட்டு மணிக்கு வரேன்னு சொன்னார். பிறகு வீணாக் கவலைப்படுவார்..."

மன்னியை சிரமப்படுத்த வேண்டாம் என்று தாங்களே இரண்டு பேரும் சுவாமி அலமாரியிலிருந்த சிமிழிலிருந்து குங்குமம் இட்டுக் கொண்டு கிளம்பினார்கள்.

"வரோம் மன்னி, உங்க ஒடம்பு நன்னாவேயில்ல... பாத்துக் கோங்கோ... ரொம்ப முடியாமப் போனா சொல்லி அனுப்புங்கோ... தனியாக் கஷ்டப்பட வேண்டாம்..." நிஜமான கரிசனத்துடன் பேசிய ஞானத்தின் கையைப் பிடித்துக் கொண்டு, "சரி..." என்ற மன்னி, பலவீனமான குரலில், "சமத்துடீ நீ, பொண்ணாப் பெத்திருக்கே..." என்றபோது அந்த ஒற்றை வரி, நடந்துவிட்ட அத்தனை சமாசாரங்களையும் துல்லியமாக உணர்த்த, முதல் முறையாக ஞானத்துக்கு மன்னியை நினைத்துப் பரிதாபப் படத் தோன்றியது.



ஏ.பால்ராஜ், தலைவர், துறைமுகப் பொறுப்புக்கழகம்

சென்னைத் துறைமுகத்தின் சீரிய வளர்ச்சித் திட்டங்கள்

த.கி. இராமசாமி



கண்டெயினர் தாங்கிய கப்பல்

அன்று :

ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்னால் மீன் பிடிப்பவர்கள் வசிக்கும் ஒரு குக்கிராமமாகவே இருந்ததுதான் சென்னைப் பட்டினம். நம் நாட்டிற்கு வந்த ஆங்கிலேயர்கள் 'கிழக்கிந்தியக் கம்பெனி' என்ற ஒரு வாணிப நிறுவனத்தை இங்கே அமைத்து வாணிப வளர்ச்சிக்காக மசூலா எனப்படும் சிறிய படகுகள் மூலம், கடற்கரையிலிருந்து கால் மைல் தூரத்திற்கு அப்பால் நிற்கும் கப்பல்களிலிருந்து சரக்குகளை இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

தமிழக அரசின் தலைமைச் செயலகமாக தற்சமயம் செயல்படும் செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள்தான், அப்பொழுது ஆங்கிலேயரின் வாணிப நிறுவனம் இருந்துவந்தது. கப்பல்கள் வருவதற்கு வசதியாக இருக்கும் வகையில் கோட்டையிலேயே 1796 ஆம் ஆண்டு நூறடி உயரமுள்ள கலங்கரை விளக்கத்தை அமைத்தனர். தேங்காய் எண்ணெயால் எரியும் இந்த விளக்கின் ஒளி கடற்பகுதிக்குள் பதினேழு மைல் தூரம் தெரிந்தது.

சென்னைத் துறைமுகம் இயற்கைத் துறைமுகம் அல்ல என்பதனால் இதனை நவீனப்படுத்த 18 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு - கப்பல்கள் கரைக்கு அருகிலே வந்து பொருள்களை ஏற்ற - இறக்கச் செயல்முறைகள் விரிவுபடுத்தப்பட்டு, நாளுக்கு நாள் அதிவேகமாக வளர்ந்தன.

1875 ஆம் ஆண்டு டிசம்பர் 15இல் துறைமுகம் அமைப்பதற்கான முதல் தொடக்கப் பணி இங்கிலாந்து நாட்டு வேல்ஸ் இளவரசரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. துறைமுகத்தின் வளர்ச்சிப் பணிக்கு, பல்லாவரம் கல் சுரங்கத்திலிருந்து கற்கள் கொண்டு வந்தனர். இதற்காகவே பல்லாவரத்திலிருந்து போடப்பட்ட ரயில்பாதை முடிவு பெற்ற இடம்தான் இன்றைய 'பீச்' ரயில்வே ஸ்டேஷன்.

1894இல் தான் சென்னை உயர்நீதி மன்றக் கட்டடத்தின் மையமண்டபத்தில் கலங்கரை விளக்கம் கட்டப்பட்டது. இது மண்ணெண்ணெய் விளக்கே. பிறகு இதை மின்விளக்காக 1952இல் மாற்றி அமைத்தனர். இதன் ஒளி கடலில் 20 மைல் தூரம் தெரிந்தது. இதுவும் இப்பொழுது மாற்றப்பட்டு 1977இல் வானொலி நிலையத்திற்கு எதிரில் கட்டப்பட்டது. இந்தக் கலங்கரை விளக்கத்தின் ஒளி 28 மைல் தூரம் செல்லும்.

மசூலா படகுகள் மூலம் நடுக்கடலிலிருந்து சரக்குகளைக் கடற்கரையோரம் இறக்கி வந்த காலம் மாறி - இன்றைய தினம் ஆண்டொன்றுக்கு இரண்டாயிரத்து எழுநூறுக்கும் மேற்பட்ட கப்பல்கள், சென்னைத் துறைமுகத்தில் வந்து சரக்குகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன.

சென்னை நகரின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, தேசிய வளர்ச்சிக்கும் சென்னைத் துறைமுகம் அரும்பாடுபட்டு வருகிறது.

இன்று :

இந்தியாவிலுள்ள எல்லாத் துறைமுகங்களுக்குள்ளும் சென்னைத்துறைமுகம் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. உதாரணமாக சென்னைத் துறைமுகத்தில்தான் அனைத்து வசதிகளுடைய 'கன்டெயினர் துறை' 1983 டிசம்பரில் செயல்படத் தொடங்கியது. இக் கன்டெயினர் துறை 380 மீட்டர் நீளம் உடையது. ஆண்டுக்கு

80,000 கன்டெயினர்கள் கையாளும் வசதி படைத்தது. இந்தியாவில் வேறு எந்தத் துறைமுகத்திற்கும் இல்லாத சிறப்பு இது.

1986 - 87 ஆம் ஆண்டில் ஓர் இலட்சம் கன்டெயினர்களைக் கையாளும் அளவுக்கு இதன் பணி உயர்ந்து 1990 - 91இல் ஓர் இலட்சம் கன்டெயினர்களைத் தாண்டிக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் ஏறத்தாழ 24000 மெட்ரிக் டன் சரக்குகள் ஏற்றி இறக்கப் படுகின்றன. இந்த வளர்ச்சி உலக அரங்கில் ஓர் ஆச்சர்யமான செய்தியாகக் கருதப்படுகிறது. இன்னமும் விரிவாக்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு ஓர் இலட்சத்து 75,000 கன்டெயினர்கள் கையாளும் வசதி மிக்க துறையாக மாற்றி அமைக்க, 220 மீட்டர் நீட்டிக்க, 55 கோடி ரூபாய் செலவில் மிகவும் மும்முரமாக வேலை நடந்து கொண்டிருக்கிறது.

இரும்புக் கனி கப்பல்களைக் கையாளும் துறையான 'பாரதித் துறை' 17.4 மீட்டர் ஆழப்படுத்தப் பட்டு - ஓர் இலட்சத்து 30 ஆயிரம் டன் கொள்ளளவு சக்தி படைத்த கப்பல்கள் சர்வசாதாரணமாக நம் சென்னைத் துறைமுகத்தின் கரையோரம் வந்து செல்கின்ற காட்சி, வரலாறு படைத்த ஒன்று. விரைவிலேயே இந்த 'பாரதித் துறை' மேலும் ஆழமுள்ள துறையாக மாற்றப்படும். உலகிலேயே மிகப் பெரிய ராட்சதக் கப்பல்களில், ஓர் இலட்சம் 70 ஆயிரம் டன் கொள்ளளவு இரும்புக் கனிகளை நாம் ஏற்றுமதி செய்யவும் போகிறோம் என்பது மகிழ்ச்சியான செய்தி.

சென்னைத் துறைமுகத்தின் நவீன வளர்ச்சிப் பணியின் முக்கிய அம்சமாக விளங்குவது, எண்ணூரில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் துணைத் துறைமுகம் தான். சென்னையிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள எண்ணூரில் ராட்சத அனல்மின் வாரியம் ஒன்றை தமிழ்நாடு மின் வாரியம் நிலக்கரியை மையமாகக் கொண்டு கட்டிக் கொண்டிருக் கிறது.

எண்ணூர் அனல் மின் வாரியம் வளர்ச்சிக்காக - ஒரிசா மாநிலத்திலுள்ள தால்சர் சுரங்கத்திலிருந்து ஆண்டுக்கு 8 மில்லியன் டன் நிலக்கரி நம் சென்னைத் துறைமுகத்தின் வழியாகக் கையாள வேண்டியிருக்கிறது. இந்த நிலக்கரி தால்சர் சுரங்கத்திலிருந்து பாரதி துறைமுகத்திற்கு ரயில் மூலம் வந்து சேரும். பின் அங்கிருந்து கப்பலில் நம் சென்னைத் துறைமுகத்திற்கு வந்து சேரும். எனவேதான் ஆண்டுக்கு 8 மில்லியன் டன் நிலக்கரியைக் கப்பலில் கொண்டு சென்று கையாள்வதற்கு வசதியாக எண்ணூரிலேயே ஒரு துணைத் துறைமுகம், 446.38 கோடி ரூபாயில் உருவாக்கப்பட்டு வருகிறது.

எண்ணூர் தீவுப் பகுதியின் வடக்குப் பக்கம் உள்ள 1000 ஏக்கர் நிலப் பகுதியை தமிழ்நாடு மின் வாரியம் கையகப்படுத்தும் பணி முடிந்ததும், அந்த நிலப்பகுதி நம் துறைமுகத்திடம் ஒப்படைக்கப் படும். அதன்பின் முதல்கட்டமாக இரண்டு கிலோ மீட்டர் நீளமுள்ள அலை தடுப்புச் சுவர்கள் இரண்டு கட்டப்படும். இது இரண்டு கப்பல் கட்டும் துறைகள் உடையதாக இருக்கும். இத் துறைகள் 60,000 டன் கொள்ளளவு நிலக்கரிக் கப்பல்கள் வந்து போவதற்கு வசதியாக 12 மீட்டர் ஆழமுடையதாக இருக்கும். 1995-96இல் இது, தன் முதல் கட்டப் பணியைத் தொடங்கி விடும்.

சென்னைத் துறைமுகத்தின் சமீபகால பெரிய வளர்ச்சிகளுள் எண்ணூர் துணைத் துறைமுகம் மிகவும் முக்கியமானது. அடுத்தாற்போல், வெளிநாட்டு உதவியுடன் நவீனமுறையில் கப்பல்களைப் பழுதுபார்க்கும் துறை ஒன்று 80 கோடி ரூபாயில் மிகவும் அற்புதமாகக் கட்டப்பட்டு வருகிறது. இந்தத் துறை முற்றுப் பெற்றதும், ஆண்டொன்றுக்கு 800 கப்பல்களை சென்னைத் துறைமுகத்தில் பழுதுபார்க்க முடியும். தற்சமயம் ஆண்டு ஒன்றுக்கு 80 கப்பல்கள்தான் இந்தியாவில் பழுதுபார்க்கப்படுகின்றன.

சென்னைத் துறைமுகத்தை ஒருமுறை சுற்றி அது எவ்வாறு செயல்படுகிறது என்று பார்த்தால் ஆண்டொன்றுக்கு இரண்டாயிரத்து எழுநூறு கப்பல்கள் வந்து போகிற செய்தியும், ஏறத்தாழ ஓர் இலட்சம் கன்டெயினர்கள் வந்து இறங்கி, ஏற்றுமதியாகின்ற விந்தையும் சரக்குகளைக் கையாள உதவியாக ஓர் அழகான ரயில்பாதை கப்பல்களுக்கு அருகே சென்று சுறுசுறுப்பாக இயங்குவதையும், திருட்டுப் பொருள்களை உடனுக்குடனே கைப்பற்றவும், கப்பல்களில் களவு போகாமல் தடுக்கக் கடலிலே மிதக்கின்ற 'போலீஸ் - ஸ்டேஷனையும்' பார்க்கலாம்.

நிலக்கரி :

இரும்புத்தளவாடங்கள் இயந்திரச் சாமான்கள் செய்தித் தாளுக்கு வேண்டிய நியூஸ் பிரிண்ட், இரசாயனப் பொருள்கள், 'சல்பர்'. சிமெண்ட். மரங்கள், தாவர எண்ணெய்கள் ஆகியவை கன்டெயினர்கள் மூலமும், சாதாரண வகையிலும் சென்னைத் துறைமுகத்தில் இரவும் பகலும் வந்து இறங்குவதையும், தேசத்தின் வளர்ச்சிக்கு ஆணிவேராக செயல்படுவதையும் கண்டு பெருமிதம் கொள்ளலாம்.

நாட்டின் எதிர்காலம் மிகச் சிறப்பாக இருக்க வேண்டுமானால் - ஏற்றுமதிதானே உயிர்நாடி என்று எண்ணி - நாம் இரும்பு தாதுப் பொருள்களையும், துணி மணிகளையும், வெங்காயம், புகையிலை, தோல், கருங்கற்கள், சர்க்கரை, இன்னும் சில உணவுப் பொருள்கள் ஆகியவற்றையும் தங்கு தடையின்றி ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம்.

பத்திரிகைகளுக்கு வேண்டிய நியூஸ் பிரிண்ட் சென்னைத் துறைமுகத்தின் மூலமாக ஆண்டொன்றிற்கு நாற்பத்தோராயிரம் டன் இறக்குமதியாகிறது. இது ஒவ்வோர் ஆண்டும் அதிகமாகிக் கொண்டு இருப்பதால் பத்திரிகைகள் கவலையின்றிச் செயல்பட முடிகிறது.

எட்டாவது திட்டத்தில்

எட்டாவது திட்ட காலத்தில் அதாவது 1990-91. - 1994-95 ஆம் ஆண்டிற்குள் சென்னைத் துறைமுகம் சிறப்பான வளர்ச்சிப் பணிக்கு, தன்னைத் தயார் செய்து கொண்டு வருகிறது. கன்டெயினர் துறையை மேலும் விரிவுபடுத்தல், தெற்குத் துறையை நவீனமாக்குதல், எண்ணூரில் அமைய விருக்கும் துணைத்துறைமுகம் 'அமராவதி வெங்கட்' - என்ற 'டக்' கப்பல்களை மாற்றி அமைத்தல், கப்பல் துறைக் கரையில் இருக்கும்

கிரேன்கள் சிலவற்றை நவீனப் படுத்தல், மணல்வாரிக்கப்பலான 'காலரோன்' - மேற்குப் பகுதி கப்பல்துறை மிதவை கிரேன் - ஆகியவற்றைப் புதிய முறையில் செம்மைப்படுத்தல், படகுத்துறை ரயில்பாதை ரயில் எஞ்சின்கள், ஆகியவற்றை நடைமுறைக்கேற்ப மாற்றி அமைத்தல், துறைமுகத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியைப் பெருக்குதல், சுற்றுப்புறச் சூழலுக்கு முன்னுரிமை, கம்ப்யூட்டர் மூலம் சுறுசுறுப்பாகப் பணியாற்றும் திறமைக்கு ஆதரவு, சரக்குகளைச் சேமித்து வைக்கும் இடங்களை மேலும் நிறையக் கட்டுதல் ஆகியவை எட்டாவது திட்ட காலத்தில் நிறைவுபெறும்.

இவற்றைச் செய்து முடித்து விட்டால் - இந்தியாவின் மற்ற எல்லாத் துறைமுகங்களுக்கும் - எல்லாத் துறையிலும் வழிகாட்டியாக நமது சென்னைத் துறைமுகம் விளங்கும்.

கடந்த நான்காண்டுகளில் சென்னைத் துறைமுக நிர்வாகம் - தொழிலாளர்களுக்கு இருபத்தைந்து லட்ச ரூபாய் செலவில் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதையும் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. துறைமுகப் பேரதிபராக அரும்பணியாற்றிவரும் திரு அ. பால்ராஜ் ஐ.ஏ.எஸ்., அவர்கள் துறைமுகத் தொழிலாளர்கள்மீது அளவுமிக்க பாசத்தை அள்ளித் தெளிப்பவர். தொழிலாளர்களின் நல்வாழ்வே துறைமுகத்தின் நல்வாழ்வு என்றெண்ணி அல்லும்பகலும் செயலாற்றி வருபவர். அவரது காலத்தில், இதுவரை யாரும் செய்யாத அளவுக்கு விரிவுபடுத்தி எழுபது வகையில் நல்வாழ்வுத் திட்டங்களை - எல்லாத் தொழிலாளர்களும் பயன்படும் வகையில் செயல்படுத்தி வருகிறார்.

துறைமுக நல்வாழ்வுத் திட்டங்கள் உதாரணத்திற்கு :

துறைமுக ஊழியர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப குடியிருப்பு வசதிகளை உண்டாக்கி அங்கு தேவையான எல்லாவகை வசதிகளோடு வாழவைத்தல்.

துறைமுக ஊழியர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காகக் கடன் உதவியை வழங்குதல். குறைந்த அளவே வட்டியை வசூலித்தல்.

வீடு கட்டக் கடன் வாங்கிய ஊழியர் மரணம் அடைய நேரிட்டால் அவர் பெற்ற வீட்டுக் கடனின் பாக்கித்தொகை - வட்டி உள்பட முழுவதையும் ரத்து செய்தல்.

ஊழியர்களின் உடல் உறுப்புகளில் பழுது ஏற்பட்டால் செயற்கை உறுப்புப் பெறுவதற்கான பண உதவியை வழங்குவது. உயிர்ப் பாதுகாப்புப் செயலில் ஈடுபட்டோருக்கும் நிதி அளிக்கப்படுதல். ஏழைமையான நிலையில் விட்டு விட்டுப் பணிக்காலத்தில் மரணம் அடைந்தவர் குடும்பத்திற்கு நிதி உதவி செய்தல். தீ, வெள்ளம், கடல் அரிப்பு காரணமாக ஊழியர்களின் வீடுகளுக்கு நிதி அளித்தல். சம்பளம் இல்லாத நிலையில் மருத்துவ அடிப்படையில் 30 நாள்களுக்கும் மேலாக விடுப்பில் இருப்பின் ஊழியர்களுக்கு நிதி உதவி அளித்தல்.

பணிக்காலத்தில் இறந்த ஊழியரின் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் நிதி உடனடியாக அளித்தல்.

மருத்துவ அடிப்படையில் குறிப்பிட்ட பதவியில் தொடர்ந்து பணி செய்ய முடியாத ஊழியருக்கு மாற்றுவேலை தருவதோடு இதனால் ஏற்படும் சம்பள இழப்பினை ஈடுகட்டும் வகையில் ஓரளவுக்கு உதவுதல்.

ஊழியர்களின் உடல்நிலையை சீரிய முறையில் பராமரிக்கும் நோக்குடன் - எல்லாவித நோய்களுக்கும் தகுந்த மருத்துவ நிபுணர்களைக் கொண்டு, எல்லாவிதமான சிகிச்சைகளும் துறைமுக மருத்துவமனையில் நாள்தோறும் செய்யப்பட்டு வருகிறது. இதயத்தையே திறந்து அறுவை சிகிச்சை செய்யும் வசதியும், அனைத்திந்தியத் துறைமுகங்களில் சென்னைத் துறைமுகத்தில் தான் உண்டு.

நாளை

மிகச்சாதாரண மீன் பிடிக்கும் கிராமமாக நானூறு ஆண்டுகளுக்கு முன்பு விளங்கிய கடற்கரைப் பிரதேசம், சென்னை நகரின் எழிலோவியமாக ஆண்டிற்கு நூற்று நாற்பது கோடி ரூபாயை இந்திய நாட்டிற்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.

நாட்டின் பொருளாதாரம் இன்றைய தினம் நலிவடையாமல் காப்பாற்ற சென்னைத் துறைமுகம் வீறுகொண்டெழுந்து இரவு பகலாக அயராமல் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.


இன்னும் சில ஆண்டுகளில் ஏராளமான கோடி ரூபாயில் எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சென்னைத் துறைமுகத்தின் சீரிய பணிகள் இமயம்போல் எழுச்சியுடன் திகழப்போகிற அரிய காட்சியை எண்ணிப் பார்க்கும்பொழுது தமிழ்நாட்டின் எதிர்காலம் மகிழ்ச்சியான சூழ்நிலையில் மிளிரும் என்பது நன்றாகவே தெரிகிறது.

இயக்கி நடத்தும் ஓரங்க நாடகத்திற்கும் முதலிடம் கொடுக்கப் படுகிறது.

120 டன் சரக்கை ஒரே சமயத்தில் ஏற்றி இறக்கும் மிதவைக் கிரேன் சென்னைத் துறைமுகத்தில் உண்டு. இதற்குப் பெயர் 'வைகை'. கடலில் மிதக்கும் இந்த மிதவைக் கிரேன் 1963 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

நங்கூரம் போன்று காட்சியளிக்கும்படி கட்டப்பட்ட துறைமுக நிர்வாக அலுவலகம் 1957இல் ஆரம்பித்து 1960 ஆம் ஆண்டு கட்டி

● சென்னைத் துறைமுகத்தில் பணிபுரியும் பெண்களில் பெரும்பாலானோர் மதிய உணவு இடைவேளையில் - பொழுதை வீணாகக் கழிப்பதில்லை. நிர்வாக அலுவலகத்திற்கு அருகிலுள்ள விநாயகர் கோயிலில் மதிய உணவு வேளையில் ஒன்றுகூடி - தங்களுக்குத் தெரிந்த துதிப்பாடல்களைப் பாடி இன்புறுகின்றனர். அது மட்டுமல்ல, கடந்த மூன்றாண்டுகளாக ஆண்டுக்கொருமுறை ஒருநாள் 'மகளிர் தினமாக'க் கொண்டாடப் படுகிறது. பெண்களது கலை இலக்கியத்திற்கும், கோலம் - கும்மி - ஆகியவற்றிற்கும், பெண்களே




துறைமுகத்தின் ஓர் அற்புதக் காட்சி

முடிக்கப்பட்டது. இங்குதான் எல்லாத் தலைமை நிர்வாகங்களும் செம்மையாக இயங்கி வந்தன. இப்பொழுது துறைமுக நூற்றாண்டுக் கட்டடம் பத்துமாடிக் கட்டடமாக வானளாவப் பரவி நிற்கிறது. மிகவும் நவீன முறையில் கட்டப்பட்ட இந்தக்கட்டடத்தில்தான் துறைமுகப் பேரதிபர், துணைப் பேரதிபர், செயலாளர், தலைமைக் கணக்கு அதிகாரி, டிராபிக் மானேஜர் ஆகியோரது அலுவலகம் இருக்கிறது. பத்தாவது மாடியில் புயல் வருவதை அறியும் நிலையம் இயங்கி வருகிறது.

கணிதமேதை இராமானுஜம் சென்னைத் துறைமுகத்தில்தான் பணிபுரிந்தார். அவரது நூற்றாண்டு விழாவையொட்டி - அவரது சிலையை - துறைமுக நிர்வாக அலுவலக வாயிலில் வைத்திருக்கிறார்கள். அவரது பெயரால் இழுவைக் கப்பல் ஒன்று சென்னைத் துறைமுக உபயோகத்திற்காக இருக்கிறது. அதேபோல் பண்டித நேரு அவர்களது நினைவாக ஜவஹர் துறையும், மகாகவி பாரதியின் பெயரால் பாரதி துறையும் உண்டு. சமீபத்தில் நூற்றாண்டு விழா கொண்டாடிய அண்ணல் டாக்டர் அம்பேத்கர் பெயரால் துறை ஒன்று பெயர் மாற்றம்செய்யப்படுகிறது. ஃ

அப்போது தான்...



கவிஞர்
பொன்னடியான்

அவனவனும் கண்ட படியெல்லாம் பேசியே
ஆத்திர மூட்டுகின்றான்!
அடிமைப்பட்டவர் ஏழைகள் பேர்சொல்லி
வேடிக்கை காட்டுகின்றான்!
தவறிங்கு ஒன்றெனில் நூறாக்கிப் பகைமைத் தீ
அன்றாடம் மூட்டுகின்றான்!
அரசியல் சாதி மதங்களின் பெயராலே
கத்தியைத் தீட்டுகின்றான்!
எப்படி உருப்படும் இந்த ஏழை நாடு?
எப்படி வந்திடும் முன்னேற்றம் நமைத்தேடி?

பன்னூறு வேற்றுமைக் குள்வீழ்ந்து பல்லாண்டாய்
வளர்ந்திடும் திருநாட்டினை;
பாவபுண்ணியங்களின் கதைசொல்லி அதைநம்பி
இளைத்திட்ட ஒரு நாட்டினை;
முன்னேற்ற ஒவ்வொரு குடிமகனும் இன்றே
சிந்திக்க வேண்டாமா?
மூச்சைக் கொடுத்தேனும் மண்டிய கொடுமை வேர்
களைந்திட வேண்டாமா?
கடமைகள் மறந்தால் கவிழ்ந்திடும் தாய்நாடு
வளர்சிறு வளர்ச்சியும் மறைந்திடும் கூண்டோடு.

வன்முறைப் புன்செயல் வழிகளைக் கைநீட்டி
வரவேற்று வாழ்த்துவதோ?
வாழ்விழந் தாருக் குழைக்காமல் தவறான
வழிமுறை நாடுவதோ?
எந்நிலை வந்தாலும் அமைதி நெறிவிட்டு
எதிர்நிலை போவதுவோ?
ஏமாற்றுக் காரர்கள் கொலைகாரர் வலையினில்
இடறிநாம் வீழ்வதுவோ?
பொறுப்புணர்ந்து போனால் புதுமை மலர்ந்தாடும்
பூச்சாண்டி காட்டிடும் தீமை மிரண்டோடும்.

இனவெறி மதவெறி மொழிவெறி எனுமிந்த
எல்லா வெறிகளையும்
இதயத்தில் இருத்தாமல் எடுத்தெறிந்துவிட்டு
இனியவை கைக்கொள்ளுவோம்!
தனக்கென எண்ணிடும் எண்ணத்துடன் மக்கள்
நல்வாழ்வையும் நினைப்போம்!
தடுமாறும் பெருநாட்டின் வெற்றிக்குத் தூய்மைசேர்
மனத்துடனே உழைப்போம்!
அப்போது தானிந்த நாடு செழித்திடும்
அன்பும் அமைதியும் மண்ணில் நிலைத்திடும்!

கோயிலும் பிரார்த்தனையும்

அருள்திரு. டாக்டர் சாயிமாதா சிவ. பிருந்தாதேவி
(திலகவதியார் திருவருள் ஆதீனம். புதுக்கோட்டை)

கடந்து உள்நின்று உணர்த்துகின்ற ஒன்றுக்குப் பெயர் கடவுள். இது ஒன்றென உணர்தல் வேண்டும். இதனை "ஏகோ தேவஹ" இறைவன் ஒருவன் என வேதம் சொல்லும்.

"ஏகனுமாகி அநேகனுமானவன்
நாதனுமானான் என்றுந் தீபற
நம்மையும் ஆண்டானென்றுந் தீபற"

எனச் சித்தாந்தத் திருவுந்தியாரும்,

"ஏகன் அநேகன் இறைவனடி வெல்க"

எனத் திருவாசகமும் அருள்வதை நாம் சிந்திக்க வேண்டும்.

இறைவன் ஒருவன்தான். அவன் நமக்காக எளி வந்த வான் கருணையோடு, பல உருவங்களைத் தாங்கி, பல நாமங்களைக் கொண்டு, இறங்கியும் வருகிறான். இரங்கியும் வருகிறான்.

அவன் எங்கும் நிறைந்தவன். எல்லாருடைய இதயத்திலும் இடம் கொண்டவன். அவனுக்கு ஓர் உருவம் கிடையாது, ஒரு பெயர் கிடையாது எனத் திருவாசகம் அருள்கிறது. "ஒரு நாமம்ஓர் உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள் ளேணம் கொட்டாமோ". உருவம் அற்ற அக்கடவுளுக்கு நமது விருப்பம் போலப் பல உருவங்களையும், ஒரு பெயர் அற்றதற்குப் பல நாமங்களையும் நாம் அளித்து மகிழ்கிறோம்.

ஒரு பசுமாட்டின் உடம்பு முழுதும் பால் நிறைந் திருந்தாலும், கொம்பைப் பிடித்து இழுத்தால் பால் வராது. காதைப் பிடித்துக் கறகற என்று இழுத் தாலும் பால் வராது. மடியைப் பிடித்து இழுத்தால் தான் பால் வரும். இதனைப் போலவே இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும் திருக்கோயில் மூலமாகத் தான் அவனுடைய சாந்நித்தியத்தை, பேரருளை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

"உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பு ஆலயம்"

என உணர்ந்த மகான்கள் கூடத் திருக்கோயிலைச் சுற்றி வந்துதான் வழிபட்டு உய்ந்தார்கள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும் இறையருள் பெற்றவர்களாயினும், இறுதிவரை உறுதியுடன் திருக்கோயிலை வலம் வந்து நலம் பெற்றவர்களேயாம்.

"கோ" என்றால் தலைவன்.

எந்தத் தலைவன்?

உள்ளத்தை ஆள்கின்ற நல்லதொரு தலைவன்.

"இல்" என்றால் இருக்குமிடம். உள்ளத்தை ஆள் கின்ற நல்லதொரு தலைவன் இருக்கின்ற இடம் கோயில்.

"ஆ" என்றால் மனம்.

"லயம்" என்றால் லயிக்கின்ற இடம்.

உள்ளம், மனம், இதயம், நெஞ்சகம் எல்லாம் ஒன் றாகும். மனம் லயிக்கின்ற இடம் "ஆலயம்".

ஆகமவிதிப்படி அமைக்கப்பெற்ற ஆலயத்திலே ஏறிப் போகும்போது ஐந்து படிகள்.

சாதாரண மக்கள் ந.ம.சி.வ.ய. சொல்லிக்கொண்டு படி ஏறவேண்டும். இது இறைவனின் திருநாமம். இதனை மகாமந்திரமாக மாற்றுவது "சிவாயநம". தீக்ஷை பெற்றவர்கள் சிவாயநம சொல்லிக் கொண்டு படி ஏறவேண்டும்.

சி – சிவபரம்பொருள்.

வ – அவனுடைய அருட்சக்தி.

ய – உயிர்களாகிய நாம்.

ந – மறைப்புச் சக்தி.

ம – மலங்கள்.

இதனைக் கீழ் இருந்து மேலே பார்ப்போம்.

"ம" என்ற மலங்கள் தேய்ந்தால்

"ந" என்ற மறைப்புச் சக்தி நீங்கி

"ய" என்ற உயிர்கள்

"வ" என்ற அவனருட் சக்தியின் மூலம்

"சி" என்ற சிவபரம் பொருளை எட்டிப் பிடிக்கும்.

நம் உடம்புக்குள்ளே "சிவாய நம" இருப்பதை அறிந்து, உணர்ந்து, உருப்போட்டு நாம் உருப்பட வேண்டும்.

"திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில்" தேவா ரம்.

திருநாமம் "நமசிவாய"

திருவைந்தெழுத்து "சிவாய நம"

எங்கும் நிறைந்த அப்பரம் பொருள்....

யாவருள்ளும் பதிந்த அப் பரம் பொருள்.....

நடராஜ மூர்த்தமாக எழுந்தருளி எப்போதும் ஆடிக் கொண்டே இருக்கின்றது.

"ஆதிபரன் ஆட அங்கை கனல் ஆட
ஓதுஞ்சடையாட உன்மத்த முற்றாடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோடாடினான் நாதாந்த நட்டமே"

எனத் திருமூலரும் அருளியிருப்பது ஆனந்தம் தரு கிறது.

இறைவனுடைய அருளை, உயிர்களாகிய நாம் பெறு வது எவ்வாறு?

மனிதர்களாகிய நம்மிடம் மாயை, கன்மம், ஆணவம் என்ற மூன்று மலங்கள் உண்டு. யா – எது; மா.



"பஜாஜ் கேட்ட மாப்பிள்ளைக்கு அம்பாசிடரே வாங்கிக் கொடுத் திட்டியாமே?"

"பெட்ரோல் போடத் திண்டா டட்டுமேங்கிற நல்லெண்ணம் தான்!"

– சுதர்ஸன்

இல்லையோ அதுதான் மாயை. இல்லாத ஒன்றின் மேல் ஆசை வைப்பது மாயை. கன்மம் என்றால் வினை. நாம் வினைசெய்துதான் பிறந்திருக்கிறோம். ஏழுகடல் மணலைவிட அதிகப் பிறவி இத்தரையில் நாம் எடுத்திருக்கிறோம்.

"புல்லாகிப் பூடாய் புழுவாகி, மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி,
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராய் முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்"

என்று மணிவாசகப் பெருந்தகை, திருவாசகத்தில் அருள்வது, அறிந்துணர்ந்து அடங்கி வாழ வைக் கின்றது.

ஏழு கடல் மணலைவிட அதிகப் பிறவி நாம் எடுத் திருக்கின்றோம்.

இதனை, அருணகிரிப் பெருமானும் அழகுதமிழில்,

"ஏழுகடல் மணலை அளவிடில் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்"

என உணர்த்துகின்றார்.

அடுத்தடுத்து வந்து வருத்தும் பிறவிகள் குறைய வேண்டும். இதனையே மாயை அகல வேண்டும் என் பர் சாத்திரம் அறிந்தோர்!

"கன்மம்" என்பது கர்மா. பிறவியைக் குறித்துக் கூறுவது. பிறவிகள் குறைந்து, இறுதியில் இல்லாதது ஆகிச் சீவன் சிவனாவது பெருநிலையல்லவா?

மூன்றாவது "ஆணவம்". இது அனைவர்க்கும் உள்ளது. "நான் செய்தேன், நான் பேசினேன், நான் சம்பாதித்தேன், நான் அறிவுடையேன், என்னால் எல்லாம், எங்கும் நான், எதிலும் நான்"- இதுதான் ஆணவம்.

மாயை அகல வேண்டும்
கன்மம் குறைய வேண்டும்.
ஆணவம் ஒடுக்கப் பெறல் வேண்டும்.

இதனைக் கோயில் முன் அமைக்கப்பெற்றுள்ள பலி பீடம் உணர்த்துகிறது. வழிபாட்டிற்குச் செல்லும் மக்கள் இப்பலிபீடத்தின் முன்னே, மூன்று முறை விழுந்து வணங்கி எழ வேண்டும்.

இறைவனே!
"எனது மாயை அகலவேண்டும்"
எல்லாம் அறிந்தவனே!
"எனது கன்மம் குறைய வேண்டும்"
எல்லோர் உள்ளும் உறைபவனே!
"எனது ஆணவம் ஒடுக்கப் பெறல் வேண்டும்"

என்று பிரார்த்தனை செய்துகொண்டு, பலி பீடத்தின் முன்னே இம்முப்பெரும் மலங்களையும் நீக்கிக் கொள்ள விழுந்து வணங்கி திருக்கோயிலுக் குள்ளே வழிபடச் செல்லவேண்டும்.

கோயில் முகப்பில் விநாயகர் இருப்பார். நெற்றிப் பொட்டில் மெதுவாகக் குட்டிக் கொண்டு வழிபட வேண்டும். நெற்றிப் பொட்டில் குட்டிக்கொள்ளும் பொழுது அந்த இடத்து நரம்புகளுக்கு உணர்வுண்டாகி இரத்த ஓட்டம் சீராகும். புத்தி பெருகும். விநா யகருக்கு எதிரே தோப்புக்கரணம் போடுவது உடல் நலத்திற்கும் உறுதி பயக்கும். அடுத்து மூலஸ்தான வழிபாடு. அதுதான் கர்ப்பக்கிருஹம்.

கர்ப்பம் தரிக்கும் கர்ப்பப்பை பெண்களுக்கு வயிற்றில் உள்ளுக்குள்தான் இருக்கும். அங்கே காற்று இருக்காது. அதுபோல் கோயில் கர்ப்பக் கிருஹத்திற் குள்ளும் காற்று இருக்காது. மூலப் பொருள் இருக்கும் கர்ப்பக்கிருஹத்திற்குள் எல்லாரும் போவது கிடை யாது. அதற்குரியவர்கள் உடல் சுத்தம், மனச் சுத்தத் துடன் செல்ல வேண்டும். அங்கு குடிகொண்டுள்ள தெய்வத்திற்கு அடி முதல் சிரசுவரை எடுக்கப்பெறும் தீபாராதனையில், நம் கண்களையும் கருத்தையும் பதித்து வழிபடல் வேண்டும்.

மனஸா, வாசா, கர்மணா எனப்பெறும் மனம், வாக்கு, காயம் (உடம்பு), மூன்றாலும், மனத்தால் எண்ணி வாக்கால் தேவார, திருவாசகங்களைப் பாடி உடம்பால், பஞ்ச அங்கங்கள் - ஐந்து அங்கங்களும் தோயப் பெண்களும், அஷ்டாங்க - எட்டு அங்கங்கள் தோய ஆண்களும் விழுந்து வணங்கி எழுந்து, திருக் கோயிலை வலம்வரவேண்டும். வலம் வருவது நாம் நலம் பெறவேயாம். வேறு பேச்சுகள், வெவ்வேறு சிந்தனைகள் இல்லாமல், தெரிந்தவர்கள் மெல்லிய இசையில் பாடிக்கொண்டும், அல்லது பீஜமந்திரங் களை உருப்போட்டுக் கொண்டும் மெதுவாக நடந்து செல்லல் வேண்டும். மூன்று முறை வலம் வருவது நலம் பயக்கும்.

அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து மந்திரங்களை சப்தம் போட்டு வெளியே தெரியும்படி சொல்லாமல், முணுமுணுப்புக்கூட இல்லாமல், உதடும் அசையாமல் மனமானது அதிலே தோய மந்திரங்களை நினைத்து உருப்போடுவது ஒன்றுக்கு ஆயிரம் ஆகும். கண்களை மூடிக்கொண்டு, மூடிய கண்களில் தெய்வ உருவைப் பதித்து, மனத்தால் மந்திரங்களை உரு ஏற்றினால் திரு ஏறும், தெளிவு பிறக்கும். அறிவு விரியும், ஆற்றல் பெருகும். ஞானம் சித்திக்கும், எல்லாரும் எல்லாம் பெறலாம்.



அதிகாரங்கள்

ஜோதிர்லதா கிரிஜா

பாவம் ஓரிடம், பழி ஓரிடம் என்பதை நிரூபிப்பது போல, காணாமற்போன பேனா போய்ச் சேர்ந்த இடம் ஒன்றாக இருக்க, அப்பாவிகள் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் ஐயப்பட்டுக் கொள்கிறார்களே!

தம்பையா விளக்குமாறும் கையுமாக அந்தப் பெரிய அறைக்குள் நுழைந்த போது சரியாக மணி ஏழு அடித்தது. அவனது வழக்கமான நேரம். அவன் கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த நேரத்தில் அதற்கு அப்பால் நின்று அதை வெளிப்பக்கம் தள்ளி வெளியேறும் முயற்சியில் கையில் வாளியுடன் நின்றுகொண்டிருந்த முனியாண்டியைப் பார்த்துச் சிரித்துவிட்டு, "என்னப்பா ஆபீசருக்குத் தண்ணியெல்லாம் ஊத்திட்டியா? அந்தாளு கொஞ்சம் சிடுமுஞ்சின்னு பேசிக்கிறாங்க. ஜாக்கிரதையா இரு. சரியா?" என்று கேட்டுவிட்டுத் தரையைப் பெருக்குவதற்குக் குனிந்தான் தம்பையா.

முனியாண்டி, "அதெல்லாம் நீங்க கவலையே படாதீய அண்ணாச்சி. ரெண்டு பக்கெட்டுலயும் தண்ணி ஊத்தி இருக்கேன். வாஷ் பேசன்ல ஊத்தி இருக்கேன். கொளாயில தண்ணி வரலைன்னா இருக்கட்டும்கிறதுக் காகக் கக்கூசிலயும் ஒரு பெரிய பக்கட்டுல ஊத்தியாச்சு. இன்னும் என்னான்றே?" என்றான்.

"அட, என்னப்பா புரியாதவனா இருக்குறே? ஜாக்கிரதையா இருந்துக் கன்னு யோசனை சொன்னா என்னமோ பெரிசாக் கோவிக்கிறியே? புதுசா வேலைக்கு வந்திருக்கிறே, சின்னப் பையனா இருக்கிறேங்கிறதுக்காக எச்சரிக்கை செய்தேம்பா. உன் நன்மைக்காகத்தான். பிடிக்கலைன்னா விடு".

"அட என்னங்க அண்ணாச்சி? இப்ப நாந்தான் என்ன சொல்லிப்புட்டேன்? எல்லாத்துலயும் நறுவிசா ஊத்தியாச்சுன்னு உங்களுக்கு விளக்கிச் சொன்னேன். நான் ஒன்னும் கோவிக்கல்லே, அண்ணாச்சி".

சுறுசுறுப்பாகப் பெருக்கிக் கொண்டே தம்பையா தலை உயர்த்தி அவனைப் பாராமல், "வாய் கோவிக் கல்லேன்னு இப்ப சொல்லுது. ஆனா கொரல்ல கோவம் பளிச்சுனு தெரிஞ்சிச்சே?" என்றான்.

"நிச்சயமாக் கோவிக்கல்லே, அண்ணாச்சி. என் கொரலே அப்படித் தான். எங்கம்மாகூட என்னயத் திட்டு வாங்க – எதுக்குடா கொரல்ல அப்படி ஒரு கடுமையைக் காமிக்கிறேன்னு?"

முனியாண்டி சொல்லுவது உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று தம்பையாவுக்குத் தோன்ற, "சரிப்பா. என்னமோ எனக்கு அப்படித் தோணிச்சு. நீ சொன்னா சர்த்தான்" என்றான்.

முனியாண்டி சில நொடிகள் நின்றுவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியேறத் தொடங்கினான். அப்போது அவனது பின்புறத்தைக் கவனிக்க நேர்ந்த தம்பையா, "பின் பாக்கெட்டுல பேனா துருத்திக்கிட்டு இருக்குது பாரு. பத்திரமா வச்சுக்க" என்றான்.

பாதி சாத்திய கதவில் சாய்ந்து கொண்டு பேனாவை நன்கு செருகிக் கொண்ட பிறகு முனியாண்டி வெளியேறினான்.

'இவன் கெட்ட கேட்டுக்குப் பேனா வேற. கையெழுத்துக்கூடச் சரியாப் போடத் தெரியாத பய...' என்று தம்பையா தனக்குள் எண்ணிச் சிரித்துக் கொண்டான்

அறையைத் துப்புரவாய்க் கூட்டித் தள்ளிய பிறகு தம்பையா அடுத்த அறைக்குப் போய்த் தன் வேலையைத் தொடர்ந்தான். தம்பையா கொஞ்சம் நாணயமானவன். மற்றவர்களைப் போல் குப்பைக் கூடைகளை மட்டும் காலி செய்துவிட்டுப் பெருக்கியதாய்ப் பேர் பண்ணும் சோம்பேறித்தனம் சிறிதும் இல்லாதவன்.

... இன்று முதல்தளமும் இரண்டாம் தளமும் அவனுடையவை. தரைத்தளம், மூன்றாவது ஆகிய இரண்டும் மற்றொருவருடையவை. அவன் தன் தளங்களைப் பெருக்கிவிட்டுப் பீடி குடிக்கக் கான்டீன் பக்கம் சென்றபோது அவனுடைய சகபாடி சாம்பன் தனது அரைகுறை வேலையை முடித்துவிட்டு ஏற்கெனவே இரண்டு பீடிகளைச் சாம்பலாக்கிவிட்டு மூன்றாவதன் பாதியில் இருந்தான்.

"ஏன்யா இப்படி மாஞ்சு மாஞ்சு பெருக்குறே?" என்று சாம்பன் கேட்ட கேள்விக்கு, "வாங்கற சம்பளத்துக்கு வஞ்சனை செய்யக்கூடாதில்ல? நம்ம டுட்டிய நாம ஒழுங்காகச் செய்து றணும். அப்பத்தான் நம்ம புள்ள குட்டியிங்களும் குடும்பமும் நல்லாருக்கும்" என்று பதில்சொல்லிவிட்டு, பீடியின் முதல் இழுப்பை ரசிக்கத் தொடங்கினான் தம்பையா.

"நீ நல்லா வேலை செய்யிறது எனக்கு வசதியாத்தான் இருக்குது. மத்தாநாள் என்னோட டர்னா இருக்குறப்ப நான் பெருக்குறதே இல்லே. அதுதான் மொத நாளே நீ நல்லாக் கூட்டித் தள்ளிடறியே?" என்று சாம்பன் சிரித்தான் .

"நீயெல்லாம் உருப்பட மாட்டே" என்று தம்பையா எரிச்சலாய்ச் சொன்னதை அலட்சியப் படுத்திவிட்டு, "நீ ரொம்ப உருப்பட்டுட்டியில்ல?" என்று

சாம்பன் பீடிக்கறைப் பற்கள் தெரியச் சிரித்தான்.

"நான் உருப்பட்டேனோ, இல்லியோ, வாங்குற கூலிக்கு வஞ்சனையில்லாம வேலை செய்யிறதாலதாண்டா இந்த அளவுக்காவது சிறப்பா இருக்குறேன்".

"பொழைக்கத் தெரியாதவண்டா நீ. உன்னை மாத்த முடியாது".

"என்னையும் உன்னால மாத்த முடியாது. உன்னையும் என்னால மாத்த முடியாது.."

கான்டீன் பையன் இருவருக்குப் தேநீர் கொண்டுவந்து கொடுக்க, வாயைத் துடைத்துக் கொண்டு அதை இருவரும் அருந்தலானார்கள்.

அப்போது அலுவலக மேலாளரின் ஏவலாள் அங்கு வந்து, "தம்பையா! உன்னை சூப்பிரெண்டு கையோட கூட்டியாரச் சொன்னாரு" என்றவாறு அவர்களுக்கு எதிரே நின்றான்.

கடைசிவாய்த் தேநீரை அவசரமாய் இறக்கிவிட்டு அவன் எழுந்து போனான்.

மேலாளருக்கு, 'குட் மார்னிங், சார்' சொல்லிவிட்டு அவன் பணிவாக நின்றான். மேலாளரின் பார்வை அவனைத் துருவிக்கொண்டிருந்தது.

"இன்னைக்குக் காலையில அந்தப் புது ஆபீசர் ரூமைப் பெருக்கினது நீதானே?"

"ஆமா, சார்".


"தண்ணி ஊத்தினது யாரு?"

"முனியாண்டி, சார்".

"அந்த ஆபீசரு மேசை மேல் வச்சிருந்த பேனாவைக் காணோம்னு புகார் செய்திருக்காரு. அவர் இங்க வந்து சேர்ந்தே பத்து நாள்தான் ஆகுது, தெரியுமில்ல? அதுக்குள்ள பேனாவைக் காணோம்கறாரு. நேத்து சாயந்தரம் வழக்கம் போல மேசைமேல பென் ஸ்டாண்டில செருகி வச்சுட்டுப் போயிருக்காரு. காலையில வந்து பாத்தா காணமாம்".

தம்பையாவுக்கு ஆத்திரம் சுருசுரு வென்று மண்டைக்கு ஏறியது.

"எனக்குத் தெரியாது, சார்! அஞ்சு வருசமா இங்க வேலை செய்துக் கிட்டிருக்கேன். இது மாதிரி எந்த ஆபீசரும் இதுக்கு முந்தி புகார் செஞ்சதே இல்லே".



"சரி. நீ போகலாம். போய் அந்தப் புதுப்பையன் முனியாண்டியை வரச் சொல்லு..."

தம்பையாவுக்கு முனியாண்டியின் கால்சராயின் பின்புறப் பையில் பாதிக்கு மேல் துருத்தி நின்ற ஊற்றுப்பேனா நினைவில் நெருடியது.

'திருட்டு ராஸ்கல்' என்று மனத்துள் ஒரு முனகல் விளைந்தாலும், கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்தறிதலே மெய் என்பதும் அடுத்து நெருடியது. முனியாண்டியை எதுவுமே கேட்காமல் அவனைக் கூட்டிவரவேண்டும் என்ற எண்ணத்துடன் அவன் போனான். ஆனால் முனியாண்டி அனுமதி கேட்டுக் கொண்டு ஒரு மணி நேரத்துக்கு வெளியே போயிருப்பதாய்த் தலைமை யாளரிடமிருந்து கேட்டறிந்து கொண்டு போய் மேலாளரிடம் சேதியைச் சொன்னான்.

'திருடிய பேனாவை வீட்டில் கொண்டு போய் வைப்பதற்கே அவன் போயிருக்க வேண்டும்' என்று தம்பையாவுக்குத் தோன்ற, மறுபடியும் அதற்காகத் தன்னைக் கடிந்துகொண்டான்.

அன்று பிற்பகலில் பேனா காணாமற் போனது பற்றித் தன்னையழைத்து அலுவலக மேலாளர் விசாரித்தது பற்றி முனியாண்டி தானாகவே தம்பையாவிடம் கூறிச் சிரித்தான்.

"புதுசா வேலைக்கு வந்திருக்கிறேப்பா. இது சிரிக்கிற சங்கதி இல்லே. அஞ்சு வருசமா எம்மேல ஒரு

கம்ப்ளெய்ன்ட் கிடையாது. அப்படி இருந்தும், என்னையும் கூப்பிட்டு விசாரிச்சாங்க".

"உங்க ரெண்டு பேர்ல ஒருத்தர்தான் எடுத்திருக்கனும். தம்பையா அஞ்சு வருசமா ஒரு புகார் இல்லாம வேலை செய்யிறான். அதனால உம்மேலதான் அந்த ஆபீசருக்கு சந்தேகம்னே சொல்லிட்டாரு சூப்பிரண்டு. எனக்குக் கோவம் வந்திச்சு, அடக்கிக்கிட்டு, 'நான் அதைப் பார்க்கக்கூட இல்லே, சார்'னு சொல்லிட்டுவந்துட்டேன்".

"அது சரி, பெர்மிசன் போட்டுட்டு எங்க போனே?"

"என் வீட்டுக்குத்தான். இன்னைக்குக் காலையில ப்ளாட்பாரத்துல என் தம்பிக்காக ஒரு பவுண்டன் பேனா வாங்கினேன். நாளைக்கு அவனுக்குப் பரீட்சை. அதைக் குடுத்துட்டு வர்றதுக்காகப் போனேன்".

தம்பையா ஒரு கணம்போல் தன்னையும் அறியாது அவனைக் கூரிய பார்வையால் ஆராய்ந்தான். கால்சராய்ப் பையில் துருத்திக் கொண்டிருந்த பேனாவைப் பார்த்து விட்டதால் இப்படி சொல்லிச் சமாளிக்கிறான் என்று அவனுக்குத்தோன்றியது.

"என்னமோ எழுதி எழுதி நிப்பைப் பழக்கனுமாம். அதனால வாங்கி வீட்டுல கொண்டுவந்து கொடுத்துடு உடனேன்னு சொல்லி வெச்சிருந்தான். அதான் பெர்மிசன் போட்டுட்டு வீட்டுக்குப் போனேன்".

"பேனா என்ன விலை? நான்கூட எம் மனைவியோட தம்பிக்கு ஒன்னு வாங்கித் தரனும்..."

"நான் வாங்கின அதே கடைக்கு வாங்க. இன்னைக்கு சாயங்காலமே போலாமா? நல்ல பேனான்னு சொன்னான். எட்டு ரூபா".

"பில்லு கொடுப்பாங்களா? ஏன்னா என் சம்சாரம் இருக்குதே, அது ஒரு சந்தேகப் பிராணி. சீப்பா வாங்கிட்டு வந்துட்டேன்னு சொல்லும். அதுக்குத்தான்".

"நான் பில்லு வாங்கலே. ஆனா கேட்டா குடுப்பாங்க. பில்லு போட்டா வரிக்குன்னு சொல்லிக் கொஞ்சம் விலையை ஏத்துவாங்க. அதனாலதான் நான் பில்லு வாங்கல்லே. இன்னைக்கு சாயந்தரம்வறியா?"

தான் அவன்மீது ஐயுற்றிருப்பதைப் புரிந்து கொண்டு விட்டதாலேயே, அந்தக் கடையில் அன்று காலை தானும் பேனா வாங்கியதை மெய்ப்பிக்கும் எண்ணத்துடன் அங்கு தன்னை அழைத்துப் போக அவன் விரும்பியதைப் புரிந்துகொண்டு தம்பையாவின் மனம் சற்றே சங்கடம் கொண்டது.

சமாளித்துக் கொண்டு, "ப்ளாட்பாரக் கடையிலகூட பில் தருவாங்களா? பரவாயில்லியே?" என்றான்.

"என்னமோ அந்தப் பையன் பில் போடறான். அப்ப சாயங்காலம் போலாமா?"

"இல்லே. இன்னொரு நாள் பாத்துக்கலாம்".


முனியாண்டி திருடி இருக்க மாட்டான் என்ற உறுதியான எண்ணம் அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே தான் அவனைச் சந்தேகிப்பதாக அவனை நினைக்க வைப்பதில் அவனுக்கு விருப்பமில்லை..

அந்தப் பேனா பின் எங்கேதான் மாயமாய் மறைந்திருக்கும்?

அன்று மாலை நான்கு மணியளவில் தம்பையாவையும் முனியாண்டியையும் அதிர்ச்சிக்கு உட்படுத்திய அந்நிகழ்ச்சி நடந்தது. அதிகாலை நேரத்தில் அலுவலரின் அறைக்குள் நுழைந்தவர்கள் அவ்விருவருமே என்பதால் இருவருக்கும் 'மெமோ' கொடுக்கப்பட்டது.

தம்பையா முனியாண்டியை அழைத்துக் கொண்டு மேலாளரின் அறைக்குப்போனான்.

"என்ன சார் இது அநியாயமா இருக்குது? ராத்திரி டூட்டியில இருக்குற வாச்மேனுக்கு மெமோ குடுத்தீங்களா?"



"பல வருடங்களாகியும் அந்தப் பெரிய விபத்தை என்னால் மறக்க முடியல..."

"எந்த விபத்து...?"

"என் கல்யாண நாள்!"

– விசு

மேலாளர் தமது தவற்றை உணர்ந்து, "அந்தாளு இன்னிக்கு நைட்டாம்ப்பா வருவாரு. அவருக்கும் குடுக்கிறதாத் தான் இருக்கோம்" என்றார்.

"என்ன சார் எழுதி இருக்கீங்க மெமோவில?"

"பேனாவைக் காணோம்னு சொல்லி உங்களை அதன் மூலமா எழுத்தில விசாரிக்கிறோம். நாங்க எடுக்கலைன்னு பதில் எழுதிக் குடுத்துடுங்க. அவ்வளவுதானே? ஆபீசர் சொல்றப்ப நான் என்ன செய்ய முடியும்? சொல்லு".

அப்போது மேலாளரின் அறைக்கு வந்த சுருக்கெழுத்தர் சுமதி, "அப்ப எங்க ஆபீசருக்கு ஒரு புதுப் பேனாவுக்கு இன்டென்ட் போட்டுடட்டுமா, சார்?" என்றவாறு அங்கு கைகட்டி நின்றிருந்த இரு கடைநிலை ஊழியர்களையும் பார்த்துப் புன்னகை செய்தாள்.

"என்னம்மா, சுமதி? உங்க ஆபீசர் உங்களை ஒன்னும் விசாரிக்கல்லையா, காணாமப்போன பேனாவைப் பத்தி?"


"கேட்டாரே. நானும் எனக்குத் தெரியாதுன்னு சொல்லிட்டேன். ஆனா வீட்டுக்குக் கிளம்பறப்ப அவரு அதால எழுதிக்கிட்டிருந்தாரு. நான் பார்த்தேன். அப்ப ஒரு புதுப்பேனாவுக்கு இன்டென்ட் போட்டுடவா? அதே மாதிரி கோல்டன் கலர்ல முப்பது ரூபாப் பேனா தான்வேணுமாம்".


"போடுங்கம்மா. நான் ஏற்கெனவே பர்ச்சேஸ் செக்‌ஷன்ல அதே மாதிரி இன்னொரு பேனாவுக்குச் சொல்லியாச்சு. இன்னும் அரை மணியில வந்துடும்".

"தாங்க்ஸ் சார்".

சுமதி போனதும், "முப்பது ரூபாயா சார் அந்தப் பேனா?" என்று தம்பையா வாயைப் பிளந்தான். முனியாண்டியின் விழிகளும் விரிந்திருந்தன.

மாலை வீட்டுக்குப்போன மேலாளர் சிவசந்திரன், "என்னடா முரளி? நேத்து நான் குடுத்த பேனா நல்லா எழுதுதா? இந்தா, இது இன்னைக்கு வாங்கினது. இரண்டையும் எழுதிப் பாரு. எது உனக்கு நல்லா எழுதுதோ அதை எடுத்துக்க. மத்ததை எங்கிட்ட குடுத்துடு" என்றார் தம் மகனிடம்.





இந்தக் கோடை காலத்தில் தான் நான் ஜிமுதவாகனன் என்கிற காக்கையைச் சந்தித்து சினேகம் கொண்டேன். சரியாகச் சொல்லப் போனால், மார்ச் மாதம் ஆறாம் தேதி. அன்றுதானே திடுமெனக்கோடை மழை தொடங்கி, இடித்து, மின்னி வானம் களேபரப்பட்டதெல்லாம்? அன்றுதான் ஜிமுதவாகனனை நான் முதல் முதலாகக் கண்டது.

அன்று வானம் இரண்டு முறை சட்டை மாற்றிக் கொண்டது. மதியம் சுமார் ஒரு மணி வரைக்கும் உஷ்ணம் வறுத்தெடுத்தது. என் படிப்பறையில் நான் அமர்ந்திருந்தேன். உடம்பில் வியர்வை ஊறிச் சிரமப்படுத்தியது. மேலே உள்ள தளத்தில் இருந்து வெயில் கசிந்து என் தலையைச் சூடேற்றியது. படிக்கவோ, எழுதவோ அசக்தனானேன். ஜன்னல் வழி, யாரோ காற்றை அடுப்பில் வைத்து வறுத்து அனுப்பியது மாதிரி இருந்தது. சட்டென்று சீதோஷ்ண நிலை மாறிற்று. காற்று சுருண்டு அடித்துப் புழுதி கிளம்ப, காற்றில் ஈரம் ஏறினாற் போலக் குளிர்ந்தது. மரம் முறிந்து விழுவதுபோல சட சடவென்று மழைத் துளிகள் விழுந்தன. ஜன்னல் வழியே வந்த சாரல், அன்றைய பொழுதின் முகத்தையே மாற்றியமைத்தது.

ஜன்னலை மூடுவதில்லை நான். ஜன்னல் ஓரம் இருந்த படுக்கையும், அதன் மேல் விரிந்தபடி கிடந்த புத்தகங்களும் சற்றே நனைந்தன. அதனால் என்ன? காலம் முழுக்க வெயிலில் காய்கிறோம். கொஞ்சம் மழையில் நனைந்தால் என்ன. முழுகியா போய்விடும்?

மேசைக்கு அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தபடி, ஜன்னல் வழியாக உலகைப் பார்த்துக் கொண்டிருந்தேன் நான். சதுரமான வெளி. ஆகாயம், மழையில் மறைந்து கிடந்தது. ஜன்னலின் விட்டத்தில் இருந்து ஒழுகும் தண்ணீர், மை நிரப்பியிலிருந்து யாரோ வெள்ளை மையை ஒழுகவிட்டாற் போன்று சீராக ஒழுகிக் கொண்டிருந்தது. அப்போதுதான் ஜிமுதவாகனன், மழைக்கு அடைக்கலம் தேடி ஜன்னல் கட்டையில் வந்து அமர்ந்தது. ஜன்னல் வழியாக என்னைப் பார்த்தது. சற்றுப் பயம் கலந்த பார்வை, என் முகத்தில். அதுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்க வேண்டும். சற்றே கழுத்தை ஒயிலாகத் திருப்பி, அலகை லேசாகத் திறந்து புன்னகைத்தது. அதன் பிறகு 'கர்' என்றது. உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு நீரை வெளியேற்றியது. அது சிலிர்க்கையில் நீர் அடுப்புச் சாம்பல் காற்றில் பறப்பதைப் போலிருந்தது. அலகால் தன் மார்பை, இறக்கையை நீவிவிட்டுக் கொண்டது. தண்ணீர்ப் பானை பொத்துக் கொண்டு ஒழுகுவது போல மழை இடையறாது பெய்து கொண்டிருந்தது.

"மழையில் அதிகமாக நனைந்து விட்டாற் போல் இருக்கிறதே" என்றேன்.

"ம்.. வானவாசிகளான நாங்கள் மழையென்றும் வெயிலென்றும் பார்க்க முடியுமா? இரண்டும் எங்களுக்கு ஒன்றுதான். அது எங்கள் வரம்."

"அல்லது சாபம்".

அது சற்று யோசனை செய்துவிட்டு, "இருக்கலாம். எந்தக் கருத்துக்கும் இரண்டாவது பக்கம் ஒன்று இருக்கவே செய்கிறது" என்றது. ரொம்ப யோசனைக்காரக் காக்கை போலும் என்று நினைத்துக்கொண்டேன்.

"எங்கே வாசம் செய்கிறது?" என்று நான் கேட்டேன்.

"இப்போது அண்ணா நகர் என்று சொல்கிறார்களே, அந்தப் பகுதியில்தான், ரொம்ப நாள் வாசம். முன்னால் எல்லாம் அந்த இடம் தோப்பும் துரவுமாக இருந்தது. ரொம்ப சௌகர்யமாக இருந்தது. இப்போ, அண்ணா நகர் என்று ஆகி, கட்டடங்கள் வந்தாச்சுதே. ஆகவே நாங்கள் அண்ணா நகரைவிட்டு மேற்கில் ஒதுங்கிக் கொண்டோம்".

"அண்ணா நகர் மேற்கால், காய்ந்த ஏரி ஒன்று உள்ளதே".

"ரொம்ப சரி. அந்த ஏரியைக் கூட பிளாட் போட்டு கல் நட்டாச்சுது. கூடு மாற்றும் யோசனையில் இருக்கிறோம். மனிதர்கள் மண்ணை வசப்படுத்த முனையும் போதெல்லாம், எங்களைப் போன்ற ஜீவராசிகளுக்குச் சிரமம் வரத்தான் செய்கிறது. ஆனாலும், பூமி இன்னும் நிறைய மிச்சம் இருக்கத்தானே செய்கிறது".

"நிரந்தரமாக ஓரிடத்தில் வாசம் செய்ய முடியாமல் போய்விடுகிறதே.."

ஜிமுதவாகனன் என்னைப் பார்த்து சிரித்தது. அது சிரிக்கும் போதெல்லாம் கர்... கர்... என்று ஓசை வந்து கொண்டிருந்தது. சாம்பல் நிறக் கழுத்தும், காலணிக் கடையில் இருக்கும் பளபளத்த ஷூ மாதிரி கன்னங்கரிய அழகிய மேனியும், என்னைக் கவர்ந்தன. அது சொல்லியது...

"என்னது? நிரந்தரமா? எது நிரந்தரம்? நீங்கள் நிரந்தரமா?"

மழை விட்டதும் ஜிமுதவாகனன் நன்றி கூறிவிட்டுப் பறந்து சென்றது.

அடுத்த நாளே ஜிமுதவாகனன் மீண்டும் வந்தது. சௌக்யமா என்று கேட்டதுக்குப் பரம சௌக்யம் என்றது. மாலைக் காலத்தில் டி.வி. ஆண்டெனாவில் அமர்ந்து பொழுது போக்கியதாகவும், ஒரு மாறுதலுக்காக இந்தப் பக்கம் வந்ததாகவும் அது சொல்லியது. ஜிமுதவாகனனுக்குத் திரிபுராந்தகி என்கிற மனைவி உண்டாம். இருவருக்கும், சூரிய ரச்மி என்கிற பிள்ளையும், சூரிய மோகி என்கிற பெண்ணும் இருக்கிறார்களாம்.

இப்படித்தான் ஒரு மழைக் காலத்தில், ஜிமுதன் திரிபுராந்தகியைச் சந்தித்ததாம். அடர்ந்து செழித்த ஒரு மாமரத்தில் மழைக்காக ஒதுங்கியதாம் ஜிமுதன். மழை நீர் இலை வழியாக அதன் மீது சொட்டியது. நீரை உதறிவிட்டுக் கொண்டு அது இருக்கையில், பக்கத்துக் கிளையில் இருந்த திரிபுரா, "அங்கே நனைந்து கொண்டு எதற்குச் சிரமப்படுகிறாய்? இந்தக் கிளைக்குப் பாதுகாப்பாய் வரலாமே" என்று அழைத்தது. ஜிமுதன் தத்திப் போய் அந்தக் கிளையில் அமர்ந்தது. மழைநீர் வராத அவ்விடம் மிகச் சௌகர்யமாக இருந்தது. வலிய கிளைகளாலும், அடர்ந்த இலைகளாலும் மறைக்கப்பட்ட அவ்விடம் கதகதப்பாகவும்கூட விளங்கிற்று. உடம்பின் ஈரம் சுவர்ந்து, ஜிமுதன் உஷ்ணம்கூட அடைந்தது.

"உன் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?"

"என்னத்துக்கு?"

திரிபுரா என்னத்துக்கு என்று கேட்டாலும், அது தன் கண்களைச் சுழற்றின விதமும், கழுத்தை மிக ஒயிலாகச் சாய்த்துச் சொன்ன விதமும், அதுக்குத் தன்மேல் ஈடுபாடு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டது ஜிமுதன்.

"சும்மாத்தான்... ஒருத்தரோடு ஒருத்தர் சிநேகம் செய்து கொள்ள, பேரைத் தெரிந்து கொள்ளவேணாமா?"

"அப்போ சரி. என்னோட முழுப் பெயர் திரிபுரசுந்தரி. அம்மாவும், சிநேகிதர்களும் திரிபுரா என்பார்கள். நான் பிறந்தது எர்ணாகுளம் பக்கம். உனக்குத் தெரியுமோ, வடக்கே பாட்டு பார்வதி அம்மேன்னு ஒரு மனுஷி, மகராசி. அவள் வீட்டுத் தோட்டத்தில்தான் வாசம். அவள் புருஷர் புத்தன் புறைக்கல் பப்பு. பார்வதி அம்மாவுக்கு அம்மணி என்கிற மகளும், தங்கம் என்கிற மகனும் உண்டு. என்ன சந்தோஷமான குடும்பம் அது? பார்வதி அம்மா சமைச்சு சாப்பிட வேண்டும். அந்த அம்மா ஓலன் செய்து சாப்பிட வேணும். எரிசேரியாகட்டும், புளிசேரியாகட்டும், பச்சடி, கிச்சடி, அவியல் எதுவானாலும் அமிர்தமாய் இருக்கும், போ. எது செய்தாலும் என்னைக் கூப்பிட்டுத் தராமல் அந்த அம்மா

வுக்குத் தொண்டையில் சாதம் இறங்காது. அச்சனுக்கும் அப்படித்தான். சந்தோஷமாகத்தான் பொழுது கழிந்தது. என்ன துரதிருஷ்டம்.

அந்தச் சமயத்தில்தான் விநோதன் என்பவனைச் சந்தித்தது. பயல் ஒருவகைப்பட்ட ஷோக்குப் பேர்வழி. என்னென்ன தமாஷ் எல்லாம் செய்வான் எங்கிறாய். பெரிய பெரிய வித்வான் மாதிரியெல்லாம் பாடிக் காட்டுவான். அவன்தான் எனக்கு வைக்கம் முகமது பஷீரைக்கூட தூரத்திலிருந்து காட்டிக் கொடுத்தான். எனக்கு எழுத்து நல்லா வரும் தெரியுமோ. ஓடக்குழலில் நிறைய பாட்டு எனக்கு மனப்பாடம். அந்த விநோதனாகிய பாவியிடம் மனசைப் பறிகொடுத்துத்தான் இங்கு வந்தது. ஆரம்பத்தில் எல்லாம் ஒழுங்காகத்தான் போய்க் கொண்டிருந்தது. எனக்கும் ரெண்டு குஞ்சுகள் பிறந்தன. என்ன அழகான குழந்தைகள்! கண்ணைப் பறிக்கிற கறுப்பு. இருட்டைப் பிட்டு வைத்தாற்போல தகதகவென்று இருக்கும். பகவான் புண்ணியத்தில் எல்லாம் சௌகர்யமாய் குஞ்சும் குளுவானுமாய் இருக்கின்றன. போகட்டும். அதன் பிறகு அவனிடத்தில் – அதான் அந்த விநோதனிடத்தில் – ஒரு மாற்றம் ஏற்பட்டது தெரிந்தது. சரி, விலகிக் கொள்ளலாமா என்று கேட்டேன். ஒப்புக் கொண்டான்".

கதையை இந்த இடத்தில் நிறுத்தின ஜிமுதன், "தொண்டை காய்ந்து விட்டது. கொஞ்சம் தண்ணீர் வேண்டுமே" என்றது.

"காபி சாப்பிடலாமா?" என்றேன். "தண்ணீர் போதும்" என்றது ஜிமுதன். நான் டம்ளரை நிறைத்து, அதன் முன் வைத்தேன். மூக்கை நுழைத்துப் பிறகு அங்காந்து வானத்தைப் பார்த்துத் தண்ணீர் அருந்திற்று ஜிமுதன். "ரொம்ப நன்றி" என்றது.

"அதன்பிறகு என்ன? ரொம்பப் படித்தவள். உலக விவகாரங்கள் புரிந்தவளாகவும் இருந்தாள். பேச்சில், நிற்கிற, அமர்கிற பாங்கில் ஒரு பெருமிதம் தெரிந்தது. கண்களில் நல்ல குணம். எனக்கு அவள் மேல் மோகம் ஊறியது. என் மூக்கை அவள் மூக்குடன் உரசினேன்".

"சீ... இந்த ஆம்பிளைக்கு லஜ்ஜையே இல்லை. எதிலும் அவசரம்தான்" என்றாள் திரிபுரா. அவள் குரலில் அழைப்பு தென்பட்டது.

"உன் குழந்தைகளைச் சொல்கிறாயே.., நீகூட ரொம்ப இனிமையாகத்தான் இருக்கிறாய். எண்ணெய் ஸ்நானம் செய்தாயா என்ன, உன் மேனிக்கு இவ்வளவு அழகிய கருமை எப்படி வாய்த்தது? கத்தியின் கூர்மை மாதிரி உன் மேன்மையான மூக்கும், நனைத்த கொள் மாதிரி உன் கண்களும், உன் காம்பீர்யமும், நான் அறிந்த எந்தப் பெண்ணுக்கும் இல்லை".

"உனக்கு மோகம் தலைக்கேறி விட்டது. உள்ளே வா. நிறைய வேப்பம்பழம் வைத்திருக்கிறேன். கோழி இறைச்சிகூட உண்டு. எதை விரும்பினாலும் தின்னு. அதன்பிறகு சந்தோஷமாக இருக்கலாம், வா" என்றாள் திரிபுரா. ஜிமுதனுக்கு இப்படித்தான் திரிபுரா வந்து சேர்ந்தாள்.

கடல் கத்திக்கொண்டிருந்தது.

சத்தம் போட்டு, இரைச்சலுடன் என்னவோ சொல்லிக் கொண்டிருந்தது.

என்ன என்றுதான் விளங்கவில்லை. எதுதான் பேசுவதில்லை. காற்று, மழை, மின்னல், சாமத்தில் கத்தும் நாய், நள்ளிரவில் அலறும் ஆந்தை, அரவமற்ற போதுகளில் குறுக்காக ஓடும் பெருச்சாளிகள் எல்லாம் எதையோ இடையறாது சொல்லிக் கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது.

கடலைப் பார்த்துக் கொண்டு, ஊருக்கு ஒதுக்குப் புறமாக அமர்ந்திருந்தேன். ஏதோ நினைவாகத் திரும்பினேன். ஜிமுதன் அமர்ந்து, ஓரக்கண்ணால் என்னைப் பார்த்துக் கொண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தது.

"அடடே... நீ வந்ததை நான் கவனிக்கவே இல்லையே..."

"நான் உங்களைக் கவனித்தேனே. உங்களை மறந்து அமர்ந்திருந்தீர்கள். தன்னை மறந்து தருக்கற்று செத்துப் பிழைக்க தருணமிது பராபரமேன்னு சொன்ன மாதிரி, உங்களையே அழிச்சுக்கிட்டு இருந்தீர்கள். எதற்குக் கலக்க வேணுமென்று இருந்தேன்".

"அது சரி. மனிதர்களால் சாக முடியுமா? அதன்பிறகு பிழைக்க முடியுமா?"

"பிழைக்க முடிந்தவர்கள் சாக முடியும்".

நான் மிகவும் சிந்திக்க வேண்டியிருந்தது. அதற்கு அவகாசம் தேவைப்பட்டது. ஆகவே நான் பேச்சை மாற்ற வேண்டியிருந்தது.

"ஆமாம் ஜிமுதன்...! வாழ்க்கை எப்படிப் போகிறது?"


"அதுவாக எப்படிப் போகும்? அதுக்கு அர்த்தம் தான் ஏது? நாம் தான் அதுக்கு அர்த்தம் தந்து நடத்திக் கொள்ள வேணும்".

"உன்னுடன் நடந்து வருதல் ரொம்பக் கஷ்டம். காற்று மாதிரி இப்படிப் பறந்தால் நடக்கிறவன், நான் என்ன செய்ய? திடும் திடும் என்று இப்படித் தத்துவப் பிரவேசம் செய்தால் எப்படி? கொஞ்சம் பூமிக்கு வந்து, வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்களைச் சொல்லப்படாதா?"

"ஓ... அதைக் கேட்கிறீராக்கும். வாழ்க்கை தானே. பிரச்னை தான். குந்தக் கிளை கிடைக்கவில்லையே... இருக்கிற மரம் மட்டைகளையெல்லாம் வெட்டி வீடு கட்டிக் கொள்கிறீர்கள். நாங்கள் எங்கே கூடு கட்டிக் குடும்பம் நடத்துறது? ஆண்டெனாவின் வழுவழு கம்பியில் அமர்ந்து கால் வழுக்குகிறது. வீட்டுக் கூரையில் அமர்ந்தால் விரட்டுகிறீர்கள். போதும் போதாததற்கு இந்தப் பருந்துகள் வேறு. என் குஞ்சுகள் இரண்டை இதுவரை அடித்துப் போயிருக்கிறதே, இந்தப் பருந்துகள். மழை இல்லை. குளம் குட்டைகளில் நீர் இல்லை. தாகத்துக்கு என்ன செய்ய? கிணற்றங் கரையில் சிந்திக் கிடக்கும் தண்ணீரைக் குடிக்கிறோம். இப்போதெல்லாம் எங்கே கிணறு வெட்டுகிறார்கள்? இருந்தாலும் வாயை மூடி பம்ப் வைத்து உறிஞ்சி விடுகிறீர்கள். சாக்கடைத் தண்ணீரைக் குடிக்க வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் மைல் கணக்கில் பறந்து போய் தண்ணீருக்கு அலைய வேண்டியிருக்கிறது".

"இருந்தாலும் ஒற்றுமைக்கு உங்கள் இனம் உதாரணமானது அல்லவா?"

"எந்த மடையன் சொன்னான்? நாங்கள் போட்டுக் கொள்கிற சண்டையை நீங்கள் பார்த்ததில்லையே. ஒரு துண்டு இறைச்சியை எங்களைக் கூப்பிட்டுப் போட்டுப் பாருங்கள். அப்போ தெரியும் எங்கள் ஒற்றுமையும் மண்ணாங்கட்டியும். என் தலையைப் பாருங்கள். எத்தனை காயம். எண்ண முடியாது. எல்லாம் என்னுடைய சகோதரக் காக்கைகள் ஏற்படுத்தியவைதான். பசி என்று வந்தபின் காக்கை, நாய், மனுஷன், நரி எல்லாரும் ஒன்றுதான். எங்களில் ஒரு 'காக்கை, சோற்றைப் பார்த்ததும் மற்ற காக்கைகளை ஏன் கூப்பிடுகிறது தெரியுமா? பயம்தான். வலை விரிச்சு இருக்கிறார்களோ என்கிற பயம்தான். தனக்காகத் தான் அது மத்த காக்கைகளைக் கூப்பிடுகிறது. மனிதர்களாகிய நீங்கள் என்னத்துக்கு சேர்ந்து மந்தையாக வாழ்கிறீர்களாம்? பயம் அல்லாமல் வேறென்ன? இடி, மின்னல், நெருப்பு, மிருக பயம்தானே காரணம்".



"ஆமாம். முன்பெல்லாம் சாயங்காலங்களில் பள்ளிக்கூடம் நடத்துவீர்களே. இப்போதெல்லாம் ஏன் அதைக் காணோம்?"

"நீங்கள் பாட்டு, டான்ஸ் கச்சேரி நடத்துகிறதில்லையா, அது மாதிரித்தான் இது. எங்கே, உயிர் பிழைப்பே கஷ்டத்தில் இருக்கிறது. இந்த அவலத்தில் பள்ளிக்கூடம் எங்கே நடத்த? பிராணிகள் வயிற்றுச் சோற்றுக்கும், கூட்டுக்கும் அலைகிற போது ஓய்வு ஏது? ஓய்வு கிடைத்தால் அல்லவோ கலையும் கல்வியும்?"

சில நாழிகை நேரம் சுத்த கடற்காற்றைச் சுவாசித்துவிட்டு நாங்கள் அவரவர் வீடு திரும்பினோம்.

அடுத்த நாள் கிருத்திகையாய் இருந்தது. மதியச் சமையலை சுவாமிக்குப் படைத்துக் காக்கைக்குச் சோறு வைக்கும் பழக்கம் எங்கள் வீட்டில் இருந்தது. அதன்படி, படைத்து, ஒரு சின்ன வாழையிலையில் கொஞ்சம் சோறு, கூட்டு, கறி வைத்து அதை மெத்தைக் கைப்பிடிச் சுவரில் வைத்துக் 'கா... கா' என்று கூவிக் காக்கையை அழைத்தாள் சுமதி. காக்கை உண்ணாமல், நாங்கள் உண்ணக்கூடாது. காக்கை உருவில் செத்துப் போன எங்கள்

மூதாதைகள் அன்றோ வருகிறார்கள்! அவர்கள் பசித்திருக்க நாங்கள் உண்ணலாமோ?

"என் பெயர் காகமாறன். ஜிமுதன் என் சினேகிதன்தான். இன்னிக்குக் காலையிலிருந்தே ஜிமுதனைக் காணவில்லை. மத்தியானமாக ராவுத்தர் கடைப்பக்கம் வருவான். பார்த்தால் சொல்கிறேன். என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லை. சும்மாத்தான். கிருத்திகைத் தளி. சாப்பிட்டாயானால் சந்தோஷப்படுவேன்".

"என்னை ஜிமுதனாக நினைத்துக் கொள்ளுங்களேன். நான் வேறு, அவன் வேறா?

"உண்மைதான்" என்று ஒப்புக் கொண்டேன்நான்.

உறவினர் வீட்டுத் திருமணத்துக்குச் சென்றிருந்தபோது ஜிமுதனை நான் சந்திக்க நேர்ந்தது. பணக்கார வீட்டுத் திருமணம். ஆகவே குப்பைத் தொட்டியில் நிறைய இலைகள் மிஞ்சிப் போன பதார்த்தங்களுடன் சேர்ந்தன. என்னைப் போன்ற மனிதர்களும், இரண்டு சொறி நாய்களும், சில காக்கைகளும் எச்சில் இலைகள் நிறைந்த குப்பைத் தொட்டியை மொய்த்துக் கிடந்தன. அந்தக் கூட்டத்துக்குள் என் கண்கள் ஜிமுதனைக் கண்டுகொண்டன. அதுவும் என்னைக் கண்டுவிட்டது போலும். என் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரிக்ஷாவின் கூரையில் வந்து அமர்ந்த ஜிமுதன் எனக்கு மட்டும் கேட்கும் குரலில் "சாயங்காலமா வீட்டுப் பக்கம் வர்றேன்" என்றது.

சொன்னபடியே மாலை ஜிமுதன் வீட்டுப் பக்கம் வந்தது. அப்போது என் டேப் ரிக்கார்டரில் எல். சுப்ரமண்யத்தின் வயலின் கேட்டுக் கொண்டிருந்தேன். ஜிமுதனைக் கண்டதும் நான் டேப்பை நிறுத்தப்போனேன்.

"நிறுத்த வேண்டாம். எனக்கு சங்கீதம் பிடிக்கும். கொஞ்சம் வயலின் கேட்கலாம்".

கேட்டோம்.

அதன்பிறகு "என்ன ஆளையே பார்க்க முடியறதில்லையே" என்றேன்.

"சில சின்னஞ்சிறு பிரச்னைகளைத் தீர்க்க வேண்டியிருந்தது".

"என்ன பிரச்னை? சொல்லலாம் என்றால் சொல்லலாம்".

"நமக்கு ரகசியம் ஏது? நாங்கள் வான சஞ்சாரிகள். எங்களுக்கு என்ன ரகசியம்? திரிபுரா இப்போ என்னுடன் இல்லை".

"வெளியூர் போயிருக்கிறாளாக்கும்".

"இல்லை. வேறு ஒரு சினேகிதரோடு அவள் போய்விட்டாள்".

"அடடா. உங்கள் ஜாதியிலும் இப்படிப்பட்ட துரோகம் இருக்கிறதா என்ன?"

"என்ன சொன்னீர்? துரோகமா? என்ன தப்பான வார்த்தைகளையெல்லாம் பிரயோகிக்கிறீர்?"

"பின் என்ன? உம்மை விட்டு ஓடினது அழகான காரியமாக்கும்?"

"ஏன். போனால் என்ன? அவனை அவளுக்குப் பிடித்திருக்கிறது. போனாள். இதில் என்ன தப்பு?"

"உண்மையாகத்தான் சொல்கிறாயா?"

"நான் பொய் பேசுவதே இல்லை. உங்கள் கட்டுப்பெட்டி வாழ்க்கையைக் கொண்டு என்னை அளக்க வேண்டாம். திரிபுராவுக்கு என்னைப் பிடித்தது. என்னுடன் இருந்தாள். இப்போது அவனைப் பிடித்திருக்கிறது. அவனுடன் போய் இருக்கிறாள்".

"தூ".

"அப்படியெல்லாம் இந்த விஷயத்தைப் பார்க்கக் கூடாது சார். வாழ்க்கை ஒரு முறைதானே வாழக் கிடைக்கிறது. அதுவும் சில வருஷங்கள். எது மனசுக்குச் சந்தோஷம் தருகிறதோ அதைச் செய்து கொள்கிறதுதான் நிஜமான வாழ்க்கை".

"சரி, தப்பு. ஒழுக்கம் எல்லாம் ஓர் இழவும் இல்லையா?"

"யோசித்துப் பார்த்தால் இல்லை. இதெல்லாம் நாமாக நமக்குச் செய்து கொண்ட விதிகள் தாமே".

"நீ செய்த தியாகம்..."

"மன்னிக்கணும். துரோகம் எப்படித் தப்பான வார்த்தையோ, அது மாதிரிதான் தியாகம் என்கிற வார்த்தையும். மனிதர்களுக்கு வார்த்தையோட சக்தியும் அர்த்தமும் இன்னும் பிடிபடலை. குழந்தைகள் பணத்தை இறைத்து விளையாடுவது போல பெரியவர்கள் வார்த்தை விளையாட்டு விளையாடுகிறார்கள். நான் என்ன இழந்தேன்? திரிபுரா போனால் என்ன? உடம்புக்கு இன்னுமொரு துணை நிச்சயம் வேணும்தான். அது நாளையோ நாளை மறுநாளோ அமையும். யாரும் எதையும் இழக்கலை. இழக்கவும் மாட்டோம்".

"சண்டை கிண்டை போட்டுக் கொண்டீர்களோ, பிரிகிற போது?"

"சே. முட்டாள்களும் மூர்க்கர்களும்தான் சண்டை போடுவார்கள். திரிபுராவுக்கும் அவனுக்கும் சினேகம் தொடங்கிக் களவில் நடந்து வருவதை நான் அறிவேனே. நானே விஷயத்தைத் தொடங்கி சந்தோஷமாகத் திரிபுராவை அனுப்பி வைத்தேன். பாவம். என்னிடம் எப்படிச் சொல்வது என்று ரொம்பவும் விசனப்பட்டாள்".

"இப்படியெல்லாம் பேச, சிந்திக்க எங்கே கற்றுக் கொண்டாய்?"

"நல்ல விஷயங்களை யார் கற்றுக் கொடுத்துவிட முடியும்? அது நமக்குள்ளேயே இருக்கிறது தானே. கண்டுபிடிக்க வேணும். உங்கள் சினேகத்தை என்னால் மறக்க முடியாது. மீண்டும் சந்திப்போம்".

"எங்கே போகிறாய்?"

"வானம் விரிந்து கிடக்கிறதே. புது இடம், புது மனிதர்கள், புது காகங்கள், புது மிருகங்கள், புது தாவரங்கள் எத்தனை எத்தனை இருக்கு? அவற்றையெல்லாம் தரிசிக்காமல், இறக்கை எதற்கு? வரட்டுமா. நமஸ்காரம்".

ஒற்றைக் காலைத் தூக்கி வணங்கிவிட்டுப் பறந்தது ஜிமுதன். இறக்கையில் இருந்து எழுந்த காற்று என் முகத்தில் படிந்தது. அது இருந்த இடத்தில் ஒற்றைச் சிறகு விழுந்து கிடந்தது, கன்னங்கரேலென்று, எண்ணெய் பூசின மினுமினுப்போடு, அந்தத் தின் விளங்காப் புதிரோடு, கர்ப்பப் பையின் அமானுஷ்யச் சங்கேதத்தோடு கிடந்தது அந்தக் காக்கைச் சிறகு. ∘∘∘

கூடுகள்

லட்சுமி ராஜரத்தினம்

● கணவன் மனைவியிடையேயான பணவரவு செலவுகளைப் பங்கிட்டுக் கணக்குப் பார்த்துக் கொள்ளலாம். இதயத்தின் அடித்தளத்தில் ஊற்றெடுக்கும் அந்த வாஞ்சையையும் அன்பையும் பங்குபோடும் அளவுகோல் ஏது?

முதல் இரவன்றே மிருணா தன் திட்டத்தை வினோத்திடம் கூறி விட்டாள். அவனும் அதை அந்த நேரத்தில் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்த இரண்டு மூன்று தினங்களும் நண்பர்கள், உறவு முறை, விருந்து என்று போய்விட்ட தனால் மிருணா கூறியதை சுத்தமாகவே வினோத் மறந்துபோய் விட்டிருந்தான்.

அன்றுதான் அவர்கள் ஹனிமூன் கிளம்பினார்கள். பெட்டி, படுக்கை என்று தயாரித்து ஹாலில் வைத்தார்கள். வடதிசை பூராவும் சுற்றி வருவதாகத் திட்டம். அவர்களை வழியனுப்ப மிருணாவின் அப்பா, அம்மா, அக்கா, தங்கை, தம்பி என்றும், ஒன்றுவிட்ட இரண்டு விட்ட என்றும் ஒரு பட்டாளமே நின்றது.

"மிருணா! சாமான்கள் பத்திரம். வண்டியில தூங்கிடாதீங்க. ஓடற வண்டியில சாமான்களை எடுத்துக் கிட்டுப் போறவங்க ஜாஸ்தி. தாலிச் சங்கிலியும், ஒரு வளையலும் போதும்" என்று அம்மா எச்சரித்தாள்.

"வினோத்! பணத்தை பத்திரமா வச்சிட்டியா? ஒரே இடத்துல வச்சுக் காதே. பல இடங்களில் பிரிச்சு பிரிச்சு வச்சுக்க. ஜாக்கிரதையா தங்கிக்க. இட்டார்ஸியில நம்ம ரகு வரதா சொல்லி இருக்கான். புதுஇடம். கண்ட படி சாப்பிடாதீங்க". தன் பங்கும் சொல்லுவதில் இருக்கிறது என்று காட்டுவது போல் வினோதின் அம்மா கூறினாள்.

"வினோத் டியர்! இங்கே வாங்க ளேன்".

அவன் உள்ளே போனான். கண்ணாடி முன்பு புடைவை மடிப்பைச் சரி செய்து கொண்டிருந்த மிருணா கணவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"என்னடா இன்னுமா கிளம்பல்லே?"

பின்னைச் சரியாகத் தலைப்பில் பொருத்திக் கொண்டு கண்ணாடியில் முன்னும் பின்னும் பார்த்துக் கொண் டாள்.

"அழகாத்தான் இருக்கே. கிளம் பும்மா" என்று பரபரத்தான் வினோத்.

மேஜை மீது வைத்திருந்த உறையை எடுத்து அவன் முன் நீட்டினாள்.

"என்னடா இது?"

"அஞ்சாயிரம் இருக்கு. என் பங்குப் பணம் செலவுக்கு".

அவன் புருவம் ஏறியே இருந்தது. "எதற்கு இது?"

செல்லமாகக் கன்னத்தில் இடித்த மிருணா "இத்தனை மறதியா? முதலிரவு அன்று என்ன சொன்னேன்? ஆமா ஆமானு பூம்பூம் மாடு மாதிரித் தலையை ஆட்டினீங்க" என்று சிரித் தாள்.

அவனும் தாடையைத் தடவிக் கொண்டு யோசித்தான். முதலிரவன்று என்ன பேசினாள்?

"உங்களுக்கு என்ன சம்பளம்... கைல எத்தனை வரும் சொல்லுங்க..."

சொன்னான். அவள் தன் சம்பளத்தையும் சொன்னாள். "ரெண்டு பேரும் ஒப்பந்தம் செய்துக்கலாமா?"

அவன் மெல்ல அவளுடைய உள்ளங் கையைத் தன் கரத்தால் வருடினான்.

"ஒப்பந்தம் செய்துண்டு இனிமே என்ன செய்யப் போறோம்? கல்யாணமே ஒப்பந்தம் தானேம்மா?"

"இதைச் சொல்லலே... ரெண்டு பேர் சம்பளம் வருது. இதை அப்படியே குடும்பத்துல போடக்கூடாது".

"என்ன செய்யணுங்கறே...? உங் கிட்ட கொடுத்து யுவர்ஸ் ஒபீடி யண்ட்லியா ஆயிடறேன்".

"நோ... நோ... அதான் கூடாது".

அவனுக்கு அலுப்பாக இருந்தது.

"இதோ பாருங்க, குடும்பத்துக்கு ஆன செலவை ஆளுக்குப் பாதியா போட்டுப்போம். மீதிப் பணம் அவங்க அவங்க சேவிங்ஸ்ல போட்டுடலாம். அதைச் சொந்த செலவுக்குப் பயன் படுத்தலாம்".

"சொந்தச் செலவுன்னா..."

"நீங்க எனக்கு ஏதாவது கிப்ட் தரணும்னா அதை எடுத்துக்கலாம். உங்க அப்பா அம்மா வந்தா துணி மணி வாங்கித் தரதோ... கைல பணம் தரதோ... உங்க ஃப்ரன்ட்ஸ் கல் யாணம்னா கிப்ட் தர.. இப்படி எத்தனை இல்லை? அதைப் போலத்தான் எனக்கும்..."

"பேயிங் கெஸ்ட் மாதிரி இருக்கும் மிரு".

"இருக்காது வினோ..."

ஏதோ வேடிக்கைப் பேச்சு என்று எண்ணி அப்பொழுதே மறந்து போய் — அடுத்த தினங்களும் நினைவிலேயே வராமல் போய்... இப்பொழுது மிருணா கேள்வி கேட்கப் பள்ளிக்கூட மாணவன் டீச்சர் முன்னால் நிற்பது போல நின்றான்.

"ரெண்டு பேரும் செலவுல பங்கு போட்டுக்கணும்னு சொன்னேன் இல்லையா?"

"இந்த உடன்படிக்கை எல்லாம் சரியா வருமா?"

"வரணும். அதுலதான் சம்பாதிக்கிற சுதந்திரம் இருக்கு... நமக்குள் சண்டை வராது. நாளைக்கே ரெண்டு குழந்தைகள் பிறந்தாலும் இதே மாதிரி அவங்கவங்க சேவிங்ஸ்லேயிருந்து பணத்தைச் சரிபாதி போடணும்".

இளம் மனைவியை மெல்ல அணைத்துக் கொண்டான். "இதெல்

லாம் சரியா வராதுடா. எனக்குக் கை நிறையச் சம்பளம் வருது. உன் சம்பளத்தை அப்படியே சேவிங்ஸ்லே போடு... என்ன வேணுமோ என் சம்பளத்துல வாங்கிக்கோ".

"அப்படி எல்லாம் தப்பிச்சுக்காதீங்க."

கண்ணாடி முன்னால் நின்று கணவனின் அணைப்பினால் கலைந்து போன தலைப்பைச் சரிசெய்து கொண்டு சிரித்தாள்.

"த்ரில்லிங்கா இருக்கும் டியர்".

அவன் அந்தக் கவரை எடுத்துப் பத்திரமாக வைத்துக் கொண்டான். வெளியிலிருந்து அலாரமாக அப்பா அலறினார்.

"விநு, ரொம்ப நேரமாச்சு".

"இதோ வந்துட்டோம்ப்பா".

அனைவரும் இலவசமாக ஏகப்பட்ட புத்திமதிகளை வழங்கி அவர்களை அனுப்பி வைத்தார்கள்.

பெண் பார்க்க வந்தபொழுதே மிருணாவை வினோத்திற்கு ரொம்பப் பிடித்துவிட்டது.

இவள்தான் என் மனைவி என்று அந்தக் கணத்திலேயே தீர்மானித்து விட்டான்.

அடுத்த தினம் போன் பண்ணி "மிரு, ராத்திரி தூங்கினியா?" என்று கேட்டான்.

"ஒ... தூங்கினேனே...."

"தூங்கினியா? நான் தூங்கல்லே".

"அப்ப டாக்டர்கிட்ட போக வேண்டியது தான்".

"அடிப்பாவி! புரிஞ்சுக்கல்லையா? இல்லே வேணும்னு பேசுறியா?"

"புரிஞ்சுண்டுதான் பேசறேன். நீங்க சம்மதம் கொடுத்தா போதுமா?"

"ஏய்... என்ன சொல்றே நீ?"

"நீங்க சம்மதம் சொன்னாப் போதுமானு கேட்கிறேன். என் சம்மதம் தேவை இல்லையா?"

"நீ சம்மதிக்கல்லையா மிரு?"

"அப்படிச் சொன்னேனா?"

"ஏய்... என்னைக் கலங்க வச்சுட்டியே?"

திருமணம் நடைபெறுவதற்குள் தினமும் ஒரு தடவை சந்தித்தார்கள்.

"ஐஸ்க்ரீம் சாப்பிடலாமா?"

"ஓ".

அவன் பில் வைத்தால் மறுநாள் பிடிவாதமாக அவள் வைத்தது எல்லாம் இந்த அடிப்படையில்தான்.

"ஏன் விநு, நான் தரக் கூடாதா?" என்று இயல்பாகக் கேட்டதுகூடப் பங்குபோட்டுக் கொள்ளும் சுபாவத்தினால்தானா?

இப்பொழுது நினைத்துப்பார்த்தான்.

எல்லாம் போகப் போகச் சரியாகி விடும் என்று நினைத்துக் கொண்டான்.

வடதேசப் பயணத் தேநிலவு இனிமையாக இருந்தது. இருவரும் வேடிக்கை யாகப் பேசினார்கள். சிரித்தார்கள். தாஜ்மகால் முன்பு நின்று கதை பேசி ரசித்தார்கள்.

கங்கை நதியின் பிரவாகம் பிரமிப்பைத் தந்தது.

"வயசானவங்கதான் காசிக்கு வருவாங்க. நாம இப்பவே வந்துட்டோம்" என்றாள் மிருணா.

"நமக்கு வயசாயிருச்சுன்னு வச்சுக்கலாமா?"

"என்னைச் சேர்த்துக்காதீங்க... எனக்கு வயசு ஆகல்லே".

"ஓ... பெண்கள் வயசாயிடுச்சுன்னு ஒத்துக்க மாட்டாங்கனு எனக்கு மறந்துடுச்சு".

ரிஷிகேசத்தின் தொங்கும்பாலத்தில் கையைக் கோத்துக் கொண்டு நடந்தார்கள்.

காசிச் செம்புகள், அன்னபூரணி விக்ரகங்கள் என்று வாங்கினாள் மிருணா.

"ஏய், நாம வந்திருக்கறது ஹனிமூனாத் தெரியல்லே" சீண்டினான்.

கூலூ பள்ளத்தாக்கின் ஆப்பிள் தோட்டம் அவர்களைக் கவர்ந்தது.

சிம்லாவின் குளிர் அவர்களை வரவேற்றது. ஐப்பசி மாதம் என்பதால் எலும்பை ஒடுக்கும் சில்லிப்பு... அந்தக் குளிர் அவனைக் கவர்ந்தது. ஆதவனைக் காணாத மலை முகடுகள்... ஸ்வெட்டரும், சால்வையும் புது வேஷங்களாகத்தோன்ற வைத்தன.

"டில்லியே தேவலை" என்றாள் மிருணா.

புது டிஸைன் சால்வை ஒன்றை வாங்கிக் கொடுத்தான்.

அவள் அழகான காலணிகளை வாங்கிக் கொடுத்தாள்.

"இது என் கணக்கு" என்று சொன்ன பொழுது –

"டோண்ட் பி சில்லி" என்று செல்லமாகத் தலையில் குட்டினான்.

ஊர் திரும்பியதும் அவள் அவனை விடவில்லை.

"வாங்க கணக்குப் பார்க்கலாம்".

"என்ன மிரு... கணக்குப் பார்க்க என்ன இருக்கு? கொண்டு போன பணத்துல பாக்கி என்ன இருக்கோ அது போக மீதி செலவு பண்ணிட்டோம்னு வச்சுக்க".

"அது எப்படி? நீங்க எனக்கு வாங்கின கிப்ட் உங்க கணக்கு. நான் உங்களுக்கு வாங்கினது என் கணக்கு. நீங்க உங்க ஃப்ரண்ட்ஸ்க்கு வாங்கினது உங்க கணக்கு. நம்ம உறவுக்காரங்களுக்கு வாங்கினதை வேணா இந்தத் தடவை ஷேர் பண்ணிக்கலாம்".

அவளுடைய போக்கு வேடிக்கை யாகப் படவே அவன் ரசித்துக் கொண்டான். அவள் கணக்கு எழுதினாள்.

அவளுடைய அப்பா தலை தீபாவளிக்கு அழைத்துவிட்டுப் போனார். கல்யாணத்திற்கு வந்துவிட்டுப் போன அவனுடைய பெற்றோர் கிராமத்திலிருந்து தற்சமயம் வரமுடியாது என்று எழுதிவிட்டார்கள்.

"மிரு, உன் தம்பி தங்கைகளுக்கு ஏதாவது வாங்க வேண்டுமே?"

"வாங்குங்க... அதெல்லாம் உங்க கணக்குதான்".

இலேசான சினம் முகத்தில் ஏற அவளைப் பார்த்தான்.


"தீபாவளிக்கு உனக்கு ஐயாயிரம் ரூபாய்க்குப் பட்டுப்புடைவை வாங்கப் போறேன்".

"அதுவும் உங்க கணக்குதான்".

பல்லைக் கடித்தான் வினோத். இளம் மனைவியைக் கோபிக்க மனம் வரவில்லை.

சொன்னதைப் போலவே பட்டுப் புடைவை வாங்கிக் கொடுத்தான். அவள் தம்பி தங்கைகளுக்குத் துணி மணிகள் வாங்கினான்.

"இப்படிப் பணத்தை வாரி இறைக்கிறீங்களே?"



"இதுலதான் மிரு சந்தோஷம் இருக்கு".

அலுவலகத் தோழியிடம் வினோத் தனக்குப் புடைவை வாங்கியதைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண் டாள்.

"நீயும் தானே சம்பாதிக்கறே...? நீ என்ன வாங்கிக் கொடுத்தே?" என்று அலுவலகத் தோழி கேட்டதும் திடுக்கிட்டுப் போனாள்.

அவனுக்கு ஏதாவது வாங்க வேண்டுமே. என்ன வாங்குவது?

தனக்கு அவன் வாங்கிக் கொடுத்த பட்டுப் புடைவை என்ன விலை இருக்கும்? சாமர்த்தியமாக விசாரித் தாள்.

"பக்கத்து வீட்டம்மா புடைவை என்ன விலை இருக்கும்னு கேட்டாங்க... சொல்லத் தெரியல்லே... என்ன விலை வினோத்?"

"என் புருஷனோட அன்புதான் விலைன்னு சொல்லு போ" என்றான் வினோத்.

அதே மாதிரிப் புடைவையைக் காட்டி கடையில் விலை கேட்டபொழுது மிருணா அசந்து போனாள்.

தன் சேமிப்பைக் கணக்கிட்டு அவனுக்கு அந்த ரூபாய் வரும்படி ஒரு வைர மோதிரம் வாங்கினாள் மிருணா.

"ஏய்... பிரமாதமா இருக்கே... எவ்வளவு ஆச்சு?"

"உங்க மனைவியோட அன்புதான் விலை..." என்றாள் மிருணா.

மிருணாவின் பிறந்த வீட்டிற்கு அவர்கள் போய் இறங்கிய பொழுது நெய் மணம் கமழ்ந்தது. அம்மா சுடச் சுட மைசூர்பாகைக் கிளறித் தட்டில் கொட்டிக்கொண்டிருந்தாள்.

சின்னக் குழந்தையைப் போல அம்மாவைக் கட்டிக் கொண்டாள் மிருணா. அம்மாகூட இருந்தது சந் தோஷமா - வினோத்கூட இப்போது இருப்பது சந்தோஷமா? புரியத்தான் இல்லை. தீபாவளியை முடித்துவிட்டு வீட்டிற்குத் திரும்பியபொழுது வெறிச் சென்று இருந்தது.

"குழந்தைக்கு அம்மாவை விட்டு விட்டு வந்த வருத்தமா?" என்று கேலி செய்தான் வினோத்.

அடுத்த நாள் காலை. வினோத் அலுவலகம் கிளம்பினான். தயங்கியபடி மிருணாவைப் பார்த்தான்.

"என்ன வினு... நேரமாகல்லே... எனக்கு இன்னிக்கு லீவ் இருக்கே?" என்றாள்.

"ஒரு ஐந்நூறு ரூபாய் பணம் வேணும் மிரு... செலவுக்குத்தான்".

"இவ்வளவு தானே? தரேன். ஒண்ணாந்தேதி திருப்பித் தந்துடணும்".

"என்னடா இப்படிக் கணக்குப் பார்க்கறே?"

"கணக்குத்தான்" என்ற மிரு, ரூபாயைக் கொடுத்தாள்.

ஒண்ணாம் தேதி வீட்டுக்கு அவரவர் பங்கைப் போடும் பொழுது அதை வசூல் செய்து கொண்டாள். வினோத்திற்கு இது கொஞ்சம் மனத்தாங்கலாகத்தான் இருந்தது.

அன்று அலுவலகத்திலிருந்து வரும் பொழுது தன் மாமன் மகள் வரப் போவதாகச் செய்தி கொண்டு வந்தான். மாமன் மகள் நிர்மலா அமெரிக்காவில் வசிப்பவள்.

"மிரு! நன்றாகக் கவனிக்கணும். நீயும் நானும் ஒருவாரம் லீவ் போட்டுக்கலாமா?"

"ஓ... போட்டுக்கலாமே... சின்ன சந்தேகம். நீங்க ஏன் உங்க மாமன் மகளைக் கல்யாணம் செய்துக்கல்லே?"

"ஓ... பெண்களுக்கே ஏற்படற சந்தேகம் என் மிருவுக்கும் ஏற்பட்டு விட்டதோ? அவ என்னைவிட அஞ்சு வயசு மூத்தவ" என்று கூறி வினோத் சிரித்தான்.

நிர்மலா அமெரிக்காவின் தாராளத்தை அவர்களிடம் காட்டினாள். கண்ணில் கண்ட பொருட்களை எல்லாம் வாங்கிக் குவித்தாள். அவளைப் பணம் கொடுக்க விடாமல் வினோத் கொடுத்தான்.

அடுத்த மாதம் அவள் கணக்கைப் பார்த்தபொழுது வினோத் கூறினான்.

"இதெல்லாம் சரிப்படாது மிரு... ரெண்டு பேர் சம்பளத்தையும் ஒண்ணா போட்டு அதுல ஒரு பகுதியை சேவிங்ஸ்லே போடலாம்" என்றான்.

"அதெல்லாம் வேண்டாம். இப்ப இருக்கறதுதான் சரி. வீட்டுச் செலவுக்கு நானும் நீங்களும் ஷேர் செய்துக்கலாம். நிர்மலா வாங்கினத்துக்கு டாண் டாண்னு பணத்தை எடுத்துக் கொடுத்தீங்களே... அது உங்க கணக்கு" என்றாள்.

அறையலாம் போல வந்தது அவனுக்கு.

கணக்கு கணக்கு என்று மிரு கூறி அவனைக் கட்டுப்படுத்தி இரண்டு வருஷங்கள் ஓடிவிட்டன. எதெது எந்தெந்தக் கணக்கு என்று அவனுக்கும் அத்துபடி ஆகிவிட்டது. அவன் பரிசு வாங்கிக் கொடுத்தால் அவளும் வாங்கிக் கொடுத்தாள். அவன் தன் வீட்டிற்குப் பணமோ பொருளோ கொடுத்தாள் அது அவன் கணக்கு என்றாள். அதைப் போல தன் வீட்டிற்குச் செய்ததை அவள் கணக்கில் எழுதிக்கொண்டாள்.

"இந்தப் பேயிங் கெஸ்ட் குடும்பம் எதுக்குன்னு எனக்குப் புரியல்லே" என்று முனகினான் வினோத்.

அன்று அலுவலகத்திற்கு போன் வந்தது. மிருணாவிற்கு ஆக்ஸிடெண்ட் என்று. விழுந்தடித்துக் கொண்டு ஓடினான். தலையில் பலத்த அடி. ஏழெட்டு நாள் ஆகியும் நினைவு வரவில்லை.

"டாக்டர்! என்ன செலவானாலும் பரவாயில்லை. என் மிரு பிழைக்கணும்".

டாக்டர்கள் சொன்ன மருந்தை எல்லாம் வாங்கிக் கொண்டு ஓடி வந்தான். சிலைகள் கண்ட இடம் எல்லாம் நின்று தேங்காய் உடைத்தான்.

கடுமையான பத்து தினங்கள் அவனைக் கலங்க வைத்தபின் மிருணா கண் திறந்தாள்.

"மிரு... மிரு..." கண் கலங்கினான் வினோத்.

"நான் எங்கே இங்கே?" கண்கள் மருத்துவ மனையின் சூழ்நிலையில் சுற்றின.

பெரியவர்கள் நகர்ந்து கொண்டார்கள். எப்படிப்பட்ட விபத்திலிருந்து தப்பினாள் என்று கூறினான் வினோத்.

"பத்து நாளைக்கு மேல நினைப்பு இல்லையா எனக்கு? ரொம்பச் செலவாகி இருக்குமே?"

"ட்வெண்ட்டி தௌஸண்ட்..."

"இருபதாயிரம்?"

வெள்ளைச் சிறகை விரித்த புறாவாக வந்த நர்ஸ் அவர்களைப் பார்த்துச் சிநேகிதமாகச் சிரித்தாள்.

"என்ன ஸார், இன்னிக்காவது சாப்பிடுவீங்களா? இவங்கதான் கண் விழிச்சிட்டாங்களே... என்னம்மா, உங்க புருஷன் சாப்பிட்டுத் தூங்கிப் பத்து நாளாச்சு... குளிச்சாரோ என்னவோ... தெரியாது. கட்டில் கிட்டயே உட்கார்ந்து உங்க முகத்தையே பார்த்துக்கிட்டு இருந்தாரு".

அவனுடைய கரத்தைப் பற்றிக் கொண்டாள் மிருணா. நர்ஸ் ஊசியைப் போட்டுவிட்டு நகர்ந்தாள். "ரெஸ்ட் எடுங்க. ரொம்பப் பேசக் கூடாது" எச்சரித்துவிட்டுப் போனாள்.

"பணத்துக்கு என்ன செய்தீங்க?" என்றவள் கையை விட்டுத் தலையணையைத் துழவினாள்.

"பாஸ் புக தேடறியா?" என்றான் தளர்ந்த குரலில்.


"இல்லை" என்ற மிருணாவின் பார்வை ஜன்னலுக்கு வெளியே போயிற்று.

தாழ்வாரத்தின் மேல் உள்ள சின்ன இடத்தில் சிறு பறவைகள் இரண்டு கூடு கட்டிக் கொண்டிருந்தன. ஒரு பறவை சிறு துரும்பைக் கொண்டு வைத்தது. அடுத்த பறவை சிறு வைக்கோல் துணுக்கைக் கொண்டு வைத்தது. இரண்டும் சேர்த்துக் கட்டும் கூடு அது.

ஒரு பறவை எதையோ கொண்டுவர மற்ற பறவை பங்கு போட்டு உண்ண –

ஓ... அவள் எத்தனை மடத்தனமாக நடந்து கொண்டுவிட்டாள்! சம்பாத்யத்தில் வேண்டுமானால் கணக்கு வைக்கலாம். பத்து நாளாகக் கண் விழித்து அவள் அருகில் பைத்தியக்காரன் மாதிரி கிடந்து, சாப்பிடாமல் தூங்காமல் இருந்த கணவனின் வேதனைக்கும், தவிப்பிற்கும் அவள் எந்தக் கணக்கைக் காட்டி சரிசெய்யப் போகிறாள்?

அவள் கை அவனது கையை இறுகப் பற்றியது. வரவும் செலவும் பார்க்க முடியாத கணக்கல்லவா வாழ்க்கை? ஃ



அமுதசுரபி தீபாவளி மலர் '91 திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி போட்டோ : டி. ஆர். ஸ்ரீநிவாசன்

● எஜமான விசுவாசத்திற்கு முன்னால் எதுவுமே பெரிதில்லை என்ற எண்ணம் படைத்த அனந்தன், வசதிக்கேற்ப வாழ்வை அமைத்துக் கொள்ளத் துடிக்கும் அகிலி, பணத்தைக் கண்டதும் பல்லிளிக்காமல் தன் உழைப்பில்லாமல் வந்த பணத்துக்கு உரிமை கொண்டாட மறுக்கும் சாந்தா ஆகிய மூவரின் வேறுபட்ட பார்வைகள்தான் நமக்கு எத்தனை பாடங்களைக் கற்றுத் தருகின்றன?

பார்வை அது என்ன பார்வை?

பி.வி.ஆர்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று அனந்தனுடைய ஐம்பத்தைந்தாவது பிறந்த நாள் வந்தது அவருக்குச் சௌகரியமாகப் போயிற்று. வயது தெரிந்த நாளிலிருந்து அவர் இது வரைக்கும் பிறந்த நாள் எந்த மாதத்தில் எந்த நட்சத்திரத்தில் வந்து விழுகிறது என்று சிந்தித்தும் பார்த்ததில்லை. ஆனால் இந்தப் பிறந்த நாளை விமரிசையாகவும் அதே சமயத்தில் விநோதமாகவும் கொண்டாடுவது என்று. தீர்மானித்தார்.

"அகிலி!"

"என்ன?"

"என்னுடைய நட்சத்திரம் என்ன தெரியுமா?"

"ஜாதகம் பொருந்தியிருக்கிறது என்று என்னிக்கு என் அப்பா அம்மாவிடம் சொன்னாரோ அன்னிக்கே தெரியும். பூசம்".

"மாதம்?"

"இதே மாசம்.∴ ஐப்பசி".

"அது என்னிக்கு வர்றது, சொல்லு".

"நாளை மறுநாள். ஞாயிற்றுக் கிழமை".

"பரவாயில்லையே. என் மேலேயும் உனக்கு அக்கறை இருக்கு".

"உங்களுக்குத்தான் உங்க பிறந்த நாளைக் கொண்டாடப் பிடிக்காதே? ஒரு பருப்புப் பாயசம்கூட இருக்கப் படாதுன்னு சத்தம் போடுவீங்க... ஆனா அன்னிக்கு நான் கபாலீசுவரர் கோயில்லே அர்ச்சனை செய்வேன். ராத்திரி நீங்க கடையைப் பூட்டிட்டு வர்றப்ப, பழங்களோடு பழமா நைவேத்தியப் பழத்தையும் வைப்பேன். சாப்பாடு முடிஞ்சதும் அதை எடுத்துத் தருவேன்".

"இந்த வருஷம் நீ அதைச் செய்யவேண்டிய அவசியம் இல்லை, அகிலி".

"என்ன சொல்றீங்க?"

"நீயும் நானும் காலங்கார்த்தாலேயே கோயிலுக்குப் போயிடுவோம். அர்ச்சனையை முடிச்சுடுவோம்".

"நிஜமாவா?"

"நான் பிஸினஸிலேயே இதுவரை யாரையும் ஏமாத்தினதில்லை அகிலி".

"எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? நீங்களும் நானுமாச் சேர்ந்து கோயிலுக்குப் போய் எவ்வளவு காலம் ஆச்சு?"

"இன்னும் ஒன்னு".

"என்ன?"

"வடை பாயசத்தோட சாப்பாடு. நீ, நான், அர்ஜுன், கார்த்திக், ராஜி எல்லாருமா ஒண்ணா உட்கார்ந்து நுனி இலையிலே சாப்பிடறோம்".

"பேசறது நீங்களா... கேட்கிறது நானான்னு சந்தேகம் தோணுறது எனக்கு".

"ஏன் இப்ப நாம ரெண்டு பேரும் தானே இங்கே இருக்கோம்? எனக்கு இன்னும்கூட ஓர் எண்ணமும் ஏற் பட்டுது. ஆனா யோசிச்சுப் பார்த்துக் கடைசியிலே வேண்டாம்னு முடிவு செய்தேன்."

"என்ன அது?"

"இனிமே வெளியே சொல்லுவானேன், அகிலி! வேண்டாம்ங்கற முடிவைத்தான் எடுத்தாச்சே".

"இருந்தாலும் சொல்லுங்களேன். சொல்லப்படாதா?"

"சாந்தா, அவ புள்ளை மூர்த்தி பொண் மீனா எல்லாரையும் கூட சாப்பாட்டுக்கு அழைக்கலாமோன்னு தோணித்து".

"நல்லவேளை, வேண்டாம்ங்கற முடிவை எடுத்தீங்களே!"

"ஏன் அகிலி? ஒரு காலத்தில் சாந்தாவின் புருஷனிடம் நான் வேலை பார்த்தவன்! அவன் அகாலத்தில் போகாமலிருந்திருந்தா, யார் கண்டா, இன்னமும் நான் மாலிகிட்ட வேலை பார்த்துட்டுத்தான் இருப்பேனோ என்னவோ?"

"நாம யதார்த்தத்தைப் பத்திப் பேசுவோம். சாந்தா ஸ்டோர்ஸ்ங்கற துணிக்கடையில் நீங்க மீட்டர் கோலை வைச்சுட்டு துணி அளந்திருக்கீங்க. இல்லைன்னு சொல்லலே... புடைவைகளைப் பிரிச்சு, கரை தலைப்பு எல்லாம் சரியா இருக்குன்னு வர்றவங்க போறவங்களுக்கெல்லாம் சிபாரிசு செஞ்சிருக்கீங்க. இல்லைன்னு சொல்லலே. ஆனா அதுக்காக..."

"அதுக்காக இல்லை அகிலி! எசமான விசுவாசத்தினாலே இப்ப நான் பேசலை. ஒரு நிமிஷம்,ஒரே நிமிஷம் பழசை யோசிச்சுப் பாரு. நம்ப அர்ஜுனுக்கு அப்ப எட்டு வயசு. ஆறு வயது கார்த்திக் ஓயாம இருமிட்டிருந்தான்... நாலு வயசு ராஜி ரப்பர் பெப்பர்மின்ட்டுக்கு வீட்டை ரெண்டாக்கிட்டிருந்தா. கல்லாப் பெட்டியில், உட்கார்ந்திருந்த மாலி, 'அனந்தா'ன்னு கேவினான். வலியிலே உரக்கக் கத்த முடியலே. மீட்டர் கோலை எறிஞ்சுட்டு ஓடினேன். நானும் மத்த சிப்பந்திகளும் கத்த வித்தைகளை எல்லாம் கையாண்டு பார்த்தோம். டாக்டர்கிட்டே போற போதே..."

"மாலியின் காலத்தை பகவான் நிர்ணயித்திருந்தான். அதை யாரால் எந்த வித்தையால் மாத்த முடியும்? சொல்லுங்க."

"அதன் பிறகு என்ன நடந்ததுன்னு இன்னமும் உனக்குத் தெரியாது. நான் சொன்னதில்லே".

"இப்பச் சொல்லலாமே?"

"உஹூம். ஞாயித்துக்கிழமை சாப்பாட்டுக்குப் பிறகு எல்லார்கிட்டேயும் சொல்லப் போறேன். சொல்ல வேண்டிய கட்டாயம் வந்துட்டுது".

அகிலி மேற்கொண்டு ஏதும் கேட்கவில்லை.

அனந்தன் தமக்குள் நத்தைபோல் ஒடுங்கிக் கொண்டார். அந்த நாள் கண்முன் வந்தது.

சின்னஞ்சிறு வீட்டில் சாந்தா தன்னந்தனியாக உட்கார்ந்திருந்தாள். மாலி மறைந்து பதினைந்து நாள்களாகிவிட்டன. வந்திருந்த உற்றார் உறவினரெல்லாம் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப் போயாகிவிட்டது.

அனந்தன் திண்ணைப்படியில் கால் வைப்பதைக் கண்டதும் சாந்தா எழுந்து நின்றாள். அவளுடைய சோகம் படிந்த முகத்தில் மறைந்திருந்த கோபம் சற்றே மின்னுவதாகத் தோன்றியது அனந்தனுக்கு. அவள் பேசத் தொடங்கும் முன்பே நாம் தொடங்கிவிடுவதுதான் விவேகமாகப்பட்டது. அனந்தனும் மாலியும் பல வருடங்களாக, சிறுவயது முதல் நெருங்கிப் பழகியிருந்த காரணத்தாலும் கல்யாணத்துக்கு முன்பே மாலியின் மாமா பெண் சாந்தாவை அவன் அறிந்திருந்த காரணத்தாலும் அவளைப் பெயர் சொல்லி அழைத்தே அனந்தன் பழகியிருந்தான். இப்போதும் பழக்கம் மறையவில்லை. இதை சாந்தா தவறாக எடுத்துக் கொள்ளவுமில்லை.

"சாந்தா! இந்தப் பத்துப் பன்னிரண்டு நாளா நான் தினசரிக் கடை வசூலை உன்கிட்ட கொண்டுவந்து தரலே. காரணம் நீ துக்கத்திலே மூழ்கியிருந்தே. மனசு பணத்தை லட்சியம் செய்யாமல் அலை பாய்ஞ்சுட்டிருந்திருக்கும். வீட்டிலே ஏகப்பட்ட பேர் இருந்தாங்க. அதனாலே தினசரி வசூலை மறுநாள் காலையில் பாங்க்கிலே கட்டிட்டு வந்தேன். அறுபத்தெட்டாயிரம் கட்டியிருக்கேன். பதினஞ்சு நாள் பில் புத்தகங்கள் இதோ கொண்டுவந்திருக்கேன். உன் பிள்ளை மூர்த்திக்கு இப்ப எட்டு வயசு. அவனாலே சரிபார்க்க முடியும்னு தோணலே. நீ அதிகம் படிக்கலேன்னாலும் ஓரளவு புரிஞ்சுப்பே. தேதி வாரியா வசூலை எழுதி வைச்சிருக்கேன். பில் நகல்களும் இருக்கு. பாங்க்கில் கட்டியதற்கான சலானும் கொண்டு வந்திருக்கேன். நீ சரி பார்க்க நான் உதவி செய்யத் தயார்!"

கோபம் மின்னிய முகத்தில் ஒருவித நிம்மதியும் திருப்தியும் நிலவுவதைக் கண்டான் அனந்தன்.

"அவர் இல்லாத நாள்களில் நீங்க கடையைக் கவனிச்சின்டது உண்டு இல்லையா?"

"உண்டு. அவன் சரக்கு எடுக்க சேலம் மதுரைன்னெல்லாம் போவான்".

"திரும்ப வந்தபிறகு நீங்க கொடுக்கிற கணக்கை செக் பன்னுவாரா?"

"மாலி கண்மூடற வரை அப்படிச் செய்ததில்லை".

"நிலைமை அப்படி இருக்கறப்ப, இப்ப நான் உங்க மேலே சந்தேகப்பட்டு கணக்கை சரி பார்த்தா அவர் ஆத்மா கோபப்படும்".

அனந்தனுக்கு என்ன பதில் சொல்லுவது என்று புரியவில்லை. மௌனமாக இருந்தார்.

"உங்களுக்கு மாசாமாசம் என்ன கொடுத்திட்டிருந்தார்னு எனக்குத் தெரியாது".

"இருநூறு ரூபாய். கார்த்தாலே ரெண்டு தடவை காபி. சாயங்காலம் அஞ்சுமணிக்கு தோசை இட்லின்னு ஏதேனும் டிபன். காபியும் உண்டு".

"எல்லாச் செலவுகளும் போகத் தனக்கு சராசரி மாசம் ஆயிரம் கிடைக்கிறதுன்னு சொல்லுவார்".

"சின்னக் கடை. கொஞ்சம் பெரிசாயிருந்து புது மோஸ்தர்லே விதம் விதமான துணி வகைகளையும் வைச்சிருந்தா லாபம் ரெண்டு மடங்கா உயர்ந்திருக்கும்... இன்னொரு விஷயம்.."

"என்ன?"

"இந்த அஞ்சாறு மாசத்திலே அப்ப இப்பன்னு நூறு, இருநூறுன்னு நான் பலதடவை கைமாத்தா மாலிகிட்ட பணம் வாங்கியிருக்கேன். கார்த்திக்குக்கு அடிக்கடி மார்ச்சளியும் ஜுரமும் வர்றது. அகிலிக்கு ரத்த சோகை. டாக்டர்கிட்டே போகாத நாளில்லே. மொத்தம் வாங்கியிருக்கிறது ஆயிரத்து முன்னூற்று நாப்பது".

"இதை ஏன் இப்பச் சொல்லணும்?"

"மாலி போனப்புறம் உங்கிட்டேயும் சொல்லலேன்னா, நான் அவனை வஞ்சிச்சவனாகி விடுவேனே? நாணயமா இருக்கிற காலத்திலேயே வீட்ல எல்லாருக்கும் உடம்புக்கு வர்றது".

சாந்தா ஓரிரு நிமிடங்களுக்கு பதில் சொல்லவில்லை. பிறகு சமாளித்துக் கொண்டு, "கடையை என்ன செய்யறதுன்னு எனக்குத் தெரியலே" என்றாள்.

"தொடர்ந்து நடத்த வேண்டியதுதானே? அதானே நல்லது?"

"நல்லதுதான். ஆனா எனக்குத் திராணி இல்லே. மூர்த்தி படிக்கணும். மீனா குழந்தை".

"உன் அண்ணன்கள் ரெண்டு பேர் இருக்காங்களே?"

"இருக்காங்க. அவ்வளவுதான். இப்ப கடையை வித்துப் பணமாக்கினா எவ்வளவு கிடைக்கும்னு உங்களுக்குத் தோணறது? அந்தத் தொகையை பாங்கில போட்டா எவ்வளவு வட்டி கிடைக்கும்?"

"இப்ப பத்து சதவீதம் தர்றா. அதன் படி ஐயாயிரம். அதாவது வருஷத்துக்கு".

"நீங்க என்ன சொல்றீங்க?"

"நாள் போகப் போகப் பணத்தோட மதிப்பு குறைஞ்சுட்டேதான் போகும். உன் ரெண்டு குழந்தைகளும் பெரியதாக ஆகிறப்ப கல்யாண வயது வர்றப்ப ஐம்பதாயிரத்தின் மதிப்பு இருபதாயிரமா சரிஞ்சாலும் ஆச்சரியப்படறதுக்கில்லை".

"கடையை என்னாலே நடத்தவும் முடியலே. வித்தாலும் புண்ணியமில்லே. அதுசரி. ஒரு வேளை நான் கடையை விற்க நேர்ந்தா உங்க வேலை என்னவாகும்?"

"அதைப் பத்திக் கவலைப்படாதே சாந்தா. வாங்கறவன் கொஞ்ச நாளுக்கு வைச்சுப்பான். பிறகு பழம் பெருச்சாளின்னு என் கணக்கைத் தீர்த்து அனுப்புவான். பிறகென்ன? வேறு எங்காவது வேற வேலை தேடிப் போவேன்".

"அது கஷ்டமில்லையா?"

"இப்ப என் கஷ்டமா முக்கியம்? நீயும் உன் குழந்தைகளும்தான்



முக்கியம். மேலே உட்கார்ந்துட்டு மாலி கண்ணீர் வடிக்கக் கூடாது".

"இப்படி செஞ்சா என்ன?"

"எப்படி?"

"இதுநாள் வரை சராசரியா மாசம் ஆயிரம் ரூபாய் வருமானம் வந்துட்டிருந்தது. அது தொடர்ந்து கிடைக்கும் படியா ஒரு வழி கிடைக்கனும். கடையை நீங்களே ஏத்து நடத்துங்கோ. கடை வாடகை இருநூறா இருக்கட்டும். மாச வரும்படி எண்ணூறா வரட்டும். முடியுமா?"

"ஒரு சின்ன நிபந்தனை".

"என்ன?"

"மனுஷ மனசு குரங்கு. அது எப்ப எந்தத் திசையிலே போகும்னு சொல்ல முடியாது. நானும் மனுஷன்தான். இலாபத்திலே முப்பது சதவீத லாபமும் கடைவாடகை முன்னூறுன்னும் எழுதிக் கொள்வோம். முப்பது சதவீதம் எண்ணூறு ரூபாய்க்குக் குறைஞ்சா அதை ஈடு செய்யனும்னு தனியா ஒரு ஷரத்தை ஒப்பந்தத்திலே வைப்போம்".

"இந்த ஒப்பந்தமெல்லாம் அவசியம் தானா?"

"ரொம்ப அவசியம். மனுஷ மனசு குரங்குன்னு சொன்னேனே... அதுவுமில்லாம மாலிக்கு ஆனாற்போல எனக்கும் திடீர்னு ஏதாவது ஏற்பட்டுட்டா..?"

"அவர் எப்பவும் உங்களைப் பத்தி உயர்வாப் பேசுவார். அது எவ்வளவு உண்மைன்னு நீங்க நிரூபிக்கிறீங்க".

"அதெல்லாம் ஒன்னுமில்லே. நான் ஒரு சாதாரண மனுஷன்... மேலும் இன்னொரு விஷயம்".

"என்ன?"

"சில சமயங்களிலே மாலி உற்சாகமா இருக்கிறப்ப சொல்லுவான். 'டேய் அனந்தா! என் பொண் மீனா உன் புள்ளை அர்ஜுனுக்கு. உன் பொண் ராஜி என் புள்ளை மூர்த்திக்கு'ன்னு".

சாந்தா சிரித்தாள்; சோகம், வெளிறிய பூக்களாகச் சிதறியது.

"எப்பவோ நடக்கப் போற திருவிழா வுக்கு நாம ஏன் இப்பவே அஸ்திவாரம் போடணும்?"என்றாள்.

இந்தப் பேச்சு நடந்த ஏழெட்டு நாள்களுக்குள் ஒப்பந்தம் தயார் செய் யப்பட்டது. சாந்தாவும் கையெழுத் திட்டாள்.

"என்ன திடீர்னு தூங்கிப் போயிட் டீங்க?" என்று கேட்டாள் அகிலி.

"ரிப் வான் விங்க்கிள் என்று ஒருத்தன் இருபது வருஷம் தூங்கினான் அகிலி. நான் பதினெட்டு வருஷமா முழிச் சுட்டிருக்கேன்".

"நீங்க பேசறதே ஒண்ணும் புரியலே. யார் அது ரிப்பன் விங்கன்?"

"ரிப்பனும் இல்லே விங்கனும் இல்லே அகிலி!"

"ஏன் பதினெட்டு வருஷமா முழிச் சுட்டிருந்தேன்னு சொன்னீங்க? நீங்க விடற கொறட்டையிலே நம்ம வீட்டு ஜிம்மிகூடப் பயந்துட்டு ஓடறது".

அனந்தன் அகிலிக்குப் பதில் சொல்லச் சிரமப்படவில்லை.

சனிக்கிழமை.

வழக்கம் போல பிள்ளைகள் அர்ஜுன் மற்றும் கார்த்திக் அப்பாவுடன் காரில் செல்ல, ஒன்பது மணிக்கே தயாரா னார்கள். பெண் ராஜி பி.காம். படித்து முடித்துவின்சார்ட்டர்ட் அகௌண்டன்ட் பயிற்சிக்காகப் போய்க் கொண்டிருக் கிறாள். ஏற்கெனவே இரு கண்டங் களில் முதற்கண்டத்தைத் தாண்டியாகி விட்டது. அடுத்த வருஷம் அவள் இறுதித் தேர்வை நிச்சயம் முடித்து விடுவாள். அதன் பின்னர் தொழிலில் ஈடுபடப் பிடிவாதம் செய்வாள். ஆனால் இந்த ஆண்டே அவள் கல்யாணம் முடிந்துவிட வேண்டும் என்று அனந்தன் உறுதியாக இருக்கிறார். எல்லாம் நாளை, ஞாயிற்றுக் கிழமை, அவருடைய பிறந்த நாளன்று நிச்சயமாகிவிடும். இருபத்தெட்டு வயது அர்ஜுன் அவர் சொன்ன சொல்லைத் தட்டமாட்டான் என்ற நம்பிக்கை இருந்தது.

அவர் காரில் ஏறி டிரைவர் அருகே அமர, இரு பிள்ளைகளும் பின்னால் உட்கார்ந்தார்கள்.

'சாந்தா சில்க்ஸ்' மயிலாப்பூரில் லஸ்ஸில் இருந்தது. இலட்சக்கணக் கான ரூபாய் மதிப்புள்ள காஞ்சிபுரம், ஆரணி, பெனாரஸ், மைசூர் பட்டுகள் குவிந்து கிடந்தன. டி.வி.யில் வெள்ளி தோறும் சினிமா பாட்டுகள் தொடங்கு வதற்கு முன் பல இளம் பெண்கள் இருபது விநாடிகளுக்கு 'சாந்தா சில்க்ஸ்' வழங்கும் பட்டுப் புடைவை களில் கண்ணுக்கு அழகாகப் பவனிவருவார்கள். 'விவித் பாரதி'யில் சரியாக காலை எட்டேமுக்கால் மணிக்கு 'சில்க் என்றாலே சாந்தா சில்க்' என்ற குரல் முதலில் கேட்கும்.

அர்ஜுன் பட்டுப்புடைவைக் கடை முன் இறங்கினான்.

கார் தொடர்ந்து தி. நகரை நோக்கி விரைந்தது.

"சாந்தாஸ் சில்ட்ரன் அண்ட் லேடீஸ் ஷோரும்" மூன்று மாடிக் கட்டடம் ஒன்றின் கீழ்த்தளத்தில் அமைந் திருந்தது. இல்லாத ரெடிமேட் ஆடைகள் இல்லை. விலையும் சற்று மலிவு என்பதால் எல்லா நேரங்களிலும் ஜனத்திரள்தான்.

கார்த்திக் இப்போது இறங்கினான்.

அடுத்ததாக நாயர் சாலை வழியாக கார் சென்று நுங்கம்பாக்கம் நெடுஞ் சாலையை அடைந்தது. 'சாந்தா பேலஸ்' முன் நின்றது. அனந்தன் இறங்கினார். கடையினுள் நுழைந்தார். இடப்புறம் முழுதும் பேண்ட் துணிகள். வலப்புறம் பெண்களுக்கான நைலான், ஷிபான், மைசூர், கிரேப் வகை ரறாக்கள். முதல் மாடியில் ஷர்ட் துணிகள் மற்றும் சோளித் துண்டுகள்.

அனந்தனைக் கண்டதும் கடையின் ஒரு கோடியில் நின்றிருந்த மூர்த்தி ஓடோடி வந்தான். "ஒரு வாரமா நீங்க இங்கே வரவேயில்லையே சார்...!"

"நீதான் மானேஜரா இருக்கே, அப்பப்ப தகவல் கொடுக்கிறே.... தினமும் நான் வேறு வரணுமா? சாந்தா ஸ்டோர்ஸ் உன் அப்பா தொடங்கிவச்ச கடையை - நானல்லாமல் யார் பார்த்துக் கொள்வார்கள்? அதுசரி, மீனாவும் அம்மாவும் எப்படி இருக்காங்க? நான் மீனாவைப் பார்த்து ஒரு மாசமாறது" என்றார் அனந்தன்.

"நீங்கதான் வீட்டுப் பக்கமே வர்றதில்லையே சார். நல்லா நினைவு இருக்கு. சித்திரை மாசம் ஒண்ணாம் தேதி வந்தீங்க. இப்போ தீபாவளி வரப் போறது".

"இங்கிருந்து நேரே உங்க வீட்டுக்குத்தான் போகப் போறேன்".

"சாந்தா ஸ்டோர்ஸ்?"

"இன்னிக்கு ரெண்டு மணி நேரத் துக்கு வேலாயுதம் பார்த்துக் கொள்ளு வான்".

"நல்ல மனுஷன்".

"உங்க அப்பா கடையைத் தொடங் கினப்ப மாசம் முப்பது ரூபாய் சம்பளத் துக்கு வந்தவன்!" என்ற அனந்தன், "அப்ப நான் புறப்படறேன்!" என்றார்.

"ஏதேனும் விசேஷம் உண்டா, சார்?"

"உண்டா இல்லியான்னு உன் அம்மாவைப் பார்த்த பிறகுதான் தெரியும்" என்று சொன்ன அனந்தன் சிரித்துக் கொண்டே வெளியேறினார்.

மயிலாப்பூர் பீமண்ண முதலித் தெருவை அடைந்தபோது மணி பத்தே முக்கால்.

"வண்டியை இங்கேயே நிறுத்து, கோபி!" என்றார் அனந்தன். எப்படி அவரால் பழைய எசமானனுடைய வீட்டின் முன் தம் பணக்காரத் கோலத்தைக் காட்டுவார்?

மாலிக்குப் பிதுரார்ஜிதமாக வந்த வீடு. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் கட்டிய சிறு வீடு. அனந்தன் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே முன்னேறி னார்.

கூடத்தில் சாந்தா ஒரு கூடை நாற்காலியில் உட்கார்ந்து பூ தொடுத்துக் கொண்டிருந்தாள். 'பெண் மீனா சாயங்காலம் தலையில் சூடிக் கொள்ள இப்பவே தயார் செய்கி றாளா?'

அனந்தனைக் கண்டதும் சாந்தா ஒரு கணம் திகைத்துப் போனாள்.

"என்ன சாந்தா எப்படியிருக்கே?"

"இருக்கேன்" அவள் எழுந்து, "உட்காருங்க... அகிலி சௌக்கியமா இருக்காளா?" என்று கேட்டாள்.

"எல்லாரும் சௌக்கியம்!" என்ற அனந்தன், "இன்னிக்கு சனிக்கிழமை. இருந்தாலும் எனக்கு அச்சான்னியமாத் தோணலை. எப்படியாவது இன்னிக்குப் பேசிவிடுவது என்ற எண்ணத்தோடு வந்திருக்கேன்" என்றார்.

சாந்தாவின் முகத்தில் ஒருவிதக் குழப்பமும் பயமும் பிரதிபலித்தன.

"மொதல்ல காபி கொண்டு வரேன்".

"வேண்டாம்சாந்தா. உட்காரு".

அனந்தன் மெதுவாகப் பேச்சைத் தொடங்கினார்.

"சாந்தா ஸ்டோர்ஸ் என்கிற ஒரு சின்ன துணிக்கடையை முப்பது வருஷத்துக்கு முன் மாலி தொடங்கி வச்சான். அதை அவனால் பன்னண்டே வருஷம்தான் நடத்த முடிஞ்சுது. அப்புறம் அதை நீ எங்கிட்ட ஒப்படைச்சே. உழைக்கிற கூட்டாளியா நான் வந்தேன். உன் கடைக்கு மாசவாடகை முன்னூறுன்னும் முப்பது சதவிகித லாபம் அல்லது குறைந்த பட்சம் எண்ணூறு ரூபாய் மாச வருமானம் இருக்கணும்னும் சொன்னே முதல் ரெண்டு மூணு வருஷத்துக்குத் தான் கூட்டு வியாபார ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட்டே".

"ஒவ்வொரு வருஷமும் போடா விட்டால் என்னன்னுதான்... மேலும் வருஷத்துக்கு முப்பதாயிரத்துக்குக் குறையாமல் எனக்கு வந்துட்டிருக்கே".

"அது சாந்தா ஸ்டோர்ஸிலிருந்து கிடைக்கிற இலாபம்".

"அப்பமன்னா?"

"சாந்தா சில்க்ஸ் அர்ஜுன பெயர்லேயும் உன் பெயர்லேயும் இருக்கு. அதிலும் முப்பது சதவிகிதம். பிறகு... கார்த்திக் பார்த்துட்டு வர்ற சாந்தாஸ் சில்ட்ரன் அண்ட் லேடீஸ் ஷோ ரூமில் முப்பது சதவிகிதம், இதுதவிர மூர்த்தி இப்ப மானேஜரா இருக்கிற சாந்தா பேலஸில் முப்பது சதவிகிதம்".

"நீங்க என்ன சொல்றீங்க, அனந்தன்? இதுவரை இதையெல்லாம் என்னிடம் சொன்னதே இல்லையே?"

"வேணும்னுதான் சொல்லலே. உன் குழந்தைகள் ஸ்கூல்லேயும் காலேஜிலேயும் படிச்சிட்டிருந்தப்ப சொல்லலே. அவசியம் ஏற்படறப்ப சொன்னால் போதும்னு இருந்தேன். உனக்கு இன்னொரு முக்கிய விஷயத்தையும் சொல்லிடறேன். சாந்தா ஸ்டோர்ஸ லேர்ந்து கிடைக்கிற வருமானத்துக்குத் தான் வருமான வரி கட்டறதாக நீ நினைச்சுட்டிருக்கே! அதான் இல்லை. மத்த மூணு கடைகளிலேர்ந்து கிடைக்கிற வருமானத்துக்கும் வரி கட்டிட்டு வர்றே! ஆடிட்டர் உன் கையெழுத்துகளை வருஷா வருஷம் வாங்கிக்கறது தான் உனக்குத் தெரியும்".

"ஏன் இப்படி ஓர் ஏற்பாடு?"

"மாலி போன சில நாள்கள்ளே மனசு நொந்துபோய் கடையை வித்துடலாம்னு உனக்குத் தோணித்து. கிடைக்கக் கூடிய ஐம்பதாயிரத்தை பாங்கில போட்டு வட்டி மூலம் காலம் தள்ளலாம்னு முடிவு செஞ்சே. அப்ப நான் தடுத்தேன். பணத்தின் மதிப்பு நாளுக்கு நாள் குறையும்னேன். பிறகு உன்னுடைய வருமானத்துக்கு பாதிப்பு ஏற்படாமலிருந்தால் சரின்னு ஒரு முடிவுக்கு வந்து கடையை என் வசம் ஒப்படைச்சே!

எப்பவும் போல உழைக்க எனக்கு எழுபது சதவிகிதம் இலாபம் கொடுக்க உனக்கு தாராள மனசு இருந்தது. அதை நானும் காப்பாத்த வேண்டாமா?

என் வார்த்தையை நான் ஒரு மனுஷனா நின்னு காப்பாத்த ஒரே வழிதான் தெரிஞ்சுது. உழைப்பு. என் சக்திக்கு மீறிய உழைப்பு. வேலாயுதன் ஒருவனை மட்டும் வைச்சுக்கிட்டு மத்த மூணுபேரை அனுப்பினேன். என் அயராத உழைப்பின் பலனை அனுபவிக்க எனக்கு மூணு வருஷமாச்சு. ஆனால் அதற்குப் பிறகு திடீர்னு ஓர் அதிர்ஷ்டப் புயல் அடிச்சுது. சாரதா ஸ்டோர்ஸ் ஒரு தொடக்கம்தான். ஓர் ஊற்று. அதிலிருந்து குபுகுபுன்னு நீர் புறப்பட்டு எனக்குப் பெரிய நதியா வழி காட்டியது. பாங்கும் உதவி செய்தது. மூன்று கடைகள் உருவெடுத்தன. இப்ப உன் பெயரில் எட்டே முக்கால் லட்சம் ரூபாய் இருக்கிறது. உன்னையும் அறியாமல் உன் பணம் வளர்ந்துட்டு வர்றது".

"இதில் எனக்கு உரிமை இல்லை" என்றாள் சாந்தா.

"இருக்கு. ஆதாரமே சாந்தா ஸ்டோர்ஸ். அதாவது நீ! தாய் ஸ்தாபனம் அது. இன்னிக்கும் நான் அங்கேதான் போய் வர்றேன். ஒரு காலத்தில் மாலி உட்கார்ந்திருந்த நாற்காலியில் தான் இப்ப நான் உட்கார்றேன்".

"நீங்க என்ன சொன்னாலும் என் மனசு ஒப்பாது. நீங்க உழைச்சுச் சம்பாதிச்ச பணத்தில எனக்கு ஒரு நாளும் உரிமை இருக்க முடியாது. இருக்கவும் கூடாது".

"இந்த விஷயம் அகிலிக்குக்கூடத் தெரியாது. மீனாவுக்குக் கல்யாண வயசு வந்ததும் சொல்லலாம்னு இருந்தேன். இப்ப அது வந்துட்டதாக எனக்குப் படறது. நீ உன் அந்தஸ்திலிருந்து ஒருபடி இறங்கி வந்தா என் பெண் ராஜி உன் மருமகளாவாள். உன் பெண் மீனா எங்க வீட்டுக்கு விளக்கேற்றவருவாள்".

"அந்தஸ்தா? எனக்கா? என்ன உளர்றீங்க அனந்தன்? இனிமேலும் இறங்கிவரப்படி எங்கே இருக்கு?"

"இருக்கு. நிச்சயமா இருக்கு சாந்தா! நீ என் முதலாளியின் மனைவி. மாலி போனான். ஆனா அவனுடைய அந்தஸ்துபோகலே".

"நீங்க திடீர்னு வந்து என்னென்னமோ சொல்றீங்க. எனக்குக் குழம்பிப் போறது. ஒன்னு மட்டும்தான் புரியறது. எட்டே முக்கால் லட்சம் ரூபாயை நீங்க என் பேர்ல இதுநாள் வரை எனக்குத் தெரியாம சேமித்து வைச்சிருக்கீங்க... வேறு ஒன்னும் புரியலே".

"நீ இப்பவே, இந்த க்ஷணமே பதில் சொல்லணும்னு நான் எதிர்பார்க்கலே. நல்லா யோசனை செய். மூர்த்தி, மீனாவோட கலந்து பேசு. அதற்குப் பிறகு சொல்லி அனுப்பு. நான் வர்றேன்".

அனந்தன் திரும்பினார். சாந்தாவைத் திணற அடிக்கவேண்டும், ஆச்சரியத்தில் அவளை மூழ்கடிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் சென்ற அவர் ஏமாற்றத்துடன் காரில் ஏறினார்.

ஞாயிற்றுக்கிழமை. விருந்து முடிந்து எல்லாரும் ஹாலில் கூடினார்கள்.

"நான் இப்ப முக்கியமான விஷயம் பத்திப் பேசப்போறேன்!" என்று அனந்தன் அறிவிக்க திடீரென நிசப்தம் நிலவியது. அவர் பேச்சைத் தொடங்கினார்.

"ரொம்ப நாளா என் மனசில ஓர் ஆசை இருந்து வர்றது. பிறந்த நாளையே கொண்டாடாதவன் இன்று அதைக் கொண்டாடினேன். ஏன் தெரியுமா? இந்த சந்தோஷத்தின் போதுதான் மற்ற மகிழ்ச்சியான விஷயங்களையும் சொல்றது ரொம்பப் பொருத்தமா இருக்கும்".

"எதுக்கு இவ்வளவு பெரிசா ஒரு பீடிகை?" என்றாள் அகிலி.

அவளைப் பொருட்படுத்தாமல் அனந்தன் தொடர்ந்தார்.

"நான் சாந்தா ஸ்டோர்ஸில் என்னுடைய நண்பனிடம் இருநூறு ரூபாய் சம்பளத்தில் வாழ்க்கையைத் தொடங்கியவன். மாலியின் விதி வசத்தாலோ இல்லை அவனுடைய மனைவி சாந்தாவின் தாராள மனசாலோ இந்தக் கடையில் நான் கூட்டாளியானேன். இதுதான் அஸ்திவாரம். இதை தன்னையும் அறியாமல் போட்டது மாலி. அவனுக்குப் பிறகு கட்டடத்தைக் கட்ட உதவியவள் சாந்தா. நம்ப குடும்பம் அவளுக்கு அவளுடைய குடும்பத்துக்கு ரொம்பவும் கடமைப் பட்டிருக்கு. இதற்குப் பிரதியா நான் இதுவரை எதையும் செய்யலை. என்ன செய்ய உத்தேசிச்சிருக்கேன் என்கிறதை இப்பச் சொல்லிடறேன்".

"சாந்தா மாமிக்கு சிலை எழுப்பப் போறீங்களா அப்பா?" என்று கார்த்திக் கேட்டான்.

அனந்தன் அவன்மீது சாடவில்லை. தொடர்ந்தார்.

"மாலியின் பெண் மீனா நம்பவீட்டு மூத்த மருமகளா வருவாள்!"

"அப்பா!" அர்ஜுன் வீரிட்டான்.

"கொஞ்சம் இரு, அர்ஜுன்!"

"அவன் ஏன் கொஞ்சம் இருக்கணும்? பெரிய பெரிய பணக்காரங்க வீட்லேர்ந்தெல்லாம் ஜாதகம் கேட்டு வர்றாங்க. இன்னும் சொல்லப் போனா டாக்டர் மகேசுவரனுடைய பெண் நந்தினியும் இவனும் கொஞ்ச காலமாப் பழகிட்டு வர்றாங்க. நந்தினி நம்ப வீட்டுக்கு நிறைய தடவை வந்திருக்கா. எனக்கும் பிடிச்சிருக்கு. சமயம் வர்றப்ப உங்ககிட்ட சொல்லிக்கலாம்னு இருந்தேன்!" என்றாள் அகிலி.

"இந்த விஷயம் எனக்கு ஏற்கெனவே தெரியும். டாக்டர் மகேசுவரனே என்கிட்டே சொல்லியாச்சு. அவளை அவர் மேற்படிப்புக்காக அமெரிக்கா அனுப்பப் போறதா சொன்னார்".

"நோ... பொய்... ஹம்பக்!" அர்ஜுன் கத்தினான்.

"அப்படியே இருக்கட்டும்... நான் இன்னும் முடிக்கலே. நம்ப ராஜிக்கும் மாலியின் பிள்ளை மூர்த்திக்கும்..."

அவர் பேச்சை முடிப்பதற்குள் ராஜி விருட்டென்று எழுந்தாள்.

"அப்பா! நீங்க அந்த முதலாளி குடும்பத்துக்கு கடன்பட்டிருந்தா அதை நீங்க உங்க சொந்த முறையில் தீர்த்துக் கரையேறுங்க. நான் இன்னும் ஒரு வருஷத்துல சார்ட்டர்ட் அகௌண்டண்டாக கொடிகட்டிப் பறக்கப் போகிறவள். கல்யாணம் என்கிற வார்த்தைக்கு அர்த்தமே இப்பத் தெரியாம வாழறவ. உங்க சதுரங்கத்திலே நான் என்னிக்குமே பகடைக் காயாக மாட்டேன்".

சொன்ன ராஜி ஹாலை விட்டு வெளியேறி மாடிக்கு விரைய, அர்ஜுன் பின் தொடர்ந்தான். அப்பாவின் கடன் தீர்க்கும் பணியில் தான் சம்பந்தப்படவில்லை என்ற திருப்தியோடு கார்த்திக் மட்டும் அம்மாவையும்

அப்பாவையும் மாறிமாறிப் பார்த்தவனாய் உட்கார்ந்திருந்தான்.

"நீங்க இன்னும் அந்தக் காலத்திலேயே இருக்கீங்க" என்ற அகிலி, "நீங்க உங்க உழைப்பாலே முன்னுக்கு வந்து, கிடைக்க முடியாத பல ஏஜென்சிகளை பம்பாய், ஆமதாபாத்து அலையோ அலைன்னு அலைஞ்சு வாங்கி இன்னிக்கு பங்களாவும் காருமா நல்ல அந்தஸ்தோட இருக்கீங்க. சாந்தாவின் போதாத காலம் அவ அப்படியே இருக்கா" என்றாள்.

"ஒரு விதத்தில பார்த்தா நீங்க அவ கடனை சாகுவதமாத் தீர்த்தாச்சு அப்பா... எல்லாக் கடைகளின் பெயர் களிலும் சாந்தா வர்றா. இது போதாதுன்னாமாலி பெயரிலும் ரெண்டு மூணு கடை வையுங்க" என்றான் கார்த்திக்.

"என் குழந்தைகள் என் சொல்லைத் தட்டமாட்டாங்கன்னு நினைச்சேன்!" என்றார் அனந்தன்.

"கல்யாணங்கறது உங்க பிரச்னை அல்ல அப்பா. எங்க பிரச்னை. உங்க சொல்லும் இந்தக் காலப் போக்குக்கு அனுசரிச்சு ஒரு வரம்புக்குள் இருக்கணும்!" என்றான் கார்த்திக்.

அவனுக்கு என்ன பதில் சொல்லுவது என்று அனந்தன் யோசித்துக் கொண் டிருக்கையில் வாசலில் ஆள் அரவம் கேட்டது. பார்த்தார். சாந்தா குடை யுடன் நின்று கொண்டிருந்தாள்.

அகிலியும் பார்த்துவிட்டாள்.

"இப்பவே சம்பந்தம் பேச வந்துட் டாளா?" என்று தாழ்ந்த குரலில் கூறிவிட்டு சாந்தாவை வரவேற்கச் சென்றாள்.

இருவருமாக ஹாலுக்கு வந்தார்கள். கார்த்திக் எழுந்து மாடிக்குச் சென்றான்.

"வா சாந்தா!" என்றார் அனந்தன். பிறகு "சாப்பிடலாமே!" என்றார்.

"சாப்பாடு முடிஞ்சுதான் புறப் பட்டேன். ஒரு நல்ல செய்தியோட இப்ப வந்திருக்கேன்"

அனந்தன் திடுக்கிட்டார். 'சாந்தா வின் பெண் மீனாவும் பிள்ளை மூர்த்தியும் அவர் முந்தினம் வெளியிட்ட முடி வுக்குச் சம்மதம் தெரிவித்து விட் டார்களா?'

"வர்ற புதன்கிழமை என் பெண் மீனாவின் கல்யாண நிச்சயதார்த்தம். என் நாத்தனார் பிள்ளைதான். வர்ற ஞாயிற்றுக்கிழமை கல்யாணம். மறு நாளே மீனா அமெரிக்கா போறா".

அகிலி, "கேட்க ரொம்ப சந் தோஷமா இருக்கு" என்றாள்.

"மீனா பிறந்தபோதே அவ தன் தங்கை பிள்ளைக்குத்தான்னு அவர் சொல்லுவார். அவருடைய ஆசை நிறைவேற்றது. நீங்க ரெண்டு பேரும் வந்துநடத்தித்தரணும்".

"பருப்பு இல்லாம கல்யாணமா? நாங்க நிச்சயம் உண்டு!" என்ற அகிலி "மூர்த்திக்கும் இனிமேல் பார்க்க வேண்டும்"என்றாள்.

சாந்தா சிரித்தாள்.

"அதற்கு எனக்குச் சிரமம் கொடுக் காமல், அவனே பார்த்துக் கொண்டாகி விட்டது. இப்ப அவன் சாயங்கால வேளையிலே எம்.பி.ஏ. படிச்சுட்டு வர்றான் இல்லியா? அனந்தனுக்குத் தெரியுமே?"

"ஆமாம். கடையிலிருந்து தினமும் போவான்".

"இன்னும் ஒரு மாசத்திலே படிப்பு முடிஞ்சுடும். கூடப் படிக்கிற பெண்ணும் அவனும் கொஞ்ச நாளாப் பழகிட்டு வர்றாங்க. அவ அப்பா பெரிய பணக் காரர். இருந்தாலும் பரவாயில்லேன்னு சொல்லிட்டார். அவனோட கல்யாணம் நிச்சயமானதும் நேர்ல வந்து அழைக் கிறேன்".

"கேட்கவே ரொம்ப ஆனந்தமா இருக்கு, சாந்தா" என்றாள் அகிலி.

"என்னுடைய அந்தஸ்துக்கு ரொம்பவும் மீறின இடங்கள்தான். ஆனா ரெண்டு வீட்டுக்காரர்களும் இதை ஒரு பொருட்டா மதிக்கலே.."

"கொஞ்சம் இரு சாந்தா! உள்ளே போய் காபி கொண்டு வரேன்".

அகிலி உள்ளே போக, அனந்தன், "நாம் ஒன்னு நினைக்க தெய்வம் வேறு ஒன்னு நினைக்கிறது, சாந்தா!" என்றார்.

"நீங்க நினைச்சதை நான் எள்ளிக் குமே நினைச்சதில்லை அனந்தன்.. பிறகு. இன்னொரு விஷயம்.."

"என்ன?"

"என் பெயரில் எட்டேமுக்கால் லட்சம் இருக்குன்னு சொன்னீங்க".

"ஆமாம்".

"எல்லாக் கடைகளிலும் எனக்கு முப்பது சதவிகிதப் பங்கு இருக்குன்னு சொன்னீங்க".

"ஆமாம். இருக்கு".

"எல்லாத்தையும் மாத்தியாகணும். அவர் ஸ்தாபனம் செய்த சாந்தா ஸ்டோர்ஸில் மட்டும் எனக்கு பங்கு இருந்தாலே போதும். எட்டே முக்கால் லட்சத்தை உங்க பெயருக்கே மாத்த நான் எங்கே எப்போ கையெழுத்துப் போடணும்னு மட்டும் சொல்லுங்க போதும்".

"காரணம் என்னன்னு நான் தெரிஞ் சுக்கலாமா?" என்றார் அனந்தன்.

"அவர் உயிரோடு இருந்திருந்தா இது ஒன்னுதான் இருந்திருக்கும். உங்க உழைப்பாலே முன்னுக்கு வந்திருக்கிற நீங்க, இதற்கெல்லாம் காரணம் அவரும் அவருடைய மனைவி நானும்னு மூடத்தனமா நம்பறீங்க. எனக்குப் பணவசதி உங்களைப் போல இல்லைன்னாலும் மானமும் கௌரவமும் இன்னும் இருக்கு. உங்க மூலமா நான் இலட்சாதிபதியா இருக்கிறேன்னு உலகத்துக்குத் தெரியறப்ப அது என்னைப் பார்க்கிற பார்வை, உங்க ளுடைய நன்றி கொட்டும் பார்வையா இருக்காது".

"சாந்தா! இந்தா காபி. சூடு ஆர்றதுக்கு முன்னாடி குடிச்சுடு... ஆமாம் என்ன அப்படி சுவாரசியமா பேசிட்டிருந்தீங்க?" என்று சொல்லிக் கொண்டே அகிலி வந்தாள்.

"அமெரிக்காவில் இப்ப வெயில் காலமா குளிர்காலமான்னு கேட்டேன். சாந்தா, தன் பெண்ணைக் கேட்டுச் சொல்றேன்னா!" என்றார் அனந்தன்.

சாந்தா விடை பெற்றுச் சென்றபிறகு, அனந்தன் நீண்ட நேரம் சிந்தனையில் மூழ்கிப் போனார்.

வியாபார உலகத்தை நன்றாகப் பார்த்துப் பார்த்து புரிந்து கொண்டிருந்த அவர் பார்வையால் எப்படி மனித முகங்களைப் பார்த்து அவர்களது உள்மனங்களைப் புரிந்துகொள்ள முடியாமற் போய்விட்டது!

அவருடைய அறியாமைக்கு என்ன காரணம்? பணமாக இருக்குமோ? ॐ

தர்மத்துக்கும் சாட்சியா?

அவினாசி முருகேசன்

● திருப்பிக் கொடுக்காவிட்டால் கூட கேட்பதற்கு ஆளில்லை என்றாலும், மனசாட்சிக்குப் பயந்து, வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்த பின்னும் சந்தேகப்படும் ஜீவன்களைக் கொங்குத் தமிழில் அறிமுகப் படுத்தியிருக்கிறார்.

அருக்காணி அத்தனை தங்க நகைகளையும் கழற்றிக் கொடுத்தாள்... பெட்டியில் இன்னும் நிறைய இருந்தன. அவற்றையும் எடுத்து நஞ்சப்பனிடம் கொடுத்த போது மனசு கனத்தது.

ஆனால் மனசுக்குச் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் அது இருந்ததென்னவோ உண்மைதான். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியது கடமை - நியாயம் - தர்மமும்கூட! எந்த விதத்திலேனும் அதைத் திருப்பிச் செலுத்தியே ஆகவேண்டும் என்பதில் கணவனுடன் உடன்பாடாகவே இருந்தது குறித்து அவளுக்கே பெருமிதமாகவும்கூட இருந்தது.

"பேங்குல நிச்சயம் அம்பதாயிரம் கெடைக்கும்ன்னு நினைக்கறேன், அம்மிணி..." என்று சொல்லிக்கொண்டே அவற்றை ஒரு துணிப்பையில் போட்டுக் கட்டினான் நஞ்சப்பன். சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு, ஒரு நிமிடம் தயங்கினான்.

"ராகிக்களியும், பண்ணக்கீரையும் கடஞ்சு ஆக்கி வைச்சிருக்கேன், உண்ணுபோட்டுப் போங்க..."

உணவில் அவனுக்கு மனசு கொள்ளவில்லை. இந்த வருஷம் வெள்ளாமையை நினைத்தபோது கவலையாக இருந்தது. வறட்சி! மழையே இல்லை. கரும்பும் நெல்லும் செழிப்பாக இல்லை. போத்தாழை (புகையிலை) வேறு கொஞ்சம் போட்டிருந்தான். அதுவும் 'நோவு' வந்து சாவியாகி விட்டது. பவானியில் தண்ணீர் விடவில்லை; இருந்தால்தானே விடுவார்கள்?

வயக்காட்டைப் போல வாழ்க்கையும் வறண்டு போய்விட்டதா?

இவையெல்லாவற்றையும்விட, தொண்டைக்குழியில் பெரிதாக வந்து அடைத்துக் கொண்டது இன்னான்று! மாரப்பனிடமிருந்து கடனாக வாங்கிய ஐம்பதாயிரத்தைத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். விளைச்சல் இல்லை என்பதற்காக வாங்கியதை ஒத்திப் போட முடியுமா?

கையைக் கழுவிக் கொண்டு எழுந்தான்.

"செருப்புத் தொட்டுட்டுப் போங்க" என்றாள் அருக்காணி.

"சாமீ...சாமீ..."

வெளியில் சென்று பார்த்தான். தலையில் கட்டியிருந்த அழுக்குத் துண்டை அவிழ்த்து இடுப்பில் கட்டிக் கொண்டிருந்தான், அம்மாசை.

"என்னாலும் சேதியா, அம்மாசை...?"

"ஆமாங்க சாமி... வில்ல மரத்தோட்டத்து மாரப்ப ஐயா இன்னிக்குக் காத்தால செத்துப் போயிட்டாருங்க..."

பகீர் என்றது நஞ்சப்பனுக்கு!

மாரப்பனைப் போல நல்ல மனிதர்களை இனிமேல் பார்க்க முடியுமா? கருணை மனசும், பிறருக்கு உதவவேண்டுமே என்கிற சிந்தனையும் உள்ளவரல்லவா அவர்? கேட்டபோதெல்லாம் ஆயிரம் ஆயிரமாக எடுத்துக் கொடுப்பாரே... கொடுத்ததற்கு ஒரு சிறு கையெழுத்துக்கூட மனுஷன் சாட்சியாகப் பெற்றதில்லையே...

ஒரு ரூபாயா, ஐந்து ரூபாயா? ஐம்பதாயிரத்தை அல்லவா எந்த வித சாட்சியும் இல்லாமல் கொடுத்திருக்கிறார்!

அவர் தெய்வம். அதுதான் தெய்வமாகிவிட்டார்.



நெஞ்சு அடைத்தது! எதுவும் சொற்களாகப் பேச வரவில்லை நஞ்சப்பனுக்கு!

"பாத்தியா அருக்காணி... நமக்குக் கஷ்டகாலம் வந்தப்பல் லாம் இல்லைங்காமே குடுத்து ஒபகாரம் செய்த மனுஷனை சாமி கூப்பிட்டுட்டாரு...முருகா..."

"நீங்க மொதல்லே பேங்குக்குப் போங்க... நகையெல்லாம் வச்சுப் பணம் வாங்கி அவரோட மகன் கோபாலுகிட்டே குடுத்துட்டு வந்து ருங்க. அதான் ஞாயம்" என்றாள் அருக்காணி.

பேங்கிலிருந்து திரும்பியபின் பஸ் பிடித்து நேராக மாரப்பனின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது இருட்டிவிட்டது.

வெளியில் பெரிதாக 'பூப்பந்தல்' ஒன்று தயாராகிக் கொண்டிருந் தது. பெஞ்சுகளும், இரும்பு நாற் காலிகளும் நிறையப் போடப்பட் டிருந்தன.

உள்ளே அழுகுரல் கேட்கிறது உண்மையாக அழுகின்றவர்களும், அழுவதைப்போல நடிப்பவர் களும், அந்தச் சோகத்திலும், எதையோ வெடிப்பாகப் பேசிச் சிரிப்பவர்களும், முகம் தொங்கிப் போய் சோகத்தைப் பிரகடனப் படுத்திக் கொண்டவர்களும், வந்து விட்டதற்கு அடையாளமாக 'ஆஜர்' கொடுப்பவர்களும்... என்று அந்த வீடு இருந்தது.

நேராக கோபாலன் இருக்கு மிடத்துக்குச் சென்றார் நஞ்சப்பன். துணி மூட்டையாகக் கட்டப்பட்ட பணம் கனத்தது.

"தம்பி! கொஞ்சம் இப்படி வர்றியா?"

"ஐயன் (தந்தை) இப்படிச் செய்துட்டுப் போயிட்டாரு..." என்று கோபாலன் அழுதான். கண்கள் சிவந்திருந்தன.

"தம்பி...! ஐயன்கிட்டே நான் கொஞ்சம் பணம் வாங்கியிருந் தேன். அதை இந்த நேரத்திலே உனக்குக் குடுக்கிறதுதான் நல்லது. ஏன்னா உனக்குச்செலவு நெறைய இருக்கும். இதுலே ஐம்பதாயிரம் ரூபா இருக்கு... பத்திரமா எடுத்து வச்சுக்க..."

உரியதை உரியவரிடம் சேர்த்த பின்தான் மனசுக்கே தெம்பு வந்தது. நியாயங்களை உரிய முறையில் செய்துவிட்டாலே மனம் நிம்மதியடையும் என்பதை உணர்ந் தார், நஞ்சப்பன்.

மறுவாரம், மாரப்பனுடைய வீட்டிற்குச் சென்றபோது, வீட்டுக் குள் நாலைந்து பேர் சத்தம்போட்டு விவாதித்துக் கொண்டிருப்பதைக் கேட்டார் நஞ்சப்பன்.

கோபாலனுடைய குரல் தெளி வாகக்கேட்டது.

"அப்பா ஒரு பைத்தியக்காரர்... கண்டவனுக்கெல்லாம் பணத்தை எடுத்துக் குடுத்திருக்கார். ரசீதும் இல்லை; ஒரு மண்ணும் இல்லை. எத்தனை பேர் 'வாயிலே' போட்டு கிட்டாங்களோ அந்த ஆண்ட வனுக்குத்தான் வெளிச்சம். நஞ் சப்பன்கூட போன வாரம் அப்பா கிட்டே வாங்கினதுன்னு கொஞ்சம் பணம் குடுத்தார். யாரு கண்டா? அதிகமா வாங்கிட்டுத் திருப்பிக் குடுக்கும்போது கொறைவாக்கூடக் குடுத்திருக்கலாம். அதுக்கெல் லாம் ஏது சாட்சி? எவனையும் நம்பக்கூடாது. எல்லாம் திருட்டுப் பசங்க..."

நஞ்சப்பனுக்குத் 'திக்'கென்றது.

தர்மம் என்பது தர்மமாக மதிக் கப்படக்கூட, அந்த தர்மத்திற்கும் ஒரு சாட்சி வேண்டியிருக் கிறதே என்று விசனப்பட்டாரோ என்னவோ...? ஃ

மனிதனைத் தேடுகின்றேன்!



பொற்கிழிக் கவிஞர்
பஜ்ரீ க. சகருலால்

முகத்திலே தாமரைப்பூ
முறுவலைக் காட்டு கின்றான்
அகத்திலோ அறிய வொண்ணா
ஆயிரங் கோணல்; இந்தச்
செகத்தையே வெல்லு மாப்போல்
சிரிப்பலை கொழிக்கும் என்றும்
அகத்திலும் மலர்ந்து நிற்கும்
அவனைநான் தேடு கின்றேன்.

பேச்சிலே இனிமை கொட்டும்
பின்னவன் இழைக்கும் நாசி
முச்செலாம் வஞ்சம் வெட்டும்
முனைப்பெலாம் கொடுமை; பேசும்
பேச்சினைப் போலத் தூய்மை
பொங்கிட நெஞ்சந் தன்னை
ஒச்சிடும் மனித னான
ஒருவனைத் தேடு கின்றேன்.

மற்றவன் உயர்ந்தால் உள்ளம்
மகிழ்பவன் இருக்கின் றானா?
மற்றவன் வழுக்கி னால்கை
வழங்குவோன் வாழ்கின் றானா?
மற்றவன் புகழில் சொந்த
வயிறெரிந் திடாமல் வாழக்
கற்றவன் தன்னைக் கண்ணாற்
காணநான் தேடு கின்றேன்.

சிரிக்கிறான் விரியு மந்தச்
சிரிப்பிலே வஞ்சப் பாயை
விரிக்கிறான் நல்லோர் தம்மை
வீழ்த்தியே மகிழு கின்றான்
விரித்திடும் நாட கத்தில்
வஞ்சனே வெற்றி காண்பான்
சிரித்திடும் பண்பு கொஞ்சும்
செல்வனைத் தேடு கின்றேன்.

சங்கரர் கண்ட ஷண்மதம்


ஜீவாத்மனும் பரமாத்மனும் ஒன்றே என்பதாக ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதர் கண்ட அத்வைதம் ஆன்மப் பக்குவமிக்க வெகு சிலராலேயே அனுசரிக்கவும் அநுபவிக்கவும் முடிவது. எனவே அவர் அனைத்து மக்களுக்கும் ஆசான் என்ற முறையில் 'ஜகத்குரு' விருது பெற்றது அத்வைதத்தை ஸ்தாபித்ததால் அல்ல. உணர்ச்சி பூர்வமாக பக்தி புரிவதே சர்வ ஜன சாத்தியமான நெறி. ஞான அத்வைத ஆசாரியரே இப் பக்தி நெறிக்கும் புத்துயிரூட்டி பாரத மக்களனைவரையும் அதில் நிலை நிறுத்தியதாலேயே ஜகத்குரு எனப் பட்டார். அவைதிகமான பௌத்தம், சமணம் முதலான மதங்களை வாதத்தால் வென்று வைதிக மதத்திற்கு மறு மலர்ச்சியூட்டிய அவர், பக்தி வழியில் காபாலிகர், வாமாசார சாக்தர், தாந்திரிக வைஷ்ணவர் முதலியோர் புகுத்தியிருந்த கொடூரங்களையும், ஆபாசங்களையும் அறவே களைந்து அதனை ஸாத்விகமான அன்பு வழியாக அழகுற அமைத்துத் தந்தார்.

அனைத்துத் தெய்வங்களுக்குமே அவர் இவ்வாறு வைதிகமான வழி பாட்டைப் புனர் நிர்மாணித்துக் கொடுத்தபோதிலும், அவற்றில் பிரதான மான ஆறு தெய்வங்களுக்கான சமயங் களை (அல்லது பொதுவான ஒரே வேத சமயத்தின் ஆறு கிளைச் சமயங் களை)ச் சீரமைத்துத் தந்ததையே குறிப் பாகக் கருத்தில் கொண்டு அவருக்கு 'ஷண்மத ஸ்தாபனாசாரியர்' என்ற விருதும் சூட்டப்பட்டுள்ளது. சிவ பெருமான், திருமால், அம்பிகை, விநாயகர், முருகன், சூரியன் ஆகிய அறுவரே ஷண்மதத் தெய்வங்கள். முறையே இவ்வறுவருக்கான ஆறு சமயங்கள் சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், ஸௌரம்என்பனவாகும்.

ஜீவாத்மனுக்கு வேறாக ஒரு கடவுளை பக்தி செய்யவேண்டிய அவசியம் சங்கரருக்கு இல்லாவிடினுங்கூட, அவர் தாமுமே ஒவ்வொரு தெய்வத்திடமும் பக்தியில் நன்கு ஆழங்காற்பட்டு, எல்லாத் தெய்வங்களின் மீதும் உள்ளு ருக்கமும் கவியெழிலும் மிளிரும் அற்புதத் துதிகள் அருளியிருக்கிறார்.

பக்த கவி சங்கரர் ஷண்மத தெய் வங்கள் குறித்துக் கண்ட ரஸச் செறிவு மிக்க புதுமைக் காட்சிகளில் ஆறினை நாமும் கண்டு களிக்க ஓவிய மடல் படைக்கிறார் விநு.

1. காணபத்யம் : பொருத்தமாகப் பிள்ளையாரப்பனில் தொடங்குகிறோம். 'கணேச புஜங்கம்' விரிக்கும் காட்சி. பெருமானின் செவ்வண்ணத்தைச் செம் பருத்தி, ரத்தம், ரத்தினம், குங்குமப்பூ, பவளம், உதய சூரியன் ஆகிய அனைத்



துடனும் ஆசாரியர் உவமிக்கிறார். 'புஜங்க'த் துதி என்பதற்கேற்ப அவனது பேழை வயிற்றில் அரவம் அரைஞாணாக விளங்குவதைக் கூறுகிறார். தந்தை யைப் போலவே தனயனும் பிறைமதி சூடியிருப்பதைச் சொல்கிறார். இங்கு அவர் தரிசனம் செய்து வைப்பது நர்த்தன விநாயகர். பாதச் சிலம்பு பல இசைபாட, அப் பாதத்தாலேயே தாள மிட்டு நடனம் புரியும் கூத்தாடும் பிள்ளையாராகக் காட்டுகிறார். இதி லெல்லாம் அழகிருந்தாலும் புதுமை இல்லை. புதுமை இத் துதியின் இரண்டாம் சுலோகத்தில் இனிக்க விரிகிறது. சங்கரரின் விநாயகர் நர்த்தன கணபதியாக இருப்பதோடு கீர்த்தன கணபதியும் ஆவார் என்று இங்கே காண்கிறோம். ஆம், வீணாதர விநாயகராக அவர் விளங்குகிறார். அதிலும், வீணை வாசிக்கும் கோலத்தில் இன்றி, அதனிலும் ஆழமும் நுட்பமும் கொண்டதொரு கோலம்! மீட்டு முடிந்தாகி விட்டது. ரீங்காரம் மௌனம் நோக்கிப் படர்கிறது. ஓங்கார வடிவன் அதிலேயே சொக்கி லயித்து விடுகிறான்.

பக்தித் துதியாயினும் ஆட்டம் யாவும் சாந்தத்தில் அடங்குவதை, ஸ்வரங்கள் யாவும் மௌனத்தில் நிறைவதைப் பாங்காகக் காட்டி விடுகிறார் அத்வைத வேந்தர்.

2. கௌமாரம்: ஆனைமுகனை அடுத்து ஆறுமுகன். உடனே 'சுப்ர மண்ய புஜங்கம்' நினைவு வரலாம். ஆனால் முருகனுக்கேயான புஜங்கத் திலும் அவனைப் பற்றி ஆசாரியாள் கூறாத இரு புது விவரங்களை அவரது 'சிவ பாதாதி கேசாந்த ஸ்தோத்திர'த் திலேயே காண்கிறோம்.

சிவபெருமானை அடியிலிருந்து முடிவரை அங்க அங்கமாக வர்ணிக்கு முன் ஆசார்யாள் அவனது வாச ஸ்தானம், ஆயுதங்கள், பரிவாரம் ஆகிய வற்றை வர்ணனை செய்கையில் எட்டாவது சுலோகத்தில் முருகனைப் போற்றுகிறார். இங்குதான் இரு புதுமைகள்.

சக்தியின் தொடர்பின்றிச் சிவனிட மிருந்து உதிக்கும் மகவுதான் தன்னை வதைக்க முடியும் என்று சூரபத்மாசுரன் வரம் பெற்றிருந்தான்; ஆகையாலேயே ஐயன் நான்கு திசைகளுக்கு நான்கும், மேல்நோக்கி ஒன்றும், கீழ்நோக்கி ஒன்றுமாகத் தனக்குள்ள ஆறு முகங் களின் நெற்றிக் கண் பொறிகளி லிருந்தே குமரப் பெருமானைத் தோன்றச் செய்தான் என்று கதை.



ஆனால் சிவசக்தி தம்பதியர் இருவரின் தேஜசுகளுமே ஒன்றுக்கூடித் தேவர்களின் புண்ணியப் பயனாக சுப்பிரமணியமாயிற்று என்று இங்கே ஆச்சாரியாள் கூறுகிறார்.

இதிலொன்றும் புதுமையிலலை என்று பண்டிதர்கள் கூறலாம்.


'பஞ்சமுகன் என்றே பெயர்கொண்ட சிவபெருமானுக்கு உரியவை நாற்றிசைகளையும், மேற்புறத்தையும் நோக்கும் ஐந்து முகங்கள்தான். கீழ் நோக்கும் அதோ முகம் உண்மையில் அவனது உள்ளிலங்கும் சக்தியுடையதே' எனலாம். ஆனால் இன்னொரு புது விவரமும் இங்கு காண்கிறோமே! மலை வடிவாக நின்ற கிரௌஞ்சாஸுரனை முருகன் வேலாயுதம் வீசி அழித்தானென்பது பிரசித்தம். அவன் குன்றுருவ வேல் வாங்கி நின்றதை ஆசாரியாளுமே ஸுப்ரம்மண்ய புஜங்கத்தில் சுட்டியிருக்கிறார். அவனது சக்தியாயுதத்தின் (வேலின்) தீட்சணமான நுனியால் தமது இடர்யாவும் கடியுமாறு பிரார்த்திக்குமிடத்தில், "கிரௌஞ்ச மலையைப் பொடி செய்தவனே!" (சூர்ணித க்ரௌஞ்ச சைல) என்ற விளியால் இதனை உணர்த்தியிருக்கிறார். அவரே இங்கு அந்த வேலனை வில்வீரனாக்கி, அவன் சாணை தீட்டிய அம்பு முனையால் கிரௌஞ்சத்தைத் துளைத்ததாகச் சித்திரிக்கிறார்!

இதற்குமுன் சிவபெருமானின் ஆயுதங்களில் முதன்மை ஸ்தானத்தைப் பினாகம் என்னும் அவனது வில்லுக்கே ஆசாரியாள் அளித்துச் சிறப்பித்திருப்பதைக் கண்டே வேலாயுதனும் வில்லாயுதனாக அவருக்குத் தரிசனம் தந்திருப்பானோ? அல்லது தனது ஸ்வரூபத்திலேயே சக்தியின் தேஜசும் சேர்ந்திருக்கிறதென அவர் காட்டிவிட்டதால் கையில் சக்தியாயுதம் வேண்டாமென்று தனுசைத் தாங்கி நின்றானோ?

---

3. சாக்தம் : குழந்தைத் தெய்வங்களிருவரையும் கண்டபின் அன்னையைக் காணச் செல்கிறோம்.

அழகும் அறிவும் அருளும் ஆதிக்கமும் ஒருங்கிணைந்த ராஜராஜேச்வரியாக அன்னை விளங்குகிறாள். நவாவரணக் கிரமப்படி அவளுக்கு ஆசாரியாள் அதியற்புதமான மானசிக வழிபாடு செய்து, அதை நம் பொருட்டாக வாக்கு வழிபாடான துதியாகச் செய்து தருவதில் மலரலங்கார கட்டம். முதலில் சம்பக புஷ்பங்களை அம்பிகைக்குச் சமர்ப்பிக்கிறார். முடிவில் ஜாதி மல்லியும் மகிழம்பூவும் மகிழ்ச்சி



யுடன் சூட்டப்போகிறார். இடையில் தான் புதுமை!

அவரது அகக் கண்ணில் தாழம்பூ வருகிறது. அதைத் தாமே நேராக அம்பிகைக்கு அணிவிப்பதில் சுவாரஸ்யமில்லை என்று ஆசாரியாள் காண்கிறார். ஆதி சங்கரர் என்று பிற்காலத்தில் பெயர் பெறப்போகும் தமக்கும் ஆதியான கைலாஸ சங்கரனே தேவிக்கு அத்தாழை மலரைச் சூட்டுவது தான் அழகு எனக் கருதுகிறார். ஏன்?

தாழை சிவபெருமானால் பிரஷ்டம் செய்யப்பட்ட பூ. ஆதியந்தமில்லாத அண்ணாமலையானாக அவன் நின்றபோது அன்னப் புள்ளாகி முடிதேடிய பிரமன் அதைக் கண்டுவிட்டதாகப் பொய் சொன்னானே, அப்போது சிவ சிரசிலிருந்து விழுந்த தாழம்பூ அவனுக்குச் சாதகமாகப் பொய்ச்சாட்சி சொல்லிற்று. எனவே அதனைத் தனக்கு உகவாத மலர் என்று ஈசன் ஒதுக்கிவிட்டான். இப்போது அம்பாள் அழகுருவாகப் புஷ்பாலங்காரத்திற்கென அமர்ந்திருக்கிறாள். பக்கத்திலேயே பொன்வண்ணத் தாழம்பூ இன்மணம் பரப்புகிறது. அழகுக்கு அழகு செய்வதாக அது அவளது கூந்தலுக்குச் சென்று சேர வேண்டுமென்று ரசிக ராஜனான சிவபெருமானால் எண்ணாதிருக்க முடியுமா? இதைப் பயன்படுத்திக் கொண்டு ஆசாரியாள் ஓர் அன்புச் சூழ்ச்சி செய்கிறார். 'நாம் இம் மலரை அன்னைக்குச் சூட்டாமலிருப்போம். அதனால் ஈசனே அதனை அவளுக்குச் சூட்டுமாறு ஆகும். நமக்கு ஒரு தீஞ்சுவைக் காட்சி கிட்டுவதோடு, ஸ்வாமிக்கு அந்த மலரிடமுள்ள பகையுணர்ச்சியும் நீங்கும்' எனக் கவியுள்ளமும், அருள் மனமும் கொண்ட அவர் முடிவு செய்கிறார்.

அவ்வாறே நடக்கிறது. பரமன் தாழம்பூவிடம் விரோதபாவத்தை விட்டு அதை எடுத்து அம்பிகையின் திருமுடியில் சந்திரப் பிறை போலச் சூட்டுகிறான்.

"திரிபுரஸுந்தரீ மானஸ பூஜா ஸ்தோத்திரம்" (சுலோகம் 100) இக் காட்சியை நமக்கு வழங்குகிறது.

ஈசனைப் போல அம்பிகையும் இயல்பாகவே பிறைமதி சூடியவள்தான். அவ்வாறிருக்க அவன் தாழம்பூவை அந்த ஸ்தானத்தில் சூட்டியதாக ஆசாரியாள் கூறுவானேன்? சந்திரன் செய்த பிழையை மன்னித்தே ஈசன் அவனைத் திருமுடியில் தரித்தான். இப்போது தாழம்பூவின் பிழையை மன்னிக்கையில் அதனைத் தன்னில் பாதியான அவளுக்குப் பிறையலங்காரமாகத் தருவதே பொருத்தமென்று கருதியிருக்கக்கூடும் தானே?

---

4. சைவம் : அன்னையை மையமாகக் கண்டதையொட்டி அப்பனை நடுநாயகமாகக் காண்கிறோம்.

பரமேச்வரன் விசுவநாயக சிம்மாஸனாதிபதியாகவே அமர்ந்திருக்கிறான்.



காலனை வென்று நம்மை அமிருத தத்துவத்தில் சேர்க்கும் மிருத்யுஞ் ஜயனாக ஜயனை ஆசாரியாள் மானஸிக வழிபாட்டினால் உபசரிக்கி றார். பூஜாவிதிப்படி தியானம், ஆவா ஹனம், ஆஸனம் எனத் தொடங்கி அபிஷேகம் முடித்து அலங்காரமும் செய்தாகிவிட்டது. மயானவாசியாக இன்றி ராஜராஜனாகவே அவனுக்கு ஆசாரியாள் அலங்காரம் செய்துவிட் டார். மாணிக்கச் சிம்மாதனத்தில் சர்வாலங்கார பூஷிதனான விசுவ நாயகன் அமர்ந்திருப்பதைக் கண்ட வுடன், அப்போதே அவனது ராஜரிக கௌரவத்திற்கேற்ப இரட்டைச் சாமரம் வீசவேண்டுமென்று ஆசாரியாளுக்குத் தோன்றியிருக்க வேண்டும். அதனால் தான் பூஜா விதிகளின்படி தூப, தீப, நைவேத்தியாதிகளுக்குப் பிறகே வர வேண்டியசாமர உபசாரத்தைத் தமது 'மிருத்யுஞ்ஜய மானஸிக பூஜா ஸ்தோத்திர'த்தில் இங்கேயே கொண்டு வந்துவிடுகிறார்! விதிப்படியே சகல மும் செய்யும் ஆசாரியரும் விதிக்கு மாறாகச் செய்யுமளவுக்கு அந்த மானசிக பூஜையே பிரத்தியக்ஷமான அநுபவ வேகத்தைக் கொடுத்திருக் கிறது!

அம்பாளை அலங்கரித்தபோது தாழம் பூவைத் தாம் சூட்டாமல் ஈசனைக் கொண்டு சூட்டச் செய்தாரல்லவா? இப்போது ஈசனுக்கு இரு மருங்கும் இருவர் சாமரம் வீச வேண்டியிருக்கும் போதும் ஆசார்யாள் விலகிக் கொள் கிறார். துறவியான தாம் விலகிக் கொண்டு, அந்த விசுவநாதனுக்கேற்ற புதல்வர்களான பூத கணநாயகனாம் விநாயகனையும், தேவ சேனாநாயக னாம் முருகனையும் கொண்டே சாமரம் இரட்டச் செய்து, அருமையிலும் அருமையான அக்காட்சியின் பார்வை யாளராகி மகிழ்கிறார்.

இக் காட்சியில் அம்பிகையும் சேர்ந்து அது மேலும் மாட்சி கொள்ளும் விதத்தில் நமது ஓவியர் ஒன்று செய்திருக்கிறார். பூஜாக்கிரமத்தை ஆசாரியர் முன்பின் மாற்றியது போலவே இத்துதியின் கடைப்பகுதியில் வரும் ஓர் இனிமையை இங்கேயே ஓவியர் இணைத்திருக்கிறார். பூஜை முடிவில் ஈசன் சயனிக்கச் சாய்கையில் அம்பிகை அவனது திருவடிகளைப் பிடித்துவிடுவதாகத்துதியில் வருகிறது.

மிருத்யுஞ்ஜயனாகக் காலனை உதைத்த அந்தக் காலைக்கற்பரசியான அன்னை பிடித்துவிட அதுவரை காத்திருப் பானேன் என்று இங்கேயே அம்மதுர நிகழ்ச்சியையும் நமது மடலில் கண்டு இன்புறுகிறோம்.

5. வைஷ்ணவம்: சிவகுடும்பம் முழுதும் தரிசித்தாயிற்று. ஜீவ – பிரம்ம அபேதமே கண்ட சங்கரர் சிவ – விஷ்ணு அபேதமும் கண்டவரல்லவா? இன்னும் சொல்லப் போனால், அவ ருடைய இஷ்ட தெய்வமே திருமால்தான் என்றுகூட ஒரு வாதம் உண்டே! இதோ அவரது "விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்திரத்"திலிருந்து ஓர் அமுத தரிசனம் பெறுவோம்.

முதலில் பெருமாளைப் பார்த்து அதில் சிவ சமரஸத்தை ரஸியுங்கள். அவனது நெற்றியில் கர்ப்பூர திலகம், சிரத்தில் மணி மகுடம் இரண்டுமே லிங்க வடிவில் இருப்பதாக ஆசாரி யாள் வர்ணித்தவாறு இருப்பதைக் கவனியுங்கள்.



இனி ஓவிய நிகழ்ச்சியைப் பார்ப் போம்.

பெண்பாலாகக் கொள்ளும் எந்த ஒரு வஸ்து தன் நாயகனிடம் தொடர்பு கொண்டாலும் நாயகி அதனிடம் சக்களத்திக் காழ்ப்பே கொள்வாள் என்று இலக்கிய மரபு. இதற்கு தெய்வ நாயகிகளும் விலக்கல்ல. கங்கையிடம் பார்வதிக்குள்ள பொறாமை தெரிந்த விஷயந்தானே? இவ்வாறே திருமால் திருக்கரத்தால் பற்றியிருக்கும் கௌமோதகி என்ற பெண்பால் பெயர் கொண்ட கதாயுதத்திடம் லக்ஷ்மிக்கு அசூயை பற்றிக் கொண்டு வருவ தாகக் கூறுவர். ஆனால் பகை யுணர்வைப் போக்குவதிலேயே மகிழும் ஆசாரியாள் இப் பாதாதி கேசாந்தத் துதியில் கௌமோதகியை விஷ்ணுபத்னி யாகவே வர்ணித்த போதிலும் பெரிய பிராட்டியின் பொறாமை பற்றிக் கூற வில்லை. மாறாக, அவளுக்குப் போட்டி யாக மாலவனின் மார்பகத்திலேயே இடம் பெற்ற மறுவான ஸ்ரீவத்ஸத்தை அவள் தன் மகவாகவே கருதி அன்பு செய்வ தாகவும் கூறியிருக்கிறார். ஆனால் இதனைப் புதுமையாகச் சொல்வதற் கில்லை. ஏனெனில் 'ஸ்ரீ வத்ஸ' என்ற பெயரே 'திருமகளின் மகவு' என்று பொருள்படத்தானே செய்கிறது? மேலும் ஸ்ரீவத்ஸமென்பது பெண்பால் பெயருமல்லவே!

புதுமை எங்கே என்றால் வைஜயந்தி மாலா என்று பெண்ணாகவே நன்கு உருவகிக்கப்படும் திருமாலின் வெற்றி மாலை விஷயத்தில்தான். பெருமானின் தடந்தோளைச் சதாகாலமும் தழுவி நிற்கும் அம் மாலையை 'சோபை உடையது', 'விஷ்ணு பத்தினி' என்ற இரு பொருளும் பொருந்தக் 'காந்தா' என்றே ஆசார்யாள் குறிப்பிடுகிறார்.

துளசி, மல்லிகை, மந்தாரை, பாரி ஜாதம், தாமரை ஆகிய ஐந்தினால் தொடுக்கப்பட்டு நாராயணனொரு வனுக்கே உரித்தானது வைஜயந்தி ஹாரம். அது நுனிகளை முடியாமல் விட்ட 'தொங்கல்' எனப்படும் தொங்கு மாலையாகும். எனவே திருமாலின் பெருந்தோளில் சதாவும் சார்ந்திருந் தாலும் காற்று வீசுகையில் அது சற்று முன்னும் பின்னுமாக ஆடும் அழகையும் ஆசாரியக் கவி கூறுகிறார்.

இவ்வளவு கொண்டாட்டமடிக்கும் அந்த விஷ்ணு காந்தையிடம் பெரிய பிராட்டி பொறாமைப் படாதது மட்டுமல்ல. அதனைக் கொஞ்சவே செய்கிறாள் என்கிறார் அன்புமன ஆசாரியர். "மாலா மா லாலிதா!" செல்வநாயகியால் செல்லம் கொடுக் கப்பட்ட மாலை என்று அழகுறப் பதப்பிரயோகம் செய்திருக்கிறார். ஐயனின் திருமேனி ஸ்பரிசம் மட்டுமே பெற்ற ஹாரத்தைத் தாயார் தனது திருமுகத்திலேயே ஒற்றிக் கொண்டு மேலும் பாவனம் செய்வதை ஓவியத்தில் காண்கிறோம்.

6. ஸௌரம் : 'விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்திர'த்தை முடிக்கும் போது ஆசார்யாள் அத்துதியை ஆனந்தமாக கானம் செய்து திருமாலின் திருவடி தொழுபவன் பாபம் யாவும் விலகிப் பஞ்சபூத சரீரம் சாய்கையில் சூரிய மண்டலத்திலுள்ள பரமாத்மனைச் சேர்கிறான் என்கிறார். அதற்குப் பொருத்தமாக நாமும் அடுத்து இம் மடலின் முடிவாக சூரிய தரிசனமே பெறுகிறோம்.

ஆசார்யாள் ஸ்தாபித்த ஷண்மதங்களில் சூரியனுக்குரிய ஸௌரமும் ஒன்று என்பதற்குப் பல சான்றுகள் உள்ளபோதிலும், விந்தையாக, அவர் செய்ததாக சூரியத் தோத்திரம் ஏதுமே கிடைக்கவில்லை! ஆயினும் ஒவ்வொரு தெய்வத்திற்குமான வழிபாட்டு முறையை அவர் விவரித்துக் கூறும் 'பிரபஞ்சஸார தந்திரம்' என்ற நூலின் பதினான்காம் படலம் முழுமையையும் ஆதித்தன் ஆராதனைக்கே அவர் ஒதுக்கியிருப்பதால் அதிலுள்ள தியான சுலோக வர்ணனையோடு நாம் திருப்தியடைய வேண்டியிருக்கிறது.

சங்கரர் காட்டும் சூரிய பகவன் செந்தாமரை மலருள் அமர்ந்த திருக்கோலத்தில் விளங்குபவன். நாற்கரம் கொண்டவன். அவற்றில் மேலிரண்டிலும் தாமரை தாங்குபவன். மற்ற இரு கரங்களால் அபய, வரதம் அருள்பவன். இவன் சூரிய நாராயணனாக மட்டுமின்றி, சிவசூரிய நாராயணனாக நெற்றியில் மூன்றாம் நேத்திரம் படைத்தவனுமாவான். தன்னுடைய கிரணங்களாலேயே தன்னைச் சூழ ஜோதி



மண்டலம் பரப்பிக் கொண்டவன். அவன் அனைவரையும் வியாதிகளிலிருந்தும் வியாகுலங்களிலிருந்தும் காப்பாற்றட்டும் என வேண்டுகிறார் அருளாளரான ஆசாரியாள்.

'சஸ்பென்ஸ்' வைப்பதில் சதுரரான ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகள், 'ஆசாரியாள் வெட்கத்தினால்தான் சூரியனைக் குறித்துத் தனி ஸ்தோத்திரமெதுவும் செய்யவில்லை' என்று புதிர் போட்டு விட்டுப் பின்னர் ஒரு புதுமை விவரம் கூறினார்கள். கைலாச சங்கரரின் அவதாரமே காலடி சங்கரர் என்று பொதுவாகக் கூறினாலும், ஸௌர புராணம் அவரைச் சூரியனின் அவதாரமாகவே கூறுகிறது என விளக்கினார்கள். தன்னையே துதித்துக் கொள்ள வெட்கப்பட்டே ஆசாரியாள் சூரியனைப் பற்றிப் பாடவில்லையாம்!

ஞானத்தை ஜோதியாகவே கொள்கிறோமாதலால் சிவ பெருமான் சூரிய ஜோதி வாயிலாகச் சங்கராவதாரம் செய்தானென்று இணைத்துக் கொள்ளலாம். ஞான குரவர் வரிசையிலும் சூரியனுக்குத் தலையாய இடமிருக்கிறது. கிருஷ்ண பரமாத்மா ஆன்ம வித்தையை சிருஷ்டித் தொடக்கத்திலேயே தாம் சூரியனுக்கு உபதேசித்ததாகவும், பிறகு அந்த சூரியகுரு மூலம் மநுவும், மநு வழியே சூரியகுல மன்னர்களும் பரம்பரைக் கிரமத்தில் அதைக் கற்றதாகவும், காலப் போக்கில் அது மறைந்துவிட்டதாலேயே தற்போது தான் அதனை அர்ஜுனனுக்கு மீண்டும் உபதேசிப்பதாகவும் கூறுகிறான். யாக்ஞவல்கிய மஹரிஷிக்கும் ஆஞ்சநேயப் பெருமானுக்கும் சூரியன் குரு என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசார்யாளின் நேர் சீடர்களான சுரேச்வரரும் தோடகரும் அவரை 'சங்கர பானு' என்றும் 'அஹிமாம்சு' என்றும் சூரியனாகவே போற்றுவது சிறப்புமிக்க அவதாரச் சான்றாகும். அவர் வாழ்க்கையை முடிக்கையில் விஷ்ணு பாதாதி கேசாந்தத் துதியை ஓதி விஷ்ணு பதத்தின் வாயிலான சூரிய பிம்பத்துள்ளேயே புகுந்ததாகக் கூறுமளவுக்கு 'கோவிந்த நாதீயம்' என்ற சங்கர சரிதம் சென்று விடுகிறது!

வானச் சோதியான ஆதவனை ஞானச் சோதியான ஆசானாக இணைத்துக் காட்டி நமது ஒளிவிழா மடல் நிறைவுறுகிறது.

மழையாய் நம் தருவீர்!

வானம் முழக்கிடும் ஆராரோ
வான்மழை பெய்திடும் ஆராரோ

கானம் இசைத்திடும் மேகமெலாம்
கனமழை கொட்டிடும் ஆராரோ!

மயிலினம் மகிழ்ந்திடும் ஆராரோ
மயிற்பீலி விரிந்திடும் ஆராரோ
தேன்மழை பொழிந்திடும் ஆராரோ
தண்டபாணி தெய்வமும் வருவாரோ!

வையாபுரி எனும்பதி ஆண்டவராம்
வையத்தில் கொடைக்குப் பேகனையே;

வண்ணமாம் மயிலதன் ஆட்டத்தினை
வள்ளலாம் பேகனும் கண்டதுமே

எண்ணியே போர்வையை மயிலுக்கென
எடுத்திங்கு போர்த்திய பேகனடா!


கொங்குநாட்டினை ஆண்டிருந்து
கொடையில் சிறந்தே விளங்கியவர்


மங்காக் குறுநில மன்னர்களே
மண்ணில் வள்ளலாய் நின்றவராம்!

மனத்தைக் கொண்டிங்கு மனிதநிலை
மலையாய் உயர்ந்திடும் அறிவீரே!

கொடுப்பவர் என்றென்றும் வாழ்ந்திடுவார்
கெடுப்பவர் எந்நாளும் வீழ்ந்திடுவார்


எண்ணத்தில் ஈகையை வளர்த்திடணும்
எல்லார்க்கும் மழையெனப் பயன்தரணும்!



காணபத்யம்
அமுத சுரபி தீபாவளி மலர் - 1981


கௌமாரம்


சாக்தம்


சைவம்


சங்கர கண்ட ஷண்மதம்-
வைஷ்ணவம்


ஸௌரம்

விஞ்ஞானிகள் பெற்ற ஞானம்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

ஒரு சமயம் வடலூர் ராமலிங்க சுவாமிகளைப் பார்த்தேன்.

கற்பனையில்தான்!

அவர் பாடிக் கொண்டிருந்தார்.

'தன்னை அறிந்து இன்பம் உற. வெண்ணிலாவே!

ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே!'

என்று "தன்னையறிய ஒரு 'தந்திரம்' சொல்லிக்கொடு" என்று கேட்கிறார்.

"உன்னை நீ அறிந்துகொள்" என்று சாக்ரடீஸ் சொன்னார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்.

"நான் யார்? இது உடம்பா, ஜீவனா? இதில் ஓடிக் கொண்டிருக்கும் உயிர் ஏன் மூச்சு என்ற காற்றில் அடங்கி இருக்கிறது? இந்தக் காற்று நம்மை வெளி உலகுடன் இப் பிரபஞ்சத்துடன் இணைக்கிறதா?"

இப்படிப்பட்ட எண்ணங்கள்.

இதெல்லாம் என்ன விசாரணை? தேவைதானா? என்று சிலர் கேட்டார்கள்; கேட்கிறார்கள்.

வாழ்வை சரியாக வாழ நாம் யார், எங்கிருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டாமா?

"நாம் யார்? நம்மிடமுள்ள கையிருப்பு என்ன?"

இந்த மனத்தின் சக்திகள் என்ன? எதை நம் சொத்தாக நமக்குள் இயற்கை வைத்திருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் தெரிந்துகொள்ளாமல் நம் வாழ்க்கைப் பயணத்தை நடத்துகிறோம்.

ஒருநாள், வெள்ளிக்கிழமை. அமெரிக்காவில் பல்கலைக்கழகப் பகுதி. இரவு 10 மணி. நான் என் ரசாயன ஆராய்ச்சிகளை முடித்து விட்டு "ஸ்டேட் தெரு" என்று சொல்லப்படும் முக்கிய வீதி வழியாக வந்து கொண்டிருந்தேன். மாணவர்கள் ஆணும், பெண்ணும் பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும், சாப்பிட்டுக் கொண்டும் கும்மாளமாக இருந்தார்கள். ஒரு மாணவன் ஒரு மாணவியின் கையைப் பிடிதது்தெருவில் பரபரவென்று இழுத்துக்கொண்டு ஓடிக் கொண்டிருந்தான். ஒரு கணம் அவள் அவனை நிறுத்தினாள். சொன்னாள்.

"உன்னுடைய அறைக்குப் போகுமுன் உன் பெயரைச்சொல். தெரிந்துகொள்ள விரும்புகிறேன்!" என்றாள்!

அதாவது பெயரைக் கூடத் தெரிந்துகொள்ளுமுன் அவ்வளவு அவசரம்!

நாமும் அப்படித்தான் ஓடிக் கொண்டிருக்கிறோம். நமது பெயர், விலாசம், வாழ்வின் அர்த்தம், வாழ்வின் காரணம், நாம் வாழும் உலகிற்கும், பிரபஞ்சத்திற்கும் நமக்குமுள்ள தொடர்பை எல்லாம் தெரிந்து கொள்ளுமுன் நாம் ஓடிக்கொண்டிருக்கிறோம். பசி வயிற்றைக் கிள்ள, உணர்வுகள் நம்மை முந்த, மனம் நிகழ்பவற்றிற்குச் சமாதானம் சொல்ல இதையே நிஜம் என்று எண்ணி இதுதான் வாழ்க்கை என்று எண்ணி ஓடிக்கொண்டிருக்கிறோம்.

இதை எல்லாம் தெரிந்து கொண்டால் என்ன பயன் என்று நீங்கள் கேட்கலாம்.

வாழ்வினுடைய அடிப்படைக் குறிக்கோளே மனிதன் இன்பமாக, ஆனந்தமாக எல்லாவற்றையும் அனுபவித்து வாழவேண்டுமென்பதுதான். நம்மையும், நம்மைச் சுற்றியுள்ளவற்றையும் நன்கு புரிந்துகொள்ளும்போதுதான் வாழ்வை அனுபவிக்க முடியும்.

அதேபோல எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளும் ஜீவனின் ஆர்வம் இருக்கிறதே அப்போதுதான் விஷயங்களை மனிதன் "புரிந்து" கொள்கிறான். புரிந்து கொள்ளும்போது (Awareness) விஷயங்கள் நம் கைக்குள் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றன. நம் கட்டுப்பாட்டுக்குள் வரும்போது வாழ்வை நாம் விரும்புகிறபடி அமைத்துக் கொள்ள முடியும்.

வாழ்க்கை என்பது தேவனாகும் முயற்சி.

அது ஒரு தொடர்ந்த போராட்டம். தொடர்ந்த முயற்சி. நம்முள் இருக்கும் மகத்தான சக்தியை உணர்ந்து நமக்கும், பிறருக்கும் இந்தச்சமுதாயத்திற்குமாக வாழக் கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்புதான் இந்த வாழ்க்கை. அதை எப்படி சாதிப்பது என் பதில் வெளிஉலக இயக்கங்களையும், பிரபஞ்ச இயக்கத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப் புரிந்து கொள்ளும்போதுதான் நம் வாழ்க்கையை சீராக இயங்கும் வண்ணம் நன்கு அமைத்துக்கொள்ளவும் முடியும்.

அண்ணாந்து பார்த்தால் கோள்களும், நட்சத்திரங்களும் ஈர்ப்புச் சக்தியின் காரணமாக ஒவ்வோரிடத்திலிருந்து இயங்குகின்றன. கீழே குனிந்து அணு அமைப்பைப் பார்த்தோமானாலும் அதேபோல ஈர்ப்பு சக்தியால் கவரப்பட்டு அணுத் துகள்கள் இயங்குகின்றன. அதாவது மேலும், கீழும், புறமும், உள்ளும் - எல்லாம் ஒரே அமைப்பில் - ஓர் ஒழுங்கில் - ஒரே அடிப்படையில் இயங்குகின்றன.

பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு கோளும், நட்சத்திரமும் ஈர்ப்புச் சக்திக்குக் கட்டுப்பட்டு இயங்குகின்றன. அவை அதே சமயத்தில் தனியாகவும் இயங்குகின்றன.

நமது மானிட நிலையும் அப்படித்தான். ஜீவன் என்ற இந்தத்தனி சக்தி தனித்தன்மை கொண்ட

தாகவும் அதே சமயத்தில் பிற வற்றுடன் தொடர்பு கொண்ட தாகவும்தான் அமைக்கப்பட் டிருக்கிறது. பிரபஞ்சத்தின் சிறு அமைப்புதான் மனிதன். வேறு விதமாகச் சொன்னால் இப் பிர பஞ்சத்திலுள்ள அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்து - நம்பி - உதவிக்கொண்டு வாழ அமைக்கப் பட்டிருக்கின்றன.

கடல்நீரை நாம உபயோகிக்க முடிவதில்லை. ஆனால அது மழையாக ஆறுகள் வழியாக ஏரி குளங்களில் நிரம்பி பயிர், பச்சை களுக்கு உயிர் தருகிறது. பயிர், பச்சைகளோ, பிற மிருகங் களுக்கும் நமக்கும் உண வாகின்றன. தாவர இனம் கார் பன் - டை - ஆக்ஸைடை எடுத்துக் கொண்டு ஆக்சிஜனை வெளியிட்டு உதவுகிறது. அதாவது பிரபஞ்சம் - உலகம் - ஒரு சமநிலையில் செயல்படுகிறது. எங்கு பார்த் தாலும் இந்தச்சமநிலை (Harmony) பிரபஞ்ச லயமாக, பிரபஞ்ச நியதி யாகச் செயல்படுகிறது.

அது என்ன பிரபஞ்ச லயம்?

ஓசை ஓர் அழகுடன் அமைப் புடன் ஒழுங்குடன் வெளிப்படும் போதுதான் அதை இசை என் கிறோம். அந்த இயற்கை ஒழுங்கு தான் பிரபஞ்ச லயமாகச் செயல் படுகிறது. லயம் பிரபஞ்சத்தி லிருக்கிறது. லயம் உலக அமைப் பின் இயக்கத்தில் இருக்கிறது. லயம் மனித வாழ்வில் இருக்கிறது. லயம் ஓசையில் இருக்கிறது. எங்கும் லயம்தான். இதுதான் பிர பஞ்சம். இதுதான் மனிதன்.

வயலிலே நடந்து கொண் டிருந்தேன். "அதோ ஒரு பாம்பு போகிறது!" என்று அச்சத்துடன் கூவினேன். அங்கிருந்த விவசாயி சொன்னார். "பயப்படாதீர்கள்! அதை அடிக்க வேண்டியதில்லை. அது ஓர் அருமையான ஐந்து. பயிரை வெட்டும் எலிகளை எல்லாம் பிடித்துச்சாப்பிடுகிறது. எனவே அது நமக்கு உதவுகிறது!" என்றார்.

வீட்டில் பல்லியைப் பார்த்தேன். என் வீட்டுக்கு வந்த அமெரிக் கர்கள் "ஆ! பல்லி!" என்று அரண்டுபோய கூச்சல் போட்டனர்.

"பயப்படாதீர்கள். அவை நம்மை ஒன்றும் செய்வதில்லை. வீட்டுக்குள்ளே வரும் பூச்சி வண்டு களை அவை சாப்பிடுகின்றன. பூச்சித் தொல்லையைக் குறைக் கின்றன. நாங்கள் இங்கே அவற்றை ஏற்றுக் கொண்டு வாழ் கிறோம்!" என்றேன்.

பார்க்கப்போனால், குரங்குக்கு ஓர் அனுமார் கோயில், நாய்க்கு ஒரு பைரவர் கோயில், மாட்டை "கோ மாதா" என்று கும்பிட்டு பூஜை செய்து மாட்டுப் பொங்கல் கொண் டாடும் பழக்கம்.

மனிதன் இங்கே இந்த மகத் தான உண்மையை உணர்ந்திருக் கிறான். பாம்புப் புற்றுக்குப்பால் வார்த்து வணங்கி "எங்களை ஒன்றும் செய்யாதே!" என்று பிரார்த்திக்கும் பழக்கத்தை எங்கள் கிராமத்தில் - எங்கள் வீட்டில் கண்டிருக்கிறேன். பாம்பு நம்பிரார்த்தனைக்குக்கட்டுப்படுமா என்று விஞ்ஞான ரீதியில் கேட்க லாம். "ஆம். அது கேட்கும், கட்டுப் படும்" என்று சில அனுபவங் களையும், அனுமானங்களையும் வைத்துத் தான் வாழ்க்கை நடத்து கிறோம்.

திருவனந்தபுரத்தில் ஒரு கோயி லில் கொடிக் கம்பம் நட ஆழமான குழியைத் தோண்டிவிட்டு, யானையை ஏவி அந்தக் கொடிக் கம்பத்தை தூக்கிவைத்தார்கள். கொடிக் கம்பத்தைத் தூக்கிய யானை அதைக் குழிக்குள் போட மறுத்தது. விஷயம் என்னவென்று பார்த்தால், அந்தக் குழியில் தவறிப்போய் விழுந்துவிட்ட பூனைக்குட்டி ஒன்றிருந்ததுதான்! யானைக்கு ஏன் இந்தக் கருணை உணர்வு? ஒரு சிறு பூனை செத் திருந்தால் என்ன குடி முழுகிப் போயிருக்கும் இந்த யானைக்கு?

இங்கேதான் நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த உலகம் பிரபஞ்சம் எல் லாமே ஒருவருக்கொருவர் உதவி யாக - ஈர்ப்புசக்தியினால் - ஈர்த்து உதவியாக வாழத்தான் படைக்கப் பட்டிருக்கிறது. அப்படித்தான் இயங்குகிறது.

இதை மனித இனம் - மனிதன் - புரிந்துகொள்ள வேண்டும். மாறாகப் பகைமையில், போரில் நாம் ஒருவரை ஒருவர் அழிக்க முயல்கிறோம் என்றால் இயற்கை நியதிக்கு எதிராகப் போகிறோம் என்றுதான் பொருள்.

வாழ்வை இயற்கையின் பாதையிலே பிரபஞ்ச லயத்திலே நாம் ஓட்ட வேண்டும். பிரபஞ்ச லயத்திற்கு எதிராக அல்ல.

இந்தப் பிரபஞ்சலயம் நம் மூச்சிலேகூட இருக்கிறது. மூச்சை இழுத்து வெளியே விடுகிறோம். அது ஓர் ஒழுங்கான ஓட்டமாக நடைபெறுகிறது. நமக்கும் இவ் வுலகிற்குமுள்ள ஒரு தொடர்பு இந்த மூச்சுதான். இந்த மூச்சை விடாமல், நாமாக மூக்கை இறுக் கினாலும்சரி, வெளியிலிருந்து வெளிவரும் காற்றைக் கட்டுப் படுத்தி நம்மை அடைய முடியாத படி தடுத்தாலும் சரி, இந்த ஜீவனின் உயிர் பிரிந்துவிடும்.

எனவே இந்த ஜீவனை உட லுடனும் - இந்தப்புற உலகுடனும் - பிரபஞ்சத்துடனும் - எது பிணைத் திருக்கிறது? நமது மூச்சுக்காற்று; அக்காற்றிலே உள்ள ஆக்சிஜன் - பிராணவாயு. அந்த ஆக்சிஜனிலே உள்ள எலக்ட்ரான்கள்! அவை தான் நமது நுரையீரலில் சக்தியை இடம் மாற்றுகின்றன. அந்த அணுத் துகளான எலக்ட்ரான் பல்வேறு ரசாயன மாற்றங்களில் இடம்பெற்று நமது உணவிலுள்ள பொருள்களை எரிக்க சக்தி தருகிறது.

என்ன அதிசயம் பாருங்கள்!

இந்த மூச்சுக்காற்று மூலம் இந்தப் பிரபஞ்சத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். இதை உணர்ந்துதான் "பிராணாயாமம்" என்ற மூச்சுப் பயிற்சியைச் செய்ய நம் பெரியவர்கள் கற்றுக் கொடுக் கிறார்கள்.

மூச்சு விடுவதும், இழுப்பதும் ஒரு செயல். இது ஜீவனின் செயல். இது பிரபஞ்சத் தொடர்பு கொண் டது. இந்தச் செயலினால்தான் ஜீவன் இயங்குகிறது; பேசுகிறோம், நடக்கிறோம், ஓடுகிறோம், சாப்பிடுகிறோம், உறங்குகிறோம். அதாவது உள்ளே போகிற காற்று மாறுபாடடைந்து வெளிமூச்சாக வருகிறது. செயலும், காரணமும் என்ற ரீதியில் (Cause and Effect) அல்லது செயலும் அதனால் விளையும் மறுசெயலும் என்கிற ரீதியில்தான் - இப் பிரபஞ்சம் இயங்குகிறது.

சூரியன் பூமியிலே படாதபோது இருட்டாக இருக்கிறது. செடி கொடிகள் பச்சையங்களை உப யோகித்து உணவு உற்பத்தி செய்வ

தில்லை. அதற்கேற்ப இரவில் நாம் தூங்கச் செல்கிறோம். உடலுக்கு ஓய்வளிக்கிறோம். சூரியனும், பூமி விளைவுகளும் என்று பார்த்தால் எல்லாம் காரண காரியத் தொடர்புள்ளவையாகத் தான் அதற்கேற்ப நிகழ்கின்றன. ஒரு காரியம்; ஒரு காரணம்.

காரிய காரணம் என்று பார்த்தால் நாம் பிறந்திருக்கிறோம். இது காரியமானால் இதற்கொரு காரணம் இருக்க வேண்டும். கொஞ்சம் சிந்தியுங்கள். அதாவது நாம் ஒரு காரணத்திற்காகத்தான் படைக்கப்பட்டிருக்கிறோம். இது தான் உண்மை.

தனித்தியங்கும் இந்த ஜீவனின் கடைசி நிலை என்ன? கடைசி லட்சியம் என்ன? என்ன காரணத்திற்காகப்படைக்கப்பட்டிருக்கிறது? இதைப் பற்றியும் கொஞ்சம் யோசியுங்கள்.

பல நூல்களையும் நான் படித்த போது, ஒரு பிரெஞ்சு நாட்டு அறிஞர் எழுதிய ஒரு நூலின் முன்னுரையைப் படிக்க நேர்ந்தது. அவர் சொல்கிறார், " ஏன் மனிதன் மதங்களை ஏற்படுத்தினான்? கடவுளை ஏன் சிருஷ்டித்தான்? கடவுள் என்றும், ஆண்டவன் என்றும் ஏதோ ஒரு மாபெரும் சக்தி என்பதெல்லாம் மூலாதாரத்தை நோக்கிய – தான் பிறந்த இடத்தை நோக்கிய பயணம்தான்" என்று கூறுகிறார். இந்த மத ஆர்வம் – வாழ்க்கைப் பயணம் – "முழுமையை நோக்கிய ஒரு பகுதியின் தாகம்" என்று அவர் கூறுகிறார். 'The thirst of the part for the whole"

ஒரு காலத்தில் இந்த முழுப் பிரபஞ்சமுமே ஒரே அணுத் துகளாலான குழம்பாக – சக்தியின் வடிவாக – இருந்திருக்கிறது. அதிலிருந்து சுழற்சியின் மூலம் அகன்று, மெலிதாகி, பிரிந்து, பல கோள்களும், நட்சத்திரங்களும் உருவாயின. இது விஞ்ஞான உண்மை.

அதாவது இப் பிரபஞ்சம் விரிவடைந்துகொண்டே போகிறது (Expanding Universe) அப்படியானால் இதன் முடிவு என்ன? எவ்வளவு தூரம் இது விரிவடையும்?

நாமாக அனுமானிக்க வேண்டியிருக்கிறது. இப்படி விரிவடையும் பிரபஞ்சம் மறுபக்கத்திலே சுருங்க வேண்டும்; சுருங்கிப் பின் மீண்டும் மூலாதார நிலையை அடைய வேண்டும். இந்த இரண்டு மாற்றங்களின் தொடக்கத்தையும் தான் யுகப்பிரளயம் என்கிறோம். விரிவடையும் பிரபஞ்சத்தின் பல பகுதிகளும் ஒன்று சேர்ந்து சுருங்கி மூலாதாரத்தைத் தொடும் முயற்சி இருக்கிறதே அதைத்தான் பிரெஞ்சு தத்துவ ஞானி கூறுகிறார், இது மூலத்தை அடைய அதன் சிறுபகுதியான ஜீவனின் தாகம் என்று.

மூலம் எப்படிப்பட்டது? ஒளிமயமானது என்கிறார்கள் ஞானியர். செத்துப் பிழைத்தோரது அனுபவங்களில் ஒரு பேரொளி வந்து அன்புடன் அரவணைத்து அழைத்துச் சென்றதாகக் கூறுகிறார்கள்.

அதேபோல விஞ்ஞானத்தில் அணுத் துகளை ஆராயும் விஞ்ஞானிகள் "இந்தத் துகள்கள் எல்லாம் பொருளா அல்லது ஒளிக் கீற்றா? என்று தீர்மானிக்க முடியவில்லை' என்கிறார்கள். அங்கே, கடைசி நிலையில் துகள் ஒளித்



தன்மை பெறுவதாகக் கூறுகிறார்கள்.

மேலும் ஒளி கீழும் ஒளி!

மூலம் என்ற பேரண்டத்தில் ஒளி

அணுத்துகள் என்ற சிறுநிலையிலும் ஒளி.

இப்போது மீண்டும் வாருங்கள், நாம் வடலூர் செல்வோம். வடலூரார் இப்போது பாடிக் கொண்டிருக்கவில்லை. இப்போது ஒரு பெரும் தாரக மந்திரத்தை - வாழ்க்கை சுலோகத்தை - நெஞ்சு நிறைய, உரத்த குரலில், உச்சரித்துக் கொண்டிருக்கிறார்.

"அருட் பெருஞ் சோதி!

தனிப் பெருங் கருணை!" என்று.

எல்லாமே கடைசியில் ஜோதி தான்! மூலாதாரம் ஜோதி நிலை தான்! அங்கே மூலம் பிரிந்து பல பொருள்களாக வடிவம் பெறும் போது ஒன்றை ஒன்று ஈர்த்த நிலையில் உறவாடுவதுதான் தனிப்பெருங்கருணை என்ற அன்பு சக்தி என்கிறாரா? ஓரிடத்தில் அதை ஈர்ப்பு சக்தி என்கிறோம். மற்றோரிடத்தில் அதை அன்பு என்றும், கருணை என்றும் கூறுகிறோம்.

மூலம் ஜோதி. இங்கே எல்லாவற்றையும் பின்னிப் பிணைப்பது அன்பு. இதுதான் விஷயம்.

பிரபஞ்சத்திலே செயல் நிகழ்ந்தவண்ணம் இருக்கிறது. விளைவுகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இது உலக நியதி; பிரபஞ்ச நியதி. இது ஏதோ எட்டாத தூரத்தில், பிரபஞ்சத்தில் இருப்பதாக எண்ணாதீர்கள். ஒளி எப்படிப் பேரண்டத்திலும், கீழ்த் துகளிலும் இருக்கிறதோ அதே போல நம் உலகிலும், வாழ்விலும் இந்தக் காரண காரியம்தான் வாழ்வை இயக்குகிறது.

"சோளம் போட்டால் சோளம் விளைகிறது. நெரிஞ்சி முள் விதை விதைத்தால் நெரிஞ்சிச் செடி முளைக்கிறது. இதை இந்த உலகில் கண்டு உணரும் மக்கள் ஏன் இதே விஷயம்தான் தங்கள் வாழ்விலும் நிகழ்கிறது என்பதைப் புரிந்து கொள்வதில்லை?" என்று கேட்கிறார் தத்துவ ஞானி ஜேம்ஸ் ஆலன்.

நல்லெண்ணம், நல்ல செயல் - நல்ல பலனைக் கொடுக்கும்; தீய எண்ணம், தீய செயலாகி - தீமையைக் கொடுக்கும் என்பதை நாம் ஏன் புரிந்துகொள்வதில்லை? யோசித்துப் பாருங்கள்! இதிலே நாம் உணர்ந்து புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயம் ஒன்றிருக்கிறது. நல்லசெயலை நாம் விரும்பித் தேர்ந்தெடுக்கிறோமா அல்லது தீய செயலை விரும்பித் தேர்ந்தெடுக்கிறோமா என்கிற விஷயம் நம் கைக்குள் இருக்கிறது. தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு நம்மிடம் தானிருக்கிறது. அந்தத் தேர்வு செய்யும் வாய்ப்பை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்துத்தான் பலன்கள் விளைகின்றன. காரணத்திற்கேற்ப காரியங்கள் நிகழ்கின்றன; அவ்வளவு தான்.

காரண காரியம் என்ற பிரபஞ்ச நியதி நம்மைப் பழிக்குப்பழி வாங்கிடக் காத்திருப்பதில்லை. நமக்கு அதிர்ஷ்டத்தைத் தரத் தானாக வருவதில்லை. பழியைப் பெறுகிறோமா பணத்தைப் பெறுகிறோமா என்பதெல்லாம் நம் செயல்கள் செய்யும் காரியம். நாம் எடுக்கிற முடிவைப்பொறுத்த காரியம்.

இதை எல்லாம் பார்க்கும்போது யாரோ சொல்வதுபோல் இருக்கிறது.

"தம்பீ! மகனே! உன்விதி உன் கையில்தான்!

நெல்லைப்பயிரிடு, முள்ளைப் பயிரிடாதே!

நல்லெண்ணம் கொள், தீயெண்ணத்தை அகற்று!" என.

அப்படித்தான் உலகம் - பிரபஞ்ச நியதி சொல்கிறது. வாழ்வைச் சரியாக வாழ வழி காட்டுகிறது "சோளத்தைப் பயிரிடு" என்று சொல்லிக் கொடுக்கிறது.

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பை விஞ்ஞான உண்மைகள் என்கிறோம். இதை விஞ்ஞானிகள் எப்படிக் கண்டு பிடித்



தார்கள் என்று சொல்லும்போது திடீரென்று ஓர் "ஐடியா!" தோன்றியது என்றோ ஆழ்மனத்தில் ஓர் உணர்வு தோன்றியது (Intuition) என்றோ திரும்பத்திரும்பக் கூறுகிறார்கள். விஞ்ஞானி கண்டுபிடிப்பில் இந்த "ஆழ்மன உணர்வு – அனுமானம்" முக்கிய பங்கை வகிக்கிறது. இந்தப் பொருள்களாலான உலகில் – மலை, நதி, வீடு, உணவு, உடை என்று பொருள்களாலான உலகில் – வசதிகளை அதிகப்படுத்தும் முயற்சியில் இந்த விஞ்ஞான உண்மைகள் – தேடுபவர்களால் கண்டுபிடிக்கப்படுகின்றன. பொருளை நம்மால் பார்க்க முடிகிறது. ஆனால் புலனாகாத சக்தியை நாம் பார்க்க முடிவதில்லை.

இந்தப் புலனாகாத சக்தி நம் வாழ்க்கையை இயக்கும் நெறிகளை நமது ஞானிகள் கண்டுபிடிக்கிறார்கள். அந்தக் கண்டுபிடிப்பு முறையை (Revelations) "எனக்குத் தெரிந்தது" என்றோ "ஆண்டவன் கூற்று" என்றோ "ஆண்டவன் என்னுடன் பேசினார்" என்றோ தெரிவிக்கிறார்கள்.

இப்படி மதத்தலைவர்கள், ஞானிகள் கண்டவை "வாழ்க்கை பற்றிய கண்டுபிடிப்புகள்". எப்படி இந்த முடிவுக்கு வருகிறோம் என்றால் இவர்கள் எல்லாரும் வெவ்வேறு நாட்டிலிருந்து வெவ்வேறு காலகட்டத்தில், ஒருவரை ஒருவர் தெரியாதவராய், சொன்ன உண்மைகள். இவை அனைத்தும் ஒரே விஷயங்களாக இருக்கின்றன.

காமம் (நெறியற்ற உறவு)

பகைமை

பொறாமை

பேராசை

வெறுப்பு

வஞ்சினம்

ஆணவம்

என்று ஏகோபித்துச் சொல்லி இருக்கிறார்கள். இந்தக் குணங்கள் நமது செயலாக மாறுமானால் அல்லது இவற்றின் அடிப்படையிலே நாம் இயங்குவோமானால் "நாம் பிரபஞ்ச நியதிக்கு பிரபஞ்ச லயத்திற்கு எதிராகச் செல்கிறோம்; செயல்படுகிறோம்" என்பதுதான் பொருள். அது அதன் பலனைக் கொடுக்கும். அதேபோல் அன்பு, நல்லெண்ணம், பொறுமை, தூய்மை, மன்னிக்கும் மனோபாவம், எளிமை, நேர்மை என்று செயல்படுவோமானால் "பிரபஞ்ச கதியிலே நாம் இயங்குகிறோம். அது அதனுடைய நல்ல பலன்களைத் தரும்" என்று தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

ஞானிகள் கண்டுபிடித்தது வாழ்வின் உண்மைகள். இவையும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு போல பெரும் கண்டுபிடிப்புகள்தாம். ஆனால் இன்று விஞ்ஞான உலகில் வாழும் நாம் விஞ்ஞான உண்மைகளுக்குக் கொடுக்கிற அவ்வளவு முக்கியத்துவத்தை நம் ஞானிகள் கண்ட உண்மைகளுக்குக் கொடுப்பதில்லை. ஆனால் இந்த வாழ்வியல், மனவியல் உண்மைகள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு சமமான கண்டுபிடிப்புகள் – ஆழ்மனத் தெளிவுகள், உண்மைகள். சட்டங்கள் – நியதிகள்!

இவை மீறப்படும்போது அதற்குரிய பலனைக் கொடுத்து விடுகின்றன. எந்தப் பலன் எந்தக் காரியத்திற்காக என்று நமக்குப் புரியாததினால் நாம் இவற்றிற்கு மதிப்பளிப்பதில்லை; வாழ்வில் உபயோகிப்பதில்லை. ஜேம்ஸ் ஆலன் இதைத்தான் கூறுகிறார்.

"வாழ்வில் மறைந்துகிடக்கும் நியாயங்கள் நம் வாழ்வைச் செலுத்துகின்றன" என்கிறார்.

வாழ்வியல் உண்மைகளின் பலன்கள் தெள்ளத் தெளிவாக – மின்கம்பியைத் தொட்டால் மின் அதிர்வு ஏற்படுவதுபோல – நேரடியாகப் புரியுமானால் மனிதன் இதனை வாழ்க்கையில் மிகுந்த கவனத்துடன் அனுசரிப்பான்; மதிப்பான். "அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" என்பதுபோல நாட்பட்ட விளைவாக – ஊழ்வினையாக – இது வந்துசேர்கிறது. விளைவுகள், எப்படி, எங்கே, எப்போது வரும் என்று நமக்குத் தெரிவதில்லை. ஆனால் வருவதென்னவோ நிச்சயம். ஏனெனில் இதுவும் விஞ்ஞான உண்மைதான். இது வாழ்க்கை விஞ்ஞானம். விஞ்ஞானிக்கு மாறாக இதைக் கண்டு பிடித்தவர்கள் ஞானிகள்.

நமது மதக்கோட்பாடுகள் இந்தக் காரண காரிய விளக்கத்தைத் தெரிவிக்கின்றன.

"மனிதனை, நிழல் தொடர்வது போல, நமது செயல்களின் விளைவுகள் நம்மைத் தொடர்கின்றன" என்று புத்தர் கூறுகிறார்.

"எதைவிதைத்தாயோ

அதை அறுவடை செய்வாய்"

என்று இயேசுபிரான்கூறுகிறார்.

இவை அனைத்தையும் ஒரு வார்த்தையிலே இந்துமதம் கூறுகிறது. அந்த வார்த்தை "கர்மா" என்பதாகும். "நம் செயலின், பலனை நாம்தான் அனுபவித்தாக வேண்டும்" என்பதுதான் கர்மம். கர்மம் என்பது செயலைக் குறிக்கும்; செயல் நல்லதா, கெட்டதா என்பது செய்கிற மனிதனைப் பொறுத்தது.

உன்னையறிந்துகொள் என்று சொன்னார்கள்,

உணமைதான். அடுத்து இன்று நாம் உலகையும், பிரபஞ்சத்தையும் அறிந்துகொள்ள வேண்டும்; அவை இயங்கும் அடிப்படையைப் புரிந்து கொள்ள வேண்டும். (Cause and Effect) காரண காரியம் என்ற விஞ்ஞான அடிப்படையிலேதான் வாழ்வியல் உண்மைகள் இயங்குகின்றன.

அன்பு என்பதன் விஞ்ஞான வார்த்தையான ஈர்ப்பின் மூலம் தான் இப்பிரபஞ்சம் இயங்குகிறது. உலகமும், பிரபஞ்சமும் மனித வாழ்வும் ஒரு லயத்தில் இயங்குகின்றன. எல்லாமே ஒன்றுக்கொன்று உதவியாகச் சார்ந்தே வாழ்கின்றன.

தனி மனித வாழ்வு மேம்பாடு அடைய வேண்டுமானால் நாம் இங்கு இயங்கும் பிரபஞ்ச லயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பிரபஞ்ச லயத்தில் நம்மைச் சேர்க்கும் அரிய மகாமந்திரத்தைச் சொல்லி இந்தக் கட்டுரையை, முடிப்போம்!

ஓம்! ஓம்!! ஓம்!!!

திருப்பதி வேங்கடேசப்பெருமாள் பிள்ளைத் தமிழ்

டி. ராஜதேவன்

பூக்கும் மலர்கள் பல வண்ணம்
பூவில் மொய்க்கும் தேனினங்கள்
காய்க்கும் காய்கள், பல்நூறு
கண்ணா உனக்குத் தருவேனே

தேய்க்கும் சந்தனக்கல் ஒலியில்
திகழும் நாரா யணனேநீ
ஆய்க்கும் வள்ளல் அதனாலே
ஆனந்தத் தாலோ தாலேலோ

பேய்க்கும் மோட்சம் அருள்பவனே
புண்ணிய நதியின் விழுநீரே
மாய்க்கும் பாவம் எமக்காக
மாயவனே என் தேயவனே

நோய்க்கும் மருந்தே நுண்ணியா
நித்திரை போவாய் தாலேலோ
வாய்க்கும் வள்ளல் நீதானே
வாழ்க தாலோ தாலேலோ!

திரை

சிங்கை ந. பழனிவேலு

திரைகளுமே மிகப்பலவே கருத்தும் கண்ணும்
தித்திக்க வைக்கும்வெள்ளித் திரையும் ஒன்று
மறைவாகப் புதைத்திட்ட விதைக்கு மண்ணே
மரமாக்கும் திரையாகும் வானில்தோன்றும்
இரவிமதி உடுக்களையே சிலக ணங்கள்
இருளாக்கும் முகில்களுமே திரைக ளாகும்
அரங்கத்தில் நடிகர்களும் அலங் கரிக்க
அவைகாணா மறைவிடமும் திரையும் நல்கும்.

அறிவுக்கு அறியாமை இரும்புத் திரை
அன்புக்கு எதிரியே பகைமைத் திரை
பெரியாரை மதியாது சிறுமைத் திரை
பெற்றோரின் பேரன்பு அழியாத் திரை
வறியார்க்கு இரங்காவன் நெஞ்சத் திரை
வடிவழகே கண்களையே மயக்கும் திரை
நெறியல்லா நெறிபற்றும் தீமைத் திரை
நெஞ்சில் நஞ்சு கொண்டவரின் நெருப்புத் திரை.



பி.எஸ்.மணி

பொன்விழா ஆண்டு சில நினைவுகள்

பொன் விழாக் காணும் 'கல்கி' வார இதழில் 43 ஆண்டுகள் பணிபுரிந்தவர் மறக்க முடியா நினைவுகளைக் கூறுகிறார் :

வாராவாரம் ஒருநாள், பேராசிரியர் கல்கி நடுநாயகமாக அமர்ந்திருக்க ஆசிரியர் குழு சுற்றி அமர்ந்திருந்து ஒவ்வொருவரும் நல்ல ஹாஸ்யத் துணுக்கைச் சொல்ல வேண்டும். இந்த ஹாஸ்யக் கூட்டத்தில் அரங்கேற்றப்படும் நல்ல ஹாஸ்யங்களே அடுத்த வார 'கல்கி' இதழில் இடம்பெறும்.

ஒருநாள் ஆசிரியர் குழுவிலுள்ள எம்.எல். சபரிராஜன் தம் ஹாஸ்யத் துணுக்கொன்றை மிகவும் சீரியஸாக எடுத்துச் சொன்னார். சபரிராஜன் அழுத்தமான கதை, கட்டுரைகளை வழங்கி வருபவர். அவர் கூறிய ஹாஸ்யத்தை அனைவருமே உன்னிப்பாக உற்றுக் கேட்டனர்.

அவர் கூறிய ஹாஸ்யம் இதுதான்.

"சென்னையில் மழையும் பெய்யவில்லை. வெயிலும் அடிக்கவில்லை. ஒரு கம்யூனிஸ்ட் அனுதாபி குடைபிடித்துக் கொண்டு சென்றார். அதைக் கண்டு வியப்புற்ற நண்பர், "என்ன ஸார்! மழை, வெயில் இல்லே. இப்போ குடை பிடித்துக் கொண்டு போறீங்க?" என்றுகேட்டார்.

உடனே கம்யூனிஸ்ட் அனுதாபி அளித்த பதில்: "இப்போ மாஸ்கோவில் மழை பெய்யறதே!"

சபரிராஜன் சீரியஸாக இந்த ஹாஸ்யத்தைச் சொன்னாலும் பேராசிரியர் கல்கி அந்த ஹாஸ்யத்தில் பொதிந்துள்ள 'ஸடயரை'ட் புரிந்து கொண்டு, "பேஷ்! பேஷ் ரொம்ப நல்ல ஜோக்! சீரியஸாகச் சொல்லாமல் ஹாஸ்ய பாணியில் சொல்லியிருந்தால் இந்த ஜோக்குக்கு இன்னும் உயிர் பிறந்திருக்கும்" என்றார்.

மிகப் பிரபலமான, மதிப்புக்குரிய அரசியல் பிரமுகர் ஒருவர் காரில் வந்து ஆசிரியர் கல்கியைச் சந்தித்தார். அப்பொழுது பேராசிரியர் கல்கி ஆசிரியர் குழுவிடம் அன்றைய நிகழ்ச்சிகளைப் பற்றி சுவாரஸ்யமாக அளவளாவிக் கொண்டிருந்தார். பேராசிரியர் கல்கியைப் பார்க்க வந்த அரசியல் பிரமுகர் உள்ளே நுழைந்ததும், "வாங்கோ! வாங்கோ!" என்று வரவேற்றார்.

சில நிமிடங்கள் யோக க்ஷேமங்களை விசாரித்துவிட்டு, ஆசிரியர் குழுவிடம், "என்ன? எனக்கு இப்போதுதான் ஞாபகம் வருகிறது. ஸாரின் கட்டுரைத் தொடரைப் பற்றி அபிப்ராயம் சொன்னீர்களே அதைப் பத்திரமாகக் கட்டி எடுத்துக் கொண்டுபோய் காரில் வைத்துவிடுங்கள்!" என்று சமயோசிதமாகக் கூறினார் பேராசிரியர் கல்கி.


அந்த அரசியல் பிரமுகர் ஆசிரியர் குழுவினரை 'வில்லன் பார்வை'யில் எரித்துவிடுவதைப் போலப் பார்த்தார். அடுத்த கணம் ஆசிரியர் குழுவிலுள்ள இளைஞர் ஸோமாஸ் அந்தக் கட்டுரைத் தொடரை பரதன், ராமனின் பாத ரட்சையைத் தலையில் சுமந்து எடுத்துச் சென்றதுபோல தலையில் தூக்கிவைத்துக் காரில் கொண்டுபோய் வைத்துவிட்டார்.

❒ ❒ ❒

கல்கி காரியாலயத்தில் சேர்ந்த புதிதில் அந்த அதிர்ச்சிதரும் செய்தியைச் சொன்னார் பேராசிரியர் கல்கி. ராமகிருஷ்ண உபநிஷதத்தை மேற்கோள் காட்டி, நீங்கள் எந்த சமயத்திலும் காரியாலயத்தை மூடுவதற்கான நிலை எழுந்தால், ராஜாஜியின் ராமகிருஷ்ண உபநிஷதத்தைப் படித்த நீங்கள் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்க வேண்டும் என்று எழுதி ஒரு கடிதத்தில் ஆசிரியர் குழு அனைவரிடமும் கையெழுத்து வாங்கிக் கொண்டார்! எல்லாருமே கொஞ்சங் கூடக் கவலைப்படாமல் மகிழ்ச்சியோடு அந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போட்டுத் தரவே ஆசிரியர் கல்கி அவர்களின் மனைவி திருமதி ருக்மிணியம்மாள் வியந்து கம்பரது பாடலையே அப்பொழுது எடுத்துச் சொன்னார்.

போட்டோ : உத்ரா


எம்.எஸ். சுப்புலக்ஷ்மி - சதாசிவம் தம்பதியர்



இப்பொழு(து) எம் மனோரால்
இயம்புதற்(கு) எளிதோ யார்க்கும்
செப்பரும் குணத் திரா மன்
திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு மற்(று) அவ்
வாசகம் உணர்ந்த பின்னர்,
அப்பொழுது அலர்ந்த செந்தா
மரையினை வென்ற(து) அம்மா!

வைத்துக் காரியாலயப் பையன் வெங்கடேசனிடம் கொடுத்து அனுப்புவார்!

இப்படி ஒருமாதம் காரியாலயப் பணிகள் நடந்து கொண்டிருந்த போது, காந்தி நகர் இல்லத்துக்கு ஒரு தடவை உதவி ஆசிரியர்கள் குழு சென்றது.



1976இல் கல்கியில் உதவி ஃபோர்மனாகப் பணி புரிந்த திரு. நடராஜனுககு நடைபெற்ற பாராட்டு விழாவில் ஒரு காட்சி.

❒ ❒ ❒

பேராசிரியர் கல்கி உடல் நலிவுற்றுக் காந்தி நகர் இல் லத்தில் இருந்த காலம். ஒவ்வொரு நாளும் பேராசிரியர் கல்கி அவர்கள் அந்த வாரத்துக்கான செயல்முறைகளையும், கையெழுத் துப் பிரதிகளையும் ஒரு பெட்டியில்

"என் உடல் ஆஸ்துமாவினால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தா லும், நான் எழுதியனுப்பும் குறிப்பு களைக் கொண்டு பத்திரிகையைத் தவறில்லாமல் கொண்டு வரு கிறீர்கள் எனக்கு ரொம்பத் திருப்தி!" என்று பேராசிரியர் கல்கி மனமுருகப் பாராட்டினார். அடுத்து ஒருமாத காலத்தில் டிசம்பர் 5 ஆம் தேதி காலை, கடைசி நிமிடம்வரை தம் எழுத்துப் பணியை விடாமல் தொடர்ந்தது அவரது ஏகாக்ரசித்தத்துக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. தந்தை எழுதிவந்த 'அமரதாரா' தொடர்கதையைப் புதல்வி ஆனந்தி எழுதி முடித்து வைத்தது அனை வரையும் வியக்கவைத்தது.

1977 ஆம் வருஷம் தொழி லாளர்கள் நடத்திய வேலை நிறுத் தத்தினால், பத்திரிகையை நிறுத்தி விட்டு அன்று கடைசியாகக் குரு சாமி முதலியார் தெருவிலுள்ள பிரம்மாண்ட தோட்டத்தைவிட்டு, சதாசிவம் தம்பதியர் கடைசியாக விடைபெற்றுச் செல்லும் தருணம். திருமதி எம்.எஸ். மிகப் பிரம் மாண்டமான அந்த இல்லத்தைப் பார்த்துவிட்டுக் கண்ணீர் பெருக்கியபடி தயங்கி நின்ற போது, "கவலைப்படாதே! ஒவ் வொரு நாளும் 'கல்கி'யில் பணி புரியும் இருநூறு குடும்பங்களின் வாழ்வுக்குப் பங்கம் வந்துவிடக் கூடாதே, என்று இராப்பகல் அவர்கள் நலனையே கருதிப் பெருஞ்சுமையைத் தலையில் சுமந் தேன்! அவர்களே என் தலைச் சுமையை இப்பொழுது இறக்கி வைத்துவிட்டார்கள்! இனி நாம் கவலைப் படுவதற்கு என்ன இருக்கிறது!" என்று கூறி திருமதி எம்.எஸ்.ஸை அழைத்துக்கொண்டு விடைபெற்றார் திரு. சதாசிவம். அந்தப் பிரியா விடைக் காட்சியைப் பார்த்து உண்மை ஊழியர்கள் கண்ணீர் பெருக்கினர்!

❒ ❒ ❒

திருச்செந்தூர் முருகன் சந்நிதிக்குத் தரிசனத்துக்காகச் சென்றிருந்தேன். ஒரு வருட அஞ்ஞாத வாசம் முடிந்து, சந்தோஷமான செய்தியைத் தாங்கித் தந்தி வந்திருப்பதாக என் சகோதாரர் திருச்செந்தூருக்கு வந்தார். மறுபடியும் 'கல்கி' பத்திரிகை தொடங்க விருப்பதால் சென்னைக்கு வந்து சேரும்படி கல்கி காரியாலயத்தி லிருந்து தந்தி வந்திருந்தது! திருச் செந்தூர் முருகன் பிரசாதம் பெற்றுக்கொண்டு அடுத்த நாள் சென்னைக்கு ரயிலேறினேன். புனர்வாழ்வு 'கல்கி' பத்திரிகைக்கு மட்டுமல்ல, எனக்கும்தான்!

பொன்விழா ஆண்டில் நாற் பத்து மூன்று ஆண்டுகள் கல்கியில் பணி செய்யும் வாய்ப்பு கிடைத் ததைப் பெரும் பேறாகக் கருது கிறேன்! ❀

நல்லவை நவில்கவே!

எம். இ. பிரபாகரபாபு

உண்பதில் சுவைகளைத் தேடிடு வோர்
உதிர்க்கும் சொற்களில் சுவையில்லையே – உயர்
அன்பினைப் பொழிந்து அறநெறி காத்தால்
அகிலத்தில் வாழ்வதில் சுமையில்லையே!... (உண்பதில்)

எண்ணெயை விழுங்கிடும் யந்திரம் கூட
எண்ணற்ற நலன்களை வழங்கிடுமே – நம்
கண்ணையும் நிகர்த்த கனிமொழி மறந்தால்
கன்னிய புலன்களும் புழுங்கிடுமே!... (உண்பதில்)

உடலால் மனதால் நிறைந்தவரேதான்
உண்மையில் ஊனங்க ளற்றவராம் – நல்
உறவால் மனங்களைப் பிணைப்பவ ரேதான்
உலகினில் யாவர்க்கும் உற்றவராம். (உண்பதில்)

ஓர் இந்தியக் கனவு

வேதம்

வன்முறையில், அதில் திளைக்கும் காளை யர்தம்
மனப்போக்கில், தன்மகவே அடித்த தாலே
தன் உடலில் படும் புண்ணில் நொந்து போன,
தளர்ந்துவிட்ட இந்தியத்தாய் கண்ண யர்ந்தாள்!
பொன்மயமாய் ஒருகனவு! புத்தனைப் போல்
புதியமகன் பிறந்துவந்தான்! அபயம் கையில்!
மின்னலைப்போல் மேனி! அவன் கண்ணின் வீச்சில்
வேகமுற்றார் புதுமாந்தர்! எங்கும் இன்பம்!

இந்தியத்தாய் பார்க்கையிலே, தன் உடம்பின்
எழில்தோறும், துளிதோறும் ஞான வான்கள்!
விந்தையுறக் கற்றுயர்ந்த மேலாம் மாந்தர்!
வீதிஎல்லாம், வீடெல்லாம் மகிழ்வே சிந்த,
சந்தையிலும் பேரமைதி! நியாயப் பேச்சு!
சண்டைஇல்லை! பொருள் எல்லாம் மலிவாய் ஆச்சு!
எந்தஊர் ஆலையிலும் உயர்வே மூச்சு!
“என்நாடே என்தெய்வம்” – என்னும் பேச்சு!

கண்எல்லாம் அருட்சுரங்கம்! அன்புத் தோட்டம்!
காண்பதெல்லாம் உயர்ந்தகலை! தரும ஆட்சி!
விண்எல்லாம், தன்மக்கள் இலக்கி யத்தின்
மேன்மைஎல்லாம் புதுவாழ்வில் பெற்ற பேச்சு!
மண்எல்லாம் ஒரேகுடும்பம்! பல மதத்தின்
மாண்பைஎல்லாம் மனதினிலே கொண்ட மக்கள்!
எண்ணமெல்லாம் வண்ணமுற விரியக் கண்ட
இந்தியத்தாய் கண்விழித்தாள், ‘வெடிச்’சத் தத்தில்!

மனைவி மகிழட்டும்!

ஆ. ஜோசப் ஸ்டாலின்

உலகத்தில் தோன்றியுள்ள பெரியா ரெல்லாம்
உருவாகும் காரணத்தை ஆய்ந்து பார்த்தால்
நலமான தாய்மாரால் என்னும் உண்மை
நாம்மறுக்க முடியாது! வீரம் பெற்ற
தலைவன் மகாராஷ்டிரத்தின் சிவாஜி; காந்தி
தரணிபுகழ் பெருங்கவிஞன் தாகூர்; அண்ணா
மலைபோல் உயர்ந்தபுகழ் பெற்றார் என்றால்
மாதாவால்! அவரும் ஒருவரின் மனைவிதானே!

உணவுதனைச் சமைக்கின்றாள்; கணவன் அன்பு
உள்ளத்தைச் சமைக்கின்றாள்; தாய்மைப் பேற்றால்
மனிதஇனம் படைக்கின்றாள்; அதனால் இந்த
மண்ணகத்தைச் சமைக்கின்றாள்; மணங்கொண்ட கணவனின்
மனத்தோடு மனமொன்றி வாழு கின்றாள்
மழலையொன்று பிறந்துவிட்டால் பசித்து விட்டால்
உணவாகத் தன்னுடைய உதிரம் பாலாய்
உருமாற்றிக் கொடுப்பவளும் மனைவிதானே!

இந்நாளில் மனைவியரைச் சமைத்துப் போடும்
எழிலான குழந்தைகளைப் பெற்றுப்போடும்
எந்திரமாய் எண்ணுகிற கணவன்மாரால்
இதமான இல்லறத்தின் சிறப்புக் குன்றும்!
பொன்னாலும் பூவாலும் மனைவிமாரை
பூசித்து மகிழுதற்கே இயலா விட்டால்
பொன்னைப்போல் பூவைப்போல் வைத்துக் காக்கும்
போக்காலே மனைவிமார் மகிழ்ந்து போவர்.





நடனமணிகளும் நடன ஆசிரியர்களும்





அரசன் முதல் ஆண்டிவரை, படித்தவன் முதல் படிக்காதவன் வரை, பணக்காரன் முதல் ஏழை வரை எல்லாரையும் ஒன்றுபடுத்தும். உள்ளத்தையும், உணர்ச்சிகளுடன் லயிக்கச் செய்வது பரதக்கலை.

தனக்கென்று ஒரு தனிபாணியை வகுத்துக் கொண்டு 25 வருடகாலமாக விமர்சனங்கள் எழுதியவர் அமரர் குயிலி ராஜேஸ்வரி. தன் வாழ் நாள் முழுவதும் பரதக்கலை வளர்ச்சிக்காகவும், தனது எழுத்துகள் அதன் உயர்வுக்கே என்றும் வாழ்ந்தவர். விமர்சனக்கலை வித்தகரான அமரர் குயிலியின் நினைவாக இந்த ஆண்டுத் தீபாவளி மலரில் நடனக்கலையின் சிறப்பைப் பற்றியும் நாட்டிய ஆசான்கள் கண்ட வித்தியாசமான மாணவிகள் பற்றியும் ஒரு சிறப்புப் பகுதியை வெளி யிடுகிறோம்.

வேம்பட்டி சின்ன சத்யம் (குரு)
உமா முரளிகிருஷ்ணா
(மாணவி)

தென்றல் உலாவரும் மாலை வேளையில் சென்னை க்ரீன்வேஸ் சாலையில், அரசினர் சங்கீதக் கல்லூரியின் எதிர்ப்புறம் அமைந் துள்ள புதிதாகக் கட்டப்பட்ட குச்சுப்புடி ஆர்ட்ஸ் அகாடமியின் உள்ளே செல்லும்போது சுந்தரத் தெலுங்கில் பாட்டும் ஜதிக் கோவைகளும் வரவேற்கின்றன. அதன் இயக்குநரும் நடன ஆசிரியருமான வேம்பட்டி சின்ன சத்யத்தைச் சந்திக்கிறோம்.

"ஆந்திராவிலுள்ள விசாகப் பட்டினம் மசூலிபட்டினம் இரண் டுக்கும் இடையே உள்ள குச்சுப்புடி என்னும் ஊரில் என் தந்தையார் வேதாந்தம் லட்சுமண சாஸ்திரி யிடம் 9 வயது முதல் நாட்டியம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன்" எனப் பேட்டியை ஆரம்பித்த சின்னசத்யம், "1963 பிப்ரவரி 6 ஆம் தேதி சென்னையில் கோபதி நாராயணசாமி சாலையில் முதன் முதலாகக் குச்சுப்புடி ஆர்ட்ஸ் அகாடமியை ஆரம்பித்தேன்" என்ற விவரத்தையும் தெரிவித்தார்.

"குச்சுப்புடி நாட்டியத்தில் ஆராய்ச்சி செய்து, புதுப்புதுப் படைப்புகளைப் படைக்க வேண் டும்" என்று கூறிய சத்யம், மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச் சந்திரன் அவர்களை மனமார உளமாரப் போற்றுகிறார்.

● "உங்களுடைய மாணவிகளில் வித்தியாசமானவர் யார்?"

"உமா முரளிகிருஷ்ணா".

"தொழிலில் சிரத்தையும், ஈடு பாடும், அடக்கமும், ஆர்வமும் கொண்ட உமாமுரளி கிருஷ்ணா வின் பாமா கலாபம் குறிப்பிட்டுச் சொல்லும்படியாகச் சிறப்பாக இருக்கும்" என்றார் குரு வேம்பட்டி சின்னசத்யம்.

பிரபல பின்னணிப் பாடகி ஜானகியின் மருமகளான உமா முரளிகிருஷ்ணா 5 வயதுக் குழந் தையாக இருக்கும்போதே நாட் டியம் பயிலத் தொடங்கிவிட்டார். கே. என்.தண்டாயுதபாணி, அடை யாறு லட்சுமணன், லட்சுமி விஸ்வ நாதன் ஆகியோரிடம் பரத நாட்டியம் பயின்றுள்ளார்.

சித்ரா விஸ்வேஸ்வரன்
(குரு)
அகிலா –(மாணவி)

பரத நாட்டியத்தில் தனக் கென்று நிலையான இடத்தைப் பெற்றுள்ள சித்ரா விஸ்வேஸ் வரனை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

"என்னுடைய நான்காவது வயது முதற்கொண்டே நான் நடனம் கற்க ஆரம்பித்துவிட்டேன்.

லண்டனில் இருந்த சமயம் எனக்கு 4 வயதிலேயே எனது தாயார் மேற்கத்திய பாணி நடனத்தைக் கற்றுத்தர ஏற்பாடு செய்தார். பிறகு கல்கத்தா வந்து மணிப்புரி, கதக், பரதநாட்டியம் முதலிய நாட்டியங்களைக் கற்க ஆரம்பித்தேன். எனது முதல் ஆசிரியை டி.எ.ராஜலட்சுமி. அப் பொழுது எனது வயது பதி னொன்று.

● "உங்களது மாணவிகளில் வித்தியாசமானவர் யார்?"

"அகிலா".

1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பித்த சிதம்பரம் நாட்டியப் பள்ளியில் நான்கு வயது மாணவியாக அகிலா வந்து சேர்ந்தார். அந்தச் சிறுவயதிலேயே பக்திபாவத்தையும், நளினத்தையும் மிகத் துல்லியமாகச் செய்து காட்டிய அகிலா பரதநாட்டியத்தில் சிறந்த மாணவியாக வருவார் என்று அப்போதே கணித்து விட்டார் சித்ரா விஸ்வேஸ்வரன்.

அழகிய நயனங்களைக் கொண்ட அகிலா செயின்ட் மைக்கேல் பள்ளியில்பதினொன்றாவது வகுப்பு மாணவியாகப் படித்து வருகிறார்.

"பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஹாலந்து, ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து போன்ற பல இடங்களுக்கு குருவுடன் பயணம் செய்து 70க்கும் மேற்பட்ட நாட்டிய நிகழ்ச்சிகள் அளித்ததை என்னால் மறக்க முடியாது" என்கிறார் அகிலா.

கே.ஜே. சரசா – (குரு)
வஸுப்ரதா பராசரன் (மாணவி)

சரசாலயா பள்ளி இயக்குநரும், பரத நாட்டிய ஆசிரியையுமான கே.ஜே. சரசாவை அவரது இல்லத்தில் சந்தித்த சமயம் தனது மாணவிகளுக்கு நடனப் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தார்.

"நீங்கள் எப்படி, எப்போது இந்தத் துறைக்கு வந்தீர்கள்?"

"1947 இல் நாங்கள் காரைக்காலில் வசித்து வந்தோம். எங்கள் குடும்பமே சங்கீதக் குடும்பம். தாயார் காமாட்சி அம்மாள் அந்த நாளைய பிரபல பாடகி. குரு வழுவூர் ராமையா பிள்ளை அவர்கள் காரைக்காலுக்கு வந்திருந்தார். எங்கள் வீட்டிற்கும் வந்தார். அப்பொழுது நான் 14 வயதுச் சிறுமி. அந்த நாளைய பிரபல சினிமாப் பாடல்களை நான் வீட்டில் அமர்ந்து பாடிக் கொண்டிருந்தேன். அதைக் கேட்ட குரு ராமையா பிள்ளை, "குழந்தை சரசா நன்றாகப் பாடுகிறாளே! என்னுடன் மெட்ராஸுக்கு அனுப்பி வையேன். நான் பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று சொன்னதுமே என் தாயார் தனது சம்மதத்தைத் தெரிவித்து விட்டார்.

நான் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். குருவிடம் குமாரி கமலா, ஈ.வி. சரோஜா, எல்.விஜயலட்சுமி போன்றவர்கள் நாட்டியம் கற்றுக் கொண்டிருந்த நேரம் அது. எனக்கும் அவர்களைப் போல் பரதநாட்டியம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசை எற்பட்டது. அதை அவரிடம் சொன்னதுமே என்னைத் தனது மாணவியாக ஏற்றுக் கொண்டார். குருகுல முறைப்படி பயின்று அரங்கேற்றமும் நடைபெற்றது".

● "உங்கள் மாணவிகளில் வித்தியாசமானவர் யார்?"

"வஸுப்ரதாதான்".

இந்தியாவின் சொலிசிடர் ஜெனரல் திரு.கே.பராசரன் – சரோஜா தம்பதியினரின் அருமை மகளான வஸுப்ரதா பி.ஏ. பட்டதாரி. நாட்டியம் தவிர வண்ணம் தீட்டுதல், ஒப்பனைக்கலை ஆகிய வற்றிலும் தேர்ச்சி பெற்றுள்ளவர். "நாட்டிய ரஞ்சனி", "அருங்கலைச் செல்வி" என்ற விருதுகளையும் பெற்றுள்ளவர்.

சாம்ராஜ் (குரு)
சஜிதா கிருஷ்ணமூர்த்தி (மாணவி)

"1951 அல்லது 1952 என்று நினைக்கிறேன் திரு.வைத்தி சுப்ரமண்ய அய்யர் வீட்டுத்திருமணம். குமாரி கமலா பரதநாட்டியம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. இடைவேளை வந்தது. கமலா உடைமாற்றிக் கொள்ள உள்ளே சென்றார். எனது தகப்பனார் வழுவூர் ராமையா பிள்ளை அரங்கத்தை விட்டு வெளியே சென்றுவிட்டார். அவர் உட்காரும் இடத்தில் எப்போதும் வெள்ளிக் கிண்ணத்தில் மிளகு, கல்கண்டு, கிராம்பு மூன்றையும் கலந்து வைத்திருப்பார். கச்சேரியின் இடையிடையே அவ்வப்பொழுது சிறிது எடுத்துச் சாப்பிடுவார். சாரீரம் கணீரென்றும், குரல் வளம் செறிப்பாகவும், தொண்டை நயமாகவும் இருக்க அவர் கையாளும் முறை இது. அவர் வெளியே சென்றதுமே நான் மேடைமேல் ஏறி அவர் அமரும் இடத்தில் அமர்ந்து கல்கண்டு, மிளகு, கிராம்புக் கலவையை வாயில் போட்டு மென்றுகொண்டே அவருடைய தாளங்களைக் கையில் எடுத்துக் கொண்டேன்.

அப்பா அதைப் பார்த்துவிட்டு வெளியிலேயே நின்றுவிட்டார். நானும் தாளங்களைத் தட்டி ஜதிக் கோவைகளைச் சொல்ல ஆரம்பித்தேன். கச்சேரி பிரமாதமாக நடைபெற்றது.

உண்மையில் அதற்கு முன்னால் பயிற்சியோ, ஒத்திகையோ எதுவுமே பார்க்கவில்லை. அந்த கற்பகாம்பாள் கடாட்சம் எனக்கு இருந்ததால்தான் அந்த நிகழ்ச்சி நடந்தது என்று இன்றும் நினைக்கிறேன். இந்த நிகழ்ச்சி என் வாழ்நாளிலேயே மறக்க முடியாத சம்பவம்".

"அப்பொழுது உங்களுக்கு என்ன வயதிருக்கும்?"

"பத்து வயது".

● "தங்கள் மாணவிகளில் வித்தியாசமானவர் யார்?"

"சஜிதா கிருஷ்ணமூர்த்தி".

ஐந்து வயது முதலே சாம்ராஜ் மாஸ்டரிடம் நடனம் பயிலும் சஜிதா, ஆதர்ஷ் வித்யாலயாவில் எட்டாம் வகுப்பு படித்து வருகிறார். ஊட்டி மலர்க் கண்காட்சியில் நடைபெற்ற பரதநாட்டிய நிகழ்ச்சி இவருக்கு ஒரு மறக்க முடியாத அனுபவம்.

உடுப்பி லக்ஷ்மி நாராயணன் (குரு)
மதுமதி (மாணவி)

ஆரவாரமேயில்லாத பரத நாட்டியக் கலைஞர் குரு உடுப்பி லக்ஷ்மிநாராயணன்.

பள்ளி இறுதி வகுப்பில் தேறிய கையோடு சென்னைக்கு வந்து பாட்டு, நாட்டியம் கற்றுக்கொள்ள விரும்பி, பேஜாவர் ஸ்வாமியிடம் ஆசீர்வாதம் கோரினார். "கவலை வேண்டாம். உட்லண்ட்ஸ் கிருஷ்ணராவிடம் சொல்லி எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிடுகிறேன்" என்றார் அவர். இப்படித்தான் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

"கிருஷ்ணாராவிடம் என் ஆசையைத் தெரிவித்தேன். அவர் காஞ்சிபுரம் எல்லப்பா பாகவதரிடம் என்னை அழைத்துச் சென்று நாட்டியம் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தார்.

● "உங்களது மாணவிகளில் வித்தியாசமானவர் யார்?"

"மதுமதி".

இசையில் பி.ஏ. பட்டம் பெற்று இருக்கும் அழகான மதுமதி இது வரை நூற்றுக்கும் மேற்பட்ட கச்சேரிகள் நிகழ்த்தியிருக்கிறார். சர். சிவஸ்வாமி கலாலயா என்னும் பள்ளியில் நடன ஆசிரியையாக இருக்கும் மதுமதி நாட்டியம் கற்கத் தொடங்கியதும் ஒரு வித்தியாசமான நிகழ்ச்சிதான், அவரே சொல்கிறார்.

"நாட்டியத்தில் அடங்காத ஆர்வம் கொண்ட நான் ஞானானந்தா மண்டலியில் குரு வகுப்புகள் நடத்தும்போது விடாமல் சென்று பார்த்துக்கொண்டே இருப்பேன். அப்பொழுது ஒருநாள் குருஜி ஹரிதாஸ் கிரி ஸ்வாமி அவர்கள், 'நீ டான்ஸ் கத்துக்கலையா?' என கேட்க, நான் இல்லை என்று தலையை அசைத்தேன், உடனே அவர் மாஸ்டரைக் கூப்பிட்டு, "லக்ஷ் மணா இந்தக் குழந்தைக்கும் பாடம் கற்றுக் கொடு. நான் அவளுக்குப் பணம் கட்டுகிறேன்" என்றார். தொடர்ந்து பதின்மூன்று வருடங் களாக நாட்டியம் பயின்று வரு கிறேன்".

வஸந்தலக்ஷ்மி நரசிம்மாச்சாரி (குரு) மஞ்சிராசென் (மாணவி)

கலா சமர்ப்பணா நாட்டியப் பள்ளி இயக்குநர்களும், கலாக்ஷேத்ரா பாணி நாட்டியத் தம்பதிகளுமான வஸந்தலக்ஷ்மி நரசிம்மாச்சாரி அவர்களிடம், உங்களது குரு யார்? எப்பொழுது நாட்டியம் கற்கத் தொடங்கினீர்கள்?" என்று கேட்டபோது –

" எனது குரு என் தந்தைதான். ஆந்திராவில் உள்ள ராஜமுந்திரி எனது சொந்த ஊர். நான் எனது 5 ஆவது வயது முதற்கொண்டே மேடை ஏறத் தொடங்கிவிட்டேன். எனது 14 வயதில் எஸ்.எஸ்.எல்.சி. தேறியவுடன் சங்கீதம், நாட்டியம், மிருதங்கம் முதலிய கலைகளை திருப்பதி காலேஜில் முறைப்படி பயின்றேன்".

1961இல் டெல்லியில் நடந்த கலைநிகழ்ச்சி புர்ரகதா (தமிழ் நாட்டு வில்லுப்பாட்டு போன்றது) வை பாபு ராஜேந்திரபிரசாத் முன்னிலையில் நடத்திக் காட்டும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது ருக்மிணி தேவி அங்கு வந்திருந்தார். இவரது நிகழ்ச்சியைப் பார்த்து மகிழ்ந்து இவரை சென்னைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். திருப்பதியை விட்டு கலாக்ஷேத்ராவுக்கு வந்து சேர்ந்தார். அங்கு புரொபசர் எம்.டி. ராமநாதன் அவர்களிடம் கர்நாடக இசையும், ருக்மணி தேவியிடம் நாட்டியமும், பிரபல மிருதங்க வித்துவான் பழநி சுப்புடு அவர்களின் பிரதம சீடரான ஷண்முகம் பிள்ளை மிருதங்கமும் பயின்றார்.

● "உங்களது மாணவிகளில் வித்தியாசமானவர் யார்?"

"மஞ்சிரா சென் என்னும் மாணவி".

மஞ்சிரா சர்ச்பார்க்கில் ப்ளஸ் டூ படிக்கும் மாணவி. இயற்கையிலேயே நல்ல தாளக்கட்டும் லயஞானமும் உள்ள சுறுசுறுப்பான பெண். தனக்குள்ளாகவே அனுபவித்து ஆடும் சிறப்புடைய மஞ்சிரா, நாட்டிய நாடகங்களில் எந்தப் பாத்திரம் கொடுத்தாலும் அதை சிறப்பாகச் செய்து பெயர் பெற்று விடுகிறவர்.

திருமதி இந்திரா ராஜன் (குரு) குமாரி சந்தியா (மாணவி)

"தீனுக தத்திமி தாகிடஜம் தஜம்" என்ற ஜதிக்கோவைகளும், தாளத்தின் ஒலிகளும் வரவேற்க தி. நகர் கிருஷ்ணகான சபாவில் உள்ள வாதினி நாட்டியாலயாவின் பள்ளி மாணவிகளுக்கு நடன வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார் "நட்டுவசிங்கம்" எனப் பெயர்பெற்ற கலைமாமணி இந்திரா ராஜன்.

மலர்ந்த முகத்துடன் பேட்டி தந்தார். இந்திரா ராஜன், "எங்கள் குடும்பமே இசையும் நாட்டியமும் இணைந்த கலைக்குடும்பம். எனது பாட்டியார் காரைக்கால் சுந்தராம்பாள் சிறந்த நடனமணி. எனது தாயார் சுந்தர காமாட்சி மிகவும் நன்றாகப் பாடுவார்கள். அவர்களது பரம்பரையில் வந்த நான் 6 வயதிலேயே குத்தாலம் (கும்பகோணம் அருகில் இருக்கும்) கணேசம்பிள்ளையிடம் நடனம் பயில அனுப்பிவைக்கப்பட்டேன். அந்த நாளில் , குருகுல முறைப்படிதான் நடனம் பயிலவேண்டும். குருவின் வீட்டிலேயே தங்க வேண்டும்."

வாதினி நாட்டியாலயாவைக் கடந்த பதினெட்டு வருடங்களாக நடத்தி வருகிறார்.

● "உங்களது மாணவிகளில் வித்தியாசமான மாணவி யார்?"

"சந்தியா தான்".

எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் பி.எஸ்ஸி., (கணக்கு) 2ஆவது வருடம் படிக்கும் மாணவியான சந்தியா, அனைத்துப்பள்ளி போட்டிகளிலும், அனைத்து கல்லூரிப் போட்டிகளிலும் நாட்டியத்தில் முதல்இடத்தைப் பெற்று முதல்பரிசு பெற்றுள்ளவர்.

நீலா பாலசுப்ரமண்யம் (குரு) ரதி ரஞ்சனி (மாணவி)

ஸ்ரீரங்கம் நாரணய்யர் இவருடைய தகப்பனார். நல்ல சாஹித்ய கர்த்தா. "இன்றும் எங்கள் தந்தையார் இயற்றிய வர்ணங்களையும், பதங்களையும்தான் கற்றுத்தந்து வருகிறோம்" என்று கூறுகிறார்.

இவருடைய குரு கடப்பை லக்ஷ்மி அம்மாள்.

● "உங்களது மாணவிகளில் வித்தியாசமான மாணவி யார்?"

"ரதி ரஞ்சனி.

நான்கு வயதுச் சிறுமியாக இருந்தபோதே நாட்டியம் கற்க வந்துவிட்ட பேபி ரதி ரஞ்சனிக்கு லயசுத்தம் இயல்பாகவே உள்ளது. தந்தையைப்போன்ற (வெல்வெட் ராஜ்குமார்) புத்திசாலித்தனம். தாயைப்போன்ற (சுஜாதா) அடக்கமும் கொண்ட ரதி ரஞ்சனி நாட்டியத்தில் சிறப்பான இடத்தைப் பெறுவாள் என்பது இவரது கணிப்பு.

தயாரிப்பு : திருமதி தங்கம்

நாங்கள் இந்தியர்கள்





நா. சீ. வரதராஜன்





ஆமாம். நாங்கள் இந்தியர்கள் – பல
ஆன்றோர் எங்கள் முந்தையர்கள்
பூமா துக்கொரு திலகம் எனத் திகழ்
புண்ணிய பூமியில் வந்தவர்கள்.

வாழ்ந்து காட்டிய இராமபிரான் – தெய்வ
மறையாம் கீதை தந்த பிரான்
ஆழ்ந்த ஞானத் தெளிவினில் ஆசை
அகற்றிடச் சொன்னவர் புத்தர்பிரான

சத்திய ஒளியை அரசியலில் – புதுச்
சக்தி கொடுத்திட ஏந்தியதால்
இத்தரை மீதினில் இந்த யுகத் தொரு
எழுச்சி படைத்தவர் காந்திமகான்!

அன்னோர் பாதம் நடந்த நிலம் – இதன்
அருமை போல் வேறறிந்த திலம்!
எந்நாட் டவரும் இனிதே வாழ்ந்திட
எண்ணுவ தால்புகழ் அடைந்தநிலம்!

புகழின் உயர்வாய் இமயமலை – அதன்
பூரிப் பேழுக் கடலின் அலை.
மகிழ்வின் பொழிவாய் வளரும் நதிகள்
வளங்கள் தரவே தொடர் நிலைகள்.

ஞானத் துயர்வாய்க் கோபுரங்கள் – அருள்
நாட்டிய ஒலிசெய் நூபுரங்கள்
வானத்தவரும் ஆசைப் படும் பண்
வளத்தில் விஞ்சிய பாசுரங்கள்.

சொற்கள் தீட்டும் ஓவியங்கள் – ஆம்
தூரிகை மீட்டும் காவியங்கள்
கற்களும் இங்கே பேசிடும் வண்ணக்
கலையர சாளும் ஜீவியங்கள்.

பேசுவ திங்கே பலமொழிகள் – இறை
பேணுவ தற்கோ பல வழிகள்
தேசிய நெஞ்சமிங் கிந்தியர் என்றிடும்
சீர்மையில் ஒன்றின இவ் இழைகள்.

மனித குலத்தின் மேன்மைக் காய் – புவி
வளரும் அறிவின் ஆண்மைக்காய்
இனிமை காட்டும் சமத்துவ நெறியே
எங்கும் தழைக்கும் பான்மைக்காய்

எண்ணம் தவமே ஆற்றுங்கால் – அது
எதிர்கா லத்தின் நாற்றங்கால்.
திண்ணம் ஒருநாள் உலகுக் கேஒளி
சேர்ப்பதின் நாட்டின் ஏற்றங்காண்.

இந்திய மண்ணில் பிறந்தவர் நாம் – எனும்
ஏற்றத்தாலே சிறந்தவர் நாம்.
எந்த விதத்திலும் பேதங்கள் இல்லா
எண்ணம் நிறைந்தே செறிந்தவர்நாம்.

அன்பில் செழிக்கும் ஞாலத்தை – அதில்
அருளே மணக்கும் சீலத்தை
இன்பம் தழைக்கும் சொர்க்கம் மண்ணில்
இறங்கும் ஓர் எதிர் காலத்தை.

ஒற்றுமை யாய்நாம் உருவாக்கி – இவ்
உணர்வைக் கண்முன் நிறைவாக்கி
கற்றவர் நெஞ்சம் களிக்கும் வண்ணம்
காட்டுவம் கனவை நனவாக்கி

போரை உலகம் மறந்துவிட – ஒரு
பொதுமை உணர்வில் சிறந்துவிட
நேரே இங்கொரு வேள்வி நடத்துவம்
நேசக் கதவுகள் திறந்துவிட....!

ஆமாம் நாங்கள் இந்தியர்கள் – பல
ஆன்றோர் எங்கள் முந்தையர்கள்!



(குரு) வேம்பட்டி சின்ன சத்யம்



உமா முரளிகிருஷ்ணா (மாணவி)

(மாணவி) அகிலா



சித்ரா விஸ்வேஸ்வரன் (குரு)





(குரு)கே.ஜே. சரசா



வஸுப்ரதா பராசரன் (மாணவி)

(குரு) சாம்ராஜ்






சஜிதா
கிருஷ்ணமூர்த்தி
(மாணவி)



(மாணவி) மதுமதி



உடுப்பி லக்ஷ்மி நாராயணன் (குரு)




வண்ணப்படம் :
உத்ரா

மஞ்சிராசென் (மாணவி)



வஸந்தலக்ஷ்மி நரசிம்மாச்சாரி (குரு)






(மாணவி) குமாரி சந்தியா




திருமதி இந்திரா ராஜன் (குரு)

(குரு) நீலா பாலசுப்ரமண்யம்



ரதி ரஞ்சனி (மாணவி)



திருவருள் புரியும் தேசிவிநாயகர்



வெள்ளி சர்வாபரண அலங்காரத்தில் விநாயகர்.

- சாந்தினி -

ஒத வினை அகலும் ஓங்கு புகழ் பெருகும்
காதற் பொருள் அனைத்தும் கைகூடும் - சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல் பாரதப் போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

-பெருந்தேவனார்.

தெய்வ நம்பிக்கையுடையவர்களாகிய நாம் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் கணபதியைத் தொழாமல் தொடங்குவதில்லை. நமது வாழ்வில் என்றும் - எங்கும் விநாயகப்பெருமான் கலந்திருக்கிறார். எடுத்த காரியம் இனிதாக முடிய பிள்ளையாரை வணங்கத் தவறுவதில்லை.

தமிழகத்தில் விநாயகப் பெருமான் கோயில்கள் இல்லாத ஊர்களே இல்லை எனலாம். தவிர பெரிய ஆலயங்களில் அவருக்கு நிச்சயமாக சந்நிதி இருக்கும்.

எங்கேனும் பிள்ளையார் கோயிலைக் கண்டால் சற்றே நின்று தலை வணங்காமல் யாரும் செல்ல மாட்டார்கள். அவ்வளவு புகழும், அருளும் பெற்ற கடவுளாவார். பக்தர்களுக்கு அருளை வாரி வழங்கும் தெய்வமாக விநாயகர் விளங்குகிறார்.

செட்டிநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் தலம் பிள்ளையார்பட்டி ஆகும். செட்டிநாட்டு நகரத்தார் மேற்பார்வையில் உள்ள ஒன்பது ஆலயங்களுள் பிள்ளையார்பட்டியும் ஒன்றாகும். காலத்தால் பழைமையான கோயில். மலையைக் குடைந்து உருவான குடைவரைக் கோயிலாகும்.

பொதுவாக ஆலயத்திற்கும் சரி, தலத்திற்கும் சரி வரலாற்று அடிப்படை ஒன்று இருக்கும். கல்வெட்டுகள், இலக்கிய ஏடுகள், முறையான ஆகம விதிகள், சமய ஒழுக்கம் முதலான தகுதிகளைப் பெற்றிருத்தல் கோயிலுக்கும், தலத்திற்கும் பெருமை சேர்க்கும்.

பிள்ளையார்பட்டி கோயிலும் தலமும் மேற்கூறிய எல்லாத் தகுதிகளையும் பெற்றுள்ளது.

நமது தமிழ்மொழியின் தொன்மை, கலை, நாகரிகம், பண்பாடு, சமயம் முதலியன பற்றிய செய்திகள் இக்கோயிலில் நிரம்பக் காணப்படுகின்றன.

இக்கோயிலில் எழுந்தருளிய பெருமானுக்குப்பல பெயர்கள் உண்டு. எனினும் 'தேசி விநாயகர்' என்ற பெயரே வரலாற்றுச் சிறப்பு மிக்க பெயராக விளங்குகிறது. இன்று மக்கள் 'கற்பக விநாயகர்' என்றும் கூறுகிறார்கள்.

இவ்வூர் தமிழகத்தில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து திருப்பத்தூர் போகும் வழியில் குன்றக்குடிக்கு அடுத்து இருக்கிறது. மதுரையிலிருந்தும் இவ்வூருக்குச் செல்ல பஸ் வசதி மற்றும் பல வாகன வசதிகள் உண்டு.

சமீபத்தில் இவ்வூருக்குச் செல்லும் பேறு எனக்குக் கிடைத்தது. மிகவும் அழகான ஊர். இயற்கைச் சூழலில் கோயில் அமைந்துள்ளது. மனத்திற்கு அமைதியைத் தருவதுடன் கண்களுக்கு விருந்தாகவும் உள்ளது.

இத் தலத்தின் பெயரே பிள்ளையார்பட்டி. அதனால் விநாயகப் பெருமான் நடுநாயக மூர்த்தியாக, சிறப்புடன் விளங்குகிறார்.

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் பல வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றால் இவ்வூருக்குப் பல பெயர்கள் உண்டு என்பதை அறிய முடிகிறது. எருகாட்டூர் அல்லது எக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைக்குடி, திருவீங்கைச் சரம், இராசநாராயணபுரம் என்று பல பெயர்கள் தவிர மருதங்கூர், தென்மருதூர், கணேசபுரம், கணேச மாநகரம், பிள்ளைநகர் போன்ற பெயர்களும் உண்டு. இவற்றுள் சில பிற்காலப் புலவர்கள் பாடியுள்ள பாடல்களில் காணப்படுகின்றன.

இன்று ராஜ கோபுரங்களுடன் பெரிய திருக்கோயிலாக மிக அழகுடனும், தூய்மையுடனும் விளங்குகிறது. பொதுவாக செட்டிநாட்டுக் கோயில்கள் எல்லாம் சுத்தமாகவும், அழகாகவும் காணப்படும். அவர்கள் ஆலயங்களை அந்த அளவுக்குப் போற்றி வழிபட்டு வருகிறார்கள். இக்கோயிலில் ஆகம நெறிப்படி பூசைகள் நடந்து வருகின்றன. இன்றுவரை இக்கோயிலுக்கு நான்கு முறை திருப்பணிகள் நடந்து வந்துள்ளன என்பதை அறிகிறோம்.


திருக்கோயிலின் தெற்கிலே நீண்டுகிடக்கும் குன்றில் வடதிசையாக மலையைக் குடைந்து ஆக்கப்பெற்ற குடைவரைக் கோயில் ஒன்று உண்டு. மலையைக் கடைந்தெடுத்த இக்கோயிலில் நான்கு தூண்கள் கொண்ட மண்டபம் உள்ளது. இம் மண்டபத்தின் கீழ்ப்புறத்தின் தென்பால் சுமார் ஆறு அடி உயரம் உள்ள கம்பீரமான தோற்றத்தில் விநாயகப் பெருமான்

தமிழகத்தில் மிகப் பிரபலமாக விளங்கும் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் கல்வெட்டுச் செய்திகளும் நிரம்பிய அரிய கட்டுரை இது.

இருந்த கோலத்தில் காணலாம். புடைப்புச் சிற்பமாக (Bas-relief) வடக்கு நோக்கி அமர்ந்துள்ளார். இம் மூர்த்திதான் பிள்ளையார் பட்டியின் பெருங்கடவுள் ஆவார். 'தேசி விநாயகப் பிள்ளையார்' என்ற பெயரில் வருவோர்க்கு வேண்டிய வரங்களைத் தருபவர். கற்பக விநாயகர் என்றும் அழைக்கப்படுகிறார்.

இதே குடைவரைக் கோயிலின் மேற்கே தெற்கு நோக்கிய சங்கர நாராயணர், சண்டீசன் - கருடன் இருவரும் இருபுறம் நிற்க, நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்.

குடைவரைக் கோயிலின் நடுவே கிழக்குப் பார்த்த திருவாயிலுடன் கூடிய திருவுண்ணாழி (கர்பக்கிருகம்) தூங்கானை மாடம் போன்ற வடிவில் குடையப் பெற்றுள்ளது. அதன் நடுவே குடைந்தமைந்த பெரியதொரு மகாலிங்கம் பொலிவுடன் இருப்பதைக் காணலாம். இந்த மூர்த்திக்குப் பெயர் 'திருவீசர்' என்று வழங்கும்



திருவீங்கைக்குடி மகாதேவா ஆகும். இவ்வூருக்கு திருவீங்கைக்குடி என்ற பெயர் கல்வெட்டில் உள்ளது.

பெருமானுக்குச் சற்று அருகே வடபுற வெளிச்சுவரில் வடக்கு நோக்கியபடி லிங்கோத்பவர் காட்சி தருகிறார். இந்த மூர்த்தங்கள் எல்லாம் மலையைக் குடைந்து, அமைத்தவையாகும். இக் குடைவரைக் கோயிலின் தோற்றத்தைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

தூண்கள் சதுரமாகவும், சதுரங்களில் மலர்ந்த தாமரையுடனும் விளங்குகின்றன. அவற்றின்மீது இருக்கும் போதிகைகளைப் பார்க்கும்போது 'பல்லவர் காலத்துப் பணி' போன்று தோன்றும். கருவறையில் காணப்படும் மகாலிங்கம் பட்டை வடிவம் பெறாமல் முழுதும் உருண்டை வடிவம் பெற்றுள்ளது. இதைப் பார்த்தால் பழைய, தொன்மையான படைப்பு என்பதை வலியுறுத்துவதாய்க் காணப்படுகிறது.

அன்றியும் புகழ்பெற்ற விநாயகப்பெருமான் நான்கு கரங்களுடன் அல்லாமல் இருகரங்களுடன் வீற்றிருக்கிறார். பொதுவாக நான்கு கரங்களுடன் விளங்கும் விநாயகர் இங்கு இருகரங்களுடன்தான் உள்ளார். இவற்றையெல்லாம் நோக்கும்போது பண்டைய திருப்பணியே என்று தெற்றெனத் தோன்றும். தவிர சிற்பங்கள் யாவும் புடைப்புச் சிறபங்களே. இங்கு காணும் எருக்காட்டூர் அல்லது எக்காட்டூர் என்ற கல்வெட்டு எழுத்துகள் சுமார் 1600 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று தெரிகிறது. இக்காரணங்களால் இக் குடைவரைக் கோயில் பல்லவர் காலத்திற்கு முந்தியது என உறுதியாகக் கூறலாம்.

மற்றொரு சான்றும் உள்ளது - குடைவரைக் கோயிலில் 'பெருபரணன்' என்ற ஒரு மன்னனின் பெயர் கல்வெட்டில் உள்ளது. இதை ஆயும்போது மகேந்திர வர்மன் (பல்லவர்) காலத்திற்கு இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தையது என்று இக்குடைவரைக் கோயிலைக் கூறலாம்.

பல்லவர் காலத்திலே நடந்தது வாதாபிப்போர். போரில் வெற்றியையும் புகழையும் பெற்றவர் பரஞ்சோதியார். நரசிம்மவர்மனின் ஆதரவைப் பெற்றார். அவருக்குப் போதிய நிதியும், பெரு நிலமும் அளித்து நெறித் தொண்டுகளைச் செய்யுங்கள் என்று விடை கொடுத்தான்.

மன்னரிடம் விடைபெற்றுக்கொண்டு தனது சொந்த ஊராகிய திருச்செங்காட்டங்குடிக்குச் சென்று விநாயகப் பெருமானுக்கு ஓர் ஆலயத்தை அமைத்தார். அவருக்கு வெற்றியைத் தந்தது விநாயகப்பெருமான்தான் என்ற எண்ணம். 'கணபதீச்சரம்' என்ற பெயரையும் சூட்டினார். அவர் காலத்தில் பிள்ளையார் வழிபாடு தமிழகத்தில் எங்கும் பரவியிருந்தது. பரஞ்சோதியாரின் பக்தியைப் போற்றி திருஞான சம்பந்தப் பெருமான்அங்கு எழுந்தருளியுள்ள விநாயகர்மீது இரு பதிகங்களைப் பாடியுள்ளார்.

வாதாபி வெற்றிக்குப்பிறகு பல்லவ ஆட்சி அமைதியுடன், சிறப்பாக நடந்து வந்தது. அந்தக் கால கட்டத்தில்தான் நரசிம்மவர்மன் தன் தந்தை விட்டுச் சென்ற, முற்றுப் பெறாத குடைவரைக் கோயில் களைச் சிறப்பாக முடித்து வைத்தான். பரஞ்சோதியாரான சிறுதொண்டர் திருச்செங்காட்டங்குடியில் கோயிற்பணியைத் தொடங்கி நடத்தும்போது நரசிம்ம வர்மன் அங்கு சென்றிருக்கலாம் என்று அறிஞர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

பிள்ளையார்பட்டி கோயில் திருச்செங்காட்டங்குடி 'கணபதீச்சரம்' ஆலயத்துக்கு முன்பே அமைந்திருக்கக் கூடும். கல்வெட்டுச் செய்திகளும் இதனையே உறுதிப்படுத்துகின்றன. பாண்டிய மண்டலத்தில் பிள்ளையார்பட்டி இருப்பதால் இங்கு பல்லவர் காலக் கோயில் பணிகள் இருந்ததற்குச் சான்று ஏதும் கிடைக்கவில்லை. கழுகுமலை, குடைவரைக் கோயிலைப் பார்க்கும்போது பிள்ளையார்பட்டி பாண்டியர் காலத்துத் திருப்பணி என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

இக் குடைவரைக் கோயிலினுள்ளே காணப்படும் கல்வெட்டுகள் தூணிலும், சுவர்களிலும் காணப் படுவதால் ஓரளவு செய்திகளைத்தான் தெரிந்து கொள்ள முடிகிறது.

இக் குகைக்கோயிலுக்கு அருகே, அதாவது சற்று வடக்கே சில அடிகளில் கல்லால் கட்டப்பெற்ற பழைய கோயில் ஒன்று இருக்கிறது. இங்குள்ள பெருமானின் திருப்பெயர் 'மருதங்குடி நாயனார்' என்பதாகும். இன்று சிறப்பு மிகுந்த சில திருப்பணி களால் பெருங்கோயிலாகக் காணப்படுகிறது. பழைய சுற்றளியில் சில கல்வெட்டுகள் இருந்திருக்கலாம். திருப்பணி நடைபெறும் காலத்தில் அவை மறைந்து போயிருக்கக்கூடும். இதனால் மேலும் பல விவரங் களை அறிய முடியாமல் போயிற்று.

அங்குள்ள ஒரு கல்வெட்டில் கீழ்க்காணும் செய்தி உள்ளது. பாண்டிய மண்டலத்தை வென்று ஆட்சி செய்து கொண்டிருந்த (பரகேசரி மூன்றாம் குலோத் துங்கன்) கோனேரின்மை கொண்டானிடம் பிள்ளையார் பட்டி நகரத்தார் கோயிலின் பொறுப்பின் முழு உரிமையையும் பெற்றுக் கொண்டார்கள். அவன் அவர்களுக்குக் கொடுத்த திருமுகத்திலிருந்து மருதங் குடியில் இராச நாராயணபுரம் என்ற பெயருடன் ஓர் ஊரை அமைத்து அங்கு குடியேறி வாழ்ந்து வர அனுமதியையும் கொடுத்துள்ள செய்தியை அக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

பிள்ளையார் பட்டி குடைவரைக் கோயிலின் வடதிசைநோக்கி எழுந்தருளும் பிள்ளையாரப்பனை, "தேசி விநாயகப் பிள்ளையார், என்று சில கல்வெட் டுகள் குறிப்பிடுகின்றன. தேசி விநாயகர் என்றால் ஒளிமிக்க, அழகுள்ள விநாயகர் என்ற பொருளைக் குறிக்கும். தவிர 'தேசிகன்' என்ற சொல் வணிகர் களைக் குறிக்கும் சொல்லாக அமைந்துள்ளது. இக் கருத்தை அமரர் சா. கணேசன் அவர்கள் தெரி வித்துள்ளார்.

தேசி விநாயகர் என்றால் 'வணிககுலம் பணியும் விநாயகர்' என்ற பொருளாகும். அதனால் நகரத்தார் வணங்கும் பிள்ளையார் என்ற பொருள்படும்படி 'தேசி விநாயகர்' என்ற பெயரை இப்பெருமான் பெற்றார். நகரத்தார்கள் வணிகத்திலே மிகச்சிறந்து விளங்குவர் என்பது யாவரும் அறிந்த உண்மை.

குடைவரைக் கோயிலில் சிவபெருமான் "திருவீங் கைக்குடி மகாதேவர்" என்ற பெயரைக்கொண்டவர். இச்செய்தி அங்கு காணப்படும் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. மேலும் திருவீங்கைக் குடி நாயனார், மருதங்குடியான், இராசநாராயணபுரத்து உடையார், திருவீங்கைச் சுரமுடைய நாயனார் என்ற பெயர்களை யும் காணலாம்.

ஈங்கை என்பது ஒருவகைச் செடியாகும். சந்தன மரம் என்றும் கூறுவர். ஆனால், இங்குள்ள தட்பவெப்ப நிலையில் சந்தனமரம் வளர வாய்ப்பில்லை. எனவே, ஈங்கைக்குடி அல்லது ஈச்சங்குடி என்பது குறிப்பிட்ட ஒருவகைச் செடிகள் நிறைந்த பகுதி என்றே இருத்தல் வேண்டும்.

இங்கு சுற்றிலும் வயல்கள் நிறைந்துள்ள பிரதேச மாகும். இவ்வயல் பகுதிக்கு குன்னா வயல் என்ற பெயர் வழங்கப்படுகிறது. கல்வெட்டுகளில் "திரு வீங்கைக்குடி பால் குன்ற வயல்" என்று குறிப்பிடப்பட் டுள்ளதைப் பார்க்கும்போது ஈங்கைகுடி என்ற பெயரால் ஈச்சங்குடி அழைக்கப்படுகிறது என்பது தெளிவு. மேலும் 'குன்ற வயல்' என்பது 'குன்னா வயல்' என்று மருவி வழங்கி வந்துள்ளதையும் அறியலாம். 'திரு' என்ற அடைமொழியையும் கூட்டி 'திரு வீங்கைக்குடி' என்று வழங்கி வருகிறது. காலப் போக்கில் உண்மையான பெயர்கள் மருவிப் போவ துண்டு. இங்கு ஆராய்ச்சியாளர்களுக்கு நிறையச் செய்திகள் கிடைக்கும்.

மேலே சொன்ன விவரங்கள் குடைவரைக் கோயி லில் குடிகொண்டுள்ள சிவபெருமானின் கருவறைக் கருகே காணப்படுகின்றன.

சிவபெருமானுக்குத் தனியான கற்றளிக் கோயில் உள்ளது. அங்கு 'திருமருதங்குடி நாயனார்' என்ற பெயரைத்தாங்கியுள்ள கல்வெட்டு காணப்படுகிறது. இன்று இப்பெருமானை 'மருதீசர்' என்று அழைக் கிறார்கள்.

குடைவரைக் கோயிலில் உள்ள 'மகாதேவர்'க்கு 'சிவகாமி என்ற இறைவியும், கற்றளியில் உள்ள சிவனார்க்கு 'வாடாமலர்' என்ற அம்மனும் முறையாக அழைக்கப்படுகின்றனர்.

சிவபெருமானின் திருவுருவம் காரணமாக ஊருக்கு காரணப் பெயர் தோன்றியிருக்க, பிள்ளையாரின் மகிமையின் பொருட்டு ஊருக்கே 'பிள்ளையார் பட்டி' என்று இன்றுவரை வழக்கில் இருந்து வருகிறது.

பிள்ளையார்பட்டிக் குடைவரைக் கோயிலிலிருந்து இதுவரை பதினொரு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. திருப்பணிகள் மூலம் சில மறைந்திருக்க லாம் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

கல்வெட்டுகளில் வரலாற்று அடிப்படையில் பார்த் தால் பிள்ளயைார்பட்டியின் காலத்தை அறியக் கூடும் - அப்படி ஆயும்போது கீழ்க்காணும் தகவல்கள் மூலம் ஊரின் தொன்மையை அறியலாம்.

சீவலப்ப தேவர் - கி.பி. 1091 - 1116.

விக்கிரம பாண்டி தேவர் - கி.பி. 1180 - 1190.

கோனேரின்மை கொண்டான்.

குல சேகர தேவர் - கி.பி. 1266 . 1311.

3 ஆம் குலோத்துங்க சோழர். கி.பி. 1178 - 1222.


சுந்தர பாண்டிய தேவர் - கி.பி. 1216 - 1238.

சுமார் 1600 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இப்பழம் பெரும் கோயில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 13 ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் பிள்ளையார்பட்டிக் கோயில் செட்டி நாட்டு நகரத்தார்க்கு உரிமையாயிற்று என்று வரலாறு கூறுகிறது.

கோயில் நிர்வாகம், சுற்றியுள்ள வயல்களின் நிர் வாகம் எல்லாம் நகரத்தாரிடமிருந்தது. இன்றும் அவர்கள்தாம் சிறப்பாக நிர்வகித்தும் வருகிறார்கள்.

நகரத்தார் கோயில் திருப்பணிகளையும் ஆகம முறைப்படி செவ்வனே செய்து வருகிறார்கள்.

பிள்ளையார்பட்டியில் பல திருவிழாக்கள் நடத்தப் படுகின்றன. ஒவ்வொரு சதுர்த்தி அன்றும் இரவு விநாயகப் பெருமான் வெள்ளி மூஷிக வாகனத்தில் எழுந்தருளி, கோயில் உட்பிராகாரத்தில் வலம் வரு



வார். ஆவணி மாதத்தில் வரும் விநாயக சதுர்த்தியே இவ்வூரில் நடக்கும் பெரு விழா ஆகும். பிள்ளையார் சதுர்த்திக்கு ஒன்பது நாள் முன்னதாகக் காப்புக் கட்டி, கொடியேற்றம் செய்து திருவிழா தொடங்கும். இரண்டாம் நாளிலிருந்து எட்டாம் நாள் வரை விநாயகப் பெருமான் பல்வேறு வாகனங்களில் வீற்றிருந்து ஊர்வலம் வருவார். ஒன்பதாம் நாள் தேரிலும் ஊர்வலம் வந்து, பத்தாம் நாள் காலையில் தீர்த்தவாரி நிகழும். தேர்த்திருவிழா மிக விமரிசையாக நடக்கும்.

சதுர்த்தி விரதம் மேற்கொள்வோர், சதுர்த்தி விரதம் நிறைவு செய்வோர் யாவரும் கூட்டம் கூட்டமாக வந்து தேசி விநாயகர் சந்நிதியில் நாள்முழுதும் உண்ணா நோன்பிருந்து, ஜபம் செய்து, அபிஷேகம் நடத்தி விரத பலனை அடைந்து, பெருமானின் அருளுக்குப் பாத்திரராகி விளங்குவார்கள்.

பிள்ளையார்பட்டியில் விநாயகருக்குத் தனிப் பெருமைகள் உண்டு. உருவ அமைப்பில் எங்கும் காணாத அம்சங்கள் உள்ளன.

1. இங்கு பெருமானின் துதிக்கை வலம் சுழித்த தாகக் காணப்படும்.

2. பிற மூர்த்தங்களைப் போல் நான்கு கரங்கள் இல்லாமல் இரண்டு கரங்களைக் கொண்டிருப்பது தனிச்சிறப்பாகும்.

3. அங்குச பாசங்கள் இல்லாமல் விளங்குவது.

4. வயிறு ஆசனத்தில் படியாமல் 'அர்த்தபத்ம' ஆசனம் போன்று கால்கள் மடித்திருக்க அமர்ந் திருப்பது.

5. இடக்கரம் கடிஹஸ்தமாக இடையில் தாங்கி பெருமதிக் கோலத்தில் தோன்றுகிறது.


6. வலக்கரத்தில் மோதகம் தாங்கி உள்ளது.

7. வலத் தந்தம் நீண்டும், இடத் தந்தம் குறுகியும் காணப்படுவது. இவற்றையெல்லாம் நோக்கும் போது தமிழகத்தில் பழங்காலந்தொட்டே விநாயக வழிபாடு இருந்து வந்துள்ளதை அறியலாம். விநாயகப் பெருமானின் பெருமை, சக்தி எல்லாம் சொல்லுக்கும், வார்த்தைக்கும் அடங்காது. அவனது அருளும் பெரிது. நாம் அப்பெருமானின் தாள் வணங்கி அவனருளை அடைவோமாக!

நன்றி : வரைபடமும் - தகவல்களும். பிள்ளையார் பட்டி கற்பக விநாயகர் நகரத்தார் அறநிலை.

தும்பிக்கையானே துணை வருவாய்!

ஓ. ஆர். லக்ஷ்மி



ஒரே கோட்டில் உருவான கணேசர் படம்

இராகம் : நாட்டை. தாளம் : ஆதி.

பல்லவி

காக்கும் கடவுள் கணேசனே துணை
காவியம் படைத்துக் காக்கவே எனை. (காக்கும்)

அனுபல்லவி

நாவினில் நடனம் ஆடிட நினை
நாதனே உனது ஆசியோ டெனை. (காக்கும்)

சரணம் - 1


பார்தனில் எனக்கேன் பலவித சோதனை
பார்வதி பாலனே பால கணேசனே
பழந்தனைப் பெறவே செய்தனை யோசனை
வெற்றியும் கண்டே பெற்றனை கனிதனை. (காக்கும்)

சரணம் - 2

கண்டான் கந்தன் கொண்டான் வேதனை
அண்ணனே கணநாதனே செய்வாய் சிந்தனை
செய்ததும் நியாயமா? தம்பிக்கே வஞ்சனை
கந்தனே கனியாக அமர்ந்த பழனிப் பதிதனை. (காக்கும்)

சரணம் - 3

அம்பிகை பாலனே இலக்குமி நானுனை
நம்பிக்கை யாகவே பாடலைப் பாடினேன்
நாட்டையில் பாடலைப் பாடிடத் தூண்டினை
தும்பிக்கை அண்ணனே துணைவரும் ஐயனே. (காக்கும்)



மங்கையரின் உயிருக்குயிரான மங்கல நாண் இருக்கவேண்டியது மஞ்சள் கயிற்றிலா, மஞ்சள் வண்ணம் மின்னும் பொன்னிலா? என்ற கேள்விக்கு இக்கதையின் நாயகி சிந்தாமணி விடை கண்டுகொண்டாள்.

மருவூர்ப்பாக்கத்துப் பெருந்தனக் காரர் மாணிக்கவேலர் நோய்வாய்ப் பட்டதிலிருந்து அவருடைய செல்வ மகன் மணிவண்ணன் தான் வாணி கத்தைக் கவனித்து வந்தான். அவனுடைய கவனிப்பிற்குப் பிறகு, வரவு செலவு மயக்கத்தில் ஒரு புதிய படலம் தொடங்கலாயிற்று. இனிமையாகப் பேசி ஏமாற்று வித்தைகள் செய்யும் பலர் இதனால் ஏமாறலாயினர். பாவம்! இந்த மாணிக்கவேலருக்கு ஏன்தான் கை, கால் விளங்காமல் போயிற்றோ? – இப்படி அந்தப் பெரிய மனிதர்கள் பேசலாயினர்.

என்றும்போல் அன்றும் வேலையோடு வீடு திரும்பினான் மணிவண்ணன். எப்போதும் போலவே அவனுடைய இனிய மனையாள் வாயிற்காலில் காத்து நின்று வரவேற்றாள். அவளுடைய முகத்தின் பொலிவிலே தன்னுடைய அகத்தின் பெருமிதத்தைத் துய்த்தவண்ணம் புன்னகையை வழங்கியவாறு வீட்டுள் புகுந்தான். குளியலை முடித்தான். குடியலை அருந்தினான். குதூகலத்துடன் பஞ்சணை இருவரையும் தலையணைக் கரம் கொண்டு வரவேற்றது.

"என்னங்க, நான் சொன்னதைப் பத்தி ஏதும் சிந்திக்கவில்லையா?"

"நீ எத்தனையோ சொல்லியிருக்கிறாய். எதைப் பற்றிச் சிந்திக்கச் சொல்கிறாய் சிந்தாமணி?"

"உங்களுக்கு எப்பொழுதும் இப்படிப் பேசித்தான் பழக்கம். தங்கவடம் பற்றிச் சொன்னேனே, அதுதான்..."

மணிவண்ணன் 'கலகல'வென்று நகைத்தான்.

"ஓகோகோ! தங்க வடமா? அப்படி என்றால் உன் முடிவு அசைக்க முடியாத முடிவு... இல்லையா?"

"ஆறுமாத காலமாக மாற்றிக் கொள்ளாதவள் இனிமேல் தானா மாற்றிக் கொள்ளப் போகிறேன்? அத்தான்..."

"போதும். உனக்கு மஞ்சள் கயிற்றுத் தாலிக்கு மாறாகத் தங்கவடச் சங்கிலியில் தாலியைக் கோத்துக் கொள்ள வேண்டும். அவ்வளவு தானே?"

சிந்தாமணி சிறிதும் தயங்காமல் தலையசைத்தாள்.

"சிந்தாமணி! நன்றாகச் சிந்தித்து மீண்டும் சொல். ஐந்து கழஞ்சு தங்கத்தில் உனக்கு வடம் செய்து கொடுப்பதில் எனக்கொன்றும் அட்டியில்லை. ஆனால், தாலி, கயிற்றில் தான் தொங்க வேண்டும். அதுதான் உலக நியதி".

"அணிந்து கொண்டிருப்பவர்களெல்லாம் நியதி அறியாமல் தான் நடந்துகொள்கிறார்களா?"

"அடுத்த வீட்டுக்காரன் பெண்டாட்டியை அடிக்கிறான் என்பதற்காக நான் உன்னை அடிக்க வேண்டுமா?"

சிந்தாமணி ஒருகணம் தலை குனிந்து காணப்பட்டாள்.

"ஆகட்டும், சிந்தாமணி! நாளையே நம்முடைய பொற்கொல்லரிடம் கூறி வடச்சங்கிலி செய்யச் சொல்லுகிறேன். போதுமா?"

சிந்தாமணி முகத்திலே குறுநகை சிந்தியது.

தங்கவடச் சங்கிலியில் தாலியைத் தாலாட்டினாள் சிந்தாமணி. அவளுடைய நெடுநாளைய எண்ணம் நிறைவு பெற்றுவிட்டது. அதிலே ஓர் அலாதி இன்பம் துய்த்தாள். அடுத்த வீட்டுக்காரர்கள் மத்தியில் இப்போது அதைத் தன் கழுத்தில் போட்டுக் கொண்டு நடையும் நடக்கத் தொடங்கினாள். 'லட்சாதிபதி மனைவி. நினைத்ததைச் செயலாக்குவதில் வியப்பென்ன?' என்று மற்றவர்கள் நினைத்தனர். இதனால், யாரும் அவளைப் பொருட்படுத்தினார்களில்லை.

விடிந்தும் விடியாததுமாக சிந்தாமணி தன்னை வெகுவாக அலங்

கரித்துக் கொண்டாள். அலங்கரித்துக் கொள்வதற்கும் சில உத்திகள் தேவைப் படுகின்றன என்ற கலைநோக்கில் தானே ஆண்டவன் பெண்களைப் படைத்திருப்பதே!

மனையாளின் அலங்காரத் திரு வுருவை ஓரக்கண்களால் கவனித்த வண்ணம், கண்ட வீதிக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தான் மணி வண்ணன். அடடா! இந்தத் தங்கவடச் சங்கிலி செய்து கொடுத்ததில்தான் சிந்தாமணிக்கு எத்துணை பெரு மகிழ்ச்சி? காசு மாலையும், கண்ட மாலையும், மணிமாலையும், மாங்காய் மாலையும் இருந்தும், இந்தத் தங்கச் சங்கிலியில் ஏன் இத்தனை உயிர்? கணவன் சொல்லியும் பிடிவாதமாக இதைச் செய்து போட்டுக் கொண்டாள் என்றால், ஏதோ ஒரு மறைவு பொதிந்து தான் இருக்க வேண்டும். அப்படி என்ன மறைவு வேண்டிக் கிடக்கிறது? மற்ற பெண்களுக்கு முன், எந்த விதத்திலும் தான் குறைந்தவ ளில்லை என்று காட்டிக் கொள்ளத் தானே ஒவ்வொரு பெண்ணும் விரும்பு கிறாள்? இது அழகற்ற பெண்ணுக்கு மிருக்கும் சிறுமைத்தனமென்றால், சிந்தாமணி போன்ற அழகுப் பெட்ட கங்களுக்கு?

மணிவண்ணன் கடைக்குப் புறப் பட்டான்.

"அத்தான்! உத்தரவு பெற்றுக் கொள்ளுகிறேன்".

மணிவண்ணன் எப்போதும்போல் புன்னகை பூத்த முகத்துடன், "தூய்மை நிறைந்த காவிரியன்னை உனக்குத் துணை நிற்பாளாக" என்றான்.


சிந்தாமணியின் பவழ உதடுகளில் வானத்து மூன்றாம் பிறை வந்து குடிபுகுந்தது.

விடிந்து பத்து நாழிகை பறந்தது.

புகார் நகர வீதிகளில் புனிதப் பெண்கள் கூட்டம் கூட்டமாய்க் காவிரிக் கரைநோக்கிப் பயணமாகிக் கொண்டிருந்தனர். அன்று காவிரி யாளின் புதுப்புனல் பொங்கு விழா.

சிந்தாமணியும் வேலைக்காரியின் தலைமேல் பொங்கல் பானையை ஏற்றிவிட்டு, முதலில் மாமனாரிடம் விடைபெற்றாள். மாணிக்கவேலரும் படுக்கையிலிருந்த வண்ணம் வாழ்த்தி வழிகூட்டினார். அடுத்து மாமியாரிடம் விடைபெறச் சென்றாள். ஆண்டு தோறும் உடன் வரும் மாமியார், அப்போது உடன் வரமுடியாது என்பதை அவளறிவாள். மாமனாருக்குப் பக் கத்திலிருந்து துணை புரிபவர்கள் யார்?

அடுக்களையில் மாமியாரைக் காணோம். பால் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. விரைந்து உள்ளே சென்று, தண்ணீர் தெளித்துக் கொதியை அடக்கினாள். 'இன்னும் சில நாழிகைகள் கழித்து உன்னு





டைய மனத்தில் ஏற்படப்போகும் கொதியை அடக்கிக் கொள்ள முடியப் போகிறதா?' என்று எள்ளி நகையாடிய வண்ணம் பால், பதுங்கும் நாகத்தின் படம் போல் அடங்கியது.

நேராகக் குளியலறைக்கு விரைந்து சென்றாள் சிந்தாமணி. அங்கே அவளுடைய மாமியார் நீராடிக் கொண்டிருந்தாள்.

சிந்தாமணி குளியலறையுள் நுழையும்போது அவளுடைய மாமியார் தாலிக் கயிற்றுக்கு மஞ்சள் தடவிக் கொண்டிருந்தாள். அந்தக் காட்சி ஒரு கணம் சிந்தாமணியின் கண்முன்னால் நின்றது. மறுகணம், உத்தரவு பெற்று காவிரிக் கரைநோக்கிக் 'கற்புநடை' நடந்தாள்.

கரிகால் பெருவளத்தார் கால முதற்கொண்டு நடந்துவரும் இந்தப் புதுப்புனல் பொங்கல் விழா, சில ஆண்டுகளாக்ச் சிறப்பின்றி மங்கி வரலாயிற்று. காரணம், சோழர்களுடைய ஆட்சி அப்போது அந்திவான நிலைமை. களப்பிரர்கள் குடியேற்றம் நாடு முழுவதும் கொட்டடிக்கலாயிற்று. இதனால் நாடே இருண்ட காடாக மாறிவிடுமோ என்று அஞ்சியவர்களும் உண்டு. அப்படியும்கூட வழிவழியாகத் தொடர்ந்து வரும் எந்த விழாக்களையும் மக்கள் மறந்தார்களில்லை. ஒரேகுறை... மன்னர்களின் மேற்பார்வையில் அது சிறக்கவில்லை; நிறைக்கவில்லை.

காவிரியாள் புதுப்புனல் பொங்கல் விழாவில் கலந்து கொண்ட சிந்தாமணியும் பதினெட்டுக் குடுவைப் பொங்கலிட்டு, மஞ்சள் குங்குமத்தைப் புனலோட்டத்தில் கலந்து, சில பொன், வெள்ளி நாணயங்களைப் புனலிலே இறைத்து வணங்கி வழிபட்டு, வீடு திரும்பலானாள். கூட்டத்தின் பொலிவு காவிரிக் கரையையே குதூகலத்தில் ஆழ்த்தியது.. பல ஊர்களிலிருந்து பல் வேறுபட்ட வேடிக்கைக்காரர்கள் பல வழிகளில் பொருளீட்டிக் கொண்டிருந்தனர். பஞ்சத்தால் நெஞ்சம் வெறுத்தவரும்கூட அங்கு நடமாடலாயினர். ஆட்சிப் பொறுப்பில்லா நாடு அவலம் நிறைந்த காடுதானே?

மருவூர்ப்பாக்கம் செல்லும் நெடுஞ்சாலையில் கூட்டத்தோடு கூட்டமாக நடந்து கொண்டிருந்தாள் சிந்தாமணி. காவிரியாளை வணங்கியதில் அவளுக்கொரு கவலையில்லாத பெருமகிழ்வு.

வீடு நெருங்கியது. உச்சி வெயில் பூமியை உருக்கிக் கொண்டிருந்தது. கழுத்தில் அரும்பிய வியர்வையைத் துடைக்க வேண்டி முன்றானையை அவிழ்த்தாள்; துடைத்தாள். அப்போது...



பாலிக்க வந்த பதம்

கவியரசர் இளந்தேவன்

பத்தாகி நிற்கின்ற திசையெங்கும் பக்திமணம்
பாலிக்க வந்த பதமே!
பகலிரவு அற்றதொரு சுகநிலையில் எப்பொழுதும்
பரவிவரும் பரமநதியே!

சத்தாகிச் சித்தாகி ஆனந்த மாம்ஆதி
சங்கரன் தந்த குலமே!
சக்திவளர் காஞ்சிநகர்ப் பீடமதில் ஒளிவீசும்
சங்கரர் என்னும் மணியே!

வித்தாகி மூலத்தின் விதையாகி இப்புவியின்
வேரான இந்து மதமே!
வேதத்தின் உதயமே! நாதத்தின் இதயமே!
வேதாந்த சித்தாந்தமே!

முத்தாகிப் புன்முறுவல் முகங்காட்டும் அண்ணலே!
முழுமதிச் சுடர்வெள்ளமே!
முழுஞானச் செல்வமே! சிவனார்க்கு வில்வமே!
முத்திதரும் அருள்உள்ளமே!

தேவிக்குள் ஒளிவீசும் தெய்வீக மணி என்று
தேசங்கள் போற்றும் குருவே!
திருவுக்கும் திருவான திருவாளன் திருமார்பில்
திகழ்கின்ற மணியின் உருவே!

காவிக்குள் ஒளிவீசும் காவியப் பொருள்என்று
கண்கூற வந்த கதியே!
கடையர்க்கும் கடைத்தேற்றம் கட்டாயம் உண்டென்று
காட்டவரும் அன்புநிதியே!

வாவிக்குள் தாமரைகள் வானமுதம் தந்துதவும்
வளமார்ந்த காஞ்சி அமுதே!
வண்டுகளின் செந்தமிழில் வானவரும் நெஞ்சுருகி
வந்துவிடும் காஞ்சிவரமே!

ஆவிக்குள் கண்கொண்டு பார்க்கின்ற ஆனந்தம்
அருள்கின்ற எங்கள்முனியே!
அன்னையவள் காஞ்சிநகர்ப் பீடமதில் ஒளிவீசும்
அகிலகுரு வானமணியே!

மனம் 'பகீ'ரென்றது. ஒரு முறைக்குப் பத்துமுறை கழுத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். கனத்த கண்டமாலை, அந்தக் கட்டுக் கழுத்தில் வீற்றிருந்ததேயொழிய தங்கவடத் தாலியைக் காணோம். பஞ்சத்தால் அடிபட்ட எவன் கையோ அதைப் பதம் பார்த்துவிட்டது.

சிந்தாமணியின் நெஞ்சிலே விக்கலும் விம்மலும் குடிபுகுந்தன. கணவனுடைய கேள்விக்கு என்ன மறுமொழி கூறப்போகிறோம்? என்ற வேதனையே மேலோங்கி நின்றது. அப்போது, தன்னுடைய மாமியார், பயபக்தியுடன் தாலிக் கயிற்றுக்கு மஞ்சள் பூசிக்கொண்டிருந்த அந்தக் காட்சி நெடுநேரம் வரை அவளுடைய நெஞ்சில் நிலைத்தது. மஞ்சளின் மகிமையை அப்போதுதான் அவள் மனம் நினைத்துப் பார்க்கத் தொடங்கியது.

மாலை வந்தது. மணாளனும் வந்தான். வழக்கமான கடமைகளை முடித்துக் கொண்டு, வாடிக்கைபோல் பஞ்சணையை அடைந்தான். அங்கே என்றுமில்லாமல் அவள் கண்டகாட்சி, அவனைத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. கண்ணீரும் கம்பலையுமாய்த் தலையணையிலே முகம் புதைத்துக் காணப்பட்டாள் சிந்தாமணி.

காரணம் புரியாமல் திகைத்த மணிவண்ணன் மனையாளை அன்புடன் தழுவிக் காரணம் கேட்டான். சிந்தாமணியும் கேவிய குரலில் நடந்ததை மெதுவாகக் கூறினாள். முழுவதையும் கேட்ட மணிவண்ணன் கலகலவென்று முன்பு போலவே நகைத்தான். பிறகு அலட்சியமாகச் சொன்னான்.

"சிந்தாமணி! இதற்கா கவலைப் படுகிறாய்? ஐந்து கழஞ்சு தங்கம் தானே போயிற்று? கவலை இல்லை. இன்னொரு வடம் செய்து கொண்டால் போகிறது!"

சிந்தாமணி சில கணங்கள் கணவனை உற்றுக் கவனித்தாள். அடுத்து அவனுடைய ஆதரவுக் கரங்களைக் கண்களிலே ஒற்றிக் கொண்டு கூறினாள்.

"வேண்டாம் அத்தான்! தாலியைக் கயிற்றில்தான் தாலாட்டவேண்டும். அப்போதுதான் அது இதயமில்லாதவனுக்குக்கூட இதயத்தை உண்டாக்கும்!"

ஃ

தேசியம் வளர்த்த 'தேமதுர' பாஸ்கரதாஸ்



-ரசுமி-

"பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரதநாடு!"
"பாரநாடு பழம் பெரும் நாடே
பாடுவோம் இ..தே எமக்கில்லை ஈடே!"

- என நமது புண்ணிய பாரதத்தின் பெருமைகளைப் பாடி மகிழ்ந்தான் மகாகவி பாரதி.

ஆனால் நம் பாரதம் ஆங்கிலேயரிடம் அடிமைப் பட்டு, கைவிலங்குகளோடு தலைவணங்கி, மண்டி யிட்டுக் கிடப்பதை அறிந்த அதே கவி பாரதிக்கு வந்ததே ஆவேசம். அவனது நெஞ்சில் சுதந்திர உணர்ச்சி பீரிட்டது.

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னை கைவிலங்குகள் போகும்?"

என தனது அனல் தெறிக்கும் கவிதைகளால் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பினான். நாடே கொதித்து எழுந்து, ஆட்சியாளருக்கு எதிராகக் கூக்குரல்களை எழுப்பியது.

மகாகவி பாரதி வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்த மற்றொரு கவியும் அன்னியரின் ஆதிக்கத்தை எதிர்த்து மிகுந்த குமுறலோடு :

"சத்தியமென்றுமே தளராதநாடு - இந்து
தேசந்தனைப் புகழ்ந்து பாடு - நல்ல
வித்யானுகூல முன்னநாடு - இதில்
விளையும் பற்பல சொர்ணமேடு!
ஆங்கிலேயர் தேடிவந்த தேசம் - நம்மை
ஆள நேரிட்டதவர் பாசம் - இனி
ஓங்கி இருப்பதுவும் மோசம் - இன்னும்
ஏன் வரவில்லை இந்தியருக்கு ரோஷம்?"

.எனப் பாடினார்.

முதலில் பாடிய மகாகவி பாரதி காதுகளை மூடியுள்ள சுருள்விட்ட 'முண்டாசு' தலைப்பாகைக் காரர். முறுக்கிவிட்ட "குத்து" மீசைக்காரர். பிறந்தது 1882 இல் கரிசல் மண் பூமியான எட்டயபுரத்தில். அடுத்துப் பாடிய கவி 'மதுர' பாஸ்கரதாஸ் கதர்க் குல்லாய்க்காரர். காதுகளில் வெள்ளைக் கடுக்கன்கள் அணிந்திருப்பார். இவரும் முறுக்கிவிட்ட 'நீட்டு' மீசைக்காரர். இவர் பிறந்தது 1892 இல் சங்கத்தமிழ் வளர்த்த மாமதுரையில். இவர் கவிபாரதியை விடப் பத்து வயது சிறியவர். மகாகவி பாரதி மதுரை சேதுபதி பள்ளியில் ஆசிரியராக இருந்தார். அந்நாளில் சென்னையில் பிரபல பழம்பெரும் தமிழ் தேசிய நாளேடான 'சுதேசமித்திர'னில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். இதனால் அவர் நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்துக் கிளம்பிய போராட்டங்களை நன்கு அறியலானார். அந்த வேள்வியில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். ஆட்சியாளர்களின் அநீதி களைக் கண்டித்துப் பத்திரிகைகளில் கட்டுரைகளை யும், கவிதைகளையும் தீட்டினார். அதனையே மேடை களிலும் வீராவேசத்தோடு பேசினார்! பாடினார்! இவரது செயல்கள் ராஜத்துரோகமென்று ஆட்சி யாளர்கள் அவற்றைத் தடை செய்தனர். தடை களையும் மீறினார்! கவிபாரதி கைதாகிச் சிறையில் அடைக்கப்பட்டார். இவரது பெயரோடு கவிதைகளும் புகழ்மணத்தன.

ஆனால் 'மதுர' பாஸ்கரதாஸ் கவிதைகளை எழுதிப் பிறருக்குத் தந்தார். அவற்றை 'தேசாபிமானிகள்' தெருச் சந்திகளிலும் நாடக மேடைகளிலும் பாடினர். சாதாரணப் பிச்சைக்காரர்களும் பஸ் நிலையங் களிலும் ரயில் வண்டிகளிலும் ராகத்தோடு பாடினர். இவர்களையும் போலீசார் 'லட்டி'யால் அடித்து விரட்டினர். ஆனால் மேடைகளில் பாடினவர்களை ஆட்சியாளர்கள் ராஜத்துரோகமெனத் தண்டித்தனர். சிலரைச் சிறையிலும் தள்ளினர். 'மதுர' பாஸ்கர தாஸின் பாடல்களைப் பாடிச் சிறை சென்றவர்கள் பரிமளித்தனர். ஆனால் அப்பாடல்களை எழுதிய அவரோ 'குடத்தினுள்ளிட்ட' விளக்கானார்!

நம் தமிழகத்தே சங்கத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் 1892 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் தேதி முத்துசாமி தேவர், இருளாயி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் பாஸ்கரதாஸ். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் 'வெள்ளைச்சாமி'. இது செல்லப் பெயராகியது. ஆனால் 'பாஸ்கரதாஸ்' என்று அழைத்த பெயரே பிரபலமாகியது. சாதாரண எளிய குடும்பத்தில் பிறந்த பாஸ்கரதாஸ் இளமையில் வீட்டிற்கு அண்மையிலுள்ள திண்ணைப் பள்ளியில் சேர்ந்தார். பின்பு மதுரையிலேயே கட்டுச்செட்டி மண்டபத்திலுள்ள ஆரம்பப் பாடசாலையிலும் கல்வி

பயின்றார். பள்ளியில் திறமையோடு கற்றவர், கடவுள் மீது தானே இட்டுக்கட்டிய பாட்டுகளையும் பாடுவார். இவரது பாட்டுத் திறமையைக் கண்ட ஆசிரியர்களும் தலைமை ஆசிரியரும் பெரிதும் பாராட்டியதோடு வருங்காலத்தில் இம் மாணவன் பெரும் கவிஞனாகவும் பாடகனாகவும் பரிமளிப்பான் என வாழ்த்தினர். அன்று முதல் மதுரையில் நடக்கும் சிறப்புக் கூட்டங்களில் பாடல்களைப் பாட மாணவன் பாஸ்கரதாஸை அழைக்கலாயினர்.

வடக்கே வங்காளப் பிரிவினைக்குப்பின், அங்கு கிளம்பிய சுதேசியக்கனல் தென்னாட்டிலும் பரவியது. அச்சமயம் தமிழகத்தில் ஆட்சியாளர்களை எதிர்த்து எழுந்த சுதேசியக் கலவரத்தினால் மக்கள், "வந்தே மாதரம்! பாரத மாதாவுக்கு ஜே!" எனக் கோஷித்தது, பாஸ்கரதாஸையும் சுதந்திர வேட்கையில் ஈடுபடுத்தியது. 1908 இல் 16 வயதே நிரம்பிய பாஸ்கரதாஸ் தெருக்கூத்துப் பாடல்களைத் தானே பாடியதோடு, அப்பாடல்களின் இடையிடையே வெள்ளையரின் அநீதிகளைக் கண்டித்தும் எழுதினார். இதனையும் மக்கள் வரவேற்றனர். தாஸின் இத்திறமையைப் பாராட்டிய சிலர் அவர் கடவுள்மீது பாடிய பாடல்களையெல்லாம் தொகுத்து 1915 இல் 'மதுர' பாஸ்கரதாஸ் பாடிய "பக்திரஸக் கீர்த்தனைகள்" என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டனர். இதுவே அவரது முதல் நூலாகும். அப்போது அவருக்கு வயது 23.

இளம்கவி பாஸ்கரதாஸின் பாடல்கள் தமிழகமெங்கும் பரவி பட்டிதொட்டிகளிலெல்லாம் பிரபலமாயின. இவரது பாடல்கள் சாதாரண பாமரமக்கள் முதல் சங்கீத வித்வான்கள் வரையில் கவர்ந்திழுத்தன. ஒரு சமயம் மதுரையில் ராமநாதபுரம் மன்னர் சேதுபதி அவர்கள் தலைமையில் நடந்த ஒரு சிறப்புக் கூட்டம். அதில் பல அறிஞர்கள் கலந்து கொண்டார்கள். அக்கூட்டத்தில் பாஸ்கரதாஸ் பாடல்களைப் பாட ஏற்பாடாகியிருந்தது. மன்னர் சேதுபதியோ சங்கீத ஞானம் நிரம்பியவர். மன்னர் முன்பு இந்த இளம் கவிஞன் தவறுகள் எதுவுமின்றிப்




பாடவேண்டுமே என்ற கவலை, கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்குச் சூழ்ந்து கொண்டதாம். கூட்டம் தொடங்கியது. கவி பாஸ்கரதாஸ் மன்னர் சேதுபதி முன் இறைவன் மீது இயற்றப்பட்ட பாடல்கள், மற்றும் வேறுசில பாடல்களையும் தட்டுத் தடையின்றி, அட்சர சுத்தமாகப் பாடினார். கூட்டத்தில் பலத்த கரவொலி எழுந்தது. மன்னர் சேதுபதி மிக்க மகிழ்ச்சியோடு அந்த இளம் கவியைப் பாராட்டிய தோடு, "முத்தமிழ் க்ஷேத்திரர்" என்ற சிறப்புப் பட்டத்தையும் அளித்துக் கௌரவித்தார். அன்று முதல் சாதாரண பாஸ்கரதாஸ் "முத்தமிழ் க்ஷேத்திர" மதுர பாஸ்கரதாஸ் எனச் சிறப்போடு அழைக்கப் பட்டார். பாரதிக்கு எட்டயபுரம் மகாராஜா அளித்தது 'மகாகவி' என்ற பட்டம். அதுபோலவே ராமநாதபுரம் சேதுபதி மன்னர் பாஸ்கரதாஸுக்கு அளித்தது "முத்தமிழ் க்ஷேத்திர" என்ற பட்டமாகும்.

தென்னாட்டில் 1908 இல் நடந்த திருநெல்வேலி கலவரம், அடுத்து 1911 இல் மணியாச்சியில் கலெக்டர் ஆஷை, செங்கோட்டை வாஞ்சி சுட்டுக் கொன்று தன்னையும் சுட்டுக் கொண்டு வீரமரணம் அடைந்த நிகழ்ச்சிகளுக்குப்பின் தமிழகத்தில் ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளம்பிய போராட்டங்கள் உச்ச நிலையி லிருந்தன. தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய காந்தி அடிகள், முதன் முறையாக 1915 இல் தமிழகத்திற்கு விஜயம் செய்தார். அடுத்து 1919 இல் மீண்டும் இங்கு விஜயம் செய்த காந்தி அடிகள் ஆங்கிலேயருக்கு எதிராக "ஒத்துழையாமை இயக்க"த் தைத் தீவிரமாக்கும்படிப் பிரசாரங்கள் செய்தார். காந்தி அடிகளின் பிரசங்கங்களில் லயித்துப்போன தாஸ், ஆட்சியாளரின் அநீதிகளைக் கண்டிக்கும் வகையில் பாடல்களைத் தீவிரமாக எழுதத் தொடங்கி னார்.

வானொலி, தொலைக்காட்சி இல்லாத அந்நாளில் புரட்சிகரமான பாடல்களை மேடைகளில் பாடி மக்களுக்கு விடுதலை உணர்ச்சியைத் தூண்டிவிட எண்ணிய பாஸ்கரதாஸ், நாடகங்களில் பாடப் பல பாடல்களை எழுதத் தொடங்கினார்.

1919 இல் வடக்கே பஞ்சாப் மாநிலத்தில் சுதேசி மக்களின் போராட்டங்கள் வலுத்தன. அப்போது அங்கு ஆங்கிலேய அதிகாரியாக இருந்தவன் ஜெனரல்



டயர் என்ற கொடுங்கோலன். இவன் சுதேசி மக்களைப் பழி வாங்கும் எண்ணத்தோடு அன்றொரு நாள் ஒரு மைதானத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக் கான இந்தியர்களை வெளியே தப்பி ஓடிச் செல்ல முடியாதபடி சுற்றிப் போலீஸ் பட்டாளத்தை நிற்க வைத்து, "ரெடி... சுட்டுத் தள்ளு" என்று உத்தரவிட, போலீசும் தங்களிடமுள்ள துப்பாக்கியால் அங்கிருந் தவர்களைப் 'படபட'வென்று சிட்டுக் குருவிகளைச் சுட்டுத்தள்ளுவதைப் போல சுட்டுச் சுட்டுத் தள்ளினர். இந்த அநீதிச் செயலைப் பத்திரிகைகள் கண்டித்தன. மேடைகளில் மக்கள் கூக்குரல்களிட்டனர். இந்தக் கொடுஞ்செயலைப் புரிந்த "பாதகன்" ஜெனரல் டயரையும், அவனது செயலையும் கண்டித்து பாஸ்கரதாஸின் கவிதை உள்ளமும் பீரிட்டது.

("பூங்கா விநோதமே" என்ற பாட்டு மெட்டில்).

"பஞ்சாப் படுகொலை பாரில் கொடியது
டயர் மட மதியது (பஞ்)
அஞ்சாப் பெரும் வம் பனின்
அறநெறி தவறிய கொடியன் டயர் செய்த, (பஞ்)
சுட்டேன்! சுட்டேன்!! துப்பாக்கியால்
மருந்துள்ள வரையில்... (பஞ்)

என்ற பாடலை மிக்க ஆவேசத்தோடு எழுதினார். எழுதிய அப்பாடலைத் தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து ஆத்திரத்தோடும், மனமுருகியும் பாடினார். "பஞ்சாப் படுகொலை பாரில் கொடியது!" என்ற பாடல் வெகு குறுகிய காலத்திற்குள் எங்கும் பிரபலமாகியது!

இப்பாடலை அந்நாளில் பிரபல நாடக நடிகரும் தேசாபிமானியுமான எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் தனது பிரசங்க மேடைகளிலும் நாடக மேடைகளிலும் தவறாது உணர்ச்சி ததும்பப் பாடி வந்தார். விஸ்வ நாததாஸ் நடிக்கும் நாடகங்கள் என்றாலே அதில் ஆங்கிலேய ஆட்சியாளர்களைக் கண்டிக்கும் வகையில் நாடகத்தின் இடையிடையே பாடல்கள் வரும். அதனைப் பாடவிடாமல் தடைசெய்ய வேண்டும் என்ற காரணத்திற்காகவே ஆட்சியாளர்கள் அந்நாடகங் களுக்குப் போலீஸ் அதிகாரிகளை அனுப்புவர். அவர்களும் நாடக மேடைக்கு முன்பாகவே அமர்ந் திருப்பர். நாடகமேடையில் விஸ்வநாததாஸ் தோன்றி யதுமே மக்கள் மிகுந்த ஆரவாரத்தோடு, "பஞ்சாப்படு கொலை பாடுங்கள், பாடுங்கள்!" எனக் குரல் எழுப்புவர். உடனே போலீஸ் அதிகாரிகள் அப் பாடலைப் பாடக்கூடாதென்று அதிகாரம் செய் வார்கள். மீண்டும் மக்களின் கூக்குரல். உடனே விஸ்வநாததாஸும், "எனது மக்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதுதான் எனது கடமை! நான் பாடத் தான் போகிறேன். சட்டப்படி என்மீது நடவடிக்கைகள் எடுக்கலாம். எனக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது!" என மிகுந்த துணிச்சலோடு கூறிவிட்டு "பஞ்சாப் படுகொலை! பாரில் கொடியது! டயர் மடமதியது!" எனக் கணீரென்று பாடுவார். போலீஸ் அதிகாரிகள் நாடகம் முடிந்ததுமே விஸ்வநாத தாஸைக் கைது செய்து அழைத்துச் செல்வார்களாம்.

"வங்கம் தந்த இளஞ்சிங்கம்" என்று சிறப்பாக அழைக்கப்பட்ட "தேசபந்து" சித்தரஞ்சன்தாஸ் அவர்களால் தொடங்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியை தமிழ்நாட்டில் மேலும் வலுப்படுத்துவதற்காக, தமிழ் நாட்டின் பிரபல தேசபக்தரும், "சொல்லின் செல்வர்", என்றழைக்கப்பட்ட "தீரர்" சத்தியமூர்த்தி தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். ஒரு சமயம் மதுரையில் தங்கிய சத்தியமூர்த்தியை நேரில் சென்று சந்தித்து,

(இராகம் : மால்கோஷில்) "சாமி சத்தியமூர்த்தி சந்ததமும் இந்தியாவைச் சார்ந்த சீர்த்தி!" என்ற பாடலைப் பாடினார். இதனை மிகவும் ரசித்துக் கேட்ட சத்தியமூர்த்தி, "தாஸரே! நாட்டில் எல்லாருமே என்றென்றுமே மகிழ்ச்சியாக இருப்பதையே நான் விரும்புகிறேன். என்னைத் தாங்கள் பாராட்டியதை விட இன்னும் பலர் நாட்டில் உள்ளனர். அவர் களையும் உமது பாமாலைகள் அலங்கரிக்கட்டுமே!" என மகிழ்ச்சியோடு கூறினார். கவி பாஸ்கரதாஸ் நம் பாரத நாட்டின் அத்தனை தலைவர்களையும் தமது கவிதை மலர்களால் அலங்கரித்துள்ளார். இவ்விதம் தேசிய விழிப்பு உணர்ச்சி மற்றும் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களைப் பற்றி பாஸ்கரதாஸ் பாடிய பாராட்டுப் பாமாலைகள்

இலங்கை சென்றிருந்த கவிஞர் பாஸ்கரதாஸ் தனது நண்பர்களுடன் (இடமிருந்து வலம்) பொன் ஆறுமுகம் வித்வான் - புலவர் முருகேசன் - பெயர் தெரியவில்லை - மதுர பாஸ்கரதாஸ்





மதுர கவி பாஸ்கரதாஸும் நாடக மன்னர் கல்லிடைக்குறிச்சி கே.பி. முகைதீன் அவர்களும்



எஸ்.எஸ். விஸ்வநாததாஸ்



கே.எஸ். கருப்பையா

அடங்கிய தொகுப்பு "இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம்" என்ற தலைப்பில் முதல் பாகம் 1915லும், இரண்டாம் பாகம் 1928 லும் வெளிவந்தன.

தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்த காந்தி அடிகள் நெல்லை செல்லுவதற்காக மதுரையில் ரயில் ஏறினார். இது விவரம் அறிந்த பாஸ்கரதாஸ் தனது பாடல் நூல்களை காந்திஜியிடமே நேரிடையாக அளிக்க ஸ்டேஷனில் காந்திஜி தங்கி இருந்த ரயில் பெட்டிக்கே வந்தார். தான் கொண்டு வந்த கதர்மாலையை காந்திஜிக்கு அணிவித்து, தனது நூலையும் அவரிடம் தந்து வணங்கினார். அந்நூல் தமிழில் இருக்கவே, காந்திஜி தனக்கு பக்கத்திலிருந்த டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனிடம் அதுபற்றிக் கேட்டார். டாக்டர் ராஜனும் பாஸ்கரதாஸை காந்திக்கு அறிமுகம் செய்ததோடு, அவர் தந்த நூலில் காந்திஜியைப் பற்றி எழுதியிருந்ததில் "காந்தியோ பரம ஏழை சந்யாசி!" என்றிருப்பதைப் படித்துவிட்டு, அதன் விளக்கத்தை ஆங்கிலத்தில் கூறியதுமே காந்திஜியும், "ஹம்கோ ஸ நயாஸீ பனாயா!" (நம்மையும் சந்யாசியாக்கிவிட்டாரே!) எனக் கூறிச் சிரித்தாராம். இப்பாடலும் அந்நாளில் மேடைதோறும் பாடப்பட்டது. தவிர பிரபல பாடகி கொடுமுடி கோகிலவாணி, கே.பி.சுந்தராம்பாள் இசைத்தட்டிலும் இப்பாடல் இடம் பெற்று உலகமெங்கும் பிரபலமாயிற்று!

தமிழகத்தே புகழுடன் விளங்கிவந்த 'மதுர' பாஸ்கரதாஸின் பெருமை இலங்கையிலும் பரவியது. இவரைத் தங்கள் நாட்டிற்கும் வரவழைத்து கௌரவிக்க வேண்டுமென்று இலங்கையிலுள்ள சில தமிழ்ப் பேரறிஞர்கள் 1929 இல் இவரை இலங்கைக்கு அழைத்தனர். அங்கு சென்ற அவர் யாழ்ப்பாணத்தில் தமிழ் வித்வான் பொன்.ஆறுமுகம், புலவர். முருகேசன் அவர்களால் பெரிதும் கௌரவிக்கப்பட்டார். கதிர்காம ஸ்ரீமுருகப்பெருமானைத் தரிசித்த பாஸ்கரதாஸ் அங்கு இறைவன் சன்னிதியிலேயே "கதிரை மலைபதி ஈசனே பொன் மாணிக்க, கங்கை நதிக்கரை வாசனே!" என்ற பக்தி நிறைந்த தெய்வீகப் பாடலைப் பாடி அனைவரையும் வியப்படையச் செய்து விட்டாராம்.

தமிழ்நாட்டில் 1930 – 31 ஆண்டுகளில் நாடக மேடைகளிலெல்லாம் தேசிய விடுதலைப் போராட்டக் கிளர்ச்சியுள்ள நாடகங்களே நடைபெற்றன. "பாணப்புரத்து வீரன்" என்ற திரு.வெ.சாமிநாதசர்மா எழுதிய நாடகம் பிரபலமாயிற்று. இந்த நாடகத்திற்கு வசனத்தையும், பாடல்களையும் எழுதிய பெருமை 'மதுர' பாஸ்கரதாஸைச் சேரும். இந்த நாடகத்தின் மூலமாகத்தான் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் "காந்தி மகான் வரலாற்றை" வில்லுப்பாட்டு என்ற பண்டைக்கிராமியக்கலை மூலம் அரங்கேற்றினார்.

நாடு விடுதலை அடைந்தபின் 'மதுர' பாஸ்கரதாஸ் தன்னை அண்டியவர்களிடம் நாட்டின் விடுதலைக்காக அயராது பாடுபட்ட வீரத்தியாகிகளின் வரலாறுகளைக் கூறத் தயங்கவே மாட்டார். தமிழின் மீதுள்ள அளவற்ற பற்றினால் ஆங்கிலேயர் ஆட்சியிலேயே மதுரையில் அந்நாளில் தெற்கு மாசி வீதியும், மேலைமாசி வீதியும் சந்திக்கும் இடத்தில் புதிய தாகக்கட்டிய ஒரு கட்டடத்திற்குத் துணிந்து "தமிழகம்" எனப் பெயரைச் சூட்டியது பலரை வியப்படையச் செய்தது. சுமார் 30 ஆண்டு காலத்திற்கு மேலாக மதுரையிலேயே வாணியர் சந்தில் குடியிருந்தார். வாழ்க்கையில் இரு மனைவிகளைக் கொண்டவர். இவருடைய மாப்பிள்ளை கே.எஸ். கருப்பையாவின் பெரும் முயற்சியால் மதுர பாஸ்கரதாஸின் கவிதைகள் பொக்கிஷம் போலப் பாதுகாக்கப் பட்டன. இது தமிழகத்திற்கே பெரும் சிறப்பாகும்.

1952 ஆம் ஆண்டு டிசம்பர் 20 இல் நெல்லை மாவட்டத்திலுள்ள நாகலாபுரத்தில் பாஸ்கரதாஸ் காலமானார். அப்போது அவருக்கு வயது 60 நிரம்பிச் சில மாதங்களே ஆயின. தன் வாழ்நாள் முழுவதும், தமிழ், பாரதநாட்டு விடுதலை என்றே பாடுபட்ட 'மதுர' பாஸ்கரதாஸ் அவர்களுக்கு இந்த ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி அவருடைய பிறந்ததின நூற்றாண்டு பிறந்துள்ளது. நாட்டு மக்களுக்கு தேசியத்தைத் தனது கவிதைகளால் வளர்த்த பழம்பெரும் தமிழர் 'மதுர' பாஸ்கரதாஸின் பிறந்ததின நூற்றாண்டையொட்டித் தமிழ் எழுத்துலகம் இக்கட்டுரை மூலம் தனது அஞ்சலியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

இணைந்த ஜெர்மனிகள்

சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளாகப் பிளவு பட்டிருந்த - இருவேறு நாடுகளாகத் தனிக்கொடி-தனி அரசு - தனி அரசியலமைப்பு - தனி நாணயம் - தனிப் பொருளாதாரப் பாதை என்று ஒன்றுக்கொன்று நேர்முரணான அரசியல் பொருளாதாரக் கொள்கை களையும் அடிப்படைகளையும் கொண்டிருந்த - இரு நாடுக்ள் இணைந்துவிட்டன. முன்னாள் தலைநகரின் இடுப்பில், அதனை இரண்டாகப் பிளக்கும் வகையில் எழுப்பப்பட்டிருந்த சுவர் இடித்துத் தள்ளப்பட்டு, பெர்லின் இன்று மீண்டும் ஒரே நகரமாகித் தலைநகர் அந்தஸ்தையும் திரும்பப் பெற்றுவிட்டது. எஃப்.டி. ஆர்., ஜி.டி.ஆர்., என்கிற பெயர்களில் தனித்து இயங்கிய நாடுகள் இப்போது வரலாறு ஆகிவிட்டன.

இனி ஒரே ஒரு ஜெர்மனிதான்...


இணைப்பைத் தொடர்ந்து, முதல் அனைத்து ஜெர்மன் தேர்தல் கடந்த ஆண்டின் கடைசி மாதத்தில் நடைபெற்றது. இது நாடாளுமன்றத்துக்கான தேர்த லாக மட்டுமே கருதப்படவில்லை. இணைப்பு குறித்து அனைத்து ஜெர்மன் மக்களும் தங்கள் ஒப்புதலைத் தெரிவிக்கும் வாக்கெடுப்பாகவும் இருந்தது.

அது மட்டுமல்ல. பதினாறு மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் அனைவரும் சேர்ந்து பங்கேற்ற முதல் தேர்தலாகவும் இது விளங்கியது. சுமார் அறுபது மில்லியன் வாக்காளர்கள். எந்த விதமான உணர்ச் சிக் கொந்தளிப்புகளுக்கும் இடமில்லாமல் நடைபெற்ற அமைதியான தேர்தல் பிரசாரம். சுமார் 77.8 சதவிகித வாக்களிப்பு..

தேர்தல் முடிவுகளை, "அதிபர் ஹெல்மட் கோல் கடைப்பிடித்து வந்துள்ள கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றி" என்று பத்திரிகைகள் வர்ணித்தன. "வரலாறு படைத்தவர்" என்று பாராட்டின.

இணைப்பையும் தேர்தலையும் தொடர்ந்து எதிர்ப் பட்டவை என்ன?

எக்கச்சக்கப் பொருளாதாரப் பிரச்னைகள். சொல்லப்போனால், இவை இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த கையோடு ஜெர்மனி சந்தித்த பொரு ளாதாரப் பிரச்னைகளுக்கு இணையானவை. பொரு ளாதார உச்சத்தை எட்டிவிட்டிருந்த (முன்னாள் மேற்கு ஜெர்மனியின்) பதினோரு மாநிலங்களுக்குச் சமமாக இதர (முன்னாள் கிழக்கு ஜெர்மனியின்) ஐந்து



• பெர்லினைக் கிழக்கு - மேற்கு என இரண்டாகப் பிரித்த சுவரில் அமைந்திருந்த நுழைவாயில் 'செக்பாயின்ட் சார்லி' - சுவர் உடைக்கப்படுவதற்கு முன்னர்.



• சுவரை உடைப்பதில் பொதுமக்களும் உற்சாகமாகப் பங்கு கொண்டனர்.

மாநிலங்களையும் உயர்த்துவது இமாலயப் பிரயத்தனம். இதற்குத் தேவைப்படுகிறவை, மிகக் கடுமையான நிர்வாக முயற்சிகள், பெருமளவில் நிதி ஒதுக்கீடு. அப்போதுதான், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், பள்ளிகள், சாலைகள், தொலைபேசி முதல் ரயில்வே இணைப்புகள் வரை அனைத்தையும் மற்ற (முன்னாள் மேற்கு ஜெர்மன்) பகுதிகளுக்கு இணையாகச் செயல்பட வைக்க இயலும்.

இது ஒரு மகத்தான பொருளாதாரச் சவால். சீர்கேடு அடைந்துள்ள ஒரு மையப் பொருளாதார அமைப்பை சுதந்திரமான சந்தைப் பொருளாதாரமாக விரைந்து மாற்றுவது, பழைய கட்டமைப்புகளை முழுதுமாக நீக்கிப் புதிய கட்டமைப்பை உருவாக்குவது என்பது ஒரு கடுமையான சிகிச்சை முறை. இதனை மேற்கொள்ளும்போது, அதன் பலன் எப்படியிருக்கும் என்று ஜெர்மன் பொருளாதார நிபுணர்கள் கருதுகிறார்கள்? "ஐந்தாண்டுகளில் அந்தப் பிராந்தியம் அடையாளம் தெரியாத அளவுக்கு மாற்றம் பெற்றுவிடும்!"

அதற்கு முன்?

ஒன்றுபட்ட ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு இப்போது எதிர்நோக்குவது, ஒருவகையில், ஒரு புதிய தொடக்கம் என்றும் சொல்ல முடியும். அதன் முழுமையான பொருளாதார வலு வெளிப்படுவதற்குக் குறைந்தபட்சம் இன்னும் பத்தாண்டுகளாவது ஆகக்கூடும். அதற்குமுன் ஒரே நேரத்தில் சந்திக்க வேண்டிய எண்ணற்ற பிரச்னைகள் உள்ளன.

இணைப்பு தொடர்பான கொண்டாட்டங்கள், கோலாகலங்கள் எல்லாம் முடிந்து, அதனால் ஏற்பட்டிருந்த மகிழ்ச்சி வெள்ளம் வடிந்து அடங்கி, தேர்தல்களும் நடைபெற்று முடிந்து, புதிய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர்தான் பொருளாதார முதலீடு தொடர்பான அம்சங்கள் அவற்றின் முழுப் பரிமாணத்தில் தெரியவந்துள்ளன.

முன்னாள் கிழக்கு ஜெர்மனி இப்போது புதிய ஐந்து மாநிலங்களாக உருப்பெற்றுள்ளது. இவற்றில் எதிர்நோக்க வேண்டியுள்ள சவால்கள் :

அன்றாட வாழ்க்கைத் தரத்தை மாற்றியமைத்து மேன்மை காணச் செய்வதில் காண்பிக்க வேண்டிய அவசரம்... திட்டமிடப்பட்ட பொருளாதாரம் என்பதை மாற்றிச் சுயமாகச் சரிப்படுத்திக் கொள்ளும் சந்தைப் பொருளாதாரமாக ஆக்கும்போது, மானியங்கள் வழங்கப்பட்டு வந்ததன் காரணமாக ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்துள்ள விலைவாசியில் உயர்வு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இதனை மக்களிடையே விளக்கிச் சொல்லிப் புரிய வைப்பது எளிதல்ல.

அரசுக்குச் சொந்தமானவையாகப் பொதுத் துறை நிறுவனங்கள் இயங்கி வந்த பிராந்தியம் அது. பொதுத்துறை நிறுவனம் என்றாலே தேவைக்கதிகமான ஊழியர்கள், மெத்தனமான நிர்வாகம், நஷ்டத்தில் இயக்கம்... இப்படிப்பட்ட நிலையில் அவற்றைச் சீரமைக்க மேற்கொண்டு முதலீடு செய்தால் மட்டும் போதாது. நிர்வாகத்தையும் திறனுள்ளதாகச் செய்ய வேண்டும். மேலிருந்து வரும் உத்தரவுகளுக்காகக் காத்திருந்தது மாறி, தாங்களாகவே உடனடி முடிவுகள் எடுப்பவர்களாக இந்தப் பொதுத்துறை நிர்வாகிகளை மாற்றியாக வேண்டும்.


மாறிப்போய் விட்ட அரசியல் பொருளாதாரச் சூழ்நிலையில் அன்றாட வாழ்க்கையின் நிதரிசன உண்மைகள் இப்போது அந்த மக்களின் எதிரே விசுவரூபம் எடுத்துள்ளன. வேலையிழப்பு, அதிக விலை, அதிக வாடகை, அதிக வரி, குறைந்த வருமானம். இவை இதுநாள் வரையில் நடத்தி வந்துள்ள வாழ்க்கைக்கு நேர்மாறான விஷயங்கள்.

பழைய கட்டமைப்புகளை உடைத்தெறிந்து விடுவது எளிது. புதியனவற்றை உருவாக்குவது கடினம்.

ஒன்றுபட்டு விட்ட ஜெர்மனியின் முன்னே இப்போது இருவேறு வகையான பொருளாதாரப் பிராந்தியங்கள். இவற்றினிடையே காணப்படும் பிளவு மிகப்பெரிது. மத்தியில் திட்டமிடப்பட்டுச் செயல்படும் பொருளாதாரத்தின் விளைவுகள் என்ன என்பதை அனைவரும் புரிந்துகொள்வதில் சற்றுத் தாமதம் ஏற்படத்தான் செய்யும். புதிய மாநிலங்களில் வேலையற்றோரின் எண்ணிக்கை பெருகக்கூடும் என்பது பொருளாதார விற்பன்னர்களின் கணிப்பு. அதே நேரத்தில் புதிய தொழில்களும் அதன் காரணமாகப் புதிய வேலை வாய்ப்பும் பெருகும் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

பழைய அமைப்புகளை உடைத்தெறிவதில் காணப்படும் விரைவும் புதிய அமைப்புகளை உருவாக்குவதில் இயல்பாக ஏற்படும் கால தாமதமும் பலரை மனம் சோர்வடையச் செய்யக் கூடும். இத்தகைய சூழ்நிலை அவர்களுக்கு மிகவும் புதிய ஒன்று.

அவர்கள் மத்தியில் இப்போதைய தேவை : பொருளாதாரச் சீரமைப்பும் புதிய முதலீடுகளும் மட்டுமல்ல — தியாகம், பொறுமை ஆகியவையும்தான். இரு தரப்பினருக்கும்தான்.



இரு வாக்கு மூலங்கள்

ஜெயரதன்

சசிகாந்தன் கூறுகிறான் :

மனதில் சந்தோஷம் புது நீருற்றாய்ப் பொங்குகிறது. உற்சாகம் காலைக் காற்றாய்ப் பரவுகிறது.

பக்கத்தில் அமர்ந்து கொண்டிருந்த சியாமளியை நெஞ்சில் சரித்துக் கொண்டிருக்கிறேன். அவளது பிரத்யேக வாசனை என்னுள் பாய்ந்து சாகசம் செய்கிறது.

குழந்தையாய் என்மீது படர்ந்து கொள்கிறாள்.

'ஸ்ரீவல்லி தேவ சேனாபதே' என்ற நடபைரவி ராகத்தைச் சன்னமாய் முணுமுணுக்கிறேன். 'வள்ளி, தேவ சேனையின் பதியே' என்று அப்போது கூட முருகனை, இரு பெண்களின் மணாளனாகத் துதித்தது குறுஞ் சிரிப்பை வரவழைக்கிறது.

மெலிதாய் என் நெஞ்சில் தன்விரல்களால் தாளமிட்ட சியாமளி ஒயிலாய் முகம் நிமிர்த்தி என்னைப் பார்க்கிறாள்.

"இது என்ன ராகம், சொல்லட்டா?"

"சொல்லேன்".

"ஷண்முகப்ரியாதானே? வந்து... 'தந்தை தாய் இருந்தால் உலகத்தில் இந்தத் தாழ்வெல்லாம் வருமோ ஐயா?' அப்படீங்கற பாபநாசம் சிவன் பாட்டுத் தானே?"

குழந்தை மாதிரிக் கேட்ட சியாமளியையே பார்க்கிறேன். இல்லை

> இனிய இசை மணம் பரப்பும் தாமரை சசிகாந்தன், அந்தத் தாமரைத் தண்டினைக் காப்பதிலேயே கண்ணும் கருத்துமான தவளை சியாமளி, எங்கிருந்தோ பறந்து வந்து தாமரையின் தேனைப் பருகி மகிழும் வண்டு மனோன்மணி ஆகிய மூவரின் அன்புப் பிணைப்பை எடைபோட்டால் யார் உயர்வு? தீர்ப்புக்கூறுவது சற்று சிரமம்தான்!

யென்று உண்மையைச் சொல்லி விடலாமாவென்று ஒருகணம் நாக்கு குறுகுறுக்கிறது.

இல்லை. இவளிடம் சொல்ல வேண்டாம். ஷண்முகப்ரியாவாகவே நினைத்துக் கொண்டிருக்கட்டும். நடபைரவி என்று உண்மையைச் சொல்ல வேண்டாம். சில உண்மைகளைச் சொல்லாமலிருப்பதுதான் நல்லது.

என்னையும் இப்படித்தானே எண்ணிக் கொண்டிருக்கிறாள்? நடபைரவியை ஷண்முகப்ரியாவாக எண்ணிக் கொண்டிருக்கிறது மாதிரி, வள்ளி, தேவ சேனாபதியான என்னை சீதாபதியாகத் தானே எண்ணிக் கொண்டிருக்கிறாள்? இருக்கட்டுமே...

தொலைக்காட்சியில் 'சிந்து பைரவி' ஓடிக்கொண்டிருந்தது. கதாநாயகன் ஆர்.கே.பி.க்கு ஒரு சிந்து இருப்பதை, அவன் மனைவி பைரவி தெரிந்து கொண்டகட்டம்.

மெய்ம்மறந்து பார்த்து உருகிக் கொண்டிருந்த என்னிடம் சியாமளி சொன்ன வார்த்தைகள் தானே என்னை சந்தோஷக் கடலில் ஆழ்த்தின! உற்சாக அலைகளை என்னுள் தோற்றுவித்தன!

"என் சசிகாந்தன், நல்ல வேளையா தனக்குன்னு ஒரு சிந்துவைத் தேடிக்கல்லே, நான் சங்கீதமே தெரியாத பைரவியா இருந்தாலும்... நீங்க எனக்கு மட்டும் தான் சொந்தம்னு உரிமை கொண்டாடறதுலே எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? கடலைவிட ஜாஸ்தி... ஆகாயத்தை விடப் பெரிசு..."

கையைப் பிரித்து முகத்தை மலர்த்தி, விழிகளை விரித்து அவள் சொன்ன போதுதான் அவளை நெஞ்சோடு சரித்துக்கொண்டேன்.

சியாமளி குழந்தைதான். என்னையே சகலமுமாய் எண்ணிக் கொண்டிருக்கிற குழந்தை. தன்னின் சகலத்தையும் எனக்குச் சமர்ப்பிக்கிற குழந்தை. என்னுள் தன்னைக் கண்டு தன்னில் என்னைக் கட்டிப்போட்டு வைத்திருப்பதாக எண்ணி இறுமாந்து கொண்டிருக்கும் குழந்தை.

அப்படியே இருக்கட்டும். இந்தச் சசிகாந்தன் அவளுக்கு ஒரு சீதாபதியாகவே இருக்கட்டும். வள்ளி

தேவசேனாபதியாக இருப்பது தெரியவே வேண்டாம்.

நெஞ்சில் இரக்கம் சுரக்கிறது.

இறுக ஆலிங்கனம் செய்து கொள் கிறேன்.

திரைப்படப் பாடலொன்று பீறிட்டுக் கிளம்பிற்று.

ஆலாபனை அந்த அறையெங்கும் பரவிற்று.

'மயக்கும் மாலைப் பொழுதே நீ போ, போ... இனிக்கும் இன்ப இரவே நீ வா வா...'

என் குரலின் சந்தோஷ விசிறல்கள் வீடெங்கும் படர்ந்தன; தவழ்ந்தன.

மெழுகாய் உருகிய சியாமளி, டி.வி.யை ஒலி குன்றச் செய்துவிட்டு என்மீது மலர் மாலையாய்ச் சரிந்தாள்.

மனோன்மணியைச் சந்தித்து எத்தனை வருஷங்கள் ஆகியிருக்கும்? ஏழெட்டு வருஷங்கள் இருக்கலாம். மேலேயேகூட இருக்கலாம். ஜன்ம ஜன்மமாய்ப் பழகினமாதிரி என்னுடன் அவள் இணைந்து போனாள். அவளது சந்திப்பும் தொடர்புமே எனது வாழ்வின் திருப்புமுனை.

வெறும் வித்வான் சசிகாந்தன், பிரபலமானதும், புதுமைகள் புரிந்து புகழும் பொருளும் ஈட்டியதும் அவளைச் சந்தித்த பின்னர்தான். அவளது சமீபம் புகழ்தந்தது. தீண்டல் செல்வம்தந்தது. பார்வை எழுச்சி தந்தது. சிரிப்பு, என் கலையுணர்வைப் பீறிட்டெழச் செய்தது.

மனோன்மணி என் சிந்துவாகிப் போனாள்.

அவளை முதன் முதலில் சந்தித்தது ஒரு மகளிர் கல்லூரி விழாவில் நான் பாடிய போதுதான். அப்போது மேடை யில் பாடமாட்டோமா? நம் பாடலை நான்கு பேர் கேட்டுக் கொண்டாடி மகிழமாட்டார்களா என்று மனம் துடித்த காலம். கல்லூரி விழாவில், – அதிலும் மகளிர் கல்லூரி விழாவில் – பாட அழைத்ததும் ஏதோ சுவர்க்க போகமே கிட்டிவிட்டது போன்ற பெருமிதத்துடன் ஏற்றுக் கொண்டேன்.

'பணம் தர வசதிப்படாது' என்று தயக்கத்துடன் அமைப்பாளர்கள் கூறிய போது, 'பணமாவது... மனம்னா முக்கியம்' என்று நான் கூறியவேளை, ஒரு மகாயோகமான நேரம் போலும்!

அங்குதான் மனோன்மணியின் 'மனம்' எனக்குக் கிடைத்தது.

'ஆங்கிலப் பேராசிரியையான அவள், சங்கீதத்தில் அசாத்தியப் புலமை – அதைவிட மகத்தான ரசனை – கொண்டிருந்தாள்.

அன்று என் கச்சேரியும் அற்புதமாக அமைந்துவிட்டிருந்தது.

யாரோ பாரதியின் 'தீர்த்தக் கரை யினிலே'... என்ற பாடலைப் பாடுமாறு கேட்டிருந்த துண்டுக் கடிதத்தைப் பார்த்து எனக்குள்ளே நான் துள்ளி னேன். ஏனெனில் எனக்குப் பிடித்த பாடல் அது.

மனம் உருகி, நினைவுகள் கரையப் பாடினேன்.

அப்போது உருகியவள்தான் இந்த மனோன்மணி.

கச்சேரி முடிந்ததும் கைகளைப் பிடித்துக் குலுக்காத குறையாய் என்னைப் பாராட்டினாள். என் குரல் நயத்தைப் புகழ்ந்தாள். ராகப் பிரவாகங் களை நான் குரலில் வடித்ததைக் கேட்டு நெகிழ்ந்ததாகச் சொன்னாள். மோகனராக ஆலாபனையில் நான் ஓர் உச்சத்தை எட்டிவிட்டதாகச் சொன் னாள். உணர்ச்சி வயப்பட்டிருந்த அவள் கண்களில் கண்ணீர் மெல்லிய திரை யிட, அவள் வார்த்தைகள் என்னைத் தேர்ந்தெடுத்த புகழ்மலர்களால் அர்ச் சித்தன. என்னுள் புதுப்புது உற்சாகச் சிறகுகள் முளைத்தன. சந்தோஷ வாசனைகள் வீசின. பெருமிதக் கம்பீரங்கள் கிளை பரப்பின.

"உங்ககிட்ட இருக்கிற திறமைக ளுக்கு நீங்க நம்பர் ஒன்னா எப்பவோ ஆகியிருக்கணும்... ஏன் இன்னும் ஆகல்லே?"

டிரைவ்-இன் ஹோட்டலில் காபி சாப்பிட்டுக் கொண்டே என்னிடம் கேட்ட அவளையே கண்கொட்டாமல் பார்த்தேன்.

மெலிதான இதழ்ச் சுழிப்பில் கல்யாணி தெரிந்தது. கன்னக் குழி களில் மோகனம் துள்ளிற்று. கண்களின் விகசிப்பில் சாருகேசி நர்த்தன மாடிற்று. முகத்தின் சன்னச் சொடுக்கலில் கரகரப்பிரியா குதூகலித்தது.

"என்ன அப்படிப் பாக்கறேள்?"

முகத்தில் படர்ந்த இளஞ் செந் நிறத்தில் தேவமனோகரி மிளிர்ந்தது.

"உன்கிட்ட ஒரு ராகமாலிகையைப் பாக்கறேன், மனோன்மணி".

மிருதுவாய்த் தலை குனிந்தாள் மனோன்மணி. அவள்மீது நான் கொண் டிருந்த காதல் தலை நிமிர்ந்தது.

அவள் பிறகு நிமிர்ந்து பார்த்தபோது பார்வை 'இன்னும் சொல்லேன்' என்று கெஞ்சாமல் கெஞ்சிற்று.

மாலைநேர மோகன இருளில் மேஜையில் மெலிதாய் ஊர்ந்த என் விரல்கள் அவள் விரல்களைத் தேடி ஸ்பரிசித்தபோது, அவை தேர்ந்த பக்கவாத்தியம் போல் இயங்கின.

அந்த முதல் ஸ்பரிசம் பட்டவேளை, சாசுவத வேளை. சத்துவ வேளை போலிருக்கிறது. அந்த ஸ்பரிசம் நிரந்தர பந்தமாயிற்று.

தங்கக் கடற்கரையின் தனிமை வேளையில் நான் ராகமாலிகையில் ஒரு பாடலைப் பாட, அலைகள் நர்த்தனமாட, புதுமாலையாய் மனோன் மணி துள்ளித் துவண்டாள்.

திருமுல்லைவாயில் கோயிலின் ஓரம், மரங்களிடையே நின்று நான் விஜயஸ்ரீ ராகத்தில் பாட்டொன்று பாட, அவள் சிற்றருவியாய் உருகி நெளிந் தாள்.

மாமல்லபுரக் குகைக் கோயிலருகே நான் அமர்ந்து 'காற்று வெளியிடைக் கண்ணம்மா...' என்று அவள் காதலை எண்ணிக் களித்தபோது, அவள் தன் காதலை எனக்குச் சமர்ப்பித்து என்னுள் இழைந்து நானாகி, அவளுள் என்னை ஈர்த்து, என்னை அவளாய், முற்றிலுமாய் மாற்றினாள்.

நானே அவளாய், அவளே நானாய் உருகிக் கரைந்து உருவமழிந்த நாள்கள் அவை.

என் சங்கீதத்தின் சாகித்யமாய் அவள் மாறிப்போன நாள்கள் அவை.

என் ராகத்தின் பிருகாக்கள் அவள்.

என் நாதத்தின் த்வனி அவள்.

அவளைப் பார்த்தாலே சங்கீதத்தின் பல சங்கதிகள் எனக்குப் புலப்பட்டன.

ராகங்களின் மேன்மைகள் பலவும் தெரிந்தன. மென்மைகள் புரிந்தன.

அவளை நினைத்துப் பாடினால் கல் யாணி ராகத்திற்கொரு புதிய களை கட்டியது.

அவளைப் பார்த்தாலே, மோகன ராகத்தின் புதிய பரிமாணம் தெரிந்தது.

என்னுள் ஒரு புதிய, உத்வேகமுள்ள கலைஞனை அவள் பிரசவித்துக் கொண்டிருந்தாள். அவளது போஷாக்கில் அவன், மகா கலைஞனாய் உருப்பெற்றுக் கொண்டிருந்தான்.

கச்சேரிகளில் என்னென்ன பாடல்களைப் பாடவேண்டும் என்று தொகுத்துக் கொடுப்பாள். 'இந்த இடத்தில் இந்தப் பாடல்' என்று வரையறை செய்து கொடுப்பாள்.

கச்சேரி கேட்கிறவர்களின் மனோநிலையைத் துல்லியமாய்க் கணக்கிட்டுக் கச்சேரிக்கு நடுவில் துண்டுக் கடிதத்தில் விவரங்களை அனுப்புவாள். ஒவ்வொரு கச்சேரியின்போதும் ரசிகர்கள் நடுவில் அமர்ந்து, கச்சேரி தொய்யுமிடத்தில் அடையாளம் காட்டுவாள்.

பத்திரிகையாளர்களை எப்படி அணுக வேண்டும் என்று கூறுவாள். விமரிசகர்களை எப்படி நடத்தவேண்டும் என்று சொல்லிக் கொடுப்பாள். விமரிசகர்கள் வேலிப்பயிர் போல என்றும் அளவுக்கதிகமாய் இடம் கொடுத்தால், தோட்டத்தையே சிதைத்து விடுவார்கள் என்றும் கற்றுக் கொடுத்தாள்.

, எந்தக் கலைஞனும் மகாகலைஞனாக, ஒரு பொது ஜனத்தொடர்பாளன் – உண்மையான அக்கறையுடன் நல்லெண்ணமும் கொண்ட ஆதரவாளன் – தேவை என்பதை மனோன்மணியே எனக்கு உணர்த்தினாள்.


கலை என்கிற ஜரிகையை எப்படிச் சங்கீதம் என்னும் புடைவையில் அழகாய்ப் பயன்படுத்த வேண்டும் என்று உபதேசித்தாள்.

சில கச்சேரிகள் எதிர்பார்த்த விதமாய் அமையாது சோபையிழந்து போய்விடும். அப்போது நான் சோர்ந்து போய்விடும்போது, என்னை எப்படியெல்லாம் உற்சாகப்படுத்துவாள்?

மார்பில் சரிந்து,'என் கண்ணா, ஏன் சோர்ந்து போயிடுத்து?... அடுத்த கச்சேரிலே இமயமலை உசரத்துக்குப் போகிறதுக்கு இப்பப் பதுங்கித் தயார் செய்துக்கறதா?' என்று கொஞ்சுவாள். மேனியெல்லாம் முத்தமிடுவாள். கேசங்களிடையே விரல்களால் கோதி, சந்தோஷச் சிதறல்களை மிளிரவிடுவாள்.

"நான் இன்னிக்குச் சரியாவே பாடலே மனோ..." என்று அவள் நெஞ்சில் முகம் புதைத்துக் கண்ணீர் விடும்போது, "யார் சொன்னா, அப்படி?. வராளியிலே ஒரு தியாகய்யர் கீர்த்தனையை எடுத்து விட்டேளே?... எப்படி இருந்தது தெரியுமா?... ஆடியன்ஸ் அப்படியே ஆடிப் போயிட்டா..." என்று துவண்ட என் உற்சாகத்தைத் தூக்கி நிறுத்துவாள்.

நான் ஒரு கவியாக இருந்தால் கண்ணனைப் பற்றி பாரதி, தோழன், சேவகன், காதலி, குழந்தை என்றெல்லாம் பாடினானே, அப்படி மனோன்



மணியைப் பற்றிப் பாடி, பட்டி தொட்டி யெல்லாம் பாடலாய்ப் பாடியிருப்பேன்.

மனோன்மணியுடன் இரண்டறக் கலந்து போனபோது, சியாமளிக்குத் தெரிந்தால் என்ன ஆகும் என்ற அச்சம் எனக்குள் எழுந்தது உண்மையே. ஏனெனில் சியாமளியை நான் மனதார விரும்பினேன். நான் சியாமளியின் கணவன் என்று அறிந்தும், என்னை நேசித்து எனக்குத் தன்னைக் கொடுத்தவள் மனோன்மணி. ஆனால் சியாமளி, நான் மனோன்மணியுடன் பழகுவதை ஏற்றுக்கொள்ள மாட்டாள் என்றே தோன்றிற்று.

ஒரு குழந்தையின் சொந்த உணர்வுடன் என்னை ஆக்ரோஷமாய் நேசிக்கிறவள் சியாமளி. குழந்தை மாதிரி வெகுளித்தனமும், அதீத உரிமையுணர்வும் கொண்டவள்.

மனோன்மணியைச் சந்தித்துவிட்டு, உற்சாகம் கொப்பளிக்கும் மனோநிலையில் நான் வீடு திரும்பும்போது, என் உற்சாகத்தைப் பார்த்துத் தான் மகிழ்கிறவள் சியாமளி.

பலமுறை அவளிடம் உண்மையைக் கூறிவிடலாமாவென்று நான் நினைத்ததுண்டு. ஆனால் மனம் ஒப்ப ஏற்றுக் கொள்வாள் என்று எனக்குத் தோன்றவில்லை. சியாமளி, மனம் துவண்டு போவதை என்னால் ஏற்கமுடியவில்லை. அவள் கண்கள் கலங்குவதை என்னால் சகிக்க முடியாது. அவள் வருந்தினால் என் கலையுணர்வு நசித்துவிடும். என்னால் பாடமுடியுமா என்றே சந்தேகமாயிருக்கிறது. ஆனால் மனோன்மணி இல்லாவிட்டால் என் சங்கீதமே சிதைந்து போய்விடும். என் சங்கீத வாழ்க்கையின் கண்கள் சியாமளியின் குழந்தைத்தனம் என்றால், அதன் பார்வை மனோன்மணியின் மேம்பட்ட பக்குவம். என் கலை உணவின் சுவை சியாமளியென்றால் வாசனை மனோன்மணி. எதை இழப்பேன் நான்?

குழந்தையாய் என்னை நம்பிக் கொண்டிருக்கும் சியாமளியை ஏமாற்றுகிறோமே என்று பல நாள்கள் நான் தனிமையில் தவித்ததுண்டு. மனோன்மணியை நெஞ்சில் சரித்து அவளிடம் புலம்பியதுண்டு.

அப்போதெல்லாம் அவள் என்னை அமைதிப்படுத்தி இருக்கிறாள். மகா கலைஞர்களுக்கு இதுபோன்ற உறவுகள் தேவை என்பதை நியாயப்படுத்தி இருக்கிறாள். "மனைவி என்கிற தாய்மைப் பரிவும், நாயகி என்னும் மோகாவேசமுமே ஒரு கலைஞனை நிற்கச் செய்யும் கம்பீரங்கள்... மிடுக்குகள்... சியாமளிக்குத் தெரிய வேண்டாம். ஒரு மகாகலைஞன் வாடிப் போய்விடக்கூடாது..." என்று கூறித் தன்னைப் பின்னணியிலேயே நிறுத்திக் கொண்டிருக்கிறாள்...

இது நாள்வரை சியாமளிக்குத் தெரியாமலேயே மனோன்மணியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இன்று 'என் சசிகாந்தனுக்கு ஒரு சிந்து இல்லாதது எனக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருக்கு தெரியுமா?' என்று சியாமளி கேட்டபோது 'என் மனம் எவ்வளவு நிம்மதியடைந்தது தெரியுமா? என் குற்ற உணர்வுக்கு இதமாய்ச் சியாமளி மருந்திட்ட மாதிரி இருக்கிறது.

'சியாமளி! என் அன்பு தேவதையே! என்னை மன்னிச்சுடு... எனக்கு நீயும் வேணும், மனோன்மணியும் வேணும். நீ மனோவை ஏத்துக்கற மனப் பக்குவத்தை அடையறவரைக்கும், மனோவோட உறவு ரகசியமாகவே இருக்கும்!'

என் நெஞ்சில் சரிந்தவாறே தூங்கிப் போன சியாமளியின் கலைந்த கேசங்களைச் சீர் செய்கிறேன். அவள் தலையிலிருந்து உதிர்ந்த மல்லிகை மலர்கள் என் மேனியெங்கும் படர்ந்து சுகமாய் மணம் வீசின.

மனம் நாட்டையில் மெலிதாய்ப் பாடிற்று.

சியாமளி கூறுகிறாள் :

சங்கீத உலகில் கொடிகட்டிப் பறக்கும் சசிகாந்தனின் மனைவி என்று என்னைப் பாராட்டுகிறார்கள். பத்திரிகைளில் பேட்டி காண்கிறார்கள்.

'ஒவ்வொரு வெற்றிபெற்ற மனிதனுக்கும் பின்னணியில் ஒரு பெண் இருக்கிறாள்' என்று கூறுகிறார்கள். சசிகாந்தனின் வெற்றிக்குப் பின்னால் நான் இருப்பதாகப் பலர் கூறும்போது என்னுள் நான் சிரித்துக் கொள்வேன்.

ஏன் தெரியுமா?

அது நானில்லை. மனோன்மணி தான்.

மனோன்மணியுடன் அவர் உறவு கொண்டிருக்கிறார் என்பதை எப்போதோ நான் அறிவேன். இன்னொரு பெண்ணுடன் கணவன் தொடர்பு கொண்டிருக்கிறான் என்றறிய ஒரு மனைவி ஆராய்ச்சியா செய்ய வேண்டும்? கணவனின் கண்களைப் பார்த்தால் தெரியாதா? குரலில் தெரிகிற பிரத்யேக அதிர்வைக் கொண்டு புரிந்து கொள்ள முடியாதா?

உற்சாகத் துள்ளலுடன் வீட்டுக்கு வருவார். அந்தக் கணமே தெரியும், மனோன்மணியிடமிருந்துதான் வருகிறாரென்று. இதுகூடத் தெரியாத அளவுக்கு நானென்ன குழந்தையா?

எனக்குச் சங்கீதத்தைப் பற்றி ஒன்றும் தெரியாதுதான். ஆனால் என் கணவனைப் பற்றித் தெரியும். ஒரு பெண்ணுக்குத் தன் புருஷனைப் புரிந்து கொள்வது என்ன கஷ்டம்?

அவர் ஒரு கலைஞர். அந்தக் கலைஞரின் மேதாவிலாசத்தைப் பரிமளிக்கச் செய்ய எனக்குத் தெரியவில்லை. அதை அந்த மனோன்மணி தெரிந்து வைத்திருந்தாள்.

தாமரைமலரின் வாசனையை அதன் தண்டருகேயே இருக்கும் தவளையால் புரிந்து கொள்ள முடியாதபோது, எங்கோ இருக்கும் வண்டு புரிந்து அதில் சுகிக்கிற மாதிரி, அவர் கலையுணர்வின் மேன்மையைப் புரிந்து பரிமளிக்கச் செய்தவள் மனோன்மணி.

இதனை முதன் முதலில் தெரிந்து கொண்டபோது, என் மனம் துடித்த துடிப்பு எனக்குத்தான் தெரியும். எத்தனை இரவுகள் அழுதிருக்கிறேன்! சாப்பிடத் தோன்றாமல் எத்தனை பகல்கள் துடித்திருக்கிறேன்!

"என் சியாமளிக் கண்ணா! ஏன் சோர்ந்திருக்கு?" என்று அவர் என்னை அணைத்துக் கொள்கிறபோது உதறித் தள்ளிவிடலாமா என்று நினைத்திருக்கிறேன். மனம்வராமல், மனம் இடங்கொடாமல் அவரை அனுமதித்திருக்கிறேன்.

அவர் என்மீது உயிரை வைத்திருக்கிறார். நான் கண் கலங்கினால் துடித்துப் போய்விடுவார். 'சியாமளி, சியாமாக் கண்ணு...' என்றெல்லாம் என்னையே சுற்றிச் சுற்றி வருவார். நான் சிரிக்கிறவரை, தன் சங்

கீதத்தையே மறந்துவிடுவார். எனக்கு உடல்நலம் சற்றுக் குறைந்தால்கூடக் கச்சேரி செய்யமாட்டார். எத்தனை கச்சேரிகளை ரத்து செய்திருக்கிறார்!

குழந்தை மாதிரி அவர். 'அம்மா, அம்மா' என்று சுற்றிச் சுற்றி வந்து, அம்மா சிரித்தால் தானும் சிரித்து அம்மா அழுதால் தானும் அழுகிற குழந்தை மாதிரி இவர்.

இவரது பலமே இவரது கம்பீரம்தான். இவரது மிடுக்குதான். 'உங்கள் ரகசியம் எனக்குத் தெரியும்' என்று ஒருகணம் நான் காட்டிக் கொண் டேனானால், மணல் வீடாய் அவர் குலைந்து போய்விடுவார். கம்பீரம் அழிந்து, மிடுக்குக் குலைந்து அவர் சிதறிப் போய்விடுவார்.

சிதறிய சலங்கை மணிகளால் என்ன பயன்?

ஒரு மகா கலைஞன் சிதறிப் போனால் கலை உலகுக்கு அல்லவா நஷ்டம்? அவர் என் கணவர் மட்டுமல்ல. ஒரு கலைஞனும்கூட. அவரது 'ஈகோ'வை அழித்து, கலைஉணர்வு என்னும் கம்பீரத்தைச் சிதைத்து, வெறும் கணவனாய் மாற்றுவதா ஒரு மனைவியின் வேலை? நல்ல மனைவி இதனைச் செய்யலாமா?

தான் செய்வது தவறு என்ற குற்ற உணர்வு அவருள் எழுவதை நான் அறிவேன். அப்போதெல்லாம் 'என் சசி காந்தன், எனக்கு மட்டும் சொந்தம்னு எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?' என்று அவரைப் பற்றி மிக உயர்வாய் நான் நினைத்துக் கொண்டிருப்பதாய்க் கூறுவேன்.

அப்போதெல்லாம் எவ்வளவு சந் தோஷப்படுவார் தெரியுமா? அப்போது அவர் முணுமுணுக்கும் ராகங்கள்கூட அற்புதமாய் இருக்கும்.

என் துயரத்தை மறைத்து, அவர் சந்தோஷத்தில், அவர் கம்பீரத்தில் மனம் மயங்கிப்போவேன்.

ஒரு கலைஞனின் எழுச்சியில் மனம் கரைந்துபோவேன்.

என் நெஞ்சின் ஊமைவலி எனக் குள்ளேயே வலித்துக் கொண்டிருக் கட்டும். பரவாயில்லை.

'சியாமளிக் கண்ணு' என்று என்னை ஆலிங்கனம் செய்கிறார். அந்த அந்நியோன்யம், என் மனவலிக்கு மருந்திடுகிறது. ❀



ஆடும் மயில்

கொல்லங்குடி உடையப்பன்

ஆடும் மயிலின் அழகினிலே
யார்தான் மயங்கார் உலகினிலே
காடும் மயங்கி அசைந்தாடும்
காற்றும் மயங்கி இசைபாடும்.

பாடும் குயிலின் பண்ணிசைக்குப்
பாதம் மாற்றி மயிலசையும்
ஓடி இறைக்கே அலையும் புலியும்
ஒய்ந்து மயங்கித் தலையசைக்கும்.

காணும் உயிர்கள் அத்தனையும்
கவரும் வண்ணச் சித்திரமாய்
பேணும் அழகைப் பெறுவதற்கும்
பெரிய தவங்கள் செய்ததுவோ!

மண்ணில் பயிர்கள் வாடுகையில்
மயங்கி மழையை நாடுகையில்
விண்ணில் முகில்கள் கூடிடவே
விரும்பி மயில்கள் ஆடிடுமோ?

கறுத்துக் கூடும் முகில் கண்டு
களித்தே ஆடும் மயில் கண்டு
சிரித்து வானம் பொழிந்திடுமே
செகமும் சிறந்து செழித்திடுமே!

நீரில் நனைந்த விண்ணொளியை
நிறங்கள் வளைந்த வானவில்லை
வாரிச் சூடித் தோகை மயில்
வாலில் மலராய்த் தொடுத்ததுவோ!

அணியாய் ஆடும் தோகை மயில்
ஆணா பெண்ணா சொல்லிடுவீர்
மணியாய் உயிரிடை ஆணினத்தை
மதிப்பில் உயர்த்திடும் மயில்தானோ!

வயிரம் முத்து பவளமெல்லாம்
வைத்து இழைத்த தங்க உடல்
உயிரும் தாங்கி மயிலாகி
உள்ளம்ஈர்க்கும்நடமாடி.

இருக்கும் கோடிப் பறவையிலே
எழிலாய் ஆடிக் கோலமயில்
அரிய தேசியப் பறவை யென்றே
அடைந்த பெயரும் சிறப்பன்றோ?

இதவு திறந்தே இருக்கும்

ராஜேந்திர குமார்...

இழிதொழில் புரிவதாக எண்ணிக் குலமகள் ஒருத்தியால் ஏளனமாகப் பார்க்கப்பட்ட ஒரு பெண், அந்தக் குலமகளுக்கு நேரவிருந்த ஆபத்து களைத் தடுத்துக் காத்து அரணாக நின்றபோது...

சென்னைக்குச் சற்றுத் தள்ளி அந்தச் சம்பவம் நடந்தபோது மணி சரியாக ஆறு பத்து. மாலை ஆறு பத்து. ஒரு பெரும் கட்சித் தலைவர் கொலை செய்யப்பட்டார்.

மெல்ல மெல்ல நகரும் புயலைப் போலச் செய்தி ஊருக்குள் நுழைய ஆரம்பித்திருந்தது. பயங்கரமாக... மிகப் பயங்கரமாக.

அஷ்டலட்சுமி கோயில் வாசலில் நின்றிருந்த கௌரியம்மாளுக்கு மூச்சு இரைத்தது. இந்திரா நகரிலிருந்து பிடிவாதமாக நடந்தே வந்த களைப்பு. திணறிற்று.

"பூவேணுமா தாயீ" என்ற வயசு வந்த பெண்ணின் கேள்விக்கு அவசரமாக, "வேணாம்போ" என்றாள்.

(சனியன். சுத்தமாயிருக்காளோ என்னமோ? யாரு கண்டா? இவ பூவை வாங்கிச் சாத்தினால் பாவம்னா வரும்)

வந்து நின்ற காரிலிருந்து கலகலப்பான ஒரு பணக்கார பக்திக் கூட்டம் இறங்கிச் சிரித்தவாறு கோயிலுக்குள் போயிற்று. போகிற போக்கில், "அம்மா பாரேன் அந்தப் பையனை. என்னை சைட்டடிக்கிறாம்மா" என்ற பதினைந்து வயதுப் பெண்ணைப் பார்த்ததும், நினைவு சட்டென்று திரும்பிப் பார்த்தது.

கதா காலட்சேபம் பண்ணப் போய் விட்ட அப்பாவுக்காக அம்மா போட்டுத் தந்த சுக்குக் காப்பியை வெள்ளிக் கூஜாவில் எடுத்துக் கொண்டு –

'மெல்லப் போடி' என்று அம்மா கத்தக் கத்தக் கோயிலை நோக்கி ஒடினாள்.

கழுத்தில் மாலையும், கையில் சப்ளாக் கட்டையுமாக மேடையில் நின்ற அப்பா கம்பீரக் குரலில் – "இதையேதான் பாரதியாரும் சொல்றார். உண்மையறிந்த யோகி எதனையும் செய்வதில்லை. உயிர்ப்பினும், உறங்கினும், ஏய்... ஏய்... எங்கே ஓடி வரே?" என்று அவர் கத்தக் கத்த –

கூட்டத்தின் நடுவில் ஓடி – மேடை ஏறி வெள்ளிக் கூஜாவைத் திறந்து தம்ளரில், சுக்கு மிளகு திப்பிலி தட்டிப் போட்ட கஷாயத்தைக் காப்பி என்று நீட்ட – மேல் துண்டினால் தலையை மூடி இன்னொரு முனையை வைத்துச் சபையை மறைத்து வாயில் ஊற்றிக் கொள்வார் அப்பா.

வீட்டுக்கு வந்ததும்தான் கத்துவார். "போறச்சயே கொடுத்துடமாட்டியா? மானமே போறது உன் பொண்ணால. வயசுப் பொண்ணா லட்சணமாயில்லாம கும்பல் நடுவில் ஒடிவரா. வயசுப் பையனுங்க கண் முழுக்க இவ பேர்லதான். பிரம்மஹத்தி".

"ஏண்டி? ஏண்டி?" என்று அம்மா மொத்த மொத்த – சிரித்தாள். நிறையச் சிரித்தாள்.

அதெல்லாம் பழங்கதை.

இப்ப டாக்டர் என்னென்னமோ சொல்றார். சர்க்கரை வியாதி, ரத்தக் கொதிப்பு. 'அதிர அதிர நடக்கக் கூடாது. அதே சமயம் நிறைய நடக்கணும்'ஷுகர் குறையும்' என்கிறார்.

"அப்புறம் என்ன? நடந்த மாதிரியுமாச்சு. புண்ணியமுமாச்சு. தினமும் சாயரட்சை அஷ்டலட்சுமி கோயிலுக்கு நடந்தே போய் நடந்தே வந்துடு". என்றார் கணவர்.

நடப்பதில்தான் சிரமம். அங்கங்கே நின்று ஓய்வெடுத்தால் போதும். நடக்கலாம்.

"யாரது? கௌரி மாமியா?" என்ற குரலுக்குத் திரும்பிப் பார்த்தாள். முகம் சுளித்தாள். ராசாத்தி. அவள் பிழைப்பு அப்படி. இவள் அம்மா ஆரம்ப நாளில் இவள் வீட்டில் வேலைக்காரியாக இருந்தவள். இப்ப இவள் பெரிய ஸ்டார். ஆனால் மாஜி ஸ்டார். சொந்தப்படமெடுத்து நஷ்டப்பட்டு இப்போது கஷ்ட ஜீவனம். அதனால் வீட்டு வாசல் திறந்தே இருக்கிறது இப்போதெல்லாம். தொழில் ரகசியம்.

"வந்த வேலையைப் பார்த்துண்டு போறியா?" கோபமாகச் சொன்னாள் கௌரி. "உன்னோட என்னையும் பார்த்தா உன் லிஸ்டில என்னையும் சேர்த்துடுவா. நான் ஏதோ இந்த வயசிலேயும் ஊருக்கு நல்லவளா வாழ்ந்துண்டிருக்கேன். போய்ச் சேரு".

அவள் முகம் துவண்டது. விறுவிறுவென்று நடந்து உள்ளேபோய்விட்டாள்.

கௌரி நடந்தாள். அறுபது வயசைத் தொட்டாலும், நோய்கள் இருந்தாலும் கொஞ்சம் பளபளப்பாக இளமையாகவே தெரிந்தாள். நாகரிகம் வளர்ந்துவிட்ட இந்த நிலையிலும்கூட மிக்ஸி, கிரைண்டர் என்று போகாமல் இட்லிக்கு ஆட்டுக்கல்லில் மாவரைக்கிறாள். அம்மியில்தான் துவையல் அரைத்து எடுக்கிறாள். உடம்பென்னவோ வலுவாக திண்ணென்று தானிருந்தது.

ஊர் முழுக்கப் பரவிவிட்ட செய்தியை சிலர் நம்ப மறுத்தார்கள். நிறையத் தயங்கினார்கள்.

"இருக்காது. எவனோ கிளப்பி விட்டபுரளி".

"அதானே. ஊர் இருக்கிற இந்த நெலமையில இப்படியெல்லாம் நடக்க சான்ஸே இல்லே" என்ற பெரியவரிடம் ஓடிவந்தான் ஒருவன்.

"அங்கே அடையாறு பக்கமெல்லாம் ஒரே கலாட்டா. ரகளை, பஸ் எல்லாம் கொளுத்தறாங்க. கடையைச் சூறை யாடறானுங்க" என்றவனின் அந்த அலறலுக்கு பெஸண்ட் நகர் பெரிய கடைகளில் எல்லாம் இரும்பாலான ஷட்டர்கள் இழுத்து இழுத்து மூடப் பட்டன. தள்ளுவண்டி கறிகாய்க் காரர்கள் ஆனமட்டும் வேகம் பிடித்துத் தள்ளிப் போனார்கள்.

பெரியவர் விழித்துக் கொண்டு நின்ற பேத்தியை இழுத்துக்கொண்டு கிட்டத்தட்ட ஒட்ட வேகத்தில் நடந்தார். "சீக்கிரமா வாடி. வீட்டுக்குப் போயிட லாம்."

ஒரு தெருவைக் கடக்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரின் வீட்டுக் கண்ணாடிகள் படீர் படீரெனத் தெறித்துக் கொண்டிருக்க, பிரசார வேன் ஒன்றும், அம்பாசிடர் கார் ஒன்றும் கொழுந்து விட்டு எரிய, தாக்குதலுக் குள்ளாகிக்கொண்டிருந்தது.

"கலகம் முத்திடுத்து" பெரியவர் சொன்னார். "நடயேண்டி சீக்கிரம். வயசுப் பொண்ணா லட்சணமா வேகமா வராம – ஏண்டி, அன்ன நடை நடக்கிற நேரமா இது?" என்றவர் –

கோபம் பொத்துக் கொண்டு வந்த அந்தப் பெண் நடந்த வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிப் போனார். "அதுக்கேண்டி இந்த ஒட்டம் ஓடறே? சித்த மெல்லவே போ". என்றவர், திணறும் மூச்சை சீர்படுத்திக் கொள்ள இன்ஹேலரை முக்கால் உறிஞ்சினார்.

மூலவர்களைத் தரிசனம் செய்த கௌரி, ஊர் நடப்புத் தெரியாமல் குறுகலான படிகளில் ஏறிய கௌரி, சந்தான லட்சுமி சந்நிதியில் கண்மூடிக் கும்பிட்டுக் கொண்டிருந்த அந்த ராசாத்தியைக் கண்டதும் சீண்டினாள்.

"ரொம்பவும் முக்கியம். சந்தானம் கேட்டு நிக்கிறியாக்கும். பிள்ளை வரம் வேணுமாக்கும்".

"இந்தச் சாமியைக் கும்பிட்டா புள்ள பிறக்குமா என்ன? எனக்குத் தெரி யாதே". விலகினாள் ராசாத்தி. "எனக் குப்புள்ள வேணாம்மா."

"ஏண்டி?"

"என் தொழிலு கெட்டுடுமே."

கௌரியம்மாதான் சங்கடப்பட்டுப் போனாள். (இப்படியா ஸ்பஷ்டமா ஒத்துக்கறது சனியன்!) "ஏண்டி இப்படிப் பளிச்சுன்னு சொல்லிக்கிறியே? வெட்கமாயில்லே?"

"இதிலே வெட்கப்பட என்ன இருக் குது கௌரியம்மா? ஆபீஸ் போகிற பெண்கள் 'நான் டைப்பிஸ்ட்', 'நான் கிளார்க்', 'நான் மானேஜர்'ன்னு பெருமையா சொல்றாங்கள்லே. என் தொழிலை நான் பெருமையாதான் சொல்லுவேன். ஏன் கூச்சப்படணும்?"

"உன்னோட பேசிண்டு நிக்கிறதே எனக்குக் கேவலம். நகர்ந்துக்கோ..." என்றவள் மீண்டும் மாடி ஏறலானாள்.

அந்த ராஜாத்தி வந்த வழியே திரும்பி இறங்கிப் போவதைக் கண்டதும் சங்கடம் புரண்டது.

'ஆனாலும் நான் இப்படிப் பேசி யிருக்கப்படாதோ?' நிமிர்ந்தாள். 'ஏன்? என்ன தப்பு? எதைத் தப்பாச் சொல் லிட்டேன்? உள்ள உண்மையை யதார்த்த மாச் சொன்னேன். என்ன தப்பு?'

அனைத்து லட்சுமிகளுக்கும் கும்பிடு போட்டுவிட்டு இறங்கினபோதுதான் களைப்பாக உணர்ந்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். எல்லாரும் எங்கே?

கீழே, 'மூலஸ்தானத்தை மூடலாமா? சற்றுப் பொறுத்து மூடலாமா?' என்ற பேச்சு தவிர அமைதி – ஆளரவமற்ற அமைதி. அதெப்படி அத்தனை பேரும் திடீரென்று காணாமல் போய்விட் டார்கள்?

எட்டிப் பார்த்த ஒருவர் அங்கிருந்தே கத்தினார். "சீக்கிரம் வீடு போய்ச் சேருகிற வழியைப் பாருங்கோ. ஊர் பூரா கலாட்டா. சீக்கிரம். சீக்கிரமாப் போங்கோ" என்றதும்தான் திகீரென்றது.

நடந்தாள். சுற்று வழியாகப் போகப் பயந்து குறுக்குச் சந்தில் புகுந்து மாதா கோயிலுக்குப் போய் அங்கிருந்து பஸ் பிடித்து – என்ற கனவெல்லாம் வீண்.

கோயில் காலியாகி இருக்க, எதிரே கடைகள், ஹோட்டல்கள், அனைத்தும் மூடிக்கிடக்க, கடற்கரைச் சாலையில் நெடுக அமைதி அலறியது. பெயருக் குக் கூட ஓர் ஆள் நடமாட்டமில்லை.

'என்ன திடீர்னு?' நடுங்கினாள். பஸ் ஸ்டாண்ட் பக்கமாக நின்றாள். 'ஆட்டோ வந்தாலும் கூடப் பர வாயில்லே'.

ஓட்டமும், நடையுமாக வந்து கொண் டிருந்த ஒரு பெண்ணின் கூடையி லிருந்து வந்த கருவாட்டு நாற்றம் குமட்டியது. மூக்கைச் சுளித்துக் கொண்டாள்.

"பஸ்சுக்கு நிக்கறியாம்மா? வராது. எல்லா பஸ்சும் டெப்போவுக்குப் போயி ருச்சி. மவுண்ட் ரோட்டில எழுவது பஸ்சுங்களை எரிச்சிட்டாங்களாம்."

நேர் சாலையில் பார்த்தவளுக்கு வயிற்றைக் கலக்கியது. அந்தக் கடைசிவரை தெரிந்தது.

நடக்கப் பயமாக இருந்தது. அப் போது திடீரென்று நினைவுக்கு வந் தது. 'பக்கத்தில் சாரதா வீடு இருக்கே. அங்கே போய் போன் செய்தால் வீட்டுக் காரர் காரோட வந்து கூட்டிட்டுப் போக மாட்டாரா?' என்று எண்ணி ஒரு பக்கவாட்டுச் சாலையில் திரும்பியவள் ஆணியடித்தாற் போல நின்று விட்டாள். சாரதாவின் வீடு அந்தக் கடைசியி லிருந்தது. நடுவிலே ஒரு கூட்டம் நின்று ஒரு கட்சிக் காரியாலயத்தின் எதிரே கலாட்டா செய்து கொண்டிருந் தது. கொடியைப் பிடித்து இறக்கித் தீ வைத்து சோடா பாட்டில்களைப் பறக்க விட்டு அந்தரத்தில் மோதி வெடிக்க விட்டு, யாரோ ஓர் ஆள் கும்பலுக்கு நடுவே இரண்டொரு தரம் மேலே எழும்பி உயிர்க் கூச்சலிட்டுக் காணாமல் போனான். கம்புகளும் சைக்கிள் செயின்களும் இரண்டொரு கத்திகளும் எழுந்து இறங்க –

உடல் முழுவதும் நடுங்கத் திரும் பியவள் கதவு திறந்தே இருந்த வீட்டுக் குள் ஓடிப்போய் நின்று நடுங்கினாள்.

"பயம்... எனக்குப் பயமாயிருக்கு".


"வாங்க கௌரியம்மா. சும்மா வாங்க. இந்த வீட்டுப் பக்கம் எவனும் வரமாட்டான். உள்ளே வந்துடுங்க". என்ற குரலுக்குத் திரும்பிப் பார்த்து முகம் சுளித்தாள்.

ராஜாத்தி!

அருவருப்புடன் வெளியே போக முயன்றபோது ஒரு கூட்டம் ரத்தச் சகதியாகிப் போன ஓர் ஆளைத் தரதர வென்று இழுத்துப் போவது தெரிந் ததும்,

அலறிவிட்டாள்.

அவளை ஒதுக்கிக் கதவைச் சாத் தித்தாழ்ப்பாளைப்போட்டாள் ராஜாத்தி. "நீங்க என்னைத் திட்டினாலும் சரி.



இப்ப உங்களை வெளியே அனுப்ப மாட்டேன். விடியட்டும். கொஞ்சம் கலாட்டா அடங்கும். அப்புறமா வீட்டுக்குப் போக நானே வழி செய்யறேன்".

"ராத்திரி முழுக்கவா? உன் வீட்டிலா?" என்றகௌரியம்மாளின் பதற்றத்துக்குச் சிரித்தாள். "அதுதான் உங்களுக்காகக் கதவைச் சாத்திட்டேனம்மா. நீங்க இங்கே இருக்கிற வரை கதவு திறக்காது. சத்தியமாச் சொல்றேன். நீங்க தைரியமா இருங்க. எல்லாக் கட்சிக்காரங்களும் வந்து போகிற இடம். அதனால இந்த வீட்டைப் பொறுத்தவரை எந்தப் பயமுமில்லே. நீங்க நிம்மதியாயிருக்கலாம்".

இந்திரா நகரில் ஒரு பங்களாவில் தவித்துக் கொண்டிருந்தார் கைலாச பதி. போனில் கத்தினார். "உங்க வீட்டுப் பக்கத்திலேதானே கோயில்? பார்த்துச் சொல்லேன்."

"நீ போனிலே சொன்னதுமே காரோட போய்ப் பார்த்துட்டேன். ஈ காக்காயில்லை. காவல் ஆள்தான் கடைசியா ஓர் அம்மாளை விவரிச்சதிலே உன் கௌரி மாதிரியே தெரியுது. பயப்படாதே கைலாசபதி! என் வேலைக்காரனை சைக்கிள்லே - இரு. வந்துட்டான்..."

கொஞ்ச நேரம் போன் குறட்டை விட,

"கேட்டேன். எல்.பி. ரோடு வரை போய் - அங்கே பயங்கரக் கலாட்டான்னதும் - திரும்பிட்டான்."

"எங்கேதான் போயிருப்பா?"

"கவலையே படாதே கைலாசம்! எங்காவது போனில்லாத சிநேகிதி வீட்டில பத்திரமாயிருப்பா. வந்துடுவா. பயப்படாதே."

"என் ராத்தூக்கம் போச்சு."

"சாப்பிட வாங்க கௌரியம்மா." என்ற ராஜாத்தியை அலட்சியப்படுத்தித் திரும்பிக் கொண்டாள்.

"உங்க வீட்டு உப்பைத் தின்னு வளர்ந்த உடம்பு. உங்களுக்குச் சோறு போடறது என் பாக்கியம். வாங்கம்மா!"

"வேணாம்டி. பசிக்கலே" என்று திரும்பிப் படுத்துக்கொண்டவள் -

எவ்வளவு நேரம் தூங்கினாளோ ஒரு பெரிய கலவர ஓசையும், துப்பாக்கிச் சூடும் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்திருக்க -

"படுங்கம்மா. ஒண்ணும் ஆகாது."

சாப்பாட்டுப் பாத்திரங்கள் மூடிக் கிடக்க, இரண்டு வாழையிலைகளும் மடித்தே கிடந்தன -

"ஏண்டி நீ சாப்பிடல?"

"அம்மா! நான் உத்தமின்னு சொல்லலை. அதே சமயம் மனுஷியில்லன்னு நினைச்சிடாதீங்க. வீட்டுக்கு வந்த விருந்தாளியைப் பட்டினி போட்டு நான் சாப்பிட்டா, பிறகு எனக்கு நல்ல கதி வராது. படுங்கம்மா" திரும்பிப் படுத்துவிட்டவளைப் பார்த்தாள். பார்த்துக் கொண்டே இருந்தாள்.

விடிந்ததும் -

ஜன்னல் வழியாகப் பார்த்து, "டேய், மொட்டை! ஊர் நிலவரம் எப்படி இருக்கு?"

"ரொம்ப மோசம். ரோட்டில ஈ, காக்காய் இல்லே. எட்டிப் பார்த்தாலே கல்லாலே அடிக்கிறாங்க". என்றவன் ஓடிப் போனதும் திரும்பினாள்.

"அம்மா! அடுப்படிக்குப்போய் நீங்களே காப்பி போடுங்க. வந்திருக்கிற விருந்தாளிகிட்டே வேலை வாங்கவே எனக்கு இஷ்டமில்லே தான் – ஆனாலும் – என் கையால செய்ததை சாப்பிட மாட்டீங்க – எனக்கும் ஒரு கப் கொடுங்க. பசி தாங்கலை."

பார்த்தாள்.

"பசி தாங்கல்லியம்மா. ப்ளீஸ். நான் சுத்தமாயில்லாம இருக்கலாம். ஆனா பாத்திரமெல்லாம் சுத்த சைவம் தான்."

"பாத்ரூம் எங்கே இருக்கு?"

"அந்தக் கதவு" என்றதும் கிளம்பினாள். "நான் குளிச்சிட்டு வர்றதுக்குள்ளே நீயே காபி போட்டுடு, எனக்கும் சேர்த்து!"

வியப்பாகப் பார்த்தாள் அந்த ராஜாத்தி.

இந்திரா நகர் வீட்டு வாசல் கேட்டைத் திறந்து காரை வெளியே எடுத்த கைலாசத்தை எதிர்வீட்டார் கூப்பிட்டார்.

"எங்கே கிளம்பறீங்க? டி.வி.யும், ரேடியோவும் பயமுறுத்தறது. ஊர் பூராவும் ஏக ரகளை, பிரைவேட் கார் எல்லாம் எரியுதாம். பேசாம வீட்டோட இருமைய்யா."

"ஐயோ! நேத்து போனவ இன்னமும் வீடு திரும்பல்ல".

"அதுக்காக எங்கே போய் தேடப் போறீர்! எங்கே இருக்கிறாங்கன்னு தெரியுமா!"

"அது தெரிஞ்சா நான் ஏன் இப்படி அல்லாடறேன்! தெரியலியே!"

"தெரியாதில்லே. பகவான் பேர்ல பாரத்தைப்போட்டுட்டு வெறுமே இரும். எங்காவது அக்கம்பக்கத்தில சிநேகிதிங்க வீட்டில தங்கி இருப்பாங்க."

கதவு தட்டப்பட்டதும், அச்சமாகப் பார்த்தாள் கௌரி.

எழுந்து போய் ஜன்னலைத் திறந்து பார்த்தாள் ராஜாத்தி.

இரண்டு போலீஸ்காரர்கள் நின்றிருந்தார்கள்.

"ஐயா காவலுக்கு அனுப்பி இருக்காங்கம்மா.". போலீஸ்காரர் சொன்னார். "சாயங்காலம்வரை கதவைத் திறக்க வேணாம்னு சொல்லச் சொன்னாங்க".

"ஏற்கனவே மூடிட்டேன்னு சொல்லிடுங்க".

திரும்பி வந்தவள், அவசரமாக "ரவை இருக்கு. உப்புமா கிளறிடறேன்".

கொஞ்சமாகக் கிளறிய உப்புமாவை சாப்பிட்டதும் கௌரி கேட்டாள். "பாவம் அவங்க சாப்பிட்டாங்களா? கேட்டியா?"

"இப்ப இல்லே ராத்திரியிலேருந்தே பட்டினிதான் கிடந்திருப்பாங்க. பணமிருந்தாலும், திங்கறதுக்கு ஓட்டல் வேணாமா? அதான் டீ கூடச் சாப்பிடலன்னு நினைக்கிறேன்."

"கொஞ்சம் உப்புமா அதிகமாக கிளறியிருக்கலாம்"

"நேத்து ராத்திரி சாதம் குழம்பு அப்படியே இருக்கு. சுடப் பண்ணித் தரலாம்தான். ஆனா அதுக்கு கதவு திறக்கணுமே".

"திறயேன்!"

"ஒரு குடும்பப் பெண் இருக்கறச்சே இந்த வீட்டுக்கதவு திறக்கக்கூடாது."

"ஆமாம். நீ உப்புமா சாப்பிடல?"

"இல்லே. உங்களுக்கு மட்டும்தான் செய்தேன்."

"ஏன்?"

"வெளியே இரண்டு பேரை பட்டினியாகப் போட்டுட்டு நான் சாப்பிடக் கூடாது. அதுவும் எனக்கு காவலுக்குன்னு வந்தவங்களை. அது பாவமில்லையா?"

சட்டென்று தான் இருந்த தராசுத் தட்டு இறங்கி அவள் இருந்த தட்டு மேலேபோவது போல உணர்ந்தாள்.

நேரே போய் கதவைத் திறந்தாள். "உள்ளே வாங்கப்பா. நேத்து பழையது மிச்சமிருக்கு. வந்து சாப்பிட்டுட்டுப் போங்க" என்று அழைத்துப் போய் பரிமாறினாள். அவசரமாக உப்புமா கிளறி அவளே அந்தராஜாத்திக்குக் கொடுத்தாள். "சாப்பிடு".

"அம்மா யாரு புதுசாயிருக்காங்க?" என்று போலீஸ்காரர் கேட்க –

"இந்த வீட்டுக்கும் அவங்களுக்கும் சம்பந்தமேயில்லே. ஆபத்துக்கு நான் தான் இருக்க வைச்சிருக்கேன். கான்ஸ்டபிள்! தெருமுனையில தலைவர் வீட்டுக்கு போலீஸ் வேன் வந்திருக்குதில்லே, இவங்களை இதோ இந்திரா நகர் வரைக்கும் பத்திரமா கொண்டு விட்டுடச் சொல்றீங்களா? பாவம். வீட்டில மாமா பயந்து போயிருப்பார். என் வீட்டில போன் வேற இல்லே".

போலீஸ் கூண்டு வண்டியிலிருந்து இறங்கி உள்ளே போனபோது –

"எங்கேடி போனே? எங்கே போனே!" என்று கத்தும் கணவரை அமைதியாகத் திரும்பிப் பார்த்துச் சொன்னாள்.

"கோயிலுக்கு. சகதியில இருந்தாலும் தெய்வமாயிருக்கிறவ வீட்டுலே இருந்தேன்".

நினைவின் நிழல் — இளங்கம்பன்

கனவுக்கு வடிவீந்த கண்ணே – என்
காவியப் பொருளாகிச் சுடர்கின்ற பெண்ணே
நினைவுக்கு நிழலாகி நிற்கும் – உன்
நிகரற்ற மொழிதன்னைக் கிள்ளையும் கற்கும்

புருவத்தை வில்லாக மாற்றி – அதில்
புன்னகைப் பார்வையை அம்பாக ஏற்றி
உருவத்தில் ஒளிதந்த நிலவே – என்
உள்ளத்தைக் கவர்ந்திட்ட ஒப்பற்ற சிலையே!

இனிமையை அன்றுநீ பெய்தாய் – அந்த
இணையற்ற இதயத்தை இன்றென்ன செய்தாய்?
தனிமைப்பேய் வசம் என்னைத் தந்தாய் – செந்
தளிரே! நீ இதற்கென்றோ தரைநோக்கி வந்தாய்?

விலையற்ற மாணிக்கம் உன்னை – காண
விழிபெற்ற உன்னன்பன் ஆன என்னை
அலையுற்ற கடலாக்கி விட்டாய் – இதில்
அடையாத எந்தவொரு சிகரத்தைத் தொட்டாய்?

ஒரு பரணிலே ஒரு நாள் இன்னொரு சித்ரா

— வீ. ராமமூர்த்தி, ஐ.ஏ.எஸ். —

(படிக்கும் அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள் : இந்தச் சிறுகதை வழக்கமான அமைப்பில் இல்லை. தொடரும் உணர்ச்சிப் பெருக்கு (Stream of consciousness) என்ற ஓடுகின்ற முறையில் இது எழுதப்பட்டுள்ளது.

கொள்ளுவோர் கொள்ளுக; பிறரெல்லாம் என்னை மன்னித்து அருளுக!)

சித்ரா சித்ரா சித்ரா என்று மனம் அரற்றுகிறது சோர்வே இல்லாமல் செம்பொன் உருகும் சூரியன் மறையும் நேரத்திலும் இருளின் வரவிருக்கும் ஆதிக்கத்தின் கட்டியத்திலும் ஆதவன் வானத்து உச்சிதனில் ஏறி நின்று ஒச்சிய கோலின் முழுமையான நினைவுகள் ஓயாது சரித்திர முரசில் ஓசைகள் செய்தவாறு இருத்தலைப் போல ஆண்டில் நிறைவேறும் இறுதிக் கட்டத்திலும் இளவேனில் ஆண்டு பிறக்கும் மூலக்கணத்திலும் அதே இளவேனில் என்று வட்டத்திற்கு முதலாகும் புள்ளியே வட்டத்திற்கு இறுதியாகிடும் சட்டம் போலே ஞானத்தின் சுற்றுத் திட்டம் போலே ஊமையனுக்கும் மௌனம் ஒன்றையும் சொல்ல முடியாததால் அனைத்தையும் உணர்ந்து சொல்லி முடித்தோனுக்கும் மௌனம் ஒன்றையும் சொல்ல வேண்டிய அவசியம் இராததால் ஒரு காலத்தில் சித்ரா என் சித்திரை நிலவொளிர் வான் இன்று செத்துப்போய் சப்பையாய் நசுக்கிடும் கனத்த புத்தகத்தின் ஜீவனற்ற பக்கங்களிடையே அடக்கம் கொண்டு அமுத்தப்பட்டு நிறம் இழந்த சருகாகியும் என்றோ அதன் இதழின் ஒவ்வோர் அணுவிலும் ஆனந்தத் துள்ளலாக எழுந்து பரப்பிய நறுமணத்தின் நினைவாக எல்லாக் காலத்திற்கும் பொழுதிற்கும் வேதமாக கீதமாக போதமாக நாதமாக விண்ணுக்கு வஸ்திரமாக மண்ணுக்குப் போர்வையாக என்னுள்ளத்தினுள்ளே வேண்டாத இன்ப துன்பமாக இன்றளவும் எப்படியோ நிலவிடும் சித்திரத் திரை நிலா சித்ரா

சித்ரா எங்கேயோ இருக்கிறாள் சுவாசிக்கிறாள் ஜீவிக்கிறாள் எண்ணுகிறாள் நினைக்கிறாள் இயங்குகிறாள் உண்கிறாள் வளர்கிறாள் மூப்புக் கொள்ளுகிறாள் சுருங்குகிறாள் வரும் இரவிற்கு அஞ்சுகிறாள் எழுதுகிறாள் பாடுகிறாள் இறைவனை வேண்டுகிறாள் நான் தான் இல்லாதவனாக இறந்து போய்விட்ட படிக்க வேண்டும் என்று வாங்கிய புத்தகம் புதிதில் அந்தப் புத்தகத்தில் நைனித்தாலின் குளிர்ச்சியில் ஒரு பிற்பகல். பொழுதில் புல் தரை ஒன்றில் உட்கார்ந்து மனத்தின் எண்ணங்களை அன்னம் விடு தூதாக ஆகாசத்தின் வழியே அனுப்பி புதுப்புத்தகத்தின் பக்கங்களின் நடுவிலே இந்த ஊதாப்பூவை வைத்து மூடி இதன் கூடப்பிறந்த மற்றொன்றைக் கடிதத் தாளில் மடித்து உறையிலிட்டு முகவரி எழுதி இந்த வரிகளை நீ அஞ்சல் மூலம் வரப் பெற்று பரிசில் பொருள் பொட்டலத்தைப் பொங்கி எழும் ஆவலை அடக்கிக் கொண்டு அப்படியும் இப்படியுமாய்த் திரும்பித் திரும்பிப் பார்த்து பிறகு மெல்ல மெல்ல உனக்கு எழும் ஆவல் படும் பொறுமையை துவந்த யுத்தத்தில் புள்ளி புள்ளியாக வென்றிட கடித உறையை மனக்கதவு அங்குலம் அங்குலமாக ஜாக்கிரதை கருதி புதுமைக்குத் திறப்பது போல மெல்ல மெல்லப் பிரித்து நீ படிப்பதற்குப் பல யுகங்கள் முன்னாலேயே என் எண்ணங்களை அன்னத் தூது உனக்குச் சொல்லியிருக்குமே என்று எழுதியதை அவள் படித்து அவளும் பதிலுக்கு எண்ண அலைகளை ககன மார்க்கமாக எனக்கு அனுப்பிய நெருப்பின் கனல் தணிய அவள் பதில் எண்ணங்கள் எழுத்தில் இறங்கி தாளாக மடிந்து உறையினுள்ளே அடக்கிப் பெட்டியில் கிடந்து பையில் ஏறி கர்ப்பத்திலேயே பயணங்கள் மேற்கொண்டு தப்பாது சேரிடம் சேர்ந்து கனவாக நீர் பொழியப் படித்ததுண்டு ஆனால் அந்தப் புதிய நூலின் பக்க இதழ்கள் இன்று மஞ்சளாகிப் போய் எலியின் பல்லும் கறையானின் பசியும் மழைக்காற்றின் எல்லாவற்றையும் விவஸ்தை இல்லாமல் தொட்டிடும் ஊதல் ஈரமும் பட்டு மிக அருமையான நினைவுகளையும் என் கடன் பணி செய்து கிடக்கச் செய்தலே என்று சருகாக்கிக் குப்பையிலே சேர்த்திடும் வேனலின் கானல் வேட்கையிலே அந்த ஈரமும் காய்ந்து உவத்தல் எல்லாம் விட்டுப் போய் இன்று கிடைக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலும் இதை நான் படிக்கவில்லை இந்தப் புத்தகம் புதிய நூலா பழையதா இந்தப் பூவும் ஒரு பொருட்டா சென்ற தலைமுறையின் நாகரிக அலைகள் நீரிலே இங்கு அமுத்தம் ' என்றால் அங்கே உயர்வு என்று அங்

கங்கே உள்ள நீரெல்லாம் எங் கெங்கு உண்டோ அங்கே அங்கேயே இருந்திட அலை மாத்திரம் நகர்கிற மாதிரி இந்தத் தலைமுறையில் ஏற்பு களாக ஆகிவிட எது முன்னேற் றம் எது பின்தாழ்வு எது இழப்பு எது அடைவு லாபாலாபம் ஜயா ஜயம் சுகாசுகம் துக்காதுக்கம் எல்லாம் ஒரே ஊஞ்சலாட்டம் ஆட்டத்துக்கு ஆதாரம் ஆட்டம் இல்லாத நிலை அந்த நிலையை உற்ற அம்மா ஊஞ்சலிலே இருந்து கொண்டு நமுட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு கேட்பாள் அவள் கேட்கிறாள் பூ வேண்டுமென்று நீ வாங்கிவரத் தயங்குகிறாயே பூ வேண்டும் என்பாள் புருஷன் வேண்டும் என்கிறாள் இல்லையோ என்று சித்ராவைச் செல்லமாகத் தோளைச் சுற்றி அணைத்துக் கொண்டு சொல்ல எனக்கு அர்த்தமில்லாமல் பொறாமை யாக இருந்தாலும் அந்த முன் மாலை நேரத்தில் பார்த்த சாரதிப் பெருமாள் ஆஜானு பாஹுவாகத் திகழும் கோயி லின் வாசலுக்கு ஒடி அங்கே பச்சைச் சீலையும் சிவப்பாக வெற்றிலையின் வண்ணமும் பூண்ட வாயாடிப் பூக்காரியிடம் குண்டு மல்லிகைப் பூ வாங்கிவர நிற்க என்ன ஒரே தாராளமா இருக்கீக இன்னைக்குத் தங்கை ஊரிலேருந்து வந்திருக்கா ஜயான்னு கேட்க ஆமாம் பொய் இல்லை ஆமாம் ஐயோ ஆளை விடு போ என்று கனத்த மணத்த மலர முயன்று கொண் டிருந்த குண்டு மல்லிகையின் பல முழு நீளங்களைக் கொண்டு சேர்த்திட வீட்டிலே பூஜை வேளையில் வீட்டுக்காரியாக வர இருந்து வாராது பிறகு போன அந்த ஒருத்தி ஸ்ரீராம னின் பட்டாபிஷேகத்திற்கு வசிஷ்ட பிரும்மரிஷி முதலிலே குறித்துச் சொன்ன திவ்விய முஹூர்த்தத்திற்காக என்றே அயோத்தி மாநகரை எப்படி அன்று அலங்காரம் செய்தார் களோ அப்படி அவள் அந்தச் சித்ரா இந்தக் குண்டு மல்லிகை யின் கமகமக்கும் நீளத்தை எல்லாம் அள்ளித் தன் தலை யிலே சூட்டிக் கொள்ள அம்மா அவளுக்கு மலர்களைப் படியப் படியச்சரி செய்துவிட எனக்கும் அப்படிச் செய்துவிடத் தோன்ற அதற்கு இது இடமும் இல்லை நேரமும் இல்லை வர்த்தமான வாய்ப்பும் இல்லை என்று இங்கிதம் உள்ளே சொல்லிட நான் எண்ணியதை விட்டிட ஆனாலும் எண்ணத்தை வீட் டிலே போய்ச்சாப்பிட என்று கல்யாண விருந்தில் சிறுவர்கள் அப்பத்தையும் வடையையும் சட்டைப்பையில் எடுத்துப் போட்டுக் கொள்வது போலப் பிறகிற்காகப் பதுக்கிக்கொள்ள அப்பொழுதும் பொரித்த அப் பளத்தைப் பத்திரம் செய்ய முடியாமல் அது பொடிந்து



வாழ்க்கைச் சூத்திரம்

கு. பங்கஜமால்

'பிறந்ததே பாவம்!' 'தண்டனை!' என்று
மூடத்தில் மூழ்கிட லாமா?
பிறந்ததோர் வாய்ப்பு! பேரின்பப் பேறு
என்று தெளிந்திட வேண்டும்!

கோழைக்கு வாழ்வைக் கூட்டிக் கொடுத்தாலும்
கொண்டு கரைசேரான்
ஆழ்கடல் அடியில் அமிழ்ந்து கிடந்தாலும்
வீரன் கரை சேர்ப்பான்

செறிவிலா அறிவு செத்தைக்கு நேராம்
சீக்கிரம் கொழுத்திடல் வேண்டும்
இளமையின் செழிப்பில் கலைகளில் தேர்ந்து
இதயம் பண்பட வேண்டும்

காதலில் கலைகளில் ஆழ்ந்திடா மனிதன்
கனவிலும் வாழ்ந்திட மாட்டான்
ஆதலால் காதலில் கலைகளில் மூழ்கி
ஆழம் கண்டிடல் வேண்டும்

வாழ்வொரு சூத்திரம் வசமாய்ப் பயிலலாம்
ஆசை மிகமிக வேண்டும்
பாழ்வெளி அல்ல வாழ்வு! பைம்பொழில்
பயின்றிட வேண்டும் நாளும்!!

போவதைப் பார்த்துக் கொஞ்சம் ஏமாற்ற சோகத்தைப் பட்டுப் பிறகு அதற்கு அதே மருந்தும் மாற்றும் ஆகத்தூளான அப்பளத்தைச் சாப்பிடுகிற மாதிரி நான் மலர் அலங்கரித்த சித்ராவின் கூந்தலை அம்மா பார்க்காதபோது என்று நினைத்து மெல்ல அழுத்த அவள் தன் பின்னலில் செருகியிருந்த ஊசியின் உலோகத்தின் குளிர்ச்சியும் கடையிலிருந்து தாமரை இலையில் மடித்துக் கொண்டு வந்ததில் சொட்டுச் சொட்டாகவே கொட்டிப் போன ஜலம் போக அந்த வெள்ளை மலரினுள்ளே மதுவில் கலந்த மகரந்தம் மாதிரி மீதம் இருந்ததன் ஈரமும் என் கையில் பட அம்மா அதையும் பார்த்துவிட்டவள் இப்பவே கத்துக்கறியா பொண்டாட்டிக்குப் பூ வைச்சுவிட ரொம்ப அவசரப்படாதே எல்லாத்தையும் நேரம் காலம் பார்க்காமே அள்ளி அள்ளிப் போட்டுண்டா அஜீர்ணம் வந்து கஷ்டப்படணும் அது வாண்டாமில்லியா என்று என்னைப் பார்த்துச் சிரிக்க சித்ராவும் என்னைப் பார்த்துக் கண்களாலேயே சிரித்துவிட்டு அந்தச் சிரிப்பைக் கொஞ்சம் தரையை நோக்கித் திருப்பிவிட்டுவிட நானும் அந்த வெறும் தரையைப் பார்க்கிறேன் கீழே விழுந்த முத்து எல்லாம் எங்கே சிதறிப்போயின என்று தேடி அப்புறம் இன்னொரு இடத்திலே வேறே ஒரு நாள் முத்துச் சிரிப்பு என்று நான் சொல்ல அதெல்லாம் கவிதையிலே தான் என்று அவள் சொல்ல இல்லை காவியத்திலே தான் நிஜமாகவே உண்மை உண்டு மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே என்று நான் சொல்ல அது மணிதானே முத்து இல்லையே என்று சித்ரா மறுக்க கானல் வரி விவகாரம் எங்களிடையே பற்றிக் கொள்ளாத வரை புண்ணியம் ஆயிற்று ஆனாலும் இது சிலப்பதிகாரம் இல்லை இதிலே மாதவி இல்லை மணிமேகலை பிறப்பும் இல்லை இந்த வரலாற்றில் கோவலன் பிரிந்து போய் மீண்டும் வந்து மதுரையில் மறு முறையும் பிரிந்து போய் செத்தும் போகவில்லை கண்ணகி தான் உயிரை மாய்த்துத்தான் மட்டும் உயிரோடே போய்விட்டாள் கோவலனை எந்தப் பொற்கொல்லனும் பொய்க்குற்றம் சொல்லி இங்கே மாட்டி வைக்கவில்லை தேரா மன்னன் நெடுஞ்செழியப் பாண்டியனாலே இந்தக் கோவலன் கொலைக்களப் படவில்லை கண்ணகி மதுரையை எரிக்கவில்லை இன்றுகூட சித்திரைத் திருவிழாவில் மதுரையில் காற்றெல்லாம் கனலாக கதிரவன் காய்ச்சுகிறபொழுதிலே கண்ணகியின் சாபம் இன்னும் தீரலை போலும் என்று இலக்கியப் பண்டிதர்கள் நயமாகச் சொல்லும் சித்திரைத் திருநாள் தான் ஒரு நாள் எல்லா வற்றையுமே சித்திக்காத வெறு நாளாக ஆக்கி விட்டுப் போயே இந்த வரலாற்றை முடித்து விட்டுப் போய்விட்டாள் எங்கேயோ போனாள் வேறு எவனையோ பார்த்தாள் கட்டிக் கொண்டாள் அவளுடைய குழந்தைகள் அப்பா என்று அழைப்பது அந்த நான் பாராத அறியாத புண்ணியவானைத்தான் இயற்கை வெற்றிடத்தை வெறுக்கும் இல்லையா மனித இயற்கையும் அப்படித்தான் குற்றமே புரியாமல் கண்ணகியாலேயே கொல்லப்பட்ட கோவலனுக்கும் வாழ்க்கையில் வேறு துளா தோன்றிட என் மனைவி சித்ரா இல்லை உத்ரா.

உத்ராவின் பிள்ளையான என் மூத்த மகன் இதோ குழப்பமாக வாயிற்படியில் நிற்கிறான் உத்ரா சொல்லுகிறாள் இதோ பாருங்கோ பழைய புத்தகம் எல்லாம் அப்புறம் பார்க்கலாம் முதல்லே இதைக் கேளுங்கோ ஒங்க பிள்ளையோட காலேஜ் புத்தகத்துலே என்ன கிடைச்சுதுன்னு லவ் லெட்டர் ஆரோ ஒருத்தி சித்ராவாம் அவ எழுதியிருக்கா பிடியுங்கோ - இன்னொரு "சித்ரா"! ஃ



ராஜீவ் காந்தி

வண்ண ஓவியம் : பா. லோகநாதன்

இராஜீவ் காந்தி ஒரு வீர வரலாறு.

டாக்டர். கி. வேங்கடசுப்பிரமணியம்

இந்திய நாடு ஒரு வினோத மான நாடு, "மக்களைக் கடவுளாக வும், கடவுள்களை மக்களாகவும் மாற்றும் நாடு இது" என்றார் பாரதத்தின் உற்ற நண்பர், ஜெர் மானியப் பேரறிஞரும், தத்துவ ஞானியுமான மாகஸ்முல்லர். ஆம். ஓர் ஆண்டாள் கடவுளாக மாறலாம் எனக் கண்ட நாடிது. ஒரு கடவுள் இராமனாக வந்து மானுட நியதிகளைப் போதிக்கலாம் என்று கண்ட நாடும் இது தான். நல்ல வனைக் கடவுளாகக் கொண்டாடும் நாடிது. நல்லவன் அல்லவனை அரக்கனாகக் கண்ட நாடும் இதுதான்.

நான் மறைந்த அன்னை இந்திரா காந்தியின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து எழுதும் பேறு பெற்றேன். 1982 - 84 ஆண்டு களில் அன்னையை நான்கு முறை சந்தித்துப் பல நிகழ்ச்சிகளை அறிந்தேன். ஒருமுறை அவரை நான் கேட்ட கேள்விகளுள் ஒன்று, "அன்னையே! மன்னிக்க வேண் டும். நான் தங்களை ஓர் இக் கட்டான கேள்வி கேட்கும் நிலையில் உள்ளேன். தங்கட்குப் பிறகு யார் பாரதப் பிரதமராக வருவார்கள்?" என்று கேட்டுத் தயங்கி நின்றேன்.

ஒப்பற்ற அன்னை கலங்கவு மில்லை. துவளவுமில்லை. நான் தான் கேள்வியைக் கேட்டுவிட்டுக் கலங்கி நின்றேன். நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் கொண்ட ஒப்பற்ற அன்னை இந்திரா தெளிவாகக் கூறினார்.

"Whether Indira Gandhi remains or goes the people of India would never accept a coward as their Leader".

இந்த வாசகத்தை எனது Indira Reader புத்தகத்தில் 6 ஆவது அத்தி யாயமான "An Iron Lady" என்பதின் முகப்பு வாக்கியமாக நான் அமைத்தது மிகவும் பொருத்த மாக இருந்ததாகப் பல வாசக அன்பர்கள் பாராட்டி னார்கள்.

இங்கிலாந்தின் ஒப்பற்ற பிர தமர் வின்ஸ்டன் சர்ச்சில் மிகவும் தைரியமாக, ஜெர்மானியர் குண்டு மழை பொழிந்தபோதும் சிறிதும் கலங்காமல் இலண்டன் மாநகரத் தெருக்களில் நடந்தவர். ஒரு மனித னுக்கு வேண்டிய ஒரே குணம் தைரியம் என்றார் சர்ச்சில் பெரு மகனார். இந்துப் புராணத்தில்கூட இம்மாதிரி ஒரு வரலாறு உண்டு. போஜமகாராஜா முன்பு அஷ்ட இலட்சுமிகளும் ஒருமுறை ஒரு சேரத் தோன்றி, "எங்களுள் ஒரே இலட்சுமியை மட்டும் நீ உன்னுடன் நிறுத்திக் கொள்ளலாம்" என்ற போது அறிவில் சிறந்த போஜ மன்னன் "எனக்குத் தைரிய லட்சுமி மட்டும் போதும்" என்றானாம், தைரியம் இருந்தால் மற்றவை தானே தொடரும் என்றபடியால்.

மனிதருள் மாணிக்கம் நேரு பெருமகனார் அவர்கள் தன் ஒரே மகள் இந்திரா பிரியதர்சினியின் 13 ஆவது பிறந்த நாளின்போது அனுப்பிய வாழ்த்துச் செய்தியின் கண் -

"மகளே! இன்று உன் வயது 13. டீன்ஸ் (Teens) என்று சொல்லப் படும் பருவத்தில் நீ அடி எடுத்து வைக்கிறாய். வாழ்க்கையில் மிக முக்கிய கட்டம் இது. இன்று முதல் நீ வளர்கிறாய் என்று பொருள். 13 வயது பெருவளர்ச்சி யின் முதல் வருடம். இன்று ஓர் அறிவுரை என் அருமை இந்து வுக்கு நான் சொல்லுவேன். அதை நீ முழுவதுமாக வாழ்க்கை பூராவும் கடைப்பிடித்தால் நீ உலகின் உச்சிக்கே (Top of the







World) செல்லலாம். அது என்ன தாரக மந்திரம்? வேறொன்று மில்லை. இந்து அருமை மகளே! "தைரியமாக இரு. எல்லாம் உன்பின் வரும்"(Be Courageous other things follow")என்றார் நேரு பெருமான். இந்த ஓர் அறிவுரையே இந்திரா அன்னையின் உயர்வுக்கு அத்திவாரமாக அமைந்தது. இந்த அருளுரையை, தன் மூத்த மகன் இராஜீவுக்கும் முழுவதும் வழங்கினார் அன்னை இந்திரா.

தொடை நடுங்கிகட்கு அரசியலில் நிச்சயம் இடம் கிடையாது என நம்பிய இந்திரா அன்னை, இதனால் தான் என்னிடம் அடித்துக் கூறினார். "எனக்குப் பின் யார் வந்தாலும் ஒரு கோழை வர முடியாது. ஏனெனில் ஒரு கோழையை இந்திய மக்கள் ஒருபோதும் நாட்டின் தலைவராக ஏற்க மாட்டார்கள்" என்றார்.

குழந்தை ராஜீவுக்கு ஓர் ஆபரேஷன். டாக்டர் கூறினார்: "தம்பி! கவலைப்படாதே - வலியே இருக்காது" என்கிறார். சிறு அறுவைச் சிகிச்சை என்பதால் குளோரபாரம் (மயக்க மருந்து) வேண்டாம் என்று கூறிவிட்டார் அன்னை. எனவே வலி நிச்சயம் இருக்கும். இருப்பினும் குழந்தைக்குச் சமாதானமாய் மருத்துவர் வலியே இருக்காது என்று கூறினார்.

அன்னை இந்திரா உடனே மருத்துவரைக் கண்டித்தார். "உண்மையை என் மகன் உணர வேண்டும். வலி இருக்கும் என்ற உண்மையை அவன் அறியட்டும். அந்த வலியைப் பொறுத்துக் கொள்ளும் பக்குவத்தை அவன் அடையட்டும். வலிபற்றிக் கவலைப் படாத வீரனாக அவன் வளரட்டும். அவனை நாம் கோழையாக்க வேண்டாம்" என்கிறார்.

இப்படியாக வளர்க்கப்பட்ட இத்தலைமகன் பல்வேறு நேரங்களில் தனது அஞ்சா நெஞ்சத்தை நமக்குக்காட்டினான்.

கொழும்பு மாநகரத்தில் இந்தியப் பிரதமருக்கு அணிவகுப்பு மரியாதை நடக்கிறது. திடீரென ஒரு படைவீரன் துப்பாக்கியின் கட்டையால் நம்முடைய பிரதமரின் மண்டையைப் பிளக்கக் குறி பார்த்து வீசுகிறான். சிறிதும் கலக்கமின்றி, தலையைக் குனிந்து மரண அடியிலிருந்து தப்பிய நம் அருமைப் பிரதமர், எதுவுமே நடக்காததுபோல் நடந்து கொள்கிறார். பத்திரிகைகள் அவரது தைரியத்தைப் புகழ்ந்து பத்தி பக்கியாக எமகின



நான் முன்பு படித்த அமெரிக்க கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஒருமுறை பேசிய பாரதப் பிரதமர் கூறினார் : "Without Courage no virtue is Possible". தைரியம் இருந்தாலன்றி ஒருவனால் எந்த நல்ல காரியத்தையும் செய்ய முடியாது.

இது எவ்வளவு உண்மை பாருங்கள். இன்று விடுதலை பெற்றுப் பலப்பல ஆண்டுகள் ஆகியும் நாம் ஏன் முன்னேற முடியாமல் இருக்கிறோம்? உலகத்து அரசியல் நோக்கர்கள் எல்லாம் கூறும் ஒரே காரணம், "நம்மால் தைரியமான முடிவுகளை எடுக்க முடியவில்லை" என்பதே.

தத்துவ ஞானி போரோடின் என்பார், மக்களின் மனப்போக்கு பற்றி ஒரு கழுதைக்கதை சொல்வதுண்டு. இதை தத்துவ சாத்திரத்தில் "Borodin's Donkey" என்று கூறுவர். ஒரு கழுதையின் முன் ஒருபுறம் முட்டைக்கோசையும், மறுபுறம் முள்ளங்கியையும் வைத்தார்கள். கழுதைக்கு முட்டைக் கோசும் பிடிக்கும், முள்ளங்கியின் மீதும் பிரியம் உண்டு. ஆனால் இதுவா / அதுவா என்று தீர்மானிக்க முடியாமல் அது இரண்டையும் தொடாமல் பட்டினியால் உயிரைவிட்டது. இதைத்தான் Poverty in the Midst of Plenty என்பார்கள். சாமுவேல் டெய்லர் காலரிட்ஜ் என்னும் பெரும் ஆங்கில மொழிப் புலவர் இதையே "Water Water every where, Not a drop to drink" என்பார்.

இதுதான் நம்முடைய இன்றையக் கோளாறு. திட்டவட்டமான முடிவுகளை எடுக்காமல் அரசு ஓடிக் கொண்டிருக்கிறது. நம்முடைய அரசியல் சட்டத்தில் கள் குடியை ஒழிக்க ஒரு முக்கிய இடம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் எல்லா மாநிலங்களிலும் சாராய விற்பனை. அதுவும் அரசு சாராய விற்பனை. மதுவிலக்கு அமலில் உள்ள இடங்களில்கூடக் கள்ளச் சாராயம் அரசின் கண் பார்வையில். அரசியல் திட்டத்தில் 14 வயது வரை உள்ள பிள்ளைகள் எல்லாம் பள்ளியில் இருக்க வேண்டுமென்பது குறிக்கோள். ஆயினும் கி.பி. 2000-த்திலாவது இது நடக்குமா? தெரியவில்லை.

இப்படி உள்ள சூழ்நிலையில் தைரியமாகக்காரியங்களைச்செய்ய முற்பட்டவர் அமரர் இராஜீவ் காந்தி. பஞ்சாபியருடன் பேச்சு வார்த்தை, அசாமியருடன் உடன்பாடு, தமிழ் ஈழ விவகாரத்தில் திடமான கொள்கை. இவையெல்லாம் இராஜீவ் காந்தியை மற்றவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டின.

அவருடன் கூடவே பல ஆண்டுகள் இருந்த மணி சங்கர் அய்யர் கூறுகிறார்: "தைரியத்தில் இராஜீவை விஞ்சியவர் யாரும் இலர்".

"உங்கள் உயிருக்கு ஆபத்து இருக்கிறதே. ஜாக்கிரையாக இருக்க வேண்டாமா?" என மணி சங்கர் அய்யர் ஒருமுறை கேட்ட போது இராஜீவ் சொன்ன பதில், "மேலே உள்ள ஆண்டவன் முடிவு செய்யும் வரை நான் இங்கு இருப் பேன். அவன் முடிவு செய்து விட்டால் போய்த்தான் ஆக வேண்டும்" என்றார். எந்தக் கூட்டத்திலும், எந்த இடத்திலும் தனக்கென்று எதையும் கேளாமல், தனது பின்வரும் அதிரடிப் படையையும் சட்டை செய்யாமல்





மக்களை நாடி ஓடியவர் அமரர் இராஜீவ் காந்தி.

அவர் என்றும் மக்களின்பால் இருக்க விரும்பியவர். அவரது அன்னையார் ஒருமுறை கூறினார்: "மக்களின் நலனுக்காக விஷம் அருந்தவேண்டி வந்தாலும் நான் தயங்க மாட்டேன்" என்று. அதே போலதான் மைந்தனும்! வெடி வெடித்த போதும், இடி இடித்த போதும் குண்டுமழை பொழிந்த போதும் நாட்டில் பலர் இவர்



உயிருக்குக் குறிவைத்த போதும் கலங்காமல் மக்களைத் தேடித் தேடி ஓடியவர் இராஜீவ் காந்தி.

இந்திரா சமாதியை சக்திஸ்தல் என்று அழைக்கிறோம். இராஜீ வின் உற்ற நண்பர், பள்ளி கல்லூரித் தோழர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மணி சங்கர் அய்யர் கூறுகிறார்: "இராஜீவின் முக்கிய குணம் தைரியம்தான். தைரிய புருஷர் இராஜீவ். எந்த நேரத்திலும் மனம் கலங்காதவர். எந்தப் பேரிடியும் அவரை அசைத்தது இல்லை. எனவே, அவரது சமாதியை "தைரியஸ்தல்" என்று பெயர் சொல்லி அழைக்க வேண்டும்" என்கிறார்.

ஆம், இந்த யுக புருஷன் இராஜீவ் ஒரு முழு இந்தியன். தைரியத்துக்கு எடுத்துக்காட்டு.

இவர் இந்தியர் யாவரும், அஞ்சா நெஞ்சராக வளர விரும்பினார். புதுவை மத்தியப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக நான் பதவி ஏற்றபோது அன்றையப் பாரதப் பிரதமர் எனக்குச் சொன்ன அறிவுரை, "Create fearless students" – அஞ்சா நெஞ்சராக மாணவ, மாணவியரை உருவாக் குங்கள். அவர்களால்தான் நாடு உயரும். கோழைகளால் நாடு வளர்ந்ததாக வரலாறே கிடையாது" என்றார் பிரதமர்.

ஆம்! முற்றிலும் உண்மை. நம் வரலாறு இதுவரை கோழைகள் படைத்த வரலாறு. ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்த வர லாறு. மீர் ஜாபர்கள், ஜயசந் திரன்கள், எட்டப்பர்கள் மிகுந்த வரலாறு, நம் பண்டைய வரலாறு. ஆனால் அஞ்சாநெஞ்சர் அமரர் இராஜீவ் காந்தி புது வரலாற்றைப் படைக்க விரும்பினார். வீரமிக்க இந்தியர்களை உருவாக்கப் பாடு பட்டார் அவர். அந்த வேள்வியில் தன்னையும் அர்ப்பணித்துக் கொண்டார். அவர் வாழ்வே வீர வரலாறு.

இந்திய வீர காவியத்தை எழுதிய அமரர் இராஜீவ் கண்ட கனவை நனவாக்க வீர பாரதத்தைச் சிருஷ்டிப்போமாக! ॐ



சத்தியஜீவன்

கர்மயோகி

இருள்மயமான வாழ்வில் உழலும் சமுதாயம் ஆன்மிக ஒளிபெற்று, ஒளிமயமான இனிய வாழ்வையும் அடைய வேண்டுமாயின் மனிதன் சத்திய ஜீவனாக வாழவேண்டும். அதற்கு வழி? இதோ இக்கட்டுரையில் அழகாக விளக்குகிறார் 'கர்மயோகி'.

மரணம் என்பது சிருஷ்டி ஏற்பட்ட நாளாக உள்ளது. அது சிருஷ்டியின் பகுதி என்பது போல் இயற்கையின் நியதியுமாகும். இயற்கையின் நியதிகளை மனிதன் பல்வேறு வழிகளில் தன் அறிவால் தனக்கு சௌகரியமாக மாற்றிக் கொண்டிருந்த போதிலும், அடிப்படையில் அந்நியதியை மாற்ற முயன்றதில்லை. விஞ்ஞானத்தின் மூலம் இயற்கையின் சக்திகளை - மின்சாரம், காந்தம் போன்றவை தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்து அதனால் பெரும்பலன் அடைந்துள்ளான் மனிதன்.

தொன்றுதொட்டு தவத்தை நாடிய மனிதன் இயற்கையின் நியதியான வாழ்க்கையைப் புறக்கணித்து இறைவனை அடைந்து மோட்சபலனை அனுபவிக்க முயன்று வெற்றி கண்டான். தவசி மோட்சமடைவது ஒருவகையில் வாழ்க்கையை வென்றதாகப் பொருள்; இன்னொரு வகையில் தொடர்ந்துவரும் பிறவியைக் கொடுக்கும் இயற்கையின் நியதியை வென்றதாகவும் கொள்ளலாம், அல்லது நியதியை மீறிப் புறக்கணித்ததாகவும் கருதலாம். ஸ்ரீஅரவிந்தரின் யோகம் இதற்கடுத்த இலட்சியத்தை இலக்காகக் கொள்கிறது. புல்லாகிப் பூடாகி பல் விருகமாகி மனிதன் பிறந்தான் என்ற இந்துமத மரபை அடிப்படையாகக் கொண்டு மனிதனுக்கு அடுத்த சிருஷ்டியை யோகலட்சியமாகக் கொள்ள பூரண யோகம் விழைகிறது. இன்று கலியுகத்தில் மனிதன் பொய்யும் மெய்யும் கலந்த வாழ்க்கையை நடத்தினால், இனிவரும் எதிர்காலத்தில் மனிதனுக்கு அடுத்த சிருஷ்டி ஏற்படும்பொழுது பொய்யை முழுதும் விலக்கி, மெய்யையே முழுமையாக உள்ளும் புறமும் உணர்ந்து வாழும் ஜீவன் ஏற்படுவான் என்பதே அக்கொள்கையாகும். சத்தியத்தை முழுதுமாக வாழும் ஜீவன் ஏற்பட்டால் ஸ்ரீஅரவிந்தரது பூரண யோகம் பலிக்கும். அந்த ஜீவனை அவர் Supramental being என அழைக்கிறார். அவனது ஜீவிய சக்தி Supramental World-லிருந்து வருவதாகச் சொல்கிறார். அந்த இலட்சியம் நிறைவேற பூரணயோகி இயற்கையின் நியதியான மரணத்தை வெல்ல வேண்டும். மரணத்தை வென்று, பொய்யை மெய்யாக மாற்றி, யோகி மனிதனுக்கு அடுத்த சிருஷ்டியாக தன்னை புனர்ஜென்மம் எடுக்கச் செய்தால் சத்திய உலகின் ஜீவன் அவனுள் பிறப்பான்.

இறைவன் என்று பரம்பொருளாகிய பரமாத்மாவைக் குறிக்கின்றோம். அவன் சிருஷ்டிக்கு அப்பாற்பட்டவன். சிருஷ்டி அவனில் ஒரு பகுதி. சிருஷ்டியில் உள்ளது ஜடப்பொருள், உணர்ச்சி, அறிவு ஆகியவை கூடிய மனிதன், உடல், உணர்வு, மனம் இவற்றைக் குறிக்கும். இவை சிருஷ்டியின் ஆரம்பத்திலுள்ளவை. சிருஷ்டியின் உயர்ந்த நிலையில் சச்சிதானந்தம் உள்ளது. (சத்து + சித்து + ஆனந்தம் = சச்சிதானந்தம்.

உபநிஷதங்கள் 5 கோசங்களைச் சொல்கின்றன. உடலை அன்னமய கோசம் எனவும் அங்குள்ள ஆத்மனை அன்னமய புருஷன் எனவும், உயிரை பிராணமய கோசம் எனவும் அந்த ஆத்மனை பிராணமய புருஷன் எனவும், மனோமய கோசம், மனோமய புருஷன், விஞ்ஞானமய கோசம், விஞ்ஞானமய புருஷன், ஆனந்தமய கோசம், ஆனந்தமய புருஷன் என்றெல்லாம் விளக்குகின்றது.

மனிதன் அன்னம், பிராணன், மனத்தாலானவன். சிருஷ்டியின் உயர்ந்த நிலை சத்லோகம், சித்லோகம், ஆனந்த லோகங்களாலானவை. இவற்றிடையே யுள்ளதை விஞ்ஞானமய லோகம் (Supramental world) எனக் கூறுவர். மனத்தை மட்டும் கூர்ந்து பார்த்தால்,

மனத்தில் ஆத்மிகசக்தி வெளிப்பட ஆரம்பித்தபின் மனிதன் முனிவராகிறான். அதற்கடுத்த நிலையில் ரிஷியாகவும், பின்னர் யோகியாகவும் உயர்ந்து ஆத்மிகப் பலத்தைப் பெறுகிறான். இவற்றை ஸ்ரீஅரவிந்தர் higher mind, illumined mind, Intuitive mind எனக் கூறுகிறார். அதற்கடுத்த நிலை Over mind எனக் கூறுகிறார். அந்த லோகம் தெய்வங்களாகிய சிவன், விஷ்ணு போன்றவர்கள் உறையும் சுவர்க்க லோகம். கிருஷ்ணனாக அவதரித்த விஷ்ணு, நீலநிறம் தாங்கி வந்ததால் அவரை நீலமேக சியாமள வர்ணன் என்பர். நீலம் தெய்வலோகத்திற்கு உரிய ஒளி. தெய்வ லோகத்திற்கும், சிருஷ்டியின் உயர் தனிச்சிறப்புள்ள ஆனந்த லோகத்திற்கும் இடையே யுள்ளதை உபநிஷதங்கள் விஞ்ஞான லோகம் எனக் கூறுகின்றன. இதை சத்திய லோகம் என்றும் கூறுவர். இந்த லோகத்தின் ஒளி பொன்னொளி. இந்த லோகத்தின் சக்திக்கு மரணத்தை வெல்லும் திறனுண்டு. பொய்யை மாற்றி மெய்யாக்கும் ஆற்றலுண்டு. யோகி தன் தவத்தால் இந்த லோகத்தை அடைந்தால் இப்பலன்களைப் பெறலாம். பூரண யோகம், இந்த லோகத்தின் ஆத்மிக சக்தியை அவனிக்குக் கொணர்ந்து அங்குள்ள மரணம், பொய், வறுமை, துன்பம் ஆகியவற்றை அறவே நிரந்தரமாக ஒழிக்க முயல்கிறது. பூரண யோகியின் இலட்சியம் சத்திய லோகத்தின் வாழ்வை பூமிக்குக் கொணர்வதாகும். அதற்கு சத்திய ஜீவன் அவதரிக்க வேண்டும். பூரணயோகம் தவசிக்குப் பலித்தால் அவனே சத்திய ஜீவனாக (Supramental being) புனர்ஜென்மமெடுப்பான், அவனே அத்தகைய அவதார புருஷனாவான்.

சத்திய லோகம் பூமியின் வாழ்வில் செயல்பட முடிவு செய்தால் அது உடனடியாகவோ, அல்லது நேரடியாகவோ செயல்படுவதில்லை. தனக்குக் கீழேயுள்ள தெய்வலோக சக்தியை முதலில் பூமிக்கு அனுப்புகிறது. தெய்வலோக சக்தி செயல்படும் பொழுது பொய்யை விலக்கி மெய்யெல்லாம் திரட்டி அவற்றைப் பொய்யினால் பாதிக்கப்படாதவாறு பாதுகாத்து மெய்யின் திறத்தால் செயல்படுகிறது.

சத்தியலோக சக்தி செயல்படும்பொழுது அது பொய்ம்மையால் பாதிக்கப்படுவதில்லை. அது பொய்யை விலக்குவதில்லை. பொய்ம்மையினுள்ளும் புகுந்து செயல்படும் திறனுடையது. சிருஷ்டியின் அடிப்படை மெய்யாகிய சத்தியமும் பொய்யும் உயிர் வாழ வேண்டுமானால் அதற்கும் வித்தாக ஓரளவு உண்மை வேண்டும். எல்லாப் பொய்ம்மைகளும் மெய்யின் அஸ்திவாரத்தாலேயே நிலைத்து நிற்கின்றன. சத்திய லோக சக்தி உலகில் செயல்பட ஆரம்பித்தவுடன் பொய்ம்மையை விலக்கி ஒதுக்காமல், அதனிடையே ஊடுருவிச் சென்று அதன் அஸ்திவாரமாகிய மெய்மையை அடைந்து, அத்தகைய அஸ்திவாரங்களையெல்லாம் ஒன்று சேர்த்து, தன் இலட்சிய சேவைக்கு அடிப்படையாக வழங்குகிறது. இதுவே சத்தியலோக சக்தியின் சிறப்பாகும்.

இதன் செயல் புவியில் பூர்த்தியானால் சத்திய ஜீவன் அவதாரமெடுப்பான், அதாவது பூரணயோகி சத்திய ஜீவனாகப் புனிதப்படுவான். பூர்த்தியாகும் இலட்சியம் பலிக்கும் சிகரம் இது. இதற்குக் கீழே தெய்வலோக சக்தியின் அவதாரமும், அதற்குக் கீழே யோகஞான லோகமாகிய யோகியின் உலகின் அவதாரமும் ஏற்படும்.

மனிதன் பூரண யோகத்தின் மூலம் சத்திய ஜீவனாக மாறும்போது, அவன் பிரபஞ்சத்தின் ஆத்மாவாகவும், பரம்பொருளின் ஆத்மாவாகவும் விளங்குவான். தானே பரம்பொருளாகத் தன்னைக் காண்பான். தானே பிரபஞ்சத்தின் ஆத்மாவும், வாழ்வும் என உணருவான். கொல்ல வரும் புலியைக் கண்டு மனிதன் நடுங்கும்பொழுது, சத்திய ஜீவன் அந்தச் செயலைப் பரம்பொருள் பணித்திருப்பதன் உட்கருத்தை உணருவான். புலியைக் கண்டு பயப்படும் மனிதனையே அது கொல்ல விரும்புகிறது. அதைக் கண்டவுடன் சத்திய ஜீவன் புலியின் கொடூரத்தின் பின்னால் ஆண்டவனின் அருள் நிறைந்த கருணை அதன் பிறப்பிற்கு ஆதாரமானது என உணர்ந்து, அக் கருணையுடன் தன் உள்ளுணர்வால் தொடர்பு கொள்கிறான். புலி கொடூரத்தை மறந்து, தன் கருணையை அவனிடம் பகிர்ந்து கொண்டு நகருகிறது. அன்னை புதுவைக்கு 10 மைல் தாண்டிச் சென்று வயல் வெளிகளைக் கடந்து வந்து திரும்ப காரில் வந்து ஏறும் பொழுது ஒரு பெரிய கருநாகம் (King Cobra) அவரை நோக்கி வளைந்து படமெடுத்து கம்பீரமாக வந்தது. அன்னை நின்று திரும்பி அதைப் பார்த்து புன்முறுவல் செய்து 'என்ன வேண்டும்' என்று கேட்டார். உடனே நாகம் தன் தலையால் கீழேயடித்து அன்னையை வணங்கி விட்டுத் திரும்பி விரைந்து நகர்ந்தது. மனிதனுக்கு கோட்டானின் குரல் கர்ண கொடூரமாயிருக்கிறது. சத்தியஜீவன் அக்கடுங்குரலில் இறைவனின் இதய ஒலியைக் கேட்டு கீதம் போல் ரசிப்பான். மனிதனுக்கு இருள்வடிவாய்க் காட்சியளிக்கும் உலகம், சத்திய ஜீவனுக்கு அருள்வடிவாய்த் தோன்றுகிறது. எல்லா ஒலியையும் இனிய கீதமாகவும், எல்லாக் காட்சிகளையும் அற்புதக் காட்சிகளாகவும், எல்லா நிகழ்ச்சிகளையும் ஆச்சரியத்தின் மலர்ச்சிகளாகவும் காணும் அகக்கண் அவனுக்குண்டு.

உலகில் மனிதன் மனிதனாகவே வாழ்கிறான். தன்னை ஆத்மாவாக உணரும்போது மோட்சமடைகிறான். யோகம் சித்திபெற்று ஒருவன் தன்னை பிரபஞ்சத்தின் ஆத்மா என உணர்ந்தாலும் அந்த யோகசித்தியும், தனிமனிதன் பெற்ற யோக சித்தியும் ஓரளவு முரண்பாடுடையனவாக உள்ளன. மோட்சமடைந்து பரம்பொருளையே அடைந்த பின்னும், யோக பிரபஞ்சத்தின் ஆத்மாவை அரவணைப்பதில்லை. விலக்கியே செயல்படுகிறான். சத்திய ஜீவனின் சிருஷ்டியில் உள்ள விசேஷம் இந்த முரண்பாடுகளெல்லாம் அவனிடையே காணப்படா. தானே அந்த மூன்று நிலைகளையும் உணர்ந்தாலும், அவற்றுக்குள்ள முரண்பாடுகளைக் களைய முற்பட்டதாலும் அந்த மூன்று உயர்ந்த யோக சித்திகளும், முரண்பாடற்றவை என்பதுடனில்லாமல், ஒன்றோடொன்று ஒடுங்கி இணைந்து சிறந்து செயல்படும் தன்மையையுடையவன் அவன். நம்பிக்கையில் உள்ள முரண்பாடுகளும் குறைபாடுகளும் சத்திய ஜீவனுக்கில்லை. பிரபஞ்சத்தைப் பற்றி நமக்கில்லாத ஞானம் அவனுக்குண்டு என்பதாலும், நம்மை அடக்கி ஆளும் அகந்தை அவனுக்கில்லை என்பதாலும், நமக்குள்ள முரண்பாடுகள் அவனுக்கில்லை.

சத்திய ஜீவனின் வாழ்க்கை தெய்வீக சுபாவத்தால் கட்டுண்டது. பிரபஞ்சமே அவனது உடலும் வாழ்வு மாகும். அவன் மூலம் பிரபஞ்சம் தன்னை சிருஷ்டித்துக் கொள்கிறது. அவன் வாழ்வே பிரபஞ்சத்தின் சிருஷ்டிமயமான வாழ்வாகிறது.

பரம்பொருளின் ஆத்மிக சிருஷ்டியின் உணர்வு பேரின்ப சுவை தருவதாகும். அதுவே சத்திய ஜீவனின் அன்றாட வாழ்க்கை உணர்ச்சியாகும்.


வாழ்வும், செயலும், அசைவும் ஆத்மிக முழுமையை யுடையதாக அவன் இருப்பான். அகண்ட ஜீவியம் உள்ளது அவன் வாழ்வு. அதன்படி மற்ற பொருள்களைப் பார்க்கும் பொழுது அவற்றுடன் இரண்டறக் கலந்து தானே அதுவாய், அதுவே தானாகிவிடும் தன்மையையுடையது அவன் ஜீவன். மற்ற பொருள்களைப் புலன்களால் அறிந்து அவன் புரிந்துகொள்வதில்லை. அவற்றுடன் ஒன்றிப் போவதால் தன்னையுணர்வது போலவே அவற்றையும் அவனால் உணரமுடியும். பொருள்களின் வேறுபட்ட தன்மையும், மாறுபட்ட குணமும் மனிதனுக்கு விருப்பு வெறுப்புகளை உண்டு பண்ணுகின்றன. சத்திய ஜீவன் மாறுபட்ட பொருளைப் பார்க்கும்பொழுதெல்லாம் இறைவனின் சிறப்பை வெளியிட இது இன்னொரு சந்தர்ப்பம் என அறிந்து, மாறுபடும் தன்மையின் சிருஷ்டிச் சிறப்பை உணருவதால் உள்ள உயர்ந்த இன்பமாகிய பேரின்பத்தை நுகருகிறான். ஒவ்வொரு சிறு பொருளைப் பார்க்கும்பொழுதும் அவை பெரும் பொருளாகிய பரம்பொருளின் விளக்கங்களைக் கண்டு பரம்பொருளின் தன்மையை நுணுகி உணரும் வாய்ப்பாக அவற்றை ஏற்று மகிழ்கின்றான்.

மனிதன் சத்திய ஜீவனாகும் பொழுது, புறநிகழ்ச்சிகளின் அடிமையான அவன் வாழ்வும் உணர்வும், அக நிகழ்ச்சிகளின் சிகரங்களாக மாறுகின்றன. மனிதனாக இருக்கும் பொழுது புறநிகழ்ச்சிகள் அவன் வாழ்வை நிர்ணயித்தன. அவனது உணர்வை உருவாக்கின. சத்திய ஜீவனாகிய பின் அவனது அக நிலை, புறநிகழ்ச்சிகளை நிர்ணயிக்கின்றன. அவனது உள்ளுணர்வு புற நிகழ்ச்சிகளின் போக்கையும், வேகத்தையும் நிர்ணயிக்கின்றன. முதல் கட்டமாக இது அவனது வாழ்வில் மட்டும் நிகழ்கிறது. அடுத்த கட்டத்தில் அவன் அகவாழ்வு, உலகத்தின் புற வாழ்வை நிர்ணயிக்கும் திறன் பெறுகிறது. இயல்பாக மனித வாழ்க்கைக்குண்டான அகவாழ்க்கைக்கும் புறவாழ்க்கைக்கும் உண்டான முரண்பாடு அவனுக்கில்லை. அறியாமையிலுள்ள மனிதர்களுடன் அவன் தொடர்பு கொள்ளும்பொழுது அவனது அரவணைப்பு அவனுக்கு அறியாமையின் கறையைக் கொடுப்பதில்லை. அறியாமையால் பாதிக்கப்படாமல் அவர்களை அன்புடன் தழுவ அவனால் முடியும்.

தன்னுடைய அகவாழ்க்கை அவனுக்குப் பூரணமாகத் தன் ஆதிக்கத்திலிருப்பதுடன், மற்றவர்களுடைய அகவாழ்க்கையை அவனால் தொட்டுச் செயல்பட முடியும். அதேபோல் உலகத்தின் அகவாழ்க்கையை அவன் எட்டி அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்க முடியும்.

உலகம் என்பது பூமிமட்டுமில்லை. பிரபஞ்சம் மட்டுமில்லை. தெய்வலோகம் இருப்பதைப் போல் ஆவி உலகமும் உண்டு. பெருந் தெய்வங்கள் வாழும் சூட்சும உலகமும், சிறு தெய்வங்கள் சஞ்சாரம் செய்யும் சூட்சும உலகமும் உண்டு. சத்திய ஜீவன் இந்த எல்லா உலகங்களுடனும் தெளிவான தொடர்புள்ளவன். அந்தத் தொடர்பு அவனுக்கு நம் உலகில் ஜடப்பொருள்களின் மேல் சிறந்த ஆதிக்கத்தை அளிக்கிறது. அன்னையின் குருவின் மனைவிக்கு இதுபோன்ற ஒரு திறன் இருந்தது, காலில் செருப்பை மாட்டிக்கொள்வதற்கு அவர் விரும்பும்பொழுது செருப்பை நிமிர்ந்து பார்ப்பார். அவரது பார்வை பட்டவுடன் செருப்பு நகர்ந்து வந்து அவர் காலில் தானே மாட்டிக்கொள்ளும்.

சத்திய ஜீவியமே மனிதனின் உயர் தனிச்சிறப்புப் பெற்ற பெறற்கரிய இலட்சியம். அதை அடைந்த பின்னர், இனி அவ்வாழ்வில் அடையக்கூடிய குறிக்



கோள் என்று ஒன்று இல்லை. இருப்பதே இலட்சியம். சத்திய ஜீவனாக இருப்பதே இலட்சியம். பூவுலக வாழ்க்கையில் சத்திய ஜீவன் உலவும் பொழுது மற்ற நிலைகளிலும் மனிதர்கள் இருப்பார்கள் அல்லவா? அறியாமையில் உழலும் மனிதனும், ஆத்மாவை உணர்ந்த ஜீவன்முக்தனும் இருப்பார்கள். சத்திய ஜீவன் அவர்கள் வாழ்வில் புகுந்து நல்ல மாற்றங்களை உண்டு பண்ணுகிறான். அறியாமையில் மனிதன் திறம்படச்செயல்பட்டு வெற்றி கண்டு விழாக் கொண்டாடிய பின், தன் வெற்றியே தனக்கு விலங்கானதைக் காண்கிறான். அப்படிப்பட்ட மனிதனை சத்திய ஜீவனின் அரவணைப்பு, அறியாமையிலிருந்து விடுவித்து, ஒளிமயமான முயற்சிகளின் பாதையில் செலுத்துகிறது. இப்பாதை ஞானத்திலிருந்து உயர்ந்த ஞானத்தை எட்டும் பாதையாகும். சத்திய ஜீவனாகும் மாற்றம், அறிவுக்குச் சிறப்பையும், புதிய திறனையும் அளிக்கிறது. அறிவு தெரிந்ததைக்

கொண்டு தெரியாததை அறிந்து கொள்ள முயல்வது வழக்கம். சத்திய ஜீவனில் தெரியாதது என்று ஒன்று இல்லை. தெரிந்து தெளிவடைந்ததும், தெரிந்து ஆனால் மறைந்தும் உள்ளனவே இருக்கின்றன. தெரிந்ததை வெளிக்கொணரும் முறையே சத்திய ஜீவனின் புதிய பாதை.

அறிவு புலன்களால் செயல்பட்டு, கண்டு, கேட்டு, உற்று, உணர்ந்து அறிய முயல்கின்றது. சத்திய ஜீவனின் முறை வேறு. ஒருவரை அல்லது ஒரு பொருளை அறிய முற்பட்டால் அப்பொருள் அவனுள் வந்து அடைந்துவிடும். அப்பொருளின் முழுத்தன்மை யையும் தன்னகத்தே அவன் பெறுவான். பெற்ற பின் தன்னை அறிவது போல் அப்பொருளை அறிவான். இப்படி கிடைப்பது முழுமையான அறிவு. இதில் தவறுக்கு இடமில்லை. பிறரைத் தன்னகத்தே உள்ளுணர்வால் அறியும் திறன் இது. தன் உள்ளொளியைப் பரப்பும் செயலாக இது முடியும். தன் உள்ளேயுள்ள ஒளியைப் பெருக்கும் வகையில் தன் சூழ்நிலையை அவன் உணருகின்றான்.

வாழ்வு வளர முயல்கிறது. வெற்றி, ஆதிக்கம், திருப்தி, சிருஷ்டி, அன்பு, சந்தோஷம் பெற இடை யறாத வாழ்வு தன்னைத் துரிதப்படுத்திக் கொள்கிறது. சத்திய ஜீவனின் வளர்ச்சி உள்ளேயுள்ள ஒளியின் வளர்ச்சி. வெற்றி அவ்வொளிக்குக் கிடைக்கும் வெற்றியேயாகும். ஆதிக்கம் அதன் ஆதிக்கம் நம்மீது வளருவதேயாம். திருப்தியும் அதுபெறும் திருப்தியே. சிருஷ்டி அதன் மலர்ச்சியே. அன்பும், சந்தோஷமும் அது அடையும் பலனே. வாழ்வும் சத்திய ஜீவியமும் பெற்றுள்ள குறிக் கோள்கள் ஒன்றே. வாழ்வில் மனிதனும் சத்திய ஜீவியத்தில் ஆத்மாவும் அக்குறிக் கோள்களை நிறைவேற்றிக் கொள்கின்றன. எல்லாமாய், ஒன்றாய், ஒருமையாய் உள்ளவன் இறைவன். பல பொருள் களிலும் தோன்றும் ஒன்று அதுவே, அந்த மாபெரும் ஒருமையையுடைய ஒன்றைப்பலமுகங்களின் வாயிலாக சிருஷ்டித்து லீலையை நடத்துவதே சத்திய ஜீவனின் வாழ்வாகும். சக்தி, ஒளி, அழகு, சத்தியம் ஆகிய வற்றைப் பல பெரும் உருவங்களாகத் தோன்றச் செய்வதே சிருஷ்டியாகும்.

வாழ்வின் இலட்சியங்களை ஆத்மாவே பூரணமாக அடைவதால், ஜீவனின் அமைப்பே தலைகீழாய் மாறு கிறது. அந்த மாற்றத்தால் உடலுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள தொடர்பு மாறி சிறக்கின்றது. மனிதனின் உடல் ஒரு திசையிலும், ஆத்மா அதற்கு எதிர்த்திசையிலும் செல்வதே இயல்பு. ஆத்மாவுக்குள்ள நியதிகள் வேறு. உடலுக்குள்ள நியதிகள் வேறு, வேறு என்பதும் எதிர்மாறானவையும்கூட. ஆத்மா அழிவற்றது. உடல் அழியக் கூடியது. இந்நிலை மாறி ஆத்ம வழியில் செல்ல உடல் உடன்படுகிறது, சத்திய ஜீவன் வாழ்க்கையில், ஆத்மா ஒளிமயமானது என்றால் உடல் இருள்மயமானது. புதிய நோக்கத்தை ஏற்றுக்கொண்ட உடல், உடலின் இருளில் ஒளிந்திருப்பதைத் தேடிக் கண்டுபிடிக்க முன்வருகிறது. உடலின் வாழ்வில் ஒளிவீசும் அழகு தோன்றச் செய்வதே அதனுள் ஒளிந்துள்ள ஒளியின் இலட்சியம்.

இருண்ட உணர்ச்சிகட்கு அடிமையானது உடல். இவ்வுணர்ச்சிகள் இருளின் பிடியிலிருந்து விடுபட்டு தங்கள் நினைவும் உணர்வும் தானே பூர்த்தி செய்துகொள்ளும் திறன் பெறும் வகையில் மாறி மிளிர்வதே சத்திய ஜீவனில் ஏற்படும் மாற்றம். இம்மாற்றம் உடலுக்குச் சிறப்பைக் கொடுக்கும். சிறப்பெய்துவதுடன் பூரணத்துவம் பெறவும் உதவும். ஜீவன் முழுவதும் ஆத்மிக சக்தியால் நிரம்பப்பெற்று மென்மையும் சுமுகமும் நிறைந்ததாகும். இதனால் சத்திய ஜீவனைச் சுற்றியுள்ள வாழ்க்கை அவனது அக, புற உணர்ச்சிகளை ஒத்து, ஒன்றிப்போகும்.

வாழ்க்கையும், உடலும் எப்பொழுதும் அறிவின் ஆட்சிக்கு இணைந்து வரா. மனதில் ஆத்ம சக்தி வளரும்பொழுது வாழ்வு அதற்குக் கட்டுப்படுகிறது. இருண்ட உடலும் அந்த ஆதிக்கத்திற்குள் வந்துவிடு கிறது. உணர்ச்சியையும், உடலையும் கட்டுப்படுத்தும் திறன் மேலும் வளரும்பொழுது வலியை ஆனந்தமாக மாற்றும் திறனாக அது உயர்ந்து விடுகிறது. சத்திய ஜீவன் மனித ஜீவியத்தை முழுமையாக மாற்றும் திறனைப் பெறுகிறான்.

இறைவனை அடையும் ஆர்வம் எல்லா ஜீவராசி களுக்கும் பிறப்பிலேயே உண்டு, சத்திய ஜீவனில் இந்த ஆர்வம் பேரின்பப் பெருக்காகி ஜீவனின் எல்லாப் பகுதிகளையும் நிரப்பி அவனை ஆனந்தத் தால் திளைக்க வைக்கின்றது.

சத்தியஜீவனுக்கு அடுத்தகட்டத்தை சிருஷ்டி எட்டுமானால் ஆனந்தஜீவன் பிறப்பான். அவனுடைய பேரானந்த வித்துகள் சத்திய ஜீவனில் ஏற்கெனவே காணப்படுகின்றன.

பேரின்பம் துய்க்கும் ஆன்மா ஆனந்தப் பெருக்கை அடைவதுண்டு. யோக ஆரம்பத்தில் இந்த அனுபவம் பெரிய அனுபவமாகும். யோகிக்கு அமைதி கிட்டு மானால் அது ஆனந்தப் பெருக்கைவிட உயர்ந்ததாகும். சத்திய ஜீவன் உள்ள நிலை சிறந்த நிலையாதலால், அவனுக்கு ஏற்படும் ஆனந்தப் பெருக்கு தானே அமைதி (Peace)யாக மாறுகிறது. அத்தகைய அமைதிக்கும், ஆனந்தத்திற்கும் உள்ள பொதுத் தன்மை சத்திய ஜீவனின் வாழ்க்கையால் வெளிப் படுகிறது. அமைதியானாலும், ஆனந்தப் பெருக் கானாலும் அவன் வாழ்க்கையைத் தொட்டபின் அவை தங்களுக்கே உரிய பெரும் சிறப்பை அடையும் வரை உயர்ந்துவிடும். அச்சிறப்பால் அவை பரமானந்த மாக மாறி, பரமனாகவேயும் மாறிவிடுகின்றன.

அத்தகைய உன்னத மாறுதல்கள் அவன் மனத்தில் ஞானமாகவும், ஞானதிருஷ்டியாகவும் வெளிப்படு கின்றன. அவை அவன் இதயத்தில் பரம்பொருளின் மேலேற்பட்ட தீராக் காதலாக மிளிர்கின்றன. செயலில் ஆனந்தமிகு சக்தியாகவும், உடலில் ஆத்மிக வாழ்வாகவும் மாறிக் காணப்படுகின்றன. பிரபஞ் சத்தில் அது நித்தியமான ஆனந்தமாக, நித்தியா நந்தமாக நிலைக்கின்றது.

புறவாழ்க்கையும் இதுபோன்ற மாறுதலை அடைய வேண்டும். சத்திய ஜீவனின் தெய்வீக சுபாவத்தின் தனித்தன்மையை நாம் அறிந்தால்தான் அந்த மாற்றத்தைத் தெளிவாக விளக்கமுடியும்.

ஒருவனுக்கு உள்ள தன்மை தனித்தன்மையாகும். மனித சமுதாயத்திற்கேயுள்ளது பொதுத் தன்மை யாகும். மனித வாழ்வில் இவை எதிர்மாறானவை. சுயநலமும், பிறநலமும் மோதுவதுபோல் இவை முரண்பாடாகவே அமைந்துள்ளன. ஆனால் சத்திய

ஜீவனில் அதுபோன்ற முரண்பாடில்லை. ஒரே அம்சத்தின் இரு நிலைகளாகவே அவை அமைந்துள்ளன. சத்திய ஜீவனில் அகந்தையற்றுப் போனதால், அந்த முரண்பாடுமில்லை.

பொதுத்தன்மை அடிப்படையானது. சக்தியும் திறனுமிக்கது. தனி மனிதன் பொதுத்தன்மையின் திறனைப் பெற்று தன் தனித்தன்மையை வளர்க்கின்றான். ஜீவனின் சுபாவமே பொதுத் தன்மை என்பது. வீரம் என்பது ஒன்று இருந்தாலும் ஒரு வீரனின் தைரியம் அவனது தனி சுபாவத்தைப் பொறுத்தது. தனித் தன்மைக்கும், பொதுத் தன்மைக்கும் உள்ள முரண்பாடும் ஒத்துழைப்பும் ஒரு புதிர். சத்திய ஜீவன் என்பவன் பரம்பொருளின் சுபாவத்தையுடையவனாதலால், அவனிடமும் இந்தப் புதிரை நாம் காண்கிறோம்.

சத்திய ஜீவன் ஓர ஆத்மிக புருஷன். ஒவ்வொருவரிடையேயும் ஜீவனில் இரு பகுதிகள் உள்ளன. ஒன்று அவனுடைய வாழ்க்கையை நடத்துகின்ற திறன் பெற்று வடிவம் பெற்றுள்ளது. அடுத்த பகுதி அவ்வாறு திறன் பெறாமல் வடிவம் பெறாமல் இருப்பதாகும். வடிவம் பெற்றதும் வடிவம் பெறாததுமான மனிதத் திறமைகளுக்குப் பின்னால் புருஷன் உறைகிறான். அவனது பிரதிபலிப்பாகவும், சுயநலமாகவும் இருப்பதே மனிதனுடைய தனித்தன்மை (Personality) என்பது. சத்திய ஜீவன் ஒளியின் பிரவாகம், வரையற்ற சக்தியின் கடல். என்றாலும் அவனுக்கு வரையறையிட்ட உருவமில்லை, ஏனெனில் அவன் புருஷனாகவுமிருக்கின்றான்.

சத்தியஜீவன் அகண்ட பிரபஞ்சத்தின் ஆத்மா. அழிவற்ற நித்திய ஜீவனைத் தான் பெற்றுள்ள உருவத்தின் மூலம் வெளிப்படுத்துகிறான். அதைச் செய்யும் தனித்தன்மை அவனது ஜீவனக் குறிப்பாக உணர்த்துகிறதே தவிர, அதுவே முழுஜீவனமாகாது, அவனது ஜீவியம் அகண்ட ஜீவியம்.

தன் சுபாவத்தின் மூலம் தன்னுடன் பிறந்த ஆத்மிக உணர்வை இயல்பாக வெளிப்படுத்துகிறான்.

சத்தியத்தின் அடிப்படையில் சத்தியத்தை வெளிப்படுத்த ஏற்பட்டவனே சத்தியஜீவன். மனிதன் நல்லதைச் செய்து, மற்றதைப் புறக்கணிக்க வேண்டும். அதற்காகத் தன்னை அந்த நியதிக்கு மனிதன் உட்படுத்திக் கொள்ள வேண்டும். சத்திய ஜீவனுக்கு நல்லது, கெட்டது என்று இரண்டில்லை. அவன் அவற்றைக் கடந்தவன். ஒன்றைச் செய்யக்கூடாது, மற்றதைச் செய்ய வேண்டும் என்ற நியதி அவனைக் கட்டுப்படுத்தாது. அவன் செய்யும் காரியங்கள் அவனால் செய்யப்பட்டவை என்ற ஒரே காரணத்திற்காக நல்ல காரியங்களாகும். ஆத்மிக சுபாவம், ஊற்றெடுத்து அவன் மூலம் பெருக்கெடுத்து ஓடுவது அவனுடைய இயல்பாகும்.

மனித வாழ்வுக்கும், ஆத்மிக வாழ்வுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. மனிதன் சட்டங்களாலும், நியதிகளாலும், மனச்சாட்சியாலும், சாஸ்திரங்களாலும் கட்டுப்பட்டவன். சுதந்திரம், சுய நிர்ணயம், உள்ளுணர்வு ஆகியவை ஆத்மிக வாழ்வைப் பெருநெறியில் நடத்திச் செல்லும். ஆத்மாவைக் கட்டுப்படுத்தும் சட்டம் பரிபூர்ணமான சுதந்திரமாகும்.

சத்தியஜீவனின் ஆத்மிக சுபாவம் பரிபூர்ண சுதந்திரம் உடையாது. தானே இயங்கவல்லது. தன் இச்சைப்படி செயல்களை சிருஷ்டிக்கும் திறனுடையது. அவன் எண்ணியது எண்ணியவாறு செயல்படும்.

சத்தியஜீவனின் செயல்கள் அவனுடைய தனித்தன்மையிலிருந்து எழவில்லை. எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவாகவும், அடிப்படையாகவுமுள்ள பரம்பொருளின் ஒருமை என்னும் அஸ்திவாரத்திலிருந்தே அவன் செயல்கள் எழுகின்றன. ஆகையினால் உலகத்தோடும், மற்ற சத்திய ஜீவன்களுடனும், பரம்பொருளுடனும் அவன் ஒன்றி இணைந்து கலந்து மகிழ்ந்து செயல்படுவான்.

மனம் சிறியது. செயல்பட வேண்டுமானால் மிகக் குறுகிய அளவில் தான் தன்னைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். சிறிய மனம், குறுகித் தெளிந்து இறுகிய பின்னரே தைரியமாகச் செயல்பட முடியும். அகண்ட பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ள சத்தியஜீவன் சுதந்திரமாகப் பிறந்தவன்; பரந்து விரியும் தன்மையுடையவன். தன் நிலையை எளிதில் எந்த உருவத்தையும் ஏற்றுக்கொள்ளும்படி மாற்றிக் கொள்ளும் இயல்புடையவன்.


சத்தியஜீவனின் அகண்ட ஜீவியத்தில் பிரபஞ்சமும், பரம்பொருளும் முரண்பாடின்றிச் செயல்

வண்ணத் தோட்டம்

ஜெ. கமலநாதன்

வாசம் மணக்கும் வண்ணத் தோட்டம் - இதில்
வலிமைமிகு வீரர் கூட்டம்
தேசப்பெருமை பல சொன்னால் - அருள்
தேரின் உருவம் வரும் கண்முன்னால்!

அலைகள் புரளும் நதிவெள்ளம் - அதன்
கரையில் வயல்பசுமை துள்ளும்
கலைகள் பொலியும் இன்பவீடு! - இது
இசைமிளிரும் கவிதை ஏடு!
இனங்கள் பல இருந்தபோதும் - எங்கள்
மனதில் அன்பின் ஒலி மோதும்
உணர்வில் ஒன்று எனும் எண்ணம் - புது
ஊக்கம் தந்து நெஞ்சில் மின்னும்!



கல்விச் செல்வ வளம் துலங்கும் - இங்கு
கனிந்த பண்புநலம் விளங்கும்
சொல்லில் பொருள்பொதிந்த வேதம் - அதில்.
மெய்யைத் தேடுகின்ற ஆர்வம்
மின்னின் அறிவியலில் புதுமை - கண்டு
வண்மைத் தொழில்கள் இங்கு வளரும்
எண்ணம் செயல்கள் அறப்பாங்கில் - முழு
எழுச்சிபெற வாழ்க்கை தொடரும்.

படுகின்றனர். சத்தியஜீவன் சுயமாக சிருஷ்டிக்க வல்லவன். பிரபஞ்சத்தின் ஆத்மாவாக அவன் செயலாற்றும்பொழுதும், அறியாமையிலுள்ள அனைவரையும் அணைத்துச் செயல்பட்டாலும், அவர்களது அறியாமையும், இருளும் அவனைப் பாதிப்பதில்லை.

அவன் உயர்ந்து, எழுந்து, சிறந்து மிளிரும்போது ஈஸ்வரனுடன் ஒன்றிப் போகிறான்.

ஆத்மாவுக்கும், இயற்கைக்கும் உள்ள மாறுபாடும், புருஷ, பிரகிருதிக்குள்ள வேறுபாடும் அவன் வாழ்க்கையில் இல்லை.

அவனது சுபாவம் புருஷனின் வெளிப்பாடாகும்; அப்புருஷன் பரம்பொருளின் தெய்வ சுபாவத்தைத் தாங்கி வருபவன். அதுவே சத்திய உலகின் ஈஸ்வர அம்சம் பொருந்திய திறன்.

இயற்கை கண்ணைமூடி, சென்ற பாதையிலேயே திரும்பத் திரும்பச் செயல்படுகிறது. மனம் அச்செயலுக்கு சட்டங்களியற்றியுள்ளது. சத்தியஜீவன் தன்னுடைய ஞானத்தையே அடிப்படையாகக் கொண்டவன். தானே நிர்ணயித்தபடி தன் ஞானத்தை செயலாற்றுகின்றான். தெய்வ சுபாவமும், அகண்ட ஜீவியமும் அவனுக்குச் சொந்தமானவை. அவன் வழக்கம் திட்டப்படி செயல்படுவதல்ல. நினைத்தபடி, நினைத்த மாத்திரத்தில் செயல்படுவதே அவன் வாழ்வு.

மனிதனிடம் தெளிவு பெறும் அறிவும், செயல் திறனும் தனித்தனியே இருக்கின்றன. சத்திய ஜீவனில் அவை ஒன்றிப் போயிருக்கின்றன. மனிதன் ஒரு காரியத்தைச் செய்வது நல்லது என்று தெரிந்து விட்டால், அதைச் செய்யும் தைரியம் அவனுக்குண்டு என்று சொல்ல முடியாது. சத்தியஜீவனின் நினைப்பும் தைரியமும் கலந்தவை. மனித சுதந்திரம் அவன் ஏற்படுத்திக் கொண்ட எல்லைக்குள் செயல்படும். சுதந்திரமானால் அளவுக்குட்பட்டது. சத்தியஜீவனுக்கு எல்லையில்லை, வரையறையில்லை. சுதந்திரமே செயல். செயல்படும் அளவே வரையறை. மனிதனுடைய சுதந்திரம் இருள் கலந்ததாகையால் அதற்கு வரையறை தேவை. சத்தியஜீவனின் சுதந்திரம் ஒளிமயமானது என்பதால் அதற்கு வரையறை தேவையில்லை. உண்மையை அறிய அவன் பிழை செய்து சோதனை செய்யத் தேவையில்லை.

சத்திய ஜீவியம் அளவற்ற ஞானத்தையுடையது. அளவுக்குட்பட்ட சிருஷ்டியைத்தன்னுடைய அளவற்ற தன்மையால் உண்டாக்குகிறது. தனித்துச்செயல்படும் ஒவ்வொரு ஜீவராசியையும், பிரபஞ்சத்தின் பொது உண்மையையறிந்து சிருஷ்டிக்கிறது.

மனம் அறியாமையிலிருந்து அறிவை நாடுகிறது. சத்தியஜீவன் சத்தியத்தைத் தன்னுள் கொண்டது. அறிவை, ஞானத்தை, சத்தியத்தை அது நாடிப் போகவேண்டியதில்லை. சத்திய ஜீவனின் வாழ்வில் ஒரு பகுதிக்கும், மற்ற பகுதிக்கும் பிணக்கு இருக்க வழியில்லை.

சிறிய அகந்தைக்கும், பெரிய அகந்தைக்கும் உள்ள போராட்டம் சத்தியஜீவனில் இல்லை. அவனது செயல்திறன் ஈஸ்வரனது செயல்திறனாகும். மனிதன் சுயமுயற்சி செய்வதும், இறைவனுக்குப் பணிவதும் வேறுபட்ட இருசெயல்கள். இறைவனது ஆணையும், சுயவிருப்பமும் முரணாக இருப்பதுண்டு. சத்திய ஜீவன் பரம்பொருளின் பகுதி என்பதால் இறையருளுக்கும், அவன் செயலுக்கும் முரண்பாடு ஏற்படக் கூடிய அடிப்படையே இல்லை.

அவனது உயர்ந்த தெய்விக சுபாவத்தின் மூலம் பரம்பொருளின் ஞானமும், சக்தியும் இடையறாது செயல்பட சத்தியஜீவன் முழுமையாக இணைந்து வருகிறான். அக் காரணத்தாலேயே அவனுக்குப் பரிபூரண சர்வ சுதந்திரம் ஏற்பட்டுள்ளது.

பரம்பொருளுடன் ஒன்றிப்போகும் இயல்பு அவனுக்குத் தடையற்ற செயல்திறனைத் தந்துள்ளது.

மனச்சாட்சியிலிருந்தும், மற்ற நியதிகளிலிருந்தும் அவனுக்களிக்கப்பட்ட சுதந்திரம் இக்காரணத்திற்காகவே கொடுக்கப்பட்டுள்ளது.

மனமும் அறிவும் ஏற்படுத்திய சட்டங்களும், திட்டங்களும் அவன் முன்பு கரைந்துவிட்டன. பிரபஞ்சத்தைத் தன்னுள் கொண்டமையினால் அவனது சுயநலத்தில் எல்லார் நலமும் கலந்திருப்பதால், அவனுக்கென்று ஒரு சுயநலம் கிடையாது.

பிரபஞ்சத்தின் ஒருமையும், பரம்பொருளின் அன்பும் அவன் செயல்கள் மூலம் ஊற்றுப் பெருக்காக வெளிப்படுகின்றன.

சத்தியஜீவியத்தின் மற்றொரு பெரிய உண்மையின் படி அதன் கருவிகளை அது தன் செயலால் புனிதப் படுத்துகிறது.

சத்தியஜீவியத்தின் உணர்வு ஒளிமயமானது. ஆனந்தத்தால் நிரம்பி வழிவது.

உடன்பிறந்த சொந்த ஞானமும், உணர்வு கலந்த உலக ஞானமும் சத்தியஜீவனுக்குண்டு.

மனிதன் சத்தியஜீவனாக மாறும் பாதையில் பல கட்டங்கள் உள்ளன. ஆனால் அவற்றிடையே எவ்வித முரண்பாடுகளுமிரா. தனித்த சத்தியஜீவனுக்குச் சொல்லியது போலவே பல சத்தியஜீவன்கள் சேர்ந்திருந்தாலும், அவை பிணக்கொழிந்த ஒற்றுமையின் அடிப்படையிலேயே இயங்கும்.

வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும், பரம்பொருளின் சிறப்பை இன்னொரு வகையாக சிருஷ்டியில் வெளிப்படுத்தும் வாய்ப்பாகக் கருதி வாழ்வனைத்தையும் ஒரே தத்துவத்தால் கட்டுப்படுத்துவது சத்தியஜீவியம்.

இந்த ஆத்மிக அனுபவம் சிறப்பெய்துவதற்கு இன்றியமையாதது. மனத்தால் உணரமுடியாத இந்த ரகசியம், சத்தியஜீவியத்தில் இயல்பாக ஏற்பட்டுள்ளது.

சத்தியஜீவன் சாதாரண மனிதனுடன் சேர்ந்து வாழ வேண்டும். உயர்ந்த நிலையின் சக்தியால் தாழ்ந்த நிலையிலுள்ள மனிதனைத் தேற்றி உயர்த்த வேண்டும். சத்தியஜீவனின் சிறப்புவாய்ந்த உச்சக்கட்டங்கள் சச்சிதானந்தப் பேற்றை நாடும்.

இருளிலிருந்து மீண்டுவரும் மனித சமுதாயம் இருளிலேயே இருந்துவிடுமா என்ற கேள்வியுண்டு.

ஆத்மிக வளர்ச்சி இதுவரை இருந்தது போல் பிணக்கு வாய்ந்த முயற்சியாக இல்லாமல், இனி ஒளிமயமான பாதையில் போகும் என்பதை மட்டும் நாம் சொல்லலாம்.

ஃ

சமையலறை வாசலுக்குள்ளே பாதி உடம்பை மறைத்துக் கொண்டு அண்ணி சொல்லிக் கொண்டிருந்தாள் விம்மலுடன்.

"உள்ளுக்குள்ளே வியாதியை வச்சுகிட்டு, ரிட்டயரான பிற்பாடும் வேலைக்குப் போக அவர்கிட்ட யார் சொன்னாங்க! தெய்வமேன்னு அகத்திலேயே கிடந்திருந்தால் இப்பவும் ஆயுசோட இருந்திருப்பார்..."

கூடத்தில் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சதாசிவம் – அண்ணாவின் நண்பர், அண்ணியைத் தேற்றும் பொருட்டு, 'இதெல்லாம் நம்ம கையிலா இருக்குது? ஒவ்வொருத்தரின் நேரம் வந்துட்டால் போகவேண்டியதுதானே..' – இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில், என்னுள்ளே தாறுமாறான நினைவுப் பொறிகள்.

வேலையிலிருந்து அண்ணா ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகள் ஆகியிருக்குமா? ரிட்டயர் ஆவதற்கு இரண்டு ஆண்டுகள் முந்தித்தானே இதய வியாதி – முதல் அட்டாக் வந்தது! அதுக்கெல்லாம் முன்னாலேயே ஓரளவு சீர்கெட்டுப் போயிருந்தது அவர் மன அமைதி.

அம்பிகா காப்பி கொண்டுவந்து வைத்து விட்டு உள்ளே சென்றாள்.

காப்பித் தம்ளரைக் கையிலெடுத்தவாறு சதாசிவம் கேட்டார்.

'ரெண்டு பொண்ணுன்னு சொல்லியிருக்கான், இவள்தானே மூத்தவள்?'

மீண்டும் அண்ணியின் விம்மல்.

"ஆமாமா. ரெண்டுபேரும் படிப்பையெல்லாம் முடிச்சுகிட்டு நாலஞ்சு வருஷமா வீட்டுக்குள்ளேதான் இருக்கிறாங்க. பி.ஏ. படிப்பெல்லாம் இப்ப பெரிய படிப்பா! ரெண்டிலே ஒருத்தியை யாவது யார் கையிலாவது அவர் பிடிச்சு கொடுத்திட்டுப் போயிருந்தால் எனக்கு சித்தெ நிம்மதியா இருந்திருக்கும். முப்பத்தி அஞ்சு வருஷகால கவர்மெண்ட் உத்தியோகத்தில ஒண்ணுமே சம்பாதிக்காம தம்பியின் படிப்பு, தங்கச்சியின் கல்யாணம் அப்படீன்னு வாழ்ந்து முடிச்சுகிட்டு, இப்ப கடைசியில் வீடு நிறைஞ்சு நிற்கும் ரெண்டு குமரிகளை என் தலையில் கட்டி வச்சுட்டு அவர் பாட்டுக்குப்போய்ச்சேர்ந்துட்டார்."


அண்ணா இருக்கும்போதே கேட்டுக் கேட்டு மரத்துப்போன குற்றச்சாட்டுகள். செய்தி அறிந்து இங்கே நான் வந்த அன்றிலிருந்து, துக்கம் விசாரிக்க வருகிற உறவினர்கள், நண்பர்களிடம் எல்லாம் திரும்பத்திரும்ப என் முன்னிலையில் வைத்து வாசிக்கப்படும் குற்றப்பட்டியல்கள்.

அண்ணா, உன் ஆத்மா சாந்தி அடையுமா?

நான்அறிந்த வரையில் பெண்டாட்டி, பெண்களுக்கு நீ எந்தக் குறையும் வைக்கவில்லையே. குடும்பம் குடும்பம் என்று அடித்துக்கொண்டு ஆபீஸ், வீடு என்ற சக்கர வளையத்துக்குள்ளேயே வாழ்ந்து முடிந்துவிட்டாய்... இருந்தும்.

காப்பி தம்ளரைக் கீழே வைத்தவாறு கேட்டார் சதாசிவம், 'இந்த வீடு சொந்த வீடு தானே...?'

அண்ணியின் குரல் சற்று உயர்ந்து 'ஆமா... திருமலைநாயக்கன் கொட்டாரம் இதை மட்டும் எப்படியோ கட்டி முடிச்சுட்டார்...! என்னை எங்க அப்பா அம்மா வெறும் கையோடா இவர்கூட அனுப்பிவைச்சாங்க! கழுத்து நெறைய நகை, வைர மூக்குத்தி, அப்புறம் கிராமத்தில நஞ்சை,புஞ்சை, இந்தவீட்டைக் கட்டி முடிப்பதுக்குள்ளே அதெல்லாம் போச்சு. ஆனா அதெல்லாம் யாருக்குத் தெரியும்– ஆபீஸிலிருந்து பெரிசா ஹவுஸ் லோன் எடுத்ததும், கடைசிவரை அதன் வட்டி கிட்டியெல்லாம் சம்பளத்



மனித நேயங்கள், மனமுறிவுகள் ஆகியவற்றின் தன்மைகளை வித்தியாசமான கோணத்தில் பிரதிபலிக்கும் சிந்தனைகளின் படப்பிடிப்பே இச்சிறுகதை.

திலேயிருந்து கழிச்சுக்கிட்டிருந்ததால் தான் வீட்டில் செழிப்பு இருக்கவில்லை என்பதும் மட்டும் ஊரில் எல்லாருக்கும் தெரியும்.

சதாசிவம் எழுந்தார் 'வாறேன்' என்று உதட்டு நுனி வரை வந்துவிட்ட வார்த்தையைப் பிடித்து நிறுத்த அவர் சிரமப்பட்டதை நான் கவனித்தேன், துஷ்டி வீட்டிலிருந்து விடைபெறும் போது அப்படிச் சொல்லலாகாது என்பது ஞாபகம் வந்ததோ என்னவோ?

தெருமுனை வரை மௌனமாய் அவர்கூட நடக்கும் போதும், கதி மோட்சம் கிடைக்காத ஆவிகளாய் உள்ளுக்குள் பல்வேறு நினைவலைகள்.

'நீ தேவிகுளத்தில் ஏதோ எஸ்டேட்டில் வேலை பார்த்துகிட்டிருந்தாயே. இப்பவும் அங்கேதானா?'

சதாசிவம் கேட்டார்.

'அந்த வேலையிலிருந்து ரிட்டயராகி விட்டேன். ஆனா அங்கேயே சின்ன அளவில் ஏலக்காய் ஜாதிக்காய் பிஸினஸ் செய்துகிட்டிருக்கேன்...'

'குடும்பம், குழந்தை குட்டிகள் ஒன்றும் இல்லையே..'

'நல்ல வேளை இல்லை...'

என்னைவிட இரண்டு வயசுக்கு மூத்தவர் அண்ணன். அண்ணி வந்த நாளிலிருந்து அவள்மீது அவருக்குக் கொள்ளை ஆசை. அது அண்ணிக்கும் நன்றாகத் தெரியும். அவள் ஆசைகளைப் பூர்த்தி செய்யக்கடைசி வரை



உழைத்துக் கொண்டும் இருந்தார். இருந்தும், அவருக்கு நிம்மதி கிடைத்ததா? அவர் இல்லற வாழ்க்கையைக் கண்டுதானே, இந்நாள்வரை கல்யாணமேவேண்டாமென்று வாழ்நாளைக் கழித்துவிட என்னால் முடிந்தது.

"அவருக்கு ஹார்ட் டிரபிள் இருந்ததால் ரிட்டயரான பின் வேலைக்குப்போக அனுமதிச்சிருக்கக் கூடாது பாவம், அதுதான் உங்க அண்ணிக்கு ஆற்றாமை..."

– இப்படி சதாசிவம் சொன்னபோது அவருக்கு என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

இப்போது செய்தி வந்ததுபோல், நாலு வருஷங்களுக்கு முன் தேவி குளத்திற்குச் செய்தி வந்து நான் என்னவோ ஏதோ என்று துடிதுடித்துப் போய் ஓடி வந்த தருணம். முதல் அட்டாக் வந்து இன்டன்ஸிவ் கேர் யூனிட்டில் இருந்தார் அண்ணன்... ஒரு வாரத்திற்குப் பின் வார்டில் கொணர்ந்து படுக்க வைத்த போது – அப்போது அண்ணன் அரசாங்க வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருக்கவில்லை. அண்ணி டாக்டரிடம் கேட்ட முதல் கேள்வி :'டாக்டர், இனிமேல் ஆபீஸுக்கெல்லாம் போகமுடியுமா?'

'ரெண்டு வாரம் ரெஸ்ட் எடுத்து விட்டு ஆபீஸுக்குப் போகலாம். ஆனா இது ஒரு வார்னிங் – எச்சரிக்கை. கொஞ்சம் கவனமா இருக்கணும். உடம்பையும் மனசையும் அதிகமா அலட்டிக் கொள்ள விடக்கூடாது'.

அண்ணன் ஆபீஸ் போகத் தொடங்கியபின், மாதம் ஒருமுறையாவது, அண்ணனைப் பார்க்கவென்று இங்கே நான் வருவதுண்டு. மருந்துச் செலவுக்கு இருக்கட்டுமென்று என் கையிலிருக்கும் பணத்தைக் கட்டாயப்படுத்தி அண்ணனிடம் திணிப்பதுண்டு. மற்றபடி, எல்லாம் பழையபடி. அண்ணா–அண்ணி உறவுமுறையில் எந்த மாற்றமும் இல்லை. அண்ணாவின் துவண்ட நிலைமை அண்ணியின் கையை மேலும் மேலோங்கச் செய்துவிட்டதா? பக்கத்திலேயே இருந்த அவள் பெற்றோருக்கும் இதில் பங்குண்டு என்று அண்ணாவின் புழுங்கல்..

வழக்கமான அன்றாடச் செலவுகளில் கூட அண்ணனின் மருந்துச் செலவு, பத்திய உணவுச் செலவு. அதையொட்டிய பொருமல்கள். அடிக்கடி டாக்ரைப் பார்க்கவேண்டியிருந்தது. இரண்டு மூன்றுதடவை ஆஸ்பத்திரியில் படுக்கவேண்டி இருந்து வந்தது. எப்படியோ அரசாங்க சர்வீஸ் இரண்டு வருஷத்தைக் கழித்துவிட்டார். இரண்டு ஆண்டுகளுக்கு முன், வேலையிலிருந்து ஓய்வு பெற்ற நாள் மாலையில் ஆபீஸிலிருந்து மாலையும் கையுமாய் சக ஊழியர்கள் காரில் கொண்டு வந்து வீட்டில் விடும்போது, நானும் இங்கே வந்திருந்தேன். இனியாவது ஆபீஸ், பஸ், அலைச்சல் எந்த பிச்சுப்பிடுங்கலின்றி கிருஷ்ணா ராமா வென்று வீட்டில் இருந்து விடு என்றெல்லாம் சொல்லி விட்டுப் போகலாம் என்றுதான் வந்திருந்தேன்.

ஆபீஸிலிருந்து வந்தவர்கள் எல்லாம் போனபின், சர்வசாதாரணமாய் அண்ணி சொன்னாள்.

'நல்லவேளை... நம்ம நாராயண சாமி சம்மதிச்சுட்டார்... அவர் கடையில் கணக்கெழுதும் பொறுப்பை உங்க கிட்டே ஒப்படைப்பதாச் சொல்லியிருக்கார். வேறு யாரையோ வரச் சொல்லியிருந்தாராம்.,திரும்பத்திரும்ப நான்போய்வேண்டிக்கொண்டதால்தான் சம்மதிச்சார். இங்கே வீட்டிலே அடைஞ்சு கிடப்பதைவிட உங்களுக்கு இப்படியொரு வேலையிருப்பதுதான் நல்லது. பொழுது போனது போலவும் இருக்கும்."

அண்ணன் என்னைப் பார்த்தார். நான் சொல்ல நினைத்து வந்ததை எப்படியும் சொல்லி விடுவது என்று தொண்டையைக் கனைத்துக்கொண்டு, மெல்ல 'அதுக்கில்லே' என்று தொடங்கிய போது அண்ணி இடைமறித்துக் கொண்டு, சற்று வக்கணையான குரலில் அண்ணனிடம் சொன்னாள் : 'நீங்க ரிட்டயராயிட்டீங்கன்னு செலவு ஏதாவது குறையப்போவுதா? மருந்துச் செலவு, சாப்பாட்டுச் செலவு. பெண்களின் கல்யாணம் பற்றி ஒன்னும் சொல்ல வேண்டாம். வேலைக்குப் போகாதே, வீட்டிலேயே இருந்துவிடு – அப்படீன்னுச் சொல்லுகிறவங்க யாராவது நமக்கு உதவப் போறாங்களா? ஊருக்கு உபதேசம் பண்ணுவது எல்லாருக்கும் ரொம்ப எளிது'.

அன்றிரவே, மௌனமாய் விடை பெற்றேன். அடிக்கடி அண்ணாவை வந்து பார்த்துவிட்டுச் செல்வதுண்டு. ஒரு தடவை கடைக்குச் சென்றபோதுதான் தெரிந்தது கணக்கெழுதுவது மட்டுமல்ல, சாமான்களை எடுத்து பொட்டலம் போட்டுக் கொடுக்கும் வேலையும் அண்ணனைச் சேர்ந்தது என்பது. மூத்த மகளுக்கு ஒரு வரன் வந்திருப்பதாகவும், வரதட்சனை கொஞ்சம் கூடுதலாகக் கேட்பதாகவும் அவர் சொன்ன போது என்னிக்காவது கல்யாணம் நிச்சயித்ததும் என் சேவிங் அக்கவுண்டில் கிடைக்கும் பணத்தை எடுத்துத் தருவதாக சொல்லிவிட்டு விடைபெற்ற போது கேட்டார்.

'வீட்டுக்குப் போயிருந்தியா?'

'இல்லை' என்று நான் சொன்னதை நம்பவில்லை என்பதை அவர் முகபாவம் காட்டியது. வியாதியிடம் மல்லிட்டுக் கொண்டு, குடும்பத்தை போற்ற, முன்பு ஆபீஸ் 'இப்போ' கடை என்று அவர் அலைந்து கொண்டிருக்கையில், வீட்டில் வரும் அண்ணியின் பெற்றோர் , உறவினர்கள்கூட அவள் சகஜமாய்ப் பேசி மகிழக்கூடாது என்று தடையுத்தரவு போடும் அளவுக்கு அண்ணன் சிடுமூஞ்சியொன்றும் அல்ல... இருந்தும், அண்ணா இல்லாத வேளைகளில் முன்பும், இப்போதும் அங்கே செல்லும் போது, 'ஏன்டா இப்போ இங்கே வந்தோம்' என்ற ஒரு கசப்புணர்வை எனக்கு ஏற்படுத்தும் காட்சிகள். எனவே கூடியமட்டும் வீட்டுக்கு, அவர் இல்லாத வேளைகளில் போவதைத் தவிர்த்தேன். இது அவருக்கும் புரிந்திருக்கலாம்.

வீடுதிரும்பும்போது கூட்ம் நிறைய உறவினர்கள், என்னைத் தவிர எல்லாரும் அண்ணியின் சொந்தக்காரர்கள்தான். அவள் அப்பா, அம்மா, அண்ணன், தம்பி அவர்கள் மனைவி மக்கள், அக்கா, தங்கைகள், அவுங்க கணவர்கள், புரோகிதரும் வந்துவிட்டிருந்தார். மொத்தத்தில் சகஜமான, சந்தோஷமான சூழ்நிலை. அண்ணியின் கடைசித் தம்பி ராமு சொல்லிக் கொண்டிருந்தான். 'இந்த மாதிரி துக்க விசாரணை, இழவுச் சடங்குகளை யெல்லாம் நிப்பாட்டணும். வருகிற வங்களுக்கு எல்லாம் காபி, சாப்பாடு, தான தர்மங்கள் எல்லாம் அனாவசியச்செலவு.'

மௌனமாய், யாரிடமும்' விடை பெறாமல் நான் வெளியேறினேன். வழக்கம்போல், தெருமுனையில் நான் நடந்து சென்று மறைவதுவரை, வீட்டு நடையில் நின்றவாறு அண்ணன் பார்த்துக் கொண்டிருப்பதாய் ஓர் உணர்வு. ○○

முதல் மரியாதை

பின்னலூர் மு.விவேகானந்தன்



இரண்டு நாள்களாக வானமே பிய்ந்து போனதுபோல மழை கொட்டோ கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. நடுங்க வைக்கும் இடியும், மின்னலும் அவ்வப்போது வந்து தங்களை அடையாளங்காட்டிக் கொண்டிருந்தன. மழைச்சாரல் தன்மீது பட்டால்கூட பரவாயில்லை, தன்னிடம் உள்ள புதுச் சால்வையின் மீது பட்டுவிடக்கூடாது என்ற எச்சரிக்கையில் பிளாஸ்டிக் கவரில் வைத்து மடித்து இடக் கையில் தன் மார்போடு அணைத்தபடி நின்றான் அவன். வலக் கையில் குடை சுழன்று கொண்டிருந்தது. குடை விஷயத்தில் என்னவோ அவன் 'சுதேசி'தான். "இந்தியனாகவே இரு, இந்தியப் பொருள்களையே வாங்கு" என்ற வாசகங்களை வலியுறுத்துவதுபோல், கையில் மான் மார்க் குடை. ஏறக் குறைய அரைமணி நேரமாவது ஆகியிருக்கும். ஒரு பஸ்ஸையும் காணோமே என்று தனக்குள் கேட்டுக்கொண்டான். ஏதோ ஒரு விழாவிற்கு, அதிலும் முக்கியப் புள்ளியாகக் கலந்துகொண்டு திரும்புவதாக அவனது தோரணையிருந்தாலும் வானம் அழுது அவனது கம்பீரத்தைக் குறுகச் செய்துவிட்டது.

"என்னங்க... முதன்முதலா... அந்த அரங்கத்தில் போய் பேசப்போறீங்க, அதிலும் 'சிறப்புச் சொற்பொழிவு நீங்க'தான்னு போட்டிருக்காங்க... இந்த நேரத்தில் இப்படியா எழவெடுத்த மானம் மழையைக் கொட்டித் தொலைக்கணும்..." என்று சபித்துக்கொண்டிருந்த அவன் மனைவி, "ஏங்க... இந்த மழையிலே கூட்டம் வருமா?... இல்ல... கூட்டந்தான் நடக்குமா?... இன்னொரு நாளைக்கு ஒத்திப் போட்டுடச் சொல்லிவிடுங்களேன்..." என்று சஞ்சலப்பட்டாள்.

"கூட்டம் நடத்துறவங்க எவ்வளவு கஷ்டப்பட்டு நடத்துறாங்க... அவங்க நம்பள மதிச்சு பேசக்கூப்பிடுறதே பெரிய விஷயம்... இதுல போய் பிகு பண்ணிக்கிட்டிருந்தா என்ன நெனப்பாங்க... எது எப்படியோ நான் போயிட்டு வந்துடறேன்... பத்து மணிக்குத்தானே கூட்டம்... அந்தக் குடையை எடு" என்று பொறுப்புணர்வோடு கூறிக்கொண்டே வாயிற் கதவோரம் கிடந்த காலணிகளில் தன் கால்களை நுழைத்தான் அவன்.

'அடாது மழை பெய்தாலும் விடாது இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்தும் அந்த இலக்கிய ஆர்வலர்கள், அறிஞர் பெருமக்கள் நிறைந்த சபையில் பேசுவதற்கே கொடுத்துவைச்சிருக்கணும். அந்த மாதிரி இடத்தில பேசுனாதான் மரியாதையும்கூட' என்று எண்ணிக் கொண்டு புறப்பட்டான்.

குறிப்பிட்டபடி குறித்த இடத்தில் எப்படியோ கூட்டம் நடந்தது. ஏறக் குறைய எழுபது நிமிடங்கள் பேசி அவர்களின் ஏகோபித்தப் பாராட்டுதல்களைப் பெற்றான். தனக்குப் போடப்பட்ட பெரிய சால்வையை மடித்துக்கைக்கு அடக்கமாக வைத்துக்கொண்டு கூட்டத்திற்கு வந்திருந்தவர்களிடம் நன்றி கூறி விடைபெற்றான்.

அப்போது, கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த அந்த அரங்கத்தின் செயலாளர் அவனை ஓர் ஒதுக்குப்புறமாக அழைத்துச்சென்று ஒரு கவரை எடுத்து அவன் கையில் திணித்து, "ஸார்... உங்களுடைய ஆழமான புலமைக்கும், தன்னலமில்லா இலக்கியப்பணிக்கும் குறைந்தது ஐந்நூறாவது கொடுக்கணும்னு ஆசைப்பட்டோம்... அது முடியல... இதுல... இருநூற்றைம்பது ரூபாய் இருக்கு. தப்பா நெனைக்கக் கூடாது..." என்றார்.

"எவ்வளவோ இடர்ப்பாடுகளுக்கு நடுவே இப்படி ஓர் இலக்கிய அமைப்பை சிறப்பா நடத்திக் கட்டிக்காத்து வர்ற உங்களுக்கு நான்தான் ஸார் நன்றி சொல்லணும். இந்தத் தொகையை உங்க அமைப்புக்கே நன்கொடையா வைச்சுக்குங்க..." என்று பெருந்தன்மையோடு அவன் திருப்பிக் கொடுத்தான்.

அந்தச் செயலாளர், அமைப்புத் தலைவரிடம் ஏதோ சொல்ல, தலைவர் வந்து அவனை வற்புறுத்த, கடைசியில் போக்குவரத்துச் செலவுக்கு மட்டும் ரூபாய் ஐம்பது பெற்றுக்கொண்டு அவர்களிடமிருந்து விடைபெற்று அரங்கை விட்டு வெளியே வந்தான் அவன். அடைமழை என்பதால் தாழ்வான அந்த ஏரியாவில் ஓர் ஆட்டோவைக்கூட காணமுடியவில்லை. மெதுவாக பஸ் டெர்மினஸை அடைந்தான்.

அன்று காலையிலிருந்து நடந்த நிகழ்ச்சிகளை அசைபோட்டுக் கொண்டு நின்றிருந்தவன் மீண்டும் கைக்கடிகாரத்தைப்பார்த்தான்... அந்த பஸ் ஸ்டாண்டில் மழைக்குப் பயந்து, நிகழ்காலத்தை வீதிகளில் தொலைத்து விட்டு எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கமே தெரியாது தஞ்சம் புகுந்துள்ள நடை பாதையோரத்து ஏழைகளைப் பார்த் தான்... குளிரில் நடுங்கும் குசேலர் களைப் பார்த்தான்... மீண்டும் பேருந்து வரும் வழியைப் பார்த்தான்... எந்தவித மாற்றமும் தென்படவில்லை.

"நல்ல நாள்'ளயே பஸ் வராது. இன்னிக்கு ஞாயித்துக்கிழமை வேற... போதாக்குறைக்கு மழை வேற... இதை ஒரு சாக்கு வைச்சே ஓடற பஸ்ஸையும் நிறுத்திப் பூடுவானுங்க... பொடி நடையா நடந்துட வேண்டியதுதான்..." என்று கூறியபடியே முதியவர் ஒருவர் மழையை எதிர்கொள்ள ஆயத்த மானார்.


பிற்பகல் மணி இரண்டைத் தாண் டியது. பசி வயிற்றைக் கிள்ளியது. "நம்பளைவிட வயசில மூத்தவர் அவரே நடக்கும்போது நாம ஏன் நடந்து போவக் கூடாது... அஞ்சு கிலோ மீட்டர் தூரம் தானே... இப்ப நடக்க ஆரம்பிச்சாகூட நாலு மணிக்குள்ள வீடு போயி சேர்ந் துடலாம்"... 'வீட்டுக்குப் போனதும் மனைவிகிட்ட தனக்குப்போட்ட சால்வை யைக் காட்டியும், ஐம்பது ரூபாய் பணத்தை அவள் கையில் கொடுத்தும் வியப்பில் ஆழ்த்தலாம்...', 'என் னுடைய இலக்கியப் பணிக்குக் கிடைத்த முதல் மரியாதை இந்தச் சால்வை... இதைக் கடைசிவரையில ஞாபகார்த்தமா வைச்சிக்கணும்'னு அவகிட்ட சொல்ல'ப்போறேன்..." என்று பலவிதமாக எண்ணிக்கொண்டே வெளியே எட்டிப் பார்த்தான்.

மழையின் வேகம் சற்றும் குறைய வில்லை. அட்டைக்கரிபோல் இருள் மண்டிக்கிடந்தது. அந்த அன்றாடங் காய்ச்சிகளில் ஒருத்தி சில்லென்ற அந்த ஈரத்தரையில் ஒரு கோணியின் மீது குழந்தையைக் கிடத்தியிருந்தாள். குழந்தை ஏதேதோ அரற்றிக் கொண் டிருந்தது. அருகில் உட்கார்ந்திருந்த ஒருத்தி குழந்தையின் நெற்றியைத் தொட்டு, மார்பைத் தொட்டுப் பார்த் தாள். அனலாய்க் கொதித்தது. குழந்தையை மடியில் தூக்கி வைத்துக் கொள்ள முடியாதபடி 'சொத சொத' வென்று நனைந்திருந்த புடைவையுடன் பரிதாபமாகக் காணப்பட்டாள் அந்தத் தாய். சோகமே உருவாகச் சுற்றியிருந்த மூன்று நான்கு பேர் உட்கார்ந்திருந் தார்கள்.

"பக்கத்து ஊருக்குப்போன புருஷன் இன்னும் வரலியே... அந்த மனுஷன் வந்தாலாவது பரவாயில்லை... மருந்து கூட வாங்கக் கையில காசில்லயே..." என்று கதறியது அவன் காதில் விழுந்தது. மழை நீரையும் விஞ்சிய கண்ணீர் அவன் மனதைக் கரைத்து விட்டது. சட்டென்று ஒரு தீர்மானத் திற்கு வந்தவனாய், கையிலிருந்த பிளாஸ்டிக் பையிலிருந்த சால்வையை எடுத்தான். குளிரில் நடுங்கிக் கொண் டிருக்கும் அந்தக் குழந்தையின்மீது போர்த்திவிட்டு, கையிலிருந்த ஐம்பது ரூபாய் பணத்தைக் கொடுத்து, "மருந்து வாங்கிக் கொடும்மா..." என்றான்.

"சாமி! நீங்க மவராசனா இருக் கணும்... அந்த ஆண்டவனாப் பாத்து உங்கள இங்க அனுப்பிஇருக்கான்... ஏ... புள்ள... குழந்தைய பத்திரமா பாத்துக்கடி... இதோ மருந்துக் கடைக்கு ஓடி ஓடியாந்துடறேன்.." என்று கூறியபடியே ஓடினாள் அந்தக் கிழவி.

❀



அமுதசுரபி தீபாவளி மலர் '91 நடராசர் - திருக்குற்றாலம் சித்திரசபை போட்டோ : ஜனார்த்தனன்


அழகு மலர்கள் என்றால் மல்லிகை, ரோஜா, தாமரை, சாமந்தி நினைவுக்கு வரும். இங்குள்ள மலர்கள் எல்லாம் கள்ளி மலர்கள்! அழகுக்குக் குறைவா?





போட்டோ: வி. முத்துராமன், கோவை.











புன்னகை அரசியின் ஆட்சி

அன்று முதல் இன்று வரை

எப்போதும் வதனத்தில் நிலைத்திருக்கும் வசீகரமான புன்னகையின் சொந்தக்காரர் என்று எல்லாராலும் பாராட்டப்பெறும் நட்சத்திர நடிகை திருமதி கே.ஆர். விஜயாவின் திரையுலகப் பிரவேசம் நிகழ்ந்தது, அறுபதுகளின் ஆரம்ப கட்டத்தில். பானுமதி, பத்மினியைவிட அதிக வாய்ப்புகள் சாவித்திரி, சரோஜாதேவிக்குப் போய்க் கொண்டிருந்த சமயம் அது.

சிலரைப் போல் கவர்ச்சி நடிகை, துணை நடிகை என்ற நிலைகளைத் தாண்டி முன்னணிக்கு வந்தவரல்லர் இவர். எடுத்த எடுப்பிலேயே கதாநாயகியாக அறிமுகம் ஆனவர். முதல் திரைப் படம் கே.எஸ். கோபாலகிருஷ்ணனின் இயக்கத்தில், 'கற்பகம்'. இவரது நூறாவது திரைப்படமான 'நத்தையில் முத்து' கூட கே.எஸ். கோபாலகிருஷ்ணன் இயக்கியதுதான். கே.எஸ்.ஜி.யிடம் இவருக்குள்ள 'குருபக்தி' அபாரமானது. அதேபோல், நடிகையர் திலகத்திடம் இவர் கொண்டுள்ள மதிப்பும் அதிகம். "நான் நடிக்க வந்த தருணத்தில், சிவாஜி, சாவித்திரி, ரங்காராவ் போன்ற திறமைமிக்க நட்சத்திரங்கள் ஒளிவீசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடன் நடிக்க வேண்டியிருந்த சூழ்நிலையே எனக்கு நன்றாக நடித்துப் பெயர் பெறவேண்டும் என்ற துடிப்பை ஏற்படுத்தியது. ஒருவருக்கொருவர் சளைக்காமல் நடித்த அந்த நட்சத்திரங்களோடு சேர்ந்து நடித்த அனுபவமே எனது பண்பட்ட பயிற்சிக்குக் காரணம் ஆயிற்று. அவர்கள் தந்த ஊக்கம் பின்னும் நன்றாக நடிப்பதற்கான ஆர்வத்தை வளர்த்தது. எல்லாவற்றுக்கும் மேலாக தேர்ந்த இயக்குநர்களின் மேற்பார்வையில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது மிகவும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதாகும்" என்கிறார்.

தொடக்கம் முதல், எத்தனையோ தகுதிகளுடன் உயர்ந்து வளர்ந்துவிட்ட இந்த நாள் வரையில், கவர்ச்சியான தோற்றத்திலும் சரி, நடிப்புத்திறனிலும் சரி, நிலையான இடத்தைப் பெற்று, தனது இமேஜைப் பொன்போல் பாதுகாத்து வந்திருக்கும் ஒரு முன்னணி நட்சத்திரத்திடம்தான் பேசிக் கொண்டிருக்கிறோமா என்ற சந்தேகம் வந்து புருவங்களை உயர்த்துகின்றது. 'எனக்குச் சிறுவயதிலிருந்தே நடிப்பில் தேர்ச்சி உண்டு' என்றெல்லாம் ரீல் சுற்றும் போலித்தனம் ஏதுமின்றி, வெளிப்படையாகப் பேசும் இவருடைய பாங்கு நம்மைக் கவர்கிறது.





முதல் படமான 'கற்பகம்' படத்தில் ஜெமினிகணேசனுடன்

கவர்ச்சியான கதாநாயகி என்ற தொடக்க நிலையிலிருந்து (தேடினேன் வந்தது, ஏரிக்கரை ஓரத்திலே பாடல்கள் - மறு ஒளிபரப்பு), கனமான பாத்திரங்களையும் அழுத்தமாகச் சித்திரிக்கக் கூடியவர் என்ற பெயரை 'இதயக்கமலம்' போன்ற படங்கள் மூலம் அடைந்து –

மல்லிகைப்பூ, தனிக்குடித்தனம், சபதம், திருடி, என்ன முதலாளி செளக்கியமா, வாயாடி, மேயர்மீனாட்சி போன்ற பல படங்களில் தனித்தன்மை வாய்ந்த காரக்டர்களில் பிரகாசித்து கதாநாயகிக்காகவே அவை வெற்றி பெறும் அளவிற்குத்தனிக்கொடி நாட்டி–

நடிகர் திலகத்திற்கு இணையாக கணக்கற்ற படங்களில் தோன்றி, தவப் புதல்வன், எதிரொலி, பாரத விலாஸ், சரஸ்வதி சபதம், தங்கப்பதக்கம், திரிசூலம், ரிஷிமூலம், படிக்காத பண்ணையார், சாதனை போன்ற எத்தனையோ படங்களில் சிவாஜிக்கு ஈடு கொடுக்கிற மாதிரிகூட அல்ல, அவருக்கே சவால்விடுகிற அளவு நடிப்புத் திறனை வெளிப்படுத்தி –

கனிவு, களை, கம்பீரம் இவையெல்லாம் ஒருங்கே அமைந்த தோற்றப் பொலிவு காரணமாக 'அம்மன்'வேடங்களில் சோபித்து, கே. ஆர். விஜயா இல்லாமல் புரான, பக்திப்படங்கள் வர முடியாது என்கிற எல்லையை எட்டி –

இன்றளவும் தான் நடிக்கும் எந்தப் படத்திற்கும் தன் வரவால் மெருகூட்டக் கூடிய மதிப்பை அடைந்திருப்பது வரையில் எவ்வித ஏற்றத்தாழ்வும் இன்றி, நடிப்பையும் அழகையும் சீராக வைத்துக் கொண்டிருப்பது, இவர் ஒருவருக்கே உரிய இலக்கணம்.

"இது எப்படி சாத்தியமாயிற்று?" என்ற கேள்விக்கு, "அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும்" என்ற பாசாங்கு இல்லாத பதில் நம்மை பிரமிக்க வைக்கிறது. மேலும், தொடர்ந்து வரும் அவருடைய வெற்றிகளைப் பற்றி அவருக்கு இசைவாக அவரிடம் காணப் படும் சிறப்பு அம்சங்களையும் பற்றி வியந்து பேசினால், "தெய்வ அருளே காரணம்" என்று ஒரேயடியாகச்சொல்லி முடித்து விடுகிறார்.

அவரது வரவேற்புக் கூடத்தில், காணப்படும் "அன்னையே உன் அருளுக்கு எத்தனை நன்றி கூறினாலும் போதாது" என்ற பொருள் கொண்ட ஆங்கில வாசகங்கள், அவருடைய உள்ளத்தின் அடித்தளத்திலிருந்தே வருபவைபோல் தோன்றுகின்றன.

அழகை மட்டுமே நம்பிப்படவுலகில் நுழையும் நடிகைகள், அலங்கார நாயகிகளாகவே நின்றுவிட, தனித் தன்மையுள்ள நடிப்பாற்றலால் தனக் கென்று ஒரிடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர் இவர். தனக்கு முன்பே திரையுலகில் நுழைந்து பிரபலமாக இருந்தவர்களுக்கு ஈடாக மட்டுமின்றி, அவர்களை 'ஓவர்டேக்' செய்கிற அளவு குனச்சித்திர நடிப்பைத் தந்தவர், தன் சாதனைகளைக் குறித்துச்சற்றும் பெருமிதம் கொள்ளாத, அவரது இயல்பான தன்னடக்கம், உரையாடலில் தொடர்ந்து எதிரொலித்து, நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

"சரி, அன்றைய இயக்குநர்களுக்கும், இன்றைய இயக்குநர்களுக்கும் என்ன வேறுபாட்டைப் பார்க்கிறீர்கள்?"

"அப்போதைய இயக்குநர்கள், நன்கு வேலை தெரிந்தவர்கள், வேலை வாங்குபவர்கள். இப்போதோ, இயக்குநர்கள் எதையும் ஈஸியாக எடுத்துக் கொள்கிறார்கள். நாமாக என்ன செய்கிறோமோ, அவ்வளவுதான். அதற்கு மேல் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை".

"தேர்ந்த நடிகையான உங்களுக்கு சொல்லித்தர என்ன இருக்கிறது என்றும் ஒதுங்கியிருக்கலாம் அல்லவா?"

"சீனியர் ஆர்டிஸ்ட் என்பதால், இந்த இடத்தில் கொஞ்சம் கூட்டலாம்,

குறைக்கலாம் என்று சொல்வதுடன் நிறுத்திக் கொள்வார்கள் என்பது சரி தான். ஆனால் புதிய கலைஞர்களின் அனுபவமும் இப்படித்தான் இருக்கும் என்று தோன்றுகிறது. பொதுவாக, இப்போது யாரும் அதிக சிரமம் எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை என்றே தெரிகிறது. அதற்கு இப்போது வரும் படங்களின் தரமே சான்று".

"இப்போது நல்ல இயக்குநர்களே இல்லை என்கிறீர்களா?"

"அப்படிச் சொல்லவில்லை. இப்போதும் நல்ல இயக்குநர்கள் இல்லாமல் இல்லை. விசு போன்ற திறமையான இயக்குநரின் படத்தில் (வீடு, மனைவி, மக்கள்) நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. தன் மகனைக் கெடுக்கிற பெண்ணிடம் போய்ப் பேசும் காட்சி ஒன்று வருகிறது அதில். முழுவதும் ஆங்கிலத்திலேயே பேசி நடிக்க வேண்டும். என்னால் அதைச்சரியாகச்செய்யமுடியுமா என்று தயக்கமாகவே இருந்தது. விசு தான் உற்சாகப்படுத்தி நடிக்க வைத்தார்".

"உங்களுக்கு முன் திரையுலகில் இருந்தவர்கள், ஏன் உங்களுடன் நடிக்கத் தொடங்கியவர்கள், இப்படிப் பலர், அரசியலில் நுழைந்து பிரபலமாகி விட்டார்கள். உங்களுக்கு அது போன்ற ஆர்வம் இல்லையா?"

"எனக்குத் தெரிந்தது நடிப்புதான். இதைவிட்டு, வேறு தெரியாத விஷயங்களுக்கு நான் ஏன் போகவேண்டும்?"

இந்த பதிலின் பின்னணியில் தெரிவது அவருடைய தன்னடக்கம் மட்டுமல்ல, அநாவசிய வம்பு விவகாரங்களைத் தவிர்த்து, தன் பெயருக்கும் அமைதியான வாழ்க்கைக்கும் சலனம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் சாதுர்யமும்கூட. மேலும் தனது தொழிலில் அவர் காட்டி வரும் இடையறாத அக்கறையும் நேர்மையுமே, ஆண்டுகள் பல சென்றாலும் மாறாத தகுதியுடன் அவரை முன்னணியில் நிறுத்தியுள்ளன என்றும் புரிந்துகொள்கிறோம்.


"ஒரு டீன் ஏஜ் பெண்ணுக்கு முகம் பார்க்கும் கண்ணாடியை விட நெருக்கமான தோழி கிடையாது; அவளுக்கே மணமாகி ஒரு தாயும் ஆனபிறகு, பாதுகாப்பு, தன்னம்பிக்கை, பொறுப்பு ஆகிய உணர்வுகள் ஒன்றுசேர, கண்ணாடியின் துணை அதிகம் தேவைப்படாது என்று எங்கோ படித்திருக்கிறேன். ஆனாலும் பெண்ணுக்கும், நிலைக் கண்ணாடிக்கும் உள்ள நீண்ட உறவை, அப்படிக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. நடிகைகளுக்கோ, அதன் தேவை இன்னும் முக்கியமானது. பொதுவாகவே பெண்களுக்கு அழகைப் பராமரிப்பது மிக அவசியம். அதிலும் நடிகைகள் என்றால் சொல்லவே வேண்டாம். மார்லின் மன்றோவின் முடிவிற்குக் காரணம் தன் ஃபிகரை இழந்து விடுவோம் என்று அவள் கொண்ட அச்சம்தான் என்பார்கள்.

"நமது தமிழ்ப்படங்களில் முதிய வேடங்களை ஏற்பதற்குப் பல நடிகையர் தயங்கிய நிலையில், இளம் வயது காரக்டர்களைச் செய்து கொண்டிருந்த போதே நீங்கள் (தீர்க்க சுமங்கலி போன்ற படங்களில்) முதிய வேடங்களைத் துணிவுடன் ஏற்றுச் சிறப்பாகவும் செய்தீர்கள். எங்கே வயதான பாத்திரங்களை ஏற்றால் தங்கள் இளமை இமேஜ் சிதைந்துவிடுமோ என்று பயந்தவர்கள் உண்மையிலேயே தங்கள் தோற்றத்தை இழந்துவிட, மணந்தளராத நீங்கள் உடற்கட்டிலும் அப்படியே இருக்கிறீர்கள் அல்லவா? உங்கள் தோற்றத்தைத் தொடர்ந்து நல்லமுறையில் வைத்திருக்க, ஏதேனும் தனிப்பட்ட முயற்சி எடுத்துக் கொள்கிறீர்களா, டயட், உடற்பயிற்சி என்று?"



எம்.ஜி.ஆருடன் 'தொழிலாளி' படத்தில்....

"திரிசூலம் படத்தில் சிவாஜிக்கு ஜோடியாக நடித்ததுடன் தாயாகவும் நடித்தேன். அதற்கு தைரியம் வேண்டும் தான். ஆனால் உடலைப் பராமரிப்பது பற்றிய அக்கறை நடிகைகளைவிட, சாதாரணப் பெண்களுக்குத்தான் அதிக மாக இருக்கும் போலிருக்கிறது. நான் அவ்வப்போது எங்கள் ஊர்ப்பக்கம் செல்லும்போது, தெரிந்தவர் வீட்டுப் பெண்களும், உறவுப் பெண்களும் என் னுடைய அப்போதைய தோற்றத்தையும், அதற்கு முந்தைய தோற்றத்தையும் ஒப் பிட்டு ஏதாவது நுணுக்கமான வித்தி யாசம் இருந்தால்கூட விமர்சிப்பார்கள். நாம் கவனிக்காத சிறுசிறு விஷயங் களையும் இவர்கள் ஆராய்கிறார்கள் என்று நான் ஆச்சரியப்படுவதுண்டு. என்னைப் பொறுத்தவரை, இதற்காக உணவு, உடற்பயிற்சி போன்ற விஷயங் களில் சிரத்தை எடுத்துக்கொண்டு, ரெகுலராக எதையும் செய்ததில்லை.



'நவக்கிரக நாயகி' படத்தில்

ஒரு சமயத்தில் பருமனாகக்கூட இருந்திருக்கிறேன். ஆனால் என்னை மீறி ஏற்பட்டதில்லை அது. பருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு நிறைய சாப்பிட்டே அப்படி ஆனேன். தமிழ்ப் படங்களில் கதாநாயகிகள் பருமனாக இருப்பதைத்தானே விரும்புகிறார்கள்? நான் முதலில் ஒல்லியாக இருந்தேன். அப்போதைய நடிகைகள் எல்லாரும் பருமனாகத்தான் இருந்தார்கள். நானே, சாவித்திரி போன்ற நடிகைகளைத் தொட்டுப்பார்த்து எப்படி இவ்வளவு குண்டானீர்கள் என்று ஆச்சரியப் பட்டுக் கேட்பேன். நானும் அதுபோல பருமனாக விரும்பி, வேண்டுமென்றே அதிகம் சாப்பிட்டேன். ஆனால், ஒரு சமயத்தில் கொஞ்சம் அளவுக்கு மீறியே குண்டாகஇருந்தேன்".



'திருடன்' படத்தில் மேஜர்-சிவாஜியுடன்

தன் உடல் பருமனை ஒரு குறை யென்று குறிப்பிட்டு அவர் பேசும் விதம், இன்றளவும் காத்துவரும் அவரது வெள்ளை உள்ளத்தைக்காட்டுகிறது.

"இதயக்கமலம், நெஞ்சிருக்கும் வரை, சபதம், சொந்தம், நத்தையில் முத்து, மேயர் மீனாட்சி இப்படி நீங்கள் சிறப்பாக நடித்த படங்களின் பெயர் களை ஒரு நீண்ட பட்டியலே போடலாம். ஒரு கால கட்டத்தில், உங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருகிற மாதிரி யான கதை அமைப்பு கொண்ட படங்கள் பல வந்தன. அவற்றில் ஹீரோவாக நடித்தவர்களின் ஒத்துழைப்பு எப்படி இருந்தது?"

"மதுரை திருமாறன், எல்.வி. பிர சாத், கே.எஸ்.ஜி., ஆகியவர்களுடைய படங்களில் எனக்கு கொஞ்சம் 'வெய்ட்' அதிகமான ரோல்களாகத்தான் கொடுத் தார்கள். அதனால் பிரச்னை எதுவும் வரவில்லை. ஆனால் ஜெய்சங்கர் போன்றவர்கள், டைரக்டர்களிடம்,'என்ன ஸார் அந்த லேடிக்கே ரொம்ப வெயிட் கொடுக்கிறீங்க'ன்னு கேட்டதாகப் பிறகு அவங்ககிட்டேயிருந்து தெரிஞ்சுக் கிட்டேன்".

இவருடைய திறமையைப் புரிந்து கொண்டவர்கள் இவருக்கு முக்கியத் துவம் கொடுக்கும் படங்களை எடுத்து வெற்றியும் கண்டார்கள். இவர் முகத் தில் எப்போதும் நிலவும் நிறைவான புன்னகையும், நறுக்குத் தெறித்தாற் போன்ற, அதே சமயம் நிதானமான வசன உச்சரிப்பும், புராணப்படங்களில் 'தேவி' வடிவம் ஏற்பதில் இவருக்குத் துணை யாக நின்றன.

"அம்மனாக நடிப்பதில் ஏதாவது அச் சமோ, தயக்கமோ ஆரம்பத்தில் உங்க ளுக்கு ஏற்பட்டதுண்டா?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நடிப்பு என்று வந்துவிட்டால், அதுபோல் தோன்ற இடமில்லை. ஆனால் ஒன்று: அதுமாதிரி நடிக்கிற சமயங்களில், வழக்கத்தைவிடத் தூய்மையாக, கட்டுப் பாடாக இருந்துவிடுவேன். தவிர, எனக்கு ஓவர் பக்தி. சாமி என்று சொன்னால் போதும். கையைத் தூக்கி விடுவேன்."

திருவேற்காடு தேவி கருமாரிஅம்மன் கோயில் இவரது முயற்சியால் எவ்வளவு பிரபலமானது என்பதை மறந்துவிட முடியுமா?

கவர்ச்சியான உடைகளைப் பற்றிப் பேச்சுவந்தபோது,

"நான் முன்பு (தட்டுங்கள் திறக்கப் படும் படத்தில்) டூ பீஸில் கூட நடித் திருக்கிறேன். ஆனால் கதைக்குப் பொருத்தமில்லாமல் வந்ததில்லை. இப் போது, அருவருப்பான உடைகளை அணி விப்பதற்கென்றே காட்சிகள் எடுக்கிற மாதிரி இருக்கிறது. பல பாடல் காட்சி களில் கொஞ்சமும் பொருத்தமில்லாமல் திடீரென்று டிரஸ் மாறுகிறது" என்றார்.

"புன்னகை அரசி என்ற பட்டப் பெயரைப் பெற்றுத் தந்த இந்தப் புன்னகை உங்கள் தனிச்சொத்து. இதை வேறு சிலரும் செய்ய முயன்று தோற்றிருக்கிறார்கள். உங்களால் மட்டும் எப்போதும் இதைத் தொடர்ந்து செய்வது எப்படி சாத்தியமாகிறது?"

"கடவுள் தந்தது என்றுதான் சொல்ல வேண்டும்! எதுவுமே தாங்களாகச் செய்வதுதானே நிலைக்கும்? பிறரைப் பார்த்துச் செய்வது அவ்வளவு சரியாக வருமா?" – இதையும் மாறாத புன்னகை யுடன்தான் சொல்கிறார்.

"இந்திப் பட வாய்ப்புகளை நீங்கள் அதிகம் நாடவில்லை போலிருக் கிறதே?"

"உனக்கு இங்கேயே நல்ல பெயரும் புகழும் இருக்கையில், அங்கே எதற்குப் போக வேண்டும் என்று கணவர் கூறினார். எனக்கும் அது சரி என்று பட்டது".

ஏக்கம் ஏதுமற்ற, எளிதில் திருப்தி யுறும் இயல்பு தெரிகிறது.

"மலையாளம் உங்கள் தாய் மொழியாக இருந்தாலும், நீங்கள் அதிக மலையாளப் படங்களில் நடிக்க வில்லையே?"

"பிறந்து, வளர்ந்தது தமிழ்நாட்டில் தான்; தாய்மொழி ஓரளவே தெரியும். அதை வைத்துக்கொண்டு, இலக்கணச் சுத்தமாகப்பட வசனம் பேசிவிட முடி யாது" – ஒளிவு மறைவில்லாத மனப் பாங்கு புரிகிறது.

"மகளுக்குத் திருமணம் ஆனபிறகு, பிரிந்திருப்பது சிரமமாக இருக்கிறதா?'

"பிரிவையெல்லாம் பழகிக் கொள்ள வேண்டியதுதானே? சமீபத்தில் வந்து எங்களுடன் தங்கிவிட்டுப் போனாள்".

பேட்டியின் இடையிடையே தொலை பேசி ஒலித்த போதெல்லாம், உதவி யாளரைக்கூட கூப்பிடாமல் தானே ஓடிச் சென்று அவர் எடுப்பதையும், பந்தா எதுவுமின்றி வந்தவரை வரவேற்று உப சரிப்பதையும் குறிப்பிட்டபோது,

"இதில் பாராட்ட என்ன இருக் கிறது? நாம் பிறரை மதித்தால்தானே, பிறர் நம்மை மதிப்பார்கள்? பெயரும் புகழும் இருக்கும்போது வருபவர்களை விட நமக்கு அது இல்லாதபோது வருபவர்களிடம் அதிக மரியாதை தர வேண் டாமா?" என்றார் புன்னகையுடன். குரலில் சிறிதும் போலித்தனம் இல்லை.

சமீபத்தில் தான் நடித்த படங்களில் "வாழ்ந்து காட்டுவோம்' என்ற படத்தில் ஏற்ற பாத்திரம் தனக்குத்திருப்தி தந்தது என்றார்.

'பெண்கள் வீட்டின் கண்கள்' படத் தில் அவருக்குத்தான் அதிக முக்கியத் துவம் என்றாலும், எஸ்.எஸ். சந்தி ரனுக்கு இணையாக அவர் நடித்தது பலருக்கு ஆச்சரியம் அளித்த விஷயம். அதைக் குறிப்பிட்ட போது, அதில் தனக்கு எந்த வித்தியாசமும் தெரிய வில்லை என்றார்.

அண்மைக் காலத்தில் வெளிவந்த இவருடைய சொந்தத் தயாரிப்பான சிலம்பு திரைப்படத்தின் (வித்தி யாசமான கதை அமைப்பு கொண்டது) பின்னணியில் இவரது அதீதமான உழைப்பு உன்னதமாக விளங்கியது.

"அப்போதைய படஉலகிற்கும் இன் றைய படஉலகிற்கும் தொழில் நுணுக்க வேறுபாடுகள் அதிகம். இந்த நிலையை உங்களைப் போன்றவர்கள் எப்படி எதிர் கொள்கிறீர்கள்?"

"எல்லாம் வரவேற்கக் கூடிய முன்னேற்றம்தான். இருந்தாலும், காட்சியை எடுக்கும்போதே வசனம் பேசினால் கிடைக்கும் நிறைவு, வேறு ஒரு நாளில், டப்பிங் ஸ்டூடியோவில் அமர்ந்து ஒலிப்பதிவு செய்யும்போது கிடைப்பதில்லை என்பது உண்மைதான். படப்பிடிப்பின்போது ஏற்படுத்திக் கொள்ளும் மனநிலைக்கு, மறுபடி ஒருமுறை தயார்செய்து கொள்வது எளிதாகத் தெரியவில்லை. இன்றைய நடிகைகளில் பெரும்பாலோர் சொந்தக் குரலில் பேசி நடிக்காத காரணத் தினால், இந்தப் பிரச்னை அவர்களுக்கு இல்லை".

கே.எஸ்.ஜி.யின் 'சொல்லடி சிவ சக்தி' திரைப்படம் வெளிவர இருந்த சமயத்தில், தன் களைப்பைப் பொருட் படுத்தாமல், பிற வேலைகளைப் புறக் கணித்து, உரையாடியதற்கு நன்றி கூறினோம். அவரது 'முத்திரை' பதிந்த புன்னகையே பதிலாகக் கிடைக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு களவு போன நகைகள், திரும்பக் கிடைப்ப தற்கான சாத்தியங்கள் இல்லை என்ற வருத்தத்திற்குரிய விஷயம்கூட இவ ரிடம் கவலைக்குரிய ரேகைகளைப் பதிய வைக்கவில்லை. வாழ்க்கையின் எதிர்மறைத் தன்மைகளை மிகவும் எளிதாக எதிர்கொள்ளும் மனப்பக்குவம் அது பற்றிப் பேசும்போது தெரிந்தது.

ஒருவருக்கு முன் காட்டிக் கொள் வதற்காக வரவழைக்கப்படும் பாவனை களாக இன்றி, இயல்பாகவே வெளிப் பட்ட அவரது பெருந்தன்மை, யதார்த்த மான பேச்சு, தன்னடக்கமுள்ள நடத்தை இவையெல்லாம், சிறந்த நடிகை என்று மட்டுமே நாம் அறிந்திருக்கும் திருமதி கே.ஆர். விஜயாவின் உன்னத மனிதப் பண்புகள் அவை என்பதை உணர்த்து வதை அறிந்துகொண்டோம்.

சூது

ராஜேஷ்குமார்

வாய்கூசாமல் தெய்வ நிந்தனையாக வாரியிறைத்த சொற்களின் சூடு, சில மணி நேர இடைவெளியில் நரசிம்மத்துக்குக் கொடுத்துவிட்ட தண்டனை என்ன? அதுதான் கதையில் காட்சிகளாக விரிகின்றது.

"கனகா...!"

– எம்.எல்.ஏ. நரசிம்மம் இரைந்தார்... கோபமாய்.

"வந்துட்டேங்க..."

"ஏண்டி... ஒரு புடைவையைக் கட்டிகிட்டுப் புறப்பட இவ்வளவு நேரமா...?"

"இதோ ஆச்சு..."

"அதையேதான் பத்து நிமிஷமா சொல்லிட்டிருக்கே...! எட்டு மணிக்குள்ளே கோயிலுக்குப்போயிட்டு.. நான் மீட்டிங்குக்குப் புறப்பட வேண்டாமா..?"

நாற்பது வயது கனகா தகதகக்கும் பட்டுப்புடைவையில் வெளியேவந்தாள். இரட்டை நாடி உடம்பு. காதுகளிலும், மூக்கிலும் வைர சமாசாரங்கள் நட்சத்திரங்களைப் போலக் கண் சிமிட்டின. தலையில் ஜாதி முல்லை மணத்தது.

"புறப்படலாங்க..."

"ஏண்டி அறிவுகெட்டவளே...!"

"என்னங்க..."

"இந்தப் புடைவையையா கட்டிகிட்டே...?"

"ஏன்..இதுக்கென்ன...?"

"இதனோட விலை... என்ன...? எட்டாயிரம்ரூபாய்..."

"இருக்கட்டுமே... கோயிலுக்குத் தானே கட்டிகிட்டுப் போறேன்...?"

"இன்னிக்குக்கோயில்ல கூட்டம் எப்படி இருக்கும் தெரியுமா? கசகசன்னு நெரியும்... பிராகாரம் பூராவும் தண்ணியை ஊத்தி வெச்சிருப்பாங்க... நடக்கும் போது கொஞ்சம் ஏமாந்தாலும் சேலையில சேறு பட்டுடும்..."

"நான் படாமே பார்த்துக்கிறேன்..."

"சொன்னா நீ கேக்கமாட்டியே... எட்டாயிரம் ரூபா புடைவை இன்னிக்கு நாசமாகப் போகுது..." இரைந்து கொண்டே போர்டிகோவில் நின்றிருந்த காரை நோக்கிப் போனார் நரசிம்மம். கனகா பட்டுப்புடைவை சரசரக்கப் பின்தொடர்ந்தாள்.

கார் நகர்ந்து காம்பவுண்டு கேட்டைத் தாண்டியதும் நரசிம்மம் சொன்னார். "இதோ பார்... கோயிலுக்குப் போனதும்... பிராகாரமெல்லாம் சுத்திட்டிருக்க எனக்கு நேரமில்லை.... நான் எட்டுமணிக்குள்ள இங்கிருந்து கிளம்பி கட்சி ஏற்பாடு செய்திருக்கிற பொதுக் கூட்டத்துக்குப் போயாகணும்... நீ பாட்டுக்கு ஒவ்வொரு சாமிக்கும் முன்னாடி நின்று... மந்திரம் சொல்ல ஆரம்பிச்சுடாதே..."

"என்னங்க... நீங்க... கோயிலுக்குப் போகும்போது நிறைஞ்ச மனசோட அம்பாளை சேவிக்கப் போகணும்... நீங்க இப்படி வேண்டா வெறுப்பா கோயிலுக்கு வர்றது கொஞ்சம்கூட நல்லா யில்லை.."

"வாயை மூடிகிட்டு வாடி..."

கார் பத்து நிமிஷ பயணத்திற்குப் பிறகு –

சௌடேஸ்வரி அம்மன் கோயில் வாசலில் நின்றது. கோயில் எக்ஸிகியூடிவ் ஆபீஸர் தனபாலன் ஓடோடி வந்தார்.

"நகருங்க.. நகருங்க..."

யாரோ ஒருவர் கத்த – கோயிலின் பிரதான வாசலில் நின்றிருந்த கும்பல் காரணம் புரியாமல் வழிவிட்டது.

காரினின்றும் பட்டு வேஷ்டி, சட்டையில் – நெற்றியில் மின்னும் சந்தனப் பொட்டில் – தங்கப்பல் சிந்திய மினுமினுப்பில் அமர்த்தலாய் இறங்கினார் நரசிம்மம். தொடர்ந்து கனகா சேலையைப் போர்த்திக் கொண்டு பவ்யமாய் இறங்கினாள்.

"வரணும்.. வரணும்..." கோயில் எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் தனபாலன் போலிச் சிரிப்பொன்றை அவசர அவசரமாய் – உதடுகளில் தவழவிட்டபடி வரவேற்றார். கோயில் தர்மகர்த்தா சிதம்பரம் கை கூப்பி நின்றார்.

"சரியா.. பூஜை நேரத்துக்கு வந்துட்டீங்க..."

பட்டு வேஷ்டி சரசரக்க – தங்க பிரேமிட்ட மூக்குக் கண்ணாடியை சற்றே தூக்கி சரிசெய்தபடி – அமர்த்தலான பார்வையொன்றை அனைவர்மீதும் சிதறவிட்டபடி – கோயிலின் உட்பிராகாரத்தை நோக்கி நடைபோட்டார் நரசிம்மம்.

சௌடேஸ்வரி அம்மன் அலங்கார பூஷிதையாய் மூக்குத்தி மின்ன, மஞ்சள் சாந்து திருமுகத்தில் பூசி – சிம்ம வாகனத்தில் அமர்ந்திருந்த காட்சியில் லயித்துப்போயிருந்த கூட்டம் நரசிம்மத்தின் ஆர்ப்பாட்டமான வருகையால் சற்றே குலைந்தது.

எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் கத்தினார்.

"ம்... வழி விடுங்க..."

"யோவ்... உன்னைத் தாய்யா... தள்ளி நில்லு... எம்.எல்.ஏ. வர்றாரு" ஜனங்களின் எரிச்சலான முணு முணுப்புகள் அங்கே நிலவியிருந்த புழுக்கமான காற்றில் கரைந்து நரசிம்மத்தின் காதுகளை வருடினாலும் அதைப் பொருட்படுத்தாமல் – முன்னால் போனார். அம்மனுக்கு அர்ச்சனை செய்து கொண்டிருந்த தலைமைப் பூசாரி – நரசிம்மத்தின் தலையைப் பார்த்ததும் அர்ச்சனையை சில விநாடிகள் நிறுத்தி கும்பிடு போட்டுவிட்டு மறுபடியும் தொடர்ந்தார்.,

"ம். தள்ளுங்க... கொஞ்சம் தள்ளுங்க..." எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் கும்

பலை விலக்கிவிட்டு – கர்ப்பக் கிரகத்தின் முன்வரிசையில் இடம் கொடுத்தார். அத்தோடு பூசாரியைப் பார்த்துக் கண்ணையும் காட்டினார். அடுத்த விநாடியே நரசிம்மத்தின் திருநாமம் பூசாரியின் உதடுகளால் உச்சரிக்கப்பட்டு விசேஷ அர்ச்சனை ஆரம்பமானது. அம்மனுக்கு ஸ்பெஷலாக நெய்வர்த்திதீபராதனைகாட்டப்பட்டது. இரண்டு பெரிய ரோஜா மாலைகளை அம்மனின் திருப்பாதங்களில் வைத்து அவற்றை எடுத்து வந்தார் தர்மகர்த்தா. ஒன்றை நரசிம்மத்தின் கழுத்தில் போட்டார். இன்னொன்றைக்குழைவான சிரிப்போடு கனகாவிடம் நீட்டினார்.

நரசிம்மம் கை நோகாமல் – விரல்களில் மோதிரங்கள் பளிரிட நாசுக்காய் கன்னத்தில் போட்டுக் கொண்டார். தன் முன் நீட்டப்பட்ட கற்பூரஆரத்தித்தட்டில் புத்தம் புதிய பத்து ரூபாய் நோட்டொன்றைப் போட்டார். சுண்டுவிரலால் விபூதியை பட்டும் படாமல் தொட்டு இட்டும் இடாமல் நெற்றியில் அணிந்து கொண்டார். குங்குமத்தை நீட்டிய பொழுது தலையசைப்பால் புன்னகையோடு மறுத்தார்.

கனகாவோ கண்களில் நீர் பனிக்க காயத்ரி ஸ்லோகம் சொல்லிக் கற்பூ ஆரத்தியைத் தொட்டுக் கண்களி ஒற்றிக் கொண்டாள். குங்குமத்தை விரல் சிவக்க எடுத்து நெற்றியில் பளி சென்று இட்டுக்கொண்டு – மேலா விபூதிக்கீற்று ஒன்றைப் பூசிக்கொண்டு – அந்த கர்ப்பக்கிருகத் தரையில் மண்டியிட்டு பட்டுப்புடைவை தரையில் தோயத்தோய அம்மனின் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினாள்.

பார்த்துக் கொண்டிருந்த நரசிம்மத்தின் கண்களில் செம்மை ஏறியது. மனசுக்குள் பொருமினார். ‘அறிவு கெட்ட ஜென்மம்...! பிசுக்குப் பிடித்த இந்தத் தரையில் விழுந்து கும்பிடறாளே...? எட்டாயிரம் ரூபாய் பட்டுப் புடைவையில் கறை பட்டா, போகுமா...?’

“புறப்படலாமா... ஸார்...” – பின்னால் நின்றபடி பணிவோடு கேட்ட தர்மகர்த்தா, அவர் வெளியேற வழியமைத்துக் கொண்டே ஜனத்திரளில் நீந்தினார். புழுக்கத்தால் அரும்பத் தொடங்கிவிட்ட வியர்வையை மேல் துண்டால் ஒற்றிக்கொண்டபடி – அவரைப் பின்தொடர்ந்தார் நரசிம்மம். அவருக்குப் பின்னால் கனகா வந்தாள்.

எல்லாருமாய் வெளியே வந்து பிராகாரத்தில் நடந்தார்கள். எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் பவ்யமாய் கேட்டார்.

“இன்னிக்கு ‘சிதம்பரம் பூங்கா’ மைதானத்தில் நம்ப கட்சி பொதுக் கூட்டம் போலிருக்கு...?”

“ஆமா... ரெண்டு மந்திரிங்க.. வர்றாங்க...”

“நீங்களும்... பேசப் போறீங்களா...?”

“...ம்... போஸ்டர்ல... பேர் போட்டிருக்காங்க... நீங்க பார்க்கலையா...?”

“எதிர்க்கட்சிக்காரங்க... ஏதோ... போராட்டம் நடத்தப் போறதா... சொல்லியிருக்காங்க... அரசாங்கம் என்ன பண்ணப்போகுது...?”

“நம்ம சி.எம்... அதையெல்லாம்... பார்த்துக்குவாரு... நான் வரட்டுமா... மீட்டிங்குக்கு நேரத்துல போய்ச் சேரணும்.. நேரமிருந்தா கூட்டத்துக்கு நீங்களும் வாங்களேன்”


“அவசியம் வர்றோம்...” தர்மகர்த்தாவும், எக்ஸிக்யூடிவ் ஆபீஸரும் கைகளைக் கூப்பினார்கள். மீண்டும், குழைவுகள், சிரிப்புகள்.

காரில் ஏறி உட்கார்ந்து ஸ்டியரிங்கைப் பிடித்தார் நரசிம்மம். கனகா ஏறி உட்கார்ந்ததும் கார் புறப்பட்டது.

கார் கோயிலின் வாசலைக்கூடத் தாண்டவில்லை. நரசிம்மம் கோபப் பார்வையோடு – கனகாவை ஏறிட்டார்.

“உனக்கு அறிவிருக்கா...?”

கணவரின் சீற்றத்திற்குக் காரணம் புரியாமல் அவர் முகத்தைப் பார்த்தாள் கனகா. “என்னங்க...?”



"அம்மன் உன்னைக் கால்ல விழச் சொன்னாளா?" எரிந்து விழுந்தார். கனகா திகைப்போடு அவரைப் பார்க்க – நரசிம்மம் தொடர்ந்தார்.

"சம்பாதிச்சுக் கொட்றது நான்... உன்னோட அப்பன்வீட்டுப்பணமாபாழாப் போகுது...! பட்டுப்புடைவை தரையில் புரளப் புரள... அம்மன் கால்ல விழுந்து கும்பிட்டாத்தான் அம்மன் வரம் தருவாளா...?"

"இதுக்காகவா கோபப்படறீங்க...? சேலையை ட்ரைவாஷுக்கு போட்டா போறது...? அம்மனை இன்னிக்கு எவ்வளவு திவ்யமா அலங்காரம் பண்ணியிருந்தாங்க... பார்த்தீங்களா...! பார்க்கப் பார்க்க உடம்பே சிலிர்த்து விட்டுதுங்க... அதான் என்னையும் அறியாமே... விழுந்து கும்பிட்டேன்... அது வெறும் தரையில்லீங்க... அம்பாள் வாசம் பண்ற கர்ப்பக்கிருகம்..."

நரசிம்மம் முறைத்தார். "சுத்த அறிவு கெட்ட ஜென்மம்! உனக்கும் புரியாது... சொல்றவங்க பேச்சும் புரியாது... பட்டுப்புடைவையை முன்னே பின்னே உங்க பரம்பரையில கட்டியிருந்தாத்தானே அதனோட அருமை தெரியும்...? அம்மனோட கால்ல விழுந்ததில... என்ன பிரயோசனம்...? சேலைதான் நாறிப்போச்சு..."

"அப்படியெல்லாம் பேசாதீங்க... இந்த வாழ்க்கை, உங்களுக்கு கிடைச்சிருக்கிற பதவி, புகழ் எல்லாமே... அந்த அம்பாள் போட்ட பிச்சை. அவ சந்நிதானத்திலே விழுந்து வணங்கறதுல எந்தத் தப்பும் இல்லீங்க... ஓர் அற்பப் பட்டுப்புடைவைக்குப் போய்... இவ்வளவு...தூரம்...?"

கனகா பேச்சை முடிக்கவில்லை. இடக் கையால் ஓங்கி அறைந்தார் அவளை. "நீ... பண்ணின முட்டாள்தனமான காரியத்தை நியாயப்படுத்திப் பேசினே...கொன்னுடுவேன்..."



வாயை மூடிக்கொண்டாள் கனகா. கார் வேகம் பிடித்துச்சில நிமிஷங்கள் கரைந்தபின் – வீட்டு வாசலில் நின்றது.

"கட்சி கூட்டத்துக்குப் போயிட்டு வர்றேன். திரும்பறதுக்கு ரெண்டு மணியாயிடும். எனக்காகக் காத்திட்டிருக்காமே சாப்பிட்டு.. படு.."

கனகா தலையாட்டிவிட்டு – காரிலிருந்தும் இறங்கி வீட்டுக்குள் போனாள். நரசிம்மம் காரைக் கிளப்பினார்.

காலிங்பெல் அலறியதும் – தூங்கிக் கொண்டிருந்த கனகா சட்டென்று விழித்துக் கொண்டாள். அவள் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி பன்னிரண்டரை.

'அதற்குள்ளாகவா கூட்டம் முடிந்து அவர் வந்திருப்பார்...?'

வேகவேகமாய்ப் போய்க் கதவைத் திறந்தாள். திடுக்கிட்டுப் போனாள்.

நரசிம்மம் தலையெல்லாம் கலைந்து... முகமெல்லாம் வியர்வை பெருக... மூக்குக் கண்ணாடியில்லாமல்... தள்ளாடியபடி உள்ளே நுழைந்தார்.

"என்னங்க... இப்படி வர்றீங்க...?" பதறிப்போய்க் கேட்டாள் கனகா. நரசிம்மம் – பெருமூச்சு விட்டுக் கொண்டே போய் சோபாவில் சாய்ந்தார்.

"ஒன்னுமில்ல கனகா... கூட்டத்துல கலாட்டா ஆயிடுச்சு.. கட்சிப் பூசல். தப்பிச்சுட்டு வந்ததே...பெரிய பாடு... வெந்நீர் போடு... குளிக்கணும்".

கனவரை தலைமுதல் கால்வரை பார்த்தாள் கனகா. சாயந்திரம் கோயிலுக்குப் போகும்போது பொன்னாக மின்னிய பட்டுச்சட்டை கந்தல் துணியாய்க் கசங்கிப்போயிருந்தது. சட்டையில் அங்கங்கே... அழுகிய தக்காளிப் பழத் தோல்கள், அழுகிய முட்டைகளின் அசிங்கமான சிதறல்கள், பட்டு வேஷ்டியில் நான்கைந்து இடங்களில் விரலளவு கிழிசல்கள், காலில் வார் அறுந்துபோன ஒற்றைச்செருப்பு!

புடைவைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டே வெந்நீர் போட உள்ளே போனாள் கனகா.

ஸி.ஏ.ராமசந்திரன் சித்திரங்கள்

மகிஷாசுர மர்தனி

ஸ்ரீதேவி பாகவதம், பதினெண் புராணங்களில் முக்கியமானது. இதில் அன்னையை பிரம்ம சொரூபிணியாக வருணிப்பதால் வேதாந்த நூலாகிறது. மற்றும் மந்திர சாஸ்திரமாகவும், தரும சாஸ்திரமாகவும் இதனைச் சொல்வர். அன்னை சிம்மவாகினி மகிஷாசுர மர்தனியாய் தீயதை அழித்து உயர்நலத்தைப் பூவுலகுக்கும் நல்குவதை திரு. இராமச் சந்திரன் வரைந்துள்ள சித்திரத்தின் துணையுடன் இக் கட்டுரை சுருக்கமாக விளக்க முற்படுகிறது.

இரம்பன் அக்னிதேவனிடம் பூவுலகை ஜயிப்பவனும், மகாபல சாலியும், எவரிடமும் தோல்வியுறாது எவ்வுருவமும் எடுக்கவல்ல ஒரு புத்திரனை வரமாகக் கேட்டான். அக்னியும், "எந்தப் பெண்ணிடம் உனக்கு ஆசை உண்டாகிறதோ அவளே நீ கேட்ட புத்திரனைத் தருவாள்" என்றார். இரம்பனும் ஒரு பெண் எருமையிடம் ஆசை கொண்டு அதனுடன் சுகித்தான். மகிஷியின் உதரத்திலிருந்து மகிஷன் என்ற சிசு வெளி வந்தது. இம்மகிஷனை அசுரர்கள் தங்களுக்குத் தலைவனாக்கினர்.

பெண்ணைத் தவிர வேறெவராலும் மரணமில்லை என்ற வரத்தைப் பெற்ற மகிஷன், அமரரை வென்று யாகபலனை உண்ண, தேவலோகத்தைத் தாக்க ஆயத்தமானான். "மகிஷன், வரம் பெற்ற மகாபலிஷ்டன் தெய்வ அருளால் தான் அவனை வெல்லக்கூடும்" என்றனர் அஷ்டதிக்குப் பாலகர்கள் இந்திரனிடம். தேவகுருவும், "பலன் கருதாமல் முயற்சி செய்து திருமூர்த்திகளின் உதவியைச் பெறுங்கள்" என்றார்.

தேவர்களுக்கு மும்மூர்த்திகளும் துணையிருக்க தேவாசுர யுத்தம் கடுமையாக நடைபெற்றது. மகிஷன் சம்பா மாயையைக் கைக்கொண்டு தன்னைப்போல் மிகப் பராக்கிரமசாலிகளான கோடி மகிஷாசுரர்களைப் படைத்து தேவர்கள் மீது ஏவினான். யமன், வருணன் முதலிய தேவர்கள் அஞ்சிப் பின்வாங்கினர். விஷ்ணு தன் சுதர்சனச் சக்கரத்தினால் ஒரு நிமிடத்தில் அந்த மாயையை அகற்றினார். சூலபாணியும், சக்ர பாணியும் தன்னை எதிர்ப்பதைக் கண்டு கடுங்கோபங்கொண்ட மகிஷன் அதிபயங்கரமாகப் போரிட்டான். அவன் புருஷர்களால் இறக்கமாட்டான் என்பதை அறிந்திருந்த மும்மூர்த்திகளும் மறைந்தனர். மகிஷன் இந்திரப் பதவியைப் பறித்து யாகபாகம் தேவர்க்கில்லாதபடி தானே அதைப் புசித்தான். அவனது அட்டகாசத்தைத் தாங்கமுடியாத அமரர்கள் பிரமனிடம் சென்று, "பெண்ணால் மகிஷனுக்கு மரணம் என்ற வரமளித்தீரே! அவனை வெல்லத் தக்க பெண் யார்?" என்று கேட்டனர்.

பின்னர் தேவர்கள் அனைவரும் பிரும்மதேவனின் யோசனைப்படி மகாவிஷ்ணுவிடம் தம்மைக் காக்கும்படிப் பிரார்த்தித்தனர். அவரும் "எல்லா தேவர்களுடைய தேஜஸினால் தோன்றும் ஒரு பெண்ணே மகிஷனைக் கொல்ல வல்லவள்" என, ஒவ்வொரு தேவரிடமிருந்தும் திவ்யஒளி கிளம்பி ஒன்றாகி மகாப்பிரகாசமாக ஜொலித்தது. அத்திவ்ய தேஜஸிலிருந்து அதிரூபசுந்தரியாய் பதினெட்டு கரங்களுடன் மகாலக்ஷ்மி என்ற திருநாமமுடன் ஒரு தேவப் பெண் தோன்றினாள். அவள் திருமேனியழகை யாராலும் வருணிக்க முடியாது. தேவி தோன்றினாள் என்றுதான் சொல்ல முடியும்.

சிவதேஜசு முகமாகவும்,விஷ்ணு தேஜசு பதினெண் கரங்களாகவும், இந்திர தேஜசு இடுப்பாகவும், இரு சந்திகளும் இரு புருவங்களாகவும், அக்கினி தேஜசு முக்கண்களாகவும், இப்படி தேவியின் அழகிய திருமேனி எல்லா தேவர்களின் தேஜசுடன் பிரகாசித்தது. விஷ்ணுவின் சொற்படி அசுரர்கள் தேவிக்குத் திவ்விய ஆயுதங்களையும், ஆபரணங்களையும் தந்து ஆராதித்தனர். அழகிய ஆபரணங்களைப் பூட்டிக்கொண்ட இமவான் தந்த சிம்மத்தின் மீதேறினாள்.

விஷ்ணு சக்கரத்தையும், சிவன் சூலத்தையும், வருணன் சங்கையும், பாசத்தையும், மருத்து வில்லையும், இந்திரன் வஜ்ரத்தையும், யமன் காலதண்டத்தையும், காலன் கத்தி கேடயத்தையும் விசுவகர்மா பரசுவையும், குபேரன் கதையையும் தந்தனர். தேவர்கள் தேவியைப் போற்றித் துதித்தனர்.

தேவியும் மகிஷனைக் கொல்வதாகச் சொல்லி மிகப் பயங்கரமாக அட்டகாசம் செய்தாள். பூமி அதிரும் அச்சப்தம் கேட்ட மகிஷன்



அதிசயிக்க, அசுரர், "பிரகாசமுடைய அதிரூபசுந்தரியே பதினெட்டு கரங்களில் பதினெட்டு ஆயுதங்களேந்தி சிம்மத்தின் மீதமர்ந்த வண்ணம் உம்மோடு போருக்கு வரக் கர்ஜிக்கிறாள். வானில் தேவர்கள் அவளைத் துதிக்கின்றனர்" என்றனர்.

மகிஷன் அப்பேர்ப்பட்ட தேவசுந்தரியையே மணக்க விரும்பி மந்திரிப் பிரதானிகளைத் தூதாக அனுப்பினான். தேவியும் ஸர்வ சக்தனும், ஸர்வசாட்சியும், ஸர்வக் ஞனுமான பரமனே தனக்குப் பதி என்றும், மகிஷனின் தகாத ஆசையால் அவனுக்குக் கேடே விளையும் என்றும் கூறினாள்.

மகிஷன் வெகுண்டு தாம்ரனை தேவியைப் பிடித்து வருமாறு ஏவினான். தேவி மூன்று லோகங்களும் நடுங்கும்படி, கர்ஜிக்க, பிரளயகால இடி போன்ற பேரொலி கேட்டு தாம்ரனும் அவன் சேனையும் நடுங்கி மூர்ச்சையாகி விழுந்தனர்.

பலகோடி அசுரப் படையுடன் தேவி தனியொருத்தியாகவே யுத்தம் புரிந்ததில் பாஷ்கலன், துர்முகன், சிஷுரன், தாம்ரன், பிடாலன் முதலிய கொடிய அசுரர்கள் சேனையடன் கொல்லப்பட்டனர். அசுரப்படை சின்னாபின்னமாகி அல்லோலகல்லோலப் பட்டதைக் கண்டு அமரர்கள் மகிழ்ந்தனர்.

தன்னைக்கண்டு தேவி மயங்க, அழகிய மனித உருவமுடன் மகிஷன், "இதுவரை நான் யாரையும் எதையும் யாசித்ததில்லை. பிரம்மாதி தேவர்களையும் ஜயித்த நான் உன் அழகிற்கு அடிமை. என்னை ஏற்றுக்கொள்" என்றான் தேவியைப் பார்த்து. தேவி, "பரமபுருஷனே என் பதி. அவன் சேர்க்கையால் சகல காரியங்களையும் செய்கிறேன். நானுன்னைக் கொல்வது நிச்சயம்" என்றாள். துர் ஆசை வீணாகி வெகுண்டெழுந்தான் மகிஷன்.

மகிஷனுக்குத் துணைவந்த துர்த்தரன், திரிநயனன் அந்தகாசுரர்களை ஒவ்வொருவராகத் தேவி ஸம்ஹரித்தாள். மகிஷனும் மாயையால் பலவுருவமெடுத்து தேவியை எதிர்த்தான். வானிலிருந்து மந்திர சக்திகள் அனைத்தும் தேவியைப் பின்தொடர்ந்தன. மாயை நன்கறிந்தவள் சிம்மத்தை ஏவி மகிஷனைக் கீழே தள்ளி சூலத்தால் அவனைக் குத்தி மூர்ச்சையாக்கி, சக்கரத்தால் அவன் சிரம் அறுத்தாள். தேவியொருத்தியே பலகோடி அசுரப்படைகளுடன் தனித்துப் போராடும் திருக்காட்சியை அமரர்கள் அனைவரும் பேரானந்தத்துடன் கண்டுகளிக்க, நாமும் இத் திவ்விய காட்சியைக் கண்டு ஆனந்திப்போம்.


அயிகிரி நந்தினி நந்திதமேதினி
விச்வ விநோதினி நந்திநுதே
கிரிவர விந்திய சிரோதினி வாஸினி
விஷ்ணுவிலாஸினி ஜிஷ்ணுநுதே
பகவதிஹே சிதிகண்ட குடும்பினி
பூரிகுடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மகிஷாசுர மர்த்தனி ரம்யக
பர்தினி சைலஸுதே".

— திருமதி பிரேமா சரோஜனம்

பஞ்சபூத லிங்கேசுவரன்

வான், வாயு, தீ, நீர், பூமி என்பவை பஞ்ச பூதங்கள். இவற்றாலானவையே நம் தூல தேகங்கள். கண்ணுக்குப் புலப்படாத சூக்கும சரீரத்தை லிங்க சரீரம் என்பர்.

சிதம்பரத்தில் ஆகாயலிங்கமாகவும், காளஹத்தியில் வாயு லிங்கமாகவும், திருவண்ணாமலையில் தேயுலிங்கமாகவும், திருவானைக்காவில் அப்புலிங்கமாகவும், காஞ்சிபுரத்தில் பிருதிவிலிங்கமாகவும் இருக்கும் பஞ்ச பூதங்களுக்கும் ஆதாரமாயுள்ள லிங்கேசுவரனை வழிபடுகிறோம்.



ஏகமாய், அகண்டமாய், உற்பத்தி நாசமற்றதாய், காணப்படாததாய், நாமரூபமற்றதாய், தன்னையொன்றும் வியாபித்தில்லாததாயுமிருப்பது சுத்த பிரம்மம். அதை ஓவியத்தில் பஞ்சபூத, பஞ்சகோச லிங்கேசுவரனாகக் காட்டப்பட்டுள்ளது. இதுவே சிற்பத்தில் தேவாலயங்களில் லிங்க உருவமாகப் பிரதிஷ்டை செய்யப்படுகிறது.

ஸர்வேசுவரன் தன்னை விளக்கும் 'தத்துவமஸி' எனும் வேத மகாவாக்கியத்தை சனகாதி முனிவர்களுக்குச் சின்முத்திரை மூலம் விளக்குவதையே இவ் வண்ணப்படம் காட்டுகிறது.

'தத்துவமஸி' மகாவாக்கியார்த்த விசாரத்தினால் ஆராய்ந்து அறியத்தக்க சுத்தப் பிரம்மத்திலே அவ்யக்தம் அடக்கம். வெளியில் வெளிப்படாததை அவ்யக்தம் என்பர்.

கண்ணாடிக் கோப்பை முழுவதிலும் கண்ணாடியாகும் பிரம்மம் வியாபித்துள்ளது. கண்ணாடியில் கோப்பை வியாபிப்பதில்லை. கோப்பை மாயையான அவ்யக்தம் கண்ணாடியில்,

சிந்தித்து அறிய முடியாததாயும், யுக்தியுள் அடங்காததாயும், உண்மையில் இல்லாததாயுமுள்ள மாயை, சிருஷ்டிக்கு முன் வெளிப்படாததால் அவ்யக்த மாயை என்பர்.

அடங்கியிருந்த அவ்யக்தம் ஜீவர்களின் கருமத்தை முன்னிட்டு வெளிப்பட்டு அக்னியில் சூடு வேறாகாததுபோல் அவ்யக்தத்தின் காரியமாய் அவ்யாகிருத மாயதில் அடக்கம். பிரிக்கப்படாததை அவ்வியாகிருதமென்பர்.

மாயை சுத்தப்பிரம்மத்திலிருந்து வெளிப்படாத நிலை அவ்யக்தம். அது வெளிப்படும்போது அவ்வியாகிருதம். அவ்வியாகிருத மாயை ஈசனது சூக்கும தூல சரீரத்திற்கும் காரணமாயிருப்பதால் இதை ஈசுவரகாரண சரீரமென்பர். சூக்கும பூதமைந்தும் அவற்றின் காரிய மாயுள்ள சூக்கும சரீரங்களும் ஈசனது சூக்கும சரீரமான இரணிய கருப்பமாகும். அவ்வியாகிருத மாயையில் இது அடக்கம். தூல பஞ்சபூதங்களும், அவற்றின் காரியமாயுள்ள தூல சரீரங்களும் ஈசனது தூல சரீரமாகும் விராட்டாம். இது இரணிய கருப்பத்தில் அடக்கம்.

இவ்விராட்டில் வானடங்கும். இவ்வானில் வளியடக்கம். வாயுவில் வன்னியடக்கம். இத் தேயுவில் அப்பு அடக்கம். நீரில் நிலமடக்கம். இம்மண்ணில் தூல உடலடக்கம். தூல தேகத்தில் மனம், புத்திசித்த மகங்காரங்களான சூக்கும தேகமடங்கும். இதில் அவித்தையான காரண சரீரம் அடக்கம்.

அவித்தையில் சேதனத்தின் பிரதிபிம்பமான சீவனடக்கம். இந்த பிரதிபிம்ப சீவ சேதனத்தில் பிம்பசேதனமாகிய சுத்தபிரம்மம் தோன்றாது அடங்கியிருத்தலின் இதிலடங்கும் பொருளைப் பரம் பொருளாகவும், அணுவிற்கணு வாகவும் புகன்றிடும் வேதங்கள். இப்பரம்பொருளே பஞ்ச பூதலிங் கேசுவரனாகும்.

இச்சித்திரத்தில் பிரணவத்தில் கறுப்புவட்டம் வானையும், பச்சை வாயுவையும், சிகப்பு தேயுவையும், வெண்மை அப்புவையும், மஞ்சள் பூமியையும் விளக்கும். மற்றும் 'ஓம் நமசிவய' எனும் பஞ்ச அட்சரங் களும் ஆங்காங்கு பளிச்சென்று பல வண்ணங்களில் பிரகாசிக் கின்றன.

சிவபிரானுக்கு நீரில் நனைந் தால் பிடிக்கும். தூய்மையின் சின்னமே கங்கையாதலின், தேக, மனோ, சித்த, திரிகரண, ஆத்ம சுத்திகளுக்கும் எடுத்துக்காட் டாதலின், சிவலிங்கத்திலிருந்து கங்கை பெருக்கெடுத்து எங்கும் புனிதமாக்குதல் காட்டப்படுகிறது. பூரணத்தின் தன்மையே தூய்மை யன்றோ! 'வம்' என்ற சொல் அப்புவின் தத்துவத்தை விளக்கும் மந்திரமாகவும், கங்கையின் புனிதத் தன்மையையும் குறிக்கும். இதனை இரு அன்னப்பறவை களாகக் காட்டப்பட்டுள்ளது.

பஞ்சகோச தாதாத்மியம்.

லிங்க பீடம் பஞ்சகோச தாதாத் மியங்களாகக் காட்டப்பட்டுள்ளது. கோசம் என்றால் உறை. கத்தி யினுறை கத்தியை மறைத்திருத்தல் போல் ஐந்து கோசங்களும் ஆத்மாவை மறைத்திருத்தலின் இவற்றை பஞ்சகோசங்கள் என்பார்கள்.

அன்னத்தினின்று உண்டாகும் தாயின் இரத்தத்தினாலும், தந்தை யின் வீரியத்தினாலும், தாயின் உதரத்தில் தோன்றி, ஜனனத்திற் குப்பின் பால் முதலிய அன்னங் களால் வளர்க்கப்பட்டு, மரணத் திற்குப் பின் அன்னரூபமான பிருதி வியில் லயமடைகிற தூலதேகமே அன்னமய கோசமாகும்.

தேகத்தில் பிராணாதி வாயுக்கள் பூரித்துப் பலத்தைக் கொடுத்துப் புலன்களை அவற்றின் காரியத்தில் ஈடுபடச் செய்வதால் சூக்கும தேகத்தில் பிராண வாயுவும் கர்மேந்திரியமும் கூடிப் பிராணமய கோசமாகிறது.

இச்சை முதலிய விருத்தி களுடன் மனமும், ஞானேந்தி ரியமும் கூடி மனோமய கோச மாகிறது.

காரணதேகரூபமான அவித்தை யும், விழிப்பு நிலையில் வனிதாதி விஷயங்களைக் காண்பதால் பிரிய மும், அவற்றையடைவதால் மோத மும், அவற்றை அனுபவிப்பதால் பிரமோதமுமாக மூன்றுவித சுகவிருத்திகளுடன் கூடியது ஆனந்தமயகோசம். ஆத்மா ஆனந்த சொரூபமானது. இதன் பிரதிபிம்பத்துடன் கூடியும் மூவகைசுக விருத்திகளின் லயஸ் தானமாயிருக்கும் அவித்தையாகிற காரண தேகமே ஆனந்த மயகோச மாம்.

தானல்லாத பொருளைத் தான் என்று அபிமானித்திருக்கும் ஒருமைப்பாட்டைத் தாதாத்மியம் என்பர். 'நான் பருத்தவன், நான் உயரமானவன்' என்பதெல்லாம் அன்னமயகோச தாதாத்மியம். 'நான் பசித்தவன், நான் தாக மாயிருக்கிறேன்' என்பதெல்லாம் பிராணமயம். 'நான் சங்கற்பிப் பவன், நான் விரும்புபவன்' போன் றவை மனோமயம். 'நான் கர்த்தா, நான் போக்தா போன்றவை விஞ்ஞானமயகோச தாதாத்மிய மென்பது. 'நான் அறியாதவன்' என்பது ஆனந்த மயகோச தாதாத்மியமாகும்.

பஞ்ச கோசங்களும் நானல்ல, அவை என்னிடத்தில் கயிற்றில் அரவுபோலக் கற்பிதமாயுள்ள மாயையின் காரியங்களாம். இதனை சற்குரு வாயிலாக வேதாந்த விசாரத்தினாலுண் டாகும் தத்துவ ஞானத்தாலுணர்ந்து சின்மாத்திர சிவசொரூபமாக விளங்குகிற அதிகார புருஷனே சுத்தானுபவமுடையவன்.

பஞ்ச கோசங்களின் அனுபவ ரூபமாகிய சைதன்னியமெதுவோ, அது பஞ்சகோசங்களுக்கும் வேறாகிய ஆத்மாவேயாம்.

இச்சித்திரம் மிக எளிதாகக் காணப்படினும் இதனின் வேத உட்பொருளோசொல்லிலடங்காது. மிகப் பெரிதும், பெருமையும் வாய்ந்தது. இருப்பினும் இதனை இரத்தினச் சுருக்கமாக வேத இரத் தினங்களை ஈசுவரார்ப்பண மாகவும், அவன் பிரீதிக்காகவும், யாவரது மேன்மைக்காகவும் அமு தம் சுரக்கும் மலரில் இராமச் சந்திரன் ஸமர்ப்பிக்கின்றேன்.

'ஹிம்' காரம், பிரஸ்தாவம், உத் கீதம், பிரதிஹாரம், நிதனம் எனும் ஐந்து வித ஸாமபக்திகளுக்குச் சாரமாகவும், ஸாமகீதப்ரியனாகவு முள்ள பரமேசுவரனைப் போற்றிப் பிரார்த்திப்போமாக!

❋

பூவராகப் பெருமான்

கோல மலர்ப் பாவைக்கு அன்பாகிய
வென்னன்பேயோ
நீலவரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்த
தொப்ப,
கோல வராகமொன்றாய் நீலம்
கோட்டிடைக்கொண்டவெந்தாய்,
நீலக் கடல் கடைந்தாய், உன்னைப்
பெற்றினிப் போக்குவேனோ?

– நம்மாழ்வார் திருவாய்மொழி – 10 – 7.

கோல மலர்ப்பாவை பூமி தேவிக்கு அன்புப் பரிசாக அவ ளன்பன், அண்டவானரங்கன் பூவ ராக ரூபமெடுத்து பூமியைத் தந் தருளும் கோலமே இவ்வண்ணச் சித்திரம்.

கோல வராகஸ்வாமியின் இரு தந்தங்களும் நீண்டு, வளைந்து



இரு பிறைச் சந்திரனைப் போல் அழகாக உள்ளன. கொம்பனார்க் கெல்லாம் கொழுத்தாயிவன் இப் பிறைக் கொம்புகளால், சூரியனிட மிருந்து துண்டாக்கப்பட்டுக் கீழே வீழ்ந்தமுங்கிய பூமியைக் கவ்வியே மூரி நிமிர்ந்து, முழுங்கிப் புறப் படுகிறான். மண் காத்த பேரன் பன், விண்கடந்த சோதி பூதேவி யைத் தன் வலப் புயத்திலமர்த்தி இருபிறை தந்தங்களிலமர்ந்த பூமி யைப் பரிசாகத் தருகிறான்.

வராரோகையும் அன்புப் பரிசான பூமியை ஏற்று, அதனை எடுத்து ஸ்ரீஹரியின் ஒரு தந் தத்தின் மீது அமர்த்திச் சுற்றி விடு கிறாள். இரத்தினத்தின் பல வண்ண ஒளிக் கதிர்களைக் கண்டு ரசிப்பதுபோல் சுதர்சன சக்க ரத்தின் ஒளியில் பூமியின் சுழற்சி யில் பல அற்புத வண்ணங்களைக் கண்டுகளிக்கிறாள். பிறைத் தந் தமே அச்சாகவும் தந்தத்தின் மீது அமர்ந்த பூமிக்கு இருபத்து மூன் றரை டிகிரி சாய்வில் சுழலும் முதல் சுழற்சியாயமைகிறது. பூமிக்கு உயிரோட்டம் மட்டுமின்றி உயிருட்டமும் ஏற்படுகின்றன. இதனைத் தன் நாதன் கண்டு மகிழ அவனது திருமோவாயைத் தன் திருக்கரத்திலேந்தி நிமிர்த்து கிறாள்.

பூமியின் முதற்சுழற்சி வேகத் தில் ஒரு துண்டு சிதறிச் சந்திர னாகப் பூமியையும், சூரியனையும், பூதேவி, பூவராக மூர்த்தியையும் பிரதக்ஷிணமாகச் சுற்றவாரம் பிக்கிறது. சங்கின் ஒளி பட்டுக் குளுமையடைகிறது. கதிரவனின் ஒளியால் பூமியில் வாழ்வு மலர வாரம்பிக்கிறது.

கோடி சூரியப் பிரகாசமான சுதர்சனச் சக்கரத்தின் ஒரு துளி ஒளிக்கற்றையே சூரிய ஒளி யாகிறது. வெளிச்சமிருந்தால் பொருள் விளங்குகிறது. நன்கு விளங்கச் செய்வதை சுதர்சனம் என்பர். எல்லா ஒளிகளுக்கும் பேரொளியாயும், பேரன்புச் சோதி யாயும், சுழற்சியாம் இயக்கங்களுக் கெல்லாம் இயக்கத் தன்மை யாயிருப்பதே சுதர்சனச் சக்கரம். இத்தகைய சுடராழியை பூமி தேவிக்கு அலங்கார மகுடமாக அவளது சிரசுக்குப் பின் கையி லேந்திய வண்ணம் அவளது திருமுக அழகினை ரசிக்கின்றான் பூவராகப் பெருமான்.

வீழ்ச்சி, இருட்டு, தமசு எல்லாம் அசுரத்தன்மையைக் குறிப்பன. அதலபாதாள கீழுலகங்கள் அசுர வாச ஸ்தலங்களாகும். அவை அஞ்ஞான இருளில் அமிழ்ந் துள்ளவை.

சூரியனிடமிருந்து விழும் ஒளி மயமான ஒரு நெருப்புத்துண்டு கீழே இருளில் தன்னொளியிழந்து அமிழ்ந்து மறைந்து போகிறது. அத்தருணம் சர்வக்ஞனான பெரு மான் அதனை மீட்டு மேலுக்குக் கொண்டு வருகிறான். பரம தயாளனின் இச்செயலால், வானோர் போற்றும் படியான சிறப்பையடைகிறது பூமி.

இருள், வீழ்ச்சி, அழிவு இவற் றிலிருந்து மீட்டு, ஒளிக்கும், உயர் வாழ்விற்குமாக மாற்றி உயர்த்திய தால், பூவராகஸ்வாமி பூமியைக் களவாடிய இரணியாட்சசனைக் கொன்று பூமியைக் காத்ததாகப் புராணம் அழகாக வர்ணிக்கிறது.

ஒளியற்ற தன் பாதாள லோகங் களுக்கு அசுரன் ஒளிமயமாகத் தெரிந்த இப்பூமியைக் கவர்ந்து செல்ல, பூமிக்குச் சுயஒளியில்லாத தால் ஒளியிழந்து அழியும் நிலை யில் இருந்தது. வராகமூர்த்தியின் அழகிய தந்தங்களின் தொடர் பாலுயர்ந்து ஒளிபெற்றது பூமி.

பிரணவாகாரமாயும், ஞான ஒளியாயும் பேரழகுடன் ஆனந்த மயமாயிருக்குமிடத்தினை, திரு மகளின் திருவருள் பூரணமாயுள்ள தேவலோகமென்பர்.

சித்திரத்தில் தெய்வீகத் தன்மையைக் காட்ட 'ஸ்ரீ' எனும் அக்ஷரம் வடமொழி, தென்மொழி களில் சித்திரிக்கப்படுகிறது. இச்சா, கிரியா, ஞான சக்தி களடங்கிய பூசக்தி மந்திரமான 'ஹ்ரீ' பெருமானின் இருபுறங் களிலும் காட்டப்பட்டுள்ளன. அவ னது திருக்கரங்களும் பிரணவ மயமாயுள்ளன.

எல்லாரும் இன்புற்று வாழ வழிசெய்யும் நற்காரியங்களுக்கே பூமி பயன்பட வேண்டுமென்பதற் காகப் புகழோங்கி நிற்கும் ஏழு மலையானுக்குத் தன்னிடமான பூமியைத் தந்தருளினன் பூவராகப் பெருமான். ஒரு வைத்தியனுக்கு வீடு கொடுத்தால் பல நோயாளி கள் பயனடைவதுபோல் வராகப் பெருமான் ஸ்ரீநிவாஸப் பெரு மாளுக்குப் பூமி தந்ததால், துக்கத் தால் வாடித் தன்னையண்டி வருவோர்க்கெல்லாம் கோவிந்தன் எல்லாவிதக் குறைகளையும் தீர்ப் பதால் பூமிதந்த பூவராகனின் பெருமையை உணரலாம். இத னால் நமக்கென மனைகளிருப் பினும் நாம் அவற்றை ஆண்ட வனின் திருத்தலமாகவே எண்ணி அவற்றில் மற்றோருடன் பகிர்ந் திருந்து சுகம்பெறத் தொண்டு செய்ய வேண்டும். இக்கருத்தால் ஆச்சார்ய விநோபா பாவே அவர் களால் ஏழை மக்களுக்கு பூமி தானம் என்ற வேள்வி ஆரம்பிக் கப்பட்டது.

ஒரு விளக்கின் ஒளியில் கோயிலின் பிராகாரம் சரிவரத் தெரியாமலிருக்கலாம். குருக்கள் அவ்விளக்கிலிருந்து மற்றொரு அகல்விளக்கை ஏற்றி அதை எடுத்துக் கொண்டு பிராகாரத்தில் நுழைகிறார். இரு விளக்கொளி களின் தன்மைகளும் ஒன்றே. ஒரு ஒளியிலிருந்து பல ஒளிகளாக லாம். இரு ஒளிகள் கூடி ஒரொளி யுமாகலாம். அதுபோல் வராகனும் விஷ்ணுவே. ஏழுமலையானும் விஷ்ணுவே. ஒரே விஷ்ணு ஒரே சமயம் பல விஷ்ணுவாகவும் தோன்றலாம். உலகப் விவகாரங் களில் தம் பிரச்னைகளைத் தீர்க்க வராகனின் திருஒளியிலிருந்து பெற்ற அதே ஸ்ரீநிவாஸனின் திருவொளி நமக்குத் திருவரு ளாகச் சோபிக்கிறதென்பதாம்.

ஒரு காரியாலயத்தின் மேலாளர் ஒருவர்தான் என்றாலும், அவர் ஒய்வு பெறும்போது காரியாலயத் தின் அன்றாட நடவடிக்கைகள் தடைபடாமலிருக்க அவர் இடத்தில் வேறொருவரை மேலாளராக நிய மித்துப் பொறுப்புகளை அவரிடம் ஒப்படைக்கும்போது, அங்கு இரு மேலதிகாரிகள் இருக்கிறார்களே, ஒருவர்தானே இருக்க வேண்டும் என்று கேட்பதில் அர்த்தமில்லை. அதுபோன்றே வராகப்பெருமான் திருமாலாயிருப்பினும் அவனவ தாரக் காரியம் முடிந்தபின் தர்ம ஸம்ரக்ஷணத்திற்காக இக்கலியில் அவரம்சமேயான ஸ்ரீநிவாஸப் பெருமாளிடம் அநுக்கிரக பாத்தி யதையைத் தந்திருக்கிறார்.

மற்றும் ஓர் உதாரணமாக ஒருவனின் பிந்துவே வளர்ந்து தன் புத்திரனாகும் போது இருவராகின் றனர். வயதான காலத்தில்

தகப்பன் தன் பொறுப்புகளைத் தன் மகனிடம் ஒப்படைப்பதுபோல் பரசுராமன் தன் அம்சமான ஸ்ரீராமனிடம் லோகபரிபாலனப் பொறுப்பை ஒப்படைத்ததும், வராகன் கோவிந்தனுக்குப் பொறுப்பை ஒப்படைப்பதுமாகும். இவ்விருவரின் சுடரடிகளும் சேர்ந்து நமக்குத் துயரறு சுடரடிகளாகி நம்மை வாழவைக்கின்றன.

அசுரனின் கெதை மீது வராகமூர்த்தியின் கெதையிருப்பது அசுரனை வெற்றி கொண்டதாகும். எங்கும் அசுரத்தனத்துடன் ஒரு போராட்டம் நடந்துகொண்டேதான் இருக்கிறது. அரக்கத் தன்மை அழியும்போதுதான் தெய்வத் தன்மை வெளிப்படுகிறது. ஒருவன் தீய எண்ணங்கள், தகாத ஆசைகள், கடும் சொற்கள், துஷ்டர் சங்கம், தீய செயல்கள் போன்றவற்றின் தொடர்பால் அரக்கத் தனமாக நடந்து கொள்கிறான். அவையழிந்து உயரிய கருத்துகளுடன் பிறருக்குப் பயன்படும் நற்செய்கைகளால் உயர்நிலையான தெய்வத் தன்மையை அடைகிறான்.

திருத்தலங்களில் திரு இடவெந்தை வண்டலூரிலிருந்து 13 மைல் தொலைவிலுள்ள திருத்தலம். மூலவர் வராகமூர்த்தியாய் மார்க்கண்டேயருக்குப் பிரத்யட்சம். கோமளவல்லித்தாயாருடன் நித்திய கல்யாணராயுமிருப்பவர். காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலுள் அஞ்சிலை நாச்சியாருடன் ஆதி வராகப் பெருமாள் அசுவத்த நாராயணருக்குப் பிரத்தியட்சமாயிருப்பவர். திருக்கள்வனூர் என்றும் கூறுவர். விசாகப்பட்டினமருகே சிம்மாசலத்தில் வராக சுவாமியைத் தரிசிக்கலாம். ஆனால் சந்தனக்காப்பால் லிங்கம் போல் மூடப்பட்டிருக்கும்.

வராகமூர்த்தியின் இரு கோரப் பற்களால் அமுங்கிய பூமியைக் கவ்வித் தூக்கிய இடங்கள் துங்க, பத்ர எனும் நதிகள் தோன்றிய திருத்தலங்களாயின.

ஸ்ரீமுஷ்ணம் எனும் திவ்வியத் தலம் பிரசித்தமாயுள்ளது. இங்கு வராகப் பெருமாள் ஒரு சாண் உயரமாகத்தான் தரிசனமளிக்கிறார். ஒரு சமயம் இத்திவ்ய சிலைக்கடியில் ஏராளமான நவரத்தினங்களிருப்பதாக அறிந்து தோண்டினராம். தோண்டிக் கொண்டே 18 அடி அளவு கீழே போயும் விக்கிரகக்கல் கீழே மிகப் பெரியதாகவே இருக்கிறது. வாமனனாக வந்து திரிவிக்கிரமனாக வானளாவ வளர்ந்தது போல் இச்சிறு வராகவடிவமும் மேலே சிறியதாகத் தோன்றினும் பூமிக்கடியில் வளர்ந்துகொண்டே மிகப் பெரியதாக அமையும் அதிசயம்தான் என்னவோ?

பன்றியாயன்று பாரகங் கீண்ட
பாழியா னாழியா னருளே
நன்று நான் உய்ய நான்
கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்.


– திருமங்கையாழ்வார்,
பெரியதிருமொழி I

சௌலப்ய பரிபூர்ணனான பாற்கடல் வண்ணன் மானமிலாப் பன்றியுருக் கொண்டு பூமியைத் தாங்கிய சிறப்பில் அவனுக்கு உவமானமுமில்லை என்றாகிறது. அவனுக்கு ஈடு அவனே. ஓங்கி உலகம் தாங்கிய உத்தமன் பூவராகவன் பேர் பாடுவோமாக!

❄

'மாருதி ராயா பலபீமா'

அர்ச்சுனன் கௌரவப் படையின் பீஷ்ம துரோணர்களை எதிர்த்து வெற்றிகொள்ள



இந்திரனிடமிருந்து அரிதான அஸ்திரங்களைப் பெற இமய மலைக்குச் சென்றவன் திரும்பாததால், திரௌபதியும், மற்றவர்களும் வருத்தமுற்றனர்.

அங்கு நாராயணவனத்தில் ஒருநாள் ஒரு சிறுமலர் காற்றில் பறந்து வந்து திரௌபதியின் முன் விழ, அம்மலரின் அழகிலும், நறுமணத்திலும் மனமகிழ்ந்த அவள் அதனைக் கையிலெடுத்து பீமனுக்குக் காட்டி அதுபோன்ற மலர்களை எடுத்துவரும்படிக் கேட்டாள். பார்த்தனின் பிரிவால் வாட்டமடைந்த திரௌபதிக்கு இச்சிறு மலர்களாலாவது ஆறுதல் கிடைக்குமென்றெண்ணி மலர் வாசனை வந்த திக்கை நோக்கிப் பீமன் விரைந்தான்.

தீப்பிழம்பு போல் பிரகாசிக்கும் வானரம் ஒன்று மலையடிவார வாழைத் தோட்டத்தினருகில் தன் பாதைக்குக் குறுக்கே வாலை நீட்டிப் படுத்திருப்பதைக் கண்டான் பீமன். பீமன் பெருங் குரலெடுத்து அவ்விடத்திலிருந்து அந்த வானரத்தை விரட்ட முயன்றான்.

வானரம் சோம்பலுடன், "வயதான எனக்கு அசதி யாயிருப்பதால் இங்கு படுத்திருக்கிறேன். என்னை ஏன் எழுப்பித் தொந்தரவு செய்கிறாய்? நீயோ அறிவுடைய மானிடன். நானோ ஒரு சாதாரணக் குரங்கு. நல்லோர் எளியோரிடம் கருணை காட்டுவது தானே முறை! நீயோ நல்லது கெட்டது அறியாதவனாகத் தெரிகிறாய். யார் நீ? இது தேவதைகளின் வாசஸ்தலத்தின் ஆரம்பம். மனிதர்கள் இந்த எல்லையைத் தாண்டுவது ஆபத்தானதால் இங்குள்ள பழங்களைப் புசித்து வந்த வழியே திரும்புவாயாக" என்றது.

பீமன் தன்னை இழிவுபடுத்தியதாகக் கருதி வெகுண்டு கத்தினான். "குரங்கே! இப்படிப் பேசும் நீ யார்? நான் க்ஷத்திரிய வீரன். வாயு புத்திரன். இப்போது விலகி வழிவிடு. இல்லையேல் நீ மிகவும் துன்பப்படுவாய்!"

வானரமும் புன்னகைத்தபடி, "நீ சொல்வதுபோல் நான் குரங்குதான். என்னைப் பலவந்தப்படுத்தாதே. போய்த்தானாகவேண்டும் என்றால் என்னைத் தாண்டிச் செல்லலாம்" என்றது. பீமன், "ஆக

மங்கள் மறுப்பதால் யோசிக்கிறேன். இல்லாவிடில் உன்னையும், இம்மலையையும் அனுமன் கடலைத் தாண்டியதுபோல் ஒரே எட்டில் தாண்டிவிடமாட்டேனா?" என்றான்.

வானரம் ஆச்சரியமுடன், "யார் அந்த அனுமன் கடலையே தாண்டியது?" என, பீமன் "நீ வாயு புத்திரன், வானரவீர அனுமனைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லையா? என் சகோதரன் அவன். நூறு யோசனை தூரம் கடலைத் தாண்டி ஸ்ரீராமனுக்காக சீதாபிராட்டியைக் கண்டுபிடித்தான். இப்போது இது போதும். எழுந்து வழிவிடு. என் கோபத்தைத் தூண்டாதே" என்றான். வானரனோ அசையாமல், "ஓ மாவீரனே! நீ பலசாலியானதால் பலவீனமான குரங்கிடம் இரக்கப்பட்டுப் பாதையின் குறுக்கே நீட்டிக் கொண்டுள்ள என் வாலை மட்டும் நகர்த்தி விட்டு உன்வழி செல்லலாம்" என்றது.

தன்பலத்தில் கர்வம்கொண்ட பீமனும் அதன் வாலைப் பிடித்து இழுத்துப்போட நினைத்து அதன் வாலில் கையை வைத்து அதிர்ந்தான். அது கல்லைப்போல் இருந்தது. அதை அசைக்கவும் முடியவில்லை. பல்லைக் கடித்துத் தன் ஒவ்வொரு தசையும் இறுகத் தன் முழு பலத்தை உபயோகித்தும் அவ்வாலைத் துளியும் அசைக்க இயலவில்லை. பீமனின் உடல் வியர்த்தது. அவன் கல்லில் காலை ஊன்றி மறுபடியும் வாலை இழுக்க, பாறாங்கல் பொடியானதே தவிர, வாலோ அசைந்தபாடில்லை. அவனுக்கு மூச்சு வாங்கியது. மூச்சுக் காற்றால் மரங்கள் அசைந்தன. சருகுகள் பறந்தன. பட்சிகள் பறந்தன. பீமன் வாலை அசைக்க முடியாமல் தலைகுனிந்தான்.

பின்னர் பீமன் விநயமாக வானரத்தை நோக்கி வினவினான். "தாங்கள் தேவரா? அல்லது சித்தரா? தங்களது உண்மை சொரூபத்தைக் காண விரும்புகிறேன்" என்றான்.

தன்னைவிடப் பலசாலியைக் காணும்போது ஒரு மரியாதை ஏற்படுகிறது. குருவினிடம் பேசும் பணிவு பீமனிடம் தென்பட்டது. வானரமும், "நீ முதலில் சொன்ன அதே அனுமன், உன் சகோதரனே நான். இப்பாதையில் சென்றால் யட்ச ராட்சசர்களால் உனக்கு ஆபத்து நேரிடலாமெனத் தடுத்தேன். இங்குள்ள ஓடையில் நீ தேடி வந்த சௌகந்திக மலர்கள் உள்ளன" என்றது.

அனுமனைக் கண்டதில் மிக்க மகிழ்ச்சியடைந்த பீமன் வானர ரூபத்திலுள்ள அனுமனை நோக்கி, அவர் கடலைக் கடந்தபோது எடுத்த விசுவரூபத்தைக் காண ஆசைப்படுவதால் அத்திவ்ய தேஜோ ரூபத்தைத் தனக்குக் காட்டும்படி அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து பிரார்த்தித்தான்.

மாருதிராயனும் மகிழ்ந்து தன் திருவுருவைப் பெருக்கி மலை போல் வானளாவ ஓங்கி நின்றான். பீமன் அத்திவ்யவுருவைக் கண்டு பேரின்பமடைந்தான். பின்னர் அனுமன் தன்னுருவைச் சுருக்கிப் பீமனைக் கட்டித் தழுவிக் கொண்டான். பீமன் அனுமனின் தழுவலால் புத்துணர்ச்சியும் மிக்க பலத்தையும் பெற்றான். அனுமன் பீமனிடம், "நீ யுத்தகளத்தில் கர்ஜிக்கும்போது என்னுடைய குரலும் உன்னுடன் சேர்ந்து பேரொலி எழுப்பி எதிரிகளைக் கதிகலங்கச் செய்யும். விஜயக் கொடியில் 'ஸ்ரீராமஜயமாக இருந்து உங்கள் வெற்றிக்குக் காரணமாயிருப்பேன்" என்று ஆசி கூறி நீரோடையிலிருக்கும் சௌகந்திக மலர்களை பீமனுக்குக் காட்டினார். மலர்களுடன் பீமன் பெருமகிழ்ச்சியுடன் அனுமனிடம் பிரியாவிடை பெற்று திரௌபதியை நோக்கி விரைந்தான்.

இதன் தாத்பரியம் வருமாறு: பீமன் சரீரபலம் மிக்கவன். அவன் செல்லும் பாதையே அவனது இலட்சியம். அதன் குறுக்கே குரங்கின் வால் நீட்டியிருப்பது இலட்சியப் பாதைக்குத் தடை. அத்தடையை நீக்க பலாத்காரத்தையும் தன் முழு தேக பலத்தையும் உபயோகித்தும் முடியாமற்போனது. குரங்கின் வால்தனம் என்பது மனதின் சஞ்சலத்தைக் குறிப்பதால் ஒருவரின் மனசஞ்சலம் தடையாயிருப்பின் அதனை தேக பலத்தால் நிவர்த்திக்க முடியாது. தேகபலத்தையே நம்பிய சபல புத்தியுடையவர்கள் தம் இலட்சியத்தில் முரட்டுத்தனமாக முன்னேற முயன்றால் அது சாத்தியமாகாது. அதுபோல் தன் பலத்தில் அகந்தை கொண்டாலும் இலட்சியப் பாதையில் முன்னேறுவது மிகக் கடினம்.

தளரா மனஉறுதியான ஸ்தித பிரக்ஞையுடனும் திடபக்தியும் உடையவர்களை எந்த மகா சக்தியும் அசைக்க முடியாது என்பதை ஸ்ரீராமபக்த அனுமனின் வாலைச் சிறிதுகூட ஆயிரம் யானை பலங்கொண்ட வாயுபுத்திர பீமனாலும் அசைக்க முடியாமற் போனதிலிருந்து அறியலாம்.

❋

பருவத்திற்கேற்ற பாடல்


அ. விநாயகமூர்த்தி

எனது -
கண்முன் விரிவது கானகமா, காவியமா?
மூக்கால் நுகர்வது மலர்மணமா, அமிர்த சஞ்சீவியா?
வாயினாற் சுவைப்பது சிற்றுண்டியா, அமுதமா?
காதில் விழுவது பறவைகள் ஒலியா, பரந்தாமன் குழலா?
உடம்பில் படுவது அருவியின் துளியா, பன்னீர்த் திவலையா?
என் மேனியிற் கலந்து, -
கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்
ஐம்புல இன்பமும் அருள்வதனால் இது -
குற்றாலமா, குறவஞ்சியா?






ஸி. ஏ. இராமசந்திரன் மகிஷாசுரமர்த்தினி அமுதசுரபி தீபாவளிமலர் '91


அமுதசுரபி தீபாவளி மலர் '91
பஞ்சபூதலிங்கேசுவரர்
ஸி. ஏ. இராமசந்திரன்



ஸி.ஏ. இராமசந்திரன்　　பூவராகப்பெருமான்　　அமுதசுரபி தீபாவளி மலர் ' 91



அமுதசுரபி தீபாவளிமலர் '91 மாருதிராயா பலபீமா ஸி. ஏ. இராமசந்திரன்



தக்காளியா? தங்கமா?




சூப் மற்றும் ரசம் செய்வதற்கேற்ற தக்காளி


ஒட்டு வீரியத் தக்காளிக்கு ஊன்றுகோல் செலவு ஏக்கருக்கு ரூ 8000/- (சுமார்).



"கார்டனர்ஸ் டிலைட்"- சுவைமிக்க "பிளம்" தக்காளி




தக்காளி குவியல்.




ஜூஸ் செய்வதற்கேற்ற தக்காளி

நாம் உபயோகிக்கும் காய்கறி வகைகளில் தக்காளிக்குத் தனிச்சிறப்பு உண்டு. தக்காளி சுவை மிக்க காய்கறி வகையைச் சேர்ந்ததோடு அல்லாமல் இதில் பல வைட்டமின் சத்துகளும், தாது உப்புகளும் அடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் வீடுகளில் தினம் தவறாமல் உபயோகப்படுத்தி வருவது தக்காளியாகும். வட இந்தியாவில் மக்கள் "விஜிடபில் சாலட்" இல்லாமல் உணவு அருந்த மாட்டார்கள். இதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது தக்காளி. இதோடு ஹோட்டல்களில் உணவு அருந்துவதற்கு முன் கொடுக்கப்படும் தக்காளி ஜூஸ், தக்காளி சூப் ஆகியவற்றைத் தவிர தக்காளி ஜாம், கெட்சப், தக்காளி ரசப்பொடி, தக்காளி ஊறுகாய் போன்ற பண்டங்களைச் செய்வதற்கும் தக்காளி பயன்படுகிறது. ஆகையால் நுகர்பவர்களுக்கு ஒவ்வொரு நாளும் தக்காளி தேவைப்படுகின்றது. நமது நாட்டில் தக்காளி உற்பத்தியைப்பல மடங்குபெருக்கினால் தான் நல்ல பயன் ஏற்படும். உலகில் தக்காளி பயிராகும் மொத்தப்பரப்பில் சுமார் 4 சதவிகிதம் இந்தியாவில் பயிராகின்றது. உலக தக்காளி உற்பத்தியில் இரண்டு சதவிகிதத்தை இந்தியா உற்பத்தி செய்கிறது. இந்தியாவில் ஒரு ஹெக்டேருக்கு சராசரி 10 டன் தக்காளி மகசூல் கிட்டுகிறது. ஆனால் உலக நாடுகளில் சராசரி உற்பத்தி திறன் ஹெக்டேரில் 19 டன்களுக்கும் அதிகமாகும். அமெரிக்காவில் ஒரு ஹெக்டேரில் 25 டன் மகசூல் கிட்டுகிறது. நமது நாட்டில் தக்காளி உற்பத்தியைப் பலமடங்கு அதிகரிக்க வேண்டிய நிர்பந்தத்தில் நாம் உள்ளோம். இதற்குப் போதுமான வாய்ப்புகளும் உள்ளன. கோவை, மதுரை, ஒட்டன்சத்திரம் பகுதியில் மகசூல் சராசரி ஹெக்டேருக்கு 14 டன்களாகும். ஆடிப்பட்டத்தில் அதிக மகசூலாக 17 டன்னும், மாசிப்பட்டத்தில் குறைந்த மகசூலாக 11 டன்னும் கிடைக்கும். இந்த அளவு மகசூலினை அதிகரிக்க முயற்சி எடுக்க வேண்டும்.




"சாலட்" செய்வதற்கேற்ற தக்காளி



"ஜே" 1 ரக தக்காளி.



ஒட்டு வீரியத் தக்காளி.



வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் சமவெளியில் (Plains) தக்காளி பூ எடுத்தாலும் காய்க்காது. ஆகையால் இந்த மாதங்களில் கடும் உற்பத்திச் சரிவும், மார்க்கெட்டில் விலை அதிகரிப்பும் உள்ளது. இந்த உஷ்ண மாதங்களில் நீலகிரி மலைப்பகுதியிலும், கர்நாடக மாநிலத்திலும் தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு சென்னையில் விற்பனை செய்யப்படுகிறது. இது சமயம் தக்காளி விலை கிலோ ரு.10/- வரை போவதுண்டு.

ரகங்கள்

தக்காளியில் பல்வேறு ரகங்கள் உள்ளன. அவை அனைத்தையும் பற்றி இங்கு விவரிக்க இயலாது. தற்போது சாகுபடியில் இருந்து வரும் வகைகளை மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

1. நாட்டு ரகங்கள்.

2. நடுத்தர நகங்கள்.

3. ஒட்டு வீரிய ரகங்கள்.

இவற்றில் மகசூல் கீழ்க்காணுமாறு உள்ளது.

1. நாட்டு ரகங்கள் - 12.5 டன் / ஹெக்டேர். (5 டன் / ஏக்கர்).

2. நடுத்தர ரகங்கள் - 20 டன் / ஹெக்டேர். (8 டன் / ஏக்கர்)

3. ஒட்டு வீரிய ரங்கள் - 75 டன் / ஹெக்டேர் (30 டன் / ஏக்கர்)

தற்போது நாட்டு ரகங்கள்தான் அதிகப் பரப்பளவில் சாகுபடி செய்யப் படுகின்றன. இதை வைத்து உற் பத்தியை அதிகரித்துவிட முடியாது. அடுத்து உற்பத்தி அதிகரிப்பிற்கு ஒட்டு வீரிய ரகங்கள் உதவக்கூடும். இன்று உலகின் பல பாகங்களில் ஒட்டு வீரிய ரகங்களின் சாகுபடி அதிகரித்து வருகிறது. இதன் விதை உற்பத்தி வியாபார ரீதியில் செய்யப்படுகின்றது. பல புதிய கம்பெனிகள் ஒட்டு வீரிய ரகங்களின் வித்துக்களை உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றன. பெங்களூரில் தனியார் கம்பெனி ஒன்று ஒட்டு வீரிய ரகங்களின் விதை உற்பத்தியைச் செய்துவருகிறது. ஒட்டு வீரிய ரகங்கள் சாகுபடியில் உற்பத்திபலமடங்கு அதிகரித்தும், இதன் சாகுபடியில் குறைந்த அளவு விவ சாயிகளே ஈடுபட்டுள்ளனர். இதன் சாகுபடிக்கு ஆரம்ப முலதனம் அதிகம் தேவைப்படுகிறது. இதன் சாகுபடியில் ஒவ்வொரு செடிக்கும் அது நிமிர்ந்து நின்று மகசூல் கொடுக்கப் பிரத்யேக கவனம் கொடுத்து அதிகமாக செலவு செய்ய வேண்டியுள்ளது. இச்செடி களில் பிரத்யேக கவாத்து செய்ய வேண்டியுள்ளது. இந்த ரகங்களில் வேர் வாடல் நோய் காரணமாகச் செடிகள் மடிந்து விடுவதைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒட்டு வீரிய ரகங்களின் ஒரு கிலோ விதை ரு. 10000/- வரை உள்ளது. ஓர் ஏக்கருக்கு விதைக்கு மட்டும் ரு. 1000/- செலவு செய்யவேண்டும். தக்காளி விதையின் விலை இந்த அளவு உள்ளது என்பதை 100-க்கு 60 விவசாயிகள்கூட அறிந் திருக்க மாட்டார்கள். ஓர் ஏக்கர் சாகுபடி செய்ய ரு. 20000/- வரை செலவாகும். இந்த மூலதனம் இடவசதி படைத்தவர்களால் மட்டும்தான் இயலும். சிறு மற்றும் குறுநில விவசாயிகளால் இயலாது. வங்கிகளும் ஏக்கருக்கு ரு.3000/-க்கு அதிகமாகக் கடன் கொடுக்காது. ஒட்டு வீரியத் தக்காளி சாகுபடியில் ஏக்கரில் மொத்த வருமானம் ரு. 40,000/- மும், நிகர வரு மானம் ரு. 20,000/-மும் கிடைக்கும். ஆனால் இவ்வளவு லாபம் இருந்தும் அதிக விவசாயிகள் இந்த ரகத் தக்காளியில் ஈடுபடாததால் தமிழ் நாட்டில் உற்பத்தி அதிகரிக்கவில்லை. இருப்பினும் விஸ்தரிப்பாளர்கள் தொடர்ந்து ஒட்டு வீரிய ரகங்கள் சாகுபடியை அதிகரிக்க முயற்சி எடுத்துவருகின்றனர்.

வியாபார நிலை

தக்காளி ஒரே பட்டத்தில் பயிரிடப் பட்டு, ஒரே நேரத்தில் சந்தைக்கு வருவதால் விவசாயிகளிடையே விற் பனையில் போட்டி வருகிறது. ஆனால் வியாபாரிகளின் கட்டுப்பாடான ஒற்று மையால் விவசாயிகளைவிட வியா பாரிகளே அதிகப் பயன் அடைந்திருக் கின்றனர். தக்காளி சந்தைக்குக் கொஞ்சம் அதிகம் வந்துவிட்டால் மொத்தவிலை கீழே சரிந்துவிடும். ஆனால் அதே அளவு விலைச்சரிவு சில்லரை விலையில் ஏற்படுவதில்லை. இதேபோல் தக்காளி வரத்து மார்க் கெட்டில் குறைந்தால் சில்லரை விலை விஷம் போல் ஏறிவிடும். மொத்தமாக வாங்கி விற்பனை செய்பவர்களும், சில்லரை விற்பனையாளர்களும் பயன் பெறும் அளவிற்கு விவசாயி பயன் பெறுவதில்லை. தக்காளிச் சாகுபடியில் நஷ்டத்திற்கே வாய்ப்புகள் அதிகம். விவசாயிகள் நஷ்டத்தைத் தவிர்க்க முயற்சி செய்கிறார்கள். ஆனால் வியாபாரிகள் தக்காளி விற்பனையில் கூடுதல் லாபம் எடுக்க நஷ்டத்தையும் துணிந்து ஏற்று செய்கிறார்கள். இந்த நஷ்டத்திற்குத் துணிவு கொண்டு விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகள் அதிக லாபத்தை எதிர்பார்க்கிறார்கள். தக்காளிச் சாகுபடியில் மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகள், கமிஷன் மண்டிக்காரர்கள் உள்ளனர். இவர்களுக்கு கிடைக்கும் லாபம் ஆய்வு செய்யப்பட்டது. அதன்படிக்கு மொத்த வியாபாரிக்கு ஒரு ரூபாய் முதலீட்டிற்கு ரு. 11.50 நிகர லாபமாகவும், சில்லரை வியாபாரிக்கு ரு. 8.50 நிகர லாபமும், கமிஷன் மண்டிக்காரருக்கு 65 பைசாவும் லாபமாகக் கிடைக்கிறது. விவ சாயிக்கு ஒரு ரூபாய் முதலீட்டிற்கு 78 பைசா வரைதான் லாபம் கிட்டுகிறது.

தக்காளி விலை

கிலோ ரூ. 20/- ஏன்?

இந்த வருடம் ஆனி மாதத்தில் (June - July) தங்கத்தின் விலை கிடு, கிடுவென உயர்ந்தது. இந்த சமயத்தில் இதனுடன் போட்டி போட்டுக் கொண்டு தக்காளியின் விலையும் உயர்ந்தது. ஒரு கிலோ தக்காளியின் விலை ரு.20/-ஐக் கடந்தது. இதைக் கண்ணுற்ற மக்கள் இது என்ன தக் காளியா, தங்கமாவென்று ஆச்சர்யப் பட்டனர். தக்காளி விலை கிலோ ரு.20/- ஆனதற்குக் காரணங்களை ஆராயலாம். கடும் கோடையில் ஏராள விற்கு தக்காளி உற்பத்தி செய்யப்படும் இடங்கள் நீலகிரி மாவட்டமும், கர்நாடக மாநிலமும் ஆகும். இங்கு விளையும் தக்காளியைக் கொள்முதல் செய்து வைகாசி, ஆனியில் சென்னையில் விநியோகம் செய்வது வழக்கம். சமீபத்தில் நீலகிரி, கர்நாடக மாநிலம் ஆகிய பகுதிகளில் தக்காளி சாகுபடி குறைந்து, தேயிலை சாகுபடி அதிகரித் துள்ளது. மேலும் இந்த வருடம் கோடையில் வியாதி காரணமாக கர்நாடக மாநிலத்தில் தக்காளியே சரியாக விளையவில்லை. இதன் காரணத்தால் அனைவரது கவனமும் நீலகிரியின் பேரில் திரும்பியது. தமிழ்நாடு, கர் நாடகம் மற்றும் கல்கத்தா, மஹா

ராஷ்டிரம் போன்ற இடங்களிலிருந்து வியாபாரிகள் நீலகிரிக்குச் சென்று தக்காளியைப் போட்டி போட்டுக் கொள் முதல் செய்தனர். இதனால் நீலகிரிப் பகுதியிலேயே தக்காளி விலை அதிகரித்தது. தற்போது கேரள மாநிலமும் நீலகிரியில் விளையும் தக்காளியைப் போட்டி போட்டு விலைக்கு வாங்க முற்பட்டுள்ளது. இதனால் தக்காளி உற்பத்தி செய்யப்படும் நீலகிரிப் பகுதியிலேயே விஷம் ஏறுவது போல் தக்காளி விலை ஏறிவிட்டது. கொள் முதல் செய்த தக்காளியை சென்னைக்குக் கொணர வியாபாரிகள் படாதபாடு பட்டுள்ளனர். அரசியல் சர்ச்சைகள் காரணமாக லாரிக்காரர்கள் கேட்கும் வாடகையைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப் பட்டார்கள். ஏனெனில் லாரிக்காரர்கள் வழித்தடங்களில் பாதிக்கப்பட்டு வந்ததால் அவர்கள் வாடகையை அதிகரித்தனர். தக்காளியை வாங்கி வந்த மொத்த வியாபாரிகள் தங்கள் விலையோடு 10 சதவிகிதம் கூட்டி தக்காளியைச் சில்லரை வியாபாரிகளுக்கு விற்பனை செய்தனர். சில்லரை வியாபாரிகள் தங்கள் கொள் முதல் விலையோடு 30 சதவிகிதம்கூட்டி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்தனர். இக்காரணங்களினால் தக்காளி விலை கிலோ ரு. 20/–க்கு மேலும் வந்துவிட்டது. இதுபோல் ஒவ்வொரு வருடமும் வைகாசி, ஆனியில் தக்காளி விலை அதிகரிக்கத்தான் செய்யும். இதைத் தவிர்க்கத்தக்காளி உற்பத்தியை நாம் அதிகரித்தாக வேண்டும். அதுதான் விவேகமாக இருக்கும். உற்பத்தியை அதிகரிக்க நாட்டு ரகங்களும் உதவி செய்யவில்லை. உதவக்கூடிய ஒட்டு வீரிய ரக சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்ட இயலவில்லை. தற்போது புதிதாக வெளியிடப்பட்டுள்ள "ஜே 1" தக்காளி உற்பத்திக்கு உதவக் கூடும். இதைப் பலதரப்பட்ட விவசாயிகளும் சாகுபடி செய்யலாம். இதனால் சாகுபடி பரப்பளவு அதிகரித்து உற்பத்தி பெருகும். இதற்குச் சாகுபடி செலவு ஏக்கருக்கு ரு.7000/– ஆகும். ஓர் ஏக்கரில் சுலபமாக 10 டன் மகசூல் தருகிறது. ஏக்கரில் நிகர லாபமாக ரு. 13,000/– வரை எடுக்க இயலும். "ஜே 1" தக்காளி பார்ப்பதற்கு ஒட்டு வீரியத் தக்காளி போலவே உள்ளது. பழங்கள் விரைவில் கெடுவதில்லை. மார்க்கெட்டிற்கு எடுத்துச் செல்லும்போது பழங்கள் அழுகிக் கெட்டுவிடுவதில்லை. "ஜே 1"தக்காளி 'லீ.ப் கர்ல் வைரஸ்', 'ரூட் வில்ட்' வியாதி ஆகிய வற்றால் பாதிக்கப்படுவதில்லை. பழங்களுக்கு சுலபமாக கிலோவிற்கு ரு. 2/– வீதம் விலை கிடைக்கிறது. "ஜே 1" சாகுபடிக்குச் செலவு குறைவாக இருப்பதாலும், பழங்கள் தரமுள்ளதாக இருப்பதாலும் வியாபாரத்திற்கு ஏற்றதாக இருப்பதாலும் ஒட்டு வீரிய ரகங்களைவிட விரைவாக அதிகப் பரப்பளவில் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளது. அதனால் உற்பத்தி பல மடங்கு பெருகும்.

தக்காளி உற்பத்தியில் பயனடைய கீழ்க்காணும் சிபாரிசுகள் உதவக் கூடும்.

1. விவசாயிகள் பழங்களைத் தரம் பிரித்து விற்றால் அதிக வருமானம் பெற இயலும். ஆனால் விவசாயிகள் விற்பனையின்போது தரம் பிரித்து விற்பதில்லை. வியாபாரிகள் எடை அளவில் தக்காளியைத் தரம் பிரித்து விற்பனை செய்கிறார்கள். இதனால் வியாபாரிகள் பயன் அடைகின்றனர். தக்காளியை ஒழுங்கு முறை விற்பனையின் கீழ் கொணர்ந்து மெட்ரிக் அளவைகளால் விற்கும் கட்டுப்பாட்டை அமலாக்க வேண்டும்.

2. தக்காளி உற்பத்தி அதிகரிக்கும் போது விலைச்சரிவு ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க தக்காளி ஜாம், கெட்செப், ஜூஸ் போன்ற பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. சீனா போன்ற நாடுகளில் தக்காளி உற்பத்தி அதிகமாக இருக்கும்போது பழங்களை டின்களில் அடைத்துக் கெடாமல் வைத்து அவற்றினை தக்காளி உற்பத்தி இல்லாத போது விநியோகிக்கின்றனர். அதுபோல் நாம் மாசி – சித்திரையில் கிடைக்கும் அதிக உற்பத்தியிலிருந்து பழங்களை எடுத்து டின்களில் பதப்படுத்தி அவற்றை வைகாசி – ஆனி மாதங்களில் விநியோகித்துத் தக்காளி விலை உயர்வினைக் கட்டுப்படுத்தலாம்.

4. உழவர்கள் தக்காளியை கூட்டுறவு முறையில் விற்பனை செய்ய முயலலாம். ஜப்பானில் விவசாயப் பொருட்களின் விலையை விவசாயிகளே கூட்டுறவு சங்கங்களில் நிர்ணயித்து அரசிடம் ஒப்புதல் பெற்று விற்பனை செய்கிறார்கள். இம்முறை தமிழ்நாட்டில் பின்பற்றப்படுமேயானால் இடைத்தரகர்கள் செயலிழந்துவிடுவார்கள். தக்காளிக்கு நியாயமான விலை கிடைக்கும்.

5. உலகத்தில் பல பாகங்களில் உஷ்ண மாதங்களில் பூக்கள் உதிராமல் காய்கள் பிடிக்கும் ரகங்கள் உருவாக்குவதில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுச் சில ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும் இந்த ரகங்கள் வைகாசி – ஆனிப் பட்டங்களில் நல்ல மகசூலினைத் தருவதில்லை. ஆகையால் தீவிர ஆராய்ச்சி மூலம் கடும் கோடைக்கேற்ற தக்காளி ரகங்களைக் கண்டுபிடிப்பதில் அவசரம் தேவையாகிவிட்டது. அப்படி ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவை ஒட்டு வீரிய ரகங்களைவிடச் சிறப்பாக இருக்கும்.

6. வீட்டுத் தோட்டத்தில் தொட்டிகளில் தக்காளியைத்திறம்பட சாகுபடி செய்வதில் அனுபவம் பெறவேண்டும். தொட்டிகளில் தக்காளிச் சாகுபடி செய்யப்படும் போது பூச்சி, வியாதித் தொல்லை குறைவாக இருக்கும். உஷ்ணக்காற்றினால் தக்காளிச் செடிகளில் பூக்கள் உதிர்ந்துவிடுவதை வீட்டுத் தோட்டத்தில் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தலாம். மேலும் கடும் விஷமுள்ள மருந்தினை அடிக்காமல் சாகுபடி செய்யும்போது பழங்களை எந்தவித பயமுமின்றிப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலை நாடுகளில் தக்காளியின் விலையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. வருடம் பூராவும் தக்காளியைக் கண்ணாடி வீடுகளில் (Glass Houses) சாகுபடி செய்கிறார்கள். இதனுள் தக்காளிக்குத் தேவைப்படும் வெளிச்சம், உஷ்ணம், காற்றிலுள்ள ஈரப்பசை ஆகியவற்றைச் சரிசெய்து கொள்கிறார்கள்.

தக்காளி விஷயத்தில் உடனடியாகத் தேவைப்படுவது உற்பத்தி அதிகரிப்பாகும். மேலும் தக்காளி விலை ஒரு கட்டுக்குள் வரவேண்டுமானால் இதில் ஒருங்கிணைந்த முயற்சி தேவை. விவசாய விஞ்ஞானிகள், விவசாயிகள், வியாபாரிகள் ஆகியோர் தங்கள் பங்கினைச்சரியாகச் செய்தால் நிச்சயமாக அனைவரும் பயன் அடைவார்கள். ∴

உறவுச் சூக்குமம்

ராஜம் கிருஷ்ணன்

வேண்டா வெறுப்புடன் விலகிவந்த மண்ணுக்குத் திரும்பவும் அவள் தயங்கித் தயங்கிப் போனாளே, அப்போது அங்கே அவள் கண்டதென்ன? உறவா? பிரிவா?

ஒரு மிளகாய் கிள்ளிப் போட்டுக் கடுகுதாளித்த கொத்துக் கடலைச் சுண்டல், மணத்தை வாரி வீசுகிறது; நாவில் நீர் சுரக்கச் செய்கிறது. கரண்டியால் ஒரு கிண்டு கிண்டிவிட்டு, சுள்ளியை இழுத்து, அவள் அடுப்பை அணைக்கையில் வாயிலில் யாரோ வரும் அரவம் கேட்கிறது.

"சித்தாத்தா...?"

மாணிக்கம் இந்த நேரத்துக்கு வரமாட்டானே? எங்கே வந்தான்? அவள் குடிசைக்கு வெளியே வருகிறாள்.

கறுத்த மீசையும், தொப்பி போட்டாற்போன்ற அழகு முடியுமாக ஓர் இளம்பிள்ளை. அழுக்குத் தெரியாத ஆபீசர் போல் நிற்கிறான். இவளுடைய ஐம்பது ரூபாய் அநாதைப் பென்சன்கூட, இவளை இப்படி யாரும் வந்து பாராமலே, மணியக்கார மகராசன் ஏற்பாடு செய்துவிட்டாரே? குடியிருக்கும் இந்த ஓட்டைக் குடிசையும், தரிசு வளையும்கூட அவர் அனுமதித்துப் புழங்குகிறாள். இதைப் பிடுங்க வந்திருப்பானோ, யாரேனும்? இவள் சிந்தனை பட்டென்று அதிர, அந்த இளம்பிள்ளை தடாலென்று இவள் காலில் மண்ணில் விழுகிறான்.

"ஒங்க பேரன் சித்தாத்தா?" என்று மாணிக்கம் மகிழ்ந்து கூறுகிறான்.

"பேரனா? அவளுக்கு ஏது அப்படிச் சொந்தபந்தமெல்லாம்?" அந்தப்பிள்ளை எழுந்து, அவள் மென்மையான சுருங்கிய கையைப் பற்றுகிறான்.

"ஆமாம் பாட்டி! நான் சிங்காரம் பண்ணாடியின் ரெண்டாந் தாரம் சௌந்தரத்தம்மாளின் மகள் வயிற்றுப் பேரன்!".

அவள் முகம் ஏனோ இறுகிக் போகிறது.

"அதான் அன்னைக்கே உதச்சித் தள்ளிட்டாங்களே? இப்ப எங்கேர்ந்து உறவு வந்திச்சி?"

அவள் வாய் திறந்து கேட்கவில்லை. ஆனால் அந்த வரிகள் முகத்தில் மின்ன நிற்கிறாள்.

"உங்களை எரிய எரிய உதச்சுத் தள்ளின அந்தப் பாவம் எங்க குடும்பத்தைச் சும்மா விடல பாட்டி'

சௌந்தரத்தாச்சி, கைக்கு வாயெட்டாம கிடந்து அவதிப்பட்டாங்க.

எங்க மாமா, மாமி ரெண்டு பேரும் பிளேன் விழுந்து போனாங்க.. எங்கக்கா மகன், அஞ்சு வயசுப்பிள்ளை ஒரு நொடில, தண்ணித் தொட்டில விழுந்து தவறிப்போச்சு. எங்கம்மா சாவுறப்ப, 'குலையக் குலைய அந்தப் பொம்புளய அடிச்சி விரட்டினாங்கப்பா! அந்தப் பாவந் தான் குடும்பத்தைப் புடிச்சாட்டுது. அவங்க எங்கேருந்தாலும் தேடிப் போய் கூட்டியாந்து, வூட்டிலே தாய் மாதிரி வச்சுக் காப்பாத்துங்க"ன்னு சொல்லிட்டுப்போனாங்க."

"உங்கம்மாவா?"

யாரு?...

அவளுக்கு அந்த நினைவுகளெல்லாம் மேடிட்டுப் போய் மறந்தே போய்விட்டனவே? இப்போது அந்த மேட்டில் பசுமையாக நிற்கும் உறவுகள், தொடர்புகள்... இந்த மாணிக்கம்... சித்தாத்தா என்று இல்லாத ஓர் உறவு சொல்லிக் கொண்டு வந்து, உதவி செய்வான். கூரைபோனால் கட்டிக் கொடுப்பான். இந்த ஊர் மணியக்காரர் வீட்டு வண்டிக்காரன்தான். இவள் உடம்பு முடியவில்லை என்றால் வைத்தியரிடம் இருந்து தைலமோ, எதுவோ வாங்கித் தருவான்... பிறகு... வேப்பமரத் தடி... கிராமத்து சந்தை.. பள்ளிக் கூடப் பிள்ளைகள்... அங்குதான் இவள் சுண்டல்போட்டுக் கொண்டு போய் ஒரு கரண்டி இருபது பைசா என்று விற்பாள். பார்வதி டீச்சர் சத்துணவு சாப்பாட்டை ஓரிலையில் வைத்துக் கொடுப்பாள். பெற்ற மகள் போல... பிறகு... கடைக்கார மாரியப்பன்... முன்பின் காசு வாங்கிக் கொண்டு ஒரு லிட்டர் கடலை தவறாமல் கொடுப்பான்... ரெட்டியார் வீட்டு மோட்டார் தோட்டத்தில் குளிப்பாள். கிழக்கே சூரியன் உதிப்பான்; மேற்கே மறைவான். வேம்பு துளிர்க்கும். சித்திரைக் கோடையில் மணத்தை வாரிக்கொட்டும். சலங்கை சலங்கையாகப் பிஞ்சு விடும்... அந்தப் பழத்துக்குக் காக்கைகள் வந்து கூச்சல்போடும். பிள்ளைகள் பழக் கொட்டையின் இனிப்பைச் சுவைத்துக் கொட்டையைத் துப்புவார்கள். இவள் கொட்டைகளைப் பொறுக்கி, படிப்படியாகச் சேர்த்து...

"பாட்டி! நீங்க இனிமே இங்க இப்படி அநாதையா இருக்க நாங்க வுடமாட்டோம்!"

"அநாதையா?"


இந்த மண்ணும் இத்தனை உறவுகளும் இவளை வருடவருட மாகச் சேர்த்துப் பிடித்துக் கொண் டிருக்கையில் 'அநாதை' என்ற பேச்சு எங்கிருந்து வருகிறது?

"பாட்டி, பட்டணத்தில் வசதியா வீடு வச்சிருக்கிறேன். உங்க பேரன் பெண்சாதி, உங்க வயித்துப் பெண்ணுபோல உங்க ளுக்கு இந்தத் தள்ளாத காலத்தில ஆதரவா இருக்கணும்னு தான் இங்கே அனுப்பி இருக்கிறா. பேரனுக்கு புள்ளன்னு அதும் முகம் பார்த்து நீங்க கொஞ்சி விளையாடணும். இப்பவே நீங்க புறப்பட்டுறீங்க..." அவள் திக்குமுக்காடிப் போகிறாள்.

அன்று...

வண்டிக்காரக் கறுப்பனின் தாயற்ற மகளாக, கீரைத் தோட்டத் தில் கீரை கிள்ளிக் கொண்டிருந்த போது, இளங்கீரையைப் போல் தளதளவென்று பசுமையுடன் இருந்த அவளை, அந்தச் சிங் காரம்பண்ணாடி பார்த்துவிட்டார்.

அந்த அணைப்பு, பலாத்காரக் குடையாக அவளைத் திக்குமுக்



காடச் செய்தது. "என்ன யாரு என்ன சொல்லிட முடியும்? கன்னி யம்மா என் பொஞ்சாதிடா?" என்று சிலும்பிக்கொண்டு நின்ற முதல் தார இரண்டாந்தார மக்களுக்குச் சவால் விட்டுவிட்டு, அம்மன் கோயில் பூசாரியிடம் ஒரு மஞ்சள் சரட்டை வாங்கி அவளைக் கட்டிப் போட்டார். நெல்லடைந்த வீட்டின் ஒருபுறத்தில் அவளைக் குடித் தனம் வைத்தார். ஆனால் அது ஐந்து நாளைய வாழ்வாக முடியும் என்று அவரே நினைத்திருக்க மாட்டார்.

காலையிலே பலகாரம் சாப் பிட்டுவிட்டுத் தோட்டத்துக்குப் போனவர் அங்கேயே மயங்கி விழுந்தார். இரத்தமாகக் கக்கிச் செத்துப் போனார். ஊரில் கசமுசவென்று பேச்சு எழாமல் இல்லை. காப்பியில் எதையோ கலந்து கொடுத்துவிட்டார்கள் என்று அரசல் பொரசலாக வதந்தி உலவியது. அதைப் பற்றி எல்லாம் சிந்திக்கவே அவளுக்கு நேரம் இல்லை.

ஏனெனில், அவர் மண்டையைப் போட்ட அடுத்த கணத்திலேயே அவளும், அப்பனும் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள். "மகளவிட்டு, உண்ட வீட்டுக்குத் துரோகம் பண்ணத்தானே நினைச்சே? மக ளோட ஓடிப்போ நாயே! என்று நையப்புடைத்து இரத்த விளா றாக்கித் துரத்தினார்கள். இரண் டாம் மனைவியின் பையன்... (இவன் அப்பனோ) அவளை நடுத் தெருவில் துரோபதை சீலையை உரிந்த மாதிரி உரிந்து, துடைப்பத் தால் அடித்தான். அவள் உயி ருக்கு அஞ்சி அம்மன்கோயிலில் அண்டியதும், பூசாரி அம்மன்மீது போட்ட துணியைக் கொடுத்து அவளைக் கண்காணாதபடி அனுப்பியதும்... நினைவுக் குவியல் களில் இருந்து பசுமையாய்க் கிளர்ந்து முட்டுகிறது. கண்களில் நீர் தழும்புகிறது.

அந்தப்பேரன், அவள் கண் களைத் தன் கைக்குட்டையால் துடைக்கிறான். "பாவம்! அழக் கூடாது பாட்டி! நீங்க கண்கலங் கினா எங்க குடும்பம் இனித் தாளாது. பண்ணின பாவத்துக்கு ஒரு பரிகாரம் பண்ண உங்க பேரனுக்கு ஒரு சந்தர்ப்பம் தாங்கம்மா!"

மறுபடியும் நெடுஞ்சாண் கிடை யாக விழுந்தான்.

"சித்தாத்தா, என்ன இருந் தாலும் நீங்க ஒரு பெரிய... வூட்டுப் பொம்பளதா. அண்ணெ அவரக் குறிச்சி பஸ்ஸுல எறங்கி, ஆட்டோ ரிக்ஷா புடிச்சிட்டுவந்து, கன்னி யம்மா, ஆண்டாங்கோயில் சிங் காரம் பண்ணாடி பொம்பளன்னு விசாரிக்கவே கப்புனு ஆயிப் போச்சி. இருக்காங்க. நீங்க ஆருன்னேன்... சித்தாத்தா? உங்க ளுக்கு நல்ல காலம் வந்தாச்சி! பட்டணம் கௌம்புங்க".

அவளால் ஏற்கவே முடிய வில்லை.

அன்றொருநாள் வலுக்கட்டாய அணைப்பில் சிக்கினாள். அதன் பயனாக, ஒரே ஆதரவான தந் தையை இழந்தாள். சொந்தமான பரிச்சயமான மண்ணிலிருந்து விரட்டப்பட்டாள். இன்று இந்தச் சொந்த பந்தங்கள், பரிச்சயங்கள், இதுவே நிசம் என்று காலையிலும் மாலையிலும் குடிசைக்குள்ளும் முகம் காட்டும் சூரியன், சந்திரன், ஆகாய நட்சத்திரங்கள், 'பாட்டி! எனக்கு பத்துபைசா சுண்டல்' என்று குஞ்சுக் கைகளை நீட்டிக் கொண்டு பொங்கும் இளம் சந்திரர்கள்... எல்லாம் இவளுக்கு நிலைத்த உறவுகள்... ஹும் இது வும் வலுக்கட்டாய அரவணைப்பு.

"எனக்குப் பட்டணமெல்லாம் வாணாம்பா! இங்கேயே எங் காலத்தை முடிச்சிட்டுப் போறேன்!".

அவன் அவளுடைய இரண்டு கைகளையும் பற்றிக் கொள்கி றான்; கெஞ்சுகிறான்.

"பாட்டி... பாட்டி! நீங்க அப்படிச் சொல்லகூடாது! நீங்க இல்லாம நாம்போனா, எம் பொஞ் சாதி என்ன வீட்டுக்குள்ளாற விட மாட்டா! நான் நீங்க வரவரைக்கும் இப்படியே உக்காந்து கெடப் பேன்..."

அவள் அவன் கையை உதற முடியாமல் நிற்கிறாள்.

"சித்தாத்தா! நீங்க பொறப் படுங்க சொல்றேன். அண்ணெ இப்படிக் கால்ல வுழுந்து கூப்பிடு றாரில்ல? உங்களுக்குஇங்க என்ன வைச்சிருக்கு? கடைசி காலத்துல, உங்க மக்க மனிசங்ககூடப் போயிச் சேர்ந்துக்குங்க!..." என்று மாணிக்கம் உசுப்புகிறான்.

இவளுக்கு இப்படியும் கூரை யைப் பொத்துக் கொண்டு ஓர் அதிர்ஷ்டம் வருமோ?

இவளால் சீரணிக்க முடிய வில்லை என்றாலும் அது வந்து விட்டது. பொங்கலுக்கு வந்த புதுச் சேலையை உடுத்திக் கொள்கி றாள். அங்கு இங்கு என்று கொடுத்து வைத்த பணம் நூறு ரூபாய் போல் சேர்ந்துவிட்டது. மாணிக்கம் இரவுக்குள் எல்லாம் கச்சிதமாகச் செய்து விடுகிறான். தன்னிடம் இருந்த குண்டான், தட்டுமுட்டுச் சாமான்கள் என்று எல்லாவற்றையும் அவனிடமே ஒப்புவித்துவிட்டு, இந்தப் புதிய உறவுடன் அவள் கிளம்புகிறாள். சைகிளில் போய் அவரக்குறிச்சி யில் இருந்து, ஓர் ஆட்டோ ரிக்ஷா கொண்டு வருகிறான் அவன். வாழ்க்கையிலேயே முதன் முதல் என்று அந்த வண்டியில் ஏறி, டவுன் வந்து இரவு பஸ் பிடிக்கி றார்கள். பொழுது பலபலவென்று விடியுமுன் பட்டணம் வந்து விடுகிறார்கள். மறுபடியும் ஓர் ஆட்டோ வண்டி. தீக்குச்சி அடுக்குப்போல் இருக்கும் வீடு களைப் பார்த்து அவள் பிரமிக்கை யிலேயே, பேரன் அவளைக் கையைப் பற்றி மாடியில் ஏற்றிச் செல்கிறான். வழுவழு என்று மாடிப்படி... வீட்டு வாசல்களா? தூக்கணாங்குருவிக் கூட்டுக்குள் தனித்தனிப் பொந்தாக இருக் குமே? அது நினைவுக்கு வருகிறது. இவர்கள் ஏறும்போதே, ஒரு பையன் தபதபவென்று வெள்ளை யாகப் பைகளை வாயிலில் போட்டு விட்டுப் போகிறான். அதுக்குள் ளாற...பாலு...?

அவர்கள் ஒரு வாயிலில் வந்து நிற்கிறார்கள். வாசலில் பித் தானை அமுக்குகிறான். கதவைத் திறந்து கொண்டு "லேடி" போல் கவுன் போட்ட பெண் ஒருத்தி நிற்கிறாள்.

"கூட்டிட்டுவந்திட்டீங்களா?"

"வாங்க பாட்டி! வாங்க!" அவள் கையில் இருந்த துணிப்பையைப் பரிவுடன் வாங்கியபடி உள்ளே அழைக்கிறாள். முன்னறைக்கப் பால் திரை.

"நீங்க... 'எங்க வெறும வந்திடுவீங்களோன்னு எனக்கு ஒரே கவலை... அப்பா...! நல்ல வேளை...!"

"விவேக் தூங்குறானா?"

"'ஷ்...' என்று அவள் உதட்டை விரலால் அழுத்துகிறாள்.

"பாதி ராத்திரிக்குமேல தான் தூங்கினான். நீங்க உக்காருங்க பாட்டி. காபிபோட்டுட்டு வர்ரேன். பாபு, நீங்க பல்துலக்கிக் குளிச்சிடுங்க. தண்ணி வருது, பிடிச்சிடலாம்..." என்று உள்ளே செல்கிறாள். அந்த முன்னறை முழுதும் மெத்து மெத்தென்று கட்டில்போல் நீண்ட இருக்கைகளில் திண்டுகள். சுவர் முழுவதும் அலமாரிகளில் ஏதேதோ சாமான்கள். மணியக்காரர் வீட்டில் இருப்பது போல் டி.வி. பெட்டி, கடிகாரம்... புத்தகங்கள்... இவள் காலை வைத்து நடக்க இடம் தெரியாமல் திகைத்து நிற்கையில் பேரன் இவளை, உள்ளே அழைக்கிறான்.

திரைக்கப்பால், பெரிய இடமில்லை. திரும்பவே முடியாமல் ஒரு குளியல் அறை; பளபளக்கும் சுவர்; குழாய்கள். மேலே சிவப்பு விளக்குப் போல் ஒரு சிறு பித்தான் எரிகிறது. அங்கே மரக்காலைப் போல் வழுவழு என்று சுவரில் ஏதோ பொருத்தியிருக்கிறார்கள்.

"பாட்டி! இதா சுடுநீர் திறந்து வச்சிருக்கிறேன். இந்தக் குழாயில் பச்சைத் தண்ணி வரும்... அதா கக்குசு. நீங்க இங்க எதுக்கும் வெளில போக வாணாம். அல்லாம் வசதி..." என்று சொல்லி விட்டு அந்தக் கதவைச் சாத்துகிறான். வெளியேயிருந்து இவள் மருண்டு மருண்டு விழிக்கிறாள். இதெல்லாம் மந்திரவாதிக் குகையா? சோறுபோட்டுச் சாப்பிடும் பீங்கான் போல் இருக்கும் இதில்...சீ....!

ஆனால் மனசுக்குப் பிடிக்காததாகவே இருந்தாலும், அவள் கட்டாயமாக ஏற்றுக் கொண்டாக வேண்டி இருக்கிறது. நடக்கவே இடமில்லை. சமையல் அறையா? பளபளக்கும் அடுப்பு; வழுவழுப்பு அலமாரிகள்; ஆட்டுக்கல், அம்மி ஒன்று கிடையாது தேங்காயரைக்க. தோசைமாவரைக்க மிசினாம். துணிகளைச் சுருட்டி ஒரு மிசினில் போடுகிறார்கள். அது குய்யென்ற ஓர் ஓசையுடன் துவைத்து அலசிப் பிழிந்து கொடுக்கிறது.

இரண்டு பேருமாக அவர்கள் சமையலறையில் வேலை செய்கையில், இவள் பீங்கான் கிண்ணக் காபியை வைத்துக் கொண்டு எங்கே உட்காருவதென்று தெரியாமல் நிற்கிறாள்.

"அடாடா! பாட்டி! நீங்க இந்நேரமா நிக்கிறீங்க? வாங்க, எங்க பிள்ளையப் பார்க்க வேணாம்?

என்ன சோப்போ தெரியவில்லை; வாசனை இவள் மூக்கை நிறைக்கிறது. எதிரேயுள்ள சிறு அறையில் இரட்டைக்கட்டில்; சாப்பிடும் மேசை; இரண்டு நாற்காலிகள். கட்டிலில் கொழு கொழுவென்று ஒரு பிள்ளை. வெளேரென்று, கண்விழித்துச் சிணுங்குகிறது.

"விவேக் ராஜா? பாட்டி.. பாட்டி, வந்திட்டாங்கடா? ராஜா...!" முத்தமிட்டுப் பிள்ளையை எழுப்பி,

பாட்டியின் மடியில் வைக்க, இவளை அந்தக் கட்டில் மெத்தையில் உட்காரச் செய்கிறான்.

"வச்சுக்குங்க, பால் கொண்டு வரேன்!"

அவள் அவனை மடியில் வைத்துவிட்டுப் போகிறாள்.

குழந்தை இவள் முகத்தைப் பார்த்துவிட்டு அழ ஆரம்பிக்கிறது.

'அழுவாத ராசா' என்று சொல்ல வாயெழும்பினாலும் இவளுக்குப் பேச்சு வரவில்லை.

அவன் வருகிறான். "அட... விவேக் குட்டி; பாட்டிடா! பயந்திட்டியா? செல்லப்பாட்டி, சின்னப் பாட்டி, எங்கே பாட்டிக்கு ஒரு கிஸ் குடு!"

குழந்தையைத் தூக்கிக் கொண்டு குனிந்து அவள் சுருங்கிய கன்னத்தில் முத்தமிடச் செய்கிறான்.

இதற்குள் அவள் பால்புட்டியுடன் வருகிறாள். பாட்டி மடியில் அவனை விட்டு, பால் பாட்டிலைப் பிடித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு விரைகிறாள்.

குழந்தை பால்குடித்தானதும் கட்டிலில், அவனுடைய விளையாட்டுச் சாமான்களான கரடி பொம்மை, குட்டி பியானோ ஆகியவற்றைப் போட்டு விடுகிறாள்.

"பாட்டி, நீங்க இவனைப் பாத்துக்கிட்டிருக்கிறதிலேயே பொழுது போயிடும்..." என்று சிரிக்கிறாள்.

அவள் குளித்து, குட்டை முடியைச் சீவி, உச்சியில் 'கிளிப்' போட்டுக் கொள்கிறாள். பிறகு பவுடர் சாயமெல்லாம் போட்டு அதே அறையில் கண்ணாடிமுன் அலங்காரம் செய்து கொள்வதை இவள் ஆச்சரியத்துடன் பார்க்கிறாள். இதற்குள் தட்டுகளில் இட்டிலியும் சட்டினியும் போட்டு அவன் மேசைமீது கொண்டுவந்து வைக்கிறான்.

"பாட்டி! வாங்க சாப்பிடலாம்!"

"எனக்கு... இப்ப... வேணாம் தம்பி!"

"வேணாமெல்லாம் இல்ல. நீங்க நல்லா சாப்பிடணும். நல்லா குண்டாகணும்..." என்று மருமகள் சிரிக்கிறாள்.

"பாட்டி! நாங்க ரெண்டு பேரும் இப்ப ஆபீசுக்குப் போயிடுவோம். இவ வரச்சே அஞ்சுமணியாகும். நீங்க சந்தோசமா, இருக்கணும்னு தான் கூட்டிட்டு வந்திருக்கிறேன். இவன் இப்ப விளையாடிட்டு தூங்கிடுவான். பிறகு எழுந்ததும், இதில சோறு பிசைஞ்சு சூடா வச்சிருக்கு. குடுத்தா சாப்பிட்டுட்டு விளையாடிட்டிருப்பான். ஜூஸ் பண்ணி, பாட்டில்ல வச்சிருக்கிறா அலமாரிக்குள்ள. அதை அமுதாக் குடுங்க. பாட்டி, நீங்க வயசானவங்க. உங்களுக்குத் தெரியாதா? உங்க புள்ள..."

சிரிக்கச் சிரிக்கக் கொஞ்சிக் கொஞ்சிப். பேசுகிறார்கள். "அழவே மாட்டான். அப்படி அழுதா, பக்கத்து வீட்டு ஆயாகிட்ட சொல்லியிருக்கிறேன். ரெண்டு நாள் பழகிச்சின்னா விடவே மாட்டான்".

சொல்லிவிட்டு அவள் விரைப்பான கஞ்சி முடமுடப்புச் சேலையை மடிப்புடன் உடுத்திக் கொள்கிறாள்.

இவளுக்கு நெஞ்சில் ஏதோ பந்தாக முட்டி வருகிறது. அவனும் உடுப்பணிந்து கொள்கிறான். எல்லாம் அதே அறைதான்.

"விவேக் ராஜா.. அம்மாக்கு டாடா சொல்லு..."

இதைச் சொன்னதும் குழந்தை அழ ஆரம்பிக்கிறான்.

"நீங்க சும்மா இருக்கமாட்டீங்க. அவனுக்கு ஏன் இப்ப ஞாபகப் படுத்தணும்? நான் நைஸா வெளியே போயிருப்பேனில்ல?"

அப்படி இப்படி போக்குக் காட்டிவிட்டு அவர்கள் கதவைச் சாத்திக் கொண்டு போய்விடுகின்றனர்.

இவளுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்தக் குழந்தை, புழங்க இடமில்லாத கட்டில் மெத்தை, மேசை, மிசின்... எல்லாமே அந்நியமானவை. ஒட்டாதவை. இவர்களா உறவு? இவளை... இவர்கள் உறவும் அன்புமாகவா கூட்டிவந்திருக்கிறார்கள்? அப்படி இவர்களுடன் இவளுக்கு என்ன ஒட்டு?

அழுகைக்குரல் கேட்டோ என்னவோ யாரோ வெளியில் வந்து மணியடிக்கிறார்கள்.

கதவைத் திறக்கிறாள்.

வந்திருப்பவள் அகலக் குங்குமம் இட்டுக்கொண்டு வெற்றிலை குதப்பும் ஒரு பெண்... "ஏ... நீதான் கிராமத்துலேர்ந்து வந்த ஆயாவா?" இடுப்பில் கைவைத்துக் கொண்டு கேட்கிறாள்.

"இன்னா சம்பளம்?"

"சம்பளமா?...." 'ஒண்ணுமில்ல' என்று தலையாட்டுகிறாள்.

"ஏம்மே, உனக்குப் பைத்தியமா? நாட்டுப் பொறத்திலேர்ந்து, ஒரு காசு இல்லாம, இவ புள்ள பாக்க? புருசனும் பொஞ்சாதியும் பத்தாயிரம் சம்பாதனம் பண்ணல? நா முச்சூடும் புள்ள பாக்க, இரு நூத்தம்பது கேட்டேன். நூறுதான் தருவேன்னிச்சி. நான் இந்த வெல வாசில நாலு வூடு உழைச்சிப் பிழைக்கிறதவுட்டுப் போட்டுத்தான் வரணும்? நீ சொல்லு? இத்தினி காலமா நாந்தான் பாத்துக் கிட்டேன். கட்டுப்படியாகணுமில்ல?"

அவள் பிரும்மமாக நிற்கிறாள்.

"மவராசி, ஒரு நல்ல காபி குடுக்கமாட்டா. உனக்கென்ன பயித்தியமா? ஏன் வந்தே? எங்க வயித்தில மண்ணடிக்கவா?"

"தெரியாம வந்திட்டேனாத்தா! நெசமாலும் எனக்கு... சூழ்ச்சி பண்ணிக் கூட்டியாந்திருக்கா! சூழ்ச்சி. முன்னவும் அதா. இப்பவும் அதா! உனக்குப் புண்ணிய மாப்போவும், என்னிய அவரக் குறிச்சி வண்டில ஏத்திவுட்டுப் போடம்மா, நா அந்த மண்ணுக்குப் போறேன்..." அவள் கைகளை இறுகப் பற்றிக்கொள்கிறாள். கண்களில் நீர் மல்குகிறது.

"கவலைய வுடு. நா இதா இப்பவே உன்ன ஏத்திவுடச் சொல்றேன்..."

அன்று பகல் இரண்டரை மணி பஸ்ஸில்.. அவள் உட்கார்ந்திருக்கிறாள். அவளை ஏற்றிவிட்ட பிள்ளை... அதோ போகிறான். அந்நியமான கசகசப்புகள், கட்டடங்கள், மண்ணில்லா நெருக்கடிகள் அவள் பார்வையிலிருந்து மறைய... அவள் சொந்த மண்ணுக்கு உறவுக்குப் போகிறாள்... அப்பா! மலையாய்க் குவிந்தது பனியாய்ப் போயிற்று!

"இந்தாப்பா, சுண்டல் பொட்டலம் என்ன வெல?" பஸ்ஸில் விற்கவந்தவனைக் கேட்டு நிறுத்துகிறாள்.

உலகநாதன் நாலாவது சிகரெட்டை மூன்றாவதின் தொடர்ச்சியாய்ப் பற்றவைத்துக் கொண்டிருந்தார். காற்று கடந்து போயிற்று. சிகரெட் பற்ற வைத்த தீக்குச்சியைச் சரட்டென்று அணைத்து விட்டுக் காற்று போனவிதம் கொஞ்சம் கோபமாய் இருந்தது. "என்னத்துக்கு இப்ப சிகரெட் புடிக்கிற?" என்று கண்டிப்பது போல் இருந்தது.

உலகநாதன் எப்போதாவது சிகரெட் பிடிக்கிறவர். இன்று அதிகம். காரணம் கோபம். சம்பந்தமேயில்லாத இடத்துக்குத் தன்னை நகர்த்தி, சம்பந்தமே இல்லாத வேலையைச் செய்யச் சொல்லுகிறதே இந்த அரசாங்கம் என்கிற கோபம். செங்கல்பட்டு ஆளை மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்துக்கு இழுத்துக் கொண்டு வந்து அடிஷனல் ஃபோர்ஸ் என்று பெயரிட்டு எட்டு மணி நேரமாய், கும்மிருட்டில் புளியோதரையும், டீயும் வழங்கி உட்கார வைத்திருக்கிறார்கள்.

போலீஸ் உத்தியோகத்தில் புளியோதரையும், டீயும் புதிய விஷயமில்லை. இப்படிச்செத்த உணவு உண்ண வேண்டியிருக்கிறதே என்கிற கோபமில்லை. வெட்டவெளியில் டெண்ட்கூட இல்லாமல் எண்பது ஆட்களோடு இருட்டில் நிற்கும் செயலில்கூட ஆதங்கமில்லை. இது இயல்பு. போலீஸ் வேலையின் ஒரு பகுதி.

ஆனால் யார் எதிரி, எங்கு இருப்பு, என்ன நிலைமை, என்ன வித நடவடிக்கை... தெரியவில்லை.

முழுத் திறனோடு வரவும் என்பது கட்டளை. முழுத்திறன் என்றால் எல்லாவித ஆயுதங்கள், உபகரணங்கள். அறுபது த்ரி ஒ த்ரி ரைஃபிள், பத்து ஸ்டென்கன், இரண்டு மிஷின்கன், ஒரு பஸூக்கா, ஆறு ஒயர்லெஸ் செட், அலுமினியத் தட்டு, குவளை, குடிதண்ணீர் இத்தனையும் ஏற்றி வரும் வாகனங்களும் இதில் அடங்கும்.

அந்தி சாயும் நேரத்திற்கு போடிநாயக்கனூர் வந்து இறங்கி லோக்கல் போலீஸில் தடம் தெரிந்து கொண்டு, பதினொரு கிலோ மீட்டர் மேடுபள்ளமான சாலையில் வண்டி ஓட்டி இரண்டு கிலோமீட்டர் மார்ச் செய்து மலையடிவாரம் வந்தாகிவிட்டது.

ஏற்கெனவே மலையடிவாரத்தில் ஒரு படாலியன் இருந்தது. மச்சக்காளை பல்தெரிய வரவேற்றான். "உலகு, வா. நல்லாயிருக்கியா?" என்று கை நீட்டினான்.

மச்சக்காளை சல்யூட் அடிக்க வேண்டிய அவசியமில்லை. அவனும் சூப்பிரண்டென்டெண்ட் ஆஃப் போலீஸ்தான். உலகநாதனும் சூப்பிரண்டென்டெண்ட் ஆஃப் போலீஸ்தான். மச்சக்காளை மதுரை. உலகநாதன் செங்கல்பட்டு. ஓர் இடத்தின் தலைமைப் பொறுப்பு ஏற்று அந்த இடத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்து அடிஷனல் ஃபோர்ஸ் கேட்டு அவனுக்குத் துணையாய் வந்திருப்பதால் இது ஒரு ரிப்போர்ட்டிங் மாதிரி ஆகிறது. ரிப்போர்ட் செய்கிறவர், ரிப்போர்ட் வாங்குகிறவருக்கு மரியாதை செய்வது மரபு.

கை குலுக்கியபின் மெல்ல விரைப்பாகி மிருதுவாய் சல்யூட் செய்து, 'செங்கல்பட் ரிசர்வ் போலீஸ் செவன்த் கம்பெனி தேர்ட் படாலியன் ரிப்போர்ட்டிங் சார்'.

அவர் மரபு கடைப்பிடிக்க, மச்சக்காளை பளிச்சென்று விரைப்பாகி முழுவேகத்துடன் சல்யூட் செய்து, "தாங்க் யூ சார்" என்றான்; தளர்ந்தான்.

"என்ன பிரச்னை மச்சக்காளை?"

"சொல்றேன். உட்காரு. டேய்".

மடக்கு நாற்காலி ஒன்று கொண்டு வரப்பட்டது. தரையில் அழுந்த வைக்கப்பட்டது.

"டீ குடுய்யா. உட்காரு, உலகு. நல்லாயிருக்கியா?"

"இருக்கேன் மச்சக்காளை. நாலு வருஷமாச்சு பார்த்து".

"ஆமா. சின்னவரு சீக்கா அமெரிக்கா போனபோது பார்த்தமா ஏர்போர்ட்ல?" சின்னவர் என்பது அப்போதைய முதல் மந்திரி.

"ஆமா".

"உன் பசங்க நல்லாருக்கா? வீட்ல எப்படி?"

"நல்லாருக்காங்கப்பா எல்லாரும். என்ன இங்க பிரச்னை?"

"கஞ்சாப் பயிரு. திடீர்னு முழிச்சுக்கிட்டு மடக்கு, மடக்குன்னு கத்தறாங்க. மலைக்கு நாலு பக்கமும் மடக்கி உட்கார்ந்திருக்கோம்".

"ஏன் மேலே போகல?"

"போவாதேன்றாங்க. அது தவிர..."

"அது தவிர?"

"மேலே ஏ.கே.47 வச்சிருக்கான். உள்ள போனா சரமாரியா சுடறான். நாலைஞ்சு ஏ.கே.47 இருக்கும் போல. மரத்தையே பொத்துக்கிட்டு வருது"

"ஏறினியா?"

"ஆறு தரம் முயற்சி செய்தேன்".

"அடிபட்டிருக்கா யாருக்கும்?"

"இல்லை. அடிபடற நெருக்கத்துக்குப் போவலை. புஜ்ஜு, புஜ்ஜுன்னு சவுண்டே ஏ.கே.47ன்னு சொல்லுது".

"பதிலுக்கு சுடறதானே?"

"சுட்டமே. கத்தாழைல பட்டு நம்ம தலைமேலேயே விழுது. எதிரி டாப் பொஸிஷன். சின்ன மூவ்மெண்ட்கூடத்தெரியுது".

"பஸூக்கா போடறது?"

"கூடாதாம்".

"ஏன்?"

"மேல பழங்குடி, ஏதோ நாயக்கர்னு ஆதிவாசிங்க பத்து குடும்பம் இருக்காம். இரண்டாயிரம் வருஷத்துல இவங்க தான் கடைசி தலைமுறையாம்.

பாலகுமாரன்

பஸுக்கா போட்டு ஒழிச்சிறக் கூடாதாம்".

"நாம் முக்கியமா? நாயக்கரு முக்கியமா?"

"தெரியலையே. பேசாமே உட்கார்ந்துட்டோம்".

"எத்தினி நாளா நடக்குது?"

"நாலு நாள்".

"சாப்பிடறதுக்கு எப்படி?"

"அப்பப்ப ஏதோ கொண்ணாந்து கொட்டறான்."

"கஞ்சாப் பயிருக்குக் காவல் காக்கறமா?"

"அப்படித்தான் ஆயிட்டுருக்கு".

"அப்ப ஏன் அடிஷனல் ஃபோர்ஸ்?"

"என்னை ரிலீவ் பண்ணனும்".

"ஐயோ!"

"ஒரேமுட்டா இல்ல. ஒரு நைட். தூக்கம் வேணும். யாரும் தூங்கலை".

"இவ்வளவுதானா? பிறகு திரும்பிடலாமா?"

"தெரியலையே!"

"யார் கேட்டது அடிஷனல் ஃபோர்ஸ்?"

"நான் கேட்கலை. கலெக்டரா ஏதோ திட்டம் போடறாரு. கோட்டைலேர்ந்து தினம் உத்தரவு வருது. என் புத்திக்கு, உன்னையக் கூப்பிட்டுருக்கிறது பார்த்தா அட்டாக் செய்யச் சொல்லுவாங்கன்னு படுது".

"ஏன்?"

"நீ கொஞ்சம் துணிச்சலான ஆளு. உள்ள பூந்து எதுனா செய்யவே. சும்மா இருக்க மாட்டேன்னு தெரியும்".

சொல்லிவிட்டு மச்சக்காளை வாய்விட்டுச் சிரித்தான். இது கேலியா, இல்லை பாராட்டா என்று புரியவில்லை. ஆனால் இது உண்மை. நாலு நாள் மலையடிவாரத்தில் உட்கார்ந்திருக்க உலகநாதனால் முடியாது. இந்நேரம் இரண்டில் ஒன்று தெரிந்திருக்கும். 'ஒண்ணு நான். இல்ல நீ...' என்று கஞ்சாப் பயிர் ஆளோடு மோத நேர்ந்திருக்கும். காட்டு நாயக்கர் கதையெல்லாம் உலகநாதனிடம் செல்லுபடியாகாது.

"மேலேர்ந்து சுடறான். நான் என்னையப் பார்ப்பேனா? நாயக்கர நினைப்பேனா? போங்க சார். பதிலுக்குச் சுட்டேன். பதினோரு பேர் காலி" என்று ரிப்போர்ட்டிங் நடந்திருக்கும்.

ஆனால் இது அடிஷனல் ஃபோர்ஸ். முதல் ஃபோர்ஸ் கட்டளையிட அடிஷனல் ஃபோர்ஸ் அதன்படி நடக்க வேண்டும். மச்சக்காளையும், உலகநாதனும் ஒரே பதவி என்றாலும் இந்த நேரம் மச்சக்காளை உசத்தி. மச்சக்காளைதான் தலைமை. மச்சக்காளை ஆட்கள் தூங்கும் போது உலகநாதன் ஆட்கள் காவல். ஏனெனில் இது கூடுதல் படை. துணைக்கு வந்த தோழமை.

ஆனால் மச்சக்காளையுடன் தோழமை என்பது குமட்டலான விஷயம். அவன் வேஷதாரி. தூங்குபவர் கழுத்தை அறுக்கிற ஆள். பிரதமர் வந்தால் முன்னால் போய் நிற்பதும், பிரச்னையாகித் தடியடி நடந்தால் பின்னே போய் என்ன ஏது என்று கேட்பதும் அவன் வாடிக்கை. கொஞ்சம் நரி. பெரிய கோழை. முகத்தில் மீசையும் பவுடரும் அதிகம் இருக்குமே தவிர சரக்கு இல்லாத ஆள். நாலுநாள் பல்லு குத்தி உட்கார இவனால் தான் முடியும்.

மச்சக்காளை கம்பெனி நகர்ந்து பின்வாங்கி உலகநாதன் ஆட்கள் பொஸிஷன் எடுத்துக் கொள்ள அரைமணி நேரம் ஆனது. "ஆதிவாசிங்க அப்பப்ப ஒத்த ஆளா வருவாங்க. சுட்றாதீங்க. குரல் கொடுக்கப் பதில் குரல் வரும். வரலேன்னா பயமுறுத்த வானத்தை நோக்கிச் சுடுங்க. ரொம்ப டெலிகேட் வேலை இது. ஆதிவாசிச் சுட்டா பெரிசாப் போயிடும். ஜாக்கிரதை".

மச்சக்காளை நின்று பயமுறுத்திவிட்டுப் போனான்.

"யாருய்யா கஞ்சாப் பயிரு?"

"யாருக்குத் தெரியும்? யாரோ மலையாளத்தான்னு பேசிக்கறாங்க". மச்சக்காளை இறங்கிய படியே பேசினான்.

"ஆனா பயிரு செய்றவன் மலையாளி. வாங்கி விக்கிறவன் நம்மாளுதான்".

"யாரு அது வாங்கி விக்கிறது?"

"அரசியல் ஆளுங்க. ஊர் பெரிய மனுஷனுங்க நாலுபேர்"

"மேலயா இருக்கறானுவ?"

"அவன் ஏன் மலைல இருக்கான்? மதுரைல உக்காந்துக் கிட்டுப் போலீஸ் அராஜகம்னு பத்திரிகைக்கு நியூஸ் விடறான்".

"என்னய்யா பைத்தியக்கார வேலையா இருக்குதே!"

"சிரைக்க வந்துட்டம். நாறுதேன்னா முடியுமா?"

மச்சக்காளையின் அம்பாஸிடர் கார் மெல்லப் பள்ளங்களில் போயிற்று. உலகநாதன் கார் மெல்ல அதே விதமாய் மலையடிவாரம் வந்தது. எட்டு மணி நேரமாய் உலகநாதன் செய்வது அறியாது நிற்கிறார். நாலாவது சிகரெட் முடிந்ததும் தூக்கியெறிந்து விட்டுக் குறுக்கும் நெடுக்கும் நடந்தார். மலையை உற்றுப்பார்த்தார்.

"எதுனா நடமாட்டம் தெரியுதா?"

"இல்லை சார்".

புரியவில்லை. பெரிய கருப்போடு பேசலாமா? மெல்ல ஷூ நாடாக்களை அவிழ்த்துவிட்டுக் காலை உருவி சேரின் கம்பியில் வைத்துக் கொண்டு கண் மூடினார்.

வீடு, வாசல், அம்மா, அப்பா, அக்கா, தம்பி எல்லாரையும் மனசுள் நினைத்து அனைவரையும் மனசுக்குள் அழைத்தார். வீட்டுக்கு எதிரே இருந்த கோயிலுக்குள் சகலரோடும் நுழைந்தார்.

கோயிலா அது? கோயில் மாதிரி இடம். கோபுரம், கூரை இல்லாத இடம். ஒரு வேப்பமரம். சுற்றி ஆளுயரச் சுவர். கீழே கருங்கல் தளம். வேப்பமரத் தடியில் கிழக்குப் பார்த்து ஒரு பெரிய சூலம். எதிரே பலி பீடம். இது தான் கோயில். பெரிய கருப்பு கோயில்.

பெரிய கருப்பு அவர் குல தெய்வம். அவர் வீட்டில் தலைமுறை தலைமுறையாய் வழிபடும் கடவுள்.

"பெரிய கருப்பு கிட்ட ஜோஸ்யம் கேட்காதடா. இது நடக்குமா நடக்காதான்னு கேட்காத. பெரிய கருப்பு எனக்கு இன்னது வேணும்னு கேளு. நேர பேசு. மனசுவிட்டு உன் தாத்தாகிட்ட, அண்ணாகிட்ட பேசற மாதிரி பேசு. அத்தினி தைரியமா எப்ப கேட்க முடியும்? உங்கிட்ட ஒரு

நியாயம் இருக்கும். உன்கிட்ட ஒரு நல்ல குணம் வரும். அப்ப அதுகிட்டக் கேளு.

பெரிய கருப்புகிட்டப் போய் அடுத்தவன் பொண்டாட்டி வேணும்னு கேப்பியா? கேக்கத் தான் தைரியம் வருமா? லஞ்சம் வாங்கப் போவணும். உதவி செய்யணும்னு வேண்டுதல் வருமா? வராதில்லே...?அதான்.

உள் மனசு சுத்தமா இருந்து உனக்குப் பிரச்னை வந்தா நேரா பெரிய கருப்புக்கிட்ட வா. எனக்கு இது செய்னு கட்டளை போடு. வேண்டுதல் வேணாம். கட்டளை தான். உத்தரவுதான். கண்டிப்புக் காட்டு. உடனே நடக்கும். நம்ம பெரிய கருப்பு கைமேல பலன் தரும்".

தந்திருக்கிறது. கேட்டது கிடைத் திருக்கிறது. பெரிய கருப்பு, நம்ம தலைமுறைல நான் மட்டும் படிக்கறேன். என்னை பி.ஏ.எம்.ஏ. படிக்க வக்காதே. நான் ஐ.பி.எஸ். படிக்கணும். வழிகாட்டு".

மறுநாளே காட்டியது.

"நல்லாப் படிச்சிருக்கேன் பெரிய கருப்பு. நாளைக்கு இன்டர்வ்யூ. நீகூட இரு".

இருந்திருக்கிறது.

"பெரிய கருப்பு. ட்ரெயினிங் முடிச்சுட்டேன். தமிழ்நாட்ல உத்தி யோகம் கொடுக்கணும். எந்த மூலைல இருந்தாலும் சரி. தமிழ் நாடா இருக்கணும்".

தந்திருக்கிறது.

தோல்வி என்று எதுவும் வந்த தில்லை. வேதனை என்று எதுவும் தந்ததில்லை. ஏனெனில் எவரை யும் வேதனைப்படுத்தியதில்லை. எவரையும் இழித்துப் பேசிய தில்லை. எந்த நேரமும், எதற்கும் ஆத்திரப்பட்டதில்லை. அசூயை கொண்டதில்லை.

உயர்வுக்கு உழைப்பு காரணமா? பெரிய கருப்பு காரணமா?

இரண்டும்.

'ஐ.பி.எஸ். கஷ்டப்பட்டுப் பாஸ் செய்தேன். என்கூடப் படிச்சவன் ஒரிஸாவுக்குப் போயிட்டான். என்னை பெரிய கருப்பு செங் கல்பட்டுல போட்டுச்சு. என்னை ஏன் ராஜஸ்தான்ல போடல? அது பெரிய கருப்பு காரியம். வந்து பதவியை ஏத்து மறுமாசம் சாராயக் கேஸ்ல பெரிய ஆளு புடிச்சேன். தப்புன்னாங்க. நான் விடலை. பெரிய கருப்புக்கிட்ட எனக்குக் கெட்டபேர் கூடாதுன்னு கட்டளைபோட்டேன். பெரிய ஆளு தானா சரண்டர் லெட்டர் தந்துட் டான். அரிசிக் கடத்தல்ல லாரி மடக்கினேன். மந்திரிங்க போன் போட்டுத் திட்டினாங்க. பெரிய கருப்பு என்ன இதுன்னு சத்தம் போட்டேன். கடத்தல் ஆளு வேற கொலைக் கேஸ்ல மாட்டினான். லாரி இன்னும் போலீஸ்லதான் நிக்குது. மனுஷாளுக்கு உழைப்பு மட்டும் போதாது. தெய்வம் துணை நிக்கணும்'.

மனசில் ஓடிய எண்ணங் களுடன் சூப்பிரண்டென்டெண்ட் உலகநாதன் பெரிய கருப்புக்கு முன்னால் கைகூப்பி நின்றார்.

'என்ன பெரிய கருப்பு காட்ல உட்கார வச்சுட்ட?'

'நல்லதுக்கு' என்று மனசு சொல் லியது.

→

'சோத்துக்கே கஷ்டமாயிடும் போலயிருக்கே! எண்பது பேர் இருக்கமே!'

"சோறு வரும்" மனசு பேசியது.

"பூச்சி பொட்டு இருக்கற இடம் பெரிய கருப்பு".

"வராது" உள்குரல் அடித்து சொல்லியது.

'சரி' கும்பிட்டார்.

தலை நிமிர்ந்தார். மெல்ல மலையடிவாரம் சுற்றி நடந்தார்.

'சார்...' குரல் கேட்டது.

'யாரு?'

'எய்ட் டொன்டி சார். உங்க இடப்பக்கம் இருக்கேன்'.

'என்ன?' நடந்தார்.

'ஆள் வருது'.

'அலெர்ட்'. சட்டென்று புதர் மறைவில் உட்கார்ந்து எய்ட் டொன்டி காட்டிய இடம் பார்த்தார். மேலே லுங்கி போர்த்தி ஒத்தை ஆள் தலைப்பாகை கட்டி நடந்து வந்து கொண்டிருந்தான்.

'குரல் குடு'.

'டேய்...'

பதிலுக்கு ஊய் என்று அவன் நின்று குரல் கொடுத்தான். இறங்கி வந்தான்.

'யாருடா நீ?' கொத்தாய்ப் பிடித்தார்.

"காட்டு நாய்க்கருங்க".

"என்ன பண்ற மேலே?"

"சும்மாதான் இருக்கிறோம்".

"சாப்பாட்டுக்கு என்ன செய்றீங்கன்னு கேட்கிறேன்".

'தேன் அறுக்கறது, பாம்பு பிடிக்கிறது, மரம் வெட்டறது, சுமைகூலி ஆளு கேப்பாங்க. அப்ப சுமை கூலிக்குப் . போறது'. பயப்படாமல் பதில் சொன்னான்.

"என்ன சுமை?"

"கஞ்சாப் பயிருதான். தலைக்கு எட்டு ருவா தருவான்".

உலகநாதன் இருட்டில் டார்ச் அடித்து முகம் பார்த்தார். முகத்தில் வறுமை எழுதி ஒட்டியிருந்தது. மனசுள் எதோ ஒரு சந்தேகம் தட்டியது.

'காட்டு நாயக்கன்தானா நீ?'

'ஆமாங்க'.

"உட்கார் அப்படி".

'போடிக்குப் போகணும்'.

'போகக் கூடாது. அப்படி உட்கார்'.

அவன் மெல்ல நகர்ந்து அவருடைய அம்பாஸிடர் கார் பக்கத்தில் குத்திட்டு உட்கார்ந்தான். தொலைவில் சோற்று ஜீப் குலுங்கிக் குலுங்கி வந்தது.

அவருக்கென்று ப்ளாஸ்கில் சூப்பும் அட்டைப் பெட்டியில் வான்கோழி பிரியாணியும், மினரல் வாட்டர் பாட்டிலும் வந்தன. காவலர்களுக்குக் காரக் குழம்பும், வெள்ளைச் சோறும், தனித் தனியே பொட்டலம் கட்டின இறைச்சித் துண்டுகளும் இறங்கின.

எதிரே மலை அமைதியாய் இருந்தது.

ரிவால்வருடன் கூடிய இடுப்பு பெல்ட்டை அவிழ்த்து வண்டியில் போட்டுவிட்டு கைகழுவிச் சாப்பிட்டார். சின்ன ஏப்பம் விட்டார்.

வந்த ஜீப்பில் ஒரு ஸ்டூல் இறங்க அதைக்காலுக்கு வைத்து மடக்குச் சேரில் சாய்ந்து கண் மூடினார். தூக்கம் இல்லை. விழிப்பும் இல்லை. அமைதியான அயர்வு அது.

படீரென்று துப்பாக்கிச் சப்தம் காது துளைத்தது. சரக்கென்று நிமிர்ந்து உட்கார்ந்து காது தீட்ட, மலை அமைதியாய் இருந்தது.

"என்னய்யா இது?"

"மிஸ் ஃபயர் சார்". யாரோ குரல் கொடுத்தார்கள். தொலைவில் குசுகுசுவென்று ஆட்கள் பேச்சுக் குரல் கேட்டது.

"என்னய்யா இது, எடுத்தவுடன் மிஸ் ஃபயரா? யாரு அது?"

'கார்மேகம் சார்'.

'எந்தக் கார்மேகம்?'

'உங்க டிரைவர் சார்'.

'என்ன...' உள்ளே லேசாய் கலவரம் மூண்டது. எழுந்து முன்னேறினார். தன் டிரைவரிடம் ஏது ஆயுதம்? எதற்கு துப்பாக்கி? காருக்குப் பின்னே இருந்து காவலர்கள் வெளியே வந்தார்கள். அவர் வரவு கண்டு விலகி நின்றார்கள்.

கார்மேகம் ஓடிவந்தான்.

"ஐயா... ஐயா" என்று கத்தினான். குரலில் அழுகை இருந்தது.

"சுட்டுட்டேங்க, உங்க துப்பாக்கியாலே சுட்டுட்டேங்க. வெடிக்காதுன்னு நினைச்சு அழுத்தினேன். வெடிச்சிடுச்சுங்க".

"என்னய்யா ஆச்சு?"

"செத்துட்டான் சார். பாயிண்ட் ப்ளாங்க்".

"யாரு?"

"மலைலேர்ந்து வந்த ஆளு. இங்கன உட்காருன்னு சொன்னீங்களே...அந்தாளு".

"பெரிய கருப்பு..." உள்ளே பயத்தோடு குரல் எழுந்தது. "என் ரிவால்வரா?" கவலை புரண்டது. "ஏன் எடுத்தான்?" கேள்வி இறங்கியது.

ஒரு ரிவால்வரில் ஆறு சேம்பர்கள். ஆறு புல்லட் போடும் துளைகள் இருக்கும். முதல் இரண்டு சேம்பரையும் காலியாக வைத்துவிட்டு நாலு சேம்பரில் புல்லட் போட்டு வைத்திருப்பது உலகநாதன் பழக்கம்.

'சுட்டுடுவேன்' என்று பயமுறுத்தி க்ளிக் செய்து எதிரியின் மனோ நிலையைக் குலைய வைக்க அப்படிச் செய்வது வழக்கம். அதைக் கார்மேகம் எடுத்திருக்கிறான். உணவுக்குப் போகுமுன் கழற்றிப் பின்சீட்டில் வைத்ததை உருவியிருக்கிறான். காருக்குக் கீழே உட்கார்ந்திருந்த காட்டு நாயக்கனைச் சுட்டுருவேன் என்று பயமுறுத்தியிருக்கிறான். சும்மா தமாஷுக்குத்தானே என்று அந்த ஆள் சிரிக்க, தமாஷா... தமாஷ் துப்பாக்கியா இது என்று வானம் நோக்கிச்சுட, வெறும் க்ளிக். கார்மேகம் ஆச்சரியமானான். மறுபடி வானம் நோக்கி ஏன் சுடவில்லை என்று சோதிக்க மறுபடியும் வெறும் க்ளிக். ஐயா புல்லட்டே போடலை போலிருக்கு. துப்பாக்கியைக் காட்டு நாயக்கன் முகத்துக்கு நேரே நீட்டி மூன்றாவது க்ளிக் செய்ய வெடித்து விட்டது. நெத்திக்கு நடுவே குண்டு பாய்ந்து பின்தலை சிதறிவிட்டது. முகம் முழுக்க ரத்தமயம். அந்த ஆள் இறந்து போனான்.

"என்னைக் காப்பாத்துங்க... என்னை எப்படியாவது காப்பாத்துங்கய்யா. போலீஸக் கண்டா மலைல எந்த ஆளும் பயப்பட மாட்டோம்னான். பயமுறுத்த சுட்டேன். இரண்டு தரம் சுடலைன்

னதும் ரவையில்லையோன்னு அவனை மிரட்டறதுக்காக சும்மாங் காட்டியும் சுடற மாதிரி அமுத்தி னேன். நிஜமாகவே வெடிச்சிடுச் சுங்கய்யா. என்னை எப்படி யாவது காப்பாத்துங்கய்யா. மூணு பசங்கய்யா எனக்கு!" அழுகை ஓலம். ஊதல், கலவரம். ஆட்கள் அலை மோதினார்கள். இருட்டில் தடுமாறி முன்னும், பின்னும் அலைந்தார்கள்.

"அழுவாதே கார்மேகம். ஐயா காப்பாத்துவார். மனம் தளர வுடாத...." யாரோ அவனை உலுக்கிச் சமாதானப்படுத்தி னார்கள். தரையில் விழுந்து புரண்டவனை எழுப்பி அப்புறப் படுத்தினார்கள்.

தன்னை யார் காப்பாற்றுவது? உலகநாதனுக்குக் கேள்வி வந்தது.

"உன் துப்பாக்கிய ஏன் கழற்றி வச்சே?"

"அத எப்படி உன் டிரைவர் எடுத்தான்?"

"...இதுக்கு முன்னாடி எடுத் துருக்கானா?"

'இன்னொருத்தர் எடுக்கும் படியா வெப்பன் வைக்கறது தப்பு. போலீஸ் அதிகாரியே இப்படி செஞ்சா... கான்ஸ்டபிள் துப் பாக்கிக் கட்டய தலைமாட்டில வச்சிட்டு தூங்குவான். இறங்கு கீழே இறங்கு. நீ சுப்பிரண்டென் டெண்ட் இல்லை. இறங்கு கீழே!''


கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கேலி பேசி... பதவி இறக்கம் செய்வார்கள்.

"நல்லவேளை டிரைவர் எடுத் தான். உலகநாதன் பொண்டாட்டி எடுத்திருந்தா என்ன ஆவும். நாலு குண்டையும் சுட்டுட்டுத்தான் நின்னிருப்பாங்க".

"நாலு குண்டா? யாரை?"

"உலகநாதனைத்தான். எந்தப் பொண்டாட்டிக்குப் போலீஸ் காரனைப் பிடிக்கும்? சொல்லு?"

சிரிப்பு பரவும்.



இந்தச் சிரிப்போடு பதவி போகும். வேலை நீக்கம்கூட வரலாம்.

"பெரிய கருப்பு, என்னப்பா... என்னப்பா?" உள்ளே அரற்றினார். கண்மூடி மனசுக்குள் கூப்பிட்டார். 'நான் தவறு செய்யலை கருப்பு. சோத்துக்கு அவிழ்த்த பெல்ட். அவன் கைலகூடக் கொடுக்கலை. என் இடத்துல வச்ச பெல்ட். இத்தினி படிக்க வச்சு, இத்தினி உசர கொண்டுவந்து, என்னை இப்படி அவலமா நிக்கவச்சிட்டியே! பெரிய கருப்பு! என்னைக் காப்பாத்து. என்னைக் காப்பாத்தறது உன் கடமை". உள்ளே அரற்றினார்.

"சும்மா இரு. நானிருக்கேன்" உள்ளே குரல் கேட்டது. கேட்ட மறுவினாடி செடேய்ங் என்று மலை உச்சியில் ஏ.கே.47 சீறியது.

"பொஸிஷன்.... பொஸிஷன்" கூவினார். குப்புறப் படுத்து, முழங்கை ஊன்றி ஒயர்லெஸ்சுக்கு பாம்பாய் நகர்ந்தார்.

சரமாரியாய்த் தலைக்கு மேலே குண்டு பறந்தது. கிளைகளை முறித்துத் தள்ளியது.

"ஹலோ போடி... ஹலோ போடி".

நிலைமையை கலெக்டருக்கு விளக்கினார்.

பதிலுக்குத் தாக்க உத்தரவு கிடைத்தது.

மடமடவென்று தலை குனிந்தபடி ஓடி முதல் பொஸிஷனில் போனார். இருட்டில் தீப்பிழம்பு கக்கும் இடம் தெரிந்தது. பஸூக்காவைக் கொண்டு வரச் சொன்னார். உள்ளே ராக்கெட் திணித்தார். சரசரவென்று புதர்களிடையே முன்னேறி எதிரி ஏ.கே.47 தீ கக்கும் இடம் தெளிவாய்த் தெரியும் பாறைக்கு ஏறி பஸூக்கா இயக்க ராக்கெட் பறந்து இலக்கைத் தாக்கிச் சிதறியது.

எதிர்ப்பக்கம் ஓசை அடங்கி மறுபடி சீறத்தொடங்கியது. இடம் மாறினார். இடைவிடாது மெஷின் கன் அடி கொடுத்தார் ஸ்டன்கன் முன்னேறச் சொல்லி குறிப்பிட்ட எல்லை வந்ததும் இயக்கச் சொன்னார்.

எதிரிகள் பின்னடைவது தெரிந்தது. முன்னேறினார். ராக்கெட் தாக்கின இடம் வந்தது. ஆறேழு உடல்கள் கிடந்தன. மலைக்கு மறுபக்கச் சரிவில் டார்ச் விளக்குகள் நகர்வது தெரிந்தது. உச்சியில் பதுங்கு குழி வெட்ட உத்தரவிட்டார். டார்ச் விளக்குகள் நோக்கி மறுபடி பஸூக்கா அடித்தார். முன்னேறலாமா என்று போனபோது, "சார் கண்ணி வெடி" என்று யாரோ கத்தினார்கள்.

பெரிய ஒயர் காட்டினார்கள். அந்த ஒயரில் வேறு ஒயர் பின்னி குப்புறப்படுத்து இழுக்க மூன்று நான்கு கண்ணி வெடிகள் வெடித்தன. முகம் முழுவதும் மண் விழுந்தது. சிறு கற்கள் தாக்கின.

கீழே கார் வெளிச்சம் தெரிந்தது.

ஒயர்லெஸில் மச்சக்காளை வரவு தெரிவிக்கப்பட்டது.

"வரவேணாம். அங்கேயே இருக்கட்டும். விடிஞ்சு வரட்டும். வழி முழுக்க கண்ணி வெடி".

எதிர்ப்பக்கம் சுத்தமாய் சத்தம் இல்லை. மெல்ல விடிந்தது. தாக்கிப் பிடித்த பொஸிஷனில் ஆட்களை இன்னும் ஸ்திரமாய் நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினார்.

மச்சக்காளை க்ளியரன்ஸ் கேட்டான்.

"வா இப்ப வா".

சுடப்பட்ட எதிரிகளின் உடல்கள் கீழே வந்தன. கார்மேகம் சுட்டவனுக்கு அருகே கிடத்தப்பட்டன.

"ஐயா, இப்ப சரியாயிடுங்களா? கார்மேகம் குரலில் பயமும் சந்தோஷமும் இருந்தன.

"தெரியாது, கார்மேகம்".

"இது ரிப்போர்ட் ஆவுங்களா?"

"ஆவும்".

"ஐயா".

"போ அப்பால".

"ஐயா நான் புள்ளைகுட்டிக்காரன்".

"செத்தவனுக்குப் புள்ளை இருக்காதா? ஓர் ஆதிவாசியை, பொழப்புக்கு மூட்டை தூக்கறவனைச் சுட்டிருக்க்யே. அவன் குழந்தை அழுவாதா? போ அப்பால".

மச்சக்காளை வண்டி வந்தது. வேறு மாவட்ட ஃபோர்ஸ் வந்தது.

"என்ன ஆச்சு உலகநாதன்?"

"சுட்டான். சுட்டேன். ஏழு பேர் பலி".

"நம்ம பக்கம்?"

"யாருமில்லை. கண்ணிவெடி தாக்கி கண்ணு மூக்குல கொஞ்சம் பேருக்கு அடி".

மச்சக்காளை மூடிய உடல்களை உருவிப் பார்க்க முகம் மலர்ந்தான். "அடிசக்கை... இந்த சொறி நாயைத்தான் ரொம்ப நாளாதேடிட்டு இருந்தேன்".

"யாரு?"

"நெத்தில அடிவாங்கியிருக்கானே இவன்தான்".

"இவன் காட்டு நாயக்கராமே".

"இவனா... யார் சொன்னா? இவன் உளுந்தூர்பேட்டைக்காரன். பெரிய ரௌடி. இவன்தான் மலைல இருக்க்றவனுக்கு ஏஜெண்ட். பல கேஸ் இருக்கு. பாயிண்ட் ப்ளாங்க்ல காட்டுக்குள்ள யாரு சுட்டது?"

"என் டிரைவர். என் துப்பாக்கியால சுட்டுட்டான். மிஸ் ஹாண்டிலிங்".

"இந்தச் சோம்பேறி நாய இப்படித்தான் சுடணும். கண்ணி வெடி வைக்கிறவன். இவன்தான் என்னைய மலைல ஏற விடாத அடிச்ச நாறப் பொணம். ஒண்ணு செய்றியா?"

"என்ன?"

"நமக்குள்ள இருக்கணும்".

"சொல்லு மச்சக்காளை".

"இவனை நான் சுட்டதா சொல்லட்டா?"

"ஏன்?"

"இவன் தலையக் கொண்டாரேன்னு கோட்டைல சபதம் போட்டிருக்கேன்".

"உண்மைல நடந்தது என்ன தெரியுமா?"

"எதுவேணா இருக்கட்டும். என் மேலே கோபம் இல்லாத எனக்கு வுட்டுக்குடு. இவனை நான் கொன்னதா நீ சாட்சி சொல்லணும். நீ எனக்குச் செய்தா நான் உனக்கு சமயத்துல செய்யறேன்"

"மச்சக்காளை"

"உலகு, இது எனக்கு லைஃப் டைம் ரிவார்ட். இவன் வரணும்னு நாலு நாளா சோறு தண்ணி

கல்லில் கவிதை

மேத்தாதாசன்

அழகென்பது
ஆபரணங்களில் மட்டுமல்ல
கண்கள் காணுகின்ற
காட்சிகளிலும் உண்டெனில்
இந்தச் சிற்பங்கள்
இறவாத
அழகின் கர்ப்பங்கள்

எழுத்தில் வடித்தால்
இறந்துபோய்விடுமென்று
இவர்கள்
கல்லில் கவிதையைக்
கட்டிவிட்டுப் போனார்கள்.

செதுக்கிய விரல்களுக்கு
செந்தூரம் இடலாம்
நளினங்களை நட்டவர்களுக்கு
நாமாவளி பாடலாம்.

அழகின் அந்தப்புரம்
சிலைகளின் வடிவில்...
கண்களின் கௌரவம்
செதுக்கியவன் விரல்நெளிவில்...

கல்லின்
கவிதை நுணுக்கங்கள்
விழிக்கு விருந்து
அழகைத்தேடி அலையும்
தேடல்வாதிகளின்
மொழிக்கு மருந்து

காவிரி நீரால்
கர்நாடகம்
கறைபட்டாலும்
கலையாத கலையாலாவது
கர்வம் கொள்ளட்டும்.



நன்றி : பேலூர்
– ஹலபீடு சிற்பங்களுக்கு...

இல்லாத காத்துக் கிடந்தேன். இவனை எனக்குக் குடு".

"சரி".

"எழுதிரட்டா".

"என்ன?"

"ரிப்போர்ட்".

"எழுது".

முழு யுத்த விவரமும் எழுதப்பட்டு பெருமாள் என்கிற உளுந்தூர்பேட்டை ரௌடியை மச்சக்காளை மடக்கிச் சுட்டதாய் சொல்லி, மற்றவர் பெயரும் எழுதப்பட்டு, உலகநாதன் துணிச்சலான தந்திரமான முறைகள் விளக்கப்பட்டு ரிப்போர்ட் அங்கேயே எழுதிக் கையெழுத்திடப் பட்டது.

"மேற்கொண்டுஎன்ன?"

"ஸ்டென்கன் பார்ட்டியா நாப்பது ஸ்பெஷல் போலீஸ் வந்துருக்கு. இனி நானே கிளியர் செய்திடுவேன்".

"என் இடம்?"

"வரதாயிருந்தா வரலாம். அடி பட்டுருச்சுன்னு பின்னால போனா லும் போகலாம்".

"நான் போறேன்".

உலகநாதன் தன் கம்பெனி பின்னுக்கு நகர உத்தரவிட்டார். இரண்டு வரிசையாய் அவர்கள் நடந்தார்கள்.

கார்மேகம் அம்பாஸிடர் காரைத் திருப்பினான்.

"அப்ப மச்சக்காளை நான் ரிலீவ் ஆறேன்". உலகநாதன் நிமிர்ந்தார். மெல்ல சல்யூட் செய்தார்.

"யெஸ் சார்". மச்சக்காளை விரைப்பாய் அடித்த சல்யூட்டை ஏற்றுக்கொண்டார்.

வண்டியில் அமர்ந்தார்.

வண்டி குலுங்கி போடிநாயக்கனூர் நோக்கி நகர்ந்தது.

"என்னையக் காப்பாத்திட்டீங்கய்யா". கார்மேகம் தழுதழுத்தான்.

"போடில உன்னை ரிலீவ் செய்றேன். ஒரு மாசம் லீவு போட்டுட்டு வேற இடம் மாற்றல் வாங்கிட்டுப் போயிடு. இனி வராத என்கிட்ட".

"சரி ஐயா. என் நாலு தலைமுறைக்கு நாங்க உங்களுக்குக் கடன் பட்டிருக்கோம்".

"எனக்குக் கடன் படலை. பெரிய கருப்புக்குப் பட்டிருக்க".

"யாருங்க?"

"பெரிய கருப்பு?"

"யார் அது?"

"உனக்குத் தெரியாது. தெரிய வேணாம்".


உள்ளே மனசுள் கோயில் தெரிந்தது. கோயில் கட்டடம், ஒரு வேப்பமரம், அதன் அடியில் குத்திவைக்கப்பட்ட சூலம். சுற்றிச் சுவர். தரையில் கறுங்கல் வரிசை. சூப்பிரண்டெண்டெண்ட் உலகநாதன் கைகூப்பிப் பெரிய கருப்புக்கு முன்னே நின்றார்.

யாரோ சிரிக்கும் சத்தம் மனசுள் கேட்டது.



அமுதசுரபி தீபாவளி மலர் - 1991 அகரம் கோவிந்தர்வாடி போட்டோ : ஜனார்த்தனன்

அருள்மிகு தட்சிணாமூர்த்தி



கலாயோகி
கா.சி.வேங்கடரமணி

பெ.சு.மணி

எதிரே வண்ண ஓவியம்: ஜி.கே.மூர்த்தி

"ஒல்லியான உயர்ந்த உருவம்; சிறிய தலையில் சிறு குடுமி; சிறிய மோவாய்க் கட்டை; ஒரு சிந்தனை யாளர், ஓர் இலட்சியவாதி, ஒரு கவிஞர் ஆகியோரின் கண்களை ஒத்த கண்கள்; மூக்குக் கண்ணாடி வழியே தெரியும் கருவிழிகளில் கிராமத்தின் உழவர்களின் துயரங்களும், துன்பங்களும், வேதனைகளும் பிரதிபலித்தன". இவ்வாறு பால் பிரண்டன் என்னும் பிரிட்டிஷ் பத்திரிகையாளர், கா.சி.வேங்கடரமணியை முதன் முதலில் சந்தித்ததை வருணித்துள்ளார்.

பால் பிரண்டன் வருணனையில் உள்ள இறுதி வாக்கியத்தில் வெளிப்படும் கருத்துதான், கா.சி. வேங்கடரமணியின் தனிப்பெரும் சிறப்பைச் சுட்டிக் காட்டுகின்றது.

இந்தியாவின் ஆன்மா கிராமம்தான்; கிராம முன் னேற்றம்தான் நாட்டு முன்னேற்றத்தின் அளவுகோல்; கிராமத்திற்குத் திரும்புங்கள்; கிராமச் சீர்திருத்தத் திற்குப் பாடுபடுங்கள்; நகர நாகரிகத்தைவிட, கிராம நாகரிகம்தான் மேன்மையானது; பாரதப் பண்பாட்டை, தத்துவ மரபைக் கட்டிக்காத்து வருவது கிராமியப் பண்பாடே என்று பல வகைகளில் கிராமத்தின் புகழ்பாடும் எழுத்தாளராகத் தம்மை முதல் வரிசையில் முதலிடத்தில் நிறுத்திக் கொண்டவர் கா.சி. வேங்கடரமணி.

அவருடைய பதினாறு ஆங்கில நூல்களிலும், நான்கு தமிழ் நூல்களிலும் கிராம முன்னேற்றச் சிந்தனை ஊடுருவி நிற்கிறது. கிராம முன்னேற் றத்தையும் காந்தியத்தையும் இணைத்து பத்திரிகை வாயிலாகப் பாடுபட 'பாரத மணி' என்னும் பத்திரிகையை 1938 முதல் 1948 வரையில் பத்தாண்டு காலம் தமது சொத்தையெல்லாம் செலவிட்டு, விடா முயற்சியுடன், இலட்சிய ஆவேசத்துடன் நடத்தினார்.

கட்டுரையாளராக எழுத்துலகத்தில் நுழைந்து, கவிஞராக, நாவலாசிரியராக, சிறுகதை ஆசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, பதிப்பாளராக, காந்தியச் சிந்தனையாளராக, படைப்புக் கலைத்திறனாய்வாள ராக, அத்வைத வேதாந்தியாக, பல கோணங்களில் கா.சி. வேங்கடரமணியின் எழுத்துகளையும், எழுத்து களுக்கு முரண்படாத வாழ்க்கையையும் ஆய்வு செய்ய முடியும்.

அவர் ஆங்கிலத்தில் எழுதி பெரும் புகழ் பெற்றவர். பிறகு தமிழில் எழுதியும் பெரும்புகழ் கொண்டார். அவருடைய நூல்களின் விவரம் பின்வருமாறு:

ஆங்கில நூல்கள்

1. Paper Boats - 1921.
2. On The Sand - Dunes - 1923.
3. Murugan - The Tiller - 1927.
4. Highways in Astrology - 1927.
5. The Next Rung - 1928.
6. Renascent India - 1928.
7. A Day with Sambu - 1928.
8. Kandan - The Patriot - 1932.
9. Kamakotti Peetam - 1932.
10. Dr. Annie Besant - A Tribute - 1933.
11. The Indian Village - 1936.
12. Jatadharan and Other Short Stories - 1939.
13. My Ashramam Plan for Rural Uplift - 1947.
14. After Gandhiji : Our Problems - 1948.
15. The Nature of Creative Art - 1950.
16. Swaraj Constitution -

தமிழ் நூல்கள்

1. முருகன் ஓர் உழவன் - மொழிபெயர்ப்பு - 1927.
2. தேசபக்தன் கந்தன் - 1932.
3. ஜடாதரன் முதலிய கதைகள் மொழி பெயர்ப்பு - 1943.
4. சிந்தனை முழக்கம் - மொழிபெயர்ப்பு - 1963,

தெலுங்கு மொழியில் மொழி பெயர்க்கப்பெற்ற நூல்கள் வருமாறு : 1. முருகன் ஓர் உழவன். 2. தேசபக்தன் கந்தன். 3. சாம்புவுடன் ஒருநாள்.

சம்ஸ்கிருதத்தில் : 1. சாம்புவுடன் ஒரு நாள் என்னும் நூல். 'சாம்பு சர்யோபதேசம்' என்று மொழி பெயர்க்கப்பட்டது.

இந்தி மொழியிலும், 'சாம்புவுடன் ஒரு நாள்' மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

பிறப்பும் – கல்வி வளர்ச்சியும்

10.6.1891 இல் தஞ்சாவூர் மாவட்டம், காவிரிப்பூம் பட்டினத்தில் பிறந்தார். தந்தை பெயர் சித்த நாதய்யர், தாயார் பெயர் யோகாம்பாள். சகோதரி பெயர் பிரம்மவித்யா. தாம் பிறந்த லக்னத்தைப் பற்றி, "கும்ப லக்னம் கனவுக்கும் கதைக்கும்தான் லாயக்கு, கவைக்குப் பிரயோசனப்படாது என்று பெரியோர் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று வேங்கடரமணி வேடிக்கையாகக் குறிப்பிட் டுள்ளார். ஆம், அது அவர் விஷயத்தில் ஒருவிதத்தில் உண்மையாகிவிட்டது. 'எம்.ஏ.,பி.எல்' படித்துவிட்டு சென்னை நகரத்தில் வழக்கறிஞராகத் தொழில்புரிய வந்த வேங்கடரமணி, கிராம முன்னேற்றம், தேச விடுதலை முதலான 'கனவு'களில் திளைத்து, எழுத் தாளராகத் தம்மை மாற்றிக் கொண்டு, வக்கீல் தொழிலை விட்டுவிட்டார்.

முதல் பேச்சு – முதல் எழுத்து

1906 இல் மாயவரம் நேஷனல் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே, வேங்கடரமணி விடுதலைப் போராட்ட உணர்வு பெற்றார். 1905 இல் மூண்டெழுந்து பாய்ந்து பரவிய வங்கப் பிரிவினை எதிர்ப்பு இயக்கத்தின் தூண்டுதல் காரணமாக மாணவர்கள் நடத்திய கூட்டத்தில் வங்கப் பிரிவினையை எதிர்த்து வேங்கடரமணி பேசியதுதான் அவருடைய முதல் பேச்சு. அப் பொழுது கல்கத்தாவில் இருந்து வெளிவந்த 'வந்தே மாதரம்' என்னும் ஆங்கில மொழிப் பத்திரிகையில் அரவிந்தர் எழுத்துகளைப் படித்து மனனம் செய்தவர் வேங்கடரமணி. இவ்வாறு பிரபல ஆங்கில மொழி நாவலரான எட்மண்ட் பர்க் என்பவரின் ஆங்கில எழுத்துகளிலும் பெரிதும் ஈடுபட்டு அவற்றையும் மனனம் செய்தவர் வேங்கடரமணி. பாடநூல்களில் பெற்ற ஆங்கில மொழிப் புலமையோடு, பிரபல ஆங்கில மொழி எழுத்தாளர்களின் நூல்களைப் படித்தும் மொழிப் புலமையுடன், பொருளறிவையும் வளர்த்துக் கொண்டார். இந்த அரிய அனுபவத்தின் அடிப்படையில் மாயவரம் நகராட்சியைக் கண்டித்து ஆங்கிலத்தில் அவர் 1906 இல் – நான்காவது பாரம் படித்துக் கொண்டிருந்தபொழுதே எழுதியது, "இந்தியன் பேட்ரியட்" என்னும் சென்னை ஆங்கில தினசரியில் 'ஒரு நிருபர்' என்ற பெயரில் வெளி வந்தது. இதில் அவர் மிக தாராளமாக எட்மண்ட் பர்க், அரவிந்தர் சொல்லாட்சிகளையும், நடையையும் பிரயோகம் செய்திருந்தார். இதனால் மாயவரம் டெபுடி கலெக்டராக அன்றிருந்த வி.டி.கிருஷ்ண மாச்சாரியாரை அந்தக் கட்டுரை மிகவும் கவர்ந்தது. கட்டுரையில் கூறப்பெற்றதை விசாரணை செய்யுமாறு கட்டளையிட்டார். இதன் காரணமாகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது இந்தக் கட்டுரை.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி வேங்கடரமணியே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"இதற்கு நான் எப்பொழுதும் ஸர்.வி.டி.கிருஷ்ண மாச்சாரியாருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டவன். கவிதையின் கீர்த்தியையும், பேனா முனையின் சக்தியையும் என்னுடைய பதினாலாவது வயதிலேயே கண்டு களிக்கும் படியாகச் செய்தவர் அவர்".

முதல் நூல்

'காகித ஓடங்கள்' என்னும் பொருளுடைய 'பேப்பர் போட்ஸ்', வேங்கடரமணியின் முதல் நூலாகும். 1921 இல் வெளிவந்தது. இந்த நூல் வெளியீட்டில் இரு சிறப்புகள் உள்ளன. ஒன்று, இந்த நூல், அன்னி பெசண்ட் அம்மையாரின் 'தியோசாபிகல் சொஸைடி' வெளியீட்டுத் துறையின் சார்பில் வெளியிடப்பட்டது. இரண்டாவது சிறப்பு, இந்த நூல் அன்னிபெசண்ட் அம்மையாரின் அரிய முன்னுரையைப் பெற்றதாகும். வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி என்பதைப் போல வேங்கடரமணியின் எழுத்தாற்றலை அன்னிபெசண்ட் அம்மையார் தமது முன்னுரையில் பின்வருமாறு பாராட்டியுள்ளார்:

"இந்தச் சிறு வெளியீடு, நம்மைக் கிராமத்தில் வாழ வைக்கின்றது; அந்த வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளச் செய்கின்றது. ஆங்கிலத்தில் முற்றிலும் தலைமை பெற்றவராகத் திகழ்கின்றார். அவருடைய ஆங்கிலம், எளிமையானது; சுவைநயமுடையது; நகைச் சுவை மேவியது; அன்பின் இனிமையில் தோய்ந்திருப் பது; இவற்றை உயிரோட்டமுள்ள வருணனைகளில் காண்கின்றோம்".

தென்னிந்திய கிராம வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களைச் சொற்சித்திரங்களாகத் தீட்டியுள் ளார், வேங்கடரமணி. இந்தியப் பிச்சைக்காரன், செம்படவன், கிராம கிரிக்கெட், இந்து கோயில், என்னுடைய சிறிய 'அருணாசலம்' (அரிசனச் சிறுவனைப் பற்றியது), இந்து யாத்திரைகள், என்னுடைய பாட்டி, என் பக்கத்து வீட்டுக்காரன், ஜகத்குரு, சரஸ்வதி திருமணம் (ஒரு திருமண நிகழ்ச்சிகளை விவரிப்பது) என்னும் பத்துக் கட்டுரைகளைக் கொண்டது, 'பேப்பர் போட்ஸ்'.

'பேப்பர் போட்ஸ்' என்னும் நூலின் தலைப்பு, நமக்கு கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் 'பேப்பர் போட்'ஸை நினைவுறுத்தும். தாகூரின் 'பேப்பர் போட்ஸ்' குழந்தைகளுக்காக எழுதப் பெற்றது. குழந்தைகள் மிதக்கவிடும் காகித ஓடங்களைப் பற்றியது, தாகூரின் கவிதை.

ஓடுகின்ற நீரோடையில் நாள்தோறும் என்னுடைய
காகித ஓடங்களை ஒவ்வொன்றாக மிதக்க விடுகின்றேன்.
ஓடங்கள் ஒவ்வொன்றிலும் என் பெயரையும் கிராமத்தின் பெயரையும்
பெரிய கரிய எழுத்துகளில் எழுதுகிறேன்.

இவ்வாறு தாகூரின் குழந்தை இலக்கியம் இசைக் கின்றது.

வேங்கடரமணியோ தமது பேப்பர் போட்ஸில் தாகூரின் குழந்தை தனது பெயரையும், கிராமத்தையும் எழுதியதைப் போன்று, கிராம வாழ்க்கையைப்பெரிய வர்களுக்காக, அயல்நாட்டவர்களுக்காக எழுதினார். அவர் பெயரும் ஆங்கில இலக்கியத் திறனாய் வாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்றது "என்னு டைய காகித ஓடங்கள் தொலைதூரத் துறைமுகங் களைச் சென்றடைந்ததென்றால், அந்தப் பெருமை படகைச் செலுத்திய ஆங்கிலேயத் தலைவனுக்கு

உரியது" எனக் குறிப்பிட்டார். ஆங்கில மொழி, படகைச் செலுத்தியது என்பது இதன் பொருள்.

வேங்கடரமணிக்கு முன் பி.ஆர்.ராஜம் அய்யர், மாதவய்யா முதலானோர் ஆங்கிலத்தில் எழுதிப்புகழ் பெற்றிருந்தாலும், கிராம வாழ்க்கையை மையமாக வைத்து, அதையே முற்றிலுமாக ஆங்கிலத்தில் விளக்கி எழுதிய முதல் எழுத்தாளர் வேங்கடரமணியே ஆவார்.

'பேப்பர் போட்ஸ்' மூலம் உலக இலக்கிய அரங்கிலே இவர் நன்கு அறிமுகமானார். சிறந்த இலக்கியகர்த்தாவாகப் போற்றப்பட்டார்.

'வக்கீல்' தொழிலைத் துறந்தார்.

வேங்கடரமணி மயிலாப்பூரில் குடியேறி வழக்கறிஞராகச்சில ஆண்டுகள் தொழில் புரிந்தார். ஆனால் எழுத்தாளராகவே வாழ்க்கையை அமைத்துக்கொள்ள விதிக்கப்பட்டதால், வக்கீல் தொழிலைத் துறந்தார்; முழுநேர எழுத்தாளரானார். வழக்கறிஞராக இருந்த காலத்தில் இவருடைய எழுத்துப் பணியைப் பாராட்டி சென்னை வழக்கறிஞர் சங்கம், அல்லாடி கிருஷ்ண சாமி ஐயர் முயற்சியால், கௌரவித்தது. இவ்வாறு பாராட்டப் பெற்ற முதல் எழுத்தாளரும் இவரே. மயிலை முனீந்திரர் எஸ். சுப்பிரமணிய ஐயர், அன்னிபெசண்ட் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சனுக்கு நீண்ட கடிதம் எழுதினார். இதைப் பாராட்டி வேங்கடரமணி எழுதியதை தேச பக்தர் - வழக்கறிஞர் எஸ்.சத்தியமூர்த்தி மிகவும் பாராட்டினார். சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் வேங்கடரமணி படித்தபொழுது, சத்தியமூர்த்தி 'டியூடராக'ப் பணியாற்றினார். சத்தியமூர்த்தியின் கல்வி யோதனையைப் பாராட்டிப் பிற்காலத்தில் வேங்கடரமணி எழுதியுள்ளார்.

தமிழ் எழுத்தாளராக

ஆங்கிலத்திலேயே எழுதி வந்த வேங்கடரமணி, தமிழ் எழுத்தாளராகவும் விளங்க அவர் தொடங்கிய 'தமிழ் உலகு', 'பாரத மணி' என்னும் இதழ்கள் வழிவகுத்தன.

முதலில் 'தமிழ் உலகு' வெளிவந்ததைப் பற்றியும், அது நின்றதைப் பற்றியும் வேங்கடரமணி 22.10.1939 இல் 'பாரதமணி'யில் எழுதியதாவது :

"20 வருஷங்களுக்கு முன்பு நான் ஆங்கிலத்தில் எழுதிய 'பேப்பர் போட்ஸ்' என்னும் புத்தகத்தை கவிஞர் ரவீந்தரநாத் தாகூர் படித்து எனக்கொரு கடிதமெழுதினார். "இவ்வளவு நேர்த்தியாக எழுதும் நீ ஏன் தாய்ப் பாஷையில் எழுதி, தாய்ச் செல்வத்தைப் பெருக்கக் கூடாது?" என்று கேட்டார். உடனே அப்பொழுதே நான் பத்திரிகைத் துறையில் இறங்கினேன். பிற்காலம் வரக்கூடும் அட்வகேட் ஜெனரல் வேலையையிழந்தேன். "தமிழ் உலகு" என்று பெயரிட்டு ஒரு தமிழ் வாரப் பத்திரிகையை ஒரு வருஷ காலம் மிக்க சிரமத்துடன் நடத்தினேன். பிதுரார்ஜிதத்தில் ஒரு வேலி இழந்தேன். அந்தத் தொண்டும், அதன் கஷ்டமும், நஷ்டமும், வயலுக்கு எருப்போட்டது போல் ஆனது கண்டு களித்தேன்".

பொதுமக்கள் பிரச்னைகளை அறிவார்ந்த இலட்சிய உணர்வுடன், கருத்தாழம் மிக்க விவாதங்கள் வழியே 'தமிழ் உலகு' நடைபெற்று வந்ததாக ஒரு செய்தி கூறுகின்றது. இந்த இதழின் பழைய பிரதி ஒன்றுகூடக் கிடைக்கவில்லை.

இந்த முதல் முயற்சிக்குப் பிறகு, சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1938 இல் ''பாரதமணி'' என்னும் பெயரில் ஒரு வார இதழை மீண்டும் தொடங்கினார் வேங்கடரமணி. முதல் இதழ் "சரஸ்வதி பூஜையை ஜன்ம நட்சத்திரமாகக் கொண்டு" 2.10.1938 இல் சென்னையில் இருந்து வெளிவந்தது.

'தமிழ் உலகு', 'பாரத மணி' பத்திரிகைகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பன்னிரண்டுக்கும் மேல் நூல்கள் எழுதினார் வேங்கடரமணி. இவற்றுள் தமிழில் அவராலேயே எழுதப் பெற்றது - "தேசபக்தன் கந்தன்" என்னும் தமிழ் நாவல் 1932 இல் வெளி வந்தது. இந்த நூலின் முன்னுரையில் தமிழ்ச் சுவையிலும் தமிழ் நடையிலும் தமக்கு ஏற்பட்ட ஈடுபாட்டை பின் வருமாறு விளக்கியுள்ளார்.

"ஆங்கிலமாகிய வெல்லப்பாகின் சுவையிலே நெடு நாளாக ஆழ்ந்து களித்து வரும் எனக்குத் தாய் மொழியாகிய கொம்புத் தேனின் சுவையருமை இப்பொழுதுதான் புலப்படலாயிற்று. தமிழ் நடையிற் செல்ல நான் தயங்கிக் கொண்டிருக்கையில் எனக்கு அந்த நடை சிறிது சிறிதாகப் பழகுதற்கேற்ற நடை வண்டியாகச் சுதேசமித்திரன் வாரப்பதிப்பு கிடைக்க அதனுதவியால் நடைதிருந்தி ஓடியாடத் துணிவு பிறந்தது".

சுதேசமித்திரன் வாரப் பதிப்பு அவருக்கு நடைவண்டியாக 1932 இல் அமைந்தது. 1938 இல் 'பாரத மணி' அவருடைய கொள்கைகளைப்பிரசாரம் செய்ய பீடுநடை போட்டது. முதல் இதழிலேயே, "தாய் மொழிச் சேவையைக் கண்டு களிக்கிறேன்" என்று குறிப்பிட்டு மகிழ்ந்தார் வேங்கடரமணி. அமரர் கு.ப.ராஜகோபாலன் முதல் ஆறு மாத காலம் 'பாரத மணி'யின் உதவி ஆசிரியராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 'மணிக்கொடி'யின் ஆரம்பகால எழுத்தாளர்கள் பலர் 'பாரத மணி'யில் எழுதியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. வேங்கடரமணி "போகிற போக்கில்" என்னும் தலைப்பில் பல்வேறு நோக்குகளில் எழுதி வந்தார்.

"பாரதமணி'யின் நாக்கு, மகாத்மா காந்தியே" என்று முதல் இதழில் அறிவித்தார். கிராம முன்னேற்றமும், காந்தியமும் பாரத மணியின் இரு விழிகளெனத் திகழ்ந்தன. தற்கால இலக்கியப் படைப்புக் கருவூலத்தில் சேர்க்கத்தக்க சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள், ஓரங்க நாடகங்கள் பல பாரத மணியில் வெளிவந்தன.

'பாரத மணி' 1942 முதல் மாத இதழாக வெளி வந்தது. ஆண்டுதோறும் பாரத மணிக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளை உருக்கமுடன் எழுதி வந்தார். 1948 இல் 'பாரத மணி' நிறுத்தப்பட்டது.

வேங்கடரமணி, தமிழ் எழுத்தாளராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் வளர்ச்சியுற்றுப்புகழ்பெற 'பாரதமணி' உதவியது. அவருடைய தேக நலத்தையும், பணத்தையும் கரைத்தது. 'பாரதமணி'க்கு உழைத்து உழைத்து அவர் பெற்ற சொத்து, காசநோய்தான். 'தேசபக்தன் கந்தன்' ஒன்று மட்டுமே அவருடைய ஒரே தமிழ் நூலாக விளங்கி வருகின்றது. 'பாரத மணி'யில் அவர் பல அறிஞர்களைப் பற்றி எழுதியுள்ள கட்டுரைகள் தொகுக்கப்பெற்று, ஒரு தனி நூலாக வெளிவருமானால், அது ஒரு கட்டுரைக் களஞ்சியமாக அமையும். 'பாரத மணி'யில் பிறர் எழுதியனவற்றுள் ஐம்பது சதவிகிதத்திற்கு மேல் நூலாக்கம் பெற்று வெளிவந்துள்ளன. என். ரகுநாதய்யர், (ரஸிகன்), ரா.ஸ்ரீ.தேசிகன், ஜெயலட்சுமி சீனுவாசன் ஆகியோர் எழுதியன நூல்களாக வெளிவந்துள்ளன.

ஆங்கிலத்தில் மட்டுமே எழுதி வந்த பதினைந்து எழுத்தாளர்களைத் தமிழிலும் எழுதவைத்த பெருமையை 'பாரதமணி' மூலம் சாதித்தார், வேங்கட ரமணி.

சிறுகதை ஆசிரியராக...

வேங்கடரமணி தமிழில் சிறுகதைகள் எழுத வில்லை. அவர் ஆங்கிலத்தில் எழுதிய 'ஜடாதரன் முதலிய கதைகள், தமிழாக்கம் பெற்றுத்தனி நூலாக வெளிவந்துள்ளது. அமரர் த.நா.குமாரசுவாமி அவர்க ளால் மொழிபெயர்க்கப் பெற்று அல்லயன்ஸ் பதிப்பகத்தாரால் 1943 இல் வெளியிடப் பெற்றது. 'பாரத மணி'யில் 'கு.ப.ரா' மொழிபெயர்த்த நான்கு சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

1915 - 1925களுக்கு இடைப்பட்ட ஆண்டுகளில் 'லிடரரி ஜர்னல்', 'மெட்ராஸ் மெயில்', 'ஹிந்து', 'திரிவேணி', 'ஷார்ட் ஸ்டோரி' ஆகிய இதழ்களில் வெளிவந்த ஒன்பது சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு அவராலேயே வெளியிடப்பட்டது.

தமது முகவுரையில் அவையடக்கமாக வேங்கட ரமணி, "இவை சிறுகதைகள் என்பதைவிட, சொற் சித்திரங்கள் என்பது பொருத்தம் ஆகும். காடுகளில் படர்ந்து செல்லும் காட்டுக் கொடிகளாகும். அன்பான வாசகர்களே, இந்த இளந்தளிர்களில் மணம் வீசும் பூக்களைத் தேடாதீர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்டவாறு ஓரிரு சிறு கதைகள், சிறுகதை இலக்கணத்திற்கு ஏற்ப அமை யாமற் போனாலும், பெரும்பாலானவை சிறுகதை களுக்குரிய சிறப்புகளைக் கொண்டுள்ளன.

பழங்கால இந்திய நீதிபோதனைகளுக்குரிய பண்பு களையும், நகைச்சுவையையும், கிராம முன்னேற்ற நோக்கத்தையும் கொண்டுள்ளன, இந்தச் சிறு கதைகள்.

நாவலாசிரியராக...

கா.சி. வேங்கடரமணியைச்சிறந்த நாவலாசிரியராகப் பலரும் பரவலாக அறிந்துள்ளனர். 'முருகன் ஓர் உழவன்', 'தேசபக்தன் கந்தன்' இரண்டும் முதன் முதலில் அவரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றன. முதல் நாவல், கி.சாவித்ரி அம்மாள் என்பரால் 'கிருஷ்ணகுமாரி' என்னும் பெயரில் தமிழில் மொழியாக்கம் பெற்று வெளிவந்தது. தேசபக்தன் கந்தனை தமிழில் வேங்கடரமணியே எழுதினார்.

'முருகன் ஓர் உழவன்' வேங்கடரமணியின் கிராம முன்னேற்ற, கிராம சீரமைப்புக் கொள்கைகளை விளக்குவதாகும். இந்த நாவலில் அவர் கிராம -

கண்ணன் வருகின்றான்!



உடுப்பியில் கண்ணன் வருகின்றான்! – நல்
உதவிகள் எல்லாம் புரிகின்றான்!

கொடுப்பதற் கென்றே பிறந்தவனாம்! மனக்
குறைகளுக் கெல்லாம் மருந்தவனாம்!
நடிப்பதற் கென்றே வளர்ந்தவனாம்! படை
நடத்துதற் கென்றே கிளர்ந்தவனாம்! (உடுப்பியில்)

அண்டிய பேரை அணைப்பவனாம்! கொடும்
அரக்கரின் வாழ்வை அணைப்பவனாம்!
எண்டிசை போற்றும் எளியவனாம்! – துயர்
இருண்டிடும் போதில் ஒளியவனாம்! (உடுப்பியில்)

கோயிலி னுள்ளே "கனக"னுக்கே – வழி
கொடுக்க மறுத்தார் இனமுரைத்தார் !
வாயிலின் பின்னே திரும்பியவன் – அவன்
வரவினைத் தானே விரும்பியவன்!... (உடுப்பியில்)

நாகரிகத்தின் மேன்மையை எடுத்துக் காட்டுகின்றார். இயந்திரங்கள் காரணமாகத் தோன்றிய தொழில்மய நாகரிகமும், நகர நாகரிகமும், கிராம நாகரிகத்தை நாசமாக்காமல் காக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார். காந்தியடிகளின் 'கிராம ராஜ்ய' தத்துவக் காற்று வீசத்தொடங்கிய காலத்தில் இந்த நாவல் எழுதப் பெற்றது. கிராம முன்னேற்றம் பற்றிய வேங்கடரமணியின் சொந்தக் கருத்துகள் நாவலில் பேசப்படுகின்றன.

'தேசபக்தன் கந்தன்' ஒத்துழையாமை இயக்கத்தின் முத்த பிள்ளை' என்று வேங்கடரமணியே முகவுரையில் கூறிவிட்டார். இந்த நாவலில் காந்தியம், விடுதலைப் போரின் சங்கநாதமாக ஒலிப்பதைக் கேட்கிறோம். தேசம் விடுதலை பெறும் வரையில் தேசபக்தர்கள் 'பிரம்மசர்ய விரதம்' எடுப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. பட்டம், பதவிகளைத் துறந்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட, படித்த இளைஞர் சமுதாயம் முன்வந்ததையும் இந்த நாவல் விளக்குகின்றது. இதற்கு முன்வந்த சில நாவல்களில் விடுதலைப் போராட்டம், காந்தியடிகள் புகழ் இடைச் செருகல்களாகவே வந்துள்ளன. கதையோட்டத்தின் ஆதாரமாக வரவில்லை. ஆனால் தேசபக்தன் கந்தனில் பக்கந்தோறும், வரிதோறும் தேசிய உணர்வும், காந்தியமும் பின்னிப் பிணைந்து செல்கின்றன.

ஆகவே, தேசிய விடுதலை இயக்கத்தை முற்றிலுமாக முதன் முறையாகச் சித்திரித்த நாவல் 'தேசபக்தன் கந்தன்'தான் என்பது ஆய்வாளர்களின் முடிவு.

வேங்கடரமணியின் பிற நூல்களைவிட நாடறிந்த நூல்களாக, இந்த இரு நாவல்கள் திகழ்கின்றன. தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் புதிய திருப்பங்களைக் கண்டவை, இந்த இரு நாவல்கள்.

படைப்புக்கலைத் திறனாய்வாளர்

வேங்கடரமணி ஒரு சிறந்த ஆன்மிகவாதி; அத்வைத வேதாந்தத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்; காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சுவாமிகளின் பரம பக்தர். ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளும் வேங்கடரமணியின் எழுத்துப் பணியை நேர்முகமாகவே ஊக்குவித்து வந்தவர். இந்தப் பின்னணியில் வேங்கடரமணியின் படைப்புக்கலைத் திறனாய்வு நெறிகளை நோக்க வேண்டும்.

"படைப்புக் கலையின் உள்ளார்ந்த பண்புகள்" என்னும் அவருடைய ஆங்கில நூல் (The Nature of Creative Art) படைப்புக்கலைத் திறனாய்வு நூலாகத் திகழ்கின்றது.

காவ்யானந்தம், பிரம்மானந்தத்திற்குச் சமானமானது என்பது வேங்கடரமணியின் கோட்பாடு. படைப்புக்கலை ஒரு யோக சாதனம் என்றும் அதன் இலட்சியம் ஆத்ம போதத்தை நாடுவதாக அமைய வேண்டும் என்றும் வேங்கடரமணி விளக்குகிறார்.

மேலை நாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் கருத்துகள் பலவற்றை ஒப்புநோக்கியும், தமது கருத்துகளை வெளியிட்டுள்ளார் வேங்கடரமணி.

பதிப்புத் துறையில்...

தமது பல நூல்களை வெளியிட சுவேதாரண்ய ஆச்ரமத்தை நிறுவினார். இதன் தலைமையகம் அவர் பிறந்த ஊரான காவிரிப்பூம்பட்டினத்திலும், அதன் கிளை சென்னை மயிலாப்பூரிலும் இருந்தது.

"ஒரு கிராமத்தில் ஓர் அச்சாபீஸை ஏற்படுத்தி 'பெலிகன்', 'பெங்க்வின்' போலொத்த பிரசுராலயத்தைத் தமிழில் உண்டாக்கி லக்ஷக்கணக்காய்" நூல்கள் வெளியிடவும் பேராவல் கொண்டார் வேங்கடரமணி. தமது இந்தப் பேராவல் நிறைவேறாமற் போனதற்கு வருந்திப் பின்வருமாறு கூறியுள்ளார் வேங்கட ரமணி.

"ஆனால் நான் எதிர்பார்த்தபடி எனக்கு இன்னும் ஆதரவு கிடைக்கவில்லை. சுப்பிரமண்ய பாரதியைப் பட்டினி போட்ட தமிழ்நாடல்லவோ; 60 வருஷமாய்ப் பாடுபட்டு வரும் மஹாமஹோபாத்யாய உ.வே. சாமி

நாதய்யருக்கே தமிழ்நாடு இன்னும் தக்க ஆதரவே அளிக்கவில்லையே. நான் காத்துக் கைகட்டி வெகு காலம் நிற்கத் தயாராயிருக்கிறேன்".

சமூகத் தொண்டில்...

தமது கிராம முன்னேற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக திருக்கடையூரில் , "மார்க்கண்டேய ஆச்ரமம்" என்னும் சமூகத் தொண்டு நிறுவனத்தை 1938 இல் அமைத்தார். கிராம மக்கள் கல்வித் தொண்டிற்காக இந்த ஆச்ரமம் பாடுபட்டது. கல்வியோடு, "தியானம், சங்கீதம், வெளிவேலை, கைத்தொழில்" ஆகியனவற்றிலும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. ஆனால், இந்த நிறுவனம் வெற்றிகரமாகச் செயல்பட போதிய ஆதரவு கிட்டவில்லை.

பிற பொறுப்புகள்

சென்னையில் வழக்கறிஞராக இருந்த காலத்தில் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் 'செனட்' உறுப்பிராக இருந்தார். வட இந்திய சமஸ்தானங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் ஆய்வுரைகள் பலவற்றை நிகழ்த்தியுள்ளார். 1947 இல் ராஜஸ்தான் ஆள்வார் சமஸ்தானத்தில் கிராமப்புற முன்னேற்றம் - கல்வி ஆலோசகராகப் பணியாற்றினார். 'யுனெஸ்கோ' என்னும் சர்வதேச அமைப்புடன் தொடர்பு கொண்ட இந்திய தேசியக் குழு உறுப்பினராக 1949 இல் மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்.

அறுபதாம் ஆண்டு நிறைவு விழா

வேங்கடரமணியின் அறுபதாம் அண்டு நிறைவு விழாவில் அவரை கௌரவிக்க ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. இதில் கையெழுத்திட்டவர்கள் வருமாறு : சி.பி.ராமஸ்வாமி அய்யர், கே. ஸ்ரீநிவாசன், எஸ்.எஸ். வாசன், சி.ஆர். ஸ்ரீநிவாசன், பாப்பு சோமசுந்தரம், என். ரகுநாதய்யர், ஏ.என். சிவராமன், ஈ.ஆர்.கோவிந்தன், 'கல்கி' ஆர். கிருஷ்ணமூர்த்தி, கே. ராமகிருஷ்ண ராவ், காசா சுப்பாராவ்.

1952 ஜூலை 24 இல் எழும்பூர் 'மியூசியம் தியேட்ட'ரில் பாராட்டு விழா நடந்தது. அன்றைய உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி பி.வி. ராஜமன்னார் தலைமை வகித்தார். பேராசிரியர் கே. சுவாமிநாதன் உட்பட பலர் பேசினர். ஏழாயிரம் ரூபாய் பணமுடிப்பு அளிக்கப்பட்டது. வேங்கடரமணி தமது ஏற்புரையைப் படிக்கக்கூட சக்தியற்று இருந்தார். கடுமையான காசநோயே இதற்குக் காரணம். திரு.கி.சந்திர சேகரன் ஏற்புரையைப் படித்தார். இந்த உரையில் அவர் சுயசரிதைக் குறிப்புகளும், இலட்சியங்களும் விளக்கப்பட்டன. விழா முடிந்து வீடு வந்ததும், அந்த ஏழாயிரம் ரூபாயையும், கடன் வாங்கியவர்களிடம் பிரித்துக் கொடுத்துவிட்டார்; பற்றற்றவரானார்.

மறைவு

காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையில், காவிரி நதியின் மணல் திட்டில் அமர்ந்து காவிரியின் சிறு சிறு நீர்ச் சுழல்களைக் கண்டு ரசித்தவாறே வாழ்க்கையின் இறுதிக் காலத்தைக் கழிக்க விரும்பினார் வேங்கட ரமணி. ஆனால் விதி வேறுவிதமாக 'எழுதி எழுதி மேற் சென்றது'. தாம்பரம், மதனபள்ளி முதல்ான காசநோய் மருத்துவமனைகளில் முடங்கிக் கிடந்தார். பிறகு மயிலாப்பூரில், இன்றைய ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தின் எதிரே அன்று இருந்த ஒரு தோட்டத்தில், ஒரு வீட்டில், படுக்கையில் கிடந்தார். அன்பர்கள் பணஉதவியும், மருத்துவர்கள் இலவச கவனிப்பும், மனைவி ருக்மணி, மகன் கே.வி. சுப்பிரமணியம், சகோதரி பிரம்மவித்யா உட்பட பலரின் பிரார்த்தனைகளும் எழுதிச் செல்லும் விதியின் கையைத் தடுக்க முடியவில்லை. 1952 பிப்ரவரி 21 இல் வேங்கடரமணி அவருடைய நடமாடும் தெய்வம் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசந்திர சேகரேந்திர ஸரஸ்வதி சுவாமிகளின் திருவுருவப் படத்தில் விழிகளைப் பதித்தவாறே அமரரானார். ஆம், "பூரணத்தில் இருந்து பூரணத்தைப் பிரித்தாலும் எஞ்சுவது பூரணமே" என்னும் உபநிடதப் பேருண்மையின் விளக்கமாக அமரரானார். ◦◦

இப்போது புரிகிறது


வீ.செ. கந்தசாமி

நெய்யப்படும் துணிகளில் நேர்பாதி
கட்சிக் கொடிகளாய்க் காட்சி அளிக்கின்றன
எஞ்சிய வற்றில் பெரும் பகுதி
பஞ்சைகளின் தலைவர் எனப்
பறை சாற்றிக் கொள்வோர்
தோள்களுக்கு அணிசெய்யும்
பொன்னாடைகளாகப் போய்விடுகின்றன

எங்களில் பலபேர்
இன்னமும்இந்நாட்டில்
கோவணாண்டிகளாகவே
காட்சி தருவதற்குக் காரணம்
இப்போது புரிகிறது.



ஆளுயர மாலைகளாய்
ஆள வந்த தலைவருக்கும்
வெள்ளித் திரையினிலே
வேடமிட்டு நடிப்பவர்க்கும்
அன்றாடம் விழா வேண்டும்
அரசியல் வணிகருக்கும்
பூக்களெல்லாம் இந்நாட்டில்
போய்ச் சேரும் காரணத்தால்
பூக்களின்றிப் பல பெண்கள்
போவதற்குக் காரணம்
இப்போது புரிகிறது.



“இன்னிசை ஈந்த இறைப் பேரின்பம்”

நமது தமிழ் மொழி உலக மொழிகள் அனைத்திற்கும் தொன்மைச் சிறப்பு வாய்ந்த ஒரு மொழியாகும்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மொழி ஆய்வாளர்கள் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மூத்த மொழி எனப் பகர்கின்றனர்.

தமிழில் எண்கள், எழுத்துக்கள் இலக்கணம், இலக்கியம், அற நூல்கள், இசை, பரதம், ஓவியம், சிற்பம், மனையியல், மருத்துவம், வானியல், இறைவழிபாடு, ஊரமைப்பு, நகர அமைப்பு, அகழிகள், அரண்கள், அரசியல், கோயிற்கலை, கட்டடக்கலை முதலான வாழ்வின் அனைத்து அம்சங்களிலும், அனுபவ முதிர்ச் சியும், வளர்ச்சியும் பெற்ற பண் பட்ட பழம் பெரும் சமுதாயம் கண்ட வர்கள் தமிழர்கள். அத்தகைய சான்றோர் பெருமக்கள் பல்வேறு இடங்களில், பல்வேறு காலங் களில் தமிழ்ப் பெருமக்களின் வாழ்வின் வழிகாட்டிகளாகத் திகழ்ந்துள்ளனர்.

அவர்களில் ஆழ்வார்கள், நாயன்மார்கள், சித்தர்கள் போன்ற வர்கள் தமிழகத்திற்கு அழியாப் புகழ்பெற்ற தெய்வீகப் பேரிலக் கியங்களை அளித்துள்ளனர். அத்தகைய பேரிலக்கியமாகக் கருதப்படுகின்ற பெருங்காப்பியம் பெரிய புராணம் ஆகும்.

தமிழகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த அருளாளர்களைப் பாடிய சிறப்புமிக்க நூல் பெரியபுராணம். இதன் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் ஆவார்.

சேக்கிழார் என்பது அவரது குடிப்பெயர். இப்பெருமகனார் தொண்டை நாட்டைச் சார்ந்த புலி யூர்க் கோட்டத்துக் குன்றத்தூரில் வேளாளர் மரபில் தோன்றியவர்.

இவரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு எனப் பகர்வர். அன்று சோழப் பெருநாட்டை ஆண்ட மாமன்னன் இரண்டாம் குலோத்துங்கன் ஆவான்.

சேக்கிழார் பெருமானின் வியத்தகு புலமையைக் கண்ட வேந்தன் அன்னாரைத் தனது பேர ரசின் முதலமைச்சராக நியமித்து மகிழ்ந்தான்.

அன்னாரது புலமை, செயல் திறன், அரசியல் ஆக்கம், இவற் றைப் போற்றிய சோழப் பேரரசன் “உத்தமச் சோழ பல்லவராயன்” எனும் சிறப்புமிகு பட்டத்தை சேக் கிழாருக்கு அளித்துப் பாராட் டினான்.

சேக்கிழார் அமைச்சராக இருந்து, மன்னனுக்கு நல்லாட்சி நல்கி வழிகாட்டியாக இருந்தது மட்டுமே அல்லாது இறை அருள் நிறைந்த ஒரு பெருங்காப்பியத் தைப் படைக்க வேண்டும் என்ற வேட்கை காரணமாகத் தமிழகம் முழுவதும் சுற்றி, கல்வெட்டுகளை ஆராய்ந்து தமது காப்பியத்தை எழுதத்தொடங்கினார்.

அவரது காலத்தில் உலக முழு வதையும் காண இயலாது என்றாலும் பெரும் உள்ளத்தோடு ‘உலகெலாம்’ எனத் தமது முதல் பாடலைத் தொடங்கினார்.

இறைவனின் அருள் திறத்தை யும், அருளாளர்களையும், இறை மணம் கமழும் வாழ்க்கை வரலாறு களையும், காப்பியம் முழுவதும் மணம் வீசச் செய்த சேக்கிழார் நூலை முடிக்கும்போதும் ‘உல கெலாம்’ என முடித்தார்.

சேக்கிழார் இந்நூலுக்கு இட்ட பெயர் “திருத்தொண்டர் புராணம்” என்பதாகும். பிற்காலத்தே வந்த பெருமக்கள் இதன் சிறப்பையும், பெருமையையும் கருதி “பெரிய புராணம்” என வழங்கலாயினர்.

இந்நூலில் பதின்மூன்று சருக் கங்கள் உள்ளன. மொத்தம் பாடல்கள் 4281. இக் காப்பியத்தில் இடம்பெறும் தனி அடியார்கள் அறுபத்துமூவர், தொகை அடி யார்கள் ஒன்பதின்மர் ஆவர்.

சைவ சமயத்தின் தெய்வீகப் பாடல்கள் பன்னிரண்டு திருமுறை களாக வகுக்கப்பட்டன. இவற்றில் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும்.

சேக்கிழார் புகழ்ந்து பாடிய அனைத்து நாயனார்களும், பக்தி யினாலும், இறைவழிபாட்டி னாலும், இறைவனை அடைய அருட்பாடல்களை இயற்றி அருளி னார்கள்.

இதற்கு மாறாக இனிய இசை யின் மூலமே இறைவனை அடைய வழிகாட்டியவர் “ஆனாய நாயனார்” என்ற பெருமகனாவார். மகிழ நாட்டின் மங்கலம் என்ற சிற்றூரில் ஆயர் குலத்தில் தோன்றிய ஆனாயர், பசுக் கூட்டங்களைத் திரட்டிக் காடுகளில் மேய்த்துக் கொண்டே குழலில் இசையையும் பாடுவித்து, இறைவனின் இன் னமுதத்தைப் பருக விழைந்தார். அன்னாரது குழல் இசையில் உலகின் மாந்தர்கள், விலங்குகள், மரங்கள், நீர் நிலைகள் அனைத்தும் செயலிழந்து நின்றன.

“வள்ளலார் வாசிக்கும் மணித்துளைவாய்
வேய்ங் குழலின்
உள்ளுறை அஞ் செழுத்தாக ஒழுகி யெழு
மதுர வொலி
வெள்ளநிறைந் தெவ்வுயிர்க்கும் மேலமரர்
தரு விளைதேன்
தெள்ளமுதின் உடன் கலந்து செவி
வார்ப்ப தெனத் தேக்க”

வள்ளலார் வாசிக்கும் அழகிய துளையுடைய வேய்ங்குழலின் இன் னிசை வெள்ளமானது உல கெங்கும் நிறைந்து நின்றது — மேன்மை பொருந்திய தேவர்களின் கற்பக மரத்தில் விளைந்த தேனைத் தெளிவான அமுதத் துடன் கலந்து செவி வழியாய் வார்ப்பதைப் போல் விளங்கியது.

தியாகச் செம்மல்
அன்புவேதாசலம்

“ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா
தணைந் தயரப்
பாலுரைவாய்த் தாய்முலையில் பற்றும்
இளங் கன்றினமும்.
தாலுணவு மறந்தொழியத் தடமருப்பின்
விடைக் குலமும்
மான் முதலாம் கான் விலங்கும்
மயிர்முகிழ்த்து வந்தணைய”

ஆனாயரின் இசையில் மயங்கி பசும்புல்லை மேய்ந்த பசுக் கூட்டங்கள் அசைபோடுவதை மறந்து இவரது பக்கமாக வந்து நின்றன. தாய்முலையைப் பற்றி பால் பருகிக் கொண்டிருந்த பசுங் கன்றுக் கூட்டமும் பால் குடிக்கும் செயலை மறந்து அவரது அருகில் வந்து மெய்மறந்து நின்றன. கொம்புகளை உடைய எருதுக் கூட்டமும், மான் முதலிய காட்டு விலங்குகளும் மயிர்க்கூர்ச் செறிந்து திகைத்து நின்றன.

“ஆடுமயில் இனங்களும் அங்
கசைவயர்ந்து மருங் கணுக
ஊடுசெவி இசைநிறைந்த உள்ளமொடு
புள்ளினமும்
மாடுபடிந் துணர்வொழிய மருங்கு
தொழில் புரிந் தொழுகும்
கூடியவன் கோவலரும் குறைவினையின்
துறை நின்றார்”

ஆனாயரின் இசைகேட்டு ஆடும் மயில் இனங்கள் அசைவில்லாது பக்கத்தில் வந்து நின்றன. பறவைக் கூட்டங்களும், தம் உணர்வு நீங்கின. கழனிகளில் ஏவல் செய்துவரும் இளம் ஆயர்களும் செயலிழந்து நின்றனர்.

“நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றாய்
நயத்தலினால்
மலிவாய் வெள் ளெயிற்றரவம் மயில் மீது
மருண்டு விழும்
சலியாத நிலைஅரியும் தடங்கரியும்
உடன்சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய
புல்வாயும்”


நலிந்தவரும், மெலிந்தவரும் ஒன்றாகி அந்த இசையில் மயங்கி நின்றனர். கொடிய பற்களை யுடைய பாம்புக் கூட்டம் ஆனாயரின் இசையில் மயங்கி, தன் பகையான மயிலினங்கள் மேல் விழுந்து புரண்டன. வலிமை மிக்க சிங்கமும் கடும் புலியும் தனது பகைவனான யானையின் பக்கத்தில் நின்றன.


“மருவியகால் விசைத்தசையா மரங்கள்
மலர்ச் சினைசலியா
கருவரை வீழ் அருவிகளும் கான்யாறும்
கலித்தோடா
பெருமுகிலின் குலங்கள்புடை
பெயர்வொழியப் புனல் சோரா
இருவிசும்பி னிடைமுழங்கா எழுகடலும்
இடைதுளும்பா”


அவரது இசை காரணமாக கண்ணுக்குப் புலனாகாத காற்றும், மலர்களுடன் கூடிய மரங்களும் அசையாது நின்றன. மலையினின்று விழும் அருவிகளும் காட்டாறுகளும் ஒலித்து ஓடாது நின்றன. முகிற்கூட்டங்கள் இயக்கமில்லாததோடு மட்டுமின்றி மழை நீரையும் பொழியாது நின்றன. ஏழு கடல்களும் தளும்பாது நின்றன.

“முன்னின்ற மழவிடைமேல் முதலவனால்
எப்பொழுதும்
செந்நின்ற மனப்பெரியோர் திருக்குழல்வா
சனைகேட்க
இந்நின்ற நிலையேநம் பாலணைவாய்என
அவரும்
அந்நின்ற நிலைபெயர்ப்பார் ஐயர்திரு
மருங்கணைந்தார்”

ஆனாயரின் இசையினைப் பருகிய இறைவன், “உமது திருக்குழல் ஒலியைப் பருக நாம் விழைந்தமையால் நீவிர் இங்கு நின்ற நிலையிலேயே வந்து எம்மை அடைவாயாக” என்று அருளினார். ஆனாயரும் அவ்வண்ணமே நின்ற நிலையிலிருந்து நீங்கி இறைவனின் திருமருங்கில் சேர்ந்தார். ஒரே இன்னிசையால் இறையருளைப் பெற்ற அடியார் ஆனாயர் மட்டுமே எனப் புகழ்ந்துரைக்கின்றார் சேக்கிழார் பெருமான்.







ஒரு குடை..!

கவியரசு நா. காமராசன்

வானத்திலே... ஒரு கதவு
வைக்கவேண்டும் – அந்த
வாசல் வழியே நான்
தேவலோகம்
சென்றுவிட வேண்டும்.


காமனின் குடைராட்டினக்
குதிரையிலே – என்
"காதல் ராணி" வரவேண்டும்.
கற்பக விருட்சத்தின்
நிழலினிலே – அவள்
"கண்ணதாசனின்" பாடலை
இசைத்திட – நாங்கள்
கண்ணீர் விடவேண்டும்.


சேரியில் வாழும் ஏழைகள் எல்லாம்
தேவர்களாய் வரவேண்டும்.
வறுமையில் வாடிய தோழர்கள் அங்கே
அமுதம் பெறவேண்டும்.

இந்திர சபையில் அறிவியல் சொல்லும்
எந்திர நிலையம் வேண்டும்.
பூமியை நோக்கி தேவர்கள் சென்று
உழைக்கும் நிலை வேண்டும்.

உயிர்கள் முழுவதும் ஒன்றெனும் பாட்டுக்கு
ஊர்வசி நடமிட வேண்டும்.
நரகத்தில் வாழும் மனிதருக்கும் இனி
சொர்க்கத்தில் இடம் வேண்டும்.

இதயம் என்பது கோயில் ஆகிட
இறைவனாகும் மனிதர்கள் வேண்டும்.
உலகம் முழுவதும் தேவலோகமாய்
"ஒரு குடைக்குள்" வரவேண்டும்.





முகுந்தராவின் கதை

நா.ராமச்சந்திரன்

கண்டிப்பும் கடுமையான சொற்களும்தான், ஒருவர் செய்யும் தவறுகளைத் திருத்தப் பயன் படும் ஆயுதங்களா? இல்லையில்லை... அமைதி யான பார்வையும், ஆழ்ந்த பரிவுணர்வுமே போதும் என்பதை முகுந்தராவ் உணர்த்துகிறார் இக்கதையில்.

முகுந்தராவ் நாற்காலியில் பேய் அறைந்தவரைப் போல வந்து உட்கார்ந்து கொண்டார். அவருடைய உடலில் ரத்த ஓட்டமே நின்றுவிட்டதைப் போல இருந்தது. இதயம் படபடத்தது. என்ன செய்வதென்று தெரியாமல் அப்படியே நாற்காலியில் சாய்ந்துவிட்டார்.

ராஜாராவின் குடும்பத்தில் இப்படி யொரு சம்பவம் நடக்குமென்று அவர் கனவில்கூட நினைத்ததில்லை.

முகுந்தராவின் உடல் வியர்வை வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது. மேலே சுற்றிக்கொண்டிருந்த மின்விசிறி வியர்வையை ஆவியாக்க ஆவியாக்க அது பன்மடங்காக அவர் உடலில் வியாபித்து நின்றது. அப்படி அவர் கண்ட காட்சிதான் என்ன? முகுந்தராவ் கொஞ்சம் சுவாதீனம் அடைந்து மனக் கண்ணின் முன்னால் அச்சம்பவங்களை மீண்டும் கொண்டு வரமுயற்சி செய்து கொண்டிருந்தார்.

முகுந்தராவிற்கு வயது அறுபதிற்கு மேல் ஆகிவிட்டது. இந்த ராஜா ராவின் தந்தை அப்பாராவின் வீட்டிற்கு அவர் வேலைக்கு வந்தபோது அவர் நல்ல இளைஞர். இருபது வயதுதான் இருக்கும். அப்பாராவ் ஒரு பெரிய மில் முதலாளி. அவருடைய அரண்மனை போன்ற வீட்டில் கணக்குப் பிள்ளை யாகச் சேர்ந்தார் முகுந்தராவ். வீட்டு நிர்வாகம் எல்லாவற்றையும் அச்சிறு வயதிலேயே அவர்தான் கவனித்துக் கொண்டிருந்தார். அப்பாராவ் மிக நல்லவர். பரம சாது. முகுந்தராவைத் தன் வீட்டில் வசிக்கும் ஒரு நெருங்கிய உறவினர் போலவே பார்த்துக் கொண்டார். முகுந்தராவின் யோசனைகளை எல்லாம் மதித்துக் கேட்பார்.

அப்பாராவ் காலமான பிறகு அவர் ஒரே பிள்ளை ராஜாராவ், அப்பாராவ் விட்டுப்போன சொத்துகளுக்கு வாரி சாக வந்தார். பல வருடங்கள் பழகிப் போனதால் வியாபாரத்திலும், வீட்டு நிர்வாகத்திலும் முகுந்தராவிற்கு நல்ல அனுபவம் இருந்தது. சுயநலம் இல் லாமல் சேவை செய்த காரணத்தினால் நல்ல அறிவுரைகள் வழங்க முடிந்தது. அப்பாராவ் தன் கடைசி மூச்சு உள்ள வரை தன் மகன் ராஜாராவிற்குப் பல புத்திமதிகள் சொல்லும்போது இதையும் சேர்த்துச் சொல்வார் : "ராஜா ! நான் ஏராளமான சொத்துகளை உனக்கு விட்டுச் செல்கிறேன். அதையெல்லாம் விட மிகப் பெரிய சொத்து நம்முடைய முகுந்தராவ். தன்னலமின்றி அவர் நம் குடும்பத்திற்குச் செய்யும் சேவையே நம்மை இவ்வளவு தூரம் உயர்த்தி விட்டிருக்கிறது. அவர் யோசனை களைக் கேட்க ஒரு போதும் தயங் காதே..."

ராஜாராவ் தலையெடுத்த பிறகு தந்தையைவிடத் திறமையாக வியா பாரங்களைக் கவனித்துக் கொண்டு வந்தார். அவ்வப்போது முகுந்தராவின் யோசனைகளைக் கேட்க அவர் தவறிய தில்லை.

பரபரப்பான உலகத்தில் வசித்துக் கொண்டிருந்தாலும் முகுந்தராவ் பர பரப்பு அடையாது சாந்தமாகவே இருப் பார். எந்தக் காரியத்திலும் நிதானம் தவறமாட்டார். 'கோபம் என்றால் என்ன?' என்று கேட்கும் உள்ளப் பாங்கு அவருடையது. அத்தகையவருக்கு வந்தது அவர் உள்ளத்தையே உறைய வைக்கும் ஒரு நிகழ்ச்சி.

என்றும்போல அன்றும் முகுந்தராவ் தன்னுடைய அறையில் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். மாலை மணி சுமார் மூன்று இருக்கும். டெலி போன் மணி ஒலித்தது. முகுந்தராவ் நிதானமாக எழுந்திருந்து டெலிபோன் பக்கம் சென்று ஒலிவாங்கியைக் கையில் எடுத்து 'ஹலோ' என்று குரல் கொடுத்தார்.

மறுமுனையில் ராஜாராவ் டில்லியி லிருந்து பேசினார். அவசரமாகத் தன் மனைவியிடம் பேசவேண்டும் என்று சொன்னார்.

முகுந்தராவ் மாடியறைக்கு டெலி போன் மூலம் தொடர்பு கொள்ள என்னவெல்லாமோ செய்து பார்த்தார். தொடர்பு சரியாக வேலை செய்யாத தால் தானே மாடிக்குச் செல்ல ஆயத்த மானார். முகுந்தராவ் மாடிப் பக்கம் சென்றதே இல்லை. அவருடைய நாற் பது வருட சேவையில் அவர் எல்லை அலுவலக அறை, கூடம் என்பதோடு சரி. இன்று முதலாளியே கூப்பிடு கிறார்; அதுவும் டெல்லியிலிருந்து. வேறு வழியில்லை என்று மாடிப் படிக் கட்டில் அவசர அவசரமாக ஏறி மாடி யறையிலுள்ள முதல் அறைப் பக்கம் வரை வந்து விட்டார்.

அப்படி அவர் மாடிக்குச் சென்றது எவ்வளவு தர்மசங்கடத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டது!

முதல் அறையைத் தாண்டி முகுந்த ராவ் தாழ்வாரப்பக்கம் காலடி எடுத்து வைத்தபோது சிரிப்பொலி கேட்டது. ஓர் ஆண் குரலும், பெண் குரலும் மாறி மாறிப் பேசுவது மிகவும் தெளிவாகக் கேட்டது. முகுந்தராவ் இரண்டாவது அறையை நோக்கிக் காலடி வைத்தார். அந்த அறைதான் ராஜாராவின் படுக்கை அறை. அந்த அறையிலிருந்துதான் பேச்சுக் குரல் கேட்டது. அறையின் கதவு பாதி திறந்திருந்தது. எஜமானி அம்மாளைத் தேடி முகுந்தராவ் அறை யின் திறந்த கதவு வழியே மெல்ல எட்டிப் பார்த்தார்.


ஆயிரம் தேள்கள் ஒரே சமயத்தில் தேகம் பூராவும் கொட்டுவதைப் போல இருந்தது.

படுக்கையறையின் மையத்தில் போடப்பட்டிருந்த பெரிய கட்டிலில் ராஜாராவின் மனைவி யமுனா படுத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய தலை யாரோ ஓர் ஆடவன் மடிமீது இருந்தது. அவன் குனிந்து குனிந்து அவள் முகத்தை தன்முகத்தால் தொடுவதும், கொஞ்சுவதுமாக இருந்தான்!

இந்தக் காட்சியை மேலும் முகுந்த ராவ் பார்க்க விரும்பவில்லை. தன்னை அவர்கள் கவனிக்கவில்லை என்பதை யறிந்தவுடன் சரேலென்று கீழே இறங்கி விட்டார். அவர் கீழே இறங்குவதற்குள் தொலைபேசியின் தொடர்பும் அறுந்து விட்டிருந்தது.

அப்பாராவின் குடும்பம் எவ்வளவு பெரியது? ராஜாராவிற்குத் தேடித் தேடி அவர் பெண்ணெடுத்தார். நல்ல செல்வாக்கும், ஆசாரமும் கௌரவமும் உள்ள இக்குடும்பத்திற்கு இப்படியொரு இழுக்கா? முகுந்தராவின் வாய் உலர்ந்துவிட்டது. யமுனாவுடன் அங்கே இருந்த அந்த ஆடவன் யார்? என்று யோசனை செய்ய ஆரம்பித்துவிட்டார். அவர் மிகப் பலமான யோசனையில் ஆழ்ந்திருக்கும்போது வாசலில் இருந்து ஒரு கார் புறப்படும் சத்தம் கேட்டது. ஜன்னல் பக்கம் சென்று எட்டிப் பார்த்தார். அவர் யூகம் முற்றிலும் சரியாகி விட்டது. பச்சை நிற மாருதி கார் ஸ்ரீதரனுடையதுதான். அவன்தான் வந்திருக்கவேண்டும்.

ராஜாராவும், ஸ்ரீதரனும் நல்ல நண்பர்கள். ஸ்ரீதரனுக்கு அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம். இருவரும் தினமும் டென்னிஸ் கிளப்பில் சந்தித்து உரையாடுவார்கள். ஸ்ரீதரன் அடிக்கடி வீட்டிற்கு வந்து போவான். அதன் விளைவு இந்தக் கோலத்தில் வந்து முடிந்திருக்கிறது போலும்!




முகுந்தராவ் தன் விதியை நொந்து கொண்டார். 'தான் ஏன் மாடியறைக்குச் சென்றோம். இந்தக் கண்றாவிக் காட்சியைப் பார்த்தோம். இப்படி மனச் சங்கடப்பட்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்' என்று மீண்டும் மீண்டும் நொந்தவண்ணம் உட்கார்ந்து கொண்டிருந்தார். இந்த நிலையில் மணி ஆறு அடித்ததுகூட அவருக்குத் தெரியவில்லை. யமுனா கீழே இறங்கிவந்து "என்ன முகுந்தராவ்? இப்படிச்சோர்ந்து உட்கார்ந்திருக்கிறீர்கள்? உடம்பு சரியில்லையா? இந்த விட்டல் எங்கு தொலைந்து போனான்?" என்று கேட்டவுடன்தான் முகுந்தராவ் தன் சுய நினைவுக்கு வந்தார். ராஜாராவ் போன் செய்ததைக்கூட யமுனாவ்க்குச் சொல்லவில்லை. மிகுந்த மனப் பாரத்துடன், நாற்காலியிலிருந்த துண்டைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு தன் வீட்டிற்குச் செல்ல ஆயத்தமானார்.

★ ★ ★

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வார மாகிவிட்டது. ராஜாராவும் ஊருக்குத் திரும்பிவிட்டார். வீட்டில் எல்லாமே

சகஜ நிலையில் இருந்தது. எஜமானி அம்மாளும் எப்போதும் போலத்தான் இருந்தாள். தான் அன்றையதினம் மாடிக்குச் சென்றதும், படுக்கையறைக் கதவு வழியாகக் கவனித்ததும் யமுனாவுக்குத் தெரியாது என்றுதான் முகுந்தராவ் நம்பிக்கொண்டிருந்தார்.

ராஜாராவ் வந்து பத்து தினங்கள் கழிந்தவுடன் யமுனாவின் நடத்தையில் மாறுதல் இருந்ததை முகுந்தராவ் உணர ஆரம்பித்தார். சாதாரணமாக யமுனா முகுந்தராவிடம் அதிகம் பேசமாட்டாள்.



அப்படிப் பேசினாலும் மகள் தந்தையோடு பேசும் பாவனையில்தான் அது இருக்கும். அநாவசியமாக முகுந்தராவை எந்தக் காரியத்தையும் செய்யச்சொல்ல மாட்டாள். யமுனாவிடமிருந்து எந்த வித உத்தரவும் முகுந்தராவிற்கு வராது.

அதற்கு நேர்மாறாக இப்போது நடக்க ஆரம்பித்துவிட்டாள் யமுனா. முகுந்தராவிடம் தன் எரிச்சலைக் காட்ட ஆரம்பித்தாள். மேலும் மற்ற வேலையாட்கள் செய்யும் தவறுகளை முகுந்தராவிடம் ஆத்திரத்துடன் சுட்டிக் காட்டினாள். 'ஏனென்றால் உங்களுக்கு வயதாகிவிட்டது. அதனால் அவர்களை உங்களால் கண்டிக்க முடியவில்லை' என்று அடிக்கடி ராஜாராவ் காதுபடக் கூற ஆரம்பித்தாள்.

அன்றையதினம் நடந்த சம்பவமொன்று உறுதியாக இருந்த அவர் உள்ளத்தையும் உலுக்கிவிட்டது.

"முகுந்தராவ்! இந்த வேலைக்காரி எங்கே தொலைந்தாள்? அரைமணி நேரமாகக் கத்துகிறேன். வாசலில் வண்ணான் காத்துக் கொண்டிருக்கிறான். மேலே 'பெட்ரூமில்' கட்டிலில் இருக்கும் துணிகளைக் கீழே கொண்டு வாரும்..." கட்டளை இட்டாள் யமுனா.

முகுந்தராவ் அசந்து போனார். அவருடைய இந்த நாற்பது வருட சேவையில் இம்மாதிரியொரு கட்டளையை யாரும் அவருக்கு இட்டதில்லை. அப்பாராவாகட்டும், அல்லது அவர் மனைவியாகட்டும், ஏன் ராஜாராவ்கூட மோசமான இம்மாதிரியொரு வேலையை முகுந்தராவிற்குக் கொடுத்ததில்லை. "மாடியில் இருக்கும் அழுக்குத் துணிகளைக் கீழே கொண்டு வா!" என்று நேற்று வந்த யமுனா உத்தரவு போடுகிறாளே. அவளுடைய எண்ணம் தான் என்ன? நான் வேலையில் இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லயா? ஆம் நாம் இடையூறாகத்தானே இருக்கிறோம்... என்று எண்ணிக்கொண்டே நின்றிருந்த முகுந்தராவை மீண்டும் உசுப்பினாள் யமுனா.

"என்ன நின்று கொண்டிருக்கிறீர்? சீக்கிரம் போங்கள்..." என்று துரிதப்படுத்திவிட்டு யமுனா வாசற்பக்கம் திரும்பிவிட்டாள்.

முகுந்தராவின் சப்த நாடிகளும் அடங்கி ஒடுங்கிவிட்டன. அவரையும் அறியாமல் அவர் கால்கள் அவரை மாடியறைக்கு இட்டுச் சென்றன.

படுக்கையறையில் கட்டிலின்மீது இறைந்து கிடந்த யமுனாவின் உள் பாவாடைகள், இரவு உடுத்திக் கொள்ளும் நைட்டிகள், பிரேஸியர்கள், புடைவைகள் ஆகியவற்றைச் சுமந்து கொண்டு முகுந்தராவ் இயந்திரம் போலக் கீழே இறங்கிவந்து வண்ணானிடம் அவற்றைச் சேர்ப்பித்தார்.

அவர் உள்ளம் நிஜமாகவே உடைந்து போனது. மேலும் மேலும் யமுனா தன்னை எப்படியெல்லாம் அவமானப் படுத்தப் போகிறாளோ என்பதை நினைக்கும்போது அவர் உள்ளத்தில் இனம் புரியாத திகில் சூழ்ந்து கொண்டது. நாற்பது வருடங்களாகப் பார்த்து வந்த உத்தியோகத்தை விட்டு விட வேண்டும் என்ற எண்ணம்தான் அவர் மனத்தில் மேலோங்கி நின்றது. ராஜாராவ் கைநிறையச் சம்பளம்

கொடுக்கிறார். அப்படியிருக்க இந்த உத்தியோகத்தை விட்டு விட்டுக் குடும்பியான அவர் வேறு என்ன செய்ய முடியும்?

யமுனாவின் அதிகாரம் நாளுக்கு நாள் அதிகமாகியது. தினம் ஏதாவது ஓர் அற்பக் காரியத்தைச் செய்யும்படி முகுந்தராவைக் கட்டளை இட்டுக் கொண்டிருந்தாள். அவரும் கோபப் படாமல் சாந்தமாக யமுனா இட்ட வேலைகளையெல்லாம் செய்து கொண் டிருந்தார். ஆனால் இந்த வேலையை விட்டுச் சீக்கிரம் போய்விட வேண்டும் என்று மனத்தில் மட்டும் உறுதி செய்து கொண்டார். அன்றைய தினம் நடந்த மற்றொரு நிகழ்ச்சி அவரின் இந்த உறுதியைக் கெட்டிப்படுத்துவதாக அமைந்தது.

முகுந்தராவ் வாசற்பக்கம் இருந்த அறையில் நாளிதழ்களை அடுக்கிக் கொண்டிருந்தார். அப்போது யமுனா பக்கத்து அறையில் தன் கணவரோடு பேசுவது அவருக்குத் தெளிவாகக் கேட்டது.

ராஜாராவ் ஏதோ பேச வாயெடுத் திருக்கிறார். அதற்குள் யமுனா குறுக் கிட்டு... "நான் சொல்றதைக் கேளுங் களேன். இந்தக் கிழத்தை வைத்துக் கொண்டு இனிமேல் குப்பை கொட்டு வது முடியாது. இந்த மாதத்தோடு இதன் கணக்கைத் தீர்த்துக் கட் டுங்கள்..." என்று பொரிந்து கொட் டினாள்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, ராஜாராவ் "யமுனா! அது அவ்வளவு சுலபமில்லை. எவ்வளவு வருஷங்களாக அவர் இங்கு இருக்கிறார்? திடீரென்று 'வேலையை விட்டு நின்றுகொள்' என்று எப்படி சொல்லமுடியும்...?"

"உங்களால் முடியவில்லையென்றால் நான் சொல்கிறேன்" என்று இறைந்த யமுனா முகுந்தராவ் வாசல் அறையில் இருப்பது தெரிந்தவுடன் டப்பென்று பேச்சை அடக்கிக் கொண்டுவிட்டாள்.

இந்தச் சம்பாஷணையைக் கேட்ட வுடன் முகுந்தராவ் தன் உள்ளத்தில் ஒரு தீர்மானம் செய்து கொண்டு விட்டார். 'ராஜாராவ் விஷயத்தைச் சொல்லக் கஷ்டப்பட்டாலும் நாமே முந்திக் கொண்டு விடவேண்டும்' என்ற தீர்மானம்தான் அது.

மாதக் கடைசி நாள் மாலை ஐந்து மணிக்கு ராஜாராவ் முகுந்தராவிற்கு உரிய சம்பளக் கவருடன் அவருடைய அறையில் அவருக்காகக் காத்திருப் பார். முகுந்தராவ் வந்தவுடன் எழுந்து நின்று கிழக்குமுகமாகப் பார்த்து சம் பளக் கவரை அவர் கையில் கொடுப் பார். கவரைத் திறந்து ரூபாய் நோட்டு களை எண்ணிப் பார்க்கச் சொல்வார். ஆயிரம் ரூபாய் சம்பளம் நூறு ரூபாய் நோட்டுகளாக இருக்கும். ராஜாராவ் தலையெடுத்த பிறகு பிரதிமாதம் கடைசி நாள் நடக்கும் நிகழ்ச்சி இது.

இந்த மாதம் கடைசி நாள் வர இன்னும் இரண்டு தினங்கள்தாம் இருந்தன. சம்பளம் வாங்கிய கையுடன் தான் நின்று கொள்வதாகச் சொல்லி விட வேண்டும் என்ற தீர்மானத்தில் இருந்தார் முகுந்தராவ். முதலாளி எவ்வளவு கேட்டுக்கொண்டாலும் தன் முடிவை மாற்றிக் கொள்ளக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

மாதக் கடைசி நாள். மணி ஐந் தடித்தது. முகுந்தராவ் ராஜாராவின் அறைக்கு மெல்லச் சென்றார். ராஜா ராவ் சம்பள உறையுடன் தயாராகக் காத் துக் கொண்டிருந்தார். முகுந்தராவ் உள்ளே நுழைந்தவுடன் யமுனா அவருக் குக் காபி கொண்டு வைத்துவிட்டு ராஜாராவின் பக்கத்தில் நின்று கொண்டாள்.

"முகுந்தராவ்! உட்காருங்கள். காபி சாப்பிடுங்கள்" என்று கூறிவிட்டு சம்பளக் கவரை நீட்டினார் ராஜாராவ்.

முகுந்தராவ் காபி அருந்திவிட்டு மெல்லப் பேசுவதற்கு ஆயத்தமாவதற் குள், ராஜாராவ் "ராவ்ஜி! உங்களிடம் ஒன்று சொல்லவேண்டும். உங்க ளுக்கோ வயதாகிவிட்டது. வீட்டிலும் வேலை அதிகமாகிக் கொண்டு வரு கிறது. யமுனாவும் உங்களுக்குத் தொந் தரவு கொடுக்கக்கூடாது என்று சொல் கிறாள். நீங்கள் வித்தியாசமாக எது வும் நினைத்துக் கொள்ளக் கூடாது. நாளையிலிருந்து நீங்கள் பூரண ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்... வேலைக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை..." சொல்லிக்கொண்டே சம்பளக் கவரை முகுந்தராவிடம் நீட்டினார் ராஜாராவ்.

முகுந்தராவின் கைகள் நடுங்கின. கண்களிலிருந்து பொலபொலவெனக் கண்ணீர் பெருகிவிட்டது. மெல்ல சம பளக் கவரைப் பெற்றுக்கொண்டார். பதிலொன்றும் பேசாமல் தன் இருப்பிடத் திற்குத் தள்ளாடியபடி சென்று இருக்கை யில் அமர்ந்துகொண்டார்.

தள்ளாடியபடி வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார் முகுந்தராவ். நாளையிலிருந்து அவர் வேலைக்கு வர வேண்டாம். நாற்பது வருட சொந்தம் ஒரு நொடியில் அறுந்துவிட்டது. ஆனால் அடுத்தமாதம் அவர் எப்படிக் குடும்பம் நடத்துவார்? இந்த ஆயிரம் ரூபாய் சம்பளம் வாய்க்கும் கைக்குமே சரியாக இருந்தது. ஒரு பையன் பிளஸ் டூ படித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு மூத்தவள் ஒரு பெண் இருக் கிறாள். அவளுக்குக் கல்யாணம் ஆக வேண்டும். செய்த உத்தியோகம் என்ன சர்க்கார் உத்தியோகமா? பென்ஷன் என்றும் பி.எஃப். என்றும் ஓய்வு பெற்ற வுடன் கிடைப்பதற்கு?

நடைப்பிணம் போல் வீடுவந்து சேர்ந் தார் முகுந்தராவ். மனைவியிடம்கூடத் தான் வேலையை விட்டு நின்று விட்ட தைச் சொல்லவில்லை. பெயருக்குச் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டு விட்டார்.

மறுநாள் பொழுது விடிந்தவுடன் மனைவி ஜிஜிபாயிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார். ஆனால் யமுனா வைப் பற்றின விஷயங்களை மட்டும் அவளிடம் தெரிவிக்கவில்லை.

"நாம் தினமும் வணங்கும் நவநீத கிருஷ்ணன் துணை இருக்கிறான். நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்று தைரியம் கூறினாள் ஜிஜிபாய்.

முகுந்தராவிற்காக நாள்கள் நக ராமல் இருக்குமா? அந்த மாதம் மளமள வென்று ஓடிற்று. மாதக் கடைசி வந் தால் இந்த மாதச்சம்பளம் யார் தரப் போகிறார்கள்?

"நவநீதகிருஷ்ணா நீயே துணை" என்று பூஜையிலிருந்த கிருஷ்ண விக் கிரகத்தைப் பார்த்துக் கும்பிட்டுவிட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து விட்டார் அவர்.

மாதக் கடைசி நாள் வரத்தான் செய்தது.

வாசல் ஆளோடியில் சாய்வு நாற் காலியில் சாய்ந்து கொண்டிருந்தார்

முகுந்தராவ். அப்போது காலை ஒன்பது மணி இருக்கும். கிழக்குப் பக்கம் பார்த்த வீட்டில் சூரியன் கிரணங்களை வாரி இறைத்துக் கொண்டிருந்தான். சூரிய வெளிச்சம் தன்மீது படுவதைத் தடுப்பதற்காகச் சாய்வு நாற்காலியைத் தள்ளிப் போட்டுக் கொள்வதற்காக முகுந்தராவ் மெல்ல எழுந்திருந்தார்.

அந்தச் சமயம் பார்த்து அவர் வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து ராஜாராவ் இறங்கிக் கொண்டிருந்தார்.

இமைகொட்டாமல் வெறிக்க, மிக அதிசயத்துடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்த முகுந்தராவிற்கு ராஜா ராவ் கரங்கூப்பி வணக்கம் தெரிவித்து விட்டுக் கையிலிருந்த கவரை முகுந்த ராவிடம் நீட்டினார்.

முகுந்தராவிற்கு ஒன்றும் புரிய வில்லை. திடீரென்று ராஜாராவ் வந்த தும் தன் கையில் கவரைத் திணித்ததும் அவருக்கு ஏதோ மாயாஜாலம் போல இருந்தது.

ராஜாராவ் பேசினார் : "முகுந்த ராவ்! என்ன இப்படிப் பார்க்கிறீர்கள்? உங்களுடைய சம்பளப் பணத்தைத்தான் கொடுத்திருக்கிறேன். எண்ணிப் பார்த்து எடுத்து வையுங்கள்".

"சம்பளமா? எதற்கு? நான் தான் வேலைக்கே வரவில்லையே...!" சொற்கள் முகுந்தராவிடமிருந்து தடு மாற்றத்துடன் வெளிவந்தன.

"நாற்பது வருடங்கள் வேலை செய் திருக்கிறீர்கள். அப்பழுக்கில்லாத அரிய சேவை. உங்களை அன்ஸெரி மோனியஸாக வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். அதற்குப் பரிகாரம் ஏதாவது செய்ய வேண்டாமா? உங்கள் முயற்சி யால் என் வியாபாரம் எவ்வளவு உயர்ந்து நிற்கிறது? அதற்காக நான் உங்களுக்கு ஏதாவது திரும்பச் செய்ய வேண்டாமா? மாதா மாதம் நான் கொடுக்கும் இந்தப் பணத்தை 'பென்ஷன்' போல நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டும்..."

முகுந்தராவ் ஏதோ பேச வாயெடுத் தார். ராஜாராவ் அங்கு நின்றிருந்தால் தானே பேசுவார்? அதற்குள் அவர் கீழே இறங்கி கார் பக்கம் சென்றுவிட்டார்.


வியப்பும் திகைப்பும் ஒருங்கே அடைந்த முகுந்தராவிற்கு ஒன்றுமே புரியவில்லை. கவரைப் பிரித்துப் பார்த் தார். ஆயிரம் ரூபாய் நூறு ரூபாய் நோட்டுகளாகக் கவரில் இருந்தன. ஓய்வூதியம் சம்பளத்திற்குச் சமமாக இருக்கிறதே என்று மனைவியை குதூகலத்துடன் பேர் சொல்லி அழைத் துக் கொண்டே முகுந்தராவ் உள்ளே ஓடினார்.

"நவநீத கிருஷ்ணன் நம்மைக் கைவிடமாட்டான் என்று நான் சொல்ல வில்லையா... என்ன நடந்தது பார்த்தீர் களா...?" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினாள் ஜிஜிபாய்.

முகுந்தராவிற்கு ஒரே ஆனந்தம். தன்னுடைய சேவைக்குக் கூலியில் லாமல் போகவில்லை. உள்ளன்புடன் தன்னலம் கருதாது செய்யும் வேலை வீணாகக்கூட போகுமா?

இன்ப நினைவில் நீந்திக் கொண்டே மற்ற வேலைகளை கவனித்தார் முகுந்த ராவ். ஆனால் அவர் மனம் பூராவும் ராஜாராவே வியாபித்து நின்றிருந்தார்.

மதியம் சாப்பாடு ஆனவுடன் ஒரு குட்டித்தூக்கம் போட்டுவிட்டு மயக்க நிலையில் வாசற்பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார் முகுந்தராவ். என்ன ஆச்சர்யம்! வாசலில் காலையில் வந்த மாதிரியே கார் ஒன்று வந்து நின்றது. முகுந்தராவ் நாற்காலியி லிருந்து எழுந்து கொள்வதற்குள் காரிலிருந்து மிடுக்காக நடந்து வந்து கொண்டிருந்தாள் ராஜாராவின் மனைவி யமுனா.



முகுந்தராவைப்பார்த்தவுடன், "ராவ்! உங்கள் மனைவி எங்கே? சீக்கிரம் கூப்பிடுங்கள்..." என்று அவசரப்படுத் தினாள். அதற்குள் ஜிஜிபாய் வாசற் பக்கம் வந்து விட்டாள்.

"கொஞ்சம் இரண்டு பேரும் உள்ளே வந்து சேர்ந்து நின்று கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு முகுந்தராவிற்கும் ஜிஜி பாயிக்கும் நமஸ்காரம் செய்தாள் யமுனா. அவள் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகிற்று.

"ராவ்ஜி! உங்கள் மௌனத்தால் என் னைச் சித்திரவதை செய்துவிட்டீர்கள். உங்கள் மனசு எவ்வளவு பெரியது! உங்கள் யோக்யதை எவ்வளவு உயர்ந்தது! நான் திருந்திவிட்டேன். உங்கள் அறிவுரையைவிட உங்கள் மௌனமே என்னைத் திருத்திவிட்டது. இனி ஒரு போதும் இம்மாதிரி தவறு செய்யமாட்டேன். என்னால்தானே உங்கள் வேலை போயிற்று? அதற்குப் பிராயச்சித்தமாக இனி மாதாமாதம் நான் அளிக்கும் உதவித்தொகை இது. இதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பத்து நூறு ரூபாய் நோட்டுகளை முகுந்தராவ் கைகளில் வைத்தாள் யமுனா.

முகுந்தராவிற்கும் ஜிஜிபாய்க்கும் ஒன்றுமே புரியவில்லை. கார் வந்து நின்றதும், யமுனா இறங்கி வந்ததும் உள்ளே வரச்சொல்லி இருவருக்கும் நமஸ்காரம் செய்ததும், தான் திருந்தி விட்டேன் என்று சொல்லிவிட்டு ஆயி ரம் ரூபாயைக் கைகளில் திணித்ததும் மாதாமாதம் இந்த உதவித்தொகை அளிக்கப் போவதாகக் கூறியதும் – எல்லாம் நிஜவாழ்வில் நடப்பதைப் போல அவர்களுக்குத் தோன்றவில்லை.

ஜிஜிபாயும், முகுந்தராவும் யமுனா விடம் ஏதோ சொல்ல வாயெடுத் தார்கள். அதற்குள் அவள் புடைவைத் தலைப்பைச் சரிசெய்துகொண்டு வெளியே சென்று காரில் ஏறிக் கொண்டு விட்டாள். காரும் ஒரு வட்ட மடித்து புழுதியைக் கிளப்பியவாறு வடக்கு நோக்கிச் சென்றுவிட்டது.

நூறு ரூபாய் நோட்டுகள் முகுந்த ராவின் கையில் வியர்வையில் நனைந்து கொண்டிருந்தன.


பூஜையறையிலிருந்த நவநீத கிருஷ்ணன் முகுந்தராவை நோக்கிப் புன்முறுவலித்துக்கொண்டிருந்தான்! ❀

மணல் நிறைந்த பாலைவனப் பிரதேசத்துக்கும் தனியானதொரு கவர்ச்சி இருக்கிறது.

அதன் வறட்சிக்கு மத்தியில் மலர்ந்திருக்கும் முள் பூக்களிடமும் ஓர் அழகு தெரிகிறது.

இங்கே நாள் முழுவதும் நிலவி இருக்கும் அமைதியில் ஒரு சோகம் ஒளிந்திருக்கிறது.


இராஜஸ்தானிலேயே மிகப்பெரிய மாவட்டம் ஜெய்சல்மீர். சுமார் பதினாறாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள இது, அளவில் கேரள மாநிலத்தைவிடப் பெரியதாகும். இதன் நிலப்பரப்பு மேற்கில் பாகிஸ்தான் எல்லையைத் தொட்டுக்கொண்டு அமைந்திருக்கிறது. கண்களை மறைக்கும் மணல் காற்றும், அந்தக் காற்றின் வேகத்தில் அடிக்கடி இடம் பெயர்ந்து தங்கள் விலாசத்தை மாற்றிக் கொள்ளும் மணல் மேடுகளும், மண் மூடி திடீரென்று காணாமல் போய்விடும் மனித சஞ்சாரமற்ற சாலைகளும், ஆங்காங்கே குவியலாக எழுந்து நிற்கும் முட்புதர்களும் மழைக்காலங்களில் தலை காட்டி மக்களை மகிழ்விக்கும் திட்டுத் திட்டாகப் பூத்த பசுமையும், இந்தத் தார் பாலைவனத்தின் லட்சணங்கள்.



ஜெய்சல்மீர் கோட்டை

தனிமையில் தூங்கும் குல்தரா

லக்ஷ்மி ரமணன்





ஜெய்சல்மீரிலுள்ள 'சம்' பாலைவனம்.

சிறிய ஊர்களுக்கும், 'தாணி' எனப்படும் சின்னச்சின்ன கிராமங்களும் இங்கு இல்லாமலில்லை. அப்படியிருந்தும் மொத்த மாவட்ட ஜனத்தொகையில் ஒரு சாரார் நாடோடிகள். இவர்கள் தங்கள் கால்நடைகளுடன் அடிக்கடி பசுமைப் பிரதேசங்களை நோக்கிக் குடி பெயருகிறார்கள்.

பஞ்சாபை வளப்படுத்தும் சட்லெஜ் நதியிலிருந்து இந்திரா கால்வாய் மூலமாக (முன்பு இராஜஸ்தான் கால்வாய் எனப்பட்டது) நீர் எடுத்துவந்து இந்தத் தார் பாலைவனத்தில் 'ராம்கட்' பகுதி வரை பசுமையை ஏற்படுத்த மாநில அரசு முயன்று அதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது. இந்தத் திட்டம் பூரணமாகும்போது கால்வாயைச்சுற்றி அமைந்துள்ள பல்லாயிரக்கணக்கான ஹெக்டேர் நிலங்கள் பசுமை வளம் பெற்றுச் சிறப்புறும்.

ஒட்டகம் இங்கு சாதாரண மனிதனின் மாருதி! மூலை முடுக்குகளிலுள்ள கிராமங்களுக்குத் தபால் எடுத்துச் செல்லவும், அவர்களது கடிதங்களைச் சேகரித்து முத்திரை குத்தி எடுத்துவந்து மெயிலில் சேர்க்கவும் பயன்படுத்தப்படும் 'நடமாடும் தபால் நிலையமாகவும்' இது இருக்கிறது.

கோடையின் உக்கிரமான வெயில் இங்குள்ள மக்களுக்குப் பழகிப்போன ஒன்று. 'ஆறுவது சினம்' என்பதைப் போல் இரவுகளில் குளிர்ந்து போகும் காற்றுக்கு அத்தனை இதம் எங்கிருந்து வந்தது என்பது நமக்குப் புரியாத உண்மை!

இந்த மாவட்டத்தின் தலைநகரான ஜெய்சல்மீர் ஜோத்பூரிலிருந்து 285 கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. ராவ் ஜெய்சால் என்னும் மன்னரால் தோற்றுவிக்கப்பட்டதால் இந்தப் பெயர். 'ஜெய்சால் மேரு' 'ஜெய்சாலின் கோட்டை' என்பது மருவி ஜெய்சல்மீராயிற்று.

இதற்குச் சுவாரஸ்யமான சரித்திரம் உண்டு. அதை நினைவுபடுத்தும் மிகப்பெரிய கோட்டையும், செல்வச் சீமான்களின் அரண்மனையையொத்த 'ஹவேலி' வீடுகளும் உள்ளன. மாலை முடிந்து இரவில் சங்கமித்துப் போகையில் இருள் போர்வைக்குள் சுருண்டு கொள்ளும் இந்நகரம் 'அராபிய இரவுகளில்' வர்ணிக்கப்படும் கனவுப் பிரதேசம்போல் காட்சி தரும். மிகவும் நுணுக்கமான சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட ஹவேலிகளும், ஜெயினர் கோயில்களும், இவற்றில் காணப்படும் சுவர் மற்றும் மேல் கூரை ஓவியங்களும் பத்திரமாகப் பாதுகாக்கப் பட்டுள்ளதால் டூரிஸ்ட்களின் கண்களுக்கு விருந்தாகின்றன. சாதாரணமான பழைய வீடுகளின் முகப்புகளில் கூட விஸ்தாரமான சிற்ப வேலைப் பாடுகள் இருப்பதைக் காணலாம்.

யெல்லோ சாண்ட்ஸ்டோன் (Yellow Sandstone) எனப்படும் ஒருவித மஞ்சள் நிறப் பளிங்கை நிகர்த்த கல்லால் கட்டப்பட்ட ஜெய்சல்மீர் கோட்டை சூரிய ஒளிபட்டுப் பொன் நிறத்தில் மின்னுவதால் இதைத் தங்கக்கோட்டை (சோனார் கிலா) என்கிறார்கள். 99 வெளிப்புற வளைவுகளைக் கொண்ட ஜெய்சல்மீர் கோட்டை இதன் அரசர் மகாராவல் ஜெய்சாலினால் (கி.பி. 1212) கட்டப்பட்டதாம்.

ஆறடுக்கு மாடிகளைக் கொண்ட சாலிம்சிங் ஹவேலி (மாளிகை) சிற்ப வேலைப்பாட்டில் நிகரற்று விளங்குகிறது. திவான் சாலிம்சிங் (திவான் என்றால் பிரதம மந்திரி) ஜெய்சல்மீர் மன்னனையும், மக்களையும் எப்படிப் பயங்கரமாக ஆட்டிவைத்தான் என்று சரித்திரம் சொல்லுகிறது.

பாலை மண்ணில் தண்ணீர் கண்ட இடம் தேவலோகம். இங்கு பஞ்சம் நீருக்கு மட்டுமே. கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் குறைச்சல் இல்லை. மக்களோடு பிறந்த கலைத்திறமைகளை ஊக்குவித்து உற்சாகப்படுத்தவும், அதே நேரத்தில் அவர்களது கைவண்ணங்களை வெளி உலகுக்கு அறிமுகப் படுத்தவும் இராஜஸ்தான் சுற்றுலா இலாகா 'பாலைவனத் திருவிழாவை' (Desert Festival) ஒவ்வோர் ஆண்டும் ஏற்பாடு செய்கிறது. கிராம மக்கள் உருவாக்கும் கலைப் பொருட்களை ஒன்று சேர்த்துக் கண்காட்சி நடத்துகிறது. ஆடல், பாடல் வாத்திய விருந்தம், பொம்மலாட்டம், தெருக்கூத்து என்று கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஜெயசல்மீரில் தயாராகும்



பாலைவன கிராமத்திற்கு வந்து போகும் டூரிஸ்ட்கள்.

கம்பளிப் போர்வைகள் மிகவும் பிரசித்த மானவை.

உண்மையான பாலைவனத்தைக் காண விரும்புகிறவர்கள் ஜெய்சல்மீரி லிருந்து நாற்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ள 'சம்' (Sam) என்கிற இடத்துக்குப் போகவேண்டும். சாலையி லிருந்து பார்த்தாலே குவியல் குவிய லாகப் பெரிய மணல் மேடுகள் தெரி கின்றன. இங்கே அலைபாய்கிற ஊதற்காற்று மணலின்மீது இழைந்து இழைக் கோலமிட்டதைப்போல் விதவித மான டிசைன்களை வரைந்து அழித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். தூரத் தில் சிவப்பு நிறக் கோளமாகி மணல் குன்றுக்குள் இறங்கிப் புதைந்துபோகும் சூரிய அஸ்தமனம் இயற்கை தீட்டிக் காட்டும் அற்புத ஓவியம்.


'சம்'முக்குப் போகும் வழியில் இருபது கிலோமீட்டரைக் கடந்ததும் இடப்புறமாகப் பிரிகிற பாதையில் ஐந்தரை கிலோமீட்டர் தூரம் பிரயாணம் செய்தால் 'குல்தரா'கிராமம் வருகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை இங்கே பாலிவால் அந்தணக் குடும் பங்கள் வாழ்ந்தபோது செல்வச் செழிப் பும், கலகலப்பும் நிறைந்திருந்ததாம்.

இன்று... மனித சஞ்சாரமே இல்லாத இந்தக் கிராமம் அமைதியில் உறங்கிக் கொண்டிருக்கிறது!

'ஈ காக்கையைக் கூடக் காணோம்' என்கிற வார்த்தைகள் இந்த இடத்திற்கு முற்றிலுமே பொருந்தும். எங்கிருந்தோ தப்பிப் பறந்து வந்துவிட்ட வண்டு ஒன்று மட்டும் நம்மைச் சுற்றிச் சுற்றி வருகிறது! 'ஊ' என்கிற மணல் காற் றின் ஓலம் அந்தத் தனிமையான சூழ் நிலையில் நம் மனதில் ஒருவித அச் சத்தை உண்டாக்குகிறது. சிதிலங் கள்... இடிபாடுகள் ஆகியவையே அதிகம் காணப்படுகின்றன.

அகலமான வீதிகள், குலைந்த நிலையில் நிற்கும் இரண்டு மாடிக் கட்டடம், அடுத்தடுத்துக் காணப்படும் இடிபாடுகள், தீவித்திருக்கிற சுவர் களில் பதிக்கப்பட்ட விளக்கு மாடங்கள், வீட்டின் புழக்கடையில் மாட்டுத் தொழு வங்கள், பின்கட்டில் அலங்காரமாகத் துளசி மாடம், கால்நடைகள் நீர் அருந்துவதற்கான தொட்டிகள், கச்சித மான கழிவு நீர்ப் போக்கு வசதிகள், வழிப்போக்கர்கள் படுத்து ஓய்வெடுக்க அழகானகூரை வேய்ந்த மண்டபங்கள்.. வீதியின் முடிவில் விஷ்ணுவின் கோயில் 'பளிச்'. அருகில் சாய்ந்து கிடக்கும் தூணில் நுணுக்கமான சிற்பங்களுடன் கோயில் சுமார் எண்ணூறு ஆண்டுகள் புராதனமானது என்கிற தகவலும் கிடைக்கிறது.

இங்குள்ள மயானங்களில் நாட்டப் பட்டிருக்கும் கற்களில்கூடச் சிற்பங் களைக் காணலாம்.



இன்று பழுதடைந்திருக்கும் பாலிவால் கிராமம்.

எதற்காக இந்தக் கிராமம் இப்படிப் புறக்கணிக்கப்பட்டு மனித சஞ்சாரமில் லாமல் சிதைந்துபோய்விட்டது? இந்தக் கேள்விக்குப் பதில் தேட நாம் சரித்திரத் தில் சுமார் இருநூறு ஆண்டுகள் பின்னால் போக வேண்டும்.

பாலிவால்கள் ராஜஸ்தானில் 'பாலி' என்கிற ஊரைச் சேர்ந்தவர்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்த இஸ்லாமியப் படையெடுப்பினால் பாதிக் கப்பட்ட இவர்கள் அவ்விடம் விட்டுக் குடிபெயர்ந்து சிலர் குஜராத்தையும், இன்னும் சிலர் ஜெய்சல்மீரின் ஒரு பகுதியையும் வசிக்கத் தேர்ந்தெடுத் தார்கள். அவற்றில் குல்தராவும் ஒன்று. 'குல்தரா' என்பது இங்கே வசித்த பாலிவால் அந்தணர்களின் கோத்திர மாம்.

மண்ணைக் கையில் எடுத்துத் தேய்த்துப் பார்த்து அதன் வளத்தைச் சொல்லக்கூடிய திறமை அவர்களுக்கு உண்டாம். பாலிவால்கள் கடுமையான உழைப்பாளிகள். வியாபாரம் செய் வதில் திறமை மிக்கவர்கள். பாலை வனத்தில் மழைத் தண்ணீர் எங்கெல்லாம் தேங்க வாய்ப்பிருக்கிறது என்று ஆராய்ந்து அத்தகைய பகுதிகளைத் தேர்வு செய்து 84 கிராமங்களில் சுமார் 5000 பேர் குடியேறியதாகச் சொல்லப் படுகிறது.

அத்தகைய பிரதேசங்களில் மணல் திட்டுகளை எழுப்பி நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தி, சீரகம், கம்பு, கேழ்வரகு,

தனியா ஆகியவற்றை விதைத்தார்கள். கால்நடைகளையும் வளர்த்தார்கள். நாளடைவில் இவற்றின் செழுமை அதிகரித்து வியாபாரங்கள் வளர்ந்தன. மேற்கு ஆசியாவுக்குப் போகும் வழியில் ஜெய்சல்மீர் ஒரு பெரிய வியாபார மையமாக ஆயிற்று.

பணம் கொடுக்கல் வாங்கல்களில் பாலிவால்களின் கை ஓங்கி இருந்தது. குடியானவர்களின் விளைச்சலில் ஒரு பகுதியைப் பெற்றுப் பண உதவி செய்தார்கள். நெல், கம்பளி, நூல் ஆகியவற்றின் வியாபாரமும் தொடங்கியது.

இவர்கள் ஏற்படுத்திய 'காரி' என்னும் நீர்த்தேக்கப் பாணியைப் பின்பற்றிப் பாலைவனப் பிரதேசங்களில் இன்றும் நீர்த் தேக்கங்கள் கட்டப்படுகின்றன.

பாலிவால்கள் ஆரம்ப நாள்களில் தற்போது பாகிஸ்தானில் இருக்கும் 'சிந்த்' பகுதியில் வசித்தவர்களாம். அடுத்தடுத்து வந்த தலைமுறையினர் பாலியில் குடியேறிப் பிறகு ஜெய்சல்மீரில் தங்களை நிலைநாட்டிக் கொண்டார்கள்.

இவர்கள் தங்கள் இனத்துக்குள் மட்டுமே திருமணங்களை நடத்திக் கொள்வார்களாம். பிள்ளையானவன் பெண்ணின் தகப்பனுக்கு வரதட்சணை கொடுத்து அவளை மணக்கவேண்டும். பெண்கள் 'பர்தா' முறையைப் பின்பற்றினார்கள். செல்வச் சிறப்புடன் கொடி கட்டிப் பறந்த இவர்களுக்குத் திடீரென்று சரிவு காலம் ஏற்பட்டது.

ஜெய்சல்மீர் அரசராக ராவ் முல்ராஜ் கி.பி. 1762இல் அரியணை ஏறினார். முதலில் திவானாக (பிரதம மந்திரி) ஸ்வரூப் சிங் பதவி ஏற்றதுமே பாலிவால்களுக்குக் கெட்ட காலம் ஆரம்பித்தது. அடுத்து அவர் மகன் சாலிம் சிங் திவானானது ஜெய்சல்மீருக்கே ஒரு சாபக்கேடு என்று கருதப்பட்டது.

சாலிம் சிங் சின்னவயதில் நிறையக் கஷ்டங்களை அநுபவித்தான். அதனால் அவன் மனம் பாறையாக இறுகிவிட்டது. மக்களைத் துன்புறுத்துவதிலேயே அவனுக்குத் தனி இன்பம் இருந்தது. போர் இன்பம் இருந்தது. போர் மோகம் கொண்ட அவன் அடுத்தடுத்து நிகழ்த்திய படை எடுப்புகளுக்கு நிறையப் பணம் தேவைப்பட்டது. பாலிவால்களின் செல்வச் சிறப்பு அவன் கண்களை உறுத்தியது.

ஏற்கனவே அவர்கள்மீது விதிக்கப்பட்ட வியாபார வரி, விளைச்சல் வரி போன்றவற்றுடன் நில வரியையும் விதித்துத் தொல்லைப்படுத்தினான். சாலிம் சிங்கின் கொடுங்கோல் ஆட்சியைப் பற்றிச் சரித்திரம் மிக விரிவாகக் குறிப்பிடுகிறது.

இவனை ஜாலிம் சிங் (அக்கிரமக்காரன்) என்று மக்கள் குறிப்பிடும் அளவுக்கு சாலிம் அக்கிரமங்கள் செய்தான்.

வரித்தொல்லையின் பெருஞ்சுமை தாங்கமுடியாமல் பாலிவால்கள் மன்னரைச் சந்தித்துத் தங்கள் கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். "இந்த ராஜ்யத்தின் பொருளாதாரத்தின் முதுகெலும்பே நிலங்களல்லவா? இப்படி வரி விதித்து எங்களையே அழித்து விடுவது நியாயமல்ல" என்று மன்னரிடம் மன்றாடினார்கள். ஆயினும், சாலிம் சிங்கின் கைப்பொம்மையாக இருந்த மன்னரால் எதுவுமே செய்ய முடியவில்லை.

பாலிவால்கள் தங்கள் புகாரை மன்னர்வரை கொண்டுபோனது தெரிந்ததும் சாலிம் வெகுண்டெழுந்தான். அவனது கோபத்தின் கொடுமைக்கு அவர்கள் ஆளாக நேரிட்டது.

தான் விதித்த வரிகளை அவர்கள் செலுத்தாவிடில் கைது செய்யப்படுவார்கள் என்று பயமுறுத்தினான். ஜெயிலில் மாட்டு மாமிசத்தைப் படைத்து அவர்களைச் சாப்பிடும்படிப் பலவந்தம் செய்யப் போவதாக மிரட்டினான்.

அதனால் வெகுண்டெழுந்த பாலிவால்கள் ஒரு நாள் இரவில் 'கடோடி' என்னும் கிராமத்தில் கூடினார்கள். தாங்கள் இருந்த 84 கிராமங்களையும் உடனடியாகக் காலி செய்து விட்டு வெளியேறி சாலிம் சிங்குக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். இனி எப்பொழுதுமே அந்தக் கிராமங்களுக்குத் தாங்கள் திரும்பப் போவதில்லை என்று சபதம் செய்து கொண்டார்கள். அப்போது தாங்கள் உடுத்தியிருந்த உடைகளுடன், குடிக்கத் தண்ணீரைத் தவிர இவர்கள் வேறு எதையுமே உடன் எடுத்துச் செல்லவில்லை. இரவோடு இரவாக இவர்கள் ஜெய்சல்மீரை விட்டுத் தங்கள் குடும்பங்களுடன் வெளியேறினார்கள். இவர்கள் எங்கே போனார்கள் என்று தீர்மானமாகத் தெரியவில்லை. அந்த இரவோடு ஜெய்சல்மீரின் சுபிட்சம் சீர்குலைந்தது!

சாலிம் சிங்கின் அட்டூழியங்கள் கி.பி. 1824 ஆம் ஆண்டு வரை தொடர்ந்ததாம். பின்னால் வந்த அரசர் (முல்ராஜுக்குப் பிறகு) கும்பெனியாரோடு உடன்படிக்கை செய்து கொண்டபோது சாலிம் சிங், ஜெய்சல்மீர் திவான் பதவி அடுத்தடுத்து தன் சந்ததிகளுக்கே அளிக்கப்பட வேண்டும் என்கிற ஷரத்தையும் சேர்க்க முயன்றானாம். ஆனால் அது மறுக்கப்பட்டுவிட்டது! இறுதியில் இவன் வஞ்சகமாகத் தன் மனைவியாலேயே விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டான் என்று சொல்லப்படுகிறது.


இப்படிப் பாலிவால்கள் துறந்து சென்ற கிராமங்கள் சிலவற்றில் கொஞ்சம் இராஜபுத்திரக் குடும்பங்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகு குடியேறினார்களாம். ஆனால் மற்றவற்றில் மயான அமைதியும், மணல்காற்றும் தனிமையும் தான் ஆட்சி புரிகின்றன.

இங்கிருந்து மக்கள் ஒரு துரும்பைக் கூட எடுத்துப்போக விரும்புவதில்லை. பாலிவால்களின் சாபம் தங்களைத் தாக்கும் என்று பயப்படுகிறார்கள். ஒரு கல்லை எடுத்துச் சென்றால்கூடத் தங்களுக்குக் கஷ்டம் வரும் என்று நம்புகிறார்கள். சிலர் இந்தக் கிராமத்து வழியாகக் கூட மற்ற கிராமங்களுக்குச் செல்லுவதைவிரும்புவதில்லை.

பிரபல வங்க மொழித் திரைப்பட இயக்குநர் மிர்ணாள் சென் பிரெஞ்சு கூட்டுடன் Genesis என்கிற ஆங்கிலத் திரைப்படத்தைத் தயாரிக்க குல்தராவுக்கு வந்து போனாராம்.

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் 'குல்தரா'விலுள்ள சரித்திர ஆதாரங்கள் காணாமல் போகாதிருக்கக் காரணம் இங்கிருந்து கல்லை எடுத்துப் போனால்கூடத் தங்களுக்குக் கஷ்டம் ஏற்படும் என்கிற நம்பிக்கைதான்.

எத்தனை சுற்றுலாப் பயணிகள் வந்து போனாலும் இதன் அமைதி கலையவில்லை. தனிமை கெடுவதில்லை! வந்தவர்களிடமெல்லாம் தன் சோகக் கதையைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டு தனிமை கலையாமல் தாங்கிக் கொண்டிருக்கிறது குல்தரா!



மலைக்கோட்டை சித்தன்னவாசல்

திருப்புகழ் தழுவிய தமரக் கோயில்கள்

மனித வாழ்க்கையில் சின்னஞ்சிறு புள்ளியாய்த் தோன்றியதுதான் இறையுணர்வு. ஆனால் அதுவே காலப் போக்கில் மனிதனை வளப் படுத்த, மாபெரும் வட்டமாய் வடிவம் கொண்டது. அந்த அன்பு வட்டத்துக்குள் சின்னஞ் சிறு புள்ளிகளாய் மனித உள்ளங்கள் மகிழ்ந்து குவிந்தன. நான், நீ என்னும் வேறுபாடு களைக் கோயில்கள் 'நாமாக' மாற்றிய வித்தையைக் கல் வெட்டுகள் களிப்புச் செய்தி களாய் எடுத்துரைக்கின்றன. அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும், மாணிக்கவாசகரும், ஆழ்வார்ப் பெருமான்களும், ஆண்டாள் அம்மையும், இன்னும் எத்தனையோ கவிதை நெஞ்சங் களும் இறைக்கோயில் நோக்கி நிகழ்த்திய பக்திப் படை யெடுப்புகளை வரலாற்றுப் பக்கங்கள் எத்தனை மகிழ்வோடு எடுத்துரைத்து நிற்கின்றன!

இறைவனைப் பாடி, அந்தப் பாடலில் வாழ்வியல் கருத்து களை மகரந்தமாய்த் தூவி, கோயில் படிகளை மிதிக்கும் நெஞ்சங்கள் கோபுர எண்ணங் களைக் கொள்ளுமாறு அழ காய், நயமாய்த், தெளிவாய் இசைநயம் கூட்டி, இதம் தரும் வழிகளை இலைமறை காயாய்ப் பொதிந்த புதைய லாய்ப் படைத்துத் தந்துள்ளனர் நம் பக்தி முதலிகள். திரு முறைகளும், பிரபந்தங்களும் சுடராய் எழுந்து காட்டிய சுகந் தரு பாதையில் தொடர்ந்து நடை போட்டு இலக்கியப் பூக்களைத் தூவிச்சென்ற மறக்கவொண் ணாப் பெருமக்களுள் அருண கிரியாரும் ஒருவர்.



சித்தன்னவாசலில் உள்ள பிள்ளையார்



அருணகிரிநாதர் - குமார வயலூர்

கி.பி. பதினைந்தாம் நூற் றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படும் அருணகிரிப் பெருமானைப் பெற்றெடுத்த பெருமையைக் கொண்டது திருவண்ணாமலை. பிரபுட தேவமன்னனின் காலத்தில் வளர்ந்த இவர் இளமை யிலேயே எண்ணற்ற தமிழ்

இலக்கியங்களை ஆர்வத்தோடு கற்றுத் தேர்ந்தார். கல்வி பெருகியும் அறிவுத் தெளிவு அமையாமையினால் கையில் இருந்த காசையெல்லாம் கணிகையர் தொடர்பில் பறிகொடுத்தார். தவறான வழிகளில் தடுமாற்றமின்றி வந்த இன்பம் வறுமையையும், பிணியையும் பரிசுகளாய்த் தந்தது. வாழ்க்கையின் தேவைகள் வாட்டத் தொடங்கின. வலியுடன் கூடிய நோயின் கடுமை வாழ்க்கையின் விளிம்பிற்கே அவரை விரட்டியது. இனி இந்த மண்ணில் இருந்தென்ன இன்பம் என்றெண்ணிய நிலையில் அண்ணாமலைக் கோபுரத்தேறி உயிர் துறக்கக் குதித்தார். வாழ்க்கையை முடிக்க விரும்பிய அந்தக் கடைசி நிமிடத்தில் கூட உயரப் போதலையே உகந்த அருணகிரியாரின் ஆற்றலை இழக்க இறைமனம் இசையவில்லை. அண்ணாமலையாரின் அருமை மகன் முருகன் முனிவர் வடிவில் வந்து வீழ்ந்தவரைத் தாங்கினார். வீழாத வாழ்க்கையை வழங்கினார். அருணகிரியாரின் நாவில் வேல்கொண்டு ஆறெழுத்தை வரைந்தார். அக்க மாலை தந்து, 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என்ற அடியெடுத்துத் தந்து, பாடுக திருப்புகழென்று பாதை காட்டினார். கசந்த நெஞ்சுடன் கோபுரம் ஏறிய அருணகிரியார் கனிந்த நினைவுடன் வாழ்க்கை திரும்பினார். வாடிய உள்ளம் பாடலில் பசுமை கண்டது. எது வாழ்க்கை என்பதை முருகன் உணர்த்திட, இது வாழ்க்கை என்று தமிழால் பாடினார் அருணகிரியார். போட்டிகளும், பொறாமைகளும் புகழ்மிக்க வாழ்க்கையின் உறவுகள். அருணகிரிக்கும் அவை தொல்லை தந்தன. கதிர் முன் பனியாய் அவை இறைக் கருணை வீச்சில் மறைந்தன. அண்ணாமலையில் தொடக்க நாள்களைச் செலவிட்டவர் அண்ணல் முருகன் உறையும் அத்தனைத் தலங்களையும் பார்த்திட விழைந்தார். பயணம் தொடங்கியது. நடந்த வழியெல்லாம் முருகன் எங்கிருந்த போதும் நின்று கண்டார். கண்களால் பருகிய அழகைச் சந்த இணைப்புகளில் சிந்தை குளிரத் தந்தார். இந்தத் தத்தகாரப் பாடல்களைத் தழுவிக்கொண்ட திருச்சி மாவட்டக் கோயில்கள் எண்ணிக்கையில் பதினாறு. இவற்றுள்ளும் கலைச் சிறப்பால், கல்வெட்டிருப்பால், பாடல் பெருமையால் புகழ் பொலிந்து நிற்கும் நான்கு கோயில்களை வரலாற்றுப் பார்வையின் வனப்பான வசீகரிப்பில் வரிசையாய்ப் பார்ப்போம்.

சங்க வரிகளில் செழித்து நிற்கும் கோயில் தலங்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவையே. அவற்றுள் சிறப்பான ஒன்று சிராப்பள்ளிக் குன்று. குடைவரைகள் இரண்டும், கற்றளிகள் இரண்டும் இக்குன்றில் இடம் பெற்றுள்ளன. மலைக்கோட்டை என்று மக்களால் விரும்பி அழைக்கப்படும் இக்குன்றைச் சுற்றி இன்று கோட்டை கொத்தளங்கள் இல்லையென்றாலும், அவற்றின் சுவடுகள் உண்டு. நாயக்கர்களின் வடிவமைப்புடன்



குமார வயலூர் சதுர கரணரின் உமா. →




டாக்டர் இரா. கலைக்கோவன்



மேல் குடைவரை கங்காதரரைப் போற்றும் அடியவர்.



வயலூர் உமா



மேல குடைவரை கங்காதரரைப் போற்றும் மகேந்திர

கம்பீரமாக நிற்கும் கோட்டைச் சிதைவுகளைப் பார்த்தபடியே கொஞ்சம் நிமிர்ந்தால் உச்சிப் பிள்ளையார் உவந்து குடியிருக்கும் குன்றின் உச்சி கண்களில் படமாகும்.

திருச்சியின் எழிலார்ந்த அடையாளச் சின்னமாய் எல்லாவற்றிலும் இடம்பிடித்துக் கொண்ட இக்குன்றின் கீழ்ச் சரிவில் ஒரு குடைவரையும் மேற்சரிவில் ஒரு குடைவரையும் உள்ளன. கீழ்க்குடைவரையில் எதிரும் புதிருமாக இரண்டு கருவறைகள். ஒன்று சிவபெருமானுக்கு; மற்றொன்று திருமாலுக்கு. குடைவரையின் உட்சுவரில் ஐந்து தெய்வங்கள். பிள்ளையார், முருகன், கதிரவன், நான்முகன், கொற்றவை. பல்லவப் பாண்டியக் கலைமுறையில் அமைந்துள்ள இச் சிற்பங்களின் நெடுமையும், எடுப்பும் நெஞ்சில் நிறைபவை. கல்வெட்டுச் சான்றுகள் எதுவும் கண்காட்டாத நிலையில் இக் குடைவரையின் அமைப்பாளர்களை அடையாளம் காண முடியவில்லை யென்றாலும் அவர்தம் அருள் நெஞ்சையும் கலைப் பரிவையும் தெளிவாகவே புரிந்துகொள்ள முடிகிறது.

மேலைக் குடைவரை மகேந்திரவர்மனின் மயன் படைப்பு. உயர்ந்த மேடையாய்த் தளமெடுத்து, சாரலைச் செவ்வகமாய்க் குடைந்து, கம்பீரத் தூண்களும், கல்வெட்டு வரிகளுமாய் இங்கே ஒரு கலைப் புதையலை விசித்திர சித்தனார் உருவாக்கி மகிழ்ந்திருக்கிறார். அவர் சித்தம் மட்டுமா விசித்திரம்! சாதனையும்தான்! சுவர் முழுவதும் அடைத்துக்கொண்டு சுந்தரப் பேரெழிலாய் இங்குப் பரவியிருக்கும் கங்காதரன் திருக்கோலம் தமிழகத்தின் வேறெந்தத் திருக்கோயிலிலும் காணமுடியாத அதிசய அழகாகும். செங்கல்லாலும், சுண்ணாம்பாலும், மரத்தாலும், உலோகத்தாலும் கட்டப்பட்டு வந்த கோயில் கட்டடக் கலை முறையில் புதியதொரு மாற்றத்தை உருவாக்கிய பல்லவப் பெருவேந்தன் மகேந்திரனின் எண்ணங்களும், ஆர்வங்களும், எதிர்பார்ப்புகளும் எத்தனை உயரமானவை என்பதையும், அந்த உயரமான விழைவுகளை கைவிரல் அசைவுகளில், உளியோட்ட உரசல்களில் உயிர்ப்புள்ள வடிவமாக்கிவிட்ட பல்லவச் சிற்பிகளின் கலையாற்றல் எத்தனை வியக்கத்தக்கது என்பதையும் காலங்காலமாய் வரும் சந்ததி விதைகள் உணர்ந்து மகிழவேண்டுமென்றே இங்கே உருவாகி நிற்கிறார் கங்கையை ஏற்ற இந்தக் கலாமூர்த்தி.

அலட்சியமாய் உயர்ந்திருக்கும் வலமேற்கையில் சடையின் இருபுரிகள். அவற்றில்

தங்குவதற்கென்றே தளர்நடையிட்டு வரும் கங்கையின் கை கூப்பு! பக்கவாட்டிலும், கீழும் பரவசப் பேரின்பத்துடன் அடியவர் நால்வர். ஆரிவர் என்ற ஆய்வர்கள் பேசி, கல்வெட்டு வரிகளில் கண்ணாமூச்சி ஆடி, மகேசனின் திருவடி நிழலில் தன்னையே மகேந்திரன் சிற்பமாய்க் கண்டுள்ள ரகசியம் சொல்லி, தமிழகத்து உருவச்சிற்ப வரலாற்றுக்கு முகவுரை எழுதினார்.

பார்வையை அங்கும் இங்கும் திருப்ப முடியாதபடி சிறைப்பிடிக்கும் கங்காதரனின் அழகுத் திருக்கோலத்தை ஆசை தீரும் மட்டும் பார்த்தபிறகே பக்கவாட்டுச் சுவரில் கண்கள் பாய்கின்றன. தமிழகத்திலேயே வேறெங்கும் இத்தனை பெரிய இலக்கியம் கல்வெட்டாய் இல்லை. சுவர் முழுவதும் திருச்சிராப்பள்ளி அந்தாதி, தூண்களிலோ பல்லவர், சோழர்களின் வள்ளன்மை விளக்கங்கள், விளக்கெரிக்கவும், வழிபாட்டிற்கும் விரும்பித் தரப்பட்ட கொடைகளின் பட்டியல்கள்.

மிகப்பெரிய முன் மண்டபத்தோடு தாயுமானவர் அழைக்கிறார். சுற்றிலும் செப்புத் திருமேனியராய் நிற்கும் நாயன்மார்களின் சுந்தரப் புன்னகைகள்! படியேறுமிடத்தில் முருகவேள். ஆறுமுகனாய், அமர்ந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கும் இப்பெருமானின் இடப்புறம் தெய்வானை, வலப்புறம் வள்ளி, கருணை கொஞ்சும் இந்தக் கனிமுகச் செவ்வேளைத்தான் அருணகிரியார் பாடினாரோ?

தோகையில் வரும் வீரா, தேவர்கள் பெருமானே என்ற திருப்புகழ் கொஞ்சும் இம் முருகப் பெருமானின் புன்னகை பொலிந்த முகம், அருளைத் தேடும் அடியவர்கட்கு அரவணைப்பு காட்டும் சுகமே சுகம். மேலே அம்மை மட்டுவார் குழலியின் அரசாட்சி. அதற்கும்



பிச்சை ஏற்கும் அண்ணல்

உய்யக் கொண்டான் திருமலை

புன்னகை பொலிந்த பூகம்.




மேலே சிவபெருமான் தாயுமானவராய்! பிள்ளையை முதலிலும், தாயை நடுவிலும், தந்தையை உயரத்திலும் காட்டி குழந்தை, தாய், தந்தை என்று குடும்ப உணர்வூட்டி வாழ்க்கையின் நுணுக்கங்களைப் படிப்படியாய் உணரவைக்கும் இக்கோயிலின் அமைப்பே அலாதிதான்.

திருச்சி அதவத்தூர் சாலையில் திருச்சியிலிருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது திருக்கற்குடி. உய்யக்கொண்டான் திருமலை என்று செல்லமாக அழைக்கப்படும் இந்தச் சிறுகுன்றின் திருப்படிகள் புனிதமானவை. அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும் பாதம் பதித்துப் பதிகம் பாடிய இடமல்லவா இது! தேவாலயங்களின் சக்கரவர்த்தி என்று இன்றளவும் புகழப்படும் இமாலய சாதனையைத் தமிழகத்து மண்ணில் நிகழ்த்தி, அதற்கு ராஜராஜீசுவரம் என்ற நற்பெயரையும் சூட்டித் திருக்கோயில் வரலாற்றில் துருவமீனாய்த் திகழும் முதலாம் இராசராசனின் விருப்பத்திற்குரிய விருதுப் பெயர்களுள் ஒன்றுதான் உய்யக்கொண்டான். ஊரின் நடுவில் அமைந்திருக்கும் இந்தக் குன்றின் எதிரில் திருக்குளம். படியேறி வருவோரை இரண்டு கோபுரவாயில்கள் எதிர் கொள்கின்றன. இரண்டாம் கோபுரவாயிலின் இடப்புற முகப்பின் கீழ்த்தளத்தில் முத்து முத்தாய்ப் பொறித்து வைத்த தமிழ்க் கல்வெட்டு. சின்னக் குழந்தைகளும்கூட இங்கு வரிவரியாய் வரலாறு படிக்கலாம். மலைத்தளத்தில் பளீரென்று விரிந்த கட்டட அமைப்புகள். படியேறியதும் பிற்காலத்தூண்களுடன் மண்டபமொன்று; அதன்மேற்குப் பார்த்த நுழை வாயிலுள் செல்வோரை எதிர்கொள்கிறார், மையுண்ட கண்ணியாய் மையலூட்டும் பார்வையுடன் அமர்ந்திருக்கும் அம்மை. மேற்குப் பார்த்த திருமுன் வயலூர் வடிவேலனுக்கு அருள் செய்யவாம்!

அம்மைக்கு வலப்புறம் பராந்தகன் காலத்துக் கரு வறை, புதிய பொலிவுடன் பழைய சுவடுகளின் பின்னணி யில் காலப்பார்வை பார்க்கிறது. கட்டடக் கோட்டங்களில் பிட்சாட னரை மறக்கமுடியாது. கண் களைக் கட்டியிழுக்கும் அழகுக் கோலம். மானுக்குப் புல் தந்த படியே நடக்கிறார். சுந்தரருக் காய் அன்று ஆரூர் வீதிகளை அளந்த கால்கள் இன்று தாருகா மங்கையரின் தாபத்தை மிகையாக்கிப் பாடம் புகட்டிட, மன்மத அடிகளை மெல்ல வைக்கின்றன. பிச்சைப் பாத் திரத்தைச் சுமந்து செல்லும் குள்ளச் சிறு பூதம்கூட காமன் கணைகளை வீசிச் செல்கிறது. கவர்ச்சி அதன் பார்வையில் மட்டுமல்ல, அழகுக் கை வீச்சிலும்தான்.

அன்னை, தந்தை இருவரிடத் தும் அன்பு கொண்டவராய்க் குமரக்கடவுள் இங்கு இரண்டு திருமுன்களிலும் எழுந்தருளி யுள்ளார். இவர்களில் யாரை அருணகிரியார் பாடியிருப்பார்? கற்குடிக்குத் திருப்புகழ் ஒன்று தான். இருவரையுமே பாடி யிருப்பாரோ? கோயிலார் தந்தையின் மகனையே திருப் புகழ் போற்றியதென்று உறுதி யாய்க் கூறுகின்றனர். சக்தியும், வஜ்ரமும் பின்கைகளை அலங் கரிக்க, முன் கைகளைக் காப் பதற்கும், காத்தபின் அருள் வதற்குமாய்க் கொண்டு, பக்கங் களை மனம் கவர் நாயகியார்க் குப் பகிர்ந்தளித்துப் புன்ன கைக்கிறார் அப்பனுக்குத் தப் பாமல் பிறந்த இந்த அழகு மகன்.

திருச்சி, மேலூர்ச் சாலை யில், திருச்சியிலிருந்து சரியாக இருபத்தெட்டாவது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது விராலிமலை. விறலிமலையாய் இருந்த பெயர் பேச்சு வழக்கில் விராலி மலையாய் விரிவு கண்டது. இரத்தினக் கம்பளம் விரித்தாற்போல் சாலையோரத் தில் மாணிக்கப் பூக்கள். காலைக் கருக்கலின் சில்லென்ற சுகம். கண் படும் தொலைவில் விறலிக்குன்று. மலையை நெருங்கும்போதே மயில்களின் அகவல், வாருங்கள், வாருங் களென்று. குறும்புக் குரங்குகள் கைகளைப் பார்க்கின்றன. மலைப்படிகளில் ஏறும்போதே பார்வைகள் அலைபாய் கின்றன! பக்கங்களில் பார்ப் பதா? நிமிர்ந்து நோக்குவதா? சற்று நின்று இளைப்பாறும் சாக்கில் சுற்றிலும் பார்ப்பதா? கட்டடங்களும், பசுமைகளும், ஓடும் வண்டிகளும், தழுவும் காற்றின் சுகமும், மயில்களின் நடமாட்டமும் மனமோகனச் சூழலுக்கு நம்மைத் தயார் படுத்துகின்றன.



• மலைக் கோட்டை மேல் குடைவரையின் தோற்றம்.

தோகையை விரித்தபடி நடைபழகும் அந்த மயில்களைக் காணும்போது படித்து மகிழ்ந்த இலக்கிய வரிகள் எல்லாம் பளிச்சென்று நினைவுக்கு வரு கின்றன. நீண்டு வளைந்த அந்த அழகுக் கழுத்தின் வண்ணக்கலவைகள்! அது பச்சையா, நீலமா, இலேசான கரும்பச்சையா? கடவுளுக்கும் அந்த மயில்களுக்கும்தான் வெளிச்சம். முன் மண்டப வழி கோபுரவாசலில் நுழைந்தால் மையக்கோயில். இக்கோபுர வாசலின் வடக்கு முகத்தாங்கு தளப் பட்டிகையில் இருந்து இதுவரை கண்டுபிடிக்கப் படாத தச்சமுழமொன்றை டாக்டர் மா. இராசமாணிக் கனார் வரலாற்றாய்வு மையம் கண்டறிந்து வெளிப்படுத்தி யுள்ளது. 'கருட மண்டப முழம்' என்று கல்வெட்டுப் பொறிப்பு கண்காட்டும் இத் தச்சக் கோலின் அளவு 73 செ.மீ. ஆகும். கோயிற்கட்டட அமைப்பு முறை அளவுகள் பற்றிய ஆய் வில் இப்புதிய கண்டுபிடிப்பு மேலும் ஒரு மைல் கல்லாகும்.

மையக்கோயில் தூண்களில் கட்டிய பெருமக்களின் கற்படி மங்கள். வணங்கியபடி நிற்கும் அந்த வள்ளல்களை வாழ்த்திய படியே தெற்குத் திருச்சுற்றில் திரும்பினால் திருநீற்றுப் பூச் சுடன அருளைக் காட்டியபடி வலக்கை சின்முத்திரையில் அக்கமாலையோடு, இடக் கையில் சுவடிகள். திருப்புகழ் தந்த அந்த அருளாளர் விராலி மலையை என்னமாய்ப் பாடு கிறார்! அவர் பாடலைப் போலவே, 'வேலா, முருகா, விசாகா, இமய உமைபாலா, விராலிப் பதியாளா' என்று ஒரு கல்வெட்டு முருகனைப் பல் பெயரிட்டு அழைத்து மகிழ் கிறது.

வடக்குச் சுற்றில் கருவறைச் சுவரில் நான்கு சிற்பங்கள். ஆணும், பெண்ணும் தனித் தனியே அமர்ந்த கோலத்தில்! ஆடும் பெண் ஒருவர். நான்

காவது சிற்பந்தான் அற்புதம். ஆடவர் ஒருவர் குளித்து முடித்த நிலையில் தலையைப் பிழிந்து சடைபுனையும் காட்சி. ராஜ ராஜீசுவரத்து இரண்டாம் திரு வாயிலின் மேலைமுக மேலடுக் கில் இதே போல் ஒரு வடிவம். இரண்டிற்கும்தான் எத்தனை ஒற்றுமை! மாமல்லைப் பாறைக் காட்சியில்கூட நதியோரம் தலை சீவித் தூக்கிமுடிக்கும் முனிவர் ஒருவர் இருக்கிறார். இந்தக் கூந்தல் முடிக்கும் அழகுகளைக் கூடச் சிற்பிகள் விட்டு வைக்க வில்லை.

கருவறையில் இறைவன் ஆறு முகனாய் மயில்மேல் அமர்ந்த கோலம். காத்து அருள்புரியும் கைத்தலங்களைத் தொடர்ந்து கருவிக் கைகள். வலப்புறம் பாசம், சக்கரம், கத்தி, அம்பு, வஜ்ரம். இடப்புறம் அங்குசம், சங்கு, கேடயம், வில், சக்தி. முருகப் பெருமானின் இரு புறமும் வள்ளி, தெய்வானை. முருகன், அழகன் என்பதுதான் எத்தனை பொருத்தம்! அந் தச் சின்னச் சிரிப்பும், ஆகர் ஷித்து அரவணைக்கும் அருட் பார்வையும், கண்களில் தெறிக் கும் மின்னலும், முருகா, குமரா என்று மனதிற்குள் மழையாய்ப் பொழிந்து மயக்கிவிடுகின்றன.

திருச்சியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலும், திருக்கற்குடியிலிருந்து அதே சாலையில் ஆறு கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது குமார வயலூர். முதலாம் இராசராசன் காலத்தில் சிவன் கோயிலாக இருந்த இத்திருக் கற்றுளிப் பரமேசுவரர் கோயில் அண்மைக் காலத்தில் குமரன் கோயிலாய்ப் புகழ் பெற் றுள்ளது. இன்றும் உள்ளே நுழைந்ததும் நம்மை வரவேற் பவர் ஆதிநாதரான சிவ பெருமான்தான். இவரது கரு வறையைச் சுற்றிலும் முதலாம் பராந்தகன், முதலாம் இராச ராசனின் கல்வெட்டுகள் இன் றும் சிதறிய துணுக்குகளாய்ச் சில இடங்களிலும், சீரான தொடர்களாய்ச் சில இடங் களிலும் காணக் கிடைக் கின்றன. இருபது கல் வெட்டுகள் இங்கிருந்து மைய அரசின் கல்வெட்டுத் துறையின ரால்படியெடுக்கப்பட்டுள்ளன.

இறைவியைத் தன் மகளாய்த் தத்தெடுத்துத் திருமணம் செய் வித்து மகிழ்ந்த சேந்தன்காரி திருப்பதியம் பாடப் பெண் களைக் கொடையளித்த அர மைந்தன், ஐந்நூற்றுவன் என்ற பெயரில் மண்டபமெழுப்பிய மாயிலட்டி, விளக்கெரித்த சங்கன் மாறன், நிலமளித்த நாகை என்று பெரும்பட்டிய லாய் நீளும் இந்தக் கொடை யாளிகளின் கருணை நெஞ் சைக் கொண்டாடி மகிழ்ந்த படியே ஆதிநாதரைக் காணச் செல்வோர், வலப்புறம் சற்று விழிகளைத் திருப்பினால் தமிழ் நாட்டின் அற்புதமானதொரு ஆடற்கரணத் திருமேனியைக் கண்டு மகிழலாம். தமிழகத்தில் சதுரகரணத்தில் அமைந்த இது போன்ற ஆடல் திருமேனிகள் இரண்டுதான் உள்ளன. ஒன்று கொடுமுடியிலும், மற்றொன்று குமாரவயலூரிலும். தனித்துவம் வாய்ந்த இந்தக் கரணக் காவியத்தைக் கண்டு களித்த படியே ஆதிநாதர் திரு முன்னுக்கு அடியெடுக்கலாம்.

இத்திருக்கோயில் சிவன் கோயிலாய்ச் செழிப்புற்றிருந்த காலத்தில் முருகன் சுற்றாலைத் தெய்வமாய் இருந்தார். இன்றோ வருகின்ற கூட்ட மெல்லாம் அவருக்குத்தான். அவர் அருளால் தந்தைக்கும் மனித வாசம். நின்ற கோலத் தில் வீரத்திருமகனாய், விதம் விதமான அழகுப் பூச்சுகளை விரும்பியேற்கும் வித்தகனாய், வழக்கம்போல் வாழ்வரசியரை இருபக்கங்களிலும் ஏற்றத் தாழ் வின்றி ஏற்றபடி, யாமிருக்க அஞ்சுவதேன் என்ற காப்புக் குறிப்புடன் கருணைப் பார்வை சிந்தும் கடம்பனாய் நிற்கும் இந்த வயலூரானை அருணகிரி யார்தான் எப்படி எப்படியெல் லாம் கொண்டாடி மகிழ்கிறார். வயலூர் உகந்த இந்த வடி வேலனைத் தமிழால் துழாவிய அவரின் சந்தச்சரங்கள் கேட் கக் கேட்கத் தேனல்லவா!

சிராப்பள்ளி கற்குடி, விராலிமலை, வயலூர் என்று திருப்புகழ் தழுவிய குமரத் தலங்கள் ஒன்றா, இரண்டா! இந்தக் கற்றளிப் பெருமை களைப் பாடிப் பிறந்த இலக் கிய வீச்சுகள், மக்கள் இத் தலங்களை மறந்துவிடக் கூடாதே என்ற அணுக்க ஆசை யுடன் நேசித்து எழுதப்பட்டவை. பாடியவர் அனைவரும் தங்கள் மகிழ்வுக்காய் மட்டும் பாட வில்லை. இறைவனை எண்ணி இதயம் தோய்ந்த பத்திமை யுணர்வில் தாங்களும் நெகிழ்ந்து, மனித சாதியே நெறிப்பட வேண்டுமென நேரவாக் கொண்டு உருகிப் பாடிய உன்னதப் படைப்புகளே தேவாரப் பிரபந்தத் திருப் புகழ்கள். பாதங்கள் தேயப் படிகளில் பதிந்த சுவடுகள் தந்த சுந்தர எழுச்சிகளே இந்த செவிப்புலன் நனைக்கும் செந் தமிழ்க் கீற்றுகள். எழுதிய வர்கள் இன்று இல்லைதான். ஆனால் எழுத்துகள் நினை வூட்டுகின்றன. எங்கு ஒலித் தாலும், எப்போது கேட்டாலும், யார் இதைச் சொன்னாலும் பாடிய நெஞ்சம் நினைவுக்கு வருகிறது. இறைப் பற்றை இலக்கிய நயத்துடன் அழுத்த மாய் எழுதிவிட்ட அந்த அற்புத ஆத்மாக்களை நெஞ்சில் நிறுத்துவோம். வரலாற்றுக் களன்களில் அவர்கள் காலப் புன்னகைகள்.

இயற்கைக்கு இரு(க்)கைக் கொடுப்போம்

பத்மினி பட்டாபிராமன்

"என் மடியில் பிறந்த மனிதர்களே! என்னைக் கொஞ்சம் நிம்மதியாக வாழவிடுங்களேன்..."

யாருடைய குரல் இது?

கோடிக்கணக்கான "செல்" (Cell) களாலும் அவற்றின் இரசாயனக் கூறு அமைப்புகளாலும் நாம் உருவாகக் காரணமாயிருக்கும் இயற்கை அன்னையின் குரல்தான் இது!

நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கையின் அபரிமிதமான அழகும், வளங்களும் இல்லாவிட்டால் மனித வாழ்க்கை எப்படி முழுமை அடையும்? பூமியின் வளமான நீர் சுரக்கும் நிலங்கள், "சதுரஅடி" களின் கணக்கில் வில்லை வில்லையாக விலை போகின்றன. அங்கே எழும்பும் அடுக்கு வீடுகளில் குடிதண்ணீருக்குத் தவித்தபடி குடியேறும் மனிதர்கள்..

'முழுமையாக மறைந்துவிட்டன' என்று வர்ணிக்கப்படுகிற நிலையை நோக்கி விரைந்து அழிந்து கொண்டிருக்கும் வனவிலங்குகள் பாவம் தாமாகவேவா அழிகின்றன? மனித நாக்கின் ருசிக்காகப் பலியாகின்றன.

காடுகள், மரங்களைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். லாரிகளில் லோடு லோடாகச் செல்லும் வெட்டப்பட்ட மரங்கள் மனிதனின் வசதிகளுக்காக அழிக்கப்படுகிறவை தாம். இவை வளர எத்தனை ஆண்டுகள் ஆயினவோ என்று எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அவை அப்படி அழியும் போது, அவற்றில் விழும் ஆயிரக்கணக்கான பறவைகளின் கூடுகளும் கூட அழிக்கப்பட்டு விடுகின்றன. இத்தகைய அழிவுகள் முப்பதாண்டுகளுக்கு முன்பே மேலைநாட்டினர் சிலரைச் சிந்திக்கத் தூண்டின. அதன் பலனாக, சிறிய அளவில், வனவிலங்குகளைப் பாதுகாக்க நிதி சேர்க்கும் அமைப்பாக "உலக வனவிலங்கு நிதி" (World Wildlife Fund - W.W.F) என்ற பெயரில் ஓர் அமைப்பை ஆரம்பித்தனர். பண்டாக் கரடி (Giant Panda) அதன் அடையாளச் சின்னமாயிற்று...

இன்று அந்த அமைப்பு உலகளாவிய மாபெரும் நிறுவனமாக, விலங்குகளை மட்டுமல்ல, இயற்கையையும் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளும் சர்வதேச அமைப்பாக World wide Fund for Nature என்ற பெயரால் உலகெங்கும் தழைத்தோங்கியுள்ளது. சுவிட்சர்லாந்தில் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இந்த டபிள்யூ. டபிள்யூ. எஃப் (WWF) நிறுவனம் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க உண்மையிலேயே "போரிடுகிறது". இதன் முக்கிய நோக்கம், பூமியின் இயற்கை அமைப்பு மாறாத் தன்மை மற்றும் தாவர வளங்களைப் பாதுகாத்தல். அத்தோடு உலகெங்கும் "அழிந்துவிடும் ஆபத்தில்" இருக்கும் உயிரினங்களைப் பாதுகாத்தல். இந் நிறுவனத்தின் இந்திய அமைப்பு, (WWF - India) கடந்த 21 ஆண்டுகளாக மகத்தான பணியாற்றி வருகிறது. நம் நாட்டில் உள்ள இதன் 18 கிளைகளும் பல திட்டங்கள் மூலம் இயற்கைச் சூழலையும் வனவிலங்குகளையும் நன்கு பாதுகாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிறுவனத்தின் சென்னைக் கிளையில் கல்வி அதிகாரியாகப் பணியாற்றி வரும் செல்வி ஆர்.பானுமதி கூறுகிறார்:

"மக்களிடையே இயற்கை வளம் பற்றிய விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதற்காக, கண்காட்சிகள், புகைப்பட மற்றும் திரைப்படக் காட்சிகள் நிறைய நடத்துகிறோம். இயற்கை வளம் பாதுகாக்க வேண்டிய சரணாலயங்களுக்கு "முகாமிடச்" சென்று (Nature Camps) அங்கே உள்ளவர்களுக்குக் கற்றுத் தருகிறோம். பள்ளிகளில் வன விலங்குகள், இயற்கைச் சூழல் பற்றிய புகைப்படக் கண்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்கிறோம். நாடெங்கும் பயிற்சிக் கூடம் (Workshop) நடத்தி, பள்ளித் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரைப் பங்குபெறச் செய்து அவர்களிடம் இயற்கை பற்றிய விழிப்புணர்ச்சியை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறோம். பள்ளிகளில் வினாடிவினா, பெயிண்ட்டிங், பேச்சுப் போட்டி போன்ற பல போட்டிகளை நடத்துகிறோம். பல நிபுணர்களை – பேராசிரியர்களை – வரவழைத்து, கருத்தரங்குகள் ஏற்பாடு செய்கிறோம். பள்ளிகளில், கல்லூரிகளில் இயற்கை சங்கங்களை (Nature Clubs) நிறைய உருவாக்குகிறோம்.

இந்த அமைப்பில் யார் வேண்டுமானாலும் அங்கத்தினர் ஆகலாம். அவர்களுக்கு இயற்கையின் எழிலை அற்புதமாக வெளிப்படுத்தும் படங்கள் நிறைந்த "நேச்சர் நியூஸ்", "நியூஸ் லெட்டர்" போன்ற பத்திரிகைகள் அனுப்பப்படுகின்றன. இந் நிறுவனம் ஏற்பாடு செய்யும் "காம்ப்"களில் பங்கேற்று இயற்கை வளம் செறிந்த, பாதுகாக்கப்பட வேண்டிய இடங்களுக்கு அவர்கள் செல்கிறார்கள். சுற்றுப்புறம் பற்றி வித்தியாசமான இயற்கைப் பாடமுறை அங்கே கற்றுத் தரப்படுகிறது. புதுமையான "இயற்கை நண்பர்கள்" தாம் எத்தனை வகை!

லிச்சன்ஸ் (Lichens) எனப்படும் தாவர இனம், மாசுமிகுந்த நகரச் சூழல்களில் வளருவதில்லை. காடுகளில் மட்டுமே காணப்படுகிறது. குழிப்பாம்பு (Pit Viper) என்ற பாம்புக்கு மூக்குத் துவாரத்துக்கும் கண்களுக்கும் இடையே வெப்பத்தை உணரும் பாகம் இருக்கிறது. இதன் மூலம் இரவில் கூடக் கண்களின் உதவியின்றி, "இரை"யின் உடலில் இருந்து வெளிப்படும் வெப்பத்தை வைத்தே பிடித்து விடுமாம்!

காலில் அகன்ற வெப் (Web) அமையப் பெற்றுப் பறப்பது போலத் தாவும்

பறக்கும் தவளை, மரங்களில் மட்டுமே வாழும் ஒருவகை அரணை, இறந்த தாவரங்களின் மீது விதவிதமான வடிவில், நிறத்தில் படர்ந்து காணப்படும் பிராக்கெட் ஃபங்கஸ் (Bracket Fungus) எனப்படும் ஒருவகை காளான், நீரில் நடக்கும் நாரைகள், கழிவை அகற்றும் சாண வண்டுகள், உயர்ந்த மரங்களில் ஒடியாடும் சிங்கவால் குரங்குகள், பறக்கும் பாம்புகள்! இப்படி எத்தனையோ!"

இந்நிறுவனத்தின் சாதனைகளில் சிலவற்றை இதன் தொடர்பாக ஸ்காட்லாந்து செல்லவிருக்கும் செல்வி ஆர். பானுமதி விவரித்தார்:

தமிழகத்துக்கு எழில் சேர்க்கும் முதுமலைக் காடுகளின் நுழைவாயிலில் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு மின் பூச்சுத் தொழிற்சாலை (Electro - Plating unit) நிறுவப்பட இருந்ததாம். அதனால் அங்கிருந்த விலங்குகள், மரங்கள், சுற்றுப்புறச் சுகாதாரம், அங்கு வாழும் எளிய மக்களின் குடிநீர் ஆகியவற்றுக்கு விளைய இருந்த கேடுகளை அரசாங்கத்துக்குச் சுட்டிக் காட்டினார்கள். இப்பணியில் ஈடுபடும் மற்ற நிறுவனங்களின் உதவியுடன் அதைத் தடுத்தார்கள்.

தெப்பக்காடு, முதுமலை சரணாலயம் போன்ற சிறந்த வனப்பிரதேசங்களில் சுற்றுலாப் பயணிகளுக்காகக் கட்டப்பட இருந்த பல அடுக்குக் கட்டடத்தைத் தடுத்து நிறுத்தி, அதன் மூலம் அங்கிருந்த அழகும் அமைதியும் குலையாவண்ணம் செய்தது மற்றொரு சாதனை. ஊட்டியில் ஒரிடத்தில் நிறுவப்பட இருந்த ஒரு காய்கறிப் பண்ணை அப்பகுதியில் உள்ள காட்டு யானைகளின் சுதந்திரமான நடமாட்டத்துக்குத் தடையாயிருந்ததைச் சுட்டிக் காட்டி வேறிடத்தில் பண்ணையை நிறுவச் செய்தது இன்னொரு சாதனை.

கடல் ஆமை இனம் அழிவதைத் தடுக்க, சென்னை கடற்கரைப் பகுதிகளில் கடல் ஆமை முட்டைகளைச் சேகரித்துக் குஞ்சு பொரிக்கச் செய்து கடலுக்குள் விடுகிறார்கள்.

வேடந்தாங்கல், கம்பாக்கம், புலிக்கட், ஜின்ஜீ போன்ற இடங்களில் உள்ள சரணாலயங்களுக்கும், மிருகக்காட்சி சாலைகளுக்கும் அடிக்கடி விஜயம் செய்து அவற்றின் நிலையை அறிகிறார்கள்.

சென்னையில் அடையாறு எஸ்சுவரி (Adyar Estuary) மற்றும் வேடந்தாங்கல் அருகே திருமலை வையாவூர் போன்ற இடங்களை இயற்கை வளம் பாதுகாக்கும் பகுதிகளாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விதைகளையும், கன்றுகளையும் ஊன்றி நூற்றுக்கணக்கான மரங்களை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். திருச்சிக்கு அருகே "கரைவேட்டி" என்னும் ஏரிக்கு நிறையப் பறவைகள் வருவதுகண்டு, அதைப் பறவைகள் சரணாலயமாக, சுற்றுலாத் தலமாக்க முயற்சி செய்து வருகிறார்கள்.

இந்த நிறுவனத்தின் உயரிய நோக்கம், பணிகள் ஆகியவை நிறைவேறுவதற்கு ஆதாரமாகப் பணம் வேண்டுமே! எனவே அதைத் திரட்டும் பொருட்டு, எந்தவித இலாப நோக்கமுமின்றி, தரத்தில் உயர்ந்த பொருட்களைச் செய்து விற்பனை செய்கிறார்கள்.

இயற்கை அழகுக் காட்சிகளும் கம்பீரமான விலங்குகளும் இடம்பெற்ற வாழ்த்து அட்டைகள், காலண்டர்கள், டைரிகள், போஸ்டர்கள், ஸ்டிக்கர்கள், விதவிதமான பைகள், தொப்பிகள், ஸ்லீப்பிங் பைகள், அழகிய புத்தகங்கள், ஹாங்கர்கள், சீட்டுக் கட்டுகள், அழகிய படங்கள் இப்படி விரிகின்றன இவர்களுடைய மனம் கவரும் தயாரிப்புகள்.

அழகு சிந்தும் இந்தக் கலைப் பொருட்கள், தரத்திலும் உயர்ந்தவை. இவற்றை நாம் வாங்கலாம். அதன்மூலம் "இயற்கைப் பராமரிப்பு நிதிக்கு" நம்மாலான சிறு உதவியைச் செய்யலாம்.

படங்கள் உதவி: ஆர். பானுமதி.

நானெழுதும் கவிதைகள்

அடியார்க்கு நல்லான்



நாற்றுகளில் நடந்துவரும்
காற்றெழுதும் கவிதையிது
ஊற்றெடுக்கும் கற்பனையில்
உலவவரும் கவிதையிது!

கோலமிடும் எண்ணங்களில்
கூடிவரும் கவிதையிது
காலமகள் ஆசியினால்
கண்விழிக்கும் கவிதையிது!

உள்மனதுக் காயங்களில்
உதயமாகும் கவிதையிது
உள்ளிருக்கும் காளியவள்
உரைக்கவரும் கவிதையிது!


வயலெழுதும் கவிதையிது
வானெழுதும் கவிதையிது
புயல்மனது சிந்தனையில்
பூக்கவரும் கவிதையிது!

தேனிருக்கும் பூவனத்து
தென்றல்வரும் முற்றமதில்
நானிருந்து எழுதுகின்ற
நலமுடைய கவிதையிது!

நிலவுகளில் தூரிகையை
தோய்த்தெழுதும் கவிதையிது
சிலசமயம் நெருப்புகளில்
சொல்லமைக்கும் கவிதையிது!

அந்திவரும் வாசலிலே
அமரவரும் கவிதையிது
சிந்தனையின் சொற்கோலச்
சீதனமாம் கவிதையிது!

நனவுகளின் நரம்புகளில்
நானிருந்து எழுதுவது
கனவுகளின் குடிசைகளில்
கண்டெடுத்த கவிதையிது!




"களக்காடு" இயற்கை எழில் கொஞ்சும் இடம்.



மரம் நடும் பணியில்...





குழிப்பாம்பு.



பாடம் நடத்துகிறார்கள்.




காய்ந்த பூமியில் விதை ஊன்றுபவர்கள்.

ஒற்றைக் காலில் தவம் செய்கிறோம்.





பறக்கும் தவளை.





பறக்கும் பாம்பு.

ஆர்.பானுமதி, கல்வி அதிகாரி W.W.F.
(சென்னைக் கிளை)



சோகமாக... எனக்குக் கவலையாக இருக்கிறது.





திரு பரத் - இயக்குனர்

பரத்

என் முதல் அனுபவம்

[முதன்முதலாக இயக்கிய தொலைக்காட்சித் தொடரின், முதல் பகுதியை இயக்கிய முதல் அனுபவம். – பரத்]

"டி.வி. சீரியல்ன்னா ஏதோ ஸ்டேஜ் டிராமால ஸ்டேண்ட் கேமராவுல ஸ்டெடியா எடுத்த மாதிரி இருக்கக் கூடாது! சினிமா மாதிரி இருக்கணும்...! சினிமா பாத்துருக்கீங்க இல்லே...!" என்று தடித்த மூக்குக் கண்ணாடியின் உபயத்தால் என்னைப் பார்த்தார் 'ப்ரொடக்ஷன் மேனேஜர்' வாசு.

பூதக் கண்ணாடி காட்டியதில் அவர் கண்கள் பெரியதாகத் தெரிந்தன.

பன்னிரண்டு வயதில் என்னைப் பார்த்தபோது 'ஜெமினி கணேசன் மாதிரி இருக்கிறாய்' என்று என் பள்ளிக்கூட சிநேகிதர்கள் சொன்னார்கள். அதுவே பதினாறு வயதில், "அசப்பில் சிவாஜி மாதிரி" என்றார்கள், இருபத்தைந்தாவது வயதிலேயே, "டி.எஸ். பாலையா மாதிரி" என்றார்கள்.

நல்ல. வேளையாக அவர்கள் என்னை உசிலைமணி மாதிரி என்று சொல்வதற்குள், ஒரு பால சந்தர் மாதிரி டைரக்டர் ,ஆகிவிட்லாம் என்ற ஒரு வெறியோடு இருந்த என்னைப் பார்த்து...

வாசு அப்படிக் கேட்டது கேலி செய்வதைப் போல இருந்தது:

இருந்து... இருந்து ஒரு டைரக்டர் ஆக சந்தர்ப்பம் வந்திருக்கிறது. இதை நழுவவிடக் கூடாது என்ற பயத்தால், வாயை மூடிக்கொண்டு தலையை ஆட்டினேன்.

"வெரிகுட்! நம்ம சீரியலைப் பாத்தாலே ஒரு சினிமா பாக்கற மாதிரி இருக்கணும். சினிமாவுக்கும், டி.வி.க்கும் ரொம்ப வித்தியாசம் கிடையாது. தெரியுமில்லே...!" என்று மீண்டும் கேட்டார் வாசு! அதற்கும் நான் தலையாட்டினேன். தஞ்சாவூர்தானே என் சொந்த ஊர்! நான் பதில் சொல்வதைவிடத் தலையாட்டுவதே வாசுவுக்கு ரொம்பப் பிடித்து விட்டது.


"வெரிகுட்! ஒரு நல்ல டைரக்டர்ன்னா அப்படித்தான் இருக்கணும்!" என்று மகிழ்ந்து போனார். (அப்பாடா... ஒரு நல்ல டைரக்டரின் தகுதி தெரிந்துவிட்டது)

பிறகு தயாரிப்பாளரிடம் என்னை அறிமுகப்படுத்தினார்.

"பெரிசா இன்னும் விளம்பரம் கிடைக்கலியே தவிர, ரொம்ப விஷயம் உள்ள ஆள் சார்! ஒரு நல்ல சந்தர்ப்பம் மட்டும் கிடைச்சா இந்த சினிமா ஃபீல்டுல கொடி கட்டிப் பறக்க ஆரம்பிச்சிடுவார். இவர நன்கு அறிமுகப்படுத்தின பெருமை நமக்குக் கிடைக்கணும்னு தான் சார் இங்க கூட்டிகிட்டு வந்தேன்:"

என்னைப் பற்றிய இந்த அறிமுகத்தைக் கேட்டதும் மொஸைக் தரையில் நின்று கொண்டிருந்தாலும் நிஜமாகவே எனக்குப் புல்லரித்தது. அந்தப் புல்லரிப்புடனேயே நான் வெளியே வந்தேன். உள்ளே தயாரிப்பாளரும், வாசுவும் டிஸ்கஸ் செய்வது என் செவிகளில் லேசாக விழுந்தது.

"யோவ்! அந்தாளைப் பாத்தா ஒரு டைரக்டர் மாதிரியே இல்லே! ஒரு நாதஸ்வர வித்வான் மாதிரி



தீயமசம் - படப்பிடிப்பில்..

இருக்கு! இவனெல்லாம் ஒரு டைரக்டராய்யா...!" என்று தயாரிப்பாளர் கேட்க, இதை நான் கேட்டு விடக் கூடாதே என்பதற்காகத் தன் அமர்த்தலான குரலில் வாசு பேசுவது, என் செவியில் லேசாகக் கேட்டது.

"சார்! நமக்கு ஷூட்டிங்கை இன்னும் ரெண்டு வாரத்துக்குள்ள ஆரம்பிச்சாகணும். இப்ப இருக்கற டைரக்டர்கள் எல்லாரும் ஒரளவுக்கு பிஸி! எல்லாத்தையும் விட முக்கியம்... ஒரு டைரக்டர்னு வெச்சா ஒரு எபிஸோடுக்கு (ஒரு பகுதிக்கு) அஞ்சாயிரம் ரூபாயாவது குடுக்கணும். இவரு புதுசு! பாங்க்லே வேலை பாக்கறாரு! பணம் இவருக்குப் பெரிசு இல்லே! கொடுத்ததை வாங்கிப்பாரு!"

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த என் கண்களுக்கு, அந்த வீட்டில் நாலைந்து அடியாட்கள் நடமாடுவது தெரிந்தது. அவர்கள் எதுவும் கொடுக்காமல் இருப்பதே நல்லது என்ற முடிவுக்கு வந்தேன்!

அடுத்தது.

கதையைத் தேர்ந்தெடுக்கிற கண்டம்... ஸாரி கட்டம்!

என்னுடைய கதையறிவை வெளிச்சம் போட்டுக் காட்ட, அன்றைய 'கல்கி'யிலிருந்து, இன்றைய கல்கிதாசன் வரைக்கும், ஓர் அலசு, அலசிக் காட்டினேன்.

இதைக் கேட்ட வாசு, 'ராஜா ராணி' படத்தில் என்.எஸ். கிருஷ்ணன் சிரித்ததைப் போலப் பல விதங்களில் விழுந்து, விழுந்து சிரித்தார்.

"கதையெல்லாம் நாம செலக்ட் செய்யக் கூடாது சார்! டி.வி. யிலேதான் செலக்ட் செய்வாங்க! அவங்க செலக்ட் செய்த கதையைத்தான் நாம படம் புடிக்கணும்!" என்று முதல் குண்டைத் தூக்கிப் போட்டார்.

"சார்... அந்தக் கதை நல்லா இருக்கணுமே...!" என்றேன் நான்.

"எப்படி சார்... நல்லா இல்லாமப் போகும்? அங்க அதுக்குன்னு ஒரு குழுவையே வெச்சிருக்காங்க! தெரியுமா உங்களுக்கு? அதை விடுங்க...! இப்ப நாம எடுக்கப்போற சீரியல் என்ன கதை தெரியுமா?"

நான் ஆவலுடன் அவரையே பார்த்தேன்.

"என்ன கதை தெரியுமா?"

என்று குரலை மாற்றி வேறு மாடுலேஷனில் கேட்டார் வாசு.

"தெரியாது சார்!" என்றேன் நான்.

"யோவ்! நாம எடுக்கப் போற சீரியலோட டைட்டிலே அதான்யா! "என்ன கதை தெரியுமா?!" ரைட்டர் யாரு தெரியுமா?"

எனக்குத் தெரிந்த கதாசிரியர்களின் லிஸ்ட்டை ஒப்பித்தேன்.

"கரெக்ட்! அத்தனை பேரும் எழுதியிருக்காங்க! அவங்க எழுதின சிறுகதைங்கள வாரத்துக்கு ஒண்ணு... பதிமூணு வாரத்துக்குப் படம் புடிச்சுக் காட்டப் போறோம்!"

எனக்கு அப்போது வந்தது சந்தோஷமா? அதிர்ச்சியா என்பது புரியவில்லை.



'வேர்கள்' படப்பிடிப்பில்
அரவிந்த்-செல்வி லதா

"எல்லாமே அருமையான கதைங்க! இதை அப்படியே படம்புடிச்சா போதும். பிரமாதமா இருக்கும்!" என்று ஆணித்தரமாகக் கூறினார் வாசு!

அன்று முதல் ஒருவார காலம் நானும், என்னுடைய மூன்று அஸிஸ்டெண்ட்களும், அந்தக் கதையின் மையக்கரு எங்கே இருக்கிறது என்பதை, சிவராசனைத் தேடிய சி.பி.ஐ.போலத் தேடிப் பார்த்தோம். ஆனால் எங்களுக்கு உடனே வெற்றி கிடைத்தது.

கடைசியில் ஒரு வழியாக, அந்தக் கதைகளுக்கு 'ட்ரீட்மெண்ட்' போட்டு முடித்தோம். அந்த ட்ரீட்மெண்ட்-

கிட்டத்தட்ட டாக்டர் காணுவின் மாற்றுச்சிறுநீரக ட்ரீட்மெண்டுக்குச் சமம்... அவ்வளவு சிரமம்.

ஒரு வழியாகத் திரைக்கதை - வசனங்கள் எழுதி முடிக்கப்பட்டு ஷூட்டிங் போவதற்குத் தயாராகும் நிலை வந்தது.

கேமராமேன், எடிட்டர், ஸவுண்ட் ரிகார்டிஸ்ட், மேக்கப் மேன் என்று ஒவ்வோர் இலாகாவாக அறிமுகப்படுத்தப்பட்டனர். இயக்குநர் என்ற முறையில் அறிமுகமானது பந்தாவாகத்தான் இருந்தது.

முதல் நாள் ஷூட்டிங். மேக்கப்புடன் நடிகர் தயாராக இருந்தார்.

கேமராமேன் கேமராவை ரெடி செய்து கொண்டார்.

பிறகுதான் என்னிடம் அந்தப் பயங்கரமான கேள்வியைக் கேட்டார்!

"முதல் ஷாட்டை எங்க சார் வைக்கணும்?"

எனக்கு பெல்ட்டின் உதவியில்லாமலேயே அடிவயிற்றில் பாம் வெடித்தது.

ஃபிலிம் இன்ஸ்டியூட்டிலும் படிக்கவில்லை. எந்த டைரக்டரிடமும் அஸிஸ்டெண்ட்டாக வேலை செய்யவில்லை.

இந்த ஆபத்தை முதல் முதலாக உணர்ந்தேன். ஷாட் பிரிப்பது என்பது ஷூட்டிங்கிற்கு முதல் சடங்கு மட்டுமில்லை. முக்கிய சடங்கும்கூட!

சட்டென்று ஞாபகம் வந்தவன் போல், "அட இன்னைக்கு திங்கட்கிழமையாச்சே! முதல் முதலா



'சூரியவம்சம்' வெளிப்புறப்படப்பிடிப்பில்...

கோயில்ல ஷூட் பண்றோம். வாங்க... கேமராமேன் சார்...! நீங்க, நான், ரெண்டு பேர் மட்டும், அம்பாளை தரிசனம் செய்துட்டு வந்துடுவோம்" என்றேன்.

என் உள் நோக்கம் புரியாத யூனிட் அப்படியே நிற்க,

நானும், கேமராமேனும் கோயிலுக்குள் சென்றோம்.

அம்மனுக்கு என் உள் நோக்கம் புரிந்தது விட்டது போலும்!

கோயிலிலே ஆள் அரவம் இல்லாமல் இருந்தது.

கேமராமேனைப் பார்த்தேன். சத்தியமாக என்னைவிடப் பெரிய வராகத்தான் இருப்பார்.

சட்டென்று அவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தேன். அவர் அதிர்ச்சியுடன் என்னைத் தூக்கி நிறுத்தினார்.

ஷாட் பிரிக்க முடியாத என் பலவீனத்தைச் சொன்னேன். லேசாகப் புன்னகைத்துக் கொண் டார்.

"சரி! சீன் என்னாங்கறதை எங் கிட்ட முன்னாடியே சொல்லிடுங்க! எப்படி ஷாட் வேணுங்கறதையும் சொல்லிடுங்க! நான் படம் புடிச்சுத் தரேன்!" என்று குண்டு வெடித்த வயிற்றில் பால் வார்த்தினார்.

மளமளவென்று படம் பிடிக்க ஆரம்பித்தார். நான் மளமள வென்று பாடம் படிக்க ஆரம் பித்தேன். திரு. வாசு அவர்கள் முதல் நாள் சொன்ன வாசகங்கள் என் செவிகளில் மாறிமாறி ஒலித்துக்கொண்டேயிருந்தன.

"டி.வி. சீரியல்னா... சாதாரண மானதில்லே! சினிமா மாதிரி இருக்கணும்!" அதை மனதில் வைத்துக்கொண்டே காட்சிகளை அமைத்தேன்.

"சார்! இந்தக் காட்சிக்கு ஹீரோ கோயில்ல இந்தப் பக்கம் நடந்து வரார். இதை டாப் ஆங்கிள்ள எடுத்தா நல்லா இருக்கும் சார்" –நான்!

"ஐய்யய்யே! ஸன் லைட் இந்தப் பக்கம் ஃபேவரா இல்லியே! அந்தப் பக்கம் நடந்து வரமாதிரி தான் வச்சுக்கணும்!" கண்டிப்பான குரலில் கேமரா மேன்!

"ஐயையோ! அப்படி வந்தா அப்ரதட்சணமாச்சே!" என்றேன்.

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாத கேமரா மேன் ஷாட்டை அந்தப்பக்கம் மாற்றிவிட்டார்.

[அந்த வார எபிஸோடைப் பார்த்துவிட்டு,

"ஏன்யா... நீயெல்லாம் ஒரு டைரக்டர்! ஹீரோ கோயில்ல இந்தப் பக்கமா வரானே... அது அப்ர தட்சணம் இல்லியோ! பிரதட்சண மாக வர மாதிரி காட்றதுதானே லாஜிக்!" என்று என் ஆபீஸ் சௌரி ராஜன் கமெண்ட் அடித்தார்.

நான் நறநற வென்று பல்லைக் கடித்தேன்.

காரணம், சௌரிராஜனுக்குத் தெரிந்த லாஜிக் சூரியபக வானுக்குத் தெரியாமல் போனதிற் காக!]

அடுத்த முறை கதாநாயகி பழி வாங்கினாள். மல்லிகைப் பூவுக்குப் பதிலாக கனகாம்பரத்தை வைத்துக்கொண்டு வந்துவிட்டாள். அன்றைக்கென்று மல்லிகைப் பூ எங்குமே கிடைக்கவில்லையென்று என் அஸிஸ்டெண்டுகள் சத்தியம் செய்தனர். வேறு வழியில்லாமல் நானும் நம்பினேன்.

கிடைக்காத அந்தப் பூவை அவர்கள் என் காதில் சுற்றி



'சூரியவம்சம்' படப்பிடிப்பில் பரத்-நித்யா-சூர்யா

விட்டார்கள் என்பது எனக்குப் பிறகுதான் புரிந்தது.

எடிட்டிங்கில் கண்டினியூட்டி உதைத்தது. எடிட்டர் ராஜுவிடம் ஆலோசனைகேட்டேன்.

"எடுக்கப்பட்ட காட்சியில், கதாநாயகியின் பூவை மட்டும் மாத்தற வசதி இன்னும் எடிட்டிங்கிலே கண்டுபுடிக்கலே சார்!" என்றார் ராஜு!

கிண்டல் செய்கிறாரா... அல்லது உண்மையைச் சொல்கிறாரா என்று எனக்குப் புரியவில்லை.

["இன்னா சார்... இரோயினி அம்மா வூட்டு வாசல்ல வரும்போது மல்லிப்பூ வச்சிகினு இருக்குது, வூட்டுக்குள்ள வரும்போது கனகாம்பரம் வச்சுகினு இருக்குது. இன்னா சார் டைரக்ட் செய்றே?"

இது எங்க ஆபீஸ் ஸ்வீப்பர் கிருஷ்ணவேணியின் கமெண்ட்!]

இதுபோல ஷூட்டிங்கின்போது அனுமதிக்கப்பட்ட சில தவிர்க்க முடியாத தவறுகள் டெலிகாஸ்ட்டிங்கின்போது கூறுகூறாய்க் கிழிக்கப்பட்டன.

பாராட்டுகள் பல வந்தாலும் அதன் நடுவே இந்தத் தவறுகள், திருஷ்டிப் பொட்டாய் அமைந்து விட்டன.

போற்றுவார் போற்றலும், தூற்றுவார் தூற்றலும் எப்படியும் டைரக்டருக்குத்தான் போகும்போல இருக்கிறது.

அடுத்ததாகப் படம் பிடித்த காட்சிகளை எடிட் செய்கிற கட்டம் வந்தது. எடிட்டிங் என்பது பாந்தமாகப் பூத்தொடுக்கிற வேலை. முதல் முதலாக எடிட்டர் ராஜுவைப் பார்த்ததும் - எல்லாருக்கும் இரக்கப்படுகிற அவரது குணம் எனக்குப் பிடித்துப் போயிற்று. பிறகுதான், நாங்கள் கஷ்டப்பட்டு ஷூட் செய்த பல காட்சிகளைத் தூக்கி எறிந்ததற்குப் பிறகுதான் தெரிந்தது, அவருக்குக் கொஞ்சம் கூட இரக்கமே இல்லை என்று.

தூக்கி எறிந்ததன் காரணம் கேட்டேன்.

"எந்த் சின்ன ஷாட்டா இருந்தாலும் அதுல நம்ப கதை இருக்கணும் சார். கதையில்லாத ஷாட்டை வச்சா பிறகு நம்ம படத்துல டெட் ஃபுட்டேஜ் (Dead Footage) வந்துடும், படம் போரடிக்கும்!" என்றார்.

அதற்குப் பிறகுதான் ஃப்ரீ ரோல், ஆக்ஷன் டையிங் என்று பல விஷயங்கள் எனக்குப் பரிச்சயமாயின.

எப்படியோ ஒரு வழியாக நான் முதல்முதலாக இயக்கிய முதல் எபிஸோடின் எடிட்டிங்கை முடித்து, டப்பிங்கை முடித்து, ரீ-ரிக்கார்டிங்கை முடித்து, மிக்ஸிங் என்கிற முதல் இரவையும் முடித்து, மாஸ்டர் காப்பி என்கிற மழலைச் செல்வத்தைப் பார்த்தோம்.

ஒரு பெரிய சங்கீத வித்வானை ஒரு வசதியான சபா செக்ரட்டரி பாராட்டுகிறார். ஓர் இன்ஜினியரைப் போல, ஒரு டாக்டரைப் போல ஒரு சங்கீத வித்வானும், மதிக்கப்பட வேண்டியவர் என்கிறார். சங்கீத வித்வான் புல்லரித்துப் போகிறார்.

சில நாள்கள் கழித்துத் தன்னுடைய சிஷ்யன் அந்த சபா செக்ரட்டரியின் மகளைக் காதலிக்கிறான் என்று தெரிந்து அவரிடம் திருமணம் பேசப் போகிறார். அப்போது அந்த சபா செக்ரட்டரி, தன் மகளை ஓர் இன்ஜினியருக்குக் கொடுப்பேன், அல்லது ஒரு டாக்டருக்குக் கொடுப்பேன். ஆனால் ஒரு சங்கீத வித்வானுக்குக் கொடுக்க மாட்டேன் என்று கூறி அவமானப்படுத்துகிறார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த வித்வான், அன்று தன்னைப் பாராட்டும்போது, அந்த செக்ரட்டரி பேசியதை ஞாபகப் படுத்துகிறார். அதற்கு அவர், தாம் அன்று பேசியது ஊருக்காக! ஆனால் இன்று பேசுவது தன் சௌக்கியத்துக்காக என்று கூறுகிறார் -"

என் இயக்கத்தில் என் முதல் எபிஸோட் சங்கீதம் ஒரு வரப்பிரசாதம் என்ற கதையின் மையக் கருத்து மிக அருமையாக work out ஆகியிருப்பதாக, பார்த்தவர்கள் பாராட்டினார்கள். பாராட்டைப் பகிர்ந்து கொள்ள வாசுவைத் தேடினேன்.

வாசு முதல் எபிஸோடின் செலவுக் கணக்குகளைச் சித்திர புத்திரன் மாதிரி பார்த்துக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் எகிறிக் குதித்தார்.

"என்னய்யா படம் எடுத்திருக்கே?"


"ஏன் சார்... நல்லாத்தானே எடுத்திருக்கேன்!"

"என்னத்தை நல்லா எடுத்தே! பட்ஜெட்டைப் பாத்தியா! பாக்ய ராஜ் படம் மாதிரி எங்கியோ போகுது? ஏன்யா இது என்ன சினிமாவா? டி.வி. சீரியல் எடுன்னா சினிமா மாதிரி எடுத்திருக்கியே!"

"சார் நீங்கதானே சார் சினிமா மாதிரி இருக்கணும்னு அன்னிக்கு சொன்னீங்க!"

"சொன்னேன்யா! சினிமா மாதிரின்னா அது பாக்கறவங்களுக்குத்தான் சினிமா மாதிரி இருக்கணும்! பட்ஜெட் இல்லே! சீரியல் பாத்தா சினிமா மாதிரிதான் இருக்கணும்! ஆனா பட்ஜெட்... டிராமா மாதிரிதான் இருக்கணும்! முதல்ல டைரக்ட் செய்றதுக்கு முன்னாடி இதைத் தெரிஞ்சுக்கணும்!" என்றார்.

முதல் சீரியலைத் தொடர்ந்து, சூரியவம்சம், வேர்கள் என்று தொடர்ந்து மூன்று சீரியல்களை இயக்கிவிட்ட எனக்குச் செலவே செய்யாமல் ஒரு சீரியலை எப்படி சினிமா மாதிரி எடுக்க முடியும் ? என்பது இன்றும் புரியவில்லை.



மேக்கப்மேன் மணி — செல்வி லதா

ஆனால் ஒன்றுமட்டும் நன்றாகப் புரிந்தது. என் முதல் எபிஸோடில் ஒரு வசதியான சபா செக்ரட்டரி. முதலில் ஒன்று சொல்லிவிட்டு முடிவில் மாற்றிச் சொல்லுவார்.

என் முதல் அனுபவத்தில் — ப்ரொடக்ஷன் மானேஜர் வாசு முதலில் ஒன்று சொல்லிவிட்டு முடிவில் மாற்றிச் சொல்கிறார்.

அந்த மையக்கருத்து கதையில் நன்றாக 'ஒர்க் அவுட்' ஆகியிருந்ததோ இல்லையோ, என் அனுபவத்தில் நன்றாகவே ஒர்க் அவுட் ஆகி இருந்தது! ஃ

தின்னத் தெவிட்டாத 'காம்கோ' சாக்லெட்

டி.ஆர். ஜி.



"தீபாவளி மலரில் சுவையான பகுதிகள் எப்போதும் வெளியிடுவீர்களே, இந்த ஆண்டு தீபாவளி மலரில் இனிய சுவையான சிறப்புப்பகுதி வாசகர்களுக்கு என்ன தரப்போகிறீர்கள்?" என்று திரு. ஆர். இராமன் கேட்டார்.

இலக்கியச் சுவைஞரான அவர் பிரபல விளம்பர நிறுவனத்தில் அதிகாரியாகப் பணியாற்றுபவர். தீபாவளி மலரில் புதுமையாக ஏதாவது இந்த ஆண்டு வெளியிட வேண்டும் என்ற குறிக்கோளுடன் சிந்தித்துக் கொண்டிருக்கும் அமுதசுரபி ஆசிரியர் உடனே திரு. இராமனைப் பார்த்து. "பொது மக்கள் சுவையறிந்து விளம்பரம் தயாரிக்கும் உங்களைப் போன்றவர்கள் புதுமையும், இனிமையும், சுவையும் தரும் புதிய செய்தி ஒன்றைத் தெரிவிக்க யோசனை சொல்லுங்கள்" என்றார்.


மறுநாளே திரு ஆர். இராமன் தொலைபேசியில் பேசினார். மிக வேகமாக சுறுசுறுப்பாக இயங்கினார். அவர் பணியாற்றும் ஆர்.கே. சுவாமி பி.பி.டி.ஓ. விளம்பர நிறுவனம், விரைவாக முடிவெடுப்பதற்கு பிரசித்திபெற்றது. "நாம் அடுத்த வாரமே மங்களூர் போகிறோம்" என்றார்.

மங்களூர் என்றவுடன் உடுப்பி கிருஷ்ணபகவானும், கொல்லூர் மூகாம்பிகையும் எம் நினைவுக்கு வந்தனர்.

"உடுப்பியைப் பற்றியும், அருள் தரும் மூகாம்பிகையைப் பற்றியும் மற்ற தீபாவளி மலர்களில் வந்துவிட்டனவே" என்றார் ஆசிரியர்.

"அந்தக்' கண்கண்ட தெய்வங்களுடன்கூட, மங்களூரில் மற்றொரு சிறப்பான செய்தியும் உங்கள் வாசகர்களுக்குக் காத்திருக்கிறது" என்றார் திரு ஆர். இராமன்.

மங்களூரில் அப்படியென்ன சுவையாகக் காணக் கூடிய இடம்?



கோகோ பவுடர் பாக்கிங் செய்யப்படுகிறது

என்று ஆவலுடன் கேட்டோம். அதிக நேரம் எங்கள் பொறுமையைச் சோதிக்காது அவர் சொன்னார்:


" சாக்லெட் தயாரிப்பில் கிழக்காசியாவிலேயே பெரிய தொழிற்சாலை அங்கிருக்கிறது. அந்தத் தொழிற் கூடத்தைப் பார்த்து எழுதலாம்" என்றார்.

'சாக்லெட்' என்றவுடன் நாவில் நீர் ஊறாத குழந்தைகளோ, பெரியவர்களோ இருக்க முடியாது. அதுவும் தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய 'சாக்லெட்' தயாரிக்கும் நிறுவனத்தைக் காணப்போகிறோம் என்றவுடன் எங்களுக்கு ஏற்பட்ட பரபரப்பைச் சொல்லிமுடியாது. உடனே மங்களூருக்குப் போய்க் குதித்துவிட வேண்டும் என்று துடித்தோம். குதித்துக் குதித்துச் செல்லும் 'வெஸ்ட் கோஸ்ட்' விரைவு வண்டியில் மங்களூர் நோக்கிப் பயணமானோம். சென்னையிலிருந்து நேர்கோடிட்டால் மங்களூரைச் சென்றடையலாம். ஆனால் இரயிலில் சென்றடைய 18 மணி நேரம் பிடிக்கிறது.



திரு கே. ராமபட், தலைவர் காம்கோ

காம்கோ நிறுவன அலுவலகத்திலிருந்து காலை 11 மணிக்கு காரில் திரு ஆர். இராமன் திரு விஜயகுமாருடன் நாங்கள் சுமார் 55 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள புத்தூரில் 'காம்கோ' சாக்லெட் தொழிற்சாலையை நோக்கிப் பயணமானோம்.



திரு வாரணாசி சுப்பராய பட், முன்னாள் தலைவர் - தற்போதைய ஆலோசகர்.



காம்கோவில் தயாரிக்கப்பட்ட பலவிதமான சாக்லெட்டுகள், மேலும் கோகோ பவுடர்.



திரு எம்.எஸ். முட்னூர், மானேஜிங் டைரக்டர்.

போகும்போதே சாக்லெட் செய்முறை பற்றியும், சாக்லெட் நிறுவனம் ஆரம்பித்ததற்கான காரணங்களையும் திரு. விஜயகுமார் விவரித்து வந்தார்.

கொட்டைப் பாக்கு உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கமான காம்கோ 1973 ஆம் ஆண்டு பாக்கு கொள்முதல் விலையில் ஏற்பட்ட சரிவின் காரணமாக அப்போது வெகுவாக வெளிநாடுகளிலிருந்து பெரிதும் தருவிக்கப்பட்டிருந்த 'கோகோ'வைப் பயிரிட,கொட்டைப் பாக்கு பயிரிடுபவர்களுக்கு யோசனை கூறியது. அப்போதைய தலைவரும் தற்போதைய ஆலோசகருமான திரு வாரணாசி சுப்பராய பட், சங்க உறுப்பினர்கள் கோக்கோவைப் பயிரிடும் யோசனையை உடனே ஏற்றுச் செயல்பட்டனர். தற்போது இச்சங்கத்தில் 441 சொசைட்டிகளும், வங்கிகளும் "கேரள அரசாங்கத்தின் பிரதிநிதியாக திரு சி.டி. ஹரிதாஸ் செயலாளரும், கர்நாடக அரசின் பிரதிநிதியாக திரு எம்.எஸ். முட்னூர் நிர்வாக இயக்குநரும் உள்ளிட்ட 47,375 அங்கத்தினர்கள் உள்ளனர்.

1973 ஆம் ஆண்டின் தேவையான 1000 டன் 'கோகோ' 1979 ஆண்டில் விளைவிக்கப்பட்டது. மீண்டும் ஒரு பிரச்னை தலை தூக்கியது. உலக அரங்கில் 50% கோகோவின் விலை குறைந்ததும் இந்திய அரசாங்கத்தின் கொள்கையில் பெருமளவு மாறுதல் ஏற்பட்டது. அதுவரை 150% இறக்குமதி வரி செலுத்த வேண்டிய கோகோவிற்கு 75% ஆகக் குறைக்கப்பட்டதும் இந்தியாவில் தயாரிக்கும் கோகோவிற்குத் தேவை குறைந்தது. உள்ளூரிலேயே வாங்கிவந்த பல 'சாக்லெட்' தயாரிக்கும் பன்னாட்டு நிறு

வனங்கள் (Multinational Organisations) உள்ளூரில் வாங்குவதை நிறுத்திவிட்டனர். அதனால் கோகோவை ஊடுபயிராகப் பயிரிட்டு வந்த பாக்கு உற்பத்தியாளர்கள் இனி கோகோ பயிரிடப் போவதில்லை என்று கோகோ பயிர்களை அழிக்கும் அளவிற்குச் சென்றதும் 'காம்கோ' நிறுவனத்தின் ஆரம்ப காலத் தலைவரும், தற்போதைய ஆலோசகருமான திரு. வாரணாசி சுப்பராய பட் இதற்கு ஒரு தீர்வு காணப் பல முனைத் திட்டங்களை வகுத்தார்.


முதலில் நம் நாட்டில் உற்பத்தியாகும் 'கோகோ பீன்ஸ்' உலக அரங்கில் தயாரிக்கும் கோகோ பீன்ஸிற்கு இணையானது என்பதை நிரூபிக்கும் வகையில் வெளிநாட்டுப்பரிசோதனைக்கூடங்களின் தீர்ப்பு மிக மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது. அந்த வகையில் திருப்தி அடைந்த திரு.வாரணாசி பட் உடன் 'காம்கோ' நிறுவனமே




குக்கீஸ் 'கோன்' வடிவிலுள்ள உருளையில் சுற்றும்போது நடுவில் நுரையுடன் கூடிய வழியே போகிறது.

'சாக்லெட்' நிறுவனங்களுக்குத் தேவையான கோகோ மாஸ், கோகோ பட்டர், கோகோ மாவு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். முதல் திட்ட முதலீடாக ரூ. 18 கோடியில் IDBI, IFCI, ICICI ஆகிய நிறுவனங்களின் சுமார் ரூ. 382 லட்ச உதவியுடன் காம்கோ சாக்லெட் நிறுவனம் ஆரம்பிக்கப் பட்டது. இதற்குத் தேவையான இயந்திரங்கள் இத்தாலி, டென்மார்க், மேற்கு ஜெர்மனி, சுவிஸ் நாடுகளிலிருந்து தருவிக்கப் பட்டன. அந்நாட்டுப் பொறியியல் வல்லுநர்களே இயந்திரங்களை நிறுவி, இயக்கி சாக்லெட் தயாரிப்பது எப்படி என்பதை நம் நாட்டு வல்லுநர்களுக்குப் பயிற்சியளித்தனர். இப்படியாக 1987 இல் முதல் உற்பத்தி தொடங்கியது.

திரு. வி.ஏ.பி. நாயக் பொது மேலாளர், நாங்கள் தொழிற் கூடத்தைச் சுற்றிப் பார்க்க திரு. வி.ஜி. மோகன் உற்பத்தி அதிகாரியுடன் செல்ல ஏற்பாடு செய்தார்.



பாலிஷ் செய்யப்பட்ட "பிளே டைம்" சாக்லெட்




"பிளே டைம்" பாக் செய்யப்படுகிறது.



திரு சி.டி. ஹரிதாஸ்,
செயலாளர் காம்கோ லிட்.,



திரு வி.ஏ.பி. நாயக்,
பொது மேலாளர்



திரு ஈ.எஸ். நம்பூத்ரி,
தொழில்நுட்ப ஆலோசகர்

முதலில் 2,000 டன் கொள்ளளவு கொண்ட கோகோ ('கொடௌன்') கிடங்கிலிருந்து தொழிற்கூடத்திற்கு எங்கள் பயணத்தைத் தொடங்கினோம்.


நன்கு பதனிடப்பட்ட ஒரு ஷிப்டிற்குத் தேவையான 8 டன் கோகோ சேமிப்புக் கொப்பரையில் கொட்டப்படுகிறது. அங்கிருந்து உயர்அழுத்த 'கன்வேயர்' மூலம் அடுத்த இயந்திரத்திற்கு இழுக்கப்பட்டு இடித்து கோகோ மேலுள்ள தவிடு நீக்கப்படுகிறது. கோகோ அடுத்த இயந்திரத்தில் கல், மண், தவிடு நீக்கப்பட்டு தேவையான அளவிற்கு வறுக்கப்பட்டு, மேல்தளத்தில் உள்ள 'நியூடரிலிசேஷன்' அறைக்குள் எடுத்துச் செல்லப்பட்டுப்பதனிடப்படுகிறது. (கோகோவிலிருந்து எடுக்கப்பட்ட தவிடு மாட்டுத்தீவனமாக உபயோகிக்கப்படுகிறது. அதிக புரதச்சத்து உள்ள இந்தத் தவிடைப்பெரிதும் விரும்பிமாட்டுத் தீவனம் தயாரிக்கும் நிறுவனங்கள் வாங்கிக் கொள்கிறார்கள்) அங்கிருந்து நேராக 'கோகோ மாஸ்' தயாரிக்கும் இயந்திரத்திற்குக் கொணரப்படுகிறது. இங்கு இயந்திரத்தினால் மாவாக்கி மிக நுண்ணிய கோகோ மாவு ஈரப்பசையுடன் இருக்கிறது. இப்படி செய்யப்பட்ட மாவுதான் கோகோ மாஸ் எனப்படுகிறது. இதுதான் 'பிட்டர் சாக்லெட்' தயாரிக்கப் பெரிதும் உபயோகிக்கப்படுகிறது.

கோகோ மாஸ் உயர் அழுத்த விசையின் மூலம் அழுத்தப்படுவதால் 'கோகோ பட்டர்' எடுக்கப்படுகிறது. கோகோ பட்டர் குளிர்ந்தவுடன் பார்க்க நெய்போல் மஞ்சள் நிறத்தில் இருக்கிறது. 'பட்டர்' எடுக்கப்பட்ட 'மாஸ்' எவ்வளவு சதவிகிதம் கொழுப்புச் சத்து தேவையோ அந்த அளவிற்கு நிறுத்தப்பட்டு இந்த 'மாஸ் கட்டியை' மாவரைக்கும் இயந்திரத்தில் கொடுத்து ('மில்லிங்கில்') அரைத்து சலித்து மீண்டும் அரைத்து மிகமிக நுண்ணிய தூளாக ஆக்குகிறார்கள். இதுவே 'கோகோ பவுடர்'. இத்தூள் 20°c அறையில் இயந்திரத்தின் மூலமாகவே இழுக்கப்பட்டு காற்றிலிருந்து ஈரம் இழுக்காத பாலிதீன் பைகளில் நிரப்பப்பட்டு தைத்து வைக்கப்படுகிறது. இதுவே ஒரு வகை சாக்லெட் தயாரிக்க உபயோகிக்கப்படும் மூலப் பொருளாகும். இதுவரை தயாரிக்கப்பட்டவை அனைத்தும் இத்தாலியிலிருந்து கொணரப்பட்ட இயந்திரத்தினால் செய்யப்படுகிறது.

சாக்லெட் தயாரிக்க முதலில் வேண்டிய அளவு பால்பவுடர் தனி இயந்திரத்தில் கொட்டப்படுகிறது. வேறோர் இயந்திரத்தில் சர்க்கரை போதிய அளவு கொட்டப்படுகிறது. இவை இரண்டும் நன்கு கலக்கப்படுகின்றன. இவற்றுடன் தேவையான அளவு கோகோ பவுடர், கோகோ மாஸ் கலந்து நம் வீட்டில் இட்லி மாவு ஆட்டுவது போல் ஒரு குறிப்பிட்ட நேரம் அரைத்து ஒரு குழாய் மூலம் சாக்லெட் தயாரிக்கும் இயந்திரத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதிலிருந்து 40 கிராம், 20 கிராம் சாக்லெட் என்று அதற்குத் தகுந்தாற்போல் மேலிருந்து குழாய் மூலம் 'டை' செய்யப்பட்ட எவர்சில்வர் எடுத்துச் செல்லும் (கன்வேயரில்) இயந்திரத்தில் விடப்படுகிறது. இது 10°c குளிர் பதன அறைக்குள் எடுத்துச் செல்லப்படுவதால் சாக்லெட் கெட்டிப்பட்டு வெளிவரும்போது நாம் சாப்பிடும் மில்க் சாக்லெட்டாக வெளிவருகிறது. (பிட்டர் சாக்லெட்டிற்கு முழுவதுமாக 'கோகோ மாஸ்' சேர்த்துத் தயாரிக்கின்றனர். வெள்ளை சாக்லெட்டிற்கு முழுவதுமாக கோகோ பட்டர் சேர்க்கிறார்கள். சாதாரண சாக்லெட்டிற்கு கோகோ மாஸ், கோகோ பட்டர் இரண்டும் தேவையான அளவு கலக்கிறார்கள்)

இப்படித் தயாரிக்கப்பட்டு வெளி வரும் சாக்லெட் சரியாக நேர்த்தியாக நிறுவனத்தின் பெயர் பதிவாகியிருக்கிறதா என்பதைக் கண்டு 'பாக்கிங்'கிற்குச் செலுத்தப்படுகிறது. அலுமினியம், பாலிதீன், பேப்பர் ஆகிய மூன்றினாலான 'Triple lamination' வேகமான விசையில் சுற்றப்பட்டு வெளிவருகிறது. இதுதான் நாம் கடைகளில் வாங்கும் 'காம்கோ மில்க் சாக்லெட்'. இதேபோல் 'என்ரோபட் சாக்லேட்', 'எக்லேர்ஸ்' தயாரிக்க முதலில் 'குக்கீஸ்' தயார் செய்து கொள்கிறார்கள். சர்க்

திரு ஏ. விஜயகுமார்



அன்னையே பெரும் ஞானப்பிழம்பே

ரேவதி சங்கரன்

எந்தன் இதயத்தின் இருளையெல்லாம்
இழை இழையாய் ஊடுருவும்
அன்னையவர் அருளின் ஒளியால்
எந்தன் சிறுமை தொலைந்தது -

எந்தன் பொய்யின் வடிவமெல்லாம்
மறைந்து பெரும் மெய்யான
ஜோதியில் இரண்டறக் கலந்திட
அன்னைதன் மேன்மை புரிந்தது -

எந்தன் உடலின் அணுக்களெல்லாம்
ஞானப்பிழம்பாம் அன்னையுள் மூழ்கி
அருளின் பொருளாய் மாறிட
எந்தன் அறியாமை அழிந்தது -

எந்தன் சிந்தனை வளமெல்லாம்
சிறப்புறும் வண்ணம் உயர்ந்து
எமதன்னைக்குச் சேவைகள் புரிந்திட
எனக்குச் சகலமும் கிடைத்தது.



நன்றி: Sri Aurobindo Ashram Pondicherry

கரை, குளுகோஸ் கரைசல், வனஸ்பதி (தாவரக்கொழுப்பு) ஆகியவற்றினை முதலில் தேவையான அளவு கலந்து வேகவைக்கிறார்கள். 'என்ரோப்ட்' சாக்லெட் தயாரிக்க இப்படித் தயாரிக்கப்பட்ட குக்கீஸ் மீது முழுவதுமாக மேற்கூறிய வகையில் தயாரித்த கோகோ சாக்லெட் இயந்திரத்தின் மூலம் சுற்றப்படுகிறது. கோகோ சாக்லெட் பைக்குள் குக்கீஸ் இருப்பது போன்று அமைக்கப்படுகிறது.

'எக்லேர்ஸ்' தயாரிப்பதற்கு மேற்கூறிய 'குக்கீஸை' பெரிய வடிவிலமைந்த 'கோன்' மாதிரியான இயந்திரத்திலிட்டு சுற்றப்படுகிறது. அப்படிச் சுற்றும்போது அதன் நுனியில் வரும்போது நடுவில் துளையுடன் கூடிய கயிறு போல் வருகிறது. இத்துளையில் கோகோ சாக்லெட் கரைசல் செலுத்தப்பட்டு ஒரு சீரான அளவு நறுக்கப்படுகிறது. இப்படி நறுக்கிய 'எக்லேர்ஸ்' குளிர்ச்சியான அறைக்குள் பதனிடப்பட எடுத்துச் செல்லப்படுகிறது.

வெளிவரும்போது நாம் சாப்பிடும் எக்லேர்ஸ் ரெடி. இதன் மேலும் இருமுனைகளிலும் திருகப்பட்ட காகித இயந்திரத்தின் மூலம் சுற்றப்படுகிறது. 'என்ரோப்ட்' சாக்லெட்டும், 'எக்லேர்ஸ்' 100% உற்பத்தி இலக்கில் தயாரிக்கப்படுகிறது. 'ப்ளே டைம்' என்னும் பல வண்ண சாக்லெட் சிறுவர்கள் பெரிதும் விரும்பிச்சாப்பிடும் சாக்லெட். பல்லாங்குழி போன்ற 'டை'யில் சாக்லெட் கொட்டி அச்சாகிறது. இவற்றை மழமழப்பான நிலையை நாம் வீடுகட்ட 'கான்கிரீட்' கலவை தயாரிக்கும் இயந்திரம் போன்ற இயந்திரத்திலிட்டு சுற்றுகிறார்கள். பிறகு அதே இயந்திரத்தில் இனிப்பும் தேவையான நிறமும் தனித்தனியே கலந்து சுற்றுகிறார்கள். இப்படித் தயாரித்த 'ப்ளே டைம்' பளபளப்படையாமல் இருக்கிறது. இவற்றை வேறோர் இயந்திரத்தில் காற்று வீசும்போது ஏற்படும் சுழற்சியினால் பளபளப்படையச் செய்கின்றனர். தேவையான அளவிற்கு 'பாக்' செய்ய இயந்திரம் தயார் நிலையிலுள்ளது. திரு. ஈ.எஸ். நம்பூதிரி (தொழில் நுட்ப ஆலோசகர்) இயந்திரங்களை சுகாதார நிலையில் வைத்திருப்பதற்கு கொதிக்கும் நீரினால் கழுவப்படுவதையும், வேலை செய்வோர் அனைவரும் கட்டாயமாக (ஆறு மாதங்களுக் கொருமுறை) அரசு மருத்துவமனையில் மருத்துவத் தணிக்கை செய்யப்படுவதையும், அவ்வப்போது நுண்ணிய உயிரியல் கிருமிகள் இருக்கின்றனவா என்பதற்கான பரிசோதனை, சுத்தம் செய்யப்பட்ட தண்ணீரை எல்லா இடங்களிலும் உபயோகிப்பது ஆகியவை பற்றிக் கூறினார்.

திரு வி.ஏ.பி. நாயக் 8.75 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள சுமார் 10 ஆயிரம் சதுரமீட்டர் தொழிற்சாலை அமைப்புப் பற்றியும், வேலை செய்பவர்களுக்காக இலவசக் குடியிருப்பு பற்றியும் கூறினார். வேறு சில நிறுவனங்களுக்காகவும் அவர்கள் தரக்கட்டுப்பாட்டின்படி இங்கு சாக்லெட் தயாரிக்கப்படுகிறது என்பதை அறிய ஆச்சரியப்பட்டோம். 1992 ஆம் ஆண்டு முதல், கோடை காலத்திலும் உருகாத சாக்லெட் தயாரிக்க ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. (Tropicalised Chocolate) மதிய உணவிற்குப் பிறகு புத்தூரிலிருந்து புறப்பட்டு சாக்லெட் தொழிற்சாலை இயங்கும் விதத்தை வியந்தவண்ணம் மங்களூருக்குத் திரும்பினோம்.

சர்க்கரை சேர்ந்த சாக்லெட் தயாரிக்கும் இடத்தில் ஓர் ஈ எறும்பைக்கூடக் காணோமே என வியப்படைந்தோம். தூய்மையான நிலையில் பராமரிக்கும் காம்கோ தலைவர் திரு. ராமாபட்டையும் நிர்வாக இயக்குநர் எம்.எஸ். முட்னூரையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

தீபாவளித் திருநாளில் பரம்பரையாகப் படைத்துச் சுவைக்கும் லட்டு, மைசூர்பாகு, ரசகுல்லா போன்ற இனிப்புப் பண்டத்துடன் இனி காம்கோ சாக்லெட் வகைகளையும் குடும்பத்தவர் சேர்த்து விருந்து படைக்கப் போவதை எண்ணி மகிழ்கிறோம்.



ஸ்ரீபுவனேஸ்வரியும் மகாமேருவும்

பரத்வாஜ ஆசிரமம் என்று பெயர் மட்டும் இருந்தால் போதாது என்பதால் அதற்குரிய பல பொருத்தங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதைக் கட்டுரை இனிதே விளக்குகிறது.

அன்னைக்கு ஓர் ஆசிரமம்

ஸ்ரீவித்யா டாக்டர் எஸ். சுப்பராயன்

ஐம்பத்தொரு மஹாசக்தி பீடங்களில் ஒன்றாகக் கருதப்படுவது அம்பத்தூர். அதைச் சுற்றிலும் உள்ள இடங்களில் அம்பிகையின் அருள் பிரகாசித்து வருவதை உறுதிப்படுத்தும் வகையிலேயே தோன்றியுள்ளது தான் அம்பத்தூருக்கு அண்மையில் கங்கை நகரில் தோன்றியுள்ள ஸ்ரீபரத்வாஜ ஆசிரமம்.

சென்னையிலிருந்து சுமார் பதினைந்து கல் தொலைவில் அம்பத்தூர் - ரெட்ஹில்ஸ் சாலையில் உள்ளது கங்கை நகர். வயல்கள், தோட்டம், துரவு இன்னமும் உள்ள அமைதியான சூழல்.

சாலையில் கங்கை நகர் பேருந்து நிறுத்துமிடம். கள்ளிக் குப்பம் பேருந்து நிற்குமிடம் என்பது பழைய பெயர். இறங்கிக் கொஞ்சதூரம் போனவுடன், ஸ்ரீ பரத்வாஜ ஆசிரமத்தின் மேல் விதானம் தெரிகிறது. "ஜய துர்கா ஜய புவனேஸ்வரி" என்று நாடெங்கும் உள்ள தேவிபக்தர்கள் எழுதிய ஏடுகள் நிறைக்கப்பெற்று அதன்மேல் அமைக்கப் பட்ட விதானம்.

கங்கை, கீதை, காயத்ரி, கணபதி, கோமாதா இவை அனைத்தின் புனிதத் தன்மையும்கொண்டது இந்த ஆசிரமம்.

கங்கைக் கரையில் உள்ள காசிக்குத் தன்னுடன் ஒரு பிரம்மசாரி இளைஞரை அழைத்துச் சென்றார் ஒரு சன்யாசி. இவர் குற்றாலத்தில் ஸ்ரீஸித்தேஸ்வரி பீடத்தை ஸ்தாபித்த ஸ்ரீமௌன ஸ்வாமிகள் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீமத் சிவசிதானந்த இந்திர சரஸ்வதி என்னும் மந்த்ர சித்தரின் சீடர். இவருக்குப்பின் இந்த மடத்தின் பீடத்தை அலங்கரித்தவர். ஸ்ரீவிமலானந்த பாரதி என்று தீக்ஷாநாமம் பெற்றவர். ஸ்ரீ மௌன ஸ்வாமிகளின் மந்திர சக்தியை நேரில் அனுபவித்தவர்கள் இன்றும் உளர். ஸ்ரீமௌன ஸ்வாமிகளுக்குப் பல காலம் சேவைசெய்து, அவரிடம் மந்திர தீக்ஷையைப் பெற்றவரும் அவருடைய சித்தியை அனுபவித்தவரும் தான் பிரம்மசாரி இளைஞர். ஸ்ரீவிமலானந்த பாரதிகளுடன் காசிக்குச் சென்ற இளைஞர், அவரிடமும் மந்திர தீக்ஷையும் வேதாந்த தீக்ஷையும் பெற்றார். குருவோ, ஸ்ரீமத் பகவத்கீதையை முதனூலாகக் கொண்டு, நாடெங்கும் உபன்யாசித்து அத்வைத வேதாந்தத்தைப் பரப்பினார்.



பக்திக்கும், அத்வைதத்துக்கும் விரோதமில்லை என்று நிலைநாட்டினார். ஆசார்ய பகவத் பாதருடைய பஜகோவிந்த ஸ்தோத்ரம், பக்தி மார்க்கத்துக்கு நல்ல நூல். அத்வைதத்தை உள்ளீடாகக் கொண்டது என்று எல்லார் மனதிலும் பதியுமாறு நிலை நாட்டினார்.

சீடர் தனக்குக் கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டார். கங்கைப் பிரவாகத்தில் மூழ்கி, நெடுங்காலம் ஒரு கோடி காயத்ரி மஹா மந்திரத்தைப் புரஸ்சரணம் செய்தார். காயத்ரி தேவியின் அருள் கிட்டிற்று. வரப்ரஸாதம் கிடைத்தது. அவரே இன்று நாடெங்கும் உள்ள அடியார்களுக்கும் அண்டியவர்களுக்கும் உடல் நலம், உள்ள நலம், ஆன்மிக நலம் ஆகியவற்றை வாரி வழங்கிவரும் ஸ்ரீமத் குருஜி ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ புவனேஸ்வரி ஸ்வாமிகள்.

தென்னகம் திரும்பினார் ஸ்ரீமத் குருஜி. பார்த்தனுக்குக் கீதை வழங்கிய சாரதியான கண்ணபிரான், பார்த்தசாரதியாகவே அருள் பாலித்து வரும் திருவல்லிக்கேணியிலேயே குடியேறி இருந்து வருகிறார். குருவும் பார்த்தசாரதியைப் போற்றியவர் தானே?

கீதையைக் கவனப்படுத்தும் திருவல்லிக்கேணி போதுமா? காயத்ரி அருள் வழங்கிய இடமாகிய கங்கையைக் கவனிக்க வேண்டுமென்பதே போல் கங்கை நகரில் ஸ்ரீபாரத்வாஜ ஆசிரமத்தையும் அமைத்துள்ளது மிகப் பொருத்தமல்லவா?

24 அடி உயர மகாவிஷ்ணு



ஸ்ரீமத் குருஜியும் அவர் புதல்வர் ஸ்ரீராமகிருஷ்ண பரத்வாஜும் – இவரும் பரம்பரை முறையில் ஸ்ரீவித்யா பூர்ண ஷோடசி தீக்ஷை பெற்றுச் சிறந்து விளங்கி வரும் இளைஞர் – ஸ்ரீபரத்வாஜ ஆசிரமத்தை அமைப்பதில் பேருவகையும் பெரு முயற்சியும் கொண்டனர். பக்தர்கள் பலர் பேருதவி செய்தனர். அதன் விளைவைத்தான் இன்று கங்கை நகரில் காண்கிறோம்.

ஸ்ரீமகாகணபதியின் அருளால்தானே எதுவும் தடங்கலின்றி நிறைவுறும்! பல்லாண்டுகளாகப் பல இடங்களில் ஸ்ரீவாஞ்சா கல்பகணபதி ஹோமங்களை எண்ணற்ற முறை நடத்தியுள்ளார் ஸ்ரீமத் குருஜி. ஆசிரமத்திலும் ஸ்ரீசக்ரமஹா கணபதியும் ஸ்ரீவல்லப மஹாகணபதியும் பூஜை அரங்கத்தில் குடிகொண்டுள்ளார்கள்.

ஸ்ரீபரத்வாஜ ஆசிரமத்தில் நுழையும் போதே எதிர்கொள்கிறார் ஸ்ரீமஹா விஷ்ணு. இருபத்து நான்கு அடி உயரம் கொண்ட திருவுரு. சுதையினால் ஆனது. கம்பீரமான அருள்நோக்கு. உலகத்தைத் தன் காலடியில் கொண்டுள்ளார். கண்ணைக் கவரும் வண்ணக் கலவை. மனதை ஈர்க்கிறார். வலப்புறம் திரும்பினால் ஒரு மண்டபத்தில் ஸ்ரீபரத்வாஜ மகரிஷி ஜபமாலை, புத்தகத்துடன் ஆசிபுரிந்து கொண்டிருக்கிறார்.

உள்ளே நுழைந்து மாடிப்படியேறியவுடன் விசாலமான பூஜை அரங்கம். அதன் உட்கூரையில் ஸ்ரீசக்ரமும் மற்ற தேவிசக்ரங்களும் அழகாக ஸ்ரீவித்யா முறையில் வரையப்பட்டுள்ளன. அழகான சரவிளக்குகள் பிரகாசமாக எரிகின்றன. சுற்றுப்புறச் சுவர்களில் அன்னையின் பலவிதமான அவஸானங்கள். பூஜா அரங்கத்தின் வலப்புறம் ஐந்து அடி உயரத்தில் பெரிய சிவலிங்க உருவம். இந்த இடத்தில் ஸஹஸ்ர லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.

பூஜை மண்டபம் அரங்கத்தின் மேற்குப்புறம் அமைந்துள்ளது. சிலையினால் உருவாகியுள்ள ஸ்ரீசக்ரமேரு. அதன் மேல்படியில் பஞ்ச லோஹத்தி

னால் அமைக்கப்பெற்ற அன்னை ஸ்ரீபுவனேஸ்வரி ஜொலிக்கிறாள். பீடங்களுக்கு அடியில் சகலதேவீ சக்ரங்களும் தேவிமஹாத்மியத்தின் 700 ஸ்லோகங்களும் செப்புத் தகடுகளில் எழுதப்பட்டு அமர்த்தப்பட்டுள்ளன. விக்ரஹங்கள், யந்திரங்கள், சக்ரங்கள் யாவையும் தேவியின் ஸ்தூல ரூபம். மந்திரங்கள் அன்னையின் ஸூக்ஷ்ம ரூபம்; அவளே பராசக்தி; பரப்ரஹ்மம் என்பதே அவள் ஸ்வரூபம். இவை அனைத்தும் ஒருங்கே அமைந்துள்ளன.

பூஜை மண்டபத்தில் அன்னையைச் சுற்றிலும் மேல் மருங்கில் திதி நித்யா தேவிகள் பதினைந்து பேரும் யந்திர வடிவில் அமைந்துள்ளார்கள். ஸ்ரீசக்ரத்தில் நடுமுக்கோணத்தில் தேவியைச் சுற்றி அமைந்துள்ளவர்களே அவர்கள். காமேஸ்வரி, பகமாலினி, நித்யக்லின்னா, பேருண்டா, வன்ஹிவாஸினி, மஹாவஜ்ரேசுவரி, சிவாதூதி, த்வரிதா, குலசுந்தரி, நித்யா, நீலபதாகா, விஜயா, ஸர்வமங்களா, ஜ்வாலாமாலினி, சித்ரா ஆகிய தேவிகளே இவர்கள். இவர்கள் பூஜையை முடித்துக் கொண்டுதான் நவாவரண பூஜையில் அன்னையை அணுகுவது பெரியோர் வகுத்த முறை.

மேலும் அன்னையின் வலப்புறம் மந்த்ரிணீ தேவியான ராஜஸ்யாமளை, யந்திர வடிவிலும் திருவுருவ வடிவிலும் அமைந்துள்ளாள். அன்னையின் அமைச்சினைச் சிறப்புற நடத்தும் தேவி இவளே. அன்னையின் இடப்புறத்தில், ஸேனா நாயகியாக தண்டினீ தேவியான வாராஹி, யந்திரவடிவிலும் திருவுருவ வடிவிலும். இவள் அன்னையின் சதுரங்க ஸேனாநாயகி. படைத்தலைவி. இவர்களுக்கும் நவாவரணத்தில் சிறப்பான பூஜை உண்டு.

ஸ்ரீவித்யையின் சிறப்பு முறையிலேயே இந்த மண்டபம் அமைக்கப் பெற்றிருப்பது அரியதோர் அமைப்பு.

பூஜா மண்டபத்துக்கு நேர் எதிரில் பூஜை அரங்கத்தின் மறுகோடியில் ஒரு பெரிய கண்ணாடி. அதற்கு முன் பெரிய ஸிம்மவாஹனம். வெண்கலத்தினாலும் பித்தளையினாலும் உருவாகியுள்ளது. பூஜை அரங்கத்தில் எங்கு அமர்ந்திருந்தாலும் பூஜையைச் சிறப்பாகக் காண முடியும். அதற்கு உதவியாக கண்ணாடியும்கூட. பூஜை அரங்கத்திலுள்ள த்வார பாலகர்கள், பெரிய தீப ஸ்தம்பங்கள், விக்ரஹங்கள், யந்திரங்கள் அனைத்தையும் கண்ணாடி பிரதிபலிக்கிறது. அன்னையின் அருளும் விகாஸமாகிறது.

பூஜை சாலைக்குப் பக்கத்தில் ஹோமசாலை. இதில் ஹோம குண்டமே தாமரையின் பேரில் உள்ள ஒரு மண்டபமாக அமைத்துள்ளது. ஹோமம் செய்யும் புகை வெளியேற – ஹோம குண்டத்தின் பேரிலேயே ஒரு வாசல் மேல்நோக்கி அமைந்துள்ளது. அக்னியில் ஒருவகை அக்னிக்கு கமலாக்னி என்றே பெயர். இதை வெளிக்காட்டும் வகையிலேயே ஹோமகுண்ட அமைப்பு.

ஆசிரமத்தில் தினப்படிக்கு அம்பாளுக்கு அபிஷேக, பூஜை, உபசாரங்களும், அன்னையின் ஆயிர நாமாக்கள் – பல – சொல்லி அர்ச்சனையும் நடைபெற்று, ஸாந்நித்தியம் நிறைந்துள்ளது.

ஆயினும் விசேஷமாக, பௌர்ணமி பூஜையைக் குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு பௌர்ணமியும் அன்னைக்கு விசேஷமானது. 'பிரதிபன் முக்ய ராகாந்த திதி மண்டல பூஜிதா' என்பது அன்னையின் ஆயிர நாமங்களில் ஒன்று. பிரதிமை தொடங்கி பௌர்ணமி முடிய திதி மண்டலத்தில் பூஜை செய்யப் படுபவள் என்று பொருள். ஒவ்வொரு திதிக்கும் ஒவ்வொரு நித்யாதேவி முக்கிய தேவதை. பதினைந்து திதிகளுக்கும் பதினைந்து நித்யாதேவிகள். திதி நித்யா தேவிகள் சூழ நடுவில் சந்திரனின் பூரண கலையாக மஹா நித்யை 'என அழைக்கப்படும் அன்னை குடிகொள்கிறாள்.

பதினாறு கலைகளுடன் நிறைந்தவளாக, அன்னையைப் பௌர்ணமியன்று



பூஜா மண்டபம் - ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகள் பூஜை செய்யும் காட்சி

பூஜிக்க வேண்டும் என்று லலிதா சஹஸ்ர நாமத்தின் உத்தரபாகம் சொல்கிறது.

அன்னையின் அபிஷேகத்துக் கென்றே ஒரு 'க்வாதம்' தயார் செய்யப்படுகிறது. பொதுவாக இதைக் கஷாயம் என்று கூறலாம். மந்திர சாஸ்திரத்தில் மந்திரமில்லாத எழுத்தே இல்லை என்று சொல்வார்கள். அன்னை சப்த ப்ரஹ்மம். ஒவ்வோர் எழுத்தும் சப்தத்தின், அதாவது ஒலியின் வரிவடிவம். அன்னைக்கு சப்தமயீ என்று பெயர். ஒலிவடிவானவள். ஒலி யானவள். இந்த ஒவ்வோர் ஒலிக்கும் வரிவடிவமாக 51 எழுத்துகள் மொத்தம் உள்ளன. ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வொரு மூலிகையும், பச்சிலையும் உண்டு. மந்திரங்களும் ஒலியே. இந்த ஒலிகளுக்கு வாசகார்த்தமும் வாச் யார்த்தமும் உண்டு. இவற்றை நன் கறிந்த ஸ்ரீவித்யோபாசக குருமார்கள் மூலம் அறிந்து, உபாசனை செய்ய வேண்டும் என்பதுதான் முறை. ஸ்ரீவித்யை சம்பந்தமான நிகண்டு களிலும், மந்திர சாஸ்திர நூல்களிலும் (ப்ரபஞ்சஸாரம், மூலகா நிகண்டு, அக்ஷர நிகண்டு, சாரதாதிலகம் போன் றவை) இவற்றைக் காண இயலும்.

இந்த மூலிகைகளையும் பச்சிலை களையும் சேர்த்துத் தூய்மையான நீருடன் காய்ச்சி, கமலாக்னியில் எரித்துத்தயாரிக்கப்படுவதே 'க்வாதம்' எனப்படும் அபிஷேகத் திரவ்யம். இந்த முறையைச் சார்ங்கதர ஸம்ஹிதையும் சொல்கிறது.

பௌர்ணமி பூஜைக்காக, இந்த 'க்வாதம்' மந்திர சாஸ்திர முறையில், ஆசிரமத்தில் தயாரிக்கப்படுகிறது. மூலிகைகளை அறிவதே சிரமம். அவற்றைப் பெறுவது மேலும் சிரமம். இவற்றில் ஆழ்ந்த ஞானமுடைய ஸ்ரீமத் குருஜி, இவற்றைக் கொண்டு க்வாதம் தயாரிப்பதில் தனி அக்கறை கொண்டு, க்வாதத்தைத் தயார் செய் விக்கிறார். வெறும் க்வாதமானால் போதுமா? இதற்கு மந்திரங்களைக் கொண்டு நியாஸாதிகளும், பூஜைகளும் செய்து க்வாதம், அமிர்தமாக்கப்படு கிறது. இதைக் கொண்டே அபிஷேகம்.

அன்னையின் அபிஷேகம் பௌர்ணமியன்று கண்கொள்ளாக் காட்சி. எத்தனை வகை! பால், தயிர், தேன் குடம் குடமாக. வெண்ணெய், மஞ்சள், குங்குமம், சந்தனம், பஞ்சா மிர்தம், பழரசங்கள், விபூதி இவை கொண்டும் அபிஷேகம். மணிக் கணக்கில், கை ஓயாது, சீடர்களுடன் ஸ்ரீமத் குருஜி அபிஷேகம் செய் கிறார். விஸ்தீர்ண பூஜை, பிறகு அர்ச்சனை. மலை மலையாகப் புஷ்பம் சொரிந்து ஏகாக்ர சித்தத்துடன் அர்ச் சனை. பின்னர் பலவித தீபாராதனை களும் கர்ப்பூர ஆரத்தியும், ஸ்தோத்திரங் களுடன், பூஜை ஸமர்ப்பணம் செய்து, நிறைவுறுகிறது.

பூஜை முடிந்தது. அன்னைக்கு நிவே தனமும் ஆயிற்று. நமக்கு...? இதற்கும் ஆசிரமத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெரிய அன்ன சாலை. பூஜைக்கு வந்துள்ள பக்தர் களுக்கு உணவு பரிமாறப்படுகிறது.



சிவலிங்கம்

அறுசுவை உணவு. அன்னையின் நிவேதனப் பொருளல்லவா? சுவை கூடுகிறது.

மேலும் பரத்வாஜ ஆசிரமம் அல்லவா? வனவாச காலமும் முடிந்து அண்ணன் திரும்பாததால், பரதன் எரியூட்டி அக்னிப்ரவேசம் செய்யத் துணிந்த போதும்கூட, அனுமனை அனுப்பி, தான் திரும்பிவிட்ட செய் தியை பரதனுக்குத் தெரிவிக்கச் சொல்லி அறுசுவை படைத்த உணவை உட்கொண்டு ராமன் 'சாப்பாட்டு ராமன்' ஆன இடமல்லவா பரத்வாஜர் ஆசிரமம்? பெயர்ப் பொருத்தம் இங்கும் அமைகிறது.

மனிதனுக்கு மாத்திரமா உணவு? கோமாதாக்களுக்கும் உணவளித்துப் பராமரிக்கப் பெரிய கோசாலையும் இங்குண்டு. தினமும் பரிவுடன், மாடு களிடம் போய், அவற்றைத் தடவிக் கொடுத்துப் பேசி, ஸ்ரீமத் குருஜி அளிக்கும் உணவை ஆவலுடன் ஏற்கும் பசுக்களைப்பார்த்தாலே போதும். மனது நிறைவுறும். கோபூஜையும், சிறப்புக் காலங்களில் கஜபூஜையும், ஆசிர மத்தில் நடைபெறும் மற்றுமொரு சிறப்பான அம்சம்.

அருமையான நந்தவனமும் உருவாகி யுள்ளது. பல வகை ரோஜாக்கள், முல்லை, மல்லிகை, பவழமல்லி, நந்தி யாவட்டம், ஜபாகுசுமம், வில்வம் போன்ற தேவி பூஜைக்குத் தேவையான அனைத்துச் செடிகளும் நந்தவனத்தில் வளர்க்கப்படுகின்றன.

ஹ்ரீம் ஹ்ரீமிதி பிரதி தினம் ஜபதாம் தவாக்யம்
கிம்நாம துர்லபமிஹ த்ரிபுராதிவாஸே!
மாலாகிரீட மத வாரண மானனீயா
தான் ஸேவதே வஸீமதீ! ஸ்வயமேவ லக்ஷ்மீ!!

ஹ்ரீம் ஹ்ரீம் என்று உன்னை சதா ஜபிப்பவர்கள் அடைய முடியாதது எது? அப்படி ஜபிப்பவர்களை அன்னை ஸ்ரீ லக்ஷ்மியேகூட அன்றோ சேவிக்கிறாள்? பக்தர் பெருமையைப் பறைசாற்றும் செய்யுளாக இதை ஆதிசங்கரர் அமைத்துள்ளார்.

மக்கள் துயர் துடைக்க, உடல் நலம் பேண, மனம் இன்பமயமாகிட, ஆன்மிகப் பண்ணையாக, அன்னையின் திரு மாளிகையாகவே விளங்குகிறது ஆசிரமம். துயர் துடைக்க வல்லவள் தாயே அல்லவா? ◦°◦

புதிய கோணம்

கங்காராமமூர்த்தி

கல்யாணமாகி ஓராண்டு நிறைவதற்குள்ளாகவே கணவனைப் பிரிந்து வந்திருக்கும் தனக்கு, எந்த மாதிரியான வரவேற்பு காத்திருக்கும்? அதுவரை தோன்றாத திகில் திடுமென்று வயிற்றில் ஐஸ் வைத்தது. மெல்லத் தொண்டைக் குழியில் ஏதோ அடைப்பதை உணர்ந்தாள்.

"அம்மா..." கம்மலாய் ஒலித்தது குரல்.

"யாரு, சாருவா?" அம்மாவின் குரலில் ஒரு திடுக்கிடல் இருந்ததை சாரு உணர்ந்தாள். அவள் சட்டென்று எதையும் புரிந்து கொண்டு விடுபவள்.

"வா, வா..." அவசரமாக ஓர் உற்சாகக் குரல் கொடுத்து, பெண்ணை வாஞ்சையுடன் தொட்டாள்.

உள்ளே போனார்கள். சாரு கண்களை அலையவிட்டாள்.

"அப்பாதானே, அவர் கிளப்புக்குப் போயாச்சு. மணி நாலு அடிச்சாப் போறும். அவ்வளவுதான். எந்த ராஜா எந்தப் பட்டணம் போகட்டுமே... அதுசரி. நீ மட்டும் வந்திருக்கே. மாப்பிள்ளைக்கு இன்னிக்கு லீவுதானே!"

"அதெல்லாம் மெதுவாப் பேசலாம். என்ன டிபன் செஞ்சிருக்கே, அதைச் சொல்லு. பசி பிராணன் போறது" பேச்சை மாற்றினாள்.

அம்மாவும் பெண்ணுமாக ஊர்க்கதை பேசினார்கள். தான் கணவனுடன் சண்டை போட்டுக் கொண்டு வந்ததை சாரு சொல்லவில்லை. நேரம் வரும்போது சொல்லலாம் என்றிருந்தாள்.

சென்னைக்கு அடுத்தாற்போல் காஞ்சிபுரத்தில் சாருவுக்குப் புக்ககம். குடும்பமே ஜவுளி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தது. சாருவையும் அவள் கணவனையும்



தனிக் குடித்தனம் வைத்துவிட்டார் அவள் மாமனார். தனியாக வந்த பிறகு சாருவுக்கும் சுந்தருக்கும் பல விஷயங்களில் ஒத்துப் போக வில்லை. பொழுது விடிந்தால் சொற்போர்தான்.

"பிரஷ்ஷை எடுத்தா, ஸ்டாண்ட்ல வெக்கணுமா வேண்டாமா?" சுந்தர் கூப்பாடுபோட,

"ஏதோ அவசரம், அப்படியே போட்டுட்டேன். ஏன் நீங்கதான் எடுத்து வையுங்களேன்" சாரு வெடிக்க...

"இது இட்லியா?" என்ற நக்க லான கேள்வியில் சாரு ஆத்திர மடைவாள்!

"நாங்க இதை இட்லினுதான் சொல்வோம்".

"ஏன், ஒரு பேப்பர்ல எழுதிக் கீழே ஒட்டி வைக்கறதுதானே!"

சாருவுக்கு முணுக்கென்றால் கண்ணீர் வந்துவிடும்.

எவ்வளவு வீம்பாகப் பல்லைக் கடித்துக் கொண்டாலும் கண்கள் தளும்பிவிட...

சுந்தர் உருக... அவ்வளவு தான்... சாருவின் கோபம் மேலும் விசிறிவிட்டாற் போல் எரியும். அன்று முழுவதும் முசுமுசு என்று அவள் அழுவதும் அவன் சமா தானப்படுத்துவதுமாகவே கழியும். இரவில் கோபம் முழுதுமாகத் தணிந்து, பொழுது புலரும்போது மீண்டும் சண்டைக் கோழிகளாகி விடுவார்கள்.

இரவு படுத்துக் கொண்ட போது காலையில் நடைபெற்றவை நினைவில் சுழன்றன.

"இன்னிக்கு நாம சினிமா போறோம்!"

சாரு சர்ப்பம் போல் தலை தூக்கிப் பார்த்தாள். சந்தோஷம் தான். ஆனால் இதென்ன உத்தரவு போடுவதுபோல...!

"நான் வரல்லை".

"ரெண்டு டிக்கெட் வாங்கிட் டேன்!"

"யாரைக் கேட்டுண்டு வாங்கி னீங்க?"

"யாரைக் கேக்கணும்! என் பொண்டாட்டி நான் கூப்பிட்டா, வரணும்!"

"அதென்ன சட்டம்! எனக்கு இஷ்டமில்லை. நான் வரமாட்டேன்! என்னைக் கேக்காம வாங்கினீங்க. நான் எதுக்கு வரணும்?"

"இதபார். வரவர நீ பேசறது துளிக்கூடச் சரியா இல்லை. யார் கிட்டப் பேசறோம்னு நெனைப்பு இருக்கா?"

"ஹும். தாலிகட்டிட்டா, பொண் டாட்டி அடிமைன்னு நெனப்போ?"

"இதோ பார், ரொம்ப ஓவராப் போறே. எனக்குக் கோபம் வராது. வந்தா என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது".

"ஓகோ, வந்தா என்ன செய் வீங்களாம்?" இடுப்பில் கையூன்றி சாரு சவால் விடவும் சுந்தர் கை ஓங்கினான். அவ்வளவுதான்!

சாரு 'ஓ'வென்று அழத் தொடங்கி விட்டாள். சுந்தர் தழைந்து போய் என்னென்னவோ சொன்னான். நாடியைப் பிடித்துக் கெஞ்சினான். சாருவின் கோபம் ஜ்வாலையாகியது.

பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பிவிட்டாள்.

விடிவெள்ளியின் வெளிச்சத்தில் சாருவுக்கு விழிப்பு வந்தது. நினைவுகளின் பின்னல்களில் சிக்கினாள்.

அப்படியே சற்று உறங்கி விட்டாள். மறுபடி எழுந்தால் மணி ஏழு. பல் தேய்க்கப் போனவளை ஒரு காரசாரமான பேச்சு பிடித்து நிறுத்தியது.

"அறிவு கெட்ட முண்டம்! இன்னிக்கு நடக்கற மீட்டிங்கை அடுத்த வாரம் வைன்னு சொல் றேன், 'உம்'முனு இருந்தா என்ன அர்த்தம்? சாரு தனியா இருப்பா இல்லே!"

"அது வந்து..."

"வேண்டவே வேண்டாம். இன் னிக்கு நாலு மணிக்கு நீ வீட்டுக்கு வரணும்".

அதற்கு மேல் அம்மாவின் குரல் கேட்கவில்லை. சாருவின் அம்மா – சுசீலா ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியை. அப்பாவோ தனியார் கம்பெனியில் பெரிய அதிகாரி.

அடேயப்பா என்ன அதட்டு அதட்டுகிறார்! அம்மா எம்.ஏ., எம்.எட்., படிச்சவ. எதிர்த்துப் பேசக் காணோமே. வியப்பு சாருவை ஆட்கொண்டது.

கடைக்குப் போவதிலும் லைப் ரரிக்குப் போவதிலும் மேலும் இரண்டு நாள்கள் நகர்ந்துவிட்டன. மாலை ஐந்து மணி இருக்கும். கையில் லைப்ரரி புத்தகமும், எதிரில் நொறுக்குத் தீனியுமாக் உட்கார்ந்தவளை அம்மாவின் குரல் தூக்கிவாரிப் போட வைத்தது.

"நேத்து வாங்கிண்டு போன ஆயிரம் ரூபாய் எங்கே?"

"க்ளப்ல ..க்ளப்ல...."

"மென்னு முழுங்குவானேன். சொல்லித் தொலையுங்களேன்".

"சீட்டுல தோத்துட்டேன்"

"ஐயோ. இந்த அநியாயம் நடக் குமா? நான் கஷ்டப்பட்டுச் சம் பாதிக்கிறேன். நீங்க... நீங்க..."

மடார் மடார் என்று சுசீலா நெற்றியில் அடித்துக் கொள்ள... சீனிவாசன் பாய்ந்து அவள் கையைப் பிடிக்க –

"போதும், போதும். என் முன்னால நின்னேள்... எனக்கு வர ஆத்திரத்துல..."

சுசீலா கத்த, சீனிவாசன் நழுவ... சாரு மலைத்து நின்றாள். இதுபோல இவர்கள் வாய்ச் சண்டையை முன்பு பலமுறை கேட்டவள்தான். ஆனால் இப் போது பார்க்கும் போது, அதுவே ஒரு புதிய கோணத்தில் தெரி கிறதே!

அப்பா கத்தும்போது அம்மா அடங்கிப்போனாள்.

அம்மா கோபப்படும்போது அப்பா தணிந்து போனார்.

ஆனால் நான்...! கூச்சலுக்கு எதிர்க் கூச்சல்... தாம்பத்யம் என்ற ஆயிரங்காலப் பயிரில் இந்தக் களைகளை எடுக்காமல் பயிரையே அல்லவா எடுக்க நினைத்தேன்!

அன்று மாலையே பெட்டியில் புடைவைகளை அடுக்கி வைக்கத் தொடங்கினாள்.

"என்ன சாரு...?

"வந்து ரெண்டு நாளாச்சு. சண்டை போட ஆளில்லாமல் மனுஷர் கெடந்து தவிப்பார்".

"அம்மாவுக்கேத்த பொண்ணு தான் போ!"


"ஏன் அப்பா பொண்ணு இல்லியா அவ!"

"ஓகே. நீங்க சண்டை போட் டுக்க வேண்டாம். நான் ஓங்க ரெண்டுபேர் பொண்ணும்தான்!" ❀

நிழல்

கமலவேலன்

• அவரும் மாற்றம் விரும்பினார். மனைவியுடன் ஓய்வு எடுக்கச் சென்ற பிறகு.....



இதயப் பரிமாற்றங்களாய்த் தொடங்கிய வாழ்க்கை இயந்திர கதியில் திரும்பிவிட்டது.

காபிக்கு டிகாக்ஷன் வடித்து... பால்காரனுக்குக் காத்துநின்று... அவனிடம் பால் தண்ணீராய் இருப்பதற்குத் தினமும் சண்டை செய்து... வாசல் தெளித்து... கோலம் போட்டு பாலைக் காய்ச்சிக் காபி கலக்கும்போது விடியலின் தொடக்கம் மௌன மாய் நிகழ்ந்து விடும்!

அதன்பிறகு இரவு பத்தோ... பதினொன்றோ... அதுவரை வேலை... வேலை... ஓயாத வீட்டு வேலை.

வினோதினிக்கு வெறுத்துப் போயிற்று.

"என்னங்க.... மனசும், உடம்பும் அலுத்துப் போச்சுங்க..." கண வனிடம் மெல்லத் தன் ஆற்றாமை யைக் கூறத் தொடங்கினாள்.

மனைவியின் பேச்சு அவள் கணவர் மகேஸ்வரனுக்கு வியப் பைத் தந்திருக்க வேண்டும். இவள் என்ன சொல்லப் பீடிகை போடுகிறாள் என்று புரியாமல் வினாக்குறியுடன் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

அவள் கண்களில் சோர்வு தெரிந்தது. காதோரம் சாம்பல் பூத்ததுபோல ஒன்றிரண்டு வெள்ளை முடிகள்.

"ஆமாங்க. எங்காவது வெளியூர் போயிட்டு வரலாம்".

அவருக்கும் அந்தமாதிரி எண் ணம் தோன்றுவதுண்டு. அலுவலக வேலைகள்... மேலதிகாரிகளின் விரட்டல்கள்... குடும்பச் சுமைகள்... குறையாத சிறுசிறு கவலைகள்... கடன்கள்... ஆண்டுக்கு ஆண்டு கூடியதே தவிரக் குறையவில்லை.

மாற்றம் தேவை. அதை அவரும் விரும்பினார். மனைவி சொல்வதுபோல எங்காவது சென்று ஓய்வு எடுக்கத்தான் வேண்டும்.

கோயில் உட்பிராகாரச் சுற்றில் வேதகோஷங்கள்... அவை கேட்பதற்குச் சுகமாய்... சுருதி பிசகாத தொனியில்... மனசுக்கு இதமாய் ஒலித்தன.

ஆங்காங்கே இளங்குருத்துச் செடிகள் போலச் சிறுவர்கள் அமர்ந்து பயபக்தியுடன் வேதம் ஓதிக்கொண்டிருந்தனர். சிவந்த அவர்கள் மேனியில் சிவச் சின் னங்கள். கவலைகள் படியாத, களை பொருந்திய முகங்கள்!

சிதம்பரம் நடராஜர் கோயிலில் இருவரும் மெய்மறந்து வெகு நேரம்

நகை

குடந்தை புகழேந்தி



நகை செய்யத் தெரியாத
நங்கை யிவள் சொல்கின்றாள்;
நகை வேண்டும்! தனக்கென்று
நாலு பேர் புகழு தற்கு!
நகை மூலம் கௌரவத்தை
நாடுவதே வழக்க மென்பாள்!
நகை வேண்டும்! உண்மைதான்!
நகையின்றி இருப்பது நன்றோ?

நகைவாங்கப் பொருள் வேண்டும்!
நகைசெய்யப் பொருள்வேண்டும்!
நகைசேர்க்கத் திறம் வேண்டும்!
நாணயமே முதல் வேண்டும்!

நகைநகையாய் அணிவ தற்கு
நாடோறும் நடிக்க வேண்டும்!
நகைசேர்க்கப் பகை சேரும்! – புன்
னகைபூக்க மகிழ்வு துள்ளும்!

இளநங்கை கேட்ப தற்கு
ஏழைக்கவிஞன் ஏதுரைப் பான்?
களங்கண்ட வீர னாகக்
கனல்கொதிப் பேறு கின்ற
குளமாக்கித் தம் மனத்தைக்
குவித்து மூடி யதைத்
தளமாக்கி இறுக்கிப் பின்னே
தணல்பூக்கப் புன்னகைத்தான்
கவிதையாத்து!!

அங்கேயே நின்றார்கள்; ரசித்தார்கள்.

புதிய இடம்; புதிய முகங்கள். புதிய நிகழ்ச்சிகள். எல்லாமே விநோதினிக்குப் பிடித்திருந்தன. உள்ளத்தின் நிறைவை அவள் முகம் பளிச்செனக் காட்டியது.

சீர்காழி, திருக்கடையூர் சென்று தரிசித்துவிட்டு, இரவுச் சாப்பாட்டையும் முடித்துவிட்டு சிதம்பரம் திரும்பினர்.

சிதம்பரத்தில் அவர்கள் தங்கியிருந்த விடுதி, நவீன வசதிகள் கொண்ட விடுதி. வெளி ஆரவாரங்கள்... இரைச்சல்களினின்று விடுபட்டு, அமைதியின் உறைவிடமாய்க் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

அவள் பட்டுப்புடைவையைக் கவனமாக மடித்து வைத்தாள். தலை நிறைய மல்லிகைச் சரம். அறை முழுதும் மல்லிகை மணம். அவர் 'பேன்ட்டை' ஹாங்கரில் மாட்டிவிட்டு, வேட்டிக்கு மாறினார்.

மல்லிகை மணம் அவரைக் கிறங்கச்செய்தது.

அவரின் நெருக்கத்தில் அவள்.

மின்விசிறியின் இலேசான முனகல் அவர்களைத் தாலாட்டியது. கிறங்கி... உறங்கினார்கள்!

இரண்டாவது நாளாக சிதம்பரம் கோயிலையே சுற்றி வந்தனர். பார்க்கப் பார்க்கத் திகட்டாத கலையழகு கொஞ்சும் திருக்கோயில், அவர்களை ஈர்த்து விட்டது. அன்று முழுதும் கோயிலிலேயே இருந்துவிட்டனர். மறு நாள் காலை பூம்புகார் செல்ல வேண்டும் என்ற திட்டத்துடன் தாங்கள் தங்கியிருந்த விடுதிக்குத் திரும்பினார்கள்.

"வித்யா... சரியான சோம்பேறி. நான் இல்லேன்னா... சரியாக்கூடத் தலை பின்னிக்க மாட்டாள்". மெத்தையில் படுத்துப் புரண்டபடியே விநோதினி கூறினாள்.

"விக்ரம் பொறுப்பே இல்லாதவன். அவன் தன்னுடைய சொந்தத் துணிமணிகளைக்கூட ஒழுங்கா... வைச்சு எடுக்கத் தெரியாதவன். ரமேஷும், ராஜேஷும் கீரியும் பாம்பும்தான். உம்.. இதுங்களை எப்படித்தான் அத்தை சமாளிக்கிறாங்களோ தெரியலே..." படுத்துக் கிடந்தவள் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினாள்.

மகேஸ்வரன் மட்டும் படுத்துக் கொண்டே பொறுமையாய்ச் செவிமடுத்தார்.

"பால்காரன்... நான் இல்லேன்னா... மொட்டை அளவுதான் அளப்பான். நாம புறப்படறப்பவே காஸ் தீர்ற மாதிரியிருந்தது. என்ன ஆச்சோ தெரியலே..."

"நம்ம வீட்டு வேலைக்காரிக்குத் துணி துவைக்க தினம் ஒரு சோப்பு வேணும். நான் இருந்தால்... கொஞ்சம் கவனமா... சோப்பைக் கரைப்பாள்..." விநோதினியின் பேச்சு நீண்டு கொண்டேயிருந்தது.

மகேஸ்வரன் பொறுமை இழந்து காணப்பட்டார்.

"கவலையெல்லாம் மறந்து நிம்மதியாக இருக்கணும்னுதான் இங்கே வந்திருக்கிறோம். வந்த இடத்துல சும்மா தொண தொணக்காதே. தூங்கு. காலையில சீக்கிரம் எழுந்திரிக்கணும். பூம்புகார் பார்த்துட்டு அப்படியே மயிலாடுதுறை போறோம்".

"இல்லேங்க.. நாளைக்கு ஊருக்குப் புறப்படலாம்".

படுத்துக் கிடந்தவர் சட்டென எழுந்து உட்கார்ந்தார்.


"ஏய்... என்ன விளையாடறியா? ஒருவாரம் லீவு போட்டிருக்கிறேன். வந்து ரெண்டு நாள்கூட ஆகலே. இன்னும் பார்க்க வேண்டிய இடம் நிறைய இருக்கு". மகேஸ்வரன் படபடத்தார்.

"எல்லாமே பார்க்கலாங்க. ஆனா... மனசு கேட்க மாட்டேங்குதே, நமக்கு இருக்கு ஆயிரம் பிரச்னை. நாம... இப்படி ஊரைச் சுத்தறது நல்லாயில்லீங்க."

மனைவியின் முகத்தை மிக நெருக்கத்தில் பார்த்தார். அப்போது காதோரம் சாம்பல் பூத்தது போலக் காணப்பட்ட ஒன்றிரண்டு வெள்ளைமுடிகள் மிகவும் தெளிவாய்த் தெரிந்தன.

ஆழ்ந்த மௌனத்திற்குப் பின் சொன்னார். "சரி. உன் இஷ்டம். காலையிலே ஊருக்குப் புறப்படுவோம்".

மின்விளக்கை அணைத்தார். வெளிச்சமும் அதன் பின்னணியிலிருந்த நிழலும் மறைந்தது; தற்காலிகமாகத்தான். ௐ



புடவைத்தலைப்பில் ஒரு முடிச்சு!

வேதா கோபாலன்

● முடிச்சுகளில்தான் எத்தனை வகை? மணமகன் மணமகளின் கழுத்தில் மூன்று முடிச்சு போடுவதற்குள் மண்டபமே அதிர்ந்து நிற்க, மாமியின் புடவைத் தலைப்பிலிருந்த மாத்திரை முடிச்சல்லவா கைகொடுத்தது?

விருந்து மணத்திலும், மணவறையின் ஹோமப் புகையிலும் கல்யாண வீடு களை கட்டியிருந்தது. நாதஸ்வரம் 'க்ஷீர சாகர' என்று பாற்கடலையே நாதமாய்ப் பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தது. இளசுகள் ஜோடி தேடிக் கொண்டிருக்க, நடுவயதுகள் புடவை வளையல் என்று வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருக்க, வாண்டுகள் வாழை இலையில் 'பீப்பீ' செய்து கொண்டிருக்க கோலாகலமான கல்யாணக் களை.

அந்தச் சூழ்நிலையில்தான் வெகு நாள்கள் கழித்து அன்னபூரணி அம்மாளைப் பார்த்தேன். சற்றுப் பருத்திருந்தாலும் முகத்திலிருந்த களை மாறவில்லை. பொட்டு, பூ எதுவும் இல்லாவிட்டாலும், அவளுடைய முகமே பூவாக, புன்னகையே பொட்டாக... என்ன ஓர் அழகு!

“மாமி...” நிஜமான வாஞ்சையுடன் பக்கத்தில் போய் அமர்ந்தேன். இவளைப் பார்க்கிற போதெல்லாம் எனக்கு ஈஷிக் கொண்டு அமரத்தோன்றும், என்னைப் பெற்றவளைத் தொட்டுக் கொண்டு உட்காருகிற மாதிரி. கல்யாணப் பிள்ளை மாமிக்கு உறவு.

இந்த மாமியைப் பார்த்து ஏழெட்டு வருஷங்கள் ஆகப் போகின்றன. முன்பு நான் குடியிருந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டு அம்மாள் இவள். இரண்டு பெண்கள் மூன்று பிள்ளைகள் என்று வீடே அமர்க்களமாக இருக்கும்.

மாமி என்னைப் பார்த்தவுடனேயே உற்சாகமயமானாள். “சௌக்கியமாடி மைதிலி? எங்களையெல்லாம் மறந்துட்டியா? இதுதான் உன் பிள்ளையா?”

என் புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு ஜாங்கிரி கடித்துக் கொண்டிருந்த என் ஏழு வயது மகனைக் காண்பித்து முகம் முழுக்க மகிழ்ச்சி பொங்கக்கேட்டாள்.



"ஆமாம். டேய் சதீஷ்... இவங்க உனக்கு ஒரு பாட்டிடா!" என்று ஆர்வ மாய் அறிமுகம் செய்து வைத்தேன்.

"உக்கும்... பாட்டியை தினம் வந்து பார்க்கிறா உன் அம்மா!" உரிமையாய்க் குறைப்பட்டுக் கொண்டாள்.

மாமியின் ச்ஃபையர் கலர் பட்டுப் புடவை அழகாய் இருந்தது. ஆனால் பத்து வருடங்களுக்கு முன் நான் பார்த்துப்பழக்கப்பட்டபழையபுடவை. அதன்பின் எந்த மகனும் அம்மாவுக்குப் புடவை வாங்கித் தரவே இல்லையோ? பரிதாபத்துடன்கவனித்தபோது—

மாமியின் புடவைத் தலைப்பில் ஒரு முடிச்சு. "இன்னும் இந்த முடிச்சுப் போடற பழக்கத்தை நீங்க விடலையா?" சிரித்தவாறு கேட்டேன்.

மாமி எதையாவது மறக்காமல் இருக்க வேண்டுமென்றால் புடவைத் தலைப்பில் முடிச்சிட்டுக் கொள்வாள். அடுப்பில் பால் வைத்துவிட்டு உடனே ஒரு முடிச்சு. வியாழக்கிழமை காலை யில் முடிச்சு போட்டுக் கொள்வாள், சாயந்தரம் குழந்தைகளுக்குத் திருஷ்டி சுற்றுவது மறக்காதிருக்க.

முன்பு நான், "இந்த முடிச்சு போட்டிருக்கிறதையே மறந்துட்டா?" என்று கேலியாய் அடிக்கடி கேட்பது நினைவுக்குவந்தது.

"இன்னிக்கு எதுக்கு மாமி முடிச்சு? எதை மறக்காமலிருக்க?" ஆச்சரிய மாய்க் கேட்டேன்.

"இந்தப் பட்டுப் புடவை எப்படி வாங்கின்டீ? ஜோராய் இருக்கு! உன் அம்மா இன்னும் பாபநாசம்தானா?" என்று மாமி பதிலுக்குப் பேச்சை மாற்றியபோது, மாமி என்னிடம் எதையோ சொல்ல வேண்டாமென்று நினைப்பது நூறு சதவிகிதம் புரிந்து போனது. போகட்டும். பாவம் தொந் தரவு செய்ய வேண்டாம்.

முடிச்சு தவிர, பத்து வருடக் கதைகள் பேசவேண்டியிருந்தது. என் அவருடைய பிரமோஷன் பற்றி நான் பெருமையாய்ச் சொல்லிக் கொண் டிருந்தபோது—

திடீரென்று கல்யாணப் பந்தலில் அமர்க்களம். ஓடிப்போய்ப் பார்த்தோம்.

மணப் பெண்ணின் தந்தை நெஞ்சைப் பிடித்தவாறு துடித்துக் கொண்டிருந்தார். வியர்த்து வழிந்து ஆறாய் ஓடிக்கொண்டிருந்தது. மூக்குக் கண்ணாடி ஒருபுறம் சரிந்திருந்தது.

மாலையும் கழுத்துமாய் மணமகள் பதறிக் கொண்டிருந்தாள். "அடேடே... அப்பாவுக்கு நெஞ்சுவலி. மாத்திரை... மாத்திரை எங்கே? நெஞ்சுவலிச்சால் உடனடியாய் ஒரு மாத்திரையைப் போட் டுக்கச் சொல்லி... டாக்டர் குடுத் தாரே... அப்பா எப்பவும் பர்சிலேயே வெச்சிருப்பாரே..." பதைப்புடன் சொன்ன அந்தப் பெண், புத்திசாலித் தனமாய், மாத்திரையின் பெயரையும் நினைவில் வைத்துக் கொண்டு சொன்னாள்.

பெரிய பெரிய ஆண்களும் வலிமை யான இளைஞர்களும் செய்வதறி யாது விசிறியால் விசிறிக் கொண்டும் தண்ணீரால் அவர் முகத்தைத் துடைத்துக் கொண்டும், யார் டாக்ட ருக்கு ஓடுவது என்று யோசித்துக் கொண்டும் இருக்க—

அன்னபூரணியம்மாள் பதற்றமின்றி, அவசரமாய் முன்னுக்கு வந்தாள். "நீ கேட்ட மாத்திரை இதோ இருக்கு. எனக்கும் இதே மாதிரி நெஞ்சுவலி வந்தால் போட்டுக்கச் சொல்லி அதே மாத்திரைதான் டாக்டர் சிபாரிசு செய்திருக்கிறார். அவசரத்துக்குத் தொலைஞ்சுடக் கூடாதுன்னுதான் முன்றானையிலேயே முடிச்சுக் கட்டி வெச்சிருக்கேன்" என்றாள் மாமி.

எனக்குப் பிரமிப்பு. மகள்களும் மகன்களும் உடன் வந்திருக்கும் இந்தக் கல்யாணத்தில், அவர்கள் சமயத்துக்குக் கைகொடுக்க மாட்டார்கள் என்று உணர்ந்து, தன் புடவைத் தலைப்பி லேயே மாத்திரைகளை வைத்துக் கொண்டு...

எதை மறக்காமலிருக்க முடிச்சு என்று கேட்டேனே... எனக்கு இப்போது புரிந்தது. 'தன் கையே தனக்கு உதவி' என்பது மறக்காமலிருக்கத்தான் முடிச்சு போலும்!

கெட்டிமேளச் சத்தத்தில் 'தாலி முடிச்சு' முடிந்தான் மாப்பிள்ளை! முக்கியமான சந்தர்ப்பங்களில் 'முடிச்சு' இல்லாமல் நடக்காது என்று புரிந்தது. ❀

சுதந்திர மலர்

சக்திகனல்

தேசபக்தர் உடல் நெற்றி வியர்வையை
ஊற்றி வளர்த்த மலர்! – இது
தெய்வங்கள் சேர்ந்து படைத்த நந்தவனம்
பூத்துக் குலுங்கும் மலர்!

நூற்றாண்டு காலங்கள் சத்திய சோதனை
ஏற்று மலர்ந்த மலர்! – உண்ணா
நோன்பில் தியாகத்தில் பெற்ற சுதந்திரக்
காற்றில் அசைந்த மலர்!

தாலாட்டுப் பாடிய தங்கமணிக் கைகள்
போற்றி வளர்த்த மலர்! – எங்கள்
தந்தையர் அன்னையர் கண்கள்நீ ரூற்றத்
தளிர்த்திட வைத்த மலர்!


லாலா லஜபதி பாலகங்காதரர்
காந்தி விளைத்த மலர்! தேச
லட்சியச் சிங்க மறவர்கள் வேள்வி
நெருப்பில் மணந்த மலர்!

பாட்டுத்தே ரோட்டிய பாரதி வேய்ங்குழல்
நாதத்தில் பூத்தமலர். – தேச
பக்திக்கனல் ஸ்ரீஅரவிந்தர் ஜோதியில்
பொன் னொளி பெற்றமலர்!

வ.உ.சி. சுப்பிர மண்ய சிவா க்களின்
வாழ்வைச் சிதைத்தமலர்! – வந்தே
மாதரம் என்றிட்ட மந்திர வேள்வியில்
மையம் நிலைத்த மலர்!

கண்ணின் மணியெனக் காக்கும் மலரைப்
பிரிவினை மாய்ப்பதுவோ? கோடி
காலம் நிலைத்துயிர் காக்கும் சுதந்திரம்
கைவிட் டுப்போவது வோ?

இன்னுயிரீந்தும் மலரினைக் காத்திட
நெஞ்சம் நிமிர்ந்திடுவோம்! – மக்கள்
எண்பது கோடியும் ஒருயிராகி
இணைந்திங்கு வென்றிடுவோம்!



தன்னை அறிந்தான்

ருக்மணி சேஷசாயி

காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வந்த ராமதுரை காபியைக் குடித்தபடியே அன்றைய தபால்களைப் பார்த்தார். வந்த நான்கு கடிதங்களுக்குள் மிகப் பெரிய உறையைப் பார்த்து அதிசயித்தார். அது ஒரு திருமண அழைப்பிதழ். மிகப் பெரிய தனவந்தரும், தொழிலதிபருமாகிய சாம்பசிவத்தின் மகள் திருமணம். அந்தப் பெரிய மனிதர் வீட்டுத் திருமணத்திற்கு அழைப்பு வந்திருக்கிறது. உள்ளத்தில் ஒரே உவப்பு. முகத்தை நிமிர்த்தி, "உமா! இங்கே வா! இந்தப் பத்திரிகையைப் பார்த்தியா?" என்று பெரிய குரலில் சொன்னபோது, அவர் மகன் ரமேஷ் உள்ளே வந்தான். மகன், மகள், மனைவி அனைவருடனும் அந்தத் திருமணத்திற்குப் போவதைப் பற்றிக் கலந்துரையாடினார்.

மகன் ரமேஷ், "அப்பா! பத்தோடு பதினொன்று அத்தோடு நீங்க ஒண்ணுன்னு பத்திரிகை அனுப்பியிருப்பான். வாழ்த்துத் தந்தியோடு நிறுத்திக் கொள்ளுங்கள்" என்றபோது மனம் ரோஷத்தால் சிவந்தது.

அடுத்த கடிதத்தைப் பார்த்தார். தன் ஒன்றுவிட்ட தம்பி தன் மகனுக்குத் திருமணம் என்றும், நான்கு நாள்கள் முன்னதாகவே குடும்பத்துடன் வந்துவிட வேண்டுமென்றும் வருந்தி வருந்தி அழைத்திருந்தான். பத்திரிகையும் தனித் தபாலில் வந்திருந்தது. இவன் வீட்டுக் கல்யாணத்துக்குப் போனால் சாம்பசிவத்தின் வீட்டுக் கல்யாணம் என்னாவது? பெரிய தனவந்தர் வீட்டுக் கல்யாணத்துக்குப் போகாமல் திண்ணைப் பள்ளிக்கூடத்து வாத்தியார் வீட்டுக்

கல்யாணத்துக்கா போவது? அந்தக் கடிதத்தைத் தூக்கி மூலையில் போட்டார். சாம்பசிவத்தின் வீட்டு அழைப்பிதழைப் பத்திரமாகத் தன் கைப்பையில் வைத்துக் கொண்டார்.

இரவு அனைவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சாம்பசிவத்தின் வீட்டுக்கு என்ன பரிசுப் பொருள் கொடுப்பது என்ற ஆலோசனையை அனைவரிடமும் கேட்டார். தம்பி திருமணத்திற்கு நல்ல பொருளாக வாங்கி இரண்டு நாள்கள் முன்னதாகச் செல்ல வேண்டுமென்ற உமாவின் பேச்சை ஒதுக்கிவிட்ட ராமதுரை, "நான் வெள்ளியில் சின்னதாக ஒரு விளக்கு வாங்கிப் பரிசளித்து சாம்பசிவத்தை அசத்திடப் போறேன்" என்றபோது உமா கோபப்பட்டாள்.

"இதோ பாருங்க. பணக்காரன் வீட்டுக்கு வெள்ளியும், நம்ம உறவுக்கு எவர்சில்வரும் தரதா? நல்ல நியாயம் உங்க நியாயம்". அவள் சொற்கள் அம்பலம் ஏறவில்லை.

அடுத்து, பணத்துக்கு என்ன செய்வது என்று சிந்தித்து... அனைவரிடமும் ஆலோசனை கேட்டு மண்டையைச் சுரண்டிக் கொண்டு அங்கேயிங்கே அலைந்தும் பணம் புரட்ட முடியாத ராமதுரையைக் கண்டு 'ஐயோ பாவம்' என எண்ணிய உமாதான் யாரும் அறியாமல் சேர்த்து வரும் சீட்டுப் பணத்தைப் பாதி தள்ளி எடுத்து வந்து தன் கணவரிடம் கொடுத்தாள் அன்றே ஒரு வெள்ளிக் குத்து விளக்கு வீட்டுக்கு வந்தது. சின்னதாக இருந்தாலும் மிகவும் அழகாக இருந்தது. கூடவே எவர் சில்வரில் ஒரு 'டீ செட்' வாங்கி வந்து உமாவிடம் கொடுத்து, "நீங்க நாளைக்கே கிராமத்துக்குப் போங்க. நாளை மறுநாள் சாம்பசிவம் வீட்டுக் கல்யாணத்துக்குப் போயிட்டு நேரா நான் அங்கே வரேன்" என்று கூற, உமா முணு முணுத்தாள். ராமதுரை எதையும் காதில் வாங்கவில்லை.

சென்னையிலேயே பெரிய திருமண மண்டபம். ராமதுரை ஆட்டோவில் சென்று இறங்கினார். கூட்டமும் நிரம்பி வழிந்தது. வெளியிலும் கூட மக்கள் வெள்ளம். முண்டியடித்து உள்ளே சென்றார். நேரே மணமேடைக்கு அருகில் சென்றார். சாம்பசிவம் கூப்பிய கைகளுடன், "வாருங்கள் வாருங்கள்" என அழைக்க, உடலில் மின்சாரம் பாய்ந்தது போலுணர்ந்த ராமதுரை பல்லைக் காட்டியபடியே பதில் வணக்கம் செய்தார். ஆனால் சாம்பசிவம் ராமதுரையைத் தாண்டிச் சென்ற போதுதான் அவருக்குப் பின்னால் வந்த நடிகரை அவர் வரவேற்கிறார் எனப் புரிந்துகொண்டு ஒதுங்கிக் கொண்டார். மீண்டும் அவர் கண்ணில் படும்படியாகச் சென்று நின்றபோதுகூட அவரை யாரும் சற்றும் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை. வாயிலில் வந்து எட்டிப் பார்த்தவர் நீண்ட வரிசையைப் பார்த்து என்ன என விசாரித்தார். "இது பரிசளிக்கக் காத்திருக்கிற வரிசை. அந்த வரிசை டிபன் சாப்பிடக் காத்திருக்கும் வரிசை" நீண்ட வரிசையைப் பார்த்துத் தலை சுற்றியது. ஏதோ ஆசை உந்த மீண்டும் உட்புறம் சென்றார். கூட்டம் அவரை இடித்துத் தள்ளியது. சாம்பசிவத்தின் அருகிலே சென்று நின்றுவிட்டார். "டேய் சண்முகம், சம்பந்தம்... கொஞ்சம் அலர்ட்டா இருங்கடா. வேறே எவனாவது நொழைஞ்சிடப் போறான்" என்ற வார்த்தைகளை அவர் வாயிலிருந்து கேட்ட ராமதுரை ஒரு நிமிடம் விக்கித்து நின்றுவிட்டார். சற்று நேரம் அப்படியே நின்றிருந்த ராமதுரையின் அருகே வந்த ஒரு சிப்பந்தி மெதுவாக, "சார் பரிசு கொடுக்க க்யூவில நிக்கணும். அப்படியே டிபன் க்யூவில போய் நில்லுங்க. இங்கே நின்னா எந்த 'வேலையும் ஆவாது சார்" என்றபடியே அவரைத் தள்ளாத குறையாக வாயிலுக்கு அழைத்து வந்து வரிசையில் நிறுத்திவிட்டுச் சென்றான்.




ராமதுரைக்குப் பசியுடன் வெயிலில் நிற்பதால் தலைவலியும் சேர்ந்து கொண்டது. உள்ளமும் உடலும் கசங்க க்யூவை விட்டு வெளியே வந்து பேருந்து நிலையத்தை நோக்கி நடந்தார்.

கிராமம். படுசுத்தமாக இருந்தது. கல்யாண வீட்டுக்கு நூறடி முன்பாகவே, "வாங்கோ வாங்கோ" என்ற வரவேற்பு. பெரிய பிரமுகரை அழைத்துச் செல்வது போல நான்கு பேர் உபசார வார்த்தை பேசியபடியே உடன் வந்துகொண்டிருந்தனர். எதிரே தம்பி மகன் சின்னவன் பாபு வந்தான். "பெரியப்பா வாங்கோ வாங்கோ!" என வாய் நிறைய அழைத்தவன் உள்ளே ஓடினான், "அப்பா அப்பா" என அழைத்தவாறே. உள்ளேயிருந்து தம்பி, அவன் மனைவி, கல்யாண மாப்பிள்ளை அனைவரும் வாயிலுக்கே வந்துவிட்டனர்.

"அண்ணா! நீங்க வருவேள்னு மன்னி சொன்னா. அரைமணி நேரம் காத்திருந்தோம். சித்த முந்திதான் மாங்கல்ய தாரணம் ஆச்சு. டேய் சங்கரா! பெண்டாட்டியை அழைச்சுண்டு வந்து பெரியப்பாகிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்கோடா" என்றபோது அவர் உள்ளம் பெருமிதத்தால் விம்மியது. 'எத்தனை அன்பு இவனுக்கு என்மேல்.' கையிலிருந்த வெள்ளிக் குத்துவிளக்கை சங்கரனிடம் கொடுத்துவிட்டு அவர்களின் தலையில் அட்சதை போட்டபோது கண்களில் கண்ணீர் உதிர்ந்தது. தலையைத் தூக்கி பார்த்தபோது தூரத்திலிருந்து பார்த்தபடி இருந்த உமாவின் பார்வை பல கதைகளைக் கூறுவது போல் இருந்தது.

நீக்குகள்

நித்யாமூர்த்தி



"எங்க ஊருக்குப் பிழைக்க வந்தவனாச்சேன்னு இரக்கம் காட்டினேன். அவ்வளவுதான். இனிமே, என் தன்மானம் சும்மா இருக்காது. முதல்ல வெளியே போ!" பசவப்பா சீற்றத்துடன் விழித்தான்.

சாமுவேலின் முகம் கருகியது. நொந்த உள்ளத்துடன், கோபத் தால் உடல் தகிக்க வெளியே வந்தான்.

பல வருடங்களுக்கு முன், கட்டட வேலைக்காகத் தமிழ் மண்ணி லிருந்து குடிபெயர்ந்தவன் சாமு வேல். இந்திரா நகரில், அம் பேத்கர் கல்லூரி எதிர் நிலப் பரப்புக் குடிசைவாசிகளில் அவ னும் ஒருத்தன். பக்கத்துக் குடிசை பசவப்பா, குடும்ப நண்பனாகி, தான் மேஸ்திரி வேலை பார்க்கும் கட்டட வேலைக்கு உதவி ஆளாக அழைத்துச் செல்லத் தொடங்கி னான்.

சாமுவேலின் குடும்பம் மனைவி, பெண் ஸ்டெல்லா என விரிந்தது. பசவப்பாவின் மகன் நரேந்திரன் கல்லூரி மாணவன். சாமுவேலின் கிறிஸ்துமஸ் கேக்

பசவப்பா வீட்டிலும், பசவப்பா வீட்டுத் தீபாவளிப் பலகாரம் சாமுவேல் வீட்டிலும் மிதியலாடும். திடீரென ஏன் இப்படி ஒரு கசப்பான மாறுதல்?

ஷிமோகாவிலிருந்து, பசவப்பாவின் மைத்துனன் வேங்கடப்பா விருந்தாளியாக வந்து தங்கிவிட்டுப் போனான். அதன் பிறகுதான் எல்லாமே... அவன் என்ன சொல்லி அக்கா புருஷன் மனதைக் கலைத்துவிட்டுப் போனானோ தெரியவில்லை. கீழ்மட்டத்தில் ஓர் உள்உணர்வு சாமுவேலைக் கலக்கியபடி இருந்தது.

கல்லூரி வாயிலில் தற்செயலாகச் சந்தித்த நரேந்திரனை ஸ்டெல்லா கேட்டாள், "நம்ம அப்பாக்கள் ரெண்டு பேருக்கும் என்ன ஆயிட்டுது?"

"நாக்கில விஷம் தோச்சுக்கிட்டாங்கண்ணு தோணுது". நிராசையுடன் தோளைக் குலுக்கினான் அவன். சிறு வயது முதல் உடன் பிறந்தவளைப் போலப் பழகியவளைப் பேசக்கூட விடாமல் அப்பா தடுத்துவிட்ட ஆற்றாமை அவனுக்கு.

அருகருகே இருந்தும் பேச்சு வார்த்தை இன்றி, பகைமையின் விரிசலில் விலகிப் போய்க் கொண்டிருந்தனர் இருவரும்.

பசவப்பா, முன்னைப்போல சாமுவேலை உதவிக்கு அழைத்துச் செல்லவில்லை. சாமுவேலும் பசவப்பாவைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டு போவான்.

தீபாவளி நெருங்கும் சமயம், அன்று காலை அல்சூர் ரோடு தாண்டிக் கட்டட வேலை. குறைந்தது ஒருமாதக் கூலி தேறிவிடும். சாமுவேல் புறப்பட்டவன் எதிரே ஜேக்கப் வருவதைப் பார்த்தான்.

பாலக்காட்டில் பிறந்து, தமிழ் நாட்டில் வளர்ந்து, கர்நாடகத்தில் வேலைக்காக ஒதுங்கியவன். கிறித்துவ திருச்சபையின் கீழ், மதத்தின் பெயரால் வளர்ந்த நட்பு.

"எனக்கு ஈ ஜோலி இப்ப முடியும். பின்னே, வளரே ஜோலி கிட்டியால்... கொற காலம் கூடி எனிக்கும் சௌகர்யமாயிட்டு கழியும். பசவப்பா எந்தும் செய்யுமோ?"



"எந்த அப்பாவை நம்பினாலும், நீ பசவப்பாவை நம்பாதே ஜேக்கப்".

விளங்காமல் விழித்தான் ஜேக்கப். "ஞான் கேரள நாட்டுலேருன்னு வன்னு..அது கொண்டு..."

"இங்க மொழி, நாடு எல்லாமே பிரச்னையாயிட்டுது. அடிப்படையில நாம எல்லாரும் மனுஷங்கன்னு யாருமே புரிஞ்சுக்கலே. ஒண்ணு செய் ஜேக்கப். எங்ககூட வந்து தங்கு. ஒரே திருச்சபைக்காரன். உனக்குக் கட்டாயம் நான் உதவறேன்" சாமுவேலின் மனதினுள்ளும் வேற்றுமை கள்ளத்தனமாகக் கடைபரப்பி விட்டது.

ஒரு வாரம்கூட ஆகி இருக்காது. தீபாவளி நெருங்குவதை ஒட்டி, யாரோ கொளுத்திப் போட்ட பட்டாசு, அக்னியின் அகோரப் பசிக்கு வித்திட்டது.

"நெருப்பு, நெருப்பு!" திடும் என வெடித்துச் சிதறிய தீயின் நாக்குகளைக் கண்டு, குடிசைவாழ் மக்கள் அலறிப் பாய்ந்தார்கள். அருகிலிருந்த குளம், குட்டைகளைத் தேடி ஓடினார்கள். தீயணைக்கும் படைக்காகப் பறந்தனர்.

பசவப்பா மனைவியுடன், கையில் கிடைத்ததை வாரிச் சுருட்டியபடி பதைப்புடன் வெளியே வந்தான். சாமுவேல் குடும்பம் பீதியுடன் எரியும் வீட்டையே விழி பிதுங்கப் பார்த்தபடி நின்றது.

திடீரென பசவப்பாவின் மனைவி அலறினாள். "நம்ம நரேன்... நம்ம மகன்... ஐயோ..." வீட்டுக்குள்ளே பித்தம் பிடித்தவளைப் போல ஓடமுயன்றவளை, சாமுவேலின் மனைவியும், மகளும் ஓடிச்சென்று தடுத்தனர். பசவப்பா பிரமை பிடித்தவனைப் போல் நின்றான். கையும், காலும் துவண்டது போன்ற மன நிலை.

யாரும் எதிர்பாராத வகையில் கொழுந்து விட்டெரியும், தீ நாக்குகளிடையே குபீரெனப் புகுந்தான் ஜேக்கப். அடுத்த சில நொடிகளில், மயங்கித் துவண்ட நரேந்திரனைத் தோளில் சுமந்தபடி, வெளியே வந்து விழுந்தான்.

"ஜேக்கப்!" சாமுவேல் அலறினான்.

"சாமுவேல்! ஈ குட்டி, புகையில் மூர்ச்சையாயி. வேகம் ஆசுபத்திரி கொண்டு போகணும். பின்ன பேசாம் கேட்டோ".

பசவப்பாவும், சாமுவேலுவும் ஓடிச் சென்று அவர்கள் இருவரையும் தூக்கினார்கள். சம்பந்தமே இல்லாத ஒருத்தன், மனிதாபிமானத்தின் அடிப்படையில் ஆற்றிய செயல், அவர்களைப் பேச்சிழக்க வைத்திருந்தது.

கண கணவென மணி ஒலித்தபடி தீயணைக்கும் படை வந்து சேர்ந்தபோது, அதுகாறும் அவர்கள் இருவர் மனதிலே எரிந்து கொண்டிருந்த வேற்றுமைத் தீ அணைந்து விட்டிருந்தது. மனித நாக்குகளால் ஏற்படுத்திய ஒரு பகைமையைத் தீயின் நாக்குகள் அழித்துவிட்டிருந்தன.

"வாசமிகு துழாய்த் தாரான் கண்ணனடி மறவாத மனத்தான்
சக்திதாசன் எனப்புகழ் வளரும் சுப்ரமண்யபாரதி"

என்று தம்மை அழைத்துக் கொண்டவர் பாரதி.


கண்ணனிடத்து அவரது ஈடுபாடு, கண்ணன் பாட்டாக மலர்ந்தது. பாஞ்சாலி சபதத்தில் கண்ணனைப் பற்றிப் பேசும் இடங்களில் அவரது ஈடுபாட்டைக் காணலாம்.

தேசபக்திப் பாடல்கள் பாடும்போதும் கண்ணனை அவர் மறந்தாரில்லை.

அவருக்குக் கண்ணனிடம் ஈடுபாடு வரக் காரணம் அவரது வரலாறு, பால லீலைகள் மட்டுமல்ல –

பாரதியாரும் பகவத்கீதையும்

பாரதிசுராஜ்



அவனைக் கீதாசாரியனாக – பார்த்தசாரதியாகக் காண்பதில் அவருக்குத் தனி மகிழ்ச்சி.

'அண்ணன் அர்ச்சுனன் போல் எனை ஆக்கிடுவாய்' என்று அர்ச்சுனன் இடத்தில் தம்மை வைத்துப் பேசுவார் அவர்.

பகவத் கீதைக்கு, அழகான தமிழ் மொழி பெயர்ப்புச் செய்திருக்கிறார் பாரதியார். பாரதி போன்ற மகாகவியே கூட இம் மொழிபெயர்ப்பைக் கவிதையில் செய்யவில்லை என்பது கவனத்துக்கும் ஆராய்ச்சிக்கும் உரியது. அங்கங்கே சில சுலோகங்களை மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். தமது பகவத் கீதை தமிழ் ஆக்க நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரை மிக விரிவானது. அதை ஒருமுறை படித்தாலே பகவத் கீதையின் ஆழ்பொருளை – அதில் கவிஞரின் பக்தி பூர்வமான பற்றை உணரலாம். தமிழ் இலக்கியத்தில் மிகச்சிறந்த முன்னுரைகளில் 'பகவத் கீதை' முன்னுரையும் ஒன்று.

'பாருக்குள்ளே நல்லநாடு' என்ற பாடலில் பாரதத்தின் சிறப்புகளைப் பட்டியல் இடும்போது முதல் இடம் பெறுவது –

'ஞானத்திலே பரமோனத்திலே' என்பதுதான்.

'சாரத்திலே மிகு சாத்திரம்' கண்டு தருவதிலே உயர்நாடு.

பகவத் கீதையை '– கீதா சாஸ்திரம் என்றே சொல் வார்கள்.

'ஜயபாரத!' என்ற பாடலில் 'வல்லநூல் கெடாது காப்பள் வாழி அன்னை வாழியே' என்ற அடிகளுக்குக் குறிப்புரையில் வல்லநூல் 'உபநிஷத்து அல்லது கீதை' என்று தரப் பட்டுள்ளது. கீதையின் ஒவ்வோர் அத்தியாய இறுதியிலும் –

இங்ஙனம் உபநிஷத்தும், பிரம்ம வித்தையும்
யோகசாஸ் திரமும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன
சம்பாஷணையுமாகிய ஸ்ரீமத் பகவத் கீதை..'

என்று பாரதியார் வடமொழிக் குறிப்புகளை மொழி பெயர்த்துள்ளார்.

'பாரதமாதா' என்ற பாடல் முன்னை இலங்கை அரக்கர் அழிய என்று தொடங்குவது.

'போர்க்களத்தே பரஞான மெய்க்கீதை
புகன்ற தெவருடை வாய்? பகை
தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத
தேவி மலர்த்திரு வாய்'

கீதை யாரோ ஒரு சாராருக்குரியதல்ல. அது பாரதத்தின் சொத்து என்று குரல் கொடுக்கிறார் கவிஞர்.

'கிருஷ்ணன் மீது துதி' என்றொருபாடல்.

அதில் 5 பாடல்களில் பகவத் கீதையை வாயாரப் போற்றுகிறார்.

'உண்ணும் சாதிக்கு உறக்கமும்-சாவுமே
நண்ணுனாவனம் நன்கு புரந்திடும்

எண்ணரும் புகழ்க் கீதை எனச் சொலும்

பண்ணமிழ்தத்தருள் பாலித்தே'

என்று கீதையின் பெயரையே சொல்லிப் பாடுகிறார்.

'பாரத சமுதாயம் வாழ்கவே' எல்லாரும் அறிந்த பாடல். அதிலும் –

'தனியொருவனுக் குணவிலை யெனில்

ஜகத்தினை யழித்திடுவோம்'

ஆன்மிக நோக்கில் அக்கறை இல்லாதவர்கள்கூட அடிக்கடி சொல்லும் பாடல். இந்த உணர்வு 'தனி ஒரு மனிதன்கூடப் பட்டினி கிடக்கக் கூடாது' என்பது எப்படி வந்தது? அதை யாரும் சொல்வதில்லை. அடுத்தே வரும் அடிகள்.

"எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்

என்று ரைத்தான் கண்ணபெருமான்'

எல்லாரும் அமரநிலை எய்து நன் முறையை

இந்தியா உலகிற்களிக்கும் – ஆம்

இந்தியா உலகிற்களிக்கும்"

"யோமாம் பச்யதி ஸர்வத்ர. ஸர்வஞ்ச மை பச்யதி"எல்லா உயிர்களிலும் என்னைப் பார். எனக்குள்ளே எல்லா உயிர்களையும் கண்டு கொள்' என்பது கீதா வாக்கியம்.

வீரம் ததும்பும் 'சத்ரபதி சிவாஜி' என்ற பாடலில், சிவாஜி தன் படை வீரர்களுக்குக் கடமையை நினைவு படுத்துவதாக அமைந்த உணர்ச்சி மிக்க வரிகளில் பகவத் கீதை பிறந்த சூழ்நிலையையே 54 வரிகளில் அழகாகத் தருகிறார் பாரதி.

"பெரும் பதத்தடையுமாம் பெண்மை எங்கெய்தினை

பேடிமைகற்று நின் பெருமையை மறந்திடேல்

ஈடிலாப்புகழி னோய் எழுகவோ எழுக"

என்ற வரிகளில் கர்மயோகச் சிறப்பைக் கவிதை யாக்குகிறார்.

'சூரிய தரிசனம்' என்ற தலைப்பில் ஒரு பாடல். கவிஞர் கனவு காண்கிறார். அதில் கிருஷ்ணார்ஜுன தரிசனம் ஒரு காட்சி. பாண்டவ கௌரவர் யுத்தத்தில்-



தேரின் முன்பாகன் – மணித்

தேரின் முன்பாகன் – அவன்

சீரினைக் கண்டு திகைத்து நின்றேன்.

மறுபடி அர்ச்சுனன் கலக்கத்தை வர்ணித்து

'வில்லினை எடடா! கையில்

வில்லினை எடடா! அந்தப்

புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா'

என்று கூறி என்றும் உள்ள ஆன்மா என்ற உண்மையைக் கொல்ல முடியாது. குறைக்க முடியாது. அதைப் படைகள் தீண்டா. அதற்கு இன்பமும் இல்லை. துன்பமும் இல்லை.

'செய்தலுன் கடனே! அறஞ்

செய்தலுன் கடனே – அதில்

எய்துறும் விளைவினில் எண்ணம் வையாதே'

என்று கீதையின் 2 ஆம் அத்தியாயத்தின் திரண்ட பொருளைக் கவிதை வரிகளில் தருகிறார் கவிஞர்.

'பகைவனுக்கருள்வாய்' என்ற பாடலில்

'போருக்கு வந்தாங் கெதிர்த்த கவுரவர்

போலவந்தானுமவன் – நன்னெஞ்சே

நேருக் கருச்சுனன் தேரிற் கசை கொண்டு

நின்ற துங் கண்ண னன்றோ'

என்ற வரிகள் இந்த பகவத்கீதைக் காட்சியில் பாரதியின் மனம் எத்துணை ஈடுபட்டது என்பதைக் காட்டுபவை.

கண்ணன் புகழ் பாடுகின்ற கண்ணன் பாட்டில் பாரதியார் இந்த பகவத்கீதையை விரிவாகப் பேசவில்லை. ஆனால் கீதைக் கருத்துகள் ஆங்காங்கே, பளிச்சிடுகின்றன. கண்ணன் பாட்டின் தொடக்கமே 'கண்ணன் என் தோழன்' தான். அர்ச்சுனன் பாரதிக்கு மிகப் பிடித்த ஒரு பாத்திரம்.

"பெரும் சேனைத் தலை நின்று போர் செய்யும் போதினில்

தேர்நடத்திக் கொடுப்பான் .....

ஈனக் கவலைகள் எய்திடும் போதினில்

இதஞ் சொல்லி மாற்றி டுவான்"

'சிறுபள்ளத்திலே நெடுநாள ழுகும் – கெட்ட

பாசியை எற்றிவிடும்

பெருவெள்ளத்தைப் போல் அருள்வார்த்தைகள் சொல்லி

மெலிவு தவிர்த்திடுவான்'

'வெள்ளம் போல்' பொங்கி வந்த கீதா உபதேசத்தை இதைவிட அழகாகச் சொல்லிவிட முடியாது.

'ஆண்டருள் புரிந்திடுவான் – கண்ணன்

அர்ச்சுனன்போ லெனை ஆக்கிடுவான்'

என்று தம்மை அர்ச்சனனாகவே காண்பார் கவிஞர். கண்ணன் என் சேவகன் பாடலில், சேவகனாய் வந்த கண்ணன்

'கண்ணை இமை இரண்டும் காப்பது போல் – என் குடும்பம்

வண்ணமுறக் காக்கின்றான்' என்ற அடிகளில்

'யோக க்ஷேமம் வஹாம் யஹம்' என்ற கீதை வரிகள் விளக்கம் பெறுகின்றன.

கண்ணன் பாட்டு 'நின்னைச் சரண டைந்தேன்' என்ற பாடலுடன் நிறைவு பெறுகிறது.

'என்னைக் கவலைகள் தின்னத்தகாதென்று

நின்னைச் சரணடைந்தோம்'

'நல்லது தீயது நாம் அறியோம் அன்னை

நல்லதை நாட்டுக தீயதை ஓட்டுக'

கர்மம், பக்தி, ஞானம் இவற்றையெல்லாம் சொன்ன கண்ணன் 18 ஆம் அத்தியாயத்தில் இறுதியான – உறுதியான உபாயமாக 66 ஆம் சுலோகத்தில் சொல்லுவது இது.

'எல்லா அறங்களையும் விட்டுவிட்டு என்னையே சரண்புகு

எல்லாப் பாவங்களி னின்றும் நான் உன்னை விடுவிக்கி றேன்

துயரப் படாதே'

– பாரதியார் மொழிபெயர்ப்பு

"ஈசனைச் சரணாகதி அடைந்து இக லோகத்தில் மோட்ச சாம்ராஜ்யத்தை எய்தி நிகரற்ற ஆனந்தக் களியில் மூழ்கி வாழும்படி வழி காட்டுவதே பகவத் கீதையின் முக்கிய நோக்கம். ஆதலால் இது கர்ம சாஸ்திரம், ஞான சாஸ்திரம், இது பக்தி சாஸ்திரம், இது யோக சாஸ்திரம், இஃது மோக்ஷ சாஸ்திரம், இஃது அமரத்துவ சாஸ்திரம்".

பகவத் கீதை முன்னுரையில் பாரதி வாசகங்கள் இவை.

'உயர் வேத முணர்ந்த முனிவர் உணர்வினில்

மேவு பரம் பொருள் காண் – நல்ல

கீதை உரைத்தெனை இன்புறச் செய்தவன்

கீர்த்திகள் வாழ்த்திடுவேன்'.

கண்ணன் பாட்டில் இப்படிப் பாடியபடி, கீதை உரைத்த கண்ணனை, கவிதையாலும், கட்டுரையாலும் போற்றிப் போற்றி மகிழ்ந்தார் பாரதியார். அவரது கண்ணன் ஈடுபாடும் – சிறப்பாக கீதை ஈடுபாடும் ஒரு தனி நூலுக்கே உரிய கருப் பொருள்களாகும்.

'கண்ணன் எம்பெருமான் அருள் வாழ்கவே

கலி அழிந்து புவித்தவம் வாழ்கவே

அண்ணல் இன்னருள் நாடிய நாடுதான்

அவலம் நீங்கிப் புகழில் உயர்கவே'

– பாரதியார்.

ஃ





முன்னியது முடிக்கும் முருகன்

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்

பண்டைத் தமிழர் தாம் வாழ்ந்த நாட்டினை நானிலம் என்று வழங்கினர். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் என்றும் வழங்கப் பட்டன. மழை வளங்குறைந்து, முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தாம் இருக்க வேண்டிய வளமான நிலைமையில் இருந்து திரிந்த நிலையில் அந்நிலம் பாலை எனக் கூறப்பட்டது. ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த தமிழ்ப் பெருமக்கள் தாம் வழிபடுங் கடவுளாக ஒவ்வொரு தெய்வத்தைக் கொண்டனர். குறிஞ்சி நிலத்தார் முருகனையும், முல்லை நிலத்தார் மாயோனையும், மருத நிலத்தார் இந்திரனையும், நெய்தல் நிலத்தார் வருணனையும், பாலை நிலத்தார் காளியையும் தாம் வழிபடு கடவுளர்களாகக் கொண்டனர்.

முதன் முதலில் தோற்றங் கொண்ட நிலம் 'குறிஞ்சி' என்பர். பழந்தமிழ் மக்கள் மலையில் வாழ்ந்து, மலை நிலக் கடவுளாம் முருகனை வழிபட்டு, இயற்கையோடு இயைந்த இன்ப அன்பு வாழ்வு நடாத்தினர். மலையில் சலசலத்து ஓடும் அருவி நீரில் குளித்து, காலை ஞாயிற்றின் கதிரொளியில் மூழ்கி, தண்ணிய இனிய நறுங்காற்றில் படிந்து, கனி மரந் தந்த சுவையுறு கனிகளை யுண்டு, மானும் மயிலும் மகிழ்ந்தோடும் - ஆடும் ஆட்டத்தினைக் கண்டு, குயில் கூவும் இசையினைச் செவிமடுத்து, தன் காதல் மனைவியொடும், கவினார் இளஞ்சிறாரொடும் ஒருவன் வாழும் வாழ்வு பல்லாற்றானும் சிறப்புடைத்தே யாகும் என்பது பொருள்மொழி யன்றோ!

'முருகு' எனுஞ் சொல்லிற்குப் பல பொருள் காண்பர் அறிஞர். தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள், மணம், இளமை, கடவுட்டன்மை, அழகு முதலியன நிறைந்ததொரு பொருளே முருகு எனக் குறிப்பர். 'இயற்கை மணமும், மாறா இளமையும், எல்லாப் பொருளையும் கடந்தொளிரும் தன்மையும் அழியா அழகும் இறைவனிடத்தில் இலங்குவது கண்டு, அப்பொருள்கள் முறையே உறைதற்கிடம் பெற்றுள்ள முருகன் என்னுஞ் சொல்லை, அவ்விறைவனுக்குப் பழந்தமிழ் மக்கள் சூட்டியதன் திறமையை நோக்குழி அவர்களது கூர்ந்த மதி புலனாகிறது' என்று தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்கள் மேலும் கூறுவர்.

பழந்தமிழ்ப் பாட்டுகளின் தொகுதி எட்டுத் தொகையாகும். எட்டுத் தொகை நூல்களுள் புறத்தைப் பற்றிப் பேசும் நூல் புறநானூறு ஆகும். புறநானூற்றில் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் 'பூவைநிலை'த் துறையமையப் பாடிய பாடலில், அம் மன்னனை முருகனோடு உவமித்துப் பேசியுள்ளார்.

'முருகொத் தீயே முன்னியது முடித்தலின்'

— புறம் : 56 : 14.

இதன் பொருள், 'கருதியது முடித்தலான் முருகனை ஒப்பை' என்பதாகும். இதனால் முருகப் பெருமான் நினைத்ததை முடிப்பவர் என்பது பெறப்படும். பிறிதொரு புறப்பாடலில் முருகப் பெருமான்,

'முருகன் சீற்றத் துருகெழு குருசில்'

— புறம் : 16 : 12.

என்று கூறப்பெற்றுள்ளார். 'முருகனது வெகுட்சி போனாலும் வெகுட்சியினையுடைய உட்குப் பொருந்திய தலைவ' என்று சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, புலவர் பாண்டரங் கனாராற் பாராட்டப் பெற்றுள்ளான்.

இவ்விரு தொடர்புகளையுங் கொண்டு நாம் ஆராயும் பொழுது, முருகன் போரில் அஞ்சாத திறன் உடையவன் என்பதும், தான் கருதிய வண்ணமே செயல்களை முடித்துச் சிறப்பவன் என்பதும் தெளிவாகின்றது. எனவேதான் முருகப் பெருமானுடைய தாளினையும் தோளினையும் சிந்தித்தால் தொல்லை கொடுக்கும் நம் தொல்வினைகள் மறைந்து போகும் என்று குறிப்பிடுகின்றது திருவிரிஞ்சைப் புராணம் :

அந்திப்போது அழகுறவே நடித்தருளும்
விழித்துணைவர் அருளும் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
அயிலெடுத்து வரும்செவ் வேளைச்
சிந்திப்போம் புகழ்ந்திடுவோம்
மலரணிவேலர்
அவர்கமலத் தாளும் தோளும்
சிந்திப்போம் ஆதலினால் நமதுபழ
வினைகளெல்லாம் சிந்திப் போமே.

அதுமட்டுமன்று; பிரமன் எழுதிய எழுத்து அதை மாற்ற முடியாது என்று அறியாமையால் அநேக மக்கள் கூறித் தங்கள் தலைவிதியை நொந்து கொண்டிருப்பர். அத் தலைவிதியையும் மாற்றும் திறன் முருகனுக்கு உண்டு என்பதனை அருணகிரிநாதர் அழகுறப் பின்வரும் பாடலில் புலப்படுத்துகின்றார்

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்
பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி
யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும்
வெற்புமவன்

கால்பட் டழிந்ததிங் கென்றலை

மேலயன் கையெழுத்தே.

உலகிற் சிலர் நாளும் கோளும் நமக்கேற்றனவாக இல்லை; எனவே என் செய்வது எனத் தயங்கி நிற்பர். அத்தகையோரையும் கந்தரலங்காரத்தில் இடித்துரைத்து, முருகன் தாளினை நம்பிக்கையோடு நலமுற வணங்கினால் நாளும் கோளும் ஒன்றும் செய்யா; தீவினை செயலற்று நிற்கும்; எனவே முன்னியது முடிக்கும் முருகன் முன்வரப் பரவி நிற்பீராக என்கிறார் அருணகிரியார்.

நாளென் செயும்வினை தானென்

செயுமெனை நாடிவந்த

கோளென் செயுங்கொடுங்

கூற்றென் செயுங்கும ரேசரிரு

தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்

தண்டையுஞ் சண்முகமுந்

தோளுங் கடம்பு மெனக்குமுன்

னேவந்து தோன்றிடினே.

முருகப் பெருமானை மறவாது மனத்தில் இருத்துவோர் என்றென்றும் தாழ்வின்றித் தகவுடன் வாழ்வர் என்றும் கந்தரலங்காரம் கவினுறக் கழறும்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு

வெற்பனைச் செஞ்சுடர்வேல்

வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்

தோனை விளங்கு வள்ளி

காந்தனைக் கந்தக் கடம்பனைக

கார்மயில் வாகனனைச்

சாந்தனைப் போதும் மறவா

தவர்க்கொரு தாழ்வில்லையே.

தமிழ் நூல்களிலே மட்டுமன்றி வடமொழி நூல்களிலும் முருகப் பெருமானைப் பரவி நின்றால் பல பேறுகளையும் பெறலாம் என்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது.

'எவராயிருப்பினும் கார்த்திகேயனிடத்தில் பக்தி செலுத்துபவர் புதல்வன் முதலிய பல பேறுகளைப் பெறுவர்' என்று வால்மீகி இராமாயணத்தின் பாலகாண்டத்தில் விசுவாமித்திரர் வாக்காக வியாசர் குறிப்பிடுகின்றார்.

விழியாக முன்னின்று தன்னளி

சுரந்தவர்கள்

வேண்டிய வரங் கொடுப்பான்

மெய்கண்ட தெய்வமித் தெய்வமல்

லாற்புவியில் வேறில்லை.



உலகம் உய்யவே முருகப் பெருமான் திருவவதாரஞ் செய்ததாகக் கச்சியப்பர் கந்தபுராணத்தில் கூறுவர்.

அருவமு முருவு மாகி

அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்

பிரமமாய் நின்ற சோதிப்

பிழம்பதோர் மேனி யாகக்

கருணைகூர் முகங்க ளாறுங்

கரங்கள் பன் னிரண்டுங் கொண்டே

ஒருதிரு முருகன் வந்தாங்

குதித்தனன் உலக முய்ய.

இவ்வாறு உலகம் உய்வதற்குத் திருவவதாரமெடுத்த திறனுடைய முருகப்பெருமானின் 'இதமொழி பகரினும் மதமொழி பகரினும் ஏழைக்கிரங்கும் பெருமா'ளாக விளங்குகின்றார். எனவேதான், தமிழ்க் கடவுளாக விளங்குகின்ற முருகப்பெருமானை அவருவக்கும் முத்தமிழால் வையவும் வாழ வைக்கும் பெருவிருப்புடையவன் என்று அனுபவ முறையில் அறிந்த பெரியோர் பேசுவர்.

'மொய்தா ரணிகுழல்

வள்ளியை வேட்டவன்

முத்தமிழால் வைதாரையும்

அங்கு வாழவைப் போன்'

எனவே, அடியார்கள் 'சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு', திருமுருகப் பெருமானை உன்னிச் சென்றால் 'இன்னே பெறுக நீ முன்னியவினையே' என்றபடி நினைத்தவெல்லாம் நிச்சயம் பெறலாம். எனவே எண்ணுவன நல்லவே எண்ணவேண்டும்; அவ்வாறு எண்ணியனவற்றைத் திண்ணமாய்ப் பெற வேண்டும்; அவ்வாறு திண்ணமாய்ப் பெறுவதற்கு வேண்டுவன இவையிவையென்று அருணகிரிப் பெருமான் தாமியற்றிய கந்தரலங்காரக் கவினார் பாடலொன்றில் கிளத்தக் காணலாம்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்

பாதங்கள் மெய்ம்மை குன்றா

மொழிக்குத்துணைமுரு காவெனு

நாமங்கள் முன்பு செய்த

பழிக்குத் துணையவன் பன்னிரு


தோளும் பயந்ததனி

வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்

கோடன் மயூரமுமே.

— கந்தரலங்காரம் : 70.

இதுகாறும் கூறியவற்றால், பண்டுதொட்டு இன்றுவரை நம் தமிழ் மக்கள் வணங்கிவரும் முருகப் பெருமான் முன்னியது முடித்து வைக்கும் திறனுடையவன் என்பதும், அவரை நினைந்து நிற்பவர் நாளாலும், கோளாலும், வினையாலும் நவைபட்டு நிற்க மாட்டார் என்பதும், வள்ளியின் 'தேனூறு கிளவிக்கு வாயூறி' நின்ற கலியுக வரதனாம் கார்த்திகேயனாகிய முருகப் பெருமான் முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் பெருமனங்கொண்ட பெருந்தகை என்பதும், அவன் தாளும், திருப்பெயரும், தோளும் வடிவேலும் மயிலும் விழிக்கும், மொழிக்கும், பழிக்கும், தனி வழிக்கும் முறையே துணையாக அமைவன என்பது பெறப்படும். எனவே தீராத வினை தீர்த்தருளும் மாலோன் மருகனை; வள்ளி மணாளனை புள்ளிமயில்வேலனை நாள்தோறும் வணங்கி நற்பேறு பெற்று உய்வோமாக.



பூஜைமணை

வையவன்

மூன்று தலைமுறையைக் கடந்து வந்திருந்த பூஜைமணை அது. வைரம் பாய்ந்த தேக்கு. ஒரு வருஷத்துக்குமுன்பு அதன் நிறம் மங்கிப் பழுத்துப் போய் விட்டது. வேறு மணை செய்து கொள்ளலாம் என்று பரண் மேல் எறியப் போனான்ஸ்ரீநாத்.

"ஆகி வந்த மணைடா. இதைப் போட்டு உட்கார்ந்துதான் எங்க அப்பா பூஜை செய்வார்" என்று தடுத்தார் அப்பா.

"எங்க மாமனார்கிட்டே அவங்க அப்பா ஒப்படைச்ச ஒரே சொத்தாம் இது" என்று பாட்டி - அப்பாவின் அம்மா - குறுக்கிட்டாள்.

ஸ்ரீநாத் தன் யோசனையைக் கைவிட்டான். ஆனாலும் மணையின் பழைமை பிடிக்கவில்லை.

"இதுக்கு வார்னிஷ் அடிக்கலாம் இல்லியோ?" என்று மணை தனக்குப் பிடிக்காததை மறைமுகமாக வெளியிட்டான்.

"ஓ... அது வேணும்னா தாராளமாச் செய்யலாம்".

ஸ்ரீநாதன் ஒரு வாரத்தில் பழைய மணைக்கு வார்னிஷ் அடித்துக் கொண்டு வந்தான்.

வீட்டை விட்டு அந்த ஒரு வாரம் தான் மணை வெளியே போயிருந்தது. பூஜையறை வெறிச்சோடி விட்டதாக அந்த வாரம் முழுதும் பாட்டி புலம்பினாள்.

அப்பாவும் ஒன்றிரண்டு முறை "என்ன தச்சன்கிட்டே போனியா? வார்னிஷ் அடிச்சுட்டானா?" என்று கேட்டுவந்தார்.

வாரத்தின் கடைசி இரண்டு நாள்களில் "அவன் வார்னிஷ் அடிக்கலேன்னா வாங்கிண்டு வந்துடு. அப்புறமா பாத்துக்கலாம்" என்று நெருக்க ஆரம்பித்தார்.



அந்த ஒரு வாரத்தில் ஸ்ரீநாத் மிகவும் மனத் தவிப்புக்கு ஆளாகி விட்டான்.

தன் வீட்டின் ஆசார அனுஷ்டானங்களுக்கும், சம்பிரதாயங்களுக்கும் அவன் காட்டி வந்த எரிச்சல் குற்ற உணர்வாக மாறி விட்டது. உறுத்திற்று.

சோம்பாமல், சுணங்காமல் தச்சன் வீட்டில் பழிகாத்து மணைக்கு வார்னிஷ் அடித்து வாங்கிவந்து வீட்டுக்குக் கொண்டு வந்தபோதுதான் ஒரு நிம்மதி.

அப்பா மணையைப் பார்த்தார். "பேஷ், ரொம்ப நன்னாருக்குடா. நல்லா செய்திட்டான்" என்றார்.

பாட்டி "புதுசு போலவே இருக்கு. எங்க மாமனாரோட அப்பாவே இப்பத்தான் செஞ்சுண்டு வந்து தந்தாப்பல இருக்கு" என்றாள்.

அவனுக்கு மனசு குளிர்ந்தது.

'இந்த மனிதர்களுக்குத்தான் என்னென்ன அடையாளம் வேண்டியிருக்கிறது! பூஜையைச் செய்ய மணை வேணும்தான். அதென்ன ஒரு குறிப்பிட்ட மணை? அதிலென்ன ஒரு வம்சப் பெருமை?' என்ற எண்ணமும் எழாமல் இல்லை.

இப்போது அந்த எண்ணத்துக்குத்தான் அவன் மிகவும் கவலைப்பட்டான்.

மாம்பலம் வீட்டைக் காலி செய்து மயிலாப்பூர் வீட்டிற்கு சாமான்களை ஏற்றிச் சென்ற லாரியிலிருந்து அது மட்டும் ஒரு திருப்பத்தில் துள்ளித் தெருவில் விழுந்து விட்டது.

லாரியில் சாமான்களோடு நின்றிருந்த ஸ்ரீநாத் "நிறுத்து நிறுத்து!" என்று லாரி கேபினுக்கு வைத்திருந்த சிறு ஜன்னலில் கத்துவதற்குள் லாரி சற்று தூரம் போய்விட்டது.

நடுச்சாலையில் குப்புறப் பூஜை மணை கீழே விழுந்திருந்தது. இரு புறமும் வாகனங்கள், நடந்து போவோர்.

இரண்டு மூன்றுபேர் மணையையும், நிற்கிற லாரியையும் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள்.

வேகமாக வருகிற வாகனங்களில் ஏதாவது ஒன்று மணையின் மீது ஏறிவிடுமோ என்று மனசு திக்திக் என்று அடிக்க, நின்ற லாரியிலிருந்து கீழே இறங்கினான் ஸ்ரீநாத்.

அதற்குள் விஷயம் கைமீறி விட்டது. காஸ் சிலிண்டர் லாரி ஒன்று ஓர் ஆட்டோ ரிக்ஷாவுக்கு வழிவிட சற்றே நகர்ந்தது. அதன் வலது முன் சக்கரம் மணையைக் குறிபார்த்து நெருங்கிற்று.

"நறக்" என்று ஓசையும் துல்லியமாகக் கேட்டது.

பூஜை மணை நொறுங்கிவிட்டது.

ஸ்ரீநாத் ஓடுவதற்குள் காஸ் சிலிண்டர் லாரி அவனைக் கடந்து போய்விட்டது.

சாலையில் நாலாகப் பிளந்து விழுந்து கிடந்தது பூஜைமணை.

மனசு கறுக்கென்றது. புது வீட்டுக்குக் குடிபோகிறோம்! அப்பாவும், பாட்டியும் இதை அச்சான்யம் என்று சொல்லாமல் விடப் போவதில்லை. தன் அசிரத்தையை, தன் நம்பிக்கையின்மையைக் குத்திக் காட்டாமல் விடப் போவதில்லை.

ஸ்ரீநாத் குனிந்து நான்கு துண்டுகளையும் பொறுக்கிக்கொண்டு லாரிக்குத் திரும்பினான்.

மயிலாப்பூர் வீட்டில் சாமான்களை இறக்கினான். யாரிடமும் ஒன்றும் சொல்லவில்லை. குளித்தான். ராயப்பேட்டையில் அவனுக்குத் தெரிந்த மரச்சாமான் கடை ஒன்று உண்டு. நேரே அவரிடம் போனான். "உயர்ந்த தேக்கு மரத்தில் ஒரு பூஜை மணை வேண்டும்" என்றான்.

காட்டினார்கள். ஒன்று பிடித்தது.

விலை கேட்டான். சொன்னார்கள். அதிகம் என்று பட்டது. ஆனால் பேரம் பேசவில்லை.

"ஒரு ப்ரவுன் பேப்பரில் 'பேக்' செய்து குடுங்க" என்று கேட்டு வாங்கிக் கொண்டான்.

எவர் கண்ணிலும் படாமல் நேரே வீட்டில் பூஜையறைக்குள் நுழைந்து அதை வைத்துவிட்டு வெளியே வந்தான்.

அதை ஏற்றுக் கொள்வார்களா? என்ன நடக்கப் போகிறது? என்னென்ன வார்த்தைகள் கேட்க வேண்டி வரும்? மனசு இந்த எதிர்பார்ப்பில் அவ்வப்போது குடைந்தது.

வீட்டுச் சாமான்களைப் பிரித்து அடுக்கும் அந்த வேளையும் வந்தது. படங்கள், விக்கிரகங்கள் என்று பூஜையறையில் அடுக்கி ஆயிற்று.

"மணை எங்கேடா?" என்று அப்பாகேட்டார்.

அவன் ப்ரவுன் பேப்பர் பார்சலைப் பிரித்தான். "புது மணை போலன்னா இருக்கு?"

"புது வீட்டுக்குப் புதுமணை".

"பழைய மணை எங்கேடா?"

"வருத்தப்படலேன்னா அதைச் சொல்றேன்".

அப்பாவின் நெற்றி சுருங்கியது. பாட்டி என்னமோ மாதிரி பார்த்தாள்.

"வர்றச்சே வழியிலே லாரியிலேர்ந்து எகிறி விழுந்துடுத்து. நான் லாரியை நிறுத்தி எறங்கி ஓடறதுக்குள்ளே.." என்று உடைந்த மணையின் துண்டுகளைக் காட்டினான்.

அப்பா ஒன்றும் பேசவில்லை. பாட்டியைப் பார்த்தான். இதோ அவன் எதிர்பார்த்த வேளை வந்து விட்டது. அவர்கள் மனத்திலிருந்து கணைகள் விடுபடும் வேளை.

"நல்ல காரியம் செஞ்சே! ஒடைஞ்ச மணையை பூஜையிலே வைக்கப்படாது. இந்த மணை ரொம்ப நன்னாருக்கே... என்ன வெலை குடுத்து வாங்கினே?..

ஸ்ரீநாத் எதிர்பார்த்தது இது வல்ல. எனவே அதிர்ந்து போனான்.

"நான் பத்திரமாதான் வச்சிருந்தேன். டர்னிங் திரும்பறச்சே..." என்று, அவன் சமாதானம் எதுவோ சொல்ல ஆரம்பித்தான்.

"பரவாயில்லே. ஆக்ஸிடெண்டலா ஏதாவது ஆயிட்டா என்ன செய்யறது? ஆனா அதை ரீப்ளேஸ் செய்யணும்னு நெனச்சிருக்கியே" என்று தன் வருத்தத்தை மறைத்தார் அப்பா.

"பழைய மணையை எங்க மாமனார்கிட்டே அவங்க அப்பா கொடுத்தார். புது மணையை என் பேரன் நீ, என் மகன்கிட்டே குடுக்கறே. கணக்கு சரியாயிடுத்து" என்றாள் பாட்டி.

அந்த விநாடியிலிருந்து அந்த புதுப் பூஜை மணையை தான் நேசிக்கத் தொடங்கியிருப்பதை உணர்ந்தான் ஸ்ரீநாத்.



துருக்கியில் ஒரு வாரம்

டாக்டர் கிருஷ்ணா ஸ்ரீநிவாஸ்

உலக நாடுகள் அனைத்துக்கும் எல்லாரும் சென்றிருப்பார்கள். ஆனால், மத்திய கிழக்கிலுள்ள துருக்கிக்கு, ஒரு சிலரே போக முடியும். அந்த ஒரு சிலரில் நானும், இந்தியக் கவிஞர்கள் ஒன்பது பேரும் செப்டம்பர் மாத மத்தியில் சென்றோம். 12ஆவது உலகக் கவிஞர்கள் மாநாடு இஸ்டான்புல் நகரில் நடக்கிறது வாருங்கள் என்று அழைப்பு வந்ததும், அன்புடன் ஏற்று அங்கு போகத் தயாரானோம்.

எனக்கும், கவர்னரின் முன்னாள் ஆலோசகர் அ. பத்மநாபனுக்கும், விசேஷ அழைப்பு வந்தது, அந்த நாட்டின் கலாசார மந்திரியிடமிருந்து. எங்களுடன் வர பேராசிரியர் ஸையத் அமிருத்தீன், கவிஞர் எம்.கே. கோபிநாதன், டெல்லியிலிருந்து திருமதி வினீதா கவுல், ஆந்திராவிலிருந்து பாபு ரெட்டி, கொண்டல் ராவ், ஆசாரியா திருமலா, தயாரானார்கள். கவிஞர் வா.மு. சேதுராமன், கவிஞர் சேதுகுமணனுடன், ரோமுக்குச் சென்று விட்டு, மாநாட்டுக்கு வந்தார்.

பிலிப்பைன்ஸ் (1969), சைனா (1973), பால்டிமூர் (1976), கொரியா (1979), ஸான் பிரான்ஸிஸ்கோ (1981), ஸ்பெயின் (1982), மொராக்கோ (1984), க்ரீஸ் (1985), சென்னை (1986), தாய்லாந்து (1988), எகிப்து (1990) முதலிய இடங்களில் நடைபெற்ற மாநாடுகளுக்கும் துருக்கியில் 1991இல் நடந்த காங்கிரசுக்கும் வித்தியாசம் உண்டு. முந்தைய கூட்டங்களில் கவிதைகளும், சில ஆராய்ச்சிக் கட்டுரைகளும் மட்டும் படிக்கப்பட்டன. ஆனால் இந்த ஆண்டில் 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த யூனூஸ் எம்ரே என்ற மகா கவிஞரைப் பற்றிப் பேசினோம், பாடினோம், குதூகலித்தோம். அன்பே மானிடம், அன்பே உலகம், அன்பே ஆண்டவன் - என்ற மூன்று தத்துவங்களை அந்த மகாகவி எல்லாருக்கும் உணர்த்தினான். யு.என்.எஸ்.கோ ஸ்தாபனமும் இந்த ஆண்டை யுனெஸ்கோ ஆண்டு என்று உலகெங்கும் கொண்டாடுகிறது. முப்பது நாடுகளிலிருந்து வந்த முன்னூறு கவிஞர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்றோம்.

இந்தியக் கவிஞர்கள் எல்லாரும் ஜோர்டான் நாட்டின் தலைநகரம் அம்மானில் ஒருநாள் இருந்துவிட்டு, இஸ்டான்புல்லுக்கு செப்டம்பர் பதினைந்தில் அடைந்தோம். எனக்கும் டாக்டர் பத்மநாபனுக்கும் மாநாடு நடக்கும் ஹோட்டலிலேயே இருக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்.

16ஆம் தேதி காலை ஒன்பது மணிக்கு மாநாடு தொடங்கியது. வாத்ய கோஷம் முழங்க, சீனக் கவிஞர் சுங்கும், அமெரிக்கக் கவிஞர் ரோஸ் மேரியும் கவிஞர்களை வரவேற்றார்கள்.

டாக்டர் பத்மநாபன் யூனூஸ் எம்ரேயைப் பற்றி படித்த கவிதை எல்லாரையும் குதூகலப்படுத்தியது.

இஸ்டான்புல் இஸ் பியூடிஃபுல் (Istanbul is Beautiful) என்று நான் உருக்கமாகப் பாடியதும், எல்லாரும் நான் இயற்றிய வரிகளைத் திரும்பத் திரும்பப்பாட ஆரம்பித்துவிட்டார்கள்.

மாலையில், ஸையத் அமீருத்தீன் கவிஞர் எம்ரேயைப் பற்றி பிரமாதமாகப் பேசி, எல்லாரையும் ஆனந்தத்தில் ஆழ்த்திவிட்டார்.

மறுநாள் கவிஞர் வா.மு.சே. தம் கவிதையைத் தமிழிலேயே படித்ததும் அங்கிருந்த எல்லாரும் பரவசமடைந்தார்கள்.



உலகக் கவிஞர்கள்

கவிஞர் கோபிநாதன் தம் அழகான கவிதையை வாசித்து மகிழ்வித்தது மட்டுமல்லாமல், எல்லாக் கவிஞர்களுக்கும் தம் கவிதைப் புத்தகத்தைப் பரிசளித்து, உருதுக் கவிஞர்களுடன் ஒன்றிவிட்டார்.

நான் என் கவிதையைப் படிக்க முன்வந்தபோது, நிகழ்ச்சிகளை நடத்தும் நியூயார்க் யூனிவர்ஸிடி என் கவிதையைப் படிக்க ஒரு நிமிடம்தான் அளித்தார்.

நான் கலங்கவில்லை.

கவிஞர்களை நோக்கிப் பேசினேன். "எனக்கு வயது எண்பது. எழுபது ஆண்டுகளாக கவிதை எழுதி வருகிறேன். உங்களில் பலர் பிறக்குமுன் என் பத்தாவது வயதில் நான் இயற்றிய முதல் கவிதையைப் படிக்கிறேன்,...

தரை தரமாயிருக்கிறது

விளக்குபளிச்சிடுகிறது

எண்ணெய் வழிகிறது

ஆனால் திரியில்

வெளிச்சம், வெளிச்சம் எங்கே?

ஆண்டவனே!

வெளிச்சம் எங்கே?

என்று என்னை மறந்து கதறினேன்.

கவிஞர்கள் எல்லாரும் "ஷாக்" அடித்ததுபோல் அதிர்ச்சியடைந்து உட்கார்ந்துவிட்டார்கள். என் கவிதைக்கு கரகோஷம் பல நிமிடங்கள் நீடித்தது.

விலைவாசிகள் உச்ச கட்டத்தில் இருந்தன. ஒருநாள் ஹோட்டல் வாடகை எத்தனை தெரியுமா? 120 டாலர்கள். அதாவது ரூபாய் மூவாயிரம். வேறு எந்த நாட்டிலும் இத்தனை அதிகம் இல்லை. எல்லாமே அதிக விலை. ஒரு கப் காப்பி நூறு ரூபாய். ஒரு கஜத் துணி விலை ரூபாய் நானூறு. நாங்கள் ஒன்றுமே வாங்க முடியவில்லை.

நாணயம் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் இருந்தாலும், மக்களின் நாணயம் ரொம்ப சிறப்பானது. கவிஞர் கோபிநாத் ஒருநாள் கடைக்குச் சென்று இருநூறு டாலர்களுக்குத் (ரூபாய் ஐயாயிரம்) துணி வாங்கி வந்தார். ஆனால் மறந்துபோய் கடையில் வைத்துவிட்டார். மறுநாள் அந்தக் கடைக்குச் சென்று பார்த்தபோது, வாங்கின துணி அப்படியே கிடந்தது. அத்தனை நேர்மை வியாபாரிகளிடம்.

20ஆம் தேதி மாநாட்டின் இறுதி நாள். நாங்கள் அன்று மாலையே இந்தியா திரும்பவேண்டும்.

டாக்டர் பத்மநாபன் துருக்கி அரசாங்கத்துக்கு, உலகக் கவிஞர்கள் சார்பில் வந்தனம் தெரிவித்தார். காங்கிரஸ் பங்கு ஏற்ற அத்தனை பேருக்கும் நன்றி கூறினார்.

கலாசார மந்திரி வர நேரமாகிவிட்டது. அதனால் என்னைப் பேசச் சொன்னார்கள்.

கிடைத்த தருணத்தை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு, உலக காங்கிரஸ் இயக்கம் எப்படிப் பிறந்தது, எப்படி வளர்ந்தது என்று அவர்கள் முன் அலசினேன்.

ஓர் இயக்கம் பிறக்க ஒரு தனி மனிதனின் முயற்சி மட்டுமல்ல; ஒரு க்ஷண நேரத்தின் அபூர்வ விளைவே ஓர் இயக்கத்தின் ஜனனம். எந்த மறக்கமுடியாத, மகத்தான தருணத்தில் என் நண்பர் அமேடோ யூசான் மணிலாவில் ஆரம்பித்தாரோ, உலகக் கவிஞர்கள் இயக்கம் ஒரு பிரம்மாண்ட விருக்ஷம்போல் ஓங்கி வளர்ந்து, தன் கிளைகளை உலகின் ஆறு கண்டங்களிலும் வேரூன்றிவிட்டது. 1969இல், யூசான் என் உதவியை நாடினார். என் உலகக் கவிஞர்கள் சங்கம் உலகெங்கும் பரவியிருந்ததால், அவர் முயற்சிக்குப் பக்கபலமாக நான் நின்றேன், சைனாவின் சுங்கும், ஆப்பிரிக்காவின் லூலூடூரும் எங்கள் முயற்சிக்கு வலுவூட்டினார்கள்.

1969இல் மணிலாவில் கூடினோம், மிகச் சாதாரண முறையில்.

ஆனால் 1973 எங்கள் இயக்கத்துக்குப் புத்துயிர் ஊட்டிய வருஷம். டைபேயில் நூறு கவிஞர்கள் கூடினோம். சூரிய – சந்திர ஒளியில் பவனி வந்தோம்.

1976இல் அமெரிக்காவின் பால்டிமூரில் வெகு சிறப்பாக மாநாடு நடந்தது.

1979இல் கொரியாவில் நடந்தது. 500 கவிஞர்கள் வந்திருந்தார்கள். கொரியாவைச் சுற்றிக் காண்பித்தார்கள். எங்கும் பசுமை. பிரம்மாண்டமான மலைகள்.

1981 ஸான்பிரான்ஸிஸ்கோ காங்கிரஸ், பொன்னெழுத்தில் பொறிக்கவேண்டிய கூட்டம். டாக்டர் ரோஸ்மேரி, ஒரு பெண்ணால் மாநாட்டை நடத்த முடியும் என்று நிரூபித்துவிட்டார். இந்தியாவிலிருந்து முப்பது கவிஞர்கள் அமெரிக்கா சென்றோம். கவிஞர் கண்ணதாசன் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால் அவர் உயிர் ஆண்டவனிடம் கலந்து விட்டது.

மறு ஆண்டில் ஸ்பெயினில் கூடினோம். ஸ்பெயின் அரசர் சென்னைக்கு வந்தபோது அவரை நானும் நீதிபதி மோகனும் சந்தித்தோம். எங்களை கட்டாயம் வரும்படி அழைத்தார். நாங்கள் சென்றோம்.

அதன்பின் மொராக்கோ க்ரீஸ் நாடுகளில் கூடினோம். செனகல் நாட்டு ஜனாதிபதி செங்கார் தலைமை தாங்கினார்.

1986இல் சென்னையில் நடந்த ஒன்பதாவது காங்கிரஸ் எவராலும் மறக்கமுடியாத ஒன்று. டாக்டர் பத்மநாபனின் துணை பெற்று, மகத்தான வெற்றி பெற்றோம். உலகக் கவிஞர்களை தென்னிந்தியா முழுதும், அழைத்துச் சென்றோம். மகாபலிபுரம், பூம்புகார், சிதம்பரம், தஞ்சைக் கோயில் பார்த்த கவிஞர்கள் தங்கள் அனுபவத்தைப் பற்றி இன்றும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். 1958இல் தாய்லாந்து 1990இல் எகிப்து, 1991இல் துருக்கி.

இப்படி காங்கிரஸ் இயக்கத்தின் சரித்திரத்தை நான் உருக்கமாக விவரித்ததும், கூடியிருந்த அனைவரும் என்னைப் பலமுறை கரகோஷம் செய்து உற்சாகப்படுத்தினார்கள்.

இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும் என்ற அவசரத்தில் நாங்கள் சீக்கிரமாகவே வெளி வந்தோம். விமானத்தில் ஏறி மறுநாள் காலை டெல்லி திரும்பினோம்.

'அடுத்த ஆண்டில் இஸ்ரேலில் கூடஇருக்கிறோம்.

திரை இசைச் சித்திரங்கள்

கருத்து : சேயோன் | சித்திரம் : மாருதி

எண்ணற்ற திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் பற்பல காட்சிகள் காண்போர் உள்ளத்தை ஈர்த்து இசைவித்துள்ளன. திரைஇசைப் பாடல்கள் பலவற்றை மீண்டும் மீண்டும் உச்சரித்துப் பாட வேண்டும் என்னும் ஆர்வம் அதிகரிக்கிறது. அவை வெறும் பாடல்களாக மட்டும் அமைந்துவிடாமல் சிந்தனையை மேம்படுத்தும் கருத்துகளை உள்ளடக்கியும், கற்பனையை மிகுவிக்கும் காட்சிகளைத் தாங்கியும், மொழித்திறனை வளர்க்கும் ஆற்றலை ஏந்தியும் அமைகின்றன. அத்தகைய பாடல்களை நினைத்துப் பாடும் போதெல்லாம் அவை உணர்த்தும் காட்சிகளெல்லாம் வண்ண ஓவியங்களாக ஒளிர் கின்றன; அவையே திரைஇசைச் சித்திரங்கள்!

அவற்றில் சில, இப்போது நம் நினைவுத் திரையிலே காட்சிகளாக விரிகின்றன.

கவிஞர் : கா.மு. ஷெரீப் | படம் : சிவகாமி

கட்டிளங்காளை ஒருவன் கன்னியொருத்தியை எதிர்பாராதவிதமாக மலர்வனத்தில் சந்திக்கிறான்; அவளது அழகிய தோற்றத்தைக் கண்டு வியக்கிறான்; அழகு ஒழுகும் எழில் ஓவியத்தைக் கண்டபொழுதே அவளை நெஞ்சிலிறுத்துகிறான்.

காதலர்கள் பொதுவாகத் தமது காதலுக்குச் சாட்சிகளாக இயற்கைக் காட்சிகளையும், அதன் நிகழ்வுகளையுமே ஒப்பிட்டு மகிழ்வர். அதேபோல் கண்ணுக்கு இனியாளைக் கண்டதுமே அவளை வருணித்துப்பாட முனைகிறான்.

இரவுப் பொழுது. இருட்டை விரட்டும் தண் ணொளியை வீசிக்கொண்டிருக்கிறது வானத்தில் வண்ண நிலா! அந்த நிலவைப் பார்த்து அதன் பேரழகை ரசித்துக் கொண்டிருக்கும்போதே ஆங்கு ஓர் அழகிய நங்கை எதிர்ப்படுகிறாள். பார்ப்பது நிலவா? பெண்ணா? எனச் சந்தேகப்படும் அளவிற்கு விண்ணில் ஒளிரும் சந்திரன் போலவே மண்ணில் உலவும் அவளின் முக அழகும் ஒளிருகிறது. அந்த அழகில் திளைத்து மேலும் பாடுகிறான் தலைவன்.

"கோவைப் பழத்தைக் கொடியில் பார்த்தேன்; எளிய குடிலுக்குப் பக்கத்தில் கொடிபோன்ற நூலிடை யாளைக் கண்டேன்; கோவைப் பழத்தின் சிவந்த நிறத்தைப் போன்று சிவந்த உதடுகளைக் கொண்டு அவள் விளங்குவதையும் கண்டேன்.

சோலையில் தென்னையைப் பார்த்தேன்; தோட்டத் தில் பெண்ணைப் பார்த்தேன்; தென்னம்பாளையைப் போன்ற அவளது சிரிப்பைக் கண்டேன்; அவ்வாறு அவள் கள்ளங்கபடின்றிச் சிரிப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அதோடு முத்துப்போன்ற அவளது பல்வரிசை தென்னம்பாளையைப் போன்றே இருந்தது.

உயர்ந்த மலையில் தேனீக்கள் கட்டியிருக்கும் தேன் கூட்டினைப் பார்த்தேன்; அதில் மலைத்தேன் இருப் பதைக் கண்டு மகிழ்ந்தேன். அந்த மலையடி வாரத்தில் அதே பெண்ணைப் பார்த்தேன். மலைத் தேன் மிகுந்த இனிப்புச் சுவை உடையது. அந்த அழகிய பெண் தன் தோழியருடன் இனிமையாகப் பேசிப் பழகுவதையும் கேட்டு மகிழ்ந்தேன்; அவளின் மொழியும் மலைத்தேன் போல் இனிமையாய் இருந்தது.

இப்படிக் கண்ணெதிரில் கண்ட பெண்ணைத் தேடிக் காடு, மேடு, மலை, சோலை முதலானவற்றில் சுற்றி அலைந்தேன்; அந்தக் களைப்பில் அயர்ந்து தூங்கிவிட்டேன். தூங்கும்போது கண்ட கனவிலும் அந்தப் பெண் கண்ணெதிரில் நிற்பதைப் பார்த்தேன்".

வானில் முழு மதியை கண்டேன்
வனத்திலொரு பெண்ணைக் கண்டேன்
வானமுழு மதியைப் போலே
மங்கை அவள் வதனம் கண்டேன்
கோவைப் பழம் கொடியில் கண்டேன்
குடிசை முன்னே பெண்ணைக் கண்டேன்






கோவைப்பழநிறத்தைப்போலே
குமரி அவள் உதட்டைக் கண்டேன் (வானில்)
சோலையிலே தென்னை கண்டேன்
தோட்டத்திலே பெண்ணைக்கண்டேன்
சோலைத்தென்னம்பாளைபோலே
தோகை அவள் சிரிக்கக் கண்டேன் (வானில்)
மலைமேலே தேனைக்கண்டேன்
மலையடியில் பெண்ணைக் கண்டேன்
மலைத்தேனின் இனிப்பைப்போலே
மாது அவள் பேசக் கண்டேன் (வானில்)
தூக்கம் கண்ணைச் சுற்றக்கண்டேன்
தூங்கும்போது கனவு கண்டேன்
கனவிலேயும் அந்தப் பெண்ணே
கண்ணெதிரே நிற்கக்கண்டேன் (வானில்)

இப்படிப் பார்க்கும் இடமெல்லாம் பாவையின் உருவத்தையே கண்டு ரசிக்கும் இளைஞனைப் பாட வைத்தவர் கவிஞர். கா.மு. ஷெரீப் ஆவார்.

இந்தப் பாடல்வழி, கவிஞர் ஒரு பெண்ணின் முகத்தைச் சந்திரனோடு ஒப்பிடுகிறார். அதுமட்டு மன்று. அதே முகத்தில் உள்ள உதடு, உதடு உதிர்க்கும் புன்னகை, வெளிப்படுத்தும் முத்துப்பற்கள், அந்தப் பற்கள் உச்சரிக்கும் சொற்கள் இவற்றை முறையே கோவைப் பழம், தென்னம்பாளை, மலைத் தேன் முதலானவற்றோடு ஒப்பிடுகிறார். அதோடு அந்த இளைஞன் நோக்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நங்கையின் பேரழகை வருணிக்கும் கவிஞரின் திறம் பெரிதும் போற்றத்தக்கதாகும். அவன் விழித்திருந்தபோது மட்டுமன்றித் தூங்கும் போதும் அந்தப் பெண் தென்படுகிறாளாம். எப்படி? கனவில்! ஆம்! கனவிலும் நனவிலும் காரிகையை நினைத்துப் பாடுகிறான் கட்டிளங்காளை! அவனைப் பாடவைத்தவர் கவிஞர். கா.மு. ஷெரீப். அவனை மட்டுமா? கேட்கும் ஒவ்வொரு வரையும் அல்லவா?

திரைப்படப் பாடல்களில் சிறந்த கற்பனையைக் கண்டு இரசிக்கலாம்; உயர்ந்த கருத்துகளை நினைத்து நினைத்து மகிழலாம்; அழகிய சொல்லாட்சியைப் பன்முறை கேட்டுச் சுவைக்கலாம்; தேர்ந்த உவமைகளை ஒப்பிட்டுணர்ந்து போற்றலாம்; ஆய்ந்து அமைக்கும் உருவகங்களை ஆழ்ந்து படித்துப் பாராட்டலாம்.

கவிஞர் : சுரதா — படம் : நாணல்

திரைப்படப் பாடல்களில் உவமைகளையும் உருவகங்களையும் கையாள்வதில் தனக்கெனத் தனியொரு முத்திரையைப் பதித்தவர் உவமைக் கவிஞர் சுரதா.

விண்ணில் மேகக்கூட்டங்களைப் பார்க்கலாம்; வீணையின்மீது நரம்புகளைக் காணலாம்; கண்ணுக்கு மேல் இமைகளைக் காணலாம்; இந்தக் காட்சி சாதாரணமாக எல்லாருடைய கண்ணுக்கும் தோன்றுவது. இதே காட்சியைக் கவிஞன் காணுகிறான். அவன் கண்ணுக்கு மேகம் வானத்தின் மேலாடையாகத் தென்படுகிறது; நரம்புகளின் கூட்டம். வீணையின் மேலாடையாக விளங்குகிறது; இமைகள் கண்களின் மேலாடையாகக் காட்சியளிக்கின்றன!

கவிஞன் மேலும் சிந்திக்கிறான்; தனது கற்பனைச் சிறகெடுத்துப் பறக்கிறான்; பல அற்புத வினாக்களை எழுப்பி அவற்றிற்கு விடைகளையும் அளிக்கிறான்.

விண்ணுக்கு மேலாடை
பருவமழை மேகம்
வீணைக்கு மேலாடை
நரம்புகளின் கூட்டம்
கண்ணுக்கு மேலாடை
காக்கும் இரு இமைகள்
கனவுக்கு மேலாடை
தொடர்ந்து வரும் தூக்கம் (விண்)
மண்ணுக்கு மேலாடை?
மரத்தின் நிழலாகும்
அய்ய! மண்ணுக்கு மேலாடை
வண்ண மயில் இருட்டு
மனதிற்கு மேலாடை
வளர்ந்து வரும் நினைவு
பத்துக்கு மேலாடை
பதினொன்றே ஆகும்
பக்கத்தில் நீ இருந்தால் பல கதை உருவாகும் (விண்)

இந்தப் பாடலைக் காதலர் இருவர் பாடுகின்றனர். ஒருவர் வினா எழுப்ப மற்றவர் விடையளிக்கிறார். எல்லா விடைகளையும் உடனடியாகக் கூறிவிட முடியுமா? தங்கு தடைகள் இருக்கத்தானே செய்யும். அதனைப் பாடல்வழிக் கொணரும் கவிஞரின் கவித்துவம் பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

'மனதிற்கு மேலாடை
வளர்ந்து வரும் நினைவு'

என்ற கவிஞரின் 'கருத்து பன்முறை படித்துச் சிந்திக்கத்தக்கது.

காலத்தின் அடையாளம் பருவங்களே ஆகும் என்ற கவிஞரின் கருத்து காலத்துக்கு மட்டுமன்று; ஆண், பெண்களின் வயதையும் அந்தந்தப் பருவங்கள் சுட்டிக் காட்டும் என்பதை உய்த்துணர வைக்கிறார். அதே பாடலில் இன்னொன்றும் சொல்கிறார் கவிஞர். காதலர்களின் சந்திப்பே கண்களில் தொடங்குகின்றனவாம். அந்தக் கண்கள் தேர்தல் நடத்துகின்றனவாம். அதன் வெற்றிதான் இருவரின் சேர்க்கை என்பதை இலைமறை காயாக எடுத்துரைக்கிறார்.

"காலத்தின் அடையாளம்
பருவங்களே ஆகும்
காதலர்கள் நடத்துவது
கண் தேர்தல் ஆகும்
இதுவரையில் புதுஉலகம் நாம் கண்டதும் இல்லை
எதுவரையில் சென்றாலும் எல்லை இதற்கில்லை (விண்)

இந்த அருமையான பாடலைக் கற்பனைச் சிறப் போடும், கவின்மிகு வனப்போடும் பொற்புறப் பாடியவர் உவமைக் கவிஞர் சுரதா அவர்களே!

இந்தப் பாடலைக் கேட்கும்போது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின்,

அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி பச்சைப்பட்டே

என்ற பாடலே நினைவுக்கு வருகிறது. இந்தப் பாடலில் படைப்புக் கற்பனை உத்தியை (Creative imagination technique) கவிஞர் சுரதா கையாண் டுள்ளார். சாதாரண இயற்கை நிகழ்வுகளையே சரித்திரமாக மாற்றும் வல்லமை பெற்றவர்கள் கவிஞர்கள் என்பதற்கு இந்தப்பாடல் தக்க சான்று பகரும்!

கவிஞர் : கு.மா. பாலசுப்பிரமணியம் **படம் : அம்பிகாபதி**

தமிழுக்குத் தொண்டு செய்து பல இலக்கியங்களை இயற்றும் வல்லமை மிக்க புலவன், நாட்டு மன்னன் மகளைக் காதலிக்கிறான். காதலுக்கு ஏது ஜாதி, அந்தஸ்து, வர்க்க பேதம்? இருப்பினும் இவை யனைத்தும் அவர்கள் காதலுக்கு இடையூறாகவே இருக்கின்றன. ஆனாலும் மனமொத்த உள்ளங்கள் அடிக்கடி மாஞ்சோலையிலும், பூந்தோட்டத்திலும் சந்தித்து உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டன. உதடுகள் உள்ளத்துணர்ச்சிகளைப் பாடல்களாக உதிர்க்கின்றன.

குற்றமில்லாத அழகு எழில் கொஞ்சும் நிலவாகக் காதலியை உருவகித்துப் பாடுகிறான் காதலன். அதற்குக் காதலியும் மறுமொழியாகப் பாடுகிறாள்.

"நம்மிருவரின் காதலை இந்தப் பெரிய உலகத்தின் அனைத்துச் செயல்களும் கொண்டாடி மகிழ் கின்றன; 'சொல்லுவதற்குக் கடினமான அன்பின் ஆழங்கண்டு வேற்றுமை வித்தியாசங்கள் எல்லாம் பறந்தோடுகின்றன' என்கிறாள் தலைவி. இருவரும் சந்தித்து, மகிழ்ந்து பாடுவது இரவுப் பொழுதல்லவா? ஆகையினாலே 'வானில் பலகோடி நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டே தீபஒளி ஏற்றி நம் காதலின் தூய்மையும் அவ்வாறே துலங்கவேண்டும் என வலியுறுத்துகிறது' என்கிறான் தலைவன்.

'மாஞ்சோலையில் உள்ள மாமரங்களின் மாந் தளிர்கள் காற்றில் அசைந்தாடுகின்றன. அவற்றின் அசைவு நம்மை மௌனமாக வாழ்த்துவது போலுள்ளன' – தலைவி.

"வேகமாக ஓடிச் செல்லும் நதியில் நிலவின் ஒளி துள்ளி விளையாடுகிறது" – தலைவன்.

"தேன் நிறைந்த மலரும் தென்றலும் உறவாடி மகிழ்கின்றன" – தலைவி.

"உனது மீன் போன்ற விழிகளைக் காணும் மீன்கள் ஆனந்தத்தில் துள்ளித் துள்ளி ஆடுகின்றன" – தலைவன்.

"உமது ஒளிமிக்க அழகிய முகத்தை, தண்ணொளி வீசும் வெண்ணிலவு எனக்கருதி அல்லிப் பூவும் மலருகிறதே" – தலைவி.

இவ்வாறு காதலில் திளைத்து, கற்பனையில் மிதந்து, கவிதைவழித் தம் உள்ளத்துணர்வுகளை எல்லாம் இயற்கை நிகழ்ச்சிகளோடு இணைத்துக் காட்டிய காதலர்கள் நிறைவில் அன்பின் சங்கமத்தை விளக்கிக் கூறுகின்றனர்.

"புல்லாங்குழலின் இனிய பாட்டு தென்றல் காற்றோடு கலந்த பின்னால் கானம் வேறு, காற்று வேறாய்க் கேட்குமா? நீரோடு நீர் சேர்ந்த பின்னர் பிரிக்க இயலுமா? அன்போடு அன்பு கலந்த பின்னர் அதனைத் தடுக்க எந்தச் சக்தியாலும் முடியாது. நாம் இருவரும் காற்றோடு கலந்த கானம்தான்! நீரோடு சேர்ந்த நீர்தான்!" எனப் பாடிக் கூடி மகிழ்கின்றனர்.

இத்தகைய அற்புதக் காதல் காட்சியை, இயற்கைச் சாட்சிகளோடு நிறுவுகிறார் கவிஞர் கு.மா. பாலசுப்பிரமணியம் அவர்கள்.

மாசிலா நிலவே நம் காதலை மகிழ்வோடு
மாநிலம் கொண்டாடுதே! – கண்ணே!
மாநிலம் கொண்டாடுதே!
பேசவும் அரிதான பிரேமையின் திறம்கண்டு
பேதங்கள் பறந்தோடுதே! – கண்ணா
பேதங்கள் பறந்தோடுதே! (மாசிலா)

சீருடன் வான்மீதில் தாரகை பலகோடி
தீபமாய் ஒளிவீசுதே! – கண்ணே!
தீபமாய் ஒளிவீசுதே!

மாருதம் தனிலாடும் மாந்தளிர் கரம்நீட்டி
மௌனமாய் நமை வாழ்த்துதே! – கண்ணா
மௌனமாய் நமை வாழ்த்துதே!

அன்பே இன்பம் எங்கே – இங்கே
மாறாத பேரின்ப – நீராடுவோம்!
நீரோடு நீர்போலே நாம கூடுவோம் (அன்பே)

நீந்தும் அலையின் மீது நிலவின்
தன்னொளி விளையாடுதே!
தேன்துளிகளை ஏந்தும் மலரும்
தென்றலும் உறவாடுதே!
உந்தன் மீன் விழிகளைக் காணும் நதியின்
மீன்களும் துள்ளி ஆடுதே!
ஆண்யெழில் முகம் வான்மதியென
அல்லியும் உமை நாடுதே! (அன்பே)
வானம் எங்கே பூமி எங்கே வாழ்வுதான் எங்கே
காணும் யாவும் காதலன்றி வேறெங்கே?
வேணுகானம் தென்றலோடு சேர்ந்த பின்னாலே
கானம் வேறு காற்றுவேறாய் கேட்பதே இல்லை!
இனி நானும் வேறில்லை
இனி நானும் வேறில்லை.

கவிஞர் : வாலி   திரைப்படம் : பூவா தலையா?

காதலன் காதலியைப் பார்த்து, "காதலியே! உனது கண்கள் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனின் மீன் கொடியை நினைவூட்டுகின்றன; உனது கண்களைக் காக்கும் புருவமோ போரில் பல புதுமைகளைச் செய்த சேரமன்னனின் வில்லினை உணர்த்துகின்றது; உனது பெண்மையின் வேகத்தைச் சோழமன்னனின் புலிக் கொடி காட்டுகிறது. சேர, சோழ, பாண்டிய மன்னர் களின் மூன்று கொடிகளையும் நினைவூட்டும் உருவம் கொண்ட உன்னைத் தமிழகம் என்றே துணிந்து சொல்லுவேன்.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவ நாட்டை ஆண்ட ராஜசிம்ம பல்லவன் கல்லிலே கலை வண்ணம் கண்டவன். அவன் அமைத்த கைலாசநாதர் திருக்கோயிலில் உள்ள சிலையைப் போன்றே உனது பொன்மேனி விளங்குகிறது; கும்பகோணத்தில் பாய்ந் தோடும் காவிரியாற்றின் அலைகள்தாம் உனது தலை முடியின் தோற்றமாகப் பொலிகிறது; சேலத்து மாம்பழச் சுவையை ஒத்திருக்கிறது உனது இதழ் களின் முத்திரை! தூத்துக்குடியில் கிடைக்கும் முத்துக்குவியலைப் போன்று உனது புன்னகை அமைகிறது; பொதிகை மலையில் புறப்பட்டு இனிய காற்றை வழங்கும் தென்றல்தான் உனது நடையழ காக உள்ளது; புரட்சிக் கவிஞன் பாரதிதாசனின் குயிலோசை உனது இனிய பேச்சாக இருக்கிறது; கோயம்புத்தூரில் மிகுந்து விளையும் பருத்தியினால் பெறப்படும் நூல் போன்று உனது இடை உள்ளது; கன்னியாகுமரியின் வங்கக் கடலில் தோன்றும் காலைக் கதிரவனின் அழகிய தோற்றம் போல் உனது வடிவழகு உள்ளது; இவையனைத்தும் ஒருசேரப் பெற்ற உன்னைத் தமிழகம் என்றே சொல்லுவேன்" - இது கவிஞர் வாலியின் பாடல்.

மதுரையில் பறந்த மீன்கொடியை உன்
  கண்களில் கண்டேனே!

போரில் புதுமைகள் புரிந்த சேரன் வில்லை
  புருவத்தில்கண்டேனே!

தஞ்சையில் பறந்த புலிக்கொடியை உன்
  பெண்மையில்கண்டேனே!

இவை மூன்றும் சேர்ந்து தோன்றும் உன்னை
  தமிழகம் என்றேனே!

காஞ்சித் தலைவன் கோயில் சிலைதான்
  கண்மணியே! உன் பொன்னுடலோ?

குடந்தையில் பாயும் காவிரி அலைதான்
  காதலியே! உன் பூங்குழலோ?

சேலத்தில் விளையும் மாங்கனிச் சுவைதான்
  சேயிழையே! உன் செவ்விதழோ?

தூத்துக்குடியின் முத்துக்குவியல்
  திருமகளே! உன் புன்னகையோ?

பொதிகை மலையில் புறப்படும் தென்றல்
  இனியவளே! உன் நடையழகோ?

புதுவை நகரில் புரட்சிக் கவியின்
  குயிலோசை உன் வாய்மொழியோ?

கோவையில் விளையும் பருத்தியில் வளரும்
  நூலிடைதான் உன் இடையழகோ?

குமரியில் காணும் கதிரவன் உதயம்
  குலமகளே! உன் வடிவழகோ?

இவை சேர்ந்து தோன்றும் உன்னைத்
  தமிழகம் என்பேனே!

இந்தப் பாடலின் சுவையும், கவிஞரின் உவமை களும் அழியாச் சித்திரமாகத் திகழ்கின்றன.

கவிஞர் : புலமைப்பித்தன்   திரைப்படம் : தங்கமகன்

தாமரை மலர் காலையில் மலரும். இது இயற்கை யின் நிகழ்வு. இரவில் பூத்திருக்கும் தாமரை உண்டு எனில் அது பெண்ணாகத்தானே இருக்க முடியும்? அதுவும் காதலனின் வருகைக்காகக் காத்திருக்கி றாள் காதலி. அவளது விழிகள் அங்குமிங்கும் அலைந்தோடுகின்றன. காதலன் வரும் திசைநோக்கி வலம் வருகின்றன. அவள் அணிந்திருக்கும் சேலை சோலையாகக் காட்சியளிக்கிறது. காதலர்கள் கூடி மகிழும் இனிய அனுபவத்தைப் பெற உதவும் காலம் மாலைப் பொழுதே. பகலும் உறங்கிவிடும். இரவுப் பொழுதில் உறங்காது விழித்திருப்பவள்தான் அவள்.

காதலன் வருகிறான்; காதலியின் ஏக்கத்தைப் போக்கும் வகையில் அவளோடு உரையாடுகிறான்; இருவரும் இரண்டறக் கலந்து மகிழத் துடிக்கின்றனர்; கைவிரலில் வேகமும், கண்ணசைவில் பாவமும் மேலிடுகிறது; வானுலகே மண்ணுலகில் வந்த மகிழ்ச்சியை அடைய முற்படுகின்றது; அதற்குத் தடை யாக இருப்பதே திருமணம். அது நிறைவு பெறும் வரை பொறுமையாக இருக்கும்படிக் காதலனை வேண்டுகிறாள் காதலி. கதிரவன் வரவை வேண்டிக் காலையில் காத்திருப்பது தாமரை மலர்! காதலனின் வருகைக்காக இரவிலே காத்திருக்கிறாள் காதலி. அதுமட்டுமன்று, அவள் காத்திருக்க வேண்டியகாலம் நாதஸ்வர இசை முழங்கும் மங்கல மணநாள் வரை என்பதைக் கவிஞர் புலமைப்பித்தன் கற்பனைச் சிறப்போடும் கவின்மிகு வனப்போடும் பாடியிருப்பது பெரிதும் பாராட்டிற்குரியதாகும்.

ராத்திரியில் பூத்திருக்கும் தாமரைதான் பெண்ணோ
ராஜசுகம் தேடிவரத் தூதுவிடும் கண்ணோ

சேலை சோலையே பருவசுகம் தேடும் மாலையோ

பகலும் உறங்கிடும்   (ராத்திரி)

வீணை எனும் மேனியிலே தந்தியினை மீட்டும்
கைவிரலில் ஒருவேகம் கண்ணசைவில் ஒரு பாவம்
வானுலகே பூமியிலே வந்ததுபோல் காட்டும்
ஜீவநதி நெஞ்சினிலே ஆடும் மோதும் ஓடும் புதிய அனுபவம் (ராத்திரி)
மாங்கனிகள் தொட்டிலிலே தூங்குதடி அங்கே
மன்னவனின் பசியாற மாலையிலே பரிமாற
வாழைஇலை நீர்தெளித்து போடடி என்கண்ணே!
நாதசுரம் ஊதும் வரை நெஞ்சம் இன்னும் கொஞ்சம் பொறுமை அவசியம் (ராத்திரி)

பெண்ணை வருணிப்பதற்காகத் தாமரை மலரையும், வீணை இசைக் கருவியையும், பருவமடைந்த மங்கையின் எண்ண அலைகளை எடுத்துச் சொல்வதற்கு அவளது விழிகளையே தூதாகப் பயன்படுத்தும் உத்தியையும் கையாண்ட கவிஞர் புலமைப்பித்தனின் கவித்திறம் பெரிதும் போற்றத்தக்கதாகும்.

கவிஞர் : முத்துலிங்கம் திரைப்படம் : 'கிழக்கே போகும் ரயில்'

தலைவன் – தலைவி இருவரும் சந்தித்து மகிழ்கின்றனர்; தலைவன் தலைவியைப் பலவகையில் வருணித்துப் பாடுகிறான். கிராமப்புறங்களில் உள்ள காடு, கரை, சோலை, நீரோடை முதலான சூழல்களுக்கிடையில் வாழும் தலைவன் தலைவியைப் பார்த்து, "நீ மாஞ்சோலைக் கிளியோ? மானோ? வேப்பந்தோப்புக் குயிலோ? ஆவாரம் பூவோ?" என வினவுகிறான். அதோடு அவளது ஆடி அசைந்து நடக்கும் தோரணையைப் பார்த்து, "உன்நடை தேர் போன்றதோ? காலில் அணிந்திருக்கும் சலங்கைகள் ஒலிக்கும் இசை தேனினும் இனியதோ?" என்றும் கேட்கிறான்.

'மாஞ்சோலைக் கிளிதானோ மான்தானோ
வேப்பந்தோப்புக் குயிலும் நீதானோ – இவள்
ஆவாரம்பூதானோ நடை தேர்தானோ
சலங்கைகள் தரும் இசை தேன்தானோ? (மாஞ்சோலை)

இந்தப் பாடலைப் பாடும்போது,
'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும் என்நெஞ்சு'
என்ற திருவள்ளுவரின் குறட்பா உடனே நினைவுக்கு வருகிறது. வள்ளுவர் காட்டும் தலைவன் தலைவியைப் பார்த்து, 'தெய்வப் பெண்ணோ, மயிலோ, மானிடப் பெண்ணோ' என மயங்குகிறான். இதே உத்தியைக் கவிஞர் முத்துலிங்கம் அவர்கள் இந்தப் பாடலில் கையாண்டிருப்பது அவரது கற்றறிந்த புலமைக்கு நற்சான்று!

நீரோடை போலவே சிரித்தாடி ஓடினாள்
வளையோசையே காதிலே சிந்து பாடுதே
பளிங்குச் சிலையே பவளக் கொடியே
குலுங்கிவரும் இடையில் புரளும்
சடையில் மயங்கும் மலர்க்கொடி (மாஞ்சோலை)
மின்னல் ஒளியெனக் கண்ணைப் பறித்திடும்
அழகோ தேவதையோ
அங்கும் ஒரு தங்குக்குடம் – அழகினில்
மங்கை ஒரு கங்கைநதி – உலகினில்
துள்ளும் இசை தேன்தான்
அள்ளும் கரம் நான்தான்
மஞ்சம் அதில் வஞ்சிக்கொடி வருவாள்
சுகமே தருவாள் மகிழ்வேன் கண்காவியம்
பண்பாடிடும் பெண்ணோவியம் தாமரையே!" (மாஞ்சோலை)

மேலாடை மாங்கனி அசைந்தாடும் வேளையில்
பலகோடிகள் ஆசையே வந்து மோதுதே
கரும்பு வயலே குறும்பு மொழியே
இளமை எனும் தனிமை நெருப்பை அணைக்கும்
பருவமழை முகில் (மாஞ்சோலை)

தன் மனங்கவர்ந்த மங்கையை மாஞ்சோலைக் கிளியென்றும் மானென்றும் மட்டுமல்லாமல் கரும்பு வயல் என்றும் பருவ மழைமுகில் என்றும் புத்தம் புதிய உவமைகளுடன் கவிஞர் முத்துலிங்கம் வருணிக்கும் அழகே அழகு!

கவிஞர் : நா. காமராசன் படம் : பல்லாண்டு வாழ்க!

தலைவன் வணிகத்தின் பொருட்டுக் கடல்கடந்து சென்று விடுகிறான். திரும்பி வந்ததும் மணம்புரிந்து கொள்வதாக வாக்குக் கொடுத்துள்ளான். அவளோ தனிமைத்துயர் தாளாமல் நதியிடம் வேண்டுகிறாள். எதற்கு? அவள் பூச்சூடி மணக்கோலம் பூணுவதற்கான நாள் என்ன என்பதைப் பார்த்து வருவதற்காக. பூமியில் பலர் தண்ணீரின்றித் தவிக்கிறார்கள். அவர் தம் துயர் துடைக்கும் வகையில் தண்ணீரைக் கொண்டு வாருங்கள்.

தோட்டத்தில் பழங்கள் மிகுதியாகப் பழுத்திருக்கும்; புன்னகை தவழும் முகத்தோடு பனிவாடைக் காலத்தில் உங்களைக் காணவேண்டும். நிலவு என்னும் ஓடம் வானமாகிய கரையைச் சேரும் இரவுப் பொழுதில் இருவரும் இணைந்து உறவாட வேண்டும்; ஈருடலும் இணைந்து ஒருயிராய் ஆகும் இன்பம் கோடி பெறும்.

அலை நுரைத் திவலைகளாகிய பூக்களை அள்ளிச் சிந்தவேண்டும்; வசந்தத்தை வெற்றிகண்டு, மழையாகிய வில்லில் ஏழு நிறங்களை வரையும் திறம்மிக்கது வானம். அதாவது வானவில் தோன்றும். அத்தகைய வசந்தகாலத்தில் எங்கள் இருவருக்கும் மணமேடை அமைத்துப், புதுமாலை சூட்டி குலமங்கை நலமாக வாழ வாழ்த்தியருள வேண்டும். அதற்காகவேனும் சீக்கிரம் போய் பூச்சூடும் நாளைப்

பார்த்துவா! இது தலைவியின் வேண்டுகோள். அதைக் கேட்க வைப்பவர் கவிஞர் நா. காமராசன் அவர்கள்.

இந்தப் பாடலில் கவிஞர் 'மழை வில்லில் வண்ணம் வரைகின்ற வானம்' - எனப் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கது. வானவில் தோன்றியது என்று சொல்வ தற்குப் பதில் மழையாகிய வில்லில் வண்ணங்களை வரைகிறதாம். அது வானவில்லாகப் பரிணமித்து ஒளிவீசுகிறதாம். இது கவிஞரின் கற்பனைக்கொரு முத்தாய்ப்பு. இன்னொன்று பூச்சூடுவதற்கு நாள் பார்த்து வரச்சொன்ன நதி அலையிடமே மணப் பந்தலையும் மாலையையும் கொண்டுவந்து வாழ்த்தச் செய்திருப்பது காலச் சுழற்சியின் வேகத்தைக் குறிக்கிறது.

போய்வா நதியலையே இவள் பூச்சூடும் நாள் பார்த்து வா
வாவா நதியலையே ஏழை பூமிக்கு நீர் கொண்டுவா
(போய்வா)

கனிதூங்கும் தோட்டம் முகம் பூத்த கோலம்
பனிவாடைக் காலம் உனைக் காண வேண்டும்.
நிலவென்னும் ஓடம் கரைசேரும் நேரம்
மழைக் கூந்தல் ஓரம் இளைப்பாற வேண்டும்
இதுபோதும் என்று தடுமாறி
இடம் மாறி மாறி சுகம்தேடி
உறவாடும் போது சரிபாதி ஆகி
உயிர்காணும் இன்பம் பலகோடி (போய்வா)
நுரைபூவை அள்ளி அலை சிந்தவேண்டும்
அலைமீது கொஞ்சம் தலைசாய வேண்டும்
வசந்தத்தை வென்று வரும் உன்னைக் கண்டு
மழைவில்லில் வண்ணம் வரைகின்ற வானம்
மெதுவாக வந்து இதழ்மூடி
பதமாக அன்பு நதியோடி
மணமேடை கண்டு புதுமாலை சூடி
குலமங்கை வாழ்க நலம்பாடி (போய்வா)


கவிஞர் : வைரமுத்து — படம் : மனிதன்

மனிதப் பண்புகளே இல்லாத சிலரின் சூழ்ச்சி யில் சிக்கிக் குற்றவாளியாகப் பழிசுமத்தப்பட்டுச் சிறை வாசம் அனுபவித்து வந்த ஒருவன் விடுதலை யாகி வெளிஉலகுக்கு மீண்டும் வருகிறான். வந்த பின்னரும் அவன் பார்ப்பது என்னவோ அதே பண்பற்ற மனிதர்களைத்தான்; எதற்கும் ஏமாற்றும் அதே எத்தர்களைத்தான்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பொய்யர்களைத்தான். அவன் மனம் குமுறுகிறது; உணர்ச்சிகளை வார்த்தை களாகக் கொட்டுகிறான். "வானத்தைப் பார்த்தேன். அதில் எவ்வித மாற்றமும் இல்லை. பூமியைப் பார்த்தேன். அதிலும் அதிக வேறுபாடு இல்லை. ஆனால் மனித நேயம் மிக்க மனிதர்களைப் பார்க்க முடியவில்லையே? சிறையில் பல நாள்கள் அடை பட்டுக் கிடந்தேன். வேளா வேளைக்குச் சாப்பாடா கிலும் கிடைத்தது; நிம்மதியாக இருந்தேன். ஆனால் வெளியில் வந்தபின் வயிற்றுக்குச் சோறு கிடைப் பதே அரிதாக உள்ளது. சிறையினுள் உள்ளவர்கள் மட்டும்தான் குற்றவாளிகள் என்று நினைத்து விடாதீர்கள். அவர்களில் பலர் சந்தர்ப்பச் சூழல் களால் குற்றவாளிகளாக ஆக்கப்பட்டவர்கள். அத னால் அவர்கள் அத்தனை பேரும் குற்றவாளி களல்லர்; அதேபோல் வெளியில் உள்ள அத்தனை பேரும் புத்தர், காந்திபோல் சத்தியம் பேசும் உத்தமர்கள் அல்லர். கடவுள் மனிதனைப் படைத் தானா? அல்லது மனிதன் கடவுளைப் படைத்தானா? இரண்டு பேரும் இல்லை. இதனை அனுபவத்தில் உணர்ந்துதான் சொல்கிறேன். நான் சொல்வது முழு வதும் உண்மை. இதை முழுமையாக நம்பினால் நன்மை.

"அம்மா என்னைப் பெற்றெடுப்பதற்கு முன் அவளது கருவறையில் சில நாள்கள் இருந்தேன். பத்து மாதங்களாகையால் சில நாள்கள்தான். ஆனால் அதற்கும் மேலாகப் பல நாள்கள் அதாவது பல ஆண்டுகள் சிறை அறையில் இருந்தேன். ஒருவேளை அமாவாசை அன்று எனது தாய் என்னைப் பெற்றாளோ? அதனால்தான் வெளிஉலகமே தெரியாமல் பல ஆண்டுகள் சிறைவாசத்தின் இருட்டறையில் இருந்தேனோ? இதுவரை பட்ட துன்பங்கள் எல்லாம் நல்லதொரு பாடம்தான். இதிலிருந்து வாழ்க்கை என்பது வசந்தம் தவழும் பூந்தோட்டம் என்று என்னால் சொல்ல முடியாது; மாறாக, தடைகளைச் சந்தித்து வெற்றி காண விழையும் போராட்டமே வாழ்க்கை எனத் தெளிவோடு கூறமுடியும்".

இப்படிச் சிறை மீண்ட ஒருவனைப் பேசவைப் பவர் கவிஞர் வைரமுத்து அவர்கள்.

"வானத்தைப் பார்த்தேன் பூமியைப் பார்த்தேன்
மனுசனை இன்னும் பார்க்கலையே
அட பல நாள் இருந்தேன் உள்ளே அந்த
நிம்மதி இங்கில்ல
உள்ளபோன அத்தனை பேரும் குற்றவாளி இல்லீங்க
வெளியே உள்ள அத்தனை பேரும் புத்தன் காந்தி இல்லீங்க
(வானத்தை)
குரங்கிலிருந்து பிறந்தானா? குரங்கை மனிதன் பெற்றானா?
யாரைக் கேள்வி கேட்பது டார்வின் இல்லையே!
கடவுள் மனிதனைப் படைத்தானா?
கடவுளை மனிதன் படைத்தானா?
ரெண்டு பேரும் இல்லையே ரொம்பத் தொல்லையே!
அட நான் சொல்வது உண்மை இதை நீ நம்பினால் நன்மை
(வானத்தை)
சிலநாள் இருந்தேன் கருவறையில்
பலநாள் கிடந்தேன் சிறையறையில்



அம்மா எனை ஈன்றது அமாவாசையா?

அதனால் பிறந்தது தொல்லையடா

ஆனால் என்மனம் வெள்ளையடா

பட்டபாடுயாவுமேபாடந்தானடா

ஒரு பூந்தோட்டமா வாழ்க்கை இல்லை

போராட்டமே வாழ்க்கை (வானத்தை)

இந்தப் பாடல் மூலம் கவிஞர் வைரமுத்து அவர்கள நாட்டில நில்வும் சமூகப் பிரச்னைகளை எதார்த்தமாகச் சொல்லி உள்ளார். கருவறையில் சிலநாள், சிறையறையில் பலநாள் என்ற ஒப்புமை மிகுந்த பாராட்டுக்குரியது.

திரைஇசைப் பாடல்களில் ஒருமுறை கேட்டு ஒதுக்கத் தகுந்தவை உள்ளன; பலமுறை கேட்டுச் சுவைக்கத் தக்கவையும் உள்ளன; எப்போதும் கேட்டு, இன்புற்று மீண்டும் மீண்டும் பாடி மகிழும் பாடல்கள் சிலவும் உள்ளன. அவற்றைப் பாடல்கள் என்று சொல்வதைவிட சிறந்த கற்பனை ஓவியங்கள், சிந்தனைக் களஞ்சியங்கள், இசைப் பெட்டகங்கள், காவியக கருவூலங்கள் எனப் பலபடப் பாராட்டலாம். நமது திரைப்படப் பாடல்களில் இவைபோன்று இன்னும் எத்தனையோ உள்ளன.

திரைஇசைப் பாடல்களைக் கற்பனைச் சிறப் போடும், கவின்மிகு வனப்போடும் பொற்புறப் படைப்பதில் வல்லவர்கள் கவியரசர் கண்ணதாசன், உடுமலை நாராயணகவி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், மருதகாசி, தஞ்சை இராமையாதாஸ் முதலானோர். இவர்களை என்றும் மறக்க இயலாது.

எண்ணிறந்த பாடல்கள் இயற்றப்பட்டு இசைக்கப் பட்டாலும் அவற்றில் ஒருசிலவே அழியா ஓவியங் களாக, உன்னதக் காவியங்களாக எல்லாராலும் ஏற்கப்படுகின்றன. அவற்றில் சில இங்கே வண்ண ஓவியங்களாக வடித்துக் காட்டப்பட்டன.


1
2


3
4


5
6


8
7

தீபாவளித்தந்திரம்

இந்திரா சௌந்திரராஜன்

தீபாவளி வரப்போகிறது. இராம ரத்னத்தின் வீட்டில் உள்ள குழந்தை களுக்குக் குதூகலம் கொடி கட்டத் தொடங்கியிருந்தது. காலையில் எழுந் ததும் 'பாடம் படிச்சியா?' – என்று அண்ணன் ராகவன் கேட்க மாட்டான். அட்டவணை போட்டபடி நடக்கும். எட்டுமணிக்கு டிபனை – அதுவும் அந்த மெல்ல முடியாத ரவை உப்புமாவைச் – சிரமப்பட்டுச் சாப்பிட வேண்டாம்!

'டி.வி. ஆன் பண்ணாதே' என்று யாரும் கத்த மாட்டார்கள்.

விருப்பம் போல் சாப்பிட்டு... குதித்துக் கும்மாளமிட்டு... அக்கம் பக் கத்து வீடுகளெல்லாம் எந்தக் கட்டுப் பாடின்றிக் காற்றைப்போல் போய் போய் வந்து...

– நினைக்கும்போதே ஐந்தாம் வகுப்பு படிக்கும் லட்சுமிக்கு ஜில்லென்று இருந் தது! வாண்டு சேகரோ அதை நினைத்து ஒரு குட்டிக்கரணமே அடித்துவிட்டான்.

"அப்பா! எனக்கு இந்தத் தடவை பேண்ட் தைச்சுத் தரணும். ப்ளு கலர்ல டி. சர்ட் வாங்கித் தரணும்" என்கிறான்.

ப்ளஸ் டூவை எட்டிவிட்ட கனகா பட்டுப்பாவாடைக்கு அடிபோடுகிறாள்.

இராமரத்னத்தின் சகதர்மிணியும் மெல்ல இராமரத்னத்தின் காதைக் கடிக்கிறாள்.

"நம்ம பொண்ணுக்கும், மாப் பிள்ளைக்கும் இது தலை தீபாவளி! கல்யாணத்துலையே நம்ம சம்பந்தியம்மா வுக்கு நம்மபேர்ல ஏகப்பட்ட வருத்தம். இந்தத் தலைதீபாவளியில அதைப் போக்கி நாம சரிபண்ணின்டாதான் நம்ம பொண்ணு அங்க நல்லபடி இருப்பா. இல்லைன்னா அவ பாடு அங்க ரொம்ப மோசமாயிடும்.

காசப் பாக்காம மாப்பிள்ளைக்கு நல்ல பட்டு வேஷ்டியை வாங்கிடுங்கோ. பொண்ணு ரம்யாவுக்கு சாதாரணப் பட்டுப் புடைவை போதும். குறிப்பா அந்த ஸ்கூட்டரை மறந்துடவேண்டாம்".

– மனைவி பேசப்பேச இராமரத் னத்துக்குள் ரத்தம் ரௌடித்தனம் செய்தது.

கண்களில் சிவப்பு வர்ணம்!

– கவனித்துக் கொண்டேயிருந்தான் ராகவன். வீடே தீபாவளிக்காக மகிழ்ச்சியில் திளைக்கும்போது அவர் மட்டும் சரியாக வேகாத அப்பம் போல முகத்தை வைத்துக் கொண்டு திண் டாடுவது அவனுக்குப் புரிந்து போயிற்று.

– இத்தனைக்கும் முதல் பெண் ணுக்குத்தான் இராமரத்னம் கல்யாணம் செய்து வைத்திருக்கிறார்.

– பின்னால் வரிசையாக இன்னும் இரண்டுபேர்.

– அந்த முதல் கல்யாணமே அவர் முதுகெலும்பை உண்டு இல்லை என்று ஆக்கிவிட்டது.

– என்ன செய்வது? நமக்கு நாமே பின்னிக்கொண்டு விட்ட அந்தக் கல் யாண வலை விசித்திரமானது. அதில் தான் பெண்ணைப் பெற்று விட்டவர்க்கு எத்தனை மலைப்படிகள்?

எல்லாவற்றையும் ஏறமுடிந்தால்தான் கல்யாணமே வைபோகமே..! இல்லா விட்டால் கல்யாணமே ஜெயிலாகுமே!

"என்னப்பா, தலை தீபாவளியை நினைக்க மலைப்பா இருக்கா?" – இராகவன் இராமரத்னத்தை நெருங்கி நறுக்கென்று கேட்கிறான்.

"மலைப்பா இல்லப்பா அதுக்கும் மேலேயே இருக்கு..."

– சொல்லும்போது அவர் விட்ட உஷ்ணப் பெருமூச்சு இராகவனைக் கூடச் சுடுகிறது. அவன் எதுவும் பேசா மல் தாடையை நீவிக் கொள்கிறான்.

லெட்டர் ஸ்டாண்டில் ரம்யா எழுதிய லெட்டர்.

எடுத்துப்படிக்கிறான்.

'அன்புள்ள அப்பா அம்மா திருவடி களில்,

ரம்யா அநேக நமஸ்காரம்.

இங்கே நானும் அவரும் நல்ல சௌக்யம். தீபாவளி நெருங்கிக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரி யும். அவர் ஜாடையாக ஸ்கூட்டர் பற் றிக் கேட்டார். என் மாமியாரோ கண் டிப்பாக அதைப் பற்றிப் பேசிவிட்டார்.

'வந்தா ஸ்கூட்டரோட வா – இல்லன்னா அங்கேயே இருந்துடு. என் ப்பையனுக்குக் கார் வாங்கித் தந்து பெண் கொடுக்கத் தயாரா இருந்தா – இவன் உன்னைத்தான் ரொம்பவும் விரும்பி ஓயாமல் அடம் பிடிச்சதால செய்து வெச்சேன். கார் வேண்டாம் – ஒரு ஸ்கூட்டர் கூடவா வாங்கித் தர முடியாது உங்க அப்பாவால? என் இரண்டு மாப்பிள்ளைகளுக்கும் நாங்க வாங்கித் தந்திருக்கோம்'னு சொல்லி தினமும் என்னைக் கரிச்சுக் கொட்டறா!

நான் சனியன் பிடிச்சவளாம். நான் வந்த பிறகு அவர் பிசினஸ் முன்னே மாதிரி போகலையாம். அவரும் தினமும் ராத்திரி பத்துமணிக்குத்தான் வரார். காலைல எட்டு மணிக்கெல்லாம் வெளிய போயிடறார்.

என்னமோ வாழ்க்கைங்கற மாதிரி போயிண்டு இருக்கு. எனக்கு அழக் கூடத் தெரியலை.

நான்வெளியே போய் நாலு மாசம் ஆச்சு.

பக்கத்துல யார் கூடவும் பேசக் கூடாதுன்னு உத்தரவு. என் மோசமான நிலையை என் மாமியாருக்குத் தெரி யாம இந்தக் கடுதாசியில சுருக்கமா எழுதியிருக்கேன். எப்பாடு பட்டாவது ஸ்கூட்டர் வாங்கித் தந்துடுங்கோ. அப்பத்தான் நான் இங்க மூச்சுவிட முடியும். இல்லேன்னா...?

பாட்டி தாத்தாவுக்கு என் நமஸ் காரம்.

லக்ஷ்மி, சேகர், கனகா, இராகவன் எல்லார்க்கும் என் அன்பு.

அன்புடன் (?), ரம்யா."

> தலை தீபாவளிக்கு வீட்டுக்கு வந்த மகள் கண்கலங்கக் கூடாதே என்று தந்தை கலங்கி நிற்க, அவருக்குச்சுமை தெரியா திருக்க தனயன் செய்த தந் திரம்? ஓ!

30 ரூ.

கடிதத்தைப் படித்தவன் மனது மேலும் கொதிபட்டுப் போகிறது. இராம ரத்னமும் பார்த்துக் கொண்டிருந்தார். விட்டால் அழுதுவிடுவார் போல இருந்தது.

"என்னப்பா செய்யப் போறே?" கேட்கிறான். "ஒன்னும் செய்யப்போறதில்லேடா, ரம்யா இனி இங்குதான் இருப்பா!"

"அப்பா...!"

"கத்தாத. அவ இங்க இருக்கனும்னு எனக்கு ஆசையா என்ன? கல்யாணக் கடனுக்கு வட்டி கட்டக்கூட முடியலை நம்மால. இந்த லட்சனத்துல ஸ்கூட்டர் துணிமணி அது இதுன்னு இருபத்தையாயிரம் புதுச்செலவுக்கு நான் எங்கடா போக?"

"இதுக்குத்தான் தலையால அடிச்சுண்டேன் பேங்க், இன்ஜினியர்னு மாப்பிள்ளை பார்த்தா இப்படித்தான். அவாளோட அந்தஸ்துக்கு நம்பளால போட்டி போட முடியாது. ஆகையினால குமாஸ்தா, சமையல்காரன்னு பாருன்னு சொன்னேன்".

"வாஸ்தவம்தான். நீ சொல்ற ரேஞ்ஜ்ல உள்ளவன் பஜாஜ் ஸ்கூட்டர் கேக்க மாட்டான்தான். ஒத்துக்கறேன். ஆனா அட்லீஸ்ட் சைக்கிளாவது வேணும்னு சொல்லுவான். அதுக்குக் கூட இப்ப எனக்கு வக்கு இல்லைடா ராகவா! கல்யாணம் ஆகியும் வாழா வெட்டியா இந்த வீட்டுல அவ இருந்துட்டுப் போக வேண்டியதுதான். அவ புருஷன் அம்மி மிதிச்சு அருந்ததி பார்த்துத் தாலி கட்டினது இவளுக்காகத் தான்னா இவளை அழைச்சுண்டு போகட்டும். அதெல்லாம் இல்லை ஸ்கூட்டருக்காகன்னா விட்டுட்டுப் போகட்டும்., நானும் மாசாமாசம் லாட்டரிச்சீட்டு வாங்கறேன். விழற அன்னிக்கு ரம்யா வாழ்க்கை விடியும்..."

– இராமரத்னம் தீர்க்கமாகப் பேசி விட்டுக் கிளம்பிவிட்டார். ராகவனுக்கோ மனசு கரித்தது. இந்தப் பணத் தடையைத் தாண்டியாக வேண்டும் என்று மனது பிறாண்டியது.

என்ன செய்ய?

எப்படிச் செய்ய?

"எதையாவது சக்கிரம் செய்யலைன்னா" என்று ரம்யாவின் முகம் மனதிற்குள் கொழுந்துவிட்டது.

தன் சம்பளம் – பால், மோர், தயிருக்கே சரியாகிவிடுகின்ற நிலையில் தன்னால் ஒன்றும் முடியாதுதான்.

வேறு என்னதான் செய்ய?

மல்லாந்தான் – மோட்டுவளையைப் பார்த்தபடி யோசித்தான். புதிதாக ஸ்கூட்டர் வாங்கனும் என்று சொன்ன சிநேகிதன் ராஜேஷின் முகம் நம்பிக்கை தந்தது.

களேபரமாய் பட்டாசுகள் வெடிக்கக் குதூகலமாய்க் கழிந்து கொண்டிருக்கிறது தீபாவளி.

ரம்யா முகத்தில் நெடுநாள்களுக்குப் பிறகு பொங்கி வழியும் புன்னகை. மாப்பிள்ளை பிரசாத்கூட அரும்பு மீசையை அடிக்கடி நீவியபடி பார்க்க லட்சணமாகச் சிரித்துக் கொண்டிருக்கிறான்.

இந்தத் தீபாவளி இத்தனை இன்பமாகக் கழியும் என்று இராமரத்னம் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. எல்லாம் இராகவன் செயல்!

வாசலில் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர்கூட வந்திராத நிலையில் புது ஸ்கூட்டர்.

சந்தனப் பொட்டு வைத்து மாலை போட்டு அமர்க்களமாய்... அதன்மேல் லக்ஷ்மி பெரிய மனுஷி போல் ஏறி உட்கார்ந்து கொண்டு உற்சாகமாய்...!

"டேய் என்னடா செய்தே? ஏதுடா இந்த புது ஸ்கூட்டர்?".

– இராமரத்னம் இராகவனைக் கேட்கிறார்.

"உஸ்ஸ்.... இப்போ எதுவும் கேக்காதே..."

"என்னடா இது? உங்கிட்ட காலணா கிடையாதுன்னு எல்லாருக்கும் தெரியும். பின்னே எப்படி?"

"உஸ்ஸ்... எதுவும்கேக்காதே".

"டேய் பதில் சொல்லுடா. எதுவும் கேக்காதே, எதுவும் கேக்காதேன்னா – நான் எதுக்குடா? எங்கேயாவது திருடினியா?"

"இல்லப்பா. உங்க பிள்ளை அந்தத் தப்பெல்லாம் செய்யமாட்டான்".

"எவனாவது லோனுக்குத் தந்துருக்கானா?"

"அதுவும் இல்லப்பா. நான் இங்க வேற ரூட்ல போயின்டு இருக்கேன். உங்களால அதைப் புரிஞ்சுக்க முடியாது, வைரத்தை வைரத்தால அறுக்கப் போறேன்."

"அதான் எப்படி?"

"பொறுத்திருந்து பாருங்கோ..."

– இருவரின் பேச்சுக்கு நடுவே பிரசாத் எழுந்து வந்தான்.

"மாமா! நான் ரம்யாகூடக் கொஞ்சம் வெளியே போயிட்டு வந்துடறேன்..."என்றான்.

"எது வரைக்கும் பிரசாத்?" – இது இராகவன்.

"பக்கத்துக் காளியம்மன் கோயில் வரைக்கும் போயிட்டு அப்படியே ஏதாவது சினிமா பார்த்துட்டு..."

"டெ..பனட்லி. ஸ்கூட்டர்லயே போயிட்டுவாங்கோ".

"ஆமா... அதுலதான் போகப் போறோம்".

– இருவரும் ஸ்கூட்டரில் படு சந்தோஷமாகக் கிளம்பினார்கள். எல்லாரும் 'டாடா' காட்டினார்கள்.

"பார்க்க எவ்வளவு நன்னா இருக்கு?" என்று விம்மினாள் கனகா.

"மாமனார் ஸ்கூட்டர்ல மாப்பிள்ளையோட சவாரி எப்பவுமே பார்க்க நன்னா தாம்மா இருக்கும். இதை விடக் காசு கொடுத்து வாங்கின ஸ்கூட்டர் சவாரி இன்னும் ஜோரா இருக்கும்..."

– ராமரத்னம் சிலாகித்துக் கொண்டார்.

"டேய் ராகவா! எல்லாம் உன்னால தான்டா. கல்யாணத்துலேயே நீ உடம்பைச் செருப்பாத் தைச்சுப் போட்டு உழைச்சே. இப்ப ஒரு படி மேலே போயிட்டே. ஆமா எப்படிடா இந்த ஸ்கூட்டரை வாங்கினே?" – அம்மாவின் கேள்விமுன் ராகவன் வழிசலாகச் சிரிக்கிறான்.

"நான் ஸ்கூட்டரை ஒன்னும் வாங்கலைம்மா".


"பின்னே?"

"இரவல்தான் வாங்கின்டு வந்தேன்".

"அப்ப அது நம்ம ஸ்கூட்டர் இல்லியா, மாப்பிள்ளை கையோட எப்படி கொடுத்து விடுவே?"

"மாப்பிள்ளை வந்து ஸ்கூட்டரைக் கொடுன்னு கேட்டாதானே?"

"நீ என்னடா சொல்றே... புதிர் போடாமச் சொல்லு".



"பொறுத்திருந்து பாரும்மா..." பேசியவன் ஒரு சைக்கிளில் மளமளவென்று வெளியே கிளம்பினான்; குறிப்பாக அந்தக் காளியம்மன் கோயிலுக்கு! அங்கேதானே ரம்யாவும் பிரசாத்தும் போயிருக்கிறார்கள்!

– அவர்கள் இருவரும் உள்ளே பயபக்தியாகக் கும்பிட்டுக்கொண்டு இருந்தார்கள்.

– வெளியே அந்தப் புது ஸ்கூட்டர்!

– கூட்டம் அவ்வளவாக இல்லை.

– யாரும் பார்க்காத அந்தச் சமயத்தில் சைக்கிளை பக்கத்துக் கடையில் விட்டுவிட்டு மெல்ல ஸ்கூட்டரை நெருங்கிக் கை வசம் உள்ள டூப்ளிகேட் சாவியால் அதன் காதைத் திருகி அதன் மேல் ஏறி அமர்ந்து கொண்டு .... கடைக்காரர் விஷமமாகச் சிரிக்கிறார்!

வெளியே வந்து பார்த்த பிரசாத்துக்குத் தூக்கிவாரிப்போட்டது.

"ஸ்கூட்டர், ஸ்கூட்டர் என் ஸ்கூட்டர்" அலறினான்.

"சார், அது உங்க ஸ்கூட்டரா? யாரோ ஒரு கறுத்த ஆள் வந்து தன்னோடதுன்னு சொல்லிப் பதற்றமில்லாம இந்தப்பக்கமா வேகமா ஓட்டிகிட்டுப் போனாரே..?"

– கடைக்காரர் பிரசாத்திடம் தன் நண்பன் ராகவன் சொன்னது போலவே சொல்ல – பிரசாத் அப்படியே நொறுங்கிப் போனான்.

"சார் கவலைப் படாதீங்க. போலீசுக்கு உடனே போங்க. நீங்க உழைச்சு வாங்கினதுன்னா உங்களுக்குக் கிடைக்காமப் போகாது..." அழுத்தங் கொடுத்துச் சொன்னார் கடைக்காரர். கடைக்காரர் சொன்ன அந்தக் குத்தலான கருத்து அவனை இளக்காரப் படுத்தியது. வேறு வழியில்லாமல் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

"இந்த ஊர்ல ஸ்கூட்டர் திருட்டு ரொம்ப சகஜம். ஆனா... இதுவரையிலே ஒரு ஸ்கூட்டர் கூடக் காணாமப் போனது திரும்பக் கிடைக்கலை. ஹும் இதுதானா கிடைக்கப் போகுது? போலீஸ் வழக்கம் போலத் தேடறோம், தேடறோம்னு சொல்லியே நாளைக் கடத்திடுவாங்க."

– கடைக்காரரின் இளக்காரச்சலிப்பு பிரசாத்தை அந்த நேரத்தில் மேலும் கலவரப்படுத்தியது.

"ஐயையோ... என்னங்க இது! அப்பா கேட்டா என்ன சொல்றது..? ஊர்ல அத்தை வேற பிடுங்கி எடுத்துடுவாங்களே..."

ரம்யா புலம்பத் தொடங்கினாள்.

"சும்மா இரு ரம்யா...! ஸ்கூட்டர் எப்படியும் கிடைச்சிடும். கிடைக்கலைன்னா அம்மாவை நான் சமாளிச்சுக்கறேன். இல்லை உன் அப்பா ஸ்கூட்டருக்கு எனக்குப் பணம் கொடுத்துட்டதா சொல்லிக்கிறேன். பேசாம வா..."

– பிரசாத் வேகமாக நடக்கிறான்.

போலீஸ் ஸ்டேஷனில் புகார் எழுதி வாங்கிக் கொண்டார்கள்.

"நம்பர்கூட இல்லாத புதுவண்டியத் தொலைச்சிட்டு வந்திருக்கீங்களே, இவ்வளவு பெரிய சிட்டியில எங்க போய்த் தேட...? உங்களுக்கு அதிர்ஷ்ட மிருந்தா கிடைக்கும். எங்களாலே முடிஞ்சவரை கண்டுபிடித்துத் தர முயற்சி செய்யறோம் சார்" என்றார்கள்.

தீபாவளி குதூகலத்தை இழந்தவனாக பிரசாத் வெளியே வந்தான்.

வீடு வந்தவர்கள் அனைவரும் சூழ்ந்து கொண்டார்கள். கேள்வி கேட்டுப் பிடுங்கினார்கள். இராகவனும் தன் பங்குக்குச் சில கேள்விகள் கேட்டு விட்டுச் செயற்கைச் சோகமானான்.

இராமரத்னத்துக்கு மெல்லப் புரிந்தது. இராகவனைத் தனியாக அழைத்து மெல்லக் கிளறத் தொடங்கினார்.

"இதெல்லாம் உன் ஏற்பாடா?"

அவன் மௌனமாக ஆமோதிக்க, "நீதான் ஸ்கூட்டரைத் திருடினியா?" என்றார் இராமரத்னம். "தப்புப்பா... என் பிரெண்ட் ஸ்கூட்டரை அவன் கிட்டயே கொண்டு போய் விட்டுட்டு வந்தேன்".

"போலீஸ் அந்த வண்டியைப் பிடிச்சா?"

"இந்நேரம் அது கலர் மாறி, உருமாறி புது ரெஜிஸ்ட்ரேஷன் நம்பரோட சித்தூருக்குப் போயிண்டு இருக்கும். என்னுடைய சிநேகிதன் ராஜேஷுக்கு சித்தூருக்கு மாற்றல் ஆயிடுத்து. இன்னிக்கே கிளம்பறான். நமக்கெல்லாம் மூளைதாம்பா இருக்கு. பணம் இல்லியே! நான் என்ன செய்யட்டும்? தப்பாப்பா?"

– இராமரத்னம் அவன் தோளைத் தட்டினார். ஆறுதலாகவா இல்லை பாராட்டுதலாகவா என்று மட்டும் தெரியாத தினுசில்!

ஃ

நலக்க உழைப்பீரே!

மனைசை ப. கீரன்

ஆந்தை போலே கயவர்கள்
அல்லில் காவல், உயர் தடைகள்
மாந்தர், விலங்கு, நச்சுயிர்கள்
மருக இருளில் கடந்தேனோ
பேந்த விழித்துத் திருடுகிறார்?
பிழையே பிழைப்பாய்க் கொள்கின்றார்?
வேந்து பின்னர் விலங்கிடுதல்
வெளிச்சம்! ஏனோ கவர்கின்றார்?

பஞ்ச மாபா தகங்கள்எலாம்
பாதை தவறும் இழுக்கன்றோ?
வஞ்சம் தீர்க்க, காமத்தால்
வதைத்துக் கொல்லும் செயல்எல்லாம்
கொஞ்சம் நாளில் வெளியாகிக்
குடும்பம் குலைதல் காண்கின்றோம்!
அஞ்சாப் பழிக்கும் நிலைக்களனாய்
அழிதல் ஏனோ, மானிடரே!

வங்கி, அரசு, சமுதாயம்
வகையில் கொள்ளைப் பொருள் பெறவே
எங்கும் கழுகாய் அலைகின்றார்!
ஏய்த்து வழியில் பறிக்கின்றார்!
தங்க மனமாய் உழைத்துண்டால்
தளும்பும் அமைதி மகிழ்வெல்லாம்!
எங்கோ செல்ல வேண்டாமே!
இலக்கு நலக்க உழைப்பீரே!

கள்வனைத் தேடி...

ஆர். பி. சாரதி

"நீந்திச் சென்றாய் நீரைக் கிழித்து,
ஏந்திச் சென்றாய் இதயச் சுமையை,
வந்தாய் நீயேன் வாட்டம் காட்டி?
விந்தை மீனே வேய்ங் குழலெங்கே?
யமுனைக் கரையில் இல்லையா அவன்?
என் முன் வரவே இல்லையா மனம்?"

"நீல விசும்பில் நீந்திய மேகமே,
மலை முகடெதிலும் மன்னன் இல்லையா?
ஒலையதற்கு ஒரு பதில் இல்லையே;
கோலங் குலையக் காத்திருக்கிறேன்!"

"குயிலே, கிளியே, குழையுமன்னமே,
மயலே பெருக்கி, மயக்கிச் சென்றவன்
மாயம் செய்து, மறைந்தது எங்கே?
தூய என் மடல் திரும்ப வருவதா?"

"கற்றைக் குழலைக் கலைத்து வருவாய்,
காற்றே, நீயும் கண்டிட முடியா
வேற்றிடம் உண்டா? வேதனை யறிவாய்;"
மாற்றெதுமறியா மங்கை துயர் மிக
திரும்பிய தூதால் தோகை துடித்தாள்;
வருந்திய நெஞ்சின் வேதனை தீர,
வந்தது ஒரு குரல், வனிதை மனத்தே
தந்தது உவகை, தணிந்தது சோகம்;

"உள்ளத்துள்ளே உள்ள எனக்கு
உலக முழுதும் தூதா விடுத்தாய்?"
கள்ளக் கண்ணன் குறுநகை புரிய
வெள்ளை மனத்தாள் வியப்பினிலாழ்ந்தாள்!

மனிதனாய் ஏன் பிறந்தேன்?

வானம்பாடி ப் புள்ளே! உன்னைப் போலே
வையகத்தில் பறவையெனப் பிறந்தி ருந்தால்
நான் பேசும் மொழிகளினைத் தடை செய் தற்கே
நாட்டினிலே சட்ட முண்டா? கேட்பா ரின்றி
ஆன மட்டும் குரலெடுத்தே பாடுகின்றாய்!
அண்டவெளி முகடுவரை சுற்றுகின்றாய்!
ஏனிங்கே மனிதனென நான்பிறந்தேன்?
இருக்கின்ற உன்னுரிமை எனக்கும் உண்டா?

தவழ்ந்துவரும் இளந் தென்றற் காற்றே! உன்போல்
தரைமீதில் உருவமின்றிப் பிறந்தி ருந்தால்
எவர்மீதும் எதன்மீதும் தொட்டுச் சென்றே
எழிலோடு நடமாடி வருவேன்! நீயோ
சுவர் தடுத்தும் உள் நுழைந்தே இருப்போர்க்கெல்லாம்
சுகம் அள்ளித் தருகின்றாய்; போற்றுகின்றார்!
தவறாக மனிதனென ஏன் பிறந்தேன்?
தமிழ்த்தென்றல் உன்னுரிமை எனக்கும் உண்டா?

ஓடுகின்ற வெண் முகிலே! உன்றனுக்கே
உறுதியுள்ள முதுகெலும்பே இலையென்றாலும்
காடெல்லாம் மலையெல்லாம் சுழன்று வந்து
கவின்மழையால் உலகெல்லாம் வாழச் செய்தாய்!
நாடுவிட்டு நாடு சென்று திரும்பு தற்கே
நடைமுறையில் தடையுண்டா? கேள்வியுண்டா?
கேடுகெட்ட மனிதனென ஏன் பிறந்தேன்?
கெழுமியதோர் உன்னுரிமை எனக்கும் உண்டா?

ஆழ்கடலின் எழில் மீனே! வாழு மட்டும்
அணிஅணியாய்த் தடையின்றி உலவு கின்றாய்!
தாழ்ப்பாளைச் சிறைகளினை உன் வாழ் நாளில்
சற்றேனும் பார்த்ததுண்டா? பரந்தி ருக்கும்
ஏழ் கடலின் எல்லைவரைச் செல்வ தற்கும்
எவரிடத்தில் 'விசா' விற்குக் காத்திருந்தாய்?
பாழ்மண்ணில் மனிதனென ஏன் பிறந்தேன்?
பாதமிலா உன்னுரிமை எனக்கும் உண்டா?

கா. வேழவேந்தன்

நமக்கெதுவும் தெரியாது!

கருணை வேணு

காலத்தின் கட்டாயமா
நாம்இப்படி உதிர்ந்தது;
கோலத்தின் கட்டாயமா
நாம் இப்படி மகிழ்ந்தது;
சீலத்தின் கட்டாயமா
நாம் இப்படி கூடியது;
காலனின் கட்டாயமா
நாம்இப்படி துடிப்பது;
மனிதனின் கட்டாயமா
நாம் இப்படி போனது;
மனத்தின் கட்டாயமா
நாம் இப்படி துவள்வது;
மானத்தின் கட்டாயமா
நாம் இப்படி மடிவது;
இயற்கையின் கட்டாயமா
நாம் இப்படி ஆனது;
சீற்றத்தின் கட்டாயமா
நாம் இப்படி சீரழிவது;
தோற்றத்தின்கட்டாயமா
நாம் இப்படி பொலிவது;
மாற்றத்தின் கட்டாயமா
நாம் இப்படி மாறியது;
கடவுளின் கட்டாயமா
நாம்இப்படி துதிப்பது;
தீபத்தின்கட்டாயமா
நாம் இப்படி ஒளிர்வது;
எதுதான் இங்கே கட்டாயம்?
கட்டாயம் நமக்கெதுவும்
தெரியாதே!


கருணை பொழியும் காஞ்சி

நடாதூர் புதுவை அமலன்

வானம் பொழியும் மும்மாரி; தேமதுரக்
கானம் பொழியும்அதி காலைப் பொழுதெங்கும்
ஞானம் பொழியுமாம் நல்லோர் அருள்விழிகள்
மோனம் புரிகின்ற மூதூர்நற் காஞ்சிநகர்.

மேளம் இசை முழக்கும்! வீதிகளில் தேரோடும்!
தாளம்தப் பாது சதங்கைக்கால் நடனமிடும்!
கூளமாய்ப் பொன்னா பரணம்கிடக்கும்; பூ
பாளம் விடிகாலை புலர்விக்கும் காஞ்சிநகர்.

கல்லெல்லாம் பேசும்ஞ் கடைவீதி கேட்கின்ற
சொல்லெல்லாம் சொல்லிக் கொடுக்கும் கவிதைமொழி!
நெல்லெல்லாம் பொன்னிங்கே! நெஞ்சள்ளும் மாதரார்
பல்லெல்லாம் புன்னகைக்கும் பல்லவனின்காஞ்சிநகர்.



கட்டுத்தறியும் கவிபாடும் என்பார்கள்!
பட்டுத்தறிகளிங்கு பண்ணோடு பாட்டிசைக்கும்.
தொட்டுத் திருக்கோயில் தொழுவார்க் குகந்தமலர்
கட்டித் தருவார்தம் கைமணக்கும் காஞ்சி நகர்.


வள்ளல் பெரும் பசுக்கள்; மான்கள்; மயிலினங்கள்;
உள்ளம் முழுதும் உவக்கும் விழா நாள்கள்;
வெள்ளை மனத்தவர்கள்; மேலெழுந்த கோபுரங்கள்!
அள்ளும் அழகால் அழைப்புதரும் காஞ்சிநகர்.

முக்தி தரும் அண்ணாமலை

கலைமாமணி
மா. வரதராஜன்



வல்லாள மகாராஜா கோபுரம் - அம்மணி அம்மாள் கோபுரம்.



பகவான் ரமண மகரிஷி.

“அண்ணாமலையாருக்கு அரோகரா” - இப்பேரொலி தமிழ் கூறும் நல்லுலகில் பரந்து சிறந்துள்ளது. சிவபிரானுக்குள்ள சிறப்புப் பெயர்களில் முன்னிற்பது அரன் என்பது. இதனை அடுக்கி ஒலிக்கும்போது அரகர அரகர அரகரவென முழுங்கப் பெறுகின்றது. அரன் என்ற திருப்பெயர் அண்ணாமலைக்குச் சிறப்பானது.


அரன் என்ற ஆண்பாலுக்குப் பொருந்திய பெண்பால் பெயர் அரியென்பதாகும். இந்த அரன் அரிசேர்ந்த திருவுருவமே அர்த்தனாரீஸ்வரர். இந்த மூர்த்தி அண்ணாமலைக் கோயிலில் முதன்மையுள்ளவர். இந்த மூர்த்தி எழுந்தருளிய பிறகுதான் ஜோதி தரிசனம் கிடைக்கிறது. இவரே அரியரன். இவரைப் போற்றும் ஒலியே அரகரவென்பது.

பஞ்சபூதத் தலங்களில் தேயுத் தலமாக விளங்கும் திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி என்பார்கள். நினைத்தாலே முக்தியென்றால் நேரிலேயே சென்று தரிசிப்பது சிறப்பல்லவா? வாருங்களேன். புறப்படுவோம். சென்னை மாநிலக் கல்லூரி உளவியல் துறைத் தலைவர் டாக்டர் சாத்தப்பன் நம்மை எதிர்நோக்கி சென்னை பிராட்வே பேருந்து நிலையத்தில் காத்திருப்பார்.


எல்லாரும் வந்து விட்டீர்களா? சரி. பேருந்தில் ஏறுங்கள். சென்னையிலிருந்து 225 கி.மீ. தொலைவில் உள்ள இந்தத் தலத்திற்குப் பேருந்துக் கட்டணம் ரூ. 19.90. திண்டிவனம், செஞ்சி வழியாக 5 மணி நேரத்தில் திருவண்ணாமலையை அடைகிறோம். பேராசிரியர் சாத்தப்பன் அவர்கள் குடும்பத்திற்குச் சொந்தமான சா.நா.சா. சாதுக்கள் அன்ன சத்திரத்திற்கு அழைத்துச் செல்கிறார். இந்த அன்ன சத்திரம் 1891 இல் நிறுவப்பட்டது. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நாள் தவறாமல் தினந்தோறும் பகல், இரவு இருவேளைகளிலும் சாதுக்களுக்கும் ஏழை எளியவர்க்கும் அன்னதானம் செய்து வருகிறார்கள். இந்தச் சத்திரத்தின் நூற்றாண்டு விழா சமீபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சத்திரத்தில் உணவருந்தியபின், பயண அலுப்புத் தீர ஒய்வெடுக்கிறோம்.

மறுநாள் காலை 4 மணிக்கே பேராசிரியர் சாத்தப்பன் நம்மைத் துயிலெழுப்பி விடுகிறார். குளியலுக்கு வெந்நீர் தயாராக இருக்



திருமஞ்சனக் கோபுரம்



சேஷாத்ரி ஸ்வாமிகள்.

கிறது. குளித்துவிட்டுச் சத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் கற்பகப் பிள்ளையாரை வழிபட்டு நேரே ராஜகணபதி குருக்கள் இல்லத்திற்குப் போகிறோம். அவர் நம் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார். அவருடன் கிழக்குக்கோபுர வாயிலை அடைகிறோம்.

காலை 5 மணிக்கு நடை திறப்பு. திறந்தவுடன் அலங்காரத் திருமஞ்சனம், யானை மீது கொண்டு வரப்பட்டு ரிஷி கோபுரத்தின் வாயிலில் கொட்டிப் பின்னர் வாயில் திறக்கப்படுகிறது.


நுழைவு வாயிலின் வழியாக ஐந்தாம் பிராகாரம் வருகிறோம். இடப் புறத்தில் சிவகங்கைத் தீர்த்தம். அருகில் உள்ள சர்வ சித்தி விநாயகரைச் சேவித்து விட்டு உள்ளே போகிறோம். வட புறத்தில் தெரிகிறதே அதுதான் ஆயிரங்கால் மண்டபம். இந்த மண்டபத்தில்தான் பகவான் ரமண மகரிஷி வழிபட்ட பாதாளலிங்கம் பூமியின் கீழே அமைந்துள்ளது. பகவான் தவம் செய்து, ஞானத் தியானத்திலே மூழ்கிய இடம் இது.

ஆயிரங்கால் மண்டபத்திற்கு எதிரில் உள்ளது வளைகாப்பு மண்டபம். இங்கு ஆடிப்பூரத்தன்று முருகன் அடியார்கள் 800 பேருக்கு வைதீக உடைகள், எண்ணெய் முதலியன கொடுத்து, அம்மனுக்கு அபிஷேகம் செய்து, வளைகாப்பு அணியப்பெறும் இடமாதலால் இவ்வாறு பெயர் பெற்றது. இந்த மண்டபத்தில் இருப்பது கம்பத்து இளையனார் சந்நிதி. திருப்புகழை வழங்கிய அருணகிரிநாதருக்கு முக்தியளிக்க முருகப் பெருமான் வந்து 'அதல சேதனாராட'த் திருப்புகழைப் பெற்றுக் கொண்ட சந்நிதி இது.

அடுத்து இருப்பது கோபுரத்து இளையனார் சந்நிதி. அருணகிரி நாதர் மனம் வெறுத்துப்போய் வல்லாள மகாராஜன் கோபுரத்திலிருந்து கீழே விழும்போது, முருகப் பெருமான் கரத்தினால் தாங்கிக் கீழே விழாமல் தடுத்து வள்ளி தெய்வானை சமேதராய்க் காட்சி அளித்து அருள் பாலித்த இடம் இந்தக் கோபுரத்து இளையனார் சந்நிதி.

இதையும் கடந்து கிளிக் கோபுரம் நுழைந்து மூன்றாம் பிராகாரம் வருகிறோம். கிளிக் கோபுரம் சிறப்பு மிக்க சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டது. "தேவலோகத்திலிருந்து பாரிஜாத மலர் கொண்டு வருக" எனப் பிரபுட தேவராயர் சொல்ல, அதைக் கொண்டு வருவதற்காக அருணகிரிநாதர் தன் உடலை விட்டு ஒரு கிளி உருவில் செல்ல, சம்பந்தாண்டான் இதனைத் தெரிந்து கொண்டு அருணகிரி இறந்து விட்டார் என்று சொல்லி உடலைத் தகனம் செய்துவிட்டார்கள்.

தேவலோகம் சென்று சில நாள்கள் கழித்துத் திரும்பிய அருணகிரி, தான் விட்டுச் சென்ற உடலைக் காணாது, நடந்த



அண்ணாமலையார் : தங்கக் கவசத்துடன்

நிகழ்ச்சியைத் தெரிந்து கொண்டு, கிளியாகவே இந்தக் கோபுரத்தில் வாழ்ந்து 'கந்தர் அநுபூதி' பாடினாராம். எனவேதான் இதற்குக் கிளிக்கோபுரம் என்று பெயர்.

நாம் மூன்றாம் பிராகாரம் வந்தவுடன் இடப் புறத்தில் காண்பது கால பைரவர் சந்நிதி. எதிர்ப்புறம் பிரம்ம தீர்த்தம். தெற்கே உயரமாகக் காட்சியளிப்பது திருமஞ்சனக் கோபுரம். வடக்கே அம்மணி அம்மாள் கோபுரம். இந்தக் கோபுரம் அம்மணி எனும் பெண் துறவியால் கட்டப்பட்டது. இவர் திருவண்ணாமலைக்கு நேர் மேற்கில் 30 கி.மீ. தொலைவில் உள்ள சென்ன சமுத்திரம் என்ற சிற்றூரில் 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். திருமணத்தை வெறுத்து இளமையிலேயே துறவு பூண்டவர். வீட்டை விட்டு வெளியேறி மைசூர் மன்னரைச் சந்தித்து முத்துமாலை ஒன்றினைப் பரிசாகப் பெற்றார். அதைப் பெரிய செல்வர் ஒருவரிடம் விற்று இந்தக் கோபுரத்தை அமைத்தார். இந்த அம்மாளிடம் ஓர் அதிசய சக்தி இருந்ததாம். இன்னாரிடம் இவ்வளவு. பணம் இருக்கிறது என்று கணக்காகச் சொல்லிவிடுவாராம். அதில் ஒரு பங்கை இந்தக் கோபுரத்திற்காகக் கொடு என்று கேட்டு வாங்கிக் கோபுரத்தைக் கட்டினாராம்.

மேற்கே தெரிவது பேய்க் கோபுரம். மேற்குக் கோபுரம் என்பதைத் தமிழ்ப் புலவர்கள் ரத்னச் சுருக்கமாக மேக்கோபுரம் என்று எழுதி வைத்தார்கள். மேக்கோபுரம் மருவி பேய்க் கோபுரமாகிவிட்டது.

கிளிக்கோபுரத்தின் நேர் எதிரே 16 கால் மண்டபம். கார்த்திகை அகண்ட தீபத்தின்போது பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளும் இடம் இது. அர்த்தநாரீஸ்வரர் தீபம் தாங்கி வந்து, பலி பீடத்தின் முன்னர் தீபம் ஏற்றியவுடன், கார்த்திகை தீபம் மலையிலும் எரிய லட்சக்கணக்கான சேவார்த்திகள் "அண்ணாமலைக்கு அரோகரா" என்று ஒன்று சேர்ந்து ஒலி எழுப்புவார்கள்.

மூன்றாம் பிராகாரத்தில் காளத்தீசுவரர், ஏகாம்பரேசுவரர், சிதம்பரேசுவரர், ஜம்புகேசுவரர் ஆகிய மூர்த்திகளின் சந்நிதிகள் ஒருசேர உள்ளன. மற்ற பஞ்ச பூதத் தலங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் இந்தத் தலத்திலேயே ஐவரையும் சேவிக்கலாம். இது இந்த ஆலயத்தின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகும்.


தெற்குப் பிராகாரத்தில் நமக்கு நிழல் கொடுத்து வரவேற்பது இக்கோயிலின் தல விருட்சமாகிய மகிழமரம். சித்திரை வசந்த உற்சவம் பத்தாவது நாளில் பௌர்ணமியன்று மன்மத தகனம் இந்த மகிழ மரத்தின் அடியில் நிகழும். வேறு எந்த சிவன் கோயிலிலும் இத்தகைய நிகழ்ச்சி நடைபெறுவதில்லை.

அதே தெற்குப் பிராகாரத்தில் ஒரு கவினுறு மண்டபத்தைக் காண்கிறோம். நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் பாங்குற அமைக்கப்பெற்ற இந்தத் திருக்கல்யாண மண்டபம் உண்மையிலேயே ஒரு கலைக்கூடம்.

பிராகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றி வந்து, இடப்புறத்தில் உள்ள சம்பந்த விநாயகரைத் தரிசித்து விட்டு, அண்ணாமலையார் மூலாலயம் செல்கிறோம். வாயிலில் இருக்கும் அதிகார நந்தியை வணங்கிய பிறகு இறைவன் தரிசனம் பெற உட்புறம் போகிறோம். அண்ணாமலையாரை மனம் குளிர தரிசிக்கிறோம்.

அர்த்த மண்டபத்தில் சிவமேரு எனும் 25 முக்கோணம் உடைய யந்திரம் அண்ணாமலையாரின் தெற்கே இருக்கிறது. இந்தச் சிவ

ராஜகோபுரமும், திருஅண்ணாமலையும்.



தயக்கம்-ஏன்?

மாமயிலோன் வந்தபின்னும் மயக்கமா – இந்த
மாநிலத்தைக் காக்க இன்னும் தயக்கமா? (மாமயிலோன்)

தேவர்துயர் தீர்த்துவைத்த தீரனாம் – எங்கள்
தீந்தமிழின் தனித்தலைவன் வீரனாம் (மாமயிலோன்)

சூரர்களைக் களைந்திடவே வேல் கொடுத்தனை – அன்று
சொக்கும் சுடர் தெய்வானையை மணமுடித்தனை
தீனர்களாம் எமைக்காக்க கண்திருப்பிடு – குகனை
திருபுவனேஸ் வரிதாயே பயன்படுத்திடு. (மாமயிலோன்)

திருச்சி பாரதன்

மேருதான் சயனாலய மூர்த்தியாகப் பள்ளியறைக்கு எழுந்தருளுகிறது. வேறு எந்த சிவாலயத்திலும் இது இல்லை. மேலும் சயனாலயமானது சிவாலயத்தில் அமைக்கப் பெற்று அம்பிகை சிவாலயத்திற்கு எழுந்தருளி பள்ளியறை வழிபாடுகள் நடைபெறுவது இங்கு ஒரு தனிச் சிறப்பாகும். பள்ளியறை பூஜை முடிந்து கோ தரிசனம், கோ பூஜை.

அண்ணவின் வெளிப்பிராகாரத்தில் உள்ள 63 நாயன்மார்களை வணங்கி வந்தால் மேற்கில் ராதா, ருக்மணி, கருடன், ஆஞ்சநேயர் சமேதராக ஸ்ரீவேணுகோபாலர் காட்சியளிக்கிறார்.

இந்த சந்நிதிக்கு வடக்கே ஸ்ரீலக்ஷ்மி சந்நிதி. அதையடுத்து முருகன் சந்நிதி. அழகான பிட்சாடனர் உற்சவ மூர்த்தி. இவர்களைத் தரிசித்துக் கொண்டு வைகுந்த வாயில் வழியாகப் பிராட்டியின் சந்நிதிக்கு வருகிறோம்.

அம்பிகை பாலசுவரூபிணியாகக் காட்சியளிக்கிறாள். அம்பிகையின் வலக் கையில் தாமரை மலர். இடக் கை குலமகள் பாங்கில் அடக்க ஒடுக்கத்தன்மையில் இருக்கிறது.

வெளியே நவக்கிரகங்கள் சந்நிதி இருக்கிறது. நம் தலைவிதியை நிர்ணயிக்கும் இந்தக் கோள்களை வணங்கி. வலம் வரும்போது, அந்த விதியின்படி நாம் செய்யும் பாவ புண்ணியங்களைக் கணக்கெடுத்துப் பதிந்து வைக்கும் சித்திரா புத்திரன் சந்நிதியையும் கண்டு வணங்கி வருகிறோம்.

அம்மன் சந்நிதிக்கு எதிரில் ஆடிப்பூரத்தன்று தீ மிதிக்கும் வழக்கம் இக்கோயிலில் நெடுங்காலமாக நிலவி வருகிறதாம். வேறு எந்தச் சிவாலயத்திலும் இந்த வழக்கம் இல்லை.

முதல் காலமான உஷத்கால பூஜை 6 மணிக்கு நடைபெறுகிறது. மேளதாளம் உண்டு. அபிஷேக நைவேத்ய ஷோடசோபசார தீபாராதனை நடைபெறுகிறது. வெண்பொங்கல் நிவேதனம்.

இரண்டாவது காலபூஜை 8.30 மணி அளவில் நடைபெறும்.

"அண்ணாமலை நினைக்க முக்தி தரும்" என்பது ஒரு பேருண்மையை உணர்த்திக் கொண்டிருக்கிறது. மெய்யறிவு பெற, சத்திய தரிசனம் காண, முக்தி நிலை அடைய வேண்டுமானால் ஆணவம் முற்றிலும் நீங்க வேண்டும். அந்த உண்மையை மறவாமல் நினைத்து வாழ்பவர்கட்கே வீடுபேறு கிட்டும் என்பதையே 'நினைக்க முக்தி தரும்' என்ற சொற்றொடர் உணர்த்திக் கொண்டிருக்கிறது. நினைக்க என்றால் மறவாமல் மனம் கொண்டு கடைப்பிடிக்க என்று பொருள் கொள்ள வேண்டும். இந்தத் தத்துவத்தை மக்கள் மறவாமல் இருப்பதற்காகவே ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை தினத்தன்று அண்ணாமலை மீது ஜோதி தரிசனம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

இப்படிப் பல தத்துவங்களை ராஜகணபதி குருக்கள் சொல்கிறார். மணி 8.30 ஆகிவிட்டது. இரண்டாவது காலை சந்தி நடைபெறுகிறது. விநாயகர் முதல் சண்டேஸ்வரர் வரை எல்லா மூர்த்தங்களுக்கும் அபிஷேக நைவேத்ய உபசாரங்கள் நடக்கின்றன. சர்க்கரைப் பொங்கல் நிவேதனம்.


இந்தத் திருக்கோயிலில் மண்டபங்கள் மலிந்து காணப்படுகின்றன. அடுத்த கால பூஜை வரை அவற்றைச் சுற்றிப் பார்த்து வருவோமே! ஞானப்பால் மண்டபம், தீர்த்தவாரி மண்டபம், திருவருள் விலாச மண்டபம், மாதப் பிறப்பு மண்டபம், உருத்திராக்க மண்டபம், நந்தி மண்டபம், அமாவாசை மண்டபம், பன்னீர் மண்டபம், காட்சி மண்டபம் ஆகிய மண்டபங்களைப் பார்த்துவிட்டு உச்சிக்கால பூஜை காண சுவாமி சந்நிதிக்கு விரைகிறோம். 11.30க்கு சுவாமிக்கும் அம்மனுக்கும் மட்டும் பூஜை நடக்கிறது. தயிர் சாதம் நிவேதனம். உச்சிக்கால பூஜை முடிந்ததும் 12.30க்கு திருக்காப்பிடப் படுகிறது. இனி மாலை 4 மணிக்குத்தான் ஆலயம் திறக்கப்படும்.

5.30க்கு சாயங்கால பூஜை. எல்லா மூர்த்தங்களுக்கும் பூஜை நடக்கிறது. நிவேதனம் புளியஞ் சாதம்.


அடுத்து 8.30க்கு சுவாமிக்கும் அம்மனுக்கும் மட்டும் பூஜை. ஹவிர் நிவேதனம் (சுத்த அன்னம்).

9.30க்கு அர்த்தஜாம பூஜை. சுவாமிக்கும் அம்மனுக்கும் மிளகு அன்னம் நைவேத்யம் செய்து பூஜை நடக்கிறது. பூஜை முடிந்ததும் மேருவைத் திருப்பள்ளியறைக்கு எழுந்தருளச் செய்து வழிபாடு நடக்கிறது. அது சமயம் அப்பம், காய்ச்சிய பால் நைவேத்யம் செய்யப்பட்டு விநியோகிக்கப் படுகின்றன. உடன் திருக்காப்பிடுதல்.

இவற்றையெல்லாம் கண் குளிரப் பார்த்துவிட்டு மன மகிழ்ச்சியுடன் திரும்புகிறோம். ❀



பணம் படைதத ஒருவன் உதவிய தொகை களெல்லாம், பரந்த மனப்பான்மையுடன் அல்ல, சுயநலத்தின் காரணமாகவே என்பதைப் புரிந்து கொண்டு கொதித்தெழுந்த கேசவன் அமைதி பெற என்ன செய்தான்?



பாவ புண்ணியம்

ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்

விஜயாசேஷ்மகால் நிறைந்து வழிந்தது. அது ஓர் இலக்கிய விழா. நூல் வெளியீட்டு விழா. இத்தனை அமர்க்களமாக எங்கும் நடந்திருக்க முடியாது. அரங்கம் நிறைந்த விழா. இத்தனைக்கும் சிற்றுண்டியும் இல்லை. பேருண் டியுமில்லை. வெறும் காபி மட்டும் தான். அதுகூடக் கடைசி நிமிஷ ஏற்பாடு. யாரோ ஒரு பிரமுகர் யோசனை சொன்னதோடு செல வையும் தானே ஏற்றுக் கொண்டார்.

"காக்கிச் சட்டைக்குள் ஒரு கௌரவம், கவிதை வடிவில் ஒரு கனமான மனிதர்" என்றெல்லாம் பிரமுகர்கள் பலர் நிறையவே பேசி நெஞ்சம் நிறைத்தனர்.

"இந்த மோகன்லால் மான்மல் வடக்கத்தியானா இருந்தாக்கூட, இங்கே இருபது வருஷமா வட்டி வியாபாரத்திலே கொட்டை போட் டுட்டிருக்கான். சுத்தமாத் தமிழ் பேச வராது, இருந்தாலும் தமிழ் மேலேதான் எத்தனை பற்று! இருபத்தஞ்சாயிரம் ரூபாயைக் கொடுத்து எல்லாப் புத்தகங்களை யும் வாங்கின கையோட விழா வுக்கு வந்தவர்களுக்கெல்லாம் வாசல்லே ஓர் ஆளை நிறுத்தி தாம்பூலம் கொடுக்கறது மாதிரி கொடுத்தனுப்பினானே. இட் ஈஸ் சம்திங் மார்வலஸ்" என்று வந்த வர்கள் போனவர்களிடமெல்லாம் கேசவன் சொல்லாத நாளில்லை.

"ஆமா. நீங்கதான் அந்த மான் மல்லை மெச்சிக்கனும். இலக் கியப் புரவலனாவது மண்ணாங் கட்டியாவது! அவர் ஒரு வியா பாரிங்க. உங்களுக்காக அவர் செலவழிச்சது இலக்கியத்துக்காக இல்லே. உங்க டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் பதவிக்காக இது பிரதியுபகாரமாகக்கூட இருக்கும்" சாரதா தன் கணவனைச் சீண்டி னாள்.

"அடிப்போடி பைத்தியக்காரி! பிரதியுபகாரம்ங்கிறியே. நான் என்னடி அவனுக்குப் பெரிசாச் செய்துட்டேன்?"

"இது செஞ்சதுக்காக இல் லாமப் போனாலும் செய்யப் போறதுக்கான அச்சாரமா இருக்க லாமில்லையா?"

"கேசவன் நெருப்புடி, இதை எந்தக் கறையானும் அரிக்க முடியாது. பலனைக் கருதி எந்தப் பயலும் என்னை நெருங்க முடி யாது. நீதி, நேர்மை, சட்டம் இதி லேர்ந்து எந்தக் கொம்பனுக்காக வும் நான் விலகினதும் கிடையாது பிறழப்போறதும் கிடையாது. என்னை யாரும் விலைக்கு வாங்க முடியாது".

"அதனாலேதான் நேரிலே கொடுக்க முடியலே. விழாவிலே கொடுத்திருக்கார்".

சாரதா சொன்னது உடனடி யாக உறைக்கவில்லை. ஆனாலும் கேசவன் அதை ஆழமாகச் சிந் தித்தபோது எங்கோ நெருடலாக இருந்தது. இந்த மான்மல் தனக்கு மட்டும் செலவழிக்கிறாரா, அல்லது நிஜமாகவே இலக்கியத் தின் மீதும் எழுத்தாளர்கள் மீதும் பற்றா? அதையும் சோதித்துப் பார்க்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. கூடங்குளம் சுப்பையா என்றொரு கவிஞர். பரம ஏழை. இலக்கியத் துடிப்பும், யாரையும் மிஞ்சக் கூடிய சிறந்த கவித்துவமும் நிறைந்தவர். கேசவனைச் சந் தித்து நூலை வெளியிடவேண்டி யிருக்கிறார். தான் அன்று வெளி யூர் போக விருப்பதால் வரவியலா ததைச் சொல்லியனுப்பியதோடு விட்டு விடாமல், மான்மல்லைச் சோதிக்கிற ஒரு வாய்ப்பாய் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள நினைத்தார்.

"சுப்பையா சார்! நூலை நான் வெளியிடலேன்னா என்ன? நூலை வாங்கிக்க ஓர் அற்புதமான மனிதர், நல்ல இலக்கியப் புரவலர் ஒருத்தரைச் சொல்கிறேன். கூப் பிடுறீங்களா?"

– என்றவாறு மான்மல்லை விரல் நுனியால் அழைத்தார்.

மான்மல் அவர் சுழற்றிய தொலைபேசியில் வந்ததோடு செய்தியைச் சொன்னதும் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்வதாய்ச் சம்மதித்தார். மாவட்ட மைய நூலகத்தில் நடந்த விழா எளிமையாக இருந்தபோதும் முதற் பிரதிக்காகப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்துப் பெற்றுக் கொண்டார் மான்மல். சுப்பையா மகிழ்ச்சியாலும், நெகிழ்ச்சியாலும் கரைந்து போய்விட்டார்.

"எந்தவொரு நாட்டு மக்களின் பெருமையையும் பண்பாட்டையும் வரலாறாக்குவது சிறந்த இலக்கியங்கள்தாம். அது கவிதையானாலும் சரி, சிறுகதையானாலும் சரி, நாவலானாலும் சரி. நமது பண்பாடு மற்றும் மக்கள் வாழ்க்கையின் சிறந்த பக்கத்தைக் காட்டுவதாக அமைய வேண்டும்" என்று பேசியும் அமர்க்களப்படுத்தினார் மான்மல். யார் எழுதிக்கொடுத்ததோ!


"சாரதா இப்ப என்ன சொல்றே? நிஜமாவே அவருக்கு இலக்கிய ரசனை இல்லேன்னா சாதாரண முன்பின் தெரியாத ஓர் ஏழைக் கவிஞருக்கு இவ்வளவு பெரிய தொகையைக் கொடுப்பாரா? அனாவசியமா நீ அந்த நல்ல மனுஷனை சந்தேகப்படுறே".

"ஆமாங்க.இப்பவும் அவருடைய இலக்கிய ரசனையை நான் சந்தேகிக்கிறேன். அந்த ஏழைக் கவிஞருக்கு அவர் பத்தாயிரம் ரூபாய் கொடுத்ததுகூட ஒரு ஐ.ஜி. சிபாரிசு செய்ததினாலேதான்".

'நீ. போலீஸ்காரன் மனைவியில்லே? அதனாலே யாரைப் பார்த்தாலும் உனக்கு சந்தேகமாத்தான் இருக்கும். எவனும் யோக்கியனில்லேன்னு நினைக்கிறது தப்பு" என்று சாரதாவை உதாசீனப்படுத்தினால்கூட மான்மல்லுக்கு இலக்கிய ரசனை உண்டா என்று தீவிரமாய்த் தன் மூளையைக் கசக்கத் தொடங்கினார் கேசவன். ஒருவேளை சாரதா சொல்வது போல் ஏதேனும் எதிர்பார்ப்புகளோடு மான்மல் இப்படித் தாராளமாக இருக்கிறாரா... காலம் தனக்குத் தெளிவைத் தரட்டும் என்று நினைத்துக் கொண்டார்.

இரண்டாண்டுகளுக்கும் சற்று மேலாகப் பதவியிலிருக்கிறார். மான்மல்லுக்கு உதவக்கூடிய எந்த சந்தர்ப்பமும் கேசவனுக்கு வாய்க்கவில்லை. மாறாக மான்மல்தான் கேசவனுக்கு வந்த வெளியூர் மாற்றலை ரத்து செய்ய தனக்கிருந்த மத்திய அரசு, அரசியல் செல்வாக்குகளைப் பிரயோகித்து உதவியிருக்கிறார். நிஜமாகவே அவருக்குத் தன்மேல் மரியாதை மட்டுமல்ல இலக்கியத்திலும் ரசனை இருக்கிறதென்பதை, பல்வேறு சந்தர்ப்பங்கள் உறுதிப்படுத்தின. சாரதாவின் பேச்சு சிறிதுகூட எடுபடவில்லை.

அடிக்கடி லயன்ஸ் கிளப் சந்திப்புகள், காஸ்மாபாலிட்டன் அறிமுகங்கள்,சோழா ஷெராட்டன், தாஜ் விருந்துகள், தொழிலதிபர்கள் அரசியல்வாதிகளோடு தொடர்பு என்று மான்மல்லோடு சேர்ந்து கொள்வார் கேசவன். நட்பு இயல்பாக இருந்ததாலும், எதிர்பார்ப்புகள் இல்லாதிருந்ததாலும் கேசவன் மான்மல்லை மிகவும் மதித்தார், நேசித்தார். அந்த நட்பின் வயது நாலைந்தாக வளர்ந்தது. கேசவன் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். பிரமாதமான வழியனுப்பு விழாவை சக அதிகாரிகளும், நண்பர்களும், நல்லெண்ணமுள்ளவர்களும் ஏற்பாடு செய்திருந்தனர்.



கேசவனின் அப்பழுக்கில்லாத பணி, அபாரமான துணிச்சல், அற்புதமான அறிவுக்கூர்மை, அபரிமிதமான இலக்கியத் திறன் எல்லாவற்றையும், எல்லாரும் பேசிப் பிரமாதப்படுத்தினர். மான்மல் ஒரு பொன்னாடை அணிவித்து மகிழ்வித்தார். அந்தப் பொன்னாடை குறைந்தது இரண்டாயிரம் ரூபாயை விழுங்கியிருக்கும். அத்தனை பளபளப்பு.

ஓய்வு பெற்ற மறுநாளிலிருந்து அவரிடமிருந்து ஒவ்வொரு வசதியும் ஒவ்வொன்றாக விடைபெறத் தொடங்கின. ஓரிரு நாள்களில் தொலைபேசி துண்டிக்கப்பட்டது. கேசவன் தன் பலத்தில் பாதியை இழந்துவிட்டதாய் உணர்ந்தார். இருந்தாலும் வீடியோ கடை வைத்திருக்கிற இளைய மகன் வீட்டுக்கு வாங்கி வைத்திருந்த தொலைபேசி உதவிற்று. அவனுக்குத் திருமணமானதென்றால் அவனோடு அதுவும் தனிக்குடித்தனம் போய்விடும். ஆர்டர்லி ஆறுமுகம் அரை மனதோடு விடை பெற்றாலும்கூட அவ்வப்போது வந்து போவதாய்ச் சொல்லிப் போனவன்தான். அதற்குப் பிறகு ஆளையே காணோம். காலையிலும் மாலையிலும் வாசலில் வந்து நிற்கிற கார்கள் இப்போது எங்கு போயினவோ? காலையில் தினமும் பாட்மிண்டன் ஆட கிளப்புக்கு அழைத்துப் போகிற ஆவுடையப்பன், இப்போது ஆளிருக்கிற இடமே தெரியவில்லை.

கிளப்புக்குப் போவதை நிறுத்திக் கொண்டார். மாதம் இருநூறு ரூபாய் மிச்சம் மட்டுமல்ல, சந்தர்ப்பவாதிகளின் தொடர்புகளையும் அறுத்துக்கொண்ட திருப்தி. பதவி போன மனிதர்கள் காற்றுப் போன பலூன் மாதிரி அத்தனை அசிங்கமாகவா உருமாறிப் போய்விடுகிறார்கள்? தான் புறக்கணிக்கப்படுவது கேசவனுக்குப் புலனாகியது.

பதவியில் இருந்தபோதும், இப்போதும் யார் வந்தாலும் வராமற் போனாலும் காலையில் தினமும் ஒரு பழைய ஹெர்குலிஸ் சைக்கிள் மட்டும் போர்ட்டிகோவில் ஓர் ஓரமாய் வந்து நிற்கும். கேசவனை வளைய வளைய வருவதோடு கூடவே துணைக்குப் போவது, பேட்மிண்டன் மைதானத்தில் பந்து பொறுக்கிப் போடுவது, தினமும் இரண்டு வேளையும் பால் வாங்கி வருவது என்றெல்லாம் பாரதிக்கு வாய்த்த கண்ணனைப்போல அந்த முரளியிடம் அன்றும், இன்றும் அதே மரியாதை. வயதைப் போலவே வளர்ந்து கொண்டிருந்தான் முரளி.

"அய்யா! ப்ளஸ் டு முடிச்சிட்டேன். 95% மார்க் வாங்கியிருக்கேன். இஞ்சினீயரிங் என்ட்ரன்ஸ் எக்ஸாமிலே பாஸாகி அண்ணா யுனிவர்சிட்டிக்கு என் பேர் தேர்வாகியிருக்கு. இன்சினீயராகணும்னு ஆசைப்படறது என்னோட தகுதிக்கு அதிகமாயிருக்கலாம். ஆனா எல்லா வாய்ப்புகளும் கூடிவரும்போது பணமில்லேங்கிற குறை அதுக்கு என்னை அருகதையில்லாம ஆக்கிடக்கூடாதில்லையா?"


பதிலே சொல்லாமல் அமைதியாய் இருந்த கேசவன் சில நிமிடங்கள் கரைந்ததும் தன் அமைதியைக் கலைத்துக் கொண்டார்.

"சரி என்ன செய்யலாம்னு யோசனை?"

"ஒண்ணுமே புரியலேய்யா.."

"ஒண்ணு பண்றியா. பெரிய தொகை. யாரும் உதவி செய்ய மாட்டாங்க. கடன் ஏற்பாடு செஞ்சா வேலைக்குப் போய் திருப்பிக் கட்டுவியா? இன்னிக்கும் நான் சொன்னா கேட்கக்கூடிய ஒரு மனுஷன் இருக்கார்".

"யாரு... மான்மல்லா?" சாரதா சீண்டினாள். அவள் கேட்டதில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன. இன்னுமா அந்த நினைவு? இனிமேலும் அவர் உங்களை மதிப்பாரா? இவனுக்கு அவர் செய்வார்னு நினைக்கிறீங்களா? உலகம் தெரியாத மனுஷனா இருக்கீங்களே... இப்படி ஏராளமான கிளைக்கேள்விகள் 'யாரு மான்மல்லா?' என்ற கேள்விக்குள் இருந்தன.



"என்ன தம்பி? புத்தகங்களிலே எல்லாம் சிகரெட் பிடிக்கிறத னாலே வரும் தீமைகளை எல்லாம் பத்திப் போட்டிருக்குன்னு நிறுத்தப் போறதா சொன்னீங்களே. இப்போ என்னடான்னா சிகரெட்டும் கையுமா இருக்கீங்களே".

"படிக்கிறதையே நிறுத்தப் போறதாகத்தானே சொன்னேன்?"

"மான்மல் கேட்காமலேயே கொடுக்கற மனுஷன். இப்ப நான் நம்ப முரளிக்காக தானம் கேட்கலே. கடன் கேட்கிறேன். அதுக்கும் நான் பொறுப்பேத்துக்குவேன். பத்தாயிரம் ரூபாய். என் பென்ஷன்லே மாசம் ஆயிரம் ரூபா... பத்தே மாசத்திலே திருப்பிக் கொடுத்திட மாட்டேனா..."

'பார்ப்போமே' என்றாள் மீண்டும் கேலியாக. அப்படியேதான் ஆனது. முரளி சுவரில் அடித்த பந்தாகத் திரும்பி வந்தான்.

"அய்யா! உங்க விசிட்டிங் கார்டைக் கொடுத்தனுப்பினேன். ரொம்ப நேரம் காக்க வச்சார். பிறகு, பாக்டரிக்குப் புறப்படற நேரம். வாசலிலேயே நிறுத்தி வச்சி "யாரு கேசவன் அனுப்பின பையனா? இதை நான் எந்தக் கணக்கிலே எழுதறது? அவருக்குச் சுலபம். கைகாட்டி விட்டுட்டார்ன்னு முடிவைச் சொல்லாம காரிலே உட்கார்ந்து கதவைச் சாத்திக்கிட்டார்" என்றான் முரளி.

"சாரதா! இதுக்கு முன்னாலே எத்தனை பேருக்குக் கைகாட்டியிருப்பேன். அப்பல்லாம் என் பேச்சுக்கு மரியாதை இருந்தது. அது கேசவன்ங்கிற மனுஷனுக்கில்லே. ஐ.ஜி.ங்கிற காக்கித் துணிக்குன்னு இப்பத்தான் புரியுது".

"நீங்க அவருக்கு எதுவும் செய்யலே. ஆனா பதவியிலே இருக்கறப்போ உங்களோட நெருக்கமான நண்பர்ங்கிற இமேஜ் அவருக்கு உதவியிருக்கலாம். நீங்க யார்கிட்டேயும் எதையும் சொல்லாமலேயே இந்த இமேஜைப் பயன்படுத்தியே பல காரியங்களை அவர் சாதிச்சிட்டிருப்பார். இனிமே உங்க நட்பாலே அவருக்கென்ன பிரயோஜனம்?"

சாரதா ஒரு தெளிவை ஏற்படுத்தினாள். மான்மல் தன்னிடம் காட்டிய மதிப்பு மரியாதைகளை ஒவ்வொன்றாக நினைவுபடுத்திக் கொண்ட கேசவனை தொலைபேசி அழைத்துக் கலைத்தது.

"அய்யா! வணக்கம். ஐ.ஜி. ஆபீஸிலேர்ந்து பி.சி. பேசறேன். அய்யா உங்களோட பேசணுமாம்."

"ஹலோ பிரதாப், எப்படி இருக்கீங்க? அயம் சாரி. வர முடியலே. வேலையெல்லாம் எப்படி இருக்கு? அது சரி மருதூர் மர்டர் கேஸிலே ஏதாவது துப்பு கிடைச்சிதா? நான் ரிடையர் ஆகறதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னாலே இப்படியொரு பயங்கரமான சம்பவம். எந்தத் துப்பும் கிடைக்காத மனக்குறையோட ரிடையரானேன். அப்பறம் ராமரத்னம் போர்ஜரி கேஸிலே எல்லாரும் முக்கியமான பேர்வழிகள். என்ன செய்யப் போறீங்க?"

"அதெல்லாம் இருக்கட்டும் கேசவன் சார். வேற ஒரு முக்கியமான விஷயம். திருவான்மியூர்லே எங்க தகப்பனார் ஒரு பிள்ளையார் கோயில் கட்டியிருக்கார்னு சொன்னேனில்லையா? வர்ற வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம். நம்ம மான்மல்தான் முன்னாலே நின்னு செய்றார். காம்பவுண்ட் சுவர், வாகனங்கள், திருவிழாச் செலவெல்லாம் அவரோடது. ரொம்ப தெய்வ பக்தியுள்ள மனுஷன். ஆறு நாள் விழா. நீங்கள் முதல் நாள் விழாவிலே பட்டிமன்றத்துக்குத் தலைமை தாங்கணும். தலைப்பு இன்னும் முடிவாகலே. நீங்களே தலைப்பு தரலாம்".

"சரி... நான் யோசிச்சுச் சொல்றேன்" என்று கூறிவிட்டு தொலைபேசியைக் கீழே வைத்தார் கேசவன். அர்த்தமுள்ள புன்சிரிப்புடன் பார்த்த சாரதாவைப் பார்த்துச் சொன்னார்:

"மான்மல்லுக்கு அன்னிக்கு இலக்கிய உணர்வு மேலோங்கியிருந்தது. இப்போ ஆன்மிக உணர்வு அதிகமாயிருக்கு. அடிக்கடி அவங் உணர்வுகளை

உங்களது டெபாசிட்டுகள் மீது இப்பொழுது வருடத்திற்கு 15% வட்டி

டிட்கோ

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

19-A, ருக்மணி லஷ்மிபதி சாலை, எழும்பூர், சென்னை-600 008 போன்: 8253159

பொது மக்களிடமிருந்து டெப்பாசிட்டுகளை வரவேற்கிறது.

சிறப்பு அம்சங்கள்

1. (அ) நிரந்தர வருவாய்த் திட்டம்

காலம்	வட்டி விகிதம்
25 மாதங்கள்	15% ஆண்டுக்கு
36 மாதங்கள்	
48 மாதங்கள்	
60 மாதங்கள்	

(ஆ) பணப் பெருக்கத் திட்டம்

காலம்	வட்டி விகிதம்	ரூ. 3000/-க்கு முதிர்வடையும் மதிப்பு (காலாண்டுக்கொரு முறை கூட்டப்படுகிறது)	கிடைக்கக் கூடிய இலாபம்
25 மாதங்கள்	15% ஆண்டுக்கு	4078	17.25%
36 மாதங்கள்		4666	18.51%
48 மாதங்கள்		5407	20.06%
60 மாதங்கள்		6264	21.76%

2. செலுத்தக்கூடிய வட்டி:
(திட்டம்(அ)க்கு) மாதம் ஒரு முறை - வருடத்திற்கு 14.63% விகிதத்தில் (தள்ளுபடி செய்தது). காலாண்டிற்கொருமுறை/அரையாண்டிற்கொருமுறை/வருடத்திற்கு 15% என்ற விகிதத்தில்
3. வருமான வரிச்சட்டம் பிரிவு 80 L படி ரூபாய் 7000/- வரைக்கும் விலக்கு அளிக்கப்படுகிறது.
4. சொத்து வரி சட்டம் 1957-ன் பிரிவு 5(1) (XXVII) படி டெப்பாசிட்டுகள் தகுதியானதாக கருதப்படுகிறது.
5. ஒரு நிதியாண்டிற்கு திட்டங்கள் (அ) மற்றும் (ஆ) ஆகிய இரண்டிற்கும் ரூ.2500/- வரை வட்டி மீது வரிப்பிடித்தம் கிடையாது. இதற்கும் அதிகமான வட்டிக்கும் படிவம் 15A, 15H, காடுப்பவர்களுக்கு வரிப்பிடித்தம் செய்யப்படமாட்டாது.
6. இந்தியாவில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அனைத்து கிளைகளிலும் சமமதிப்பில் வெளியூர் வட்டி காசோலைகளை ரொக்கமாக்கிக் கொள்ளலாம்.
7. திட்டம் (அ) மற்றும் (ஆ)-க்கு குறைந்தபட்சம் ரூ. 3000/-த்துடன் ரூ. 1000/-த்தின் மடங்குகளில் வைப்பீடுகள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

1977-ஆம் ஆண்டு வங்கி அல்லாத நிதிகம்பெனிகள் (ரிசர்வ் பாங்க்) உத்தரவுகள் படியும் மற்றும் 1977-ம் வருட வங்கி அல்லாத நிதி கம்பெனிகள் மற்றும் பலதரப்பட்ட வங்கி அல்லாத கம்பெனிகள் (விளம்பரம்) சட்டப்படியும் கொடுக்கப்பட வேண்டிய தகவல்கள்.

(A) கம்பெனியின் பெயர் : தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

(B) நிறுவப்பட்ட தேதி : 21.5.1965

(C) கம்பெனி மற்றும் அதனுடைய துணை நிறுவனங்களால் நடத்தப்படும் தொழில் அத்துடன் கிளைகள் மற்றும் பிரிவுகளின் விபரங்கள் : பொது, கூட்டு, இணை துறைகளில் தொழிற் சாலைகளை சமபங்குகள், கடன் பத்திரங்கள் வாயிலான முதலீடுகள் மூலம் உருவாக்குதல் மற்றும் கம்பெனியால் உருவாக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு கடன் உதவி அளித்தல், இதுவரை 44 கம்பெனிகள் நிறுவப்பட்டுள்ளது. மற்றும் 11 கம்பெனிகள் அமுலாக்கத்தில் உள்ளது.

துணை நிறுவனங்கள்:

1. தமிழ்நாடு சிமெண்ட் [illegible]
2. தமிழ்நாடு [illegible]
3. தமிழ்நாடு வெடி மருந்து நிறுவனம் [illegible]
4. தமிழ்நாடு மக்னீசியம் அண்ட் மரைன் கெமிக்கல்ஸ் லிமிடெட் [illegible]

(D) கம்பெனியின் நிர்வாகம் பற்றிய சுருக்கமான விபரங்கள் : இந்த கம்பெனி தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமானது. மற்றும் கம்பெனியின் அன்றாட அலுவல்களுக்கு பொறுப்பு வகிக்கும் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருடன் இயக்குனர்கள் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

(E) இயக்குநர்கள் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொழில் முகவரிகள்

இயக்குநர்கள் பெயர்	தொழில் மற்றும் முகவரி
திருமதி V. சந்திரலேகா, ஐ.ஏ.எஸ்	தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 19-A, ருக்மணி லஷ்மிபதி சாலை, சென்னை-600 008
திரு. B. விஜயராகவன், ஐ.ஏ.எஸ்	தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், 19-A, ருக்மணி லஷ்மிபதி சாலை, சென்னை-600 008.
திரு. C. ராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்	தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை - 600 002.
திரு. N. நாராயணன், ஐ.ஏ.எஸ்	அரசு செயலாளர், நிதித்துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
திரு. L.K. திரிபாதி, ஐ.ஏ.எஸ்	அரசுச் செயலர், தொழில்துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.
திரு. D. முருகராஜ், ஐ.ஏ.எஸ்	அரசுச் செயலர், பொதுப்பணித்துறை, சென்னை - 600 009. ([illegible])
திரு. [illegible], ஐ.ஏ.எஸ்	தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், தொழில் மற்றும் வணிக இயக்ககம், சேப்பாக்கம், சென்னை - 600 005.
திரு. கிருஷ்ணசாமி ராஜீவன் ஐ.ஏ.எஸ்	செயல் இயக்குனர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 19-A, ருக்மணி லஷ்மிபதி சாலை, சென்னை-600 008.

(F) & (G) முந்தைய மூன்று நிதியாண்டுகளுக்கு கம்பெனியால் அறிவிக்கப்பட்ட வரிகள் மற்றும் ஆதாயப் பங்கு தொகைக்கான ஒதுக்கீட்டிற்கு முந்தைய மற்றும் பிந்தைய கம்பெனியின் லாபங்கள் மற்றும் ஆதாயப் பங்குத்தொகைகள்.

(ரூ. லட்சத்தில்)

மார்ச் 31ந் தேதியுடன் முடிந்த ஆண்டு	வரிக்கு முன் லாபம் (+) நஷ்டம் (−)	வரிக்குப் பின் லாபம் (+) நஷ்டம் (−)	அறிவிக்கப்பட்ட ஆதாயப் பங்குத் தொகை
1989	(−) 18.21	(−) 18.21	இல்லை
1990	(−) 24.94	(−) 24.94	இல்லை
1991	(+)347.61	327.61	

(H) கம்பெனியின் சமீபத்திய இரண்டு தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலைக்குறிப்பு வெளியானபடி கம்பெனியின் சுருக்கமான நிதிநிலை

பொறுப்புகள்	31-3-91ல் உள்ளபடி (ரூ. லட்சத்தில்)	31-3-90ல் உள்ளபடி	சொத்துக்கள்	31-3-91ல் உள்ளபடி (ரூ. லட்சத்தில்)	31-3-90ல் உள்ளபடி
பங்கு மூலதனம்	10793.77	9487.77	நிலையான சொத்துக்கள் (தேய்மானம் போக அடக்க மதிப்பில்)	24.13	23.08
சேமநிதிகளும், உபரிகளும்	76.72	56.71	முதலீடுகள் (அடக்க மதிப்பில்)	11339.27	10731.54
ஈடுபெற்ற கடன்கள்	—	—	நடப்பு சொத்துக்கள்	537.72	198.71
ஈடுபெறா கடன்கள்	6864.37	6363.90	கடன்கள் மற்றும் முன் பணங்கள்	7200.51	6230.57
திருத்திவைத்து பின் செலுத்தும் பொறுப்புகள்	674.97	857.75	பல்வகை செலவுகள் (தள்ளுபடி செய்து கொள்ள முடியாத அளவிற்கு)	28.63	29.91
நடப்பு பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள்	720.43	439.68			
	19130.26	17205.81		19130.26	17205.81

குறிப்பு: நிலையற்ற பொறுப்புகளின் விபரங்கள்

			31.3.91 அன்றுள்ளபடி (ரூ. லட்சத்தில்)	31.3.90 அன்றுள்ளபடி (ரூ. லட்சத்தில்)
1.	கடன்களாக ஏற்றுக் கொள்ளப்படாத கோரிக்கைகள்	ரூ.	250.92	247.50
2.	பகுதியாக செலுத்தப்பட்ட பங்குகள் சம்பந்தப்பட்ட கோரப்படாத பொறுப்பு	ரூ.	0.01	0.01
3.	மூலதன கணக்கில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தங்கள்	NOK	11.07	11.07
4.	நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் சார்பில் தனியாகவோ அல்லது கூட்டு தொழில்	ரூ.	4501.67	3719.81
	முனைவர்களுடன் கூட்டாகவோ நிறுவனத்தால் வெளியிடப்பட்ட	SEK	83.30	330.50
	உத்தரவாதத் தொகை	DM	94.30	110.00
5.	திருத்தி வைத்தப்பின் செலுத்தும் பொறுப்புகள்	ரூ.	1332.49	1477.95
6.	பணிக்கொடைக்கான கணக்கில் காட்டப்படாத தொகை	ரூ.	21.30	19.70
7.	அபராத வட்டிமீது கணிக்கப்பட்ட பொறுப்பு	ரூ.	81.16	81.00
(I)	(a) ஆர்பிஐ உத்திரவுப்படி வைப்பீடுகள் மூலம் நிறுவனம் எழுப்பக்கூடிய தொகை	ரூ.	4336.74	3805.82
	(b) வைத்துள்ள சரியான வைப்பீட்டுத் தொகைகள்	ரூ.	1363.29	1108.17

(J) இந்த விளம்பர தேதியன்று உள்ளபடி கம்பெனியிடம் கோரப்படாத டெப்பாசிட்டுகளை தவிர காலங்கடந்த டெப்பாசிட்டுகள் கிடையாது.

(K) கம்பெனி இதன் மூலம் அறிவிப்பதாவது

(i) கம்பெனி ஆர்பிஐ உத்தரவுகளின் பொருந்தக் கூடிய விதிகளை பின்பற்றியுள்ளது.

(ii) மேற்படி விதிகளை பின்பற்றப்படுவதால் டெப்பாசிட்டுகளை திருப்பியளிக்க ஆர்பிஐ உத்திரவாதம் அளித்திருப்பதாக கருதலாகாது.

(iii) கம்பெனியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட டெப்பாசிட்டுகள் ஈடுபெறாதவைகளாகும் மற்றும் ஈடுபெறாத இதர பொறுப்புகளுக்கு சமமாகவே கருதப்படும்.

(L) இந்த விளம்பரம் கம்பெனியின் இயக்குனர்கள் குழு பெயரிலும் மற்றும் அதன் அதிகாரத்திலும் வெளியிடப்படுகிறது. 23-09-91 அன்று கம்பெனியின் இயக்குநர்கள் குழுவால் இந்த விளம்பர வாசகம் அங்கீகரிக்கப்பட்டு அதன் நகல் ஒன்று கம்பெனியின் பெரும்பான்மை இயக்குனர்களால் கையெழுத்திடப்பட்டு ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா பேங்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குழு உத்தரவுப்படி
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி
நிறுவனத்திற்காக
S. துரை
கம்பெனி செயலாளர்

சென்னை
தேதி: 23 செப்டம்பர் 1991

DIPR/MS/91

வள்ளி : வருசத்துக்கொரு தீபாவளி நாள்
வந்திடப் போகுதே மாமா! - நாம
வழக்கமாய்ப் புதுத் துணி பலகாரம்
வைச்சுப் படைக்க வேண்டாமா?

குப்பன் : பண்டமெல்லாம் விலை ஏறிக்கிடக்கு!
பணம் எங்கேடி இருக்கு? - அரைப்
பட்டினியாலே வாடுற நமக்குப்
பண்டிகை என்னடி கணக்கு?

வள்ளி : பஞ்சமும் பசியும் எப்பவும் இருக்கு!
பண்டிகையை விடலாமா? - நம்ம
பக்கத்து வீட்டிலே கேட்டாவது கடன்
பணத்தை வாங்கணும் மாமா!

தீபாவளிக் கடன்

கவிஞர் கு.மா.பா.



குப்பன் : வாங்கிய கடனின் வட்டி குடுக்கவே
வக்கு வழி நமக்கில்லை! - இப்போ
ஏங்கும் நிலைமையில் இன்னும் கடன் பெற்றால்
என்றைக்கும் தீராத தொல்லை!

வள்ளி : கஞ்சி குடிக்கிற ஏழைக்குத்தான் கடன்
அஞ்சு பத்து மட்டும் இருக்கும் - பெருங்
கம்பெனியெல்லாம் நூறு நூறு லட்சம்
கடனை வாங்கிச் சுமக்கும்!

குப்பன் : உசந்த பேருக்குக் கடனைக் குடுக்க
உலக வங்கியே இருக்கு! - மனம்
அசந்துபோன நமக்கும் உதவ
அங்கெல்லாம் ஏதடி கணக்கு?

வள்ளி : எந்தக் கடன்காரர் எத்தனை வங்கியில்
எப்போ கடன் வட்டி தீர்த்தார்? - இன்னும்
அந்தக் கணக்கெல்லாம் தூங்குவதால் நாமும்
அஞ்சாமல் வாங்குவோம் மாமா!

குப்பன் : கண்ணாட்டியே! கடன் வாங்கியும் வாழும்
கலைகள் உன்னிடம் கற்றோம்! - நாம்
இன்னும் கடன்பட்டே தீபாவளி நாளில்
இன்பத் திருவிழா செய்வோம்!

மாத்திக்கிறான் போல இருக்கு. நான் சொன்ன இந்த முரளிக்கு பத்தாயிரம் ரூபா கடனாகக் கொடுக்க முடியலியாம். ஆனா கிட்டத்தட்ட ரெண்டு மூணு லட்சம் ரூபாயை நம்ப பிரதாப்போட அப்பன் கட்டின கோயிலுக்கு அன்பளிப்பா கொடுப்பானாம். ஆக இவன் அன்னிக்கு என் புத்தகத்தோடு முதல் பிரதிக்குக் கொடுத்த இருபத்தஞ்சாயிரம் ரூபா இலக்கியத்துக்காக இல்லே. என் பதவிக்காக; காக்கிச் சட்டைக் காக. நேர்மை தவறாத, கறை படியாத கண்டிப்பான அதிகாரி யான என்னை அந்த ராஸ்கல் எனக்கு தெரியாமலேயே களங்கப் படுத்தியிருக்கான். இப்போ என் னோட முதல் வேலை பாங்கிலே ஓர் இருபத்தஞ்சாயிரம் ரூபாயை எடுத்திட்டு வந்து அவன் மூஞ்சியிலே வீசிட்டு வர்றதுதான். அப்பத்தான் எனக்கு நிம்மதி".

"நோ நோ. அவசரப்படாதீங்க. அவர் முகத்திலே நீங்க அந்தப் பணத்தை வீசியெறிஞ்சிட்டா அவ ருக்கு அது லாபமாயிடும். இது வரை உங்க நெருக்கத்தை அவர் பயன்படுத்திக்கிட்ட பிறகு இனி அந்தப் பணத்தை நீங்க திருப்பிக் கொடுத்தா என்ன? கொடுக்க லேன்னா என்ன?"

"பின்னே இந்தப் பாவப்பட்ட பணத்தை பேசாம வச்சிக்க லாம்னு சொல்றியா...? இதுவரை இதை வச்சிட்டிருந்த பாவத்துக் காக வட்டியும், முதலுமா இந்தப் பிரதாப் கட்டியிருக்கிற கோயில் உண்டியல்லேயாவது போட்டுட்டு வந்திடுவோம்".

"வேணாங்க. பதவியிலே இருக் கற பிரதாப்புக்காக அந்தக் கோயி லுக்கு நிறையப் பேர் பணத்தைக் கொண்டுவந்து கொட்டுவாங்க. ஆனா நீங்க கட்டிட்டிருக்கீங்களே ஒரு கோயில். பிரம்மாண்டமான எதிர்காலம் - முரளி. அவன்கிட்டே அந்தப் பணத்தைக் கொடுங்க. புண்ணியத்துக்குப் புண்ணியமு மாச்சு. தெரியாம செய்த ஒரு பாவத்துக்குப் பிராயச்சித்தமு மாச்சு".

சார்தா சொன்னது சரியாகத் தோன்றியது. வங்கியில் கேசவன் கணக்கில் ரூபாய் இருபத்தை யாயிரம் குறைகிறது. அவரது இதயம் நிறைகிறது. ം





பி. சுசீலா

 ● போட்டோ : யோகா

எஸ். ஜானகி





வாணி ஜெயராம்

அமுதசுரபி தீபாவளி மலர் '91 ● போட்டோ : யோகா

சித்ரா

பின்னணி இசைமேதைகள்

நவீனன்



பி. சுசீலா

சுசிலா என்றால் - சுருதி சுத்தமான பாடல், சீலமுள்ள வாழ்க்கை, 'லாலாலா' என்று பாடினாலும் இனிமை - என்று மூன்று எழுத்துகளுக்கும் பொருள் கூறவேண்டும். சினிமாப் பின்னணிப் பாடகிகளில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தன் இடத்தை அப்படியே காப்பாற்றி வரும் திறமை இவருக்கே உரியது.

சங்கீத உலகில் சிலருக்குச் சில ஆண்டுகள் சீஸன் என்பார்கள். அதெல்லாம் சுசீலா விஷயத்தில் கிடையாது. தன் குரல் வளத்தை இத்தனை ஆண்டுகளாக எப்படித்தான் காப்பாற்றி வருகிறாரோ? அதுபற்றி சுசீலாவிடம் கேட்டால் அளவோடு சிரித்து, அடக்கமாக இருந்துவிடுவார்! அப்படி ஓர் அசாத்தியமான சாதுத் தன்மை.

ஏவி.எம். நிறுவனம்தான் இந்தக் குயிலுக்கும் சரணாலயம். அங்கு பல படங்களில் பாடிப் புகழ் இறக்கைகளுடன் உற்சாகமாக வெளி உலகுக்குப் பறந்து வந்த இன்னிசைப் பறவை அவர்!

தமிழ் தவிர பலமொழிப் படங்களில் பாடிப் புகழ்பெற்றவர். அந்தக் காலத்தில் இசை அமைப்பாளர் எம்.எஸ். விசுவநாதனும், அமரர் கவிஞர் கண்ணதாசனும் இவருக்குக் கலங்கரை விளக்கங்களாகக் கிடைத்தது அதிர்ஷ்டம்.


ஒரு படம் வெற்றி பெற்றாலும், தோல்வியைத் தழுவினாலும் சுசீலாவைப் பொறுத்தவரை அவர் பாடியுள்ள பாடல் பிரபலமாகி விடும். இவர் 'மன்னவன் வந்தானடி' என்று பாடினாலும் சரி, 'அத்தைமடி மெத்தையடி' என இசைக் குரல் எழுப்பினாலும் சரி, 'பாலும் பழமும் கைகளில் ஏந்தி' குழைந்து குரல் கொடுத்தாலும் சரி லட்சோப லட்சம் ரசிகர்கள் கேட்டு மகிழ்ந்து இருக்கிறார்கள்.

வேறு எந்தப் பின்னணிப் பாடகிக்கும் கிடைக்காத பிரத்யேகப் பெருமை தமிழ்நாட்டு வானொலி நிலையங்கள் ஏதாவது ஒன்றில் தினசரி இவரது பாடல்கள் ஒலித்துக் கொண்டே இருப்பது.

இசைஞானி இளையராஜா சில புதிய பாடகிகளுக்கு வாய்ப்பளிக்க ஒரு திருப்புமுனை ஏற்படுத்தினாலும் சுசீலா மட்டும் அவரது அபிமானப் பட்டியலில் அப்படியே இருந்து கொண்டு இருக்கிறார்! காரணம், சில குறிப்பிட்ட பாடல்களை சுசீலா பாடினால்தான் பொருத்தமாக இருக்கும் என்பது அவருடைய ஏற்றமிகு கருத்து.

அந்தக் காலத்தில் எம்.எஸ்.வி.யினால் புகழ் ஏணியில் ஏற்றப்பட்ட இவர், இசைஞானியினால் அந்த ஏணிக்கு இன்னும் சில படிகள் கட்டப்பட்டு அதன் மேல் ஏற்றிவிடப்பட்டவர்.

எஸ். ஜானகி



அந்தக் கோகிலக் குரல் 'சிங்கார வேலனே' என்று ஒலித்த பொழுது கோடானுகோடி மக்கள் மெய்மறந்து கேட்டார்கள். இனிய குரலோடு காருக்குறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வர இசையும் இணைந்த பொழுது திரைப்பட உலகில், இசை அமைப்பில் ஒரு புதுமை என்று ரசிகர்கள் ஆனந்த ஆரவாரமிட்டார்கள். குரலுக்குரியவர் எஸ். ஜானகி.

பின்னணிப் பாடகி ஜானகி பிறந்தது ஆந்திரம். புகழ்பெற்றது தமிழகம். தமிழ், தெலுங்கு மட்டுமல்ல. கன்னடம், இந்தி, சிங்களம், கொங்கணி ஆகிய மொழிகளிலும் பாடிப் புகழ் குவித்தவர்.

தொடக்க காலத்தில் ஏவி.எம். நிறுவனத்தில் மாதச்சம்பளத்தில் அமர்த்தப்பட்ட ஜானகி அங்குதான் தன் குரலுக்கு மெருகூட்டிக் கொண்டார். ஏவி.எம். அவர்களின் கண்டுபிடிப்பில் யார்தான் பிரபலம் அடையவில்லை?

இவர் முதல் முதலாகத் தமிழில் பாடித் தேசிய விருது பெற்ற படம் 'பதினாறு வயதினிலே'. அதில் இவர் பாடிய 'செந்தூரப் பூவே' பாடல் ஒலிக்காத பட்டி, தொட்டி, பட்டணம் இல்லை. 'ருசி கண்ட பூனை' என்ற தமிழ்ப் படத்தில் குழந்தைக் குரலில் இவரே பாடல் எழுதி மெட்டு அமைத்துப் பாடியது மற்றொரு மகத்தான சாதனை. சினிமாவில் கர்நாடக சங்கீதம் பாடியும் விருது பெற முடியும் என்று இவர் 'சங்கராபரணம்' படத்தின் வாயிலாக நிரூபித்தார். அந்தச் சாதனை இவருக்குப் பக்த தியாகராஜர் மீது விசேஷ பக்தி உண்டாகக் காரணமாயிற்று. திருவையாற்றில் பக்த தியாக

ராஜருக்கு ஆராதனை உற்சவம் நடைபெறும் நாளில் இவர் அங்கு சென்று சமாதிக்கு முன் அமர்ந்து அஞ்சலி செய்ததைப் பலர் கண்டு வியப்புற்றார்கள்.

குண்டூரில் இவருக்கு ஒரு வித்தியாசமான வெள்ளி விழா நடத்தினார்கள். இந்தியப் பட உலகில் உள்ள இசை அமைப்பாளர்கள், பாடல் ஆசிரியர்கள் அனைவரும் அங்கு அழைக்கப்பட்டு, அவர்களுக்குப் பாராட்டும் நன்றியும் இவர் தெரிவித்துக் கொண்டதை ஒரு மாறுபட்ட விழா என்று சினிமா வட்டாரம் விமரிசித்தது.

இவருடைய வாழ்க்கையில் சுருதி பேதம் செய்யாத கணவர் பெயர் ராம்பிரசாத். ஒரே மகன் முரளிகிருஷ்ணா கிட்டார் வாசிக்கிறான்.

ஜானகி இதுவரை 7000 பாடல்கள் வரை பாடி இருக்கிறார். அந்த எண்ணிக்கையைத் தென்னகத்தில் யாரும் தொட்டது இல்லை!

வாணி ஜெயராம்

வாணி ஜெயராம் வீட்டிற்குள் நுழைந்தால் ஒரு கலைக் கோயிலுக்குள் புகுந்த பரவசம் ஏற்படுகிறது. அவர் பேசும் குரலும் பாடும் குரலும் ஒன்றுதான்! இரண்டிலும் இனிமை இழையோடுகிறது.

"குட்டி" என்ற இந்திப் படத்தின் வாயிலாகப் படவுலகில் பின்னணி பாட வந்த வாணிஜெயராம் தன் பம்பாய் முகாமைத் தமிழகத்திற்கு மாற்றிக் கொண்டார். அதுவும் நல்லதாயிற்று. சுருதி சுத்தமாக, வார்த்தைகளை விழுங்காத 'பாவம்' நிறைந்த தமிழ்ப் பாடல்களைக் கேட்கும் பேறு தமிழ் ரசிகர்களுக்குக் கிட்டியது.

சங்கர் – கணேஷ் இசை அமைப்பில் இவர் பாடிய முதல் தமிழ்ப் படம் "வீட்டிற்கு வந்த மருமகள்". அதற்கு முன் பி.லீலாவும், எஸ். ஜானகியும், சுசீலாவும் திரைப்படங்களில் பிரபலமாகி இருந்த ஒரு காலக்கட்டத்தில் புதுக்குரல் ஒலித்தது. அது வாணிஜெயராமின் குரல்! அந்த ஆத்மார்த்தமான சங்கீதத்தை அனைவரும் பெரிதும் அனுபவித்துக் கேட்டார்கள்.

"மேகமே – மேகமே" என்று இவர் பாடிய ஒரு படப்பாடல் இலங்கையில் போர் மேகங்கள் சூழ்ந்திருக்கும் இப்பொழுதும் ஒலிபரப்பிக் கொண்டே இருக்கிறார்கள். இலங்கை ரசிகர்களுக்கு அது ஒரு லட்டு.

பின்னணிப் பாடகியாக இவர் இருந்தாலும் இந்தியில் 'பஜன்' பாடுவதில் முன்னணியில் இருக்கிறார். பக்திப் பெருக்கோடு உருகி இவர் பாடிவரும் 'பஜனை' பாரதம் மட்டுமல்ல, வெளிநாட்டு ரசிகர்களும் விரும்பிக் கேட்டு பக்தியில் திளைத்து வருகிறார்கள்.

அண்மையில் பூரி ஜகந்நாதர் ஆலய விழாவில் இவர் ஒரியா மொழியில் பாடிய பக்திப் பாடலுக்காகப் பெற்ற பட்டம் "கீத சரசுவதி". ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீ ஆனந்தலஹரிக்கு எல். கிருஷ்ணன் இசையமைக்க, வி.ஆர்.வரதராஜன் தமிழ்ப்படுத்தித் தர, இவர் பல ராகங்களில் உள்ளம் சிலிர்க்கும்படி பாடி ஒரு கேஸட் வெளிவந்துள்ளது. அது பக்த கோடிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்.

சில நாள்களுக்கு முன் இவர் காஞ்சிப் பெரியவர் அவர்களது சந்நிதியில் பக்திப் பாடல்கள் பாடி அவர்களுடைய ஆசியையும், பிரசாதங்களையும் பெற்று வந்தார். அதோடு காஞ்சிப் பெரியவர் பூஜையில் வைத்திருந்த ருத்ராக்ஷம் இவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதை இவர் தன் கழுத்தில் ஒரு ரட்சைபோல் அணிந்திருக்கிறார்.

வாணி ஜெயராமுக்கு அது 'சங்கராபரணம்'.

சித்ரா

"**இ**வரா அந்தச் சிங்காரக் குரலுக்குச் சொந்தக்காரர்?" என்று வியப்போடு கேட்கவைக்கும் தோற்றம். "இவரா படத்திற்குப் படம் பாராட்டும்படி இந்த இளம் வயதில் புகழ்பெற்ற பாடகி?" என்று கேட்க வைக்கும் மற்றொரு வியப்பு!

இவர் பிரபல பின்னணிப் பாடகி சித்ரா. இவரைக் கண்டு பிடித்த பெருமை பிரபல சங்கீத வித்துவான் ஜேசுதாஸுக்கு உரியது. கண்டுபிடித்தவரைக் கண்டு கொண்டு, ரசிகர்களுக்கு ஒரு புதிய பாடகியைப் பெரிய அளவில் விளம்பரப்படுத்திய பெருமை இசைஞானி இளையராஜாவிற்கு உரியது.

திருவனந்தபுரம் சங்கீதக் கல்லூரியில் முறைப்படி சங்கீதம் பயின்று, தேர்வு பெற்று வந்தவர் இவர். இவரது இசைத் திறமையைப் புரிந்து கொண்ட எம்.எஸ். ராதாகிருஷ்ணன் என்னும் மலையாளப்பட இசை அமைப்பாளர் மலையாளப் படத்தில் பாட முதல் வாய்ப்பு அளித்தார்.

தொடர்ந்து தரங்கிணி கலைக்கூடத்தில் இவர் பாடிய கேஸட்டுகள் வெளிவரவே இவரைப் பற்றி ஜேசுதாஸ் சிறந்த எண்ணம் கொண்டார். தன் இசைக் குழுவோடு சில காலம் பாடச் செய்த ஜேசுதாஸ் இவரை இசைஞானிக்கு அறிமுகம் செய்து வைத்தார். இசைஞானி இவரது 'பாடும் திறமை' என்னும் வைரத்திற்குப் பட்டை தீட்டினார்.

'சிந்துபைரவி' தமிழ்ப் படத்தில் இவர் பாடிய பாடல்கள் அத்தனையும் பிரபலமாயின. அதற்கு இவருக்குத் தேசிய விருது கிடைத்தது. தொடர்ந்து நகசடங்கல், வைசாலி ஆகிய மலையாளப் படங்களுக்கும் தேசிய விருதுகள் கிடைத்தன.

'பூவே பூச்சூடவா' படத்தில் இவர் பாடியுள்ள "சின்னக்குயில் பாடும் பாட்டு கேட்குதோ?" என்ற பாடலும் அதன் நடுவே எழுப்பப்படும் 'குக்கூ... குக்கூ' குரலும் இன்றும் ரசிகர்களின் உதடுகளில் இன்னிசையாக மிதந்து வருகின்றன.


சித்ராவின் வீடு ஒரு சித்ரகூடம். அவர் வாங்கி உள்ள விருதுகளை நவராத்திரி கொலுவாக வைக்கலாம். அவற்றிற்கு நடுவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் வண்ணப்படமும், ஒருபக்கம் வடநாட்டு பிரபல பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கரும், இன்னொரு பக்கம் நமது எஸ்.பி. பாலசுப்ரமணியனும் சேர்ந்து நிற்கும் வண்ணப்படமும் நடுநாயகமாக விளங்குகின்றன.

எப்பொழுதும் ரெக்கார்டிங் இருந்து கொண்டே இருக்கிறது. இந்தச் சின்ன வயதில் ஓர் அரிய சாதனை. ஒரு நாளுக்குக் குறைந்தது ஆறு படங்களுக்குப் பாடுகிறார்!

பொழுது

(ஒரு கற்பனைச் சித்திரம்)

மின்னூர் சீனிவாசன்



"என்னடி அல்லி, இத்தனை சோம்பல்!" என்றது தாமரை. "இல்லை கமலக்கா! நான் சுறுசுறுப்புத் தான். விழிமூடிச் சிந்திக்கிறேன்" என்றாள் அல்லி. கண்களை அகல விரித்த கமலப் பூ கேட்டது : "அப்படியா உன் சிந்தனைதான் என்ன!"

"என்னவா! உன் சிவந்த மேனியில் முத்தாய் வைரமாய் மின்னுகிறதே நகை... அதையெண்ணித் தான்...!"

"அப்படியா அல்லி! அதற்குப் பெயர் பொறாமை. சிந்தனையல்ல. அந்தப் பொறாமையால் முகம் வெளிறிற்றோ!" என்றாள் தாமரை.

"கோபிக்காதே கமலக்கா! ஆனால் கோபித்தால் கூட உங்கள் முகத்தின் அழகு குங்குமப் பொலிவாக இருக்கிறது. அதையுந்தான் பார்க்கிறேன். நகை நட்டு ஒன்றிரண்டு தொத்தியிருந்தும் என் அழகு எடுபட வில்லை. கவிஞர்கள் உங்களையே அல்லவா நிறையப் புகழ்ந்து பாடுகிறார்கள்? திருமகளின் பீடம் என்கிறார்கள்!" இப்படி அங்கலாய்த்தாள் அல்லி.

"உனக்கென்னடி அப்படிக் குறை வந்தது அல்லி! சரசுவதிபோல் வெள்ளாடை, தவசியைப் போல் உலகை நோக்கி மலராத - கூம்பிய மனம்! அப்படியிருந்தும் என்னை வீணாகப் புகழ்கிறாயே!" இதைச் சொன்னது தாமரை.

காற்றில் குலுங்கிச் சிரித்த அல்லி, "சரியாய்ப் போச்சு கமலக்கா! விதவைக் கோலம் என்று வேண்டு மானால் சொல்லக்கா! உங்கள் குங்குமக் கோலம் யாருக்கு வரும்! கவிகள் மனமே வண்டுவடிவில் உங்களையே முற்றுகையிடும். நீங்கள் மலர்ந்த காட்சியைக் கண்டு யார்தான் வியப்பில் விழமாட்டார்கள்!...

இப்படி தாமரை - அல்லி பேச்சரங்காக விளங்கிய குளத்தில், சற்று நேரத்தில் ஓர் எருமை வந்திறங்கியது. தாமரை, தண்டு நெறிந்து, "அடடே இரவின் இருளோ... அதற்குள்ளாகவா! இப்போதுதான் விடிந்தாற்போலிருந்தது!" என்று குமுறினாள். தாமரை - அல்லி இருவருக்கிடையில் நுழைந்த எருமையின் அசைவால், தனி ஆவர்த்தனத்தில் தட்டப்படும் மிருதங்க ஒலிபோல் சத்தமெழ அலைகள் அதிர்ந்தன. எழுந்த அலைகள் குளத்தின் கரைவரை துவைத்து அலசும் ஆடைச் சுருக்கங்கள் போல் சென்று ஓரத்தைத் தொட்டுத் திரும்பின. எருமை குழப்பிய குளம் கலங்கியது. தாமரையும் அல்லியும் கொலுவாய் நிலவிய தடாகத்தின் அழகு குலைந்தது. தாமரை எண்ணியெண்ணிப் பொருமினாள். எத்தனை அழகும் பொலிவும் இருந்தென்ன! உள்ளங் கறுத்தார் பக்கத்தில் இருந்தால் அவதிதான். குழப்பந்தான் - வாழ்க்கை!

அல்லியோ தன்னுள் சொல்லிக் கொண்டாள் : "பாறை மனத்தவர் பக்கத்தில் வாழ்வதே தொல்லை!"

தாமரையும் அல்லித் தோழியும் தன் குறுக்கீட்டால் பிரிந்து திகைத்து நிற்பதை அறியாத எருமை துளைந்து நீராடியது. அதன் காதில் தாமரையைப் புகழ்ந்து பாடிய ஒரு வண்டின் 'ரீங்காரம்' கிறக்கம் தந்தது. உறக்கமும் தந்தது!



அவன் நல்ல கறுப்பு. தொட்டு மை இட்டுக் கொண்டு விடலாம். அந்த அளவிற்குக் கறுப்பு. அவன் பிறந்த உடனே நர்ஸ் குழந்தையாகக் கொண்டு வந்து வெளியில் காட்டியபோதே அவனது பாட்டி – அப்பாவின் அம்மா – நம்ப மறுத்துவிட்டார்களாம்.

"இது யார் குழந்தையோ... நம்ப குழந்தை இல்லை..." என்றார்களாம். "வேணும்னே குழந்தையை மாத்திக் காட்டறியாடியம்மா? இரு... இரு... டாக்டர் வரட்டும் சொல்றேன். எதுல விளையாடறதுன்னு வரைமுறையில்லாமல் போச்சு..." எனக் குழந்தையைக் காட்டிய நர்ஸிடம் சத்தம் போட்டார்களாம். அந்த நர்ஸ் சொல்லி, டாக்டர் வெளியில் வந்து சொல்லி,

"உங்க பேரன்தான் பாட்டி... சாட்சாத் உங்க மருமகள் பெற்றெடுத்த குழந்தை..." என்றெல்லாம் சத்தியம் செய்தபின்புகூடப் பாட்டி மறுகிக் கொண்டிருந்தார்களாம்.

"இது என்னடா வீரராகவா, உன் பிள்ளையாடா இது? தொட்டால் சிவந்து போற மாதிரி என்ன நிறம் நீ! உன் பெண்டாட்டி தங்கக் குத்துவிளக்கு மாதிரி எப்படி இருக்கா! உங்களுக்கா கன்னங்கரேல்னு இப்படி ஒரு குழந்தை வந்து பிறந்திருக்கு? நம்ம ஆத்துல யாரும் கறுப்பு இல்லையேடா? ஒரு வேளை அவ வீட்ல தாத்தாவுக்குத் தாத்தான்னு யாராவது கறுப்பா இருந்தாளோ...?" என்றெல்லாம் மன்றாடிக் கடைசியில் குழந்தையின் கறுப்பு நிறத்திற்கான பூர்வோத்திரத்தைக் கண்டுபிடித்தார்களாம்.

"அவளோட தாத்தாவுக்குக் கூடப் பொறந்த தங்கை ஒருத்தி இப்படித்தான் கன்னங்கரேல்னு இருந்தாளாம். அந்த மாதிரி கறுப்பு குடும்பத்திலேயே இல்லையாம்... உன் பிள்ளை அந்தத் தங்கையோட நிறத்தைக் கொண்டு வந்திருக்குபோல இருக்குமாடா வீரராகவா..." என்று சமாதானப் படுத்திக் கொண்டார்களாம். ஆனாலும் உயிரோடு இருந்தவரை கடைசி நிமிடம்கூட அவன் கறுப்பு என்கிற குறையுடனே கண்களை மூடினார்களாம்.

அப்படிப்பட்ட கறுப்பு அவன். கறுப்புதானே தவிர முகம் நல்ல லட்சணம். கண்களும், மூக்கும் செதுக்கின மாதிரியான அழகு. உயரமும், அதற்கேற்ற பருமனுமாக மூலவர் விக்கிரகம் மாதிரி இருந்தான். தனியார் துறை நிறுவனம் ஒன்றில் பொறியியல் நிபுணராகச் சேர்ந்து தற்போது அந்த நிறுவனத்தின் மானேஜராகப் பதவி உயர்வு பெற்றிருக்கிறான். நல்ல சம்பளம். வீடு, கார், தொலைபேசி எல்லாமே அந்த நிறுவனத்தின் செலவு. வாரம் தவறாமல் டெல்லி, கல்கத்தா என்று விமானத்தில் பறக்கிறான்.

இத்தனை இருந்தும், பத்மினி – அவனது அத்தை பெண் – அப்பாவின் தங்கை பெற்ற பெண் – அவனைக் கல்யாணம் செய்துகொள்ள மறுத்துவிட்டாள்.

"ஐய... என்னம்மா நீ ஜெயராமனைக் கல்யாணம் செய்துக்கச் சொல்ற? அவனும் நானும் பக்கத்துல நின்னால் எள்ளும், பச்சரிசியுமா இல்ல இருக்கும்" என்று சிரித்தாள்.

அவளது அம்மாவிற்கு அதை யாராவது கேட்டுவிடப் போகிறார்களே என்கிற பயம் வந்தது. அண்ணாவின் காதில் பட்டால் என்ன நினைப்பான் என்று தோன்றியது. அப்பா இன்றி அந்த வீட்டில் வளர்ந்த – அவர்கள் தயவில் படித்துமுடித்து தற்போது வேலை தேடிக் கொண்டிருக்கிற – பெண்ணின் பேச்சு பிடிக்கவில்லை. தன் அண்ணா, மன்னியின் ஆதரவு இல்லாது போனால் இன்று இந்த நிலைமையில் நிற்க முடிந்திருக்குமா என்கிற நன்றி உணர்வு மேலிட்டது.

இவளை ஒரு வயதுக் குழந்தையாக இருந்தபோது நிராதரவாக விட்டுச் சென்ற கணவனின் நினைவு வந்தது. அன்றிலிருந்து இன்றுவரை எங்கு போனான் என்பதே தெரியவில்லை. அந்த ஒரு வயதுக் குழந்தை இப்போது இருபது வயதுப் பெண்ணாக நிற்கிறது என்றால் அதற்குக் காரணம் தன் அண்ணாவும், மன்னியும். அவர்களது ஒரே பையனைக் கறுப்பு என்ற காரணம் காட்டிக் கல்யாணம் செய்துகொள்ள மறுப்பது நன்றியற்ற செயலாகப் பட்டது. உள்ளுக்குள் கோபம் வந்தது. அது பேச்சில் வெளிப்பட, சற்று அழுத்தமான குரலில் கேட்டாள் அந்த அம்மாள்.

"கறுப்புன்னா என்னடி? ஜெயராமன் அழகா இல்லையா?"

"கறுப்பே அழகு. காந்தலே ருசின்னு சொல்ல வரியாம்மா...? என்னிக்காவது நான் காந்தலைப் போட்டுச் சாப்பிட்டுப் பார்த்திருக்கியாம்மா?"

"காந்தல் பிடிக்காது இல்ல? பின்ன எதுக்கு அவன்கிட்ட சிரிச்சுப் பேசற? பழகற? வேணாம்னால் தூர ஒதுங்கிப் போக வேண்டியது தானே?"

உடலழகும் தோற்றமும் வெள்ளையாக இருக்க வேண்டும் என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டு கறுப்பான ஒருவனை நிராகரித்தபோது, அவன் தன் வெள்ளை உள்ளத்தைத் திறந்து காட்டியபோது?

"ஐயோ... சிரிச்சுப் பேசறது ஒரு தப்பாம்மா? சிரிச்சுப் பேசற வாளையெல்லாம் கல்யாணம் செய்துக்க முடியுமாம்மா? எந்தக் காலத்துல இருக்கே நீ? ஒரு நல்ல பிரெண்டா நான் பழகறேம்மா".

"ஆனால் அவன் அப்படி நினைக்கலியேடி"

"அது என் தப்பு இல்லம்மா. வேற மாதிரி நினைக்கிறபடி நான் என்னிக்காவது பேசியிருக்கேனா, பழகியிருக்கேனான்னு நீ உன் அண்ணா பிள்ளைகிட்டயே வேணு மானா கேட்டுப் பாரு".

"இப்ப நீ என்னதாண்டி சொல்ற?"

"அம்மா! என் அழகுக்கு ஏற்ற மாதிரி வெள்ளை வெளேர்னு லட்சணமானவனா வரணும்னு நினைக்கிறேன். ஜெயராமனைப் போல் அத்தனை படிப்பு, பணம், வசதி இதெல்லாம் இல்லாமப் போனால்கூடப் பரவாயில்லை. ஆனால் கண்ணுக்கு நிறைஞ்ச வனா, மனசுக்குப் பிடிச்சவனா இருக்கணும்னு நான் ஆசைப் படறதில் என்ன தப்பு சொல் லும்மா?"

அந்த அம்மாளால் பதில் சொல்ல முடியவில்லை. கடைசி யாக அவள் கேட்ட கேள்வியின் நியாயம் மனதைத் தொடப் பேசாமல் போய்விட்டாள்.

நாலைந்து நாள்கள் சென்றபின் மெதுவாக அண்ணனிடம் சொல்லி, மன்னியிடம் சொல்லிக் கடைசியாக பத்மினியின் மறுப்பு ஜெயராமனை யும் எட்டிற்று.

அதிர்ந்து போனான் அவன். மற்றவர்களைப்போல் சுலபமாக் எடுத்துக்கொண்டுவிட முடியாத வனானான். அந்த அளவிற்கு பத்மினியை அவன் நேசித்தான். மனைவியாக மனதிற்குள் நிறுத்திப் பார்த்து சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தான். அவள் தன்னை மறுக்கக்கூடும் என்ற எண்ணம்கூட ஏற்படாததால் அவ ளது மறுப்பு பலமான அடியாக நெஞ்சில் விழுந்தது. வலியையும், வேதனையையும் ஏற்படுத்திற்று. நம்பமுடியாததாயிற்று. அதிலும் தன் நிறத்தைக் காரணம்காட்டி அவள் மறுத்தது அதிகக் கஷ்டம் கொடுத்தது. ஆனாலும் அந்த மறுப்பை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமற் போக அவன் தன்னை அமைதிப்படுத்திக் கொள்ள முயன்றான்.

பத்மினிக்கு வேறு இடங்களில் மாப்பிள்ளை பார்க்கிற செய்தி அவனுக்கும் தெரியவந்தது. இரண்டு மூன்று பேர் வந்து பெண் பார்த்து விட்டுப் போனதையும் அவன் பார்த்தான். ஆனாலும் எந்த இடமும் நிச்சயமாகவில்லை. கிட்டத்தட்ட முப்பது, நாற்பது ஜாதகங்கள் பார்த்து, பொருத்த மாக இருந்த பத்துப் பதினைந்து பேருக்குக் கடிதம் எழுதியதில் –

'பெண்ணின் அப்பா எங்கே இருக்கிறார்?' என்ற கேள்வியில் எல்லாம்அடிபட்டது.

"சின்ன வயசிலேயே, பெண் ணுக்கு ஒரு வயசாக இருந்த போதே எங்கோ போயிட்டார்".

"ஓடிப்போயிட்டாரா? ஏன் ஓடிப்போனார்? காரணம்?"

என்ன காரணம் என்பது யாருக்குத் தெரியும்? யாரால் சொல்ல முடியும்?

வீரராகவன் கோபப்பட்டு ஒருவரிடம் கத்திவிட்டார்.

"காரணம் என்னன்னு ஓடிப் போனவனைத் தேடிப் பிடிச்சு நீங்களே கேட்டுக்கோங்க".

வந்தவர் எழுந்து நின்றார்.

வீரராகவனை முறைத்துப் பார்த்தார்.

"அது எங்க வேலை இல்லை" – பட்டென்று சொல்லிவிட்டு வெளி யேறினார்.

ஒவ்வொரு வரனும் இந்தக் காரணத்தினாலேயே தவறிப் போனது. கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஓடிப்போயிற்று. பத்மினியின் அம்மா அழுதழுது ஓய்ந்து போனாள். நெஞ்சுக்குள் இருந்த வெறுப்பையும், வேதனையையும் மகளிடம் கொட்டினாள்.

"பார்த்தியாடி, இதுக்குத்தான் அன்னிக்கே சொன்னேன். ஒழுங்கா ஜெயராமனைக் கல் யாணம் செய்துக்க சம்மதிச்சிருந் தால் இப்படிப்பட்ட பேச்செல்லாம் கேட்டுண்டிருக்க வேணாம். கண்ட வாகிட்ட அவமானப் பட்டிருக்க வேணாம். இன்னும் யார் யார் கிட்டேயெல்லாம் பேச்சுக் கேட்டுக் கணும், அவமானப்படணும்னு என் தலைல எழுதி இருக்கோ தெரியலை".

அப்போதுதான் சட்டென்று அவள் ஒரு முடிவிற்கு வந்தாள்.

"இல்லம்மா, இனிமேல் நீ யார் கிட்டேயும் பேச்சுக் கேட்டுக்க வேணாம். அவமானப்பட வேணாம். நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேம்மா. ஜெயராமனையே கல்யாணம் செய்துக்கறேம்மா. நானே இதை அவர்கிட்ட சொல்றேன்".

மறுநாள் அவள் வந்து சொன்னபோது அவன் மீண்டும் அதிர்ந்தான். ஒரு வினாடி அமைதியாக நின்றவன் பின்பு நிதானமான குரலில் மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

"இதப்பாரு பத்மினி! உணர்ச்சிவசப்பட்டு இந்த மாதிரி முடிவெல்லாம் எடுக்காதே. ஏதோ ஒரு வெறுப்பிலும், விரக்தியிலும் எடுக்கப்படற எந்த முடிவும் சரியானதாக இருக்காது. ஆரம்ப முதலே என்னைக் கல்யாணம் செய்துக்க விருப்பப்படாத நீ – ஒரு நல்ல நண்பனாக – சினேகிதனாக மட்டுமே நேசிச்ச நீ, இப்போ எதுக்காக என்னைக் கல்யாணம் செய்துக்க சம்மதிக்கற? வேற வழி இல்லாமல்தானே? உன் அம்மா வோட நிர்ப்பந்தத்துனாலதானே? மனது தளர்ந்துபோய்த்தானே இப்படிப்பட்ட முடிவுக்கு வந்தே? உன்னைப் பெண் பார்க்க வந்த வங்க கேட்ட கேள்விகள்தானே உன்னை இந்த அளவிற்கு விரட்டி இருக்கு? பிடிக்காதவனை, அதாவது கல்யாணம் பண்ணின்டு, கணவனாக ஏத்துக்க முடி யாதுன்னு நினைச்சவன்கிட்டேயே வந்து, கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம்னு சொல்ல வச்சிருக்கு இல்ல பத்மினி. இதுக்குச் சரின்னு தலையாட்ட என்னால் முடியாது. ஒரு பொண்ணு எதுல வேணா காம்ப்ரமைஸ் பண்ணலாம். ஆனால் இதுல பண்ணக்கூடாது. இதுல பண்ற காம்ப்ரமைஸ், எல்லாத்துலயும் காம்ப்ரமைஸ் பண்ணவச்சிடும். இது மனசுக்குப் பிடிச்ச விதமா திருப்தியா அமைஞ்சு போயிடுத்துன்னு வச்சுக்கோ. வேற எந்தக் குறையும் பெரிசாப்படாது, தெரியாது.

ஆனால் இதுவே குறையா அமைஞ்சு போயிடுத்துன்னா வாழ்க்கை அர்த்தமற்றதா, சுவாரஸ்யமற்றதா மாறிடும். அந்த




மாதிரி உன் வாழ்க்கை மாறிடக் கூடாது. எந்த நிர்ப்பந்தத்திற்காகவும் நீ இந்த முடிவுக்கு வரக்கூடாது. சமூகத்தோட இந்தச் சின்னச் சலசலப்பிற்குப் பயந்து போயிடக் கூடாது. உன்அப்பா பற்றின உண்மையை நாம் சொல்றோம். இப்போ வந்த பத்துப்பேர் அதை நம்பாமல் கேள்வி கேட்டிருக்கலாம். ஆனால் நம்பற ஒரு நல்ல மனுஷன் நிச்சயமா இருப்பான். அவன் எங்கே இருக்கான்னு தேடிப்பிடிக்க வேண்டியது நம் கடமை. தேடிப் பிடிச்சவன் உன் மனசுக்குப் பிடிச்சவனா அமையணும் என்பது வேற கவலை.

இந்தக்கவலை, கடமை ஆகிய இரண்டிற்கும் இனிமேல் நான் பொறுப்பு ஏத்துக்கறேன். என் நண்பர்களில் உன் நிறத்திற்கும், அழகுக்கும் பொருத்தமா எத்தனையோ பேர் இருக்காங்க. நல்ல மனசுடையவங்க இருக்காங்க. அவங்ககிட்டே சொல்லித் தகுதி வாய்ந்த ஒரு மாப்பிள்ளையை நானே உனக்குத் தேடித் தரேன். நீ சொன்ன மாதிரி ஒரு நல்ல நண்பனா – சினேகிதனா நடந்து காட்டறேன். கவலைப்பட்டு, அவரசப்பட்டு இந்த மாதிரி அசட்டுத்தனமான முடிவுக்கெல்லாம் வராமல் தைரியமானவளாக இரு. நீ – நீயாகவே இரு. என்ன?"

சொல்லிவிட்டு அவன் போய் விட்டான். இவள் தாங்க முடியாதவளாகக் கண்களை மூடிக் கொண்டாள். அதுவரை அவனை நண்பனாகப் பார்த்தவள், இப்போது ஒரு ஞானியாக உணர்ந்தாள். அவனது நிலைமையில் வேறு ஒருவனாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பான் என்பதை யோசித்துப் பார்த்தாள். தான் சரி என்றதும் உடனே சந்தோஷப்பட்டிருப்பான். ஆசைப்பட்டதை அடைய முடிகிற ஆனந்தத்தில் மிதந்திருப்பான். அப்பா, அம்மாவிடம் சொல்லி அடுத்த முகூர்த்தத்திற்கே நாள் பார்த்திருப்பான்.

ஆனால் இவன்?

ஞானம் என்பது மனைவி மக்களைத் துறந்து காஷாயம் தரிப்பது மட்டுமல்ல; காட்டிற்குப் போய்த் தவம் செய்வது மட்டுமல்ல; சரியான முடிவை, சரியான தருணத்தில், சரியான விதத்தில் எடுப்பதும்கூட ஒருவகை ஞானம் தான் என்பது முதல்முறையாகப் பிடிபட அப்படியே நின்று கொண்டிருந்தாள் அவள்.



கதாசிரியர்களும் ஓவியர்களும் வாசகர்களைத் தனியாக ஒரு கூட்டிற்குள் வைத்து தங்கள் படைப்புகளை அவர்களுக்கு அளிப்பது வழக்கமாகும்...
மாறாகவாசகர்களையும் சேர்த்துக் கொண்டால் எப்படி யிருக்கும் என்ற கற்பனையின் விளைவு தான் –
"வாசகர்களையும்சேர்த்துக் கொண்டால்"துணுக்குகள்.
– ஸ்கார்பியோ
இவங்க ரெண்டு பேரும் எப்பவுமே இப்படி இருப்பாங்க என்று நினைச்சுக்காதீங்க. நீங்க இந்தப் பக்கத்தைத் திருப்பின உடனே சண்டை போட ஆரம்பிச் சுடுவாங்க.
"பிழைச்சுப்போ... முன்னாலே ஒருத்தர் இருக்காரு... அத னாலே... உன்னை விட்டு வச்சிருக் கேன். இல்லேன்னா நடக்கறதே வேறே..."
அவள் : ரெண்டு புடைவை காயப்போட்டு வர இவ்வளவு நேரமா?
அவன் : முன்னாலே ஒருத்தர் பார்த்துக் கொண்டிருக்காரே. அதான் வெயிட் பண்றேன்.
வாசகர்களையும் சேர்த்துக் கொண்டால்..
நிறுத்துப்பா... நிறுத்துப்பா... நீட்டா... நீ பாட்டுக்கு ஓட்டிக்கினே போனால் எப்படி? எதிர்த்தாற் போலிருக்கிறவர் மேலேயே ஓட்டிக் கொண்டு போயிடுவே போல இருக்கே...
அவள் : என்ன அவசரம்...? முன்னாலே இருக்காரே... அவர் பக்கத்தைத் திருப்பி அடுத்த பக்கத்துக்குப் போகட்டுமே!
"என்ன மேன்... இங்கேயே பார்க்கிறே... திரும்பு மேன்...
முன்னாலே கௌரவப்பட்ட வங்க இருக்காங்க. அதனாலே உன்னை தூக்கிப்போட்டு மிதிக் காமல் விட்டிருக்கோம்...!"
ரொம்ப தாங்க்ஸ்... இவ்வள வாவது... பக்கத்தைத் திறந்தீர் களே உள்ளே ரொம்பப் புழுக்க மாயிருந்தது.

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னால், தமிழகத்தில் அதுவும் பெரியகுளம், கொடைக்கானல், மதுரை போன்ற இடங்களில் இந்தி மொழியில் மேடை நாடகங்கள் நடந்தன. அவற்றைப் பொது மக்களும் விரும்பி வரவேற்றனர் என்றால் நம்பமுடியவில்லை அல்லவா?

1930இல் ராஜாஜி தமிழக முதல்வராக இருந்தபோது, இந்தி மொழிக்குத் தரப்பட்ட முக்கியத் துவம்தான், அதற்குக் காரணம்.

மேவாரின் வீழ்ச்சி, சந்திர குப்தா போன்ற அந்த இந்தி நாட கங்களில் நடித்த பெரிய குளம் உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் நமக்கு மிகவும் அறிமுகமான இன் றைய மேடை - தொலைக்காட்சி - திரைப்பட நட்சத்திரமும் இடம் பெற்றிருந்தார். அவர்தான் இயல் பான நடிப்பில் தனக்கென்று ஓர் இடத்தை வென்றிருக்கும் திரு. பூர்ணம் விஸ்வநாதன்.



'ஊஞ்சல்' நாடகத்தில்...

நாடகக் கலையில் பூரணமானவர்...

அசோகன்

பலமொழிகளிலும், இசை நுட் பங்களிலும் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்த இவருடைய தந்தை யார், குழந்தைகள் சிறு வய திலேயே மொழிகளைக் கற் பதிலும், பாடுவதிலும் ஆர்வத்தை வளர்த்தார்.

பாட்டுத் திறமைதான் அந்தப் பள்ளி மாணவப் பருவத்தில் பூர்ணம் விஸ்வநாதனுக்கு, நாடக வாய்ப்பைப் பெற்றுத் தந்தது.

பூர்ணம் விஸ்வநாதன் சிறந்த நடிகர் மட்டுமல்ல; நல்ல நாடக ஆசிரியருங்கூட என்பதை, தமிழ்ச் சமூகம் அறியும். அவரிடமிருந்த எழுத்தார்வமும் இளம் வய திலேயே கால்கொண்டுவிட்டது.

சென்னையில் லயோலா கல்லூரி மாணவராயிருந்தபோது மாணவர் சங்கத் தலைமைப் பொறுப்பு, நுண்கலை ஆர்வமிக்க இவரை நாடி வந்ததில் வியப் பில்லை. நாடக நடிப்பும், சிறு கதைப் படைப்பும் தொடர்ந்தன. இரண்டாம் உலகப் போர் சம யத்தில், அகில இந்திய வானொலி யின் டில்லி நிலையத்தில் தொடங் கப்பட்ட தமிழ் ஒலிபரப்புப் பிரி விற்கு ஓர் எழுத்தாளர் தேவைப் பட்டபோது, இவரது குடும்ப




"கலைமாமணி விருது" பெறுதல்

நண்பர் திரு. எம்.எஸ். கல்யாண சுந்தரத்தின் பரிந்துரை இவருக்கு அந்த வேலைவாய்ப்பை வாங்கிக் கொடுத்தது. அது வெறும் வேலை வாய்ப்பாக மட்டுமின்றி, எழுத் தார்வம், நடிப்புத்திறமை என்ற இரு அடிப்படைகளின்மேல் பல நுணுக்கங்களையும் அறிந்து உயர் வதற்குக் கிடைத்த அரும்பெரும் வாய்ப்பு என்று கருதுகிறார் அவர்.

ஆடியோ என்ற மீடியத்தின் ஒவ்வொரு பரிமாணத்தையும் கற்க நேரிட்டபோது, இவரது கலைத் திறனுக்கு கூர்மை கிடைத்தது. ஒரு நாடக ஆசிரியராக அவர் பரிண மித்தது இக் கால கட்டத்தில்தான். தென்கிழக்கு ஆசிய நேயர்களுக் கான அந்த ஒலிபரப்பில் பல சிறு நாடகங்களை எழுதித் தயாரித்தார். (குப்புசாமியின் குடும்பம், பெரிய வீடு, சம்சார சாகரம்)

டில்லியில் பல அமெச்சூர் குழுக்களின் நாடகங்களில் பங்கு பெற்றுத் தன் மேடை நடிப்பையும் வளர்த்துக் கொள்ள அவர் தவற வில்லை. தன்னைப் போன்ற நாடக ஆர்வமிக்கவர்களுடன் இணைந்து, கலா மந்திர் என்ற அமைப்பை உருவாக்கினார். அப்படிப்பட்டவர்களில் சுப்புடுவும் ஒருவர். இவருடைய வானொலி நாடகத்திலும் பங்கேற்றிருக்கிறார். கலா மந்திர் சார்பில் தேவனின் கதைகளையும் தி. ஜானகிராமனின் 'நாலு வேலி நிலம்' பி.எஸ். ராமையாவின் 'பிரசிடென்ட் பஞ் சாட்சரம்' போன்ற நாடகங் களையும் நடித்தார்கள்.



"ஊனம்" நாடகத்தில்

'கல்கி' உயிருடன் இருக்கும் போதே அவருடைய 'கள்வனின் காதலி' நாவலை ஒரு மாதம் கடினமாக உழைத்து நாடகமாக்கி மேடையேற்றியது இவரது குழுவின் சாதனை என்கிறார் இவர்.

அந்த நாடகத்தின் அரங் கேற்றமே மிகவும் பரபரப்பான



"கால்கட்டு" நாடகத்தில்...



'டாக்டர் நரேந்திரனின் விநோத வழக்கு நாடகத்தின் நூறாவது அரங்கேற்றம்

சூழ்நிலையில்தான் நடந்ததாம். வடஇந்தியாவில் இந்து – முஸ்லிம் கலவரங்கள் பெருகியிருந்த அக் கால கட்டத்தில், ஏதாவது ஒரு சிறிய காரணம் கிடைத்தாலும் அதைக் கொண்டு பெரிய பூசலுக்கு வழி வகுக்க வன்முறையாளர்கள் துடித்துக்கொண்டிருந்த நேரத்தில் (வருடம் 1946) டான் என்ற இஸ் லாமியப் பத்திரிகை இந் நாடக அரங்கேற்றத்திற்கு இரண்டு நாள்கள் முன்பாக, அதில் முஸ் லிம்களுக்கெதிரான காட்சிகள் இடம்பெறுவதாக எழுதிக்கண்டனம் செய்து ஒரு துணைத் தலை யங்கத்தை வெளியிட்டது. நாடகக் குழுவினருக்கும், அமைப்பாளர் களுக்கும் பதற்றம் ஏற்பட்டது; காவல்துறையினரின் உதவி நாடப் பட்டது. மத்திய கல்வி அமைச்ச ராக இருந்த ராஜாஜியிடம் சென் றார்கள்.

கதாநாயகன் தப்பிச் செல் வதற்கு அவனுடைய நண்பன் 'கோஷா' உடையைக் கொடுத்து உதவுவதாக வரும் காட்சியைத் தான் பிரச்னைக்குரியதாக்க முயற்சி நடக்கிறது என்பதை எடுத்துக் கூறினார்கள். ராஜாஜி, அந்தப் பத்திரிகையின் ஆசிரிய ரான அல்தாஃப் ஹுசேன் என்ப வருடன் தொடர்பு கொண்டு, 'நீங்கள் இந்த நாடகத்தைப் பார்க் காமலே எழுதியது தவறு; நீங்களும் என்கூட முதல்நாள் காட்சியின் போது வந்து பார்க்க வேண்டும்'' என்று கூறினாராம். ராஜாஜியின் தலைமையில் நாடக அரங்கேற்றம் ஆனது. நாடகத்தைப் பார்த்து விட்டு, அல்தாஃப் ஹுசேன், தனக்குத் தவறாகத்தகவல் தந்து விட்டார்கள் என்று மன்னிப்புக் கோரியதுடன், சில தினங்களுக்குப் பிறகு பத்திரிகையில் ஒரு மூலை யில் வருத்தம் தெரிவித்துச்செய்தி வெளியிட்டாராம். இரண்டாம் நாளும் நாடகம் பார்த்த ராஜாஜி டி.கே.சி. பார்த்தால் மிகவும் மகிழ்வார் என்று பாராட்டினாராம்.

பிறகு ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் 'கல்கி' டில்லிக்கு வந்திருந்தபோது நாடகத்தைப் பார்த்து மிகப் பாராட்டினாராம். மேடையில் காண்பிக்க முடியாத சில நிகழ்ச்சிகளை, குறியீடுகளால்

"தனிக்குடித்தனம்" நாடகத்தில்...





"கடவுள் வந்திருந்தார்" நாடகத்தில்...

தெரிவிக்க, கிரேக்க பாணி உத்தியை இந்த நாடகத்தில் பின்பற்றியது அவரை மிகவும் கவர்ந்த தாம். அதற்குப் பின்னர், தமிழ் நாட்டில் டி.கே.எஸ். குழுவினருக்காக எஸ்.டி. சுந்தரம் இந் நாவலை நாடகமாக எழுதியபோது, இவர்களுடைய நாடகமாக்கம்தான் அடிப்படையாக இருந்து உதவியது என்கிறார்.

கலா மந்திர் செயல்படாமல் போனபிறகு சௌத் இந்தியன் தியேட்டர் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. 'அன்டர் செக்ரட்டரி', 'காஞ்சன் ரங்கா', 'குருட்டு யோகம்' போன்ற நாடகங்களை இந்தியிலிருந்து தமிழாக்கம் செய்து மேடையேற்றினார். டெல்லி குமார், டெல்லி கணேஷ் போன்றவர்கள் அந்த அமைப்பில் இடம் பெற்றார்கள்.

தம் இருபதாண்டு டெல்லி வாழ்க்கை நாடக உலகில் தனக்கு நல்ல அனுபவங்களைத் தந்த தென்று நினைவு கூரும் பூர்ணம், செப்டம்பர் முதல் ஏப்ரல் வரை டெல்லியில் கலைநிகழ்ச்சிகளின் சீஸன் என்றும் அப்போது நீண்ட நாடகங்களைப் போடுவதும், ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை சிறு ஓரங்க நாடகங்களைத் தயாரிப்பதும் ஒரு பயிற்சி போல் ஆகிவிட்டது என்றும் கூறுகிறார். அறுபதுகளின் இறுதியில், சென்னைக்கு மாற்றலான பிறகு, நாடகத்துறையில் இவரது அனுபவம் எப்படி இருந்தது? அவரே சொல்கிறார் :

"ஏ அப்பா! டெல்லி நாடக அனுபவங்களுக்கும், சென்னை நாடக உலகிற்கும்தான் எத்தனை வித்தியாசங்கள்! அங்கே நாங்கள் நிஜமாகவே அமெச்சூர் குழுக்கள் தான். கிடைத்த மரப்பலகையில் பெயிண்ட் அடித்து 'செட்'டாகப் பயன்படுத்துவோம். இசைக்கு என்று தனிக் குழுவெல்லாம் கிடையாது. எல்லாம் எங்கள் கலைஞர்களின் உபயம்தான். சுப்புடு, எங்கள் நாடகத்திற்கு ஹார்மோனியம் வாசித்திருக்கிறார் என்று சொன்னேனா? மேக்-அப் செய்து கொள்வதில் எல்லாருக்கும் தேர்ச்சி உண்டு. பெரிய அரசாங்க அதிகாரி வீட்டுப் பெண்மணிகள், எங்கள் குழுவின் நாடகங்களில் நடிப்பதற்குப் போட்டி போடுவார்கள். நடிகர் யாருக்கும் ஊதியம் என்கிற பேச்செல்லாம் இல்லை. வீடு வீடாகப் போய் டிக்கெட் விற்போம். எங்களை வைத்துக்கொண்டே குடும்பத்தலைவருக்கும் குடும்பத்தலைவிக்கும் இடையில் இவர்கள் ஏதோ நாடகம் போடுகிறார்களாம், போய்ப் பார்க்கலாமா என்கிற ரீதியில் விவாதங்கள் நடக்கும். சென்னையிலோ, எல்லாமே கமர்ஷியல்தான். மேடை அமைப்பு, சீன்-செட், ஒலி - ஒளி, மேக்-அப் எல்லாவற்றுக்குமே தொழில்முறைக் கலைஞர்களுக்குப் பணம் தந்துதான் நாடகம் நடத்தப்படும் சூழ்நிலை. சபாக்கள் மூலமாக ரெடிமெட் ஆடியன்ஸ் கிடைப்பது, மற்றும் நடிப்பதையே தமது தொழிலாக ஏற்றுக்கொண்ட பெண்கள் பெண் வேடங்களை ஏற்பது இப்படி ஒவ்வோர் அம்சமும் புதியதாக இருந்தது. தமிழ் நாடக உலகைப் புரிந்து கொள்ள எனக்கு அவகாசம் தேவைப்பட்டது. (கே. பாலசந்தரின் 'ராகினி ரிக்ரியேஷன்ஸ்', சோவின் நாடகக் குழு ஆகியவற்றில் சேர்ந்துவிடக்கூட ஒரு தருணத்தில் முயன்றாராம்.)

"அவர்களின் அப்போதைய தயக்கமும், எனக்கு நல்லதாகவே முடிந்தது." திருவல்லிக்கேணி ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி அமைப்பாளர் இவரது ஒத்துழைப்பை நாடினார்.

இவரது குடும்ப நண்பர் எஸ்.வி. சகஸ்ரநாமம் எழுதிய போலீஸ்காரன் மகள், பூ விலங்கு, 'சாவி'யின் வாஷிங்டனில் திருமணம், விசிறி வாழை போன்ற நாடகங்களில் நடித்தார். தங்களுடைய அனுமதியின்றி 'வாஷிங்டனில்

திருமணம்' நாடகம் நடத்துவதற்கு முதலில் ஆட்சேபம் தெரிவித்த ஆனந்தவிகடன் வாசன் பிறகு கதாசிரியருக்குள்ள சட்ட ரீதியான உரிமையைப் புரிந்துகொள்ள வெறும் ஒரு ரூபாயை ராயல்டியாக வாங்கிக்கொண்டு விட்டுக் கொடுத்துவிட்டாராம்.

திருவல்லிக்கேணி ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைடி செயல்படாமல் போனபிறகு, கலாநிலையம் என்ற அமைப்பில் பங்கு கொண்டார். சக்கைப் போடு போட்ட மெரினாவின் வடபழனியில் வால்மீகி, தனிக் குடித்தனம், ஊர் வம்பு, கால் கட்டு போன்ற நாடகங்களில் பூர்ணம் விஸ்வநாதன் பிரகாசித்தார். தனிக் குடித்தனம் அத்திம்பேரையும், ஊர் வம்பு அய்யாசாமியையும் மறந்துவிட முடியுமா?

வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு வம்பு பேசும் ஊர்வம்பு அய்யாசாமி காரக்டரை, வாயில் வெற்றிலை போடாமலே தத்ரூபமாக செய்து காட்டியது, அவரது சாமர்த்தியம்; அதே சமயம் வசனத்தில் சிறிதும் விழுங்கிவிடாமல் புரியும்படியாகவும் உச்சரிப்பது என்பது, சாதாரண விஷயமில்லை. அந்த வித்தையை நமக்காக மீண்டும் வெகு லாகவமாக செய்து காட்டுகிறார். அந்தக் கணமே, பேட்டி கொடுக்கும் பூர்ணம் மறைந்து நாடக நடிகர் பூர்ணம் தோன்றிவிடுகிறார்.

ஒரு தடவை, 'ஊர் வம்பு' நாடகம் நடந்து கொண்டிருந்த போது, திடீரென்று மின்சாரம் பழுதாகி விளக்குகள் அணைந்து விட்டன. அந்தக் காட்சியில் இன்னொருவர்மீது பழி சுமத்துவது போல் பேசி நடித்துக் கொண்டிருந்த இவர், உடனே சமயோசிதமாக, "பார்த்தீர்களா? இதுவும் அவர்கள் வேலைதான்" என்று சொன்னதும் அரங்கமே ஆர்ப்பரித்ததாம்.

1976இல் ஒரு தடவை கலைவாணர் அரங்கில் பிற்பகல் காட்சியாக 'தனிக் குடித்தனம்' நாடகம் போட்டுவிட்டு மாலையில் என். கே.டி. அரங்கத்தில் 'கால் கட்டு' நாடகம் நடத்திக் கொண்டிருந்தார்கள். இடைவேளையின்போது, நாடகக் குழுவினருக்கு எழுத்தாளர் சுஜாதா வந்து நாடகம் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்ததாம். நாடகம் முடிந்த பிறகு, அவரைப் பார்த்துப் பேச வேண்டும் என்று நினைத்திருக்கையில், மேக்-அப்பைக் கலைத்துக் கொண்டிருக்கும்போது சுஜாதாவே கிரீன் ரூமுக்கு வந்துவிட்டார். இவர்களுடைய திறமையைப் பாராட்டியதுடன் தனக்கு மேடை நாடகம் எழுதும் ஆசை கொஞ்ச காலமாக இருந்து வருவதாகவும், ஆனால் அதற்கேற்ற நாடகக் குழு இல்லை என்ற தயக்கம் தடுத்ததாகவும் கூறிவிட்டு, 'Now I have found my troupe' என்றாராம்.

அவருடைய எழுத்தை ரசிக்கும் தங்களுக்கு இது ஒரு பெரிய கிரெடிட் என்று அகமகிழ்ந்து தங்கள் தயார் நிலையைப் பூர்ணம் தெரிவித்தார். பெங்களூருக்குப் போனதும் சுஜாதா தன் முதல் நாடகத்தை 'முதல் நாடகம்' என்ற பெயரிலேயே எழுதி அனுப்பினார். அதுதான் 'ஒரு கொலை' (ஒரு கொலை - ஒரு பிரயாணம்) என்ற ஓரங்க நாடகமாக அரங்கேறியது.

தொடர்ந்து சுஜாதாவின் நாடகங்கள் மேடையேறின. அதற்கிடையே 'மெரினா' தனி நாடகக் குழு அமைத்துக் கொண்டுவிட பூர்ணம் விஸ்வநாதன் 'பூர்ணம் நியூ தியேட்டர்' என்ற புதிய அமைப்பை 1979இல் தொடங்கினார். சுஜாதாவின் எழுத்தாற்றலும், பூர்ணம் விஸ்வநாதனின் நடிப்புத்திறனும் 'ஒருவருக்காகவே மற்றவர்' made for each other என்ற முறையில் அமைந்துவிட்டதற்குச் சான்றாக டாக்டர் நரேந்திரனின் விநோத வழக்கு, கடவுள் வந்திருந்தார், அடிமைகள், அன்புள்ள அப்பா, மாறுதல் வரும், ஊஞ்சல் என்று சுஜாதாவின் நாடகங்கள் பல வெற்றி பெற்றதைக் குறிப்பிட வேண்டும். இதுவரை 600 காட்சிகளில் சுஜாதாவின் நாடகங்களை இவருடைய குழு நடித்திருக்கிறது.

இந்த வருடம் மார்ச் மாதத்தில் 'பாரத் கலாசார்' அமைப்பிற்காக சங்கரதாஸ் கலை அரங்கில் 'ஊஞ்சல்' நாடகம் நடத்தியபோது இவருடைய ஐம்பது வருட நண்பர் ஒய்.ஜி. பார்த்தசாரதி, இவரிடம் "ரொம்பவும் ஸ்ட்ரெய்ன் செய்து கொள்கிறாய். வயதுக்கேற்ற மாதிரி, உடல் நிலையையும் பார்த்துக் கொள்" என்று அறிவுரை



"பிப்டி...பிப்டி" நாடகத்தில்...

இங்கும் சொர்க்கம்

நா. மாணிக்கவாசகன்

இறைவா எனக்கொரு
வரம்தர வேண்டும் - அந்த
வரமெனக் கின்றே
நீதர வேண்டும்.

பொன்னுக்கும் பொருளுக்கும்
அலையாத நிலையும் - வரும்
புகழுக்கும் பெயருக்கும்
மயங்காத வாழ்வும்

விண்ணுக்கும் மண்ணுக்கும்
உயர்கின்ற புகழில் - நிதம்
நானிங்கே வாழ
நேர்கின்ற போதும்

தன்னை வியந்து
தருக்காத மனமும் - பிறர்
தம்மை இகழ்ந்து
பேசாத குணமும்

இறைவா எனக்கு
நீதந்தால் போதும் - இந்த
உலகே சொர்க்கம்
ஆகிடும் எனக்கு!

கூறினாராம். அதற்குப்பிறகு சில தினங்களுக்குள் ஒய்.ஜி.பி.யின் திடீர் மறைவு பற்றிய செய்தி வந்தது தனக்கு அதிர்ச்சியைத் தந்ததென்று நினைவு கூர்ந்தார் பூர்ணம்.

கிட்டத்தட்ட ஒரே மாதிரியான நடிப்பை அவரிடம் காண்பதாகச் சிலர் கூறும் கருத்தைத் தெரிவித்த போது...

"வெவ்வேறு நாடகங்களில் வெவ்வேறு வேடங்களைச் செய்திருக் கிறேன். 'கால் கட்டு' நாடகத்தில் மிகவும் கோபக்கார காரக்டர்; 'அடிமைகள்' நாடகத்தில் நய வஞ்சகமாக நடந்து கொள்ளும் பண்ணையார் பாத்திரம். 'ஒரு கொலை' நாடகத்தில், இக்கட்டில் மாட்டிக் கொள்ளும் அப்பாவி வேடம். 'ஊஞ்சல்' நாடகத்தில் வாழ்ந்துகெட்ட தொழிலதிபர் தன்னிடம் சாதாரண ஊழியனாக இருந்து, குறுக்கு வழியில் உயர்ந்து விட்ட ஒருவனிடம் வேலைக்குப் போக நேரிடும் சூழ்நிலையில் அவருடைய மனப்போராட்டங் களைக் காண்பிக்கக் கூடிய, சவால் விடுவதுபோல் அமைந்த ரோல்: இப்படி நாடக மானாலும்சரி, திரைப்படம் ஆனா லும் சரி, எத்தனையோ வித்தியாச மான வேடங்களை ஏற்று, என் னால் முடிந்தவரையில் செய்திருப் பதாகத்தான் நினைக்கிறேன்" என்கிறார்.

கர்நாடக இசைப் பிரியரான இவர், எம்.எஸ்., மகாராஜபுரம் போன்ற விற்பன்னர்களின் நிகழ்ச்சிகளுக்குப் போயிருந்த போது, அண்மையில் தொலைக் காட்சியில் வந்த முரண்பாடுகள் நாடக வரிசையில் மாறுபட்ட குணா திசயங்களைக் காட்டும் இவ ருடைய நடிப்பைப் பாராட்டி, அந்த மேதைகள் சொன்ன வார்த்தைகள் தனக்குக் கிடைத்த பரிசுகள் என்று கருதுவதாகத் தெரிவித்தார்.

மேடை - வானொலி - தொலைக் காட்சி - திரைப்படம் இப்படி வெவ்வேறு சாதனங்களின் மூலம் தன் நடிப்புக்கலையை வெளிப் படுத்தும் வாய்ப்பு பெற்ற இவ ரிடம், அந்த சாதனங்களின் வேறு பாட்டைக் குறித்துக் கேட்டோம்.

"மேடையில் நடிக்கும்போது ஒரு சீரான தொடர்ச்சி கிடைக்கிறது; ஆனால் பிழையேற்பட்டால் திருத்திக்கொள்வது சிரமம். ஏதாவது சொல்லிச் சமாளித்தாக வேண்டும். அதற்கு பிரஸன்ஸ் ஆஃப் மைண்ட் தேவை. தொலைக் காட்சி, திரைப்படம் இவற்றில் 'கன்டின்யூவிடி' பாதிக்கப்படும் சாத்தியம் இருக்கிறது. தொலைக் காட்சிக்காக நடிக்கும்போதாவது, அதுவரை பதிவானதை மானிடரில் போட்டுப் பார்க்கும் நடைமுறை இருப்பதால் வேலை சற்று சுலபம். திரையுலகில் இந்த வசதியைப் பயன்படுத்துவதில்லை. முக பாவத்துடன் நடிப்பது ஒரு நாளில், அந்த உணர்ச்சிகளை வர வழைத்துக் கொண்டு வசனம் பேசி, பதிவு செய்ய வேண்டி யிருப்பது இன்னொரு நாளில் என்பதால் உழைப்பு இரட்டிப்பாகி விடுகிறது" என்றார் அவர்.

தொலைக்காட்சி வந்து மேடை நாடகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாகக் கருதப் படுவதைக் குறித்து பேச்சு வந்த போது "ஒரேயடியாக மேடை நாட கங்கள் முடங்கிவிடவில்லை. என்றாலும் முன்பிருந்த நிலையில் தேக்கம் ஏற்பட்டிருப்பது என் னவோ உண்மைதான்; ஆனால், இது இப்படியே நீடிக்காது. வானொலியில் எத்தனையோ நிகழ்ச்சிகளை ஒலிபரப்பினாலும், எல்லாரும் எல்லாவற்றையும் கேட்பதில்லை. அவரவர்க்கு வேண்டியதைத்தான் கேட் கிறார்கள். இதேபோல், தொலைக் காட்சி நிகழ்ச்சிகளிலும், தேர்ந் தெடுத்துப் பார்க்கும் பழக்கம் வளரும்போது, தரமான மேடை நாடகங்களுக்கு மறுமலர்ச்சி உண்டாகும் என்பதில் சந்தேக மில்லை. ஆனால் காலத்தின் சுழற் சிக்காக நாம் காத்திருக்க வேண்டும்" என்றார்.

சமீபத்தில் மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் நடத்திய கருத் தரங்கு ஒன்றில், "ஓர் அரைகுறைக் கலைஞனின் அரை நூற்றாண்டு அனுபவங்கள்" என்ற பெயரில் கட்டுரையைப் படித்தாராம். உண்மையில், ஒரு முழுமையான கலைஞரின் ஐம்பதாண்டுகால சாதனைகள்தாம் நம் முன்னே தெரிகின்றன. இருபது ஆண்டு களுக்கு முன் கிடைத்த 'கலை மாமணி' பட்டம், இவரது சேவைக் கான ஓர் அங்கீகாரம். தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம் உள்பட இதுவரை 180 திரைப் படங்களில் நடித்திருக்கும் இவரது வரவேற்பறையை ஏராளமான வெற்றிப்பட விருதுகள் அலங்கரிக் கின்றன.

அவரவர் வாழ்வு

ஆர். சூடாமணி

உற்சாகமும் எதிர்பார்ப்புமாய்த் திருமணத்தை எண்ணித் துள்ளிக் குதித்தவள் ஒருசில ஆண்டுகளிலேயே மணமுறிவு கோரத் துடித்தாள். இன்றும் மணக்கோலத்தில் மற்றொரு பெண்ணைக் காணவும்கூடக் கூசினாள் என்றால் அவள் மனப்புண் எத்தகையது?

"அப்போ நாங்க வரோம் ஆன்ட்டி. கல்யாணத்துக்குக் கட்டாயம் வந்துடுங்கோ".

ஆணும் பெண்ணுமாய் அழைக்க வந்தவர்கள் விடைபெற்றுச் சென்றபின் காந்திமதி வாசலிலிருந்து வீட்டுக்குள் திரும்பி வந்தாள். குங்குமம் எடுத்துக் கொண்ட சுவடு வலது ஆள்காட்டி விரல் நுனியில் லேசாய்த் தெரிந்ததை வெறிக்கப் பார்த்துக் கொண்டே தீவானில் அமர்ந்தாள்.

அவளுடைய சிநேகிதி பத்மாவின் மகளுக்கு இன்னும் ஐந்து நாள்களில் திருமணம். அழைப்பிதழ் எப்போதோ வந்துவிட்டது. நெருக்கமானவர்களை நேரிலும் அழைக்கப் பத்மா தன் மகனையும் மருமகளையும் அனுப்பியிருந்தாள்.

அழைக்க வந்திருந்த இளம் பெண் இவளுக்கு வேண்டா வெறுப்பாகத்தான் குங்குமம் கொடுத்தாள் என்பது அவள் முகத்திலேயே தெரிந்தது. விவாகரத்தாகிய பெண்மணிக்குக் குங்குமம் தந்து அழைப்பு ஒரு கேடா என்று அவள் நினைத்திருக்க வேண்டும். நிச்சயம் மாமியாரின் ஆணையைத் தட்டமுடியாமல்தான் வந்திருக்கிறாள்.

பத்மாவின் பெண் லதாவுக்குத் திருமணம். 'வேண்டாம், வேண்டாம். செய்து கொள்ளாதே!' என்று காந்திமதியினுள் ஒரு மௌன ஓலம் எழுந்தது. 'கல்யாணமென்பது ஒரு கண்ணிவலை, உன்னை மடக்கி உன் வாழ்வைச் சிதைத்துக் கொன்று விடுமடி பெண்ணே!' என்று நெஞ்சம் கூவியது. தன் நாற்பத்தெட்டு ஆண்டுக் காலத்தில் அவளுள் ஏற்பட்டிருந்த ஒரே ஒரு தீர்மானமான கருத்து அதுதான்.

காந்திமதியை அவளுடைய பத்தொன்பதாம் வயதில் அருணாசலத்துக்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள். தாயார் சொல்லித்தந்த தாரக மந்திரம் "இனி உன் கணவன்தான் உன் தெய்வம். அவனைச் சந்தோஷமாய் வைத்திருப்பது ஒன்றுதான் உன் கடமை. உன் வாழ்வின் இன்பம் அதில்தான் அடங்கியிருக்கிறது" என்பதுதான்.

காந்திமதி தாயின் அறிவுரையைக் கடைப்பிடிக்க முழு மூச்சுடன் முயன்றாள். ஆனால் அருணாசலம் அதற்குத் தகுதியுள்ளவனாக இருக்கவில்லை. அவளைச் சொல்லாலும் செயலாலும் வதைத்தான். அவள் பிறந்தகத்திலிருந்து பணம் பறித்துவர சதா அவளை விரட்டிக் கொண்டே இருந்தான். தன் இதயமற்ற நடப்பினால் அவள் அன்பையே சிதைத்து, திருமணத்தின் தூய்மையை நஞ்சாக்கினான்.

ஐந்தாண்டு நரகத்துக்குப்பின் காந்திமதி 'போதும்' என்று முடிவு செய்தாள். மூன்று வயதுப் பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு பிறந்தகம் வந்தவள் கணவனிடம் திரும்பிச் செல்ல மறுத்தாள். தன் படிப்பைத் தொடர்ந்து முதுகலைப் பட்டம் பெற்று செக்ரடேரியல் கோர்ஸ் தேறி ஒரு வணிக நிறுவனத்தில் நல்லதொரு வேலையில் அமர்ந்தாள்.

அருணாசலம் அவளை மீண்டும் தன்னிடம் வரச்செய்ய நய, பய உபாயங்களைக் கையாண்டு பார்த்தான். அவள் அலுவலகத்துக்கு வந்து ஆபாசமாய் சத்தம் போட்டான். அவள் தாய் "குலமங்கையர் கணவனைத் துறந்து வருவதில்லை" என்று உபதேசம் செய்து அவள் மனத்தை மாற்ற முயன்றாள். அவள் தந்தை வாய்திறவாத இறுக்க மௌனத்தாலேயே தம் கண்டனத்தை வெளியிட்டார். காந்திமதி அனைத்தையும் சமாளித்தாள். தான் தேர்ந்தெடுத்த வாழ்வையே உறுதியாய்ப் பற்றி நின்றாள். நாளடைவில் அருணாசலம் தன் முயற்சிகள் பலிக்காது என்பதை உணர்ந்து அவளைத் தொந்தரவு செய்வதை நிறுத்திக் கொண்டான்.


காந்திமதிக்கு ஏறக்குறைய முப்பத்து நான்கு வயதாயிருந்தபோது, அலுவலகத்தில் சக ஊழியன் ஜயராமனிடம் தன் மனம் ஈர்க்கப்படுவதை உணர்ந்தாள். நாற்பது வயதான பிரம்மசாரி ஜயராமனும் அவளை விரும்பினான்.

இப்போது காந்திமதியே வலிய அருணாசலத்துடன் தொடர்பு கொண்டு மணமுறிவு கோரினாள். அவன் மறுத்துவிட்டான். அவள் பெற்றோர் சீறியெழுந்தார்கள். ஒரு பெண் தன் தெய்வத்தை விவாகரத்து செய்வதாவது? இன்னோர் ஆடவனை மணந்துகொள்ள நினைப்பதாவது! ஒரு குலமங்கை செய்யும் காரியமா இது?

பழைமையில் ஊறிய முன் தலைமுறையினரான பெற்றோரின் இந்த மனப்போக்கை விடவும் அதிகமாய் அவளைச் சாட்டையடியாய்த் தாக்கியது அவள் மகளின் செயல்தான். அப்போது பதின்மூன்று வயதாகியிருந்த அவள் மகள் தன் பாட்டன் - பாட்டியைப் போலவே மணமுறிவு என்பதை ஒரு பாபம் என்று சாடி, தாயைப் 'பாவி' என்று முத்திரை குத்திவிட்டுத் தந்தையிடம் சென்றுவிட்டாள். அருணாசலம் மகளைக் கரம் நீட்டி வரவேற்றான். மனைவிக்கு எதிராக அவனுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி அது.

ஆனால் இரண்டாண்டுகளுக்குப் பின் அருணாசலம் தானாகவே விவாகரத்துக்குச் சம்மதித்தான். ஏனெனில் அப்போது மறுமணம் செய்துகொள்ள அவன் விரும்பினான்.

கடைசியாய் விடுதலை பெற்றுவிட்ட காந்திமதி, அப்போது மருத்துவ விடுப்பிலிருந்த ஜயராமனின் சொந்தக் கிராமத்துக்கு மகிழ்ச்சியோடு விரைந்தாள். அவள் அவன் வீட்டை அடைந்தபோது அவனுடைய சடலத்தை வெளியே தூக்கி வந்துகொண்டிருந்தார்கள்.



அடிக்கடி வரும் காய்ச்சலால் ஏற்கனவே பலவீனமடைந்திருந்தவன் உயிரை, திடீரென்ற ஒரு தீவிர மஞ்சள் காமாலைத் தாக்குதல் பலிகொண்டு விட்டிருந்தது.

அவளுக்கு மட்டும் பத்தொன்பது வயதிலேயே கல்யாணம் நடக்காதிருந்தால்! அருணாசலம் மட்டும் வேறு விதமானவனாய் இருந்திருந்தால்! விவாகரத்துக்கு அவன் இன்னும் சீக்கிரமே ஒப்புக் கொண்டிருந்தால்!

இருந்திருந்தால், இருந்திருந்தால், அவள் வாழ்க்கையே ஓர் 'இருந்திருந்தால்!'

உற்சாகமும் எதிர்பார்ப்புமாய் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தவளைத் திருமணம் என்ற சடங்கு துயருக்கும் ஏமாற்றத்துக்கும் உள்ளாக்கி, ஒரு மகிழ்ச்சியான வீடும் வாழ்வும் பெற வாய்ப்பில்லாதவளாகவே செய்து விட்டது.

ஐந்து நாள்களுக்குப் பின் விடியற்காலையில் அவள் கல்யாண மண்டபத்தை அடைந்தாள். திருமணக் கூட்டத்தினரிடையே அவளை மேலும் கீழுமாய்ப் பார்க்கும் பார்வைகள், தயங்கிச் சிரிக்கும் அரைச் சிரிப்புகள், பெண்களின் கண்களில் வம்பு. ஆண்களின் கண்களில் இகழ்ச்சி கலந்த சுவாரஸ்யம். விவாகரத்தான பெண் என்றால் அவள் ஒரு விந்தைப் பொருளா? மனித குலத்திலிருந்தே வேறானவளா? பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகும் இத்தகைய எதிரொலிகள் மனக்கசப்பை ஏற்படுத்தவே செய்தன.

"வா காந்தி".

மனமார்ந்த புன்னகையுடன் பத்மா அவளை அணுகினாள். மணப்பெண்ணின் தாய் என்ற முறையில் ஒன்பது கஜப் பட்டாடை, உடலெங்கும் தங்க வைர ஜொலிப்புகள், நெற்றியில் பெரிய குங்கும வட்டம், அதன்கீழ் கங்காரு மடிக் குட்டியாய் சின்ன குங்குமப் புள்ளி, அவளுக்கு எதிர்மறைபோல் அருகில் காந்திமதியின் எளிய நைலான் அச்சுப் புடைவை, முத்துத் தோடுகள், நகை என்ற பெயரில் கழுத்திலும் இடக்கையிலும் ஒற்றை இழைகள், வலக்கையில் கடிகாரம், நெற்றியில் சின்னதாய் சாந்துப் பொட்டு. இந்தத் தோற்ற வேறுபாடுகளைக் கடந்து இருவரிடை ஆழ்ந்த நட்பின் இணக்கம் அடியிழையாய் ஓடியது.

"இந்தா, பூ வாங்கிக்கோ. வாங்கிண்டு டிபன் சாப்பிட வா" என்ற பத்மா, தொடர்ந்து "லதா இன்னிக்கு ரொம்ப அழகா இருக்கா, இல்லே? பையனும் லட்சணமாயிருப்பான். நல்ல ஜோடிப் பொருத்தம். நீ காப்பி பலகாரம் சாப்பிட்டதும் உன்னை அவனுக்கும் அவன் அப்பா அம்மாவுக்கும் அறிமுகப்படுத்தறேன்... என்ன காந்தி! ஏதோ யோசனையா இருக்கே? என்ன விஷயம்? உடம்பு..."

"லதாவைப் பத்தித்தான் நினைச்சுண்டேன் பத்மா! கவலையாயிருக்கு".

"கவலை என்ன?"


"கல்யாணம்கிறது ரொம்ப சீரியஸ் விஷயம்.."

அவள் பேச்சு தடைப்பட்டது. ஹாலின் இன்னொரு கோடியில் யாருடனோ பேசிக்கொண்டு நின்றிருந்தவனிடம் பார்வை நிலைகுத்தியது. இத்தனை ஆண்டுகளில் நிறையச் சதை போட்டிருந்தான். அவனது தலைமுடி அடர்த்தியும் கறுப்பும் குன்றியிருந்தது. கண்ணாடி அணிந்திருந்தான். அவன் பேசுகையில் அவ்வப்போது அதைக்

கழற்றி அதன் ஒரு காதை இரு விரல்களிடையே சுழற்றிவிட்டு மீண்டும் அணிந்துகொள்ளும் வழக்கம் மட்டும் கண்ணாடியுடனேயே வந்திருக்குமோ?

"அருணாசலமா!" வியப்பும் அதிர்ச்சியுமாய் குரல் சன்னமாக வெளிப்பட்டது.

"ஸாரி காந்தி! அவர் என் சம்பந்தியம்மாவுக்கு உறவுன்னு எனக்குத் தெரியாது. தன் ஒன்னுவிட்ட அண்ணன்னு அந்தம்மா நேத்து அறிமுகம் செஞ்சு வச்சப்போ திகைச்சுப் போய்ட்டேன். அவர் உன்னைப் பார்க்க வேணாம்னு நினைச்சியானா வேறு பக்கம் போயிடலாம், வா".



"அவர் என்னைப் பார்த்தாலும் பார்க்காட்டாலும் எனக்கு ஒன்னுதான் பத்மா! என்னோட வாழ்க்கையைப் பாழாக்கின அந்த மனுஷனைப்பத்தி அதுக்குமேல எனக்கென்ன அக்கறை? இங்கே பார்த்ததும் ஆச்சரியமாப் போச்சு, அவ்வளவுதான். அவரும் வந்திருக்காரா? அவர் மனைவி?"

"ஆமாம், அதோ அங்...கே. அவள் தான்".

பத்மா சுட்டிக்காட்டியவள் அருணாசலத்தைவிட மிகவும் இளையவளாய்த் தோன்றினாள். நேர்த்தியான உடலமைப்பைக் கொண்ட ஒருவித அழகி என்றாலும் சற்றே உள்வாங்கிய கன்னங்கள், சுடர் இழந்த விழிகள்...

"மறுபடியும் அதையே செய்திருக்கார் மனுஷன்" என்றாள் காந்திமதி துயருற்ற குரலில்.

"எதையே?"

"ஒரு மனித ஆத்மாவைச் சிதைக்கிறதை". அவள் பெருமூச்செறிந்தாள். "குழந்தைகள் இருக்கா?"

"ஒரு பையன். ஒன்பது வயசாறதாம். இப்போ சித்த முந்தி இங்கேதான் விளையாடிண்டிருந்தான்". பத்மா சுற்றுமுற்றும் ஆராய்ந்தாள்.

"இருக்கட்டும். நன்னாயிருந்தா சரி... பத்மா! அவன் – அதான், என் பெண் – இல்லே இல்லே... அவர் பெண் அவளும் வந்திருக்காளா?" குரலில் ஆவல் பயத்துடன் எட்டிப்பார்த்தது.

பத்மா மென்மையாய் அவள் தோளைத் தொட்டாள். "இல்லே காந்தி! அவள் அமெரிக்காவிலே புருஷனோடு ஸெட்டில் ஆயிட்டாளாம். எப்பவாவதுதான் இந்தியாவுக்கு வருவாளாம்".

"புருஷன்... ம், கல்யாணமாயிடுத்தாக்கும்.... சந்தோஷமாய் இருக்காளாமா?"

"நிச்சயம் இருப்பா".

அமெரிக்காவில் குடியேற்றம். மேலை நாட்டு வசதிகளும் வாழ்க்கை வாய்ப்புகளும் வேண்டியிருக்கிறது. நாகரிக மேற்பூச்சு அத்தனையும் இருக்கும். ஆனால் ஆழத்தில், விவாகரத்து செய்யும் பெண் ஒரு பாவி என்று கருதும் சம்பிரதாய இந்திய மனப்பான்மைதான்.

காந்திமதியின் இதழ்களில் கசந்த சிரிப்பு நெளிந்தது.

"நான் அங்கே பந்தலுக்குப் போகணும் காந்தி! கல்யாணச் சடங்குகள் இப்போ தொடங்கிடும். உன்னை இப்போ சாப்பாட்டறைக்கு அழைச்சுண்டு போய் விட்டுட்டு நான் போறேன்".

"அடடா, உனக்கு நாழியாறது, இல்ல? ஸாரி. நீ போ பத்மா. இந்தா, லதாவுக்கு என் பரிசு".

"தாங்க்ஸ்". சரிகைத் தாளில் மூடி ரிப்பன் கட்டிய பரிசுப் பெட்டியைப் பத்மா வாங்கிக் கொண்டாள். உணவுக்

கூடத்தை நோக்கி நடக்கையில் கேட்டாள் : "நீ அப்போ லதாவைப் பத்தி ஏதோ சொல்ல வந்தியே, என்ன அது?"

"போறது விடு. கல்யாணம் நடக்கப் போற நேரத்தில் நான் அந்த மாதிரி பேசறதுகூடச் சரியில்ல".

"நீ என்கிட்ட எந்த நேரத்திலும் எந்த மாதிரியும் பேசலாம்".

காந்திமதி நெகிழ்ந்து போனாள்.

"ஒன்னுமில்ல... கல்யாணத்தின் எல்லாப் பரிமாணங்களையும் புரிஞ் சுண்டுதான் லதா இதில் அடியெடுத்து வைக்கிறாளா அப்படின்னு ஒரு கவலை".

"லதா இந்தக் காலத்துப் பெண் காந்தி! இன்னிக்குப் பெண்களுக்கு எல்லாமே தெரியும், புரியும்".

"கல்யாணமே ஓர் ஆபத்தான விஷயம்தானே பத்மா? என்ன நடக்கப் போறதுன்னு தெரியாத ஒரு லாட்டரி. அதுவும் முன்பின் பரிச்சயமில்லாத ஒருத்தன்னு வரபோது... இப்படி ஏன் நீயும் உன் வீட்டுக்காரரும் அவசரப்பட்டு ஓர் அப்பாவிப் பெண்ணைக் கண்ணைக் கட்டிக் காட்டில் விடணும்?"

"உன் கல்யாணம் சரியாய் அமையாத தால்தான் உனக்கு இப்படியெல்லாம் தோணறது காந்தி!"

"அந்த மனுஷன் என்னோட வாழ்க்கையைக் கெடுத்தது போதாதா? அது மட்டுமில்லாமே இப்போ தன் ரெண்டாவது மனைவிக்கும் அதையே தான் செய்யறார்னு வெளிப்படையாத் தெரியறது. ஆண்களே இரக்கமில்லா தவர்கள் பத்மா! சுயநலக்காரர்கள்".

"அருணாசலம் என்கிறது ஒரு நபர்தான். ஒன்னைப்பார்த்துட்டு ஒட்டு மொத்தமாய்த் தீர்ப்புச் சொல்றது குழந்தைத் தனமில்லையா காந்தி?"

"அருணாசலத்தைப் போல் வேறு ஆண்பிள்ளைகளே இல்லைன்னு சொல்றயா?"

"ஏன் இல்லாம? நிறையப் பேர் இருக்கா. நானும் உலகம் தெரிஞ்சவ தான் காந்தி! ஆனா உலகத்தில் எத்தனையோ நல்ல ஆண்பிள்ளைகளும் உண்டு. ஏன், ஜயராமன் நல்ல மனு ஷனாய் இல்லையா?"

"நீ என்ன வேணும்னாலும் சொல்லு, கல்யாணம் என்கிறது ஒரு 'ரிஸ்க்' தான்".

"விரும்பி எடுத்துக்கற 'ரிஸ்க்' ".

"ஒரு பெண் இதைத்தான் விரும்ப றான்னு நினைக்கிறயா?"

"பெரும்பாலான பெண்கள் மட்டு மில்லே, பெரும்பாலான ஆண்களும் இதைத்தான் விரும்பறதாய் நினைக் கிறேன். கல்யாணம் ஒரு சமூக அமைப்பு காந்தி! பொதுவா மனிதர்கள் எல்லாருக்குமே இந்த அமைப்பு தங்க ளுடைய பல நிலைகளிலான தேவை களுக்கும் திருப்தி தரக்கூடியதாய்த்தான் இருக்கு. சமூக அமைப்புகளே சராசரி மனிதர்களுக்காக ஏற்பட்டதுதானே? உலகத்தில் முக்கால்வாசிப் பேரும் சராசரி மனிதர்கள்தானே?"

காந்திமதி அவளை உற்றுப் பார்த்து விட்டுப் புன்முறுவலித்தாள். தோழியின் கையைப் பற்றி மென்மையாய் அழுத்தி னாள். இருவரும் கைகோத்துச் சாப் பாட்டு அறையை நோக்கி நடந்தார்கள்.

திருமணச் சடங்குகள் நடை பெறுகையில் பந்தலில் கல்யாணக் கூட்டத்தில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த காந்திமதியின் மனம் முழுச் சமாதானம் பெற்றிராவிட்டாலும் பதற்றம் தணிந்திருந்தது. பத்மா சொல்வதிலும் அர்த்தம் இல்லாம லில்லை... புரோகிதர் பக்கத்தில் உட்கார்ந்து மந்திரம் சொல்லும் கணவனின் அருகில் நின்றிருந்த பத்மா அங்கிருந்தே தோழியைப் பார்த்துப் புன்னகை செய்தாள். ஓமத்தீ சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது. மணமகனின் களையான முகத்திலும் அதற்கிணையான சுடர். அவனருகில் மணமகளுக்குரிய அலங்காரத்தில் லதா அமைதியாய் நேரே பார்த்தபடி அமர்ந் திருந்தாள்.

எதையெதையோ எண்ணியவளாய் ஒரு பெருமூச்சுடன் தலையைத் திருப்பிய காந்திமதி, இரண்டு வரிசைகள் தள்ளி நாற்காலியில் உட்கார்ந்திருந்த அருணாசலம் தன்னையே பார்த்துக் கொண்டிருப் பதைக் கண்டாள். அவன் பார்வையின் ஆழத்தில் ஏதேதோ சிந்தனைகள். அவள் பார்த்ததுமே அவன் சட்டென்று கண்களை விலக்கிக் கொண்டு விட்டான்.

அவன் மனைவியும் தன் பக்கம் அவ்வப்போது பார்வையைத் திருப்புவது காந்திமதிக்குப் புலனாயிற்று. தான் யார் என்பதை அக்கூட்டத்தில் யாரோ அவளுக்குச் சொல்லியிருக்க வேண் டும். அந்தக் கண்களில் ஒரு முறைமீடு, ஏதோ ஒருவிதப் பாராட்டு... காந்தி மதியின் நெஞ்சில் இரக்கம் எழுந்தது. அவளைப் பார்த்துக் கனிவாய்ப் புன்னகை செய்து தலையசைத்தாள். ஒரு கணநேரப் பந்தத்தில் தோழமை தெரிய இருபெண்களின் விழிகளும் சந்தித்தன. பிறகு இருவருமே அந்நியர் களாய் வெவ்வேறு பக்கம் திரும்பிக் கொண்டார்கள். திருமணம் இனிது நடந்து எல்லாரும் அட்சதைகளைத் தூவினர்.

சிறிது நேரம் சென்றதும், அலுவலகம் செல்பவர்களுக்கான முதல் பந்தியில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு காந்திமதி பத்மாவிடமும் அவள் குடும்பத்தாரிடமும் விடை பெற்றுக் கையில் தாம்பூலப் பையுடன் திருமண மண்டபத்தினின்று வெளியே வந்தாள். பாதையில் இறங்கி நடக்கை யில் பின்னால் யாரோ ஓடிவரும் காலடியோசை கேட்டு நின்று திரும்பினாள்.

அரை நிஜாரும் டீஷர்ட்டும் அணிந்து பளிச்சென்ற முகத்துடன் ஒரு சிறுவன், ஓடிவந்த இரைப்புடன் அவள் எதிரே நின்று அருணாசலத்தின் கண்களுடன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவளது வியப்பு அடங்குமுன்பே, "நாங்கள்ளாம் இன்னிக்கு ராத்திரி டெல்லிக்குத் திரும்பிப் போறோம் ஆன்ட்டி. என் அப்பா இதை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னாங்க" என்று கூறி ஒட்டிய ஓர் உறையை அவள் கையில் திணித்து விட்டுத் திரும்பி ஓட்டமாய் ஓடி மறைந்தான்.

காந்திமதி அவன் போன திசையை வெறித்தாள். சிறுவர்களின் உற் சாகமும் வேகமும்தான் என்ன என்று தனக்குள் புன்னகைத்துக் கொண்டே உறையின் ஓரத்தைக் கிழித்து உள்ளே யிருந்த சிறு காகிதத்தை எடுத்துப் பிரித்தாள். அதில் இரண்டே சொற்கள் எழுதப்பட்டிருந்தன.

'என்னை மன்னித்துவிடு!'

வாழ்வின் அபத்தத்தை எண்ணி அவளுக்குக் குபீரென்று சிரிப்பு வெடித்துவந்தது. ௦

அப்பரும் அப்பாவும்

"நீங்கெல்லாம் எதுக்காக அப்பா சாமி கும்பிடணும்... தெரியாமத்தான் கேட்கேன்".

அரசாங்கக் கடனில் கட்டப்பட்டதால், 'கடனே' என்று காட்சி காட்டும் சின்னஞ்சிறிய அந்த வீட்டின் விசாலமான முன்புறத்தில், அந்த இடத்தின் ஒரே ஓர் அலங்காரமாய்த் தோன்றும் பூச்செடிகளில் மலர்களைக் கொய்து, கையில் இருந்த பூக்கூடையை அந்த மலர்களாலேயே, பொங்கி வழியவிட்டு, வீட்டுக்குள் வந்த இசக்கியா பிள்ளை ஓர் ஓரமாய் உள்ள பூஜை அறைக்குள் வழக்கமான வேகத்தோடுதான் போகப் போனார். சமையலறையைத் தாண்டி, அவள் இருந்த அறையின் நினைவே இல்லாமல், அகலப் போனவரை, அந்தக் குரல் கட்டிப் போட்டது... டேப்புகளால் பின்னப் பட்ட கட்டிலில், கரங்களைப் பின்னி, அந்தப் பின்னலையே தலையணையாக்கி, குப்புறக் கிடந்த மகளை 'சிவ சிவ' என்று மனதுக்குள் ஓலமிட்டு மருண்டபடி பார்த்தார்... அடியற்றுக் கிடந்த அவளோ, தோள்களை நிமிர்த்தாமலே, கழுத்தை வளைத்து, தந்தையையே பார்த்தாள்.

இசக்கியா பிள்ளைக்கு அவள், தனது கழுத்தில் தொங்கும் உத்திராட்ச மாலையையே பார்ப்பது போல் தெரிந்தது... அதைப் பறிக்கப் போவது போன்ற பார்வை... உடனே அவர், மார்பின் முடிவிற்கும், வயிற்றின் தொடக்கத்திற்கும் எல்லைக்கோடான நெஞ்செலும்புக் கூட்டின் இடைவெளியில், ஒற்றை உத்திராட்சக் கொட்டையுடன் முற்றுப்பெற்ற மாலை முனையை ஒரு கையில் பிடித்து, அந்த மாலையைக் கழற்றாமலே, சுருட்டிக் கொண்டார். ஒரு கைக்குள்ளேயே மறைத்துக் கொண்டார். இப்போது, அவள் இன்னொரு கையிலுள்ள பூக்கூடையைப் பார்ப்பதுபோல் இருந்தது. கையசையாமலே அந்தக் கூடை

> ● இசக்கியா பிள்ளை மகளையே ஒரு துர்க்கையாக அனுமானித்தார். தன்னுள்ளே ஒரு கடல் பொங்குவதைக் கண்டார். அதிலே திரிசூலமும், உடுக்கும் எழுவதைப் பார்த்தார். நாமார்க்கும் குடியல்லோம்... ஆமாம்... அஞ்சி ஒடுங்கி வாயில்லாப்பூச்சியாய் இருப்பது அப்பர் பிரானை அவமதிப்பதற்கு ஒப்பாகும். சட்டம் என்ற கல்லைக் கட்டி, நீதிமன்றம் என்ற கடலில் போட்டாலும், நாமார்க்கும் குடியல்லோம். ●

ஆடியது. அவள் கண்களே அதை ஆட்டி வைப்பதுபோல் தோன்றியது.

இசக்கியா பிள்ளை கால்களை அங்குமிங்குமாய்த் தேய்த்தபடி, சிறிது நேரம் காலடி வட்டத்திற்குள்ளேயே ஒற்றைக்காலில் சுற்றினார். பிறகு அவள் சொன்னதைக் கேட்காதது போலவும், அவள் பார்த்தது கண்களில் படாதது போலவும், பாவனை செய்தபடியே பூஜை அறை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். மகளின் இன்னொரு கேள்வி அவர் உடம்பைக் குலுக்கியது.

"பூஜை அறை இருக்கறதுக்கு, இந்த வீட்டுக்கு என்ன யோக்கியதை இருக்குது?"


இசக்கியா பிள்ளை, பூஜையறையில் துணிக்கதவு போலான அந்தத்திரைச் சீலையைப் பார்த்தார். ஒரு கையில் திரிசூலமும், மறு கையில் உடுக்குமாய்க் காட்சி காட்டும் அந்தச் சீலையில் பொறித்த திரிபுர சுந்தரியையே பார்த்தார். மகளை மாதிரியே, அம்மாவின் முகம்.... 'ஒன்னைத் தான் பார்க்கிறேன்' என்பது மாதிரியான பிரிந்தும் பிரியாதது போன்ற உதட்டோரச் சிரிப்பு... அழுத்தமான பார்வை... அங்கேயே அப்படியே அசைவற்று நின்றார். 'அம்மா... எனக்கு பூஜை செய்ய யோக்கியதை இல்லையாம்மா.... சொல்லம்மா...'

அம்மாவே சொல்ல வந்தது போல், சமையலறையில் இருந்து, முகத்தில் பவுடர் போல் அப்பிய கோதுமை மாவோடு காமாட்சி வெளிப்பட்டாள். கணவருக்கு முன்பே காரியம் ஆற்றுபவள் என்பதைக் காட்டுவதுபோல் ஈரத் தலை... நெற்றியை ஒளியடிப்புச் செய்யும் விபூதி... நெற்றிப் பொட்டை மறைக்கும் பெரிய குங்கும வட்டம்.

காமாட்சி, மகளைப் பார்த்து ஓடினாள். ஓரடி துள்ளி, ஈரடி நடந்து மூன்றடியில் நின்ற வண்ணம், மகளையும் அவளைக் கொடுத்தவரையும் மாறி மாறிப் பார்த்தாள். காது வளையங்கள், கட்டிலின் அணிகலன்கள்போல் தோன்றும்படி கட்டில் சட்டத்தில் முகத்தை அழுந்தப் போட்டிருந்த மகளைப் பார்த்தாள். பூஜை அறைக்கு வெளியே நிற்க முடியாமலும், உள்ளே போக முடியாமலும் தவிக்கும் "அவரைப்" பார்த்தாள். அவர் பிடித்த பூக்கூடை சரிந்து, மலைமகளுக்கான செம்பருத்தி மலர்களும், கலைமகளுக்கான வெண்பருத்தி மலர்களும் கீழே விழுந்து கிடந்தன. பின்னிக் கிடந்தவை பிரிந்து கிடந்தன. உயரமானாலும், ஒட்டடைக் கம்பின் அழுத்தம்கூட இல்லாமல், பூஞ்சை உடம்போடு பூப்பாரம் சுமக்க முடியாமல் [illegible]ந்து நின்ற கணவனைப் பார்த்தாள். தாய்மையைக் கண்ணகித்தன்மை விரட்டியதை சாட்சி கூறுவதுபோல், குரலில் முன்பாதியில் கனிவையும், பின்பாதியில் கடுமையையும் கலந்தபடி பேசினாள்.

"ராகுகாலம் வரப்போகுது... நீங்க மொதல்ல உள்ளே போங்க. ஏய் இந்திரா. வாய் ரொம்ப நீளுது..."

"அவன் கை நீண்டதைக் கேட்கத் துப்பில்லாமல், என் வாயை அடைக்க வந்துட்டிங்களா! பரவாயில்ல... மகளுக்கு ஏத்த அம்மாவாய் இருக்க முடியாவிட்டாலும், புருஷனுக்கு ஏத்த →




பெண்டாட்டியாய் இருக்கறதுல சந்தோஷந்தான்..."

காமாட்சி, பாயைச் சுருட்டுவது போல் தன்னைச் சுருட்டிக் கொண்டு தொட்டு எழுந்து, அந்த அறைக்குள் அங்குமிங்குமாய் சுற்றும் மகளையே பார்த்தாள். அவளோ, அவளை அங்கீகரிக்காமலே ஒரே சுற்றாய் ஆனவள் போல், பல சுற்றாய்ச் சுற்றினாள்.

தாயும், மகளும் மௌனித்ததை தடங்கல் தீர்ந்ததாய் நினைத்துக் கொண்டு இசக்கியா பிள்ளை

பூஜையறைக்குள் போனார். திரைச் சீலையை ஒரு பக்கமாய் தள்ளுவதற்கு மறந்து, அதை இரண்டாய் மடித்து, நிலைப்படிக் கம்பியில் செருகினார். அதில் திரிபுரசுந்தரி, காலும் கையும் குறுக்கப்பட்டு குறுகிக் கிடந்தாள்.

பூஜையறைக்குள் வந்த இசக்கியா பிள்ளை, எந்தச் சோதனையிலும் பூஜை நிறுத்தம் ஏற்படக் கூடாது என்று கடுக்கன் போட்ட அப்பா கிராமத்தில் உபதேசித்ததை நினைவுக்குக் கொண்டுவந்து அந்த அறையே ஆகாயமும் பூமியும் என்பதுபோல் அண்ணாந்தும், தலை தாழ்த்தியும் பார்த்துக் கொண்டார். அந்த அறை, அனைத்தையும் உட்கொண்ட பிரபஞ்ச அறையாய்த் தோன்றியது... வீட்டைக் கட்டும்போது, அறுநூறு சதுர அடிக்குள்ளேயே தனியாய் ஒரு பூஜை அறை கூடாது என்றாள் மனைவி. இவர்தான் அவள் காலில் விழாத குறையாக விழுந்தார். அவள் மசியவில்லை. ஒருநாள் அவள் வெளியூர் போனபோது, மேஸ்திரிக்குக் குடிக்கப் பணம் கொடுத்து, இந்தச் சின்ன அறையைக் கட்டிவிட்டார். ஆயிரம் ரூபாய்க்கு ஒரு கடப்பா பளிங்குக் கல்லை வாங்கியும் பொருத்தி விட்டார். அது நட்சத்திரக் குவியல்களைக் காட்டும் ஆகாய நிறத்தில் மின்னிக் கொண்டிருந்தது. இரண்டடி உயரத்தில், ஐந்தடி நீளத்தில் மூன்றடி முன்நோக்கிய அந்தப் பளிங்குக் கல்லில் மூன்று தெய்வப் படங்களைக் கொண்ட ஒரு படம். வலப் பக்கம் சுப்பிரமண்யர் ஆலய மூர்த்தியாக ஆதிசேஷ முருகன்... பாம்பின் மேல் இருக்கிறார். இடப் பக்கம் உடுப்பி கிருஷ்ணர், நடுப்பக்கம் தர்மஸ்தலா லிங்கம்... பக்கவாட்டில் ஒரு பக்கம் அய்யப்பன். மறுபக்கம் திருத்தணி முருகன்... இரு சுவர் மடிப்பு கொண்ட ஒரு மூலையில் மூகாம்பிகை. அம்மாவின் அருகே பிள்ளையார்... இன்னொரு மூலையில் பஞ்சமுக அனுமான். அதற்கு அருகே இரு கரத்தில் வீணையும், ஒரு கரத்தில் உத்திராட்ச மாலையும், மறுகரத்தில் எத்தனையோ மகான்களும், கவிஞர்களும், மாமேதைகளும் படைத்த தத்துவக் கடலை ஓர் ஏட்டுச் சரமாய்க் கொண்ட இன்னொரு கரமும் கொண்ட சரஸ்வதி தேவி...



பொம்மை : ம்... எவ்வளவு நல்ல புடவையை வீணாக்கியிருக்கிறார்கள் பார்.

- ஸ்கார்பியோ

இசக்கியா பிள்ளை ஒவ்வொரு தெய்வப்படத்தின் முன்னாலும், ஒவ்வொரு மந்திரத்தைச் சொல்லிக் கொண்டார்.

ஓம் வக்ரதுண்டாயநம :

ஓம் சரவணபவ ...

ஓம் நமோ நாராயணாய...

ஓம் நமசிவாய நம :

ஓம் விஸ்வமாதா ஜகத்தாத்ரி...

ஓம் சரஸ்வதி தேவி நம ... சர்வரோக பாப நிவாரணி நம ...

'புத்திர் பலம்' என்று சொல்லிக் கொண்டே பஞ்சமுக அனுமார் மேல் பூச்சூடப் போன இசக்கியா பிள்ளை, கைப்பூவை, ஆஞ்சநேயரின் உச்சந்தலையில் சூட்டியபடி, அந்தக் கையை எடுக்காமலே, வெளியே தாய்க்கும் மகளுக்கும் நடக்கும் வாக்குவாதத்தை உற்றுக் கேட்டார்.

"எத்தனை தடவ ஒனக்குச் சொல்றது... அந்தக் கம்ப்யூட்டர் சென்டர் இல்லாட்டால் இன்னொரு சென்டர். கட்டுன பணம், வீணாச் சேன்னு அப்பாவோ நானோ வருத்தப்படுறோமா?"

"ஒங்களுக்கு எப்படிக் கட்டுன பணம் வீணானதிலே வருத்தம் இல்லியோ, அப்படி அந்த பிரின்ஸ்பால் பயல் என் கையைப் பிடிச்சு இழுத்ததுலயும் வருத்தமில்லை, இல்லியா?"

"துஷ்டனைக் கண்டால் தூர விலகித்தான் ஆகணும்... காலம் கலிகாலம்."

"அப்போ இனிமேல் கலியுக வரதான்னு ஆகாயத்தைப் பார்த்துப்பேசாதீங்க..."

"கவலைப்படாதம்மா... நாம்கும்புடுற தெய்வம் அவனைக் கவனிச்சுக்கும்..."

"தெய்வமுன்னு இருந்தால் முதல்ல அது ஒங்களைத்தான் கவனிக்கும்... எப்படியோ பன்றிக் குட்டி மாதிரி பெத்துப் போட்டுட்டிங்க... பன்றியாவே இருக்கச் சொல்றீங்க... ஆனால், என்னால... என்னால..."

இசக்கியா பிள்ளைக்கு மகளின் விசும்பல் சத்தமும், அதற்குப் பதிலாக மனைவியின் விக்கல் சத்தமும் கேட்டன. அதன்பிறகு மௌனம். "நீங்களே கேளுங்க. "நான் பாடும் பாட்டைக் கேளுங்க" என்று அத்தனை படங்களையும் அனுசரணைக்காய்ப் பார்த்தார். பிறகு பத்மாசனம் போட்டார். அந்தப் பளிங்குக் கல்லின் மத்தியில் படங்களை மறைக்காமல் உள்ள சின்ன குத்துவிளக்கை ஜோதியாக்கினார். 'ராமலிங்காய' என்று சொல்லிக் கொண்டே இதயத்தில் இருந்து, தொண்டைக் குழியில் தெறித்து, காதில் விழுந்த சுயம்பு வார்த்தைகளைத் தனக்குள்ளேயே கேட்டார்.

"எச்சோதனையும் இயற்றா தெனக்கே...
அச்சோ ஏற்றருள் அருட் பெருஞ் ஜோதி".

இசக்கியா பிள்ளை வள்ளலார் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல் புத்தகத்தை எடுத்தார். திருவடிப் புகழ்ச்சியை ஓதிவிட்டு, அகவலைப் படித்தார். ஐம்பூத இயல்வகை, மண்ணியல், நீரியல், தீயியல், காற்றியல், வெளியியல், அகப்புறம், ஐம்பூதக் கலப்பு, வெளிவகை, அண்டப்பகுதி, கடல் வகை, மலைவளம், வித்தும் விளைவும், ஒற்றுமை, வேற்றுமை, ஆண்-பெண் இயல், காத்தருள் வேண்டுதல் போன்ற பாக்களைப் பாடல்களாக்கினார்.

மீண்டும் தாய் மகள் யுத்தம் தொடங்கியதால், அவரால் தொடர முடியவில்லை... காது கொடுத்துக் கேட்டார்.

"ஏதோ நம்ம நல்ல காலம்... தலைக்கு வந்தது தலைப்பாகையோட போனமாதிரி கையைப் பிடிச்சதோட விட்டுட்டானே...

நினைத்துக்கூடப் பார்க்க முடியாதது நடந்திருந்தால்... எப்படியோ அப்பாவோட பூஜா பலன்... ஒன்னைக் காப்பாத்திட்டு... ஆண்டவன் அவனுக்குக் கூலி கொடுப்பான். இந்தத் தப்புல தப்பிச்சாலும் அடுத்த தப்புல மாட்டிக்குவான்".

"ஒரு தப்புச் செய்தால் அந்தத் தப்புக்குன்னு தண்டனை கிடைக்கணும். அப்போதான் அந்தத் தப்பே அப்புறம் நடக்காது. இன்னும் விவரமாய், விளக்கம் கேட்டால் தப்புச் செய்தவன் நல்லது செய்யும்போது - அந்த நல்லதே தப்பாகி, தண்டனை கிடைக்குமுன்னு சொல்வீங்க. அதனால கெட்டது ரெட்டிப்பாகும், நல்லது ஓடிப் போகுமுன்னு நானும் பதில் சொல்லவேண்டியது வரும்".

"சரி... பல்லை விளக்கு... நேத்து ராத்திரியே சாப்பிடலை.."

"எப்படிம்மா சாப்பிட முடியும்? லைப்ரரியில் ஒரு புத்தகத்தைப் புரட்டிக்கிட்டு நின்ன என்னை, அந்தப் புத்தகத்தைப் பார்க்கிற சாக்கில், கழுத்தில் முகம்போட்டு, அதன்பிறகு ஒடப்போன என்னை கையைப் பிடிச்சு... அந்தப் பயலை அடக்கவே முடியாதா?"

இசக்கியா பிள்ளையின் காதுகளில் மேற்கொண்டு எந்த வார்த்தையும் விழவில்லை... மாறாக மனைவியின் அழுகைச் சத்தம் கேட்டது. அவர் துள்ளிக் குதித்து எழப்போனார். அதற்குள் அவள் சத்தமடங்கி, தைரியப் பட்டதுபோல் தோன்றியது... மகளும் மறுவார்த்தை பேசாததில் இருந்து, விவகாரம் தீர்ந்துவிட்ட தாய் நினைத்து, அருட்பா அகவலைப் படிக்கத் தொடங்கினார். ஓதுவார் போலவே, தாள லயத்தோடு ஓசை உயிரோடு ஓதிக் கொண்டிருந்தார்...

"மதம்புரை மோகமும் மற்றவும் ஆங்காங்கு
அரம்பெற அடக்கு அருட்பெரும் ஜோதி"

மீண்டும் தாய்-மகள் சொற்போர். சொற்போர் என்பதைவிட ஒருவிதமான கெடுபிடிப்போர்.

"போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளெயிண்ட் கொடுக்கிறதுல என்னம்மா தப்பு?"

"தப்பு கம்ப்ளெய்ண்ட்ல இல்ல... போலீஸ்ல இருக்குது... கோர்ட்ல இருக்குது... இந்தச் சமுதாய அமைப்புல இருக்குது..."

"தட்டிக் கழிக்கணுமுன்னா, எதை வேணுமுன்னாலும் தட்டிக் கழிக்கலாம்"

"ஒனக்கு பட்டறிவு போதாது... அதனாலதான் இப்படிப்பேசுறே... போலீஸ்ல புகார் கொடுத்தால், மொதல்ல அவங்க கேட்கிற கேள்விகளே கற்பழிக்கப்பட்டதைவிடப் பயங்கரமா இருக்கும். உடலுக்குப் பதிலா உள்ளத்தையே கற்பழிச் சுடுவாங்க. அப்படியே அவங்க நடவடிக்கை எடுத்தால்... எடுத்தால்... என்ன.. எடுக்கலாம். ஏன்னா, அவங்களுக்கும் பொண்ணுங்க இருக்குமே. அந்தச் சண்டாளப் பயலைக் கைது செய்து லாக்கப்புல வைக்கிறதாய் அனுமானம் செய்துக்கோ... இப்படிப்பட்ட வழக்குக்கு, ஜாமீன் கொடுக்கத்தான் கோர்ட் இருக்கே... கோர்ட்டுல அந்தப் பாவிப்பயல் மட்டுமா கூண்டுல நிற்பான்... நீயும் நிற்கணுமே... அவன் வக்கீல், 'நீதான் அவனை ஒன் வலையில சிக்க வைக்கப் பார்த்தேன்'னு கேட்டால்... இல்லன்னா 'நீண்ட நாள் பழக்கத்தில அவன் அப்படிச் செய்தான்... அன்றைக்குன்னு கட்டுன மனைவி பார்த்துட்டாள்... அதனால நீ பயந்துட்டேன்'னு அடிச்சுப் பேசுவான்... அவன் பொண்டாட்டியும் புருஷனுக்கு சாட்சி சொல்லுவாள்.. இந்த ஏழை தமிழாசிரியை என்ன செய்ய முடியுமம்மா..?"

"ஒங்களால் முடியும்... மதுரையை எரித்த கண்ணகியைப் பற்றிப் பேசுறதை நிறுத்த முடியும். 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று சூளுரைத்தானாமே நக்கீரன் - அதனைப் பற்றிப் பாடம் நடத்தாமல் இருக்க முடியும்".



"இந்த இடத்துக்கு குடித்தனம் வரப்போறீங்களா...? நீந்தத் தெரியுமா?

"ஏன்...?"

"மழை காலத்துல வசதியா இருக்கும்... அதான்!"

– மயிலாடுதுறை ஸ்வாமி.

மனைவியின் பதிலுக்காக ஆவலுடன் காத்திருந்த இசக்கியா பிள்ளை, மீண்டும் நெடிய மௌனம் நிலவியதைக் கண்டார்... தெய்வ வழிபாடு, இப்படிப்பட்ட லோகாயத விவகாரங்களால் தடைப்பட்டதற்கு வருந்தி, தம் பணம் போட்டுக் கொண்டார். அபிராமி அந்தாதியை எடுத்தார். கம்பெனி சகாக்களுடன் "தெய்வப் பயணம்" மேற்கொண்டபோது வாங்கிய புத்தகம். திருக்கடவூர் அபிராமிதேவியை அபிராமி பட்டர் பாடியதைப் பாடும் போதெல்லாம் இவரது குரல் தழுதழுக்கும்... எலும்புருகிப் போகும். உடல் முழுதும் ஜோதியாவது போல் தோன்றும். அந்த அபிராமி பட்டருக்கு வராத துன்பமா? அவர் பட்ட பாட்டில்... என் பாடு சிறு பாடு...

"பரிபுரச் சீரடி பாசாங்குசை பஞ்சபாணி, இன்சொல்
திரிபுரச் சுந்தரி; சிந்துர மேனியள் ; தீமை நெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக்குனி பொருப்பு சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே"

தடுத்தது இசக்கியா பிள்ளையின் பக்திப் பரவசத்தை, மீண்டும் தாய்- மகள் யுத்தம்.

"போராடும் முன்னாலேயே தோல்வியை ஒப்புக் கொண்டால் என்னம்மா அர்த்தம்? இன்ஸ்பெக்டர்கிட்டே சொல்லுவோம். அவர் கேட்காட்டா அஸிஸ்டெண்ட் கமிஷனர். அவரும் சரிப்படாட்டா டெப்டி கமிஷனர். அப்புறம் கமிஷனர், டைரக்டர் ஜெனரல் இவங்களாலயும் முடியாவிட்டால் முதலமைச்சர். இல்லாத பொண்ணுங்களை என்ன வேணுமுன்னாலும் செய்யலாமுன்னு நினைக்கிறாங்க பாருங்க. இந்த மாதிரிப் பயல்களை விடப்படாதும்மா.."

"அம்மாவுக்கு ஒன்னைவிட யாரும்மா முக்கியம்? அப்படியே போலீஸ் மூலமாய் கோர்ட்டுக்குப் போய், நீ வெற்றி பெற்றாலும் அந்த வெற்றி, தோல்வியைவிட மோசம்மா... ஆமாம்மா... ஒரு

பெண்ணோட பேரு நல்லவிதமாக் கூட அடிபடக் கூடாதுன்னு நினைக்கிற சமுதாயம் இது. ஒன் பெயர் பேப்பருல வந்தால், நீ ஒரு போராட்டக்காரின்னு படிக்கிறவன் நினைப்பான். ஆனால், ஒன்னைக் கட்டிக்க வரவன் அப்படி நினைக்கமாட்டான். நீதான் ஏதோ செய்யக் கூடாத தப்பைச் செய்ததாய் நினைத்து, ஓடிப் போயிடுவான்... அப்புறம் நீ அந்த மணிமேகலை மாதிரி காலமெல்லாம் கன்னியாய்... இப்பவாவது புரியுதாம்மா..."

இசக்கியா பிள்ளை அபிராமி அந்தாதியை அங்குமிங்குமாய் ஆட்டியபடியே ஒட்டுக்கேட்டார். மகளுக்கு அம்மா சொல்வது புரிந்துவிட்டதுபோல் தோன்றியது. அவளிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. அபிராமிவல்லி... 'அவள்' மூலம் அவளுக்கு உபதேசித்துவிட்டாள்... 'அம்மா தாயே... தயவே... என் மகளுக்கு நல்ல புத்தியைக் கொடு...'

இசக்கியா பிள்ளை, அந்த அந்தாதியின் ஒரு பகுதியைப் படித்துவிட்டு, நாளை, விட்ட இடத்திலிருந்து தொடர்வதற்காக ஒரு மல்லிகைப்பூவை, படித்த - படிக்காத பக்கங்களுக்கு இடையில் வைத்துவிட்டு, தேவாரத்திரட்டை எடுத்து 'வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டனை' ஞான சம்பந்தரின் கோளறு பதிகத்தில் ஓசைப் பிழையின்றி அட்சர சுத்தமாய்ப் பாடினார்... பாடிக் கொண்டே இருந்தார். பிறகு அப்பர் அருளிய பகுதிக்கு வந்தார்.

"நாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம்"

வெளியே இப்போது அஞ்ச வைப்பது போன்ற வார்த்தைப் பிளிறுகள்... இந்திரா... ஏதோ ஒரு நாற்காலியை உடுக்காக்கி, காலடி தரை மோதிச் சத்தம் எழுப்ப, ஊழிக்கூத்தாய் - காளிக் கூத்தாய் சாடிக்கொண்டிருந்தாள்...

"பெண்மைக்குக் களங்கம் வரக்கூடாது என்கிறதுக்காக... போராடுற என்மேல் களங்கம் நினைக்கிற எந்தப் பயலும் எனக்கு வேண்டாம். கல்யாணம் என்கிறது ஒருத்தனோட சம்மதத்தில் மட்டுமில்ல, ஒருத்தியோட சம்மதத்துலயும் இருக்குது என்கிறதை மறந்துடாதீங்க. அத ஏதோ... ஒருத்திக்கு ஒருத்தன் கொடுக்கிற சலுகை இல்லே. நல்லவனோட கல்யாணம் நடக்கணும் என்கிறதுக்காக அயோக்கியனுக்கு அஞ்சி, ஒடுங்கி இருக்கப்படாது. அந்த பிரின்ஸிபால் பயலுக்குக் கொடுக்கிற பாடத்தைப் பார்த்துட்டு, அவனை மாதிரியான பயல்களெல்லாம் பெட்டிப்பாம்பாய் ஆகணும்..."

"நான் எதுக்குச் சொல்லுதேன்னால்..."

"சத்தியத்தைத் தேடுறதுதான் மெய்யான பக்தின்னு டியூஷனுக்கு வார பிள்ளைங்ககிட்டே காசு வாங்கிட்டுக் கத்த மட்டுந்தான் ஒங்களுக்குத் தெரியுமா? ஒருத்தன் ஒரு பெண்ணோட வரம்பை மீறும்போது, அந்தப் பெண் தன்னோட வரம்பை அடக்கிக்கிட்டு இருக்கறதுதான் தமிழ்க் கற்பா... குப்பையில போடுங்க கொண்டு..."

"நீ இப்போதான் இளமையின்..."

"நாலு நாளைக்குள்ளே நான் கிழவியாய் ஆயிட்டேம்மா... சரி. எப்படியோ தொலையுங்க. காலமெல்லாம் நான் கூனிக்குறுகியே கிடக்குறேன். அவன் தொட்ட இந்தக் கைகூட ஏதோ விபத்துல விழுந்துட்டாலும் அவன் தந்த விபத்த என்னால் மறக்க முடியுமா? வலியவனைக் கண்டு அவனோட வம்பையும் பொறுத்துக்கிட்டு மெலியவர் இருக்கிறதுதான் நியாயமுன்னு அநியாயமாய்ப் பேசுறீங்க... ஓர் அநியாயத்தை வெளில பேசுறதுகூடத் தப்புன்னால் அது அந்த அநியாயத்துக்கு உடன் போவதாய் ஆகாதா? அதோ அப்பா 'நாமார்க்கும் குடியல்லோ' முன்னு ரொம்பத்தான் கத்துறார். அவருக்கு அதோட அர்த்தம் தெரியாது. தமிழாசிரியையான ஒங்களுக்காவது தெரியுமா. நாமார்க்கும் குடியல்லோமுன்னு... ஓதி.. அப்பர் பாடுவதைக் கொச்சப்படுத்தாண்டாமுன்னு அப்பா கிட்டே போய்ச்சொல்லு. அர்த்தம் தெரியாமல் எந்தப் புனித வரியையும் வாசிக்கிறது அந்தப் புனிதத்தையே அவமதிக்கிறது மாதிரி. கையைத்தானே பிடித்தான்னு அதுக்குப் பின்னால இருக்கிற ஆணவத்தை, அகந்தையைத் தெரியாமல் இருக்கீங்களே, அதே மாதிரிதான்.'

இசக்கியா பிள்ளையின் கண்ணீர், நாமார்க்கும் குடியல்லோம் வாசகங்களை நனைத்தது.

அந்தப் பாடலை, அப்பர்பிரான் பாடிய சூழலை எண்ணிப் பார்த்தார். அப்பரே அங்கே வந்து... அவரையே ஒரு... எதிர்பக்தியாளனாய், தன்னைக் கடலில் கல் கட்டித் தூக்கிப்போட்ட அந்த மன்னனின் மறுவுருவமாய்ப் பார்ப்பதுபோல் தோன்றியது. இந்தப்பாடலின் மெய்யான தாத்பரியம், அவர் இதுவரை யந்திர கதியில் ஓதிவரும் மந்திரங்களுக்குப் புதிய அர்த்தத்தைக் கொடுத்தது...புத்திர்பலம், யசோர் தைரியம், நிர்ப்பயத்துவம்... ஆம்... பயம்தான்... பயப்படவேண்டும். கொத்துதிரி சூலிதிரி குலச ஓங்காரி... ஆங்காரி... ஓங்காரி போன்ற சொற்கள் புதுப் பொருளைக் கொடுத்த சூலாயுதம் என்பது பாலாபிஷேகம் செய்வதற்காக மட்டுமல்ல, நாமார்க்கும் என்பது ஓதுவதற்கும், உச்சரிப்பதற்கும் மட்டும் அப்பர் பெருமான் ஆக்கவில்லை.

இசக்கியா பிள்ளை மகளையே ஒரு துர்க்கையாக அனுமானித்தார். தன்னுள்ளே ஒரு கடல் பொங்குவதைக் கண்டார். அதிலே திரிசூலமும், உடுக்கும் எழுவதைப் பார்த்தார். நாமார்க்கும் குடியல்லோம்... ஆமாம்... அஞ்சி ஒடுங்கி வாயில்லாப்பூச்சியாய் இருப்பது அப்பர் பிரானை அவமதிப்பதற்கு ஒப்பாகும். சட்டம் என்ற கல்லைக் கட்டி, நீதிமன்றம் என்ற கடலில் போட்டாலும், நாமார்க்கும் குடியல்லோம்.

இசக்கியா பிள்ளை கற்பூரத்தை ஏற்றினார். ஆறுமுகமாய்ச் சுடர் விட்ட ஜோதியை அங்குமிங்குமாய் ஆட்டினார். பிறகு, அதை அப்படியே ஒளிரவிட்டு வெளியே வந்தார். ஒயர் கொடியில் தொங்கிய தேய்க்காத சட்டையைப் போட்டுக் கொண்டே மகளிடம் வந்து, படுத்துக் கிடந்தவளைத் தூக்கி நிறுத்தினார்.

"எழுந்திரும்மா போகலாம். ஆரம்பம் போலீஸ் ஸ்டேஷன்... அப்புறம் எதுவரைக்கும் வேணுமுன்னாலும் போகட்டும். ஒன்னை மகளாய் நினைச்சுக் கூப்பிடலே. அம்பாளாய் நினைச்சுக் கூப்பிடுறேன். எழுந்திரு நாமார்க்கும் குடியல்லோம் எழுந்திரும்மா... ஆமாம் இப்படித்தான் எழுந்து நிற்கணும்".

ஃ

தக்கோலம் திருவூறல் உடையார்

இருப்பிடம்

சான்றோர் உடைய தொண்டை நன்னாடு, தீந்தமிழ் நாட்டில் வட அரணாக உள்ளது. தொண்டை நாட்டுத் திருத்தலங்கள் முப்பத்து இரண்டனுள் பன்னிரண்டாவது அழகுக் கோயில், தக்கோலம் கோயில்.

தக்கோலம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் அரக்கோணம் வட்டத்தில் அமைந்துள்ளது. அரக்கோணத்திலிருந்து தெற்கே எட்டாவது கிலோ மீட்டரிலும், காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே இருபத்து நாலாவது கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ள கூட்டுச் சாலையிலிருந்து கிழக்கே சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அழகிய திருவூர், தக்கோலம். தக்கோலம் இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஏழு கிலோ மீட்டர் தொலைவு. அரக்கோணம், காஞ்சிபுரம், சென்னை ஆகிய இடங்களிலிருந்து பஸ்ஸில் செல்லலாம்.

பழைய பாலாறு என்று அழைக்கப்பெறும் கொற்றலை (குசத்தலை) ஆற்றின் கரையில் அமைந்துள்ள இவ்வூர் பண்டைப் பெருமைகளின் இருப்பிடமாகத் திகழ்கிறது.

பண்டைப் பெருமை

தக்கோலத்தைச் சூழ்ந்துள்ள அம்பரிஷுபுரம், கீழ்வெண்பாக்கம், அரக்கோணம், திருமால்புரம் ஆகிய ஊர்களிலும் தக்கோலத்திலும் பழைய கற்கால மனிதர்கள் கையாண்ட கற்கருவிகள் கண்டு பிடிக்கப் பெற்றுள்ளதால், இவ்வட்டாரம் ஏறத்தாழ இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்த பகுதி என்று உணர முடிகிறது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் வாழ்ந்த நிலவியல் ஆசிரியர் தாலமி, தமது நூலில் 'தகோல' என்று தக்கோலத்தைக் குறிப்பிடுகிறார். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற 'மிலிந்த பன்கா' என்னும் பௌத்த நூலும் தக்கோலத்தைக் குறிப்பிடுகிறது.

தமிழகத்திற்கும் கிரேக்கம், யவனம், சீனம், மலேயா போன்ற மேற்றிசை கீழ்த்திசை நாடுகளுக்கும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வணிகத் தொடர்பு இருந்ததை இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். அவனி நாரணன் எனும் மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 835 – 860) ஆட்சியின்போது, இங்கிருந்து வாணிகத்தின் பொருட்டு மலேயா சென்ற வணிகர்கள், சியாம் நாட்டில் தாகோபா என்னும் மாவட்டத்தில் 'புதிய தக்கோலம்' என்ற ஊரை உருவாக்கினர். இந்தத் தக்கோலத்தையே கங்கைகொண்ட சோழனான இராசேந்திரன் கடார வெற்றியின்போது வென்றான். 'கலைத் தக்கோர் புகழ் தலைத் தக்கோலம்' என்று அவனது மெய்க்கீர்த்தி கூறுவதிலிருந்து தக்கோலத்தின் தனிச்சிறப்பு தெரிகிறது.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ சமயக் குரவர் திருஞான சம்பந்தர் திருவூறல் என்று தம் பதிகத்தில் இவ்வூரைக் குறிப்பிடுகிறார். திருநாவுக்கரசர் 'ஊறல்' என்றும் சுந்தரமூர்த்திகள் 'திருவூறல்' என்றும் அழைக்கிறார்கள்.

கிரேக்க அறிஞன் தாலமி 'தகோல' என்று குறிப்பிட்டதும், ஒன்பதாம் நூற்றாண்டில் சியாம் நாட்டில் 'புதிய தக்கோலம்' என்ற ஊர் உருவாக்கப்பட்டதற்குக் காரணமாக இருந்தது தக்கோலமே என்பது சரியாக இருப்பின், ஏழாம் நூற்றாண்டுச் சமய குரவர்கள் இவ்வூரைத் 'திருவூறல்' என்றும் 'ஊறல்' என்றும் ஏன் அழைத்தார்கள் என்பது சிந்தனைக்குரியதாக உள்ளது.

ஊறல்

ஊரை ஒட்டி ஓடும் பழைய பாலாற்றில், பசுவின் வயிற்றில் பால் ஊறிச் சுரப்பதுபோல், ஆற்றுப் படுகையில் நீர் ஊறிச் சுரப்பதால், இவ்வூர் ஊறல் எனப் பெற்றிருக்கலாம்; அல்லது ஊரைச் சுற்றி ஆறும் ஏரிகளும் நீர் நிறைந்திருந்து, பூமியில் எந்நேரமும் ஊற்று நீர் சுரந்து ஊறி நீர் வளத்துடன் இருந்ததால் ஊறல் என்று அழைத்திருக்கலாம்; அல்லது நீர் வளத்தாலும் நில வளத்தாலும் வாணிக வளத்தாலும் செல்வமாகிய திரு வற்றாத வளத்துடன் சுரந்து ஊறிக் கொண்டிருந்ததால் 'திருஊறல்' என்று ஆகி இருக்கலாம்; அல்லது கல்வி கேள்வி அறிவு வளங்களும் கலை, தக்கோரின் கலை வளங்களும் எந்நாளும் செழித்து ஊறி வளர்ந்ததால் 'திரு ஊறல்' என்று அழைக்கப் பெற்றிருக்கும்; அல்லது மேலே கூறிய அத்தனை வளங்களுடன் சோலை, பொழில் போன்ற இயற்கை எழில் வளங்களும் சேர்ந்து இவ்வூர் அழகே ஓர் உருவாக விளங்கியதால் 'திரு ஊறல்' என்றாகியிருக்கலாம்.

இத்தகைய பல்வேறு காரணங்களாலேயே சீகாழிப் பிள்ளையாராகிய திருஞானசம்பந்தர், 'தேறல் இரும்பொழிலும் திகழ் செங்கயல் பாய் வயலும் சூழல் ஊறல்' என்றும், 'தொத்தல் அரும்பொழில் சூழ் வயல் சேர்ந்து ஒளிர் நீல நயனம் ஒத்தல் அருங்கழனித் திருவூறல்' என்றும், 'கொண்டல்கள் தங்கு பொழில் குளிர் பொய்கைகள் சூழ்ந்து நஞ்சை உண்ட பிரான் அமரும் திருவூறல்' என்றும் இவ்வூரின் எழிலை ஏற்றமுறப் போற்றுகிறார்.

டாக்டர் தாமரைக்கண்ணன்

தக்கோலம் – பெயர்க் காரணம்

தக்கோலம் என்ற சொல் அந் நாளில் 'தாம்பூலம்' என்ற பொருளில் வழங்கியது. தாம்பூலத்துடன் நாவின் சுவைக்காகவும் நறுமணத்துக்காகவும் சேர்த்துக் கொள்ளப் பெறும் ஒருவகையான சுவைப் பொருளே, குறிப்பாகத் 'தக்கோலம்' எனப் பெற்றிருக்கக் கூடும்.

தன்கோலம், (தனக்குத்தானே பல்வேறு காரணங்களால் அழகு பெற்ற ஊர்) தற்கோலமாகிப் பின் தக்கோலம் என்று திரிந்து வழங்கியிருக்கவும் கூடும்.

தக்கன் என்னும் அரக்கன், காளியால் கொல்லப்பட்டபோது ஓலமிட்டு அழுது மாய்ந்ததால் தக்க ஓலம், தக்கோலம் எனப் பெயர் வந்தது என்று தல புராணக் கதை கூறுகிறது.

உமையவள் இங்குள்ள ஆற்றில் மணலால் சிவலிங்கம் செய்து வழிபடும்போது, வெள்ளம் வர அன்னை தன் மார்புறத் தழுவி லிங்கத்தைக் காத்ததாலும் அவளுக்கும் தக்கனுக்கும் ஒருசேர சிவபெருமான் காட்சி அளித்து அருள் புரிந்தார் என்பது இன்னொரு புராணக் கதை.

வரலாற்றுச் சிறப்பு

கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தன்னேரிலாத் தகைமையுடன் தொண்டை நாட்டுக் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தின் வட பகுதியை ஆண்டவர்கள் பல்லவர்கள். தக்கோலம் அவர்கள் ஆட்சியில் பெரு வணிக நகரமாகச் சிறந்து விளங்கியது.

பல்லவ அரச மரபினை இறுதியாக ஆண்ட அபராஜித வர்மனிடமிருந்து (879 – 897) தொண்டை நாட்டை, முதலாம் ஆதித்த சோழன் (871 – 907) கி.பி. 890 இல் வென்றான். தக்கோலம் சோழர் ஆட்சியின் கீழ் வந்தது.

முதற் பராந்தகச் சோழனின் (கி.பி. 907 – 953) மகன் இராசாதித்தன், திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூரில் பாடிவீடு அமைத்துச் சோழ நாட்டின் வட எல்லையைக் காத்து வந்தான். அப்போது, இராட்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணன் சோழ நாட்டின் மீது படையெடுத்துவர, இராசாதித்தன், தன் படைகளுடன் வடக்கு நோக்கி வந்து, தக்கோலத்தில் பகைவனை எதிர் கொண்டான். தக்கோலத்தில் மூன்றாம் கிருஷ்ணனுக்கும் (இவனே கன்னரதேவன்) இராசாதித்தனுக்கும் கடும் போர் நடந்தது. மூன்றாம் கிருஷ்ணனுக்குத் துணையாக கங்க மன்னன் பூதுகன் என்பான் போரிட்டான். இராசாதித்த சோழன் யானை மீது அமர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தபோது, பூதுகன் விடுத்த அம்பு ஒன்று சோழனின் மார்பைத் துளைத்துச் சென்றது. இராசாதித்தன் வீர மரணம் அடைந்தான். அதனால், 'ஆனைமேற் துஞ்சினார்' என்று கல்வெட்டுகள் இவனைக் குறிக்கின்றன.

இதன் பின்னர் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் இராட்டிரகூடர்களின் ஆட்சியின் கீழ் தக்கோலம் இருந்தது. அதன் பின்னர் மீண்டும் சோழர்கள் ஆண்டனர்.

மாறி வந்த ஊரின் பெயர்கள்

'மனையிற் கோட்டத்துப் பன்மா நாட்டுத் திருவூறல்' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் தக்கோலம், முதலாம் ஆதித்தன் காலத்தில் (கி.பி. 900) அபராஜிதச் சதுர்வேதி மங்கலம் என்றும், கோபார்த்திவேந்திர வர்மனின் பத்தாவது ஆட்சியாண்டில் ராஜ மார்த்தாண்ட சதுர்வேதி மங்கலம் என்றும், முதற் குலோத்துங்கன் காலத்தில் (1073) வல்லப வல்ல புரத்து திருவூறல் என்றும், இவன் ஆட்சியிலேயே 1087 இல் குலோத்துங்க சோழபுரம் என்றும், சதாசிவராயர் காலத்தில் (1543) வடமுடிகொண்ட சோழபுரம் என்றும் அழைக்கப் பெற்றுள்ளது.

திருவூறல் உடையார் கோயில்

தக்கோலத்தில் ஏழு விநாயகர் கோயில்களும், ஏழு ஈசுவரர் கோயில்களும், பதினொரு அம்மன் கோயில்களும் இருப்பதாகப் பேராசிரியர் இல.தியாகராசன் தக்கோலத்தைப் பற்றிய தமது ஆய்வு நூலில் குறிப்பிடுகிறார்.

இக்கோயில்களுள் பழமைச் சிறப்புடையவை, தற்போது ஜல நாதீசுரர் கோயில் என்று அழைக்கப் பெறும் திருவூறல் உடையார் திருக்கோயில், திருப் பாலீசுரர் திருக்கோயில், கங்காதீசுரர் திருக்கோயில், இராசராச திரு நாராயண விண்ணகர் ஆகியவையாகும்.

அ.கோயில் அமைப்பு

திருவூறல் உடையார் கோயில் கிழக்கு நோக்கி இருப்பினும், நுழைவாயில் மேற்கே அமைந்துள்ளது. நுழைவாயிலில் உள்ள இராசகோபுரம் மூன்று நிலைகளுடனும் சைவ வைணவ சமயச் சுதைச் சிறப்பங்களுடனும் காட்சியளிக்கிறது.

இக் கோபுரம், விசயநகர அரசன் வீரப் பிரதாப சதாசிவ மகாராயர் ஆட்சியின்போது சோபகிருது ஆண்டு விருஷப நாயற்றில் அமரபட்சத்தில் துவாதசியும் ரேவதியும் மூலம் பெற்ற நாளில் (கி.பி. 1543) கட்டப் பெற்றதாகவும் அப்போது பூசைக்கு நிலம் விடப் பட்டதாகவும் திருச்சுற்று மதிற் சுவர் வெளிப்புறம் உள்ள கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

இக்கோயிலின் கல்வெட்டுகளுள் தொன்மையானது, பல்லவ மன்னன் அபராஜிதவர்மனின் ஆறாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். அக்கல்வெட்டின் துணை கொண்டு கி.பி. 876 இல் இக் கோயில் கற்கோயிலாகக் கட்டப் பெற்றிருக்கலாம் என்று அறியலாம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடியபோது மண்ணால் கட்டப்பெற்றிருந்த இக்கோயில், அபராஜிதவர்மனால் ஒன்பதாம் நூற்றாண்டில் கற்கோயிலாயிற்று. கோயில் வெளியில் உள்ள சிறிய மண்டபத்தில் உள்ள அமர்ந்தநிலை சிங்கத்தூண்களும், கருவறை நுழைவாயிலின் மேலேயுள்ள சோமாஸ்கந்தர் திருவுருவமும், பல்லவக் கலைப் பாணியில் அமைந்த பாலகோட்டச் சிலைகளும் இக்கோயில் பிற்காலப் பல்லவனால் கட்டப்பெற்றது என்பதற்குச் சான்றளிக்கின்றன.

மேலும், தக்கோலம் ஏரியின் உள்ளே நின்றிருக்கும் கற்பலகையில் பொறிக்கப்பட்டுள்ள நந்தித் திருவுருவமும் பல்லவர்க்கும் இவ் வூருக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகிறது.

இரண்டு திருச்சுற்றுகள். வெளித் திருச்சுற்றில் அன்னை



துவாரபாலகர்



ராஜகோபுரம்



துவாரபாலகர்



விநாயகர்



தட்சிணாமூர்த்தி



திருமால்

மலையன் மகள், முருகர், விநாயகர் கோயில்கள் உள.

ஆ. ஊறல் உடையார்

கருவறையில் ஊறல் உடைய நாயனார் குடிகொண்டுள்ளார். சுயம்புத் திருமேனி. வெண்மணற் கல்லால் ஆனது. திருமேனியில் இரு சிறு பள்ளங்கள் உள்ளன. மலையன் மகள் இம் மணல் லிங்கத்தைச் சிவனாக வைத்துப் பூசித்தபோது ஆற்றில் பெரு வெள்ளம் வர உமையாள் லிங்கத்தை மார்புறத் தழுவிக் காத்ததால், அவள் மார்பகங்கள் அழுந்த சுவாமிக்கு இப் பள்ளங்கள் விழுந்தன என்று கூறப் பெறுகிறது.

இ. கொள்ளையழகில் இளங்கோயில் சிலைகள்

தேவ கோட்டங்கள் என்றும் பாலகோட்டங்கள் என்றும் அழைக்கப்படும் இளங்கோயில்கள் நான்கில் உள்ள தெய்வத் திருவுருவங்களும் துவார பாலகர் இருவருடைய திருவுருவங்களும் அழகே உருவானவை.

கருவறையின் தெற்குக் கோட்டத்தில் உள்ள விநாயகர் தாமரைப் பீடத்தில் அமர்ந்து அருள் புரிகிறார்.

அடுத்துள்ள, தட்சிணாமூர்த்தியாகிய ஆலமர் செல்வனின் திருக்கோலம் கண்கொள்ளாக் காட்சியாகும். யோக வடிவில் அமர்ந்துள்ளார். வலக் காலைக் கீழே ஊன்றி, இடக்காலை மடித்து இருக்கை மீது வைத்துள்ளார். தலையை இடப்புறம் சாய்த்து புன்முறுவல் பூக்கிறார்.

கருவறையின் பின்புறச் சுவரில் திருமால் அமர்ந்த நிலையில் உள்ளார். வலக்கால் மடங்கியிருக்க இடக்கால் சற்று மடிந்து கீழே ஊன்றியுள்ளது. வலக்கை ஒன்றில் பிரயோகச் சக்கரம். மற்றொன்று அருள் புரியும் அபயக்கை. இடக்கை ஒன்றில் சங்கு; மற்றொரு கை வலத் தொடையில் படிந்துள்ளது. தலையில் நீண்ட கிரீடம்; திருமாலுக்கே உரிய அலங்காரமான ஆடை அணிமணிகள்!

உண்ணாழியின் வடக்கில் அமர்ந்திருக்கும் நான்முகன் அபயக்கை, அக்க மாலை கெண்டி பற்றியிருக்கும் கைகளுடன் காட்சியளிக்கிறார். கழுத்தில் அணி மணிகள், மார்பில் முப்புரி நூல் இலங்குகிறது.

அடுத்து, துர்க்கை! கை தேர்ந்த சிற்பி இவளுடைய பருத்த மார்பகங்களில்... அவற்றின் சுமையைத் தாங்க முடியாமல் ஒடிந்து விடுமோ என்று எண்ண வைக்கும் சிறுத்த இடையில், அழகிய கால்களில், நீண்ட கைகளில்... கை விரல்களில்... விரல்களின் நுனிகளில்... மணிக்கழுத்தில்... முறுவலிக்கும் இதழ்களில்... கூரிய மூக்கில்... மலர்க்கண்களில்... விற்புருவங்களில்... பிறை நெற்றியில் என்று ஒவ்வோர் உறுப்பிலும் உலகத்து அழகையெல்லாம் கொண்டு வந்து கொட்டி வைத்துள்ளான். பிரயோகச் சக்கரம், சங்கு, அபயக் கை இவற்றுடன் இடையைச் சற்றே வளைத்து ஒயிலாக நிற்கும் இவளைக் காணாத கண்கள், கண்களே அல்ல! சற்றே மடிந்துள்ள இவள் வயிற்றையும், இடக்கையை இடத்தொடை மீது வைத்துள்ள பாங்கையும், ஆடையை அணிந்துள்ள அழகையும் வருணிக்க வார்த்தைகளே இல்லை. அம்மவோ... அழகு... அழகு! இவள் அழகுத் தோற்றம் அவ்வளவு அழகு!

நுழைவாயிலின் இருபுறமும் உள்ள துவாரபாலகர்களின் மார்பு அழகும், புன்முறுவல் முகங்களும், வலிய கால்களும், கம்பீரமாக அவர்கள் நிற்கும் தோற்றங்களும் நெஞ்சைவிட்டு அகலாத எழிற்கோலங்கள் ஆகும்.

பலகைக் கற்களில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பெற்றுள்ள பாலகோட்டத் திருவுருவங்களும் துவாரபாலர்களும் நுண்ணிய கலையழகு பொதிந்தவை. கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் இந்தச் சிலைகளுக்கு எதுவும் ஈடாகா; இணையாகா! அந்த அளவுக்குப் பல்லவர் கலைப் பாணியும் முற்காலச் சோழர் கலைப்பாணியும் இணைந்து இச் சிலைகள் எழிலுடன் திகழ்கின்றன.

கருவறை நுழைவாயிலின் மேற்புறம் உள்ள சோமாஸ் கந்தர், திண்ணப்பரை எம்பெருமான் கண்ணப்பர் ஆக்கும் காட்சி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. ஃ

சிவந்த கண்கள்

கடைசி வீட்டுக் கஸ்தூரிக்குக் கல்யாணம் – அவளைக்
கட்டிக்கொள்ளும் மாமன்பேரும் கல்யாணம்
ஊர்முழுக்க மணக்குதைய்யா பாயசம்! – அதுக்குப்
பட்டகடன் நினைச்சிப்பார்த்தா ஆயாசம்!

பத்துப் பவுனு நகையைப் போட்டுத் தந்தாங்க – கூட
பத்தாயிரம் ரொக்கம் கேட்டு வந்தாங்க
சொத்து சொகம் நெலத்தைக்கூட வித்தாங்க – இந்த
சொகத்துக்காகத் தானா மகளைப் பெத்தாங்க?

நடக்கப் போகும் கல்யாணமோ நிற்குது – அட
நகைநட்டுக்கா மாப்பிள்ளையும் விற்குது?
உடன்பொறந்த உறவும்பணம் கேக்குது – நம்ம
உத்தமியாம் கஸ்தூரியும் முழிக்குது!

கன்னிப் பொண்ணுக் கன்னம் எங்கே சிவக்குது? – அட
கண்ணீர்விட்டுக் கண்கள் ரெண்டும் சிவக்குது!
பன்னீர் தெளிச்சப் பந்தலிலே கொள்ளையா? – இந்தப்
பழியைக் கேட்கப் பஞ்சாயத்து இல்லையா?

நா.வே.அருள்

துர்கை







நான்முகன்

பைரவர்

தக்கோலம்



சக்தி குரூப் தொழில் ஆலயங்கள்



அருட்செல்வர்

"கோவைக்குச் சென்று சில தொழில் ஆலயங்களைத் தரிசித்து விட்டு வரலாமா?" என்றார் 'அமுத சுரபி' ஆசிரியர்.

'தொழில் ஆலயமா?' எனக்குப் புரியவில்லை. சற்று நேரம் யோசித்தேன்.

"என்ன யோசனை? அருட்செல்வரின் சக்தி ஆலயங்களுக்குச் சென்று வரலாம் வாருங்கள்" என்றார் தொடர்ந்து.

இப்பொழுது கொஞ்சம் புரிந்தது. 'ஊரைச் சுற்றிப் பார்க்கப் போகிறோம். பார்த்துவிட்டு வந்தால், அதைப் பற்றிப் பத்து பேரிடம் பேசி மகிழலாமேயன்றி, இதற்கு மேல் இதனால் என்ன பயன்?' மீண்டும் மனசுக்குள் ஒரு தயக்கம்.

"ஏன் சார் உங்களுக்கு இப்படி ஒரு தயக்கம்? அருட்செல்வரின் சக்தி நிறுவனங்களின் தொழிலகங்களைப் பார்த்துவிட்டு அதைப் பற்றி ஓர் அறிமுகக் கட்டுரை அமுதசுரபி தீபாவளி மலருக்குத் தயாரிக்க வேண்டும். சிதம்பரம், இராமேச்வரம், தஞ்சாவூர், மதுரை என்று பழம்பெருமை மிகுந்த கோயில்களைப் பார்த்து, பண்டைய பெருமையை எண்ணி எண்ணி வியப்படைவதில்லையா? அதுபோல் நவீன ஆலயங்களைப் பார்த்துப் பெருமைப்படுவோம், மற்றவருக்கும் இந்த நல்லநாளில் சொல்வோம்". ஆசிரியரின் இந்த அறிவிப்பு பிறகு என்னை மிக உற்சாகப்படுத்திற்று. நல்லதொரு வாய்ப்பு. நழுவவிடக்கூடாது.


அருட்செல்வர் திரு. நா.மகாலிங்கத்தைப் பற்றி அறியாதவர் இந்தத் தமிழ்கூறு நல்லுலகில் இருக்க முடியாது. ஆனால் அவர் தலைமையில் இயங்கும் தொழில் பற்றியும், 'அமுதசுரபி' வாசகர்களுடன் இந்தத் தீபத் திருநாளில் தெரிந்துகொள்வது! உண்மையில் மகத்தான வாய்ப்பல்லவா?



'தமிழகத்திலுள்ள நெடுஞ்சாலைகளில் நூறு கிலோ மீட்டருக்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டும்' என்று அருட்செல்வர் பேசியதை நான் எப்பொழுதோ கேட்டிருக்கிறேன். படித்துவிட்டு பட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டு வேலைக்கு அலையும் மனோபாவத்தை இளைஞர்கள் முதலில் கைவிடவேண்டும். சுயவேலை வாய்ப்பு, சுய தொழில் என இளைஞர்கள் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என அவருடைய, 'சிந்தனைச் சித்திரங்கள்' என்ற நூலில், அவர் எழுதியிருந்ததும் என் நினைவிற்கு வந்தது.

– இத்தகைய சிந்தனை ஓட்டம் உடைய ஒரு தொழிலதிபர் உருவாக்கியுள்ள தொழிற்கூடங்கள் எப்படி இருக்கும் எனத் தெரிந்து கொள்ள ஆர்வம் என்னைப்போல உங்களுக்கும் இருக்குமல்லவா?

இறையுணர்விலும், நல்ல தமிழ் இலக்கியம் வளர்ப்பதிலும், வள்ளலார், காந்தியடிகள், பாரதியார் போன்ற பெருமக்களின் பெருமையை அறியச் செய்வதிலும் இன்று தம் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கும் அருட்செல்வர் நா. மகாலிங்கம் அடிப்படையில் ஒரு தொழிலதிபர். தமிழகத்தை ஜப்பான் போல மாற்றவேண்டும் என்று கனவு காண்பவர். மூன்று



சக்தி டெக்ஸ்டைல்ஸ் நூல் தரமறியும் கருவி

முறை தமிழகத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஒரு முன்னாள் அரசியல்வாதி. 'ஓம்சக்தி' என்ற சிறந்த மாத இதழுக்கு கௌரவ ஆசிரியர். ஒரு முழுமையான காந்தியவாதி, தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலைகள் ஆகியவைமீது நீங்கா ஈடுபாடு உள்ளவர். இருபதுக்கு மேற்பட்ட பயனுள்ள ஆங்கில, தமிழ் நூல்களை எழுதியுள்ளார். வள்ளலாரின் அருமை பெருமைகளை நாடறியச் செய்த ஆன்மிகவாதி. கல்விக் கூடங்கள், தொழிற் கல்வி நிலையங்கள் பலவற்றைத் தொடங்கி நடத்திவரும் ஒரு கல்வியாளர். ஏழை எளியவர்களுக்குப் பல மருத்துவமனைகள் அமைத்துத் தந்துள்ள ஒரு சமூகத்தொண்டர். ஆப்பக்கூடலில், தொழு நோயாளிகளுக்கென்று இவர்



சக்தி டெக்ஸ்டைல்ஸ் நூற்பாலையின் தோற்றம்




கம்ப்யூட்டர் நூலின் தரத்தை மதிப்பிடுகிறது

அமைத்துத் தந்திருக்கும் நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவ மனைக்கு, மனித நேயத் தொண்டுக்கு ஈடாக வேறு ஒன்றைச் சொல்லவே முடியாது.

சக்தி என்றால் அவருக்கு அளவற்ற ஈடுபாடு. அவரது தொழில் நிறுவனங்கள் எல்லாமே 'சக்தி' என்ற பெயரைத் தாங்கி நிற்பது மட்டுமின்றி அவரது வீட்டின் பெயரே 'சக்தி இல்லம்' என்றால் புரிந்துகொள்ளலாமல்லவா?

இப்படி பன்முகங்கள் கொண்ட அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் இயங்கி வரும் சக்தி நிறுவனக் குழு



சச்சனாரி பிள்ளையார் (சர்வ அலங்காரத்துடன்)



சக்தி டெக்ஸ்டைல்ஸ் நூற்பாலையின் உட்புறத் தோற்றம்

வினரின் தொழில் ஆலயங்களைக் கண்டு மகிழ்ந்து நாம் பெற்ற இன்பத்தை 'அமுதசுரபி' அன்பர்களுக்கும் அளிக்க நல்லவாய்ப்புக் கிடைத்தது.


அருட்செல்வரின் அருமைச் செயலாளர் திரு ரவி அவர்கள் அமுதசுரபி ஆசிரியரிடம் தொடர்பு கொண்டு துரிதமாக இயங்கி எங்கள் பயணத்திட்டத்தை வகுத்துக் கொடுத்தபடி ஒரு நல்ல இரவு வேளையில், நீலகிரி துரித வண்டியில் கோவைக்குப் பயணமானோம். கோவை ரயில் நிலையத்தில் சக்தி சுகர்ஸ் வெளியிடும் 'செய்திமடல்' இதழில் பணிபுரியும் அலெக்சாண்டர் எங்கள் ஆசிரியரை அடையாளம் கண்டு அன்புடன் வரவேற்றார். சக்தி சுகர்ஸ் விருந்தினர் மாளிகையில் தங்குவதற்கு எங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அமுதசுரபி ஆசிரியரின் பெயர் 'விக்கிரமன்' என்ற சோழமன்னரின் பெயராக இருப்பதாலோ என்னமோ, எங்களுக்கு ராஜ உபசாரம்! தொழிற்கூடங்களுக்குச் சென்றுவர எங்களுக்கு ஒரு கார் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஓட்டுநரின் பெயர் சண்முகம். இவர் ஏற்கெனவே அருட்செல்வரிடம் பல ஆண்டுகள் ஓட்டுநராக இருந்தவர்.

தொழில் ஆலயங்களைக் காணும் எங்கள் யாத்திரையில் முதல் தரிசனம் ஆனைமலைஸ் ரிட்ரெடிங் கம்பெனியிலிருந்து தொடங்கியது.

ஆனைமலைஸ் ரிட்ரெடிங் கம்பெனி, கோவை

லாரி மற்றும் பஸ் டயர்கள் தேய்ந்து போன பின், புது டயர் வாங்குவதைவிட, பழைய டயர்களை 'ரிட்ரெடிங்' செய்வதன் மூலம் புதுப்பித்துக் கொள்ள முடியும் என்பதைக் கேள்விப்பட்ட பொள்ளாச்சி நா. மகாலிங்கம் ஆனைமலைஸ் ரிட்ரெடிங் கம்பெனியை 1954 ஆம் ஆண்டு கோவையில் தொடங்கினார். வளர்ந்து வரும் வாகனத் தொழிலின் வேகத்திற்கு ஏற்ப டயர் உற்பத்தித் தொழில் ஈடு கொடுக்காத காலம் அது. மேலும் டயர் தயாரிப்புக்குத் தேவையான துணைப் பொருள்கள் பெரிய அளவில் கிடைக்காத நேரம் வேறு. இதற்கும் மேலே இப்படி ஒரு தொழில் தொடங்குவதன் மூலம் தமிழகத்தின் தொழில் வளத்திற்கு மேலும் பெருமை சேர்க்க முடியும் என்ற ஆவலும் ஒரு காரணம்.

கோவை நகரின் பரபரப்பு மிகுந்த பகுதியில் இந்தத் தொழிற்கூடம் இயங்குகிறது. முற்றிலும் தேய்ந்து போன நிலையில் லாரி, பஸ், டிராக்டர் டயர்களை இங்கு கொண்டு வருகிறார்கள். அந்த டயர்களை முதலில் 'இன்ஸ்பெக்ஷன் மெஷினில்' பொருத்துகிறார்கள். அந்தத் தேய்ந்த டயரில் ஆணி, கம்பி ஏதாவது இருந்தால் இந்தச் சோதனை மூலம் தெரிந்து



சோமபேன்ஸ் ஆலை

விடும். இதற்குப் பிறகு அந்த டயரை ஒரு சக்கரத்தில் வைத்து வேகமாகச் சுற்றுகிறார்கள். அப்படிச் சுற்றும்பொழுது அந்த டயரின் மேல் பாகத்தை ஒரே சீராக, சமதளமாக ஆக்குகிறார்கள். இதன் மீது ஒரு சொல்யூஷனைத் தடவுகிறார்கள். அடுத்த கட்டமாக டயரின் மேல் பகுதியில் காணப்படும் டிசைனை ஒட்டுகிறார்கள். இப்படித் தயாரான டயரை இட்லிப்பானை மாதிரி உள்ள ஒரு பெரிய இயந்திரத்துக்குள் வைத்துப் பதப் படுத்துகிறார்கள். வெளியே எடுத்தவுடன், டயரின் வெளிப் பாகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் 'பிசிறு'களை நீக்கிவிடுகிறார்கள். இப்பொழுது, அந்தப் பழைய டயர், புத்தம் புதிய டயர் போல் காட்சியளிக்கும். ஒரு புதிய டயரின் விலையில் ஐந்தில் ஒரு பங்கு தான் புதுப்பித்த டயருக்குச் செலவாகிறது. புதிய டயரின் ஆயுள் குறைந்த பட்சம் புதிய டயரின் ஆயுளில் எழுபத்தைந்து சதவிகிதம் வரை உறுதி கூற முடியும் என்கிறார்கள். ஒரே டயரை இப்படிக் குறைந்த பட்சம் எட்டு முறை 'ரீட்ரெடிங்' செய்ய முடியுமாம்.

தமிழகத்து மக்களுக்கு இதை அறிமுகம் செய்த முன்னோடிகளில் ஒருவராக பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களைக் குறிப்பிடலாம். இன்றைய தினம் ஆனைமலைஸ் ரிட்ரெடிங் கம்பெனியை திரு.சண்முகசுந்தரம் அவர்கள் பொது மேலாளராக இருந்து சிறப்புடன் கவனித்துக் கொள்கிறார்

இந்தத் தொழிற்சாலையைப் பார்த்துவிட்டு நாங்கள் பொள்ளாச்சியை நோக்கிப் பயணமானோம்.

பொள்ளாச்சி சாலையில் கொலு வீற்றிருக்கும் ஈச்சனாரி பிள்ளையார் கோயில் முன் காரைக் கொண்டு போய் நிறுத்தினார், ஒட்டுநர் சண்முகம். எங்களுடன் வந்திருந்த திரு. டி.ஆர். கணேசன், ஒளித்து வைத்திருந்த விலையுயர்ந்த காமிராவை எடுத்து பிள்ளையாரை 'கிளிக்' செய்தார்.

பாலக்காட்டுக் கணவாயிலிருந்து வீசிய சுகமான காற்று மனதுக்கும், மேனிக்கும் இதமாக இருந்தது. எங்கள் கார் பொள்ளாச்சி ரோடில் விரைந்து கொண்டிருந்தது.

சக்தி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், பொள்ளாச்சி

கோவையிலிருந்து. சக்தி டெக்ஸ்டைல்சைப் பார்வையிட காரில் பொள்ளாச்சிக்குக் கிளம்பினோம்.

பொள்ளாச்சி நகர எல்லை வருவதற்கு முன், சக்தி டெக்ஸ்டைல்ஸ் தொழிற்கூடத்திற்கு வந்து சேர்ந்தோம்.

நாற்பது ஏக்கர் நிலப்பரப்பில், 1956-57 ஆம் ஆண்டுகளில் அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் இந்த டெக்ஸ்டைல்சைத் தொடங்கினார். ஏறத்தாழ பதினேழு இலட்ச ரூபாய் முதலீட்டுடன், 12000 ஸ்பின்டில்களுடன் இதை ஆரம்பித்தார்கள். இந்த நூற்பாலையில் பனியனுக்குத் தேவைப்படும் நூல்களைப் பஞ்சிலிருந்து நூற்கிறார்கள். 34, 40 ரக எண் நூல் பனியன் நெய்யப் பயன்படுத்தப் படுகிறது. அடுத்து 82, 92 ரக எண் நூல்கள் பம்பாய் மற்றும் பங்களா தேஷ் ஆகிய இடங்களுக்கு வேட்டி, புடைவை நெய்வதற்கு ஏற்ற தரத்தில் நூற்கப்பட்டு அனுப்பப் படுகின்றன.

இந்த நூற்பாலைக்குத் தேவைப் படும் பஞ்சு, தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கப் பெறுகிறது. பேல், பேலாக வரும் பஞ்சு முதல் கட்டமாக 'மிக்சிங்' இயந்திரத்திற்குள் செலுத்தப்படுகிறது. இந்த இயந்திரம் பஞ்சில் கலந்துள்ள 'வேஸ்ட்' - கழிவுகளை அப்புறப்படுத்துகிறது. இதே இடத்தில் சுத்திகரிக்கப்பட்ட அந்த பஞ்சுப் பொதிகள் மென்மைப் படுத்தப் படுகின்றன. 'மிக்சிங்'கில் அடிபட்ட பஞ்சு, பிறகு ஒரு 'கன்வேயர் பெல்ட்' மூலம் 'ப்ளோரூமு'க்குள் நுழைகிறது. இங்கேயும் பஞ்சு மறுமுறை சுத்திகரிக்கப்படுகிறது. இதற்குப் பிறகு 'கார்டிங்' இயந்திரத்திற்குள் அந்தப் பஞ்சு செலுத்தப்படுகிறது. இங்கு பஞ்சு அகன்ற ரிப்பன்போல் வெளியே வருகிறது. ஆறு பிரிவுகளாக இயந்திரங்களிலிருந்து வெளிப்படும் இந்தப் பஞ்சு ரிப்பன்களை மறுபடியும் ஒன்றாகச் சேர்த்து தரவாரியாகப் பிரிக்கிறார்கள். இந்த இடத்திலிருந்து, தூய்மை செய்யப்பட்ட, தரத்திற்கு ஏற்பப் பிரிக்கப்பட்ட பஞ்சை 'பிரிபரேட்டரி' டிபார்ட்மென்ட்டிற்குக் கொண்டு செல்கிறார்கள். இதற்குப் பிறகு, பஞ்சு தன். வடிவத்தை இழந்து நூலாக உருமாறுகிறது. இப்படி நூலாக மாறும்போதும் பஞ்சில் ஏதாவது 'பிசிறு' ஒட்டிக் கொண்



சக்தி ஃபவுண்டரீஸ் பெருந்துறை—இரும்பின் தரம் காட்டும் மைக்ரோஸ்கோப்

டிருந்தால் மறுபடியும் அவை நீக்கப்படுகின்றன.

இவை அத்தனையையும் இயந்திரங்களே செய்து விடுகின்றன என்றாலும் தொழிலாளிகள் பக்கத்தில் நின்று கவனித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். இத்துணை கண்காணிப்பிற்குப் பிறகும், 'எலெக்டிரானிக் யார்ன் கிளீனர்' மூலம் நூல் பரிசோதனைக்குள்ளாகிறது. இந்தப் பரிசோதனையைத் தாண்டிய பிறகு, கம்ப்யூட்டர் மூலம், நூலின் 'மென்மை, பருமன்' ஆகியவற்றை 'மாதிரிப் பரிசோதனை' மூலம் தரக்கட்டுப்பாடு செய்கிறார்கள். ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள இந்த 'கம்ப்ளீட் குவாலிடி கண்ட்ரோல் 'கம்ப்யூட்டர்' ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள நூலை இரண்டே நிமிடங்களில் சோதனை செய்து அதன் தரத்தைச் சொல்லி விடுகிறது.

நூற்புக்கு ஏற்புடையதாக இல்லை என ஒதுக்கித்தள்ளப்பட்ட பஞ்சைக் கொண்டு, பெட்ஷீட் மற்றும் திரைச்சீலை ஆகியவைகளுக்குத் தேவைப்படும் சற்றே கெட்டியான நூல்களைத் தயாரிக்க 'எலிடெக்ஸ்' என்று ஓர் இயந்திரத்தை செக்கோஸ்லோவேகியாவிலிருந்துத் தருவித்திருக்கிறார்கள். இதில் 80 சதவிகிதம் கழிவுப் பஞ்சும் 20 சதவிகிதம் நல்ல பஞ்சும் கலந்து நூலைப் பிரித்து எடுக்கிறார்கள். இந்த ரக நூலுக்கு கரூர், பவானி போன்ற ஊர்களில் நல்ல சந்தை இருக்கிறது. இதில் மனித சக்தியை விட இயந்திரத்தின் பங்கு பணியே அதிகம்.




இரும்பின் ஆத்மா சோதிக்கப்படுகிறது. (எக்ஸ்ரே கருவி)


இந்த நூற்பாலை இயங்குவதற்குத் தேவைப்படும் மின்சக்தி 95 சதவிகிதத்தை இங்கேயே உற்பத்தி செய்து கொள்ளுகிறார்கள்.

பதினேழு லட்சம் ரூபாய் முதலீட்டுடனும் 150 தொழிலாளர்களுடனும் தொடங்கப்பட்ட இந்த நூற்பாலையில் 12,000 ஸ்பின்டில்கள் தாம் அன்று இருந்தன. இன்றைய தினம் ஆண்டு ஒன்றுக்கு 12 கோடி ரூபாய் வரவு செலவு செய்யும் இந்த் நூற்பாலை நாள் ஒன்றுக்கு மூன்று 'ஷிப்டு' வேலை செய்கிறது. வாரம் முழுவதும் (ஏழு நாள்களும்) வேலை செய்கிறது. 540 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.



மத்தாப்பூ விரிக்கும் ஒளிச்சிதறலா? இல்லை - இரும்பைக் காய்ச்சி உருக்கும்போது தெறிக்கும் ஒளி தீவாலை.





சிந்தடிக் ஜெம் தொழிற்கூடம்

சிந்தடிக் ஜெம்

(செயற்கை வைரம் தயாராகிறது)

வெளிநாடுகளில் இந்த நூலுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. இதனை ஜப்பான் போன்ற தொழில் துறையில் முன்னேறிய நாடுகளுக்கும் அனுப்புகின்றனர். வெளிநாடுகளில் சக்தி டெக்ஸ் டைல்சுக்கு நல்ல வரவேற்பு இருப்பது தெரிகிறது.

தொழிலதிபர் திரு. நா.மகா லிங்கம் அவர்கள், 1969 ஆம் ஆண்டு வரை இதன் நிர்வாக இயக்குநராக இருந்தார். அதன்பின் இதன் சேர்மனாக பொறுப்பு ஏற்றுள்ளார். அருட்செல்வரின் மருமகன் திரு. பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் இப்போது இதன் நிர்வாக இயக்குநராக இருந்து சிறப்புடன் நிர்வகித்து வருகிறார். இன்று இந்த நிறுவனம் 'பப்ளிக் லிமிடெட்'டாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. பங்குதாரர்களுக்கு 25 சதவிகிதம் டிவிடெண்ட் தொகை வழங்கி வருகிறது என்பது குறிப் பிடத்தக்கது.



மாருதி காரின் உதிரிப் பாகங்கள்

3. சக்தி சோயா பீன்ஸ் லிமிடெட், பொள்ளாச்சி

பொள்ளாச்சியில் இருந்து பன்னிரண்டு கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சக்தி சோயா பீன்ஸ் தொழிற்கூடத்திற்குப் பகல் ஒரு மணிக்குச் செல்வதாகத் திட்டமிட் டிருந்தோம். பகலுணவு எங்க ளுக்கு அங்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. சிறிதுநேர ஓய் வுக்குப் பின் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்கலாம் என எண்ணி யிருந்தோம். சக்தி டெக்ஸ் டைல்சை முடித்துக் கொண்டு, சக்தி சோயா பீன்ஸ் போய்ச் சேருவதற்கு பிற்பகல் இரண்டரை மணிக்கு மேல் ஆகிவிட்டது. எங்கள் அனைவருக்கும் நல்ல பசி. சுவையான உணவு எங்களுக்காக காத்திருந்தது. முதலில் பசியாறி னோம்.

எங்கள் பசி இப்படியென்றால், அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்களுக்கோ தொழிற்பசி. தமிழகத்தில் நிறையத் தொழிற் கூடங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்ற பெரும் பசி. உறக்கத்தில் கூட இதே நினைவுதான் இருக்கும் போலும்! வெளிநாட்டுச் சுற்றுப்

பயணத்தில் சோயா பீன்ஸிலிருந்து சமையல் எண்ணெயும், மாட்டுத் தீவனமும், மனிதர்களுக்கு - சப்பாத்தி, பூரி போன்ற உணவுப் பண்டங்கள் செய்து சாப்பிட கோதுமை மாவு மாதிரி 'விகர்' புரத மாவு ஆகியவை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைப் பார்த்தார். இதைப் போல தமிழகத்தில் நிறுவும் எண்ணமும் அவர் மனதில் அப்பொழுதே தோன்றிற்று. ஜெர்மன் மற்றும் ஸ்வீடன் நாட்டுடன் இணைந்து, அறுபத்து மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் இத்தொழிற் சாலையைத் தொடங்கினார். இந்தத் தொழிற்சாலை வளாகத்திலேயே சோயா பீன்ஸும் பயிரிட்டுள்ளார்கள். தொழிற்சாலைக் கட்டடத்திற்கு மட்டும் பன்னிரண்டு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை மூலம் பலநோக்குப் பலன்கள் கிடைக்கும் வாய்ப்பு இருப்பது தெரிந்ததும் அருட்செல்வர் அவர்கள், இதனை நிறுவக் கூடுதல் கவனம் செலுத்தினார். சமையல் எண்ணெய் பற்றாக்குறையால் மக்கள் படும் தொல்லை கொஞ்ச நஞ்சமன்று. கடைகளில் விற்பனை செய்யப் படும் சமையல் எண்ணெய்களில் பெரிய அளவில் கலப்படம் காணப் படுகிறது. குறைந்த கொழுப்புச் சத்துடன் கூடிய எண்ணெய் உபயோகித்தால் இருதய நோய் போன்ற நோய்கள் வராமல் தடுக்கலாம். சோயா எண்ணெய் உபயோகித்தால், ஏற்கெனவே உடலில் உள்ள கொழுப்புச் சத்தினால் ஏற்படக்கூடிய தீமையைத் தவிர்க்கலாம். இது முதல் பலன். இரண்டாவதாக சோயா பீன்சிலிருந்து எண்ணெய் பிழிந்து எடுத்த பிறகு மீதமுள்ள சக்கையிலிருந்து கோழித் தீவனங்கள் தயாரிக்கப் படுகின்றன. மூன்றாவதாக அரிசி, கோதுமை மாவுடன் பத்து சத விகிதம் சோயா பீன்ஸ் மாவைச் சேர்த்து உணவுப் பண்டங்கள் தயாரித்தால் அவற்றில் எண்ணெய் கோத்துக் கொள்ளாது. இது ஒரு பலன். அடுத்தபடியாக விவசாயிகளுக்கு இந்த சோயா பீன்ஸ் பயிர் அறிமுகம் செய்வதின் மூலம் அவர்களின் வருவாய் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். சோயா பீன்ஸ் 90 நாள் பயிர். இதை நிலம் முழுவதிலும் பயிரிடலாம். கரும்பு, வாழை போன்றவற்றில் ஊடுபயிராகவும் பயிரிடலாம். காவிரி டெல்டா பகுதிகளில் நீர்வரத்து குறைந்து போய்விட்ட இன்றைய சூழ்நிலையில் இந்தப் புதிய பயிரை அறிமுகம் செய்வதன் மூலம் அவர்களுக்கு வருவாய் கிடைக்கக் கூடிய நல்ல மாற்று ஏற்பாடாகச் சொல்லலாம்.

சோயா பீன்ஸ் தொழிற்கூடத்தின் நிர்வாக இயக்குநராக இருப்பவர்,. திரு நா. மகாலிங்கம் அவர்களின் புதல்வர் திரு மாணிக்கம் அவர்கள். நவீன தொழில் நுணுக்கங்களுடன் கூடிய இந்தத் தொழிற்சாலை பொள்ளாச்சியிலிருந்து கேரளத்துக்குச் செல்லும் சாலையில் சற்றுத் தொலைவில் அமைதியான கிராமப்புறச் சூழ்நிலையில் அமைந்துள்ளது.

சோயா பீன்ஸ் என்பது நம் ஊர் பட்டாணி, சிறுபயிறு போன்ற வகையைச் சேர்ந்தது. அவை ஒரு கன்வேயர் பெல்ட் மூலம் சேமிப்புக் கிடங்கிலிருந்து ஆலைக்கு வருகிறது. முதலில் சோயா பீன்ஸ் குவியலில் உள்ள ஆணி, இரும்பு, கல், களிமண் உருண்டை ஆகியவற்றை ஓர் இந்தியரம் மூலம் அப்புறப்படுத்துகிறார்கள். இதற்கு அடுத்த கட்டமாக அந்த சோயா பீன்சுகளைத் தரவாரியாகப்பிரித்து எடுக்கிறார்கள். பிறகு அவற்றை ரவை அளவுக்கு உடைத்துத் தூளாக்குகிறார்கள். அடுத்து இந்தத் துகள்களிலிருந்து எண்ணெய் பிழிந்து வடிக்கப்படுகிறது. மீதமுள்ள சோயா சக்கைகளை இயந்திரத்திற்குள்ளேயே உலர்த்தி கால்நடைத் தீவனத்திற்கானவற்றை ஒரு பகுதியாகவும், 'விகர்' எனப்படும் மனிதர்கள் உபயோகத்திற்குரிய புரோட்டீன் சத்து நிறைந்த சோயாமாவை ஒரு பகுதியாகவும் தனித்தனியே பிரித்து எடுக்கிறார்கள்.

வடிகட்டி எடுக்கப்பட்ட சோயா எண்ணெயை மறுபடியும் மூன்று நிலைகளில் சுத்தப்படுத்துகிறார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் மேலை நாட்டுத் தொழில் நுணுக்கங்களை, தமிழ்நாட்டு அறிவியல் நிபுணர்கள் மூலம் பயன்படுத்துகிறார்கள். 180 தொழிலாளர்கள், மூன்று ஷிப்டுகளில் பணி புரிகிறார்கள்.

இப்படிப் பலநோக்குப் பயன் தரும் சோயாபீன்ஸ் தொழிலை அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் தமிழகத்திற்கு வழங்கியுள்ளார். இருபத்தைந்து கோடி ரூபாய் தொழில் முதலீட்டுடன் தொடங்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்திற்கு ஒரு நாளைக்கு 300 டன் சோயா பீன்ஸ் தேவைப்படும். ஆனால் இன்றைய தினம் இந்த ஆலைக்கு ஓர் ஆண்டில் மூன்று மாதத்திற்குத் தேவைப்படும் அளவிற்கே சோயா கிடைக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் ஓரளவு சோயா பீன்ஸ் உற்பத்தி செய்யப் படுகிறது. தமிழகத்தில் அரசின் ஆதரவுடன் சுமார் பதினைந்து ஆயிரம் ஏக்கரில் இந்த ஆண்டு சோயா பயிரிடப்படுகிறது. இது போதாது. ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் டன் சோயா பீன்ஸ்

சிறுவர் விரும்பும் பூ
பூவண்ணன்

செடியினிலே சிரிக்கும் பூ
செழித்த மரம் இருக்கும் பூ
குடியினிலே குலுங்கும் பூ
குளத்தினிலே மிதக்கும் பூ
இந்தப்பூக்கள்பெண்களின்
இதயம்கவ ரும்உண்மையே!
எந்தனைப்போல்சிறுவர்களை
ஏங்கச்செய் வதில்லையே.

திண்ணையிலே மலரும் பூ
சிறுவர்கையில் திகழும் பூ
மண்ணைவிட்டு விண்ணுக்கே
மலர்ந்து தாவும் வண்ணப்பூ

கம்பியிலே விரியும் பூ
காகிதங்கள் சொரியும் பூ
தம்பி அண்ணன் விரும்பும் பூ
தழல் நிறைந்த விந்தைப் பூ

கம்பிவத்தி மத்தாப்பூ
கவரும்பூ வாணங்கள்!
எம்மைப்போல் சிறுவர்தம்
இதயப்பூவை வெல்லுமே!

தேவைப் படுகிறது. விவசாயிகள் பெரிய அளவில் சோயா பயிரிட முன்வந்தால், இந்தப் புதிய தொழிலின் மூலம் கிடைக்கக்கூடிய பன்முகப் பலன்களை நாடு பெற முடியும்.

அருட்செல்வரின் மற்றதொழில் முனைப்புகளுக்கும், சக்தி சோயா பீன்ஸ் தொழில் தொடங்கியதற்கும் நிரம்ப வேறுபாடு உள்ளது. இத் தொழிலைத் தமிழ்நாட்டில் தொடங்காமல் விட்டுவிட்டால், வேறு மாநிலம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடும் என்று கருதினார் அருட்செல்வர். அடுத்து, போதிய நீர்ப்பாசன வசதியில்லாததால் தஞ்சை, திருச்சி, காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு, ஒரு மாற்றுப் 'பணப்பயிராக' (Cash Crop) இது அமைந்தால் அவர்கள் பெரும் பயனடைவார்கள். ஆரோக்கியமான சமையல் எண்ணெய் தயாரிப்பு மூலம், நுகர்வோரும் பயனடையக் கூடும். சோயா மீல் – கோழிகளுக்கான நல்ல தீவனம். இதைக் கோழிகளுக்குப் போடுவதால் கோழிகளுக்குத் தேவைப்படும் அமினோ அமிலங்களுள் ஒன்றான லைசின் கிடைக்கும். இதனால் கோழிகள் இடும் முட்டையின் எண்ணிக்கை 20 சதவிகிதம் அதிகமாகிறது என்று கண்டு பிடித்துள்ளார்கள். இதனால் இந்தத் தொழில் கிராம மக்களைப் பொருளாதார ரீதியில் உயர்த்தவும் பயன்படுகிறது என்று சொல்லலாம்.

ஆலையைச் சுற்றியுள்ள இடங்களில் சோயா பயிரிடப்படுகிறது. ஊடு பயிர்ாக இவற்றை விளைவிக்கும் ஆராய்ச்சியும் இந்த விளைநிலத்தில் நடைபெறுகிறது.

இங்கு உற்பத்தியாகும் சோயா எண்ணெய் பெருமளவில் வெளி மாநிலங்களுக்கு லாரியில் செல்கிறது. மக்கள் உபயோகத்திற்கு பெரிய அளவு டின்களில் விற்பனை செய்கிறார்கள். சிறு சிறு 'பாக்கிங்கில்' விரைவில் இந்த எண்ணெய் சந்தையில் விற்கப்படும். மேலே சொன்ன பல்வேறு காரணங்களுக்காகவே இந்தத் தொழிற்கூடத்தை தமிழகத்தில் அருட்செல்வர் அவர்கள் ஆரம்பித்திருக்கிறார். இதனை ஆதரித்து வளர்த்து, ஊக்குவிக்கும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

சக்தி பவுண்டரி மற்றும் ரிசர்ச் சென்டர்

சக்தி குரூப் நிறுவனங்களில் சமீபத்திய அறிவியல் கண்டு பிடிப்புகளுடன் கூடிய நிறுவனமாக சக்தி பவுண்டரியைச் சொல்ல வேண்டும். 1983 ஆம் ஆண்டு ரூபாய் 5 கோடி முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த பவுண்டரி அகில இந்திய அளவில் கார் உதிரிப் பாகங்கள் சந்தையில் தரமான கருவிகளை உற்பத்தி செய்வதில் முதலிடம் வகிப்பதாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் தயாராகும் மாருதி கார் இன்று மிகவும் பிரபலமாகி விட்டது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இந்தக் காருக்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. இந்தக் காருக்குத் தேவைப்படும் உதிரிப் பாகங்களில் ஏறத்தாழ 65 சதவிகிதம் தென்னிந்தியாவில் தான் தயாரிக்கப்படுகின்றன என்ற செய்தி கேட்டு நாங்கள் பெருமைப்பட்டோம். இதிலும் பெரும் பகுதி சக்தி பவுண்டரியில் தயாரிக்கிறார்கள் என்பதை அறிந்ததும் எங்கள் மகிழ்ச்சி இரட்டிப் பாகியது.

கோயம்புத்தூர் – ஈரோடு சாலையில் பெருந்துறைக்கு அருகில் அமைந்துள்ள இந்தத் தொழிற்சாலையின் செயல்முறை பற்றி, இங்கு பணிபுரியும் திரு மயில்சாமி அவர்கள் சிறந்த முறையில் விளக்கமளித்தார். இரும்பைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் கழித்துப் போடும் தேவையில்லாத (ஸ்க்ராப்) இரும்புத் துண்டுகளை வாங்கி வந்து, அவற்றை "Zero error Castings" ஆக மாற்றி இமாலயச் சாதனை புரிகிறது, இந்தத் தொழிற்சாலை.

பழைய இரும்புப் பொருள்கள், கழிவு இரும்புகள் பல்வேறு இடங்களில் சேகரிக்கப்படுவதால் எல்லாம் ஒரே தரமுடையவையாக இரா. முதலில் ஸ்க்ராப் இரும்புகளை 'ஸ்பெக்ட்ரோ மீட்டர்' என்ற கருவியில் வைத்து அவற்றில் உள்ள பல்வேறு கலவைகளின் சதவிகிதத்தைச் சோதனை செய்கிறார்கள். இந்தக் கலவையின் அளவுகளை ஒரு கம்ப்யூட்டர் துல்லியமாகப்படம் பிடித்துக்காட்டுகிறது. பிறகு அந்த இரும்புத் துண்டுகள் எந்த அளவு உயர் உஷ்ணத்திற்கு ஈடுகொடுக்கும் தன்மையுடையது என்பதையும் இயந்திரம் ஒன்றின் மூலம் கண்டறியப்படுகிறது. இதற்கு அடுத்த கட்டமாக, மைக்ரோஸ்கோப் கருவி மூலமும் எக்ஸ்-ரே, கருவி மூலமும் அந்த இரும்பின் உட்புறத்தின் தரம் சோதனை செய்யப்படுகிறது.

இந்த ஸ்க்ராப் இரும்புத் தூள்களை உருக்கித்தேவைப்படும் வடிவத்தில் உள்ள வடிவ அச்சுகளில் (மோல்டிங்) ஊற்றுகிறார்கள். அந்த உஷ்ணம் தணிந்து பின் அவற்றை வெளியே எடுத்து, சரி செய்து பாலிஷ் செய்கிறார்கள். இறுதிக் கட்டமாக அதன் தரம் கம்ப்யூட்டர் மூலம் சோதிக்கப் படுகிறது. இதற்குப் பின்பே தொழிற்சாலையை விட்டு அந்தக் கருவிகள் வெளியே அனுப்பப்படுகின்றன.

அநேகமாக ஒவ்வொரு கட்டத்திலும் தரம் பரிசோதனைக்குள்ளாகிறது. இந்தத் தரக்கட்டுப்பாடு ஏற்பாடுகளே இத்தொழிற்கூடத்தின் வெற்றிக்கான மூல முதற் காரணம் எனச் சொல்லலாம்.

1983 இல் முதலில் பவுண்டரியுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலையில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 'மெஷின் ஷாப்'பையும் அமைத்துள்ளார்கள். அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகளில் மேலும் இதனை விரிவுபடுத்தியுள்ளார்கள்.

அருட்செல்வர் நா. மகாலிங்கத்தின் புதல்வர் திரு மாணிக்கம் அவர்கள் சக்தி பவுண்டரியின் நிர்வாக இயக்குநராக இருந்து வருகிறார்.

இங்கு இருநூற்று ஐம்பது தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். 'மூன்று ஷிஃப்டுகளும் வேலை நடைபெறுகிறது. மாருதி காருக்குத்தேவைப்படும் 'ஸ்டீரிங் நக்கிள்' (Stearing Knuckle) தயாரிப்பில் சக்தி பவுண்டரி நிறுவனத் திற்குத்தனிப் பாராட்டும் சிறப்பும் உண்டு.

லேலண்ட், டாஃபே போன்ற நிறுவனங்களுக்கு 'பிரேக்டிரம்'

பாகத்தையும் இங்கு தயாரிக்கி றார்கள்.

மாருதி கார் இந்தியாவில் தயா ரித்த புதிதில் பெரும்பான்மையான பாகங்கள் இறக்குமதி செய்யப் பட்டு ஒன்று சேர்த்தார்கள் ('அசெம்பிள்' செய்தார்கள்). ஆனால் இன்றைய தினம் தொண்ணூற்று இரண்டு சதவிகித பாகங்கள் இந்தியாவிலேயே தயா ரிக்கப்படுகின்றன. அதிலும் தென் னாட்டின் பங்கு கணிசமானது. இந்தப் பெருமையை நமக்குத் தேடித் தந்ததில் சக்தி குரூப் நிறுவனத்திற்கும் பங்கு உண்டு.

சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஆப்பக்கூடல்

மிகப் பிரம்மாண்டமான தொழிற்கூடமாக ஓங்கி உயர்ந்து நிற்கிறது. 'சக்தி சுகர்ஸ்' சர்க்கரை ஆலை. இந்தியாவிலுள்ள சர்க் கரை ஆலைகளுள் இதுதான் நம்பர் ஒன்' என்று கேள்விப்படும் பொழுது மிகவும் இனிக்கிறது இந்தச் செய்தி. தமிழகத்தின் தொழில் மேதை அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்களால் 1964 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த சர்க்கரை ஆலை, இன்று துணைத் தொழிலான எரிசாராயம் மற்றும் கழிவுநீர் அகற்றும் நவீன தொழில் களுடன் விரிவடைந்திருக்கிறது.

நாள் ஒன்றுக்கு 1250 டன் கரும் பைக் கசக்கிப் பிழிந்து சர்க்கரை யாக்கும் கொள்திறனுடன் தொடங் கிய இந்த 'ஆலை தற்சமயம் சுமார் 4000 டன் கரும்பைப் பிழியக்கூடிய திறன் கொண்டதாக வளர்ந்திருக் கிறது. ஆண்டுக்கு எட்டு மாதம் இந்த ஆலை வேலை செய்கிறது. மீதமுள்ள நான்கு மாதங்களில் இந்த தொழிற்சாலையின் இயந் திரங்கள் பழுதுபார்க்கப்பட்டுச் சரி செய்யப்படுகின்றன. பெரிய பெரிய பல் சக்கரங்கள் அரைத்து அரைத்துத் தேய்ந்திருக்கின்றன. சில அரவையின்போது உடைந் திருக்கின்றன. அவற்றைப் பழுது பார்ப்பது மிக அவசியமல்லவா? எல்லா சர்க்கரை ஆலையினரும் பழுதுபார்ப்பதற்காக நான்கு மாதங்கள் பணியை நிறுத்துவது வழக்கம். இந்த இயந்திரங் களுக்கும் 'சர்வீசிங்' தேவைப் படுவதால், ஆலைக்கு நான்கு மாத ஓய்வு தேவைப்படுகிறது. ஆனால் வழக்கத்திற்கு மாறாக, 72 – 73 ஆம் ஆண்டில் இந்த ஆலை 364 நாள்கள் வேலை செய்திருக்கிறது. அந்த ஆண்டு அமோகமான கரும்பு விளைச்சல் இருந்ததும் ஒரு காரணம். 1981 – 82 ஆம் ஆண்டில் 11,21,963 டன் கரும்புகளைப் பிழிந்து சர்க்கரையாக்கி ஒரு பெரிய சாதனையைப் பதிவு செய்திருக்கிறது.

இங்கு கரும்பு சர்க்கரையாக மாற்றப்படும்போது ஏற்படக்கூடிய இழப்பு 0.45 சதவிகிதம் எனக் கணக்கிட்டுள்ளார்கள். இதை 'Milling Loss' எனக் குறிப்பிடு கிறார்கள். இந்த 'மில்லிங் லாஸை' வைத்துத்தான் ஒரு கரும்பு ஆலை திறமையாகச் செயல்படுகிறதா என நிர்ணயம் செய்கிறார்கள். இந்த வகையில் சக்தி சுகர்ஸ் மிக மிகக் குறைந்த அளவே ('மில்லிங் லாஸ்' மூலம்) இழக்கிறது என்று நிபுணர்கள் கணித்துள்ளார்கள். தேசியத் திறமை பட்டயத்தை இதற் காக, சக்தி சுகர்ஸுக்கு வழங்கி யுள்ளார்கள் என்பது நமக்கு மகிழ்வூட்டும் செய்தி. தொழில் நுணுக்கத் திறமைக்கும் சக்தி சுகர்ஸுக்கு 'அவார்டு' வழங்கி யுள்ளார்கள்.

'பகாசி' எனப்படும் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயா ரிக்க முடியும். இந்தக் கரும்புச் சக்கையைக் காகித ஆலைகள் வாங்கிக் கொள்கின்றன. இது தவிர கரும்புச் சாற்றிலிருந்து எடுக்கப்படும் (சர்க்கரை செய்த பிறகு ஏற்படும் கழிவு) மொலாஸஸ் என்பது எரிசாராயம் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இந்த சர்க்கரை ஆலைக்குப் பின்னால் ஒரு 'டிஸ்டில்லரி'யை நிறுவியுள் ளார்கள். இந்த ஆலையிலிருந்து வெளிப்படும் கழிவு நீரிலிருந்து (Bio - Gas) பயோ காஸ் 'மெதானிசேஷன் பிராசஸ்' மூலம் தயாரிக்கிறார்கள். ரூபாய் இரண்டேகால் கோடியில் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள இந்த 'பயோ காஸ்' பிளான்ட் மூலம் கழிவுநீர் தூய்மைப்படுத்தப்பட்டு விவசாய விளை நிலங்களுக்கு உர மாகவும், பாசன நீராகவும் பயன் படுத்தப்படுகிறது. இந்த 'பயோ – காஸ்' பிளான்ட்டை சக்தி சர்க் கரை ஆலையில் மட்டுமே நிறுவி யுள்ளார்கள். இதை இங்கு வந்து பார்த்துவிட்டுச் செல்லும் அநேக சர்க்கரை ஆலை அதிபர்கள் இதே மாதிரி பயோ காஸ் பிளான்ட் அமைக்க ஆர்வம் காட்டி வரு கிறார்கள். தமிழகம்தான் இதில் முன்னோடி. இந்தப் பெருமையை நமக்குச் சேர்த்தது அருட் செல்வரின் சக்தி குரூப்ஸ் நிறுவனம்தான் என்பதில் தமிழர் களாகிய நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

விளை நிலங்களிலிருந்து கரும்பை எடுத்து வந்து முதலில் எடை போடுகிறார்கள். பிறகு கரும்புப் பொதிகளை ஒரு கருவி மூலம் கீழே இறக்கி, கன்வேயர் பெல்ட் மூலம் அரைக்கும் இடத் திற்கு அனுப்புகிறார்கள். அப் படிப் போகும்போதே, கரும்புகள் துண்டு துண்டாக வெட்டப் படுகிறது. கரும்பு பிழிந்து சாறு எடுத்து அதை சூடாக்கி, 'கிரிஸ்ட லாக' மாற்றித் தூய்மைப்படுத்தி சர்க்கரையை மூட்டையாக எடை போட்டுக் கட்டுகிறார்கள். இவை அனைத்தையும் இயந்திரமே செய் கிறது. கரும்பைச் சக்கையான 'பகாசி' அப்புறப்படுத்தப்படு வதும், 'மொலாசஸ்' கழிவு வடிப் பதும் இதற்கிடையே நடை பெறுகிறது. சாறு பிழிந்த பிறகு மீதமாகும் சத்தை (பகாசி)க் காகிதம் செய்ய எடுத்துக் கொள் கிறார்கள். 'மொலாசஸ்' டிஸ் டிலரிக்கு எரிசாராய தயாரிப்புக் காகத்தனிகுழாய் மூலம் கொண்டு செல்லப்படுகிறது.

இந்தக் கரும்பாலையில் சர்க்கரை தயாரிப்பு வேலையோடு, இந்த ஆலைக்குத் தேவைப்படும் மின்சாரத்தையும் உற்பத்தி செய் கிறார்கள். இந்த மின் உற்பத்தி யும் சர்க்கரை தயாரிப்பின்போதே செய்துவிடுகிறார்கள்.

ஒரு நந்தவனத்திற்கு நடுவே அமைந்துள்ளதுபோல சர்க்கரை ஆலை காட்சியளிக்கிறது.

ஒரு சிறிதளவுகூட வீணாகாமல் இந்தத் தொழிற்சாலையில் மூலப் பொருளும், துணைப் பொருளும் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப் படுகிறது என்பது ஒரு குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

கரும்பு பயிரிடும் விவசாயி களுக்குப் பல சலுகைகள் அளித்

துள்ளனர். ஆப்பக்கூடலில் கல்வி நிலையம் அமைந்திருக்கிறது. சிறந்த மருத்துவமனை நிறுவப்பட்டிருக்கிறது. தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அருட்செல்வர் காந்திய வழியைப் பின்பற்றுபவர் என்பதையும், மனிதகுல மேம்பாட்டிற்குச் சிறந்த சேவை செய்பவர் என்பதையும் இவை எடுத்துக்காட்டுகின்றன.

வேலையற்ற பட்டதாரிகளின் நினைப்பு

சோ. பழனியப்பன்

படிகள் ஏறி ஏறி
கால்கள் மெலிந்து விட்டன.
விண்ணப்பம் எழுதி எழுதி
கைகள் நலிந்து விட்டன.
வேலை மறுத்து வந்த கடிதம் பார்த்துப் பார்த்துக்
கண்கள் இருண்டு விட்டன.
வேலையில்லை எனக் கேட்டுக் கேட்டுச்
செவிகள் மரத்து விட்டன.
பட்டத்தினைப் படித்துப் படித்து வாங்கிய
என் விரல்கள் வலியிழந்து விட்டன.
ஓடி ஓடி, ஆடி ஆடி,
திரிந்து வாழ்ந்த நான்
வாடி வாடி, வதங்கி வதங்கி
நடைப் பிணமாய்
திரிந்து வாழ்ந்து கொண்டுள்ளேன்.



இந்தோ – ஸ்விஸ் சிந்தடிக் ஜெம் மானுஃபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,

கோவை மாவட்டத்தில், மேட்டுப்பாளையம் நகரின் அருகில், பவானி ஆற்றங்கரையில் அமைதியான சூழ்நிலையில் மலையடிவாரத்தில் அமைந்திருக்கிறது இந்தத் தொழிற்சாலை. இங்கே செயற்கை வைரக் கற்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்தத் தொழிற்சாலையை 1957 ஆம் ஆண்டு ஸ்விஸ் நாட்டுத்தொழில் நுணுக்க ஒத்துழைப்புடன் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் தொடங்கினார். தொழில் நுணுக்கங்களை நன்கு தெரிந்துகொண்டபின், ஸ்விஸ் நாட்டுடன் இருந்து வந்த தொழில் தொடர்பிலிருந்து விடுவித்துக்கொண்டு முற்றிலும் இந்தியமயமாகிவிட்டது, இந்தத் தொழிற்சாலை.

இந்தியாவிலே, இத்தகைய செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலையை முதலில் ஆரம்பித்த பெருமையும் அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்களையே சாரும்.

இந்தச்செயற்கை வைரம் தயாரிக்க அலுமினியம் ஹைட்ரேட், அமோனியம் சல்பேட் மற்றும் சல்ஃபூரிக் ஆசிட் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து பின்பு 'அலுமினிய ஆசிட்'டாக மாற்றிப் பின்பு பளிங்கு போன்ற கிரிஸ்டலாகத் தயாரிக்கிறார்கள். இதற்கு அதிக வெப்பம் தேவைப்படுகிறது. இதில் உள்ள நவீன, நுணுக்கமான இயந்திரங்களே பெரும்பான்மையான பணிகளைச் செய்து முடித்துவிடுகின்றன. இந்தத் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மின்சக்தியையும் இங்கேயே உற்பத்தி செய்கிறார்கள். இங்கு தயாராகும் செயற்கை வைரக்கற்களை திருச்சியில் உள்ள சுமார் இருபதாயிரத்திற்கு மேற்பட்ட கைவினைஞர்கள் வாங்கிச் செல்கிறார்கள். இவற்றைச் சிறு சிறு செயற்கை வைரக்கற்களாக வெட்டி பாலிஷ் போடுகிறார்கள். இந்தத் தொழில் மூலம் பல குடும்பங்களுக்குப் பிழைப்பு கிடைக்கிறது. நடுத்தர மக்களின் வைரத்தின் மீதுள்ள ஆசை, இந்தச் செயற்கை வைரம் மூலம் நிறைவேறி விடுகிறது.

இந்தத் தொழிற்சாலை மூன்று ஷிப்டுகள் வேலை செய்கிறது. சுமார் நாற்பது தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

சில சிந்தனைகள்

அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள், தமிழகத்தைத் தொழில் வளம் மிக்கதாக ஆக்க ஆசைப்படுபவர். வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் திரும்பும் போதெல்லாம் புதிதாக ஒரு தொழில் தொடங்கும் யோசனையுடன் திரும்புவார். இந்திய அரசின் சிவப்பு நாடாக் கொள்கைகள் உருவாக்கித் தரும் தடுப்புகளைத் தாண்டி, அந்தத் தொழிலை முனைப்புடன் தொடங்கிவிடுவார் அவர்.

செயற்கை வைரத் தொழிற்சாலை தொடங்கிய நாள் முதல், இன்று தொடங்கியுள்ள சோயா பீன்ஸ் தொழிற்சாலைவரை இது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இவருடைய தொழில் ஆர்வம் வெற்றிகளைக் குவிப்பதற்கு அடுக்கடுக்காகப் பல காரணங்களைக் கூறலாம். முதலில் இவருக்குள்ள தெய்வ நம்பிக்கை. தொழிலில் காட்டும் நேர்மை. இவருடைய புதல்வர்கள், மாப்பிள்ளை ஆகியோரின் ஒத்துழைப்பு. இவருக்கு அமைந்துள்ள திறமையான நிர்வாகிகள். கடைசியாக எஜமான விசுவாசமுள்ள மிகச் சிறந்த ஊழியர்கள். இவை அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் செய்த பாக்கியம். இவருடைய தந்தை திரு நாச்சிமுத்து அவர்கள் சிறந்த தேசபக்தர். அவர் வழி தேச பக்தியும் இயற்கையான ஆன்மிகமும், நற்பண்பும் ஒன்றுசேர்ந்து அருட்செல்வரைத் தொழிலுலகத் தந்தையாக மிளிர வழிசெய்துள்ளன.


அருட்செல்வர், நா. மகாலிங்கம் அவர்கள் நாட்டுக்குக் கிடைத்தது தமிழக மக்கள் செய்த பாக்கியம்.

ஃ

திப்புலேகியம்

முகுந்தன்

சிங்கம், புலி, சிறுத்தை, ஓநாய், மரநாய், நீர்யானை, கொம்பன் ஆனை, காண்டாமிருகம் - இப்படிக் கண்ட மிருகங்களும் விஷ ஜந்துக்களும் ஆடாமல், பள்ளுப் பாடாமல் ஆனந்த சுதந்திரத்துடன் நடமாடுகின்ற அடர்ந்த காட்டுக்



குள்ளே ஆயுதம் ஏதுமின்றி ஒற்றை ஆளாய், பத்து கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று திரும்பி வருகிற தைரியம் உண்டா உங்களுக்கு?

காட்டை விடுங்கள்; நாட்டுக்கு வருவோம்.

கள்ளச் சாராய சுருதி ஏற்றிக் கொண்டு பேட்டை ரௌடிகள் பாசசுவாக் கத்தியுடனும் வெட்டரி வாளுடனும், வீரத் தழும்பேறிய உடலுடனும் அஞ்சா நெஞ்சர்களாகப் பவனி வரும் சந்து பொந்துகளில் சிந்து பாடியவாறே நள்ளிரவுக்குப் பின்னர் நடைபயில 'தில்' உண்டா உங்களுக்கு?

இதையும் விடுங்கள்.

பனைமரம் உயரத்துக்குத் திகுதிகுவெனப் பற்றியெரியும் நெருப்புக்குள் பாய்ந்தோ, சீறிச் சுழன்று வரும் வெள்ளப் பெருக்கில் எதிர் நீச்சல் போட்டோ மீண்டு வரும் துணிச்சல் இருக்கிறதா?

எந்த நேரத்திலும் நெருப்புக் குழம்பைக் குபுக்குபுக்கென அஜீரணம் தட்டிய குழந்தைபோல் வாந்தியெடுக்கக் கூடிய எரிமலையின் வாய் அருகில் நின்றுகொண்டு ஜோக் புத்தகம் படிக்கும் தெம்பாவது உண்டா?

இவை அத்தனையையும் இன்னும் பல திடுக்கிடும் வேலைகளையும் அகர்வால் பவன் பாதாம் அல்வாவை விழுங்குவதுபோல அநாயாசமாகச் செய்யக்கூடியவர்தான் திருக்கள்ளம் கோபாலசாமி எனப்படும் டி.ஜி. சாமி.

அப்படிப்பட்ட அசகாய சூரரிடம் சென்று, "அதோ நீலகண்டன் வருகிறார்!" என்று சொல்லிப் பாருங்கள்.

அரை டஜன் கொள்ளிவாய்ப் பிசாசுகளிடம் அறை வாங்கியதைப் போலப் பிரமை பிடித்து நிற்பார் ஒருகணம். மறுகணமே, பதுங்குவதற்குக் குழியோ மறை

விடமோ தேடி, மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் ஓட்டம் பிடிப்பார்.

இத்தனைக்கும் நீலகண்டன் போக்கிரியோ, தீவிரவாதியோ, நன்கொடைக்காக நோட்டுப் புத்தகமும் கையுமாகத் தோளில் துண்டுடன் அலையும் நபரோ அல்லர்.

சொல்லப்போனால் சாமியின் நீண்ட நாள் நண்பர்தான் நீலகண்டன்.

ஆனால் ஏன் இப்படி?

இந்தக் கேள்வியைத்தான் ஹைரோடில் பழைய இரும்புக் கடை வைத்திருக்கும் காதர் பாட்சா ராவுத்தர் ஒருநாள் கேட்டார்.

சாமியின் முகத்தில் கோபக் கொழுந்துகள் - கல்லாவுக்கு மேல் ஆறடி உயரத்துக்கு.

"ஏனென்றா கேட்கிறீர்?... அவன் ரொம்ப மோசமான ஆளய்யா ராவுத்தர். உமக்கு அவனைப் பற்றி ஒண்ணும் தெரியாது!"

"அவர் என்னதான் செய்வார்னு சொல்லுங்களேன் சாமி!"

"என்ன செய்வானா? நம்ம ஹோட்டலுக்கு வந்தால் நாலு வயிற்றுக்குத் தீனி சாப்பிடுவான்!"

"சாப்டுட்டுப் போகட்டுமே! துட்டு வருதில்லே?"

"நாசமாப் போச்சு! ஒசிக் கிராக்கிய்யா!"

"அப்படியேதான் இருக்கட்டுமே. அவர் உம்ம பழைய தோஸ்த் இல்லியா?"

"மேலே கேளும்... சாப்டுட்டு இதோ இப்படி என் பக்கத்திலே வந்து நின்னுக்கிடுவான்... 'சாம்பார்லே உப்பு தூக்கல்; சட்னியிலே உறைப்பு அதிகம்; இட்லி வேகவே இல்லை; ஊத்தப்பத்திலே அழுகின தக்காளி போட்டிருக்கு...! இப்படி ஏதாவது குறை சொல்லிக்கிட்டே இருப்பான். என் மானத்தை வாங்குவான்..."

"நான் ஒண்ணு கேட்கறேன். அவர் இப்படிச் சொல்றதனாலே உம்ம வியாபாரம் பாதிக்கப் பட்டிருக்கா,"

"நத்திங் டூயிங்!... அந்தத் தடிப் பயல் பேச்சை எவன்யா மதிப்பான்?"

"உம்ம வியாபாரம் பாதிக்கப் படல்லேன்னா, பொத்திக்கிட்டுக் கிடக்க வேண்டியதுதானே!... அவரு, பாவம், அப்பிராணியாத் தெரியறாரு... உமக்கு நல்லவங்களைக் கண்டாலே பிடிக்காது!..."

"நிறுத்துமய்யா!" என்று சத்தம் போட்டார் சாமி. "அந்த நீலகண்டன் இங்கே வந்து அரசியல் பேசுவான்யா... அவன் இப்படிப் பேசித்தான் ரெண்டு மாசம் முன்னாலே ஒரு கும்பல் உள்ளே நுழைஞ்சு, டேபிள் - நாற்காலிகளையெல்லாம் உடைச்சுப் போட்டு, பலகாரங்களைச் சூறையாடி, கல்லாவை 'டேபிள் - க்ளீன்' செய்துக்கிட்டுப் போயிட்டுது... எனக்குக் கத்திக்குத்து விழுந்திருக்க வேண்டியது, நல்ல வேளை, தப்பிச்சேன்!"

ராவுத்தர் பல்லிபோல 'உச்' கொட்டி, அனுதாபம் தெரிவித்தார்.

"சூடா டிகிரி காப்பி கொண்டு வரச் சொல்லுங்க சாமி... குடிச் சுட்டுக் கிளம்பறேன்..."

"அருமையா, பொன்முறுகலா ஆனியன் ரவா போட்டுத் தரச் சொல்றேன்... சாப்பிடும்... அப்புறம் காபி தரேன்..."

"வேணாங்க... 'டல்'லா இருக்கு..." - மழுப்பினார் காதர் பாட்சா.

"நம்ம ஹோட்டல் தோசை உம்ம வயிற்றை ஒண்ணும் கெடுக்காது ராவுத்தர்!... கியாரண்டி தரேன்!"

"'டல்'லுன்னு நான் சொன்னது வயித்தையல்ல; என் பிஸினஸை... ரொம்ப நொந்துபோய்க் கெடக்கறேன் சாமி!"

"எல்லாம் அவன் பார்த்துப்பான்!" என்று தலைக்கு மேலே மாட்டியிருந்த குருவாயூரப்பன் படத்தைச் சுட்டிக் காட்டிவிட்டு, "மணி! சாருக்கு ஸ்பெஷலா முறுகல் ஆனியன் ரவா போடச் சொல்லு!" என உத்தரவிட்டார் சாமி.

ராவுத்தர் பில்லுக்குப் பணம் கொடுக்க முற்பட்டபோது, நீலகண்டன் ஹோட்டலுக்குள் நுழைந்தார்.

"வாடா... வா!" - என்றார் சாமி அரைமனசுடன். மனசுக்குள், 'இந்தப் படுபாவி சீக்கிரம் இடத்தைக் காலி செய்தால் தேவலை' என்ற எண்ணம் ஓடியது. "இன்னிக்குத்தான் சரக்கு மாஸ்டர் புதுசா ஜாங்கிரி போட்டுக் கொடுத்திருக்கார். "அரை டஜன் கொண்டு வரச் சொல்லட்டுமா?" - சாமியின் குரலில் கிண்டல்.

"ஒண்ணும் வேணாம்டா சாமி..." விரக்தியுடன் கூறினார் நீலகண்டன். காவி கட்டிக்கொண்டு, காசிக்கு டிக்கெட் வாங்குகிற விரக்தி குரலில்.

"ஏண்டா? ஏன்? என்னாச்சு உனக்கு?"

"இப்ப டாக்டர் ராம்கோபால் கிளினிக்கிலேருந்து நேர வரேன்... நல்லா சோதனை செய்து பார்த்துட்டு, 'உன் எடையை ஆறு மாசத்துக்குள்ளே குறைச்சாகணும்... இல்லேன்னா ஹார்ட் அட்டாக் வந்துடும்'னு பயமுறுத்தி அனுப்பிச்சிருக்கார்டா..."

"நாளையிலேருந்து வெயிட்டைக் குறைச்சுக்கிட்டா போறது... இன்னிக்கு ஜாங்கிரி சாப்பிடு..."

"அதெல்லாம் தப்பு... இந்த நிமிஷத்திலிருந்து 'டயட்டிங்' ஆரம்பமாயிட்டுது. ஒரு கிளாஸ் ஐஸ் வாட்டர் கொடு, போதும்..."

ராவுத்தர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். "நான் ஒண்ணு சொல்லலாமுங்களா?" அதாவது எடையைக் குறைக்க..."

"என்ன சொல்லப் போறீர்?... தினமும் பத்து மைல் நடக்கணும்னு சொல்வீர்... நடக்கக் கூடிய காரியமா அது?" என்று அருவருப்புடன் தோளைக் குலுக்கினார் நீலகண்டன்.

வலைக்குல்லாயை எடுத்து விட்டுப் பலமாகத் தலையாட்டினார் காதர் பாட்சா - தலையைத் தடவியபடியே.

"அதில்லீங்க... எடை குறைக்கணும்னு சொன்னீங்களே... அதுக்கு ஒரு நல்ல மருந்து நம்ம கைவசம் இருக்குது... வேணுமா?"

"என்னய்யா ராவுத்தர்! ஒட்டை உடைசல் வியாபாரம் போறல்லேன்னு லைட்லே மருந்து வியாபாரம் வேறே ஆரம்பிச்சிட்டீரா? எத்தனை நாளா?..." - கிண்டலில் இறங்கினார் சாமி.

"நான் மருந்து தயாரிக்கிறதில்லே சாமி. அதுக்காக பரங்கிப்பேட்டையிலே என் பெரிய மச்சான் இருக்காரு... அவங்க பரம்பரை பரம்பரையா யூனானி மருந்துகள் தயார் செய்கிறவங்க.. திப்பு சுல்தானுக்கு ஆஸ்தான வைத்தியராக இருந்த பரம்பரை

அது... திப்பு கொடுத்த செப்புப் பட்டயமெல்லாம்கூட வீட்டிலே இருக்குது.."

"யுனானி வைத்தியத்திலே உடம்பு இளைக்கறதுக்கு மருந்து இருக்குதுன்னு சொல்றீர். அதானே விஷயம்?"

"அதேதான்... நம்ம நீலுசார் ஒரு பத்துநாள் அந்த லேகியம் சாப்பிட்டுப் பார்த்துட்டு, பிறகு சொல்லட்டுமே! உடம்பு நல்லா இளைக்கும் சாமி!"

"லேகியத்தோட பேர் என்ன, ராவுத்தர்."

"கெஜகேசரி கம்பீர மஸ்த் சுஸ்த் லேகியம்!... திப்பு லேகியம்னு சுருக்கமா சொல்வோம்..."

"என்னடா நீலு, என்ன சொல்றே?" என்று கேட்டுவிட்டு நண்பனின் முகத்தை ஆவலுடன் பார்த்தார் சாமி.

"அதையும் ஒரு கை பார்த்துட வேண்டியதுதான்... லேகியம் எங்கே இருக்குது ராவுத்தர் - வீட்டிலா, கடையிலா?"

"வீட்டுக்குத்தான் போறேன்... இப்ப என்கூட வாங்க... லேகியம் தாரேன்..."

"ஒரு ரெண்டு நிமிஷம் வெயிட் பண்ணுங்க ராவுத்தர்... டேய் சாமி, பத்து ஜாங்கிரி 'பார்சல்' செயது என் கையிலே கொடு, சீக்கிரம்"

விளையாட்டுப் போல மூன்று வாரம் ஓடிவிட்டது. திருக்கள்ளம் கோபாலசாமி கமர்ஷியல் டாக்ஸ் அதிகாரிகளிடமும், கார்ப்பரேஷன் ஹெல்த் இன்ஸ்பெக்டரிடமும், மெட்ரோ வாட்டர் பணியாளர்களிடமும் ஓயாமல் மல்லுக் கொடுத்துக் கொண்டிருந்ததால் நீலகண்டனைப் பற்றிய நினைவே தோன்றாமல் போய்விட்டது. இரண்டு நாள்களுக்கு முன்பு ஹைரோடு பக்கம் போயிருந்த போது ராவுத்தர் கடையில் எட்டிப் பார்த்தார் சாமி. அன்று வெள்ளிக் கிழமையானதால் பகல் தொழுகைக்கு ராவுத்தர் புறப் பட்டுப் போய்விட்டதாகத் தகவல் கிடைத்தது...

நீலகண்டன் ராவுத்தரிடம் லேகியம் வாங்கிச் சாப்பிட்டாரா, பலன் தெரிந்ததா என்று தெரிந்து கொள்ளும் ஆவல், சாமியின் மனசைக் குடைய ஆரம்பித்திருந்தது.

அன்று மாலை ஏழுமணிக் கெல்லாம் ஹோட்டலிலிருந்து கிளம்பி, நீலகண்டனின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

நீலகண்டன் ஒண்டிக்கட்டை என்பதும், தன்னந்தனியே ஒரு பெரிய வீட்டில் வசிக்கிறார் என்பதும் சாமிக்குத் தெரியும்...

வீடு நிசப்தமாக இருந்தது. முன்கதவு தாளிடப்பட்டிருந்ததால், அழைப்பு மணியை அழுத்தினார்.

சற்றைக்கெல்லாம் உடம்பெலாம் வற்றி, வடிப்போன வேலைக்காரி வந்து கதவை ஒருக்களித்தபடியே தலையை மட்டும் வெளியே நீட்டினாள்.

"நீலு இருக்கானா வீட்டிலே!"

"இருக்காருங்க..."

"கூப்பிடு அவனை!"

"முடியாதுங்க!"

சாமியின் புருவங்கள் சற்றே சுருங்கின. வேலைக்காரியின் முகத்தை முறைத்தார். அவளது முகத்தில் ஏதோ பரிதாபம்தான் இருந்ததே தவிர, திமிரோ கிமிரோ இல்லை... நிச்சயமாக.

"ஏன் முடியாது?"

"அவரு பதினைஞ்சு நாளா ரூமை விட்டு வெளியே வர்றதே இல்லீங்க... உள்ளாரவே அடைஞ்சு கிடக்கிறாருங்க..."

"சாப்பாடெல்லாம் எப்படி?"

"சமையல்காரம்மா ஒரு தட்டிலே சோறு கீறு எல்லாத்தையும் போட்டு ரூம் வாசல்லே கொண்டுபோய் வச்சிட்டு இந்தாண்டை வந்துடுவாங்க. யாரும் பார்க்காதப்போ ஐயா 'டபக்'னு தட்டை இழுத்துக்கிடுவாரு.."

"அவன் எப்படி இருக்கான்னு நீ ரூமுக்குள்ளே எப்பவாவது போய்ப் பார்த்தியா?"

"இல்லீங்க... எந்நேரமும் தாழ்ப்பாள் போட்டுணு கீறாரே!"

சாமிக்கு மனத்தில் ஆயிரம் கவலைகள், அச்சங்கள், நீலகண்டனின் அறைக்கதவைத் தட்டினார் ஓங்கி. "நீலு! சாமி வந்திருக்கேண்டா! கதவைத்திற!"

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு 'டொக்' என்று ஓர் ஒலி.

கதவில் கைவைத்துத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார் சாமி.

"தாழ்ப்பாள் போடு!"

நீலகண்டனின் குரல் கேட்டதே தவிர, அவனை அறையில் காணோ...!

"எங்கேடா இருக்கேன்னு?" அறையைச் சுற்றிச் சுற்றி வந்தார் சாமி.

"கட்டிலுக்குக் கீழே பாரு!"

பார்த்தார். நீலகண்டன் அங்கே தான் இருந்தார். அனந்த சயனத்தில்.

"என்னடா இது விளையாட்டு? எழுந்து வா வெளியே!" - அதட்டினார் சாமி.

"ஒரு கை கொடு, சாமி!"

சாமி கைகொடுத்து இழுத்தாரோ இல்லையோ, விசுக்கென்று வெளியே வந்த நீலகண்டன் அநாயாசமாகக் காற்றில் மிதந்து, எம்.பி., மின்விசிறியின் இறக்கையில் போய் உட்கார முயன்று, தோற்றுப் போய், அதைப் பிடித்துக்கொண்டு தொங்கலானார்.

"கீழே இறங்கு, நீலு... விழுந்தால் எக்கச்சக்கமாக அடிபடும்!" இதென்ன சர்க்கஸ் விளையாட்டு?... சின்னப் பையனா நீ?"

"என்னால் இறங்க முடியாதுடா, மடையா?"


"ஏன்? என்ன கேடு!"

"உடம்பிலே வெயிட்டே இல்லைடா... உடம்பு இப்ப பஞ்சு போல இருக்கு... விட்டால், காற்றிலே பறந்துவிடுவேன்!"

சாமி திகைத்துப் போய் நின்றார். பழசு ஞாபகத்துக்கு வரவும், "ராவுத்தர் கொடுத்த லேகியம் சாப்டியா?" என்று கேட்டார்.

"சும்மா சொல்லக்கூடாதுடா சாமி...அந்த லேகியத்தோட ருசி ரொம்ப 'டாப்'... நல்லா இருக்கேன்னு ரெண்டே நாள்லே ஒரு கிலோ லேகியத்தையும் தீர்த்து விட்டேன். அது என்னடான்னா வெயிட்டை ஒரேயடியா குறைச்சு, உடம்பை லேசாக்கி, என்னை இப்படிப் பறக்க வெச்சுட்டுது..."

"உன்னாலே தரையிலே இறங்கி நிக்கவே முடியாதா?"



"நிக்கலாம். அதுக்கு ரொம்ப நேரம் 'தம்' பிடிக்கணும்... முடியலியே! கதவைத்திறந்தால் காற்றிலே பறந்துடுவேன், சாமி!"

"அதனாலேதான் இப்படிக் கதவைச் சாத்திட்டு அடைஞ்சு கிடக்கறியாக்கும்!"

"வேறே வழி... - ?" - பரிதாபக் குரலில் பதில் சொன்னார் நீலகண்டன்.

அந்த அறையிலிருந்த புத்தக அலமாரியிலிருந்து பருமனான புத்தகங்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து, சுவரோரமாக கொலுப் படிபோல அடுக்கி வைத்தார் சாமி.

பிறகு அந்த அடுக்கின் மேல் நிதானமாகக் கால்வைத்து ஏறி, மேலே சென்றார். 'மின்' விசிறியிலிருந்து நூலறுந்த காற்றாடி போலத் தொங்கிக் கொண்டிருந்த நீலகண்டனின் ஒரு கையைப் பற்றி, வெடுக்கென்று இழுத்தார்.

ஆச்சரியமாக இருந்தது. சாதா பலூனை அநாயாசமாகக் கையில் எடுத்துக் கொண்டு இறங்குவது போல, நீலகண்டனைத் தரையிறங்கச் செய்தார்.

கட்டிலுக்கடியில் ஒருவழியாக அவரைத் திணித்து, பக்கவாட்டில் இன்னும் சில புத்தகங்களை அணைப்பாகக் கொடுத்து, ஒரு தினுசாகப் படுக்க வைத்தார்.

நண்பருக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி, தைரியம் கொடுத்து, மறுநாள் வந்து பார்ப்பதாக உறுதியளித்துவிட்டுப் புறப்பட்ட சாமி, நேராக ராவுத்தர் கடைவாசலில் போய் நின்றார்.

"என்னய்யா மனுஷன் நீ?... உன்னை நம்பினால் ஆளை சாகடிச்சுடுவே போலிருக்குதே!" என்று சாமி பெருங்குரலில் சத்தம் போட ஆரம்பிக்கவே ராவுத்தர் எடை மிஷினையும் வியாபாரத்தையும் அப்படியே விட்டுவிட்டு உள்ளேயிருந்து பறந்தோடி வந்தார்.

"வாங்க சாமி...! என்னா கூச்சல், கீச்சல் போட்டு ஆர்ப்பாட்டமெல்லாம் செய்யறீங்க?... என்ன நடந்து போச்சு இப்ப?..." என்றவாறே சாமியின் கையைப் பிடித்துக் கடையினுள்ளே அழைத்துச் சென்றார் ராவுத்தர்.

அவர் தருவித்துக் கொடுத்த லஸ்ஸியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பருகியபடியே நீலகண்டன் எடை இழந்த விஷயத்தை விவரித்தார் சாமி.

ராவுத்தர் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தார். ஒரு நிமிடம் தான். "நம்ம லேகியம் எப்படி வேலை செய்திருக்குது பார்த்தீங்களா?" என்று மார்தட்டிக் கொண்டார்.

"அட சட்! நீரும் உம்ம லேகியமும்! அவன் இப்ப இருக்கிற நிலைமையிலே வீட்டைவிட்டு வெளியே வந்தால் பறந்தே

போயிடுவான்! நீலு பழைய நிலைக்கு வந்தாகணும்யா… அதுக்கு ஏதாவது லேகியம், பஸ்பம் வச்சிருக்கீரா?"

உதட்டைப் பிதுக்கி, கையை விரித்து, தலையைப் பக்கவாட்டில் ஆட்டினார் ராவுத்தர். "இல்லீங்க சாமி…"

"அப்படீன்னா இப்ப என்ன தான்யா செய்யறது?"

குல்லாயை எடுத்து விட்டு, உச்சந்தலையை விறுவிறுவென்று இடக் கையால் தேய்த்துப் பாலீஷ் செய்து கொண்டார் ராவுத்தர். யோசித்தார். கையைச் சொடக்குப் போட்டார்.

"நம்ம தோஸ்த் பழையபடி நடமாடறதுக்குக் கொஞ்சம் செல வாகுமே!… பரவாயில்லையா?"

"அவன் பெரிய லட்சாதிபதி… செலவைப் பற்றிக் கவலைப்பட மாட்டான்! நீர் சொல்லும்!"

"இப்ப சொல்ல மாட்டேன்… நாலுநாள் கழிச்சு நானே உங்க ஹோட்டலுக்குக் கூட்டி வரேன் அவரை…"

"அவரோட வீட்டு விலாசத்தைக் கொடுத்துட்டு நீங்க புறப்படுங்க!" என்ற ராவுத்தர் கடைப் பையனை அழைத்து, "அரே! டெய்லர் காஸிம் பாயை அளைச்சிட்டுவா, ஜல்தி!" என்று உத்தரவு பிறப்பித்தார்.

சொன்னால் சொன்னபடி ராவுத்தர் நீலகண்டனை அழைத்துக்கொண்டு ஒருநாள் மாலைநேரத்தில் சாமியின் ஹோட் டலுக்கே வந்துவிட்டார்.

நீலகண்டன் பழையபடியே நடக்க முடியாமல், மூன்று பலாப் பழங்களை ஒரு மூச்சில் தின்று தீர்த்த டெல்லி எருமைபோலப் பெருமூச்சு விட்டபடியே ஆடி அசைந்துவந்து ஒரு நாற்காலியில் பொத்தென்றுஉட்கார்ந்தார்.

"என்னடா நீலு, உடம்பு பழையபடி ஆயிட்டுதா?" என்று அக்கறையுடன் விசாரித்தார் சாமி.

"ராவுத்தர் புண்ணியத்திலே, பழையபடி எழுந்து நடமாட முடி யுது…" –, நீலகண்டனின் முக மெல்லாம் சந்தோஷம்.

"என்னய்யா ராவுத்தர்? என்ன மந்திரம் போட்டீர்?"

"மந்திரமுமில்லே, மாயமு மில்லே.. நீலு சார் போட்டிருக்கிற டிரஸ்லே இருக்குது சூட்சுமம்!"

"அட! விஷயத்தைச் சொல்லு மேன்!"

"நீலு சார் டிரெஸ் உள்ளே முழுவதும் லைனிங் கொடுத் திருக்குது சாமி!"

"பூ! அவ்வளவுதானா?"

"அவசரப்படாதீங்க… என்ன மெட்டீரியல்லே லைனிங் கொடுத் திருக்குது தெரியுமா?… ஈயம்!"

"என்னது! என்னது!"

"ஈயம் சாமி!… நல்ல வெயிட் டான பொருளாச்சே அது!… அப் படி லைனிங் கொடுத்த டிரெஸ்ஸை மாட்டிக்கிட்டார்னா நீலு சாரோட எடை கூடிப் போயி டுது… மன்சன் பழையபடி வெயிட் டான ஆளாயிடறாரு… நடமாடலாம், ஓடலாம், ஆடலாம்… எல்லாம் செய்யலாம்!"

"பிரமாதமான ஐடியா, ராவுத்தர்… இது எப்படி உமக்குத் தோணித்து?…"

"அது ஒரு தனிக் கதை சாமி… பெல்காம்லேருந்து வந்த ஆசாமி ஒருத்தன் நம்ம தலையிலே நிறைய ஈயப் பாளங்களைக் கட்டிப் பணத்தை வாங்கிட்டுப் போயிட் டான். அதை விற்கலாம்னு முயற்சி செய்தேன், முடியல்லே… மட்டமான ஈயம்னு சொல்லி எல்லாரும் ஒதுங்குறாங்க. வியா பாரம் 'டல்'லாயிடுச்சு…"

"ஆமாம்… நீர்கூடச் சொன் னீரே!"

"அப்பாலேதான் நீலு சார் லேகியம் துண்ணு, வம்புலே மாட்டிக்கிட்டார்… நீங்க எங்கிட்ட வந்து விஷயத்தைச் சொன்ன பிறகு தான் 'பட்'டுன்னு ஐடியா வந் துச்சு… ஈயத்தை உருக்கித் தக டாக்கி, லைனிங் கொடுத்து, நீலு சாருக்கு காஸிம் பாய் மூலமாக செட் செட்டாக டிரஸ் தயார் செய்துட்டேன்… இந்தாங்க சாமி 101 ரூபாய்!"

"இது எதுக்கு?"

"உங்க தலைக்கு மேலே அசல் சாமி இருக்குதே – அதுங் கோயில் உண்டியிலே போடு… பிஸினஸ் 'டல்'லாயிருக்குதுன்னு நான் சொன்னப்ப 'அவரு பார்த்துப் பாரு'ன்னு நீங்க சொன்னது பலிச்சுட்டுது சாமி! ஈயத்தை நம்ம நீலு சார் தலையிலே கட்டி, துட்டு வாங்கிட்டேன்!…"


சாமி பிரமித்துப் போனார்.

"பணம் என்னடா சாமி, பணம்!…நான் பழைய நிலைக்கு வந்தேனே – அதைச் சொல்லு… சரி, இந்த சந்தோஷத்தைக் கொண் டாட வேணடாமா?… தலைக்கு ரெண்டு பிளேட் பாதாம் அல்வாவும் பாஸந்தியும் ஆர்டர் செய் சாமி!"

நீலுவின் உற்சாகக் கூச்சலில் ஹோட்டலே அதிர்ந்தது!

நிலத்தில்

அமுதபாரதி



'நான் உயரம்'
என
நிமிர்ந்த மரம் நோக்கிச்
சிரித்தது செடி!

"செருக்குறாதே
நம் இருவரின் வேர்களும்
மண்ணில்தான்!"

ஆமாம்
அனைத்துப் பாதமும்
நிலத்தில் படியும்
விரல்கள் யாவும்
நகத்தில் முடியும்!

கவிகுஞ்சர பாரதி

என்.வி.ஆர். ஸ்வாமி

பதினெட்டாவது நூற்றாண்டின் பிற்பகுதியும், பத்தொன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதியும் கர்நாடக இசை உலகின் ஒரு பொற்காலம் எனலாம். சங்கீத மும்மூர்த்திகள் அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி, கவிகுஞ்சர பாரதி, கனம் கிருஷ்ணையர் ஆனை ஐயா போன்ற வாக்கேயகாரர்கள் வாழ்ந்த காலம்.

"சிவனை நினைந்தவர் எவர் தாழ்ந்தார் – ஸதா
சிவனை மறந்தவர் எவர் வாழ்ந்தார்"

இப்பாடலை ஆலத்தூர் சகோதரர்கள் பிரபலப்படுத்தினர்.

"எல்லாரையும் போலவே நீ என்னலாகு மோடி போடி" (சுத்த சாவேரி),

"இவன் யாரோ" (காம்போதி) –

இவையெல்லாம் அக்காலத்தில் பிரபலமாய் ஒலிக்கப்பட்ட பாடல்கள். இவை போன்ற அற்புதமான பாடல்களை இயற்றியவர் 'கவிகுஞ்சர பாரதி'. பெற்றோரிட்ட பெயர் "கோடீசுரன்".

ராமநாதபுரம் மாவட்டம் பெருங்கரை கிராமத்தில் சுப்பிரமணிய பாரதி என்பவருக்கு 1810 ஆம் ஆண்டு பிறந்தவர் கோடீசுரன். இவரது முன்னோர்கள், ஆதியில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். தமிழிலும், வடமொழியிலும் பெரும்புலமை பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த சுப்பிரமணிய பாரதிக்கு வெகுநாள்கள் புத்திரபாக்கியம் இல்லாதிருந்ததால், பெருங்கரைக்கு அருகிலுள்ள கொடுமளூரில் கோயில் கொண்டெழுந்தருளிய முருகப்பெருமான் சந்நிதிக்கு தம் மனைவியோடு வாரந்தோறும் நடந்து விரத மிருந்து பூசித்து வணங்கவே, முருகப்பெருமான் அருளில் கோடீசுரன் பிறந்தார்.

சிறு பிராயத்திலேயே தமிழ், வடமொழி, இசை – இவற்றைக் கற்றுத் தேர்ந்தார். வேதங்களைப் பயின்றதோடு, இசையாசிரியர் மதுரகவியின் நட்பும் ஏற்படவே, அவரிடம் இசை பயின்று, பன்னிரண்டாவது வயதிலேயே, பதங்களையும், கீர்த்தனைகளையும் பாடும் திறமை பெற்றார்.

ஒருநாள் கோடீசுரன், ஓலையும், எழுத்தாணியும் வைத்துக் கொண்டு, முருகனை மனதிற் கொண்டு தூங்குகையில்,

"வசைமல ரயன்மதனை யருள்ஸரஸ
கோபால மருகசர வணமுருகனே"

என்ற மகுடத்தைச் சொல்லிப் பாடும்படி முருகப்பிரான் அருளியதாகவும், விழித்தெழுந்து திருவருளைப் போற்றி, உடனே பன்னிருசீர் ஆசிரியவிருத்தத்தில் பன்னிரண்டு பாக்கள் பாடினாராம்.

இவர் தனது குலதெய்வமான முருகப்பெருமான் மீதும், சொக்கலிங்கப் பெருமான்மீதும், சோமசுந்தரர் – அங்கயற்கண்ணி மீதும், இதர தெய்வங்கள் மீது கீர்த்தனைகள் பாடினாரே தவிர, மானிடர் எவர் மீதும் பாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பதினெட்டாவது பிராயத்தில் இவருக்கு 'வெப்பு' நோய் உண்டாயிற்று. தனது குலதெய்வமான முருகப்பெருமானை வேண்டினார். ஒருநாள், பெருங்கரையிலுள்ள காவற்கடவுளான தருமசாஸ்தா மீது பள்ளுப்பிரபந்தம் பாடினால், நோய் தீர்ந்து விடுமெனக் கனவு கண்டார். அன்று முதல் தருமசாஸ்தாவைத் தெய்வமாகக் கொண்டு ஒரு பள்ளுப்பிரபந்தம் பாடினார். வெப்பு நோயும் வரவரக் குறைந்தது. வெப்பு நோய் முழுவதும் நீங்கியவுடன் ஐயனார் முன், தான் பாடிய பள்ளுப் பிரபந்தத்தை அரங்கேற்றி, அன்றிரவு நாடகமாகவும் நடத்தினார்.

திருமாலிருஞ்சோலைமலை அழகர் மீது ஒரு குறவஞ்சியும், முருகப்பெருமான் அவதாரத்தை விளக்கும் ஸ்கந்த புராணக் கீர்த்தனையும், மதுரை மீனாட்சிமீது அடைக்கல மாலையும், கயற்கணிமாலையும், திருப்பதி ஸ்ரீவேங்கடாசலபதிமீது திருவேங்கட மாலையும், திருமுக விலாசமும், இன்னும் அநேக தனிப்பாசுரங்களும் கீர்த்தனைகளும், பதங்களும் பாடி கடவுளைத் துதித்து வழிபட்டு வந்தார். 'குஞ்சர' என்பது இவரது முத்திரை.

இவரது பாடல்களை வித்வான்கள் பாடிவரவே, அவை பிரபலமாயின. அவர்கள் பாடிக் கேட்ட, சிவகங்கை சமஸ்தானாதிபதி கௌரீ வல்லப மகாராஜா, இவரைத் தமது அவைக்கு வரவழைத்து வியந்து மகிழ்ந்து, இவருக்கு 'கவி குஞ்சரம்' என்ற சிறப்பு பெயரைக் கொடுத்து, தமது ஆஸ்தான கவிகளில் ஒருவராகவும் நியமனம் செய்து கொண்டார். அது முதற்கொண்டே 'கோடீசுர பாரதி' 'கவிகுஞ்சர பாரதி' என வழங்கப்படலானார்.

இவரது புலமையைக் கேள்வியுற்ற ராமநாதபுரம் சேதுபதி, தமது அவைக்கு வரவழைத்து பாடக் கேட்டு ஆனந்தித்து, தமது சமஸ்தான வித்வானாக நியமனம் செய்து கொண்டார். இவ்விதம், இரு சமஸ்தானங்களில் ஆஸ்தான வித்வானாக கௌரவிக்கப்பெற்ற பெருமை பெற்றவர் கவிகுஞ்சர பாரதி.

ஒருசமயம் சிவகங்கை மன்னர் காட்டிற்குச் சென்று பதினாறடி வேங்கை ஒன்றை வேட்டையாடியதைக் குறித்து சமஸ்தானப் புலவர்கள் பலரும் பாட, கவிகுஞ்சரம் 'வேங்கைக் கும்மி' என்று ஒரு பிரபந்தம் பாடினார். நவரசங்களும் பொருந்திய இது, வெகு இனிமையாக இருக்கக் கண்டு, அதைத் தமது சதசில் அரங்கேற்றச் செய்து, அதற்கு சன்மானமாக "கொட்டாங்குச்சி யேந்தல்", என்ற ஊரை இவருக்கு தானமாகக் கொடுத்தார். ஒரு காலத்தில் அவ்வூர் பயிர்கள் மழையின்றி வாடுவதைக் கண்ட கவிகுஞ்சரம், முருகனைக் குறித்து

'கந்தநீ தந்தகொட்டக் கச்சியேந்தல்"

என்று பாடவே, உடனே மழை பெய்து சுபிட்சம் உண்டாயிற்று.

பின்னர், சிவகங்கையை ஆண்டு வந்த காத்தம நாச்சியார் மொழிந்த வேண்டுகோளின்படி திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியிருக்கும் சுந்தரராஜப் பெருமாள் (அழகர்) மீது "குறவஞ்சி" பாடி அரசவையில் அரங்கேற்றினார். இது பக்தி, சிருங்கார ரசம் நிறைந்தது. இயல், இசை, நாடகம் என்றும் முத்தமிழில் குறவஞ்சியானது,

நாடகத்தமிழின் வகையைச் சார்ந்தது. இத்தகைய கதை அமைப்புகள் கொண்ட நாட கங்கள் பல, தமிழ் நாட்டில் அவ்வப்போது தோன்றியுள்ளன. குறத்தி முக்கிய பாத்திரமாக வருவதால் இவை 'குறவஞ்சி நாடகங்கள்' எனப் பெயர்பெற்றன. இவற்றுள் தலை சிறந்தவை திருக் குற்றாலக் குறவஞ்சி, சரபேந்திரர் பூபாலக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி ஆகும். இவை தவிர இன்னும் சுமார் இருபது குற வஞ்சிகள் ஆங்காங்கு எழுத்துப் பிரதியாக (Manuscripts) உள் ளன. குறவஞ்சி நாடகங்கள் பழைய காலத்தில் கோயில்களில் திருவிழா சமயத்தில் தேவ தாசிகள், குறவன் - குறத்தி வேடம் தரித்து நடத்தப்பட்டுவந்தன.

ராமநாதபுரம் மன்னரது சகோ தரர் பொன்னுச்சாமி தேவர், கவி குஞ்சர பாரதியிடம் மிகவும் ஈடு பாடு கொண்டவர். கச்சியப்பரது ஸ்கந்தபுராணத்தை இனிய தமிழ் நடையில் கீர்த்தனைகளாகவும், விருத்தங்களாகவும் செய்ய வேண்டுமென்று அவர் கேட்டுக் கொள்ளவே, அதை அமைதியான சூழ்நிலையில் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன், தன் சொந்த ஊருக்குத் திரும்பி வந்து "ஸ்கந்தபுராண கீர்த்தனை" என்னும் நூலை, நவரசங்களும் பொதிந்த தாக ஐந்து ஆண்டு காலத்தில் இயற்றி முடித்தார். இவரது சகோதரர் குமாரர் ஆளுடையார் கோயில் ஆத்மநாத பாகவதர், ஸ்கந்தபுராணக் கீர்த்தனைகளை எங்கும் பாடிப் பிரபலப் படுத்தினார்.

கவிகுஞ்சர பாரதி இயற்றி யுள்ள இதர பாடல்கள், விநாயகர் மீது முதல் பாடலில் தொடங்கி 36 தமிழ்ப் பதங்கள் பேரின்ப கீர்த் தனைகளும் பதங்களும்; மழை பெய்ய வேண்டிச் சில பாடல்கள்; ராமாயண சம்க்ஷேப கீர்த்தனம்; குன்றைக் குகனந்தாதி வெண்பா; மதுரை மீனாட்சியம்மன் மீது - மீனாட்சி திருப்பள்ளி எழுச்சி, மீனாட்சி அடைக்கல மாலை, மணி மாலை; மீனாட்சி வெண்பா, மீனாட்சி கயற்கணிமாலை.

கவிகுஞ்சர பாரதி 1894 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். ஃ


சுப்ரபாலன்

கதவு தட்டுது





நானென்ன? வெறும் மனிதன்!
மரங்கள் என்னிலும் மேலானவை!
பூஞ்செடிகள், முட்புதர்கள், புழுபூச்சிகள்
எல்லாமே —
என்னிலும் மிக உயர்ந்தவை!
ஆறறிவு நூறறிவு என்பதாய்
நானே கற்பித்துக்கொண்ட செருக்கில்
என்னை நானே தொலைத்துக் கொண்டிருந்தேன்.
வண்ணத்துப் பூச்சியின் பட்டுச் சிறகைப்போல்,
வானத்து வில்லின் நிறச்சேர்க்கையைப் போல்
சின்னச் சிலந்தியின் கம்பிஇழையைப் போல்
நானும் செய்துபார்த்து நகலெடுத்திருக்கிறேன்!
பறவைகளைப்போல் நானும் பறக்க முயன்று
பூமண்டலத்தை விட்டுப் புறவெளியிலும் போய்நின்று
பிரபஞ்சத்தைப் பார்த்த போதுதான் -
நான் எவ்வளவு சிறிய அணுத்துகள் என்று
புரிந்துகொண்டு செருக்கடங்கினேன்!
என்றாலும் -
சுதந்திரம் என்ற ஒரு சொல்லின்
நிஜமான பொருளை அறிவதில் மட்டும்
தோற்றுப்போய் அடிமையானேன்!
இந்த அடிமைத்தனம் என்னை அற்பமாக்குகிறது!
என்னை - இந்தக் கணத்தில்
முழுமையாய் உணர்கிறேன் - நான் வெறும் தூசு!
"யாரது! வாசலில் கதவு தட்டுவது?"
"சீக்கிரம் புறப்பட்டுவா! நான்தான் காலதேவன்!"



ரு. துளசிதாஸ்

வானவில்

வான வில்லைப் பாரதோ
வண்ண நீல வானிலே!
வானம் நெடுகத் தெரியுது;
வண்ணம் ஏழு தெரியுது!

வண்ணம் ஏழை வானிலே
வரைந்த தெந்த ஓவியன்?
கண்ணில் தெரியும் வில்லது
கையில் எட்டக் கூடுமோ?

மழையின் போது சூரியன்
மாலை காலை வேளையில்
அழகாய்ப் போட்ட கோலமே
அங்கே வில்லாய்த் தோன்றுது!

வெள்ளைக் கோலப் பொடியினை
வீசி வானில் எறிந்ததாய்
வெள்ளை நிறமே ஏழென
வில்லின் நிறங்கள் பிரிந்தன!

காலம் விளக்கிச் சொல்லிடின் -
காலை வேளை மேற்கிலும்,
மாலை வேளை கிழக்கிலும்
வான வில்லைப் பார்க்கலாம்!



நெஞ்சில் கவிதை நிகழ்வாகிறது

இலந்தை சு. இராமசாமி

வான்

அண்ட வெளியோர் அங்குல மாக
கொண்டு திரிந்த கற்பனைக் குதிரை
நொண்டி யானதேன் நோயின் தாக்கம்
கண்டதோ என்று கவலும் போதிலே
ஆகாயம் என்றன் அருகில் வந்தது
அண்டம் மீண்டும் அங்குல மானது

காற்று

வசந்த வார்த்தைகள் வாசலில் கூடி
இசைவு கேட்டநாள் இருண்டு போனதோ
பசையும் உலர்ந்து பட்டதோ என்றே
அசதி கொண்ட அந்த நாளிலே
மாருதம் ஒன்று வந்தது வந்தது
பாரதம் கொண்டு தந்தது நின்றது

மண்

மொட்டை மலைகள் முக்காடு போட
பொட்டல் வெளியில் புழுதி கூட
சொட்டும் அருவி சூரியன் தின்ன
வெட்ட வெளியை வெறித்துப் பார்க்கையில்
முல்லை வெடித்து முறுவலித்தது
வெல்லும் அழகு விடியல் கண்டது

நீர்

கண்ணில் கூடக் கசிய மறுத்து
மண்ணில் எங்கும் வறட்சி கொடுத்து
எண்ணத் துள்ளும் இறங்க விடுத்து
தண்ணீர் எங்கோ தலைமறை வாக
கங்கை நதியென் கால் நனைத்தது
கண்ணில் இன்பத் தேன் பனித்தது

தீ

வாட்டும் தீமையை வாட்டும் கங்கு
ஆட்டம் கண்டே அடங்கிப் போனதோ
சூட்டுக் கோலும் தொலைந்த தோஎன
ஏட்டைக் கையில் ஏந்தி நிற்கையில்
வடவைக் கனலை வார்த்தை கண்டது
எடுத்த ஏட்டில் ஏற்றிக் கொண்டது

அருகில் வந்த ஆகா யத்தில்
விரையும் காற்று வீதி கொள்ள
தரையில் நீரின் தாரை ஓட
தீயோ ஒளியை ஏற்றிக் காட்ட
அஞ்சு பூதம் அரசாள்கிறது
நெஞ்சில் கவிதை நிகழ்வாகிறது

வரவேண்டும் காந்திமகான்

பாளை இளமாறன்

நாளங்கள் மேனியாக நாளும் உழைக்கின்ற
பாட்டாளி ஆடைகட்ட பக்கிரியாய் ஆனாய் நீ
ஆமணக்கு கட்சிகளால் அன்றாடம் காய்ச்சிகளும்
கோவணத்தை விற்றுக் கொடிவாங்க ஓடுகின்ற
மாயமனம் மாற்றுவது யார்?

மின்னொளியில் விட்டிலையே மேல்விழுங்கும் பல்லியைப்போல்
வந்த சுதந்திரத்தில் நாட்டைச் சுரண்டும்
பணக்காரன் இங்கு பசித்தோரைக் கூட்டி
உணவிட்டு 'தர்மகர்த்தா' உன்கொள்கை கொள்ளாமல்
இன்னும் ஏன் வர்க்கமனம் இங்கு?

உந்தன் மனவெளியின் ஒப்பற்ற அன்பினால்
வந்த மதச்சண்டை வாலறுந்து போனாலும்
பேரணாம்பட்டுபல பேசிக்கொண்டு நிற்பதோடு
சாதிக் கலவரமும் தாண்டிக் குதிக்கநீ
ஏற்றிவைத்த 'ராமராஜ்யம்' ஏது?

சட்டநகல் தீயுண்ணும்; சட்டமன்றம் போர்க்களங்கள்
வேலை நிறுத்தங்கள்; வெற்றுக் கமிஷன்கள்
ஆர்ப்பரிக்கும் இங்கே அறிக்கைப்போர் கட்சிகளால்
அந்நியனை நீ எதிர்க்க ஒத்துழையாமை கண்டாய்
இவற்றை நீ ஏன் நடத்த வேண்டும்?

துப்பாக்கிச் சத்தங்கள் சுற்றிவந்து இத்தரையை
ரத்தக் களரியாக்கி நாட்டைக் குடிப்பதினால்
ஆண்களே இங்கே அடுத்ததெரு செல்வதற்கு
அஞ்சுகின்ற வேளையிது; அதனாலே நீசொன்ன
சுதந்திரம் இல்லைதானே சொல்!

மதுவிலக்குச் சட்டம் மரணத்தைப் பெற்றிங்கே
வீதிஉலா வந்ததினால் வேதனையில் பாரதத்தாய்
இப்படி உன்கொள்கை ஏற்காத மக்களுக்கு
தப்பென்று வந்துநீ சொல்லித் திருத்தினால்தான்
நாளும் உயர்ந்தோங்கும் நாடு.

தட்சிணாமூர்த்தி தத்துவம்

பருத்தியூர் டாக்டர்
கே. சந்தானராமன்

சனகர், சனந்தர், சனாதனர், சனத்குமாரர் என்ற நான்கு முனிவர்களும் வேத - ஆகம - சாஸ்திர - புராண நூல்கள் அனைத்தையும் நன்கு கற்றவர்கள். சான்றோர் பலரிடம் பாடம் கேட்ட கேள்வி ஞானமும் பெற்றவர்கள். அவர்களை 'சனகாதி நால்வர்' என்று குறிப்பிடுவர்.

அவர்கள் கற்றுப் பெற்ற நூலறிவும் கேள்வி ஞானமும் அவர்களுக்கு ஞானத் தெளிவைத் தரவில்லை. மெய்ப் பொருள் என்ன என்பதும் உண்மைத் தத்துவம்தான் என்ன என்பதும் விளங்கவில்லை.

"தாம் அறிந்ததும் உணர்ந்ததுமே உண்மைத் தத்துவம். அதுவே அனைவரும் பின்பற்ற வேண்டிய சித்தாந்தம்" என்று எண்ணுவது அன்றும், இன்றும், என்றும் பலரது கொள்கையாக உள்ளது. இறைவனைப் பற்றிய உண்மை நிலையை முழுவதுமாக எவரும் அறிந்ததில்லை.

அனைத்தும் கற்ற அந் நான்கு முனிவர்களும் தாங்கள் உண்மைத் தத்துவத்தை உணரவில்லை என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொண்டனர். அதனை அறியும் முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இறைவனை நாடினர். உரிய நேரத்தில் அதனை உபதேசிப்பதாக இறைவன் கூறியருளியிருந்தான்.

அம்பிகை பார்வதியாகித் தவமியற்றிக் கொண்டிருந்தபொழுது தானும் யோக மூர்த்தியாகி உபதேசிக்க எண்ணினான். கயிலை மலைச் சாரலில் கல்லால மரத்தின் கீழ் சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் உபதேசிக்கத் திருவுள்ளம் கொண்டு நந்தியம் பெருமானைக் காவலாக வைத்தான். யோக மூர்த்தியாகி உபதேசிக்கும் பொழுது காமன் ஒருவனைத் தவிர வேறு எவரையும் அனுமதியாதிருக்கும்படியும் கட்டளையிட்டான்.

கல்லால மரத்தின் கீழ், காலொன்றினை மடித்துப் பிறிதொன்றினைக் கீழே தொங்கவிட்ட நிலையில் அமர்ந்தான். வலக்கரத்தால் சின்முத்திரை காட்டி உண்மை நிலை உணர்த்தினான். "தெற்கே செல்லும் மரண யாத்திரை மேற்கொள்ளாது வடக்கே சரணயாத்திரை வாருங்கள்" என உணர்த்தத்தான் தெற்குமுகமாக அமர்ந்தான். தட்சிண (தெற்கு) திசையை நோக்கி அமர்ந்ததால் தட்சிணாமூர்த்தி என அழைக்கப்பட்டான். தமிழில் 'தென்முகப் பரமன்' என்பர்.

அவன் காட்டிய சின்முத்திரை என்ற அறிவின் அடையாளத்தில் மூன்று விரல்கள் (சுண்டு, மோதிர, நடு விரல்கள்) மேலே உயர்ந்து நிற்கும் நிலையில் காணப்படும். ஆட்காட்டி விரல் கட்டை விரலின் அடியுடன் இணைந்திருக்கும்.

இறைவன் 'பதி' எனப்படுவான். உயிர்கள் அனைத்தும் 'பசுக்கள்' எனப்படும். உயிர்களுக்கு இயல்பாகவே மூன்று குற்றங்கள் உண்டு. ஆணவம், கன்மம், மாயை என்பன அவை. உயிர்கள் அவற்றை விடுத்து பதியாகிய இறைவனை அடைதலே உண்மையாக என்றுமுள்ள தத்துவம். உயர்த்திய மூன்று விரல்கள் முறையே ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை உணர்த்தும். பெரு விரல் பதியாகிய இறைவனையும் ஆட்காட்டி விரல் பதியை அடையும் பசுக்களையும் குறிக்கும்.

முப்புரிநூல் என்னும் பூணூலும் இச் சின்முத்திரையின் தத்துவத்தையே உணர்த்தும் சின்னமாகும். எட்டுச் சாண் நீளத்துடன் மூன்று புரிகளாக ஒரு முடிச்சுடன் தயாரிக்கப்படுவது பூணூல். எண்சாண் உடம்பில் மும்மலங்கள் உள்ளன. அவை நீங்கும் வரை பிறவி என்னும் முடிச்சு உண்டு என விளக்குவதே பூணூல்.

எல்லாச் சிவாலயங்களிலும் தட்சிணாமூர்த்தி சுவாமி சந்நிதியின் தெற்குப் புறத்தில் தெற்கு நோக்கியே அமர்ந்திருப்பார். ஆலமரத்தின் கீழ் அமர்ந்த கோலத்தில் இவர் இருப்பார். அருகில் நான்கு முனிவர்களும் எதிரே அமர்ந்திருப்பர். சரியை, கிரியை, யோகம், ஞானம், என்ற நான்கு மார்க்கங்களாலும் பதியை அடையலாம் எனவும், மார்க்கங்கள் வேறுபட்டாலும் இறுதியில் அடைவது இறைவன் திருவடியே எனவும் உணர்த்த சனகாதி நால்வர் அங்ஙனம் அமர்ந்துள்ளனர். இறைவனின் வலக்கரம் சின்முத்திரை காட்டும். இடக்கரம் சுவடி ஏந்தி இருக்கும். மேலேயுள்ள வலக்கரத்தில் ஜப மாலையும் இடக்கரத்தில் மழுவும் இடம் பெற்றிருக்கும்.

தொங்கவிட்ட பாதத்தின் கீழே முயலகன் என்னும் அசுரன் இருப்பான். அவன் அஞ்ஞானம் என்னும் அறியாமையின் சின்னம். அறியாமை இறைவன் திருவடியில் அடங்கி ஒடுங்கிவிடும்!

வீணை மீட்டிய கோலத்தில் அமர்ந்து இசை நுணுக்கங்கள் அனைத்தையும் உபதேசித்தவர் தட்சிணாமூர்த்திதான். அந்தக் கோலத்தில் அவரை 'வீணாதர தட்சிணாமூர்த்தி' என்பர்.

அறிவு மேம்பாட்டை அருளுவதால் 'மேதா தட்சிணா மூர்த்தி' என்று போற்றுவர்.

ஆதிசங்கரர் தட்சிணா மூர்த்தியைப் புகழ்ந்து 'தட்சிணா மூர்த்தி அஷ்டகம்' என்ற எட்டு சுலோகங் கொண்ட தோத்திரம் இயற்றியுள்ளார்.

தமிழில் தாயுமானவர் 'சின்மயானந்த குரு' என்ற தலைப்பில் திருச்சிராப்பள்ளி தட்சிணா மூர்த்தியின் மீது பதினொரு பாடல்கள் இயற்றியுள்ளார்.

தருமையாதீனம் பத்தாவது குரு மகாசந்நிதானம் அவர்கள் மேதா தட்சிணாமூர்த்தியைப் போற்றி 'தட்சிணாமூர்த்தி திருவருட்பா' என்ற பத்துப் பாடல்கள் கொண்ட தோத்திரம் இயற்றியுள்ளார்.

"கல்லாலின் புடையமர்ந்து" என்று தொடங்கும் பரஞ்சோதி முனிவரின் பாடல் மிகவும் பிரபலமானது.

இறைவனின் யோக வடிவங்களில் முதன்மை பெற்றது தட்சிணாமூர்த்தி வடிவமே. இவர் அறிவு மேம்பாடும், ஞானமும், முத்தியும் அருளும் மூர்த்தியாவார். ஃ

நித்திய ஒளி வீசும் எழுத்துலக நட்சத்திரம்



எழுபது ஆண்டுகளுக்கு முன் தஞ்சை மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் ஒரு வீட்டில் பெண் குழந்தை பிறந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு தொட்டிலிட்டு நாமகரணம் செய்து கொண்டிக்கிறார்கள். குழந்தைக்கு உற்றார் உறவினர் விதவிதமான விளையாட்டுப் பொருள்களை வாங்கிக் கொடுக்கிறார்கள். குழந்தை அழுதுகொண்டே எல்லாவற்றையும் தள்ளுகிறது. வயதான தாத்தா ஒருவர் குனிந்து தன் காதில் வைத்துக் கொண்டிருந்த சிறகு பேனாவைக் கையில் கொடுக்கிறார். குழந்தை அழுகையை நிறுத்திவிட்டு சிரித்துக்கொண்டே அந்தப் பேனாவைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறது. பெரியவர் இந்தக் குழந்தை நன்றாகப் படித்துப் பட்டம் பெற்றுப் பேனாவும் கையுமாக எப்பவும் எழுதுவாள் என்று குழந்தை தன் பரிசைப் பெற்றுக் கொண்டதைப் பெருமையாகச் சொல்கிறார். குழந்தைக்குத் 'திரிபுர சுந்தரி' என்ற பெயரும் வைத்தார்கள்.

ஏறக்குறைய 45 ஆண்டுகளுக்கு முன் நடந்தது! அருமையான நாள். ஆனந்தவிகடன் பத்திரிகை ஆசிரியர் திரு. எஸ்.எஸ். வாசன் அவர்கள் இல்லத்திற்குச் சென்றிருந்தேன்.

திருமதி பட்டம்மாள் வாசன், "இவர்தான் திரிபுரசுந்தரி. 'லக்ஷ்மி' என்ற பெயரில் நம் விகடனில் 'காஞ்சனா' தொடர் கதை எழுதுகிறார்" என்று அறிமுகப்படுத்தினார்கள்.

திருமதி லக்ஷ்மியை நேரில் சந்தித்துப் பேசவேண்டும் என மிகவும் ஆவலாக இருந்தேன். எனவே இந்த அறிமுகம் எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. லக்ஷ்மியின் எளிமையான தோற்றம் அவர்களிடம் தனிப்பட்ட அன்பையும் மரியாதையையும் அளித்தது. அதன் பிறகு எங்களுடைய நட்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது.

திருமதி லக்ஷ்மி அவர்கள் கல்லூரியில் படிக்கும் போதே ஒரு நாள் ஆனந்த விகடன் காரியாலயத்திற்குப் போய் திரு.வாசன் அவர்களிடம், "எனக்குக் கதை எழுத வரும். விகடனுக்கு எழுதுகிறே"னென்று நேரிடையாகக் கேட்டாராம். திரு.வாசன் அவர்கள் மிக்க பெருந்தன்மையுடன் உடனே எழுதி அனுப்புமாறு சொல்லியிருக்கிறார்.

ஆனந்த விகடனில் 'காஞ்சனா' என்ற நாவல் வெளிவரத் தொடங்கியதும் வாசக மக்களிடையே அமோகமான வரவேற்பு. ஏராளமாக 'விசிறிகள்' வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு விகடன் பத்திரிகை விற்பனைக்குக் கூவும்போது பெண் குலமே இடித்து புடைத்துக் கொண்டுபோய் வாங்கிப் படிப்பார்கள். தொடர்ந்து பெண் மனம், மிதிலா விலாஸ் போன்ற கதைகள் வரத் தொடங்கின. திருமதி லக்ஷ்மிக்கு 'விசிறிகள்' பெருகிக் கொண்டு வந்தார்கள். இதற்கிடையில் வைத்தியக் கல்லூரிப் பரீட்சையில் தேர்ந்து டாக்டர் பட்டம் பெற்றார் லக்ஷ்மி. திரு. வாசனுடைய கணிப்பு முற்றிலும் சரியாக இருந்தது. ஆனந்த விகடன் பத்திரிகை திருமதி லக்ஷ்மிக்கு அளவற்ற பெருமையைத் தேடித்தந்தது. லக்ஷ்மியின் எழுத்து மேலும் ஒளி வீசியது.

சில நாள்களுக்குப் பிறகு என் அருமை சிநேகிதி திருமதி எம். எஸ்.கமலா (ராஜாஜி அண்ணன் மகள்) கிருஷ்ணசுவாமி இல்லத்திற்குச் சென்றிருந்தேன். திருமதி கமலாவும், திருமதி லக்ஷ்மி அவர்களும் நெருங்கிய சிநேகிதிகள். எனக்கு மீண்டும் திருமதி லக்ஷ்மியுடன் மகிழ்ச்சியான சந்திப்பு. "திரிபுரம் 'தாய்மையும், குழந்தையும்' என்ற அருமையான புத்தகம் எழுதியிருக்கிறார்" என்று சொல்லி என் கையில் ஒரு புத்தகத்தைக் கொடுத்தார். திருமதி லக்ஷ்மி நாவல் எழுதுவதுடன் தாய்மார்களுக்கு உதவுமாறு நல்ல புத்தகம் எழுதியிருக்கிறார் என்று பாராட்டினேன்.


பழம் பெரும் எழுத்தாளர் திருமதி குகப்ரியை அவர்கள் இல்லத்தில் பைந்தமிழ்ச் சோலை என்று ஒரு சங்கம் நடத்தி வந்தோம். வாரம் ஒருமுறை நாங்கள் சங்கத்தில் கூடிப் பேசுவோம். அந்த வாரம் கண்டது, கேட்டது, படித்தது எல்லா இலக்கியங்களையும் கொட்டி அளந்து விமர்சனம் செய்வோம். திருமதி குகப்ரியை, திருமதி லக்ஷ்மி, திருமதி ஹரிணி நாங்கள் நால்வரும் பெண் அங்கத்தினர்கள். சகோதரர்களும் இருந்தார்கள். டாக்டர் லக்ஷ்மி அவர்கள் அன்று பேசப்பட்ட இலக்கியங்களின் கருத்துகளைத் தன் மனத்திலே பதித்துக் கொள்வார்கள். அடுத்த வாரம் அவர்கள் கதையில் அந்தக் கருத்து பளிச்சிடும்.

தென்னாப்பிரிக்காவில் இருந்து வந்த பிறகு அவர் வாழ்க்கையில் ஒரு திருப்பம். அங்கே இருக்கும் போது கூட தமிழ் இலக்கியத்தை விட்டுப் பிரியவில்லை. 'ஆனந்த விகடன்' தீபாவளி மலருக்குக்

வசுமதி இராமசாமி

காத்து நில்லுங்கள்!

ரா. பொன்ராசன்



அறிவைப் பற்றி வள்ளுவ னார்
என்ன சொல்கி றார்? அதை
ஆழ்ந் துணர்ந்து புரிந்து கொண்டால்
நமக்கு நல்ல து.
அழிவி லிருந்து தடுத்துக் காக்கும்
கருவி என்று தான் – உண்மை
அறிவைப் பற்றி வள்ளுவ னார்
அன்றே சொல்லி னார்.

அறிவி யலில் பொறி இயலில்
மற்ற இய லில் – பெரும்
அற்பு தங்கள் நிகழ்த்து வதாய்ப்
பீற்றிக் கொள்வோ ரே –
அறிவின் குறி என்ன என்று
புரிந்து கொள்ளுங் கள் – பெரும்
அழிவி னின்றும் நம் உலகைக்
காத்து நில்லுங் கள்.

கதை கட்டுரை போன்றவற்றை எழுதிக்கொண்டிருந்தார்.

'அமுதசுரபி' பத்திரிகை நடத்திய நாவல் போட்டிப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட டாக்டர் லக்ஷ்மி அவர்களைப் பார்த்துப் பேசும் போது அவர் வாழ்க்கையில் ஒரு துன்பம் ஏற்பட்ட நிலை இருந்தது. வருந்தினேன். தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவரும் கதைகளின் தரத்தைப் பற்றிக் கேட்டார்கள்.

இனி நான் இந்தியாவிலேயே இருப்பேன் என்று சொல்லும் போது எனக்கு மகிழ்ச்சி ஒருபுறம், வேதனை ஒருபுறம் இழையோடின.

அவருடைய பண்பாட்டிற்கு இணையே இல்லை. எல்லாருடனும் அன்பாகப் பேசுவார். குடும்பத்தினருடனும், மற்ற சிநேகிதர்கள், சக எழுத்தாளர்கள், வேலை செய்பவர்கள் எல்லாருடனும் அன்பாகப் பழகுவார். கனிவான உள்ளம். சிரித்துப் பேசுவார். மற்ற எழுத்தாளர்களின் எழுத்துகளைப் பாராட்டத் தவறமாட்டார்.

மருத்துவத் துறையில் ஏழை எளியவர்களுக்குத் இலவசமாக வைத்தியம் செய்வார். அன்பே உருவானவர்.

நண்பர்கள் உறவினர் வீட்டுக் கல்யாணங்களுக்கு தவறாமல் வந்து ஆசிகள் வழங்குவார். கல்யாண விருந்து சாப்பிடுவது அவருக்கு மிகவும் பிடிக்கும். ருசித்து சாப்பிடுவார்.

தென்னாப்பிரிக்காவில் இருந்து வந்த பிறகு அவருடைய எழுத்து ஆர்வம் அதிகமாயிற்று. இரவும் பகலும் பத்திரிகை உலகம் எழுத்துலகம் எப்படி இருக்கிறதென்று அறிந்து எழுத எல்லாப் பத்திரிகைகளையும் வாங்கிப் பரீட்சைக்குப் படிப்பது போல் படிப்பார்.

கடலில் முத்துகளை எடுத்துக் குவிப்பதுபோல் எழுத ஆரம்பித்தார்கள். நிறைய எழுதினார்கள். நன்றாகவும் எழுதினார்கள். ஒரே சமயத்தில் நான்கு ஐந்து பத்திரிகைகளுக்குத் தொடர் கதை எழுதினார்கள்.

ஒரே சமயம் இவ்வளவு கதைகள் எழுதினால் உங்கள் கதாபாத்திரங்கள் குழப்பம் அடைந்து கட்சி மாறிவிடப் போகிறார்கள் என்றேன்.

"உங்களோடு இவ்வளவு காலம் பழகினதால் நான் கட்சி மாற மாட்டேன். உங்கள் உறுதி என் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டது" என்றார்.

என் கண்களில் நீர் நிறைந்து விழிகள் மிதந்தன. அவருடைய எழுத்துச் சிறப்பு என்னவென்றால், பெரும்பாலும் குடும்ப அமைப்பில்தான் எழுதுவார்கள். குடும்பம் ஒரு சர்வகலா சாலை. வாழவேண்டிய இடம் என்பது அவருடைய கொள்கை.

ஆபாசமின்றி எழுதக் கூடியவர். குரூர எண்ணங்கள் தோன்றாத வாறு அமைதியாக எழுதுவார். தெளிந்த நீரோட்டம் போன்ற நடை. கதாபாத்திரங்களை நம்முடன் பழகுபவர்களாக நினைக்கும் படி எழுதுவார். வம்பு தும்பு கிடையாது. பாலுணர்வின்றிப் பரிசுத்தமான அமைப்பு. எல்லாம் அவருடைய சொந்தக் கற்பனை.

ஏறத்தாழ 200 நாவல்கள் எழுதியிருக்கிறார்கள். 500 சிறுகதைகளும், கட்டுரைகளும் எழுதியுள்ளார்கள். நிறையப் பரிசுகள் பாராட்டுகளைப் பெற்றவர். 'ஒரு காவிரியைப்போல்' என்ற நாவல் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குப்பாலம் அமைப்பதைப் போல் எழுதின நாவல்.

சாகித்ய அகாடமி பரிசு பெற்ற கதை. இன்று எத்தனையோ கல்லூரி மாணவிகள் டாக்டர் பட்டம் பெறுவதற்காக லக்ஷ்மி அவர்கள் கதையின் சிறப்புகளைப் பற்றி என்னிடம் கேட்கிறார்கள்.

1986 ஆம் ஆண்டில் ஒரு நாள் மாலை 4.30 மணிக்கு என்னுடன் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார். அமுதசுரபியின் அம்மாதம் வெளிவர வேண்டிய தொடரை எழுதி வைத்துவிட்டு 6.30 மணிக்கு அமரத்துவம் அடைந்து விட்டார்கள்.

அவர் பேச்சு, மூச்சு எல்லாம் எழுத்துதான். இப்படி அழியா எழுத்துகளின் மூலமாக நம்முடன் வாழ்கின்றார்கள்.

பெண் எழுத்துலகில் நித்தியமாக ஒளிவீசும் நட்சத்திரமாக இருக்கின்றார்கள்.

தமிழ் நாட்டில் எழுத்தாளர் உலகில் நிறைய லக்ஷ்மிகள் தோன்றவேண்டும்.



செட்டிநாடு 'ராஜாசர்' இல்லம்


செட்டி நாட்டு

சங்க காலம் முதலாக வளர்ந்து வந்துள்ள கட்டடக்கலை - இறைவன் எழுந்தருளும் திருக் கோயில்களிலும், மன்னர்கள் வீற்றிருந்த அரண்மனைகளிலும், மக்கள் வாழ்ந்த மாட மாளிகைகளிலும், காலந்தோறும் புதிய தோற்றங்களையும், உருவாக்கத்தில் பயன்படுத்தும் மூலப்பொருள்களில் புதிய மாற்றங்களையும் பெற்று வந்துள்ளது. மனிதனது உள்ளுணர்ச்சியின் தெளிவுற்ற நிலையிலிருந்து பெருக்கெடுத்து வெளித்தோன்றும் கலை உணர்ச்சியை, படிப்படியாக வளர்ந்த கட்டடக் கலையில் கண்டு மகிழலாம்!

செல்வச் செழுமை கொண்டோர் வாழ்ந்த மாட மாளிகைகளின் அமைப்புகளை மட்டுமல்லாது, வசதியும் வாய்ப்பும் அற்றோர் வாழ்ந்த இல்லங்களின் வடிவங்களையும் இலக்கியங்களில் காண முடிகிறது. மண்ணால் எடுக்கப் பெற்ற சுவர்களின் மேல், தென்னங்கீற்றால், புல்லால் வேயப்பட்ட சின்னஞ்சிறிய வீடுகளை - 'புல் வேய் குரம்பை', 'சில் காற் றிசைக்கும் பல்புழை நல்இல்', 'இலைவேய் குரம்பை' என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுக் கூறுகின்றன.


தமிழர் கண்ட பழைமையான மனைநூல் மரபுப்படி அந்தணர், ஆசான் நூல்நெறி மக்கள் ஆகிய பெருமக்கள் உடனிருந்து மனைகள் யாவும் நாள் குறித்து, திசைகளையும், அவற்றில் எழுந்தருளும் தெய்வங்களையும் நோக்கி இல்ல மாளிகைகள் எழுப்பப் பெற்றன. கட்டடக் கலையில் செறிவும், திறமும் கொண்டோரை 'நூலறி புலவர்', 'நூல்நெறி மக்கள்' என இலக்கியங்கள் குறிப்பிட்டுப் பேசுகின்றன.

கவின்மிகு கட்டக்கலை வளர்ந்து, மன்னர்களின் கலைச் சிந்தனையால், செல்வாக்கால் காலந்தோறும் அதன் பாணிகள் மாற்றம் பெற்று வந்துள்ளன. பல்லவர் பாணி, சோழர் பாணி, பாண்டியர் பாணி, நாயக்கர் பாணி என்றெல்லாம் கட்டடக்கலை வகைப்படுத்தப் பெற்றுள்ளது. இத்தகைய வழிமுறைகளில், பத்தொன்பதாம் நூற்றாண்டில், தமிழகத்தின் மனை அமைப்பில் 'நகரத்தார் பாணி' எனும் ஒரு புதிய வகை, போற்றுதற்குரிய தோற்றமாக உதயமாகியுள்ளதைக் காண முடிகிறது.



காரைக்குடி ஆயிரம் ஜன்னல்கள் வீடு

தோன்றும் திசையெங்கும் தொழில் புரிந்து, பண்டைத் தமிழ் மரபை இன்றும் பண்போடு காத்து வரும் தமிழ்நாட்டு நகரத்தார் சமூகம் - தன வணிகராகத் தனிப் புகழுடன் நாக நாட்டில் வாழ்ந்தனர். பின்அரசநீதி பிழைபட்டதால், தொண்டை நாட்டுக் காஞ்சி மாநகருக்குக் குடி பெயர்ந்து வந்தனர். பிறகு அங்கிருந்தும் புறப்பட்டு, சோழ தேசத்துத் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்திற்கு வருகை புரிந்து, வாழ்ந்திருந்தபோது, சோழ மன்னர்களுக்கு மகுடம் சூட்டும்



கட்டடக்கலை

'குன்றக்குடி'

உரிமையுடன், 'பிரதான வைசியர்' எனும் விருதும், சிங்கக் கொடி பறக்கத் தங்கக் கலசங்கள் வைத்துக் கொள்ளும் தகுதியும் பெற்று, மிகுந்த செல்வாக்குடன் நிகரிலாப் பெருஞ் செல்வராகத் திகழ்ந்தனர். புகழார்ந்த தன வணிகர் குடும்பத்துப் பெண் ஒருத்தியை, ஆண்டு கொண்டிருந்த பூவந்திச் சோழன் என்பான், தவறான நோக்கத்தில் சிறைப் பிடித்துச் சென்ற கயமையைத் தாங்கிக் கொள்ள முடியாத நகரத்தார் சமூகம் ஒன்று குழுமி, 'பூம்புகார்' எனும் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து, ஓர் இரவு முழுமையாகக் குடிபெயர்ந்து பாண்டியநாடு வந்து சேர்ந்தது.


நாணயமும், நற்பண்பும், வணிகத்திறனும், வளர்ந்த செல்வமும் பெற்றுப் பெரும் புகழ் கொண்டிருந்த தன வணிக நகரத்தார் சமூகத்தை, பாண்டிய மன்னன் மிகுந்த பரவசத்தோடு வரவேற்றான்! நகரத்தார் சமூகம் பாண்டிய நாட்டுக்கு கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் வருகை புரிந்ததாக உறுதி செய்கிறார் ஒரு வரலாற்று அறிஞர். பாண்டியன் அரிகேசரி மாறவர்மன் ஆட்சிக் காலத்தில், பழைய நிகழ்ச்சிகளின் அனுபவங்களால், தலைநகர் மதுரை மாநகரில் வாழ விரும்பாத நகரத்தார், கடலுக்கு மேற்காய், வைகைக்கு வடக்காய், பறம்புக்குக் கிழக்காய், வெள்ளாற்றுக்குத் தெற்காய் ஒரு பிரதேசத்தைப் பாண்டியனிடம் வேண்டிப் பெற்றனர். வணிகத் திறமுடைய பலர், நகரத்தார் சமூகத்தில் 'எட்டி' என்ற சிறப்புப் பட்டத்தைப் பாண்டிய மன்னர்களிடமிருந்து பெற்றுத் திகழ்ந்ததால், அவர்கள் வாழ்ந்த பகுதி 'எட்டி நாடு' என அழைக்கப் பெற்றது. பின் அது காலவோட்டத்தில் மருவி 'செட்டி நாடு' ஆயிற்று! நகரத்தார் தங்களைச் 'செட்டி' என இனக் குறிப்பு விளங்க, அழைத்துக் கொண்டதால் 'செட்டிநாடு' எனப் பெயர் பெற்றதாகவும் கூறப் பெறுகிறது.

புதுக்கோட்டை இராமநாதபுரம், பசும்பொன் ஆகிய இரண்டு மாவட்டங்களின் சில பகுதிகளைக் கொண்டுள்ள செட்டிநாட்டுப் பகுதியில், பண்டைக் காலத்தில் 96 ஊர்களில் நகரத்தார் வாழ்ந்து வந்தனர். இப்போது 77 ஊர்களில் நகரத்தார் வாழ்ந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

பாண்டிய நாட்டின் செட்டி நாட்டுப் பகுதியில் வாழ்ந்த தன வணிக நகரத்தார் சமூகம், 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' எனும் நோக்கில் - இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேசியா முதலிய நாடுகளுக்குச் சென்று, வணிக உலகில் வரலாறு படைத்தனர். முயற்சிகள் திருவினைகளாகி நாளும் செல்வச் செழிப்பு வளர்ச்சி பெற்றது. இயல்பாகவே இறையுணர்வும், அறவுணர்வும் கொண்டிருந்த



தேவகோட்டை பெரிய மைனர் இல்லம்



முகப்புத்திண்ணையும் - தாள்வாரமும்

செட்டிநாட்டு நகரத்தார், திருக்கோயில் திருப்பணிகளை வாழ்வில் அறக் கட்டளையாக ஏற்று, தமிழ் நாட்டில் மட்டுமல்லாது, இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் உள்ள திருக்கோயில்களுக்குத் திருப்பணிகளாற்றியும், நிலையான சொத்துகளை ஏற்படுத்தியும், தங்கள் செல்வத்தை வழங்கி மகிழ்ந்தனர். சொல்லப் போனால் அலை கடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள், அவர்களின் இறையுணர்வை, ஈகைப் பண்பை இன்றும் எடுத்தியம்பிய வாறு உள்ளன.

பத்து நூற்றாண்டுகளுக்கு மேல் பாண்டிய நாட்டின் செட்டிநாட்டுப் பகுதியில் வாழ்ந்திருந்த நாட்டுக் கோட்டை நகரத்தார் பெருமக்கள், தங்கள் குலப்பிரிவுக்கு ஒன்றாக, தாங்கள் வாழும் செட்டிநாட்டுப் பகுதியிலேயே ஒன்பது திருக்கோயில்களை உருவாக்கி வழி பட்டனர். இந்த ஒன்பது திருக்கோயில்களும் தமிழர்தம் கட்டடக் கலை மேன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டுவதாய் உருவாக்கப் பெற்றுள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் நகரத்தார், தாங்கள் வாழும் இல்லங்களைக் கலைச் செறிவுடைய கவின்மிகு கோட்டைகளைப்போல் உருவாக்கத் தொடங்கினர்! 'நகரத்தார் பாணி கட்டடக் கலை' எனக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு ஏற்ப, செட்டிநாட்டுப் பகுதியின் பெரும் பான்மையான நகரத்தார் வாழ்ந்த இடங்களில், அரிய அற்புதக் கலைப் பெட்டகங்களாக நகரத்தார் இல்லங்கள் வானளாவ ஓங்கி உயர்ந்து நிற்கின்றன!

'மாட மாளிகை' எனச் சொல்வோமே? 'மழை தோயும் உயர்மாடம்' 'விண்பொர நிவந்த வேயா மாடம்' 'திண்போர்க் கதவின் மழையாடு மாடம்' என்றெல்லாம் நமது சங்க இலக்கியங்கள் பேசினவே? அத்தகைய அழகிய மாளிகைகளை, மாடமனைகளைக் கண் முன்னே காண வேண்டுமா? செட்டிநாட்டுப் பகுதியில் இன்றும் அத்தகைய விண்முட்டும் வியத்தகு கட்டடங்கள் கண்ணுக்கு அரிய காட்சியாய், கருத்துக்கு உரிய மாட்சியாய், ஓங்கியுயர்ந்து கட்டடக் கலையின் உன்னத அற்புதங்களாக விளங்கி நிற்கின்றன! அடித்தளம் முதலாகக் கட்டடங்களின் ஒவ்வொரு பகுதியும், மேற்தளத்து உச்சிவரை வலிமையோடு வனப்பும் எழில் வடிவமும் ஒன்று சேர அமைத்திருக்கும் கட்டடப் பான்மை - நகரத்தார் பெற்றிருந்த கட்டடக் கலையின் மதிநுட்ப மேன்மை!

நகரத்தார்களின் இல்லங்கள் அத்தனையும் தெருத்தரையி னின்றும் ஆறடி, ஏழடி உயரங்களில் பல படிக்கட்டுகளைக் கொண்டதாக உள்ளன! படிக்கட்டுகளில் ஏறி, வாயிற் கதவைத் திறந்ததும், இல்லத்தின் இரு புறங்களிலும் பயன்தரும் மரங்களை வளர்க்கவென்றே விசால மான மண்தரைகள் உள்ளன. மா, வாழை, வேம்பு முதலான மரங்கள் அங்கே வளர்க்கப் பெற்றுள்ளன. வாயில் நடையைக் கடந்தவுடன் இரு பக்கங்களிலும் நீண்ட திண்ணைகள்; திண்ணைகளின் விதானத்தைத் தாங்கி நிற்கக் கண்கவரும் கருங்கல் தூண்கள்; வரிசையாக நிற்கும் தூண்களின் எழில் தோற்றங்கள்! சில வீடுகளில் இந்தத் தூண்கள் 'பொருசு' எனும் ஒரு வகை மரத்தாலும் வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன. தூண்களின் உச்சியில் யானைகளின் துதிக்கை போல அமைக்கப் பெற்ற விதானந் தாங்கிகள்! திண்ணைகளில் பதிக்கப் பெற்றுள்ள வழு வழுப்பான கருங்கற்களும், திண்ணைச் சுவரில் பதிக்கப்பெற்றுள்ள வழு வழுப்பான வண்ணக் கற்களும் இத்தாலி நாட்டிலிருந்து கொண்டு வரப் பெற்றவை! நடை, திண்ணை, மரங்கள் வளர்ந்துள்ள தரைப் பகுதி ஆகியவை 'முகப்பு' என அழைக்கப்பெறுகிறது.


முகப்பிலிருந்து 'தாய்நிலை' வழியாக வீட்டினுள் செல்ல வேண்



டும். தாய்நிலையை வீட்டின் புனித மான தெய்வீகத் திருவிடமாக நக ரத்தார் மதித்துப் போற்றி யுள்ளனர். நிலைக் கால்கள் நிறுத்துகிற நேரத்தில் ஒரு சிறு விழாவெடுத்து, உறவுப் பெரிய வர்களின் கரங்கள் பற்ற நிலைப் படியில் நிறுத்தப் பெறும். நிலைக் கால்களை நிறுத்துகிறபோது, படிக்கட்டுக் குழிக்குள் நிலைக் கால்களின் அடியில் பசும் பாலிட்டு, விலையுயர்ந்த நவரத் தினங்களை இட்டு வைப்பார் களாம்! நிலையின் மேற்பகுதி யிலும், பக்கங்களிலும் உருவாக்கி யுள்ள கலை நுட்பங்களின் அருமை - செட்டிநாட்டு நகரத்தார் கட்டடங்களுக்கே உரிய தனிப் பெருமை!

கதவுகளுக்கு மேலே, இந்த நிலையின் மேற்பகுதி 'சூரியப் பலகை' எனச் சொல்லப்படுகிறது. இந்தச் சூரியப் பலகைகளில் உருவாக்கப் பெறும் மரச் சிற் பங்கள் உலகளாவிய கீர்த்தியைப் பெற்றுள்ளன! செல்வத்திற்கு நாயகியாகிய இலட்சுமி தேவி நடுவில் வீற்றிருக்க, விநாயகரும் முருகனும் வலம் இடமாக அமர்ந்திருக்க, பல்வேறு தெய்வத் திரு உருவங்களும், யானை, யாளி, அன்னப்பறவை முதலான வடி வங்களும் சூரியப் பலகைச் சிற்பங் களாக இடம்பெற்றுள்ளன. சூரியப் பலகை தனியாக உரு வாக்கப் பெற்று, நிலைகளில் பொருத்தப்படுகிறது. (இந்தச் சூரியப் பலகையை பல்லாயிரக் கணக்கில் விலை கொடுத்து வாங்கி, வெளி நாட்டுக்கு அனுப்பி வைக்கப் பெறுவதாகக் கூறப் படுகிறது!)

நிலைகளும், கதவுகளும், சூரியப் பலகையும் - 'தோதகத்தி' 'பொருசு' 'பீங்கொடா' முதலிய மரவகைகளால் உருவாக்கம் கொண்டுள்ளன. விதானங்களில் காணப் பெறும் பிரம்மாண்டமான உத்திரங்கள் 'தேக்கு' மரத்தில் செய்யப்பெற்றுள்ளன. தேக்கு, தோதகத்தி மரங்களைப் பர்மா விலிருந்தும், பொருசு, பீங்கொடா மரங்களை யாழ்ப்பாணத்தி லிருந்தும், தங்கள் சொந்தக் கப்பல்களில் நகரத்தார் பெரிய பெரிய முழு மரங்களாக ஏற்றி வந்து, தொண்டித் துறைமுகம் வழியே, நான்கு ஜோடி மாடுகள்



முகப்பில் தாய்நிலைக் கதவு

பூட்டிய வலிமை கொண்ட வண்டிகளில் செட்டிநாட்டுக்குக் கொண்டு வந்துள்ளனர்! பின் கேரளத்திலிருந்து ரம்பம் போடும் ஆட்களை வரவழைத்து, முழு மரங்களைப் பயன்படுத்துகிற அளவில், சிறிய பெரிய வடி வங்களில் அறுத்து உருவாக்கிக் கொண்டுள்ளனர். மரபு வழி கலை உணர்வு கொண்ட ஆசாரிகள் தங்கள் கை வண்ணங்களைக் காட்டி, வீட்டின் பல்வேறு பகுதி களில் உரிய மரங்களை இணைத் துள்ளனர்.

முகப்புத் தாய்நிலையைக் கடந்தவுடன், இரு புக்கமும் அறைகள் கொண்ட 'பட்டாலைகள்' உள்ளன. பட்டாலை மேடைகளும், சுற்றிலும் அறைகளும் கொண்ட முற்றம் உள்ள 'வளவு' சில வீடுகளில் 'பால்கனி'களைப் பெற் றுள்ளது. வளவில் உள்ள சில அறைகள், இரட்டை அறைகளாக அமைந்துள்ளன. அறைக்குள் அறை காண ஆச்சரியமாக உள்ளது! வளவில் உள்ள முற்றத்தில் நகரத்தார் வீட்டுத் 'தேவைகள்' (விழாக்கள்) நிகழ்கின்றன. (செட்டி நாட்டில் நகரத்தார்கள் தங்கள் வீட்டுத் திருமணங்களுக்குக் கலியாண மண்டபங்களைத் தேடிச் செல்வ தில்லை. காரணம் : ஒவ்வொரு வீடும் பிரம்மாண்டமான திருமண மண்டபமே அல்லவா?)

வளவுக்குப் பின் வருவது 'ஆழ்வீடு'. ஆழ்வீட்டின் அமைப்பை எத்தனை முயன்றாலும் எழுத்தால் அறிய வைக்க இயலாது! நவீன



கலைச்செறிவுடைய விதானம் தாங்கிகள்


முறையில் அமைக்கப் பெறும் இப்போதைய வீடுகளில், காற்றுக் காகப் பொருத்தும் காற்றாடிச் சாளரங்கள் (Ventilators) நூறு ஆண்டுகளுக்கு முன்னே அமைந்த நகரத்தார் இல்லங்களிலும் இடம் பெற்றுள்ளன! குளிர்சாதனக் கருவிகள் பொருத்தப்பெற்றதைப் போல ஆழ்வீடு, 'குளு குளு'வென எந்த விசிறியும் தேவைப்படாத 'இந்திர சுகம்' தரும் இடமாக அமைக்கப் பெற்றுள்ளது! ஆழ் வீடுகளின் விதானங்களில் அயல் நாடுகளிலிருந்து வரவழைக்கப் பெற்ற அரிய வண்ணத்தகடுகள் ஒட்டப்பட்டுள்ள அதிசய அமைப்பு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது!

ஆழ்வீட்டுக்குப் பின்னே, இரண்டாங்கட்டு, மூன்றாங்கட்டு, நாலாங்கட்டு என வசதிக்கு ஏற்ப பல கட்டுகள் அமைக்கப் பெற்றுள்ளன. இவை 'போஜன ஹால்' என்றும் கூறப் பெறுகின்றன. கடைசிக் கட்டு சமையல் கட்டு! அதன்பின்னே தோட்டம், கேணி உள்ள கொல்லைப்புறம்.

வீட்டின் மேன் மாடங்களும், அதற்கும் மேலே உருவாக்கப் பெற்றுள்ள தேர்க்கூடங்களும், கிளிக் கூண்டுகளும் இல்லங்களின் எழிலுக்குப் பொலிவூட்டி நிற்கின்றன. பிரம்மாண்டமான இந்தக் கட்டடங்களை உருவாக்க அந்தக் காலத்தில் சில லட்சங்களே (ஐந்து லட்சத்திற்குள்) செலவிட்டுள்ளனர். இப்போது பல கோடிகளைச் செலவிடினும், இத்தகைய வல்லமையை, வனப்பை, கலைச் செறிவை, வேலைப்பாட்டை ஒரு போதும் காண முடியாது!

சுவர்களை எழுப்பச் 'செங்கல்' பயன்பட்டிருப்பினும், செங்கல்களை இணைக்க 'சாந்து'தான் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. நகரத்தார்களின் பிரம்மாண்டக் கட்டடங்கள் அத்தனைக்கும் இன்றைய சிமெண்ட் பயன்படுத்தப்பட இல்லை! அப்போது சிமெண்ட் தயாரிப்பு உருப்பெறவும் இல்லை! நீர்ச் சுண்ணாம்பும் உவரில்லாத ஆற்று மணலும் சேர்ந்து, அரைத்துச் செய்வதையே 'சாந்து' எனக் கூறுகின்றனர்.

செங்கல்களை இணைத்தபின் சுவர்ப் பூச்சுக்குப் பயன்படுத்தப் பெற்ற பொருள்களும், முறைகளும் அறிகிறபோது அயர்ந்து, வியந்து, 'அப்படியா?' எனக் கண்களை விரிக்கிறோம்! செட்டிநாட்டு நகரத்தார் இல்லங்களில் உள்ள சுவர்களுக்கு முன்னே நின்றால் முகம் தெரியும்! சுவரில் கை வைத்தால்... அடடா!... ரோஜா மலரில் கை வைத்தது போலிருக்கும்! அந்த வெண்மைக்குக் கடல் அலைகளில் தோன்றும் நுரையைத் தான் உவமையாகக் கூற முடியும்!


தாய்நிலை



முகப்பில் நகரக் குளங்கள் (தண்ணீர் 'டாங்க்')

கல் சக்கரங்களைக் கொண்டு, ஆழமாக அமைக்கப் பெற்ற வட்டமான குழிகளில் நீரையும் ஆற்று மணலையும் - இரண்டுக்கு ஒன்றென - சேர்த்துக் கொட்டித் தண்ணீர் விட்டுச் செக்குச் சுற்றுவது போல், மீண்டும் மீண்டும் அறுபது சுற்றுகள் சுற்றியவுடன் வெண்ணெய் போல் சாந்து உருவாகும். வெண்ணெய்ச் சாந்தைச் சுவரில் முதல் பூச்சாக்கித் தேய்ப்பார்கள். வெண்ணெய்ச் சாந்தில் தண்ணீர் ஊற்றி, அதைத் துணியால் வடிகட்டி எடுத்துச் சுவரில் இரண்டாவ

தாகப் பூசித் தேய்ப்பார்கள். வெண்ணெய்ச் சாந்துடன் சல்லி வெள்ளையைக் கலக்கி மூன்றாவதாகப் பரக்கத் தேய்ப்பார்கள். கருப்பட்டி, கடுக்காய் ஆகியவற்றை இடித்து ஒரு துணியில் கட்டி, தண்ணீர் நிரப்பிய பாத்திரத்தில் அமுக்கி வைத்து, அந்த நீரை எடுத்துப் பூச்சுக்குமேல் இறைத்து நான்காவதாகத் தேய்ப்பார்கள். முட்டையில் உள்ள மஞ்சள் கருவை எடுத்துவிட்டு, வெள்ளைத்தாதுவில் இளநீர் சேர்த்து ஐந்தாவதாக சுவரில் இக்கலவையை ஊற்றி, கண்ணாடித் தேய்புக்கல் கொண்டு தேய்ப்பார்கள். இந்த நிறைவான தேய்ப்பை 'கண்ணாடித் தேய்ப்பு' எனக் கொத்தனார்கள் கூறுவார்கள்.

சில நகரத்தார் வீடுகளில் முட்டைக்குப் பதிலாகக் கடல் கிளிஞ்சலை அரைத்து அதில் இளநீர் சேர்த்துப் பூசுவார்களாம்! ஏனெனில் புலால் உணவை ஒதுக்கி, சுத்த சைவமாக உள்ள நகரத்துச் செட்டியார், தமது வீட்டுச் சுவரில்கூட அசைவப் பொருள் ஏறிவிடக் கூடாதென்று, மிகுந்த கவனம் காட்டுவாராம்! தமது 'குடியிருப்பு'க்காக இன்னொரு 'குடியிருப்பை' (முட்டையை) உடைக்கக் கூடாதெனக் கூறிவிடுவார்களாம்! செட்டிநாட்டு நகரத்தார் கட்டடங்களில் சுவர் அமைப்பும், சுவர் உருவாக்கமும் கட்டடக் கலையில் 'நகரத்தார் பாணி'க்கு நல்ல எடுத்துக்காட்டுகளாம்.

நகரத்தாரின் பெரும்பான்மையான கட்டடங்களுக்கு அடித்தளக் கற்களுக்கும், பூமிக்கு மேலே ஆறு அடிக்கு எழுப்பும் சுவர்களுக்கும் 'செம்பிரான் கல்' எனும் ஒரு வகைக் கற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. மண்ணுள் தோண்டி எடுத்து வேண்டிய அளவு வடிவமைத்துக் கொள்கிற செம்பிரான் கற்கள் மிகுந்த வல்லமை கொண்டவையாம். எனவே அவற்றை அடித்தளங்களுக்கெனப் பயன்படுத்தி உள்ளனர். பாறைகளைப் போல் இவை மலைகளாகப் பூமிக்கு மேலே தோற்றம் தராதவை. மண்ணுக்குள் தோண்டி இவற்றை எடுத்தாக வேண்டும். வலிமை கருதி செம்பிரான் கற்களை



பால்கனி உள்ள ஆழ்வீடு



சூரியப் பலகை

மன்னர்கள்கூடத் தங்கள் கோட்டைகளை உருவாக்கப் பயன்படுத்தி உள்ளனர்.

அறுபது, எழுபது ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட நகரத்தார் கட்டடங்கள் சிலவற்றில், வீட்டுக்கு வேண்டிய தண்ணீரை, முகப்புக்கு அருகே மேன்மாடியில் தகரக் குளங்கள் அமைத்து, நீர் நிறைத்து, அந்தக் குளத்திலிருந்து வேண்டிய இடங்களுக்கு வீட்டுக்குள் குழாய்களை அமைத்து நீரைப் பயன்படுத்தி வருகின்றனர். கிணற்றிலிருந்து நீரேற்றும் கருவிகளை அயல் நாடுகளிலிருந்து வரவழைத்துள்ளனர். இதில் வேடிக்கையும், வியப்பும் என்னவெனில்... அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்னே அமைக்கப் பெற்றுப் பயன்படுத்தி வரும் அந்தக் கருவிகள் இன்னும் ஒருமுறை கூடப் பழுதுபடவில்லையாம்! எப்படி?

நீள அகலத்தாலும், உயரத்தாலும், கலை நுணுக்கத்தாலும், மூலப் பொருள்களின் வல்லமையாலும் செட்டிநாட்டு நகரத்தார் இல்லங்கள் - தமிழகத்துக் கட்டடக் கலையின் வளர்ச்சியில் ஒரு புதிய பாணியை உருவாக்கித் தந்துள்ளன! அந்தப் பாணியை 'நகரத்தார் பாணி' எனக் கட்டடக் கலையின் நுட்பம் அறிந்தோர் அழைத்து மகிழ்வர்!

கரஒலி

சு.ரா

கை தட்டுதலைத்தான் கர ஒலி (கரவொலி) என்று சமீப காலத்தில் - தனித் தமிழில் குறிப்பிடுகிறார்கள். 'கரகோஷம்' என்றும் இதைச் சொல்வதுண்டு. ஒரு பேச்சைக் கேட்டோ, பாட்டைச் செவியுற்றோ - சில நல்ல சங்கதிகள் வரும்போது கைதட்டி நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆனால் 'இதற்குத்தான் கை தட்டுவது' என்ற நிர்ணயம் ஏதும் இல்லாமல் இப்போது எதற்கு வேண்டுமானாலும் 'கை தட்டுவது' என்று வழக்கம் ஏற்பட்டுவிட்டது. இதைத்தான் சமீபத்தில் ஓர் இசை ரசிகர் குறிப்பிட்டு, "மடத்தனமாய்க் கண்டதற்கெல்லாம் கைதட்டி, கலைஞனுக்குத் தன்னைப் பற்றி ஒரு பொய்யான பெருமையை ஏற்படுத்தி, அவனை வளரவிடாமல் செய்கிறோம்" என்று காரசாரமாய்ச் சொன்னார். அவர் சொன்னது எத்தனை உண்மையானது என்று இசைக் கச்சேரிகளுக்குப் போகிறவர்களுக்குத் தெரிந்திருக்கும். பாடல்கள் ஒவ்வொன்றும் முடியும் போதும் - குறிப்பாக மிருதங்கக்காரர் 'படபட' வென்று அடித்து முத்தாய்ப்பு வைத்தால் கைதட்டுவது இன்றைய வழக்கமாகிவிட்டது. மங்களம் பாடினால் அதற்குக்கூடக் கர கோஷம். ஏன், விழாக்களில் 'கடவுள் வணக்கம்' அல்லது 'தமிழ்த் தாய் வணக்கம்' - பாடினால் அதற்கும் கர ஒலி எழுப்புகிறார்கள். 'கடனே' என்று கை தட்டி இதை ஒரு சம்பிரதாய மாக்கிவிட்டார்கள். மிருதங்கக்காரருக்கு - சில சமயம் கடம், கஞ்சிரா, மோர்சிங் என்று கூடுதலாய்ப் பக்கவாத்தியம் உள்ளபோது - அவர்களுக்குத் 'தனி' வாசிக்க வாய்ப்பு அளிக்கிறார் பாடகர். அவர்கள் எத்தனை மட்டமாக லய விந்யாசம் செய்தாலும் 'கரகோஷம்' நிச்சயம். அப்போது கைதட்டி விட்டு, கச்சேரி முடிந்து வெளியே போகும்போது, "மிருதங்கம் பாடாவதி, ஸார். போட்டு உடைத்து விட்டார். ஒரே தலைவலி!" என்று அபிப்ராயம் சொல்பவர்கள் பலர்.

கச்சேரி செய்பவர்களும் கர கோஷத்துக்காகவே சில 'பிடி' களைப் பிடிக்கிறார்கள். மேல் ஸ்தாயி பஞ்சமம், அதற்கும் மேலே, இன்னும் மேலே... என்று பாடிக் கொண்டே ஜனங்கள் கைதட்டும் வரை போய் விடுகிறவர்கள் உண்டு. ஒரு வித்வான் தான் பாடும் அபூர்வ சங்கதிக்குப் பிறகு சற்றே நிறுத்தி ரசிகர்கள் கைதட்டி அவகாசம் கொடுப்பது வழக்கம். ஒருமுறை ரசிகர்கள் கைதட்ட மறந்து விட்டார்கள் - அல்லது மறுத்து விட்டார்கள்! "என்ன கைதட்ட மாட்டீர்களா - அப்ளாஸ் கிடையாதா?" என்று கலைஞர் கேட்டாரே பார்க்கலாம். சபை 'கொல்'லென்று சிரித்ததே தவிர கைதட்டவில்லை. (நல்ல வேளை! அந்தக் கலைஞர் அமரராகி விட்டார். இல்லாவிட்டால் என் தலையைப் போட்டு உருட்டி விடுவார்).

மேல் நாடுகளில் நிகழ்ச்சியின் முடிவில்தான் நின்றுகொண்டே தொடர்ந்து கரகோஷம் செய்து ரசிகர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வார்களாம். (Standing Ovation என்கிறார்கள்). இடையில் செய்யப்படும் 'கர ஒலி' கலைஞனின் கவனத்தைக் குலைத்து, நிகழ்ச்சியின் தரத்தையும் தாழ்த்திவிடும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

★ ★ ★

பாட்டுக்கு இப்படியென்றால் பேச்சுக்கு எப்படி? சொல்லப்பட்ட விஷயத்தின் அருமை தெரிந்து 'கை தட்டுவது' வெகு அபூர்வம். யாராவது ஒரிருவர் கைதட்டினால் போதும், தொத்து வியாதி மாதிரி மற்றவர்களும் கைதட்டி விடுவது வழக்கமாகிவிட்டது. ஒரு சமயம் என் பக்கத்து இருக்கையில் அமர்ந்து இருந்தவர் மற்றவர்களோடு சேர்ந்து கை தட்டிவிட்டு, என்னிடம் மெல்லிய குரலில், "அவர் (பிரசங்கி) என்ன சொன்னார், ஸார்?" என்று கேட்டார்! என்ன சொன்னார் என்பதுகூடத் தெரியாமல் ஒரு கைதட்டல்.

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது சில பிரமுகர்களை அழைத்து மாணவர்களுக்காகப் பிரசங்கம் செய்ய வைப்பார்கள். ஒரு வக்கீல் பிரமுகர். அவருக்கு மேடை கிடைத்தால் போதும். (அப்போதெல்லாம் ஒலி பெருக்கிகூடக் கிடையாது). பேசிக்கொண்டே இருப்பார். நிறுத்தவே மாட்டார். அவர் பேச்சை நிறுத்த மாணவர்கள் ஒரு யுக்தியைக் கையாளுவது வழக்கம். தொடர்ந்து 'கரகோஷம்' செய்து கொண்டே இருப்பார்கள் - அவரை மேலே பேசவிடாமல், வெறுத்துப் போய் அவர் பேச்சை முடித்துக் கொள்வார். ஆனால் இந்த யுக்தி சில நாள்களே பலன் தந்தது. 'டிடிடி'க்குப் பழகிப் போகும் கொசுக்களைப் போல், வக்கீல் பிரசங்கி அவர் பாட்டுக்குப் பேசிக் கொண்டே போகத் தொடங்கினார் கரவொலியைச் சட்டைசெய்யாமல்.

●

ஒரு பிரசங்கியின் பேச்சுக்கு எத்தனை இடங்களில் 'கரகோஷம்' எழுப்பப்பட்டது என்பதைக் கொண்டே பேச்சின் சிறப்பைக் கணிக்கும் காலம் ஒன்று இருந்தது. அப்போதெல்லாம் 'காலம் காலமாக' (அதாவது பத்தி பத்தியாக) தேசத் தலைவர்களின் பிரசங்கங்களை வெளியிடுவார்கள்.

பேச்சை மக்கள் எப்படி ரசித்தார்கள் என்று விளக்க (கரகோஷம்) (சிரிப்பு)... என்று அடைப்புக் குறிக்குள் போடுவார்கள். அநேகமாகப் பொருத்தமான இடங்களில்தான் ஜனங்கள் கைதட்டுவார்கள், சிரிப்பார்கள். ஒரு காங்கிரஸ் மகாநாட்டின் போது தலைவரின் பிரசங்கத்தை (தலைமை உரையை) வழக்கம் போல் முன்கூட்டியே நாளேடுகளுக்கு அனுப்பி விட்டார்கள். நாளேடுகளும் மகாநாட்டுக்கு மறுநாள் காலை தலைவரின் நீண்ட உரையை - (கரகோஷம்) (சிரிப்பு) முதலியவற்றோடு - சாங்கோபாங்கமாகப் பிரசுரித்திருந்தார்கள். ('இதில் என்ன தவறு?' என்கிறீர்களா? பொறுங்கள்). ஆனால் அதே தினசரிகளின் பிறிதொரு பக்கத்தில் 'கடைசித் தந்தி' என்ற தலைப்பின் கீழ் "நேற்றைய காங்கிரஸ் மகாநாடு கடுமையான மழை காரணமாக நடைபெறவில்லை' என்றும் பிரசுரமாகியிருந்தது.

கிழக்கு வானம் கி.வா.ஜ.

வாசவன்



1945களில் சிறுகதை எழுத்தாளர்களுக்கெல்லாம் 'கலைமகள்' தான் சங்கப் பலகை. அதில் ஒரு கதை பிரசுரமாகாத வரையில் யாரையும் 'எழுத்தாளன்' என்று ஒப்புக் கொள்ள மாட்டார்கள். 'கலைமக'ளின் அங்கீகாரம், இலக்கியத்தின் அங்கீகாரமாகக் கருதப்பட்ட அந்த நாளில், கோட்டையைப் பிடிக்கும் ஆவேசத்துடன் எல்லா எழுத்தாளர்களுமே 'கதா'யுதத்துடன் கடுமையாகப் போராடுவார்கள். கோட்டையைப் பிடித்தாலும் பிடித்து விடலாமே தவிர, 'கலைமகள்' ஏட்டைப் பிடிப்பது அத்தனை எளிதான ஒன்றல்ல.

'கலைமக'ளில் கதை வருவதற்காக நான் பட்டபாடு, தில்லைக்குப் போகத் திருநாளைப் போவார் பட்ட பாட்டுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல; நான் நாள்தோறும் கதைகளை அனுப்பிக் கொண்டே இருப்பேன். 'கலைமக'ளும் நாள்தோறும் என்னுடைய கதைகளைச் சளைக்காமல் திருப்பி அனுப்பிக் கொண்டே இருக்கும். அதற்காக நான் இடிந்தோ, ஒடிந்தோ போகவில்லை. அப்படி நான் சரமாரியாக ஏவிய கதைகள் 106. அவற்றில் 'கலைமகள்' திருப்பி அனுப்பிய கதைகள் 105. என் 106 ஆவது கதையான 'சாவிலே வாழ்வு' 'கலைமக'ளில் மகுடக் கதையாக வெளியாயிற்று.

அந்தக் கதை வெளியாவதற்கு முன்னால் நடந்த இன்னொரு கதைதான், என்னை இலக்கியத்தில் ஆணி அடித்து நிறுத்திற்று.

'கலைமகள்' ஆசிரியர் கி.வா.ஜ. அவர்கள் எங்களுக்கெல்லாம் மகாதேவன். அந்த தேவநாயகனிடமிருந்து எனக்கு ஓர் அஞ்சலட்டை வந்தது. அதில் "சிரஞ்சீவி வாசவன் அவர்களுக்கு, 'சாவிலே வாழ்வு' என்ற உங்கள் சிறுகதை பிரசுரத்திற்காகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறது. முடிந்தால் என்னைச் சந்தியுங்கள்" என்று எழுதப்பட்டிருந்தது.

முடிந்தால் சந்திப்பதா? எனக்கு அதைவிட வேறென்ன வேலை? மறுநாள் நான் 'கலைமக'ளுக்கு ஓடினேன். இடம் கேட்டு, மாடியேறிப்போய், ஆசிரியர் குழாமுடன் அரசரைப் போல முடியுடன் வீற்றிருந்த கி.வா.ஜ. அவர்களைச் சந்தித்து, நெடுஞ்சாண் கிடையாகக் கீழே விழுந்து வணங்கி, என்னை நானே அறிமுகப் படுத்திக் கொண்டேன்.

கி.வா.ஜ. அவர்கள் என்னை ஏற இறங்கப் பார்த்தார். "நீங்கள் 'சாவிலே வாழ்வு'க் கதையை எழுதிய வாசவனா?" என்று கேட்டார்.

"ஆமாம்" என்றேன் நான்.

ஆனாலும் அவர் நம்பவில்லை.

அதற்குக் காரணம் என் தோற்றம். நான் உயரத்தில் குள்ளம். வயதில் இருபதுக்கும் குறைவு. பால் வடியும் பச்சைக் குழந்தையின் முகம். மஞ்சள் குளித்தது போன்ற வழவழப்பான வதனம்.

"என்னால் இன்னும் நம்ப முடியவில்லை. முதல் கதையை ஒரு தேர்ந்த எழுத்தாளரைப் போல உம்மால் எப்படி எழுத முடிந்தது?"

"இது என்னுடைய முதல் கதை இல்லை சார்! இது என்னுடைய 106 ஆவது கதை. நான் முதலில் அனுப்பிய கதைக்கும், நீங்கள் தேர்ந்து எடுத்த 106 ஆவது கதைக்கும் இடைப்பட்ட கதைகள்தாம் என்னை எழுதப் பயிற்றுவித்தன. இதற்குப் பிறகும் ஒருவனுக்குக் கதை எழுத வராவிட்டால், அவன் கட்டை உடைக்கப் போகலாம்" என்று சற்றுச் சூடாகச் சொன்னேன் நான்.

"வாசவன்! இந்தச் சூடுதான் எழுத்தின் உயிர்ப்பு. இந்தச் சூடும் சுவையும் குன்றாமல் எழுதுக! வெல்க!" என்று வாழ்த்திய கி.வா.ஜ. அவர்கள், உதட்டளவோடு வாழ்த்தை நிறுத்திக் கொள்ளாமல், 'ஆனந்த விகடன் தேவன்' அவர்களுக்கும், ஆசிரியர் 'கல்கி' அவர்களுக்கும் என் எதிரிலேயே போன் செய்து, "வாசவன் என்ற ஒரு சின்னப் பையன் நல்ல தமிழில் அருமையாக எழுதுகிறான். அவன் வளர்வதற்கு நீங்கள் உதவ வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அத்தகைய உற்சாகத்தையும், ஊக்கத்தையும் கி.வா.ஜ. அவர்கள் அன்று தந்திருக்காவிட்டால், எழுத்தையே தொழிலாகக் கொண்ட ஒரு சூளையில் என்னை நான் ஆகுதி செய்து கொண்டிருக்க மாட்டேன்.

தொன்மை இலக்கியத்தில் அழுத்தமான பிடிப்புள்ள கி.வா.ஜ. அவர்களுக்கு, புத்திலக்கியத்தின் பாலும் அதற்குச் சற்றும் குறையாத அபிமானம் உண்டு. தரமான எழுத்தாளர்களிடம் தாயன்பைக் காட்டி, அவர்கள் வளர்ச்சிக்குத் தளம் அமைத்துக் கொடுத்து, அரசோச்சவும் ஆளுகையைக் கொடுத்து மகிழ்ந்தவர் வாகீச கலாநிதி.

ஒரு காலக்கட்டத்தில் கி.சந்திரசேகரன், 'குமுதினி', 'குகப்பிரியை' போன்ற எழுத்தாளர்களும், இடைப்பட்ட காலத்தில் 'அகிலன்', மாயாவி போன்றவர்களும், இறுதிக் காலத்தில் 'ராஜம் கிருஷ்ணன்', 'அநுத்தமா', 'பி.வி.ஆர்.' போன்றவர்களும் கி.வா.ஜ.வின் இலக்கியப் பட்டறையில் வார்க்கப்பட்டுப் புகழை அள்ளிக் குவித்தவர்கள்.

என்னுடைய வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டி, 'கலைமக'ளில் தொடர்ந்து என் கதைகளை வெளியிட்டு வந்த கி.வா.ஜ. அவர்களை நான் தொலைவில் நின்று கோபுரதரிசனம் தான் செய்தேனே தவிர, அணுக்கச்

சீடனாக இருந்து வழிபட்டு வாழ்க்கையை உயர்த்திக் கொண்டவனல்லன்.

'என் எழுத்துக்குக் கிடைக்கும் வெற்றியும், தோல்வியும் என்னாலேயே கிடைத்தவையாக இருக்க வேண்டும்' என்ற அழுத்தமான கொள்கையைக் கொண்ட நான், வாழும் நலனுக்காகக் கொஞ்சம் வளைந்து கொடுத்து, வாகீச கலாநிதியின் நிழலில் நடந்திருந்தால், பல பரிசுகள் என் வீட்டுப் பசுக்களாகிக் கறந்திருக்கக் கூடும். பரிசுகளைவிட ஓர் இலக்கியவாதி சத்தியமானவன். நான் அவனைக் காப்பாற்ற முயன்று வெள்ளத்தில் அடித்துப் போகப்பட்டிருக்கிறேன். அந்தக் காலத்தில் (1955களில்) வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருந்த என்னை, நண்பர் டாக்டர் விக்கிரமன் காப்பாற்றிக் கரை சேர்த்திருக்கிறார். திரு ஏ. நடராசன், திரு. அ.மா.சாமி போன்ற அன்பு நண்பர்கள் என் மூர்ச்சையைத் தெளிவித்திருக்கிறார்கள்.

இவர்களை எல்லாம் நெருங்கிய அளவுக்கு, கி.வா.ஜவை நான் நெருங்கியதில்லை. ஆனால் நந்தனாக இருந்து அவரை வழிபட்டதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. இது சத்தியம்.

கி.வா.ஜ. அவர்களின் இறுதிக் காலம். தமிழ் உணர்வைத் தவிர மற்ற உணர்வுகள் எல்லாம் அவர்களை விட்டு விடை பெற்றுக் கொண்டிருந்த நேரம். 1987 இல் டாக்டர் விக்கிரமன், அரிமா எஸ். கிருத்திவாசன் ஆகியோர் எனக்கு மணிவிழா நடத்தினார்கள். அந்த விழாவுக்கு கி.வா.ஜ. அவர்களை அழைத்தேன். நடமாட்டத்தையும், சொற்பெருக்கையும் நிறுத்திவிட்டிருந்த அவர்கள், என் மீதுள்ள அன்பு காரணமாக விழாவுக்கு வருவதாகவும், வாழ்த்திப் பேசுவதாகவும் வாக்களித்தார்கள். வந்து வாழ்த்தவும் செய்தார்கள். அதுதான் அவர்கள் இறுதியாகக் கலந்து கொண்டு பேசிய பெருவிழா.

எங்கேயோ தொடங்கி புத்திலக்கியத்தில் நிறைந்த கி.வா.ஜ. அவர்கள், புத்திலக்கியத்தை விடியவைத்த கிழக்கு வானம். அவர்கள் புத்திலக்கியம் உள்ள காலம் வரை புகழுடம்போடு வாழ்வார்கள்.

அறிவுத் தீபம் ஏற்றுவோம்

எஸ். ஆர். ஜி. சுந்தரம்

வண்ணப் பூக்கள் வானில் விரிய
வான வெடிகள் விடுவோமா?
கண்ணைப் பறிக்கும் தாரகை களுதிர
கம்பி மத்தாப்பு சுடுவோமா?
விண்ணை எட்டும் விந்தை 'ராக்கெட்'
'விர்'ரென எழும்பப் பார்ப்போமா?
மண்ணை மறைக்கும் புகையை எழுப்பும்
மத்தாப்பு பலவும் எரிப்போமா?

அருணன் உதயம் ஆகும் முன்னே
ஆனந்தக் கங்கையில் குளிப்போமா?
அசுரனைக் கொன்று அகிலம் காத்த
ஹரியின் கதையைக் கேட்போமா?
அக்கிரமத் திருட்டும் புரட்டும் பொய்யும்
அசுரக் குணங்கள் அறிவோமா?
அசுரக் குணங்கள் அழிந்திட நாமும்
அறிவுத் தீபம் ஏற்றிடுவோம்!


பகல் இருட்டு

வள்ளுவன் பிறந்த நாட்டினிலே – மக்கள்
வாழ்க்கை பாதாளத்தில் தாழ்கிறது
உள்ளத்தையே மக்கள் விற்றுவிட்டால் – குறள்
உண்மைகள் நாட்டிலே என்ன செய்யும்?

நெஞ்சுக்கு நீதிகள் இல்லையென்றால் – உயர்
நீதிமன்றங் கள்தாம் என்னசெய்யும்?
பஞ்சம் மனிதத் தன்மைக்கென்றால் – கொண்ட
பாராளு மன்றங்கள் என்னசெய்யும்?

வெள்ளை மனத்தையே கோயிலென்றோம் – அதில்
விளங்கும் மனசாட்சி தெய்வமென்றோம்
உள்ளத்தை அவ்விதம் கொண்டவர் யார் – வெறும்
ஊருக்கு உபதேசம் ஆயிற்றிங்கே.

திட்டமிட்டே மக்கள் கெட்டுவிட்டால் – வரும்
சீரழிவுக்கு நாம் என்ன செய்வோம்?
பட்டப்பகல் இருட்டாகி விட்டால் – கொண்ட
பட்டாளம் மட்டுமிங் கென்ன செய்யும்?



பெரி சிவனடியான்